V. B. SUBRAHMANIYASARMA
TAMIL STANDI

கணபதிதுணை.

திருக்கைலாயபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனத்து மஹாவித்துவான்

திரிசிரபுரம்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

பிரபந்தத்திரட்டு.

இது

மிஷி ஆதீனத்தத்தலைவர்களாகிய

ஸ்ரீமத்

அம்பலவாணதேசிகரவர்கள்

விருப்பத்தின்படி

மிஷி பிள்ளையவர்கள் மாணக்கரும்

சென்னை, பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

சென்னபட்டணம்

வைஜயந்திஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

சாதாரணஷூ.

1910.

விலை ரூபா 2-8-0.

Copyright Registered.

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

உ

சிவமயம்.

உரிமையுரை.

[நேரிசையாசிரியப்பா.]

பூமலி துணர்ச்சிஃனக் காமலி கூலப்
பொன்னிமா நதிபாய் சென்னிநாட் டிடைவளம்
நிறையூ ராய வுறையூர்க் குணபாற்
கருமுதிர்ந் தயர்வுறு மொருமக ளுஞரத்
நு தாயான செல்வந் தங்குமாத் தலமாய்த்
துரிசிரா திலங்குந் திரிசிரா மலேயில்
உதித்கொளி மிகுத்தே கதித்துறு மணியும்
மலர்தொறு நறவுகொள் வண்டின மேய்ப்பப்
பலரிடைக் கல்வி பயின்றேறுங் கண்ணு ளும
கo யாவரு மென்று மேவரும் புலமை
வாய்ந்துநூல் பலமிக வாய்ந்துகிள ரேந்தலும்
சுவைசெறி பனுவல்க ளவைபல வியப்ப
எளிதிற் பாடிய வளிகிளர் குரிசிலும்
புனித்தலம் வியப்பச் சிவத்தல புராணம்
கரு பலசெய் தோங்குசீர் படைத்தசி ரியனும்
நலமா ணக்கர் பலபேர்ப் புரந்தே
அன்னர் சூழாத்திடை நன்னர் மேவி
நூல்பல பயிற்றிச் சால்புறு பெரியனும்
அருத்திகூ டெணேயரு கிருத்திநூல் பலசொற்
உo றல்ல லகற்றிய நல்லிசைப் புலவனும்
நன்றிபா ராட்டுநர் நடுநா யகமும்
நிலமலி நிறைகோன் மலர்நிக ராய
மாட்சிசால் புகழ்மீ ளுட்சிசுந் தரப்பே
ருடையனுங் குவலீத் தொடையனுஞ் சுவைசெறி
உரு இதிலுள நூலெலா மியம்புமா கவிஞனு
மாயவன் றணீத்தன தவைக்களத் தலீவனுச்
செய்தவ னெவனே கைதவ மிலாது

சொன்மழை சொரியுமச் சுகுணமா மலைபாற்
பொன்மழை பொழிந்தருள் பூத்தவ னெவனே
செய்யுண்மற் றிவன்போற் செய்குநர் யாரிவன்
செய்யுள்போ லினித்தில தெரியின்மற் றவையென்
றுணருமா றெவர்க்கு முரைத்தவ னெவனே
பன்மா ணவர்கட் கின்மா ணணியு
ணுடுக்கையா திகளளித் தறுதரந் தெரிந்தே
யிலக்கியம் பலவு மிலக்கண மைந்து
ஞான நூல்களு நவின்றவ னெவனே
வடமொழி தென்மொழி வாய்ந்தபன் னூல்கள்
கற்றவர் சிரகர கம்பிதஞ் செயவாங்
குற்றமுண் பொருளெடுத் துரைத்தவ னெவனே
ஆதுலர்க் கெய்ப்பில்வைப் பாயவ னெவனே
என்னுள மகலா திருப்பவ னெவனே
எண்ணிய தளித்திடு புண்ணிய னெவனே
திரிகூ டப்பெயர்ச் சிலம்பயற் றோன்றித்
துறைசையம் பதிசெய் நிறைதவப் பயனுச்
செப்புற மெய்ப்புகழ்ச் சுப்பிர மணிய
தேசிகப் பெயர்கொடு திகழ்ந்தவ னெவனே
அன்பருக் குலவா வின்பரு ணிமித்தந்
தீபகம் போன்றவ னெவனே வவன்றன்
ஞாபகச் சின்னமா நன்கிதை
அன்புட னுரிமை யாக்குவ னினிதே.



முகவுரை.



" கலிமகள் வாழ்க்கை முகத்த தெளினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு."

கலிஞர் பெருமானுக **விளங்கிய ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்** இயற்றிய தமிழ்நூல்களுட் பிரபந்தங்கள் பல. அவற்றுட்சில கும்பகோணம் காலேஜில் தமிழ்ப்பண்டிதராக இருந்த **ஸ்ரீ** சி. நியாகராச செட்டியாரவர்கள் முதலியவர்களால் முன்பு அச்சிற் பதிப்பிக்கப்பெற்று வழங்கி வந்தன. ஆயினும், அவை இப்போது கிடைப்பது அருமையாக இருத்தலின், அவற்றையும் மற்றைப் பிரபந்தங்களையும் அவற்றைப் போலவே சொல்வினிமை பொருளினிமைகளிற் சிறப்புற்று விளங்குவனவும், பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றனவுமாகிய சிறப்புப் பாயிரங்களையும் ஒருங்கே சேர்த்துப் பதிப்பித்து வெளியிடக்கருதி, இயல்பாகவே நான் எழுதியும் சொருத்தமும் வைத்திருந்த இலவற்றையன்றி மற்றவற்றைப் பெறுதற்கு முயன்றுவருகையில், திருவாவடுதுறை மடத்துப் புஸ்தக சாலையிலிருந்து சில பிரதிகளும், திருப்பனந்தாள் மடத்துப் புஸ்தக சாலையிலிருந்தும், மதுரைப் பாண்டியன் புஸ்தக சாலையிலிருந்தும் **ஸ்ரீ** குமரகுருபரசுவாமிகள் சரித்திரப் பிரதிகளும் உரிய தலைவர்களுடைய பேருதவிகளாற் கிடைத்தன.

திரிசிரபுரம் யமகவந்தாதிப் பிரதியைக் குன்றக்குடி **ஸ்ரீ** அப்பாப் பிள்ளையவர்களும், பிள்ளையவர்கள் கையாலேயே எழுதிய திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதிப் பிரதியைச் சேலத்தைச் சார்ந்த செந்தாரப்பட்டி **ஸ்ரீ** சிவசுப்பிரமணிய ஐயரும், திருக்கற்குடிமாமலைமாலைப் பிரதிகளைத் திரிசிரபுரம் எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா **ஸ்ரீ** வெ. சதாசிவசெட்டியாரவர்களும், உறையூர் **ஸ்ரீ** பஞ்சவர்ணேசுவர ஸ்வாமி கோயில் தருமகர்த்தா ம-ா-ா **ஸ்ரீ** சொக்கலிங்க முதலியாரவர்களும் குளத்தூர்க்கோவைப்பிரதியை வரகனேரி ம-ா-ா-**ஸ்ரீ** சவரிமுத்துப்பிள்ளையவர்களும் அன்புடன் கொடுத்தார்கள்.

இவற்றுள் திருப்பனந்தாள்மடத்துப்பிரதியில்மட்டுமே இரண்டாமுறை பிள்ளையவர்கள் இயற்றியதாகிய பட்டீச்சுரப்புராணமும் திருவரன்குளப் புராணமும் இருந்தன. (முதன்முறை, ச (- செய்யுட்கள் வரையில் இவர்களாற் பாடப்பெற்ற பட்டீச்சுரப்புராணப்பிரதி எப்படியோ கைவறிப் போயிற்று.)

முழுப்புத்தகங்கள் அகப்படாமையால், பழசைப் பதிற்றுப்பத்தந்தாதிச் செய்யுட்கள் இரண்டைப் பட்டீச்சுரம் ம-ா-ா-**ஸ்ரீ** ரு. ஆறுமுகம்பிள்ளையவர்களும், பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதியில் ஏ நு - செய்யுட்களை மெடியூர்க் கோயில் தருமகருத்தாவாகிய ம ா-ா-**ஸ்ரீ** அண்ணாமலைச் செட்டியாரவர்கள் முதலியவர்களும் மனப்பாடத்தாற் சொல்ல எழுதிக் கொண்டேன்.

பிள்ளையவர்கள் பாடி அரங்கேற்றிய வேறு சில பூர்த்தியான பிரபந்தங்களையும் அபூர்த்தியான சிலவற்றையும் இயன்றமட்டில் பலஇடங்களில் தேடிப் பார்த்தும் அவை கிடைக்கவில்லை.

இவர்கள் இயற்றிய திருவாவடுதுறைச் சிலேடைவெண்பாவின் விநாயகர் காப்புச் செய்யுளின் பாதிமட்டும் என் ஞாபகத்தில் உள்ளது. அது வருமாறு :—

"சீர்வெண்பா மாலைத் திருவா வடுதுறையார்க்
கூர்வெண்பா மாலை யுரைப்பவே."

இதிலடங்கிய பிரபந்தங்களுள் முன்னமே அச்சிடப்பெற்றவை இன்னவை என்பது அவ்வவற்றின் பின்னேயுள்ள சிறப்புப்பாயிரங்கள் முதலியவற்றால் விளங்கும்.

சீகாழிக்கோவையும் வியாசைக் கோவையும், தனித்தனியே பதிப்பிக்கப்பெற்று அகப்படக்கூடிய நிலைமையில் இருந்ததலின் அவை இதிற் சேர்க்கப்படவில்லை.

இவர்கள் ஒவ்வொருகாலத்திற் சமயோசிதமாகப் பாடிய தனிச்செய்யுட்களே இவர்கள் சரித்திரம் எழுதும்போது சந்தர்ப்பத்தைப் புலப்படுத்தி வெளியிடக்கருதி இதிற் சேர்க்காமல் வைத்திருக்கிறேன்.

பிள்ளையவர்களோடு மிகப்பழகி இவர்களருமைபெருமைகளே நன்றாக அறிந்தவர்களும் இவர்களுடைய நூல்களேப்படித்தவர்களும் இக்காலத்திற் பலரிருத்தலால், இவர்களுடையகுணவிசேடங்களும் இப்பிரபந்தங்களின் சிறப்புக்களும் இங்கே எழுதப்பெற்றில.

உரியகாலங்களிற் பிரதிகள் முதலியன அகப்படாமையினால் நூல்களைக் காலமுறையாகவும் பிரபந்தமுறையாகவும் சேர்க்கக் கூடவில்லை.

தொடங்கிப் பலகாலமாக ஆராயப்பெற்றிருக்கும் சிலபுஸ்தகங்களே விரைவிற்பதிப்பித்துநிறைவேற்றவேண்டியிருத்தலாலும் வேறு சில அஸௌகரியங்களாலும் இப்பிரபந்தங்களுக்கு இப்போது அரும்பதவுரை எழுதிப் பதிப்பிக்கக் கூடாததனாலுமிருக்கிறேன்.

இப்பதிப்பிற்காகப் பிரதிகளைக்கொடுத்து உதவியவர்களுடைய பெருந்தகைமையும், பதிப்பிக்குங்காலத்தில் வழக்கம்போலவே உடனிருந்துசகாயம் செய்துவந்த திருமயிலே பி எஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மஹாஸ்ரீ இ. வை. அனந்தராமையரவர்கள் முதலியோருடைய அன்புடைமையும் மிகப்பாராட்டற்பாலன.

தியாகராசசெட்டியாரவர்கள் வாக்கு.

கட்டளைக்கலித்துறை.

"பெற்றாரு ணின்னேப்பெற் றார்போற்பெற் றாரிளும் பேண்பிறப்பை
யுற்றாரு ணின்றனேப் போலவுற் றாரெனு முன்னருளே
கற்றா ரணியு ளெனேப்போற்பெற் றாரெனு நாடுறினு
மற்றார்முற் றோர்தரு மீனுட்சி சுந்தர மாமணியே."

சென்னை
16-5-1910.

இங்ஙனம்
வே. சாமிநாதையன்.

இப்புத்தகத்தில்அடங்கியவை.

		பக்கம்.
க.	திருத்தருத்தி ஸ்ரீ கச்சிவிகாயகர்பதிகம்	க.
உ.	,, ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமிபதிகம்... ...	ங.
ங.	திருவிடைமருதூர் ஸ்ரீ மருதவாணர் தோத்திரப்பதிகம்...	சு.
ச.	மணவைத் திருவெண்ணீற்றுமைபிள்ளைத்தமிழ்... ...	எ.
ஞ.	திருவானேக்கா ஸ்ரீ அகிலாண்டநாயகிபிள்ளைத்தமிழ் ...	ஙஉ.
சு.	உறையூர் ஸ்ரீகாந்திமதியம்மைபிள்ளைத்தமிழ்	சுஞ.
எ.	திருக்குடந்தை ஸ்ரீ மங்களாம்பிகைபிள்ளைத்தமிழ் ...	கஙஉ.
அ.	திருத்தவத்துறைப் பெருந்திருப்பிராட்டியார்பிள்ளைத்தமிழ்	ககக.
கஉ.	திருவிடைக்கழிமுருகர்பிள்ளைத்தமிழ்	கசஞ.
கo.	சேக்கிழார்பிள்ளைத்தமிழ்	கசுக.
கக.	திருவாவடுதுறை அம்பலவாணதேசிகர்பிள்ளைத்தமிழ் ...	ககஞ.
கஉ.	வாட்போக்கிக்கலம்பகம்	உஉக.
கங.	திருவாவடுதுறை அம்பலவாணதேசிகர்கலம்பகம் ...	உசக.
கச.	திருவிடைமருதூருலா	உஎக.
கஞ.	திருத்தில்லையமகவந்தாதி	ஙகங.
கசு.	துறைசையமகவந்தாதி...	ஙஉசு.
கஎ.	திருச்சிராமலையமகவந்தாதி	ஙஞக.
கஅ.	திருக்குடந்தைத்திரிபந்தாதி	ஙஞஞ.
கக.	திருவிடைமருதூர்த்திரிபந்தாதி	ஙசுக.
உo.	திருப்பைஞ்ஞீலித்திரிபந்தாதி	ஙஅக.
உக.	பாலவனப்பத்திற்றுப்பத்தந்தாதி	ஙகஙங.
உஉ.	மதுரைத் திருஞானசம்பந்தசுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி	சoஞ.
உங.	,, ,, ஆனந்தக்களிப்பு ..	சகஎ.
உச.	கலிசைச் சிதம்பரேசுவரர்மாலை...	சஉஞ.
உஞ.	திருவானேக்கா ஸ்ரீ அகிலாண்டநாயகிமாலை	சஙக.
உசு.	திருவாவடுதுறைச்சுப்பிரமணியதேசிகர்மாலை	சஞஙஉ.
உஎ.	சருமைச்சச்சிதானந்ததேசிகர்மாலை	சசுஎ.
உஅ.	திருமயிலைச் சித்திரச்சத்திரப்புகழ்ச்சிமாலை	சஎக.
உக.	ஷி மாலையைச்சார்ந்ததனிவிருத்தங்கள்	சகஉ.
ங0.	திருக்கற்குடிமாமலைமாலை	ஞிகக.
ங.க.	திருவாவடுதுறைச் சுப்பிரமணியதேசிகர்நெஞ்சுவிடுதூது	ஞிங.ங.
ங.உ.	குளத்தூர்க்கோவை	ஞிஞிங.
ங.ங.	புதுவைச்சவராயலுநாயகர்மாலை...	சுகஞி.
ங.ச.	குமரகுருபரஸ்வாமிகள்சரிததிரம்	சுகக.
ங.ஞ.	சிறப்புப்பாயிரங்கள்	சுஞிக.

பூர்த்தியாகாதநூல்கள்.

ங.சு.	பட்டீச்சுரப்புராணம்	சுஅங.
ங.எ.	திருவரன்குளப்புராணம்	சுஅக.
ங.அ.	திருவாவடுதுறைச்சிவஞானயோகிகள்சரித்திரம் ...	சுகஞி.

பூர்த்தியானநூல்களில் அகப்பட்டபதிகள்.

ங.க.	பழஞைப்பதிற்றுப்பத்தந்தாதி	எஉக.
சo.	பூவாளூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி	,,

பிழையும் திருத்தமும்.

பக்கஎண்.	வரிஎண்.	பிழை.	திருத்தம்.
கசு	உங	மூமை	முமை
உகூ	கச	ங்ல்லூர்	ங்லூர்
கூங	உக	மாற்றிவந்து	மாற்றி
கடுகூ	உ0	வேரனுகு	வேரலுகு
ங0கூ	ங	வெருவ	வெருவா
ஙகூ0	உங	அணிவர்	அணிவார்
ஙசுச	கடு	றரு	தரு
சஉஉ	ங்ங	இஃதி	இது
கூசசு	ங்ச	தாஞ்சில	தரச்சில
கூஅள	கடு	ஆர்ச்சிக்கு	அர்ச்சிக்கு

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL PANDIT.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

*திருத்துருத்திக்
கச்சிவிநாயகர்பதிகம்.

மாமேவு பவளா சலக்குவட் டெயமெழு மழலினங் கதிர்நிகர்த்து [வியிற்
மணிமௌலி பொலியவவ் வரைமுடியி னிருபாலு மணிகொழித் திழியரு
பாமேவு கருஞிமி றினைப்பக் கபோலம் பருத்துவிடு தானமொழுகப்
பனிமதிப் பிறையொன் றடுத்தமர்ந் தாலெனப் பகரொரு மருப்பிலங்கத்
தேமேவு மலரிறைத் தடியர்சய சயவென்று திசைதொறு முழக்கெடுப்பச்
செறுவலிக் கருமூடி கத்திவர்ந் தியாங்கண்மகிழ் தேக்கவந் தருள்புரிகு
காமேவு தண்ணளி யமைந்தடையு நர்ப்பாது காத்தறம் வளர்த்திடுதலாற் [வாய்
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர் கச்சிக் களிற்றுமுகனே. (க)

குலவுதவ முனிவரர்க ளமருந் தவச்சாலை குலவயம் படிதராமே
கூறுமச் சாலையுட் சைவா கமந்தீட்டு கோசங்கள் நிதைதராமே
நிலவுதழல் படுகுண்டம் வேதிமே கலையொடு நிதம்புதி தியற்றுறுமே
நித்தியமு ஞயகரு மம்பலவு மத்தவர் நிகழ்த்தலிற் குறைவராமே
புலவுகம ழங்குசம் பாசமை யேவியது போதுமென் றுவகைமலியப்
பொங்குஞ் சினத்துலவு கருமூடி கத்தப் பொருக்கென விவர்ந்துபலவுங்
கலவுபல வண்டத் துலாவருந் திறலுடைக் கருணையா மறியவலமோ
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர் கச்சிக் களிற்றுமுகனே.(உ)

ஏதியென வெவ்வள விருப்பன வவற்று லிறத்தல்செய் யாதவரமு -
மிமையவ ருடம்புமுத லெத்துணை யுடம்பவை யிரிந்திடற் காயவரமு, நீதிதரு
மட்டாங்க பஞ்சாங்க முதலிய நிகழ்த்துவர் தனிலிலக்கு - நிகழுமற் றுள்ளவு
நினைந்துமிச் சிவருரு நிலவமற் றுருன்றமைந்து, சோதிதரு கோடொன்று
கொண்டுகய முகன்வலி தொலைத்துவிற வர்நியாக்கிச் - சோர்விலவ னமரர்
பாற் பெற்றவையு மேற்றருள் சுரந்துபல் லுயிர்செய்வினையைக், காதிநல
மேயுதவ நினதுபெரு மாண்பெவர் கருத்தமைத் தோதவல்லார் - கற்பத் தலத்
தினும் விருத்தித் துருத்தியமர் கச்சிக் களிற்றுமுகனே. (ஊ)

ஏற்றமிகு மொருமுனிவ ரேம்பழற் குழிநாப்ப ணிரியாத கிரியைஞான -
மென்னுமிரு சத்திக ளொடுந்தோன்றி யம்முனியொ டேற்றமர் புரிந்துபல

---

* இது, சோழநாட்டிற் காவிரிநதியின்தென்பாலுள்ள திருப்பதிகஞுள் ஒன்று; குற்றாலமென இக்காலத்துவழங்கும்.

ருஞ், சாற்றவொளிர் புரவுமணி கைக்கொண்ட மாற்றலன் றன்வலி யடங்காப்
பெருந் - தானேவலி யொடுகவர்ந் தம்மணியும் வாங்கியத் தாபதற் கினிதளிக்
கத், தேற்றமத ஞல்வர லுணர்ந்தனைய தவனுஞ் சிறந்தமார் பிற்றரித்துச் -
சிந்தா மணிக்குஞ்ச ரப்பிரா னென்றேத்தல் செய்யவவன் வினையனைத்துங்,
காற்றவெழு மருள்பொழிந் தினிதமரு மாடலைக் கண்டுவிண் டிடவல்லார் -
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர் கச்சிக் களிற்றுமுகனே. (சு)

தெள்ளமுத மயமாக வுமையம்மை நல்கிய திருந்துமோ தகஞ்சமாய்த்
தீயகொடி நஞ்சமய மாகவொரு பேதைதரு செழுநாவ லங்கனிகடா
மெள்ளவரு மமுதமாய்த் தான்புரித றவறு தியற்றிடக் கண்டோமினு
மியலுத்த மாங்கமே ருகவும் பார்க்கவ மிருசெவிக ளாற்கேட்கவ
மூள்ளபொரு ளிதுவென்று வாய்பேச வும்பிற வுளந்தவ மியங்கல்செயவ
முண்மையிற் கண்டுளே மென்னினெவர் நின்னுட லுட்கொண் டளக்க
கள்ளமகன் மாதவர்க் கானந்த மாய்ப்பரவு கற்பனே கடந்தவாழ்வே [வல்லார்
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர் கச்சிக் களிற்றுமுகனே.(கு)

எந்தவா னவரருள் பெறக்கருதி ஞலமுனே யேத்திவழி படுவெழுவா[வரான்
யேத்திவழி படல்செயா ரென்னினவ ரெண்ணிய திழந்துமிடை யூறுறு
மூந்தவார் வம்பெருகு மாறுநி னடிப்பூசை முற்றும் புரிந்துபோற்றின்
முன்னிய வினைத்துமுற் றுதல வேயிந்த முறைமைகா ணுணர்தலாலே
பந்தமா மலகன்ம மாயையொரு மூன்றையும் பாற்றிநின் னறிவுதொழிலாம்
பாதநிழல் புக்கின்ப முறுமாறு நின்னையே பற்றித் துதித்தல்செய்வேன்
கந்தமா மலரிடுகை யெய்ப்பில்வைப் பேபுகழ்நர் களைகணே யமலவாழ்வே
கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர் கச்சிக் களிற்றுமுகனே.(சூ)

மருவுபல புவனத்து மெந்தவா னவர்வடிவு மண்ணிலே வடித்தாரெமாண் -
மாசைக ளிவற்றுளொன் றுற்செய்து வயிறளவின் மருவாம லஞ்சுமென்னின்,
வெருவுமிக வாய்ந்தந்த வடிவருச் சனைசெயார் விடுவரவ் வாறுதேர்தல் - வேண்
டாது பேருதரம் வாய்ந்தநின் றிருவுருவ மேதகப் பூசைபுரிந்த, லொருவுதல்செ
யாதவர்கள் யாவரே யெணினுமவ ரும்பர்மக வான்மலரினேமே - லொருவன்முத
லோர்களினு மதிகரென் றருமறை புனைத்தல்சில ரெண்ணுமையென், கருவு
தவிர் மாதவர் கசிந்தேத்த தெடுக்கவொளிர் கருணேயா னந்தவாழ்வே - கற்பத்
தலத்தினும் விருத்தித் துருத்தியமர் கச்சிக் களிற்றுமுகனே. (எ)

பொங்குங் கருங்கடல் பரந்ததென் னென்றுபல புவனமுமொ ரைய
மெய்தப் - புக்ககட னின்றமலே யின்றெழுந் தஞ்தெனுப் பொருதொழில்
வலாரியெண்ணித், தங்குந் திறற்கொடிய சதகோடி யொல்லைத் தடற்றுநின்
ரெருவல்செய்யச் - சகமுழுவ தும்புதை படச்சிறை விரிக்குமொரு தறுகட்
கலாபமயின்மே, லெங்குங் கதிர்க்குமொரு பவளாச லம்பொர விவர்ந்துபல
படையொடுமெதி - ரேற்றமாற் றலஞக வப்பா ரிடைக்கவிழ வெழுகாக மோடி
கழுகுங், கங்கும் புகழ்ந்தடை விறற்படைகை தொட்டநின் காமர்விறல் யாவர்
புகழ்வார்-கற்பத் தலத்தினும் விருத்தித் துருத்தியமர் கச்சிக் களிற்றுமுகனே.

துதிக்கையோ டிருசெவியி னின்றுமொரு மூவனைத் தோற்றிஞ யண்
டமணுவாத் - தோற்றிட வுயர்ந்தாயொர் சனகனிடு முணவெலாங் துய்த்து
மிகு பசிதொரித்து, மதிக்கைகொ டவன்பணிய மூப்பொருளி னுண்மையை
வகுத்தவற் குநகவின்முய் - வையமுதல் யாவுமோ ரறுகளவு போதாத வண்
ணக் தொரித்தல்செய்தாய், வீதிக்கைபுரி வானுங்க ராதபுரு சுண்டிமுதன் மே
லோர்கள் பலரிறைஞ்ச - விழையுமா னக்தமய மேயாய் விளங்கினுய் வெய்யே
னின் னுண்மைதேர்ந்து, கதிக்கையுறு மாறுபே ரருள்புரிவ தென்றுகலே
காணு வதிதமுதலே - கற்பக் தலத்தினும் விருத்திக் துருத்தியமர் கச்சிக்
களிற்றுமுகனே. (க)

மலையுமொரு பொருளன் றெனக்கறிக் குந்திறல் வயங்குங்ன் னூர்திவாழ்க
மலர்பொருவு கைத்தலப் பாசாங்கு சப்படை வயங்கியெங் காளும்வாழ்க
நிலைமருவு ஞானமுங் கிரியையு மெனக்கலே நிரம்பின ரெடுத்தூனைக்கு
நேயமிகு சித்திபுத் திகளெனுஞ் சத்திக ணிரம்புசீ ரோங்கிவாழ்க
வுலைகட லுடுத்தபுவி முழுதுநின தருளடைக் தாதரம் பெருகிவாழ்க
வற்புதம் வீரானுநின் ணணியல்பு ணுகிய வருந்தவத் தெவையும்வாழ்க
கலைவழி நினைப்பரவு செங்குந்தர் மரபுங் கதித்துநீ ழிலிவாழ்க
கற்பக் தல,த்தினும் விருத்திக் துருத்தியமர் கச்சிக் களிற்றுமுகனே. ()

திருத்துருத்திக் கர்ச்விநாயகர்பதிகம் முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

தி ரு த் து ரு த் தி ச்
சுப்பிரமணியஸ்வாமிபதிகம்.

பூமேவு சமயங்க ளோரா றினுக்கும் புலங்கொளுங் காட்சிநல்கப் டியொராறும்
பொலிந்தன வெனச்சொலுக் திருமுக மொராறும் பொலன்செய்மணி மூ
பாமேவு செங்கதி ரிராறுங்க ராமெனப் பகர்மணிக் குழையிராறும் [பு
பன்னிரு தடம்புயப் பெருவலயி னருவியிற் பசுநற வொழுக்குதொடை
மாமேவு கானவர் குலக்கோதை யொடுமேல வானவர் குலக்கோதையும்
வளரொளிய வடிவேலு மார்பினு லும்பொலிய மயில்வா கனத்துவருவாய்
தேமேவு சோலைபுடை சூழும் துருத்தித் திருத்தளியி லமரண்ணலே
சீறுவெம் பகையோவு மாறுவன் பொடுகூவு சேவலங் கொடியாளனே.()

நீமேக மேருவைத் திசைவளை யொடுங்கொண்டு நிலவுபந் தாடல்செயவு-
நேமிமால் வரையையொரு கைக்கடக மாக்கொண்டு நிகரமற் றொன்றுயவு,
மோடுகதி மாச்சிறு மதாணியென மார்பிடை யுறப்புனைய வுஞ்சலதிக - ளோ
ரேழு மொருவிரற் கொடுதெறித் திலையென வொழிக்கவுந் திசையெட்டி

னும், கூடுகளி றெட்டுக் குதிக்கைகண் முடிக்தொருகை கொண்டிழுத் திட வும்வல்ல - குலவீர வாகுவைத் தம்பியென மகிழுகின் கொற்றமெவர் மூற்ற வுணர்வார், சேடுமெலி காவிரித் தென்பாற் றருத்திக் திருத்தளியு ளமரண் ணலே - சீறுவெம் பகையோவு மாறுவன் பொடுகூவு சேவலங் கொடியா ளனே. (உ)

பொருவரிய மாதவத் தொருநா தப்பெயர்ப் புங்கமூனி புரிமகத்துப் [ற போந்துபல வண்டமு மிடித்துத் தகர்த்துநண் புழுதிசெய் துலாவுகின் வெருவரிய செறிமயிர்த் திருகுகோட் டெத்தகரின் விறல்கண்டு நடுநடுங்கி [யப் மேலேவா னவரடைந் தோலமென வருகுபொலி வீரவா குவைநோக்கி பருவமிகு தகரினைப் பற்றிவரு கென்னப் பணிப்பவவ னுதவவேறிப் [வார் பாரிடம் போதாமை தெரிதரச் செண்டாடு பண்பெவ ரெடுத்துமொழி திருவமிகு கல்விச் சிறப்புயர் தருத்திச் திருத்தளியு ளமரண்ணலே சீறுவெம் பகையோவு மாறுவன் பொடுகூவு சேவலங் கொடியாளனே.()

வெள்ளியங் கயிலையின் முதற்கெரி வாய்தலின் விநோதப் பொருட்ட மருங்ஙள் - வித்தகற் சேவைசெய் தஞ்சலி செயாதேகும் விதியினறி யாமை யுள்ளத், துள்ளியிவ னேப்பற்றி வாவென வுலாக்கவாங் கொருகுறண்மு னுய் ப்பநோக்கி - யொழியா வகந்தையுளே யெத்தொழில் வலாயென வுஞற்றுத லில் வல்லேனென, வெள்ளியொ ரிருக்குரை யெனக்குடிலே முன்சொல விய ம்பியத னுட்பொருளெவ - னியம்புதி யெனத்தெரி தராமையாற் சென்னியி லிரங்கப் புடைத்தடைத்தாய், தெள்ளியரு மென்னுணர்வர் நின்புகழ் தருத் திக் திருத்தளியு ளமரண்ணலே - சீறுவெம் பகையோவு மாறுவன் பொடு கூவு சேவலங் கொடியாளனே (ச)

பெருகுகொடு வஞ்சகலில் குருகுவகை நிலேதபப் பெருவான் கரக்கு மாறு - பேரம ருஞற்றுமன வில்லா விறற்றகுவர் பிணவகை யுயர்ந்துதோன் றக், கருகுகிறம் வாய்ந்தகரை கொன்றிரங் கும்பெருங் கடன்முழுதும் வற்ற வனேயார் - காயத்து நின்றும்வெளி வந்தெய்த் தோரெனுங் கடறிரை யெறி ந்துபெருக, முருகுமலி மாலேப் புயத்தனேயர் குடிகொண்ட மூதுகர மது பாழ்பட - முன்னிக் துதிக்கும்வா னவர்குடிகொ ணகர்களி முகந்துமேன் மேற்றழைதரத், திருகுதலி ரயிரெருடுகின் விறலென் றருத்திக் திருத்தளியு ளமரண்ணலே - சீறுவெம் பகையோவு மாறுவன் பொடுகூவு சேவலங் கொடி யாளனே. (இ)

பொருந்திய தமிழ்க்கெல்லே யாகும்வட வேங்கடப் பூதரமு மாதரவி னும் - போதுமூன் றும்போது மூன்றுதவு வெற்பும் பொலிந்துயர் பரங்குன் றமு, மருந்திய நறும்பழ முதிர்க்கும் பொழிற்கிரியு மலிர்சந்த னுசலமூமெல் - லலர்பொருஞ் செங்கையிற் றண்டுகொடு மழுவடி வமைந்தருள் கொழிக்கும் வளையு, மருந்தியவு ளார்மாந்தல் போற்பிரா ஞெருமொழி வயப்பொருண் மனங்கொள்ளுவான் - வாய்மலர்ந் தருளியமர் மால்வளையு மற்றுமீ மருவுமருள் யாவருணர்வார், திருந்திய வளம்பல லிராவுந் தருத்திக் திருத்தளியு ளமரண்

ணலே - சீறுவெம் பகையோவு மாறுவன் பொடுகூவு சேவலங் கொடியா னனே. (சு)

களிமருவு வேட்டுவர் குலக்கொடி படர்ந்துமகிழ் கலவத் தழைந்ததருவே
கற்பகப் பொழிலாடு தெய்வதப் பிடியைக் கலந்துவிளை யாடுகளிறே
யளிமருவு மாதவ ருளக்கமல மலர்ந்தப்ப ணள்ளூற வூறுதேனே
யாயிரங் கதிரொருங் குதயமெழ லெனவடி யடைந்தவர்க் காங்காட்சியே
வளிமருவு புடவியினயர்ந்தோதி னுங்கருணை மழைபொழிசெழுங்கொண்டலே
வந்தித் தளாளையெவ் வானவரு மெஞ்ஞான்றும் வந்திக்க வைக்குநிதியே
தெளிமருவு நின்னடிக் கன்பரு ருத்தித் திருத்தளியு ளமரண்ணலே
சீறுவெம் பகையோவு மாறுவன் பொடுகூவு சேவலங் கொடியாளனே.()

மூவர்மூத லாயபர னெவன்மேனி யிற்பாதி முனிவரிய தாக்கவர்ந்து - மூத ண்ட புவனப் பரப்பிற் சராசர முகிழ்த்திடக் கருணைசெய்தும், யாவரெது கரு திஞ ரதையப் படிக்கவர்த மிதயத் தமர்ந்தளித்து - மிச்சைஞா னங்கிரியை பனையாதி யைவர்மூத லெண்ணில்சத் திகளாகியும், பூவர்மூத லோர்தொழி லனேத்துமொரு தன்றெழிற் பொலிவெனச் செய்துமின்னும் - புகலளவில் சத்தியுள தனதுகைச் சத்தியே புகன்றள விடப்படுவதோ, தேவர்பல முனி வர்க டிதிக்குந் துருத்தித் திருத்தளியு ளமரண்ணலே - சீறுவெம் பகையோவு மாறுவன் பொடுகூவு சேவலங் கொடியாளனே. (அ)

அத்தரொரு மொழியுண்மை யிற்றெனத் தெளியுமா றருளுநின் குரவு புகழ்கோ - வழகிய குறக்கோதை பாற்பொருளி னியல்பறிய வாற்றியநி ஞடல்புகழ்கோ, முத்தர்கரு தச்சு றெறிந்தமரர் சிறைமீட்ட முனிவினின் வாகைபுகழ்கோ - மூகையென வைகியறி வோங்குநா வலர்கலக முழுதறுத் தருளல்புகழ்கோ, பத்தர்பல ரெண்ணிய படிக்கவர் முனஞ்சென்று பரிவினீ யருளல்புகழ்கோ - பயனுரு நாயினேன் யாதினை யறிந்தொரு பயன்படப் புகழவல்லேன், சித்தர்பல முனிவர்க டிதிக்குந் துருத்தித் திருத்தளியு ளம ரண்ணலே - சீறுவெம் பகையோவு மாறுவன் பொடுகூவு சேவலங் கொடியா னனே. (கூ)

ஓங்குநின் பான்மருவு சத்திமா ரிருவரு முவந்துபொழி கருணைவாழ்க - வுயர்தம்பி மார்வீர வாகுமூ லாயதிற லொன்பதின்மர் வாகைவாழ்க, வாங்கு கடல் வைப்புமறை யச்சிறை விரிக்குநின் மாமயிற் றோகைவாழ்க - வருமி றுதி நாளுருத் திரனிலும் பொலிநின்கை வடிகொளொண் சத்திவாழ்க, வீங் குபுக ழமைநிற் புகழ்ந்துபா டும்புலவர் வெற்றியின் விளங்கிவாழ்க - விருப் பொடு நினைப்போற்று செங்குந்தர் தம்மரபு மேன்மேலு மோங்கிவாழ்க, தேங் குபல் வளம்பொலி விருத்தித் துருத்தித் திருத்தளியு ளமரண்ணலே - சீறு வெம் பகையோவு மாறுவன் பொடுகூவு சேவலங் கொடியாளனே. (கஎ)

திருத்துருத்திச் சுப்பிரமணியஸ்வாமிபதிகம் முற்றிற்று.

திருவிடைமருதூர்
மருதவாணர் தோத்திரப்பதிகம்.

திருவார் நினது திருநீறே நீர்க்கு மார்க்கு முடம்பிணியுங்
கருவார் பிறந்தை யடற்பிணியு மெனல்கண் டடைந்தேன் கருதருவோ
டருவார் கருணைப் பெருக்கடலே யடியார்க் கெய்ப்பில் வைப்பேகன்
மருவார் மலர்சா ரிடைமருத வாணு வடியேற் கிரங்காயே. (க)

ஏழைத் திருமா லயனுநி யிமையோர் பலரு மிறவாது
பாழைக் கருதா லாலதுகர் பரமா பரம கருணையனே
பூழைப் புறங்காண் வலியர்நினை யுணருந் நிறலி னுரன்றே
வாழைப் படப்பை யிடைமருத வாணு வடியேற் கிரங்காயே. (உ)

ஊன மளக்குந் திறந்தொழும்பி னெருப்பட் டார்பாற் சிறிதுமிலாய்
ஞான மளக்கும் பெருநலமா மூலேயோர் பாக நயந்தவனே
யேன மளக்குந் திறமரிதா யிசைப்பார்க் கெளிதாந் திருவடியாய்
வான மளக்கு மிடைமருத வாணு வடியேற் கிரங்காயே. (ங)

நீறு புனைவே னன்தெழுத்து நெஞ்சங் கணிப்பே னின்னுமம்
பேறு பிறிதில் லெனைப்புகல்வேன் பிணிக்காட் பட்டு வருந்துவனே
சிறு பகைவர் புரம்வெவச் சிரித்தாய் தரித்தாய் சுலமழு
மாறு வளமி லிடைமருத வாணு வடியேற் கிரங்காயே. (ச)

கூற்றஞ் சிதைய விறைவீண்ட கோக னகத்தா ளாயமர
சேற்றஞ் சிதைய வெழுந்தவிடத் தேற்றஞ் சிதைய வெடித்தயின்முய்
தோற்றஞ் சிதையப் பல்லுயிருந் தொழுது போற்றித் துதிக்குமூயர்
மாற்றஞ் சிதையா விடைமருத வாணு வடியேற் கிரங்காயே. (ஞ)

ஆயா நினையே சரணடைந்தார்க் கன்றி யயவா றடையார்க்கு
மேயா தோநின் னருள்பெருவா னிழிந்த களர்க்கும் பொழிதருமே
தாயா யளிசெய் தலைவாமுத் தலைவேல் பரித்தா யெஞ்ஞான்று
மாயா வளங்கூ ரிடைமருத வாணு வடியேற் கிரங்காயே. . (ட)

உணங்கன் மீனுக் குயிருதவி யுயர்நின் னுலகம் புகப்புரிந்தாய்
சுணங்க னரியா னியர்க்கரிய தூமுத் தியிற்சார் தரல்குறித்தா
யணங்கல் லவர்க்கு மூறல்கருதா வண்ணு மறவுதே யருட்கடலே
வணங்கல் புரிவே னிடைமருத வாணு வடியேற் கிரங்காயே. (எ)

அந்தோ நினக்கு வரகுணனி லன்பு புரிவா ரொருவரிலர்
மூந்தோ தீனையற் கருள்வதலான் முயலும் பிறருக் கருளாயோ
நந்தோ வருநீ ரெறும்பூளை நண்ணு நறவா சனைப்பொதியில்
வந்தோ வரிய விடைமருத வாணு வடியேற் கிரங்காயே. (அ)

அண்டர் பரவு கிராமயனீ யதனுற் றராணி யெனுநாமங்
கொண்ட தனக்குத் தகுமெனலுட் குறித்தே நின்னைச் சாணடைந்தேன்
ரெருண்டர் துயரஞ் சகியாத தூயா நேயா தாயானுய்
வண்டர் மலர்க்கா விடைமருத வாணு வடியேற் கிரங்காயே. (கூ)

ஆழி புடைசூ ழுலகினினை யன்றித் தெய்வம் பிறிதுளதோ
பாழி யமைதின் னருட்கலாப் படரு முளதோ பனிவரைவாய்
வீழி புரையும் பெருநலமா மூலையாண் மேய விடப்பாகா
வாழி வளஞ்சா லிடைமருத வாணு வடியேற் கிரங்காயே. (கo)

திருவிடைமருதூர் மருதவாணர் தோத்திரப்பதிகம் முற்றிற்று.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருப்பெருமணநல்லூர்த்

திருவெண்ணீற்றுமை

பிள்ளைத்தமிழ்.



வழித்துணைவிநாயகர்வணக்கம்.

பொன்பூத்த முக்கணப் புத்தேளிர் முதலெனப் புவியகத் தெவரு முணரப் - பொலியொரு பிறைக்கோடு மருண்மேனி யும்பொழி கபோலக் கடாமுகாளுங், கொன்பூத்த வெண்மையுஞ் செம்மையுங் கருமையுங் கொப்பு ளிக் கக்கருணையே - கொழித்தமர் வழித்துணைக் குஞ்சரத் தஞ்சரண கோகநக மாகநகவே, மென்பூத்த கொன்றைச் சடைப்பரன் வலத்துவிழி வெள்ளென வீடத்துமருவும் - விழிகா ரெனச்செய்ய வாயிலெழு குறுமூரல் வெண்ணி லவு தவழுந்தொறுந், தென்பூத்த வதின்முழுகி மேற்பழுப் பொழியுந் திறங் கருதி மூக்கணியெனத் - திகழ்முத்த மேவவமர் *மணவைவெண் ணீற்றுமை செழுந்தமிழ்க் கலிதழையுமே. (க)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்வணக்கம்.

பாழிமிகு வைதிகஞ் சைவந் தழைப்பப் பசித்தமுத பனவரேற்றைப் - பரவுபா ஞானவின் பாலருச்செய்யவாய்ப் பரசமய கோளரியைவண், காழிவரு மொருமுத் தமிழ்க்கடாம் பொழிமழ களிற்றைவே தக்கொழுந்தைக் - கவுணியக் கன்றைநற் கற்புநிறை பொற்புமலி காதலி யொடுந்துதிப்பா, மாழியிறை வற்குவெவ் வீடமுதவு தன்பிழை யகற்றியுய் வான்குறித்தாங் - களவில்வெண் பணிலமுந் தாளமும் பவளமு மம்பொன்னு மணியுநாளும், வாழிகெடு வெண்டிரைக் கையேந்தி வந்துதூய் வழிபட வீளங்குதெய்வ-மண வைவெண் ணீற்றுமை யணங்குக் கிணங்குதமிழ் மாலையுயர் பாலையுறவே.(உ)

காப்புப்பருவம்.

திருமால்.

மாமேவு பல்லுயிரும் வாழவிணை தற்குரிமை மந்தா கினிக்கில்லகம் - மார்பினுக் கேயுள்ள தென்றுகுறி யிட்டதென மறைகூறு குறிகடந்தோன், பூமேவு மார்பினெண் மூலக்குறி யமைத்தமகிழ் புண்ணியக் கொம்பை யெவரும் - போற்றுமண வைத்திருவெண் ணீற்றுமை யெனப்பொலி பொல

---

* மணவை - திருப்பெருமணநல்லூர்.

ங்கொடியை யினிதுகாக்க, காமேவு பேருலகி லாருயிர்ப் பயிரெலாங் கலி
வெப் பொழிந்துதழைவான் - கடையிய தடையிடையி லடைவரிய பெரிய
தண் கருணைமழை பொழியநாளுந், தேமேவு பங்கயச் செல்வியக லொண்கட்
செழும்பரவை யுட்படிந்து - திதலைகொண் டெழுமளையள் கொங்கைப் பொ
ருப்பிற் செறிந்துவளர் பச்சைமாலே. (க)

சிவலோகத்தியாகர்.

தேமலிக டெக்கைநதி யாறுகு கொக்கிறகு சீறரவு பூமத்த மாமுடிச் சாத்
தினர் - தேடுமிரு வர்க்கரிய ராகியுமு காக்கரிய சீர்கொண்முத னூல்பற்றி
யாய்பொதுக் கூத்தினர் - தீர்வரிய மத்தவினி தாவருளெ னப்பல்பல தேவர்
பின்வி டாரச்செப்பு நீடுதிச் சோத்தினர் - தேரருநி ருத்தமக லாததரி சித்து
வகை சேருமா வோடுற்று வாழ்புலிப் போத்தினர், நாமலிபு கழ்ச்சியைய
வாவியடி யர்க்குறுதி நாடியவர் பாலுற்ற தீமையைப் பாற்றுவர் - நானெனதெ
னப்புகலு மூனமத முத்தியரு ஞானநெறி யோர்பெற்ற பேறெனக் கேற்று
வர் - நாமரண டிக்கடிமை யோமெனநி னேப்பவரை நாகவிமை யோருட்ப
ராவிடத் தூற்றுவர் - நாடுதிரி யக்காரு ளாளர்மண வைக்கிறைவர் நாதர்வி
லோகத்தி யாகரைப் போற்றுவ, மாமலிக துப்பிளெளி மேயதர ளப்பிறை
விண் வாழுமுகின் மேலுற்ற வோர்பிறைக் கேய்ப்புற - வாளவிரு முத்தவட
ஞானநிறை வுற்றமுலே மாறில்புக ழேயொத்து மீதுறப் போர்த்தெழ - மாம
திய கத்திலெழு சீதநில வொத்தமுக வாய்முதிர்வி லாசத்து வாளின்மெய்ப்
பாற்பொலி - வாரிசம லர்ச்சாண நூபுரமொ லித்தெழநன் மாதவர்முன் மே
வொப்பி லாவருட் பார்ப்பனி, காமலிபொ ருப்பின்மக ளாயவனே மூப்புவன
காரணிக லாசத்தி பூரணக் கார்க்குயில் - காதலகல் பித்தர்குண மேதகுசெய்
பத்தர்பிழை காமருள மேவக்கொ ளாநலச் சூற்பிடி, காவிமல சொத்தவிழி
யோலியநி கர்த்தமயில் காணுலகெ லாமொத்த வாவுமெய்க் கீர்த்தியள் - காசில்
கலை முற்றுமுணர் வோருமுண்ம திப்பரிய காரிகைவி பூதிக்கல் யாணியைக்
காக்கவே. (உ)

பொய்யாதவிநாயகர்.

கலர்மல வாய்ப்படு பேயருட் சேற்றுமோ
கமகல வேட்டமர் தூயர்மெய்ப் பாற்பொலி
யுலர்தலி னூர்ப்பெரி யாருளக் காட்டிடை
யுலவுபொய் யாக்களி யானையைப் போற்றுது
மலரமர் சீர்த்திரு மாதர்கட் கார்க்குயி
லடியரை யேற்றிடு பேரளிப் பேட்டன
மலர்மலி நீர்த்தடம் வாரியொப் பாப்பொலி
மணவைவெ ணீற்றுமை யாடனைக் காக்கவே. (ஊ)

சுப்பிரமணியக்கடவுள்.

உணர்பெரும்புவன வுயிரொனுங்குகையு ளுறைதருங்குகனே வெள்ளி
வெற்பாத்தனு - ளுணரான்குமொழி யுணர்விறந்தபொரு ளுதவிநின்றவருள்
வள்ளலேக்கூர்த்திதி, புணரலங்கலயில் வலனயந்துபதை பொருதுவென்ற

விறன் மெய்யனேப்பூக்கமழ் - புனமடைந்தினேய குறமடந்தைமுலே புணரு வந்தமயி லேயனேப்போற்றுது, மினர்படுங்கனக திருவெழுந்தமல ரிலகுகொம் பரென வள்ளிலேச்சூற்படை - யிறைவனெஞ்சிலினி தமர்பசுங்கிளியை யெ ழில்கனிந்தமட வெள்ளனப்பேட்டினே, வணர்நறுங்குழலே மலேமருந்தையருள் வடிவையம்பிகையை விள்ளிசைப்பாட்டளி - மருவுபைம்பொழிலின் முகிலு றங்குவள மணவையெங்களுமை யையையைக்காக்கவே. (சு)

நான்முகன். வேறு.

வலமலியு மத்திரஞ் சத்திர முதற்பல வயப்படைக் குப்படையெனும் - வாக்காய தங்கொண்டு தான்கொண்ட வைதிகநன் மாண்பினுக் கேற்பநாளு, நலமலியும் வெண்மணி வடங்கையிற்றாங்கவெண் ணகையெனைய வுருவமேனி- நாயகி மணந்தவெள் ளோதிம நடாத்துமொரு நான்முகக் கடவுள்காக்க,வுலம லியு மெண்டோட் பிராணேப் புணர்ந்துசே யொன்றீன்ற மோகினியெனு-மொ ருமாது மற்றவன் றிருமடைப் பள்ளியக மோவா துறப்புரிந்து, குலமலியு மனேயகா யகனேநீங் காதுமகிழ் கூர்ந்தமர்ந் துலகம்வாழக் - கொழிக்குமரு ளம் மையைச் செம்மைசல் லூர்க்குடிகொள் கோமளக்கிளிமொழியையே. (கி)

இந்திரன்.

மூன்னுசுப் பிரமணிய ரேமென்று நன்றுமறை முக்கா லுணர்க்கமேவு - முருகனரு மருகனுவர் பருகுபுமெய் கருருபுகழ் முகில்புரையு மேனியண்ணன், மின்னுதன் பின்னெனப் பெற்றுவற் றுதகவுள் வெள்ளவெள் ளாளே யூர்ந்து - விண்ணுளு மாயிரங் கண்ணுளு மேனியுடை வேந்தன் பரிந்துகாக்க, பன்னுதிரு வுதரம் வருந்துத லிலாதண்ட பகிரண்ட மூற்றுமீன்ற - பளகறு தனேப்போல மேனேயுந் தனேயீன்று பாய்புகழ் படைக்கும்வண்ண, மன்னு மருள் புரிபசுங் கொம்பைவம் பைப்பொரு மதர்த்தமுலே தாங்கியேங்கி - வாங்கிமெலி தருநுண் மருங்குலே நெருங்குவள மணவைவெண் ணீற்றுமை யையே. (சு)

திருமகள். வேறு.

பிறந்த மனேயில் வாழ்க்கையிலர் பேதை மாத ரென்னுமொழி
பிழையே யாக மணிவண்ணப் பெருமான் றனேத்தான் பிறந்தவள
முறந்த மனேவா யாய்ப்பாடி யுறிப்பால் காவிற் கவர்சிறுமை
யொழியத் தாபித் திருவாழ்க்கை யுற்று மகிழ்மா மகட்பணிவா
மறந்த வாத மழுப்படைக்கை வள்ளற் பெரியோன் றலேமதிதான்
மாருக் கலக்க முறமுனியு மலர்த்தா ளெனினு மறத்தொழிலிற்
சிறந்த சிறியேங் கடைமதிதான் றீராத் தெளிவு பெறவுவக்குந்
திறத்தி னமைக்குந் திருநல்லூர்ச் செல்வக் கொடியைக் காக்கவென்றே.

நாமகள்.

தன்னு யகன்றன் மேனிநிறந் தனேயொப் பாய நிறமலர்மேற்
றங்கல் போற்றன் மேனிநிறந் தனேயொப் பாய நிறமலரு
மன்னு நிறைவெள் ளறிவுடையேம் வாக்குங் குடிகொண் டமர்கருணே
வண்மைப் பனுவ லாட்டியிரு மலர்த்தா டலேயால் வணங்குவா

மூன்ரு கின்ற கங்கைமக ளொடுங்கி யடங்கி யேமாற
வும்பர் பெருமான் றிருமேனி யொருபால் கவர்ந்து மமையாமே
மூன்ரு வினையன் றிருவுள்ள மூழுதுங் கவர்ந்துள் ளிறுமாக்கு
மூத்த மூர்ற் றிருமண்வை மூதல்வி தன்னைக் காக்கவென்றே. (அ)

தூக்கை.

மலேயா நிற்கும் வெள்விடையும் வான மறைக்குஞ் சிறைப்புள்ளு
மதவெண் பகடுங் கரும்பக்டி மானு மீனு மற்றுளவு
மூலேயா வெனக்கு மெதிரோவென் றுலாக்கும் விறலோ ராண்சிங்க
மூகைக்குந் திறலோர் பெண்சிங்க மூள்ளக் குகையு ளுறத்துதிப்பா
மலேயார் செறுவீற் கோட்டெருமை யங்கட் கரும்பு கறித்தருந்த
வதன்வா யிருபால் வழிதிஞ்சா றவாவி யுண்ணும் பலவண்டர்
வீலேயா வல்தல் விற்குமிளர் மிளிர்வாயூற லுணும்விடரை [றே. (கூ)
விழையு மணவைத் திருநல்லூர் வெண்ணீற் றுமையைக் காக்கவென்

சத்தமாதர்.

பறையோ திமமு மறையுமிமிற் பாழி யேறும் பிஞகமும்போர்
பயிலு மயிலு மயிலும்வலி படுபுள் ளரசுங் திகிரியுமொய்
யுறைசி யமும்வன் கலப்பையும்வெள் ளொருகை வரையும் வச்சிரமு
முழலும் பேயுஞ் சூலமுந்தம் மூர்தி படைசெய் யெழுமாத
ரிறையோ னுள்ளத் தழகொழுக வெழுதி நோக்கு மோலியத்தை
யெண்ணில் புவன மொருங்கீன்று மிளமை வளமைப் பசுங்கிளியை
மறையோ லிடும்பொற் றிருவடியென் மனத்தும் பதிக்கு மனத்தைநகு
மண்ணல் லூரின் வெண்ணீற்று மயிலைப் பரிந்து காக்கவே. (கo)

மூப்பத்துமூக்கோடிதேவர்.

சீதரன்மலர்த்தவி சிருக்கையனிவர்க்கரிய வொப்பற்றமெய்ச்சோதி பாதி
யுருவிற்பொலி - தேவியையுருக்கினர் மூருக்கித ழிதழ்க்கிளியை யெப்பற்று
மற்ரருண் மேவியவருக்குறு, காதரமறுத்தவர் பவக்கடல்சுவற்றிமகி ழப்பெற்
றிமிக்காளே மூலிருமுகத்தொரு - காளையைமதக்கவு ளுடைக்கயமுகத்தமர
னைப்பெற்றநற்ரும்பை மேதகுகுணத்தியை, யோதரதரச்செழு வடத்தொ
டொளிர்மூத்தவட முற்றுச்சி றப்பேறு ஞானவமுதக்கட - லூறுகல சத்துணை
மூலேத்துடியிடைக்கொடியை யற்புக்கி னிப்பாலேயாரருளொருத்தியை, யா
தரமிகப்பெரு மணத்துமெமனத்துமமர் முத்திக்குவித்தாய தாளுடையசத்தி
யை - யாதவருருத்திரர் மருத்துவர்வசுக்களெனு மூப்பத்துமூக்கோடி தேவர்
கள் புரக்கவே. (கக)

காப்புப்பாருவம் முற்றிற்று.

செங்கீரைப் பருவம்.

நீர்பூத்த முப்பத் திரண்டறமு மோம்புபெரு நிறைவின்மே லிஞ்சிம
லாரா - நீதிமேழ் நோக்கியே மலர்தலென் றியாவரு நிகழ்த்துநின் னிருகை
மலரு, மேர்பூத்த புவியிற் பதித்தொரு முழங்கா னிருத்தியொர் முழங்காளை
ஏத் - திரவிமண் டலமென்ன விருகுதம் பைக்குழைக ளெங்கும்வில் வீசி
யாடத், தார்பூத்த முச்சியிற் கட்டிவிடு நித்திலத் தண்மணிச் சுட்டியுலங் -
தழையுதுத லிற்பொலிவெண் ணீறுமொண டிலதமும் தளவனைய குறுமூர
லுஞ், சீர்பூத்த வெண்ணிலவு வீசியா டக்கவரி செங்கீரை யாடியருளே -
திருப்பெரு மணத்தம ரருட்பெரு மணச்செல்வி செங்கீரை யாடியருளீர். ( )

பேசுபுகழ் சால்பெரும் புவனத்தி லாண்மகப் பெறல்திறப்பெண் ணுமற்
றைப் - பெண்மகப் பெறலத் துணைச்சிறப் பன்றுதுயர் பெற்றதொப் பாகு
மென்று, மாசுபடு துன்பமே பெண்ணுருவ மாயெந்த வைப்பினும் வருவ
தென்று - மதிக்கிஞெரு மகவுமக வாவென்று மிங்ஙனம் வகுத்துரைப் பார்க
ளோடு, கூசுத லிலாதக மலர்ந்தாண் மகப்பெறுநி குறைவுதப வென்றுசி
மும் - கூறுருரு மூள்ளநாண் கொள்ளவெவ் ளப்படாக் குவடுவா ணனவவோங்
குந், தேசுமலி பனிமலைக கொருபுதல்வி யாயவுமை செங்கீரை யாடியருளே -
திருப்பெரு மணத்தம ரருட்பெரு மணச்செல்வி செங்கீரை யாடியருளே.(உ)

தையலர மாதர்முதல் யாருமோ ரித்துத் தழீஇக்கொளாத் தடைகருதி
யோ - தாமே விரைந்தின்னு மோகினியை முன்பாற் றழீஇக்கொளல்
விலக்கெண்ணியோ, வையமிசை யவரிடைத் தான்கொண்ட வார்வத்தை மன்
னுயிர்க் கறிவிக்கவோ - வயங்கருவ மெற்றிவ ரியங்கருவ மற்றெனு மறைப்
பொருளே வெளிசெய்யவோ, வுய்யநெறி தருசைவ சித்தாந்த மோதுமுடி
பொன்றியொன் முமையிற்றென் - றுணர்த்தவோ வுணர்வரிய வுணர்வருவ
மாகியெம் முணர்வொழித் துணருமொருவர், செய்யதிரு மேனியொரு பாதி
யமர் பைங்கிள்ளை செங்கீரை யாடியருளே - திருப்பெரு மணத்தம ரருட்பெரு
மணச்செல்வி செங்கீரை யாடியருளே. (ஊ)

நிறைசுணு மருவுநம் மிருகண்மல ரிலமென்று நினையாம லொன்றழிக்கு
நிலவுநங் கையமரு மலரென்று நினையாம னிதமுமிக ழொன்றழிக்கு
மறைபுகலு நங்காமர் மெய்யிலொன் றிரவுபகன் மாறுத வெப்புறுத்து [னுங்
மற்றுண்று மாற்றவ ளொடுங்கூடி மற்றதை யவக்குமிவை யன்றியின்
குறைவரிய வுவரகத் தும்புகூ ரரணநாங் கொளவிரண் டுங்குடிகொளுங்[யுஞ்
குலவிவற் றின்றிறமை யென்னையுறி வாமென்று குன்றுமா திருகுநிரை
நிறைசெய்த தெனவிறை மூகக்கண் புதைத்தபெண் செங்கீரை யாடியருளே
திருப்பெரு மணத்தம ரருட்பெரு மணச்செல்வி செங்கீரையாடியருளே.

பொருந்துபசி யாலிழி யிரண்டும் பிசைந்தழு புலிக்குருளை யொன்று
வப்பப் - பொங்குபூ ராழியை யழைத்துக் கொடுத்தவிவ புண்ணியன் புகழ்

சமழ்ப்ப, மருந்துநல் விருந்திஃ தருந்துக பொருந்தவென மறையுணர வரிய பெரிய - மாதேவன் மின்மணிக் குழைதழை செவிக்கண் மறைத்தமிழ் நிறைத்தூட்டுமா, குருந்துமழ களிறெளி விளக்கெனச் சண்பையிற் குலவு பர சமயசிங்கக் - குருளேயு ளுவப்பமெய்ஞ் ஞானவின் பான்முன் கொடுத்தபைங் கோலமயிலே, திருந்தா லருந்தவ ருளம்புகு விளக்கமே செங்கீரை யாடியருளே - திருப்பெரு மணத்தம ராருட்பெரு மணச்செல்வி செங்கீரை யாடியருளே. (இ)

வேறு.

சூழியமுஞ்சிறு சுட்டியும் விட்டொளிர் சோதிவிரிந்தாடச்
சூடுதுதிச்செவி நீடுங்குழையுந் தோடு மசைந்தாட
வீழியவாவுசெவ் வாயினெழுங்குறு வெண்ணகை நிலவாட
வெள்ளியபிறைதுத லென்பது மெய்யென வெண்ணீற் ருளியாட
வாழியவாழிய வென்றுமுனின்று வழுத்தும் பேரடியார்
மாறுவன்பெனும் வாரிகுடைந்து மகிழ்ந்தவர் சன்மமெனு
மாழியவாழி சுவற்றுமடப்பிடி யாடுக செங்கீரை
யல்லூர்பொழிலமை நல்லூரெழிலுமை யாடுகசெங்கீரை. (கூ)

நிறைதருமம்பல வுறைதருகரமலர் நிகழ்சிறு வண்டாட
நிலவெழுதிருமுக மதிவாயூற னிரம்புஞ் சுதையாடப்
பொறைதரு கருணையின் மூழுகியகயல்கள் பொலிந்து புரண்டாடப்
புவனம்பலவு மடங்கியவுதரம் பொற்பு மலிந்தாடக்
கறைதருகண்டர் கருப்புவின்மாரற் காய்ந்த ளுளத்தோர்ந்து
கனைதருதும்வலி காண்குவலின்னே காண்கென வறைவதுபோ
லறைதருசென்னி யசைந்தாடத்தனி யாடுக செங்கீரை
யல்லூர்பொழிலமை நல்லூரெழிலுமை யாடுக செங்கீரை. (எ)

விண்ணிலபிறையு நிறையுந்துறையும் மேவிய சடையாட
மிளிர்பொன்னுடைய னேத்துந்திருவரை வெம்புலி யுடையாடக்
கண்ணிலர்ந்தொடு நெக்குருகன்பர்கள் கைகள் குவித்தாடக்
காமருகொன்றை யொடுந்திலமாலை கலந்து புயத்தாடப்
பண்ணிலையாம லெழுப்பிசைவல்லவர் பாடிசை யூடாடப்
பதினுலகு மசைந்தாடக்கழல் பற்று சிலம்பாட
வண்ணிலமன்றிடை யாட்டுஞ்சூட்டன மாடுக செங்கீரை
யல்லூர்பொழிலமை நல்லூரெழிலுமை யாடுக செங்கீரை. (அ)

வேறு.

இகழ்தலிறவுமூயல் பவர்வினைநினைமுனி கன்றேதின்ருர்யா
மினையமுனடிமைய மருள்கெனவிமையவ ரென்பாரன்பாரா
யகழ்மலமெனவனு தினமுறையிடவடி யன்பானன்றேயா
யருண்மழையிடையொழி வதுதவிர்வகைபொழி யஞ்சேருங்காரே
புகழ்மிருகவுணிய மதலேமுனமுகைத விர்ந்தார்வங்கூர்சீர்
புனைதரினைதரு மமுதுதவியமுலே நங்காய்செங்கேழே

திகழ்பவர்திருவரு வொருபயலமர்மயில் செங்கோசெங்கோ
திருவளர்மணவையின் மருவளர்குழலுமை செங்கோசெங்கோ. (கூ)

வேறு.

வேலைமருட்டிய வாள்விழியற்புத நங்காய்சந்தாதி
மேருவளைத்தவர் மார்புதுளைத்தத னம்பூசுந்தாயே
பாலியனித்தெழு தேனையகற்றுசொல் கொண்டாய்வண்டாயும்
பான்மைமலர்க்குழ லாய்மலிபெற்றம ருந்தேசெந்தேனூர்
சோலைநலக்கிளி யேயமுதொத்தக ரும்பேசெம்பாகே
சூழுபவர்க்கிக லாயவொழித்தவர் தம்பாலொன்றீவாய்
சேலையெடுத்தகை வேளைநிறுத்தினள் செங்கோசெங்கோ
சீர்மணவைப்பதி வாழுமடப்பிடி செங்கோசெங்கோ (கஎ)

தேங்கோப்பருவம் முற்றிற்று.

தாலப்பருவம்.

வாங்குங் கொடிதுண் ணுசுப்பொசிய வார்க்குங் குமவன் முலைசுமந்த
மடவ நடைமங் கையர்நறிய மாலைக் குழல்கட் டவிழ்க்கவது
தாங்கும் விசைமென் றுகள்வீழ்ந்து தவழ்ந்தம் மடவார் மூலைகழித்த
சாந்தும் புழுகுங் குங்குமமுந் தணவா தழுந்து சேறுகித்
தேங்குந் திருவீ தியிற்படிந்து செறியு மீரம் புலர்த்தலினத்
தெரிவை மாரு மைந்தர்களுஞ் சிந்தைக் கவற்சி யறுத்தியங்க
வோங்குந் திருவுத் தமிழ்மணவை யுறைவாய் தாலோ சாலேலோ
யுலக முவக்குந் திருவெண்ணீற் றுமையே தாலோ தாலேலோ. (க)

வண்கா லென்ன வாயென்ன வாய்க்கா லெனக்கால் வாயெனப்பேர்
மருவி மாரு வனங்கொணமை மான நல்லூர் பெருமணம்வா
ணெண்கா நல்லூர்ப் பெருமணமே ரேய்பெ ருமண நல்லூரென்
றிலகு பெயர்பூண் டுறவனமேய்ந் தென்றும் விளங்கு மிங்ஙகைத்
தண்கா லறிஞர் பலர்குழுமித் தவாது சூழ்ந்து மருவுதலாற்
முவா நாமு மெஞ்ஞான்றுந் தவாது சூழ்த நருதியென
வொண்கால் பலசூழ் சிவலோகத் துறைவாய் தாலோ தாலேலோ
யுலக முவக்குந் திருவெண்ணீற் றுமையே தாலோ தாலேலோ. (உ)

காரார் கலிநீர் முகந்தெழுந்த கமஞ்சூற் கொண்டல் கருக்கலங்கக்
கலைவான் மதியத் துடல்போழக் கற்பத் தருவின் கழுத்தொடிய
நீரார் தடத்துத் தகட்டகட்டு நெடிய வாலே மேற்பாய
நிகழ்கார் மேதி படிந்துழக்கி நெல்லின் கற்றைக் கதிர்மேய்ந்து
சீரார் நறுந்தா மரைகுதட்டிச் செங்கட் கரும்பு கறித்தருந்தித்
தேமா நிழலிற் பேருணவு செறித்துண் டிடலே பொருளெனக்கொ

ஸோரார் போலத் துயின்மணவை யுறைவாய் தாலோ தாலேலோ
வுலக முவக்குந் திருவெண்ணீற் றுமையே தாலோ தாலேலோ. (கூ)

நிலவு தமைஈன் கினிதுயிர்த்த நிலமா கியகற் றுய்மகிழ
நிரம்பு பயமூட் டுபுவளர்த்து நிகழ்கா ராய செவிலித்தாய்
குலவு பசிதீர் தரவுணவு கொள்ளுங் கலத்தி னுவர்விரவுங்
கொள்கை தீதென் றதுகடிவான் குறித்த பொழில்கள் பலவுநிறை
பலவு மினிய தேமாவும் படர்நெட் டிலேய கதலிகளும்
பண்பி னுயிர்த்த கனிச்சாறு பாய்ச்சி நிற்ற லாற்றிசைபோ
யுலவு புகழ்சால் வளமணவை யுறைவாய் தாலோ தாலேலோ
வுலக முவக்குந் திருவெண்ணீற் றுமையே தாலோ தாலேலோ. (ச)

கத்துந் தரங்கக் கடலெழுந்து கழியின் வழிவந் திழிகிலழல்
காலு மொளியுங் கருகவொளி காட்டுந் துகிரும் வளோயீன்ற
முத்தும் பரப்ப வுதற்கெதிரே முகில்வந் துறங்கு முயர்பொழில்கண்
முனிவின் றேற்றுக் கனிவீஞெடி முகந்து பரிவர்த் தனைசெயல்போற்
கொத்து மலியும் பைங்கமுகின் குலைச்செம் பழமும் வெண்முகையுங்
கொட்டி நிற்ப வுதுகண்டு குளிர்வா ஞதி யெவ்வுலகு
மொத்து நலிறும் புகழ்மணவை யுறைவாய் தாலோ தாலேலோ
வுலக முவக்குந் திருவெண்ணீற் றுமையே தாலோ தாலேலோ. (ஞ)

வே று.

கருணைததும்பி வழிந்துபறந்த கடைக்கட் செம்தேனே
கடையேன்மூல மலத்தைவிளர்க்கக் காணுங் குழலமூதே
மருமலிபைந்துள வத்தொடைமாமுகில் வந்தபின் வந்தமனே
மாமுவன்ப ருளத்துமூலைத்து வளர்ந்தெழு பைங்கொடியே
பொருவருபைங்கிளி தங்கியசெங்கைப் பொற்புயி ரோவியமே
புயமவழ்கிமயத் திமயப்பிடியே பொலிமலர் மாளிகைவாழ்
தருணமடந்தையர் தாழுங்குயிலே தாலோ தாலேலோ
தண்ணியமணவைப் புண்ணியமயிலே தாலோ தாலேலோ. (சு)

உழைதருகையுடை யெந்தைபிரானுக் குடனெழி யாதமரா
வோங்குசிருட்டிமு லேனைத்தொழிலு மொருங்கு முடித்திடுவாய்
குழைதருசிந்தையி னெக்குருகிக்கசி கொண்டுகை கூப்பிடுவார்
குவிதலிலாத வுளக்கோயிற்கிடு கோலம் பொலிசுடரே
மழைதருமுகிலும் விளர்ப்பவிருண்ட மலர்க்குழ லோதிமமே
மாருவினேயேங் குடிமுழுதாண்டுற வாழ்வித் திடுமுதே
தழைதருமறையெனு மாவிற்குயிலே தாலோ தாலேலோ
தண்ணியமணவைப் புண்ணியமயிலே தாலோ தாலேலோ. (எ)

வே று.

உணர்பவருட்பொலி மழகதிரொத்தொளிர் தாயே நாயேனு
யுழலுமெனக்குந வருள்பொழியுத்தம மாதே போதேவாழ்

புணர்மூலையத்புத மகளிர்பழிச்சிடு தாளாய் வேளாயே
புவனமனேத்தையு முதரமடக்கிய மாதா வேதாவே
யிணர்மலரிற்சுரி கொளுநறவொத்தமெய் வாழ்வே தாழ்வேக
வெனவயன்மூற்பல வமரரிரக்குமு னீவாய் பூவாயோ
வணர்கொண் முகிற்குழல் வதிபிறைமெய்க்கவு மாரீ தாலேலோ
மண்ணைவகர்த்தலே மருவுமகத்துவ மானே தாலேலோ. (அ)

வே று.

வந்திப் பவர்பெரு வாழ்வேதாழ்வே யாழ்வேளும்
வஞ்சக் கொடுவினே நாயேனுயா தேயாயா
மூந்திக் திருவருள் சாராவோரா வேரார
மொய்ம்புற் றிடவருண் மானேதேனே கோனேயா
நந்திப் பொலிமலே மாதேசுதே யோதேர்சா
னன்றற் புதமுலே யாளேவாளே நீளேவே
கிந்தித் திடுவிழி யோராய்தாலோ தாலேலோ
திண்பொற் புரிசைகல் லூராய்தாலோ தாலேலோ. (ஆ)

வே று.

கரியகணயவை யேவாய் தாலோ காலேலோ
கருதுநர்பாலொளி யாவாய் தாலோ தாலேலோ
வரியபெமானிட மோவாய் தாலோ தாலேலோ
வருள்வரமேபொழி நாவாய் தாலோ தாலேலோ
வுரியரலாருயிர் காவாய் தாலோ தாலேலோ
வொளிர்முலையாமத மாவாய் தாலோ தாலேலோ
பிரியமுறுருள மேவாய் தாலோ தாலேலோ
பெருமணமேவிய பாவாய் தாலோ தாலேலோ. (க0)

தாலாபருவம் முற்றிற்று.

சப்பாணிப்பருவம்.

பார்வளர் மதிக்குழ வெனக்கழு மலத்திறற் பவித்தென் பவந்துடைத்த
பரசமய சிங்கமென் றுரைசெயும் பாலரூப் பவளவாயார்மணத்துக்
கார்வளரொ ராணவமு மிருவினையு மும்மலக்கட்டுமூட லாதிநான்குங்
கருதுசாக் கிரமாதி யைந்துமந் திரமாதி கையாறு நீந்தியெழுமா
ரூர்வமுற மூழ்கிப் புறத்தடையுமாசென வகத்தடையு மாசுமண்ணி
யான்றபஞ் சாக்கரப் புனலகன் கமைமேவு மாருயிர்க் கருள்சுரந்து
சார்வரிய வெண்ணீறு நல்குந் திருக்கைகொடு சப்பாணி கொட்டியருளே
தருமணந்தவழவமை பெருமணங் கமழுமுமை சப்பாணிகொட்டியருளே.

வேயெனப் பொலிபசுந் தோளுடைய மலர்மாதர் மென்கையங் காந்த
ளாங்கு - மிளிர்கமல மலர்பகலு மிரவுமெழு மிருசுடர் விராவுற விழுங்குமாவ,

மாயெனப் பொலிகருணை யம்மான் றிருக்கையொ டளாவுங் கௌரித்றுமூல - மன்புபுரி வழியடியர் பலவாரி முழுமையு மலைத்துச் சுவற்றுவடவை, சேயெனப் பொலிவனைக் கிழவன்விழி வளருந் திருத்தலர் படுத்தவமளி - தெய்வவற மூப்பத் திரண்டையும் வளர்க்குநற் செம்மையான் மிக்கசெவிலித், தாயெனப் பொலிநின்கை மலர்முகிழ்த் தம்மையொரு சப்பாணி கொட்டியருளே - தரு மணந் தவழ்வமை பெருமணங் கமழுமுமை சப்பாணி கொட்டியருளே. (உ)

குழைதரச் சுவைமதுப் பொழிதண்டு வாங்கிக் குலாவுஞ் சுருப்புநாணுங் - கூட்டியதின் மலரொன்று நாட்டிவலி காட்டியெதிர் கொற்றவேள் பொற்ற காமர், விழைதரப் பொலியுருவ மூற்றுமழல் பற்றுமொரு வெவ்விழிக் குணவு செய்த - மெய்யர்வெ லோகத் தியாகர்பனி மால்வரை விருப்புறு மணப்பந் தரி, னிழைதரத் தக்கவிடை யொசியவன மூலசுமந் திணர்மலர்க் கொம்பி னிற்கு - மேற்தெழினி னருகுற்று மறைமுழங் கப்பல வியங்கலிப் பப்பல்புவ னந், தழைதரப் பற்றுகைத் தாமரை முகிழ்த்தம்மை சப்பாணி கொட்டி யருளே - தருமணந் தவழ்வமை பெருமணங் கமழுமுமை சப்பாணி கொட்டி யருளே (ஊ)

செய்யகம லம்பொருவு மென்பது நிறம்பச் செயற்கைக் ஙெவ்பெழுந்து - செறிதரக் கன்றுமென் றெண்ணது பதிமுனுஞ் சேர்ந்தறி தராதலிவைகள். வையமிசை யிவர்முனஞ் சேர்வதோ வென்றுள மதித்திடா தண்டரண்ட - மாண்டபகி ரண்டமுற் றீன்றளிக் குங்கருணை வாஞ்சைநற் ரூயாதலான், மையவிரு மெங்கள்கண் மலரோடு வதனமு மலருமா றுளமிரங்கி - வளமொ ழிப் பைங்கிள்ளை தாங்கிய தனிறகுதை வந்துநந் துவகையுறுநின், றையலமர் கைம்மலர் முகிழ்த்தம்மை யம்மையொரு சப்பாணி கொட்டியருளே - தரு மணந் தவழ்வமை பெருமணங் கமழுமுமை சப்பாணி கொட்டியருளே. (எ)

உரவுமறை பாடுஙெவ லோகத் தியாகரென் றுனைசெய்நின் கொழுந்மகிழ - வுள்ளங் கனிந்துகெக் குருகியுரு கிக்குழைந் தோங்குதுதி பலபாடுவோங், காவு தவிர் மூத்தநின் மகற்கினிய மோதகங் கைதொடப் பலபடைப்போங் - கரு திள மகற்குநறு மான்மதஞ் சாந்தங் கருப்பூர மப்பிலிடுவோம், பரவுமந் தாகி னி நினைக்கடிமை செய்புமொரு பாவையென் றேநாட்டுவோம் - பரிந்துனைத் துதிபுரிதல் சொல்லவேண் டுங்கொலெம் பாலருள் சுரந்துமிக்கா, தாவுபெரு க்கர முகிழ்த்தம்மை யம்மையொரு சப்பாணி கொட்டியருளே - தருமணந் தவழ்வமை பெருமணங் கமழுமுமை சப்பாணி கொட்டியருளே. (ஙி)

வேறு.

வேட்டுப் புயறவழ் ஙெமயத் திமய விலங்க லிடைத்தோன்றி
வீண்ணவர் மண்ணவ ரெண்ணுமொர் வெள்ளி விலங்க லிடைத்தனியே
பாட்டுப் பிரமர முளருங் கொன்றைப் பைந்தார் வேய்த்துலவும்
பண்பார் பிரணவ குஞ்சர மேலிப் பாரொடு விண்வெருவு
மோட்டுத் திறல்கொ டுலாவிரு கோட்டொரு மூரிச் சினவேழ [வெண்
மூனேமுதன் மாய்ந்தொரு வனாபோற் சாய்தர முனிவிற் பொருமொரு

கோட்டுக் களிறு பயந்த மடப்பிடி கொட்டுக சப்பாணி
குணவைப் பெனவமை மணவைப் பதியுமை கொட்டுக சப்பாணி. (சு)

தமரத் திரைபடு தொடுகட லுலகிற் றண்ணிய பிரமபுரந்
தழைதரு வேணு புரப்பெயர் பூணத் தாலில் வாங்கொண்டே
யமரர்க் கதிபதி முதலியர் திருவனே யார்புக ழொடுகூட்டுண்
டண்ட மடங்க நடாவு கொடுங்கோ லாளியு மவனிளைய
பமரத் தொடைகெடு முடிவலி யினரும் பன்மைத் தருமிடையும்
படையும் முடையும் படிதடி கடிவடி பயிலயில் வலனேந்து
குமரக் கடவுளே யீன்ற கருங்குயில் கொட்டுக சப்பாணி
குணவைப் பெனவமை மணவைப் பதியுமை கொட்டுக சப்பாணி. (எ)

பிறைமதி நிறைபுன லுறைதரு சடிலப் பெருமா னெருமான்வாய்ப்
பெருகொலி யொருசெவி யருகுற நிறுவு பிராஞெரு பாலமர்வாய்
கறைதப மறைமுடி போதுமொர் கிள்ளை கலந்தமர் கைக்கிளியே
கடையேன் குடிமுழு தாண்டு விரும்பிக் காக்கும் பைங்கொடியே
மறைமுழு வதுமே லெலிசெய் தநையணி மாதே மாதரசே
மலையி னுதித்த மருந்தே வெள்ளிய வாணகை யோதிமமே
குறையற வடியவர் பாற்பொலி சுடரே கொட்டுக சப்பாணி
குணவைப் பெனவமை மணவைப் பதியுமை கொட்டுக சப்பாணி. (அ)

வேறு.

சிறுமதி நதிபொதி மிடைசடை யுடைய ரிடத்துமை பாவாய்
செறிதவர் மனவிருண் முழுதற வவணெளிர் பத்மப தத்தோயே
மறுவறு கதிரொடு மதியுற வுறுமிரு ளொத்தகு ழற்கோதாய்
மறுகுறு சிறுகிடை யொதெர வளரிள முத்தமு லெத்தாயே
கறுவொடு மெழுகொடு விடமமிர் துறவிடு கட்கடை நற்றேகாய் [யே
கதிர்வீழி யென்வொரு தமியனெள் ளொளிமுழு கத்தயை வைப்போ
குறுமுனி தொழுதெழு பனிமலே வருமயில் கொட்டுக சப்பாணி
குளிர்மலி பொழிலெழின் மணவையி லர்மகுயில் கொட்டுக சப்பாணி. ( )

வேறு.

படவர வச்சுமை முழுது முணப்பகி யுற்றவ னத்தாரர்
பதும மலர்த்தலே யமர்மறை வித்தக ரட்டதி சைபாலர்
கடவுளர் மற்றையர் முனிவர் பத்திசெ யப்படு மெய்த்தேவே
கமலம லர்த்தலே மகளிர்மு தற்பல ரற்புறு கற்போயே
மடமை யறுத்தென திதயம லர்க்கண ருக்கும னப்பேடே
மதியமு டித்தவர் நிதிய மெனத்தமு னத்துற வைப்போயே
குடவளே மொய்த்தசெய் மணவை மடப்பிடி கொட்டுக சப்பாணி
குலவிம யத்தனி வளைவரு முத்தமி கொட்டுக சப்பாணி. (கo)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

முத்தப்பருவம்.



கொழுதும் வரிவண் டெழுதழக்கிக் கொழுந்தே னிரம்ப வாய்மடித்துக்
குமட்டிக் கவிழ்ந்தாங் கெதிரெடுக்குங் குளிர்மென் மலர்ப்பூங் குழற்கொ
தொழுது மழுதும் புகழ்பாடித் துதித்து முருகி யுருகிகிழ் [ம்பே
தொண்ட ருளக்கோ யிலுக்கமைந்த தூண்டா விளக்கே சுயஞ்சோதி
யெழுது முயிரோ வியக்கொழுந்தே யெழுதா வருவத் தினங்கொடியே
யெழுபேருலகு நினைந்துதொழு தெழுகோ மளமே யிலவாதி
முழுதுமிணையி னின்கனிவாய் முத்தந்தருக முத்தமே
முதுசீர் மணவைப் பெருமாட்டி முத்தந் தருக முத்தமே. (க)

னனியா தரஞ்செய் துள்ளுருகி கைந்து குழைந்து காத்தழும்ப
நாளும் வழுத்தும் பேரடியார் நலஞ்சா வுள்ளத் தூற்றரும்பி
யினியா நிற்குஞ் சுவையமிழ்தே யேழைத் தொழும்பு பூண்டொழுகு
மெங்கள் குடிக்கு மொருமுதலே யெல்லா வுயிரு மினிதின்று
கனியா நின்ற பேரருளிற் கசிந்து நோக்கி மகிழ்விக்குங்
கரும்பே புவிமு னுருறுங் கடந்த முதலி லாமுதல்வன்
முனியா தவாவுஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே
முதுசீர் மணவைப் பெருமாட்டி முத்தந் தருக முத்தமே. (உ)

வீளைக்கு மதுரச் செங்கரும்பு வீரும்பு சுரும்பு நாண்பூட்டி
விசைக்கோ ரெறுத்த வேளுடலம் விழித்தீக் குணவாக் கியதுமறக்
திளைக்குங் கொடிதுண் மருங்குல்கவன் றேங்க வீங்கு மிளமூலையு
மிளகு பசிய வேய்த்தோளு மெழில்கொப் புளிக்குந் திருமுகமுங்
திளைக்குங் காதல் கொடுநோக்குஞ் செய்ய சடைவெண் பிறைமுடித்த
தேவ தேவன் முககமலஞ் செவ்வே மலர வெண்ணிலவு
மூளைக்கும் பவளச் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே
முதுசீர் மணவைப் பெருமாட்டி முத்தந் தருக முத்தமே. (ங)

நத்தங் கமழுங் குழற்கோதை நல்லா ரறுவர் திருமூலப்பா
னன்கு தெவிட்ட வுண்டுபசி நறும்புற் புனற்றொட் டிலினமர்போ
தத்தங் கமழும் படியெடுத்தாங் கேத்து மார்பி னுச்சிமோந்
தார்வம் பெருக நோக்குதொறு மருளாற் பெரிய யோகியர்தஞ்
சித்தங் கமழுங் கிண்கிணிப்பொற் சிலம்பு புலம்பு சேயிதழ்த்தாட்
டெய்வச் சைவச் சிறுகுழலி திருவா யாறு முவந்தளிக்கு
முத்தங் கமழு நின்கனிவாய் முத்தந் தருக முத்தமே
முதுசீர் மணவைப் பெருமாட்டி முத்தந் தருக முத்தமே. (ச)

அழியும் புவனச் சிறுவாழ்வு மமரர் புவனப் பெருவாழ்வு
மம்ம ஞாலு மருவருக்கு மார்வம் பூண்ட மலபாகர்

விழியு மனமுங் குளிர்தூங்க விதிகா ணரிய திருவுருவ
மேவி யாவி முதன்மூன்றும் விருப்பின் வாங்கி யெவ்வினையு
மொழியும் படிசெய் நோக்காதி யொன்றப் புரிந்து சிவானந்த
மூறிப் பெருகித் ததும்பியெழ வொன்று மொழிவா ருளங்குளிர
மொழியும்பவளச் செங்கனிவாய் முத்தந்தருக முத்தமே
முதுசீர்மணவைப் பெருமாட்டி முத்தந்தருக முத்தமே. (இ)

வேறு.

மதிமுத்தம் வீரன்வயி ரக்கழற் காறேய்க்க மண்ணிடைத் தேய்ந்ததுயர்
வேய் - வருமுத்த மதிலெழுந் தழலால் வெதுப்புண்டு மாமைகரு கியதுசெஞ்
சொற், பொதிமுத்தம் வண்பகடு காலுழக் கப்பிளவு பூண்டசா லிப்பி வளை
மீன் - பொலிமுத்தம் வெய்யபுல வொழியாது நாறுமொண் பூவையர் களத்து
மேவுந், ததிமுத்த மவர்மகிழ்நர் கைபட் டதற்குண்டு தோன்றுது மறைய
மிக்குச் - சுடர்முத்த மாலையி னெரிந்ததிவை வேண்டேந் தொடித்தபற் பல
வுயிர்க்கும், பதிமுத்த மேற்றுமகிழ் நிதிமுத்த மன்னசெம் பவளமுத் தந் தரு
கவே - பல்லூர் விரும்புமெயி னல்லூ ரரும்புமயில் பவளமுத்தந் தருகவே.(சு)

அடரிருட் பொலிவழிய வாயிரங் கதிர்விரித் தாதித்த னுதயமெழுமோ -
ரருவரைச் சிந்தூர வருவியிற் பன்னுளு மாழ்ந்தொளி பரப்பு மணியுஞ்,
சுடர்விரித் தெழுவுசிச் சுதரிசன மூந்தனித் தொல்வினையு மேந்து மொருவன்-
றுழாய்ப்படலை மறுமார்பி னுக்கழகு செயும்விலைத் தொகையிலா வரியமணியு,
மிடர்கெடத் தகுவரொடு சதகோடி கொண்டுபொரு மேந்தலூர் மணியுமற்று-
மியம்புமைந் தலைநாக மணியும்யாம் வேண்டல மெமக்கம்மை செந்துகி
ரெனப், படர்சடை தரித்தபொல் லாமணி யவாவுநின் பவளமுத் தந்தருகவே-
பல்லூர் விரும்புமெயி னல்லூ ரரும்புமயில் பவளமுத் தந் தருகவே. (எ)

கரவுதீர் பேரருள் விழிக்குடையு மீனுங் கலந்துபர ஞானமூறுங் - கதிர்
மூலக்குடையுங் களிற்றிகன் மருப்புங் களத்தினுக் குடையும் வளையும்,
விரவுபா கெனுமொழிக் குடையுங் கரும்புமெழின் மேயதோட் குடையும்
வேயு - மிளிர்கவா னுக்குடையும் வாழையு முகத்திற்கு மேன்மேலு முடையு
மதியும், புரவுசால் கைக்குடையு நளினமுநுங்குழற் பொலிவினுக் குடையு
முகிலும் - பொற்புறத் தருமுத்தம் வேண்டலங் கண்டம் பொலிந்தொளிர
நீலம்வைத்த, பரவுமா ணிக்கமொரு பால்வைத்த மரகதம் பவளமுத் தந்தரு
கவே - பல்லூர்விரும்புமெயி னல்லூ ரரும்புமயில் பவளமுத்தந் தருகவே. (அ)

வேறு.

மறையின் முடியு மெனது ளகமு மனமு ஞருக நித்தமு
மதுர மொழியி னினிய துதிசெய் மறுவி லடியர் சித்தமு
மறையு மழிவில் கருணை பெருகி யலைய தெறியு மக்கமு
மள்ளில் பிறவி யுதுதி சுவற வுலர்செய் சரண பத்மமு
நிறையு மழகு பொழியு முகமு மபய வரத வத்தமு
நிகரில் பிறவு மிலக வமரு நிலவு மமல வுத்தமி

கறையில் சிமய விமய முதவு புதல்வி தருக முத்தமே
கரையில் வளமை யளவு மணவை முதல்வி தருக முத்தமே. (கூ)

வேறு.

வஞ்ச மருவு நெஞ்ச மருவ வஞ்சி விலரு சத்தியே
வம்பு தழுவு மென்பு லுளாயு கம்பி யருள்செய் பித்தியே
கஞ்ச மருவு மஞ்சன் விறன்மு குந்தன் வெளிய வத்தியூர்
கந்த மலர லங்க லணிபு யன்பன் முறைது தித்துநீ
தஞ்ச மெனவு வந்த னேயர்மு னின்ற வொளிரொ ருத்தியே
சங்கு குழையர் திங்கண் முடியர் பங்கி னமர்தி றத்தியே
யஞ்ச முலவு நன்செய் மணவை யம்பை தருக முத்தமே
யன்பர் மனமு வந்த வருள ணங்கு தருக முத்தமே. (கூ)

முத்தப்பருவம் முற்றிற்று.

வாராணைப்பருவம்.

விற்கொண்ட வாணுதற் பட்டமுஞ் சுட்டியும் விளங்கொளி துளும்பு சூட்டும் - வினாநவுங் குழலிற் கவிழ்த்திடு தகட்டணி விராயசெம் மணியினெ ளியுஞ், சொற்கொண்ட வள்ளைச் செவிக்கணமர் தோடுமிரு தோள்வருடி யாடு நீடு - சோதிக் குதம்பையு மிளஞாயி றுதயஞ் சுரப்பமார் பத்துவயிரக், கற் கொண்ட பணியுமுத் தாரமும் வெண்ணிலாக் கற்றைகால் சந்தோதயங் - காட்டவிரு கைவளை கலிப்பச் சிலம்புகள் கலின்கலி னெனப்புலம்ப, வெற் கொண்ட தளிரடி பெயர்த்தமண வைப்பதி யெழிற்பரா பரைவருகவே - யேகர்சிவ லோகத்தி யாகரொரு பாகத் திருக்குமுமை யாள்வருகவே. (க)

ஆறு று தத்துவமும் வேதாந்த முங்கடந் தவிர்வனவிண் முழுதுமாளி
யாதிப்பல் வானவரு மாதரிப் பனவந்தி யன்னமன் னமுமுணர்தரா
நாறு று தங்குமுடி யொண்மதிப் பிறையஞ்ச நகுவன களங்க மொழிமெய்ஞ்
ஞானயோ கியருளங் குடிகொள்வன நைந்துருகி நாத்தழும் பத்துதிப்பார்
கூறு று காலுழக் காமல ரிடுந்தொறுங் கொண்டுவப் பனவென்றுபல்
கூர்த்தமதி யாளர்புகழ் மெல்லடி பெயர்த்தழகு குலவுவிரு பத்தாறினே
டேறு று புண்ணியமு மணவுமண வைப்பதி யெழிற்பரா பரைவருகவே
யேகர்சிவ லோகத் தியாகரொரு பாகத் திருக்குமுமை யாள்வருகவே.()

திங்களர வங்கண்மலி கொன்றைமலர் துன்றுசடை தேடிமுன் கண்டறிதராச்
செஞ்சூட்டு வெள்ளோதி மந்தொடர வாயிரந் தெய்வத் திறத்துநிகழ்வே
தங்கள்பெரு கோலமிட் டுத்தொடர நறியசெந் தாமரை யுயிர்த்தமாதுந்
தாதுசெறி வெண்சத தளக்கமல மாளிகைத் தலையமரு மாதுமிருபோ

கங்கண்மலி வானகத் தயிராணி யும்பல கருங்குழ லரம்பைமாருங் [தீர்ந்
கைகுவித் துத்தொடர மெய்ஞ்ஞான யோகரிரு கண்களுந் தொடரவிடர்
தெங்கண்மன முந்தொடர மெல்லடி பெயர்த்தினி தெழிற்பரா பரைவருகவே
யேகர்சிவ லோகத் தியாகரொரு பாகத் திருக்குமுமை யாள்வருகவே. ()

பன்மலர் மூகந்திரு கரங்கொண்டு தூய்நெடும் பனிவிசும் பமருமடவார்
பணிதோறு மவர்குழ லளாயதர ளப்பிறை பதிந்திடத் தோன்றுசுவடுங்
கன்மலர் மனத்தைவண் கருணைபுரி யாய்கொலென் காதற்கி ழகுகொலெனுக்
கற்பனைகடந்தவர் தொழுந்தோற்றமவர்முடிக் கட்பிறையை யெற்றவரலே
முன்மலர் தருஞ்சுவடு மேல்கீ ழுறப்பெற்று மோககீத் தவருளத்தான்
மூடிடப் பட்டுமய லாழ்ந்தா ருளம்பநிய முழுதுமச் சுற்றுவிலகு
மென்மலரு நின்மல ரடித்துணை பெயர்த்துந லெழிற்பராபரை வருகவே
யேகர்சிவலோகத்தியாகரொருபாகத் திருக்குமுமையாள் வருகவே. (ச)

ஆலக் கருங்களத் திறைவருட னீங்கா தமர்ந்துபரை யாதியிச்சை
யறிவுதொழி லாகியுமை பாம்பாச மற்றுய்ய வைந்தொழி னடாத்துமயிலே
சாலக் கருங்கொண்ட லோமர கதங்கொலோ தக்கவிந் திரநீலமோ [கார்
தழைதரும் பூவையோ வெனுமேனி வாய்ந்தமா தவனுடைத் தங்கையே
நீலக் கருங்கட் டிருக்கோதை மாதெடு நிலாவுகலை மாதுநாளு
நிகழத் துதிக்கும் பெருஞ்செல்வி யேகல்வி நேயமிக் கார்வாழ்க்கையே
யேலக் கருங்குழற் செய்யவாய் வெண்ணகை யெழிற்பரா பரைவருகவே
யேகர்சிவ லோகத் தியாகரொரு பாகத் திருக்குமுமை யாள்வருகவே. ()

வேறு.

மின்னிப் பொலியுங் கருங்கொண்மூ விளர்க்குங் குழலார் மைந்தரொடும்
வினையாட் டயர வினிதமைத்த வியன்மா ளிகைமேற் செய்குன்றிற்
றுன்னிப் பொலியும் படிபதித்த தொகுசெம் பதும ராகமணிச்
சுடர்மீ தெழுந்து வானளவுந் தோன்ற நிற்ற நமிழ்வேதம்
பன்னிப் பொலியுஞ் சம்பந்தர் பரவு மணத்தி லெம்பெருமான்
படர்பே ரொளியாய் நின்றதிறம் பாரா ரறியத் தெரிவிக்க
மன்னிப் பொலியும் வளநல்லூர் வாழ்வே வருக வருகவே
மாமுக் கருணை சூற்கொண்ட மயிலே வருக வருகவே. (சு)

மோன மோங்குஞ் சிவயோக முத்த ருள்ள முமிழாத
மும்மைத் தமிழ்தேர் விரகர்மண முடித்துப் பெறுபேற் றின்புகழ்போற்
கான மோங்கு மறைமுழங்கக் கங்கு லழிந்து கழிந்தோடக்
கதிர்வெண் மதியோ டுடுவொளிப்பக் கமல முகைகண் முறுக்குடையத்
தான மோங்குங் கூகைதுயர்ச் சலதி மூழ்கக் கொடியுவப்பத்
தண்டா ததய மெழுங்கதிரோன் றடந்தேர்ச் செலவு தனைத்தடுத்து
வான மோங்கு மதினல்லூர் வாழ்வே வருக வருகவே
மாமுக் கருணை சூற்கொண்ட மயிலே வருக வருகவே. (எ)

சந்து தவழு முலையாருந் தாமந் தவழும் புயத்தாருந்
தவாது தழுவு மாளிகையுந் தனிமே னிலையு மாடரங்கு
மிந்து தவழுஞ் செய்குன்று மெழில்கொப் புளிக்கு மரமியமு
மின்பங் குடிகொள் வேதிகையு மிடங்கொண் மணிமுன் றிலுமமுகு
நந்து தவழுந் தடம்படிந்து நறும்பூஞ் சோலை யகத்துறங்கி
நகுபே ரந்தி மாலையிற்பன் னலஞ்சால் பொதிய வனையுதித்த
வந்து தவழும் திருநல்லூர் வாழ்வே வருக வருகவே
மாமுக் கருணை சுற்கொண்ட மயிலே வருக வருகவே. (அ)

மூரி யெருமைக் கரும்போத்து மோட்டுப் பியலி லுகங்கிடத்தி
மூடங்கூர் நாஞ்சி லேர்க்காலம் மூரியா நகத்தி னடுப்பொருத்தி
வேரி கடைவாய் வழியிழிய விரும்பு முழவ றொழிடக்கை
மேழி தழுவ மற்றெருமை வெய்ய விருப்பு மூட்கோல்கொண்
டாரி தழியா ரடியும்வெளி யாமே யெனமண் பிளவுபட
வாங்காங் குரப்பி யுழுமோதை யம்ம பரத்த லாற்பகல்வாய்
வாரி யடங்கும் வளநல்லூர் வாழ்வே வருக வருகவே
மாமுக் கருணை சூற்கொண்ட மயிலே வருக வருகவே. (கூ)

பணியே விரும்பு துணி பினர்தம் பற்பே வருக முற்றுணர்ந்த
பரம யோக ருடன்பிரியாப் பணியே வருக வவர்பூணை
மணியே வருக வவரினிய வமுதே வருக வவர்திருப்பே
ரருளே வருக வவருளங்கொ ளனமே வருக வவர்முடிக்குங்
கணியே வருக மெய்ஞ்ஞானக் கனியே வருக வானந்தக்
கடலே வருக வெங்களிரு கண்ணே வருக கண்ணினுள்வாய்
மணியே வருக திருநல்லூர் வாழ்வே வருக வருகவே
மாமுக் கருணை சூற்கொண்ட மயிலே வருக வருகவே. (கo)

வாராணைப்பருவம் முற்றிற்று.

அம்புலிப்பருவம்.

திகழ்தரு கடிக்கைமலர் சூடுசிவ லோகத் தியாகர்த முடிக்கலத்துட் - றிறந்தவொன் முயனேயர் கண்ணுளொன் முயனேயர் திருமேனி யெட்டுளொ ன்றுய்ப், புகழ்தரு வலத்தவ ரியக்குமறை வாம்புரவி பூண்டதேர்க் காலு ளொ ன்றுய்ப் - பொலிவதன் றியுமனேயர் புண்ணியப் பொடியெனப் பொங்குகதி ரெங்குமமிழ்வா, யிகழ்தரு பவந்தவிர்த் தருளனே யளைப்பல விடத்தினும் போ த்றல்செய்வா - யித்தகுசிறப்புணர்ந் துன்னெகிலன்தாட லெண்ணினு ளெங் கள்வினேமுற், றகழ்தரு திருப்பெரு மணத்தமரருட் பாயொ டம்புலீ யாட வாவே-யலகில்புவ னங்கண்முற் றீன்றதாய் காணிவளொ டம்புலீ யாடவாவே.

எண்ணுமதி யினர்மதிக் கடவுளென நுவலுதற் கேற்பவொண் கலையா
ளணு-மிரியாத தண்மையா ளணுமாயி னுயின் னுமிருளிலொளி யோவுமாளுய்,
நண்ணுமொரு பாந்தளொரு புடைகொளினு மொருபுடையி னுளில விளக்
காகுவாய் - நாயனர் திருமுடிக் கங்கையிற் சங்கையற நாடோறு மூழ்கி யெழு
வாய், மண்ணுலகி லளவில்பைங் கூழ்தழையு மாதரருள் வழங்குவா யுனது செய்
கை - மதித்துநின் றென்றுட வாவென் றழைத்தனள் வழைத்தடஞ் சோலை
கடிகொண்ட **வெண்**டரள நிலவொளி நிலாவெனக் காலுமொளி கிரணமென்
னக் - கருகிச் சகோரம் புகுந்தது கடுப்பவொண் கலிஞகி மோகியள்ளும்,
படிகொண்ட திவலையென முத்தொன்று தூங்கும்ப் பைங்குமிழ்த் தண்ட
மொளிர்சண் - பகமென நினைந்துவிழி வண்டுகடை பிறழப் பசுங்குதலை வாய்
மடித்துக், குடிகொண்ட பாலருவி யுண்டகிறு பெண்பிள்ளை கொவ்வைவாய்
முத்தமருளே - கொம்புவரை பம்புவன வம்பிகை விரும்பிநின் கொவ்வைவாய்
முத்தமருளே. (ஊ)

வே று.

வெப்பவ னற்கினம் வைத்த தாக்கையு ரித்தவ தட்புனையா
விட்பர வப்படி மட்சுவை பெற்றக ணீப்புற னிட்டெழிலார்
தப்பின்ம திக்கலை நெக்குவி ரிர்த்தமு தத்தையு குத்திட வோ
தப்புனல் வெட்கம ருத்தையெ டுத்தயில் கட்செவி யைப்பிணியாத்
துப்புறழ் பொற்சடை யைச்சுமை கட்டியி றுக்கிமு டித்தொளிகா
றுத்திய ரக்கயி றிட்டுவ ளைத்தொரு பொற்கிரி யைச்சுமவா
முப்புர முற்றெறு முத்தரி டஞ்தவள் முத்தம ளித்தருளே
மூத்திய ளித்திடு மத்திவ னத்தவள் முத்தம ளித்தருளே. (எ)

வேறு.

சிரபுரச்சந் ததிதழைக்க முலைகொடுத்த தலைவிமுத்தந் தருகவே
திருமகட்குங் கலைமட்கு மெழில்சிறக்கு மிறைவிமுத்தந் தருகவே
தரணிமூற்றுங் தனிதழைக்க நனிபுரக்கு மமலைமுத்தந் தருகவே
சடைமுடித்தும் பியைவிரும்ப முடனுயிர்த்த விமலைமுத்தந் தருகவே
மரகதப்பொன் னிமயவெற்பு நிகர்தழைக்கும் வடிவிமுத்தந் தருகவே
மழைமுகிற்கண் டெழுபசுத்த மடமயிற்கு நிகரள் முத்தந் தருகவே
உரகபொற்கங் கணரிடத்து மருவுசத்தி கவுரிமுத்தந் தருகவே
உரலடிக்குஞ் சரவனத்து மெனதுளத்தி முறைவள் முத்தந்தருகவே ()

முத்தப்பருவம் முற்றிற்று.

வாராணைப்பருவம்.

செம்பொற் பிறங்கலே வலஞ்சூழ மமுதவெண் டிங்கள் செந் தீக்க
ருங்கட் - செவியஞ்சி யாம்பல்புக் கொளிகால்வ தெனநின்வாய்த் தெண்ணிலா
முறுவல்பூப்பக், கம்பக் களிற்றுரியர் கட்சுடரி லங்கியைக் கைத்தலையிருத்தி
மதியைக் - கங்கைமுடி வைத்தல் போல் வையாமை கண்டுசெங் கதிர்ந்தினது
செவிபுருங்தோர், கும்பத்த னஞ்சடை யிடைக்கரந் தார்ந்தினது கொழுநரென
மொழிதலேய்ப்பக் - குழைத்தோ டிலங்கமணி மேகலே லிலம்பக் குழைந்
திளங் கொடிதளாட, அம்பொற் சிலம்பலறி முலவுவ லடிவனத் தமரிளம்
பிடிவருகவே - அகிலாண்ட முழுவது முயிர்த்துமெழின் முதிராமுதி ராதபூங்
கொடிவருகவே. (க)

வெஞ்சின முமுத்திப் பதங்களெஞ்ண் கிரணவாள் வீசித் துணிக்கவீந்து
வீங்தெழு மிராக்குல மிகற்களித் திடுபாக்கவ் விரிசுடர்க் குறவுபூண்ட
கஞ்சமலர் முன்பணிபு முறையிடுத வேய்ப்பவவிர் ஊனகலோ கத்தரிவைமார்
கழல்பெயர்க் குந்தொறு மளிக்குல முழக்குதங் காரளக பாரமோதக்
குஞ்சர வதட்பரமர் கோடிர முடிகண்டு கொள்வான் விரும்பியதலாற் [வாய்
கோலநடை பயில்வதுங் கற்பான் விரும்பியெழில் கூர்மென் சிறைப்பவள
அஞ்சநின் னடிதொடரும் வண்ணமுல லடிவனத் தமரிளம் பிடிவருகவே [வே.
அகிலாண்ட முழுவது முயிர்த்துமெழின் முதிராமுதி ராதபூங் கொடிவருக

எண்ணரிய செஞ்சடை முடங்கற் கலாநிலவொ டெறுழிவெண் கோடி
ணேப்ப - வெழும்வெள்ளி முழுமதி யெனக்கொடிய கெட்டரா வெட்டிக் கழுத்
தைகீட்டி, வண்ணமிகு நின்சாயல் கண்டுள நடுங்கிமரா மலரோன்றலேப்பு
குங்கால் - வாலினடி யுண்டசிற் றிடையுடைத் தண்ணுமைவிண் மண்செவிடு
படவிரட்டத், தண்ணமுத மதிமான் வெருண்டிட மருண்டுகைத் தனிமா
னெழுந்துதுள்ளத் - தழையறு கெடுத்து நீ வாவெனுமு னின்விழி தினைக்
கண்டொடுங்கவெனையாள், அண்ணலிட மொருவியப் பயருமுல லடிவனத்
தமரிளம் பிடிவருகவே - அகிலாண்ட முழுவது முயிர்த்துமெழின் முதிராமுதி
ராதபூங் கொடிவருகவே. (ங)

கடியவிள ஞாயிறு கடுப்பவவிர் மணியணிக் கற்றையொளி சுற்றவற்
றுக் - கட்கடல் பிறந்தகரு ணோப்புணரி நீத்தமெழு கடன்மடை திறந்த
தேய்ப்பக், கொடியன மருங்குலரு கித்துவண் டெய்த்துநனி குடிவாங்கி
யேங்கவீங்குங் - கொங்கைகள் சுமந்தமட வார்தனி வராரூயிர்க் கொழுநர்
விட் டென்பதால்வெண், பொடிவிரவு செம்புய மலைக்கட் கொலைத்தொழிற்
பொங்குவெங் காரிபில்கும் - புழைவா ளெயிற்றரவு பூண்டமுக் கட்டிரி புராந்
தகக் கொழுநர்தூணைகொண், டடியர்மிடி நீரவரு முழுதமுர லடிவனத் தம
ரிளம் பிடிவருகவே - அகிலாண்ட முழுவது முயிர்த்துமெழின் முதிரமுதி
ராதபூங்கொடிவருகவே. (சு)

கடக்குஞ்ச ரங்கடவு மொலியுமிலை யோர்நடவு கவனவாம் பரியமலையுங்
கரியவீருள் சரியச் சிவந்ததய மெழுமெழு கடும்பரிக் கவரியேபோ
னடக்குந் தடந்தே ருருட்டரவ முங்கடி நலங்கெழு மியத்தமரமு
நளிர்முத் தலைக்கடலு மிடலுடைக் கருமஞ்சு ணாணத் தடிக்கும்வேலை
வடக்குங் குமக்கொங்கை மாதரெழி லானறு மலர்ப்பகழி யானவென்ற [யே
மைந்தரோ டேழ்சி னெங்தொளிர் மணிப்பணி கண்மற கெறியவெழுமோதை
யடக்குந் திருப்பொடி வளங்கொளுர லடிவனத் தமரிளம் பிடிவருகவே [வே.
யகிலாண்ட முழுவது முயிர்த்துமெழின் முதிரமுதிராத பூங்கொடிவருக
வே ரு.

பொன்னைப் புணரு மகன்மார்பப் புயலும் புயரூய் கடலுலகம்
பூத்த சுருதி நாத்தவனும் போற்றி போற்றி யெனத்தோற்றி
மின்னைப்பொருவு நுசுப்பொகிய விலங்கற் பொருவு முலைசுமந்த
மின்னுர் மாயக் கடல்வீழ்ந்து வெறும்பொய் யுடலை வேட்டுவந்த
என்னைத் தனது வசத்தாக்கி யிறப்புப் பிறப்பென் கடல் வீழா [தோண்
தெடித்துத் தடித்தாட் கொண்டவண்ட ரிளைக்கு மிதழி யிலம்பகத்
மன்னைத் தனது வசத்தாக்கு மயிலே வருக வருகவே
மதமா தங்க வனத்துமட மானே வருக வருகவே. (சு)

பருத்தா ரமுங்குங் குமச்சேறும் பம்ப விணங்கிச் சுணங்கரும்பப்
பணைத்துத் தடித்துப் புடைத்த முலைப் பாரஞ் சுமந்த கொடியசையத்
தருத்தா ழுலரு முதலான சகல வுலகுஞ் சராசரமுஞ்
சற்றே யசைய வசைவில்லான் முனு மசையச் சுரர்க்கமுத
மருத்தா வீடமுண் டிவந்தவந்த வையன் கரந்தொட் டிடச்சிலைமே
லலரிபுரையுஞ் சிலம்பவிர வலர்ந்த வடிமேன் முடிக்கேறு
மருத்தா மனைமென் மலர் பெயர்த்து மயிலே வருக வருகவே
மதமா தங்க வனத்துமட மானே வருக வருகவே. (எ)

வேலை யலம்பக் கருஞ்சுரும்பர் விளரி யலம்பி முளரிவிட்டு
மென்பூங் குமுத வீயலம்ப விரியஞ் சிறகர்க் குருகினங்கள்
காலை யலம்பப் பொலிகதிர்மேற் கடல்போய் விழுவெள் ளியநிலவுக்
கற்றை பரப்பு மதியைமுக கமலங் காட்டி வாட்டியபூஞ்

சோலை யலம்பும் பைங்கிளியே சுகமா ரின்பப் பெருங்கடலே
சொல்லற் கரிய மறைப்பொருளே துளிக்கும் பிரசத் துளபநறு
மாலை யலம்புங் குயிற்கிளைய மயிலே வருக வருகவே.
மதமா தங்க வனத்துமட மானே வருக வருகவே. (அ)

ஒன்றுந் திமிரக் கருளறவென் னுள்ளத் தொளிரு மொளிவிளக்கே
யுருகிப் பெருகுங் கண்ணீரென் னுததி யழுந்திப் பதைபதைத்துக்
கன்று மடியா ருளத்தின்பங் கனியக் கனியு மெய்ஞ்ஞானக்
கனியே நனியா நவாசமுங் கலந்து காட்டுஞ் செழுந்தேனே
என்று புனைய மணிப்பொதைகொண் டெழும்பூங் கொம்பே யினைத்தெடுக்கு
மின்பப் பெருக்கே முருக்கவிர்மெல் லிதழ்ப்பூங் குயிலே யிமைக்குமம்
மன்று ணடனத் தினையாட்டு மயிலே வருக வருகவே [பொன்
மதமா தங்க வனத்துமட மானே வருக வருகவே. (கூ)

பொன்னே வருக மூவுலகும் பூத்தாய் வருக நாயேனைப்
புரந்தாய் வருக வழுதியர்கோன் புதல்வீ வருக முகிழ்கிளைய
மின்னே வருக மெய்ஞ்ஞான விளக்கே வருக மறைநான்கின்
விரிவே வருக பேரின்ப வீளேவே வருக மிருங்கருணை
யன்னே வருக வகநெகுவார்க் கணியாய் வருக வலர்மடவார்க்
கரசே வருக வுரைப்பருஞ்சீ ரம்மே வருக வழற்கரத்து
மன்னே ருடலம் பகிர்ந்தவிள மயிலேவருக வருகவே
மதமா தங்க வனத்துமட மானே வருக வருகவே. (கo)

வாராணைப்பருவம் முற்றிற்று.

அம்புலிப்பருவம்.

புன்னைவீ யார்தரு நெடுங்கோட்டு மோதிப் பொருங்கட லுதித்தலா
னும் - புன்சிறு மதிச்சிறு விதிக்குறவு பூண்டுபின் போதப் பகைத்தலா
னும், பின்னைவாழ் செந்தா மனைக்கோயில் சாயவொளி பெறுமுகங் காட்ட
லானும் - பெட்பினிம மாதிரக் தவழவர லானும்வெம் பேய்க்கூத் துவந்த
பெருமான், மின்னேயெய் செஞ்சடை முடிப்பொங்கு கங்கைமகள் வெருவர
வுழக்கலானும் - வேம்பர்கள் குல்ம்புகழ வருதலா னுங்குலவி வீளையாட
கின்னேயெங்கள், அன்னைவா வென்றன டனக்கொப் பெனக்கருதி யம்புலீ
யாடவாவே - அம்புவன மும்மைதரு சம்புவன வம்மையுட னம்புலீ யாட
வாவே. (க)

தும்பியிர் போர்த்தவ ருடற்பாதி கொள்ளலாற் முள்ளுமீ ஞதரித்துத்
தோன்றலா லத்திரி தவத்திற் பிறத்தலாற் முகடீர் குணம்பொலிதலால்
வெம்பிவரு செங்கதிர் கரங்கிடப் பூஞைலி விரித்தலாற் குமுறுசங்க [லாற்
மேகத் துடன்மோன்றி வருதலாற் குமுதவாய்விரியவெண் ணைகைகாட்ட

பம்பிய சுரர்க்கமு தளித்தலால் வெள்ளிப் பருஉமுத் துயிர்த்தலானுல்
பகரறிஞ னென்சே யளித்தலாற் றண்ணளி பயத்தலாற் கலைநிலாவெம்
மம்பிகை நினைக்குநிக ராகா திராள்குலவி யம்புலீ யாடவாவே
யம்புவன மும்மைதரு சம்புவன வம்மையுட னம்புலீ யாடவரவே. (உ)

இலவந்த கமலந் திரட்டலல் லாதுதிரை யெற்று கமலந்திரட்டா
யெழிலாம்பல் பூத்துவரு வாயன்றி யொருமருப் பேராம்பல் பூத்துவாராய்
கொலவந்த நாகத்தி னுக்கமுத மல்லாது குளிர்நாக வமுதமாகாய்
கொம்பனைய ருக்காசை தரலன்றி யெண்மருங் குடிகொள்ளு மாசைதாராய்
கலவந்த நிறைமதி யெனப்பொலிவை யடியகைக் காக்குநிறை மதியுமுளதோ
கயிரவ நகைக்கவரு கருளொளி நினக்குமிக் காளிவள ஃ தறியாய்கொலோ
அலவந்த நங்கைதொழு மலவந்த மங்கையுட னம்புலீ யாடவாவே
அம்புவன மும்மைதரு சம்புவன வம்மையுட னம்புலீ யாடவாவே. (ஊ)

மத்தமத வானைமூல மணமாதர் வாய்பேசு வசைகளேற் றுத்திரிந்தாய்
மாலெச்சி லேச்சுற்று முனியெச்சி றேன்றியொரு மாசுணத் தெச்சிலானுய்
தத்தம தளப்படி சகம்பேச வாசான் றனக்கும் பிழைத்துநின்றாய்
தண்கலை நிலாவெனப் பலர்வெறுக் கக்கதிர்செல் சமயந் தெரிந்துவருவா
யித்தனை களங்கநின் பாற்பொதிதல் கண்டுமோ ரேசிலா கைக்கூவியாங் [ம்
கெங்கள்பெரு மாட்டிநினை வாவெனக் கூவிட வியற்றுமா தவமென்மூனை
அத்தர்கயி லாசமு தீசர்மண வாட்டியுட னம்புலீ யாடவாவே
அம்புவன மும்மைதரு சம்புவன வம்மையுட னம்புலீ யாடவாவே. (எ)

நீரேற்ற தெண்கட லுயிர்த்தபரி வாற்சொரிக ணீரென்ன வாரமிறையா
நெட்டுடல் விடப்பட வராக்கதுவு மேயென நினைந்துவாய் விட்டலறவுஞ்
சிரேற்ற வெண்சம்பு வின்கொம்பர் வைத்ததிக் தேளிரு லென்றுடனகர்ச்
சிறுபிடிக் குதவப் பெருங்களிறு பற்றவுக் தேவர்கள் பிழிந்தெறியவுங்
காரேற்ற ககனத் துதித்திரைக் கதிரெனக் கலைவலோர் புகல்வதுண்மை
காட்டுவா னுட்குநாட் டேய்ந்தொழியு நின்னையுங் கருணையின் வரகூவினுள்
ஆரேற்ற குடிலப் பிரான்மகிழ் பிராட்டியுட னம்புலீ யாடவாவே
அம்புவன மும்மைதரு சம்புவன வம்மையுட னம்புலீ யாடவாவே. (ஏ)

சுமையாக மாசுண முடித்தூங்கு குவலயஞ் சூழ்தெண் கடற்புகுதியேற் [வுவாய்
றேகையிவ ளீன்றவொரு குழவிகதிர் வேற்படை சுவற்றுமென் றுளம்வெரு
கமையார் தவப்பொதியின் முனிவருவ னெனவுங் கலங்குவாய் விண்புகுதியேற்
கருணை லயற்குநிழ லீயும்வெண் ணுவலின் கவடுரிஞ் சத்தேய்குவா
யிமையாத முக்கணப் பரனேக்கி னுஞ்சடை யினும்பொலிதி யேலிமைக்கு
மிவள்கரங் கால்பட வருந்துவை யிவண்சேர்வை யென்னினிற் கொப்பியார்
கமையாத நலனொன்று மின்றுதுன் றேறியுட னம்புலீ யாடவாவே [நிற்
அம்புவன மும்மைதரு சம்புவன வம்மையுட னம்புலீ யாடவாவே. (ஐ)

பூவேறு நான்முகப் புத்தே டிலோத்தமை புணர்ந்தமா பாதகமும்வெண்
போதக நடாத்திச் சிலம்புகள் புலம்பலிறை போக்குங்க ணுக்கையற்குங்

காவேறு மழைமுகில் கடுக்குமெழில்வண்ணனென் கண்ணனுக் குங்கொள்பிர
கத்தியு மகற்றியவொ ரித்தலத் தின்பெருமை கருதிலாய் போலுமோசேழ்[ம
மாவேறு தேர்க்கதிர் திறக்கநின் ஞெருதங்கை வாழ்மனை யடைக்குரியிம்
மாஞான பூமியிடை வருதியே னின்றேறய்வு மாறலோர் பெரிதன்றுகாண்
ஆவேறு கொடியுளார்க் காசையேற் றுங்கொடியொ டம்புலீ யாடவாவே
அம்புவன மும்மைதரு சம்புவன வம்மையுட னம்புலீ யாடவாவே. (எ)


மனையார் நெடுங்கொடிக ளாலகன் விசும்புபடு மாசொருவு மித்தலனின்
மெய் - மாசொருவு வரிதன்றெர் குழவியாற் கடல்விட்ட மாலினி துறங்கச்
செயுஞ் சினையார் நறும்புன்னை நீழல்விரி நின்பெயர்த் தீம்புன லிராமுழுதும்
வீண் - டெருவா றலைந்துகண் டுயிலாத நின்குறைவு தீப்பதரி தன்றுதாரணி,
தனையா யிரங்கிர்கொ ளெனவளித் தருண்மூர்த்தி தப்புநின் கதிர்கணிறை
யத்-தருவதரி தன்றிவை யுணர்ந்நிமய மகளாயெர் சங்கமுகி றங்கையாயென்
அனையாய் நினைச்சூலி மனையாய்ப் பொலிந்தவளொ டம்புலீ யாடவாவே -
அம்புவன மும்மைதரு சம்புவன வம்மையுட னம்புலீ யாடவாவே. (அ)

சேலையலை யெற்றுநெடு வேலையுல கத்தர்வெஞ் சிகையனற் கொப்புளிக்குஞ்
செங்கட் கடைத்திறற் கிங்கப் பெயர்ச்செழுந் திங்கட் சிறக்குமொருநாட்
காலைமுத லாகமறு காலையள வுங்கறைக் காலொரு மருப்புமுக்கட்
கடவார ணம்பூசை யயராது கண்ணுறக் கடவுதன் றென்றிகழ்வதும்
வேலையடும் விழிமாதர் முறையிடும் போதுதிறு விதிதந்த கயரோகமும் [ன்
விட்டொருவு ஞான்றின் றடித்தது கயக்காவும் வெறுமையே னுள்ளமுந்த
ஆலய மெனக்குடி புருந்தபெரு மாட்டியுட னம்புலீ யாடவாவே
அம்புவன மும்மைதரு சம்புவன வம்மையுட னம்புலீ யாடவாவே. (க)

வாவென்று கூவுமுனம் வந்திலை யெனச்சினம் வருங்கொலென் றஞ்சி
வஞ்சி - வாண்மணிநி னகைநாணி யோசடை தனக்கொவா மாசுண மெனக்
கருதியோ, தாவென் றுலாயதென வணிமணிப் பணியொளி தழைப்பது
தெரிந்தஞ்சியோ - சற்றிருந் தனனென விலக்கின முனிந்திடிற் றடைசெய்வா
ரெவரதன்றிச், சோவென்ற புன்னகையர் பின்னக வாவென்று தூண்டி
னும் போதுமோதுக் - துணையடி மறந்தனெகொ லினியெங்கண் மேற்பழி
சொலக்கரு திடேலயிலமட், காவென்ற கொண்டன்முன் வரப்பின்வரு பூங்
கொம்பொ டம்புலீ யாடவாவே - அம்புவன மும்மைதரு சம்புவன வம்மையுட
னம்புலீ யாடவாவே. (கo)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

அம்மானைப்பருவம்.



விரிநறை யிதழ்ப்பொலி மரைக்கட் பெருக்கெழு விரைக்கட் குடித்தெ
ழுந்த - மென்சிறைப் பமரங்கண் மேற்கடி தழுக்காறு மேவிமற் றோர்கமலம்
வாழ், வரியிறைத் தும்பிக டொடர்ந்தென முகத்தவிர்நின் வாள்விழி தொடர்ந்

நிடப்பொன் - வளர்சடை முடிக்கூ னிலாப்புனையு மெம்பிரான் வளரிர சதப் பொருப்பும், பரியவுர லடியுடைப் பொன்னுலகு வாழ்வீர பட்டப் பொருப்பு நீலப் - பைம்பொருப் பாகவொளி பம்பவெகி னஞ்சிகிப் பண்புறக் கருடிரண் டோர், அரியொளிதன் மேற்பாய்வ போலநீ லங்குயிற் றம்மானே யாடியருளே- அத்திவன வுத்தம ரிடத்தமர் பசுத்தகொடி யம்மானே யாடியருளே. (க)

பங்கய மலர்ப்பொலியும் வெள்ளிமணி தள்ளிமீப் பாய்ந்தது கடுப்பவம ரர் - பைந்தருவி லரிதுகொளு மென்றுகா வற்கனி பறித்தெறித லேய்ப்பவலே வெண், சங்கலர் பெருஞ்சலஞ் மங்கையிடை தங்கியொரு தண்சுட ரெழுந்த தொப்பச் - சலிலக் திரட்டியது விரியாது தெரியத் தடக்கைமாற் றுதனிகர்ப் பக், கொங்கலர் செழுங்கற் பகும்பா லசைத்தவொளி குலவுபந் தாடலுறழக் - கூட்டலிரு ளோட்டுத றெரிந்நிரவி வெப்பங் கொளப்பயனி லெலையஞ்ச லென், அங்கையி னெடுத்துநித் திலமன்றி மற்றிலா வம்மானே யாடியருளே - அத்திவன வுத்தம ரிடத்தமர் பசுத்தகொடி யம்மானே யாடியருளே. (உ)

பன்னக நெடும்பாய்க் கருஞ்சூன் முகிற்கதிர்ப் படலைமார் பத்துமணியும்- பரியவுர லடிமுக் கடாத்தவள யானையான் பதிவதிய மணிபும்வாங்கி, மன்ன ருட் பொலிபுமுப் பத்துமுக் கோடிக வாணர்மா னவர்யாரெனு - மனகசை யுடைத்தெனிற் கொண்மின்கொண் மின்னென வழங்குதல் கடுப்பவன்னே, நின்னயன வீணையுடு மேல்சென்று கீழ்படிய நெடியகோ டீரப்பிரா - னெஞ் சக் கலன்தரு மணிக்குவை திரட்டியெறி நீர்மைபோன் மென்னடையை வெள், அன்னமறி யத்தனி நடக்குமயில் செக்கர்மணி யம்மானே யாடியருளே- அத்திவன வுத்தம ரிடத்தமர் பசுத்தகொடி யம்மானே யாடியருளே. (ஊ)

கம்பமிட றுங்கடக் கரியுரியை யங்கக் கபாயெனக் கண்டவெண்டோட் கண்ணுதல் சடாடவிச் செம்மைநிக ராயினுங் காற்கிவப் பானநிகும் வம்பலரு மாம்பற் வெப்பியீண யெனப்பொரு வாய்க்குமிரு கைவிரற்கு [ளுங் மானமாட் டாயென் றெடுத்தெறிவ போலவும்வெள் வினைமருவு குணகடலெ கொம்பனகி னம்மானே நினக்கருளம் மானெயெனக் குலவிப் படர்ந்தபவளக் [ம் கொடியினை விலக்கியெழு செங்கதிர் கடிப்பவுங் குழையினை யடர்ந்துமோது அம்பன கருங்கட் பசுந்தோகை செம்பவள வம்மானே யாடியருளே அத்திவன வுத்தம ரிடத்தமர் பசுத்தகொடி யம்மானே யாடியருளே. (எ)

எங்கள்பெரு மானடி முடிக்காண்ப லெனவும்ப ரெட்டிமுட் டிப்பபறந்து மிருநில மிடந்துகனி யெய்த்தவரை யேய்த்தன ரெனப்பல ருரைப்பமூளரி மங்கைகின தம்மனைகை பற்றமுடி யாமையால் வாளா விருப்பமறைமின் வாக்குடைய னாதலித் கைப்படா முன்னமிது வவ்வினே னெனவுரைத்துச் செங்கையி லுறப்பற் றிடாதுவெங் காமமுஞ் சினமுமொரு வாவொருதவன்[ன் றெளிவுந்த மாதவர்மு னுணல்போ னுணிய திருப்பெணுட னுண்கொள்ளநி அங்கையி னுறத்தோ டசைந்தாட வேயாட வம்மானே யாடியருளே அத்திவன வுத்தம ரிடத்தமர் பசுத்தகொடி யம்மானே யாடியருளே. (ஏ)

வேறு.

குரும்பை யனைய பொம்மன்மூலைக் கொடிநுண் ணிடையார் கொழுதொடுங்
கூடிக் கலவி யயர்ந்துவிளாக் கொழுநரண் மலர்மென் மாலையொடு
மிரும்பை யரவ முயிர்த்தகட றெறியு மணிமா லையும்வெறுப்புற்
றெறியச் சிதறி மறுகினிடை யிமைக்கு மணியைக் குரீஇயினங்கள்
சுரும்பை யகலா மலர்த்தருவிற் றொடுத்த சிறுகூட் டுய்க்கவெழுஞ்
சுடர்போய்த் தூய்மா னதவாவி தன்னுஞ் செழும்பா சடைக்கமல
அரும்பை மலர்த்தும் பெருஞ்சோணாட் டரசா கெபொன் னம்மனேயே
அமுதப் பெருமா ளெதிவரும்பெண் ணமுதா கெபொன் னம்மனேயே.(சு)

கள்ள முளரிப் போதின்முகங் கருகிப் படுத்த செம்மல்கழீஇக்
கவினு ணறவ மலர்மேய்ந்து கடைவாய் குதட்டும் புனிற்றெருமை
வள்ள மனைய வாய்க்குமுத மடிவை யுழக்கி நெடுங்கோட்டு
வளர்தென் னருகுற் றடற்றினவு மாற்ற வுரிஞ்ச வுதிர்பழமாத்
துள்ள வருளொன் றுடைக்கவரி னளங்க வருணன் றலைமோதித்
துடித்து விழக்கூன் குலைசாய்த்துத் தோட்டுக் கதலி தலைசாய்க்கும்
அள்ளல் வயல்சேர் பெருஞ்சோணாட் டரசா கெபொன் னம்மனேயே
அமுதப் பெருமா ளெதிவரும்பெண் ணமுதா கெபொன் னம்மனேயே.(எ)

பாரப் புறமூட் கனியிழிந்த பகுதேன் சாறு திரையெறிந்து
பரவை புனையப் பெருகிநெடும் படப்பை தொறும்புக் குலவமட
லீரக் கதலிக் குலமுமிடற் பிறந்துங் குலைச்செங் காய்ப்பசிய
வினமென் கழுது முதிர்சுவைநெட் டிலைக்கன் னலும்வா னெட்டியப்பால்
வீரக் குலிசப் படைக்கடவுள் வெய்ய தழல்கட் கடைக்காட்டும்
விறன்மா மடங்க லாதனத்து வியன்மண் டபத்துக் கலங்காரம்
ஆரப் பொலியும் பெருஞ்சோணாட் டரசா கெபொன் னம்மனேயே
அமுதப் பெருமா ளெதிவரும்பெண் ணமுதா கெபொன் னம்மனேயே. ()

வாக்கும் பிரசச் செழுங்கொழுநரண் மலர்பெய் நறவ மலர்கொய்யும்
வண்மைத் தருமென் மலர்த்தென்வாய் வைத்துக் குடித்துக் குமட்டளிகள்
காக்குந் தகரக் கரியகுழற் கடவுட் சாதி மகளிர்முலை
கழுவி யிழிந்து நெற்சூட்டுக் கழனி புகுந்து வண்டலிட்டுப்
போக்கும் வரவு நீக்குமலைப் புனற்செங் கமல முகுத்தகட
பொதியுங் கரைத்துக் கால்வழிபோய்ப் புணரி நான்கு மூன்றையுமே
டாக்கும் பொழிலார் பெருஞ்சோணாட் டரசா கெபொன் னம்மனேயே
அமுதப் பெருமா ளெதிவரும்பெண் ணமுதா கெபொன் னம்மனேயே.(கூ)

புடைக்குங் களபக் குரும்பைமுலைப் பொலம்பூங் கொம்ப ரன்னமின்னார்
பொலியுங் கனக வெயில்பரப்பிப் புரவு மணிநின் றிருளிர்மனைமீக்
கிடைக்குங் கடவுண் மயன்மதவெண் கிரிகா டமைத்துத் தெளிந்தமைத்த
கிளர்கொள் பளிக்கு வேதிகைமேற் கெழும விருந்துஞ் சனம்விழிவாட்

படைக்கு நறுஞ்சிந் தூரததற்கும் பம்ப வெழுதி யெழுங்கமஞ்சூற்
பசுஞ்செல் வளக முதறமணப் பலதப் பையும்வீழ்ந் தொருவான்யா
றடைக்கும் வளமைப் பெருஞ்சோணாட் டரசா டகபொன் னம்மனேயே
அமுதப் பெருமா ஞெடுவரும்பெண் ணமுதா டகபொன் னம்மனேயே. ()

அம்மானைப்பருவம் முற்றிற்று.

நீ ராடற்பருவம்.

வேதமொரு நான்குநெடு நாட்டுருவி யுந்தெரிவில் மெய்ப்பரம் பொருள்வடிவ
விரிபுனன் மலிந்துள வெனச்செங் கரங்கொடு வியப்பிற் றிரட்டிடாமே [மா
மாதவனென் முன்னவற் காமென்ன மூரிவேள வாரிக் குவித்திடாமே
மழைமத மொழுக்குகர டக்கறை யடிக்கென்றெர் வண்கோடு நாடிடாமே
தாதவி ழலங்கலர மாதர்மான் மதநாறு தண்டாரள மாலுகுட்டித்
தத்தங் குயத்தைநனி யெள்ளக் குரும்பைகொடு சாமைவா னேங்கிநிற்கும்
போதக வனங்குடி புகுந்தமென் காமர்பிடி பொன்னிநீ ராடியருளே
பொருமானே வைத்தகைப் பெருமானே மருவுமான் பொன்னிநீ ராடியருளே.

நிகரறு பிறங்கற் பிறந்துமந் தாகினி நெடுங்கவலை யுறவெழுந்து
நிணமலர்க் கொன்றைதா ளுந்திக் கயற்கொடிவி ணேகிக்க விபுலைகடவா
மகரமூல வுங்கடலி னுஞ்சென்று வினையாடி வனசநீ லங்குமுதமென்
மலர்பூத்து நின்போ லிருந்தது மலாலம்மை வரவேற்று நின்றவதனற்
பகரரிய செங்கதிர்ப் புத்தேள் வலஞ்சூழ் பசும்பொற் பிறங்கலென்னப் [ப
பரவிவலம் வரவெண் டிகைத்தலை விழுங்கிவிண் பாய்ந்துபொலி யுங்கோபுர
புகர்முக வனங்குடி புகுந்தமென் காமர்பிடி பொன்னிநீ ராடியருளே [ளே.
பொருமானே வைத்தகைப் பெருமானே மருவுமான் பொன்னிநீ ராடியரு

கயலார் மணிக்குவை கொழித்துச் சுழித்துவரு கங்கா நதிக்குநினது
காரேரு வீரரு தன்மேனி முழுதுமென் கண்மீடாய யான்பெறுவதான்
மயலார் மலப்பகை யலப்பிய தலைப்பொதி மலைக்குரு முனிக்குமின்று
மகிழ்வெய்து மெனல்போ லினைத்துத் தினைக்கைகொடி வம்மென வழைத்
வயலார் மலர்த்தட னுழக்கிப் பழுக்குலை மரத்துத் தகட்டகட்டு [தவதனல்
வாளைதாய் வானதிச் சுறவொடற வாகும்வள மழைமதக் களடகும்பப்
புயலார் வனங்குடி புகுந்தமென் காமர்பிடி பொன்னிநீ ராடியருளே [ளே.
பொருமானே வைத்தகைப் பெருமானே மருவுமான் பொன்னிநீ ராடியரு

முறைபுகும் வழக்கா றிழுக்காது கோலோச்சு முருகாத்தி யபயன்மகிழ [ன்
முடியில்வெள் ளெனபையே கொத்தார மிட்டவரை முத்தார மிட்டவதனு
மறைபுகு மணித்தாலர் முக்குறும் பற்றவர் மருந்துண வுறுதவாயர் [ற்செக்
வாழ்த்துவது மன்றிநின் ஞெருகளி துளத்துள்ளும் வழியொழுகி நிற்பதா

நறைபுகு மலர்கலசை நிண்டோளர் மந்தர நரும்பரூஉ மார்பமுருவு [கைப்
கதிற்கொடியர் மாடத் துகிற்கொடிகள் போய்வான திப்புனலை நக்குமொரு
பொறைபுரும் வனங்குடி புகுந்தமென் காமர்பிடி பொன்னிநீ ராடியருளே
பொருமானே வைத்தகைப் பெருமானே மருவுமான் பொன்னிநீராடியருளே.

மழைமா நறுங்குழற் கடவுண்மட வார்புடை வளைந்துகு ழப்பெருந்தா
மரைமல ரிருந்தநறு விரைமல ரலங்கலிரு மாதர்நின் பாதமேத்தக்
குழைமா நறுங்கலவை காசறைச் சாந்திலெடு குங்கும மளாயதோயங் [ங்கத்
குணகடல் கலந்ததி னெழும்பருதி சேர்ப்பமென் கொம்பர்போ லிடைதுட
தழைமா வுறுங்கனி நறுங்களி யுகுத்தநீ தாறுபாய் நாறுநெடுவான்
றடவிப் பசும்புரவி கடவிச் செலுங்கதிர்ச் சாமரை யெனப்படுங்கைப்
புழைமா வனங்குடி புகுந்தமென் காமர்பிடி பொன்னிநீ ராடியருளே [ளே.(இ)
பொருமானே வைத்தகைப் பெருமானே மருவுமான் பொன்னிநீ ராடியரு

வேலு.

படைவிழி கண்டு மருண்டு வெருண்டு பதுங்கிக் கயலொழியப்
பணியணி கண்டங் கண்ட கமஞ்சூற் பணில முரன்றெழியக்
குடைதொறு மொருபிடி யிடையு மிலங்கு குழைக்கா தும்பாராக் [ளக்
கொள்ளைக் கொடிகண்மென் வள்ளைக் கொடியொடு கூடி வணங்கல்கொ
கடைவிழி விடையவர் சடையிவர் மாதைக் காதும் போதுறுதல்
காட்டத் துப்பன வோட்டம் விளர்ப்பக் கருணைக் கொடிநின்றார்த்
தொடையலர் செண்னிச் செண்னிப் பொன்னித் துறைநீ ராடுகவே
தும்பி வனத்துறை யம்பிகை பொன்னித் துறைநீ ராடுகவே. (சு)

தூவி யனம்பல சூழ்தர நின்றவொர் தோகை மயில்போன்றுஞ்
சுடரு முடுக்க ணடுக்க ணடுத்தவொர் தூமநி யும்போன்றுங்
காவி நெடுங்க ணடுங்கு மருங்குற் கடவுட் சாதிபின்வாழ்
கவின்மட வார்புடை சூழ மலர்ந்கொளிர் கருணைக் கொடிநின்றேர்
மேவிய துங்கக் கொங்கைகள் கண்டு மிதும்புற் புதமுடையா
விரியச் சுரிகுழல் சரியப் பிரிய மிருங்கலை வல்லோர்செந்
நாவிரி பாவிரி பூவிரி காவிரி நன்னீ ராடுகவே
நாகா டவியமர் தோகாய் காவிரி நன்னீ ராடுகவே. (எ)

மாமயின் மணியுமிழ் சுரிவளை நின்கர வரிவளை போற்குளிற
மண்குழை யும்படி வருநீர்ப் பூங்குழை வண்குழை போலாடக்
காமர் திருக்கை பெனப்பயீ நிருக்கை கவந்த முழக்கல்செயக்
காஞ்சி யொதுங்குதல் போலத் தழைகெழு காஞ்சி யொதுங்கல்கொளத்
தேமல நிகழெழுன வெண்ணகை யொளியாற் செம்மல நிதழ்வெளிறச்
செறிகா ரோதி யெனப்புன லுண்டு செழுங்கா ரோதியுறப்
பூமக ணுமகள் கோமகள் பொன்னிப் புதுநீ ராடுகவே
பூவலர் சம்பு வனத்தவள் பொன்னிப் புதுநீ ராடுகவே. (அ)

வேறு.

சேற்று முளைத்த மரைமலர்த்துஞ் செங்கே ழிரவி வரவுகவாச்
செறியுஞ் சுடர்க்காஞ் சனநாட்டுத் தெய்வச் சாதி மகளிர்கரு
வூற்று மலர்க்கற் பகமாலை யுயர்தோட் கொழுந ருடன்பவனி
யுலவும் பொழுதம் மடமாத ருடுத்த நண்டு சொருங்கனே
வேற்று நிதம்ப முதலவுறுப் பெல்லா மெளிது வெளிப்படலா
லிருகண் புதைக்க வெடிவாளே யெறிநீர்த் திவலே யெழுப்புநல்லோர்
போற்றும் வளவர் நாட்டரசே பொன்னிப் புதுநீ ராடுகவே
புழைக்கை யடவி தழைக்கவந்தாய் பொன்னிப் புதுநீ ராடுகவே. (சு)

காரார் கங்குற் பொங்கர்நெடுங் கமுகிற் றரளத் தாம்பசைத்துக்
காசு குயிற்று மூடலூசல் கதுவப் பூட்டிக் கழல்வீரர்
வாரார் களபத் தனத்தியரை மருவி யிருந்தத் தாம்பசைக்க
வான மளவக் கமுகசைந்தவ் வானத் தருக்கொம் பசைப்பதனுற்
ரூரார் குழனின் புகழ்பாடித் தழைந்தா டுவர்க ளெனநினைந்தத்
தருநாண் மலர்க ணணிபொழியத் தண்டேன் பெருகுங் கடிவடிவாட்
போரார் வளவர் நாட்டரசே பொன்னிப் புதுநீ ராடுகவே
புழைக்கை யடவி தழைக்கவந்தாய் பொன்னிப் புதுநீ ராடுகவே. (கo)

நீராடற்பருவம் முற்றிற்று.

பொன்னூசற்பருவம்.

வெள்ளிக் கொழுங்கதிர் விரிக்கும்வயி ரக்கால் வெயிற்றொட நிறுத்தி யதன்மீ - லித்தரும விட்டமிட் டொட்டியெட் டித்தராள வெண்டாம் பிசைத் தசைத்துத், தள்ளித் தழைக்கவமிழ் செங்கேழ் மணிப்பலகை தூக்கிமலர் மாலைவீக்கிச் - சொற்குயின் மலர்க்குயின் முதற்குயின் மொழிச்சியர்கள் சூழ்ந் துநின் றனரன்பர்நாத், தெள்ளிக் கொழிக்குநய மதுரமொழி யொடுகொடுஞ் சிறியேன்சொல் வறியபுன்சொற் - செவியிட்டு நின்றகரு ணைப்பூங் கொழுங் கொம்பு செம்புகா யகரிடைக்கட், புள்ளித் தடந்தோ லுடுத்தாட வாட்டினவள் பொன்னூச லாடியருளே - பொன்னகர் பொருங்காவை நன்னகர் வரும்பாவை பொன்னூச லாடியருளே. (க)

கொடிபூத்த துடியிடை தவண்டாட நறவுவிரி கோதைவண் டாடவண்டோல்
கொண்டாட வயிரச் செழுங்கால் பசப்புறு கொழுங்கால தாநின்மேனிக்
கடிபூத்த பச்சொளி மலர்ந்தாட வெண்ணைக ளலந்தாட விருகுழையுலாங்
காதாட வூசலா டுந்தொறுமெம் மையன் கருத்துநின் றூசலாடப்
படிபூத்த வெள்ளப் பரப்பென விரைத்துப் பரந்தெழுங் கருணைவெள்ளப்
பரவையுட் பாடிக் கரங்குவித் தாடியழல் பட்டமெழு கொத்துருகும்வெண்

பொடிபூத்த மேனியடி யாரைநன் காட்டுமையில் பொன்னூச லாடியருளே[ளே.
பொன்னகர் பொருங்காவை நன்னகர் வரும்பாவை பொன்னூச லாடியரு

மாவந்த மணிமுடி யனந்தரா மத்தரவின் வாருடற் றுவள்வதென்ன [செந்
வாங்குநுண் ணிடைபுவனம் யாவுமசை யத்துவள மதுரம் பழுத்தொழுகு
நாவந்த சொற்கொடு பழிச்சுவர் பவக்கடலை நக்குகரு ணைக்கடலுள்விண்
ணுடைளவ வெண்டிரை யெழுந்தென வரம்பையர்கை நறுமலர்க் கவரிதுள்ள
காவந்த தொல்புவி யியற்றவு நிறுத்தவுங் கட்கரிய தாயதுகளாக் [க்
காணவு மயக்கவு மளிக்கவுஞ் சற்றே கடைக்கணித் தேவலர்களாப்
பூவந்த வொருவன்முத லேவையு மாட்டுபவள் பொன்னூச லாடியருளே [ளே.
பொன்னகர் பொருங்காவை நன்னகர் வரும்பாவை பொன்னூச லாடியரு

கூராடு மொள்ளொளி யயிற்படை பரித்துவெண் குறுங்கை நிலாவிரித்துக்
குதைவரிச் சிலேவா ளெடுத்துக் கடுத்தமர் குறித்திதழ் கறித்துவருகூற்
காராடு செடியுடல் கடைக்கனற் றூங்குகட் கடையுடைப் படையவுணரா
கவபூமி யுட்கிர கரந்தறி படப்பல கவந்தநின் றுடவன்னுர்
தாராடு மார்பம் திறந்தொழுகு செங்குருதி சலராசி யேழுமொன்றுத்
தடவிப் புறப்புணரி யுங்கோப்ப வண்டத் தலப்பித்தி தத்திலிழவெம்
போராடு மொருகுழலி தொட்டிருட் டாட்டினவள் பொன்னூச லாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை பொன்னூசலாடியருளே.

தெள்ளார் பெருந்திரைத் தோன்றமுது கைப்பச் செழுங்குயி றிகைப்பகவிலுங்
தெய்வதச் சுவைச் செழும்பூங் கொழுங்கொம்பு செங்கே ழெறிக்குமணியாற்
கள்ளார் மலர்த்தொடைய ஞற்றிச் சமைத்தபல கைக்கணுற் றுடுதோற்றங்
கதிர்மண்ட லம்புக்க வுமதமய மானதண் கதிர்மண்ட லத்தையெய்ப்ப
நள்ளா ரெனுஞ்சமணர் தழையாது குழையாது நட்டதரு வேறமடலோர்
நதியேற வுயிர்கள்சிவ கதியேற மதியேற நகிலேறு பான்மராளப்
புள்ளார் புனற்புகலி வள்ளற் கருத்தினவள் பொன்னூச லாடியருளே [ளே.
பொன்னகர் பொருங்காவை நன்னகர் வரும்பாவை பொன்னூச லாடியரு

தங்கும் பெருங்குரற் கொண்டலெத் தாங்குமின் றண்டலைப் பசியபூகத்
தருவிணை நடுப்படுங் கவிழிணர்ச் சூதமென் சந்தனக் காலரும்ப
வெங்குங் கொழுந்தழற் செந்நிற மரும்பிய தெனத்தளி ரரும்பகோக்கி
யினிதுவந் தொருகுழை யிருந்தசைந் தாடுமொ ரிளங்கமருங் குயில்கடுப்பச்
செங்குங் குமச்சே ளளாவிய குயப்பொறைச் சிற்றிடை நடங்கெற்றிச்
செங்கட் கருங்களச் செக்கர்வா னுட்களி சிறந்திடக் கருணைவெள்ளம்
பொங்கும் படிக்கினி தலாவுங் கலாபமயில் பொன்னூச லாடியருளே [ளே.
பொன்னகர் பொருங்காவை நன்னகர் வரும்பாவை பொன்னூச லாடியரு

தாதார் சுகிக்கையணி யெம்பிரா னபவாணர் தம்பிரான் முடியன்றுபூந்
தாமரை யிடத்தன்மூழு விண்ணுளி முதலோர் தரித்தமணி முடிகளன்ஞ
ாதார மீயென வணங்கினுர் கொம்மைமுலே யம்மைபொன் னூசலேயுகைத்
தாடுமம யத்துநி னனிச்சமலர் நச்சடிக ளம்முடிக ளித்படாமே

காதார் குழைத்தோ டிளம்பருதி பொலியவொண் கமலமுக மலராகிக்
கவின்முத்த நிலவுமிழ வாயாம்பன் மலரக் காந்திரு சுடர்க்குமஞ்சிப்
போதார் குழற்கருட் கற்றைசுவல் சுற்றிடப் பொன்னூச லாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை பொன்னூசலாடியருளே.

பண்ணியற் கும்பிழை யளித்தினிய தெள்விளிப் பாண்முரலும் வரிமிடற்றுப
பைஞ்சிறை யளிக்குல முழக்கவர மாதர்கைப் பங்கயம் பொழிமலர்சுரக்
கண்ணியிற் சூழக் கிடப்பதென் னம்மைநின் கழன்மென்மை கவர்தலேய்ப்பக்
கயல்பயில வள்ளையொடு முட்டிமீண் டாலெனக் கண்குழையை முட்டிமீள
வெண்ணில்பொற் பூவின மிருப்பமு டித்திறந் திருளேயர் மனைக்குநாளு
மின்னு விழைக்கின்ற துன்னியஞ் செங்கர விழக்கமல மலர்கொடெங்கள்
புண்ணியர் திருக்கண் புதைத்துத் திறந்தபெண் பொன்னூச லாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை பொன்னூசலாடியருளே.

குரவுகமழ் குழலூச லாடுமெழி லேனுக்குமுக் குடுமிப் படைக்கையெம்மான்
கோலச் சடாமுடி துளக்கக் கலங்கிக் குதித்தோடு மதுபொழுதா
விரவுகர முந்தனி விதிர்த்திட வதிர்ப்பதியும் வெண்டலை யிமைக்கவிமையா
விழியாள னீத்தல்கண் டெனைநகைக் கின்றதென வீரிபங் கதியுணை
விரவுமதி தவழிமய வரைமக ளெனப்பிறந் தெப்பொருப் புங்கைக்கொளா [ம்
வெள்ளுதலில் வெள்ளிமலை கனகமலை மகிழ்நர்க்கு மேனமா மலைகள்யாவு
புரவுமணி யனவீளைய மைந்தற்கு மீந்தபெண் பொன்னூச லாடியருளே[ளே.
பொன்னகர் பொருங்காவை நன்னகர் வரும்பாவை பொன்னூச லாடியரு

வழியுநற வாறுபட் டறுகா லுழக்கமலர் மாலுபுனை சீறடியுமா
மணிநூ புரம்புலம் புஞ்சிலம் புங்கட்டி மறுகிடைச் சேந்தபட்டுஞ்
சுழியுமுவ ரெழுகழிய சலதிவயின் வருமணி தொடித்தமணி மேகலையும்விற்
றேனுறுட்டி யாணமுந் தொகையில்செங் கதிரெனச் சுடரதனப்பணிக
கழியுமொளி யுமிழ்வயிர வளைபரித் தடியார் கலக்கநீக் கபயவரதக் [ஞங்
கையுமொண் டரளமணி நகையு மணிக்குழைக் காதுமிரு கண்ணுமருளே
பொழியுமலர் முகமும்வடி வழகுபொலி தரவம்மை பொன்னூச லாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை பொன்னூசலாடியருளே.

பொன்னூசற்பருவம் முற்றிற்று.

ஆகக்கவிகள் - ககச.

அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

---

*சிறப்புப்பாயிரங்கள்.

மழவை, மகாலிங்கையர்பாடியகவிகள்.

விருத்தம்.

தருமைவளர் குமாகுரு முனிவன் கல்வி சார்பகழிக் கூத்தனெனத் தரணி யோர்சொ, லிருவருமே நன்குபிள்ளைத் தமிழைச் செய்தற் கேன்றவரென் றிடுமுனைவெங் கிட்ட தம்மா!, அருமைபெறு காவையகி லாண்ட வல்லி யம்மை மேன் மேற்படிநற் றமிழை யாய்ந்து, சுருதிநெறி தவறுத குணன்மீ ளுட்சி சுந்தரமா லன்பினெடு சொல்லும் போதே. (க)

வேறு.

சிரபுரக்கோன் மீளுட்சி சுந்தரவேள் தன்பெயரின் சிர்மைக் கேற்ப வரனுறுநற் பிரபந்த விடயத்து முயர்ந்தெல்லாம் வல்லோ ளெனுன் தரைமிகுகன் காவையகி லாண்டவல்லி மேற்பிள்ளைத் தமிழைச் செய்தல் ஒருபெருமை யோவவற்குத் தேவிபர மாதலினு லுயர்ந்த தாமே. (உ)

திருவாவடுதுறைஆதீனவித்துவான்

தாண்டவராயசுவாமிகள்பாடியகவி.

சிற்பரன்சேர் சிரகிரியெம் மீளுட்சி சுந்தரமாஞ் சீரார் கொண்மூ கற்பனைவண் கடலேமுகம் தத்திவனத் தொளிருமுக்கட் கரும்பைப் புல்கிப் பொற்புறவா ழகிலாண்ட வல்லியெனுங் கொடிதழையப் புவன மூன்றிற் பற்பலரும் புகழ்பிள்ளைக் கலிமழையைப் பொழிந்தென்பர் பாவ லோரே.

காஞ்சீபுரம், சபாபதிமுதலியார்பாடியகவி.

துங்கமிகு வானின்வரு மதிகண்டு கயலினந் தொலைவிலாக் கயரோகினீ - தொண்டர்வினை நீக்கியெமை யடிமைகொளு மிருவிழித் தோகையுமை வதன நிகரா, யிங்குவரு வாய்கொலுன் னேழைமதி யாலென வெழுந்துமேற் பாய்ந்தமுதெலா - மெங்கணு முடுக்கண மெனச்சிதற மோதிப்பி னிச்செய்தி யவள்கரத்திற், றங்கிவரு வானதியொ டுசைசெய்தல் போலதிற் முவிவிளை யாடிமீண்டு - தண்கழனி வருசம்பு வனலிங்க நிடமருவு தையலகி லாண்ட வல்லி, புங்கமுறு கின்றபிள் ளைக்கவிதை யாமமுது புலவர்மகிழ் கொண்ட ருந்தப் - பொற்புட னளித்தனன் மீளுட்சி சுந்தரப் பொன்னிறங் கொண்ட மாலே.

திருநெல்வேலி, திருச்சிற்றம்பலத்தின்னமுதம்பிள்ளைபாடியது.

நிலமண்டிலஆசிரியப்பா.

திருவளர் சீர்த்திச் சென்னிநன் னுட்டு, மருவளர் பொன்னி மாநதி வட பாற், கூங்குயி லுலாவக் கொங்குலாம் பொழில்க, ளோங்குதென் னுனைக்

* இவை பழையபதிப்பைச்சார்ந்தவை. [கி. பி. 1842.]

காவெனு மொப்பில், பதியகத் தெழுந்துவான் பதியுற நிமிர்ந்து, கதிர்மதிக் கொழுந்தொடு கங்கைமுடி தாங்கிக், கோடிக் தோலுங் குழையுமா டரவமும், பீடுறு சடையும் பெறீ இயெவ் வுயிர்க்கு, மடிநிழ றந்துதண் ணளியுறத் தன் போ, னெடியவெண் ணுவ னிற்பது நோக்கி, யதனிழ லமர்ந்த வருட்கட லிடத்திரு, குதர மேந்திய கொடியெனப் பொலியு, மாதகி லாண்ட வல்லி பொற் ருளின், மேதகு பிள்ளைக் கவித்தொடை மிலைச்சினன், செல்வமிக் கோங்கு சிராப்பளி மாநகர், மல்குசோ ணுட்டுவே ளாளர்மாண் குடிக்கோ, ரணிமணி விளக்கிற் றணிவில் புகழொடு, திணிபொருள் கல்வி கணிதமி லீகை, பொலிதரத் தோன்றிப் போற்றுறு சிறப்பின், மலிதரு சிதம்பர வள்ளன்மா தவத்தி, னிந்து பாற்கடல் வந்தெழுந் தென்னச், செந்தமிழ் விளங்கச் செங்நெறி திகழ, நற்குண னமைந்த பொற்புட னுதித்தோன், வண்டடர் குவளைத் திண்டடம் தோளினன், படிபுகழ் மேழிக் கொடி திகழ் குரிசில், நதிகுலம் விளக்கு மதிமலி திறலினன், கலைமுழு துணர்ந்த கவிஞர் குழாத்திட், டலைமை நடாத்துஞ் சைவ சிகாமனி, நாச்சுவை யமுதினு மூங்குனி சிறக்கும், பாச்சுவை யமுதைப் பற்பக ரேறுமு, பெருவா ளுட்டுப் புலவரும் பெட்புறத், தருமீ ளுட்சிசுந் தரநா வலனே.

புரசை, அஷ்டாவதானம் சபாபதிமுதலியார்பாடியகவி.

வி ரு த் த ம்.

மூற்றுதூ லுணருநல் லவையடக் கந்தர முநிர்ந்தசெஞ் சொற்றமிழினைப் பற்றுமத் தியாசமா லியலணி யுறச்சுரர் பாவுமா னேக்காவினி னற்றமகன் மதிவேணி யிடமருவு மகிலாண்ட வம்மைபிள் ளேத்தமிழெனச் சொற்றனன் றிகழ்சிர புரத்திலுறை மீனுட்சி சுந்தர வியற்புலவனே.

இராமநாதபுரம், அஷ்டாவதானம் - வேலாயுதக்கவிராயர்பாடியகவி.

வே று.

கந்தவே ளேவலது கலைமகளோ யிவ்வுருக்கொண் டாய்கா ணின்னே யந்தகாட் டவமிருந்து புலவோருக் கரசுசெய்ய வன்பாற் பெற்ற தநதையே தந்தையுனைத் தான்படிக்க வைத்தவனே தமிழுக் காசான் சுந்தரமா மதிவதனு மீனுட்சி சுந்தரனே துலங்கு மாலே.

விருத்தாசலம் குமாரதேவர்சந்ததிகளுள் ஒருவராகிய
பொன்னம்பலசுவாமிகள்பாடியகவி.

கட்டளைக்கலித்துறை.

தெள்ளித் தெளிகவி மீனுட்சி சுந்தரன் செந்தமிழால் அள்ளற் பழனத் திருவானைக் காவகி லாண்டவட்குப் பிள்ளைக் கவியொன் றுரைத்தே யிவண்பெற்ற பேறுகண்டன் புள்ளத் தமர புரசனன் குகன்கவி யுன்னுவரே.

காளாக்கால், முத்துச்சாமிகவிராயர்பாடியகவி.

வி ரு த் த ம்.

சீராட்ட வல்லவன்யா னேயென்னு மலையாயன் செருக்கு மாள
வாராட்டத் தனக்காவை யகிலாண்ட வல்லிதனே மண்ணுளோரும்
பாராட்டக் காப்பாதி யாப்பிள்ளேத் தமிழொன்று பாடித்தந்தான்
போராட்டச் செயலுணரா மீனாட்சி சுந்தரனும் புலவன் மாதோ.

காயாறு, சின்னையாஉபாத்தியாயர்பாடியகவி.

நேரிசைவெண்பா.

தேனருஞ் சோலைத் திருசிராப் பள்ளியில்வாழ்
மீனாட்சி சுந்தரன்கீர் மேவவைத்தான் - வானருஞ்
சம்புவனம் வாழுந் தருமவகி லாண்டவம்மை
தண்புகழ்ப்பிள் ளேத்தமிழைத் தந்து.

திருசிரபுரம், சோமசுந்தரமுதலியார்பாடியகவி.

வி ரு த் த ம்.

புவிமாதுக் கொருதிலகங் காவையகி லாண்டவல்லி புகழை யாய்ந்து
குவிமாலைப் புயசயிலன் மீனாட்சி சுந்தரமால் கூறும் பிள்ளைக்
கவிமாரி யுயர்நிலத்தும் புலவர்மனந் தழைந்துவகைக் களியுண் டாகச்
செவிமார்க்கம் பாய்ந்ததென்ற லிதுபோல விண்முகிலேச் செப்ப லாமோ.

உறையூர், முத்துவீரஉபாத்தியாயர்பாடியகவி.

தண்ணறுமுண் டகப்போதி லிருந்துலக மாக்கியவே தாவே யிந்தக்
கண்ணகன்ற புவியினிற்றன் னருமாற்றி வந்தமக்களருக் கவினத்தாங்கி
வண்ணமுறு மீனாட்சி சுந்தரமென் றெருகாமம் வயங்க வின்பம்
விண்ணவரும் பெறத்தந்தி வனப்பிள்ளேத் தமிழினீதா விளம்பிஞனே.

திருசிரபுரம், வீரராகவசெட்டியார்பாடியகவி.

இப்புவிசெய் தவந்தானே தந்தைதாய் செய்தவமோ விசைந்த வாசான்
செப்பமுடன் செய்தவமோ மீனாட்சி சுந்தரவேள் செனனமாகி
யொப்பிலுயர் கல்வியுஞ்சற் குணமுநிறைந் தகிலாம்பை புயபாத
வைப்பிலன்பா லினியபிள்ளேத் தமிழுரைத்தான் புலவரெலா மகிழத் தானே.

இந்நூல் அச்சிற்பதிப்பித்த

ஷை புரசைப்பாக்கம், பொன்னம்பலமுதலியார்பாடியகவிகள்.

வி ரு த் த ம்.

சகரர்கரந் தொட்டதிரைக் கடலுலகிற் சிறந்தசைவ சமய மோங்கத்
தகராறுங் குழல்பாகன் றிருவருளாற் சிராப்பளியென் றலத்தில் வாழ்வோன
சிகரவட வரைப்புயத்தெம் மீனாட்சி சுந்தரமால் திருந்தெந் நூலும்
பகரவலோ ஞருபிள்ளேத் தமிழுரைத்த தொருவியப்போ பாவ லோரே.(க)

கட்டளைக்கலித்துறை.

திருவளர் பங்கய வாவிகள் சூழுஞ் சிராப்பள்ளிவாழ்
மருவளர் பூங்குவ ளைத்தாம ரட்சு மணன்விரும்பத்
தருவளர் சம்பு வனவல்லி பிள்ளைத் தமிழியற்றி
யருவளர் மீஞட்சி சுந்தரன் றந்தா னுணர்பவர்க்கே. (உ)

பென்னேலூர், நாராயணசாமிநாயகர்பாடியகவி.

நேரிசைவெண்பா.

தேனூட்சிச் செஞ்சொற்பிள் ளைத்தமிழைச் செய்தளித்தான்
மீனூட்சி சுந்தரவேள் மேன்மையோன் - வானூட்சிக்
காவையகி லாண்டவம்மை காதற் கடல்மூழ்க
நாவலரின் பூற நயந்து. (க)

நீலமண்டி லஅசிரியப்பா.

மலர்தலை யுலகின் மல்கிய சீர்சால்
சிரபுர மதில்வாழ் செவ்வே ளனைய
மீனூட்சி சுந்தர மெனுமேன்மை நாமத்
தொருகற் பகமெழுந் தோங்கிய புகழ்சேர்
பிள்ளைத் தமிழெனும் பெரும்பா மாலை
திருவானைக் காவுறை தேவி யுமையா
ளகிலாண்ட வம்மை யணிதர பொருட்டுப்
புலவர் களிப்புறப் புனைந்தளித் ததுவே. (உ)

கட்டளைக்கலித்துறை.

தேனூருந் தீஞ்செஞ்சொற் பிள்ளைக வியெனுந் தெள்ளமுதைக்
காஞருங் காவை யகிலாண்ட வல்லி களித்தருந்த
மீனூட்சி சுந்தரமெண்ணுஞ் சுரபி மிகமகிழ்ந்து
வானோரும் வாழ்த்தமண் ணோரும் பராவ வழங்கியதே. (ஊ)

திரிசிரபுரம், நாராயணபிள்ளைபாடியகவி.

கட்டளைக்கலித்துறை.

வேலா யுதனிகர் மீனூட்சி சுந்தரன் வீறுயர்வாக்
காலானைக் காவினள் பிள்ளைக் கவியொன் றமுதெடுத்து
மாலாதி காலத்திற் றேவருக் கூட்டி மகிழ்ச்சிசெய்தாற்
போலா தரித்துப் புலவோர் செவிக்குப் புகட்டினனே.

உறையூர்

(திருழக்கீச்சரம்.)

ஸ்ரீ காந்திமதியம்மைபிள்ளைத்தமிழ்.

பாயிரம்.

விநாயகர்.

மாமேவு மேனியஞ் செக்கர்வான் கார்க்கவுண் மதக்கமஞ் சூற்கொண்ட
லோர் - வண்கோட் டிளம்பிறை விளங்குபுகர் மீன்செம்மை வாய்ந்தநய னக்க
திரவன், காமேவு குடிலத் தடித்தெளிர் தாரச்சுரர் கணம்புகழ்ந் தேத்தெடுப்
பக் - களிமிக்கு மண்ணுலகம் விண்ணுலக மாகவமர் கடவுளடி முடிசூடுவார்,
தேமேவு கொன்றையணி தன்முசடை யெந்தையார் சிந்தைத் தடத்தண்மல
ருள் - செங்குங்கு மத்தாது விழியளி மொழித்தேன் றிகழ்ந்தமுக வம்பாரு
கப், பூமேவு பொற்கொடியை மற்கெழுமு மளவில்பல புவனப் பரப்பெலா
மூன் - பொறையுயிர்த் தாளைநிறை யுறையூர்ப் பிராட்டியைப் புகழ்தமிழ்க்
கவிதழையவே. (க)

சிவபெருமான்.

தேனெழுகு செழுமலர்ப் பொழில்சுலவு கழுமலச் சிறுகுழவி நாவரசுநற்
றென்னவ னூர்நம்பி வாதவூ ரெம்பிரான் றிகழுமிந் நால்வர்தம்வாய்க்
காணெழுகு மமுதமழை கொடுதளிர்ப் பித்திடக் கண்டுவெண் டிண்டமதியுங்
கங்கையு மிலேந்தவை தருங்குளிர்க் காற்றுன் கடுப்பக் காத்தினுதலில்
வாளெழுகு செந்தழ லிருத்திக் கரித்தோல் வயங்குதிரு மேனிபோர்த்த
வள்ளலைப் பரசியெம துள்ளலைக் குன்கொடிய மாசறப் பாஞ்சுடர்த்த
மீனெழுகு மதிதவள மாடத் துரிஞ்சலுடல் விரவுமுய னீத்தமுடையார்
விழைமுக மடுப்பது கடுக்குமுறை பூரம்மை விரிதமிழ்க் கவிதழையவே ()

உமாதேவியார்.

வண்ணமதி யிற்கலையு மிரவியிற் சுடருமல நிற்பொலியு நாற்றமும்போன்
மறைதுதிசெ யிறைவரொடு பிரியாத தனதியல்பை மாலயன்முதற்சுரர்க்
கண்ணிய தாயவொரு திருமேனி வாமத்தி னன்குறக் காட்டிநிற்கு [கு
நாயகியை யகிலமு மளித்தபெரு மாட்டிதனை நாத்தழும் பத்துநிப்பாந்
தண்ணமு தசும்பமுயன் மதிநடு வுறச்சுற்று தவளமா ளிகையருகெலாந் [வா
தாவிலுற் கொண்டறலை தாங்கித் துகிற்கொடிக டங்குவது பாலொழுகு
யண்ணல்பசு மடலோடு தீற்றடியர் நடுநின் றரைப்பாய் நடங்கிடக்கா
ரமணரைக் கழுவேற்றி யதுகாட்டு முறையூரெ மம்மைநற் றமிழ்த்தழையவே.

விநாயகர்.

கண்ணரு நெற்றிப் பிரான்சடை யிடைப்பொற் கடுக்கையந் தாதளா வுங் - கலைமதியை யிகல்வென்று கறைகொண்டு வாங்குதன் கைக்கோ டுடன்பொருத்தி, விண்ணரு வொருகதிர வன்ரேற்றல் காட்டியவ் வியன் சடைக் கங்கையாற்றில் - வீழ்த்தத்த மனமுக் தெரித்துப்பின் முன்போல் விரைந்தெடுத் துப்பொருத்தித், தண்ணரு வொருமுழுத் திங்களுத யங் காட்டு தம்பிரான் றிருவடிக்கே - சரணடைந் தேமுளரி மலரிதழ்பொன் மூடித் தயங்கலம் மாதகொழுஙன், புண்ணரு ஞாட்பிற்ற மிழ்ந்னே மறைத்தபகை போற்றுதல் கடுக்குமுறையூர்ப் - புண்ணியம் பூத்தருள் பழுத்தபொற் கொம் பினைப் புகழ்தமிழ்க் கவிதழையவே. (அ)

சுப்பிரமணியர்.

கொங்குலவு கோதையயி ராணிதான் பட்டமரர் கோமான் புயஞ்சிவப்பக்- கூடித் திளைத்தவள் கருங்கண் சிவப்பக் கொடுந்தொழிற் றகுவர்மடவார், செங் கையொடு கொங்கைகள் சிவப்பக் கடைக்கண் சிவந்தானே யொருகுறப்பெண்- சீறடிக் கல்லால் வணங்கா முடிப்பெருஞ் சேவகனே யஞ்சலிப்பாஞ், சங்கெறி துறைக்கட் குடம்பையோ டொருபூந் தருத்தாழ்த்து நிற்பவம்பர்த் - தாமரைக் கொடிதுறைக் தம்மலர் மடித்தத் தடத்தினுட் பாய்கயலெல்லாம், பொங்கு மீன் கூடுபி னுறக்குனிக் தநிபத்தர் பொள்ளல்வலை படமுன்மீனைப் - பொற் கையி னெடுத்துவிடன் மானுமுறை பூர்க்கருணை பூத்தா டமிழ்க்கருளவே.(கி)

திருநந்திதேவர்.

கருதரிய வுலகெலாங் காக்கும் பிரான்றிருக் கயிலையைப் பொதுமை நீக்கிக் - காக்குமோ ருரிமைகொண் டெழின்மார்பின் முடியிற்பல் கடவுளர் தரித்தொளிவிடுங், துருவருங் கவத்துவ முதற்பல மணித்தொகைக ளகளா யெழப்புடைக்குஞ் - சூரல்படை யாக்கொண்ட வெஞ்சைபெரு மானடித் தொண்டரைக் கண்டுபணிவா, மருகுபெரு காற்றுப் புனற்றெளிவின் மூழ் கிடா தள்ளற் கருஞ்சேற்றின்வா - யாழ்ந்தே யுழக்கிக் குலைக்கணே ருதழ லடிப்பிள வுடைப்பன்மேதி, திருவமுற வைவத் தமுந்தப் புறச்சமயர் நிற மிற் றெனத்தெரிக்குந் - தென்னுறைக் தைப்பதியின் மன்னும் பிராட்டிதன் செ ந்தமிழ்க் கவிதழையவே. (சு)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பாலொழுகு குமுதவாய்ப் பிள்ளையைக் கள்ளப் படிற்றமனர் கூற்றை நீற்றைப் - பற்றியவர் பற்றறப் பற்றுமொரு கலைகணேப் பாரிக்கு ஞானவொ ளியை, மாலொழுகு புன்புற மதத்தரும் வியங்துதுதி வாய்பேச வென்பினைப் பெண் - வடிவாக்கு தூமணியை மாமறைத் தமிழ்பொழி மழைக்கொண்ட லேப்பவுவாஞ், சேலொழுகு கண்ணிய ரியங்குபொழி லிற்கருஞ் செழுமு கில் விராவொருதருச் - சினேயுறுஞ் செம்தே னிறுறலொரு வளாருறச் சென்று வளி யெறியமோதல், நீலொழுகு மூடலவுண ரைச்சவட் டியவலி நிறுத்த வொர் திரும்பைவளேயா - னெடுமால்பஃ றரமோதல் காட்டுமுறை பூர்க்கண் வளர் நிமலேநற் றமிழ்தழையவே. (எ)

திருநாவுக்கரசுநாயனார்.

கருமுருட் டெப்பறி தலேச்சமண ராழ்துயர்க் கடலிடை யழுந்தவெம்
மான் - கருணையங் கடலிடை யழுந்திப் பறம்பொடு கருங்கடலின் மிசை
மிதந்த, திருவமுறு செந்தமிழ்க் கடலேத் தழைங்தொளிகொள் சிவஞான தீபத்
தைநற் - சிவமணங் கமழ்மறைத் தமிழ்பொழியு முலேலத் தினம்பணிந் தேத்
தெடுப்பாம், பருவமுகி னித்திலச் சுனைதிற்று மாடப் பரப்பிற் படர்ந்துதுயி
றல் - பாற்கடலின் மீமிசைக் கண்டுயில்கொள் சக்கரப் படையுடைப் பகவ
னேய்க்கு, மொருபெரு வளத்தவுறை யூரிடை யமர்ந்தருளு மூமையவளே
யிமையம்வந்த - வொண்பிடியை யுலகெலா முதவிய வொருத்தியை யுரைக்கு
மின் றமிழ்தழையவே. (அ)

ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனார்.

முன்னரிய முதுகுன்றர் தந்தபொரு ளாற்றிட்டு மூரிதிரைப் பூங்குளத்
தின் - முன்னெடுத் தவனெவெம் முதலேவாய்ப் பிள்ளேதரு மூதல்வனைப்
பிறைமுடித்து, மன்னுமொரு தம்பிரான் றேழனைக் களிகொண்டு மதுவண்டு
வண்டுமுச - மணமாலே தியல்வருந் தேளனைப் பரவைமண வாளனைப் பரவி
நிற்பா, மின்னனைய சடையர்முடி காறுமைய ணைச்செல் விரிதலேத் தாழைக
ளெலாம் - மெய்யநின் போனீர் தரித்தமுக் கட்பெறுமெ மெய்ச்சினையை
யுலகின்மடவார், தென்னுலவு கொங்கையொப் பென்பரென வவர்திருச்
செவியறி வுறுத்தல்காட்டுஞ் - செறிவள மலிந்ததிரு நகரென மூறந்தை
யுமை செந்தமிழ்க் கவிதழையவே. (கூ)


திருவாதவூரடிகள்.

திருவார் பெருந்துறையி லொருகுருந் தடியிற் செழுங்கங்கை முடிமிலேந்த
சிவபிரா னருளுதலு மழல்வெண்ணெய் கல்லெனச் சிந்தைகெக் குருகியுரு
மருவார் மலர்க்கரஞ் சென்னிமீக் கொண்டிருகண் மழைவார வானந்தமே [கி
மாருத சிவபோக நறவுண் டிருந்தவருள் வள்ளல்பொற் றுளர்பரசுவாம்
வெருவா வினளுந்ற கட்டகட் டிளவளே மிடறிறப் பாய்வதஞ்சி
விரிதலேக் கதலியுஞ் செங்காய்ப் பசுங்கமுகும் வேழக் கரும்புமாராய்ந்
திருவா னளிக்குமக வான்கருணை பிறதமே லெழுந்தது கடிப்பவன்ஞ
னெழின்மண்ட பத்தினுக் கழகுதரு முறையூ ரிருந்தா டமிழ்க்குதவவே. ()

ஸ்ரீ சண்டேசுவரநாயனரும் மற்றநாயன்மார்களும்.

சிவகருமம் யாவர்கள் சிதைத்திடினு மவர்களேத் தேர்ந்துயிர் தபக்கோறலே
சிவதருமம் மென்பது தெரிந்துயிர்க ளுய்யத் திருத்தாதை தாளெறிந்த
தவமழ முனித்தவேர் தாளுமா ரூர்நம்பி சாற்றுமமு பத்தர்மூவர்
தாட்டா மரைப்போது மெப்போது முடிமீத் தரித்துத் துதித்தல்செய்வாங்
துவரெறி பிளந்தளி ரரும்பிய நறுங்கனிச் சூதம்வா ளேங்கிநிற்றல்
துருவரிய வினமான வொருமாவை யிளையவன் சுடரயில்கொ டெல்பிளக்கத்
திவளொளி முடித்தேவர் செய்தது தெரிந்தத் திருத்தேவ ருலகடர்க்கச்
சீறிச் சிவந்தெழுந் ததுசிவணு முறையூர்ச் செழுங்கோதை தமிழ்தழையவே.

காப்புப்பருவம்.



திருமால்.

நீர்கொண்ட வேணிப் பிராற்கருள் விருந்தினே நிகர்ப்பமுகிழ் நகைசெய் தோறு - நிலவெழுஉப் பொங்கித் துளித்துக் கிடப்பது நிகர்ப்பநிரல் பட மிலேந்த, வார்கொண்ட மணிவடக் கொங்கையுடை நங்கையையிண் மங்கை யர்க் கரசியைச்சீர் - மலியகில நிலமு முயிர்த்தகரு ணைக்காந்தி மதியம்மை யைப்புரக்க, தார்கொண்ட துளபப் பெருங்கா டலேத்தொழுகு தண்ணருக் கலுழிபொங்கத் - தவலறு மொளிக்கவுத் தவமணி சமழ்ப்பவத் தடமார்பு செக்கர்காட்டக், கூர்கொண்ட வேல்விழிச் செங்கமல மங்கையிரு குங்குமச் சேறளாவுங் - கொங்கைகண் ளெழுங்கத் திளேத்துக் களிக்குங் குரூஉச்சுடர்ப் பச்சைமுகிலே. (க)

வேறு. பஞ்சவர்ணேசுவரர்.

நிலவுபொங்கவொரு கிறையொ துங்குமிரு ணிகரவெண்பொடிபொ திந் தமெய்ப்பூச்சொளி - நிமிரவெங்குமலே கடலெழுந்தகொடு நெடுவிடங்குலவு கண்டனேத்தார்ப்புய - நெடியவன்பிரம ணுணர்வமென்றகில நிலமுந்துரவ நின்றமெய்த்தீர்த்தனே - நிகரில்வெங்கொடிய மகமெழுந்துபொறி நிறைபண ங்கெழுமு கங்கணச்சேர்ப்பனே,

வீலகிநன்கிரண முமிழ்பொலங்கொண்முடி மிசையியன்சுரர்க ரங்குவித் தேத்தவும் - விறல்கொளும்பணியு முழுவையும்பரவி மிளிரவும்புரிபொ னம் பலக்கூத்தனே - வெருவிலண்டரெழு விடையையென்றமுழு விடையில்வந்த ருளு மைந்தனேக்கார்ப்புயல் - விரிவிசும்பினிடை விரவுமிந்திரவில் விழையு மைந்துநிற நம்பனேப்போற்றுதும்,

மலர்பெரும்புவன முவகைகொண்டியர வழுவகன்றமறை யந்தமிழ்ப்பாட் டினே - வளமல்கும்புகலி மழலையின்சொலுடை மழமொழிந்தருளு மின்சுவைத் தேக்கமழ் - மதுரநின்றவமு துதவுகொங்கைமிசை வடபதம்புலவு திங்களேப் போற்சுடர் - மணிவடங்குலவ வெழுபசுங்கொடியை மலர்மடந்தையர்ம ருங்கு கைக்கூப்புட,

னிலகுனன்பரெவ ரெவர்செயும்பணிக ளெவன்மொழிந்தருள்வை யென் றெடுத்தேத்திட - விருகணின்கருணே பொழிபுநின்றவளே யெமதுளங்குடி கொள் பைங்கிளிப்பேட்டினே - யிமயம்வந்தமட நடையமென்பிடியை யெழி றழைந்துமலர் கொம்பரைச்சூட்டர - விறைவணங்குதுழை யிடையையம்பி கையை யிசையுறந்தைநகர் மங்கையைக்காக்கவே. (உ)

வேறு. நிருத்தவிநாயகர்.

மூப்புரமுருக்குகிற லாளனேப்போற்றிகொலே
முற்றுபகைசெற்றவொரு கோடுறத்தூக்கியே
ரப்புசுடர்விட்டெறியொர் கோடுவிற்சேர்த்தெழு
மற்புதநிருத்தமத வானையைப்போற்றுவாம்

திப்பியமலர்த்தருவின் மேவுபட்பாட்டளி
தெற்றெழுநறப்பருகி யேமுறப்பூத்துவார்
குப்புறுமிணர்த்தொகைய சூதம்விட்போய்ப்பொலி
குக்குடங்கர்க்கணமர் தேவியைக்காக்கவே. (கூ)

வேறு. முருகக்கடவுள்.

வரியளிக்குல முழக்கிடநறப்பொழியு மெண்மலர்த் தீர்த்தனன்
மணிமுடித்தலே சடக்கொலிபடப்புடைசெய் கைம்மலர்க் காய்ப்பனே
வழுவறக்குறு முனிக்கினியநற்றமிழ்சொ லேயனைச் சூற்புயல்
வளர்வரைக்குறவர் பொற்கொடியடிச்சுவடு மொய்புயக் காட்டனே
விரிகடற்புடவி முற்றுமறையச்சிறைகொண் மஞ்ஞையிற் கார்க்கடல்
வியன்முகட்டெழு மழப்பரிதியொப்பவரு செம்மலைச் சூர்ப்பிடி
விழிகளிப்புற நறைத்தருமலர்த்தொடைகொள் செல்வனைக் கூப்புகை
விதழுடிப்பரம ருக்கருண்மறைக்குரிய வள்ளலைப் போற்றுதுங்
கரியவுற்பலம் விளர்ப்பவறநெய்த்திருள்செய் பெய்குழற் கேற்பவோர்
கதிருநித்தில மணிப்பிறையணிச்சுவடு செய்திடச் சூட்டுபு
கணவர்செக்கர்முடி யிற்றிவள்பிறைச்சுவடு பொன்னடிச் சேர்த்திய
கவினுடைத்திருவை மிக்கருள்பழுத்தமலை வல்லியைத் தூப்படு
மரியநற்றவ குளத்துமெழுளத்தமமர் செல்வியைக் கூர்ப்படை [ணு
யலைதரப்பொருது பொற்குமிழ்மிசைக்கு றிகொள் கண்ணியைக் கூட்டு
மழுதுபெற்றணி பணிக்கொழுகுமுத்தமிழ் கிள்ளையைத் தேக்குறு
மருமறைக்கினிய குக்குடங்கர்க்கண்வள ரம்மையைக் காக்கவே. (ச)

வேறு. பிரமதேவர்.

பாயிருட் படலங் கிழித்தொழுகு செங்கதிர்ப் பரிதிவா னவன்முடங்கும் [ஞ்
பைந்திரைக் கார்க்கட லகட்டெழும் தெனவிரைப் பைந்துளவ னுந்நிநாறு
சேயபொற் றுமரை மலர்த்தவிசி னேறியத் திகிரியங் கொண்டல்காக்கச் [க
செயிர்தீர் பெரும்புவன முழுதும் படைத்தகைத் தெளிமறைக் கடவுள்காக்
மாயிரு விசும்புற முடுக்கணங் தம்மகிழ்நன் வள்ளலார் கொள்ளைவேணி
மன்னியதை யுன்னியிக் கன்னிதிரு முடியே வயங்கியெக் காலுமழியாக்
கோயிலென வாழ்வது கடுப்பமுத் தணியாற் குலாவிக் கமழ்ந்துநெய்த்த [யே.
கூந்தலிம யப்பிடியை மடநடை யனத்தையொண் கோழிநகர் வாழ்மயிலை

வேறு. தேவேந்திரன்.

பண்டு சமரிற் புறங்கொடுத்த பறம்பு நிறம்பா வெறுழ்படைத்துப்
பகைத்துப் பொரல்போ லயிராணி பசும்பொ னசும்பு மார்பினிடங்
கொண்டு பிணைத்துப் புடைத்திதழுந்த கொம்மை யிளமென் முலைக்கோடு
குத்திப் பொருத வடுப்பொலியுங் குருமா நிறப்புச் தேள்புரக்க
வண்டு படுந்தா ராரூரன் மாரு நிகிக்கோ னிருவரையு [ற்
மதியாப் பொருளோ நிரண்டினுக்கும் வயத்தோ முமைகொள் பிரானேபோ
றண்டு படுவெண் மதிதுதற்பூம் தோகை மாத நிருவரையுஞ் [யே.
சொலுந்தோ முமைகொண் டருளுறையூர்ச் சுரும்பார்குழலெம் பிராட்டியை

வேறு. திருமகள்.

வரியளி யுழக்கப் பசுந்தே னசும்பூறு மாலைத் துழாய்க்கொண்டறன்-மறு மார்ப மறுமாதர் மருவப் பொருதிதழ் மணத்தபங் கயமிருந்து, கரியகண் மூகிழ்த்திடுத லின்றிக் கடுங்காப் புறுத்தவு மறப்பொதுமையே - காட்டுமம் மார்பத் திருந்துரிமை கொண்மிகழ் கண்ணிகையை யஞ்சலிப்பாக், தெரிவரிய வரமுடைத் தக்களூர் புரிதருந் நீத்தொழி லடித்துருகைபோய்ச் - செயிருற்ற செங்கதிர் கடைக்கணருள் பெறுவான் செழுங்கா தடைந்துதேய்ப்பத், தூரி சறு நிறங்கெழு மணித்தொகை சுயிற்றபொற் றேருடைக் குயிலேயெயிலேச் - சுற்றுடுத் தோங்குவள முற்றவுறை யூர்க்கணமர் தோகையைக் காக்கவென்றே.

வேறு. கலிமகள்.

பல்கும் பொறிச்சிறைப் பண்மிடற் றளியிளம் பைங்குழலி வயிறுவிம் மப் - பருமுகை முலைக்கண் டிறந்தொழுகு மின்னருப் பாலூட்டு பங்கயத்து, மெல்குந் தகட்டகட் டிதழ்மேயி ஞன்மறை விரிந்தொளி பழுத்தசெங்நா - மேற்றனது வெண்மேனி செம்மேனி யாகவமர் விமலிபொற் றுள்பரசுவா, மல்குந் துகிர்க்கொடி பழுத்தனைய செஞ்சடை மணாளன் றிருக்கரத்து - மறி மான் றழைத்ததன் றிருவுருப் பசுமையொளி வார்ந்தெழக் கண்டுதளிர்ப், பில்கும் பசும்புலென வாய்கறிப் பதகண்டு பெருநகை கொளாவமகிழ்நன் - பிணையலறு கூட்டியுறை யூரில்லியே யாடுபெண் பிள்ளையைக் காக்க வென்றே. (அ)

தூர்க்கை.

துறைபட்ட மறைபரசு மிறையவ னுதற்சுடர்த் தொகையழலு நகையழ லும்வெங் - தூமம் படுங்கரச் சிகையழலு மிகையெழுஉச் சுழல்வது கடிப்பவள வாக், கறைபட்ட வெங்துனைய முத்திலைப் படையொன்று கைத்தலை யெழுந்து சுழலக் - கனல்பொழி விழித்துணை முடங்குளை மடங்கல்வரு கன்னியைப் பரவுவாம்பொற், றிறைபட்ட வெள்ளனப் புள்ளேறு நான்முகச் செம்மலும் பொம்மன் மூலையப் - திருமாது கொண்கனுங் தெரிவரிய பிறைமுடிச் செம் பொன்மலை யைப்புணர்ந்தோர், பிறைபட்ட கோடுடைக் கைம்மலையை யீன் றெளி பிறங்குமர கதமலையையின் - பிறழிமய மலைவந்த வுறையூ ரிருக்கு மம் பெண்ணமலை யைக்காக்கவே. (கூ)

வேறு. சத்தமாதர்கள்.

சிறைபடு நிலவெழ வனகட வுபமறை தூலினை விரித்தவள்
திசைகெட நகைகொடு திரிதரு தரியலர் மூவெயி லெரித்தவள்
செறிகட லழலெழ நெடுவரை குடனிற வோரயி றிரித்தவள்
திருகிய மனனுடை யுருமுறழ் நிசிசரர் கோன்முடி நெரித்தவ
ளிறையள வெனவறை கடல்வளை புடலியர் கோடிடை தரித்தவ
ளிணருறு தருகறை யணிகமழ் தரவரை பாய்சிறை யிரித்தவ
ளெரிதரு திரிதரு திரிதலை யயிலலி டாதுகை தரித்தவ
ளெனுமவ ரெழுவர்கள் செழுமல ரடிமுடி வாழ்த்தர விருத்துதும்

மிறைநிறை மனனுடை யமரர்க டமருட ஞெலிட வுலக்கடல்
வெகுளெழு விடமடை மிடறுடை யடிகளே நாடொறு மயக்கியை
விரிசுட ரெரிவிழு மெழுகென வுருகுவர் பாலுறை திருப்பெணே
வியனுல ககிலமு முதவிய வயிறுடை யாளமு ளரைச்செழு
நறைமல ருறையெழி லரிவைய நிருகர மாமல ருச்சனே
நனிசெய முனிவறு பணிவிடை யருளிய நீள்கடை விழிச்சியை
நளிநற விழிபொழின் மருவிய திருவுறை யூரம ரொருத்தியை
நயமிலை மொழியையு மினிதென வுவகைகொ டேவியை யளிக்கவே.()

வேறு. முப்பத்துமூவர்.

மாமத மொழுக்குதவ ளக்கரியு கைத்தலொடு
செக்கர்க்குருத்தோடு சேர்மலரிருக்கையும்
வாளர வணைத்துயிலு மற்பொடு துதிப்பவர்
திளைப்பகொடுப்பாளே யாரணமுடிக்கரும்
பூமல ரடித்துணை தருக்கினை முருக்கியை
முளைத்துப்பதிப்பாளே நூறினமயக்கறு
நூதியொளி யற்றணியு மக்கமணி விட்டவர்
கருத்துக்கொளிப்பாளே யாரமுதருத்தியொண்
காமர்கிளி யைத்தனது கைத்தல மிருத்தியெழின்
முத்திட்டிருப்பாளே யோவில்கவிசெப்பெனக்
காமுறு மியற்றமிழ் மணத்தசொ லெமக்கினி
தெடுத்துக்கொடுப்பாளே மாமுகிறயிற்றிடுக்
தோமறு மதிற்பெரிய ருக்குட நகர்க்கண்வளர்
செப்புத்தனத்தாளே நாடொறும்விருப்பொடு
சூரியர் மருத்துவ ருருத்திரர் வசுக்களெ னு
மூப்பத்துமுக்கோடி தேவர்கள்போக்கவே. (கஅ)

செங்கீரைப்பருவம்.

பொன்செய்த செஞ்சடைப் பெருமான் றிருக்கையாற் பொங்காழி யெழுசெங்கதிர்ப் - புத்தேட னகையிழந் தாங்கக் கதிர்க்குரிய புண்டரிக மனை யாட்டியுங், கொன்செய்த நகையிழந் தறுகணீர் சிந்தியுட் கொள்ளும் பயத் தழுந்தக் - கோலம் பொலிந்தொளிகொள் செங்கையம் பங்கையங் குப்புற நிமி ர்த்துநிலமீ, மன்செய்த கொங்கையந் திருமகளே யவளுரிய மருமகளே யருளு மென்று ண் - மனையொன் றெடுத்தொன்று கோட்டியிருள் வீட்டியொளிர் வள்ளக் குதம்பையாடத், தென்செய்த தமிழ்மணக் கோழிநகர் வாழுமயில் செங்கீரை யாடியருளே - சிமயம் பிறங்கவள ரிமயம் பிறந்தகுயில் செங்கீரை யாடியருளே. (க)

உருவம் பழுத்ததகி ரொத்தசடை மதியமு தருக்கவகி விடமுருக்க
வுறுபுனல் பளிக்திவலே வீசக் கரத்தினழ லொளிரும் புலிங்கம்வீசப்
பருவம் பழுத்தநீற் றெளிநிலவு தோன்றவொலி பாய்கழற் பரிதிதோன்றப்
பாததாமரையொன் றெடுத்தூன்றி யொன்றுமறை பாடவிரு முனிவர்பர
கருவம் பழுத்தமுகில் குளிறுத லெனப்பெருங் கருமால்கை முழவதிர்க்கக்[சக
கணநாதர் களிகொண்டு நின்றுட மன்றுடு கண்ணுதலே யாட்டமுதே
திருவம் பழுத்தசெங் கோழிநகர் வாழுமயில் செங்கிரை யாடியருளே
ரிமயம் பிறங்கவள ரிமயம் பிறந்தருயில் செங்கிரை யாடியருளே. (உ)

காஞறு சூழியக் கொண்டையின் மணிப்பணி கவின்கொள நிறுத்தியதனிற்
கட்டிவிடு நித்திலச் சுட்டிவா ணுதலிற் களுன்றிள நிலாவெறிப்ப
வாஞறு வள்ளேயிற் றுள்ளொலி மணிக்தோடு மழவிளங் கதிரெறிப்ப
மணிமூர லெழுநடந் திமயமா தேவிதிரு மடியேறி முத்தளித்துப்
பாஞறு சுமுதப் பசுங்கேற லூட்டியவள் பைம்பொற் றனங்கையருடிப்
பாய்சுரப் பெழுசுவைப் பாலுண்டு வீளையாடு பைங்கிள்ளே வாணிஞ்சுங்
தேஞறு பூம்பொழிற் கோழிநகர் வாழுமயில் செங்கிரை யாடியருளே
ரிமயம் பிறங்கவள ரிமயம் பிறந்தருயில் செங்கிரை யாடியருளே. (ஊ)

வல்லே றுகைப்பவ ராரக்கெறி கொடிச்சடை வதிந்தபய றுற்றேமெனு -
மந்தா கினிப்பெயர்க் கங்கையுந் திங்களும் மனமகிழ்ந் துவகைதூங்கக், கல்
லேறு கொண்டதிரு மேனியர் களிப்பெனுங் கடன்மூழ்க நின்னருட்கட் -
கருங்குவளே செங்குவளே பூப்பதுழை நுண்ணிடை கழிந்தொகில் கண்ட
ன்னேநின், வில்லேறு புருவங் குளித்திடே னின்னிலென வேண்டியோ
லிடல்கடுப்ப - விரிபரி புரங்குளிற வக்கொழுநர் மூடிமீ தெ மென்றுள் செலுத்
தன்னம்வண், செல்லேறு மணிமதிற் கோழிநகர் வாழுமயில் செங்கிரை யாடி
யருளே - ரிமயம் பிறங்கவள ரிமயம் பிறந்தருயில் செங்கிரை யாடியருளே.

மொய்த்தகுடி லத்துவெண் டும்பையும் பாசறுகு முருகுவிரி பொற்
கொன்றையு - முளேமதியும் வேய்ந்தவையொ டொப்பவெண் டலையுமுடை
மூடென்பும் வார்சுரம்பும், பைத்தபட வரவுந் தரித்தவரொ டொப்பசன் பாட
லொடி யான்சொலும்புன் - பாட்டுகளி கேட்டுமறை சூட்டுமிரு தாட்டுணே
பதித்தென் றலேக்கணருளு, நெய்த்தகரு நீலக் கதுப்பம்மை காழிமழ நிகர
றுந் தமிழாரண - நெடியாது நொடிதரப் படியிலா ஞானமரு ணித்திலக் கொங்
கைமங்கை, செய்த்தவள வளேகண்முரல் கோழிநகர் வாழுமயில் செங்கிரை
யாடியருளே - ரிமயம் பிறங்கவள ரிமயம் பிறந்தருயில் செங்கிரை யாடி
யருளே. (சு)

வேறு.

தருவுவரு நித்திலம் வைத்த தலைப்பணி சுற்று மிசைந்தாடச்
சூழிய மொதுதுத ருழக் கட்டிய சுட்டி யசைந்தாடப்
பொருவரு திருமுக முழுமதி யெழுசிறு புன்னகை நிலவாடப்
பொங்கொளி தங்கு குதம்பை ததும்பப் பொருகட் கயலாடக்

கருகிரு டின்று வீளங்கு மிளங்கதிர் கால்பொற் குழையாடக்
கான்மலர் பெயர்தே றுங்கிண் கிணிகள் கலின்கலி னென்றுட
வருள்வளர் தருதிரு வுருவமு மாடிட வாடுக செங்கீரை
யழகிய திருவுறை யூரமர் நாயகி யாடுக செங்கீரை. (கூ)

செங்குமு தம்பொதி யூற லெனுஞ்சிறு தேதறல் வழிந்தோடச்
செழுமணி மேகலை தழுவிய நுழைதண் சிற்றிடை யொசிவெய்தக்
கங்குன் மழுங்க வெழுங்கி ரணம்பொலி காதணி வெயில்வீசக்
காமர் முகப்பதி மக்குமிழ் முத்தங் கருலொளி நிலவீனத்
துங்க மிகும்புவ னம்பல நந்திய தெரிந்தி ததும்பியிடத்
துகளறு சிந்தை யிருந்த சிவந்த தூணைத்தா ளணிமுரல
வங்கலுழ் திருவுரு வுச்தொளி மொய்த்தெழ வாடுக செங்கீரை
யழகிய திருவுறை யூரமர் நாயகி யாடுக செங்கீரை. (எ)

வேறு.

எமதுபவப்பிணி யிரியவிரிக்கும ருந்தேயன்பாள
நிதயமுளைத்துக லெழிலொடினித்தக ரும்பேபவிண்டாமு
மமரர்முடிப்பொலி மணியெனுமத்தர்வி ருந்திதென்றேதா
னகமகிழச்சிறு நகைவிரிபொற்பமர் கொம்பேபண்பாடிக்
கமரமிடற்றபல் பமரமுழக்குக ருந்தார்கொண்டாயுக்
தகரமொழுக்கிய கருநிறமைக்குழ னங்காயிற்தூருஞ்
சிமயமிமைத்தெமு மிமயவரைப்பிடி செங்கோசெங்கீரை
நிகழ்தருகுக்குட நகரிலிருப்பவள் செங்கோசெங்கீரை. (அ)

வேறு.

எறிதிரை யமுதமும் வாழயி ராணித னங்கோபஞ்சிறு
மிதழ்பொதி யமுதமு மோகைகு லாவுறு கர்ந்தேதசந்தான
முறிபுனை நறுநிழல் வானவர் சூழவி ருந்தேறுங்கோப
முனையடு புகர்முக மாலயி ராவத மூந்தாகந்தாத
செறிதரு களியெனு மாழ்கடன் மூழ்கியு வந்தோர்விண்கோமான்
றிருவுற வொருசிறு சேயினை மானுகி தந்தாயெந்தாயே
யறிஞர்க ளறிவுறு மாரண நாயகி செங்கோசெங்கீரை
யருள்வீளை திருவுறை யூரமர் நாயகி செங்கோசெங்கீரை. (கூ)

வேறு

பொங்கு நறைப்பொழி மாமலருங்கா ணுஞ்சீர்சால்
பொன்செ யருக்கனு நீளொளியும்போ லம்போடு
திங்கண் முடித்தபி ராணுறைவெங்கே யங்கேவாழ்
செங்க னகச்சிலை மானிருகொங்காய் நங்காயீயர்
தங்கு வரைக்கிறை யோனருள்கன்றே கன்றுய்வார்
தங்க ளுளத்தமு தூறுகரும்பே வம்பேகூ
சொங்கள்குடிக்குமொர் வாழ்மூதல்செங்கோ செங்கீரை
யின்சொல் பெருக்குறை யூர்மயில்செங்கோ செங்கீரை. (கo)

தாலப்பருவம்.

ஒல்குங் கொடிநுண் ணுசுப்பொசிய வுளருஞ் சுரும்பர் விரும்புமது
வுண்டு தெவிட்டி யுவட்டெடுப்ப வூற்றும் பசுந்தே னசும்பூறிப்
பில்கு நறுந்தார் குழல்செருகிப் பேதை மாதர் பயின்மறுகு
பெரும்பொற் றகடு படுத்திருளின் பிழம்பை மழுக்கி யடிக்கினிதே
நல்குங் குணத்தா யினும்புலவி நண்ணு மடவார் சிதறுகல
நவமா மணிகள் பரந்துகுறு நடையே யெவருங் கொளக்காணு
மல்குஞ் செல்வத் திருவுறையூர் வாழ்வே தாலோ தாலேலோ
மறைநான் கரற்றும் பெருங்கருணை வடிவே தாலோ தாலேலோ. (க)

கூட முயருங் குன்றனதங் கொம்மை முலைக்குப் புறங்கொடுத்த
குருமார் பகத்திற் புயத்தினறங் குஞ்சித் தலத்தி லஞ்சிறைய
கீட மிரியப் பகன்முழுதுங் கிள்ளை மொழியா ரலத்தகந்தோய்
கிளர்தாட் சிலம்பி ஞெலியெழுப்பக் கெழுமு மிரவின் மைந்தர்மலர்ப்
பீட மருவு மம்மடவார் பெருங்கா ழுல்குண் மிசைக்கிடந்து
பிறழ்மே கலேயி ஞெலியெழுப்பிப் பெருகுங் களிப்பிற் றிளைத்துவளர்
மாட மலியுந் திருவுறையூர் வாழ்வே தாலோ தாலேலோ
மறைநான் கரற்றும் பெருங்கருணை வடிவே தாலோ தாலேலோ. (உ)

பண்ணுங் கனியுங் கனிமொழியார் பயின்மே னிலத்திற் கிரனீலம்
பதித்து விதித்த செய்குன்றப் பரப்பில் வரப்பில் கொழுந்தோடி
நண்ணுஞ் சுடரி லறமுழுகி நாடற் கரிதா யுயிர்க்குயிரா
நம்மான் றிருக்க ணீபுதைத்த நாளோ வென்று ளயிர்த்துநெடு
விண்ணுந் திசையு மிகமயங்கி விரகா ஞடி யாய்தோறும்
விலகி விலகி வில்லுமிழும் வித்தா லீஃதிற் றெனத்தெளியும்
வண்ணம் பொலியுந் திருவுறையூர் வாழ்வே தாலோ தாலேலோ
மறைநான் கரற்றும் பெருங்கருணை வடிவே தாலோ தாலேலோ. (ங)

கருமால் யானை யனந்தனுளங் கலங்கக் கலக்கி விளையாடுங்
கார்க்குண் டகழி கடலெனவக் களிற்றை யினமென் றுளத்துநினைந்
திருமா லெழிலிப் படலமவ ணிழிந்து குழிந்த வகடெடுப்ப
விரைத்துத் திரைத்த நீர்கொடுவிண் ணேறும் பொழுதவ் விபப்பாகர்
பொருமால் களிறென் றதனெருத்திற் பொள்ளென் றேறிப் பொன்னுலகம்
புரப்பான் போல்விண் புகுந்தணராப் பொருக்கென் றயற்சோ பானவழி
வருமா ளிகைசூழ் திருவுறையூர் வாழ்வே தாலோ தாலேலோ
மறைநான் கரற்றும் பெருங்கருணை வடிவே தாலோ தாலேலோ. (ச)

ஊற்றும் பசுந்தேன் மூளரிமுகை யுளர்வண் டடைய முறுக்குடைய
வோதக் கடலின் முகம்புழுங்க வுதயமெழுந்து சிதையவிருள்
பாற்றுங் கடவுட் கதிர்க்கடவும் பசுமா வுருளேத் தனிவையம் [குங்
பகைகொண் டிளைஞர் மிகைகடவும் பைம்பொற் கொடிஞ்சித் தேர்முழக்

கூற்றும் வெருவப் பொருங்களிறு குளிறு மொலியும் பிளிறுலிமான்
குரற்கிண் கிணியி னெழுமொலியுங் குழுவி யெழுமா முகின் முழக்கை
மாற்று மறுகார் திருவுறையூர் வாழ்வே றாலோ தாலேலோ
மறைநான் கரற்றும் பெருங்கருணை வடிவே தாலோ தாலேலோ. (கி)

ே வ று.

வாங்குந் திரைக்கடற் புடவிமுத லெத்தலமும் வாழ்வெனும் புணரிமூழ்க
வணங்கா முடித்தலை வணங்கிட வணக்குகழை வண்கியேயு மலர்வாளியுந்
தாங்குந் திருக்கைத் தலத்தொளி துளும்பவொரு சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ் வளம்பொலி குடந்தைமங் களவல்லி சப்பாணி கொட்டியருளே.

ஆக்குந் தொழிற்றமரு கம்புரக் குந்தொழி லமைந்தவ யஞ்சாம்பரா [ப்புப்
வழிக்குந் தொழிற்றீ மறைக்குந் தொழிற்றலை யமைந்தூன்று தாண்மறை
போக்குந் தொழிற்ருஞ் சித்தத்தா னிவைக்கும் பொலிந்திடச் சுருதிவாழ்த்தப்
புன்மையின் றுய்ந்தன மெனச்சகல புவனமும் போற்றெடுத் தேத்தமடமை
நீக்கும் புலிப்பத மூனித்தலவ னும்பணி செடுந்தவ முனித்தலவனு
நிறைமகிழ் நிலைப்பமா தேவன்மன் றிடைநவி னிருத்தக் கியைந்ததாளந்
தாக்குந் திருக்கைத் தலத்தொளி துளும்பவொரு சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ் வளம்பொலி குடந்தைமங் களவல்லி சப்பாணி கொட்டியருளே.

ஓங்கிய கொடைத்தலைமை பூண்டமை யிரும்புவன முணரவறி குறியமைந்தாங்
குத்தமோத் தமசீர் பொழிந்துதெய் வப்பசவி ஞெண்மூலையின் விரல்கள்வா
தூங்கிய மதுப்பொழி மலர்க்கற் பகத்திற் றுறந்தளிரி னியல்புபூண்டு [ய்ந்து
துங்கமிகு சங்கமும் பதுமமு மிரேகையிற் றோற்றப் புனைந்துகொண்டு [றும்
வீங்கிய சுடர்ப்பிழம் பாற்றுணங் கறன்முழுதும் வெய்துவாய்ப் பெய்துதோன்
வெய்யோன் சமழ்க்குமணி யாழிகள் புனைந்தமைமை மேகமுத லாயபலவுந்
தாங்கிய திருக்கைத் தலத்தொளி துளும்பவொரு சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ் வளம்பொலி குடந்தைமங் களவல்லி சப்பாணி கொட்டியருளே.

புண்ணிய மலிந்தவ ரகக்கணு முகக்கணும் பொங்குகளி தங்குமா று
பொன்னஞ் சிலம்புபுனை தாமரை யியங்குகாற் புண்டரிக மலரகத்துங்

கண்ணிய செழுங்கோக நகமல ரகத்துங் கலந்தமர் நலந்தண்மடவார்
கைக்கமல மிசைவசிக் குங்கமல மலராய்க் கடற்றிரை சுற்றுபுடவி
யண்ணிய பிலம்புக் கழுந்தப் பரந்தநீர்க் காயநற் றுயாய்ப்பல
வறங்களுக் குஞ்செவிலி யாய்ப்பொலிக் தச்சமற வபயவர தங்கொடுக்குந்
தண்ணிய திருக்கைத் தலத்தொளி துளும்பவொரு சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ் வளம்பொலி குடந்தைமங் களவல்லி சப்பாணி கொட்டியருளே.

மையற் றுறைப்படியு மெங்களே யெடுத்தாள வல்லநின் றிருவடிக்கு
வந்தனம் பற்பல புரிந்தன மினுஞ்செயவு வந்தன மதான்றுபோற்று
கையற் றிருக்குமடர் கூட்டத் திருதிநிற் கருதுநரை யும்பரகவோங் [ம்
கங்கையை நினக்கடிமை யென்றுசா தித்தளவில் கலேயெடுத் துப்புகலுவோ
பையற் றெடுங்குமொரு பாம்பினெம் பொறியறப் பாவைநினே யேகருதுவோ
பாடித் துதித்திடுவ மெங்கட்கு நீயினிப் பண்ணுவது நிற்கவின்றன் [ம்
றையற் றிருக்கைத் தலத்தொளி துளும்பவொரு சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ் வளம்பொலி குடந்தைமங் களவல்லி சப்பாணி கொட்டியருளே.

வே று.

வழிவழி யடிமை யெமைக்கொண் டாளு மருக்கரு ணைத்திருவே
மாயா மயகும் பத்து முளேத்தவர் வாமத் தமருமையே
கழிமகிழ் சால நினேப்பவ ருள்ளக் கமலத் துறையனமே
கல்லா மூடர் மதிக்கு மினித்துக் கமழும் பைந்தேனே
பழிதபு மறைமுறை யிடவு மதற்கப் பாலா கியகொடியே
பனிவரை யாற்று தவத்தின் முளேத்த பசுங்கிளி யேமயிலே
கொழியருள் வடிவுடை மங்கள நாயகி கொட்டுக சப்பாணி
குடந்தையுண் மேய மடந்தை பராபரை கொட்டுக சப்பாணி. (சு)

ஆலம் பொலிதரு கண்டத் தெண்டோ ளாண்டகை யெம்பெருமாற்
கைந்தொழி லும்முட்ன் மேலி யிருந்தினி தாக முடித்திடுவோய்
ஞாலம் பொலிதரு மாருயி ராய நலங்கெழு பைங்கூழ்க
ணன்று விழைந்து தழைந்து பொலிந்திட நக்கெழு பசுமுகிலே
சீலம் பொலிதரு செய்கையி னுள்ளத் திருகற் றருகிடுவார்
செறிதரு சனனப் பரவை சுவற்றுஞ் செங்கதி ரேயளவாக்
கோலம் பொலிதரு மங்கள நாயகி கொட்டுக சப்பாணி
குடந்தையுண் மேய மடந்தை பராபரை கொட்டுக சப்பாணி. (எ)

கையில தாகிய பரமா னந்தக் கடல்வரு தெள்ளமுதே
கருதிக் கருதி மிகக்குழை வாருட் கழனி யெழுங்கழையே
வையகி னுதித்தொர் மருப்புக் கன்றை வயக்கு மடப்பிடியே
மாறி லவித்தை யிருட்டற வன்பருண் மாமலே யெழுகதிரே
தாமுதல் பூத்தரு ணன்று பழுத்துத் தழையும் பொற்கொடியே
தானே யாகிய தோன்றுத் துணேமகிழ் தக்க பெருந்துணேயே
குணாமறை யோலிடு மங்கள நாயகி கொட்டுக சப்பாணி
குடந்தையுண் மேய மடந்தை பராபரை கொட்டுக சப்பாணி. (அ)

வேறு.

மடமற நினைபவ ருளமெனு மொருகளி யுற்றவிளக்கேசொன்
மறைமுடி விண்ணுமுணர் வருமொரு முதல்விய ருட்பெருமைத்தேவி
தடநெடு முடியுயர் பனிவரை யிமயமு யிர்த்தமடப்பாவை
தனர்வற வளவில்ப லுயிர்களு மெளிதின ளித்தகிறற்கோதை
படவர வமுமதி யமும்வர நதியுமு டிந்தசடைத்தேவர்
படுமத சலவிற லடுகளி முதவுரி பெற்றபுகழ்த்தூயர்
குடநடு வமர்பவ ரிடமமர் மடமயில் கொட்டுகசப்பாணி
குவலயம் விழைவன விழைவகை யருள்பரா கொட்டுகசப்பாணி. (க)

பொன்பொலி பாத மறந்தலை யாவெரு புக்கில மைத்தறியாப்
புன்புலை யேமும் விரும்பிடு மாறருள் புத்தமு தப்பாகை
மின்பொலி வேணியர் பங்கமர் வாய்திரு மெய்த்த வருட்பேறை
விண்பொலி யாவர்க ளுந்தொழ வாழ்வருள் விச்சை யனப்பேடை
தென்பொலி சிதரன் முன்பிற வாதசெ ழித்தசு வைத்தேனை
திங்களே நேர்முக மங்கதின் மானிகர் செப்புவி ழித்தாயே
கொன்பொலி ஞால மலர்ந்த பராபரா கொட்டுக சப்பாணி
கொங்களே வார்குழன் மங்கள நாயகி கொட்டுக சப்பாணி. (கo)

முத்தப்பருவம்.

சுரும்பு செறியு நாண்பூட்டித் தோகைக் கருப்புச் சிலைகோட்டித்
தோலா மதுகைத் திறங்காட்டிச் சுவைத்தேந் கணையொன் றுறக்கூட்டி
யரும்பு செருக்கிற் ரெறிந்தான்மெய் யடலை புரிகண் ணுதற்பெருமா
னங்கங் குளிர்ந்துள் ளுருகவவ னேந்து ளொன்று விகசிக்க
விரும்பு மதணுண் மற்ரொன்று விடமு மமுது மெழுவிக்க
விழைமற் ரொன்றை நகைமுகமா விண்ணே ருணவும் விளர்த்திடுஞ்சொற்
கரும்பு கலந்து வெளிப்படுக்குங் கனிவாய் முத்தந் தருகவே
கருணை கரமங் களவல்லி கனிவாய் முத்தந் தருகவே. (க)

தோட்டு மலரா சனத்தமருந் தோன்றற் பிரமன் முதலாகச்
சொற்ற வமரர் பெருங்குழுவுஞ் சொலுமற் றுளமன் பதைத்தொகையும்
வாட்டு முயிரென் றுண்ணடுங்கி வருந்தக் கனக ளுடல்கீண்டு
வருஞ்செந் நீருண் டுறுவெறியான் வருத்து மடங்க லுயிர்சாம்பப்
பாட்டு மறைவாழ்த் திடவெண்காற் பறவை யாய சுகோரம்விழை
பண்பிற் கவர்ந்து மகிழ்தூங்கப் பற்ப லுயிர்க்கு மின்பகலங்
காட்டு முறவு னிலவரும்புங் கனிவாய் முத்தந் தருகவே
கருணை கரமங் களவல்லி கனிவாய் முத்தந் தருகவே. (உ)

வண்ணக் குழலி வடிவாய்முன் மகிழ்ந்து கவர்ந்த காரணத்தால்
வானம் பாவு மலையரசன் மனைவி மேனை முலைப்பாலுஞ்

சுண்ணப் பொடிசால் புயமலயத் துவசன் மனேலி பொன்மாலே
துணைத்துப் பணைத்த மூலேப்பாலுஞ் சுடர்வேற் குழலி தனையெடுத்து
நண்ணக் குளிர்முத் துண்டெந்த நகுகா ரணத்தா லறுமாதர்
நலங்கொண் முத்த முலேப்பா லுஞான மயநின் முலேப்பாலுங்
கண்ணக் கலந்து பரிமளிக்குங் கனிவாய் முத்தந் தருகவே
கருணை கரமங் களவல்லி கனிவாய் முத்தந் தருகவே. (கூ)

ஆணத் திருக்கை யிவருளமென் றறைய நின்ரு ரகங்கைகீ
ராட்டி னுர்பச் சிலேயிட்டா ராக லான்மற் றிவரின்னே
மாணத் திருக்கை பயில்வேலா வலயப் புவிமன் னவராக
வாழ்ஞ ராக வரசாக மலரோ ஞக மாலாக
வேணத் திருக்கை யொழித்தமர்வா ரிவர்சா லோக முதலியவைக்
கிறைவ ராக வினேந்தருடி யெம்மா னேமற் றெல்லாருஞ்
காணத் திருக்கை சாத்தென்னுங் கனிவாய் முத்தந் தருகவே
கருணை கரமங் களவல்லி கனிவாய் முத்தந் தருகவே. (கா)

மதிக்குஞ் சுவைத்தீம் பால்சுரந்து வடித்த கழைச்சா றுவட்
மதுரம் பொதிகோற் றேன்பொதிந்து மாரு தினிக்கும் பாகூறி
யுதிக்கு மணியா ழோசையளா யுவக்குங் குயிற்கூங் குரல்வீரவி
யுணைசெய் கின்னேக் கினவிபயின் றுறவேய்ங் குழலி னெலியமைந்து
திதிக்கு மொருமுக் கனிபழுத்துத் திகழும் புல்ல கண்டமுற்றுச்
செறிகற் கண்டு வினேந்தெழுந்து தெய்வங் கமழு மமிழ்தரும்பிக்
கதிக்குந் தமிழு மணந்தபொலி கனிவாய் முத்தந் தருகவே
கருணை கரமங் களவல்லி கனிவாய் முத்தந் தருகவே. (ஙி)

ஏ வ ரு.

வண்பார் விரும்புங் கரும்புஞ் சுரும்புமிடை வாவிச் செழுங்கமலமும்
வானவ ரிருக்கையைத் தோய்ம்மே யும்புகல் வரம்பயி லரம்பையுமிகு
நண்பார் பசுங்கமுகு நாடுபுகழ் செங்கெலு நலங்கூர் நினக்குரினது
நாதற்கு நீழலு மருச்சனேக் குபகரண நன்பொருளு மாகுமெனினுங்
கண்பார் நினக்குமாற் ருெளேயும் புனலுருக் காரிகையொ டளவளாவிக்
களிதூங்க லாலவை யுதிர்ரமுத் தங்கொளேங் கடவுள ரொருங்கவாவும்
பண்பார் குடந்தைப் பெருந்திரு நகர்க்கரசி பவளமுத் தந்தருகவே
பரவுமந் திரபீடம் விரவுமங் களவல்லி பவளமுத் தந்தருகவே. (சு)

காராய் கருங்கடற் குட்டம்வட வைத்தீக் கலப்பின்வெப் புற்றதின்னுங்
கழியா வுவர்ப்பும் புலாலுஞ் செறிந்ததக் கடைபடு கடற்குட்டமே
யோரா யெனக்கொண் டெரித்தவூ யிப்பிகெட் டுடலவன் மீனமீன [டும்
மூவையா தி தருமுத்த மெல்வுயர்வை யுற்றதெவ் வுவகையை யெமக்காக்கி
போராய் மருப்புப் பொருப்பெழுதி வெங்கான் பொருந்தியழல் கின்றநிறனுற்
புகர்பட்ட வன்னவை யுறுப்பின்முத் தங்களுமோர் பொருளென மதித்தல்
பாராய் குடந்தைப் பெருந்திரு நகர்க்கரசி பவளமுத் தந்தருகவே [செய்யேம்
பரவுமந் திரபீடம் விரவுமங் களவல்லி பவளமுத் தந்தருகவே. (எ)

கீடுஞ் சிறப்பிற் பொலிந்தவலி முத்தமிகு நேயத் தளித்தபோது
நிகழதனி னுங்கோடி பங்கதிக மாயென்று நிலவுமித் தலமுத்தமுற்
கூடுந் தவத்திற் கிடைத்தமரும் யாங்களது கொள்ளேம் விரும்பியதுவே
கொடுத்தருள னின்றிரு வருட்கழகு நெக்குருகு கொள்கையருளக்கோயில்
டாடும்பிராஞ்டுமமர்ந்தருள்வினக்கேயலங்குமறைமுடியென்னுமோ [கொண்
ராவியி னுலாவுபெடை யண்ணமே முன்னரு மனைத்துநூ லுந்தெரிந்தோர்
பாடுங் குடந்தைத் திருப்பெரு நகர்க்கரசி பவளமுத் தந்தருகவே
பரவுமந் திரபீடம் விரவுமங் களவல்லி பவளமுத் தந்தருகவே. (அ)

வேறு.

நன்று கருது மன்ப ரிதய கஞ்ச மருவு சத்தியே
நம்பு மறையி னும்ப ரிலகு துங்க விமல தத்தையே
கன்று பிறவி நந்து திருவர் சிந்தை குலவு வித்தையே
கந்தர் தருவி னேங்கை முதல்வர் மைந்த ரெனவ ணைத்துளா
யொன்று புகலி யந்தண் மழவு முந்த வருள்ப யத்தியே
யும்ப லிறைமு னந்து சுரர்கண் முந்து தொழுப தத்தியே
குன்று மகிழ வந்த கருணை யம்பை தருக முத்தமே
கும்ப முதல்வர் பங்கி னமரு மங்கை தருக முத்தமே. (ஃ)

கரிய முகிலி னளக மிருள்செய் கவுரி தருக முத்தமே
கருதி யுருகு மடிய ரிதய கமலை தருக முத்தமே
யரிய கருணை பொழியு நயன வமலை தருக முத்தமே
யழகு பொழியும் வதன பதும வபினை தருக முத்தமே
புரிய வினிய விமய முதவு புதல்வி தருக முத்தமே
பொருவில் கருணை யுருவ மருவு புனிதை தருக முத்தமே
துரிய முடிவில் வெளியின் மருவு சுமுகி தருக முத்தமே
சுவைய வமுத கலச முதல்வர் தேவி தருக முத்தமே. (கo)

வாராணப்பருவம்.

தேனளா வுங்குழற் சடையலங் காரத் திருப்பணியு மிருள்வீழுங்கித் [செய
திகழ்மணிப் பிறையுமொளி யுமிழ்மணித் தோடும்வளர் செஞ்ஞாயி றுதயஞ்
மீனளா வுங்கடற் றரளமா லிகையுமொளி மிளிர்சுமிழ் விராய முத்தும்
வெள்வயிர கடகசூ டகமதா னிபுமுவவு வெண்டிங்க ளுதயஞ்செயக்
கானளா வுந்தாட் சிலம்புஞ் சதங்கையுங் கலகல வெனக்கலிப்பக்
கனகமணி மேகலை புலம்பமறை யோலிடக் கடவுளர்கள் வாழ்த்தெடுப்ப
வானளா வும்பதண மதில்சூழ் குடந்தைநகர் வாழ்வாய பாவைருகவே [கவே.
மனனுயிர்ப் பயிரெலாந் தழையவருண் மழைபொழியு மங்களாம் பிகைவரு
கண்டோர் பவத்துன்பு காணார்க ளாய்ப்பெரும் கவியார் கலிக்கண்மூழ்கிக்
கற்பகப் பனிமல ரிறைத்தெதி ரிறைஞ்சிவான் கடவுளர்க ளெதிர்நடப்பப்

பண்டோர் மறைக்குழவி யுண்ணமெய்ஞ் ஞானவின் பாலருள் பிராட்டிவந்தாள்
பார்பெறச் சுவணரோ மற்குமா றஞ்சுவாட் படையருள்கல் யாணிவந்தாள்
திண்டோள் வலிச்சிலம் பரசன் றவத்துவரு செல்வக் குமாரிவந்தாள்
செகமுழுது மீன்றதாய் வந்தா ளெனத்திருச் சின்னங்க ளார்ப்பெடுப்ப
வண்டோலிடும்பொழிலுடுத்தொளிர்குடந்தைநகர்வாழ்வாயபாவைருகவே[வே.
மன் னுயிர்ப் பயிரெலாந் தழையவருண் மழைபொழியு மங்களாம்பிகை வருக

ஒளியார் கருங்களச் செம்மேனி வெண்ணீ றுவந்தமா தேவனெம்மா
னுடலொழி யப்பணி தொறுஞ்சடிலம் வாழ்நில வொருங்கள வளாவலானுங்
களியார் கருங்கணஞ் செய்யவாய் வெண்ணகைக் காமரா மாதர்பலருக்
கனிவினெண் ணியபெறப் பணிதோறு மவர்குழற் காரிரு ளளாவலானு
மளியார் பெரும்பனி வரைப்பயிற லானுமோ ரணுவளவும் வாட்டமடையா
வம்போ ருகத்தணே பெயர்த்துமறை வாழ்த்தொலி யளாவியெங் கும்பரப்ப
வளியார் பெரும்புவன மேத்துங் குடந்தைநகர் வாழ்வாய பாவைருகவே[கவே.
மன் னுயிர்ப் பயிரெலாந் தழையவருண் மழைபொழியு மங்களாம் பிகைவரு

பாடுவா ராணவம தென்னுமிரு கந்தபப் பாய்கின்ற புண்டரீகம்
பரவுவீ னாயவிரு காடுமுழு துந்தப் பதிதருஞ் செய்யமுளரி
நீடுவார் மாயையென நிகழ்கதிர் நிலாவிதழ் நிரம்பிய செழுந்தாமரை
நீங்காத சேரூய விம்மூன்று மொழிதர நிலாவுமர விந்தமென்று
கூடுவார்மறைபலவெடுத்தியம்புங்கனககோகனகமலர்பெயர்த்[தியென்னின்
கொண்டாடு மெம்மைவழி வழியடிமை கொண்டுகதி கூட்டுவது முண்மை
மாடுவார் கொடியாடு மாடக் குடந்தைநகர் வாழ்வாய பாவைருகவே [கவே.
மன் னுயிர்ப் பயிரெலாந் தழையவருண் மழைபொழியு மங்களாம் பிகைவரு

விள்ளற் கருஞ்செயலி னுருகியுரு கித்துதிசெய் வித்தகத் தவரிம்மையே
மேலாய கல்வியுஞ் செல்வமு மொருங்குபெற விழைவித் கொடுத்தல்கருதி
யள்ளற் றலைப்படுங் கமலத் தலைப்பொலியு மங்கலா ரிருவர்கையு
மறங்கள்பல வுங்குடிகொ ளங்கையிற் பற்றலுற் றுங்கமை தரப்பற்றியே
யெள்ளற்றி றஞ்சிறி துமில்லாதமறைமுடியுமெங்களுளமுங்குடிகொளு [மேவ
மெழில்கணிக் தொழுசிற் றடிமலர் பெயர்த்துவகை யெண்ணில்புன தத்து
வள்ளற்பெருந்தகையர்பொலியுங்குடந்தைநகர்வாழ்வாயபாவைருகவே [கவே.
மன் னுயிர்ப் பயிரெலாந் தழையவருண் மழைபொழியு மங்களாம் பிகைவரு

வே லு.

ஊன்றேரூய் சுதரி சனப்படையா னெருமா வருக்கொண் டும்பர்பிரா
னுபய பதமுங் காண்பான்புக் கொன்றுங் காணு துழிதந்து
மீன்றேரூய் பரவைப் புடைவிழுந்தான் விரும்பி யிவள்சிற் றடிதொடரின்
விழைந்து முயன்ற முடிகாணன் மேவு மேவா விடினுமில [மேற்
டேன்றேரூய் மலர்த்தாட் டொடர்பொன்றே திருந்து மெனவுட் கொடுமலர்
நிகழோ திமமென் னடைகற்பான் செறியோ திமங்க ளொடுங்தொடர
வான்றேரு யிமய வரைப்பிறந்த வனிதாய் வருக வருகவே
மறைவாழ்த் தொலிசா நிருக்குடந்தை மடந்தாய் வருக வருகவே. (சு)

உதிக்கு மூடம்பை யேயாமென் றுள்ளி வினேஞா டொழுமுஞற்றி
யோரைந் தவத்தை களினுழிதந் தொழியும் பொறியில் யாங்களுமெய்
பதிக்குங் கருணைப் பரவையிடைப் படிந்துந் துளையக் கடைக்கணித்த
பரமா னந்தத் திருவுருவப் பாவாய் புகழ்ந்து பாடுநர்பால்
விதிக்கு மயஞ ஞியரிடத்து லீரவ விடுக்குங் கருணையினு
மேலாங் கருணை விடுத்தளிக்கும் விமலாய் விண்ணே ராதியருண்
மதிக்கு மிமய வரைப்பிறந்த வனிதாய் வருக வருகவே
மறைவாழ்த் தொலிசா நிருக்குடந்தை மடந்தாய் வருக வருகவே. (எ)

இழியுந் தொழிலிற் புகுத்துமல விருட்டும் விளர்க்குங் கருங்குழலு
மெழில்கொப் புளிக்குந் திருமுகமு மிருகை யுதித்த பெருவெள்ளங்
கழியுந் திவலே யாயொடுங்கக் கச்ச மில்லா வருள்வெள்ளங்
கதிக்கப் பொழியுங் கடைக்கண்ணுங் கருது ஞானம் பொழிதனமும்
பழியு மறமுங் கடந்தன்பர் பற்றத் தருமோர் பற்றுய
பாதாம் புயமு மிகப்பொலிந்து பரவப் பரவு வெள்ளருவி
வழியு மிமய வரைப்பிறந்த வனிதாய் வருக வருகவே
மறைவாழ்த் தொலிசா நிருக்குடந்தை மடந்தாய் வருக வருகவே. (அ)

அஞ்சார் புரங்க ளொருமூன்று மழலோ னுண்டு தேக்கெறிய
வரும்பு சிறுவெண் ணகைபுரிந்த வமலற் குடலா தினளாவாய்
விஞ்சா ரனைய பெருமாற்கு மேவி யுடனீங் காதமர்ந்து
விதித்த லாதி யைந்தொழிலும் விருப்பின் முடிக்குங் கிறற்பாவாய்
பஞ்சா ரடியிற் சிறுசிலம்பும் பாத சால மெனும்பிறவும்
பற்று வனையின் மேகலையும் பண்டை மறையாக் கொண்டணிவாய்
மஞ்சா ரிமய வரைப்பிறந்த வனிதாய் வருக வருகவே
மறைவாழ்த் தொலிசா நிருக்குடந்தை மடந்தாய் வருக வருகவே. (ஈ)

தானே தனக்குச் சரியாய தாயே வருக வுரைக்கவீனே
தடவாய் வருக நினைக்கமுத்தி தருவாய் வருக மலர்பொதிந்த
காணே புரையுங் கருங்கூந்தற் கவரி வருக மெய்ஞ்ஞானக்
கரும்பே வருக வருள்பழுத்த கனியே வருக தெவிட்டாத
தேனே வருக வானந்தத் திருவே வருக பெருவேதச்
செல்வீ வருக வெங்கள்குல தெய்வம் வருக வுருகுநருண்
மானே வருக விமயவரை வனிதாய் வருக வருகவே
மறைவாழ்த் தொலிசா நிருக்குடந்தை மடந்தாய் வருக வருகவே. (க0)

அம்புலிப்பருவம்.

நீசெய மங்கையென நன்னியற் பெயராலு நிறுவியிவள் பொலிவ லீயு
நிலவுஞ் சுபக்கிரக மென்றுரை செயப்பொலிவை நிகழ்கின்ற சமய மாறுங்
கூடுமிட மாகக் குறித்தமர்வ ளிவள்பெருங் கும்பமுற் கடகம் வரையுங்
கூடிய விராசியோ ராறுமம நிடமெனக் கொண்டமர்வை நீயு மடமை

சாடுநர்கள்பெண்ணரசியாயபெண்ணென்னவிவ டழைவள்பெண்கிரகமென்ன
தழைவைநீயுந்தெரியினெஞ்பாகலுண்மையுயர்தவளமாடக்கொடிகண்மே[த்
லாடுகுட மூக்கெங்கண் மங்களாம் பிகையுட னம்புலீ யாட வாவே
யலகில்பல புவனமு முயிர்த்ததாய் காணிவளொ டம்புலீ யாட வாவே. (க)

பாயநற வம்பொழியு மாம்பலே யுவப்பைீ பற்பல்பம ரங்கண் மூசப்
பரவுதா னம்பொழியு மொருமருப் பாம்பலேப் பண்புற வுவப்பாளிவண்
மேயபல கமலமு முகங்கவிழ் தரப்பொவி வியன்கரங் கொண்டு ளாய்நீ
விளம்புமக் கமலங்க ணுணினவ் வாரும் வியன்கரங் கொண்டாளிவ
டோயமலி கடலக முதித்துளாய் நீபர சுகக்கட லுதித்தா ளிவள் [மிக்
சொல்லுமிவை தேரிலொப் பாகா திராய்வளமை தொக்கவள காபு ரியின்
காயருட மூக்கெங்கெண் மங்களாம் பிகையுட னம்புலீ யாட வாவே
யலகில்பல புவனமு முயிர்த்ததாய் காணிவளொ டம்புலீ யாட வாவே. (உ)

வன்றவொரு கும்பமுலே நீயுண்மை ஞானநிறை யிருகும்ப முள்ளா ளிவ
ளியலுமொரு மீனமுலே நீகருணை வெள்ளநிறை யிருமீன முள்ளா ளிவள்
சான்றவோ ரேற்றிஞ னீதரும மாலெனத் தக்கவீ ரேற்ரு ளிவ
டங்குகற் கடகமொன் றுடையனீ யிருளறச் சாடுகற் கடக நாளுங் [ன்று
தோன்றவொ ரிரண்டுடைய ளிவளின்ன திறலுடைத் தோகைநிற் கதிக மெ
சொல்லவேண் டுங்கொலோ வாவென் றழைத்தது சொலிற்கருணை யேவ
லான்றருட மூக்கெங்கண் மங்களாம் பிகையுட னம்புலீ யாட வாவே [ளத்தா
யலகில்பல புவனமு முயிர்த்ததாய் காணிவளொ டம்புலீ யாட வாவே.(ங)

நிற்குரிய கும்பமொரு மூடவன்விழை குவனிர்த நேரிழைக் குரிய கும்ப -
நெடுமறை மூடிக்குமெட் டாதவொரு கும்பேச நிமலப் பிரான் விழைகுவன்,
சொற்குலவு நிற்குரிய வேறுபுகர் கொள்ளத் தொலேத்தனே யிவட் குரியவை -
துங்கமூற் றெத்தகைய வானவரு மேத்நித் தொழப்பொலிவ வெந்த ஞான்
றும்; விற்குலவு நின்மீன் விரும்புமொரு பொன்னிவள் விசாலமீன் கடையை
மண்ணும் - விண்ணும்விழை யும்மிவ ணினைக்கதிக மென்பதால் வீனவதொன்
றில்லே யென்று, மற்குருட மூக்கெங்கண் மங்களாம் பிகையுட னம்புலீ யாட
வாவே - யலகில்பல புவனமு முயிர்த்ததாய் காணிவளொ டம்புலீ யாட வாவே.

செய்யகதி ராயிரம் விரித்திரு ளரித்துவரு செம்மனின் னெடொத்தவன்
றிண்ணிய மடங்கலே விரும்பிய துணர்ந்துநீ சேற்றுநில மாக்கள்போல
நொய்யசீ தலவனே விரும்பியப் பெயர்பூண்டு நோக்குரு தழல்வைசிய
நோன்மையி னுதித்திடும் போதுமத யானேவலி நூறிச் செருக்குஞெண்டு
வெய்யதா யனேயுயி ரழித்தலேக் குள்ளொளியும் விழுமிய துணர்ந்தாய்கொ
வீபத் தெனும்பெயர் மூதற்குமுக லடையாது மேலாய சார்புகோடற்[லோ
கையருட மூக்கெங்கண் மங்களாம் பிகையுட னம்புலீ யாடவாவே
யலகில்பல புவனமு முயிர்த்ததாய் காணிவளொ டம்புலீ யாடவாவே. (ஙி)

தெரியவொரு கோளுண் டெழிந்திடப் பட்டுஞ் சிறந்தவா சாற்பிழைத்துத்
தியவெஞ் சாபத் தொடக்குண்டு மோகஞ் செறிக்குமல ரான்சாபமே

யுரியதென வேற்குமொரு கோட்டும்ப ஞல்வா யுறுத்துசா பத்தொடக்குண்
டுழிதந்துமொழிதந்து நேர்தருமருங்குலா ரொள்ளணிகொண் ஞெள்ளன்மே
விரியவெரு விட்டெறிய வெளிவந்து நீயுறுதன் மேதகைய விவளுணர்ந்து[வி
மெய்ம்மையுண ராளினுனே யாடவா வெனவிளித் தனள்விழை யறஞ்செயா
கரியருட மூக்கெங்கண் மங்களாம் பிகையுட னம்புலீ யாடவாவே [ருக்
யலகில்பல புவனமு முயிர்த்ததாய் காணிவளொ டம்புலீ யாடவாவே. (சு)

எடுத்தவெஞ் சினவனல் கனன்றெழப் பொன்வெதுப் பேறிநிற் சுட்டகாலை
யித்தலச் சோமேச நீர்படிந் தனுகூல மெய்திய தயர்த்துளாயோ
விடுத்தபெரு வீரியினுன் பக்கபா தஞ்செயல் விடுத்தில னெனச்சிறுவிதி [ய்
வெகுளத் தொடர்ந்தநோ யித்தளியுண் மேயநீர் வீட்டியது முட்கொண்டிலா
தடுத்தபொறி யாளர்செறி யித்தல மகத்துவஞ் சற்றுமுண ராதவன்போற்
றமதஞ் செயறக்க தன்றுபகை வென்றுமினிர் தருதுவசம் வானுலகமீ
தடுத்தருட மூக்கெங்கண் மங்களாம் பிகையுட னம்புலீ யாடவாவே
யலகில்பல புவனமு முயிர்த்ததாய் காணிவளொ டம்புலீ யாடவாவே. (எ)

சாற்றுரு தலஞ்செய்த பாதகம் விசேடத் தலத்தடையின் மாயுமந்தத்
தலத்துப் புரிந்தபா தகமிருங் காசித் தலத்தினேச் சாரமாயும்
போற்றுமக் காசியிற் செய்தமா பாவமிப் புண்ணிய தலத்துமேவப்
போமென வுரைக்கும் புராணமத் தகையவிப் பொருவாத் தலத்தையுற்றுத்
தோற்றுமா மகளிர் துளைந்துபொரு முமைாைத் தோயமுந் தோய்ந்தம்மைபொற்
றுணையடி வணங்கிநீ பெறுமல்லா பத்தளவு சொல்லவல் லவரார்பொறை
யாற்றுருட மூக்கெங்கண் மங்களாம் பிகையுட னம்புலீ யாடவாவே
யலகில்பல புவனமு முயிர்த்ததாய் காணிவளொ டம்புலீ யாடவாவே. (அ)

துலங்குதன் றிருவடிக் கன்புபுரி யநிதிமுற் றுேன்றப் புகன்றசாபத்
தொடக்குண்ட காரிபன் மிகும்புனற் காவிரித் துறையிற் படிந்தெழுந்து
கலங்குதலி லாததவ மாற்றமற் றவனுளங் களிகொளுங் காட்சிகண்டுக் [ளான்
கவற்றிய வலித்தன்மை யுந்தொலைத் தருள்செய்த கருணேப் பிராட்டியிவ
மலங்குமன னுேடவ மதித்தகிறு விதிசொற்ற வலியசா பத்தொடக்கான்
மாறிமா றிக்குறைத வீர்ந்துமீ யுயவருள் வழங்குவா னெனல்வேண்டுமோ
வலங்குருட மூக்கெங்கண் மங்களாம் பிகையுட னம்புலீ யாடவாவே
யலகில்பல புவனமு முயிர்த்ததாய் காணிவளொ டம்புலீ யாடவாவே. (கூ)

பொருள்செயிவள் வாவென்று திருவாய் மலர்ந்தவப் பொழுதுநீ வந்தா
யிலை - பொலியுநின் முகத்தெதிர்ப் படவஞ்சி ஞனெனப் போதவுரை செய்து
காத்தேந், தெருள்செயிவ ளின்னும்வக் கிலனெனச் சிறிதகன் சேந்திடிற் புவ
னத்துளோர் - திக்கிலே நினக்கஞ்ச லென்பாரு மிலையிவள் சினந்தவிர்ப் பாரு
மில்லை, வெருள்செய்பணி பலவுளொன் றிவள்கொழுந னேவிடின் விழுங்கி
யே விடுமைாைத்த - வீரனு முளானிவை யுணர்ந்துய்ய வேண்டிடின் விரைந்து
வந்தடியர்யார்க்கு, மருள் செய்குட மூக்கெங்கண் மங்களாம் பிகையுட னம்
புலீயாடவாவே - யலகில்பல புவனமு முயிர்த்ததாய் காணிவளொ டம்புலீ
யாடவாவே. (கo)

அம்மானைப் பருவம்.

ஒளிதங்கு திருநுதற் பகையாகி மாற்றவளொ டெங்கூடி யும்பர்பெருமா [னுங
ஞெண்முடியி னமர்பிழையை கம்பாக விழியாய தோர்நதயர்த் தனமாயி
களிதங்கு தோழிய ரிருகையை யழித்திடக கண்டிரே மென்றபறறிக [பத்
கலைமதி யினேப்பிசைந துண்டைபல செய்துமேற காணவெறி வதுகடப்
துளிதங்கு மறிதினை நெருங்குங கருங்கடற் நெருகுழி யிடைபபிறநது
தூயபல கழுநீ ரருபுமுகை யவிழுத தலங்குவெண ணிலவுவீசி
யளிதங்கு குணனமையு முதற்றிட் டிழைத்ததிரு வம்மானே யாடியருளே
யாரண முழங்குங குடந்தைமங களவலலி யம்மானே யாடியருளே (க)

தூலங்குபனி வாயாய வெந்தைமாற் றலனெனைத் தோனறும பெரும
பிழையைங - தோழியர் மனைகருதவி செயருண முணாநதுளந தொகவமைத
தனமாயினு, மிலங்குகரு மச்சான் றெனப்பொலிங துமபரனே யெணணு திக
ழ்ந்தவொருவ - னியற்றுகரு மகளைம புகைபிழை யாற்பெ மெனபபிசைந
தூணடைசெய்து, மலங்குசல கொளப்பரிநி தனேமே லெடுதெறிநத மான
வுத யப்பொருப்பின் - வழிசெம்மை யருவியி னுகமபல வழுநதியொளி மாட்
சிமிக குற்றமேண்மே, லலங்குசெங கதிரவீசு மணியிட் டிழைதததிரு வம்
மானே யாடியருளே - யாரண முழங்குங குடநதைமங களவலலி யம்மானே
யாடியருளே. (உ)

மலர்செறி கருங்குழற் பகையாய பிழைநமை மதிகுமடி யாரகதது
மன்னு தொழிநதுமதி யாருட் செறிநதிடன் மதிததயர்த் தனமாயினு
மூலர்தலில விஞ்தைதநி னுமபாரா யகன்முகத தறுவிழி புதைதநாளி
லுயிர்கணித நியமாநி யொழிதர நமகுமாங கொழியாத பழிவிராவக[யது
கலர்தொழிலி னணுகிய தளம்பொரே மென்றவெங காரிருளே யுணடைசெ
கதிரவன் கூட்டுணடு தேகமெறியு மாறுமேற் கடுகவிட் டெறிதலேய்ப்ப
வலர்விலிங் திரநீல மணியிட் டிழைதததிரு வம்மானே யாடியருளே
யாரண முழங்குங் குடநதைமங களவலலி யமமானே யாடியருளே (ஊ)

எண்ணிய பசுங்கிரணம் வீசுமர கதமிட் டிழைததது மிசைசசெலுதது
யிலகுற வதன்கிழக கிறகமல ராகத திழைததது செலசசெலுத்தி
நண்ணிய வதன்கிழக கொளிவியிர மாறறிய நலதது செலசசெலுத்தி
நாடிய வதன்கிழக கோங்குசெம் பொன்செயத நலைது செலசசெலுதது
புண்ணிய மலிந்தநீ யாடுதிற ளேகைளேர் பொங்குகதிர் மண்டலமுதற்பூப்ப
போற்றுமண் டலநான்கும் வரிசையி னிருதிசையு மேபோலுமென் றுவகை
வண்ணிய விடைக்கொடி துவண்டிட வெடுதெடுத தம்மானே யாடியருளே
யாரண முழங்குங குடநதைமங களவல்லி யம்மானே யாடியருளே. (எ)

ஒள்ளொளிய வயிரத் திழைத்ததை யெடுததுமே லுயர்தர வெறிந்திடும்
போழ் - தொருபாதி யறமுமு வதுங்குடிகொ ளுஞ்செங்கை யொளிவிராய்ச்

சேத்தன்மேவ, கள்ளொளிய மற்றையொரு பாதிநின் றிருமேனி நக்கபா
தொளிவிராவி - நன்றுபச் சென்னவத னடியொன்றி னினதிவெண் ணகை
யொளி கலந்ததோற்றந், துள்ளொளிய வெள்விடையின் மீதந்தி வண்ண
ரொடு தாரிகில்பச் சுருவமான - தோகைகீ யடியவர் மகிழ்ந்திடக் காட்சிதர
றுணையுமென் றுலகுவப்ப, வள்ளொளிய வெள்வளே கலிப்பமிசை நோக்கெ
ய்த வம்மானே யாடியருளே - யாரண முழங்குங் குடந்தைமங் களவல்லி யம்
மானே யாடியருளே. (கி)

வேறு.

சொற்பொலி முன்கை வளைக்குல முழுதுந் துள்ளி முழக்கமெழத்
தடியிடை யென்னுங் கொடியிடை கொந்து துவண்டெழு தலைமேவ
வித்பொலி முத்தி னிழைத்த தெடுத்து மிசைச்செல வீசிடுதால்
வேல்புரை யங்கட் காரொளி யதனடு வீரவப் பொலிதோற்ற
முற்பொலி வெள்ளிய மதியமு மதனடு மூசு களங்கமுமாய்
முற்றிய வென்று வியந்து புகழ்ந்தொரு மூவுல கும்போற்ற
வற்பொலி கண்ட ரிடத்தம ருங்கொடி யாடுக வம்மனேயே
யாக்க மிருங்குட மூக்கமர் மங்களே யாடுக வம்மனேயே. (சு)

சொல்லமு தந்திரை யெறியும் பரவைத் துறையிற் ரோன்றமுதந்
தொக்கிரு பாலு மிமைத்திலர் நின்று துனேந்திரு கைநீட்ட
வல்லவர் கைக்கு மகப்பட லின்றிநின் வண்கைத் தலமுறுவான்
வண்பவ ளத்தி னியன்ற தெடுத்து மதித்தெறி யக்கவலா
கல்லதி னங்கைச் சேயொளி யுங்தொடர் நலமொரு செங்கதிரை
நாடியொர் செவ்வர வுறனே ரும்மென நானில மும்போற்ற
வல்லமர் கண்ட ரிடத்தம ருங்கொடி யாடுக வம்மனேயே
யாக்க மிருங்குட மூக்கமர் மங்களே யாடுக வம்மனேயே. (எ)

முத்த மிழைத்த தெடுத்தெறி யக்கடி மொய்த்த குழற்றலையொண்
முத்த மணிப்பிறை யிட்ட கதிர்த்த முழுப்பட லேக்கணுறீ இ
யொத்த கலப்பு வுற்பல வக்குழ லுற்ற கறப்புறமே
லொட்ட மிசைப்பொதி வுற்ற திறத்தை யுணர்த்தின் வனத்துளவக்
கொத்தன் வினர்த்தமெ யுற்ற பயக்கடல் குறுகி விடந்தாக்கல்
கொண்டி கறுத்தது நேரு மெனப்பலர் கூறி யுவப்பெய்த
வத்தர் குடத்த ரிடத்தம ருங்கினி யாடுக வம்மனேயே
யாக்க மிருங்குட மூக்கமர் மங்களே யாடுக வம்மனேயே. (அ)

விம்ம லுருவெரு ளித்தழண் மூண்டு வெருக்கொள வெதிர்வந்த
வெய்ய விராவண ஜெஞ்காற் கற்பக விடபத் தறையுணவு
நம்மறி வின்மைய ஞயிற் றென்று நங்கியொர் கால்வான
நாட்டுக் குடிஞை துளேந்தனன் மீளவு நக்கொரு கான்மதியைச்
செம்ம வினன்றனே யொருகாற் றீண்டுப செத்தோ மெனவுறவுஞ்
செங்கை விரற்றலே யொன்றுற வுந்திச் சிறுகை வாய்த்தோற்றி

யம்மனே யாடிய வொருமழ லீன்றவ ளாடுக வம்மனேயே
யாக்க மிகுங்குட மூக்கமர் மங்களே யாடுக வம்மனேயே. (கூ)

எண்ணுத லுற்றவ ருள்ளக் கமல மிருக்கு மனப்பேடே
யெப்பொழு துந்து நி பாடுகர் காவி லினிக்கும் பைக்கீதனே
கண்ணுதல் பக்க மிருப்பா யென்றடி கைதொழு பவர்வாழ்வே
கார்தவ ழும்பனி மால்வரை பெற்ற கருங்கண் மடப்பிடியே
யொண்ணுதல் வீக்கிய பட்டம்வில் வீச வொளிக்குழை தோள்வருட
வுத்தரி யத்தலே யார முறழ்ந்திட வொண்முக முத்தமெழ
வண்ணுத லுற்றிரு நோக்கமு மேமெழ வாடுக வம்மனேயே
யாக்க மிகுங்குட மூக்கமர் மங்களே யாடுக வம்மனேயே. (கஎ)

நீராடற்பருவம்.

தேங்குபாற் கடனடு வெழுந்தபைங் கொடியில்வெண் டாளயா னத்தி
வர்ந்து - தரைபுகழு மக்கடற் றிரையெழுந் துழிதருந் தன்மையிற் கவரி துள்
ளக், கொங்குசா லக்கடற் சும்மையி னியக்குழாங் கொண்டலச் சுறவியம்பக் -
குளிருவா மதிமிசை யெழுந்துநின் றுலெனக் கோலவெண் குடைநி முற்றத்,
தெங்குநேர் கொங்கையர மாதர்மொய்த் தென்னவண் சேடியர் குழாங்கண்
மொய்ப்பச் - சென்றுகா ணிபமுனி தவஞ்செய்தே முற்றிருளிச் சிவிகையி னிழி
ந்து வாசம், பொங்குமே னியினப்பி யெங்கள்கோ மளவல்லி பொன்னிநீ ராடி
யருளே - புகரின்மந் திரபீட நிகரின்மங் களமாது பொன்னிநீ ராடி யருளே.

ஒழுகுகுழ லுஞ்சைவ லமுங்கணுங் கயலுமழ குற்றமுக முங்கமலமு
மொள்ளதர முங்கிடையு மஞ்செவியும் வள்ளிய முவக்குங்கை யுந்தாளமு
முழுகுசெவ் வியல்புபொலி வாயுமாம் பலுமொளி முகிழ்த்தகள முஞ்சங்கமு
முதிராத கொங்கையும் புற்புதமு முந்தியு முயங்குசுழி யுங்க திர்ப்பு
மெழுகுவயி னுறுமடிப் புந்திரையு முக்காலு மேயகட கமும் வராலும் [ப
விழையாமை யுங்கைவிர லுங்களிறு மொன்றவெழு வேலையும் பரிம லித்து
புழுகுமலி தரமுங்கி யெங்கள்கோ மளவல்லி பொன்னிநீ ராடி யருளே
புகரின்மந் திரபீட நிகரின்மங் களமாது பொன்னிநீ ராடி யருளே. (உ)

மருவுநறு மணமலி கருங்குழலு கும்புனலை மங்குனின் றுகு புனலெனு -
வானம் பறந்திரி சாதக மெனும்பெயர் மரீஇயுள் வாய ணக்க, வொருவுத
லிலாரச்செய்ய வாயுமிழ் நறும்புனலை யொள்ளாரக் காம்ப னின்று - முருமதுப்
புனலெனப் பிரமரக் குலமென வுரைக்கும்புள் யாவு மொய்ப்ப, வெருவுதலி
லாதறங் குடிகொளு மகங்கையெறி மென்புனலை யனைய கைம்முன் - விட்ட
புன லென்றனிற் றிதைமுதலி யோரென்னு மெல்லோதி மப்பு ளேற்க,
பொருவுதலிர் கருணைகூர்ந் தெங்கள்கோ மளவல்லி பொன்னிநீ ராடி யருளே -
புகரின்மந் திரபீட நிகரின்மங் களமாது பொன்னிநீ ராடி யருளே. (ஊ)

ஊற்றுசுவை நறவுண்டு வண்டுபல மேலெழ வொருங்கிதழ் விரிந்து தோற்ற
மூற்றசெங் தாமரை நெருங்குறச் சூழும்வெள் ளோதிமக் குலமமர்தரத்
தோற்றமொரு தேத்துநீ புக்குநடு நிற்றல்வான் றெருடுமி மாட மோங்குந்
தொன்மதுரை நகரகம் பூதியணி வேதியர் தொடர்ந்துசுற் றமர நாப்ப
ணூற்றுபுகை மேலெழ வளர்த்தவிணர் படுசெவ் வழற்குழி நடுக்கண் முன்னு
ளவதரித் தூறநின்ற தொக்குமென யாவரு மறையுமா றங்கண் மேவிப்
போற்றுகரு ணைத்திறத் தெங்கள்கோ மளவல்லி பொன்னிநீ ராடி யருளே
புகரின்மந் திரபீட நிகரின்மங் களமாது பொன்னிநீ ராடி யருளே. (ச)

மலிதரு விரைச்செய்ய சாந்திருளே மாதர்பலர் மண்ணுவினை நிற்காற்றலான்
மற்றினைய நதிசோணை நதியாகி வெண்முத்தம் வண்கமல ராக மாகி [லாகி
யொலிதரு கடிப்புன லுறப்பாய்ந்த செறிவெலா மூறவெண்ணெல் செங்கெ
யொளிர்வெண் கரும்பெலாஞ் செங்கரும் பாகியுட னுறைவாணி யாக்க மாகி
வலிதரு கடற்குட்ட முற்றபல் வல்லிகளும் வண்பவள வல்லி யாகி
மாண்புண்ட ரீகங்கள் கோகக மாகிமதி மருவுறும் பரிதி யாகிப்
பொலிதர வுவப்பூற வெங்கள்கோ மளவல்லி பொன்னிநீ ராடி யருளே
புகரின்மந் திரபீட நிகரின்மங் களமாது பொன்னிநீ ராடி யருளே. (ரி)

வே று.

அஞ்ச மிரிய மடப்பிடியு மஞ்ச நடக்கு மனிந்திதைமு
ஞய மடமா தருந்திருமா லயன்மார் பகமுந் தாலமும்போற்
கஞ்ச மருவு மடவாருங் கருணைத் திருமே னியினறிதாய்க்
கலின்ற மஞ்சட் பொடிதிமிர்ந்து கரைத்து விட்ட புனலெழுந்து
தஞ்ச மில்லாக் கருங்கடன்மேற் சார்ந்து பரந்து பொலிதோற்றஞ்
சார்ங்க தரன்கார் மேனியிற்செங் தாதுக் கலேபோர்த் தியதேய்ப்பப்
புஞ்ச வளைக்கைக் குடந்தையுமை பொன்னிப் புதுநீ ராடுகவே
பொற்பா ரருண்மங் களவல்லி பொன்னிப் புதுநீ ராடுகவே. (சு)

மின்செய் மருங்குற் கமலமுதல் விளங்கு மடவார் பலருந்த
மேனி நுரைமொய்த் துறவுரிஞல் விலக்கி நறுநீர் தோய்ந்தெழுந்து
மன்செய் நினக்கு மஞ்சண்முதல் வாசந் திமிர்ந்து பணியாற்ற
வந்து சூழ வுருடம்பில் வண்ணஞ் செறித்த நிறமானத்
தென்செய் நினது திருமேனிச் செறிப்பச் சொளிசார்ந் திடக்கண்டோர்
நிகழுஞ் சகநின் மயமென்னச் செப்ப றெளிந்தா மென்றவப்பப்
பொன்செய் வளஞ்சால் குடந்தையுமை பொன்னிப் புதுநீ ராடுகவே
பொற்பா ரருண்மங் களவல்லி பொன்னிப் புதுநீ ராடுகவே. (எ)

சாற்று நினது வரவுவந்து நடவுக் குறிஞ்சி மணிகருகஞ்
சந்த மகிலா நிகள்பரப்பித் தளவப் புறவ நறுங்கனியும்
வீற்று மலரு மெதிர்குவித்து வெய்ய பாலை யெழுமுருங்கை
மெனபூம் பொரிகண் மிகவிறைத்து விரும்பு மருதத் திணையென்றுஞ்
சேற்று மூளைத்த கோகநகத் தீப மேற்றி யிலாங்கலியின்
செழுங்காய்க் குடங்கள் பலநிறுவித் தெய்வப் புனலார்த் திடுமதனுற்

கடி

போற்று வளஞ்சால் குடந்தையுமை பொன்னிப் புதுநீ ராடுகவே
பொற்பா ரருண்மங் களவல்லி பொன்னிப் புதுநீ ராடுகவே. (அ)

வே று.

எண்ணிய வெண்ணிய படியடி யவர்பெற வினிதுத வுந்தருவே
யெப்பிற வியுநல நின்றரி சனமுறி னெண்ணப் பொலிகொடியே
கண்ணிய மறைமுடி யெனுமொரு கட்கி கலங்தமர் பைங்கிளியே
காட்சி விருப்ப ருளச்சு தத்தொளி காலப் பயில்குயிலே
தண்ணிய யோகியர் சிந்தைக் கமலத் தடமக லாவனமே
சாற்று மெழுத் தரு வாகிய பரையே சகலா கமமுதலே
புண்ணிய நண்ணிய கன்னிப் பொன்னிப் புதுநீ ராடுகவே
புராதனர் பங்களே மங்களே பொன்னிப் புதுநீ ராடுகவே. (கு)

காவல ரல்லது பச்சிலே யெனுங் காய்ந்துதிர் சருகேனுங்
கையி னகப்படு மொன்றுகொ டுன்பொற் கமலத் திருவடியிட்
டாவல ராயுள வுக்குரு கிக்கனி யன்பின ரயனுதி
யமரர்க ணறுமுறு தன்மைய ராகி யயர்ந்திட மேற்போக்கி
காவலர் நன்கு புகழ்ந்திடு மின்ப நலப்பொரி யவராக
நன்கருள் புரிவரை மயிலே குயிலே ஞான வரோதயமே
பூவலர் பாவலர் கன்னிப் பொன்னிப் புதுநீ ராடுகவே
புராதனர் பங்களே மங்களே பொன்னிப் புதுநீ ராடுகவே. (க0)

பொன் னூசற்பருவம்.

பரவுநர் லயினறல் கவர்ந்தகரு முநின்மீப் படர்ந்துவெண் டாரை பொழியப்
பற்றியிரு பாலுமரு வெண்டிரை யெழுந்தப் பயோதர மளாவ நரப்பண்
விரவுமொரு வெள்ளோதி மத்நின்மே லக்கடல் வீராயவரை நின்ரேரூர்மயின்
மேலியாங் கொண்மர கதம்படுத் நியபுடவி மிசைநிறவு தூண்வயிரமே
லிரவுதரு நீலவிட் டக்கிடையின் முத்தவட மியையப் பொருத்திமாட்டுப்பப்
மெறிசுடர்செப் வயிரக் கொழும்பலகை மேலிவர்ந் தெண்டிசையு மேத்தெடு
புவுபுரி சோணு டளிக்குமா ருருண்முதல்வி பொன்னூச லாடியருளே
பூக்கமழ் தடத்தருட மூக்கமிழ் திடத்தமிழ்து பொன்னூச லாடியருளே.()

மாண்டசெக் தாமரை நடுப்பொலிவ தெனவம் மணக்கோக நகமலர்த்
தும் - வண்பரிதி மண்டல நடுப்பொலிவ தென்னவம் மண்டலத் தாலொளி
பெறு, நீண்டவழன் மண்டல நடுப்பொலிவ தென்னவொளி நிறைசெம் மணிப்
பலகைமே - னிலவுற வமர்ந்திருள் குடித்தெழு மணிக்குழை நிலாஞ்செவியி
லூசலாட, வேண்டவருள் கைவளே கலித்தாட முகமதியின் வெண்ணகை
நிலாவாடதுண் - மெல்லிடை துவண்டாட வகிலுவ னமுமாட மிக்கவள மல்

குசிர்த்தி, பூண்டதிரு நீர்நா டளிக்குமா ரருண்முதல்வி பொன்னூச லாடியரு
ளே - பூக்கமழ் தடத்தருட மூக்கமிழ் நிடத்தமிழ்து பொன்னூச லாடிய
ருளே. (உ)

பழிதப வறங்குடிகொ ணினதுசெங் கையமர் பசுங்கிளியை மானவொளிகூர்
பவழச் செழும்பலகை யேறியயி ராணியும் பங்கயத் திருவுமிருபா
லுழியுமிளிர் மணிவடந் தொட்டாட்ட யோகிய ருளக்கமல மேயவனமே
யுண்மைவே தாந்தத் துலாவுமயி லேயெளி தரூதபர ஞானவாழ்வே
வழிவழி நினக்கடிமை யென்றதி நன்றபுரி மாட்சியர்க் கெய்ப்பில்வைப்பே
மங்களாம் பிகையே யெனக்ஈனி மனத்தினுயர் வாணிதிரு வூசல்பாடப்
பொழிவளப் புனஞ டளிக்குமா ரருண்முதல்வி பொன்னூச லாடியருளே
பூக்கமழ் தடத்தருட மூக்கமிழ் நிடத்தமிழ்து பொன்னூச லாடியருளே.()

கொங்குமலர் நின்னடிக் கமலமலர் மிசைதூய்க் குலாவப் பணிந்தெழுந்து
கோலமிரு திருவுருக் கண்டுநெக் குருகிக் குடந்தமுற் றருகுநின்று
தங்குகரு மலமெனப் படிபலகை யுள்ளாற் றகைப்புண் டதற்கியைதரத்
தளையுமிரு வினையாய பாசக் தொடர்ச்தெண் டபுத்தமா யாபுவனமா
மெங்குமுழி தரவலைக் திடவூச லாடிவ தியாங்கடீர்ந் துய்யும்வண்ண
மிலகுமதி நடிவமரு மொருமா னெனத்தாள வெறிசுடர்ப் பலகையேறிப்
பொங்குபுன னன்ஞ டளிக்குமா ரருண்முதல்வி பொன்னூச லாடியருளே
பூக்கமழ் தடத்தருட மூக்கமிழ் நிடத்தமிழ்து பொன்னூச லாடியருளே.()

இருவரும் புணர்மாத ரிருவருந் திருமுகத் தேற்றபா கத்துநின்று
மிலகுமற் றரமாதர் யாவருந் தத்தமக் கேற்றநிலை நின்றுமேத்த
வொருவரு மிருங்கா ருருத்தபொன் வசைச்சிகர முற்றிலகு பசுமஞ்ஞைபோ
லொளிரிளஞ் சோலைநடு வம்பொன்மணி மேடைமே லுற்றபொற் பலகை
வெருவரும் பெருவாளே தன்னிளஞ் சிறுமீன் வியப்பீற்று நோக்கவீஞ்[யேறி
மீன்கணம் வெருக்கொள்ள வெடிகொண்டு வானீர் விராய்த்துளைந்தாடிமீளு
பொருவரும் புனஞ டளிக்குமா ரருண்முதல்வி பொன்னூச லாடியருளே [ம்
பூக்கமழ் தடத்தருட மூக்கமிழ் நிடத்தமிழ்து பொன்னூச லாடியருளே.()

ஒல்லுமிரு காடிவழி யோடுமிரு காலா லுலாய்த்திரி மனத்தின்வழியே
யோடியை யாறும் புருத்துபுல னைந்துதுக ருற்றுழல லற்றுமேலாச்
சொல்லுமா னந்தத் தியாந்தூளைந் தாடவொண் சூட்டோநி மந்தாமரைத்
தூயபா சடையிவர்ந் தாங்குமுத் தணிபூண்டு சுடர்மர கதப்பலகைமேல்
வெல்லுமா தரவுற விவர்ந்தொளிர் பசுஞ்சாலி விறல்வேழ மறையவுயரும்
வித்தக முணர்ந்துவிண் ணுறுசாலி மறையநனி வேழங்க ளோங்கிமலியப்
புல்லுமவள நீர்நா டளிக்குமா ரருண்முதல்வி பொன்னூச லாடியருளே
பூக்கமழ் தடத்தருட மூக்கமிழ் நிடத்தமிழ்து பொன்னூச லாடியருளே.()

பத்தியெனு மிருசுவைப் பரவைப் பெருக்கடல் படிந்துவீளை யாடுமனமே
பகருங்க மாகமா தீதவா னந்தப் பராங்கட லுதித்தவமுதே

தச்திவிழு மருவிமலி வரையிற் பிறந்தொளி தவாதபிர ணவகுஞ்சரந்
தன்னைப் புணர்ந்தொரு மருப்பிளங் களிறீன்று தழைதரு கலத்தபிடியே
சித்தியமை யோகிய ருளக்கமல மூறித் தெவிட்டாது பெருகுதேனே
தேவர்க்கு மூவர்க்கும் யாவர்க்கு மாருத செல்வத் தமைந்தவாழ்வே
புத்தியமை நீர்நா டளிக்குமா ரருண்முதல்வி பொன்னூச லாடியருளே
பூக்கமழ் தடத்தருட மூக்கமிழ் திடத்தமிழ்து பொன்னூச லாடியருளே.()


இகலரிய பத்திமை யெனப்பகரு மஞ்சனத் தெய்தவெளி யாகிதியமே
யெற்றைக்கு மகறல்சற் றிலையாக வவ்வலே யிடைப்படுக் தெய்வமானே
நகலரிய தென்னு தவக்கோக நகமலரு ணுளுமமர் சூட்டன்னமே
நன்றது வினைந்தமன மாகிய பெருந்தளி நயக்குறு மணித்தீபமே
பகலரிய சந்தமுங் காரகிலும் யானைப் பருங்கோடும் வெள்வயிரமும்
பரவுமா ணிக்கமும் வரன்றியிரு கோட்டும் படுத்திரைத் தலவுபொன்னிப்
புகலரிய நீர்நா டளிக்குமா ரருண்முதல்வி பொன்னூச லாடியருளே
பூக்கமழ் தடத்தருட மூக்கமிழ் திடத்தமிழ்து பொன்னூச லாடியருளே.()

எண்ணிய பெரும்புவன மெங்கணும் விராய்ப்பொலியு மியல்பின்றி யுந்தீவர்கு
ழிடைமருது முதலெங் குரோசப் பெருந்தல மெனப்பகரு மைந்தகத்து
நண்ணிய பெரும்புகழ்ச் சோமேசம் விசுவேச நாகேச மபிமுகேச
நாடரிய கௌதமே சம்பாண புரமென நவின்றெவரு மேத்துமீச
மண்ணிய வினாப்பசிய மாலதிவ னேசமென வவிரிவை முதற்பஃறைத்து
மாகிய விசேடத்தி னமர்வாய் பெரும்புவ ராலமுரை செய்யமுடியாப்
புண்ணிய நீர்நா டளிக்குமா ரருண்முதல்வி பொன்னூச லாடியருளே
பூக்கமழ் தடத்தருட மூக்கமிழ் திடத்தமிழ்து பொன்னூச லாடியருளே.()

திகழ்தரு மணிச்சிலம் பாதிபுனை பாதமுஞ் செம்பட் டுடுத்த வளையுஞ்
செய்யவற முழுதும்வள ரங்கையும் பரஞான தேசுமலி தருகொங்கையு
மிகழ்தருத லில்லாத வேயையடி தோளுமழ கியமங் கலக்கமுழத்து [முற்
மிண்டைமலர் வென்றதிரு முகமுமா ரருள்பொழிய மிணைவிழியு முபமான
தகழ்தருவி னுதலுமென் புன்றுதிய மேற்றமகி ழஞ்செவியு முகில்வினாக்கு
மாரளக பாரமு மிகப்பொலிய வண்டபகி ரண்டங்க ளுந்தழைக்கப்
புகழ்தருக நீர்நா டளிக்குமா ரருண்முதல்வி பொன்னூச லாடியருளே
பூக்கமழ் தடத்தருட மூக்கமிழ் திடத்தமிழ்து பொன்னூச லாடியருளே. ()

மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

*சாத்துகவிகள்.



கும்பகோணம் புரோவின்ஷியல்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்,
திரிசிரபுரம், சி. தியாகராசசெட்டியாரவர்களியற்றியது.

பூமேவு மடமாதர் முதலியோர் தன்பணி புரிந்திடற் குரியராகிப் [று
பொலிதரச் செயலொன்று கருதியோ தன்பணி புரிந்தவர்க ளெந்தஞான்
மாமேவு மங்களம் பெறுவரெனல் வெளியிடன் மதித்துமா லயன்முனோர்கள்
வாழ்நாள் பிடுங்குங் கொடுங்கூற் றெனத்தோற்று வலியவிட மமிர்தமாகிச்
சேமேவு பரன்மிடற் றுக்கழகு செய்யத் திருக்கமேனுக் கருள்குடங்தைத்
தெய்வமங் களவல்லி திருவடியி லஞ்சுவைத் தேனூற் றெடுக்குமின்சொற்
பாமேவு பிள்ளேத தயழ்த்தொடை புனேந்தனன் பற்ரு வெனக்குமறிஞர்
பரவவையி லிடமருளு மீனுட்சி சுந்தரப் பைந்தமிழ்ப் புலவரேறே.

சீயாலம் - சிவசிதம்பரம்பிள்ளேயவர்களியற்றியது.

பூமேவு மலரயனு மணிவண்ண மாலும் புரந்தான் முதற்புலவரும்
பொற்புமலி கலேமகளு மலேமகளு முன்னரிய பூரணி முருக்குங்கரு
மாமேவு மெல்லிதழ்ச் சுந்தரி முதற்பல்லிண மடந்தை பரும் வடமீனெனு [ங்
மாண்பெயர் புனேந்தமக ளுங்கம லினிப்பெயரை மருவியொளிர் கின்றமாது
காமேவு மனமுடைத் தங்கடங் கட்குரிய கைப்பணி விழைந்துவிலக்
கடிதருள் சுரந்தன்ப ரிதயமலர் மேவுமங் களநாய கிக்குலமார்
பாமேவு பிள்ளேத் தமிழ்க்கவிதை சூட்டினுன் பரவுறு சிராப்பள்ளிவாழ்
பண்பன்மீ னுட்சிசுந் தரநாம நாவலன் பைந்தமிழ்ப் புலவரேறே.

சென்னேக்கவர்ன்மெண்டு நார்மல் பாடசாலேத் தமிழ்ப்பண்டிதர்,
திரிசிரபுரம் - அ. சோடசாவதானம்,
சுப்பராயசெட்டியாரவர்களியற்றியது.

துன்றுபுகழ்க் குமாருரு பரமே தக்கோன்
நெல்பகழிக் கூத்தன்முதற் புலவோர் தம்பால்
மன்னுமுது தமிழாய்ப்பலீ நலபு ராணம்
வடமொழியி னின்றுதமிழ் மொழியிற் றந்தோன்
மின்னுமணிக் குடந்தையுமை தமிழைச் சொன்ன
மீனுட்சி சுந்தராநா வல்லோன் றன்பாற்
றன்னமில்சீர்த் தலேமைதழைத் தோங்கும் பிள்ளேத்
தமிழ்பிள்ளேத் தமிழாகித் தயங்கிற் றன்றே.

---

* இவை பழையபதிப்பைச்சார்ந்தவை; இந்நூல் பதிப்பித்தகாலம், சென்ற விபவஞ ஆனிமீ. (இ. பி. 1869.)

சென்னப்பீ சர்ச் மிஷன் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர்,

தெய்வசிகாமணிமுதலியாரவர்களியற்றியது.

வேறு.

தக்கவர்கள் புகழ்குடந்தைத் தலத்திலொருதனிக்குடத்திற் றழைவுற்றேங்கும்
மூக்கணெரு செங்கரும்பி னிடப்பாலின் மூளைத்தெழுந்த மூக்கட் பைங்கேழ்
நக்கவொரு பசுங்கரும்பி னிருதாண்மே னவில்பிள்ளைத் தமிழா மாலை
தொக்கவன்பாற் சூட்டினனன் மீனுட்சி சுந்தரநா வலவ ரேறே.

சென்னப்பீ சர்ச் மிஷன் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர்,

சின்னசாமிபிள்ளையவர்களியற்றியது.

மலையமுனி தவப்பேறே கலிமகளின் றவப்பேறே மறிநீர் வைப்பிற் [ன்
றலைமைபெறு மிவன்சனன மெனப்பலபிள் ளைத்தமிழைச் சாற்றும் வல்லோ
ருலவில்புகழ் மீனுட்சி சுந்தரநா வலரேறு குடந்தை மேய
மலைமகண்மே லொருபிள்ளைத் தமிழுரைத்த தொருவியப்போ மதிமிக் கிரே.

எட்டையபுரம் - சுப்பிரமணியபிள்ளையவர்களியற்றியது.

கடவுளைக்கலித்துறை.


காரார் தருபொழில் சூழ்குட மூக்கமர் கன்னியின்மேற்
சீரார் தருமொரு பிள்ளைத் தமிழினைச் செப்பினனற்
பாரார் தருபெரு நூல்களு மோர்கொடிப் பன்னும்வல்லோன்
நாரார் தருபுகழ் மீனுட்சி சுந்தர நாவலனே.

அரங்கேற்றுவித்தவர் சிறப்பு.

விருத்தம்.

கார்கொண்ட பொழில்சூழ் குடந்தைமா நகரின்வீ ருவி கவின்மாத ளம்பேட்டை
கல்விச் சிறப்பினுய ராறுமுக நிபுணனருள் காதனட ராசமகிப [வாழ்
னோர்கொண்ட விளவல்பர சிவதரும மோகாரு மெண்ணுத லுரைத்தலாற்ற
லியல்பினுற் சேரனடிய ருள்ளக் குறிப்பறிந் தினியவமு தூட்டலாதிப்
பார்கொண்ட பல்பணியு முகமனெ டியற்றுவோன் பகர்வார் பகர்ச்சிமுற்றும்
பரவுதன் புகழாக மிளிர்கனக சபையெனப் பகருநன் னுமவள்ளல்
சீர்கொண்ட மங்கள மடந்தைபிள் ளைத்தமிழ்ச் சீரரங் கேற்றுவித்தான்
செல்வமுட னுயுளு மிகப்பெறீ இ யனேயனித் திண்புவியி னுறவாழ்கவே.

திருத்தவத்துறைப்
பெருந்திருப்பிராட்டியார்
பிள்ளைத்தமிழ்.



பாயிரம்.

விநாயகர்.

தேர்மருவு தேவரிரு கைவிரன் மூடக்கிச் சிரத்துமும் முறைதகர்த்
துச் - செஞ்செவியை யிருகைமா றித்தொட் டிருந்தெழச் செய்யுமசு ரக்க
ளிற்றை, யார்மருவு மோருலவை யாற்குமைத் தூர்தியே யாக்கியவ் வணக்க
மும்நற் - காக்கியருள் பொழியுமொரு தெய்வக்களிற் றின்மல ரஞ்சரண நெஞ்
சுள் வைப்பா, மேம்மருவு மகிழ்நர்கை தொடக்குழை தலாலவர்க் கினனஞ்
சருத்தலால்வெச் - சென்றகுண மின்மையாற் சற்றும் பசப்புறுத லின்மை
யால் வின்மைதவழும், பேர்மருவு மேருமந் தாமிமயம் வெள்ளிப் பிறங்கலெச்
செற்றகொங்கைப் - பெருமாட்டி நற்றவத் துறைவளர் பெருந்திருப் பெண்
டமிழ்க் கவிதழையவே. (க)

சிவபெருமான்.

பரவாண வத்திடை யழுந்திக் கிடக்கும் பசுக்களே யெடித்துடன்முதற்
பகர்வான்கு மாயையி னளித்துவினே யொப்புவரல் பார்த்தருட் குரவனுகி
விரவாவிருக்குமப் பாசங் கெடச்சின்மொழி விள்ளலா லப்பாசமும்
வீறுதப மொழிவதெவ் வாறிவரெனக்கோபம் விஞ்சப் பிடித்தறை தல்போ
லரவாலுமிழ்ந்தவிட மொளிசெயுங் கண்டனேயெம் மண்டனேக் கண்டுபணிவா
மாவிவெண்டாமரை மலர்ந்ததன் பாசடையி லதன்முத் தொளிர்ந்து தோன்
குரவார்கதுப்பினர்க டனிகுடையு நாண்முகக் கோலமீ ளுடுமதிவிராய்க்[றல்
கூட்டுணவிருந்தசெயல் காட்டுந்தவத்துறைக் கோமாட்டி தமிழ்தழையவே.

உமாதேவியார்.

அளவில்பல வலியுடைய வாணவ மகன்றவா லறிவன்றி யுருவமில்லா
வையனைத் திறநிற்கு மத்திறம் மணியொளியு மலர்மணமு முறழநின் று
தளர்வறுபடைப்பா தி யைந்தெழிலு மாற்றியொளிர் சன்மார்க்க நெறியினிறு
தாயையெடுத்தணைத் தெவ்வுயிர்க்குஞ்சுகந் தருபரையை யஞ்சலிப்பாங்[விக்
களமலியுமென்பசை கரப்பவிடனுத்வமைக் காயாது விடுவலோயான்
காணுமென்றேழ்பரியி னேனுயிரஞ்செங் கரங்களே நிறீ இயதொப்ப
வளமலி படப்பையிற் பொரியரைத்தேமா மரப்பொழி தளிர்த்தெழிறரும்
வயிரவிவனங்குடி யிருந்தபெரு மாட்டிதன் வண்டமிழ்க் கவிதழையவே.

வி நா ய கர்.

மூத்தமைந் தன்பா லளித்தவற் கார்வமெனு மூதுரை வழக்குடைமையான்
மூப்புர முருக்குந் திறற்றந்தை தந்தருள முறைமையிற் கொண்டதேபோற்
பூத்தவெண் டிங்களும் பாசறுகு மிதழியும் பொரியரவு மொண்கங்கையும் [பா
பொற்புற வணிந்தருள் கொழிக்குமொரு கோட்டுப் புராதனனே யஞ்சலிப்
மீத்திகழ் துகிற்கொடிகள் பொன்னுலகை யுரிஞுலால் வீழ்பராகத்தின் மூழ்கி
விச்சுவா மித்திரன் கண்டபொன் னுலகென வியந்தமர ரம்பா நீங்கித்
தாத்திரி வரப்பிரபை கொண்டொளிரு மாடத் தவத்துறை யிருந்தகருணைத்
தாயாம் பெருந்திருப் பெருமாட்டி யைப்புகழ் தருந்தமிழ்க் கவிதழையவே.

சுப்பிரமணியர்.

பாற்கடலின் மீமிசைக் கார்க்கட லெனககண்வளர் பைந்துழாய்ப் பட
லைமார்பன் - பயோகர வுருக்கொள்ள மேற்கொண் டுலாவரும் பண்புடைத்
தாதையேபோ, ஞற்கடல் வளாகமறை யச்சிறை விரித்தசவி நந்துபோழ்ந்
தன்னவாயின் - ஞாலங்கொ ணுகஙகொண் மாமயி னடாவுமெழி ஞயகனே
யேத்தெடுப்ப, மாற்கடல் கடந்தவர் மனததுறஞ் சிவபிரான் மண்ணவரும்
வீண்ணவருமோர் - மாத்திரையி னிற்கூட மேருவை வளைத்தல்போன் மாளி
கையின் மீதேறிவை, வேற்கண்மட வார்குழலின் மட்பூவும் வீட்பூவும் விர
விடக் கற்பகத்தின் - வீடபஙகை யால்வளைக் குந்தவத் துறையமரும் விமலே
சொற் றமிழ்த்தழையவே (கி)

திருநந்திதேவர்.

பொங்குபடை தங்கவரு சுவடுமட வார்கொங்கை பொருதவரு சுவடுமின்பம்
புரிதலில னீதருஞ் சுவடர னடிச்சுவடு பூணமிக் கின்புதவலாற்
றுங்கமுடன் வாழிய வெனப்பிரமன் மான்முதற் சுரரேத் தெடுப்பவொளிருஞ்
சுஙிறைலிச் சூரற் படைகளைப் பிரான்பொற் றுணைத்தாண் மூடிக்கணிசு
தங்குமறி ஞோர்நபம் புகைநிற மெனக்கரை தரக்காடி யுண்டுகிற்குங் [வார்
தடங்கண்மட வார்குழற் குங்கமும வுட்டுபுகை தாவிலட் டிற்படுபுகை
மங்குதலி லாமகத் தெழுபுகை யொடுங்கலவி மண்ணின்று மீதெழுந்து
மாரு துலாவுமள கைப்பெருந் திருவம்மை வண்டமிழ்க் கவிதழையவே. ()

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

தெளியா வமண்கைய ருள்ளம்வெப் பேறவுந் தென்னர்கோன் வெப்பொழிய
தீயிவ ரேடுமுக முங்கருக வுந்தமது திருவேடு செழுமையுறவு [வுந்
ளையார் புனற்கணே டெதிரேற வும்வலர்க ணடுகழுத் தறியேறவு.
நறுமுலைப் பான்மணங் கமழ்வாய் மலர்ந்தசிவ ஞானபா னுவையுள்ருவா
மளியார் நறுஞ்சந் தனந்தன் ஞெடும்பிறந் தன்புற வளர்ந்துபின்ஞ [லாற்
ளங்நலார் கொங்கையினு மாடவர் புயத்தினு மடைந்துறவு கொண்டுறைத
களியார் விருப்பினெடு நாடிவரல்போன் மணங் கான்றதண்ணென்றதென்றற்
கன்றுவந் தலவுமறு காருமள காபுரிக் கன்னிநற் றமிழ்த்தழையவே. (எ)

திருநாவுக்கரசுநாயனார்.

செந்தா மரைப்பொய்கை நடுவிருந் தாலெனச் செந்தழல் பழுத்தொழுகும்வெங்
தீயமீற் றறைநடு விருந்துமமு துண்டெனச் செம்மாந்து நஞ்சமுண்டு
நந்தாத புணேகொடு கடந்தா லெனக்கட னகங்கொடு கடந்துமூலக
நாடும்வான் சைவமே பொருளெனத் தெரிவித்த நாவலவனேப் பரிசுவாங்
கந்தார் மதக்களிறு போற்றமது காரேறு கட்டியுழு தாக்கிவையே [மேதி
களமரிடல் கண்டுகொளல் போலநெற் கதிர்மென்று கடைவாய் குதட்டி
மந்தா நிலந்தைவர வொண்டளி ரரும்புதே மாம்பொழிற் கண்ணுறங்கும்
வயலுடுத்தோங்குந் தவத்துறைப் பெருமாட்டி வண்டமிழ்க் கவிதழையவே.

ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனார்.

பொருவிலாத் தருமவெள் விடையே றுகைக்கும் புராதனனே யொப்ப
நட்பிற் - பொறையர்முன் பரியுகைத் தருளப் பெருந்தேவர் புரிவொடும்
போற்றிசைப்ப, வெருவிலா மும்மதக் கழைசுளி கெடுங்கோட்டு வெள்ளைக்
களிற்றெருத்த - மேற்கொண்டு கைலைக் குகைத்திட்ட காவலூர் வேந்தன்மல
ரடிபணிகுவாங், குருவிரா வியசெழுஞ் கோழரை யரம்பைகள் குருத்தைமீப்
போக்கிநாளுங் - கூடுபெய சொப்புமை யறிந்ததவல் போல்வளி குதித்தெழ
வசைத்தசைத்துக், கருவிமா முகில்பொரு கதுப்பரம் பையர்கொண்ட கலவி
யெய்ப் பாற்றில்குங் - கழனிசூழ் தெய்வத் திருத்தவத் துறைமேவு கன்னி
சொற் றமிழ்தழையவே. (கூ)

திருவாதவூரடிகள்.

பைங்கண்வெடி வாற்குறு நரிக்குழாந் தாவும் பரிக்குழா மாகவுநெடும்
பரிக்குழா ஞெண்டுணு நரிக்குழாம் மாகவும் பயில்பிடக முரைசெய்தேரர்
தங்கறி விழந்துமூங் கைமையுறவு மூங்கைமை தவிர்ந்தொருபெ ணனிபேசவுந்
தம்பிரா னருள்பெற்ற வெம்பிரா னம்புயத் தாட்டுணே முடிக்கணிகுவாஞ்
செங்கயல் பொருங்கரு நெடுங்கண்மட மங்கையர் திலீதாடும் வாவிபூத்த
செந்தா மரைத்தண்மலர் நடுவண்ணம் வதிதலோர் திருமக டவம்புரிந்து
துங்கமிகு பேறுபெற் றதையறிந் தொருகலேத் தோகையழ னுவிணின்று
தூத்தவம் புரிவது கடிக்குமள கையில்வளர் சுமங்கலி தமிழ்க்குதவவே. ()

ஸ்ரீ சண்டேசுவரநாயனரும் மற்றநாயன்மார்களும்.

புண்ணியஞ் செய்துபா தகமாக்கு தக்கனுர் போலாது மாபாதகம்
புரிந்துவிவ புண்ணியம தாக்குசண் டீசரிரு பொற்ரு மரைப்பாதமு
மெண்ணரிய பிறலிக் கொடுங்கோடை நீங்குமா றெம்பிரா னடிநிழற்கீ
ழெய்தியின் புற்றவறு பான்மூவர் பாதமும் மெய்போது மேத்தெதிப்பாம்
வண்ணரூறு மல்குற் பகைப்பாற் பிறந்தது மதித்தெறிதல் போலமடவார்
மண்ணிய மணித்தொகை குயிற்றுமே கலேபுலவி மலியமறு கிடையெறிதலா
ணண்ணிய விருட்படல நக்கிநிமி ரும்பிரபை நாளுந் தழைத்தமரர்கோ
னகரெனச் செய்யுந் தவத்துறைப் பெருமாட்டி நற்றமிழ்க் கவிதழையவே.

காப்புப்பருவம்.



திருமால்.

திருவளர் சதக்கிருது மூற்றுமா றுதவிய திறத்தையுணர்ந்தோர்ஞ் - செழுமுகிலி னுலிட ருறுத்திமுன் னேனுகொண்ட செம்மாப் படங்கநரலை, யுருவளர் திருப்பெண்டு வருசுரபி யினமென்ப தோர்ந்தளித் தாங்கவன்ற - னுறுபகைகொ டவ்விட ரகற்றினிரை காத்தமல ருந்திப் பிரானபுரக்க, மருவ ளர் கடுக்கைத் தொடைக்குழக னுர்தனது மாண்கொங்கை யன்றிமற்றோர் - மாதர்கொங் கைகடழுவ வொட்டே னெனக்கொண்ட வகைமைபோ லப்பரம னுர், குருவளர்ஞன் மேனியிற் செம்பாதி கொண்டுமிழ் கோதையைத் தாதுக மழுங் - குளிர்பொங்கர் சூழ்தவத் துறைவளர் பெருந்திருக் கோமளப் பெண் ணமுதையே. (க)

வேறு. அழைத்து வாழ்வித்த பெருமான்.

பேருவை வளைத்தரவு நாணென வியைத்தவிரி டக்கைமேலவக்கொள்பிர தாப ச்சமர்த்தனே - வேடுருவெடுத்துவல ஞுகியவருச்சுனனில் வெற்றியேபெற் றவிரு நான்மற்புயத்தனே, வீமலிமதத்தளப வேனமுவரிப்புலிகி ளைத் துமேவற்கரிய சோதிப்பதத்தனே - மேன்மைமுனிவர்க்கொருகல் லானி முலிலற்பொடிவி ரித்துவேதப்பொருள்சொல் யோகுத்தவத்தனே,

மாருதமெனப்படரு மால்விடையனேப்பவள வெற்பையேயொத்தநிரு மே னிச்சிவப்பனே - வானவர்கமக்குரிய மாதர்கள்களத்தணித ழைப்பமேவற் றெளிசெய் பானற்களத்தனே, வாரணமுகக்குரிசின் மாமையினடத்தி யெனு மொப்பிலாவிப்புதல்வர் பான்மிக்குவப்பனே - மாசிலவருக்குளொ ளி யாய்நிறையுமப்பனேய முைத்துவாழ்வித்தபெரு மானேப்பழிச்சுதங்,

காருருவிளர்ப்பவற னீர்புகவிருட்படிம ணத்தவோதிக்குயிலே வேழச்சிலைக் கையோர் - காமனையெரித்தவர வாவுசெவிதழ்க்கொடியை முத்தமே யொத்தநகை யாளேப்பலப்பல, காமருலகதளவி லாவுயிர்களுக்குமரு ளேத்தராநிற்கும்விழி யாளேத்தருப்பொலி - காழிமழவுக்கினிய ஞானம தளித்தளவில் பொற்பின்மூழ்குற்றமூல யாளேச்சுடர்த்தழல்,

சாருமெழுகொத்தருகு மாதவர் மனத்திடைநி றுத்துபாதத்தளிரி ஞளேப்ப னிக்குலஞ் - சால்வையிறைக் ருமக னாகியமடக்கொடியை முற்றுநூல் கற்றபெரி யோர்சொற்பொருடைக்கியை, தாழ்செவியிலற்பவெளி யீயன் மொழியும்வைத்தினிது வப்பிளுடற்ருயிர தாயைக்கரிர்த்தெழு - தாவில் கனகப்புரிசை சூழ்தருதவத்துறை யிருக்குமேன்மைத்திருமி ஞளேப் புரக்கவே. (உ)

வேறு. திருவாளப்பிள்ளையார்.

கருமுகில் விளராகத் துண்ணெனத் சோற்றிய
கனிவிட மழுதாகக் கொள்வித்த தாற்றவர்

மருவிய கயிலாயத் தையனைப் போற்றனி
வருமொரு திருவாளப் பிள்ளையைப் போற்றுதுங்
குருமல ரணிமாலைக் கள்ளுடைத் தூற்றெழு
குழலியை யடியாருட் செல்லனப் பேட்டினை
யருமறை முதலாமெய்க் கிள்ளையைக் காப்பொலி
யளகையில் வளர்ஞானச் செல்வியைக் காக்கவே. (கூ)

வேறு. முருகக்கடவுள்.

அளிமிடைந்தொழுகு நறவருந்தியிசை யயர்கடம்பணிபு னைந்தபொற்சீர்ப்புய - வழகுதங்குபெரு வரைதொறுங்குறவ ராரிவைகொங்கையெனு மும்பலைச் சேர்த்துறை,

களிபொருந்துமுரு கனையடங்கலர்கள் கதறவெங்குரல்செய் செஞ்சிறைக்காற் படை - கரமிலங்கமயில் வெரிநிவர்ந்தடியர் கருதுமங்குவரு கந்தனைப் போற்றுதுங்,

தளிரரும்புமலர் வதியுமங்கையர்கள் குவிகரங்கொடிம ருங்குறக்கூட்டிய - குயி லெயென்புன்மொழி யையுமுவந்தினிது கொஞ்சிளங்கொடியை யஞ்சு கப்பேட்டினைத்,

தளிர்துவன் றியிருள் படநிழன் றுமதி தவழுறின் றுமலர் பொங்கிற்றேத்துளி - தடநிரம்பும்வயி ரவிவனங்குடிகொ டருபெருந்திருநன் மங்கையைக் காக்கவே. (ஙு)

வேறு. பிரமதேவன்.

தண்ணந் துழாய்ப்படலை தயல்வரு தடம்புயத் தாதைக்கு நீழல்செய்யத் - தந்தவரை யின்பறை யரிந்தபகை கண்டவன் றங்குதற் கிடமிலாம, லெண்ணுந் தனக்குமனை யாய்க்குமனை யிற்குமனை யிளவலுக் கேதியுறையு - ளெகினுறையு ளாகமரு தத்தினையி லாக்கிமகி ழுண்கைப் பிரான்புரக்க, கண்ணென்று நூதலாளர் பலியேற்ற தன்மையைக் காட்டியாங் கிருகாழி நெற் - கவினுற வளிப்பப் பெருந்திரு வெனும்பெயர்க் கருதுபொருள் காட்டியாங்குத், திண்ணங்கொண் முப்பத் திரண்டறமு முலகஞ் செழிப்புற வளர்த்தநாளுந் - திருத்தவத் தறையினில் வளர்ந்தோங்கு தெய்வதச் செந்தார்ப் பசுங்கிளியையே. (ஙி)

இ ந் தி ர ன்.

அங்கனிந் தொழுகுமயி ராணியுட னீராட் டமர்ந்துலினை யாடுபொழுதி னங்கலா ணுண்டுகி னனைந்தல்கு ரோன்றலா லதுகாண நாணிவளைசேர்
செங்கைகொடு தன்கண் புதைத்திடா தவளுடைய செங்கண்பு தைக்குமாறே செய்பதா மரைமலர்க் கண்ணியி ரம்பெற்ற தேவர்பெரு மான்புரக்க
திங்கண்முடி மகிழ்ந்தெரத் திறநிற்ப ரத்திறக் திகழ்யாமு நிற்பமெனவே சிவகோ டிகளறி தரத்தெரிப் பதுபோற் றிருக்கயிலை விண்டுவின்கட்
டங்கியவர் தாமரை யிருக்கைகொ டிருந்தகாட் டருவிமய விண்டுவின்கட்[யே. டாமரை யிருக்கைகொடி ருந்தரு டவத்துறைச் சைவச் செழுங் கொடியை

தி ரு ம க ள்.

மன்னுமாய்ப் பாடியிற் பாறுயிர்நெய் வெளவிநெடு மத்தின்மொத் துண்டு மகிழ்நன் - வருந்தாம லவைபெற்று விழிவளர வுங்கொண்ட மலைவழிச் சார்ந் துவாழ்ந்தா, னென்னுமொரு பழிமொழி விலங்கவும் பாற்புணரி யினிதுறையு ளாக்கொடுத்து - மியைதனக் குறையுளம் மகிழ்நன்மார் பாக்கிய மிருக்கு மொரு பெண்புரக்க, பன்னகா பரணரோ ரிடமின்றி யெங்கும் பலிக்குழன் றிடலுகீங்கிப் - பகர்மனைத் தக்கைவழி யுறையுளென வுரைதரும் பழிமொ ழியுகீங்கவோங்கி, மின்னுபொன் மலிவெள்ளி மலைமுதற் பன்மலைகண் மேவு றையு ளாக்கியன்னர் - மேனியொரு பாதியைத் தற்குறையு ளாக்கிமகிழ் மெய்த்தவத் துறையுமையையே. (எ)

க லை ம க ள்.

தேனு றுவட்டெழப் பாய்தரு மடுக்கிதழ் செறிந்தசெம் பொற்றுமரைச் - செழுமலரின் மேற்றனது பொன்மேனி யொப்புமை தெரிக்குறையு மகிழ்ந னேய்ப்பக், காணுறு வெண்டா மரைப்போதின் மேற்றனது கவின்மேனி யொப்புமை தெரிஇக் - காதலி னமர்ந்தருள் கொழிக்குமறை முதலளவில் கலைஞான வல்லிகாக்க, வானுறு தாழ்சடைக் கூத்தனுர் வெஞ்சூல மழுமுதற் படைசுமந்து - மணிமூரல் விழியுகிரி ஞற்பகை குமைத்தல்போல் வளைதிகிரி ஞாங்கர்முதலா, வுளுறு பல்படை சுமந்துந் துதிப்பவர்க் குறுமல விருட்ப கையையெல் - லோதியிரு ளாற்குமைத் தருள்பொழி தவத்துறையி லோங் கெழிற் பெண்ணமுதையே. (அ)

வேறு. துர்க்கை.

பொன்னங் கடுக்கை மதியணிந்த புரிபுன் சடையெம் பெருமான்றீப்
புகைக்கட் குறளன் வெரிநெரியப் பொற்றுள் பதித்து நடிப்பதுபோன்
மன்னு மமரர் குழாமுருக்கு மகிடக் கூற்றின் முடிநெரிய
மலர்த்தாள் பதித்து நடம்புரிந்த மாறு வீரப் பெருஞ்செல்வி
கன்னிக் கமுகின் மிடறுமுடியக் கதலிக் குலைகள் சாய்ந்திடப்பா
கற்றீங் கனிகள் கிழியவிலாங் கலிமுப் புடைக்காய் விழமோதி
யன்னப் பழனத் தோங்குதகட் டகட்டுப் பகட்டு வாளைகள்பா
யணிசேர் செல்வத் தவத்துறையி லமரும் பரையைக் காக்கவே. (க)

வேறு. சத்தமாதர்.

மலர்பல பொதுள்பா சடைப்பொற் றடத்தினும் - வரியுளி குருமோடை யுச் சக் குலக்கணு, மழைமுகி றெருடுபோர் நிசாச்சொற் களத்தினும் - வய லணி மடமா தரப்புக் கடத்தினு,
மலர்கதிர் வயறேறு மற்றைத் தலத்தினு - மணிவளை மணியீன மொய்த்துச் சரித்திடு, மளவில்பல் வளம்வாய்ப் கழ்ச்சித் தவத்துறை - யமலர்த மிட மேவு பொற்புத் துரைப்பெணே,
நிலவெழு சிறையோதி மத்தைச் செலுத்துந - ணிகாறு மடலேறு கைத்துக் களிப்பவ, ணெடுவலி மயில்வா கனத்திற் சிறப்பவ - ணிகழரா வுணுமூர்தி யைப்பெற் றுகைப்பவ,

லிலகிய வரிமா நடத்தச் சமர்த்தின - ரிமிழ்மத வயிரவ தத்தைப் புரப்பவ, ளெழுமல கையினேறு வெற்றிக் குணத்தின - ளெனுமிவ ரெழுவோரு மற்பிற் புரக்கவே. (கம)

வேறு. முப்பத்துமூவர்.

கரனமர்குழற்கொளிசெய் நித்தில மிழைத்தபொ னூர்பிறைமு கிற்கணைர் மதிப்பிறைமு ளைத்தது சிவணவி ருத்நித்தி ருத்தாளில் வானவர் - காத ல்செய் மடக்கொடிகண் மைக்குழன்மணிப்பிறை நாடொறு மதிப்பரி தெனப்பல்பல மொய்த்திட வருள்பொழி மைக்கட் டூணைச்சீர்கொ டே வியை,

வானமர் தவத்தர்புக ழச்சிர புரத்துறு மாமறை மழக்குழவு மெய்ப்பொரு ளினைப்பெற வமுதருள் செப்புத் தனக்கோல மாதினே - வால்வளே யெனச்சுனே யிடைக்குளிர் நிலப்பிறை பூரிமய வெற்பிறை தவத்தினி லுதித்தருள் பிடியை மயக்கற்ற வுட்பாவு சோதியை,

பூனம ருடற்பொறைய வெற்கு மருளைப்புரி ஞானவ மூதைப்பச மலர்க் கொடி யையற்புத மயிலினை நத்துக்களத்தூய பூவையை - பூரெழு வயப் புரவி கட்டுமிர தக்கதிர் மீமிசை தடித்தரிய கற்பக மலர்த்தரு கலிய வரு த்திச் சுரர்க்கார்வ மீதரு,

தேனமர் மலர்ப்பொழில்கள் சுற்றிய தவத்துறை யேழிருடி யர்க்கிறை யிடத் தினமர் சத்தியை யினிதி னளித்தற் குரித்தான காவலர் - தேரிடப மத் திபரி பொற்புற வுகைத்தருள் சூரிய ருருத்திரர் வசுக்கணன் மருத்துவ ரெனுமிவர் மூப்பத்து முக்கோடி தேவமே. (கக)

செங்கீரைப்பருவம்.

நீர்பூத்த புண்டரிக நிகராகு மாறுள நினைந்திருமி ஞாயின்று நிறையழகு கூட்டுண்டு வருமாறு செயவவரு நின்பணி விடைக்கணின்று
பேர்பூத்த செங்கையுந் தாங்குகின் ரூர்தமைப் பெற்றதாய்க் குதவவென்று பெருமுலைச் சிற்றிடை யரம்பையர்கள் பேசப் பிறங்குமக் கரமிரண்டு
மேர்பூத்த நிலனிற் பதித்தொரு மலர்த்தா ளிருத்தியொர் மலர்த்தாளெடுத் தெழின்முக நிமிர்த்தசைத் நிரவிமண் டிலமாஞு மிருகுழைவில் வீசியாடத்
தேர்பூத்த வீதித் தவத்துறைப் பெருமாட்டி செங்கீரை யாடியருளே தேமலர்க் கண்ணிபுனை கோமளப் பெண்ணமுது செங்கீரை யாடியருளே.

குருவார் துகிர்ச்சடை திசைத்தட வரக்கங்கை குழமதியி னேடுதுள்ளக் குழையசை தாத்திருப் புருவமுரி தரவெழுங் குறுமூர னிலவெறிப்ப
மருவார் கடுக்கைவெண் டலையரவு திண்டோள் வயிற்றுயல் வரக்கதிர்த்து மணிநூ புரங்குமு றிடப்படைப் பேற்றதுடி வாய்த்ததிதி யபயமாய்த்த

லுருவார் கொழுந்தழ நிரோதமூன் றியதா ளுவப்பரு ளெடுத்ததாளி [யிலே
லோங்கத் தெரித்துமன் றிடையென்று நின்றுட வொருவர்தமை யாட்டுமை
திருவார் தவத்துறைக் கருணைப் பிராட்டிநீ செங்கீரை யாடியருளே
தேமலர்க் கண்ணிபுனை கோமளப் பெண்ணமுது செங்கீரை யாடியருளே.

ஒன்னுர்த மும்மதி லொருங்கவிய வாங்குபொன் னுங்கல்விற் பழமை
யறிவா - ருற்றதனை யன்றியெத் தொழிலுமெஞ் ஞான்றும் முருற்றவல்
லாமைகண்டு, கொன்னுர் வளைக்கையுல குண்டமுன் னுனிமிழ்ந் கொல்லேற
தாயதான்மேற் - கொள்பொழுது வேறுறைய நாணியோ ருடல்செய்த கொள்
கைபோ லம்மகிழ்நனுர், பொன்னுரு மேனியிற் பாதிகொண் டாளும் பொருப்
பரைய னீன்றபிடியே - புண்டரத் திருநீறு கண்டோ ருளத்தையொண் புன
லாக்கி நெற்றியொளிரத், தென்னுர் நிருத்தவத் துறைவளரு மென்னம்மை
செங்கீரை யாடியருளே - தேமலர்க் கண்ணிபுனை கோமளப் பெண்ணமுது
செங்கீரை யாடியருளே. (கூ)

மைவைத்த கண்டனை வணங்கவரு தேவர்கள் வயங்குசா ரூபமுற்று
மன்னுவார் சங்குழவி னின்றும் பிரித்துணர வைத்தருதியேபோலவும்[கிப்
பொய்வைத்த நண்ணிடை யரம்பையர்கள் பேரெழிற் பொலிவுகா ணுடமயங்
புணரவரி னவரஞ்சி யகலும்வண் ணம்பொறித் திடும்பிலச் சினைபோலவும்
பைவைத்த தித்தியுர கப்பணி யணிந்தவப் பரமனுர் திருமார்பினிற்
பைம்பொற் படாமுலைச் சுவடுசெய் தகமகிழ் படைத்துக் களிக்குமயிலே
தெய்வத் தவத்துறைச் சைவச் செழுங்கொம்பு செங்கீரை யாடியருளே
தேமலர்க் கண்ணிபுனை கோமளப் பெண்ணமுது செங்கீரை யாடியருளே.

பாங்கினுறு செம்பதும பீடமொப் பப்பதும ராகபீ டத்தினேற்றிப் -
பாணிவரு மேன்மைகண் டியர்கங்கை மஞ்சனம் பரிவினுட் டிப்பொய்கைகள்,
ளாங்கொடியை நுசைபொதிந் தாலென வெணுண்டுகிலி னுலீர மொற்றியொ
ளிரு - மம்பிறையு ரோணியென நெற்றிவயி ரப்பொட் டணிந்தரக் காம்பன்
மலரி, லோங்குமதி யமுதுகுத் தாலென்ன முத்தணிக் தொளிர்வட்ட முலையமு
துவா - யூட்டித் திருப்பணிகள் பூட்டியிம வான்மனை யுவந்துகொண் டாடுமயி
லே, தேங்கொளிய மாடத்தவத்துறைத் திருமங்கை செங்கீரை யாடியருளே -
தேமலர்க் கண்ணிபுனை கோமளப் பெண்ணமுது செங்கீரை யாடியருளே.(ஙி)

ஏ வ று.

கடிமலர் முளரியி லெகினம் வதிந்து கலித்தா தெல்பொருவக்
காமரு சீறடி வயிரத் தண்டை கஞ்சுற கலித்தாடக்
கொடிவிடை யார்திரு மேனிச் சுவடு கொடித்த நிறங்கூறிக்
கூறிக் குமுறுதல் போல வொலிக்குங் கோல்வளை களுமாட
முடியுறு சூழிய மாட வெழுங்குறு மூறவன் மலர்ந்தாட
முழுமதி முத்தென முகமதி நண்டுளி மொய்குறு வியராட
வடிய ருளங்குடி புருமொரு சுந்தரி யாடுக செங்கீரை
யவத்துறை மாற்று தவத்துறை நாயகி யாடுக செங்கீரை. (சு)

சூழி முடித்த மணிப்பணி யடருஞ் சுடர்கான் றிருண்மேயத்
தொட்டிடு பொட்டொடு பட்டமும் வயிரச் சுட்டியும் வில்வீசத்
தாழிரு செங்குழை யோரிரு செங்கதிர் தம்முத யஞ்செய்யத்
தளவு முகைத்தவிர் குமுதத் தமுது ததும்பி வழிந்தோட
வேழிரு புவனமு முய்ந்தன முய்ந்தன மென்று களித்தாட
விழைபொரு மிடையிற் றழைசிறு கலையொடு மெழின்மே கலையாட
வாழிய வன்பின ருள்ள மிருப்பவ ளாடுக செங்கீரை
யவத்துறை மாற்று தவத்துறை நாயகி யாடுக செங்கீரை. (எ)

பமர முழக்க நறப்பொழி யுஞ்செம் பதும மருட்டியநின்
பாதப் பூணைபற் றுகப் பற்றிப் பற்றற நிற்பார்த
மூல விருட்பகை சாய்க்கு நறுங்குழன் மொய்த்தெழு புகழ்மான
முத்தம் பத்தி நிரைத்த மணிப்பிறை முழுமதி யொளிசாய்ப்பக்
குமரி யனம்பயில் வயல்சூழ் காழிக் குழவுக் கமுதருளுங்
கொங்கைப் புகழென முத்தா ரம்பல குழுமப் பொலிவாயென்
றமரர் தொழுதொறு மருள்செயு மம்பிகை யாடுக செங்கீரை
மடங்க லின்றி முடங்கல்விடு மைதோய் கருங்கட் செங்கனிவா
யேறு வளைமிக் கொலிமலர்க்கை யேழை மடவார் கூழைமுத
லினிய வினையுந் துவருமளா யியையக் குளித்த நறும்பனிநீ
ரூறு நறவ முவட்டெடுக்கு மொண்மா லிகைத்தோட் காளையர்க
ளாருங்கு நெருங்கிப் பூசிடவாங் கொழிந்து கழிந்த சந்தனச்செஞ்
சேறு கழுவு மிடைக்கழிவாழ் செல்வா தாலோ தாலேலோ
செழுநான் மறையோ லிடுகருணைத் தேவா தாலோ தாலேலோ. (ஞ)

வேறு.

எண்ணிய சத்தி பதிந்தவர் மும்மல விருளற வெழுகதிரே
யெங்குந் தங்கும் பொங்குஞ் சுடர்விட் டெழுமுழு வோங்கொளியே
கண்ணிய விமையத் தமையும் பெண்மணி காதற் கண்மணியே
கட்டுக் கெட்டுப் பெட்டமை வாருட் களியமு தச்சுவையே
மண்ணிய மணியிற் பொலியுங் குறவர் மடப்பிடி புணர்களிறே
வானவர் கோமக ளாய சகோமள வாவு முவாமதியே
தண்ணிய குரவமர் புண்ணிய குரவா தாலோ தாலேலோ
தமிழ்தெரி சங்கத் தலைமைப் புலவா தாலோ தாலேலோ. (ஃ)

உழையும் பிறகிடு கண்ணும் பண்ணு முவக்குஞ் சுவைமொழியு
முடையாண் மடவன நடையாள் குறவர்க் கொருமக ளாகியதாய்
குழையுந் தளிர்புரை செங்கையு மிணைதடி கொங்கையு மென்பதமும்
குளிர்மதி வெளிறுற வொளிர்திரு முகமும் குலவத் தோய்ந்திடுவான்
மழையுங் கழையும் பொலிதரு மால்வரை மன்னுஞ் சாரலின்வாய்
வண்டு படாமலர் சாகை தொறுங்கொடி மருவிய வொருதருவே
தழையுங் குரவடி விழையுங் குரவா தாலோ தாலேலோ
தமிழ்தெரி சங்கத் தலைமைப் புலவா தாலோ தாலேலோ. (எ)

வீங்குஞ் சுவைபடு மூளே யருந்தி வீராவுக் கடிமீருண்
மென்று விழுங்குபு மண்டையின் மொண்டு மிருஞ்சுடு வல்குடியா
வோங்கும் பகியெழ வாங்கு தினங்கையொ டுந்தி யெழும்பேயோ
டொண்டலை விண்டு நிவந்த கவந்தமு மொக்க வெழுந்தாடத்
தேங்குந் தகுவர் கருந்தலை மோதுஞ் செங்கள நடுவடுமோர்
சிங்கக் குருளே யெனப்பொலி வீரச் செல்வ செழும்பாவை
தாங்குங் குரவடி யோங்குங் குரவா தாலோ தாலேலோ
தமிழ்தெரி சங்கத் தலைமைப் புலவா தாலோ தாலேலோ. (ஏ)

தேவ ரும்.

நாத மகத்துவ வாயா தூயா மாயாவா
னுடர் முடிக்கணி பாதா போதா நீதாவோர்
சூத மடித்தெழு மாலா வேலா சீலாநீ
டோகை மயிற்பரி மோகா யோகா வேகாமா
மோத வமர்த்தெழு தாரா சோரா வீராதா
மோதரன்முற்பல சேறை பேறை வீறைசேர்
மாதவருட்பொலி தேவே தாலோ தாலேலோ
வாவி யிடைக்கழி வாழ்வே தாலோ தாலேலோ. (க)

மந்திர மாயசொ ரூபா தீபா நீபாகா
மந்தவிர் வார்பவ நாசா வேசா வீசாபோ
தந்திர மேவிய போகா வாகா வேகாவா
சந்திகழ் தேமலி தாமா வோமா காமாவா
னிந்திர ஞாயிர் தேவே காவே பாவேபா
டென்றினை யாள்குரு நாதா பூதா வேதாதாழ்
சந்திர சேகரர் பாலா தாலோ தாலேலோ
தண்குர வார்நிழல் வேலா தாலோ தாலேலோ. (கo)

சப்பாணிப்பருவம்.

மழைகொண்ட நிகரெங்கு நேயிவா ளத்திலெஞ்சு வாரிதிக ளேழுடுத்த
மண்ணகத் தமர்பலரும் விண்ணகத் தமர்பலரு மாரப் பவந்தொலேப்பான்
குழைகொண்ட சுவைகருப் பொழிமலர் துவன்றுபைங் குரவடி யமர்ந்துகரு
கூர்ந்தருள் புரிந்துவே தாகம புராணமுற் கோதில்பற் பலகலைகளும் [ணை
பிழைகொண்ட தில்லென வுணர்ந்தவொரு காலவே பிறவிதீர் வான்றழைந்து
பிறங்குகல் லாலடி யமர்ந்தருள் புரிந்தவெண் பிறைமுடிப் பெருமானினுந்
தழைகொண்ட புகழ்நனி படைத்துமிழ் குருபரன் சப்பாணி கொட்டியருளே
தன்னிக ரிடைக்கழிப் பன்னிரு புயாசலன் சப்பாணி கொட்டியருளே.()

பந்தமிகு தெய்வப் பெருந்திரு மறைச்சிரம் பாடியாடித் தொடரநீள்
பங்கய மலர்ப்பதம் பார்மக டிலேக்கப் பரிந்துவழி கொடுநடந்து
கந்தமிகு தாமரைக் கழனியுந் தழனிக் கருங்கான முங்கடந்து
கார்வனைச் சாரற் றினேப்புனம் புக்கெழில் கனிந்தகுற மங்கையாணி
வந்தமிகு பேரழகு நோக்கிமகிழ் தேக்கிநெடு மாதேவ னஞ்சலித்து
வந்திக் கவுங்குவி தாதாதம் பெருமையை மறந்துவிரை விற்குவிதருஞ்
சந்தமிகு கைத்தல மலர்த்தினே முகிழ்த்தைய சப்பாணி கொட்டியருளே
தன்னிக ரிடைக்கழிப் பன்னிரு புயாசலன் சப்பாணி கொட்டியருளே. ()

நீதுபதி யாதகை லாயத் தனிக்குமுற் றிகழ்மணிக் கோபுரத்துட்
டிருவாய்தல் வைகியவ் வழியரற் றெழுதேகு திசைமுகனே யருகழைத்தந்

கேதுபுரி வாயென வினுவப் படைப்பே னியானென்ன மறைவருங்கொ [த
லென்னவரு மெனவிருக் கோதுகெனவோ துவா னியையமுற் குடிலேயோ
வோதுகுடி லேப்பொரு ளுரைத்துப்பி னுலையென வொருங்கவன் மயங்கநோ
யொள்ளித ழுதுக்குபு நடுத்தலே புடைப்பமிக் கூறிப் புறஞ்சிவந்த [க்கி
தாதுமலி கைத்தளி ரகத்துஞ் சிவப்பவொரு சப்பாணி கொட்டியருளே
தன்னிக ரிடைக்கழிப் பன்னிரு புயாசலன் சப்பாணி கொட்டியருளே. ()

மால்வரை மறைக்கும்வெங் கேடகப் பரிகல மறித்துத் திருத்திவிண்ட
மண்டைமூ ழையின்மொணமி மூளைப் பெருஞ்சோறு வாரிப் படைத்துமீது
பால்படு நிணப்பருப் பிட்டிழுது சொட்டும் பசுந்தடிக் கறிபடைத்துப்
பாவுநெய்த் தோர்நெய்யும் வாக்கிப்பல்பெண்பேய் பரிந்துப சரிப்பவாண்பே
யேல்வகை யருந்தியுடன் முற்றவயி ருகமு னியற்றில னியற்றினுனென்
றெள்ளிவை யக்கருந் தகுவர்செறி போர்க்களத் தினவே றெனப்பொலிந்து
சால்புடைய வெஞ்சேலை வளைக்தகை முகிழ்த்தைய சப்பாணி கொட்டியருளே
தன்னிக ரிடைக்கழிப் பன்னிரு புயாசலன் சப்பாணி கொட்டியருளே. ()

கோலக் கருங்குழற் செவ்வா யுமாதேவி குளிர்மென் கவானிருந்து [ளியே
கொங்கைக் குடங்கொட்டு பாலுணும் போழ்தினைக் கொங்கைத் தடத்தினெ
காலச் சமைந்தசெழு முத்தவட முஞ்சுடர்க் கமலரா கத்தொடையுமொண்
கதிர்ப்பவள மாலையு மொன்றொடொன் றளவிக் கலந்திடச் சிக்காற்றியு
நீலச் செலிக்குழைப் பூட்டுக் கழற்றியு நெற்றியிற் பொட்டழித்து
நேயமிரு மலர்மாத ரிருவர்க்கு மொழியா நெடும்பணி திருத்துபணியே
சாலப் புரிந்திடு தளிர்க்கர தலங்கொண்டொர் சப்பாணி கொட்டியருளே
தன்னிக ரிடைக்கழிப் பன்னிரு புயாசலன் சப்பாணி கொட்டியருளே. ()

வேறு.

தாரமை சொற்ற முடித்தலே வீரர் தடாவலி யிற்சூழத்
தானையொ டாகவ பூமியின் மேலிய தாரக னுடல்போழ்ந்தாங்
காரமை சேறு படாவகை நெய்த்தோ டத்தினை யும்பருகி
யள்ளுபு மூளை யடங்கலும் வாய்ப்பெய் தலரீ ருளுமென்று
நாரமை புரணி குதட்டி விழுங்கியு நவிபசி தீராமே
நாற்றிசை நோக்கி யினிச்செயல் யாதென நகுகடை வாய்க்குங்
கூரமை வெள்வேற் செங்கை முகிழ்த்துக் கொட்டுக சப்பாணி
கோல விடைக்கழி நீல மயிற்குக கொட்டுக சப்பாணி. (சு)

பிழையற் றவருட் கருளற நின்று பிறங்கும் பேரொளியே
பேச நினைக்கக் காண வினிதுப் பெருகுஞ் சுவையமுதே
விழையப் படுகலி பூவை செய்ப்பு வீடப்பொலி நிரவியமே
வெள்ளி வரைச்சிங் தாமணி யணிமுடி மேற்கொளு முழுமணியே
கழையிற் சுவைபடு தெய்வப் பிடிதன் கலவைச் சாந்தும்விரை
கமழும் புழுகு மிளந்து மதர்த்தெழு காமரு கொங்கைமனங்
குழையத் தழையத் தழுவுங் கைகொடு கொட்டுக சப்பாணி
கோல விடைக்கழி நீல மயிற்குக கொட்டுக சப்பாணி. (எ)

வேறு.

வழிவழி யடிமை யெனக்கொள் விருப்ப மனத்து வளர்ப்போயே
வழுவினு மொழிவற வொட்டி யிழுத்து மயக்க மறுப்போயே
மொழிமுத லியவொரு மித்த தவர்க்கருண் முத்தி கொடுப்போயே
மூகிழ்நகை யிருவர் புணர்ச்சி மகிழ்ச்சியை முற்று முவப்போயே
பொழிசுவை நறவமு வட்டெழ விட்டொளிர் பொற்ற கடப்போயே
புனமயி லகவி மயத்து மடப்பிடி பொற்ப வளர்ப்போயே
கொழுதமி முணரு முதற்புல மைக்குக கொட்டுக சப்பாணி
குரவடி யமரு மிடைக்கழி யற்புத கொட்டுக சப்பாணி. (அ)

வேறு.

பரவப் படுமெய்த் தவருட் பொலிவாய் சத்திதரித்தோய்நீ
பவளத் தொடையற் புயவெற் பிறைவா முத்திமுதற்றேவே
யரவத் தணையிற் றுயிலச் சுதனே துற்றமறைப்பால
னடியைத் தலையைத் தெரிதற் கரியார் பெற்றவருட்சேயே
கரவத் தகுவக் கலனைத் தடிவாய் வெற்புவிருப்பாளா
கடவித் தகரைத் திசையிற் றிரிவீ ரத்திறன்மிக்கோயே
குரவத் தடியிற் குலவற் புதவேள் கொட்டுக சப்பாணி
குருதிக் குடுமிப் பறவைக் கொடியாய் கொட்டுக சப்பாணி. (கூ)

வேறு.

மணமலிதீபா வளர்பிரதாபா வித்தகநற்றேவே
வயமிகுவீரா வடிவகுமாரா பத்மபதக்கோவே
யணவுநர்நேயா வமரர்சகாயா பச்சைமயிற்பாக்கா
வழகியருபா வசுரர்கள்கோபா செச்சைநிறத்தேகா
பணவரவாளர பரணவைதாளா மூத்தெனவுற்றோயே
பரிபவமாயா வீரிதரவாயா வெற்கருள்சோற்கோவே
குணபரிபாலா குலவனுகூலா கொட்டுக சப்பாணி
குரவடியோமா தரமுறுமாமா கொட்டுக சப்பாணி. (கஂ)

முத்தப்பருவம்.

ஞாரன் முளைத்த கான்யாற்றுத் துறையும் பிறையு மிரிமருப்புத்
தும்பி யுணவு நம்பியழல் சுழல்கண் மடங்க லுழலிடமும்
வேரன் முளைத்த வெண்முத்து மிளிர்செம் மணியும் பதித்துறுத்த
விடைந்து நடந்து கடந்துநெடு விண்ணந் தடவு குடிவினைச்
சாரன் முளைத்த புனம்புகுந்து தையற் குறக்கோ ளகக்கோளதை
சமயர் தெரிந்து சேர்சென்று சலாஞ்செய் பொழுது முகங்கொடுக்க
சூரன் முளைத்த செந்துவர்வாய் முத்தந் தருக முத்தமே
முகைக்குங் குரவு விரவுதிரு முருக தருக முத்தமே. (க)

வழிந்து கருணை யுவட்டெடுத்து மாதீ ருலகெங் கணும்பரவ
வடவா னிழற்றென் பான்முகமாய் மருவி யமர்ந்து வெருவிமல
மழிந்து வெரிநிட் டிடைடங்துடைங்தோ னைந்து மகல வொருநால்வர்க்
கறிவித் தொருமூன் றிரண்டறுமொன் றறையா தறைந்த மாதேவ
னிழிந்து வணங்கு முறைவணங்கி யிணங்கி யருள வேண்டுமென
விரப்பப் பரப்பு கருணைசுரந் தெல்லா முணரும் படியொருசொன்
மொழிந்து திகழுஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே
முகைக்குங் குரவு விரவுதிரு முருக தருக முத்தமே. (உ)

நிலைப்பா லினியின் றெனைத்தகுவர் நிறைபே ரவையி லிருந்தொருசூர்
கெடுமூச் செறியுந் தொறுமவன்றே ணிலவு கறுத்தார் புலால்கமழ
வலைப்பான் மடமா னனையவிழி வான நாட்டு மடமாதர்
வண்ணக் கிண்ண மாமுலையு மலர்க்கூட் தலுகல் விரைகமழ
விலைப்பான் மலர்ப்பா லொடுவேர்ப்பா லெல்லாங் கமழு கறுங்கூந்த
லிமய முதவெம் பெருமாட்டி யீர்ஞ்சாந் தொடுமென் புழுகுகமழ்
முலைப்பால் கமழுஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே
முகைக்குங் குரவு விரவுதிரு முருக தருக முத்தமே. (ஊ)

வித்த முவந்த பெயர்த்தகுவ வெய்யோ னுரங்கீண் டெழுமடங்கல்
வெறிகீண் டெழுந்த முழுமடங்கல் வீரும்பி யுயிர்த்த பெரும்பறழே
சுத்த முவந்த பேரவத்தைத் தேலா மேலா மாதவத்தர்
தூய யோக ராயர்சுகச் சுவையுண் முழுகு நவையிலவர்
சித்த முவந்த பேரொளியே தேவர் பெருமா னினிகின்ற
சிறிய மருங்குற் பெரியமுலைத் தெய்வ யானை செம்பவள
முத்த முவந்த செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே
முகைக்குங் குரவு விரவுதிரு முருக தருக முத்தமே. (எ)

எழுது புகழ்சால் பெரும்புலவ ரென்பார் பலரும் பின்பாக
விருந்து பொருந்து கரங்கள்விரித் தென்று வருமென் றேமாறத்
தொழுது வணங்கி முன்பிருத்தித் துதித்துப் பூசித் துறுமுகமன்
சொற்று முனிவ ருத்தமவிச் சுவையா ரமுதம் விரும்பாது
கொழுது வரிவண் டுழக்குகுழற் குறப்பெண் பாற்போய்ப் பசிவருத்தங்
கொடிதென் றேதி யிரந்தவள்கை கொடுக்குந் தேன்கூட் டியதினைமா
முழுது முவந்த செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே
முகைக்குங் குரவு விரவுதிரு முருக தருக முத்தமே. (ஏ)

வேறு.

வெண்ணீ ரலைத்திருப் பாற்கடற் கண்டியில் விறற்சக் கரப்படையினுன்
வியன்மார்பி லணியக் கவுத்துவப் பெயர்மணி விருப்பிற் கொடித்துளாய்மற்
றுண்ணீர்மை மிக்கசிந் தாமணியை யிந்திரற் குதவினுய் சூர்தடிந்தன்
பூற்றெழ வழுத்துநர்க் கின்பவள முழுதுதவு மொப்பிலா னீயல்லையோ

பண்ணீர் மொழிக்கடைச் சியர்களே களேந்திடப் பண்ணேக் குலேக்கணுலவீப்
பார்த்துவரு தொழுவரிக் குதவுசா றடுகட்டி பற்பல வெடுத்துதடைந்த
தெண்ணீர் மடைக்கிடு மிடைக்கழி புரப்பவன் செம்பவள முத்தமருளே
தேவர்க்கு மூவர்க்கும் யாவர்க்கு நாயகன் செம்பவள முத்தமருளே. (சு)

வெங்கட் கடுங்கொலேத் தகுவரொடு பொருதநாள் வெற்றிவேல் புக்குழக்க
வீறழிந் ததுவேலே மற்றத ஞெடும்புணர்வன் மீனமீ னிப்பிவளேகார் [ஞ்
திங்கட் செழுங்கலேயு மன்னவொண் கன்னலுஞ் செங்கெலுஞ் செழுவாழையு
செந்தா மரைக்குலமு மற்றமப் பரவைநீர் தேக்கியுயிர் வாழுமைய
வங்கட் புவிக்கணிவை யீலுமுத் தங்கொளே மாயிர முகக்கங்கைசா
லவிமுத்த மூங்கொளேங் குவிமுத்த மாமுலேய ராடுநீர் பாயவிண்மேற்
செங்கட்க ரும்பெழு மிடைக்கழி புரப்பவன் செம்பவள முத்தமருளே
தேவர்க்கு மூவர்க்கும் யாவர்க்கு நாயகன் செம்பவள முத்தமருளே. (எ)

தோணறு தொங்கற் பெருந்தேவர் மோலித் தொகைக்குமேற் பட்டொ
ளிவிடுங் - தூயவேய் முத்தமு மவாவியது முன்னமுன் றிரண்டைவாய் முத்
தமொன்றே, வாணறு கண்ணியர் மணிக்குழை யசைந்தாட மாமுலே யணிந்த
முத்த - வடமாட நுண்ணிடை தளாடவிள மைந்தர்தோடு மூசலாடுங்,
கோணறு பொங்கரிற் பாணறு காலுழக் குலமல ருருத்ததாது - குளாகடற்
சேதுவிற் பொங்கியிரு கரைமேற் குவித்தநீ ரோடகாப்பட், சேணு றடைத்
திடு மிடைக்கழி புரப்பவன் செம்பவள முத்தமருளே - தேவர்க்கு மூவர்க்கும்
யாவர்க்கும் நாயகன் செம்பவள முத்தமருளே. (அ)

வே று.

எழுதரும் வடிவழ குடையவ விடையவ னிச்சைசெய் புத்திரனே
யிமையவர் மடவியர் வீழியளி குடையுமி ணர்த்தகடப்பணிவோய்
பழுதக னெறிபுகு மவருள நிறுவிய பத்மப தத்திறைவா
பலதலே யரவுயி ருலேதர வுலவுப சுத்தமயிற்பரியா
யொழுகொளி மாகத முழுமணி வடிவவு மைகொளிர்கட்டுணேயு
டொளிர்மணி யெனவழி படுமடி யவருளு வக்கு முயிர்த்துணேயே
முழுதுல கமுஞவில் சரவண பவுகுக முத்த மளித்தருளே
முனிவரர் தொழுகு வடியமர் குருபர முத்த மளித்தருளே. (கூ)

வே று.

மதியு நதியு மணியு மொருவர் மகிழ நிகழு மத்தனே
வலிய குறவர் பொலிய வுதவு வடிவ மகள்வ சத்தனே
நிதிய மெனவு ணினேயு மடியர் நிறைய வருளு மத்தனே
நிமலே யிருகண் மணியொ டுலவி நிலவு மறுமு கத்தனே
கதிர மயிலொண் முதுகி னுதய கதிரி னமர்ச மத்தனே
கமழு நறிய புழுகி னளறு கலவி யொளிர்பு யத்தனே
முதிய கருணே பொதிய வளரு முதல்வ தருக முத்தமே
முகைய தகைய குரவு விரவு முருக தருக முத்தமே. (கக)

வாராஅனைப்பருவம்.

ஏர்கொண்ட நெற்றியிற் சுட்டியும் பட்டமு மெழில்சொட்ட விட்ட
பொட்டு - மெட்டித் திசைக்குமொளி விட்டுப் பரப்பும்வி லேயில்லா மணிக்கு
ழைகளுந், தார்கொண்ட வைம்படையு மொய்ம்படையும் வலயமுஞ் சாற்று
முன் கைக்கடகமுந் - தாவாம தாணியு மிளங்கதிர் விளங்கவொளி தழைமூர
னிலவெறிப்பப், பார்கொண்ட சிற்றடி புலம்புஞ் சிலம்பும் பருவுமணிப் பொற்
றண்டையும் - பரவுஞ் சதங்கையுங் கிண்கிணியு மண்குளிர் படைப்பக் கலின்
கலினெனச், சீர்கொண்ட மறைமுழுமை யுந்தொடர்ந் தோலிடச் சிவபிரான்
மகன் வருகவே - செந்தமிழ் மணந்தழை நடைக்கழி யிடைக்கழித் தெய்வ
நாயகன் வருகவே. (க)

நாவடி மறைக்குமுத லோதியத னுட்பொரு ணையந்துணர் வுறுதபிழையா
ஞன்மூகன் முடித்தலை நடுங்கப் புடைத்துக்கை நகுகாய்ப் படைந்ததன்றிப்
பூவடி யருந்திவண் டடைகிடக் குங்குழற் பூரண வுமாதேவியார்
பொலிதரு மடித்தல மிருந்திளங் கொங்கையிற் பொங்குபா லுண்டிடும்போ
தூவடி மூனேச்சூல பாணியார் திருமார்பி னுற்றமுன் சொற்றபிரம
ஞெண்டலைப் பெருமாலை சிக்குண்டு புரளா வருண்டிட வுதைத்துதைந்து
சேவடி யினுங்காய்ப் புறக்கொண்ட திண்டிறற் செல்வப் பிரான்வருகவே
செந்தமிழ் மணந்தழை நடைக்கழி யிடைக்கழித் தெய்வநா யகன்வருகவே.

ஆராத காதலி னணைக்குமொரு தம்பிரா னங்கைத் தழற்கொழுந்தி [ட்டச்
னவிர்சடை மதிப்பிறைக் கோணலை நிமிர்த்திடற் காய்ந்துட னெடுத்துவா
சோராத மற்றதுமெய் சோர்ந்தமுத முற்றவுஞ் சொட்டலிட வதுபடிந்த [க்க
தூவமா யுடைப்புலித் தோலுயி ரடைந்தெழீஇத் தோகைகொடு மண்புடை
வேராத மெய்நடு நடுங்கிக்கை நின்றுகீழ் வீழ்ந்தெதழுந் தோடுமாறே
மேவிப் பிடித்தொருகை யேந்திவர லோர்ந்துநீ மேவுநா னேயென்றவன்
றீராத பேருவகை தேக்கச்செய் மழவிளஞ் சிறுருமும் பன்வருகவே
செந்தமிழ் மணந்தழை நடைக்கழி யிடைக்கழித் தெய்வநா யகன்வருகவே.

கந்தையடு கரடக் களிற்றுரிவை போர்த்தமுக் கட்பெரும் பரமனுரங்
கைத்தலத் தமர்மா துளங்கனி பறித்துளங் கனியக் கழுத்துகீட்டுங்
தந்தையுறழ் சிற்றிடைத் தாயார் திருக்கைத் தனிக்கிளி தனக்குதவியுங் [த்து
தாயார் திருக்கைத் தடஞ்சிலையின் மேற்பொலி தழைத்தோகை கொய்தெ
மூன்தைமறை நாடரிய தந்தையார் கைக்கணமர் முதுமா னுணக்கொடித்து
முறையினித் தகையபல செய்தெய்து தற்கரிய முதுகுரவ ரிருவருக்குஞ்
சிந்தைமகிழ் பூப்பவெதிர் நின்றவிரை யாடுமொரு செல்வப் பிரான்வருகவே
செந்தமிழ் மணந்தழை நடைக்கழி யிடைக்கழித் தெய்வநா யகன்வருகவே.

வெவ்வாய் முடைத்தருவர் மேவுங் களத்திலவர் மேனிநெய்த் தோர்பாரந்து
மீதலை யெறிந்திட வெருக்கொண்டு மற்றவர் விடக்குநிண மீருள்பலவுங்

கவ்வா யிரம்பெரும் பேய்களைச் செம்புனல் கடப்பதற் கெண்ணி யனையார்
கைவிட்ட கேடக மறித்துக் கிடத்திக் கலந்தநி லிவர்ந்துமாண்ட
வவ்வாய் கரிப்பிணங் குடர்கொடு பிணித்துமற் றதன்மே லிவர்ந்துமன்னு
ரங்கைக் கழுக்கடை யெடுத்துந்தி யிதுமதவை யதுபரிசு காணுமென்னச்
செவ்வாயின் வெண்ணகை யரும்பப் பெரும்போர்செய் சிறுகுமா ரன்வருகவே
செந்தமிழ் மணந்தழை நடைக்கழி யிடைக்கழித் தெய்வகா யகன்வருகவே.

வேறு.

நூலைக் கதிர்நுண் மதிகொண்டு நுனித்துள் ளுணர்ந்தற் கருள்சாலா
நோலா வினையேம் பவக்கட லுநானங் கடந்த வுவர்க்கட லு
மாலைக் கதிரி னுடைகழைபோ லண்ட முடைக்கும் பெருமலையு
மடியேம் பாசக் கருமலையு மடியற் றெழியக் கடியுற்ற
மாலைக் கதிர்வேல் வலங்கொண்ட வள்ளா ளுள்ளால் விடங்கரந்த
வைவாட் டுளைப்ப லரவனுக்கு மயில்வா கனத்தின் மீமிசைப்பல்
காலைக் கதிரிற் றோன்றுமிளங் காளாய் வருக வருகவே
கழியா வளங்கள் பொழியுமிடைக் கழியாய் வருக வருகவே. (சு)

பணியா வழுத்தும் பேரன்பர் பவசா கரத்திற் கொருவடவை
பற்றற் றவரே பற்றகலப் பற்றும் பிரம முற்றுகுணங்
குணியா வையுமா யல்லவுமாங் கோதின் மூதலென் றெறித்துமறை
குலவ வுனையே நாணுளுங் கூறு மதுவுங் குறியாய்போற்
றணியா மோகந் தலைக்கொண்டு சாரற் புனத்து வேரனுகு
தாளப் பரல்சா லுறுத்தவுநீ இத் தையற் குறவர் கொடியின்பங்
கணியா மூளைத்துத் திளைத்தவிளங் காளாய் வருக வருகவே
கழியா வளங்கள் பொழியுமிடைக் கழியாய் வருக வருகவே. (எ)

தோட்டுக் கமலத் தவிசுறையுந் தோன்றற் கியற்ற முடியாத
தோலா வனப்புச் சுமந்தகுறத் தோகை தூணைத்தோ டோய்ந்திடுவான்
வேட்டுப் புகுந்த வொருபொழுது வேடர் பெருமான் வேட்டைவினை
விழைந்தாங் கடையப் பயந்தாய்போல் விருத்த வுருவங் தரித்துமொரு
கோட்டுக் கரடக் களிற்றையிரு கோட்டுக் களிறு வரப்புரிந்திங்
குலவு பாயா வேங்கையுருக் கொண்டு மின்னும் பலசெய்து
காட்டுப் புனத்து மகிழ்ந்தவிளங் காளாய் வருக வருகவே
கழியா வளங்கள் பொழியுமிடைக் கழியாய் வருக வருகவே. (அ)

விண்ணே வளியே யொளியழலே விரியும் புனலே மேதினியே
வெளிய மதியே செங்கதிரே மேய வுயிரே யுயிர்க்குயிரே
பண்ணே பண்ணி னுடனமையும் பாட்டே பாட்டி னுட்பொருளே
பசரா றுறக் கப்பாலாம் பரமே பரவு வார்வாமே
யெண்ணே யெண்ணின் மறைக்கொழுந்தே யெண்ணி யெழுசற் கரியபுக
ழேறே யிமையோர் பேறேநன் கியம முயிர்த்த பெருமாட்டி
கண்ணே கண்ணுக் கினியவிளங் காளாய் வருக வருகவே
கழியா வளங்கள் பொழியுமிடைக் கழியாய் வருக வருகவே. (கூ)

மணியே மணியி னுள்ளொளியே மலரே மலரி னுண்மணமே
மதியே மதியி னுட்கலையே மானப் பொலியு முதுகுரவர்க்
கணியே யெங்க ளாருயிரே யாரா வின்பப் பெருக்காறே
யாரு நினுக்கு மப்பாலே யப்பான் மையினின் றெழுகுந்தெய்வக்
கணியே யழகு கனிந்தவிளங் காளாய் வருக வருகவே
கழியா வளங்கள் பொழியுமிடைக் கழியாய் வருக வருகவே. (கo)

அம்புலிப்பருவம்.

புற்புத வலைக்கடல் கலங்கியோ லிடவெழுஉப் பொலிசத்தி யுடைமையானும்
புண்ணியக் கலைபல விரித்துநீர்க் குவலயம் பொலிதர மலர்த்தலானுங்
கற்புதவு வண்ணமனே யாகவொளிர் தாரா கணப்பா லுவத்தலானுங்
காமனழ குக்குடை கொளப்பெரு கிராமங் கலந்தின்ன வெழுதலானும்
வெற்புதவு மங்கைகான் முளேயெனப் பரமர்முடி மேற்கொளத் தோன்றலானு
மேதகு தனக்குநிக ராயினு னென்றனே விளித்தன னளித்தவர்களுக்
ழற்புத விடைக்கழி யுடைக்குமர நாயகனெ டம்புலீ யாடவாவே
யாரணம் புகல்புவன காரணன் காணிவனெ டம்புலீ யாடவாவே. (க)

வில்லடி துதற்றிருச் செய்யதா மரையாள் விழைந்தகோ லங்கெடுத்தும் பிந்து
வெய்யவன் செயல்யாவும் வீழ்ந்தொழிய வேலமே விக்கரங் கொண்டெழு
மல்லடி வலத்தம் புயங்குழைய வாம்பலே மணந்துதழு வீப்புணர்ந்தும்
வானகங் குடிகொண்டு தண்ணளி சுரந்துயிர் வளப்பயி ரெலாம்வளர்த்தும்
புல்லடி முடைப்பரம னுர்தயன மலரப் பொலிந்தவெளி வந்துமெங்கள்
புண்ணியத் தெய்வக் கொழுந்தினே நிகர்த்தளாய் பொன்மாட மணியுலகுசூ
ழல்லடி மிடைக்கழி யுடைக்குமர நாயகனெ டம்புலீ யாடவாவே
யாரணம் புகல்புவன காரணன் காணிவனெ டம்புலீ யாடவாவே. (உ)

நாடுபதி னுறுகலே யுடையனீ யறுபத்து நான்குகலே புடையனிவனே -
நண்ணுசிறு மானேந்தி நீயிவ னினங்கோக்க ணுடுபெரு மானேந்திகாண், கூடு
மூய லொன்றுடைய னீயிவ னளாவினங் கோளரிக ளொன்பதுடையான் -
கொண்டாடு பறவையொன் றுடையனீ யிவனவனி கொண்டா டிரண்டுடை
யனுந், பாடுமொரு குண்டலம் பொலியவரு வாய்நீ பரந்துபனி ரண்டுபொலி
யும் - படிவருவ னிவனிவனே நீயொப்பை யென்றெப் படிப்பகர வாரூர்வ
லென், றுடுகொ ளிடைக்கழி யுடைக்குமர நாயகனெ டம்புலீ யாடவாவே -
யாரணம் புகல்புவன காரணன் காணிவனெ டம்புலீ யாடவாவே. (ஊ)

வருணமொன் றுடையைநீ யாறுடைய னிவனேடி மறைவைநீ மறையாளிவ
மாருத வெண்மதிக் கடவுளே நீசெம் மதிக்கடவு ளேயிவன்ரு [ன்

னிருணையங் தெழுவைமீ யொளிநயங் தெழுவனிவ னியலுமீ பலதன்மையா
னெற்றைக்கு மொருதன்மை யானிவன் கயறோகி யேமீ நிராமயனிவன்
றெருணல மளித்திடாய் நீயடைந் தார்நலஞ் சேர்த்த வளிப்பானிவன்[லோவா
றெளிதர நினக்கதிக னெங்கள்பெரு மானெனச் செப்பவேண் டுங்கொ
வருணய விடைக்கழி யுடைக்குமர நாயகனெ டம்புலீ யாடவாவே
யாரணம் புகல்புவன காரணன் காணிவனெ டம்புலீ யாடவாவே. (சு)

பாராய் தரப்பொலியும் வேதாக மங்கணனி பகர்குறி குணங்கடந்து
பரநாத பரவிந்து வுங்கடந் தோங்கொளி பரப்பியொளிர் பரமயோகி
சீராய் மூடித்தலே வணங்கமெய்ஞ் ஞானெப தேசமுன் செய்தசைவத்
தெய்வனூ ஞசாரி யன்கா ணிவன்பெருஞ் சீர்மைக்கு வழிவருவசற்
ரூராய் பெருங்குரவன் மனையைப் புணர்ந்துபழி யுற்றவிடனையின்சி[லைகெழுற்
ரொக்குமென லெங்கள்பெரு மடமையல் லாதுவே றுண்டுகொ லொருங்கு
ரூரா யிடைக்கழி யுடைக்குமர நாயகனெ டம்புலீ யாடவாவே
யாரணம் புகல்புவன காரணன் காணிவனெ டம்புலீ யாடவாவே. (டு)

வளியார் பெருங்கன நடுவட் பொலிந்துநீ வருபொழுது கழுது மஞ்சும்
வல்லிருள் விழுங்கிய தெனக்கரும் பாம்பொன்று வந்துனை விழுங்குமப்போ
தொளியா ருனைப்பறி கொடுத்திழந் தோமென் றெருங்குலக நீருண்முழுகி
யுறுபசியின் வாடிநீ யுற்றதுய ருன்னெ டொழிந்திலே னன்குணர்தியாற்
களியார் செருக்கர வொருங்கஞ்சு மயில்வா கனப்பிரா னருகடைந்தாற்
கருதனக் கெத்துன்ப முண்டுக லின்பமெது கலவாது புலவாதுபே
ரளியா ரிடைக்கழி யுடைக்குமர நாயகனெ டம்புலீ யாடவாவே
யாரணம் புகல்புவன காரணன் காணிவனெ டம்புலீ யாடவாவே. (சு)

ஏடுறு மலர்க்கணைதொடுத்தகரு வேளுட லெரிக்குணவுசெய்தபெருமா[யொன்
னெழினுதற் றனிவிழி வனப்பனே யழித்தனே யெனப்புலீ யுரைக்கும் வசை
றேடுறு வீதம்பெரு நலம்பொழி தரத்தர வுதித்தசெவ் வேளிவன்கா
ணுருவிழந் தவனுனைக் கும்பணி யவாவிநிழ லுதவுகுடை யாயினும்மீ
வாடுறு வருத்தமுல குக்கொழிக் குங்கருணை வள்ளல்வா வென்றழைக்கின்
வாரா திருக்கவிதி யுண்டுகொன் மணிக்கோயில் வாரணக் கொடிவான்கிழித்
தாடுறு மிடைக்கழி யுடைக்குமர நாயகனெ டம்புலீ யாடவாவே
யாரணம் புகல்புவன காரணன் காணிவனெ டம்புலீ யாடவாவே. (எ)

தடையா வலிப்பரமர் திருமுகக் கண்ணுய்த் தலைப்பெருங் கலமாய்நலந்[ன்ரு
தழைமேனி யெட்டுமொன் ருயவர் நடாத்துந் தனித்தேர்ப் பதத்துளொ
யுடையா மகிழ்ச்சியி மைந்தநீ பெற்றதே றுள்ளன வெலாமிவன்பா
லுற்றெருரு கண்ப்பொழுது கூடிவீனே யாடலா லுண்டாகி யுலகுகுறுக
மிடையா வரும்பேற்றி லாயிரங் கூற்றில் வீரும்புமோர் கூரேவாதான்
*மெய்மையிது காணிந்த மந்தண முணர்ந்துவிதி வீதரும் போதுமிறுதி
யடையா விடைக்கழி யுடைக்குமர நாயகனெ டம்புலீ யாடவாவே
யாரணம் புகல்புவன காரணன் காணிவனெ டம்புலீ யாடவாவே. (அ)

பொருள்சால் பொருட்டிதழ் மலர்த்தலிகி ஞன்முகப் புத்தேண் முதற்
புலவரும் - பொறிபுல னடக்கியொரு நெறியுறு விசிட்டன்முற் புண்ணியத்
திருமுனிவரும், வெருள்சான் முனேத்தலேய வேற்கைமுரு குந்தனெடு வேல்
தன்மூற் பலவரசரு - மேலிப் பணிந்தளத் தெண்ணிய தடைந்தலிம் மேதகு
தலத்தடைந்தாற், கருள்சால் களங்கமு முளங்கவலு மாதக் கனிரிட்ட சாப
முந்தண் - கடவுண்மா குரவர்க் கியற்றுபா தகமுங் கழிந்துய்யும் வழியுண்டு

கா, ஜாருள்சா லிடைக்கழி யுடைக்குமர நாயகனெ டம்புலீ யாடவாவே - யாரணம் புகல்புவன காரணன் காணிவனெ டம்புலீ யாடவாவே. (கூ)

மணியார் கடற்கணெழு தின்னேயொரு பொருள்செய்து வருதியென் றெம்பிரான்செவ் - வாய்மலர்ந் தருளவு மெனகொல்பா ணித்திநீ வாரா திருந் தனெபெருங், கணியார் பொருப்பைக் கலக்கிய மூனேத்தலைக் காலவேல் கை யுண்டுகாண் - கருதுமதன் வலிநீ யுணர்ந்திலா யேனும்விண் கனவாது முண ர்ந்திலாயோ, பணியார் முடித்தலே ளுலங்குமவ் வேலெதிர்ப் படவுநீ யொரு பொருள்கொலோ - பரமகுரு சாமியிவன் முனியினனே யாதனிப் பாரெவர் பகம்பொனுலகி, ணணியா ரிடைக்கழி யுடைக்குமர நாயகனெ டம்புலீ யாட வாவே - யாரணம் புகல்புவன காரணன் காணிவனெ டம்புலீ யாடவாவே. ()

சிற்சிற்பருவம்.

மறையோ மறையி னெருமுடிவோ வான்றேய் குமிழ் வளையுதித்த
மங்கை யுமையாண் மடித்தலிமோ மாறு வன்பர் மனக்குளிர்பூந்
துறையோ சிறியேம் வீளையாடத் தொகுதே மடிக டிருவடிக
டோயப் புரிந்த தெந்தவமோ தோற்ற முவந்தெங் கூற்றமுறழ்
கறையோ வரிய வடிவேற்கைக் காளா யசுரர் குலகலகா
கருணு நிதியே காமருதெங் கமலப் பொகுட்டிற் கலைமகள்போற்
சிறையோ நிமஞ்சே ரிடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே. (க)

கோலம் பொலிய நீராட்டிக் குலவு நுதல்வெண் ணீறணிந்து
குளிர்நெய் சடலி நறுங்ஞெ கோதி முடித்து மையொடுபொட்
டேலம் பொலியுங் குழலுமையா ளிட்டுப் பலபூ ணணிந்துகனி
யெழித்த போலங் கின்ளுபமுதத் திட்டுப் பெட்டு வெளிலிடுத்த
தோலம் பொலியு மணிவீதி யொருசா ரூடு மெளியேங்கட்
குறுபே ரிடுக்கண் புரிவதற்கோ வுனது பெருமைக் கிதுதகுமோ
சீலம் பொலியு மிடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே. (உ)

எங்க ளுமையா ளருமருந்தே யென்று விளித்துப் புனைந்துனெ
யெய்த வெளியில் விடித்தனளிவ் வெளியார்க் கிடுக்கண் புரியென்றே
வங்கள் வழிதார்க் கருங்கூந்த லனேயா ளினது திருமேனி
யடங்கப் புழுதி படிந்ததகண் டாற்ற வாள்கொ லொருகான்கு
கங்க ளுடையான் முதற்றேவர் கண்ணு முகமு மணிமுடியுங்
கையும் புழுதி படிமீதுட் கருதி விலக்கி லேமதின்மேற்
றிங்க டவழு மிடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே. (ஊ)

அழிக்குஞ் தொழினெந் தங்கதொழி லதனு லியாளு மதுபுரிந
லறனே யெனின்மற் றிருருநான்கு மாரெசய் தொழிலெங் களுக்குரைத்தி
கழிக்கு மதுவு மிளேப்பாற்று கருணே யென்பா ரதற்குமறை
கரிதீ யியற்றுந் தொழிருனெங் களுக்கு மிகவு மிளேப்பேற்றுங்
தொழிக்குங் கருணேப் பெருக்காறே சோதி லாத குணக்குன்றே
குலவு மமரர் குலக்கொழுந்தே சூரவ நிழலி ளெளிர்குருந்தே
செழிக்கும் வளமை யிடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே. (சு)

மேவி யுலக முழுதழிக்கும் விமலன் மகன்யா னென்றெளியேம்
விரும்பி வருந்தி யியற்றுசிறு வீட்டை யழிப்பா யனையபிராற்
காவி யனைய பெருமாட்டி யண்ட முழுதுஞ் சிறுவீடென்
றூக்கி மகிழ்வா ளவண்மகனீ யலேயோ வனையாண் மகனென்று
பாவி யேங்கள் சிறுவீட்டைப் படைக்கு மாறே பணித்தேகிற்
பழியுண் டாமோ பொழிசுவைத்தேம் பங்கே ருகமென் மலர்மேற்சீ
தேவி மகிழு மிடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே. (நி)

கண்ணீர் பெருக வுருகியுளங் ககிந்தெ ழடியார் மலமாயா
கன்ம முழுதுஞ் சிதையவர்முற் கடிய வினையைச் சிதையவர்த
மெண்ணீர் பிறவிக் கணக்கெழுது மேட்டைச் சிதைநீ யேபரமென்
றெண்ணு நிழுதை யுறமூளக வெண்ணஞ் சிதைமற் றிவைதவிர்கது
புண்ணீர் கவரும் வடிவேற்கைப் புலவா புலவர் போசேறை
பொறியி லேஞ்சிற் றிலஞ்சிதைத்தல் புகழோ வலது புண்ணியமோ
தெண்ணீர் வளங்கூ ரிடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே. (சு)

சொன்மா மறைக்கும் பெருந்தவர் தொகைக்கு நறங்கற் பகத்தாமஞ்
சூடி முடிவா ளுடனுக்குஞ் சூட்டோ நிமமூர் பிரமனுக்கும்
பன்மா மூரல நறவிறைக்கும் பசுந்தழாய்ப்பூந் தாமனுக்கும்
பன்மா தவர்க்கு மற்றையர்க்கும் பற்றற் கரிய சிற்றடிகள்
பொன்மா மணியும் வெண்முத்தும் போற்றி யாங்க ளாடிடத்துப்
புழுதி பற்றற் கெளிதாகிப் போந்த நிறம்பூ தோபிறிதோ
சென்மா மதில்சூ ழிடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே. (எ)

அன்று கயிலைப் பருப்பதத்தி லழகோ லக்கத் தினிதமர்ந்த
வருள்சா னுந்தை யிருசரணு மடைந்து பிரமன் மான்முதலோர்
நன்று வரம்வேண் டியதமரர் நாடு கெடுத்த சூர்முதலோர்
நல்லார் விரும்பு பெருவீடு நலிதற் கொருசே யுதவென்றே
கன்று செறிகை யிளநல்லர் கருதி விரும்பு சிறுவீடு
கழியப் புரிசே யுதவென்றே கையாய் வையாள் கண்மணியே
சென்று பலர்சூ ழிடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப்பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே. (அ)

கையா நின்ற சிறுமருங்கு னங்கை யுமையாள் பரமனெடு
நறுநீர்ப் பொய்கைத் தடங்கரையாய் நண்ணி மூகமா நினுக்கேற்பக்
கையா நிரண்டு புரிந்ததுபோற் காலா நிரண்டு செய்யாது
கருதி யிரண்டே செய்தணண்முற் கடையேஞ் செய்த நல்வினையான்
மெய்யா விரண்டா யிருந்துமவை வினைக்குங் குறும்பு பொறுக்கிதாய்
வினைந்த தினியாஞ் செயலென்னே வீடு தோறும் விடாதமர்ந்து
செய்யாண் மகிழு மிடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே. (கூ)

ஆர்வார் புனல்வெண் பிறையரவ மணிந்த சடைமா தேவனுக்கு
மகில மீன்ற வுமையவட்கு மருமை மகனீ யருவினைக
ளீர்வார் விரும்பு நின்வரவிங் கெய்தப் பெற்றே மெளிதாக
வெளியே மதற்குக் கைம்மாமுன் நியற்ற நினைந்தேம் வேழமணலே

பார்வார் மணற்சோ ருெளித்தினிது படைப்பே மடிகட் கதுகுறவர்
பாவை படைத்த மாவாமோ பன்னூல் களுமுக் குற்றமறத்
தேர்வார் செறியு மிடைக்கழிவாழ் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்திப் பவருள் ளூறமுதத் தெளிவே சிற்றில் சிதையேலே. (கo)

சிறுபறைப்பருவம்.

கந்தமிழ வாதபூ மேற்றேவர் புரிமகக் கனலெழுந் தறமுழங்கக்
காலாதி யுண்டுபொறி கட்டமா தவர்வாய் கலக்தவா சிகண்முழங்க
விந்தமிழ் தாதெழும் பொதுகடல் போலற மொழுந்துமேன் மேன்முழங்க
விடியுண்ட வாளரவி னேங்கிமற முழுதுமினி யென்செய்து மெனமுழங்க
நந்தமிழ் திருக்குமிட மாயவம ராவதியி னன்மணப் பறைமுழங்க
நாடுமருண் முததீர் மகேந்திர புரத்துவகை கலிபிணப் பறைமுழங்கச்
செந்தமிழ் முழக்கடை யிடைக்கழி யுடைக்குகன் சிறுபறை முழக்கியருளே
தெய்வமறை யாகிய பெரும்பறை முழக்கிஞேன் சிறுபறைமுழக்கியருளே.

மலேநா ணுடற்கொடுங் கூற்றமென வொருபான் மயக்குமிரு ளென்ன
வொருபால் - வடமேரு வென்னவொரு பாலலே யெறிந்துகதா மாய்க்குமுவ
ரென்னவொருபா, லுலேகாண் மறக்கனவி யென்னவொரு பாலெங்கு முழலும்
வளி யென்னவொருபா - லோங்குங் குறட்பூத மென்னவொரு பாறகொலே
யுவந்தகடி யெண்ணவொருபாற், கலேகாண் மதிச்சடைக் காபாலிகண்டக் கருங்
காள மென்னவொருபாற் - கலந்தெங்கு மாய்ப்போர் புரிந்தவெஞ் சூர்முழக்
கந்தபக் கையில்வாங்குஞ், சிலேகாண் முழக்கிய விடைக்கழி யுடைக்குகன்
சிறுபறை முழக்கியருளே தெய்வமறை யாகிய பெரும்பறை முழக்கிஞேன்
சிறுபறை முழக்கியருளே. (உ)

பண்ணீர் மொழிக்கருங் கட்செய்ய வாய்மலேப் பாவைக்கோர் பங்களித்த
பாலலோ சனநாயகன்காத் தமருகப் பறையனேத் தம்படைக்குங்
கண்ணீர் பிலிற்றுங் கடம்பணி தடம்புயக் காளேவே ளேப்பழிக்குங்
காமருரு வத்திளம் பிள்ளேப் பிரான்றிருக் கைப்பறை யெலாந்துடைக்கும்
புண்ணீர் மணத்தவடி வாட்படைச் சூரன் பொரும்படைப் பறைமுழக்கம்
போயொழிந் ததுவெனப் புத்தேளிர் பலரும் புகழ்ந்துரை முழக்கமோங்கத்
தெண்ணீர் முழக்குடை யிடைக்கழி யுடைக்குகன் சிறுபறை முழக்கியருளே
தெய்வமறை யாகிய பெரும்பறை முழக்கிஞேன் சிறுபறை முழக்கியருளே.

வான்முழக் கஞ்செயும் புத்தேளி ராகிய மயூரங் களுக்கு நிறைருண்
மழைமுழக் காகவுந் தருவா கியகொடிய வல்லிட வராக்களுக்கு
மான்முழக் கஞ்செயும சனிமுழக் காகவு மதிக்குமுதி ருவராய
வயங்குமசு ணங்கட்கி யாழ்முழக் காகவும் வையகம் வளேந்துமேன்மேற்
சேன்முழக கஞ்செயு மலேப்புணரி யாகிய செழுங்காட்டி னுக்குவெய்ய
தீமுழக் காகவு மெழுந்துற முழங்கச் செழுந்தளிர்ச் சோலேதோறுந்
தேன்முழக் கஞ்செயு மிடைக்கழி யுடைக்குகன் சிறுபறை முழக்கியருளே
தெய்வமறை யாகிய பெரும்பறை முழக்கிஞேன் சிறுபறை முழக்கியருளே.

பொருவிடைக் கொடியுடைப் புண்ணிய னலாதபிற புத்தேளி ரும்பரந்து
புவியகத் தமருநற் றவருமற் றெவருமிப் போதுவம் மின்கள்வந்தாற்
கருவிடைப் புகுதறவி ரின்பமுதல் யாவுங் கருத்தின் படிக்கெய்தலாங்
காணுமென் றவர்வா வினிக்கும் பெரும்பறை கடுப்பப் பகுத்தருளே

யுருவிடைக் கொடியுமை கருங்குழலி னீமுன்ன முற்றது கடுப்பவானத் [குங்
தோங்கிளஞ் சோலையிற் பொறிவண்ட குற்றமது வுண்டுவிண் டிசைமுழக்
திருவிடைக் கழியெனு மிடைக்கழி யுடைக்குகன் சிறுபறை முழக்கியருளே
தெய்வமறை யாகிய பெரும்பறை முழக்கினேன் சிறுபறை முழக்கியருளே

வேறு.

எந்தை பிரானெரு கைக்கட் டமருக மிதுபறை குணின்மேய
தெவ்விட மென்று சடாடவி தேடி யிலங்கு மிளம்பிறையை
நிந்தை யிலாக்குணி லென்றுகை கொண்டு நெடும்புவ னம்பலவு
நெஞ்சு துணுக்கென் வெற்றி முழக்க நிகழ்த்து நிகழ்ச்சியனே
சிந்தை விரும்பிய வெங்கண் மனங்களி தேக்கி யுவட்டெறியச்
சிறுகட கச்செங் கைக்கிசை யுங்குணில் சேரக் கொடுமோதி
முந்தை மறைப்பொரு ளாகிய செல்வன் முழக்குக சிறுபறையே
முகைமகிழ் முகமலர் குரவமர் குரவன் முழக்குக சிறுபறையே. (சு)

மின்னு வளம்பொலி மேக மிவர்ந்தொளிர் வித்தக மாதேவன்
விழைதர மழைதரு மகிழ்மய லகல்வெரிந் மிசையி னிவர்ந்தொளிர்வாய்
பன்னுப லண்ட மகண்டமு முண்டி படைக்க வமைந்தவிறற்
பன்மலர் மாலை பூனேந்தொளிர் சத்தி பரித்த கரத்திறைவா
பின்னு திரைக்கடல் பொங்கி யெழுந்து பெயர்ந்தலை யக்கூவிப்
பேருஞ் சிறைவலி வாரண நின்று பிறங்குகொ டித்தருவே
முன்னுந ருள்ள மூளத்தெழு சோதி முழக்குக சிறுபறையே
முகைமகிழ் முகமலர் குரவமர் குரவன் முழக்குக சிறுபறையே. (எ)

பந்திய மைந்த பலாச்சுளே விண்ட பசுந்தேன் மதகளிறு
படுபுழை யொருகர மேற்கொடு நீந்தப் பரவிப் பெருகுவள
நந்திய வங்கண் விலங்க லடங்க நகும்பல குகைதோறு
ஞால முவப்ப மடங்கற் குருளோ டினு மமர்ந்தருள்வா
யுந்தி யெழுந்தவன் மூற்பல தேவ ரொருங்கு மிடைந்தொருநின் [ன்
ஞெளிர்கைத் தொழிலிப் பறையினும் வன்ன மூணர்ந்திட மொய்த்தனரா
முந்தி யெழுந்தொளிர் சந்தன கந்தன் முழக்குக சிறுபறையே
முகைமகிழ் முகமலர் குரவமர் குரவன் முழக்குக சிறுபறையே. (அ)

செக்கட் பணியுமிழ் செம்மணி யுங்கடி சேருங் காரகிலுஞ்
செறிகழை யுமிழ்குளிர் வெண்மணி யுங்கரு டேங்குங் கருமணியுந்
தொக்கட் டெழுவரி யேறெழு போதுந் துணிணை வடையாத
தும்பிக் கொம்பு மயிற்பீ லியுமஞ் சுவணத் தொடும்வாரி
சக்கட் கருமுகில் காக்குங் கானத் தணமுத லெங்நிலனுந்
தழைய வெடுத்தெதிர் வீசு தரங்கத் தண்கா விரிநாடா
முக்கட் களிதரு மாமறை வித்து முழக்குக சிறுபறையே
முகைமகிழ் முகமலர் குரவமர் குரவன் முழக்குக சிறுபறையே. (க)

கற்று விளங்கு நலத்தினர் யாருங் கையைக் கரைகாணுக்
கையில் வளம்படு கையிரு பாலுங் கமலக் கையேற்ப
வுற்று விளங்கிய பலவகை மணியு மொருங்கொளிர் செம்பொன்னு
மோங்கியெழுந்து விழுந்து புரண்டுக ளுண்டவர் போனிகமும்
பற்று முடங்கு திணைக்கை யெடுத்துப் பார்முழு துங்கண்டு
பங்கே ருகநிதி யென்று வியப்புப் பலவெறி யுந்தகைசான்
முற்று முழங்குங் காவிரி நாடன் முழக்குக சிறுபறையே
முகைமகிழ் முகமலர் குரவமர் குரவன் முழக்குக சிறுபறையே. (கூ)

சிறுதேர்ப்பருவம்.

தண்டே ருடைக்குந் தடாவலி நெடும்புயத் தானவர் கருந்தலையெலாக்
தடிபடுஞ் செங்களத் தெதிரெதி ரிருந்துவகை தழைபெரும் பேயுருட்ட
வண்டே ருடைத்தொங்க லனையர்சைச் சக்கர மகிழ்ந்தகிற பேயுருட்ட
வாய்க்கினிய மூகோயுள தினவதகொ லென்றனையர் மண்டைமுது பேயுரு
புண்டேர் முடைப்பல்வா யவருடல் சுழன்றேறு புதியசெந் நீருருட்டப்பட்டப்
போரிடைப் பட்டவிவை நோக்கியவர் மங்கையர் புலித்தங்க டலையுருட்டத்
திண்டே ருருட்டிய விடைக்கழி யுடைக்குழக சிறுதே ருருட்டியருளே
திருமால் வயிற்றடை பெருந்தே ருருட்டிசெய் சிறுதே ருருட்டியருளே.

அலையுடைக் கடலுடை யகன்புவியு மெண்டிசையு மாழிமால் வரையும்
வான்றே - யம்பொன்மால் வரையுமநி கதிர்முதற் கோள்பல வமைத்தபெரு
மண்டலமும்வெம், முலையுடைக் கொடியர மடந்தைய சொடுஞ்சுரர் முயங்கு
மம ராவதியுநான் - முதுமறைக் கிழவனுல கமும்விகு சுதரிசன மொய்ம்பன
மர் வைகுந்தமு, நிலையுடைக் கதிர்மணிக் கட்செவிப் பாதலமு நீடுமற் றெங்
குமாகி - நிறைந்தவெஞ் சூர்ப்படைக் கோடையற வம்புமழை நேர்பொழியு
மேகமாய, நிலையுடைச் சேவகவிடைக்கழி யுடைக்குழக சிறுதே ருருட்டி
யருளே - திருமால் வயிற்றடை பெருந்தே ருருட்டிசெய் சிறுதே ருருட்டி
யருளே. (உ)

கூர்கொண்ட கோட்டுக் கொலைக்களிற் ருருயிர் குடித்தவொரு கோட்
டைவானங் - குடிகொள வெறிந்தங் குலாவுமொரு வெண்பிறைக் கோட்டினே
யெடுத்ததற்கு, கோர்கொண்ட தாலென வமைத்துமன வாதமும் நீர்கொண்ட
பாலைவமுழுது - நெடும்புழைக் கையுற வடக்கியும் மனையகட னிறையமத நீர்
விடுத்தும், பார்கொண்ட முழுயர வணிந்தும் பிலம்புகூஉப் பார்துதிக் கை
நிறுவியும் - பலவிலை நிகர்ப்பனசெய் தாடுங் களிற்றினவல் படர்பெருங் கழ
கந்தொறுஞ், சீர்கொண்ட தமிழ்சா லிடைக்கழி யுடைக்குழக சிறுதே ருரு
ட்டியருளே - திருமால் வயிற்றடை பெருந்தே ருருட்டிசெய் சிறுதே ருரு
ட்டியருளே. (ஊ)

ஆக்கும் பெருந்தொழி லமைந்தவொரு தமருக மவாவுபறை யென்றளங்
கொண் - டன்னதை யடித்திடக் கைக்கொளுங் குணிறேறடி யருகுவிலேயாடி
நின்ற, தாக்குந் திறற்களிற் ருருகர தலக்கோடு தனேயுறப் பற்றியீர்க்கத் -
தவாவலிகொ ளக்களிறு மெதிர்பற்றி யீர்க்கத் தழைந்திடு கலாமுணர்ச்சி, து,
வாக்குஞ் சுவைத்தேறன் மாலைக் குழற்றுய் வயங்குற நடுப்புகுந்து - மறை
யோதி மக்தேறி வேணிப் பிறைக்குணில் வயங்கக் கொடுக்கவுவகை, தேக்குந்
திறற்குக விடைகழி யுடைக்குழக சிறுதே ருருட்டியருளே - திருமால் வயிற்
றடை பெருந்தே ருருட்டிசெய் சிறுதே ருருட்டியருளே. (எ)

தருமல்கு மால்வரைச் சந்தனக் குறடுங் தவாவிளை யகிற்றுண்டமும்
தறுகட் கடாக்களிற் ருருண்டோடு நீடுங் தழைப்பசுங் தோகையிறகுங்
குருமல்கு பன்மணியும் வாரியிரு கோட்டுங் கொழித்துச் சுழித்திரைத்துக்
குலவுபல மதகும் புகுந்துலா யோடிக் குணுதுவா ரிதிகலக்கு
மருமல்கு பன்மலர்க் காவிரிப் புனல்பாய வாழையுந் தாழையுங்காய்
மண்ணுபைங் கந்தியுங் கன்னலுஞ் செங்நெலும் வானளவு மோங்கிமிளிருங்

திருமல்கு சோணாட்டிடைக்கழி யுடைக்குழக சிறுதேர் ருருட்டியருளே
திருமால் வயிற்றடை பெருத்தே ருருட்டிசெய் சிறுதேர் ருருட்டியருளே.()

பொன்செய்த மெல்லிதழ்த் தாமரை யரக்காம்பல் பூத்தூநனி பொலிவாயியிற்
பொம்மற் செருத்தற் கொடும்பிணர்க் கோட்டெருமை பொள்ளெனப் பாய
மின்செய்தசெங்கட் டகட்டகட் டிளவாளைமீன்சையெழுத்துபாய்த்து[வெருவி
மேவும் பெருங்குலைக் கட்பொலி யிலங்கலி வியன்குலையை மோதவஃதுங்
கொன்செய்த காய்பல வுதிர்க்கவவை யத்தடங் கொளவிழ வுதற்கஞ்சியக்[ழுந்
கோட்டெருமை யோடவுது கண்டனைய வாலையக் குளிர்தடம் புக்குமகி
தென்செய்த மென்பா லிடைக்கழி யுடைக்குழக சிறுதேர் ருருட்டியருளே
திருமால வயிற்றடை பெருக்கேர ருருட்டிசெய் சிறுதேர் ருருட்டியருளே ()

கரையெறியும் வெள்ளப் பெருக்கிற் றருக்குடைக் காவிரி யொழுக்கின்வந்த
காமரு கமஞ்சூற் பெருஞ்சங்க மொருபெருங் கான்மகு காலிவெளியோர்
விரையெறிய மொண்மலர்க் கொடியிற் கழைக்கூத்தர் விழைய ர் கவழ்ந்தேறி
விரிதிலகக் கமுகிருந் தொண்முத்த முகுப்பவவை வீழ்தலகக் கண்டீலர்[யோர்
வரையெறிய மைக்துடைத் தேர்ஞமு வரிற்கிலர் வளக்கமு கரும்புகுக்கும்
வறிதெனச் சிலர்வான மீனுவ தென்னேயென மாறு வளங்கள் பெருகித்
தினையெறிய மென்பா லிடைக்கழி யுடைக்குழக சிறுதேர் ருருட்டியருளே
திருமால் வயிற்றடை பெருக்கேர ருருட்டிசெய் சிறுதேர் ருருட்டியருளே.()

எழுந்தேராகை குடிகொள வறத்தலை யெடுத்தெருகு மிமறமறை யாயதூய
லிலதையங் தணர்நா வெனுங்கொம்பு பற்றிமிம லேறவேள் விச்சாலையி
னழுந்தே ராகை பிர்ந்துகிளர் மீனகியுங குண்டமு மலருமேம கலேயுமோகாக்கி
யாணியு தாத்தெழுந் தழலேற வழலேற வாவுமவி யேங்குமேறத்
தழுந்தேராகை மார்கருங் குழலினது மாலையுங் சடமூலேயி னெழுருபழுகுஞ்
சாந்துமேறத்தே வரமரா வதிக்கட் டளைந்துகுடி யேறதாளுஞ்
செழுந்தேராகை மயிலே றிடைக்கழி யுடைக்குழக சிறுதேர் ருருட்டியருளே
திருமால் வயிற்றடை பெருக்கேர ருருட்டிசெய் சிறுதேர் ருருட்டியருளே.()

சுடர்செயும் பன்மணித் தொடைமாதர் மைந்தரொடு தொக்குவினே யாட
நீடு - சோலையி னளிக்குல முழக்கியுண மெழுவீழ்ந சுகைநறந் தேறல்வெயி
லான், விடர்செயும் புவியுட் புருந்துபா தலமுழுதும் வெள்ளமே யெனநிர
ப்பி - மீதுபெரு கிப்பசுங் கன்னைலும் கதலியும் வேரொடு பறித்தெழுந்து,
படர்செயும் பேரதெழிர்ப் பட்டவான் முட்டவெழு பசியநெற் பேராளேத்
தும், பார்பொறை யுயிர்க்கிட வெடுத்துக் கடுத்தகழற் பௌவத் தெறிந்தனே
வான் - றிடர்செயும் பெருவள விடைக்கழி யுடைக்குழக சிறுதே ருருட்டி
யருளே - திருமால் வயிற்றடை பெருக்கேர ருருட்டிசெய் சிறு த ருருட்டி
யருளே. (கூ)

தாமலி கொடிமெதாழிற் கருமலெக் குருதிவலே தருமலெக் குங்காலவான்
றருமகட் குங்குதவர் திருமகட் குங்கொழுந் சாரலுகு வேரான்முத்தங்
காமலி பொருப்புதவு மங்கைக்கு மெறிதிரைக் கங்கைக்கு மொருபுதல்வமா
கடவுளார் மூவர்க்கும் யாவர்க்கு நாயக கருத்தைத் திருத்துமினிய
மாமலி பெரும்புகழ்த் தென்கலெக் குந்தெய்வ வடகலெக் குந்தலெலுறண்
மதிக்குந் துதிக்குந் திதிக்குக கதிக்குமுண் மதிக்குநா யகமுகிலளார்
தேமலி செழும்பொழிற் லிடைக்கழி யுடைக்குழக சிறுதேர் ருருட்டியருளே
திருமால் வயிற்றடை பெருக்கேர ருருட்டிசெய் சிறுதேர் ருருட்டியருளே.()

திருவிடைக்கழிமுருகர் பிள்ளைத்தமிழ் முற்றுப்பெற்றது.

சிறப்புப்பாயிரம்.

[இது பழையபதிப்பைச் சார்ந்தது.]



வாண்மைதரு மூழலினரு மறவோரும் பெருஞ்செல்வம் வாய்ந்து ளாரு - மூண்மையுமோ வாப்பிணியு மூறுபகியுஞ் செறுபகையு மூறுதலில்லா, வொண்மையும்பன் னூட்டுறுபா ரம்மூ றினு மிறைகுறையா துதவித் தாங்குக் - திண்மையுங்கொண் டரணுடைத்தாய் நாட்டியற்கோர் காட்டாய செண்ணி நாட்டில். (க)

துலங்குவயற் செஞ்சாலி வெண்சாலி யீன்றகதிர் தூறுமி மீப்போ
யலங்கிரவி மதியுடல மூறைதிண்டிக் கிரணத்தா னன்றி யன்னே [யு
நிலங்குறவெங் கதிரோன்வெண் கதிரோனென் றிசைத்திடுபே ரெய்தச்செய்
நலங்குலவிப் பெருகுதிரு வீடைக்கழியென் றெருகாம நவின்மூதூரில். (உ)

தண்ணியபுண் ணியநீற்றுச் சார்பொருவா மெய்யடியார் தமக்கெஞ் ஞான்று
மண்ணியபே ரின்பகல மருள்செய்வா னனிவிரும்பி யவனியேத்தப்
பண்ணியன்மென் மொழியிருவர் பாலமரக் குரவடிவாழ் பரமன் செய்ய
மண்ணியமா மணியனைய முருகேசன் மதைச்சிலம்பார் மலர்ப்பூக் தாளில். (ங)

வீல்லாரு மணிமாட மிலங்குசிராப் பள்ளிகர் வீளங்க வந்தோன்
பல்லாருங் கொண்டாடப் பலகலையுங் கற்றுணர்ந்த பண்பின் மிக்கோ
னெல்லாரு மீனுட்சி சுந்தரகா வலர்பெருமா னினிய வன்பாற்
சொல்லாரு மியற்பின்னுக் கவிமாலே கொடித்தினிது சூட்டி னனுனல். (ச)

அனையமரக் கவித்தொடையைக் கரவிகிதத் தமைவழுக்க னனேத்துமோட்டிப்
பூனையுமா மணிச்சுடிகைப் பணித்தலையிற் கிடந்தபெரும் புடவி மீது
நினையுமா பரந்தெங்குஞ் சிறந்தோங்கி கனிவிளங்கி நிகழு மாறு
வனையுமா வியலச்சின் மயலகலப் பதிப்பித்து வழங்கு கென்ன. (ஞ)

அல்லூரு மணிகண்டச் சிவலோகத் நியாகேச ரழகி னூர்ந்த
செல்லூரும் கரியகுழற் றிருவெண்ணீற் றமையோடு சிறப்பகாளும்
வில்லூருந் திருக்கோயில் கொண்டமர்ந்தின் பினிதருளு மேன்மை நோக்கிப்
பல்லூரு நல்லூரென் பெருமணகல் லூர்செய்தவப் பயனுய்வந்தோன். (ஈ)

நற்றமிழ்முற் றுறவோதிக் கற்றநா வலர்செய்ய நாவைமேவும்
பொற்றவிசாப் பெற்றதன்க ணரசிருந்தன் னேரினிது பூனைந்த காளுஞ்
சொற்றதமிழ்க் கவிமதகுஞ் சரத்தேதிறி யெற்றுதிரை சுற்றி முற்றி
யுற்றபெரும் புலியனவோ திசைகடக்கப் புறத்தும்போ யுலாவு சீரான். (எ)

நீங்குறத்துன் பிரவலர்க ளினிதருகும் வள்ளன்மை நிரம்பக் கல்லா
தோங்குவள்ளற் பெயர்பூண்டு முன்னிருந்தா ரிக்காலத் துறினன் னேலாத்
தீங்குசெறி யாதவொரு சாலைமா ணுக்கரெனச் சேர்த்துக் கொண்டு
தாங்குபெரு வள்ளன்மை பயிற்றலா மெனநினையுஞ் சலசக் கையான். (அ)

தண்ணிலவு பூனைசடிலத் திறையவன்முண் மலர்க்கண்பு சார்ந்த தூயன்
கண்ணிலவு மருமலர்கொண் டவன்றனையே யருச்சிக்கக் கருது நேய
ணுண்ணிலவு மவனடியார் தம்மையெலா மவனெனவே யுளங்கொள் சீலன்
பண்ணிலவு மினியமொழிச் சபாபதிமா மகிபாலன் பகரக் கேட்டு. (கூ)

இதுகமது முன்செய்பெரும் புண்ணியத்தின் பயனெனவே யெண்ணியுள்ளக்
குதிகலத்தோ டாய்ந்தெழிலார் தருமச்சிற் பதிப்பித்துக் கொடித்திட்டானுன்
முதுபுகழ்ப்போர் வையன்கணெண் முழுதுணர்ந்த மூதறிஞன்முனிவிலன்பன்
விதுமுடியோ னடிபரவுந் நியாகரா சப்பெயர்கொண்மேன்மையோனே. (கo)

சிவமயம்.

ஸ்ரீ சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

பாயிரம்.

விநாயகக்கடவுள் வணக்கம்.

மாமேவு வான்பிறை முடிப்பிறை யிரண்டென்ன வாய்க்கடைத் தோற்றியவிரு - மருப்பிரண் டென்னவங் கைக்கோ டிரண்டென்ன **மார்** பின்முத் தாரமென்னப், பாமேவு பேருதர பந்தமென வரைசூழ் படாமெனத் தாளின்முத்தம் - பதித்தகழ லெனவிரவ மேலோங்கு பேருருப் பண்ணவனே யஞ்சலிப்பா, மேமேவு ஞானசபை யிறைவர்தம் மேனியி னிணங்குற வெழுப் புலகெலா - மென்னுமறை யாதியாக் கொண்டவ ருயிர்க்கருளு மியல்பனைத் தங்தெரித்து, நாமேவு மம்மூதலொ டொன்றவினை யுருபுதொக நான்கனடி யாதிசெய்து - நாற்சீரி னுனெறி விளக்கியொளிர் சேக்கிழார் நற்றமிழ்க் கவி தழையவே. (க)

குருவணக்கமும், அவையடக்கமும்.

ஓங்குகயி லாயபரம் பரைநதி யடிகட் குறுமரபெட் டாவது*பிற் ரோன் றலா யெங்க - ளுயர்திருவா வடுதுறைசசுப் பிரமணிய குரவற் குற்றபத் தொன் பதாவது†முற் ரோன்றலாய்ப் பொலிநது,

தேங்குலிவப் பிரகாச முதலியவாய் மலர்ந்து திகழுமா பதிசிவனே குன்றை யுற மேவித் - திருந்துமேர் வளங்கொண்டு பெருமையின்மேலாகிச் சிற த்தலற் செம்மேனிக் குமரவே ளொத்தும்,

பாங்குபெறத் துதிக்கையொடோர் கோட்டத்த னுய பயிற்சியினைக் குமரவே டிருத்தமைய னெத்தும் - பரவுசேக் கிழானெனும்பேர் பரித்தலினைக் கணேசப் பண்ணவனே யினிதுயிர்த்த திருக்தாதை யொத்தும்,

வீங்குபுகழ் படைத்தவருண் மொழித்தேவன் புராணம் விரித்துரைத்தா னவ னடிதாழ்ந் தென்னறிவிற் கேற்ப - மேயபிள்ளைத் தமிழெனவொன் றுரைப்பலஃ தறிவான் மிக்கவர்தங் குழாத்தினுக்கு மிக்காகை தருமே.

---

* பிற்ரோன்றல்: திருநாவுக்கிதேவர், சனற்குமாரதேவர், சத்தியஞானதரி சனிகள், பரஞ்சோதிமஹாமுனிவர், மெய்கண்டசிவாசாரியர், அருணந்திசிவா சாரியர், மறைஞானசிவாசாரியர், உமாபதிசிவாசாரியர்.

† முற்ரோன்றல்: அருணமச்சிவாயர், சித்தர் சிவப்பிரகாசர், நமச்சிவாய மூர்த்திகள், மறைஞானதேசிகர், அம்பலவாணதேசிகர், உருத்திரகோடிதேசி கர், வேலப்பதேசிகர், முற்ரு மாரசாமிதேசிகர், பிற்குமாரசாமிதேசிகர், மாசி லாமணிதேசிகர், இராமலிங்கதேசிகர், முன்வேலப்பதேசிகர், பின்வேலப்ப தேசிகர், திருச்சிற்றம்பலதேசிகர், அம்பலவாணதேசிகர், சுப்பிரமணியதேசி கர், அம்பலவாணதேசிகர், சுப்பிரமணியதேசிகர்.

காப்புப்பருவம்.

*“திருவாழ்தணர்”

கார்கொண்ட சோலைசூ ழாரூர ரோரைக் கானம்பி யாரூரர்மூக்
காலரைக் காலாக முடிவுசெய் தருண்மாக் கவித்திசையின் வீற்றிருக்கு
மேர்கொண்ட தில்லைமூ வாயிரர்முன் வழுவரும் மெழுவருந் தழுவருமெம [ம்
்ரிதியந் தழால்கொண் டுறைந்திடச் செய்தவரை யெப்போது மேத்தெடுப்பா
பார்கொண்ட தொண்டர்வர லாறுசொல் புராணமம் பலவரு ளாலமைந்த
படிதெரிந் திடவுல கெலாமெனுஞ் சுருதிநாப் பண்ணுமீற்றம் பொருத்திப்
பேர்கொண்ட சைவபரி பாடையறி வரியசம் பிரதாய முதலியாவும் [றே.
பிறங்கத் தெரித்தெம்மை யாண்டருள் தத்தூர்ப் பிரானைப் புரக்கவென்

“இலைமலிந்தவேனம்பி”

இலைமலி யெனுங்கவியு ளெழுபுவன மும்பரசு மெழுமுனிவ ரேத்த
வமர்வா - ரெழுபுரவி வையமிசை யெழுகதிரும் வட்குமணி யெழுவருவு மூட்கு
மொளிசான், மலைமலி புயத்தெறி பத்தர்மூத லெழுபவமு மாய்த்தவிற
லெழுவோனையும் - வாயார வாழ்த்தித் துதித்தவ ரடிக்கமல மலர்முடிக் கணி
யாக்குவாங், கலைமலி பெரும்புலவர் கைகுவிக் கக்கலைக் கன்னிநின் றேவல்
கேட்கக் - கனகசபை யார்முத லளித்தருள வளவாம கத்தவ மடைந்திருந்து,
மலைமலி சுணங்கஞ்சூ ழேனென் றுரைத்தருளி யாம்பெருக் கத்துவேண்டு -
மான்றபணி வெனுமொழிப் பொருடேற்று குன்றைநக ராளியைக் காக்க
வென்றே. (உ)

“மும்மையாலுலகாண்ட”

மும்மைமறை யும்பரவு மும்மையுல கும்புகழு மும்மையாப் பகரமாதி -
மும்மையுயிர் குறினெடி தளித்தமத சவ்வூர்ந்து முதலமைய நாமமுற்றூர்,
செம்மைபெறு மும்மையாம் வருணத் திதித்துச் சிறந்தோங்கு மூர்த்தியார்
மூற் - செறியுமிரு மும்மையார் செம்பொற் பதாம்புயஞ் சென்னிவைத் தேத்
தெடுப்பா, நம்மையருள் சிவபாத விருதய ருளத்தவகை நண்ணவொண்
பொருளாதலா - லுடுமுழு வாவல மியைதலா லியாவோரு நாவலர் பிரா
னென்னலால், வெம்மைதவிர் புகலியார் முதன்மூவ ரும்புகலும் வேதத் தமி
ழ்க்கணுள்ள - மெய்மையை விரித்துத் தெரித்தருள்செய் குன்றையூர் வேந்
தைப் புரக்கவென்றே. (ரு)

“திருநின்றசெம்மையே”

திருநின்ற செய்யுள்புக னீற்றறையு ளருகந்தர் சிந்தைவெந் திடவமர்ந்
தருஞ் - செறிதுயர்க் கடன்மறக் கல்லொடவ ராழவொர் திரைக்கடற் கன்மி

---

* காப்புப்பருவத்திலுள்ள பதினெருபாடல்களில் ஏனைப்பிள்ளைத்தமிழ் களிற் கூறுவதுபோலத் திருமால்மூதலியவர்களைக் காப்பாகக்கூறாமல் இந் நூலிற் சேவையர்காவலர்க்குத் திருத்தொண்டர்களைக் காப்பாகக்கூறத்தொட ங்கிய இந்நூலாசிரியர் இப்பருவத்தில் அவர்களைத் திருத்தொண்டத்தொகைச் செய்யுள்முறைப்படி பாராட்டிக்கூறுகின்றனரெனக்கொள்க.

தந்துங், கருநின்ற கண்டரருள் வெளிசெய்கா வரசர்மூற் கருதுபுக ழெழு
வோரையுங் - கருத்திடை யருத்தியி னிருத்திமற் றவர்பதங் காதலித் தத்து
திப்பாங், தருநின்ற செங்கைத் தலங்குவித் திடுமுனங் தையலொரு பாகர்
தொண்டர் - சரித்திர மனைத்துமொரு வாதூற நிரம்பத் தவாமன வறைக்
குவிக்க, வருநின்ற சீர்கொள்புலி யூர்க்கோட்ட மேயதற் கொப்பவுல கேத்த
நாளு, மோங்குபுலி யூர்க்கோட்ட மேயகுன் றத்தூ ரொருத்தரைக் காக்க
வென்றே. (சு)

"வம்பருவரிவண்டு"

வம்பரு யாப்புகவில் வம்பரு முலையொரு மடக்கொடியை வேட்டலின்றி
வண்பிரம சரியநிலை வைகுநா னேயொரு மடப்பாவை யைப்பிறப்பித்
தும்பரு வுந்திற லரிக்குரூ போலெழுந் துவகையார்க் கும்பிறப்பித்
தலாயவர்மூ னினவரைவெ லறவர்பொற் பாதமல ருச்சிவைத் தேத்தெடுப்பா
மம்பரு வாழிமுழு துண்டதிரு முனிவிரித் தருளிய தமிழ்க்காக்கமா
வருண்மூவ ருருண்மறைப் பொருடெரிய மூன்னெருவ ருருண்மறைப் பொ
நம்பரு வித்தியா ரணியமுனி வரானுள நயப்பயாப் புறவிரித்த [ருள்விளக்கு
நாவலர் பிரானைத் திருக்குன்றை யருண்மொழி நலத்தனைக் காக்கவென்றே.

"வார்கொண்டவனமுலையாள்"

வார்கொண்ட வனமுலை யெனுங்கவியு ளுயர்சைவ :மாண்பினர்க டலை
வணக்கி - வாயார வாழ்த்தி தியானித் திடச்சங்க மங்கைவரு சாக்கியர்மூத,
லேர்கொண்ட புகழ்கொடைவை வேலடையு மடையுற்ற மெய்தாது மாகி
நின்ற - வினியநக ரடையுமேற் ரெளிர்கின்ற வறவரையு மிறவரையு மேத்
தெடுப்பாங், கார்கொண்ட வமணரிந் தாமணியை வளவர்கோன் கங்குல்பக
லாராய்தரக் - கண்டொழித் தாவதிது வேயென்று தொண்டர்தம கத்துவங்
கருதவுய்த்துப், பார்கொண்ட மன்னரல் லவைநீக்கி நல்லவை பரித்திடச்
செயலமைச்சர், பண்பென தெரித்தருண் றத்தூ ருதித்தவெம் பரமனைக்
காக்க வென்றே. (சு)

"போய்யடிமையில்லாத"

பொய்யடிமை யில்லாத செய்புளி னிலக்கியம் புகலிலக் கணமெய்ஞ்ஞான
போதனூ லாதியா யாவுமரி றபவுணர்பு புரகரனே யேதுதித்து
மெய்யடிமை வாய்ந்தசங் கப்புலவர் மூதலாய வித்தக வொழுக்கமிக்கார்
விண்மருவு வார்பரவு மெண்மருமெ மிருதயம் விடாதமர வேத்தெடுப்பாஞ்
செய்யமல ராதன மிருந்துபல சாதியுஞ் சேரப் படைத்தநேவுஞ்
செப்பரிய வாயவவ் வச்சாதி குறிகுணஞ் செய்கைகுடி கொளுமிலியல்பு[ஞி
வெய்யமொழி யுணவுமுன் விரித்தெலா மறியவலர் மெய்யறிஞ ரொன்விளக்
மேம்பட்ட வேளாண் குலக்கதி ரெனுங்குன்றை விமலனைக் காக்கவென்றே.

"கறைக்கண்டன்கழலடியே"

கறைக்கண்டன் யாப்பினைத் திகாரி மேலொரதி காரிமலி மங்கையொருபாற்
கலந்திருக் கவுரிருவி காரிரிர கங்காரி காரியா காரிகாளு

மறைக்கண் டருஞ்சோதி யோங்காரி யருளேய வாங்காரி முதலமர்ந்த
வண்கணம் புல்லர்முற் சைவரா மைவரு மகிழ்ச்சியுற வேத்தெடுப்பாம்[கண்
பிறைக்கண்ட மிதுபகலின் முகிணுழைவ தநிசயப் பெற்றியென் ருவோர்
பெட்பப் பெருக்கெடுத் துவருபா லாற்றலே பிறங்குவளே வீசவஃதத் [டுக்
துறைக்கண்ட நிமிர்கந்தி யஞ்சோலே தவழ்தருந் தொண்டைவள நாட்டுநாட்
தொல்புகழ்க் குன்றைவருபாலரு வாயர்முற் ரேன்றலேக் காக்கவென்றே.

"கடல்சூழ்ந்தவுலகெலாம்"

கடல்சூழ்ந்த யாப்பம ரறஞ்சூழ்ந்த நெஞ்சக் கழற்சிங்க மன்னன்மன்னிக்-
கழியா மடங்கழி யிடங்கழி யருட்கே கருத்தினே செருத்தினேயரில், விடல்
சூழ்ந்த சிந்தையொ ரிகழ்த்தினே பெருதுற வினங்கும் புகழ்த்தினேவய -
வேட்புலி யெனுந்திருக் கோட்புலியிவ் வையையாய மேன்மேலு மேத்தெடு
ப்பா, மடல்சூழ்ந்த தொண்டர்வர லாற்றலிரி யுலகெலா மறியத் தெருட்டுகர
விற் - கமையப் புனைந்ததுகொல் சாதியடை யாளங்கொ லமையுமெது சொ
லினுமென்ன, மடல்சூழ்ந்த செங்குவளே மாலையணி திண்டோள் வலத்தினே
கிலத்தினேவரும் - வாயார வாழ்த்துகுன் றத்தூ ருதித்தபெரு வள்ளலேக்
காக்கவென்றே. (க)

"பத்தராய்ப்பணிவார்கள்"

பத்தரா யென்றெடுத் தருடிருக் கவியிலிரு பைங்கோதை யாரைவேட்ட-
பான்மைக் கிணங்கவோ ரிருபதல்வி யார்தமைப் பயவாம லேபயந்த, சுத்த
ராய் வன்ரெண்ட ரின்ரெண்டர் தழுவித் துதிக்கவைத் தவர்களாய -
தொகையுளா ரென்னுமெழு வகையுளார் பொற்பதச் தொழுதேத் தெடுத்தல்
செய்வா, நித்தராய் மன்னுண்ட நவில்வா ருவக்கும்வெண் ணீற்ருெளி நிலா
வொளியெனை - னினேந்தணேர் தாங்குக்கு வளேபொலிய வின்றே னிரம்பவுண
வளியடைந்தாங், கத்தராய் கண்மணித் தொடைபொலி தரப்பொலியு மம்பு
யத் தவனேரும்பு - மளவா வளந்துன்று குன்றைநகர் மேயவரு ளாளியைக்
காக்கவென்றே. (கo)

"மன்னியசீர்மறைநாவன்"

மன்னிய திருப்பாட்டி லாகார முதலிய மறந்திராப் பகன்முயன்று
வையத்து வாழ்வார்க ணேக்காத வண்ணவ மணியா லயம்புரிந்து
மின்னிய சடைப்பரமர் பிறதளி மறுத்தடை விதங்கண் டுவந்தபூசல் [பாம்
பின்னியதொ கையும்வகையு முதலாத லான்முதற் பகர்சைவ சேயருளினுர்
பரவுவிரி யிறுதியா தலினிறுதி யாரெனப் படுசைவ சேயருளினுர்
தன்னிய பொருத்தமிது வென்றுலக மகிழ்தரத் தொண்டர்வர லாறனேத்துந்
தூவாய்மலர்ந்தவருண்மொழிவானவனேயான் றதோன்றலேக்காக்கவென்றே.

செங்கீரைப்பருவம்.

ஒண்கொண்ட பொதுவகத் தலகெலா முய்யாக லுலகெலா மென்ற
தீஞ்சொ - லுவந்தே டெழுத்தாணி கொண்டெழு திரண்டுகை யும்புவி யுறப்

பதித்து, வண்கொண்ட வொருதாண் மடித்தூன்றி யொருதாள் வயங்குற வெடுத்தூன்றியொண், வாய்கவிச் சுடையொழுக் கறிவிப்ப தெனவமுத மாட் சிமை யொழுக்கெடுப்ப, வெண்கொண்ட நெற்றிநீ ளிளநிலவு மொண்கா திருங்குழை யிளங்கதிரும்விட், டெறிப்பவிள முறுவலுந் தோன்றமலர் திரு மூக மெடுத்துவா னளவுநோக்கித், திண்கொண்ட குன்றையம் பதியருண் மொழித்தேவ செங்கீரை யாடியருளே - திருத்தொண்டை நன்னாட்டு வேளா ளர் குலதிலக செங்கீரை யாடியருளே. (க)

பொருவரிய தொண்டர்கள் புராணத்து ளிறையருட் பொலிவா னிரம்பு சொற்கள் - போற்றிடு விருப்பநீர் நம்மைமழ வாக்கிவாய் புகல்குதலை மழலை யென்ன, மருவுமொழி யாசையும் நீர்பய னுமுதென்ன வள்ளான் மறுத் துணைத்தால் - வார்த்தைப் பயன்கொள வலேந்தக்க சான்றநீ வாய்மலர் புரா ணநின்று, மொருவரிய தாஞ்செப்ப லுற்றபொரு ளென்றகவி யோதவேண் டுவதினியெவ, னுனதுசொற் பயனுணர்த லிலமென்னின் மழவா வுவப்ப தும் பொய்ம்மையாமே - திருவமிகு குன்றையம் பதியருண் மொழித்தேவ செங்கீரை யாடியருளே - திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக செங்கீரை யாடியருளே. (உ)

ஒப்பரிய தொண்டர்தம் மருமையும் பெருமையு மூவக்குமவ ரவர்செய் கையு, மூவமையில் லாச்செய்கை நுட்பமுந் திட்பமும் மும்பர்கோ னருட்ட பமுந், தப்பரிய செந்தமிழ்த் தொடைகடையு மடையுந் தவாப்பொரு ளணிச் சிறப்புந் - தமிழ்மறை யடங்குபல மந்தணமும் வெள்ளிடைத் தவிரும்வெற் பெனவிளங்க, வெப்பரிய மூழமதிக் குடைநிழற் றனபாயன் மேயவவை யக நயந்து - வியந்துமெய்ப் பாட்டிஞெடு பாராட்டி மகிழுமேன் மேல்விரித் தரு ளியபிரான், செப்பரிய குன்றையம் பதியருண் மொழித்தேவ செங்கீரை யாடியருளே - திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக செங்கீரை யாடியருளே. (ஙு)

தாயவொளி யிருடபுபொன் மாளிகைத் தில்லேச் சபாநடன நாதர்பெத்தான்
சாம்பானே யுய்த்தனம் நிருவாண ரீக்கையாற் றருமுத்தி யடைவியென்றே
யாயதிரு முகமுய்த் திடப்பெற்ற கைலாய வம்பரம் பரையிலளவா
வருளுருவ மாயவ தரித்திட்ட மெய்ஞ்ஞான வற்புத வுமாபதிசிவ
னேயமிக விம்மைக்கு மறுமைக்கு மாதார நிலயநீ தென்றுணர்ந்து
நினதுவர லாறருமை பாராட்டி யருள்செய நிரம்புமான் மியமடைந்தாய்
தேயநிகழ் குன்றையம் பதியருண் மொழித்தேவ செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக செங்கீரை யாடியருளே.

பொருந்துமா யிரமுகக் கங்கைமர பிற்கதிர்கள் பொலியுமா யிரமுள்ள வன் - போற்றிரேறுறி யாயிர மறைக்குமெட் டாச்சென்னி பொற்பவா யிர முடையகோன், மருந்துநே ரருள்பெற்ற மைக்கேற்ப வாயிரம் வயங்குபொற் கானிறீ இய - மண்டப மிவர்ந்தா யிரத்தொண்டர் வரலாறு வாய்மலர்ந் தவவாவி வா, யிருந்துசூழ் கொழுவண்டு புண்டரீ கத்தின்வா யியைபுல வறத்துவட்டி

யிருஞ்சங்க ணம்பே டெனத்தழுவி காணமுற் றியல்பேடு மற்றென் றுணுஞ்,
செருந்துஞ்சு குன்றையம் பதியருண் மொழித்தேவ செங்கீரை யாடியருளே.
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக செங்கீரை யாடியருளே. ()

வேறு.

தோம்பல வுடையேம் பிறவியை யஞ்சேஞ் சுடர்நின் னினகரமுற்
றூகே மெழுகே மிரவும் பகலுந் துதியே மாயிடினு நீ
காம்பல தேவரை நண்ணே மெண்ணே நயவேம் வியவேமா
ஞண்மலர் பலகொடு நின்னடி யேத்தி நயத்தலே மேற்கொண்டு
கூம்பல்செய் கையே மெய்யே மிதனிற் கோமா னீயருளுங்
கூலி யெவன்கொ லவாயது நல்கிற் சூலாவு முவப்புமுவே
மாம்ப லவாவுதன் மேய புயாசல வாடுக செங்கீரை
யாரரு ளாகர சேவையர் காவல வாடுக செங்கீரை. (சு)

புண்ணிய மூதலே பொங்கொளி மணியே பொய்யாப் பெருவாழ்வே
பொள்ளலின் முத்தே கள்ளமில் வித்தே புயாயில் சுவைப்பாகே
தண்ணிய வமுதே மண்ணியன் மதியே தமிழ்நா வலரோறை
சத்துவ நிதியே பொத்திய மலகோய் சாடு பெரும்பகையே
யெண்ணிய வன்ப ருளத்தமு தூற வினிக்கு நறுந்தேனே
யென்றும் பத்தி ரசங்கனி கனியே யெங்கா ளினுமெங்கட்
கண்ணிய பொருளே யாய்பவர் தெருளே யாடுக செங்கீரை
யாரரு ளாகர சேவையர் காவல வாடுக செங்கீரை. (எ)

சூழிய மேவிய கொண்டை விளங்கத் தொட்டுக் கட்டியபொற்
சுட்டி யிலங்கப் புண்டர நீறு துதைந்து நிலாக்கால
வாழிய கனிவா யூறற் றேறன் மார்பின் வழிந்தோட
வடிகா திற்புனே குழையிற் செவ்விய மணியிள வெயில்வீச
வீழிய வாவிய வாயிள முறுவல் விளங்க வரைப்பொன்னுண்
மின்னுக் காலப் பேரெழி னெக்குநர் விழிகள் விருந்துசெய
வாழிய வன்ப ரகத்தமர் செஞ்சுட ராடுக செங்கீரை
யாரரு ளாகர சேவையர் காவல வாடுக செங்கீரை. (அ)

இவர்சரி யையரிவர் கிரியையர் யோகத் தினரிவ ரிவர்ஞான
வியல்பின ரிவரி லறத்து வழாதவ ரிவர்துற வறநின்ரூர்
கவர்மன மொழியிவர் பிரமச ரியநிலை கைக்கொண் டோரிவரோ
கண்குளிர் வேடம் பொருளென நம்பினர் கருதரு மிவராதித்
தவர்நிலை யுணரா வருளின னிறைவன் றக்கன வுலகறியச்
சாற்றின னலனவ னேயுல கறியச் சாற்றிய படியென்ன
வவரவர் செயன்முத லருளிய வல்லவ வாடுக செங்கீரை
யாரரு ளாகர சேவையர் காவல வாடுக செங்கீரை. (கூ)

நந்தி வனாத்தலை யொருமுனி சுரபி நயக்கப் பொழிதீம்பா
னதியா யங்கங் கோடுபு கூப நயங்கொள சேரிகுள

முந்தி யெழுங்கா லோடை தடாக முதற்பல வுங்நிறையா
முழுத்த சுவைப்பா லாக்குபு பின்னும் மூரிக் கடல்புக்குப்
புந்தி யவாவ நிரம்பலின் மாயோன் புரிகண் டியிலுமிடம்
புகலித வோவது வோவென வாயப் பொலிதண் டகரட
வந்தி மதிச்சடை யண்ணற் கினியவ வாடுக செஙகீரை
யாரரு ளாகர சேவையர் காவல வாடுக செஙகீரை. (கo)

தாலப்பருவம்.

வெண்ணங் துரறி வபிறழோது வீற்று வீற்றுக் கருவுபிர்த்த
வெண்ணிற் நிலத்தை யரிததெடுத்து வெள்வாய்க் களமர் கரைகுவிக்க
வண்ணங் துவரென் றுவமிக்கும் வாயோ திமகீர் குடைந்தெழுந்து
மற்றக் குவியன்மே லிவர்ந்து மருவி முதிரா வெயில்காயக்
கண்ணங் துறவுண் டெழுதருமக் களமர் மராள முட்டையினைக்
கதிர்நித் நிலமென் றுறக்குவித்தோங கடையே மயங்கி யெண்ணுங்கி
தண்ணங துறைசேர் குன்றத்தூர்த் தலேவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச் சைவா தாலோ தாலேலோ. (க)

கண்பா லெவரு முறத்தரிக்கு நலங்கூர் நீற்றின் வெள்ளொளியா
னுவா லெவரு மரமுழக்க நாளுஞ் செயவம் பேரொலியா
லெண்பாற் புலவு ரமுதுகொளற் கெந்த விடத்து நெருங்குதலா
லேர்சா லரம்பை யெழுதலினு லியனு கேசன் வைகுதலாற்
கண்பாற் கரிதோய் திருமடந்தை காமுற் றிடலான் மாளிகைமேற்
கருமால் கிடந்து கண்டுயிலுங காட்சித நிறனுற் பொங்கியெழுங்
தண்பாற் கடனேர் குன்றத்தூர்த நலேவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச் சைவா தாலோ தாலேலோ (உ)

முந்தவெழுமாற் றுயர்பொன்னுன் முழுசசெம் மணியான் மாளிகையு
முதுசூ ளிகையுந் தெற்றிகளு முகப்பும் பிறவு மமைதலினு
லிந்த நகரம் பொன்னகரத் தினுமக் கிமைத்தல் வீதியுளத்தி [illegible]
லெண்ணி யாடூஉ மகடூஉவா மெல்லா வுபிரும் விழியிமைத்த
னந்த வருட்சம் பந்தர்மண நண்ணி யவர்க்குங கதிகொடுத்த [illegible]
நலம்போ லிதசார் புலியகத்து நகர்க்கெ லாஞ்செய் தனனென்று
சந்தத் தவர்சொல் குன்றத்தூர்த் தலேவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச் சைவா தாலோ தாலேலோ. (ஙு)

மூரிவில் லயிரங் கால்யாத்த மூழுமா ளிகைபாற் கடல்கடையா ட
முன்னங் திருமா லுருவொத்து முயங்கு மெனவு மதற்கருகே
பிரிவில் கருநீ லங்குயிற்று பெருமா ளிகையக் கடல்கடைந்த
பின்ன ரன்னு னுருவொத்துப் பிறங்கு மெனவு மதற்கருகே

யெரிவி லிடுசெங் துகிர்மாட மெயில்சூழ் காஞ்சி யடைந்தன்ஞ
னெய்து மூருவொத் தலீதென்று மெந்நா வலருங் கொண்டாடச்
சரிவில் வளஞ்சால் குன்றத்தூர்த் தலேவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச் சைவா தாலோ தாலேலோ. (சு)

சோறு மணக்கு மடங்களெலாங் தூய்மை மணக்குஞ் ஞிங்ளையெலாஞ்
சுவண மணக்கு மாடையெலாங் தொங்கன் மணக்குந் தோள்களெலாஞ்
சேறு மணக்குங் கழனியெலாஞ் செல்வ மணக்கு மாடமெலாங்
தென்றன் மணக்கு மேமடையெலாங் தெய்வமணக்குஞ் செய்யுளெலா
நீறு மணக்கு நெற்றியெலா நெய்யே மணக்குங் கறிகளெலா
நெருப்பு மணக்குங் குண்டமெலா நேய மணக்கும் வீதியெலாஞ்
சாறு மணக்குங் குன்றத்தூர்த் தலேவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச் சைவா தாலோ தாலேலோ. (நு)

மே ரு.

துங்க மிருந்த வருந்தவ மேவிய தோலா நாத்திரண
தூமாக் கினியரு டொல்காப் பியமே தோன்று மிலக்கணமாப்
பங்க மிலாச்சம யாதி யடைந்து பராஞ்சிவ ஞின்ன முறும்
பாக மருஉம்பக் குவரே கேட்கப் படுமதி காரிகளா
வங்க மெடுத்தழ றுன்ப மொழிந்தின் படைவது வேபயனு
வற்புத மேவிய தொண்டர் புராணம தருள்கரு ணேக்கடலே
சங்க மரீஇயமர் குன்றைத் திருமூனி தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புய முலோ தாலேலோ. (சு)

அடியார் பெருமையு மருமையு காளு மதியம் பலவாண
ரவர்வர லாறு விரித்துலா செய்பவ ராரென வுட்கருதிக்
கடியார் மற்றவ ரன்பத் தினையுங் கண்காண் படிசெய்து
காமரு மூதலு மெடுத்தரு ளினரிக் கடல்சூழ் புவியிடையிப்
படியார் பெற்றூர் தமிழ்மான் மியமெப் பாடைக ளுக்குளதிப்
பாக்கிய நந்தவ மென்று பலோரும் பகரப் படுபவநீந்
தடியார் தடிசூழ் குன்றைத் திருமூனி தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புய முலோ தாலேலோ. (எ)

பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ
பயனில தாகுஞ் ஞிந்தா மணிவழி படர்த லெனப்போதித்
துத்திப் சுமையொரு தோள்வைத் திடுபு லுயர்த்தோன் மனமடியா
ருறுசெய லுடப் புரிமதி வலவ வுலாவரு கந்தர்திற
முத்தித் திறமல வென்றள விலர்பான் மூற்றிச் சிவமடைய
முயல்செயல் வலவ வயற்கண் மடைச்செறி முத்த மனேத்தினையுங்
தத்திப் புனல்பாய் குன்றைத் திருமூனி தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புய முலோ தாலேலோ. (அ)

ஈற்றுத் தலேயொரு மவுலி புனேந்தா லென்னச் சொல்லணியொன்
றெய்திப் பொலியப் பொருளணி யாயின வெவ்விடனும்வீற்று

வீற்றுக் கிடையிறை பட்டன வமைய விளம்பு வனப்பினெடு
மேய முதற்பொரு ளாகிய மூன்றும் வேண்மிமி டத்தெய்த
வாற்றுப் புனலு மப்பொருள் கோண்மூத லறைமற் றுள்ளனவு
மமையத் தொண்டர் புராண நவின்றவ வடருபு சூழ்ந்தபசுந்
தாற்றுக் கதலிக் குன்றைத் திருமுனி தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புய ருலோ தாலேலோ. (கூ)

மண்டலே வேலைப் புவியிற் பத்திசெய் மார்க்க மறிக்தவரார்
வண்சுவை யமுத வொழுக்கென வார்த்தை வழங்கத் தெரிகுநரார்
கொண்டலே கோற்பக ரேற்தரு கூற்றங் குறித்துய்த் திடவலரியார்
கொற்றக் கைலைக் கணநா தர்களொடு கூடிபு மகிழ்பவரார்
விண்டலே யாரும் பெறலரு மின்பம் விராவுந் திறலினரார்
விமலா நீயவ தாஞ் செய்யா விடினென மேயவபைத்
தண்டலே சூழுங் குன்றைத் திருமுனி தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புய ருலோ தாலேலோ. (கo)

சப்பாணிப்பருவம்.

விழையற முதற்கல்வி யறியுநண் ணறிவுமம் மேதைக் கிணங்கொழு
க்கு - மேயவிவை யுடையார்த் தழீஇயவர்சொ லினிதேற்கு மேம்பாடு மாறு
கருதா, மழைதிகர் கொடைத்திறனு நனிவரு தினியீட்டு மாண்புமாற் றலமா
யஞ்சா - வன்மையு மிடங்கால முதலறித லுங்கடிய மாற்றலி லாதகுணமு,
முழையரும் விருப்பமறி யாதடக் குதலுலை னேங்குகாட் சிக்கெளிமையு -
முடையனிவ னுலகுவத் தற்குரிய னென்றுளத் துன்னியிறை புனேயமணிக,
டழையுமுடி தொட்டுக் கொடுத்தருண் மலர்க்கைகொடு சப்பாணி கொட்டி
யருளே - தண்டமிழ்க் குன்றையாய் குன்றுதித் தெழுபானு சப்பாணி கொட்
டியருளே. (க)

கார்க்கோல மாலோன் புரக்தருள்வ னெனுமொழிமு கமனுண்மை
வேளாண்மையைக் - கருதவபி தானங்கொள் குலமே யெனப்பனுல் கற்றவ
ரியம்ப மறையோர், போர்க்கோல மன்னரெட் டியர்மூவர் புறமெனப் புகன்
மூவர் பகிவருத்தம் - போக்கின மெனக்களிப் புறவிலே கருமது புகன்று
மகிழ் தலேகிறப்ப, வார்க்கோல முலேமங்கை பங்கர்தளி முற்பலவும் வண்
பூசை யொடுகிறப்ப - மாருது பொலியமழை வளனுஞ் சிறப்பவள வாப்பெரு
மை வாய்ந்தமெழி, தார்க்கோ லொடுக்தொடுஞ் செங்கைத் தலங்கொண்டொர்
சப்பாணி கொட்டியருளே - தண்டமிழ்க் குன்றையாய் குன்றுதித் தெழு
பானு சப்பாணி கொட்டியருளே. (உ)

மேவாத பாயுடுஇத் தலேமயிர் பறித்துழறன் மேயசம யப்பாழ்ங்குழி
வீழ்ந்தவர்மு னச்சமய கண்டனம் பேசியது விடவாற்று திருவாயினின்

ரேவாத பிரதாப மொருகதி ரெனத்தோன்றி யுள்ளகோ கனகமெல்லா [ஞ
மூறமலர்த் திடவவைகை யொப்பாயி ஞெமென் றுறப்பொலித நேறுபன்
ராவாத மியமெனவ பயகல்கி யுண்மைநிலே யருளுங்கை நின்றெழுபுக [க்குங்
ழாலோ னெனத்தோன்றி யெல்லாங் குவித்தகென் ருன்ரே ரெடித்துரை
தாவாத வொளிஞெர்நி னங்கைத் தலங்கொண்டொர் சப்பாணிகொட்டியருளே
தண்டமிழ்க்குன்றையாங் குன்றுதித்தெழுபானு சப்பாணிகொட்டியருளே.

தூருமலர் கொய்துகீ ராடிநீ நிட்டுகனி தூயக னிருந்துநேரே [illegible]
தலங்குமொரு குறியிலா வாகனமெ ணுதலோடு தோன்றிடச் செய்வதன்று
பெருமவடி யேங்களைப் புரவென்று தாழ்பவர் பெருஞ்செல்வ மெய்தியைய
பிறங்குநா ராயணவு பநிடத முறைத்தபடி பெற்றருடி யிவர்வணக்கங்
கருமமுத லெம்மலமு நீத்தின்ப மெய்தக் கடைக்கணித் திடுதியென்று
கனிந்துவேண் டுவதன்று நிறைவருத் தமுமிலாக் காரிய மவாவிநின்றேந்
தருமசின கரமாங் கரங்குவித் தையவொரு சப்பாணி கொட்டியருளே [ளே.
தண்டமிழ்க் குன்றையாங் குன்றுதித் தெழுபானு சப்பாணி கொட்டியரு

எண்ணியவை யெண்ணிய படிக்கடி யவர்க்கருளு மீசனருளா லருளுரு
வீனசம யத்தொடக் கெல்லா மொழித்தன மெனக்கைதட் டுதலுமோவாத்
திண்ணிய மலச்செருக் கெல்லா மொழித்தனந் தீர்ந்ததவ் வாதையென்று
செப்பிக்கை தட்டுதலு மிந்திரன் மலர்க்கணை றேந்துழா யவன்வாழ்க்கையு
நண்ணிய வெழுங்கருத் துந்தவிர்ந் தனமென்று நாடிக்கை தட்டுதலுமேர்
நவிலகம் பரமகுரு சாமியென் றியாவரு நயக்கவவ தாரஞ்செய்தாய்
தண்ணிய மலர்க்கைத் தலங்குவித் தையவொரு சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்க்குன்றையாங் குன்றுதித்தெழுபானு சப்பாணிகொட்டியருளே.

வேறு.

வம்பிட் டொளிர்முலே மாதுமை காண மணிப்பொது நடனஞ்செய்
வார்முன மனைகைந் தருகிட நிற்றன் மதித்தவர் மூதனல்க
நம்பிட் டருமறை யோர்கை குவித்து நயந்து லியந்துடனே
நறவீனர நல்கி யலங்கல் புனைந்து நகும்பரி வட்டமெமித்
தம்பிட் டொளிர்சடை யவரே யிவரென் றைய மறத்தெளியா
யாத்திடு முன்னர் நன்னர் விடுதிய தள்ளுபு கொள்ளுகெனக்
கும்பிட் டேற்ற திருக்கை குவித்துக் கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி. (சு)

உண்ட லுடுத்தன் மணத்தன் முதற்பல வுன்னுபு நன்னயமா
ருத்தம வென்றடை யாதுல ரெண்ண மொருங்கு தெரிந்தனையார்
தண்ட லிலாமகிழ் பூப்ப மலர்க்கைத் தலம்விரி யாதுகுவி
தருமொர் பழக்கமு னுள்ளதி யாங்கள்செய் தவம்வறி தாங்கொல்லோ
கண்டல் செறிந்த கருங்கடல் வண்ணன் கலிகெழு பாற்கடன்மேற்
கண்டுயில் வதுபோர வெண்சுதை தீற்றிய காமரு மாளிகைமேற்
கொண்ட லுறங்கும் குன்றத்தூரன் கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி. (எ)

படியிடை யொருபை திரவரு ணனைபுரி பாவல னைந்நிணையும்
பகுத்தொரு மூப்பொரு ளோடும் விரித்துப் பயனு கத்தெய்வங்
கடிதலில் னைகர முள்ளன வோதக் கற்பித் தவனெஞ்சங்
கனியக் கனியக் கண்ணீர் வாரக் கவிபா டியவிறைவ
வொடிவரி தாமிரு பன்னிரு கோட்டத் துள்ளொரு கோட்டமலா
தொருகோட் டமுமுற வில்லாய் நல்லா யுலவா வளமைப்பல்
குடிக ணெருங்குங் குன்றத் தூரன் கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி. (அ)

நாடிய விரிநூல் சொற்றிடு திறனு னன்னூ லாசிரிய
னகுபா சுரமுத லுரைசெய் தலினு னவிலுரை யாசிரிய
னீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர் நீப்பப் போதவனைசெய்
நிலையாற் போத காசிரி யன்னிவை நிகழ்தொறு நிகழ்தோறு
மாடிய ஞானத் திறனுற லான்ஞா ஞசிரி யனுநீயென்
றுன்றேரூர் பலரும் புகழப் படுபவ வகில மெலாஞ்சென்று
கூடிய புகழ்சால் குன்றத் தூரன் கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி. (கூ)

நிலவிய நாகே சுரரினி தமர்தலி னிகழ்நா கேசுரமாய்
நீன்மணி மாட நிலாவலி னிந்திர நீல பருப்பதமாய்க்
கலவிய செம்மணி மாடத் தாலொளி காலர தனகிரியாய்க்
கருடப் பச்சை யிலாலியா வோருங் காண்மர தகமலையா
யுலவிய வெண்சுதை நீற்று மிலாலோங் கொருகை லேக்கிரியா
யுத்தம மார்பல வேதுவி னுலினு மூதைதரு பற்பலவாய்க்
குலவிய வளமார் குன்றத் தூரன் கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி. (கo)

முத்தப்பருவம்.

திருப்பஞ் சாதி மறையுணர்மட் டேவ ராதி நால்வர்களுஞ்
செறிந்த மற்றை மூவர்களுந் தீரா விருவல் வினைத்தொடர்பா
லுருப்பஞ் சாரும் பிறந்தைமரீ இ யுறமேற் போயுங் கீழிழிந்து
மூழற லாய பெருந்தாக மொருங்கு மாய்த்தின் பொருங்கடைய
விருப்பஞ் சாரு மெய்யடியார் மிக்க தொகையா ரொன்பதின்மர்
மேய தனியா ரறுபதின்மர் மேலு மூவர் சரித்திரமாங்
கருப்பஞ் சாறு பொழிமதுரக் கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங் கனிவாய் முத்தந் தருகவே. (க)

எண்ணிற் பொலிபல் புலவர்குழாத் தெய்தி நும்மோ டியாமொருவே
மென்று கூறி யெம்பெருமா னிருந்தாய் தருநன் னயமுடைத்தாய்

மண்ணிற் பொலிபு கயிலாய வரைக்க ணிவர்ந்தம் மாதேவன்
வடிகா தகம்புக் குள்ளுருக்கும் வளமை யுடைத்தாய் வளத்தருவாழ்
விண்ணிற் பொலிவார் களும்வியப்ப வெள்ளென் பழத்திற் குயிராருளி
வெங்க ராக்கொண் டதுமீட்கு மிக்க விறலிற் ருயெங்கள்
கண்ணிற் பொலிசெந் தமிழ்மணக்குங் கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங் கனிவாய் முத்தந் தருகவே. (உ)

சொல்லும் பொருளு ணிகிறப்பச் சுருங்கச் சொல்லன் முதலாய
தோட்டி யமைய வமங்கலமாஞ் சொற்கள் புணரா தறக்களேந்து
வெல்லுங் தகைய மூண்காட்டி விலக்கு விலக விதிதழுவி
விரும்பு மூல விலக்கியமே வேரு காதென் றலகேத்த
வல்லும் பகலு மம்பலவ ரருடற் காய வரும்பணிசெய்
தருள்பெற் றுய்ந்த வடியார்த மருமை பெருமை பாராட்டிக்
கல்லுங் கனாயக் கவிபாடுங் கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங் கனிவாய் முத்தந் தருகவே. (ஊ)

எண்ணி யிதுசெய் திடினிதனு லெய்தப் படுவ திஃதெய்தா
திரியப் படுவ திஃதண்மை யெய்தப் படலாற் பயனின்றே
நண்ணி யவுதை மறந்தொழிக ணள்ளார் முனேமே லிப்பொழுது
நயந்து படர்ந்து பொருவமே னமதே யாகு நகுவாகை
தண்ணி மயம்போற் புகழ்ப்போர்வை தாங்கற் காய கருமமிது
தப்பா தாற்றப் பொருள்வருவாய் தவாதுண் டாமென் றிவைமுதலார்ங்
கண்ணி வளவற் குரைத்தருள்செய் கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங் கனிவாய் முத்தந் தருகவே. (எ)

நிலஞ்சார் தெய்வக் கற்பகமே நிமல ஞான வாரிதியே
நீடுஞ் சைவப் பெருவாழ்வே நிலவா நின்ற குணக்குன்றே
வலஞ்சார் பெருநா வலரேறே மாரு வருட்கிக் தாமணியே
மதிப்பார் மதியு ளெழுஞ்சுடரே வாழ்த்து வார்த்தம் பெரும்பேறே
புலஞ்சார் பத்தி விளைநிலமே போக்கு வரவில் பூரணமே
புந்திக் கினிக்குஞ் சுவையமுதே போற்றி யினிமே லொருதாயர்
கலஞ்சார் மூவேப்பா லருந்தாத கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங் கனிவாய் முத்தந் தருகவே. (ஏ)

கீ ரை வு.

நூலாறு தோய்ந்தவ ருளந்நமுக் குண்டங்க ணேக்கியழல் பாயமேய
நுவல்புலவ ருதரகுண் டத்திற் சருப்பாய கோன்மைசான் மேகமெல்லாஞ்
சாலாறு பாயவலே யெறியுததி பாயத் தவாதருவி வகைகள்பாயத்
தையலார் குரிசிலார் மேற்சம்ப ராரிபொழி சாமெலாம் பாயமலரிற்
காலாறு பாயவம் மலர்மதுப் பாயக் கமழ்ந்தபட் டத்தினின்றும்
கற்பங் கழுத்தொடிய வாளேபா யப்பொய்கை கருமேதி பாயமிக்குப்
பாலாறு காலாறு பாய்தொண்டை நன்னுட பவளவாய் முத்தமருளே
பாவுசீ ருலகெலாம் விரவுசே வையர்பிரான் பவளவாய் முத்தமருளே. (ஐ)

மேயபல வாரியர் குழாத்தினுட் பூரியர் விராயதென வாயதூய
வெள்ளோதி மக்குழா நிலேருலேய மேதிகால் விசைத்தெழீஇப் பாயவாங்க
ணையவெடி வாளேயேர் பருகிலாங் கலிமோத வதினுநிர் பழத்தின்வெருவி
யம்மேதி கரையேற வதுகண்ட வவ்வாளே யாயவா லாமைதீரத்
தூயநெடு வானீர் துளேந்தாடி மீளிற் றிருடக்குநீங் காமையெண்ணிச்
சோதிமதி மண்டலங் கீண்டமுத தானையொடு தூனையக் கிழக்கிறங்கும்
பாயதட மலியுந் திருத்தொண்டை நன்னாட பவளவாய் முத்தமருளே
பரவுசீ ருலகெலாம் விரவுசே வையர்பிரான் பவளவாய் முத்தமருளே. (எ)

மிக்குவரு வெள்ளத் தெதிர்ந்தேறு பருவரால் வேகத் திருண்டுபோதும் [விற்
வேழத்தைமுட்டுபு வெருண்டுவெடி கொண்டுதாய் விண்ணந்துளைத்துவினை
புக்குமகிழ் மழவிளங் கன்றது தெறித்தெழீஇப் போயதெங் கென்றுநாடும்
புந்திப் பெருங்காம தேனுவின் மடித்தலப் பொம்மல்குழை வெய்தமுட்டத்
திக்குநிக ழப்பசுப் பொழிகின்ற பால்வரால் செய்தபழை யூடிறங்கித் [கும்
திணைகாரை யெறிந்துவரு குடிஞைக்கு முன்புதான் செய்தபெய னைப்புதுக்
பக்குவி லருவளம் படுதொண்டை நன்னாட பவளவாய் முத்தமருளே
பரவுசீ ருலகெலாம் விரவுசே வையர்பிரான் பவளவாய் முத்தமருளே. (அ)

வீங்குகரு மேதிபிணர் படுதட மருப்பிஞல் வீடுபடாக் கடுவேவலிவாய்
விடமீக்கி யுட்புகூஉ மென்கரும் பினேமென்று மென்றுதின் றிடவழிதரா
வாங்குநிகழ் சாறப் படப்பையை நிரப்பிமே லரம்பையங் தடவைமோதி
யாருகி நெற்போ ரடங்கச் சுமந்துசென் றலையாழி யிற்கலங்து [ய்த்
தேங்குதிடர் செய்துவரு மாற்றியங் தமிழ்வாய்ச் செறிந்துவர லாலினிமையா
திகழ்கின்ற தென்றெண்ணி யரமெங்க ளுண்டுமகிழ் தேக்கவெங் நாளுஞ்செயு
பாங்குபடு செல்வமென் பாற்றிருண்டை நன்னாட பவளவாய் முத்தமருளே [ம்
பரவுசீ ருலகெலாம் விரவுசே வையர்பிரான் பவளவாய் முத்தமருளே. (கூ)

நீளேநேர் மாதரொடு காளேநேர் மைந்தர்க ணெருங்கிவீளே யாடுபாலி [வாய்
நெடுவெள்ள முவராழி யுட்புக வளுர்குழீஇ நிறைமலர்கொய் பொழில்வாவி
வாளேதா யெழவிடபம் வைகுதேத் தடைகீற மடையுடைத் தென்னவழியு
மதவெள்ள மும்புகக் களமர்கள் கருப்பாலே வழிசாற்று வெள்ளமுமெழீஇ
யாளேமோ தும்படி புகக்கண்ட வறிஞரே ழாழிய மிதன்கணைய
வான்றதுண் ணறிவினு ராயினென் ரேதவமை யாப்பெரு வளங்குலாவும்
பாளவாய் கந்திமென் பாற்றிருண்டை நன்னாட பவளவாய் முத்தமருளே
பரவுசீ ருலகெலாம் விரவுசே வையர்பிரான் பவளவாய் முத்தமருளே.(கo)

வாராணைப்பருவம்.

மண்டல மதிக்குமணி யாத்தவுச் சிப்பூவும் வண்பட்ட முஞ்சுட்டியும்
வாருவல யமுமதா ணியுமுதய வெயில்செய மகத்துவத் தொண்டர் சீர்த்தி,
விண்டல மதிக்கவெழு செய்யவாய்ப் புகழெழுதல் விழையவெழு குறமுறுவ

லும் - வெண்ணீறு முத்தமா லிகையுமிள நிலவுசெய வெய்யே மனத்தடத் திந், தண்டலமை யாதலர் சரோருகப் பதமேற் சதங்கையுந் தண்டையு மொளி - தவாவெஞ்சிழி யும்படிஇக் கலகல வீரட்டவுயர் சைவநிலை யெங்குநிக ழக், கொண்டலமர் கொடைகொண்ட கரதலச் சேவையார் குலசிகாமணி வரு கவே - கொன்றைச் சடாடவியர் மன்றைப் பாவியெழு குன்றைப்பிரான் வருகவே. (க)

நிலவுவிரி மதியுமொண் பனியுமுவ வாவெனினு நெஞ்சமெப் பொழுதுநெக்கு நெக்குரு கு வார்மதிய மத்தகையர் கட்பனியு நேரேயு வத்தல்செய்வ [னுங் கல்வுசெம் மையுமணமு முடைமைக் கிணங்கவெவ்வு கடையினவை யுள்ளவே காமுறுவ வளிவிரா வுறமலர்வ வாயகோ கனகநறு மலரிரண்டு மூலவுதலி லன்புசெறி யுந்தலைப் பெயராமை யுள்ளவே னும்பெயர்த்தே யீயுவகையெய்ந கட்குவர மறசமய ருக்கெலா முட்குவர முறுவலித்துக் குலவுபுக ழேபோர்வை யாக்கொண்ட சேவையார் குலசிகாமணி வருகவே[வே. கொன்றைச் சடாடவியர் மன்றைப் பாவியெழு குன்றைப் பிரான் வருக

நீடுமின் பரிவையர் புணர்ப்பெம்ம ரும்மைந்து நிகழ்கந்த முங்கெடுதலே [ரு நிலவுமின் பென்மரு ங் குணமூன்று மொழிதலே நிரம்பலுறு மின்பென்ம நாடுமின் பிருவினைக் கேடென்மரும்மல நசித்தலே யின்பென்மரு நவில்விக்கி ரகநித்த மின்பென்ம ருக்தோன்று ஞானமே யின்பென்மரும் பாடுமின் புயிர்கெடுத லென்மரும் பகுதிமேற் கெடுதலே யின்பென்மரும் படுசித்தி யின்பென்ம ரும்பிறரும் வாதம் படர்ந்துவரு கிறனறவளங் கூடுசெந் தமிழருமை யறிபெருஞ் சேவையார் குலசிகாமணி வருகவே [வே. கொன்றைச் சடாடவியர் மன்றைப் பாவியெழு குன்றைப் பிரான்வருக

செற்றசெங் கன்னல்படு தரளமூங் கற்றிச் செழுஞ்சோலை படுதரளமூங் திண்மருப் புக்கடாக் களிறுமறை யப்போய செஞ்சாலி படுதரளமூங் துற்றபைங் கதலியிற் படுதரள மும்பாலி துறைதொறு மெடுத்துவீசுஞ் சுடர்மணிக ளுங்கரும ருடவுவோர் வாருபு சுமந்துகொடு வந்துதூய முற்றமெங் கணுநிறை தரக்குவித் திடல்கண்டு மோகமுற் றோடியாட [துக் முகந்திடறி யெற்றியொன் றுக்கியீளை யாடுசிறு மூண்டகத் தாள்பெயர்த் கொற்றவன் றருமுதன்மை கொண்டுமிளிர் சேவையார் குலசிகாமணி வருகவே கொன்றைச்சடாடவியர் மன்றைப்பாவியெழு குன்றைப்பிரான்வருகவே.

மாயா மலங்கரும மலமிவைக் கேதுவா மலம்வே ரொடுங்கழன்று வலியதன் சத்திகெடு மாறுதிரு வருள்பதிய வந்துபதி செம்மலர்த்தா ளாயாத வெம்மனமு மகலாத தாளடிய ரவிர்புதல்வர் தோழர்தாங்க ளடைந்தமார்க் கம்பொலிய வெண்ணுந் திருத்தா ளாவுரி நிகர்த்ததூசு காயாத கானீத்த மலரொடு விரித்தலிக் கடையிற் பெயர்த்துவைத்துல்லாக் கருங்கொண்டல்போல்வானு மிகையெனக்கடல்சூழ்ந்த காஞ்சினியுளாரையெ கூயா தரிக்குங் குணந்தழுவு சேவையார் குலசிகாமணி வருகவே [வே. கொன்றைச் சடாடவியர் மன்றைப் பாவியெழு குன்றைப் பிரான்வருக

வேறு.

நலத்தி னுயரும் பழையனூர் நாளும் பொலியு மவையகத்து
நலிவு புரிகீ லியைக்கண்டு நடுங்கா நின்ற வணிகனுக்கு
நிலத்தி லியனின் னுயிர்க்கிறுதி நேரு மாயி னியாமெல்லா
நெருப்பின் முழுகி யுயிர்துறப்போ மீயோ ருதியென் றுரைத்தபடி
வலத்தி னுயரச் சொற்றவரு வண்ண மெழுந்ாக் குழிமுழுகி
வடவா ரணியத் தாடொருவர் மலர்த்தா ளடைந்த வெழுபதின்மர்
குலத்தி னுதித்தா ரருண்மழைபெய் கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக் கோமான் வருக வருகவே. (சு)

அண்ட மளவும் வளைநாட்டி லரசர் கலக மாதலினு
லாங்காங் கொருவி வணிகரெலா மயனுட் டகம்புக் கினிதமர்ந்து
விண்ட கலகத் திறந்தெரிந்து மேய தத்த மிடம்புக்க
விதமுள் ளுணர்ந்து தஞ்சரண மேவி யிருந்த மடக்கொடியை
மண்ட வழைத்துக் கொடுசென்றிம் மடமா தினைக்கொள் ளுதிரென்ன
மயங்கல் கண்டு தங்கையெனும் வாய்மை கொடுமைத் தனக்கேண்மை
கொண்ட குலத்தி லுதித்தருள்பெய் கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக் குன்றைக் கோமான் வருக வருகவே. (எ)

விற்றங் கியலி பூதியுளி வினர்ப்புற் றன்பின் வழியியங்கி
வேறு வேருமம் பரசமய வெய்ய கோடை முழுதொழியச்
சிற்றம் பலநா யகர்கருணைத் திரைவா ரிதியிற் படிந்துண்டு
திசையெங் கணுந்தோற் றிடமின்னித் தீய வொழுக்கந் தபக்கறுத்துக்
கற்றங் கமையார் மலத்துன்பங் கழல வாமா முழக்கெழுப்பிக்
கருதா நின்ற திருத்தொண்டர் காமர் வாய்ந்த சரித்திரமாங்
கொற்றம் பொலியு மழைபொழிந்த கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக் கோமான் வருக வருகவே. (அ)

விள்ளு மலரா னனத்தானும் வெய்ய சுதரி சனத்தானும்
விரும்பு மதிகா ரக்கையா விளம்பா நின்ற கோ[illegible]கொள்ள ல்
நள்ளும் பிரம சரியரெலா நாடும் பலாசக் கோல்கொள்ள
நான்கா மாச்சி ரமத்தமைந்தார் நயந்து மூந்தூழ்க் கோல்கொள்ளத்
தெள்ளும் வணிகர் குலமெல்லாந் தேற்றுங் குலாக்கோ லதுகொள்ளச்
செம்பொன் மோலி யரசரெலாஞ் செங்கோல் கொள்ளச் சிறுகோல்கைக்
கொள்ளுங் குலத்தி லுதித்தவருட் கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக் கோமான் வருக வருகவே. (க)

எள்ளுந் திறத்துப் பரசமய ரேறு வருக தேறுதலி
லெங்க ளுணர்வின் கணுமதரித் தினிக்கு மிருங்கோற் றேன்வருக
தெள்ளும் புலத்தர் பெறுகாம தேனு வருக வருகந்தர்
சிந்தா மணியைப் பொருட்படுத்தாச் செல்வச் சிந்தா மணிவருக

வுள்ளு மலருக் கெய்ப்பிடைவைப் பொத்துள் ளெழுமொள் ளொளிவருக
வொழியாப் பத்திக் கடல்வருக வுலவா தமைந்த சிவபோகங்
கொள்ளுஞ் சைவப் பயிர்வளர்க்குங் கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொரு மாளிகைக்குன்றைக் கோமான் வருக வருகவே. (கo)

அம்புலிப்பருவம்.

பாடமெதி யோனெனப் படுதலால் வாய்விண்டு பதினு யிரஞ்சுரும்பர்
பண்பாட வின்னரவு வீசுகழு நீர்மாலே பாய்குற வுவக்திடுதலா
னீடுசுடர் படுசம்பு வொடுகூட லாற்கலே நிரம்பத் தழைத்திடுதலா [யால்
ரனெடியவம் பரவையல றத்தோன்ற லாலென்று நிகழ்சாந்த மேயுடைமை
வாடுதலில் சேக்கிழா னுதலா னகுமோர் வளந்தழுவ லாலெமையன் [போ
ல் மானுத றெரிந்துவரு கென்றழைத் தான்மழைபெய் வானங் கிழித்து மேற்
யாடுகொடி மாளிகைக் குன்றைநக ராளியுட னம்புலீ யாடவாவே
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட னம்புலீ யாடவாவே. ()

மேயவம் போருக மெலாங்குவி தூரத்தினே விராமனே யடங்கவளவா [ளிருவை
வியசாலி யொடுபொலிய மஞ்சுவையா லோரறவர் விழியின்வெளி வந்தொ
பாயபர மன்சடா டவியமரும் வரதப் பந்தமூலை நந்தமர்கரப்
பண்ணவனு மிகையெனப் பல்லுயிரு மோம்பிடப் படுகருவி யாய்நின்றனே
நேயமிகு மிவையாதி யாலெங்கள் பெருமானே நிகரா திராயபுக்கு
நிலையேழு கொண்டமையி னுலகேழு மேயென நிரம்புபா வலர்புகழுதற்
காயமணி மாளிகைக் குன்றைநக ராளியுட னம்புலீ யாடவாவே
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட னம்புலீ யாடவாவே. ()

இரவோ னெனத்திரிவை நீமகப் பிரபுவென வெங்களே யன்பொலிகுவ
(ன) னிகழ்ச்சிசால் கள்வனே யுவப்பைநீ யுவவாம லிவன்வெறப் பானைஞான்று
மூரவோனெம் வள்ளலே கல்லோ னெடுத்தினி யுரைப்பதெவ னீயல்லோனே
யுயர்வினு லெமன்வான வன்கா ணுரைப்பா ருனக்குமொரு தானவப்பேர்
பரவோன லாதவ னெனல்குறித் தல்லவோ பாதிகொண் டானின்னையெம்
பண்ணவனே முழுமையுங் கொண்டனன் காண்மணிப் பணியெனத் தோள்
வரவோ னுணர்ந்திடுதி குன்றைநக ராளியுட னம்புலீ யாடவாவே [புனைந்த
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட னம்புலீ யாடவாவே. ()

சாறுசால் வீதித் திருத்தில்லை யம்பலந் தன்னிலெஞ் ஞான்றுநின்று
தாண்டவ நவிற்றியுல குய்யச் செயும்பரம சற்குரவ னினிது செய்யும்
பேறுமே லியவனுக் கிரகமுழு தும்பெற்ற பெரியோ னிவற்கு வாளேர்
பேணுகுர வன்பாங்கர் நிக்கிர கமேபெற்ற பேதைநீ மாற்றுயர்ந்து
வீறுசெம் பொன்னெ டிரும்பொத்த போதினும் மேவொப் புரூமை மண்ணும்
விண்ணுமுண ருங்கருணை நினையழைத் தஃதிந்த வீதமோர்ந்து கொடியோ
னுறுதோய் சூளிகைக் குன்றைநக ராளியுட னம்புலீ யாடவாவே [டும்வா
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட னம்புலீ யாடவாவே. ()

எம்மையினி தாள்பவன் செம்மைமதி யோனீ யியற்கையே வெண்மை மதியோ - னெற்றைக்கு மிருதண்மை யுடையரோ டுறவுகொளு மியல்பினு னெங்களையன், வெம்மையுடை யவர்களொடு மதிதொறும் மதிதொறும் விரா யுறவு கொள்ளுவோனீ - வியக்குமொரு தன்மையோ னெங்கள்கிரு பாமூர் த்தி மெய்ம்மையொரு கால்வளருவாய், மும்மையுல கறியவொரு காற்றெய்கு வாயிவை மூயங்காதெர் காலொழிருவாய், மொழியுநீ யிவையோர்த்து மாடவா வென்றது முழுக்கருணை காணெஞ்ஞான்று, மம்மையனை யார்மருவு சுன் றைநக ராளியுட னம்புலீ யாடவாவே - யருளுருத் தேசுபொலி யருண்மொ ழித் தேவனுட னம்புலீ யாடவாவே. (ஙி)

குறையுடைய பாம்பொன் றெடுத்துண் டிமிழ்ந்திடக் குலகுலெங் தழல் வை யெங்கள் - கோமான் பெருங்கல்வி யாட்சியை யுணர்ந்துசெங் குருமணிச் சூட்டுமோட்டு, நிறைவுகெழு தூத்திப் பணுடலிப் பாம்பொன்று நேரடைய மன்றுணு - நினையின்ற தொருபாவை யிலருவே பாரமென நென்னினைத் தனையு மெண்ணேன், முறையிலெரு சிறுதூக்கி னெழுபாவை யும்புக முடித் துற நிறுத்தானிவன் - மொழியெங்க டம்பிரான் வல்லப முணர்ந்திலெகொன் முத்தமா ளிகைவானயாற், றறைமணித் திடராய சுன்றைநக ராளியுட னம் புலீ யாடவாவே - யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட னம்புலீ யாடவாவே. (சு)

செறிதமிழ்ச் சங்கத்து முதன்மையோ னன்பினங் திணையென நவின்ற நூலிற் - செப்பிய விதிப்படிக் கரிருழைத் தெழுதுகட் செய்யவாய் வெண் ணகைகலார், முறிவற வணங்குதோ றெருவிடுத லால்வளரு மொய்ம்புபெற் றனையெநாளு - மொய்த்தவெரு விடுதலத லுல்வளர்த லுழவுதொழிற் முய லிவன் காட்டுதொழிலே, மறிவரிய விந்நன்றி யுள்ளுணர்ந் தனைபென்னின் வாரா திருப்பை கொல்லோ - மதியோ னெனும்பெயர் குறிப்புரு மற்கவிக மகன்வாதி வாக்கியாய, வறிவர்கழ கம்பரவு சுன்றைநக ராளியுட னம்புலீ யாடவாவே - யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட னம்புலீ யாடவாவே. (எ)

பெருநாவ லோவெனு முழக்கரு மெண்பாற் பிறங்குபயிர் கொடிசெடியெலாம்
பேணுங் கருக்கொள்ள நீயுக கரித்தலுட் பேணு திருந்தானலன்
றிருநாவ லூரர்கே காழியார் கூனறத் திருவாய் மலர்ந்த தொப்பச் [த்திலா
செயிர்கொணின் கூஞெழிப் பான்வாய் மலர்ந்துகூன் செய்யுளினு முறவை
ஞருநாவ லொடுபெயர் பெறும்பொலத்தினுமருமை யுறகவில்புராணத்தினே
சொப்பிலா வெங்கள்பெரு மானட்பு மதிநிற் குயிர்க்குறுதி செய்வதாகு
மருநாவ லோர்பரவு சுன்றைநக ராளியுட னம்புலீ யாடவாவே.
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட னம்புலீ யாடவாவே. ()

தலைமயிர் பறித்தமரை யிற்பா யுடுத்துத் தழைத்திரள்கை வைத்தமுழலுஞ்
சழக்கர்மத மாங்களங் கம்பரவ னீக்கியுயர் சைவநிலை யெங்குமாக்கு
நிலையுடைய தம்பிரா னின்களங் கம்போக்கி நிகழ்புனித மேயாக்குவா [ரேரர்
னீடுமிதன் மேலுமுதி யென்னெகொ னினக்கின்னு நேரளப் பரியசான்

கலைபலவு மோருருக் கொண்டனைய ருருணைக்கு காதலார் நிற்கவுங்னைக்
கடைக்கணித் தாடவா வென்றழைத் ததுபெருங் கருணையே கங்கை யினு
கலைமருவு புனல்வளக் குன்றைநக ராளியுட னம்புலீ யாடவாவே [மிக்
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட னம்புலீ யாடவாவே. ()

காதலொடு வாவென் றழைத்தவுடன் வந்திலான் கருதியதெ னென்று
சற்றே - கறக்கச் சிவத்தல்கூ டாதுகாண் பூண்டான் களங்கத் திறத்தி
னென்று, போதலுற யாம்புகன் றேமினி முளிந்திடிற் போக்குவே றில்லை
யாகும் - புன்மையா னிவனென்றெ ணிகவிகூறின் முக்கட் புராதனனு மூனை
வெறுப்பன், வீதலுற லேயன்றி வேறெண்று மூள்ளதுகொல் வீலோகுவ
தினைத்துமோர்ந்து - மேயினேன் மேயினே னென்றடையி னலமுண்டு மே
லுலக வாழ்க்கையோர்மிக், காதலுற விழைதருங் குன்றைநக ராளியுட னம்
புலீ யாடவாவே - யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட னம்
புலீ யாடவாவே. (கo)

சிற்றிற்பருவம்.

வாருந் திருவீ தியிலெருசார் வண்ணித் திலங்கள் கொடுமுயன்று
வருக்குந் திறத்தே யறிவுசெலு மாண்பா னினது வரவுணரா
தாரு மிருக்கை யெழாதிருந்தோ மறிந்து தருக்கி யிருந்திலமா
லண்ண லஃதுட் கொண்டுபகை யமையப் பாராட் டுதலழகோ
வோரும் புகழ்க்கற் பகத்தளிக ளொருங்கு மொய்ப்ப தெவனென்றே
யும்பர் நடுங்கி நிலைகுலைய வொருவேற் றுமையு முணர்வரிதாச்
சேரும் பொழிற்றண் டகநாடா சிறியேஞ் சிற்றில் சிதைதியேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட் செல்வா சிற்றில் சிதைதியேலே. (க)

ஒழிக்குந் திறத்தி னருகந்த னுறையாகின்ற பாழிகொலவ்
வுறுவ ரமரும் பள்ளிகொன்மற் றுள்ளா ராய பரசமயர்
பழிக்கும் படிவா ழிருக்கைகொல்யாம் பாங்கிற் புரியிச் சிறுவீடு
பதத்திற் சிதைத்தால் வருகின்ற பயன்புண் ணியமோ புகழ்கொல்லோ
சுழிக்குஞ் செலவிற் பாலிகதி சுரந்து பாய மாலியானைத்
தொண்டை யெடுப்பு மறையும்விதக் துவன்றி வளர்ந்து வீலாசெங்கெல்
செழிக்கும் வயற்றண் டகநாடா சிறியேஞ் சிற்றில் சிதைதியேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட் செல்வா சிற்றில் சிதைதியேலே. (உ)

வெய்ய வமையும் பரசமய வீருப்பஞ் சுமந்த திருவில்லார்
வீனையைச் சிதைத்தி யவர்மாயை வீயச் சிதைத்தி யாணவமு
நையச் சிதைத்தி யிவைசிதைத்தா ஞடும் புகழ்புண் ணியமிரண்டு
நாளு நினக்கு மேன்மேலா நகையா மெங்கள் செயல்சிதைத்தல்
வையம் வியக்குஞ் செநகரும்பும் வாழைக் குலையும் பசுங்கமுகும்
வயங்கு மிளநீ ரிளாங்கலியு மகவா னவைக்கோ ரலங்காரஞ்

செய்ய வுயர்தண் டகநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட் செல்வா சிற்றில் சிதையேலே. (கூ)

பொருந்து நிலத்தே ராலுழுதல் புகழாம் விதியு மதுவாரும்
பொருந்தா நிலங்கா லாலுழுதல் புகன்ற வீரண்டு மொன்றுமோ
வருந்து மரிய திருவடியு மண்டு புழுநி யடையுநறு
மலர்தோய் பவைமற் றிதுதோய்தல் வழக்கோ கண்டார் சகிப்பாரோ
முருந்து முறுவன் மடமாதர் முயங்கும் பொழில்வாய்க் சருஞ்சுரும்பர்
முரலா நின்ற பண்கேட்டு முகந்து கொடுக்கும் பொற்காசிற்
செருந்து மலர்தண் டகநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட் செல்வா சிற்றில் சிதையேலே. (ச)

உற்றூர் சகியார் புனலாட்ட லுரியார் பலரு மடிக்கடியில்
வொல்லாப் புழுநி தோய்வெவனென் றுரைப்பார் தவஞ்செய் தருமருந்திற்
பெற்றூர் செவியோ ரினும்பதைப்பார் பிறங்கக் காணி லென்படுவார்
பேசா வருமை பாராட்டிப் பேணி யெடுப்பா ரையுஞ்சினப்பார்
கற்றூ ரரிய நூல்பலவுங் கண்டார் விளங்க நூலினுரை
கறைந்தார் வகைந்து சிவனடியிற் கலந்தார் கடந்து பரசமயஞ்
செற்றூர் செறிதண் டகநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட் செல்வா சிற்றில் சிதையேலே. (ஙி)

தாங்கும் வளவ னனபாயன் றன்கண் மணியா யவனமைச்சர்
தங்கள் சூளா மணியாயுத் தமச்சோ ழப்பல் லவனெனும்பே
சோங்கும் படிகொள் விண்மணியா யுவக்கு மடியார் சரித்திரமுற்
றுரைசெய் தருள்சிற் தாமணியா யுயர்வு பூணி னிளம்பருவ
வாங்கும் பிறைநன் னுதலார்செய் வண்டல் சிதைக்க வேண்டுவதோ
வாழைக் குருத்து மதிடுப்போய் மாரன் குடைக்கோர் காம்பாகித்|
தேங்குந் திருத்தண் டகநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட் செல்வா சிற்றில் சிதையேலே. (சு)

ஏத மகல வளவன்முன மேற்று குடிக ளொருகாற்பத்
தெண்ணு யிரத்து ளொருகுடியென் றியம்பே மபய னமாத்தியருட்
போத மருவு மொருவ னெனப் புகலேம் புராணஞ் செய்தாருட்
பொலியு மொருவ னெனநவிலேம் புகலின் மூவ ருளுமொருவ
ஞத மகன்ற பரமனென நவிலி னடைவ தடையுமென
நன்று தெரிந்தே மெங்கள்செய னயவா திருக்குந் திறமென்னே
சித வளத்தண் டகநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட் செல்வா சிற்றில் சிதையேலே. (எ)

பொன்னஞ் சிலம்பு புலம்படிமண் பொருந்தித் தூளையும் விழைவடையிற்
பொலியும் பற்ப லுபநிடதம் புகறல் கேட்டு நீரெருவு
முன்னங் கொள்சிற் சிலர்நுதலின் முயங்கிப் படிந்த மண்டோய்ந்து
முருங்கத் தூளை கூடிடினம் மோக மவர்நீத் தழ்வாரே

கன்னங் கரிய கடாப்பாய்ந்து காமர் பொய்கை நீர்கலக்கல்
கழிந்தோட் டெடுக்க வராலெழுந்து கடிக மோதப் பலவுதிருந்
தென்னம் பழத்தண் டகநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட் செல்வா சிற்றில் சிதையேலே. (அ)

மாறு படுமன் னவரெனினும் வளவன் கழற்கா ரொழினவர்வாழ்
மணிமா ளிகைகண் மிக்குயரு மாறு விடுப்பாய் மறையோர்மூற்
கூறு படுநம் பரனடியார் குறிப்புள் ளுணர்ந்து நெடுவானுங்
குறுக நிமிர்மா டங்கள்பல குயிற்றிக் கொடித்துக் குடியமைப்பாய்
வேறு படுமா றியாம்வகுத்த லீட்டை விடுத்துச் செலின்வரலென்
வேழக் கரும்பின் சாரேழுடி விரிந்த கரம்பும் பாய்த்துகுழை
சேறுபடு தண்டகநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட் செல்வா சிற்றில் சிதையேலே. (கூ)

அலைக்கும் புனல்சூ ழும்பலத்தி லாடும் பெருமா னருள்பெற்ரு
லவன்செய் தொழிலோ னாந்துணடி வமைந்த தொழிலோ மேற்கோட
னிலைக்குங் கடையென் ரெழித்தனையோ நினையா நிற்கு மனுக்கிரக
நீயே யதுசெய் யாவிடினெந் நிரப்பு நீக்கு பவரியாரே
மலைக்கும் பிறவிப் பிணிமருந்தே வாழ்த்து வார்சிந் தாமணியே
வயங்குஞ் சைவப் பெருவாழ்வே மாருக் கருணை மாக்கடலே
சிலைக்குந் தமிழ்த்தண் டகநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட் செல்வா சிற்றில் சிதையேலே. (கo)

சிறுபறைப்பருவம்.

ஆயபர சமயக் கருங்கடா யானைக் கரிக்குருளே வாய்முழக்கு
மரும்புகழ்ச் சைவப் பசும்பயிர்க் குலகுசூ ழாழியுண்புயன் முழக்கும்
பாயமிடி யாளருக் களவில்பொன் செறிசெய்த பண்டார வாய்திறந்து [க்கு
பலவுங் கவர்ந்திடுமி னெனைநெறித் திடுகொடைப் பயன்மரசி னெழுமுழ
நேயமிகு வளவர்பெரு மாற்காக வப்பாரி னேர்ந்ததன் படையெழுப்பு [ர்ந்து
நிலாம்பணே முழக்குமா கக்குணின் மலர்க்கை கொடு நிகழ்பாலி வளணுண
தேயமுழு தும்பரவு தண்டீர வளகாட சிறுபறை முழக்கி யருளே [ளே.
தென்றலங் கன்றுலவு மன்றவொண் குன்றைமுனி சிறுபறை முழக்கியரு

ஓங்குமுனி வரிருவர் கைகுவித் தாமுழக் குறவெழுப் பிக்களிக்க
வுலகமுழு தீன்றசிவ காமவல் லித்தா யுலோசனம் விடுத்துநிற்கப்
பாங்குபுனை செம்பொனம் பலநடன ரவிலும் பரஞ்சோதி மதிவொழுக்கும்
பச்சைத் தழாயண்ணல் மத்தள முழக்கினும் பரவுபே ருவகை பூப்ப
வாங்குதிரை யாற்பாலி வீசுசெம் மணியும்வெள் வயிரமுங் கரைவிராவ [டுக்குங்
வண்பகிர் மேயும்வளே கோட்டெருமை யதுகண்டு வாய்நீவரி இயோட் டெ

தேங்குதிரு வம்பரவு தண்டீர வளநாட சிறுபறை முழக்கியருளே [ளே.
தென்றலங் கன்றுலவு மன்றவொண் குன்றைமுனி சிறுபறை முழக்கியரு

புகழ்சரியை கிரியையை யனுட்டித்து வருகின்ற புண்ணியப் பேற்றினுக்கு
புலரியிற் சிவபிரான் றளியெழுஞ் சங்கமுற் போதரு முழக்காகவு [ப்
மிகழ்வில்சிவ யோகசா தனமரீ இ யம்முறை யியங்குகிற லாளருக்காங்
கெழுகின்ற சங்கபட கம்பேரி யாதியி னிசைப்பெரு முழக்காகவு
மகழ்கின்ற பாலியாற் றலையெழீஇக் கற்பக மலைத்தோட வதனடிக்க
ணவாய்நின்ற காமதே னுவை நோக்கி நின்ஞ லமைந்ததிப் படரெனுனி
திகழ்கின்ற செல்வமுயர் தண்டீர வளநாட சிறுபறை முழக்கி யருளே [ளே.
தென்றலங் கன்றுலவு மன்றவொண் குன்றைமுனி சிறுபறை முழக்கியரு

ஆன்றசிவ புண்ணிய முழக்கமும் பற்பலவ ராயவடி யவர்தம் வரலா
ருகிய சரித்திர முழக்கமுஞ் செய்வமண மகலாத தமிழ்முழக்கு
மேன்றபல வாமுழக் கமுமிணை யிலாதாய வினியதிரு வருண்முழக்கு
மெய்துதற் கரிதாஞ் சிவானுபோகப்பே ரிரும்பெரு முழக்குமான [கண்
மான்றபைங் கமுகம் பொழிற்றலைத் தவிர்செய்ய மதுவநிறை சேத்தடைக்
வான்பிறைக் கோடுதற் கவரின னெனக்கீள வாவிகுள மோடை யெங்குந்
தேன்றவழ வதுவிமுழ் தண்டீர வளநாட சிறுபறை முழக்கி யருளே [ளே.
தென்றலங் கன்றுலவு மன்றவொண் குன்றைமுனி சிறுபறை முழக்கியரு

வில்லூரு மணிமேமலி வளவர்பெரு மான்பொனடி வீழாத மருவலர்க்கும்
வெண்ணீறு கண்மணி புனைந்தைந் தெழுத்தெனு வீணராஞ் சமயருக்கு,
மெல்லூரு மொண்சிவ மணங்கமழ்த லில்லா தியைந்தநிந் தாமணிமுத - லெள்
நூற்கு நெய்தலம் பறைமுழக் கேயாக வெல்லொளி மழுக்குமேனிச், சொல்
லூரு மெம்பிரான் பெருமதம் பொழிமண் டுழாங்கைமா லியானேதந்த -
தோற்போர்வை போர்த்தெனத் தென்றல்வந் தலைவழ றோற்றதோமாஞ்
சோலைமேம், செல்லூரு மேன்மையமை தண்டீர வளநாட சிறுபறை முழக்கி
யருளே - தென்றலங் கன்றுலவு மன்றவொண் குன்றைமுனி சிறுபறை முழ
க்கியருளே. (ஙி)

வேறு.

பிதிருந் தரமற வின்பா ளளவிப் பிழிசுவை மதுவிரவிப்
பிறங்கிய புல்ல தண்டூ நிறீ இச்சுவை பெறுங்கண் டுங்கூட்டி
யெதிரும் பொருளில் பலாக்கனி மாங்கனி யிவை வாழைக்கனிமு
னியையு முழுக்கனி முந்திரி கைக்கனி யிவ்விரதமு நாட்டி
யதிருங் கடலலிர் தமுமு ளுறுத்தி யவாங்குமுல் வீணையிசை
யத்தனே யும்புக வைத்துச் சிவமண மகலா தேகமழ
முதிரு மருட்கவி பாடிய புலவன் முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரான் முழக்குக சிறுபறையே. (சு)

அத்தி தருங்கவி யென்மரு கன்ரு வறைகுதி ரம்மட்டோ
வவாவிய புத்தி தருங்கவி யென்மரு மதுமட் டோவின்னுஞ்

சித்தி தருங்கவி யென்மரு மெல்லாத் தீர்த்தங் களுமுறுமா
செய்யாச் சுத்தி தருங்கவி யென்மருஞ் செப்பிய வம்மட்டோ
பத்தி தருங்கலி யென்மரு மாகிப் பாரிற் புலவரெலாம்
பல்லா றோதுபு பாராட் டக்கதி பற்றிய பல்லோர்க்கு
மூத்தி தருங்கவி பாடிய புலவன் முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன் முழக்குக சிறுபறையே. (எ)

கனிவி லமைப்பொரு வார்களு கெஞ்சு கனைத்து கனைத்துருகக்
காமரு பத்தியும் வயிராக் கியமும் கலினக் குதிகொள்ளத்
தனிவிள் பொன்மேரு வெனைக்கொடு திரிபுர தகனம் புரிபெருமான்
றயங்குபொ னம்பல நின்றுபல் லீலாஞ் சலிசெய நடநவில
நனிவி ளிம்புகழ் மிகுசம் பகதரு நாவுக் கிறையவரு
நாவலர் கோவுஞ் சிகர கம்பித நன்கு புனிக்தருள
மூனிவி றமிழ்க்கவி பாடிய புலவன் முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன் முழக்குக சிறுபறையே. (அ)

நந்து புராணமெவ் வளவா யிற்றென நாடுறு மனபாய
னைமகிழ் பூப்ப மணிக்கா வாயிர நண்ணிய மண்டபவாய்
வந்து வீராவு மிடத்தி னமர்ந்து வயங்குறு கையேட்டின்
மாண்பார் தண்டங் கொண்டக கெழுதுகர் மாரு தேயெழுகப்
பிந்து வணைந்த வெழுத்தினு ளொன்றும் பெயரா தக்காமாம்
பெயர்ப்பொரு டேற்றுபு நிலபெற யார்க்கும் பெட்கும் விருப்பமெழ
முந்து தமிழ்க்கவி பாடிய புலவன் முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன் முழக்குக சிறுபறையே. (கூ)

தகுகு தமகமெகதிரா நினறுள முருகத தளிந்த நுடுவளவன்
றன்செவி பரிசன ரஞ்செவி மறையவர் தஞ்செவி யுங்கேட்க
வெங்கு மளாம்புக ழிச்சே வையர்கோன் யாம்ம முதனல்க
வெம்மடி யார்வர லாறு முழுக்க வினிக்கப் பாடினனுற்
பொங்கு விருப்பிற் கேட்குக வெண்ணப் பொன்னம் பலவாணர்
பொலிதிரு வாக்கடி ஞெகிழியி ஞெலியொடு பொற்ப வெழுப்பவருண்
முங்கு தமிழ்க்கவி பாடிய புலவன் முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன் முழக்குக சிறுபறையே. (க0)

சிறுதேர்ப்பருவம்.

மருவாய் நறுந்தா தகித்தொங்கல் வளவர்கோ மகணுட னிவர்ந்திருகையு
மணிக்கவரி வாங்கிவீ சக்கற்பகப்பூ மகிழ்ந்து வானுடர் தூற்றப்
பெருவாய் திறந்துபட கம்பீரி முதலாம் பெரும்பேண யெலாமுழங்கப்
பிறங்குமூ வாயிரவர் முதலியோர் மறையொலி பிறங்கத்தொடர்ந்துபோதக்
கருவா யுறுமற்றை யாருந் தலைக்குமேற் கைகுவித் தேத்தி மேவக்
கருதும் புராண முடிவிற்குஞ் சரத்திலை கடத்திவர்ந் தோங்குதில்லைத்

தெருவா யுலாப்போது சேவையர் குலாதிபன் சிறுதே ருருட்டியருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்திஞனே சிறுதே ருருட்டியருளே.()

முறியுமல ரும்பொருவு திருமேனி யுமையம்மை மூவுலகுயத்தமுவு
மூரிப் புனற்கம்பை யெம்பிரான் றிருமேனி முற்றுங்குழைத்தஞான்றி
லறியும்வகை யறமெலாம் பொலியவிரு நாழிநெல் லளந்தப் பிரான்கொடுக்க
வணையமா தேவியேற் றேற்றதை யுயிர்த்தமக ளாலுயிர்த் தோர்கனேசன்
னெறியுகல னும்பெருக வுறுனெல் குறித்தவர்கை நீட்டப் பணித்து வாங்கி
நீடுங் கொழுக்கொடுதம் முனியுதவி யானனி நிரம்பப் பெருக்கு குடியுட்
செறியுமொரு குடியாய சேவையர் குலாதிபன் சிறுதே ருருட்டியருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்திஞனே சிறுதே ருருட்டியருளே.()

வெருவப் பகைக்கடல் சுவற்றழ லரும்புகண் வீசாத்தாத தித்தொடையலான்
வீசவீ சப்பெற்று வாம்பரி யுகைத்துமினிர் வெங்கடாக் களிறுகைத்து
முருவக் கதிர்த்தரள மாலைகால் யாத்திட்ட வொள்ளொளிய யான மூர்ந்து
மொருகும்பி யாரூர னேப்புகலி யாண்டகையை யொப்பா யினுயதான்று
மருவப் பொலிந்த மட்டேரூரின் மூதலடி மரீஇயுவிரு வருளொருவரு
மானுவாய் வையக மெடுத்தேத்த நிறைபுனல் வயங்குமூ ருணிநிகர்த்த
திருவப் பெருக்கினமை சேவையர் குலாதிபன் சிறுதே ருருட்டியருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்திஞனே சிறுதே ருருட்டியருளே.()

வசைதவிர் வினைத்திட்பம் வாய்ந்தாக வப்பாரின் மாற்றல ரெதிர்ந்த காலை
மழைமதக் களியானை வாம்பரி சயத்தனமுன் மற்றுள வருதினிபெலா
மசைவில்பல் படைக்கலங் கொடுநூழி லாட்டுபு லாரு வெழுந்த செய்தோ
ரவ்வனிக வழனிழுத் தோடியுவ ராழிப்புக் களவிதிடர் செய்யநோக்கி
யிசைமல ரலக்கலொடு வாகையுஞ் சூடியா ரெய்தப் புனைந்த பெருமா
னிரும்புலியை மேருமுடி யேற்றிப் பெருக்தே ரிணைக்குற வுருட்டுகேம்
திசைதிசை யுருட்டச்செய் சேவையர் குலாதிபன் சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்திஞனே சிறுதே ருருட்டி யருளே.

சாதகப் பறவைக் கிரும்புயற் குளியுஞ் சகோரத் தினுக்குதிக்குஞ்
சந்திரன் விடுங்கரமு மம்புயத் திற்சேமு தாம்பரித் தேசிரவியு
மேதக வுறுந்தவத் திற்கருளு மவ்வருள் விளக்கத் தினுக்குழுவலு
மேவருங் கல்விக்கு நுண்ணறிவு நுண்ணறிவு வீக்கத் தினுக்கொழுக்கு
நோதக விலாதமைந் தாங்கருள் வழிச்செலீ இ நோய்ப்பிறவி:போக்குவார்க்கு
நேற்றவர் புராணமில் லாத மைதராதா துவன்றெம்மை யாண்டபெம்மான்
நீதக மதித்திடாச் சேவையர் குலாதிபன் சிறுதே ருருட்டியருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோனிறுத்திஞனே சிறுதே ருருட்டி யருளே.()

எய்குன்ற வார்சிலைப் பெருமா னுளத்துவகை யெய்தமறை யோர்கள் குழுமி
யியையவபு காணமெல் லாந்தகச் சேர்த்தினிய தென்னுமொரு தேர்திமர்த்து
பொய்குன்ற யாகுண் டகத்தழ லெழுப்பமேற் போயபூம் புகைவாஞெடு
பொலியுமுச் சைச்சிரவ மயிராவ தந்தான் பொறுத்தநிற மேவச்செயா

மெய்குன்ற வந்தவா றென்னெனைக் கற்பகம் வெதும்பப் புரிந்து பின்னும்
விண்ணுடங்கவு நண்ணு வரம்பையர் வீழித்துணே பொருங்கி மைப்பச்
செய்குன்றை யம்பதிச் சேவையர் குலாதிபன் சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோனிறுத்தினேன் சிறுதே ருருட்டி யருளே.()

புழுங்குங் கதிர்ப்பரிதி யெழமுறுக் குடைமுகப் புண்டரீகத் தடத்துப் [தே
பொலிதரச் சூழ்ந்துநிற் கின்றதரு வீடபமலர் பொழிமத முமுக்க வீழ்ந்
யெழுங்குங் குமத்தோ ளிணைந்தமுலை யார்கள்கன விரதமன் றென்றுநீங்க[யா
வெறிதிரை கொளுங்காலை யளவிலோ திமமாங்க ணெய்திப் படிந்து தளே
வழுங்குந் தரத்தவாய் மேலெழுமுன் னீங்கியோராகமுழு வதுகனேந்தே [குஞ்
யருமைவெண் முகில்செய்ய தேன்பொழிக லெனவியந் தாகாய நோக்கிநிற்
செழுங்குன்றை யம்பதிச் சேவையர் குலாதிபன் சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினேன் சிறுதே ருருட்டி யருளே.

வெங்கடிய வானவ மலக்குருட் டிருளுளம் வெளிஇப் பதறியோட் டெடுக்கும்
வெண்ணீறு சாதனம் விழைந்தவர்த முககமல மேவுற் றிருருங்கு மலரும்
பங்கமுற மேவு பரசமயர்வா யாம்பல்பல வுக்தியர மைந்து குவியும்
பாவுவே தாகம புராணமெனு மங்கலப் பணிமிக் கெழுந்தொலிக்கு
மங்கலுழு மாதரா ரூடலி னெறிந்தகுழையன்றித் தடுப்பாரில
ரவைகளீயு மகலுற வகற்றினே மண்ணகத் தமையவெழு கின்றதாய
செங்கதி ரெனச்சொலச் சேவையர் குலாதிபன் சிறுதே ருருட்டியருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினேன் சிறுதே ருருட்டி யருளே.

சுவையமையு மோதகங் களிபலவு மற்றவுந் தும்பிமுக வற்குநல்கித்
தொழவமுது செய்தலா லூறென் பதிந்தகர் சூழ்நக ரினும்புகாது
நவையதடை யாதென்னி னச்சுமுதல் வலியவே நவிலவேண் டுவதினியெவ
னன்னுதற் றிருநீறு நிலவெறிக் கக்குழை நலங்கொண்மணி வெயிலெறிக்க
வவையகம் வியக்குமுப் புலவரருண் முக்கனி யருந்தமிழ்ச் சுவையணைத்து
மாராய்ந் தெடுத்துப்பல் செய்யுண்முக மாவறிய வறிவித்த பெருகாவலன்
சிவையுதவு சொற்கொண்ட சேவையர் குலாதிபன் சிறுதே ருருட்டியருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினேன் சிறுதே ருருட்டி யருளே.

பண்புகெழு நின்சரித் திரமினிய பாவாற் பரப்பிய திருக்கைலாய
பரம்பரை யுமாபதி சிவன்புகழு மவன்முனேர் பைம்புகழு மவன் வழிவரு
நண்புபுனை தவர்புகழு மினிமேலும் வருபவர் நயப்புகழு நீடுவாழ
நாடுவித நீசெய்த மாபுரா ணத்தமரு நாயன்மார் பெருமைவாழ
வீண்புகழு நால்வர்திரு வாய்மலர்ந் தருடிரா விடதேவ மென்றும் வாழ
மெய்யன் பினின்னு லயப்பணி முதற்புரி விருப்பமிக் கார்கள்வாழத்
திண்புவி யெடுத்தேத்து சேவையர் குலாதிபன் சிறுதே ருருட்டியருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினேன் சிறுதே ருருட்டி யருளே.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

சேக்கிழார்பிள்ளைத்தமிழ்ச்

*சிறப்புப்பாயிரம்.

இது,

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
அடியார்குழாத்தொருவரும், இந்நூலாசிரியரிடத்திற் கல்விபயின்றவருமாகிய

ஆறுமுகச்சுவாமிகளியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீர்பூத்த பாலாற்றின் புனல்பரந்து காலாற்றிச் சேற லாலே
பார்பூத்த குடிதழைப்பப் பலவளனு மாங்காங்குப் பரவ வாக்கிக்
கூர்பூத்த வறிவான்மிக் கோர்பலரைத் தழுவியெளவை கூறுங் கூற்றை
நார்பூத்த நாடொறும்பார் நிறுவிவருக் தொண்டைவள நாட்டின் மாதோ. (க)

மன்னியசீர் மறையொலியுந் தமிழ்வேத மறையொலியும் வயங்கு சீர்த்தி
துன்னியவா சகவொலியுந் தொண்டர்கள்செய் யரவொலியுந் துவன்றி யெங்கு
முன்னியமற் றவர்க்குவே ளாண்குலத்தோ ருபசரிக்கு மொலியு மேன்மேன்
மின்னியகா லந்தொறும்விண் ணூடுசெவிடுறச்செய்குன்றை வியனூர்தன்னில்.

நிலந்தழைப்ப வெண்ணீற்று நெறிதழைப்ப வுஞ்செழுத்து நிலவி மேன்மேல்
வலந்தழைப்ப வுயர்சைவம் வலிதழைப்ப மறுசமயம் வறப்பத் தொண்டர்
புலந்தழைப்ப வடியேம்விண் டலந்தழைப்ப நலந்தழைப்பப் பொலிவே ளாளர்
குலந்தழைப்பச் சேவையர்கள் குடிதழைப்பத் தமிழ்தழைப்பக் குறிப்பா ருய்ய.

உலகுய்யத் திருத்தில்லை நடநவில்வார் திருவருளா லொருவர் வந்து
கலவுபுகழ்ப் பாலரு வாயர்முனந் தோன்றியருட் கார ணுர்த்தம்
விலகிலருண் மொழித்தேவ னெனும்பின்னைத் திருநாமம் விளங்கிப் பின்பு
சுலவுசேக் கிழார்மரபு விளக்கலிற்சேக் கிழாரெனும்பேர் துலங்கப் பூண்டு.(ச)

காற்றுபகை யகபாய னமாத்தியராய்ப் பெருமுதன்மை கதிர்ப்பப் பெற்றுத்
தோற்றுபுறச் சமயமெலா மொருங்கவிய வென்றருளித் தொழுவார்க் கன்பு
தேற்றுதில்லை நடராசர் முதலருளுத் திருத்தொண்டர் திருப்பு ராண
மாற்றுமல மருந்தெனவாய் மலர்ந்தருளும் பெரும்புகழார் மலர்ப்பூந் தாளில்.()

தேக்குபுகழ்ச் சோணாட்டிற் றிருசிரா மலையின்மிகு திருவ மோங்குந்
தூக்குபுகழ் வேளாளர் குலாம்புகியிற் றெம்பரவே டுலங்கப் பன்னு
ளாக்குபுக ழெனத்தோன்றிப் பலகலையு மொருங்கேயாய்த் தான்றோர்பல்லோர்
வீக்குபுகழ் பரந்த கயிலாயபரம் பரையாகி விளங்கா நின்ற. (சு)

---

* இது பழையபதிப்பைச்சார்ந்தது. [பதிப்பித்தகாலம், ஹி. பி. 1876].

எங்கடுறை சையையடைந்தம் பலவாண தேவனடியினிது சூட்டத், துங் கமுடி வாய்த்துசிவ ஞானகலே யகங்கைகெல்லித் தோற்றத் தாய்ந்து, கங்கை தரித் தருள்சடையோன் பலதலத்து மாண்மியத்தன் கருத்தி னேர்ந்து, சங்கை யில்செந் தமிழின்மொழி பெயர்த்தியற்றுங் கடப்பாட்டிற் றலைமை யானேன்.

மின்னுமர னடியன்றிக் கனவினும்வே றெண்ணுத வீரதம் பூண்டோ னின்னுமெம்போ லியர்பலருக் கிலக்கியமு மிலக்கணமு மெளிது தந்தோ னன்னவன்பேர் மீனாட்சி சுந்தரரா வலவனென வாய்ந்தோ ரியாரும் பன்னுபுகழ் பூதலமு மீதலமும் பாதலமும் பரவ நின்றோன். (அ)

மற்றவர்மான் மியப்பெருமை யருமையுட னுளத்துணர்ந்து மகிழ்பே ரன்பாற், கற்றபய னின்றடைந்தோ மிம்மைமறு மைப்பயனுங் கதிர்க்கு மீதென், றுற்றருமை பெருமைதொண்டர் புராணவிரா சியமுழுது மொருங் கே தொன்றச், சொற்றபின்னர்த் தமிழெனவோர் பாமாலே தொடுத்தனன் மெய்த் துறவோர் போற்ற. (கூ)

வென்றபக ழினையார்மான் மியந்தமிழால் விரித்தருளு மேன்மை யாள ரொன்றுபுகழ் மரபிலுளா ரிதுகேயத்தற் குரியரென வுவந்து சான்றோர் நன்றுபொலி தறைசையிற்சுப் பிரமணிய குருமணியுண் ணயந்து நன்றென் றன்றுமுடி யடிகடொறுந் தளக்கவவை லியக்கவரங் கேற்றி னேனே. (கo)

சிவமயம்.

திருவாவடுதுறை

ஸ்ரீ அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்.



பாயிரம்.

விநாயகர் துதி.

சீர்கொண்ட தகுதியிற் றிரிகுணமு நிறுவிய திறத்தடிக் கருமூடிகந் - திகழ்நடுச் செம்மணி யொளிப்பணி முடிச்சிதச் சிறுபிறை வயக்கிடுதலாற், ரூர்கொண்ட மலர்செறி கிழக்குமேக் கொடுபகை தவிர்த்துதாய் நாப்பணட்டுத் - தாப்பிசைப் பொருள்கோளின் மேவவமர் கயமுகத் தம்பிரான் ருள்பரசுவாம், பார்கொண்ட தன்பொதுப் பெயரெழுத் தின்ரெழுகைப் படிகொண்ட வாவடு துறைப் - பதிகொண்டு துதிசிறப் புப்பெயரு மத்தொகைப் படிகொண்டு பா வுயிர்கள்பாற், கூர்கொண்ட வத்தொகை யதன்ரெழி லறக்கருணை குலவியத் தொகையபாசங் - கூடா தளிக்குமம் பலவாண தேசிகன் கொழிதமிழ்க் கவி தழையவே.

ஆன்றோரிலக்கணமுகமாகக் காவற்கடவுளாவா ரிவரெனத்
துணிந்து அவ்வழிச் சென்றமைகூறியது.

வழிபடுதே வுளுங்கொலேதீர் தெய்வதங்காப் புகைக்கவென வகுத்த வான்ரோர் மொழியுணர்ந்து மவ்வழிச்சென் றிலர்முன்னே நிரும்புகழ்க்கோ முத்தியெங் பொழிகருணைச் சின்மயனம் பலவாண தேசிகன்மேற் புகலப் புக்க [கள் கழிமகிழ்யா மவ்வழிச்சென் றனஞ்சிறக்கு மிப்பிள்ளைக் கவியுந் தானே.

காப்புப்பருவம்.

திருநந்திதேவர்.

பூமேவு வேதா கமப்பொரு ளடங்கலும் பொங்கொளிக் கைலேப்பிரான்
பொற்பத் தெருட்டத் தெருண்டுளா னக்குரவ பூண்டுமா லயனுதியோர்
தாமேவு மணிமுடித் தலைவணங் குந்தொறுந் தாங்குந் தொறுந்தழும்பு
தாட்புற மகங்கொண்டு பொலிநந்தி நாயகன் றன்பெரும் புகழ்பரசுவாம்

பாமேவு பேருலகர் கருமவள வீற்கருவி பற்றியோ ருழியெய்தலே [த்துத்
பாங்கென வுணர்ந்திடத் தொழிலொன்று கோடலிற் பகருநான் முகமொழி
தேமேவு முகமொன்று தழுவியா வடுதறை செழிக்கவ ளில் வீற்றிருக்குஞ்
செல்வனைக் குரவர்தங் கோனேயம் பலவாண தேவனைக் காக்கவென்றே.(க)

சனற்குமாரமுனிவர். வேறு.

எங்கள் பொதியத் திருமுனிவற் கியைந்த பழங்காப் பியக்குடியோ
னென்னக் கருணைச் சயிலாதிக் கியைந்து பிரமன் மான்மூதலோர்
தங்க ளுணர்விற் கப்பாலாய்த் தனித்தா ருணர்விற் குள்ளொளியாஞ்
சனற்கு மார முனிவர்பிரான் சாரும் புயங்க டலேக்கணிவா
மங்கள் வழியு மாமலர்த்தா ளகத்துப் போகட் டிறத்தேய்த்த
வதனை முடிக்கொண் டனனெனமண் ணறையா வாறு திருமுடிமேற்
றிங்க ளொழித்து வளர்செல்வத் திருவா வடுதண் டுறைமருவித்
திகழுங் குருவம் பலவாண தேவன் றனேக்காத் தருள்கவென்றே. (உ)

சத்தியஞானதரிசனிகள். வேறு.

பொய்யாத வேதச் சிரப்பொருளே யாரும் புறங்காண வானநின் றும்
பொலிதரு தியாகமணி கொடுவந்த மன்னனும் புந்திநாண் கொளவவித்தை
தையாத சருவசங் கப்பரித் தியாகமணி தண்பெருங் கைலேநின் றங்
தவாதெங்கு நோக்கக் கொணர்ந்தசத் தியஞான தரிசனிக டாள்பரவுவா
மெய்யாத மாமலங் கழுநீ ரெனற்கியைய வீனியகழு நீருமாயை [கஞ்
யெழினிறு றித்தற் றெரிக்குங்கண் மணியெனற் கியையக்கண் மணியுநீக்
செய்பாத வினேநீறு செயுமெனற் கியையத் திருந்தும்வெண் ணீறுமேனி
திகழவா வடுதறையின் மருவுமம் பலவாண தேவனைக் காக்கவென்றே.(ஊ)

பரஞ்சோதிமாமுனிவர். வேறு.

அந்த மரூஉஞ்சீர் முசுகுந்த னன்பிற் றந்த மணியேற்ற
வான்ற நகரங் களுட்சிறந்த வாரூ ரெனச்சத் தியஞானி
தந்த மணிகைக் கொண்டெயிர்ந்த தக்கோர் பல்லோ ருளஞ்சிறந்த
தலவ ளைய பரஞ்சோதி தாட்டா மரைக டலேக்கணிவா
மிந்த வுலகிற் பரிபாக மெய்தார் பேத மபேதமென
விசைத்துப் பிணங்கா தெய்துவித்தே யியல்பு விளக்க வுருக்கொண்டு
வந்த கருணைப் பெருஞ்செல்வன் வான்றோய் பொழில்சூழ் திருத்துறைசை
மருவுங் குருவம் பலவாண வள்ள றனேக்காத் தருள்கவென்றே. (ச)

மெய்கண்டசிவாசாரியர்.

போந்து புறத்துப் படரிருளைப் போக்குங் கதிரும் பன்னிரண்டே
பொங்கி யகத்துப் படரிருளைப் போக்குங் கதிரும் பன்னிரண்டே
யேந்து புடவி யிடத்தெனப்பன் னிருசூத் திரஞ்செவ் வாய்மலர்ந்த
வீணையில் வெண்ணெய் மெய்கண்டா னிணைத்தா மரைத்தா ளிறைஞ்சுவாம்
வாய்ந்த வடபா லாலவனம் வயங்கு தென்பாற் குருந்தவன
மருவு வாரு மருள்பெறுவான் மன்னு மெப்பா லரசவனத்

தாய்ந்த சிங்க நோக்கமென வமர்ந்து நோக்குங் குருசிங்க
மருள்கூர் திருவம் பலவாண வடிக டலமைக்காத் தருள்கவென்றே. (நி)

அருணந்திசிவாசாரியர்.

போத நவின்ற பெருங்குரவன் பொற்பார் சித்தி கேட்டுமகிழ்
பூத்துச் சிறப்புப் பாயிரமாப் பொலிய முதலா சிரியன்பேர்
சாத னினக்குத் தருமென்று சார்த்தச் சிறந்த திருத்துறையூர்த்
தலைமை யாள னருணந்தி தாட்டா மலைக டலைக்கணிவா
நாத மகன்ற பெருநிலையை நாடு முயிர்கட் கருள்புரிந்து
நாளும் பசுத்து வந்தீர்ப்போ நாமென் றதனுக் கறிகுறியாச்
சீத மலியும் புனற்றடஞ்சூழ் திருவா வடுதண் டுறைமருவுஞ்
செல்வ னருளம் பலவாண தேவன் றனைக்காத் தருள்கவென்றே. (ஈ)

மறைஞானசம்பந்தசிவாசாரியர். வேறு.

அரியபுக ழாசிரியர் பலருமுடை யவரே
யாயினும்பங் கயம்போலத் தலைமைதரு வழக்காற்
பிரியமிகு மறைஞான சம்பந்த னெனும்பேர்
பெற்றுவிளங் கியகடந்தைப் பெரியோனைத் தொழுவாங்
கரியமலப் பிணிகழலக் கழல்சூட்டி யடிமேங்
கன்மனத்தும் வன்மனத்தர் கருதாத் கனகப்
பரியமதிற் றுறைசையகத் துங்கழலா தமரும்
பலவாண தேசிகனைக் காத்தருள்க வென்றே. (எ)

உமாபதிசிவாசாரியர்.

விரும்புசிவப் பிரகாசத் தவப்பிரகா சமிலா
வெய்யயாங் கண்மையுவச் சிவப்பிரகா சத்தோ
டரும்புபல் லூலருளிச் செய்தவருட் குரவ
னண்ணலுமா பதிசிவனே யஞ்சலித்துத் துதிப்பாம்
பெரும்புலவர் பெரியோனென் றறிந்தேத்தப் பட்ட
பின்னருமம் பலவாணப் பெயர்புனைந்த கள்வன்
கரும்புகமு கெனவோங்கும் வயன்மலிதண் டுறைசைக்
கண்ணமரண் ணலைகாளுங் காத்தருள்க வென்றே. (அ)

அருணமச்சிவாயர்.

இருண்மலமு மாயையுமற் றிருவினையுங் கழிந்தின்
பெய்திடவெய் திடுமுயிர்கட் கினிதருளுந் திறத்தா
லருணமச்சி வாயனெனக் காரணப்பேர் புனைந்த
வண்ணலடித் தாமரைக ணண்ணல்குறித் திடுவாம்
பொருண்மலிசெங் கொன்றையொடு வெள்ளெருக்கு மொப்பப்
பொறுத்தபழல் காரணத்தா னலவர்துதி யொடுமித்
தெருண்மலியா வெந்துதியுங் கொண்டுதுறை சையில்வாழ்
தேசிகனம் பலவாணன் றனைக்காக்க வென்றே. (க)

சித்தர்சிவப்பிரகாசர்.

தம்மடியர்க் கிருக்குமிடம் வகையறுத்துத் தெரித்துத்
தமக்கிருக்கு மிடங்குறியா தெவ்விடத்தும் பயிலுஞ்
செம்மனத்தா ராயினுமெஞ் சித்தத்து மமர்ந்த
சித்தர்சிவப் பிரகாசர் சேவடிக டொழுவாஞ்
செம்மலரும் வெண்மலரு மெடுத்தடியர் தூற்றச்
சேவடிமேல் வீழ்தலிரு தேசிகரும் பலகா
லம்மவணங் குதல்பொருவக் கோகழிவீற் றிருக்கு
மம்பலவா ணனைநாள்க டொறுங்காக்க வென்றே. (கo)

நமச்சிவாயமூர்த்திகண் முதலியபதினல்வர். வேறு.

புரவு மிகுவள் ளுவர்குறளுட் புணர்பத் தினுமுள் பொருளிதெனப்
புகலு மொன்றிற் குருமூர்த்தம் புகல்பத் தினுமுள் பொருளிதென்று
பரவு மூலக முணர்ந்தேத்தப் படிவங் கொண்டு வெளிவந்த
பண்பார் நமச்சி வாயர்முதற் பதினல் வரையுந் தொழுதெழுவாங்
குரவு புனையா வருமிருகை கூப்பப் பொலியு மரசெனநூல்
குறியா வுணர்ச்சி யாளருமுட் கொண்டு தெளிதற் கறிகுறியா
விரவு மரச வனத்தமர்ந்து விளங்கா நின்ற சின்மயனே
மிக்க புகழும் பலவாண மேலோன் றனைக்காத் தருள்கவென்றே. (கக)

செங்கீரைப் பருவம்.

நீர்பூத்த தாமரை சமழ்ப்புறப் பொலியும்வியி ருெடியமா லுபமன்னியர்
நின்னு கமத்தின்வழி புரிதீக்கை பெற்றநா ணீக்கின னெனப்புழுங்குந்
தார்பூத்த கூந்தற் புலிக்கோதை யதுபெறத் தண்ணீரி லசைவிலாது
தானின் றருந்தவஞ் செய்வள்களே யாவுடைத் தன்மையளு மாதலாலப்
பார்பூத்த நாற்றமுட் குறியாம லுட்கொண்ட பருவமொன் றேகுறித்துப்
பங்கயச் செங்கைதலே மேல்வைத் தெடுத்தொரு பதஞ்சூட்டி முகமலர்ந்து
சீர்பூத்த பேரருட் டிருமேனி கொண்டவன் செங்கீரை யாடியருளே
நிற்பரன் முறைசையம் பலவாண தேசிகன் செங்கீரை யாடியருளே. (க)

மூன்றைமறை யாவையு முணர்ந்தநான் முகமுனிவன் முன்னின் றுதாளமொத்
முருகுவிரி பைந்துழாய் மாலேதுயல் வருபுய முருந்தனெடு முழவுதிர்க்க [த
வந்தைதலி ராகாவு மூகூவு மேழிசை யமைத்திசைத் தானைவாக்க
வரகர வெனக்கணங் களிகொண்டு துளிகொண்ட வங்கணர்க ளாகியேத்த
நிந்தைதலி ரிருமுனிவர் புடைநிற்க வேண்டுமென நினையாதி நினைவையாயி
னின்பழைய வுருவமொடு நேர்நிற்றி யாலென நிகழ்த்துதற் கஞ்சமாட்டே
சிந்தைகளி கூரவருள் வடிவாகி நின்றவன் செங்கீரை யாடியருளே [ஞ்
சிற்பரன் முறைசையம் பலவாண தேசிகன் செங்கீரை யாடியருளே. (உ)

மும்மையுல கும்புகழும் வேதா கமம்பகர் மூழுக்குறி குணங்கடந்து
மொழிகின்ற பராநாத பரவிந்து வுங்கழன் முழுத்தப் ரொளியாகிய
நம்மையொரு மழவிளங் குழவியென வுட்கொடு நயந்துபா ராட்டிமறிவு
நன்ரு யிருந்தஃ தெனக்கருதி யையநீ நகையற்க நகைசெய்வையே
லெம்மையறி யாமையுடை யாரிவர்க ளென்றுநீ யின்றுதான் கண்டனைகொலா
மென்றுநினை யாங்களு நகைத்திடுவ மன்பினர்த மெய்ப்பில்வைப் பாயமுதல்
செம்மைகெறி யாரையு நிறுத்தவெழு கருணையோய் செங்கீரையாடியருளே[வா
சிற்பரன் றுறைசையம் பலவாண தேசிகன் செங்கீரை யாடியருளே. (ங)

ஐயசற் றிதுதிரு வுளஞ்செய்து கேட்கவய னரியையெண் ணுதையாங்க [வோம்
ளமைகர னினக்குவழி வழியடிமை யுண்மையென் ருவணம் வணர்ந்துதவு
பொய்யமை தாரதுபக லிரவுநின் குற்றேவல் போற்றுவ மதான்றுதுதியும்
புதுதுகி காகப் புரிந்திடுவ மலைகளும் போதா வெனத்தெரிந்து
வெய்யவுடலும்பொருளுமாவியுமடங்காவிருப்பிற்கொடுத்தவிடுவே [ழிதலுஞ்
மேலுமினியென்செய்துமினன்மேற்செய்பவர்கள்விண் ணுமிலையிதுமொ
செய்யதன் றினிநீ செயற்பால தென்கொலோ செங்கீரை யாடியருளே
சிற்பரன் றுறைசையம் பலவாண தேசிகன் செங்கீரை யாடியருளே. (ச)

காமரு மதிப்பிறையு மறிதிரைக் கங்கையுங் கங்காள மும்பிரமன்மால்
கழிதலைச் தொடையலுங் காகோ தரங்களுங் காடுபடு பொற்கொன்றையு
மாமரு விருஞ்சடையு மாகிய பெருஞ்சுமை யகன்றுயிர்ப் புற்றதிறலு
லேயநின் றிருமுடி யசைத்திட வருத்தமின் றடன்மிருக மோடுபரசுங்
காமரு விலாமையாற் செங்கைநில மூன்றத் தடுக்குமிடை யூறுமின்று
தாங்குகுஞ் சிதமின்மை யாலடி பதித்திடத் தடையெவன் புடைவிராவித்
தேமரு வுறுங்காவி சூடிய புயாசலன் செங்கீரை யாடியருளே
சிற்பரன் றுறைசையம் பலவாண தேசிகன் செங்கீரை யாடியருளே. (ஞ)

வேறு.

பிறைபடு பற்குற ளுடனெளி யப்பிணர் பெறுவெரிங் மிசையொருதாள்
பெயர்வற வூன்றுபு மற்றிரு பொற்றுள் பேண வெடுத்தொளியே
நிறைதரு குஞ்சித மாக்குத லன்று கெடுங்கக னந்தடவ
நிலவொரு பாத மெடுத்து நிமிர்ந்து நிகழ்த்தலு மன்றுபெருங்
கறையடி யானே யுரித்துரி மேனி கலப்புற மூடியொரு
காலே மூடக்கி மடக்குத லன்ற கரும்பிர சம்பொழிரே
றறைதரு மாவடு தண்டுறை நாத ஞுக செங்கீரை
யறிவுரு வாகிய வம்பல வாண ஞுக செங்கீரை. (ரு)

தூங்கப் பெருமறை யந்தண ராகியர் சூழ்ந்தனர் கொண்டாடத்
தேதாலா வாகம மூற்றுஞ் சென்னி தூளக்கி யெழுந்தாடச்
சங்கத் தமிழெனு மொருதே வுவகை தழைத்துல கத்தாடத்
தளர்வுறு பரசம யப்பே யஞ்சுபு தலைசுற் றினவாடச்
சிங்கக் குருளே யெதிர்ப்படும் யானைத் திரளென வெங்கண்மலத்
திரள்குடி வாங்கி நினைக்கரு தாருட் சென்று பதிந்தாட

வங்கத் துறைகெழு மாவடி துறையிறை யாடுக செங்கீரை
யறிவுரு வாகிய வம்பல வாண ஞுடுக செங்கீரை. (எ)

ஒள்ளிய கந்தர மேவிய கருமை யொழிந்தனை யப்பொழுதே
யுற்ற மலத்தின் கருமையும் யாங்க ளொழிந்தனம் வெங்கொலைசால்
வெள்ளிய கோட்டுக் கரியுரி போர்த்தல் விலங்கினை யப்பொழுதே
மேலிய மாயை போர்த்தலும் யாங்கள் விலங்கின மேவுபணப்
புள்ளிய வாளர வத்தொகை பூணுதல் போக்கினை யப்பொழுதே
பொங்கு வினைத்தொகை பூணுதல் யாமும் போக்கின மலர்நடுவி
லள்ளிய வாலிய கோகழி நாயக ஞுடுக செங்கீரை
யறிவுரு வாகிய வம்பல வாண ஞுடுக செங்கீரை. (அ)

பரசம யத்தவர் வாயு ணுழைந்து பயின்றிடு பிருதிவியே
பற்றிய தொண்டின் வழிப்படு சைவப் பைங்கூழ் பாம்புணலே
விரச வழுத்துநர் வெவ்வினை யடலி வெதுப்பி யெழுங்கனலே
மெய்யுற நோக்கினர் பாவ மெனுந்துய் லிலக்க வுலாம்வளியே
வாசர ணத்தின் மனத்தை நிறுத்தி வயக்கி முயக்குறுவான்
மாதவ மாற்றுந ருள்ளந் தோறும் வளைந்து விராம்வெளியே
யரச வனத்தம ருங்குரு நாத ஞுடுக செங்கீரை
யறிவுரு வாகிய வம்பல வாண ஞுடுக செங்கீரை. (கூ)

வே று.

நாவடுவொன் றறி ஞமகவின் றிடு மொண்கீல
நாடியவெங்களே கீயலென் றுறி னேந்தாய்கொல்
லோவடுவொன் றிய காளிதமென் பது விண்டேநின்
ஞேடுறலென் றுத யாநிதியென்றெவ ரும்பேச
மாவடுவென் றகண் மாதரொடுங்கிகழ் பைந்தூலி
வாலெகினம்பல வாவிதொறுங்களி கொண்டாடு
மாவடுதண்டுறை மேவுமிளங்கதிர் செங்கீரை
யாரருளம்பல வாணசவுந்தர செங்கீரை. (கo)

தாலப்பருவம்.

மூருந்து முழவ வினமாதர் முன்னி யாடும் பெருந்தடத்து
மூழ்கிச் சிறகர் வெள்ளெகின முற்றும் பாசி போர்த்தெழுந்து
பொருந்துங் கையி லிருந்துதறிப் பொலியும் பழைய நிறமடைந்து
பொலித லொருங்கு வெண்முகில்கள் புணரி தோய்ந்து கறுத்தெழுந்து
வருந்து திறத்தின் வையிவர்ந்து மன்னும் பயந்தீர் தரவுதறி
வயங்கும் பழைய நிறமுறுதன் மானுங் கழனி யுடுத்துவளந்
திருந்து திருவா வடுதுறைவாழ் செல்வா தாலோ தாலேலோ
சித்திற் பொலியம் பலவாண தேவா தாலோ தாலேலோ. (க)

வான்றோ யடுக்கு மாளிகைமேல் வவ்கு மாமை மடநல்லார்
வயங்கு பவனக் குடங்காைவெள் வாய்வாள் விழியி னுறநோக்கி
யூன்றோய் குலிசப் படைவேந்த னுடைய வமிர்த கடமென்று
மொருங்கு திருமா ளிகைத்தேவ ருயர்த்த வமிர்த கடமென்று
மான்றோய் நின்னை யடையாதா ரபேதம் பேத மெனப்பிணங்கு
மதுபோற் பிணங்கிப் பெயரினே யடைந்தார் போலத் தெளியும்வளத்
தேன்றோய் திருவா வடுதுறைவாழ் செல்வா தாலோ தாலேலோ
ஏத்திற் பொலியம் பலவாண தேவா தாலோ தாலேலோ. (உ)

ஓங்கு நினது திருமுன்ன ருயர்த்த காவிக் கொடிமதன
னுயர்த்த மீனந் தனக்கினமா யுள்ள வினத்துங் கீழ்ப்படுத்தி
வீங்கு மமர்ர் நாட்டினுக்கும் விடுத்த நினது திருமுகம்போல்
வேந்தன் சுதன்மை கிழித்தெழுந்து மேவ விளாவி ஞண்டளப்பா
னுங்கு நோக்கி நடுநடுங்கி யந்தோ சாரு வாகனு
லறைந்தா மரசன் வினவிலெவ னறைவா மெனவுட் டியரமகிழ்
தேங்குந் திருவா வடுதுறைவாழ் செல்வா தாலோ தாலேலோ
ஏத்திற் பொலியம் பலவாண தேவா தாலோ தாலேலோ. (ஊ)

கூருங் கருணை நின்காவிக் கொடிமீப் போய்க்கற் பகக்கிளையிற்
கூட நறுஞ்செந் தளிர்கொய்வான் குறித்த தேவ குருவாங்கண்
யாருங் குறுக வடைந்த வன்மற் றிதனே மயங்கித் தீண்டுதலு
மின்ன தசைய வெழுங்காற்று லிணர்த்துப் பாங்கர் நின்றசைந்து
தேருங் கவுளி னுறப்புடைத்துச் சிந்தை வெருவி மெய்ந்நடுங்கித்
தெளியா வனேயா ளோட்டெடுப்பச் செய்யா நின்ற திருவரசு
சேருந் திருவா வடுதுறைவாழ் செல்வா தாலோ தாலேலோ
ஏத்திற் பொலியம் பலவாண தேவா தாலோ தாலேலோ. (எ)

அழிக்கு நினது பழம்பகையு ளாய்ந்து வடிவம் பலதாங்கி
யடுத்த கருவி யொடுமதமே லமைந்து நிற்கு நிலையென்னக்
கொழிக்குங் கரிய காஞ்சிகளுங் கொடியால் வளைந்த பலகரும்புங்
கூவா நின்ற மாங்குயிலுங் குலவு மருதக் கிள்ளைகளும்
விழிக்குங் கமல முதன்மலரும் விரிந்த கமுகம் பாளைகளு
மீன மெழுந்து பாய்தலுமாய் விளங்கா நின்ற கருங்கழனி
செழிக்குந் திருவா வடுதுறைவாழ் செல்வா தாலோ தாலேலோ
ஏத்திற் பொலியம் பலவாண தேவா தாலோ தாலேலோ. (ஙி)

வேறு.

உலாதரு சன்மையில் செல்வ மயக்க முறாது பிழைத்தவரு
மொள்ளிய வேல்விழி மங்கையர் கொங்கை யுவத்த லொழிந்தவருங்
கையரு கல்வி முயன்று பயின்ற களிப்பி னகன்றவருங்
காமரு சைவ மலாத மதங்கள் கலத்தல் கழிந்தவரு

மிணைதரு கின்ற தருக்க மகம்பர மென்ப திரிக்தவரு
மென்று நமக்கரு ளுங்கொ லெனப்புடை யெண்ணிலர் சூழ்ந்தேத்தத்
தனையில் விளங்கும் பேரரு ளாளா தாலோ தாலேலோ
தண்டுறை சைப்பதி யம்பல வாணு தாலோ தாலேலோ. (சு)

மூளைமதி காளும் வளர்ந்திருள் சித்தலின் முண்ணு பெருங்கருணை
மொய்த்தப வுயிர்க ளிடத்தும் வளர்ந்து முருக்க மலக்கருளை
வினைகளிர் ஞாயி றெனைச்சுடர் தோற்றி வெளிப்படு மேன்மையனே
மேவிய கேவல நிலைமலர் பைந்தரு விட்டக லாத்தழலும்
வினைதரு சகல நிலைக்கட் கற்பொலி வன்றழ லுஞ்சுத்தம்
வாய்ந்த நிலைக்க ணையத்தழ லும்பொர மன்னி வயங்கிடுவோய்
தினையவிழ் செங்குவ ளைத்தொடை யாளா தாலோ தாலேலோ
தண்டுறை சைப்பதி யம்பல வாணு தாலோ தாலேலோ. (எ)

நின்னை யிளங்குழ விப்பரு வத்து நிகழ்ச்சி யுறத்துதிசெய்
நீர்மையி னெங்களை யையுற லைய நிலாவிய செங்காட்டின்
முன்னை யடைந்தது போலடை வாயெனின் முண்ணிய தெய்தாய்நீ
முற்றிய வெங்களை யேகனி கல்குது மொழிவது மொன்றுளதாற்
பின்னை யெஞ்துரை செய்குத நின்னைப் பெட்பொடு பாராட்டும்
பெற்றி யுணர்ந்தனை மற்றெரு ரிடத்தப் பெற்றிகொ டடையற்க
தன்னை யிழப்பின் விளைந்தருள் குரவா தாலோ தாலேலோ
தண்டுறை சைப்பதி யம்பல வாணு தாலோ தாலேலோ. (அ)

புண்ணிய வேத முடிப்பொரு டெளியப் புகறலி னிகரிலதாய்ப்
பொங்கொளி வெண்குடை நீழலின் வைசப் புவன நடாத்துதலி
னெண்ணிய வெங்களை வாங்கி யுனைத்தந் திடுதலி னெங்களுயி
ரென்னு நிலத்துணர் வென்புனல் பாய்த்தி யிறுதெழு பேரின்ப
நண்ணிய போகம் வீளைத்தலி ஞைத்தனை நல்வரு மென்பதலா
னருவரு ணுதி யொழிந்தொளி ருண்மை கலந்தெளி யேமெளியேங்
தண்ணிய மேலவர் சண்ணிய முதல்வா தாலோ தாலேலோ
தண்டுறை சைப்பதி யம்பல வாணு தாலோ தாலேலோ (கூ)

நகைதிக ழாகம வன்றொடர் பூட்டி நலங்கிளர் மாமறையே
நாடிய தொட்டி லெனச்செறி வித்து நலின்றப வுபதிடத
வகையணை மீமிசை வைகுமும் யாமிம் மடவர்செய் தொட்டிலினும்
வைகுவ தோவென் றெண்ணலே யெண்ணிடின் வையை யடைத்திடுநாண்
முகைசெறி யோர்தரு நிழலினும் வைகினை முதுமறை யாதிகளு
முற்றிய வோவவ ணென்றிடின் யாது மொழிந்திடு வாயளவாத்
தகைபடு சுகுணமெய்ஞ் ஞான விளைஞா தாலோ தாலேலோ
தண்டுறை சைப்பதி யம்பல வாணு தாலோ தாலேலோ. (கo)

சப்பாணிப்பருவம்.

உரைசெயப் புவனத்தி னுங்கைப் பரச்சமை யொழித்தவர்க டக்க
வேலை - யொன்றினி தியற்றநற் கெண்ணு ரதன்றியு முனைக்குமுன் செய
வும்வல்லார், கரைசெயிது நிற்கமழு மானெடுஞ் சூலங் கபாலம்வெற் றழறமரு
கங் - காணுமிவை முற்சுமை கழித்தலி னுடம்படுதல் கடன்மையே கன்று
மென்னில், வினைசெய்மலர் செற்றபொழில் சுற்றுமது மையில்விரகு வெட்டி
மண் வெட்டியங்கம் - வெட்டிப்பயின்றவங் கைத்தலங் கொடுவில வேண்டு
மென் போமென்செய்வாய், தரைசெய்பய னுய்வந்த மெய்ஞ்ஞான பாற்கரன்
சப்பாணி கொட்டியருளே - தண்டமிழ்த் துறைசையம் பலவாண தேசிகன்
சப்பாணி கொட்டியருளே. (க)

புண்ணிய மலிந்தநின் றிருவார்த்தை யென்னப் பொலிந்தபே ராகமத்திற்
போற்றுபெரு நடவையிற் சமயமும் வீசிடமும் பொற்பப் புரிந்துபின்ன
ரண்ணிய நிரத்தினின்மேற் றங்கிமனு முதலாய வத்தவடி வங்களாறு
மமைதரச் சோதனை புரிந்தபின் விரும்பிநவி லபிடேக மாதிகொண்டு
கண்ணிய நறுந்தா மரைத்திரு வடித்தலங் கருதுமச் சென்னியேறக்
கண்டபின் யாவருங் காணரீ துதவியெங் கைம்மீது மேறி மிளிருந்
தண்ணிய மலர்க்கைகொடு ஞானவடி வாயினுஞ் சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்த் துறைசையம் பலவாணதேசிகன் சப்பாணி கொட்டியருளே.

நின்னையொப் பில்லாத நின்மய னெனக்கலே நிரம்புபா டியமுனிவனு -
நெடியசிவ ஞானமுனி யாலுணர்ந் தேந்துதி நிகழ்த்தலில் வாறதென்கே,
யன்னையொப் பாங்கச்சி யப்பமுனி யானன் றறிந்தன மினித்துதித்தற் -
கஞ்சுரே மெங்கள்செய லிற்றுக வெங்களி னகப்படா தகல்வையகீ, பின்
னைமற் றுன்றெண்ணி யகலநினை வாயெனிற் பெரிதுமகிழ் செய்தல்பாட்
டே - பேணுகென வன்றுண்டர் பாற்பெரி ஞனைவன் பேசெனி னைவன்
பேசுவாய், தன்னையொப் பாய்கருணை யுருவாய நின்மயன் சப்பாணி கொட்டி
யருளே - தண்டமிழ்த் துறைசையம் பலவாண தேசிகன் சப்பாணி கொட்டி
யருளே. (உ)

தூயதிரு வாதவூ ரடிகளின் னுங்கோவை சொற்றிடத வின்றுகன்று [ன்று
சூழுமொரு மூர்த்தியின் னுங்கண்மூன் கைமூலை சொரிதரத் தேய்ப்பதி
மேயவொரு கண்ணப்ப ரின்னுங்க ணப்புவான் விழியிடக் திடுதலின்று
மெய்க்குறிப் புத்தொண்ட ரினுமுத்த மாங்கன் மீதுமோ துதலுமின்று
பாயதிரி புரரீறு பட்டமையின் மாமேரு பற்றிவாங் குதலுமாயப்
பகழிலோ டலுமில்லை சமயமிது போலுலோர் படலரிது கருணைகூர்ந்து
தாயனைய னிற்பான் முமரை மலர்க்கைகொடு சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்த் துறைசையம் பலவாண தேசிகன் சப்பாணி கொட்டியருளே.

எள்ளருங் கைலாய வளாவீற் றிருந்தா னிங்ஙனம் பாராட்டுதற்
கேற்புடைய வடிவமன் றென்னினை விடித்தன மிருந்தவர்க ணுல்வசேத்த

வி ள்ளரும் தளிராால நன்னிழலு மொருகுந்த மென்னிழலு மொருவரேத்த
வீற்றினி திருந்தநாள் சிலவன்றி யிலையென விடுத்தனம் பல்லோர்தொழ
வுள்ளரும் பேரருளி னிவ்விடத் தறையுநா ளுநிழியினு மேலுமேலு [லுறத்
முள்ளவென வோர்ந்திது துணிந்தன மகிழ்ச்சியெளி யோங்கட்கு மேன்மே
தள்ளரும்ஞ் சுத்தமேற் சித்தாந்த சைவமணி சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்த் தறைசையம் பலவாண தேசிகன் சப்பாணி கொட்டியருளே.

வே று.

விண்டல ருந்திற மின்றி யெழுந்து விளங்குறு தானவனே
வெய்யவ ளுகிய தங்கொழு நன்புடை மேவு தொறும்பற்றித்
தண்ட லிலாதிடி செய்து பொடித்துத் தாமரை மலரள்ளித்
தானெறி தரனே ராமென வெள்ளிய தண்ணிய நீரள்ளி
யண்டல்செய் தொண்டர் தமக்கருள் கையா லருணெ தயமெழுவா
யறுசிறு பொழுது மெருத்தரி பேர்த்தி யமைந்தவள் வார்முரசக்
கொண்டன் முழங்குங் கோகழி யூரன் கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாணன் கொட்டுக சப்பாணி. (சு)

பாலம் பொலிதரு செங்க ணரங்கன் படரா னமர்புரியும்
பான்மை குறித்தென வோவி யெழுந்தருள் பண்ணவ நின்ஞம
ஞாலம் பொலிதரு குரவர்கள் யாவரு நன்கு கவிற்றலலா
ஞடி வளைந்து விடுத்திடு மாற்ற னமக்கிலை யென்றயரச்
சீலம் பொலிதரு பக்குவ ரஞ்செவி செப்பி விடுத்தலொடுந்
திசைதிசை செல்ல வளைந்தும் விடுத்திடல் செய்யு மலர்க்கையினுந்
கோலம் பொலிதரு கோகழி யூரன் கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாணன் கொட்டுக சப்பாணி. (எ)

நீடிய வன்பு நிகழ்த்திடு தொண்டர் நெருங்கி வணங்குதொறு
நிறைதரு திருவருள் பொங்குற நோக்குபு நிலவுவெ ணகைசெய்து
நாடிய வன்னர் பசிப்பிணி யும்படர் நல்கு மூடற்பிணியு
நாளும் விலங்க லிலாது பவம்புக நாட்டி மலப்பிணியு
மோடி யவிந்திட வுண்கல சேடம துதவு திருக்கையினு
லுறுவிடை யின்மையி னுமுமு வாமென வுன்னுவ வானிடபங்
கூடிய மதில்சூழ் கோகழி யூரன் கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாணன் கொட்டுக சப்பாணி. (அ)

பொருவாய் தரினு மிலாதவ னேனும் போற்றி வளர்த்தமுனைப்
பொய்யில் பழக்கம் விடுத்தில னிங்குப் போந்து மெனப்புகல
வுருவாய் மையுந லொழுக்க வியும்பமு மொள்ளறி வுங்குணனு
முண்மையு மோருபு நந்தி குலத்திற் கொருகதிர் நீயென்று
திருவாய் மலருபு குமுகை கொண்டொளி திகழ்சப் பிரமணிய
தேவனே முதுகுதை வருமலர் புரையுஞ் செங்கையி ஞண்மணிசால்
குருவாய் மாடக் கோகழி யூரன் கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாணன் கொட்டுக சப்பாணி. (கூ)

சேர்ந்தறி யாநங் கைம்மல ரென்றுன் றிருவாய் மலருதியேற்
றெளியா யாங்க டெளிந்திடு மாறு சிறப்ப நினைப்பூசை
யார்ந்துமு னீயினி தாற்றிய தண்டே யன்று குவித்துளையா
லன்ன தயர்த்தனே கொல்லோ வின்று மப்பரி சேநினையா
வோர்ந்து மூணர்ச்சி யிலாப்பர சமய ருரைத்திடு வார்த்தைகளு
ளொன்றும் பொருளல வென்றுகை தட்டுத லொப்ப வுவந்தறிவு
கூர்ந்தவர் வாழுங் கோகழி யூரன் கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாணன் கொட்டுக சப்பாணி. (கo)

முத்தப்பருவம்.

கருகு மூல மலத்தினுயிர் கலப்புற் றதுவே யகப்பந்தங்
கவற்று மாயை கன்மமொடு கலந்த பந்த மகப்புறமாம்
பெருகு புறமாந் தனுகரணம் பெற்ற பந்தம் புறப்புறமாம்
பிறங்கு புவன போகத்திற் பிணைந்த பந்த மெனவிரித்தே
யுருகு மடியர்க் கிரங்கியவை யொழியு மாறு மின்னிலே
யுதிக்கு மாறு முண்மையினென் றுபதே சித்குந் திருவாயான்
மூருகு மலியும் பொழிற்றுறைசை முன்னென் முத்தந் தருகவே
முத்தன் குருவம் பலவாண முதல்வன் முத்தந் தருகவே. (க)

தங்கு பருவ மறம்பாகஞ் சத்தி பதிதல் வினையொப்புச்
சார்ந்து மலக்கட் டற்றுயிர்சுத் தத்திற் றசஞ்செய் தத்துவிதத்
தெங்கு நிறைநம் மொடுங்கலத்த லிதுவே யகச்சம் பந்தமரு
ளிடத்தி நிற்ற லகப்புறமவ் விலகு மருளி னுபகாரம்
பொங்கு மருடீர் தரக்காண்டல் புறநாம் பிரம மென்றல்புறப்
புறமா மவற்றுண் முன்னையதே பொலியா நின்ற தென்றதனுண்
முங்கும் வகைசெய் தருடிறைசை முன்னென் முத்தந் தருகவே
முத்தன் குருவம் பலவாண முதல்வன் முத்தந் தருகவே. (உ)

நாடு நிலமுன் னிருபத்து நான்கு நாளம் வித்தையெட்டு
நறிய வித்தழ்க ணுலெட்டு நாலெட் டாய கேசரங்க
ணீடு மீசர் சதாசிவரே நிகழுஞ் சத்தி கேசரத்து
ணிலவும் பொருட்டு வடிவுசிவ நிலைய வனைய பொருட்டகத்துட்
கூடு மைம்பத் தொருபீசங் குலாய வித்தய பங்கயத்திற்
குறிக்ரு நந்தா னிலையென்று கொண்டா டெங்கட் கருள்வாயான்
மூடும் பொழில்சால் வளத்துறைசை முன்னென் முத்தந் தருகவே
முத்தன் குருவம் பலவாண முதல்வன் முத்தந் தருகவே. (ங)

உற்ற வித்திய பங்கயத்தி லோரைந் தெழுத்தா கியவடிவி
லுனைக்கொல் லாமை முதலெண்பூ வறவம் மதுவா லருச்சித்தும்

பொற்ற வந்தித் தலத்தழலைப் பொலிய வெழுப்பி விந்துவகம்
புணராச் சியத்தை யிருநாடி பொய்தீர் தாக்கொண் டோமித்துஞ்
செற்ற புருவ நடுச்சிவய நிகழு மூன்று பதப்பொருளாந்
நிறமை நோக்கி யதனூலே சிவோக மேபா வனைசெய்ய
மூற்ற வுணர்ந்தார்க் கருடறைசை முன்னுஞ் முத்தந் தருகவே
முத்தன் குருவம் பலவாண முதல்வன் முத்தந் தருகவே. (சு)

நகைசெ யுயிர்க ணகிக்குமெனி னகித்த லாலொன் றுவவில்லை
நசியா வென்னி லிரண்டுபட்டு நம்மை யொன்று வனவல்ல
வுகைசெ யருத்தா பத்தியா லுப்புத் தனது கண்டிப்பை
யொழிந்து புனலி னுன்குமா றெப்பத் தமது சகசமலப்
பகைசெ யாற்றல் கெட்டொழியப் பண்பி னுன்றி நகுகழற்குப்
பகருஞ் சேட மாமென்று பரிவுற் றிறங்கட் கருள்வாயான்
மூகைசெய் பொழில்சூழ் தருதுறைசை முன்னுஞ் முத்தந் தருகவே
முத்தன் குருவம் பலவாண முதல்வன் முத்தந் தருகவே. (ரு)

வேறு.

உண்ணீர்மை யுயிருணர்ந் தியல்வே தாகம மொருங்கெடுத் துப்புகன்று
மோலமென் றபயமிடு நெடியமான் முதலமர ருய்யநஞ் சமிர்தமுண்டும்
புண்ணீர்மை யாயஞ ரழுந்துலக முய்யமூப் புரீறு படநகைத்தும்
புலவரொடு வழுநியு மயக்கந் தெளிந்தியப் பொருண்மரபு முழுதுணர்த்து
மெண்ணீர்மை யார்க்குமதி மலிகொங்கு தேரெனு மியற்றமிழ்க் கவிபாடியு
மிரும்புகழ் படைத்தநின் செய்யவா யாங்களைய விதுசெயிற் பழியாகுமோ
தெண்ணீ ருடைப்பொன்னி சூழுமா வடுதுறைச் செல்வன்முத் தந்தருகவே
சின்மய னருட்பெருங் குரவனம் பலவாண தேவன்முத் தந்தருகவே. (சூ)

மிக்கதுவர் வாய்ந்தநம் மிதழ்முன் பொருத்திப்பின் மேவக் குவிக்குமா
றோர் - வேலவன் ததுகொலென நின்றிரு வுளங்கொளேல் விமலனீ கொள்வா
யெனிற், றொக்கநின் பொதுநாம மாமைமெ தெழுத்தினுஞ் சுடருஞ் சிறப்பு
நாமத் - தொகையையந் தெழுத்தினுமெ ரைந்தெழுத் தென்னநவில் குக்குமத்
தினுநினடியார்க், கொக்கமுத லயலா மிரண்டா மெழுத்தினே யொழித்தருளு
வாய்கொலோசற் - றுரையொழித் தருள்வமெனின் முற்றமுடி யாதினே
யோர்ந்துபல மாளிகைதொறுஞ், செக்கர்மணி யிருள்பருகி யோங்குமா வடு
துறைச் செல்வன்முத் தந்தருகவே - சின்மய னருட்பெருங் குரவனம் பல
வாண தேவன்முத் தந்தருகவே. (எ)

ஒளிவார் திருப்பனந் தாளின்முன் ஞளிலுள் ஞருகிநி னடிப்பூசையாற்
றெருமாது சூட்டுபூ மாலையை விரும்பினின் னுருவமிக வங்குளிர்தா
யளிவார் மனத்தினெம் பாமாலே வேண்டுமே லவ்வளவு குளியல்வேண்டா
வையசற் றேருளிற் தெண்ணியதை யன்புட னளித்தருள வேண்டுமின்னும்
வளிவார் பெரும்புவி தெரிக்கவவ் வணற்கின் மாண்புடைக் கலயனுனை
மற்றெங் கியாஞ்சென்று தேடுவே மாதலால் வளமிக்க கழகந்தொறும்

தெளிவார் குழாங்குழுமி யோங்குமா வடுதுறைச் செல்வன்முத் தந்தருகவே
சின்மய னருட்பெருங் குரவனம் பலவாண தேவன்முத் தந்தருகவே. (அ)

முன்னோ ணின்ஞல் வெலப்பட்ட கரிவன்றி முதுமீன முதவுமுத்து
முண்டக மலர்த்தாளி லளாபட்ட வெண்மதிய முத்துநஞ் சுணவுதந்த [ம்
புன்னைவாய் நெய்தற் கடற்றேன்று மிப்பிவளை பொறையுயிர்த் திட்டமுத்து
பொருதிச லழிந்தகொக் குதவுமுத் துங்கொண்டு பூணுத னினக்கேகட
னென்னையோ துந்திற மெனிற்கின்ன மேற்றதா நிக்காளி லில்லையென்னி
லிலருகண் மணிமாலை யிடையிடைக் கோத்திடுக வெண்ணில பழுத்தபாக
றென்னைமா வாதிபல சூழுமா வடுதுறைச் செல்வன்முத் தந்தருகவே
சின்மய னருட்பெருங் குரவனம் பலவாண தேவன்முத் தந்தருகவே. (கூ)

பல்காலு நின்னைத் துதித்துநின் பதமுட் பதித்துவாழ் வேங்களுக்குப்
பயனுக வொருதர மெனுந்தந் நிடாயெனிற் பல்வளப் பூவணத்தி [மா
லல்காத மாமைநிறை பொன்னனையண் முன்னோ ளள்ளிமுத் தங்கொள்ளு
ளளவளாய் மேயதை வெளிப்பட வுரைத்திடுவ மதனினு மிரங்காயெனி
னெல்காத மற்றவ ளுகிர்க்குறி கபோலத்தி லுற்றது மூரைத்துவிடுவா [ந்து
மொண்கதிர்ச் செல்வன் மதி யோனைனத் தண்ணென் றுடம்புகூ னிக்கட
செல்காறும் வளைபொழி லுயர்ந்தவா வடுதுறைச் செல்வன்முத் தந்தருகவே
சின்மய னருட்பெருங் குரவனம் பலவாண தேவன்முத் தந்தருகவே. (கா)

வாராணைப்பருவம்.



உறந்தகதிர் மண்டிலத் தறைவது தெரிப்பதென வொண்மேனி சே
யொளிசெய - வோங்குமதி மண்டிலத் தறைவது தெரிப்பதென வொளிர்
நீறு வெள்ளொளிசெய, வறந்தலே யெடுப்பவொளி ரிவ்வொளிக ணேக்கு
தொறு மடியர்மல பந்தமுழுதே - மடலற வழித்தழி விலாதபே ரின்பநிலை
யருளித் தொடுத்திடுதலாற், பிறந்தபிர தாபமும் புகழுமே யென்றறிஞர் பேசி
மகிழ் தூங்கவனை பேசிய நுணர்ந்துகை செய்தென முகத்துப் பிறங்கு
புன் மூரலேறுன்றச், சிறந்தகிரு வாவடு துறைக்கண்வளர் திருவருட் செல்வப்
பிரான் வருகவே - செம்மைதிகழ் சிவஞான வடிவனம் பலவாண தேசிகோத்
தமன்வருகவே. (க)

உற்றபெரு மாதவ முஞற்றுநர்க் கல்லா துஞற்றுதவ மொன்றுமில்லா
வுவர்வருக வென்றழைத் திடகா மடைந்திடுத லுரிமையன் றென்று நுநினையல்
பொற்றமதி நிலவுக ரன்றிவெங் காட்டி லும் புணரிவா யுண்டெழுந்த
புயன்மழை செழும்பணை நிலத்தன்றி யுவர்பற்று புலியகத் தும்பொழியுமே
துற்றமலர் தளிர்மெத் தெனப்பரப் பினமுளத் தூயர்க்கை கொடுக்கின்றூர்
தோலாத விருதுகளு மெதிரெடுத் தேநின் றுணைத்தாள் பெயர்த்துவளமே
செற்றதிரு வாவடு துறைக்கண்வளர் திருவருட் செல்வப் பிரான்வருகவே
செம்மைதிகழ் சிவஞான வடிவனம் பலவாண தேசிகோத் தமன்வருகவே.

வருந்துத லிலாதநின் ரூள்பெயர்க் குந்தொறும் வயக்கொடுங் கூற்ற
முன்போன் - மார்பிடைத் தாக்குங்கொ லென்றஞ்ச நக்தலேயில் வைக்குங்
தலேயில்வைக்கும், பொருந்துவித மென்றகில ருண்மகிழ் தரச்சிலர் பொருந்து
மென் பூச்துரவுவப் - பூவினே மிதித்தல்வேள் கணேயடிக் கீழ்ப்படப் போகட்
டடர்த்தலேய்ப்பக், குருந்துநிழ லாளிவந் தானருட் சயிலாதி குலமணி நமச்சி
வாய - குரவன்வந் தானென்று சின்னங்க ணின்பெயர் குறித்தூத வளவிலற
மே, திருந்துதிரு வாவடு துறைக்கண்வளர் திருவருட் செல்வப் பிரான்வரு
கவே - செம்மைதிகழ் சிவஞான வடிவனம் பலவாண தேசிகோத் தமன்வரு
கவே. (ங)

பாங்குபெற வீரடி நடந்துநா லடியெனப் படிறுரைத் தனேதக்கதோ
பார்முழுது நின்விடைக் கோரடி யெனப்பகர்தல் பட்டாங்கு நீயுமூணர்வா
யோங்குமகிழ் வெய்தலினு மோரடிநடந்திடுக வள்ளடிகள் கன்றுமென்னி
லொருநாவ லூர்நம்பி வாட்டந் சவிர்ப்பதற் கோரிராப் பொழுதிஞப்பண்
வீங்குமிள மூலேயுடைப் பரவையார் மாளிகை விழைந்துதிரு வாரூர்ப்பெரு
வீதியிற் பலகா லுழன்றதறி யேங்கொலோ வேதா கமத்துநெறியே
தேங்குதிரு வாவடு துறைக்கண்வளர் திருவருட் செல்வப் பிரான்வருகவே
செம்மைதிகழ் சிவஞான வடிவனம் பலவாண தேசிகோத் தமன்வருகவே.

கள்ளுமண மும்பரவு மென்மலரில் வைக்கவுங் கன்றுநம் மடிகளென்
னிற் - கல்லுமுரு டும்பொருவு மெங்கடலே வைத்திடல் கருத்திற் பொருத்தி
லாயென், றுள்ளுதொறும் வெய்துயிர்ப் போங்குமது தீர்பொருட் டென்னடி
பெயர்த்துவைக்க - வோரடி யெடுத்துவைத் திடுவமெனி லெங்களுக் குது
போது மிருநிறத்துந், துள்ளுமகிழ் கொண்டியா மீரடி முதற்பலடி தொக்க
பா மாலேயோடு - தோன்றவோ ரடியெனு மிலாதபூ மாலேயுஞ் சூட்டுவேங்
துறைகொள்பலநூ, றெள்ளுதிரு வாவடு துறைக்கண்வளர் திருவருட் செல்
வப் பிரான்வருகவே - செம்மைதிகழ் சிவஞான வடிவனம் பலவாண தேசி
கோத் தமன்வருகவே. (ஙி)

வேறு.

ஒருவா ஞானங் கிரியையென்று மூடங்கு மறைக்குந் திரோதான
மூவப்பப் பொலியு மனுக்கிரக வுண்மை யென்று மிவ்விரண்டா
மருவா நிறைநின் றிருவடியை வகுப்பர் யாமு மிவ்விரண்டா
வருக வருக வெனவடுக்கி மகிழ்ந்த வினிப்போ மாமேதி
பெருவாய் பாய வினவாளே பிறங்கு கழுகிற் பாயவநிற்
பெயர்ந்து கருவா னரமெழுந்து பெருங்கற் பகமேற் பாயவொளிர்
திருவா வடுதண் டுறையமருஞ் செல்வன் வருக வருகவே
திகழ்சீர்க் குருவம் பலவாண தேவன் வருக வருகவே. (சு)

ஒன்று நிறுவி யொன்றெடுத்தே யூழி பலகண் டம்பலத்து
ளொருவா தொருநீ நின்றமையி னுற்ற வருத்தஞ் சிறிதுயிர்ப்பா
னன்று புகறு மடிகள்சற்று நடத்தல் வேண்டு மதின்வருத்த
நண்ணிற் முயிற் றடையின்றி நாயே முள்ளத் திருந்திடலாந்

துன்று கதிரோன் றேர்ப்பரிக டேனுந்து படர்வான் மணிமாடந்
தொறுநின் றிலகு துகிற்கொடிக டெளக்கும் வளியி னசைந்தசைந்து
சென்று புடைக்குந் துறைசையமர் செல்வன் வருக வருகவே
திகழ்சீர்க் குருவம் பலவாண தேவன் வருக வருகவே. (எ)

நல்லார் புகழுந் திருநாவ னல்லூ ரகத்தி னவதரித்த
நம்பி யியற்று திருமணத்தி ஞை நின்னே யழைத்தவரா
ரல்லார் கண்ட மறைத்தெழுந்தா யழையா திருக்க வடைந்தமையா
லாங்கு நிகழ்ந்த பெருஞ்சிறப்பு மடியோ மறைய வேண்டுவதோ
வல்லா ராய யாம்பலகால் வருந்தி யழைக்க வாராமை
வழக்கோ வழைத்த படிவந்தால் வாழ்த்தே பெறலா மையமிலே
செல்லார் பொழில்சூழ் துறைசைவளர் செல்வன் வருக வருகவே
திகழ்சீர்க் குருவம் பலவாண தேவன் வருக வருகவே. (அ)

தந்தைக் கொலைசெய் திட்டவர்க்குந் தாயர்க் கொலைசெய் திட்டவர்க்குந்
தாரக் கொலைசெய் திட்டவர்க்குந் தனையற் கொலைசெய் திட்டவர்க்கு
முந்தைத் தொடர்பி னுறுங்கடும்பு முழுதுங் கொலைசெய் திட்டவர்க்கு
முந்தி முந்திச் செல்வையெம்பான் முந்தி வருதற் கென்செய்தோங்
கந்தைக் கறுத்த கரடமதக் களிற்றீ ருரியுண் மறைந்தகருங்
கடலுண் மறைந்த கதிர்கடுக்குங் காட்சி கரந்து வெளிவந்து
சிந்தைக் களிப்பார் துறைசையமர் செல்வன் வருக வருகவே
திகழ்சீர்க் குருவம் பலவாண தேவன் வருக வருகவே. (கூ)

முத்தன் வருக யாவருக்கு முன்னோன் வருக முப்புவன
முதல்வன் வருக முன்னுனை முன்னுன் வருக மறைமுடிவி
லத்தன் வருக வகரவுயி ரனையன் வருக நமவொழிக்கு
மையன் வருக வகாரமளித் தருள்வான் வருக வாகமநூற்
கத்தன் வருக கருதுநர்தங் கருத்தன் வருக கலப்புணர்த்துங்
கையன் வருக வருளுருவக் காளைவருக கவின்மூபொலி
சித்தன் வருக கோமுத்திச் செல்வன் வருக வருகவே
திகழ்சீர்க் குருவம் பலவாண தேவன் வருக வருகவே. (கo)

அம்புலிப்பருவம்.

கலையமைதி கொடுகடுங் காரிருள் கடிந்துபைங் கழுநீ ருவந்திடுதலாற்
காகோ தரத்துதர பந்தங் கழிந்துகதிர் காலுரு வமைந்திடுதலா
லிலையமக ணண்ணளி யமைந்தெவரு மாலெனா னெனப்பொலி தருந்திறத்தா
லெழிலம்பு யங்கவிழ் தரக்கரந் தலைவைத் திலங்குயிர்ப் பயிரருடலான்
மலைவரு கதிர்ப்பரிதி மண்டிலத் தெய்தலான் மதியோ னெனப்பொலிதலான்
மானேந்தி யாகலா னெங்கள்குரு சாமிதனை மானுவா யாதலாலே

யலிலா வடுதுறைச் சித்தாந்த சைவனுட னம்புலீ யாடவாவே
யருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ டம்புலீ யாடவாவே. (க)

வண்ணமா மேருவை வளைத்தலாற் பண்ணளு மகிழப் பொலிந்திடுதலால்
வான்புலவர் பலர்சூழ் தரப்புது விருந்தாக வாய்ச்சுவை மருந்துதவலா
லெண்ணலா காதசத் துவகுணப் பிரதான மென்னத் திகழ்ந்திடுதலா [ன்
லெக்காலு மிவருரிமை யாயவெறுழ் மிக்கவிமி லேறுபுகர் கொளவிடுதலா
மண்ணலால் வானகமு மேத்தவய ராசுநிழல் வைகலா லெங்கள்குரவன்
வானகத் தலவுநினை நமையெய்ப்ப னென்றுட வருகவென் றுளதலா
லண்ணலா வடுதுறைச் சித்தாந்த சைவனுட னம்புலீ யாடவாவே
யருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ டம்புலி யாடவாவே. (உ)

கூநொண் முப்பத்து மூவருக் கமுதுதவு கொள்கையுடை யவனீயிவன்
குலவுபல நாள்கடொறு மெண்ணிலார்க் கமுதுதவு கொள்கையுடை யவனி
மூடுபுற விருடபச் சிறிதுசிறி தாச்சில முருக்கிவரு வாய்நீயிவன் [துவலான்
மொய்த்தவக விருள்வலி யொருங்குகட் டொழிதர முருக்கிவரு பவனுடலி
நாடுமொரு பணிகொளப் பட்டுழல்வை நீயளவி னருவலிப் பாம்புபூண்டு [லா
நவையிலா னிவனிவனை நீயொப்ப தெங்ஙன்மதி னட்டகொடி வானளாவி
யாடுமா வடுதுறைச் சித்தாந்த சைவனுட னம்புலீ யாடவாவே
யருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ டம்புலீ யாடவாவே. (ஊ)

தூன்னவரு மடவார் குழாத்தனீ யிவனளவி றாயமா தவர்குழாத்தன் [யா
ரொருக்கவொரு வருணமுடை யவனீ யிவன்கருணை சூழுமை வருணமுடை
னன்னரீ ரெண்கலைய னீயிவனெ றறுபத்து நான்குகலை யுடையனீயோர்
நகுமுய லுளாயிவன் விருதமுதல் யாவையினு நண்ணுபல சிங்கமுடையான்
முன்னவுங் கூடாக் களங்கனீ யெவருளமு முன்னுமக ளங்கனிவளுன்
முத்தனிவ னுக்குநினை யொப்பென மொழிந்திடார் மூடருஞ் சிவலோகமே
யன்னவா வடுதுறைச் சித்தாந்த சைவனுட னம்புலீ யாடவாவே
யருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ டம்புலீ யாடவாவே. (எ)

துலங்குபே ரருள்கொளுவி மலமாயை கன்மந் தொலைத்தள விலாதவின்ப
சுகவாரி யெவ்வுயிரு மூழ்கச் செயுங்குரவர் சூளா மணிக்குகளுங் [யாய
கலங்குநிலை யுடையையாய்க் குரவனில் விழைந்துபழி கைக்கொண்ட பாவி
காமுகா நின்னையொப் பென்றவெம் வாய்க்குமொரு கழுவா யியற்றல்வே
மிலங்குநெடு மாதவர்கள் பல்லாயிரங்கோடி யென்னவய னிற்கநின்னெ[ண்டு
யிவன்வருக வென்றுகட் டளையிட்ட னன்கருதி னெற்தவ மியற்றினுய்மு
னலங்குமா வடுதுறைச் சித்தாந்த சைவனுட னம்புலீ யாடவாவே
யருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ டம்புலீ யாடவாவே. (ஙி)

செய்யநங் குருநாத னினையாட வாவென்று திருவாய் மலர்ந்தபொழுதே
திருந்தக் குடந்தமுற் றடியனேன் வந்தனென் றிருவுள மெவன்கொலெ
நையவுளம் விளையவந் தான்றதிரு வடிபணியி னகுகருணை பூத்துநீறு [ன்று
நளினத் திருக்கரத் தள்ளியுன் னுதலிலெ ழுதுமப் பெரியபேற்றுல்

வெய்யநின் கயரோக மும்பழியு மாறியுயர் மேண்மையும் பெறுவைமுன்போன்
மேவமுடி வைத்திடினும் வைக்கும் பெருங்கருணை விள்ளத் தெரிக்கவர்
காயஞ வடுதுறைச் சித்தாந்த சைவனுட னம்புலீ யாடவாவே [கள்யா
யருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ டம்புலீ யாடவாவே. (சு)

போற்றுநாம் வருகென் றழைத்தபொழு தெய்திலான் புகரிவ னெனத்திருக்
போதச் சிவந்துழிக் குரவற்பிழைத்தன் புகரெண்ணி யிருவினைகளுங்[கண்
காற்றுதிரு முன்னர்வர வஞ்சினெ னென்றருகு கவினமே வற்றவனையான்
கண்மணியை யனையசுப் பிரமணிய தேவனைக் கண்சிவப் பாற்றுவித்தான்
மாற்றுவா னின்னமு மெனத்தா மதிப்பையென் மற்றவனு மனையனுவன்
வாழ்வகை நினைக்குமப் பாலுமுண் டோசெம்பொன் மாடமுடி மேலண்டம்
தாற்றுமா வடுதுறைச் சித்தாந்த சைவனுட னம்புலீ யாடவாவே [வைத்
யருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ டம்புலீ யாடவாவே. (எ)

நீட்டுமா புகழுடைச் சின்மய னிவன்கலச் சேடமுகி லினுமுன்னைநாட்
சேர்ந்துநீ ருவரகத் றியபழங் கதையமரர் செப்பத் தெரிக்கிலா பா
கூட்டுமிப் போதுமச் சேடமனு வத்தனை கொடுத்திடப் பெற்றுயெனிற்[யா
கொடியகய நோயொழிவ தற்கைய மில்லையிக் கூற்றுண்மை யென்றுணர்தி
லீட்டுமா பாதகமும் வேறிடம் பார்க்குமினி யாஞ்சொன்ன வழிவருதியே
லெய்தாத மேன்மையிலை மாடத் துகிற்கொடி யெழுந்தசைந் தைக்தருவையு
மாட்டுமா வடுதுறைச் சித்தாந்த சைவனுட னம்புலீ யாடவாவே
யருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ டம்புலீ யாடவாவே. (அ)

எங்கணு யகன்வருதி யென்றபடி வாரா திருத்தியேல் வெய்யசாப
மிடுவனச் சாபநின் குரவனிடு சாபமென் றெண்ணுதி யதுவாழ்த்ததால்[கின்
வெங்கணு டாவிவ ணணிந்தவைகள் பலவுண்டு வெய்துயிர்த் தொன்றைகோக்
விசையவந் தன்னைப் பிடித்துக் கடித்துடன் விழுங்கியிடு மீளாமலே
திங்கணு யகயா மூறைப்பதுவும் வேண்டுமோ சிறுவிதி மகச்சாலையிற் [க்கு
றேய்ப்புண்ட தத்தனைய மின்றயர்த் தாய்கொலோ செங்கண்மால் கைகுவி
மங்கணு வடுதுறைச் சித்தாந்த சைவனுட னம்புலீ யாடவாவே [க்கு
யருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ டம்புலீ யாடவாவே. (சு)

வார்க்குங்கு மக்கொங்கை யுமையாள் பசுக்கோல மாற்றிமுற் கோலமுதவு
மாத்தல மிதன்கணெளிரீர் குருதரிச னங்களது வார்க்குமள வாதலின்பம்
போர்க்குமொரு சிவலிங்க தரிசன மருட்பெருமை பூண்டசங் கமதரிசனம்
பொற்பக் கிடைக்குமித் தலமனைய தலமெவண் போய்ப்பெறுவ தோதுமதி
சீர்க்குமொரு நவகோடி சித்தபுர மென்பதுந் தேர்ந்திலாய் தேருமாறு யே.
செப்படவுந் தேர்கிலா யிதுதன்மை யன்றெழு தினாக்கட லெனப்பன்முரசு
மார்க்குவா வடுதுறைச் சித்தாந்த சைவனுட னம்புலீ யாடவாவே
யருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ டம்புலீ யாடவாவே. (கூ)

சிற்றிற்பருவம்.



உருவார் மதிய மிளங்காலே யுதிப்பதெவனென் றுன்னிமயங்
குற்றுக் கணப்போ திருந்தனம்பி ணுணர்ந்தோம் வேடப் பொலிவதன்பின்
மருவா ராத்த மாலேதுயல் வருதோ ளொருசீ யெனத்தெளிக்தோ
மற்றப் பொழுதே வினாக்தெழுந்து மகிழ்ந்து பணிக்தோ நீறளித்தாய்
வெருவார் கண்ட வுடனெழுதன் மேவா ரென்று திருவுளத்து
மிக்க னெங்கொண் டிதுசெய்தன் மேலாம் பெருமைக் கழகேயோ
திருவார் துறைசை வளர்ஞானச் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண தேவா சிற்றில் சிதையேலே. (க)

ஒளிசா னினது வருகையுளத் துவந்தோம் யாங்கள் வருத்தவறை
யொன்று ளிருத்தி யெனமுகம ணுணர்த்தோ மதனுக் கெங்கள்சித்த
ரளிசா லருளின் வருத்தவறை யன்றென் றெழுழித்தர யடுமணற்சோ
றைய வுண்க வெனநமக்கிங் காகா தாநம் விடைக்கென்ருய்
களிசால் யாங்க ளினிச்செய்யக் கடவ தொன்று மிலையடிகள்
கருத்தி லென்ரெ நினைந்தீது கருதின் யாங்கள் செயலென்னே
தெளிசா றுறைசை வளர்ஞானச் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண தேவா சிற்றில் சிதையேலே. (உ)

ஆரும் புழுதி யறப்புனல்கொண் டாட்டித் திருவொற் ருடையிடற்
கடியார் பலரு ளாரெனின்வே றனைந்து சென்ரு லாகாதோ
பேருஞ் சிறியோ மியற்றுவது பேணுச் சிறுவீ டாதலினுற்
பெரியோ யொருசீ யியற்றுவது பேணும் பெருவீ டாகியதா
லோரு மிதுவு நின்னடிம ணுணிஞ மதனுற் கன்றுவது
மொருங்கி யாங்கள் வருத்துவது முணரா திருத்த லருளன்றே
தேருந் துறைசை வளர்ஞானச் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண தேவா சிற்றில் சிதையேலே. (ஊ)

அருந்து பதம்பார்த் தோருவேட னமைத்துக்கொடுத்த வூனெச்சி
லடங்க துகர்ந்து முடியிலவ னடிசூட் டிடவு மமைசாவேற்
றிருந்த தனையா தினையவனுண் டிட்ட சேட மெடுத்ததவி
யெல்லார் முடிக்கு மடிசூட்டு மென்று புகன்ரே மிதுபிழையோ
வருந்து மெமது விண்ணப்ப மரும லேற்க வேலாயேன்
மன்னு மருளி லானெனநின் மானுக் கருக்கெல் லாமுனைப்போற்
றிருந்து துறைசை வளர்ஞானச் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண தேவா சிற்றில் சிதையேலே. (எ)

ஐய முன்னைப் பழக்கநினைந் தழிப்பே னென்னி லுலகுயிர்கட்
கமைந்த மலமா தியமூன்று மடங்க வழித்தி யடுகாமம்

வெய்ய குரோத மூதலாறும் வீட வழித்தி நினையன்றி
வேறும் பொருளுண் டென்றுரைக்கும் வீணர் மதமு மறவழித்தி
வைய முவக்கு மிலையன்றி மதியா யாங்க ளாடிடத்து
வந்து வருப்ப தழித்தனையேல் வருவ தறமோ மாப்புகழோ
செய்ய தறைசை வளர்ஞானச் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண தேவா சிற்றில் சிதையேலே. (நி)

எல்லார் தமக்கு மனுக்கிர கியற்று வோமென் றிருபெயரிட்
டிங்கு மேவி யெங்களிடத் தென்னே வழித்தற் றிழில்பூண்டாய்
வல்லா ரெதுசெய் யினுஞ்செயலா மறப்பா ரொருவ ரின்மையினுல்
வல்லார் வாளா விருப்பதலால் வாய்பே சுதற்கும் வழக்குண்டோ
வில்லார் மணிமா ளிகைகடொறும் விளங்கா நின்ற நலநோக்கி
விண்ணோர் கண்ணே நுருவண்ணம் விரித்துப் பொருத்து முறையேபோற்
செல்லார் தறைசை வளர்ஞானச் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண தேவா சிற்றில் சிதையேலே. (சு)

கூறு முலகர் விரும்புபெருங் குரவர் பெருமா னீயென்னிற்
குலவு நினக்காண் டொறும்யாங்கள் கும்பிட் டிடுவோ மதுவன்றி
வேறு தனித்து மொழிந்திடினும் விரும்பிக் கேட்போ மினியதற்றும்
வீட்டை யழிப்பான் றிருடங்கினையேல் விதியா காது பொறுத்திருத்த
ஞது மலர்ப்பைம் பொழிசீறு நுகுபைங் கினியா கமங்கூற
நச்சு பூவை யுணர்ந்துகற்ப கண்ணுங் குயில்கட் கினிதோதத்
தேறுந் தறைசை வளர்ஞானச் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண தேவா சிற்றில் சிதையேலே. (எ)

கோணுர் பிறையுங் கழிதலையுங் கொன்றைத் தொடையும் புனிதோலுங்
குலவு நுதற்க ணெறிபிறவுங் கூடா தொழித்துச் சுவேச்சையினே
ரேணு ருருக்கொண் டிங்கடைந்த திறைஞ்சு மவர்கட் கருள்வதற்கோ
வெங்கள் சிறுவீ டழிப்பதற்கோ வியம்பல் வேண்டு மிறையோனே
பூணுர் முலேகன் மடமாதர் புணர்மா ளிகையிற் சூளிகையிற்
பொருத்து மணிச்செங் கதிரெழுத்து போய்வெங் கதிர்க்கு மாருகச்
சேணுர் தறைசை வளர்ஞானச் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண தேவா சிற்றில் சிதையேலே. (அ)

மாலா ரினைய மகளுய மதலே ளுடம்போ கற்பகஞ்சால்
வான்கூட் டுண்ணுங் திறலவுணர் வாழ்ந்த கோடிய முப்புரமோ
பாலா ரயன்மா லொடுங்கவரும் படர்பே ரூழிப் புவனமோ
பாவு மடிகள் பொருளாகப் பற்றி யழித்தல் செய்வதற்குக்
கோலார் வளைக்கை மடவார்யாங் குழுமி யியற்று மிதகுளிர்பூங்
கோலப் பொழில்சூழ் வாவியினுங் குளிரோ டையினுங் காயெழுந்து
சேலார் தறைசை வளர்ஞானச் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண தேவா சிற்றில் சிதையேலே. (க)

வீங்கும் விருப்பின் யாங்களணி வீதி யிடத்தி லியற்றுமிதின்
மேவுஞ் சுவரச் சிறுவிதிசெய் வேள்விக் களமே கலேயன்று
தாங்கு மிதனுட் செம்மணிக டயங்கு மதனுட் டழலன்று
தழையா நின்ற வெங்குழுவத் தக்கன் மகத்திற் குழுவன்றே
பாங்கு பெறவா லடிக்குரவு பயின்ருற் போல வடுதொழில்யாம்
பயில்வோ நினையாந் தடுத்திலமிப் பண்பு தகவோ பல்வளமுந்
தேங்குந் துறைசை வளர்ஞானச் செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண தேவா சிற்றில் சிதையேலே. (கo)

சிறுபறைப்பருவம்.

விரைவீசு தாமரைப் பூவொத்த செங்கரம் விளங்குமொரு சமரு கத்தை - மேவத் திரித்துவடி வொடுநிறமு மொத்தலான் மேதினி யெலாம் பரந்து, நுரைவீசு கங்கையொடு நட்புற் றுறும்பிறையை நோன்மையரு ளிற் றிரித்து - நுவலுமிப் பறைகுணி லெனக்கொண் டெளாய்கொலென நோக்கி யுல கேத்தெடுப்ப, வரைவீசு வெள்ளொளிய வயிரமும் பாசொளிய மரகதமும் வாரிவாரி - வண்குலேப் படுகரிடை மேயும்வளே கோட்டெருமை வாய்வெரீஇ யோட்டெடுப்பத், திரைவீசு பொன்னிவளே சென்னிவள நன்னுட சிறுபறை முழக்கியருளே - சித்தர்பலர் மொய்த்தகோ முத்தியம் பலவாண சிறுபறை முழக்கியருளே. (க)

அறிவிலே மிக்கிரிய மாவேட்ட மாடுதற் கமைகுறிஞ் சிப்பறையுமா - யடங்காத மனமென்னு மிகிலேறு கோடற் கடுத்தமுல் லேப்பறையுமாய், முறி வீலுடல் பொருளாவி கொள்ளேகோ டற்குற முழக்குபா லேப்பறையுமாய் - மூதுணர் வெனும்புன லருதுற வொழுக்கற்கு மொய்த்தமரு தப்பறையுமாய், மறிவிலெம ரொடுமாறு கொண்டபர சமயர்கோண் மாய்க்குநெய் தற்பறையு மாய் - மாருது பொலியவரை நின்றிழிந் தெஞ்ஞான்றும் வற்றுத லிலாதவெப் பச், செறிவிலுயர் பொன்னிவளே சென்னிவள நன்னுட சிறுபறை-முழக்கி யருளே - சித்தர்பலர் மொய்த்தகோ முத்தியம் பலவாண சிறுபறை முழக்கி யருளே. (உ)

ஓங்குபல புவனத் திளேப்பாற்று முன்னிஃ தொலிப்பதெவ னென்றுகருதி
யுணர்வுடைய ருண்மையங் கினுமையக் குகபின் புணர்ந்திஃதெனத்தெளிவரால்
வீங்குபே ரறிவுடைப் பாணினியு முன்போல்வியாகரண வாஞ்சையுற்று [யே
மேவிடினு மவனுமிஃ திற்றெனத் தேர்குவன் விளங்குகுணில் கைப்பற்றி
வாங்குதிரை மால்யானே பற்பல வெடுத்துநால் வாயரற் றிடவெறிந்து
வளைபல வுருட்டிக் கடுத்துப் புகுந்துவரு மறிதிரைக் கடல்கலக்கித்
தேங்குசீர்ப் பொன்னிவளே சென்னிவள நன்னுட சிறுபறை முழக்கியருளே
சித்தர்பலர் மொய்த்தகோ முத்தியம் பலவாண சிறுபறை முழக்கியருளே.

இருளின்வீழி போற்கேவ லத்திற் கிடந்தநமை யின்னருளி னுடல்
விளக்க - மேய்ப்பவது வாயவினை வயிற்படர்ந் தீர்பின்னு மெய்த்தமெய் யாது
நாளும், பொருளற முளுற்றப் புரிந்திரு ளினைச்செறிவு பூணுது கீழ்ப்படுத்தப் -
புகறத்து வத்திருக் காட்சிசுத் தியுமுறப் பொலிதரு நுமைக்கண்டுநீர், மரு
ளமை செருக்குறுதன் மாற்றவரு ணேக்கிவினை மற்றைந்தி னெழுதறவிர -
மன்னுமருண் முதலெனக் கண்டொன் றுறுதொன்ற வம்மினென் றறிவித்
தல்போற், றெருள்விரவு பொன்னிவளை சென்னிவள னன்னுட சிறுபறை
முழக்கியருளே - சித்தர்பலர் மொய்த்தகோ முத்தியம் பலவாண சிறுபறை
முழக்கியருளே. (ச)

மதிசெயுஞ் சித்தாந்த சைவவசு ணங்கட்ரு வரியாழ் முழக்கமெனவும்
வளமருவு சுத்தசை வப்பயிர் களுக்குநெடு மாமழை முழக்கமெனவும்
வீதிசெயுங் கிரியா குருக்களர வங்கட்ரு வீழைமயின் முழக்கமெனவும்
வெய்யபர சமயப் பருத்திப் பொதிக்கழலும் வெவ்வழன் முழக்கமெனவு
நிதிசெயு மணிக்குவை களுஞ்சந் தனக்குறடு நீளகிற் றுணியும்யானை [ரையுங்
நிகரில்வெண் கோடிகளும் வனைநின்று வாருபு நிலந்தொறு மெறிந்தியா
திதிசெயும் பொன்னிவளை சென்னிவள னன்னுட சிறுபறை முழக்கியருளே
சித்தர்பலர் மொய்த்தகோ முத்தியம் பலவாண சிறுபறை முழக்கியருளே.

வேழம்.

புத்தமு தோவென மெய்த்துதி பாடிப் புந்தி விரும்புகரும்
புகர்ற வோரறு காலமு மெண்ணிப் போற்றி வணங்குகரும்
சித்த மிருத்தி விடாம லருச்சனை செய்து மதிப்பவருஞ்
செங்கை குவித்தரு கெய்தி யடிப்பணி செய்யும் விருப்பினரும்
மத்த வருட்கண் வழங்கென நின்றெதி ராடி வழுத்துகரு
மாகிய பற்பல செந்தா மரைக ளலர்த்து மளங்கதிரே
முத்தமிழ் தேர்துறை சைப்பதி வாணன் முழக்குக சிறுபறையே
முத்தி முதற்குரு வம்பல வாணன் முழக்குக சிறுபறையே. (சு)

மருவிய வாசைப் பேயை யொழித்திட மந்திர வாதியுமாய்
மாருப் புண்ணிய மகவு வளர்த்திட வாய்ப்புறு மன்னையுமாய்ப்
பொருவி லிடும்பைச் சேறு சுவற்றப் பொலிதரு பரிதியுமாய்ப்
போர்த்திடு பரசம யக்களி ருழியப் போதரு சிங்கமுமாய்
வெருவரு வெய்ய வினைக்கா டொழிதர வெய்தெழு வன்னியுமாய்
விடாத பவக்கட் செலியொழி யப்புள் வேல்தனு மாய்ப்பொலிவாய்
முருகலர் நீர்த்துறை சைப்பதி வாணன் முழக்குக சிறுபறையே
முத்தி முதற்குரு வம்பல வாணன் முழக்குக சிறுபறையே. (எ)

மன்னிய நாமே பரசிவ மென்றும் வயங்கும் மடியாரை
வழிபடு மதுவே நம்மடி யடைதரு வழியென் றுங்கருணை
தன்னிய நந்திரு நாமம தேயரு டொகுமந் திரமென்றுந்
துயரம் வருத்து மவாமுத லடலே தோலா வலியென்றும்

பின்னிய நந்திரு வருளா னம்மொடு பெயரா தொன்றுதலே
பேரின் பென்று மெமக்கரு ளிப்பணி பேணிக் கொண்டருள்வோய்
முன்னிய வண்டுறை சைப்பதி வாணன் முழக்குக சிறுபறையே
முத்தி முதற்குரு வம்பல வாணன் முழக்குக சிறுபறையே. (அ)

பெய்வள மாரி யெழுங்குமி ழிக்கிணை பெற்ற வுடற்கணமுப்
பெட்பினர் வெய்ய சினக்கனல் பொங்கப் பெறுகொடு மனமுருடர்
பொய்வள நாடுபு செந்நில நீரிற் போர்த்த மயக்கமுளார்
பொல்லா நிவர்த்தமை யாளுத லாலாம் புகழென வுட்கொண்டு
மெய்வள மார்கரு ணைத்திறம் யாரும் வெளிப்படை யாலுணர்வான்
வெய்யே மையுமினி தாண்டருள் குரவா மேலோர் பலர்சூழு
மொய்வள மார்துறை சைப்பதி வாணன் முழக்குக சிறுபறையே
முத்தி முதற்குரு வம்பல வாணன் முழக்குக சிறுபறையே. (கூ)

வாரி யுடுத்த புவிக்கண் விபூதி வயக்குத லிலராயு
மன்னிய புண்ணிய மேய்க்குங் கண்மணி வாஞ்சை யுருராயுஞ்
சீரிய வக்கர மைந்து நவிற்றுத றேறு தொழிவாருந்
திகழ்தரு நின்னடி யார்த மடிப்பணி செய்யா தகல்வாரு
மாரியர் கோவென நின்னடி சார்ந்துநி னருண்முக மேலாரு
மாகிய முருடர் கவுட்புடை யொப்ப வலங்குபொ ஞலாய
மூரி மதிற்றுறை சைப்பதி வாணன் முழக்குக சிறுபறையே
முத்தி முதற்குரு வம்பல வாணன் முழக்குக சிறுபறையே. (கo)

சிறுதேர்ப்பருவம்.

பருந்துபல சூழப் புலால்கமழும் வெம்படைப் பருவலித் தருவர்மூவர்
பற்றியமர் சுக்கும வுடம்பணைய திரிபுரப் பாழிமுற் றுங்கெடுப்பான் [ளிப்
பொருந்துவட மேருவில் வலைத்தாவு நாண்கொளீஇப் பொருகடல் சுவற்றுவா
பொருகணை கரங்கொண்டு நான்மறைப் பரிமலர்ப் புத்தேள் கடாவிநிற்ப
மருந்துபடு மதியமும் பரிதியுஞ் சகடாய் வயங்கக் கொடிஞ்சிமுதலா
மற்றுள வுறுப்புமற் றுளதேவ ராகநெடு வாழ்த்துமல் குரவிவர்ந்து
திருந்துபுவி யாகிய பெருந்தே ருருட்டினேன் சிறுதே ருருட்டியருளே
செல்வமலி தூறைசையம் பலவாண தேசிகன் சிறுதே ருருட்டியருளே. ()

வெய்யவெங் கானந் திரிந்துழன் றுங்கரு விழிச்செய்ய வாய்த்தொறுவிமார்
வெள்வளைக் கையகப் பட்டிளங் கன்றணைதன் மேயதிரி புரிநாரிஞல்
வையமிது வென்னெனக் கட்டுண்டு முட்டுண்டு மத்தின்மொத் தண்டுவண்டு
வார்நிரை யெடுத்தெறியு மார்கலியி னேடிவெரிந வானநோக் காதவீழ்ந்தே
யெய்யவவ ணின்றின் னு நீங்கா தறங்குமோ ரெருதேறி யதுவன்றியு
மென்சொல்ல லதுவுண்ட மண்ணைய தேரேறி யென்னுமோர் சிறுமைநீரச்

செய்யபொன் செய்துபல மணிவைத் திழைத்திட்ட சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன் சிறுதே ருருட்டியருளே. ()

உருகுமன முடையராய்ப் பல்லோர் நடாத்துவதி னுறுமழகு நோக்கநின்ரு
ருற்றவர் கட்குமெங் கட்குமெம் பூப்பணீ யொள்ளிதி னடாத்தல்வேண்டும்
பெருகுமெழி லோடிவர்ந் தினிநடத் தோமெனிற் பேசுபல் வடங்கழற்றிப்
பெருந்தேர் நடாத்தியரு டிருமாளி கைத்தேவர் பேணுசக் நிதியடைந்தே
யருகுநில விண்ணப்பம் யாங்கள்செய் வோமென்னி லவர்நா நடாத்துதற்கோ
ணையமிலை யாமே நடத்தின மெனும்புக ழடைந்திடுவை சொற்றபடிகே
டிருகுதவிர் பவருளத் தறிவுநவின் மேவுவோன் சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன் சிறுதே ருருட்டியருளே. ()

தூணேவந்த குஞ்சரமு மழகிய வுவாவுந் துலங்குமிக் நகரிடத்துத் [ப்
துண்ணெனமு னச்சிறுத் திட்டகளி றியைய துணிந்திங்கு வருவதுமிலை
பூணேவந்த கைத்தலத் ததுவந்து மேவினும் பனிமல நிறைத்தெண்முதலாப்
பலவுற்ற சுவையமோ தகமாநி லீசிப் பணிந்துவச மாக்கிவிடுவோ
மிணேவந்த பொருளென்று மீயுப சரிப்பதொன் றில்லாமல் யாமாதலா
லிடையூறு வேறின்று சிறுவீ டியற்றுமத னினமாகு மார்வில்கத்
திணேவந்த வளமல்கு சோணு ளரிப்பவன் சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன் சிறுதே ருருட்டியருளே. ()

வானுடி மேவும் புறத்தொண்டர் சொற்படி வையமு நடாத்தினுயிம்
மண்ணுடி மேலிய வகத்தொண்ட ரேம்யாம் வருத்தபடி டேளாமையென்
காணுடி மதிசொற்ற படிநடத் தோமெனிற் கைநவித் செய்நினைது [முதே
கண்மணியை யனையசுப் பிரமணிய தேவன்முன் கரைமோந் கரைந்தபொ
பாளுடி மனையனின் பால்வந் தரைக்கினைப் படிமறுத் திடுவையனைய
பக்கநீ தவிர்வதே யிலையாத லால்யாம் பகர்ந்தபடி கேட்டல்வேண்டுந்
தேனுடி பூம்பொழிற் சோணு ளரிப்பவன் சிறுதே ருருட்டி பருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன் சிறுதே ருருட்டியருளே. (இ)

முதையாய வெங்கண்மன மாம்புலத் திற்காம முதலாய பெருமரங்கண்
முழுதுமற வருளாய தழல்கொளுவி யைந்தென முழங்குமக் கரமனுவெனு
மதையா யலப்படை யெனக்கொண் டழச்செயா வன்பெனும் வித்துவித்தி
யார்வநீர் பாய்த்தியன் னியசமய மாக்கடை நாதுபொறை வேலிகோலிப்
பதையாத தவமெனும் பைம்பயிர் வளர்த்துபொய் படாதசிவ போகமவிளையாப்
பண்பிளுகர் காறம்விட யக்கரவர் கவருதல் படாதுகாத் தருள்சின்மயன்
சிதையாத வளமல்கு சோணு ளரிப்பவன் சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன் சிறுதே ருருட்டியருளே. (ஈ)

மூன்தைமறை யாகம நவின்றரு ணினக்கியா மூன்துப நடத்தல்செய்ய
மூன்துப நடப்பவர் நடந்திடுக விதுகாறு மூன்துப நடத்தலாலே
யன்தைபடி பிறவித் துயர்க்கட லழுந்நின மதான்றுபுற முதன்மையேபோ
லையவக முதன்மையு நினக்காக நல்குவா னடியே மமைத்துநின்றே

நிக்கையறு மெங்கள்செய லிற்ருக லாற்பின்பு நேயத் தொடுத்தொடருவே
நிறைகருணே பூத்தியா வருமன மகிழ்ச்சியுற நிகழ்காம மாதிதீர்ந்த
சிந்தைகுடி கொண்டுசுடர் வீட்டோங்கு சின்மயன் சிறுதே ருருட்டியருளே
செல்வமலி தறைசையம் பலவாண தேசிகன் சிறுதே ருருட்டியருளே. (எ)

அணிகொண்ட முன்னு ணடாத்தியது பொன்னிற மமைந்தது முழுமையும்
ஞழிநின் கைகா லடர்ப்புண்ட வினனின் மருவாழியத் தகையவலவான்[பொ
மணிகொண்ட வச்சுமுறி பட்டதது வினவன்மை மாறுத தென்றமத்தேர்[ற்
வண்மையிற் றுகவு முளஞ்செருக் கிக்கடினம் வாய்ந்தன மெனப்பொலியுமா
பணிகொண்ட வதனுட் செருக்கலும் வழியெனப் பகருமதன் மார்புகீண்டு
படரும்வெளி யாகவிது நோக்கிமகிழ் தருமெங்கள் பாழிமல மாயைகன்மத்
திணிகொண்ட மும்மதிலு நீறெழச் சின்மயன் சிறுதே ருருட்டியருளே
செல்வமலி தறைசையம் பலவாண தேசிகன் சிறுதே ருருட்டியருளே. (அ)

ஒருநாம மும்பெறுவ தில்லேநா மென்றுமு னுனைத்தனே யதற்குமாறு
வுலவாப் பெருங்கருணே வெள்ளமலே யெறிதலா லுணர்விலெளி யேமுமுய்
றருநாம நந்தியங் குமரர்சத் தியஞான தரிசனி பரஞ்சோதியார் [வான்
தழைதருமெய் கண்டவர்க லருணந்தி மறைஞான சம்பந்தர் கொற்றவனெ
பெருநாம நல்லு ருமாபதி சிவன்கருணே பெருகரு ணைச்சிவாயர் [னும்
பிரகாச னைத்தெழுத் திறைமுனிரு பத்தைந்து பெயர்கொண்ட தன்றியின்
திருநாம மெண்ணில புனைந்துவரு சின்மயன் சிறுதே ருருட்டியருளே [னுந்
செல்வமலி தறைசையம் பலவாண தேசிகன் சிறுதே ருருட்டியருளே. (கூ)

ஆவாழ்க மாமறைக் குலம்வாழ்க நலமாரு மாகமத் திரள்கள்வாழ்க
வருண்மல்கு சித்தாந்த சைவநலம் வாழ்கநினே யன்பிற் புகழ்ந்துபாடு
நாவாழ்க நின்றிரு வடிப்பணி புரிந்திடு நன்மலர்க் கைகள்வாழ்க
நண்புற வீராப்பக னினைக்குமனம் வாழ்கவிறை நடவுசெங் கோலும்வாழ்க
மாவாழ்க வெவ்விடனு மேவிமதி தோறுமும் மழைபொழிய மேகம்வாழ்க
மன்னுபைங் கூழ்வாழ்க வெவ்வுயிரும் வாழ்கநின் வயங்கூர்தி யாயதருமச்
சேவாழ்க சைலாதி சந்தானம் வாழ்கநீ சிறுதே ருருட்டியருளே
செல்வமலி தறைசையம் பலவாண தேசிகன் சிறுதே ருருட்டியருளே.(கo)

அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியர்மாணக்கரும்

சங்கரலிங்கம்பிள்ளையவர்கள் குமாரருமாகிய

தெய்வநாயகம்பிள்ளையவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்பூத்த திரைப்பொன்னிப் புண்ணியமா நதிபுணரிப் புனல்க லந்த
கொன்பூத்த வுவாகற்றி யிழிந்தவரைக் கலந்தபெருங் குற்றம் போக்கு
மின்பூத்த பேரறிவா ணமைந்தவான் றேர்ந்திகர்ந்து மேவ லாலே
தென்பூத்த வளமன்னு பொன்னிகா டென்னுமுயர் சென்னி காட்டில். (க)

தேன்கலந்த மலர்நிறையக் கலந்தம்வரி யளிக்கூட்டாச் செழும்பூந் தெய்வக்
கான்கலந்த விண்கலந்தவ் வளிக்கினிய மதுவுட்டிக் கவின்ற செல்வந்
தான்கலந்தும் வறியவர்க்கூட் டார்ங்கரங் கலந்தன்னஞ் சலிக்க வூட்டும்
வான்கலந்த வள்ளனிகர் பொழில்கலந்து சூழ்துறைசை மாத்த லத்தில். (உ)

தலங்குதிரு வெண்ணீறுங் கண்மணியும் பூங்காவித் துகிலு மோவா
நலங்குலவு சிவார்ச்சனையு நயந்தபெரு முனிவர்பலர் நண்ணி யெங்கு
மிலங்குசிவா கமமுதல விசைப்போர்கேட் போர்ஞ்திந்தித் திருப்போர் மற்றை
வலங்குலவத் தெளிவார்க ளாயென்றும் வயங்குதிரு மடத்தின் மாதோ. (ங)

சடைகரந்த திருமுடியும் விழிகரந்த தனிநுதலுந் தழைபூங் கொன்றைத்
தொடைகரந்த திருத்தோளும் விடங்கரந்த மணிமிடறுந் தலங்கு சூலப்
படைகரந்த திருக்கரமுங் குழைகரந்த வார்செவியும் பரம்பு லித்தோ
லுடைகரந்த திருவுளையு மறைமணிநூ புரங்கரந்த வொளிர்பொற் ரூளும். (ச)

உற்றருணி யழகெறிப்ப வீளங்குதிரு வருளுருவ மொன்று தாங்கிக்
கற்றவர்வெம் மலக்கருளே விழுங்குமெய்ஞ் ஞானபாற் காரே குற்ற
மற்றகதிர் மாமணியே யாரமுதே யெய்ப்பினில்வைப் பேனயா யென்று
சொற்றிடலீற் றிருந்தருளம் பலவாண தேசிகன்பூந் துணைப்பொற் ரூளில். ()

பிறந்தபல காளிருந்து தரிசித்தோர்ச் சொலலென்னே பேணி யோர்நாட்
சிறந்தொருகா லடைந்தன்பிற் ரரிசித்தோர் தமக்குமருள் சிறப்ப நல்கி
மறந்தகலா வணம்புரியுந் தாயான மாதேவன் வைக லாலே
நிறந்தழையும் பெருஞ்சீர்த்தித் திருசிராப் பள்ளியில்வாழ் நெடிய சீலன். (சு)

விண்ணுலகத் தமர்ந்துதனே யடைந்தோர்க்கு விளைந்தழியும் வெறுக்கை கல்கிக்
கண்ணுறுசிற் றின்புறச்செய் தறக்கழிவு கண்டிடுகற் பகம்போ லாது [ரின்ப
மண்ணுலகத் தமர்ந்தடைந்தோர்க் கழிவில்கல்விப் பொருள்வழங்கி வினேபே
ணண்ணுறச்செய் தறம்பெருக்கு மீளட்சி சுந்தரப்பேர் கல்லோ னன்பால். (எ)

என்னறிவா லின்னவென வறிந்தறிந்து வருத்துவகுத் திசைத்தல் கூடாப்
பன்னலமு நனிதிறந்து விளங்கவனேக் தணிந்தபா மாலே யாய
நன்னலஞ்சே ரொருபிள்ளேத் தமிழினேவார் திரைசுருட்டு நரலே சூழ்ந்த
மன்னுலகங் கொளுமாறு வயங்குறுமச் சிற்பதித்து வழங்கி ஞலல். (அ)

அனேயனுய நிந்தூலா சிரியன்பாற் கற்றவனென் னருமை நண்பன்
வினேயமலி நூல்களெலா முணர்ந்துணர்த்து தண்ணறிவான் மிக்க சீலன்
றனேநிகரு மணிமன்று ணடகவில்சூஞ் சிதகமலந் தணவா துள்வோ
னனேயலர்தார்ப் புயத்தியாக ராசகா வலவனெழி னலமிக் கோனே. (கூ)

அம்பலவாணதேசிகர்பிள்ளேத்தமிழ்ச்

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

*வாட்போக்கிக்கலம்பகம்.

பாயிரம்.

காப்பு.

விநாயகர்துதி.

கட்டளைக்கலித்துறை.

முக்க ணிறைருத்தன்மற் றென்னுள வாரி முயங்குதலான்
மிக்கவெண் கோடொன்று மேனிதை யாதிற்கும் வெள்ளறிவை
யுக்க கருமத மேகரு மாசை யொழிக்குமருள்
புக்கசெம் மேனி மனஞ்செம்மை யாகப் புணர்த்திடுமே. (க)

சமயாசாரியர்துதி.

கட்டளைக்கலித்துறை.

சொல்லார் புவியி னெடுமறை யாதித் தொகையுணர்ந்த
வல்லார் மலமொன் றறுமே யடித்தொண்டு வாய்ந்தொளிரு
நல்லா ரிணக்கத்தி னென்பா ரதுநிற்க நால்வணர்யு
மெல்லா மலமு மறக்கூடு வேனின் பெளிதுறுமே. (உ)

நூல்.

ஒருபோதமயங்கிசைக்கோச்சகக்கலிப்பா.

க. மாமேவு செங்கமல மலருறையுந் திருமகளும்
பூமேவு வெண்கமலப் பொகுட்டுறையுங் கலைமகளும்

பிரியாமே யெஞ்ஞான்றும் பெருநட்புக் கொண்டுறையச்
சரியாமே புகழோங்கத் தழைந்துவளர் சோணாட்டில்

வரைக்கருஞ்சந் தனக்குறடு மால்யாணைக் கோடுகளுந்
திரைக்கரத்தி னெடுத்தெறியுஞ் செழும்பொன்னி நதித்தென்பாற்

றுனியவிரும் வாட்போக்கித் தடங்கிரிமேற் பேரருளா
லினியசுரும் பார்குழலோ டியைந்துறையு மருமருந்தே!

---

* இத்தலம், ரத்நகிரியெனவும், சிவாயமெனவும் இக்காலத்து வழங்கும்.

உ. குப்பாயங் கொடுப்பவனே கொழுங்கண்மல ரிடுபவனே
செப்பாய முலையுமையாய்த் திகழ்ந்திடப்பா லுறைபவனே

வெருவாழி கொள்பவனே விரலாழி கொடுப்பவனே
மருவாழி யென்றுரைக்கு மடைப்பள்ளி காப்பவனே

கையம்பா யெழுபவனே கருமுகிலாய்ச் சுமப்பவனே
வையம்பாய் வெள்விடையாய் வண்கொடியா யுறுபவனே

தேராவோர் மணியாரைச் சேர்ப்பவனே நெடுமாலென்
றோராவோர் புலவரெலா முவந்தேத்தப் பொலிவோய்கேள்.

(இவைஇரண்டும் எட்டடித்தரவு.)

க. அடித்தழும்பு புறத்திருக்க வாரியர்கோ மகன்கொடுத்த
முடித்தழும்புங் கொண்டணிவெம் முலைத்தழும்பிற் சீரியதோ!

உ. அருகாக முப்புவன மடங்கவெரித் தருளுனைக்
கொருகாக மெரித்தணியென் றுரைப்பதுமோர் புகழாமோ!

கூ. சீரியர்கைப் புனல்கொல்லோ திருந்துமகைப் புனன்முடிமே
லாரியர்கைப் புனல்கொள்வா யடங்கருணைத் நிதிங்கொல்லோ!

ச. தருநிதிக்கோ விருக்கவொரு சார்வணிக கொடுகலந்தாய்
பெருநிதிக்கோ வெனிற்பெருமான் பேராசை பெரிதன்றே!

ஞ. தொடிமுழங்க மணியொலித்துத் துணைவிபுரி பூசைகோலோ
விடிமுழங்கப் புரிபூசை யெஞ்ஞான்று மினிதுவப்பாய்!

சு. உணியடைந்தார் பயமகன்றின் புறுவரெனற் கணியுரகங்
கணியடைந்த விடிநோக்கிக் களித்துறைதல் கரியன்றே!

(இவை ஆறும்தாழிசை.)

க. அவனவ ளதுவென வறைதரு வகைமையு
ளிவனிவ ளிதுவென வியைதர லருமையை;

உ. அருவமு முருவமு மருவமொ டுருவமு
மொருவற வுளேயெனி னிலேயென வொளிருவை;

கூ. இதுவலே யதுவலே யுதுவலே யெதுவென
முதுமறை கதறவு மதன்முடி மருவுவை;

ச. இருளென நிலவென வெழுதரு கதிரென
வருளுயி ருறுதர மணிதர நிலவுவை;

(இவைநான்கும் அராகம்.)

க. அருநாம மெனச்சொ லுகின் ஞயிரநா மத்துளொரு
திருநாமங் கூற்றமிகின் றிருவடிதாக் குதனமிகையே!

உ. பிரமரீ யெனவழு தி பிரம்படியே யுணர்த்தியது
சிரமம்வே தாகமங்கள் செப்புதனின் றிருவாய்க்கே!

கூ. உள்வாரு ளொருவரே யொருகோடிக் கமைந்துறவுங்
கள்வாரே வுடைக்கோவைக் காயவிழி மலர்த்தியதென் !

சு. கண்டவிட நித்தியகதைக் காட்டவுங்கங காளமூத
லண்டவிடந் தரவைத்தா யம்புயஞ்செய் குற்றமெவன் !

நி. ஒருங்கருவி வகைநிகர்சோ வொருங்கெரிக்கு நகையிருக்கப்
பெருங்கருவி பலகொண்டாய் பித்தனெனல் விளக்கினையோ !

கூ. ஓரெழுத்துக் குரியபொரு ளொருநெடுமா லயனென்பார்
நீரெழுத்து நிகர்மொழிநின் னிலவிதழி முன்னெவனும் !

(இவையாறும் பெயர்த்தும்வந்தஆசிரியச்சை.)

க. துருமிவரு தையலினைத் தொழிலி யற்றியு
மருவிவரு தொழிலுமில் லாத மாட்சியை ;

உ. பெண்ணெரு பாலுறு பெற்றி மேலியு
மெண்ணெரு விகாரமு மிலாத காட்சியை ;

(இவையிரண்டும் நாற்சீரடியம்போதாங்கம்.)

க. உள்ளொளி யாகிநின் றுணர்த்துந் தன்மையை ;
உ. வெள்ளொளி விடைமிசை விளங்கு நன்மையை ;
ங. அம்பல நடிப்புகுந் தாடுங் கூத்தினை ;
ச. நம்பல மெனப்பலர் கவினுஞ் சோத்தினை ;

(இவைநான்கும் நாற்சீரோடியம்போதாங்கம்.)

க. சடைநெடு முடியமர் செல்வினை ;
உ. தவமுயல் பவர்வினை கல்லினை ;
ங. கடையரு வடவரை வில்லினை ;
ச. கவினுறு நெடுமறை சொல்லினை ;
நி. மிடைவலி யினர்தரு பல்லினை ;
ஞ. விசயனு டெதிர்பொரு மல்லினை ;
ள. அடைதரு மிடையுதள் புல்லினை ;
அ. அளவிட லரியதொ ரெல்லினை ;

(இவை எடடும் மூச்சீரோடியம்போதாங்கம்.)

க. அருள்கொடுத்தனை ;
உ. யிருள்கெடுத்தனை ;
ங. ஆல மாந்தினை ;
ச. சூல மேந்தினை ;
நி. இசைவி ரித்தனை ;
ஞ. வசையி ரித்தனை ;
ள. யெங்கு நீடினை ;
அ. சங்கு சூடினை ;

கக. மதிய ணிந்தனை ;
கஎ. கொதித ணிந்தனை ;
கக. மழுவ லத்தினை ;
கஉ. தொழுத லத்தினை ;
கங. பொருவி றகதனை ;
கச. கருவ றந்தனை ;
கநி. பொய்யி னீங்கினை ;
கஞ. மெய்யி னெஞ்கினை ;

(இவைபதினாறும் இருசீரோடியம்போதாங்கம்.)

எனவாங்கு,

(இதுதனிச்சொல்.)

பகித்தமூஉ ஞானப் பாலுண் மழவு
மேற்றெழுமி சூல மேற்றதோ ளாசு
மவிர்தரு செம்பொ னூற்றிடை யிட்டுக்
குளத்தி லெடுத்துக் கொண்ட கோவுங்
நு. கனவிலு மமரர் காணரு நின்னைப்
பரிமா மிசைவரப் பண்ணிய முதலுங்
காதரு தமிழ்க்குக் காணி கொடுத்த
நின்றிருச் செவிக்க ணெறிகுறித் தறியாப்
பொல்லாப் புலித்தொழிற் கல்லாச்சிறியே
கo. னெவ்வகைப் பற்று மிரித்தவர்க் கன்றி
மற்றையர்க் கொல்லா வயங்கருள் பெறுவான்
கொடுவிட மமுதாக் கொண்டதை யுணர்ந்து
குற்றமுங் குணமாக் கொள்வையென் றெண்ணிப்
புன்மொழித் துதிசில புகட்டின
கடு. னன்மொழி யெனினு மருளுதி விரைந்தே.

(இது பதினேந்தடி நேரிசையாசிரியச்சுரிதகம்.) (க)

நேரிசைவெண்பா.

விரைகமழ்பூங் கொன்றைமுடி வேய்ந்துவாட் போக்கி
வரைகமழ வீற்றிருக்கும் வள்ள - லுரைகமழ்பொற்
பாத கமலம் படுமுடியார்க் கப்பொழுதே
பாத கமலம் படும். (உ)

கட்டளைக்கலித்துறை.

படர்பா தலம்பொற் கனத்தக டாமப் பசுந்தகட்டு
ளடர்பாய் புவிமென் னிறத்தக டாமதன் மேலழுத்துந்
தொடர்பாய செம்மணி வாட்போக்கி வெற்பதிற் றோன்றுசுட
ரிடர்பா ரகம்விண் ணகமோவ வாங்குறை யெம்மிறையே. (ங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இறைவர் திருவாட்போக்கி யுறைபவர்தா மாடுபுன லிரும்பார் வீழ்ந்து
துறைகொளமுன் கவிழ்த்தவொரு காகத்தை முனியாராய்த் தூய தீம்பா
லறைபடரக் கவிழ்த்தவொரு காகத்தை முனிந்தனர்பா லலவா லென்னி
னுறைசெறிபாலாழியிற்றீவாய்க்கணையைக்கிடத்தினர்க்கஃ்திண்டாமன்றே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

அன்று வருவிட மென்று கருதவ முன்று மதியெழும்வே
யொன்று மொருவரை நின்று வளியுமு முன்றுவருமயிலே
மன்று மரதக குன்று முறைவரென் வன்று யரமறியா
ரென்று கையல்கை கன்று பெறவரு ளின்று புரிகுவரே. (ஙு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புரிதரு ருஞ்சடை தரித்தும்வின் மதனனைப் பொடித்துமென் பூங்காவி
விரிதரு ருந்துகி லுடுத்தியு நீர்பொலி வேடமோர்ந் திலடேவி
யரிய வெம்முலைச் சுவடுமாத் திரமுணர்ந் தாசையுற் றனளந்தோ
தெரிவின் மற்றிவள் பேதைமைக் கென்செய்கோ திருமுடித் தழும்பீரே.

நேரிசைவெண்பா.

தழுவுமையான் முன்னுந் தமிழிறையாற் பின்னுந்
தொழுமிறையான் மேலுஞ் சுவடு - கெழுமுவகீ
ழின்ரு லெனுங்குறைபோ மென்மனஞ்சேர் வாட்போக்கி
யன்ரு லமர்ந்தா யடி. (எ)

கட்டளைக்கலித்துறை.

அடியுற்ற பாதலம் பொற்றேர் செறிக்குமஞ் சாலியொளிர்
கடியுற்ற செம்மணிப் பூண்வைத் திடுங்கரு வூலமுண்ணும்
படியுற் றதுவினை நன்னில மென்பர் பசுந்தழும்பு
முடியுற் றவர்திரு வாட்போக்கி மேய முதல்வருக்கே. (அ)

புயவகுப்பு.

ஆசிரியக்கந்தவிருத்தம்.

முதுமறையுணர்ந்து கவுணியர்முனன்பர்
மொழிதமிழுலங்கன் முற்றப்புனைந்தன
முழுதுலகுமஞ்சி யதிர்தாவெழுந்த
மூரணமடங்கல் செற்றுப் பொலிந்தன
முகிழ்நகையணங்கு மலையரையன் மங்கை
முலையெதிருடன்று முட்டக்குழைந்தன
முடிமதிபொழிந்த நிலவெனவிளைந்து
முதிர்பொடிதிமிர்ந்து பொற்புற்றிருந்தன
பதுமமலர்தங்கு மறையவர்முகுந்தர்
படிதலியலும்பு கட்டிச்சுமந்தன
பயின்மகமடைந்த கதிர்வலொழுங்கு
படுமெயிறுதிந்த மொத்தித்திகழ்ந்தன
படவரவினங்கள் பலபலவளைந்து
பணியெனவிளங்க வொப்பிப்புனைந்தன
பனியிமயமங்குல் பொதிவதெனவும்பல்
படுமுரிவையொன்ற விட்டெச்சிறந்தன
மதுமடையுடைந்து வழியமுகைவிண்ட
மணமருவுகொன்றை பெற்றுக்கமழ்ந்தன
மகிதலநடுங்க வடவரை பிடுங்கி
வளையினும்வணங்கி நிற்கப்புரிந்தன
மழலையமுதின்சொ லிளமகவுநின்று
மலரடிநடஞ்செய் பெட்புக்கிசைந்தன

மணிவலயம்விண்டு சிதறவிசயன்செய்
மலியமரெதிர்ந்து மற்கட்டிநின்றன
வதுவிதெனநெஞ்ச மலைதலறவென்றி
யடைபவர்மலங்க ளட்டிக்களிந்தன
வகிலபகிரண்ட நிலைகெடவெழுந்த
வவிர்சிகரவிந்த மொப்பற்றெழுந்தன
வழகுகுடிகொண்டு புழுகுமலிசந்த
மணிபுதிசையஞ்சி யெட்டப்பசந்தன
வரதகவிலங்கன் முடியமர்தழும்ப
ரசமையிலிங்கர் வெற்றிப்புயங்களே. (கூ)

நேரிசைவெண்பா.

புயறவழ நின்றவாட் போக்கியர னுர்மேன்
மயறவழ நின்ற மகளே - யயறவழ
நாணே கலையோ நகுவளையோ மற்றுள்ள
பூணே கொடுத்தல் புகல். (க0)

கட்டளைக்கலித்துறை.

புகலரும் வள்ள றிருமுடி காணப் புகுந்திளைத்தா
யகலரு மாரியர் கோன்வந் ததுகண் டறிகுறிவைத்
திகலரு தாளுங்கண் டின்பமுற் றுளிரீ தெண்ணுமிடத்
துகலருஞ் சீர்தும் பிருவருள் யார துரைவிதியே. (கக)

த வெ ம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உரைதருகா லுண்டுகா லில்லையென நடையொழிவீ ரோங்கு கான
வரைதருவெங் குகையிருளிற் புக்கிருள்போக் கிடமுயல்வீர் வையத் தீரே
விரைதருகற் பகநாறு மிளிர்சிகர வாட்போக்கி வெற்பு மேவி
யிரைதருவான் புனற்கங்கை முடியவரைப்போற் றிணமக் கெம்மாசுண்டே.

அ ம் ம ா னை.

இடைமடக்காய் ஈற்றடிமீக்குவந்த
நான்கடிக்கலித்தாழிசை.

எம்மா தவரு மிறைஞ்சுஞ் சடாடவியார்
செம்மா மணிவான் சிலம்பர்கா ணம்மாணை
செம்மா மணிவான் சிலப்பரெனி னுய்கர்பொரு
ளெம்மா வீரும்புவர்கா ணாறுவதோ வம்மாணை
யாசை யுடையயார்கா ணரியதோ யம்மாணை. (கங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மான்கொண்ட கரதலத்தீர் மதுரைபுகுந்
தென்செய்தீர் வினையல் லிற்றீ
ரூன்கொண்ட வுயிர்வசைமே லுறிற்மேற்றரு
வணிகர்குழாத் தொருவ ரென்பீர்

தேன்கொண்ட தெனப்பொருட்பா கமுங்கொள்வீ
ரின்னுமவர் தெரியா ரோர்ந்து
கூன்கொண்ட மதிமுடியீ ரென்னெனின்முன்
னெனினதுவுங் குறைவு தானே. (கச)

எண்சீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

குறையின்மா ணிக்கமலி வெள்ளிமலி நாளுங்
குலவுசோற் றுத்துறைபாற் றுறைநெய்த்தா னமுநீ
ருறையிலகச் சிலையம்பொன் வரைநெடுமான் முதலோர்க்
குறுபோகங் கொடுப்பதுநுந் திருவருள்பா லுறைவாள்
கறையிலறம் பலவளர்ப்பா ளொருதோழ னிதிக்கோன்
கரையில்பொருட் பங்களிப்பார் கனவணிக ருளர்நீர்
முறையிலெலும் பாதியணிர் தையமேற் றுழல்வீர்
முடித்தமும்பீ ரிதுதகுமோ மொழிமினடி யேற்கே. (கரு)

கட்டளைக்கலித்துறை.

அடிபடு மால்விழி வாட்போக்கி நாத ரவிர்தழும்பு
முடிபடு நீர்கொள் குடந்தோறு மேவ முயன்றுதவம்
படிபடு மாறெவன் செய்தீர்முன் னினுன்று பகைத்துடம்பு
பொடிபடு மாறுவிட் டீர்நன்று காண்கரும் புட்சங்களே. (கசு)

மடக்கு.

கட்டளைக்கலிப்பா.

சங்க வாய்முன மாய்ந்தது கூற்றமே
தாளெ டாமுன மாய்ந்தது கூற்றமே
யங்க மாலிகை செய்யவங் கொன்றையே
யளித்தல் பேரன்பு செய்யவங் கொன்றையே
செங்கண் மால்விழி யாரை விந்தமே
திருமு டிக்கணி யாரை விந்தமே
பொங்கு போர்வை தருமணி நாகமே
புக்கி லும்பைத் தருமணி நாகமே. (கள)

எண்சீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

நாகமே யணிகலமாக் கொண்டவாட் போக்கி
நாதருக்கென் னுளதுமணி மலியொன்றுண் டென்று
மோகமே கொண்டஞ்சயம் மலியுமவர்க் கெங்ஙன்
முழுதுமா முள்ளதுபன் னிருபாகத் தினிலோர்
பாகமே யதுபோது மெனிற்றிருமே னியியிலோர்
பாதியா ளுமை மற்றைப் பாதியுள தென்னின்
மேகமே நிகர்மேனி மாலுளன்மற் றதற்கும்
வெறுவெளியே யிவர்க்குளது மெய்ம்மையிது மகளே. (கஅ)

நேரிசைவேண்பா.

மகளேமால் கொண்டதெவன் வாட்போக்கி யார்க்குத்
துகளேயா நீறுவிரை தோற்றென் - புகளேறு
நாகம்பூ ணஞ்சா நகுபுலித்தோ லாடைமுடி
யேகம்பூ ணஞ்சா மெனின். (ககூ)

மதங்கு.

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

எனக்கரிய வண்டரெனுக் கனக்கரிய கண்டருறை யெழிலவாட் போ
மனக்கரிய வளம்பாடி மணிமறுகி னின்றுடு மதங்கி யாரே [க்கி
னெக்கரிய நுங்கள்விழி வாளிரண்டு மேயுயிருஞ் சேரப் போழுங்
கனக்கரிய வாளிரண்டு கைக்கொடுவீ சுவிரிலக்குக் கருதின் யாதே.()

கட்டளைக்கலித்துறை.

கருப்பங் கழனி வளாவா மணிவரைக் கண்ணுதருள்
வீருப்பங் கழனி தமாலயப் போற்றென்று வேண்டினுமெம்
முருப்பங் கழனி கழப்புரிந் தானுமுதத்தமனங்
திருப்பங் கழனி கருந்தளிர் பூவையுஞ் சிந்திப்பமே. (உக)

மடக்கு.

எண்சீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

மேதக வுரியாரும் போதக வுரியாரும்
விண்ணம் பணிவாருந் தண்ணம் பணிவாரு
பாதர மொழிவாருங் காதர மொழிவாரு
மமலியம் பதியாருங் கமலியம் பதியாரும்
பூதர வளைவாருங் காதர வளைவாரும்
பூதம் படையாரு மேதம் படையாரு
மாதல மிசையாருங் கோதல மிசையாரும்
வரதன வெற்பாரு மரதன வெற்பாரே. (உஉ)

வண்டுவிடுதூது.

கோச்சகக்கலிப்பா.

பாராய்வாட் போக்கிப் பரமனு ரெண்காற்புள்
வாரா யறுகாற்புள் வண்டேநீ யாதலினு
லோராய் பயந்தபமுன் னுற்றவிரு காற்புளலே
சேரா யவர்பாலென் சிந்தைமய லோதுதற்கே. (உரு)

மடக்கு.

எண்சீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

ஓதமலை யாருமருள் யாதுமறை யாரு
மூரிவையுடை யாருமழு வெரிவையுடை யாருந்

தீதுபதி யாருமூல கோதுபதி யாருஞ்
செல்வமுடி யாருகு வில்வமுடி யாருங்
கோதுபுரி யாரும்வெளி மீதுபுரியாருங்
கோலமறி யாருமுயர் சீலமறி யாருங்
காதரவு ளாருமிய லாதரவு ளாருங்
கனவமலை யாருமர தனவமலை யாரே. (உச)

மேகவிடுதூது.

கட்டளைக்கலித்துறை.

மலையா னிலத்து வருவேள் சினக்குமுன் பாமுகில்கா
டலையா னிலத்து வணங்குவல் செண்ணித் தமும்பசங்க
மலையா னிலத்து விதியோகர் மூன்வரு வாரணிய
தலையா னிலத்து மகிழ்ந்திருந் தேற்கத் தருதிரின்மே. (உரு)

வண்டுவிடு தூது.

தாழிசை.

இன்று பைங்கிளியை யேவி னம்மைகை
யிருக்கு மோர்கிளியொ டுரைசெயு
மெகினை நேடியறி யாத தேமுடிமு
னெங்க ணின்றுசெவி யருகுறு
மொன்று மங்குலரு குறின்வ ணைத்தினையெ
டுறுதி யென்றுசடை சிறைசெயு
முறுக ருங்குயிலொர் செவியி பட்டதை
யுணர்ந்த தேசெலவு ளஞ்சிடுந்
துன்று தென்றலெதிர் சென்றி டிற்கீடி து
தோள்கொள் பூணிரையெ னக்கொளுந்
துச்சி லல்லவென வண்டு வாழ்செவி
துணைந்து சேரும்வலி யார்க்குள
தன்று தொட்டெனது கொண்டை வாழும்வரி
வண்டிர் காண்மய டைக்கவு
மரத ஞசல ரிடத்து ரைத்தவ
ரணிந்த மாலைகொணர் மின்களே. (உசு)

காலம். மடக்கு.

எண்சீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

மின்னுமற வுறவருந்திக் குயினடுக்குங் காலம்
விடாதுமற வுறவருந்திக் குயினடுக்குங் கால
மன்னுபசுந் தோகைபரி விற்குனிக்குங் கால
மதவேணந் தோகைபரி விற்குனிக்குங் காலந்

தன்னுகொடித் தளவமரும் பப்படருங் காலந்
தோயார்பித் தளவமரும் பப்படருங் கால
முன்னுவெயில் வெம்மையுறப் புணராத கால
முடித்தமும்பர் வெம்மையுறப் புணராத காலம். (உள)

கட்டளைக்கலித்துறை.

காலங் கழியு மவமே நமன்றமர் கைக்கொளுங்கான்
மாலங் கழியும் வகையுள தோமல மாயவெண்சச்
சீலங் கழியும் பருந்தாழ்ந் னன்பரிற் சேர்த்தலனு
கூலங் கழியுந்தி வைப்பேத் தரதன குன்றத்தனே. (உஅ)

சிலேடை.

நேரிசை வெண்பா.

குன்றுத வேங்கையுமொண் கொம்புபடி வேங்கையுமெய்
பொன்று தெனப்பொலிவாட் போக்கியே - நன்றுவோர்
மின்னேப் புரப்பான் மிளிர்தாரவைத் தானருள்வைத்
தென்னேப் புரப்பா னிடம். (உக)

கட்டளைக்கலித்துறை.

இடம்படு மாணிக்க மாமலே மேவு மிறையவரே
திடம்படு கூற்றடு நீரேயெல் லாம்வல்ல சித்தரெனி
னடம்படு தாமரை யென்னுளப் பாறை நடுமலர்த்த
வுடம்படு வீர்மறுத் தாற்சில வல்லரென் றேதுவனே. (கo)

குறம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஓதுவனப் பன்றிமருப் பொசித்தமலேக் குறவற்
குவந்தாருபெண் கொடுத்தகுடி யுதித்தகுற மகள்யான்
போதுறையு மேமாரிருவர் முத்தலேநாற் றலையார்ப்
புணர்குறிசாற் றுனன்முனநின் பொலிமலர்க்கைக் குறியம்
மாதர்கரக் குறிபலவுங் கடந்துமே லாய
வாட்குறியாய் மருவுதலின் மறைமுத லாகமங்கூ
றுதரநற் குறிபலவுங் கடந்துவாட் குறிமே
லலங்கலொளி னாந்தலையாற் புணர்குவையின் றறியே. (கக)

தவம்.

நேரிசை வெண்பா.

அறியா தவமே யடைந்தடவி னோற்ற
னெறியா தவமே நினேமின் - முறியார
ணண்ணபா ணிக்கமலே நாத ரளித்தமரும்
வண்ணமா ணிக்க மலே. (கஉ)

தழை.

கட்டளைக்கலித்துறை.

மலையா வருட்சிவன் வாட்போக்கி யன்ன மயில்வனப்புக்
குலையா ளிளந்தளிர் கொண்டுதன் மேனி குளிரவொற்ற
நிலையாக வேற்றுத் தளிர்மேனி யாயொப்பு நீத்துவிற
லுலையா தவருடு வாலாய மேவ வுடன்பட்டதே. (ஙங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

படவா ளரவ மணைக்கசைத்த பரமர் வாழும் வாட்போக்கித்
தடவாள் வளையென் மனம்போன்ற தனித்தே மலையா ளியனண்ப
விடவாள் விழிவேள் கழைக்கோடு வில்லே புருவ மெனைத்துயரங்
கெடவாள் கொங்கை யிபக்கோடு கெட்டேன் மருங்குன் முயற்கோ

வேற்றெலிவெண்டுறை.

கோடுபொலி வாட்போக்கிக் குளிர்வரைமே லஞ்சுரும்பார் குழற்கோ மாது
மேடுபொலி கடிக்கொன்றை முடிக்கொன்ற வெடுத்தணியு மெங்கோ மானு
மலிதளிர்ப் புன்னையும் வண்டளிர்ப் பிண்டியுங்
கலிதருங் கொண்டலுங் கவின்றசெங் கொண்டலு
மெலிவில்பைங் குவளையும் விரும்புசெங் கமலமு
மொலிகெழு மிவ்விரண் டோருழைக் கண்டெனப்
பொலிதருந் தன்மையைப் புளியுளீர் பாருமே. (ஙஙு)

ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.

க. பார்வளர்மா ணிக்கப் பராரை வரைமுடிமே
லார்வளர்செவ் வேணி யமலர் பொலிதோற்றஞ்
சீர்வளர்பொன் மேருவின்மேற் செங்கதிரை யொக்குமே;

உ. விண்பொலிமா ணிக்க விசால வரைமுடிமேற்
பண்பொலிகால் வேதப் பரமர் பொலிதோற்ற
மெண்பொலியண் ணாலேமே லேற்றுசுட ரொக்குமே;

ங. தூபமா ணிக்கச் சுடரார் வரைமுடிமே
லாய தழும்புமுடி யையர் பொலிதோற்றஞ்
சேயபவ ளக்கிரிமேற் செம்மணியை யொக்குமே. (ஙசு)

தான்கடி வேளிவிருத்தம்.

ஒக்க வணைத்து மாக்கிடு வாரு மொருநீரே
தக்க சிறப்பிற் காத்திடு வாரு மொருநீரே
புக்கனை முற்றப் போக்கிடு வாரு மொருநீரே
மிக்க முடிக்கட் கீற்றுடை யாரு மொருநீரே. (ஙஎ)

கட்டளைக்கலித்துறை.

நீர்கொண்ட சென்னித் தழும்புடை யீரென்மு னீள்விடைமேல்
வார்கொண்ட கொங்கைச் சுரும்பார் குழலிலாடும் வந்தருள்வீர்

நார்கொண்ட சிங்கை யிலாதவ ஞயினு நாடிநுமைக்
கூர்கொண்ட வாள்கொண்டு வெட்டிடு வாணுட் குறித்திலனே. ()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குறிபடுபன் மணிவிற்றீர் மாதுலனுய் வழக்குரைத்தீர் கூடன் மேவி
நெறிபடுமற் றவையோரா ரரியநீர்ச் சிறுகுறையு நிரப்பு கென்று [தீர்
பறிபடுவே ணிப்புனல்வாட் போக்கியீர் பெருங்கணக்குப் பார்த்துநின்
செறிபடுபல் லோவணிகர் தங்கூட்டுக் கிசைந்தனரச் சிறப்பொன் றேர்ந்தே.

நேரிசைவெண்பா.

ஓராழி மேற்கிடக்கு மோராழிக் கேவிடுக்கும்
போராழி யேந்திப் பொலியுமே - நேராகா
வெம்மா னகத்திருக்கை வீத்தேந்து வாட்போக்கி
யெம்மா னகத்திருக்கை யே. (சo)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏறெனவிப் புனத்திலடிக் கடிவருவார் நகர
மெங்கென்பார் நெடுங்கணக்கு மோர்ந்திலரோ நீரே
பேறெனநும் மிடையுணர்ந்துற் றனமென்பா ரிடையின்
பெற்றியிவ ருணர்வாரோ கைம்மாஞ் டியதிவ்
வாறெனநே டுவர்கைம்மா னுடையவாட் போக்கி
யண்ணலோ முறிகொள்ளு மென்பார்கொள்வீரிக்
கூறெனவிப் புனவேங்கை கொடிக்கவிசைந் தனமோ
குறித்தவிவர் கருத்துவிரித் துரைக்கரிதா யினதே. (சக)

மடக்கு.

விருத்தம்.

ஆயு மிதழ்வாய் பானலமே யகலு மிதழ்வாய் பானலமே
யனவ மருங்கா மனப்புள்ளே யடவ மருங்கா மனப்புள்ளே
பாயுங் கயலா யினவனீயே பாவிக் கயலா யினவனீயே
பவளம் படர வருந்திடரே பாராய் படர வருந்திடரே
மீமயுங் குருகே யமர்கழியே வீணையேற் குருகே யமர்கழியே
வினைந்தம் பரவாய்ப் படர்படவே வினையோ பரவாய்ப் படர்படவே
வாயு மலராக் கழுநீரே மாறு மலராக் கழுநீரே
வளமா மலையாரணையாரே மணிமா மலையாரணையாரே. (சஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆர்கொண்ட செஞ்சடையீர் வணிகருணீ சொ ருவரொனற் கையமில்லை
கூர்கொண்ட சூலமழுக் கொண்டிருந்து மண்டினெங் கொடுத ரத்திப்[டீர்
போர்கொண்டவாரியர்கோன்வாள்கொண்டுவெட்டிடவும்பொறுத்தக்கொண்
சீர்கொண்ட வீதனுன்மற் றவர்கொடுக்கும் பொருட்பங்குஞ் சிறுதை ராதே.

நேரிசைவேணபா.

சிதைக்கலமே யாநின் றிருவடியைப் பற்றிச்
சிதைக்கலமே யாநின்ற தீமை - புதைக்குமெழு
தோற்றப் பரவை முடியாய்சொல் வாட்போக்கி
யாற்றப் பரவைமுடி யாய். (சஎ)

சம்பிரதம்.

எழுசீர்க்கழிநெடிலடி
இரட்டை ஆசிரியவிருத்தம்.

ஆயுமிவை மெய்ம்மையெவ் வொருவிரற் றலையெவ்வொ
ராழிகாத் துறவெ டுப்ப
னம்பொற் சிலம்புகால் வலிதரப் புனைகுவ
ணண்டங்கள் பலத கர்ப்பன்
பாயுமலை சூழ்புடவி வாயலரி மலர்தரப்
பண்ணுவன் குவல யங்கைப்
பற்றுவன் நிக்காம்ப லோடுவெள் ளாம்பலும்
பற்றிக் கசக்கி யெறிவ
னேயுமத யாணையை யெறும்பிதான் மத்தியை
யிருந்தும்பி தானென்னவே
யிப்பொழு தியற்றிவ னின்னமும் பலசெய்வ
னித்தனையும் வித்தை யலவாற்
காயுமயின் மூவர்புரம் வேவநகை யாடுகங்
காதர னுமாத ரன்சங்
கரனாத னுசலக் கடவுளுக் கிணையாவொர்
கடவுளையு மறிவிப்பனே. (சடு)

மடக்கு.

எழுசீர்க்கழிநெடிலடி
இரட்டை ஆசிரியவிருத்தம்.

அறிதரு மிருக்கை மாணிக்க மலையே
யமையில்சொன் மாணிக்க மலையே

யவிர்தரும் வேணி யுருவுமோ ராறே
யத்துவா வுருவுமோ ராறே

முறிதலின் முடியேயற் றதுமொரு வெட்டே
மூர்த்தமுங் தேகமொரு வெட்டே

மூடிய தெதிரி லாவுவா வுரித்தே
மூலமீ றிலாவுவா வுரித்தே

தறிபக வெழுந்த தம்மவன் கணையே
தாடரிப் பதுமவன் கணையே

தாளெடுத் தாடிக் களிப்பதம் பலமே
சாற்றுவார்க் களிப்பதம் பலமே

குறிகொடோ விடுவா ரம்புயத் தாரே
கொன்றைவா ரம்புயத் தாரே

கோவதெவ் வளவா மனத்தணை யரையே
கொள்ளுவா மனத்தணை யரையே. (சசு)

சந்தத்தாழிசை.

அணிவிரா வணியுமாடை யதளதாக வன்றிவே
றறைவதாக வரவமாக வணியதாக வென்புதார்
புனைவதாக விரையுநீறு புரியுமூணு நஞ்சமே
புணர்வதாக வுணர்தராது புணருமாசை கொண்டிளாள்
கரையுருத துயரினூடு கழியுமாறு கன்றியோர்
கடியபாவி மதனனேவு கணைதுரூவு நன்றிதோ
வரையவாரும் விரையவரசம் வரையின்மாலை தந்தீள்
வரையிராசன் மகளொடாடி மகிழிராச லிங்கமே. (சள)

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

கருதுந் தருதும் விருதுமலி கதியென் றுரைப்பீர் கொதிசகடு
மருதும் பொருது மெருதுடையீர் மணிமா மலியீர் யானீன்ற
விருதுங் கவன முலையானைச் சுரும்பார் குழலி யென்றறகுந்
தருதுங் கருது மிடமென்னீர் தருவீர் தகவப் பெயராட்கே. (சஅ)

கட்டளைக்கலித்துறை.

பெயராத மாற்குழி வீழ்மனத்தேதைப் பிறங்கருளாந்
துயராத வேக்கொண் டெடுத்தேதறி னீமுத் துகளுமறு
முயராத தேரெனும் வாட்போக்கி யாய்பில முற்றபொற்றே
ரயராத வேக்கொண் டெடுத்தேதறி முப்புர மட்டவனே. (சகூ)

நேரிசைவெண்பா.

அடரும்வன மேவுமிரண் டாயிரங்கோ டேந்திப்
படரும்வன மேவலரோன் பண்வாய்—தொடருமே
நாட்போக்கி யாளெருத்த வீயா தருள்புரியும்
வாட்போக்கி யாளெருத்தன் மா. (குo)

சி த் து.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாமேவு வாட்போக்கி மாதேவர் தமக்கிருப்பு வரையை முன்னுட்
டீமேவு வெள்ளிவரை யாக்கியவண் சித்தர்யாஞ் சொல்லக் கேண்மோ
பாமேவு மற்றவர்கை நாகமும்பொன் ஞக்கிணக்தாள் பணிவா ளெனர்க்
பூமேவு நாகலோ கத்தையும்பொன் னுலகாகப் புரிந்தோ மன்றே.[குட்

இதுவுமது.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அன்றுமது மையிலெல்லாம் வல்ல சித்த
ராயிஞ் சடிபரவி யருண்மா ணிக்கக்
குன்றுறையுஞ் சித்தர்யாம் புற்கை யேனுங்
கூழேனும் பசிதீரக் கொடுவா வப்பா
வின்றுவரு மிரும்புதீன் யொன்றுஞ் செய்யா
திருந்துதயத் துதித்ததுபொன் னென்னச் செய்வோ
நன்றுமது நாள்வெள்ளி யெனவுஞ் செய்வோ
நானிலத்து நம்மருமை யறிவார் யாரே. (ருஉ)

இதுவுமது.

ஷிவிருத்தம்.

ஆரப்பா நம்மருமை யறிய வல்லா
ரகிலகிகி லம்புகழ்வாட் போரக்கி கண்டக்
காரப்பார் சடையார்மே லாணை மெய்யே
கரிகொணர்க விரும்புமா தங்கஞ் செய்வோம்
பாரப்பா வப்பரம செருத்துக் கொட்டில்
பைம்பொன்னே யெனச்செய்தோ முனமிப் போது
மோரப்பா வெனக்கொடுவா தாகந் தீர
முகந்தடிசி லளித்திடினு முகந்துண் போமே. (ருங)

கலிவிருத்தம்.

உண்ணு நஞ்சமு தாகு முனக்கமு
தெண்ணு நஞ்சம தாகு மெனக்கிதெ
னண்ணு மாணிக்க மாமலே யாய்நகப்
பண்ணும் விண்ணம் படர்மதி வெம்மையே. (ருச)

ஸ க க் கி ளா.

மருட்பா.

வெம்மையொடு தண்மை விரவத் தருமுலக
மும்மை யுடையான் முகநோக்க - மம்மா
தகரரு மற்றவை தனித்தனி யெழத்தரும்
புகரரு மொருவாட் போக்கிப்
பகரரு மடந்தை பனிமுக நோக்கே. (ருரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நோக்குமா ணிக்கமலே யெதிர்ப்படுமோர்
பொருளகத்து நுழைவ தன்றித்
தாக்குமது தன்னகத்து நுழையவிடங்
கொடாதமருந் தகைத்து மீது

தேக்குமொளிப் பரம்பொருளு மத்தகைத்திவ்
வொப்புமையின் றிறமு ளார்ந்து
தூக்குகவில் பவரிணய பொருணிமலைக்
கொழுந்தெனுமத் துதிமெய் தானே. (நிசு)

உளசல்.

ஈற்றடிமிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை.

துதிக்கும் பரமர் சுரும்பரர் குழலோ
டுதிக்கும்வாட் போக்கி யுறையுஞ்சீர் பாடிக்
கதிர்க்கு முலகுலுங்கக் கைவளைக ளார்ப்ப
வதிர்க்குந் துடியிடையீ ராடுக பொன்னூசல்
ஆயும் பிடிநடையீ ராடுக பொன்னூசல். (நிஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

ஊச லாடு நெஞ்சமே யோவி மாய வஞ்சமே
வீச லாதி யங்கமே மேவி ராச லிங்கமே
வாசம் வீசு தென்றலோ வாது பாய நின்றலோ
மூச வேள தங்கையே மூட வாடு மங்கையே. (நிஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மங்கையொரு பங்குடையார் மாணிக்க மலையொளிமேன் மருவி மென்பூஞ்
செங்கையய மகளிருல கத்தமர்வெண் களிற்றுடலஞ் செம்மை செய்ய
வங்கையொரு சதகோடி யானைத்தேர் சூழ்கவெப்போ ராற்றிற் றென்ரு
சங்கையுறும் வானுறு சோணைமதி பரிதியெனத் தயங்கு மாலோ.(நிசு)

கோச்சகக்கலிப்பா.

மாலாய பச்சை மயிலையிடம் வைத்தனையென்
பாலா யவளும் பசப்புற்ற காரணத்தான்
மாலாய பச்சை மயிலை வலத்துவைவின்
பாலாய வாட்போக்கிப் பைம்பொற் சிலையானே. (கூ0)

ஈற்றடிமிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை.

ஆனவனு காதவனென் றன்புடையார் பாலாயா
னானவனு காதவனீ னாளை வுட்குறிக்குங்
கோனவன்மு னுகியல்லாக் கோமான்மா னிக்கமலை
வானவன்சீர் பாடாதார் வாயென்ன வாயே
மலைக்கொழுந்தென் றுரையாதார் வாயென்ன வாயே. (கூக)

களி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாயாது வருந்துமுயி ரும்பலவே பரமர்
வாட்போக்கி யமருமெழு மாதரடிப் பூசை

வீயாது செயிற்பிறிதும் வேண்டுவதோ விண்ணோர்
விரும்புசுரா பானத்தா லமரே யானர்
தேயாது தாலத்தின் கட்குடியர் நரர்மா
றெண்டிசைக்கட் குடியனய னலரின்கட் குடிய
னுயாது வீணைகத் திரிவதெவ னந்தோ
வடைவசோ குருக்களொழித் தரியபர கதியே. (கூ)

இதுவுமது.

கட்டளைக்கலித்துறை.

கதிகாண் வழியொன்று கூறுதுங் கேண்மின் கடற்புவியிர்
விதிகா ணரியதென் றேகஞ்ச மேவுவன் விண்டுவென்பா
னிதிகா ணைனக்குல்லை கொள்வானிப் பூரண நீத்தலென்ன
மதிகா னிதுகொளின் வாட்போக்கி யார்சத்தி வாய்ப்புமே. (கூ)

இதுவுமது.

எழுசீர்க்கழிநெடிலடிஇரடைஆசிரியவிருத்தம்.

உற்றவொளி மாணிக்க மல்லியறைவர் பணியடி
யுவந்திருப் பதும்வேடர்கோ
னுதவெச்சி லான்மிசைந் ததுமறை மகஞ்செய
வுதாத்தளித் தியுந்தெளிகிலார்
கொற்றமுது மமரொரு தக்கன்வேள் விக்களங்
குறுகியஞ் ருற்ற தணைார்
கொல்லா னெனுங்குறட் டொழுமனஸ்ல வித்தியெனக்
கொள்வர்மறை வீணேயெனர்
பொற்றகஸ்ல மான்விருப் பன்பிரமன் மாயவன்
போகுமான் பின்றொடர்பவன்
பொருகேழன் மீனுரு வவாவினன் குக்குடப்
புட்பற்று வோன்முருகவேள்
சொற்றவிவை யாவுநன் குறவுணர்ந் துட்கொடு
தொடங்குமின் சத்திபூசை
தூயதே றலுமினிய தசையுமொரு வீர்பெருஞ்
சுத்திமுத் தியுமடைவீரே. (கூ)

மடக்கு.

கட்டளைக்கலிப்பா.

அடையு மாஸ்ல யொருவண் டரங்கமே
யப்புக் கூடு மொருவண் டரங்கமே
யிடையி லாவுமை யேயிடப் பாகமே
யிபவ னத்தஸ்ல யேயிடப் பாகமே

யுடையெ னுவரை கூடுவ தாசையே
யுன்னு மன்பரங் கூடுவ தாசையே
சடைவி ராய விருப்புச் சிவாயமே
சங்கரற்க விருப்புச் சிவாயமே. (கூடு)

இதுவுமது.

மேவ லார்புரத் துந்தழன் மூட்டுவார்
மேவு வார்புரத் துந்தழன் மூட்டுவார்
கடவன் மேவிய மாற்கும் வெளிப்படார்
காவ லோவிய மாற்கும் வெளிப்படார்
ஓவ லோவினர்க் கும்பசப் பூட்டுவா
ரோவன் மேவினர்க் கும்பசப் பூட்டுவார்
நாவ லார்புகழ் மாணிக்க மாமலை
நாய னுரு நடுநிலை யாளரே. (கூசு)

நேரிசைவெண்பா.

ஆளாக வந்த வடியேற் கடர்கரும்பு
வேளாக வந்த விரவிழித்த - காளாய்
சிவாய வமாயாய் தெளியவரை யாய்திக்
கவாய வமாயா யருள். (கூள)

மறம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருள்செறிமா ணிக்கமலை யிறைவன் செம்பொ
னணைத்தொருவா ரிதிராப்பண் மிதக்குந் தோணிப்
பொருள்வணிகன் முளைபல்கா னடந்த தேர்ந்து
பேராட்டத் தொருவளர்ப்புப் பெண்ணை யிற்றோந்
தெருள்கிலனு யவற்கதிக னென்று வேந்துந்
தேறியொரு பெண்கேட்டான் செப்பி வற்குங்
கருளகல்யா னதிகனென வினிப்பார்ப் பானுங்
கண்ணறக்கேட் பான்மறவர் குலச்சீர் நன்றே. (கூஅ)

இதுவுமது.

கலிவிருத்தம்.

நன்றக மகிழ்ந்துமற நங்கைவிழை வுள்ளத்,
தொன்றரசு பொய்த்திரு முகங்கொடிவ ணுற்றுய்
கொன்றனையன் மெய்த்திரு முகங்கொணர்தும் யாமே
யின்றறிக தூதமணி வெற்பரரு ளேற்றே. (கூசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏதமில்வாட் போக்கியிறை பல்வளைபார்ப் பனமடவா ரிடங்க வர்ந்து
மேதகுகூ டலில்விற்ருன் முனமிங்காட் கவர்வதெங்கு விற்பான் கொல்லோ

வோதல்செய் முலகுள்ளங் கவர்கள்வ னுயிர்கடொறு மொளிக்குங் கள்வன்
மேதகைய விவனெனு மும்யான் வனோகவருங் கள்வனென விள்ளுவேனே.

கட்டளைக்கலித்துறை.

விள்ளும் படிவரை வாட்போக்கி னீர்திரு விளைமலர்த்தார்
நள்ளும் படிகொடுப் பீர்மறுப் பீரெனி னுடுதுதற்
கொள்ளுங் கணுங்கட் செவிப்பணுங் காளுங் கொடுத்தருள்வீர்
உள்ளுங் கணைமதன் றென்றல்வெண் டிங்க ளுதனறவே. (எக)

மறம்.

நேரிசைவெண்பா.

அறவர்புகழ் வாட்போக்கி யண்ணல்வரைப் பாள்வாழ்
மறவர்குலப் பெண்வேட்ட மன்னர் - திறலி
னுறுவார்பின் றேமென் றுடன்றமர்த்து மாய்ந்து
பெறுவார்பின் றேவர்குலப் பெண். (எஉ)

கட்டளைக்கலித்துறை.

பெண்பா லுகந்தருள் வாட்போக்கி மேய பெருந்தகைக்கு
வண்பால் கவிழ்த்தபுள் ளோகுயில் வாரிமக் தாகினியோ
விண்பா னுயர்தென்றல் வெற்பெழு மாதர் விழைந்தவெற்பே
கண்பா லிருளன்ப ருள்ளிரு ளோபுறங் காண்பதற்கே. (எங)

பாண்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காணரிய மாணிக்க மல்லவளரோங் கொளியிற்
கலப்புறுமின் பிதுவெனக்கொண் டுலப்பறுசீர்த் தலைவர்
நாணரிய பாத்தையவா வினரினிமற் றெனையு
நச்சுவர்பாண் மகனேயன் பினர்கின்பா லெனநீ
பூணரிய பொய்பூண்டு வீணையிசைத் திடுதல்
போதுமிவ ணின்றகறி நின்றணியே லெறியுங்
கோணரிய கற்களினின் கருந்தலையுஞ் சுவற்பாற்
கொண்டிடுபத் தருந்தகரு மண்டிமான் முடிவே. (எச)

வஞ்சித்துறை.

முடித்தழும்பர்சீர்
படித்தவன்பர்பூ
வடித்தொழும்பரே
தடித்தவின்பரே. (எடு)

வஞ்சிவிருத்தம்.

இன்ப ராயென் றிரண்டெ னும்
வன்ப ராய்வழி மாற்றுவார்
முன்ப ராய்முடிக் கிற்றுளா
ரன்ப ராயமர் வார்களே, (எசு)

கட்டளைக்கலிப்பா.

ஆவாவு படைநெடுங் கண்ணுமை
யாள வாவொரு பாலளித் தாரந்தச்
சீவாவு மெனக்கொரு பாலருள்
செய்த வாவிக் கொடாதமர் வாமென்
பாவாவு குளிர்புனல் வெங்கொடும்
பால வாவழ லேந்திப் பொதுகின்று
நாவாவு முடித்தழும் பாளர்தா
நடுஷி லாதவ ரென்னினென் னுவமே. (எஎ)

நேரிசைவெண்பா.

ஆவா வடியே னலந்தே னருள்வேத
மாவா வடியேன் மழுப்படைக்கைத் - தேவா
வரும்பாச மைந்துமற மாற்றுர்வாட் போக்கி
யருப்பாச மைந்து மற. (எஅ)

இடைச்சியார்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அறவிடையார் வாட்போக்கி யண்ணலார் நகரிடைச்சி யாரேயுங்க
ணுறவிடையார் வெறுப்புறுவா ராடைநீக் குபுபணப்பா லுறவெற்கீயுந்
தெறலிடையா ருழுவாதிரண்டுபசற் குடங்களுமென்செங்கைக்கொள்வேன்
பெறவிடையா ரருள்புரியு நயமோமோ மோரெனுஞ்சொற் பேசி டீரே.

இதுவுமது.

நேரிசை வெண்பா.

பேசுமா ணிக்கமலைப் பெம்மா ணினிநகரத்
தேசுமாண் வீதியுலாஞ் சிற்றிடைச்சி - மூசுபூ
வண்டரே யாவார் வனமுலைசேர் வார்யாரு
மண்டரே யாவார்மெய் யாம். (அ0)

வலைச்சியார்.

கட்டளைக்கலித்துறை.

ஆவேறு மையர்செம் மாணிக்க மாமலை யாளர்மலர்
மேவேறு கூந்தல் வலைச்சியர் போகம் விருப்பியன்றே
நாவேறு நால்வர்தம் பாவேறு மாலை நலமணக்குந்
தூவேறு தோளிற் புலவார் வலைமுன் சுமந்ததுவே. (அக)

கலிவிருத்தம்.

வேலைவாய் விடமுணும் விருப்ப ரென்கனி
மாலைவா யமுதுணும் வாஞ்சை வைத்திலார்
கோலவாய் மணிவரைக் குழகர் மற்றவர்க்
காலவாய் விருப்பமே யளிக்கு மாலையே. (அஉ)

வலேச்சியார்.

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

மாலைமுடித் தழும்பரருள் போலெனக்கு வெளிப்பட்ட வலேச்சி யீர்தஞ்
சேலையணைத் திடச்சிலர்வா யூறுவரால் கெனிறுசெறி திருக்கை கோப்ப
வாலையடு கரும்பிணுடைந் தளமலங்கு வார்சிலர்சொல் லயிரை யேற்க
வேலையொழி வார்சிலர்யா னுரான்மன் னச்சுறவு மேனி னேனே.(அக)

எழுசீர்க்கழிநெடிலடி

இரட்டை ஆசிரிய விருத்தம்.

மேவார் புரஞ்செற்ற வாட்போக்கி யார்தில்லை
மேவிநாங் கண்ட தில்லை
மேவாலை வாயால வாய்மணண் ணுமலை
வீராலியக ணண்ணுமலை
மாவார் கழுக்குன்றம் வன்கழுக் குன்றமேர்
மலியொற்றி யூரொற்றியூர்
வாஞ்சியம் வாஞ்சிய மிபக்கா டிபக்காடு
மறைவனம் மறைவனகலத்
தாவார் விருப்பிமரு வாரூர் திருக்காழி
யம்மமரு வாரூர்திருக்
காழியா வடுதுறை யடுக்குமா வடுதுறைக
லஞ்சாகி யஞ்சாகிவண்
காவார் பெருந்திருக் காளத்தி யுரைதிருக்
காளத்தி யென்றுகருதிக்
கழிக்கென வொழித்திடி னழித்தல்செய் பழித்தனே
கழன்றுய்வ தென்றுமனமே. (அச)

கூத்தராற்றுப்படை.

நேரிசைஆசிரியப்பா.

மனமமர் பவுரி மல்லடிப் பிதிர்ங்
கடகமுள் ளாளங் காணங் குளிப்பு
வீரட் டானம் விரும்பும் பிரமரி
பரத நிலையம் புரிய முப்பித
(சு) மாமுதற் பலவு மரிறப நடிக்குங்
கூத்தன் மகளே கூத்தன் மகளே
கடற்புவி யாளுங் காவலன் மகனல
னின்பால் யாணு நிகழொரு கூத்தன்
மகளே யென்வாய் மாற்றங் கேண்மதி
(கப) வலம்பா டொழிக்கு மிலம்பா டெய்தி
மெய்கனின் றறியா வீணர்வாய் பொருவக்
கொடியுயர்ந் காதை குதட்டலு மொழிந்த
வாயிடை நீர்நசை வந்த காலை

யுறுமறு சுவையுளொன் றுள்ள வூறலா
கரு னறுதி செய்தாங் கரும்பசி மேவின்
மற்றதை யொழிக்கும வகையறி யாது
முற்ற வருந்தி மூர்ச்சித் துடைந்து
சாந்திரா யணங்கிரிச் சரமுதற் கொடிய
விரதங் கொண் டோர் மேனிமே பொருவ
உ0 வென்பு நரம்பு மெண்ணை வெளிப்பட்
டீதிற் பறக்க வுடம்படு மேனியிற்
போர்த்த போர்வை புன்மயி ருருவிப்
படிருதுதன் காரணம பரப்பிக் காட்டச்
சிலம்பிநூல கீழுஞ் சிதன்மண் சேலுமம
உரு பொதியவுட் பட்ட புறிசறி சூரமபை
யுள்வாய்ப பஃறுளை யொருபட வடைத்தாங்
கிருதிலை வெளிபபட் டிடங்கு முறுகதப
படுமொரு பழம்பாய் விடுதலை யணையொடு
நாணிலாத் தனுவென நகுதது முடக்கி
ஙo வாடைவந துடற்று மலிகுளிர்க் நுடைநது
சாணு விரண்டுங் காடி தகாக்க
வேரட்டமு மதரபு மொழிவின்ற நடுங்கத்
தருமிரு கிரைபடுவந காலந காரக்க
வுலகுகு மசகமுமை விலங்கா துகிக்கப
ஙரு பசித்தழல் வெதுபபப பழவிணை நுணநது
முடக்கிகாழி யாது கிடகுகு காலைப
பல்லிய மரணையுட பாங்குற முடையிட்
டெல்லியும் பகலு மிரியா துகிடகுகும்
பவுத்த ரமணர பாழ்நரக பொருவ
சo வடலைகண் டரியா வபபாக மநவிப
பெரிது கோகிலா பெருமூசு செறிநது
மாலைத காமரா லலர்புமா ரபுகுங் காடு
பதுவந துளிகுகு பழலை பாய்ச சிருஅ
பொதிதித நுடைக்குங் கதியிலா நது
சரு கையே கொண்டு பிரபிணை பறி ப
வேயடி மென் றோடு டாய் முக நோகக
மற்றவள் வருந்தி வறுங்கை நீட்டி
மார்பிடை யணைபப சோர்தரு கண்ணீர்
கிறிதிடை யின்றியச் சிறுரூட ணணைபப
ருo மற்றவ ளீர பொறறிடக் கருதி
யொருகை நீட்டி யொருவருக் கொருவர்
கோவணம பறிக்கக் கூகூ வென்றுங்
கழுகுரு லெண்செவி யுழுகுர லாக
வெண்செய் வாமென் றிறபபதற் கெண்ணி

(அடி) யொருப்படு காலேநல் லூழ்பிடித் துந்த
மடிசற் றின்றிக் கடிதவ ணின்று
வெளிவந் தம்ம விளைந்து நடந்து
மாணு டென்னுஞ் சோணு டடைந்து
பூவிரி பொழிற்குலைக் காவிரி மூழ்கித்
(அ0) திருத்தகு மந்தித் தென்பா லுற்றோன்
பாயிருள் பருகும் பகற்கதி ரேந்த
மோருழித் திரண்டாங் குதித்துதின் றென்னச்
சேயொளி விரிக்குஞ் செம்மலே யென்று
கண்டன ருங்குக் கைகுவித் தேத்திப்
(அரு) பெயரரு மிம்மலைப் பெயர்ப்பா தென்று
வினவினன் கேட்ட மேதகு பெரியோ
ரதநா சலமீ தலங்குற வீதன்மேற்
றழைதர வமர்ந்த தாமணி யொன்றுண்
டன்னது காண்போ ரரும்பெறல் வளங்க
(எ0) ளெல்லா முடையா ரென்றினி திசைப்ப
வொருங்கெழு மகிழ்வி னாக்கமிக் கடைந்து
படிததல நின்றுவின் படர்வதற் கிட்ட
வேணியிற் பொலிசா னவழி யேறிப்
பிறங்குமும் வயிரப் பெருமாள் காவலி
(எரு) னறங்குல வம்மலே யணிமுடி யடைந்து
செயிறறு பொன்செய் சினகரம் புக்காங்
கெய்ப்பிடை வைப்பொன் றெதிருறக் கண்டெனச்
செந்தா மரைக்கட் டிருமறு மார்பனு
மந்தா மரைவா ழுண்ணனு மின்னுங்
(அ0) காணப் பொருளைக் கண்டனன் கூதேதா
தனிப்பெருந் திருமுன் றண்டனிட் டெழுந்தே
னடங்கா வுவகை மடங்காது பொங்கக்
கூடினன் றழைந்துசற் றுடின னப்பொழு
தெண்டோ ளப்பொரு ளின்னருள் சுரப்ப
(அரு) வடதிசை நிதிக்கோன் மனமழுக் கறுப்பப்
பெறலரு வளங்கள் பெரிதும் பெற்றன
னன்றே யுவகை யார்கலி மூழ்கின
னின்னே விளைந்தவ ணேகுதி
யென்னே பெறலரி தெல்லா முறுமே. (அரு)

நேரிசைவெண்பா.

உறமேவ தவித்தா யொளியியைவாட் போக்கித்
திறமேவ தவித்தாய்ச் சிறந்தார் - நறமேவ
தருங்கொன்றை யம்பார் சடையதனிற் தார்நம்
மருங்கொன்றை யம்பார் வசார். (அக)

கட்டளைக்கலித்துறை.

வரந்தரு மாணிக்க மாமலை மீசர்தம் வாம்பரிமேயா
திரந்தரு பாதுகை யோகிலம் போதிருக் கோவணமோ
வரந்தரு மாதன மோகோயி லோநன் கொளிருருவோ
பரந்தரு வந்திய சோமொழி யோமெய் பகர்மறையே. (அள)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மறைபுகலும் வாட்போக்கி வள்ளலுக்கு
விடையுருவாய் மாலே செங்கை
யுறையொருகோ டொழித்திருகோ டிற்றேரை
யிலாமணிநீத் தேரை மேய
வறைமணிபூண் டடர்விடமாற் றிடுவானீத்
தஃதணுகா தமர்வா னுற்றுப்
பிறைபயமீனுர்ந் தண்ணியமா மம்பொழுது
மவற்சுமக்க நிணைத னன்றே. (அஅ)

குறளடிவஞ்சிப்பா.

நன்றென்பதுந் தீதென்பது
மொன்றும்பவ மென்றுங்கொடு
கொதியாமனர் பதியாவொரு
சிறுகாயினேன் பறுகாவகை
யருள்புரிமதி கருமுகிலுகைத்
தெழுபுனிதனுங் குழுவமாரு
நறையிதழ்மல ருறைமுனிவனும்
வனமாலிகை புனைதாளனும்
பொறிவலியொருங் கெறியுறுவருஞ்
சூழ்பாரகம் வாழ்வாரொடு
முடிவறவடைந் தடிதொழுதெழ
நெடுமறைகளி னொடுதுதிசெயச்
சுரும்பார்குழ லரும்பார்முலை
தொடைமார்பகத் திடைமூழ்குற, நாளும்
புண்ணியம் பொலிவாட் போக்கி
விண்ணியன் மூடிமேல் வீற்றிருப் போமே. (அசு)

கோற்றியார்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இருப்பொலிநீர் வைப்பாஞ் சேரங்கிடச்சக்
காஞ்சுழற்ற லென்னை மால்சேர்
தருப்பொலியும் வடமலைதென் மலைகாட்டி
யுடனனந்த சயனங் காட்டிற்

திருப்பொலிமா லடிமையெனு நுமக்கடிமை
யாவறுழாய் செறிம ணித்தார்
குருப்பொலியப் பூண்டுமுடித் தழும்பர்விழாக்
கண்டுவக்குங் கொற்றி யாரே. (கூ0)

பிச்சியார்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆர்கொண்ட முடித்தழும்ப ரருட்பவனி நோக்கி
யணிமறுகிற் சுழன்றுடி யடைபிச்சி யாரே
கூர்கொண்ட விழிநெடுவே லிருக்கவொரு சூலங்
கோடன்மிகை வெண்ணீறுங் கண்மணிமா லிகையும்
வார்கொண்ட செஞ்சடையும் பூங்காவி யுடையு
மயக்கமறுப் பதுமறந்து மயக்கிடுமா னுமைச்சார்ந்
தீர்கொண்ட விக்கோலங் கொண்டதுமா முனிவ
ரியல்பணித்துங் கவர்வதற்கோ வியம்புவிர்மற் றெனக்கே. (கூக)

விறலி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்னீ மேவுறு மிறையவன் தூலியளி யென்னிடம் புகுழாயென்
முன்னீ யாலவா யிடத்துவாட் போக்கியார் முதிரரு ளால்வென்ற
பொன்னீ நேரென வுள்ளுவல் விறலிநீ புகழுனையே லிசைதோற்றுப்
பின்னீ மற்றவட் சுமந்தவ ணெனப் பெரிதுமெள் ளுவலோரே. ()

நாராவிடுதூது.

கோச்சகக்கலிப்பா.

ஓராய் கடுமொழியு மோரா யகங்கர்முனிந்
தாரா யெழவுமோ யாராயாய் திங்கள்சுடல்
பாராயா னந்தமுவப் பாராய் முடித்தழும்பர்
தாராய் படநாராய் நாராயுண் ணூராயே. (கூசு)

நேரிசைவெண்பா.

ஆயும்வாட் போக்கி யபன்முடிமே லாரியன்கூர்
தீயும்வாட் போக்கியநாட் டோன்றுமவ்வி - வாயிடைவாழ்
மங்கையடை யாணீர் வடிவமொழித் தாலடையுஞ்
சங்கையடை யாவாறு தான். (கூச)

கட்டளைக்கலித்துறை.

தானே தனக்கொத்த வாட்போக்கி நாத சடாமுடிமேன்
மீனேய வெள்ளரு சோடுவைத் தாய்மன வெண்கலையை
யூனேய பல்லுயிர் சூழுடிக் காரல சோடுநுங்
கானே யுறவைத்தி யென்றீ யமனக் கருங்கலையே. (கூஞ)

கலிநிலைத்துறை.

கலந்த காதலென் பாக்கிவாட் போக்கியைக் கரும்பு
கலந்த காமர்சொல் லோடுகண் டினிதுப கரும்பு
கலந்த காரமே வாதுதீ விண்கட கரும்பு
கலந்த காவென லாமன மாமயற் கரும்பு. (கூசு)

கட்டளைக்கலித்துறை.

புரிதரு மாணிக்க வெற்பார் வதனம் பொலிவிழியுட்
பரிதரு மொன்று மறைந்து சுடும்வெளிப் பட்டுச்சுடும்
விரிதரு மொன்றிவை தீர்சுடு கண்டுறுதி வேற்றுமையென்
னெரிதரு செந்தழ லேமேனி யார்கண் ணியல்புமதே. (கூஎ)

நேரிசைவெண்பா.

அதரஞ் சிவந்தா ளையலான்பின் சென்ற
ளதரஞ் சிவந்தா ளலளா - லுதர
மடித்தழும்பா விக்கா மனன்மீட் டருள்வாய்
முடித்தழும்பா விக்கா முனம். (கூஅ)

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

முன்னியயா வுந்தருவாட் போக்கிநா
யகவடியேன் மொழிந்த பாடன்
மன்னியசூ றமுங்குணமாக் கொண்டுமகிழ்ந்
தருள்புரிதி மறுப்பா யென்னிற்
றுன்னியவூ ரினும்விசைசார்ந் தறியாத
புல்லெருக்குஞ் சூடிக் கொண்டாய்
மன்னியமற் றதன்குணமென் னெனின்விடைநீ
கொடுக்குமா வருங்கண் டாயே. (கூசூ)

நேரிசைவெண்பா.

ஏற்றர்வாட் போக்கி யிராசலிங்கர் கூற்றினுக்கோர்
கூற்றர் சுரும்பார் குழல்பாகர் - நீற்றசெமை
நன்முடல் கண்டோ நயவாமை வேண்டியவர்
மன்முடல் கண்டோமம் மா. (க00)

வாட்போக்கிக்கலம்பக முற்றிற்று.

திருவாவடுதுறைஆதீனத்துக்

குருபரம்பரையகவல்.

திருவளர் கைலைச் சிலம்பில்வீற் றிருக்கு
மருவளர் கடுக்கை மாலிகைப் பெருமா
னருள்பெறு நந்தி யடிகடம் பான்மெய்ப்
பொருள்பெறு கருணைப் புகழ்ச்சனற் குமார்
மற்றவ ரருளுறீஇ வையகத் தியங்கிய
நற்றவர் சத்திய ஞானதரி சனிக
ளவந்தெறு மன்னவ ரருளாருங் குற்றுப்
பவந்தெறு வாய்மைப் பரஞ்சோ தி யடிக
ளத்தகு சூரவ ரருளடைந் துயர்ந்த
வித்தகர் வெண்ணெய் மெய்கண்ட தேவ
ரிவர்முதற் சூரவ ரியைந்ததிரு நாமங்
தவர்புகழ் சமாதித் தலமாடை மதிநா
ளிவைமுறை யுரைப்பா மிசைத்தமெய் கண்டர்
சுவையமை வெண்ணெய் தூலமதி சோதி
த்வலருங் கருணை தழையரு ணந்தியார்
கவலருந் துறையூர் கன்னிமதி பூரம்
படர்மறை ஞானசப் பந்தர்வண் டிலேலை
வடகளாச் சேரி மடங்கன்மதி யுத்தரந்
திக்கொத் திறைஞ்சத் திகழுமா பதியார்
மெய்க்கொற் றவன்குடி மேடமதி யத்தம்
வாய்ந்தவரு ணமச்சி வாயமதி சிகர்மேல்
வேய்ந்தகொற் றவன்குடி வின்மதி யாதிரை
திண்ணிய சித்தர் சிவப்பிர காசர்
நண்ணிய தலமதி மாளவர்க் கில்லை
யளவா வருளுற் றவிர்நமச் சிவாயர்
வளவா வடுதுறை மகரமதி முதலு
ணலமலி தருமறை ஞானர்மே லுரைத்த
வலமலி துறைசை மகரமதி சோதி

V.B.SUBRAMANIYA SASARMA PANDIT.

வளம்பயி லம்பல வாணர் மேவில்லித்து
கூ0 விளம்பிய துறைசை மேடமதி யவிட்ட
மொருவா வருண்மலி யுருத்திர கோடிக
டிருவால வாய்விருச் சிகமதி யனுட
மணைய வருள்வே லப்பர் திருப்பூ
வணைநகர் விருச்சிக மதியுத்த ராடந்
கூரு தாமலி குமார சாமிகள் சுசீந்திரம்
வரமலி விருச்சிக மதியுத்த ராடந்
தனைசொல்பிற் குபார சாமிகள் சுசீந்திர
முனைமடங் கன்மதி யுத்தரட் டாதி
மருவுமெய்ஞ் ஞான மாசிலா மணியார்
சஂ வெருவில்வெண் காடு மேடமதி யுமோகினி
யிராம லிங்கர்மு னிசைத்தகோ முத்தி
பராவு விருச்சிகம் படர்மதி யனுடந்
தாவில்வே லப்பர் சங்கர நமிநூர்
சீகாவில்வான் கன்னி குலாமதி மூலம்
சரு பின்வே லப்பர் பெருந்துறை சீகாட்டிற்
பொன்வேப் சேமதி பூரட் டாதி
யாய்புகழ்த் திருச்சிற் றம்பல தேசிகர்
வேய்புகழ்த் துறைசை மிதுனமதி பரணி
யம்பல வாண ராவடு துறையே
ரு0 நம்பலர் கொடுஞ்சிலை நகுபதி சீகட்டை
வளமலி சுப்பிர மணிய தேசிக
ளளவரும் புகழ்த்திரு வாவடு துறையே
தெளிதர வொளிர்விருச் சிகமதி கார்த்திகை
வெளிதர வைதீத்தன் மேணைவா வானே.

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

கணபதிதுணை.

திருவாவடுதுறை

ஸ்ரீ அம்பலவாணதேசிகர்கலம்பகம்.

காப்பு.

நேரிசை ஆசிரியப்பா.

திருவளர் தெய்வச் சிறப்பொருங் கமைந்த
குருவளர் பண்ணிக் கோதில்கோ புரத்தோ
டெண்ணீர் மாட மிணைதடுத் தோங்குந
தெண்ணீர் வளங்கூர் திருவா வடுதுறை
கற்பல மாக நண்ணிவீற் றிருக்கு
மம்பல வாண வருட்பெருங் குரவன்
புண்ணியம் பொலியுர் புகழ்ககழற் கட்கவை
கண்ணிய கலைபகக் கண்ணிபுணைந் தணியத்
திருதோட் டன்பர் சிந்தையுண் மலரு
மொருகோட் டாம்ப லிருதாட் டாமரை
யேயொரோடு பொலிபொழு திரண்டு
நாரொரு தொள்ளாயி ரமல்பெறற் பொருட்டே

நூல்.

(ஒருபோ தயகிரைக்கோர்க்கக்கலி பா.)

க. பார்பூத்த பெருந்தேயம பற்பலவு மெடித்தீதத்தச்
சீர்பூத்த வெண்மகளுஞ் செயாகளுங் கலந்துறையத்
தானமொடு தவமுமோரு தடையின்றித் தழைதோங்க
மானமொடு புகழ்வயங்க வயங்குபெருஞ் சோணாட்டின்
முத்தரெலாங் கொண்டாட மூவாத் தான பதுதோடி
சித்தரெலா மகிழ்ந்துறையுந் திகழ்திருவா வடுதுறையிற்
புண்ணியமே தழைந்தநனைப் பொலிதருசத் துவந்தழைய
வெண்ணியவன் பருக்கருள்வா னினிதுவிற் றிருக்தருள்வோய்!

உ. சொல்லாலின் தூற்றரும்பத் துரிதால்வர்க் கருள்செய்வான்
கல்லாலி னமர்ந்ததுமன் கற்றுவிட்ட படிசெய்து
திருதோக்காற் பரிசத்தாற் றிகழுமறைப் பொருள்வாக்கா
லுருதோக்காப் பாவனூல் போகத்தா லவுத்திரியால்

வெம்பாச முழுதுமற மேவினருக் கறுத்தருளி
நம்பாச முகத்தரும்ப நகுதோள்வெண் ணீறிலங்கப்
பெருங்கருணை யுவட்டெடுப்பப் பெரிதுவக்கு மடிகேளென்
றிருங்கருணை யடியரெலா மேத்தெடுக்கப் பொலிவோய்கேள்!

(இவையிரண்டும் எட்டடித்தரவுகள்.)

க. மலைமாலை வயங்குறுகண் மணிமாலை கொண்டணிவெண்
டலைமாலை கொளினஞ்சுந் தரணியெனக் குரித்தன்றே!

உ. நிறைமதிய மொளிர்சிரமே னிகழ்குடையாய் நிழற்றுதலாற்
குறைமதிய மிகையென்று குறித்துவரைந் ததுநன்றே!

ங. அங்கைநீ ரொற்றுடை யாட்டியிடத் தகுதேத்துக்
கங்கைநீர் தகாதென்று கரந்ததுவுங் காரியமே!

ச. அங்கதமொன் றேறனுபடை யாதவருட் டிருவுருவுத்
தங்கதமொன் றேறனுபடை யாதொழித்தா யஃதழகே!

ஞ. அங்கணனென் றுரைத்திடுமே ரன்றுமின்று நிகழ்தலினுல்
வெங்கணனென் றுரையாமை விழிதுதலிற் கரந்தனையோ!

ந. அண்டமுடை தரமுழங்கு மம்மானை யடைந்தபனித்
தண்டமுடை நெடுங்காட்டுத் தூரத்தினையோ சொலவேண்டும்!

(இவையாறும் ஈரடித்தாழிசைகள்.)

க. புனைபரி கலமுரிர் பொலிதர நகருபு
வினைதப வுணருபு விடவுண வொருவினை;

உ. அடிபவர் சிவிகையி னடையற முணருபு
நெடியவல் விடைவெரி னிலவிவர் வொருவினை;

ங. மலைபவர் படையருள் வடிவுடை யவர்கொளன்
மலைவென வுணருபு மழுமுத லொருவினை;

ச. கொலைபுரி விதமுறு கொடுவையு ளுணருபு
புலிமுடை நினைதகர் புலியுடை யொருவினை;

(இவைநான்கும் அராகங்கள்.)

க. பேதகங்கைக் கொண்டலகம் பேற்றியெனச் சிவஞான
போதகங்கைக் கொளலெங்கள் பொருட்டன்றே பூணனே!

உ. ஒழியாது நின்னெடியா மொள்ளிதற்கு நிறுகிலையை
மொழியாது மொழியுநின்சின் முர்நிகைக்கை முழுதணர்க்தோய்!

ங. பற்றமறுத் தெடுத்துவரைப் பாற்றுமுகில் போலெங்கள்
குற்றமறுத் தெடுத்தினிதாட் கொளவேண்டுங் குருமூர்த்தி!

ச. பிழைத்தியா முறினருளே பெயவேண்டு மிராவணனை
யழைத்தியா ருளினரென்பாமறுக்கி னருளாளா!

நி. ஊசொடுபே ருருவில்லா யூசொடுபே ருருவடைந்தா
யூசொடுபே ருருவெங்கட் கொழிப்பதற்கோ வுத்தமனே !

கூ. ஆண்டவனீ யடியவர்பா மருளாது விடிற்கருணை
பூண்டவன்யா னெனினென்னு புகலுவாய் புண்ணியனே.

(இவையாறும் பெயர்த்தும்வந்ததாழிசைகள்.)

க. பெருமையுஞ் சிறுமையும் பின்னு முன்னுமற்
றிருமையும் பன்மையு மொருவ நின்றனை ;

உ. நன்மையுந் தீமையு நவிலா ணைத்திறல்
வன்மையு மென்மையு மாற நின்றனை.

(இவைஇரண்டும் நாற்சீரடி அம்போதரங்கங்கள்.)

க. காமமும் வெகுளியுங் கைத்த மாட்சியை ;

உ. மோகமு முவகையு மியைந்த காட்சியை ;

ங. உற்றவர் பிழைபொறுத் தொழிக்கு நன்மையை ;

ச. மற்றவர் குணத்தையு மறக்குந் தன்மையை.

(இவைநான்கும் நாற்சீரோரடி அம்போதரங்கங்கள்.)

க. அளவறு கலிகளை வின்றனை ;
உ. யடைபவர் மலவலி கொன்றனை ;
ங. களனமர் கருமை கரந்தனை ;
ச. கருணையி னெடிது பரந்தனை ;
ஞ. உளகெழ் தாவவண் முந்தினை ;
கூ. யுணர்பவ ரிருவினை சிந்தினை ;
எ. பளகறு பெருநிலை கொண்டனை ;
அ. பசுவின துணர்வற வின்டனை ;

(இவைஎட்டும் முச்சீரோரடி அம்போதரங்கங்கள்.)

க. முத்தி யாயினை ;	கூ. கொற்றம் வாய்ந்தனை ;
உ. சித்தி மேயினை ;	கo. செற்ற மோய்ந்தனை ;
ங. மூல மேவினை ;	கக. கோலங் காட்டினை ;
ச. கால மோவினை ;	கஉ. சிலங் கூட்டினை :
ஞ. பத்தி நாட்டினை ;	கங. பற்று மொன்றினை ;
கூ. புத்தி சூட்டினை ;	கச. முற்று நன்றினை ;
எ. பந்த மற்றனை ;	கஞ. பவு சோத்தினை ;
அ. சந்த முற்றனை ;	கஙூ. விரவு கூத்தினை.

(இவைபதினாறும் இருசீரோரடி அம்போதரங்கங்கள்.)

எனவாங்குப்,

(இது தனிச்சொல்.)

பல்லார் துதிக்கும் பரமா சாரிய
கல்லா ரடையாக் காரண குரவ
மன்னிய வம்பல வாண தேசிக

நின்னிய லமைந்து நிகழ்திரு வடிக்கு
ரு நாயினுங் கடையே னவிலும்விண் ணப்பங்
தாயினுஞ் சிறந்த தயைசா னின்மே
டொன்றியொன் ருதுறு மொன்றே
யன்றி வேண்டல னருளுதி யுவந்தே.

(இஃது எட்டடியான்வந்த நேரிசையாசிரியச்சுரிதகம்.) (க)

நேரிசை வெண்பா.

உவப்பானென் புன்சொ லுவவாதென் பாசஞ்
சிவப்பானின் றின்பங் கிளைப்பேன் - றவப்பா
னலவாணர் சூழ நருதுறைசை வாழும்
பலவாண தேசிகனென் பான். (உ)

கட்டளைக்கலித்துறை.

பானலங் கண்ணியர் மாலழுந் தாதெனைப் பார்கழுநீர்த்
தேனலங் கண்ணிய வம்பல வாண சிவக்கொழுந்தே
மானலங் கண்ணிய சோலையி னூடு மதிதுழைந்து
கூனலங் கண்ணிய கோமுத்தி மேய குருமணியே. (ங)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குருவளர்தண் பிறைச்சடையாய் வெண்ணெய் நல்லூர்க்
குடிகொளும்வை திகமறையோ னுகி நாவ
லுருவளர்நா வலன்பித்த போவென் றெள்ள
வுவந்தடிமை கொண்டஞையா லந்நா ளிந்நாட்
டருவளர்வண் பொழிற்றிருவா வடுது றைக்கட்
டழைபுகழம் பலவாண குரவ னுனுப்
திருவளர்பே ரருளினெனை யடிமை கொள்ளாய்
தெளியமுன்பெற் றதுபெறவோ தெரித வேனே. (ச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தனைகமழ்வண் பொழிற்றிருவா வடுதுறைக்கட் குரவன்பிரான்
ருனுப்பத் தெய்வ
விளைகமழும் பலவாண பேலோ னுண் மையையுணர்ந்தேன்
விளம்பக் கேளீ
ருனைகமழ்தண் கயிலாயத் தொருவன்கா ணுலவனத்
துறைந்தான் முன்னம்
புனைகமழிவ் வசவனத் துறைவானிப் போதவன்சீர்
புகல்வார் யாரே. (ஙி)

நேரிசை வெண்பா.

புகவே தவித்தேனின் பொன்னடிக்கீ ழுண்மை
தகவே தவித்தேயான் சன்ம - முகவேபார்
வம்பல வாணு வருமிகன் றருட்டுறைசை
யம்பல வாணு வருள். (கூ)

கட்டளைக்கலித்துறை.

அரியாய் நிராசை யெனுமவ் யாவி யவாய்ப்புணர்ந்து
பிரியாய் பரிபக் குவமக் கனிப்பது வாய்துறைசைக்
குரியாய் புகழும் பலவாண பண்டிதமிக் கோங்குசெல்வத்
திரியாய்சங்யாச நினக்கே யுரித்தென்ப தென்னுரையே. (எ)

புயவகுப்பு.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியச்சந்தவிருத்தம்.

உரிய தென்மொழிர் நீமொழ்ந்த வொன்றின
வுறுகர் தம்படர் பாசங் களைந்தன
கரிபு ணைந்தப டாம்பிவ் டொளிர்ந்தன
கருது கண்டிகை யாரம் புனைந்தன
விரித ருங்கமழ நீர்சன் றுளைந்தன
விரவு சுந்தர வேடந் தவழ்ந்தன
துரிச றுந்துதி யாவுஞ் சுமந்தன
துறைசை யம்பல வாணன் புயங்களே. (அ)

நேரிசைவெண்பா.

புயங்கொண்ட செங்கழுநீர்ப் பூவொன்றே வேட்ட
நயங்கொண்ட பேதைபல நண்ண - வயங்கிகாண்டு
வேளுமம ரம்பலவாண மெய்யெனவெப் வான்றுறைசை
நாளுமம ரம்பலவா ணை. (கூ)

கடளைக்கலித்துறை.

நாமா தரிக்கு மழும்விழுஞ் சோரு நலியுமெங்கள்
பூமா தரிக்கு மதவேளென நிறங்கும் பொருமுமருள்
காமா தரிக்கு நலஞ்சார் துறைசைக் கமழ்காழநீர்த்
தாமா தரிக்குமெய் யம்பல வாண தயாநிதியே. (க0)

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

நிதியமெனத் துறைசைவள ரம்பலவா ணனவன்று நீமெய் யாள்வா
ருதியமிற வாமெனவுள் ளுணர்ந்துவக்க வுயிர்கடொறு மொளித்த கள்வன்
மதியமுத லியகர்த் துமானிடன்பே லடைந்திதங்கண் மனங்க வர்ந்தே
பதியவமா தலினின்று பெருங்கள்வ னென்றுணையாம் பாடு வோமே. ()

அம்மானை.

இடைமடக்கா பிற்றடிமிக்கதவந்த
நான்கடிக்கலித்தாழிசை.

பாடுந் துறைசைப் பதியம் பலவாண
ஞடுங் கயிலாய நாதன்கா ணம்மாணை
நாடுங் கயிலாய நாதனே யாமாயி
னீடொன்று மென்பணியை யெங்கொளித்தா னம்மாணை
யெப்போது மென்பணிகொ ளேந்தல்கா ணம்மாணை. (கஉ)

எழுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

மாநலம் பொலிய வளர்பொழிற் றுறைசை மருவிய வம்பல வாண
பாநலம் பொலியப் பாடுவோ நின்னைப் பரிகிலெங் களுக்கெவன் கொடுப்பா
யூநலம் பொலிய வூட்டுபு வளர்த்த வுடன்முதன் மூன்றையுங்கொள்வா
யாநலம் பொலிய வடியவர் பலர்க்கு மருளுநின் வள்ளன்மை யழகே.

மதங்கு.

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

அழலைமைகண் கரந்துகுரு வம்பலவா ணன்பொலிவா
னவன்ரு ளூட்கொண்
டுழலைமையிந் திரியமவித் தொருதிருவா வடுதுறைக்க
ணுறைதேவாம் யாங்கள்
கழலைமைதாண் மதன்பணிபூண் டடைமதங்கி யீர்கடகக்
கைவா ளோடு
சுழலைமையு முகவாளு மெவன்செயும்புல் லும்படையாற்
றுணிவல் லோர்க்கே. (கச)

தவம்.

வலியபெரும் போகியெனக் காலருந்தி யாதளர்ந்து வன்கோல்பற்றி
மெலிவறமுக் காலடைந்து மொன்றடையீ ரிதுதவமோ மிளிர்கோ முத்தி
யொலிமலியம் பலவாண குரவன்முனம் யோகியென வுற்றுப் பெற்ற
பொலிகலமுண் டிடுந்தளரா நடையொடுமாந் தவமொன்றும் புணரு வீரே

காலம். மடக்கு.

எண்சீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

வீரமதன் கறுத்தலரம் பெய்யுங் கால
மேகமெலாங் கறுத்தலரம் பெய்யுங் காலம்
ஊரவயல் சூழுங்கா விரிக்குங் கால
முறைதுறைசை சூழுங்கா விரிக்குங் காலம்
சாமிகு தளவம்பூ விரிக்குங் கால
மீமழையர்நொந் தளவம்பூ விரிக்குங் காலம்
ஆரமெனத் திருக்கழுநீ ரடையாக் கால
மம்பலவா ணன்கழுநீ ரடையாக் காலம். (கசு)

மடக்கு.

கட்டளைக்கலிப்பா.

காலே யம்புய மஞ்சர ணங்களே
காய்ந்த தும்முன மஞ்சர ணங்களே
மாலே யாதன் மணத்த வரத்தமே
வந்து கூம்பு மணத்த வரத்தமே

வேலே கொண்டெங்கட் கேவதங் கொன்றையே
விட்டி ருக்கின்ற தாவதங் கொன்றையே
சோலே யம்பல வாண வடிகளேய்
துறைசை யம்பல வாண வடிகளே. (கஎ)

நேரிசைவெண்பா.

அடியார்சிந் தாமணியே யம்பலவா ணவன்
கொடியார் மதிற்றுறைசைக் கோவே - முடியாரீ
யன்றணிவாய் பாதத் தலருங் கருங்குவளே
யின்றணிவாய் செங்குவளே யே. (கஅ)

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

ஏகமுறு மாமதியன் றவிர்கடுக்கை யடைந்தநிறப் பெல்லாந் தன்பான்
மோகமுறு நறுமலரின் றடையவெய்த்துக் கவிகைமுழு மதியாய் நாளும்
யோகமுறு மாவடுதண் டுறைவளரம் பலவாண வுன்பா லன்பாய்ப்
பாகமுறு பவசக்தி னினுமிந்தாள் விளங்குவரிப் படியிற் றானே. (ககூ)

ஷி வேறு.

படிக்கு மறையோ விடுந்துறைசைப் பதிவாழ் குருவம் பலவாண
பிடிக்கும் வயிராக் கியருளத்தே பிரியா தமரு நின்றிருத்தா
டிடிக்கு மடியேன் புன்றலேமேற் சூட்ட வேண்டுஞ் சூட்டினதுதாண்
முடிக்குங் கழுநீர் மலச்சேற்றுண் முழுகு மெனக்குக் கழுநீரே. (உ0)

கார்விடுதூது.

கட்டளைக்கலித்துறை.

நீர்கொண்ட மேக நிரைகாண் மலர்பல நேர்பறித்துப்
போர்கொண்ட வேள்செயல் பொங்கரிற் றங்கிய போதுணர்ந்தீர்
சீர்கொண்ட கோமுத்தி யம்பல வாணனைச் சேர்ந்தவன்றிரூட்
டார்கொண்ட செங்கழு நீர்கொண்டு வாருந் தகவுரைத்தே. (உச)

தலைழ.

நேரிசைவெண்பா.

உரையம் பலவாண வுத்தமன்கோ முத்தி
யரையன் றிருமுகமே யம்மா - கரைய
மலைவாரீ தந்தவரு மாதரார்ட் கெங்க
டலைவாரீ தந்த தழை. (உஉ)

நாராவிடுதூது.

கலிவிருத்தம்.

தழையுஞ் சிறைமட நாராய் வாராய் சாராயாய்
விழையுந் துறைசையு ளம்பல வாணீ மேவாமே
யுழையும் பிறகிடு கண்ணுள் புண்ணு ளுண்ணுளாய்க்
குழையுந் திறமது தேருமு மாரும் கூறுமே. (உக)

வண்டுவிடுதூது.

கலிவிருத்தம்.

கூறுஞ்சிறை வண்டீர்குழல் கொண்டீர்மது வுண்டீ
ராறும்பசி யுடையீரரு கடையீரளி படையீ
சேறும்புகழ்த் துறைசைப்பதி யெழிலம்பல வாணன்
றேறும்படி சொல்லீர்மயல் செல்லீர்பொழில் புகுமே. (உச)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புகழ்மிகு கயிலைப் புண்ணியா வன்று
புயறவழ் பொருப்புலிற் குழைத்திட்
டிகழ்திதாழி னினர்முப் புரம்பொடி படுத்தின்
றெழிற்றிரு வாவடி துறையிற்
றிகழ்தரு கருணை யம்பல வாண
தேவனு யிணையடி யேனன்
றகழ்மனப் பொருப்பைக் குழைத்துமும் மலச்சேசா
வரும்பொடி படுத்திடா தென்னை. (உஞ)

நேரிசைவெண்பா.

என்னு னினக்குறுவ தென்னுண்டு மன்னுமரு
ணுன்னு லெனக்குறுவ தொன்றுண்டே—பொன்னரன்
மஞ்சார் துறைசை வளரம் பலவாணு
வஞ்சா தலமீவ யருள். (உசு)

கட்டளைக்கலித்துறை.

அருவிய முவரை போன்முத்த மாலை யவிரிலஞ்சூழ்
பொருவிய மேலாவு திருவா வடிதுறைப் புண்ணியமா
சொருவிய வம்பல வாணு வடிய னுடன்முதலா
மருவிய மூன்றுங்கொ ணீடொன்றீ வகுறகும் வருத்தமென்னை.

சம்பிரதம்.

எழுசீர்க்கழிநெடிலடி

தொட்டை ஆசிரியவிருத்தம்.

வருந்தா தகமலவட் டப்பூ விவிதித்துமுடி
வைப்பினு திமமினத்துப்
வானம் பறந்திட வெடித்தெதிவ னறியபூ
மணமாலை யாத்துவிடுவன்
கருந்தா தகைக்கொம் பிசைந்தூது வன்பெருங்
கரியையும வாறுசெய்வன்
காட்டி லுறை புற்கொண்டு புலிசெய்வ னின்னுமறு
கைக்கொண்டு யாளிசெய்வன்
பொருந்தா தவாய்திறந் தவணின்று புவனம்விளரி
போதப் புரிந்துவிடுவன்

பொங்கியெழு மாலமும் பருகுவன் பெருகுமிவை
புல்லியன வேறுமுண்டா
லருந்தாது நீர்கொள்கட லாடையுல கத்துயி
ரடங்கவா னந்தவெள்ளத்
தாவடு துறைக்கணம் பலவாண தேவனரு
ளன்றியு மழுத்திடுவனே. (உஅ)

அழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அழுவா ரயர்ந்து விழுவார்கின் றழுடப் பாடி யரவென்று
தொழுவார் துதிப்பார் பெருங்கருணை சுரக்குமா றுனதடியா
ரழுவார் செறியுங் கோமுத்தி யம்பலவ ருளம் பலவாணர்
வழுவார் கடையி னின்னதிரவ வலிகொண் டடையக் கடவேனே.

கழி நேரிசை வெண்பா.

கடிமலர் கைக்கொண் டன்பு தனியவம் பலவா ணன்பொன்
னடியருச் சணைகோமுத்தி யம்பல வாணர் செய்வாய்
தடிதலில் விதியான் முன்னந் தன்னைத்தா னருச்சித் தேதத்தும்
படிநினைந் தணைகொல் யார்க்கும் பழக்கவா தணைவி டாதே. (கூ0)

எழுசீர்க்கழிநெடிலடி

ஒருடை ஆசிரியவிருத்தம்.

விடாடை வரிய வாடு துறைபுண்
மேவிய வம்பல வாண
விமலநீ யென்றே யானுமன் றுன்பான்
மேவிலே னருளெ வக்கா
லிடாத்தபு குழலி பதுத்தருக் கியுங்கற்
பெழின்மணீ யாட்டியைக் கொதித்து
மீன்றவற் செகுத்துங் கடும்பிணக் கடிந்து
மிடங்தரக் கண் ணப்பியும் விடாது
படரொரு சூளா னினைமையைத் துரக்கும்
பயந்தபண் கருங்குழ லரிக்கும்
பசையற முன்கை மீதப்பத் துமும் பினும்
பலசெயற் கரியபெய் தார்க்கே
தொடர்புற வருள்செய் தாண்டரே யிருகாள்
செறற்றவக் கொடுமைமேவண் டாது
துதிசெய வாளுந் தியமுணர்ந் தடைக்கேதன்
றுணிபிலே னுதலி னருளே. (கூக)

அழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருந்தவருக் கரசுகலை யறுபத்து நான்கினுக்கு மரசு ஞானம்
பொருந்தவருக் கரசுகுரு வருக்கெல்லா மரசுகெடும் பொன்மா மேருப்
பெருந்தவருக் கரசுதுறை சைப்பதியம் பலவாண பிரானீ யென்றே
வருந்தவருக் கரசுபெரு நிதிநிழற்றுந் திருவரசு மகிழ்ந்து தானே. ()

ஈற்றடிமீக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை.

தானமொடு தவமோங்குந் தமிழ்த்திருவா வடுதுறைமெய்ஞ்
ஞானமுதல் வணிக்கருணை நமச்சிவா யணிப்பவஞ்ச
வூனமறுத் தொளிர்பரம யோகியைமிக் கோங்கொளியே
யானவணி வழுத்தாதா ரறிவென்ன வறிவிவ
யம்பலவா ணனிவழுத்தா ரறிவென்ன வறிவிவ. (நக)

எழுசீர்க்கழிநெடிலடி

இடைஆசிரியவிருத்தம்.

அறிவரும் பெருமை யாவரி துறைவா மும்பல வாணமெய்க் குரவ
னனைத்தினுங் கலந்துங் கலப்புரு மையினு டலுடைத் துறவியே தானே
செறிபல புவன நடத்தலி னரசீச சிவானந்த ஞதலிற் சுகியே
திகழ்சிவ யோகந் தனையனுக் கிரகஞ் செய்தலின் யோகியே காருங்
குறிபடு பசுபோ தங்களை விழுங்கிக் கோடலிற் போகியே கருணை
கூர்சிவ தருமவடிவமா யிருக்குங் கொள்கையி னறவனே யடைக்தோர்
முறிவரு மலங்கண் முழுவையு முருக்கு முறைமையின் மறவனே யிவனை
முழுதுணர்ந் தவரு மின்னனே யென்றோர் முடிபுற மொழிந்திட லரிதே.

சிலேடை.

அரியவன் றுறைசை யம்பல வாண வாலசே கரனுத னேக்கம்
புரியவிழ் கழுநீர் மாலைகா லொண்டோள் பொறியணி தொடர்மலர்ப் பாதம்
பிரியாத லங்கை யுழைநலம் பரசு பெற்றிமுத் தியையிவை யுடையா
னுரியயா னுனர்ந்தே னவன்பர னிவனே யுண்மையா சங்கையொன்றின்றே.

நேரிசை வெண்பா.

இன்றி யமையாத வின்பப் பெறச்சிறிது
கன்றி யமையாத நான்முயன்றேன் - துன்றி
யலரளிசார் வான்றுறைசை யம்பலவா னுனதின்
னலரளிசார் வானன் கருள். (நஉ)

கட்டளைக்கலித்துறை.

அருண்மலி கோமுத்தி யம்பல வாண வாகினைக்
கிருண்மலி கண்ட மெனவுப மானமு மில்லியென்றேன்
பொருண்மலி யன்ன துண்டே னுண்டி போனும் புகறியென்றான்
வெருண்மலி யானுண் டெனயா னெனறிப் பியன்றனனே. (நஎ)

வேற்றெலிவெண்பா.

என்னுமொரு தன்னையனு யாவதிதண் டிருப்பயிலபார்த் திருக்கு மூர்த்தி
நன்னுமகிழ்ந் தடியவருக் கருள்புரியும் பலவாண நமச்சி வாயன்
சிற்பரம் பொருளெனச் சின்மயத் திரளெனைச்
சொற்பதத் தளவிடத் தெரிவிலின்சொந் சுடரெனக்

கற்பகத் தருவெனக் கருணையங் கடலெனத்
தற்பெறக் கருதுவார் தங்குணக் குன்றெனப்
பொற்புறப் பொலிவதெம் புண்ணியப் பெருமையே. (கூஅ)

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

புண்ணியவா வடிதுறையம் பலவாணன் பரசிவனே பொருந்து வேடங்
கண்ணியமற் றவன்மறைத்து முகத்தருட்கண் மறைக்குமவை காண்டோ றன்
தண்ணியகைத் தாமரைகூம் புந்திருநீ றேறற்கமலர் தரும்வா யாம்பற்பர்
லண்ணியதோத் திரஞ்செயவிண் டிடுங்கூம்பு மமைத்தபணி யடைத லானே.

ஒருபொருண்மேனி ழனிறடுக்கிவந்த
ஆசிரியத்தாழிசை.

க. ஆன்ற துறைசை யருளம் பலவாணன்
மேன்ற மொழியுந் துகடீர் திருவாய்ச்சொ
லேன்ற பவமோய்க் கிடுமருந்தே யென்பரால்

உ. அன்பார் துறைசை யருளம் பலவாண
னின்பார் தருமா றிசைக்குந் திருவாய்ச்சொ
றுன்பார் பவக்கடற்கோர் சூழ்வடவை யென்பரால்

ங. அண்ணுந் துறைசை யருளம் பலவாண
னெண்ணும் பலர்க்கு மிசைக்குந் திருவாய்ச்சொல்
கண்ணும் பவமகலக்கோர் காய்சுடிச மென்பரால். (சஅ)

நேரிசைவெண்பா.

ஆலன்றி ஞான வரசமர்ந்து மேவுபரி
பாலன் றிருவம் பலவா ணன் - மாலன்றிக்
கோலரியா னென்றுமயல் கொண்டாய் பெரும்பேதாய்
மாலரியாற் கேது மயல். (சக)

கட்டளைக்கலித்துறை.

மயல்கொண்ட பேதைக் குரைதோழி யம்பல வாணனுகள்
கயல்கொண்ட வாவித் திருவா வடுதுறைக் கண்ணுயரி
லயல்கொண்ட வீதி யுலாப்போத நேர்தொழு தாசைப்பட்டே
னியல்கொண்ட யானென நீயலி யானென்ற தெப்பொருட்டே. (சஉ)

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பொருவிறுறை சையிற்குருவம் பலவாணன் திருவுலாப் புறம்போக் தானக்
கொருவிலிவன் மானிடன்றே னேபென்றேன் றேழியன்னே யோடி வந்து
மருவிலக லாவிவன்முன் மானிடன்றே னெனைத்தார்தா வாங்கி யென்றேன்
கருவிலெச்ச தத்தனுக்குப் பிறவென்றுள் பயனுரோன் கவாவாய் நீயே.

நேரிசைவெண்பா.

நீயாக மத்தடைவு நீதி யுணர்த்தியருட்
டாயாக மத்தடைவு தாளெழிவேன் - மாயா
வலத்துறைசை யம்பலவா மானிகையா வென்னு
நலத்துறைசை யம்பலவா ணை. (சச)

கட்டளைக்கலித்துறை.

நாடுந் துறைசைக ணம்பல வாண நகுகுரவன்
பாடுந் தொழிலர் பவமாய்த் திடலிற் பவமிலியே
யாடும் பிறரடைந் தார்பத போத மருவகைசொற்
றூடும் பவம்வினைக் குந்திறத் தாலவ ருள்ளவரே. (சடு)

எழுசீர்க்கழிநெடிலடிஇரட்டைஆசிரியவிருத்தம்.

வளையகம் பொலியுங் காழகிற் றுணியும் வளைக்கருஞ் சந்தனக் குறடு
மாமணித் திரளு மதகரிக் கோடுமம் ளமயிற் பீலியும் வரன்றித்
தினையெடித் தெறிந்து கடலகங் கலக்குந் திருப்பெருங் காவிரித் தென்
றிகழ்தரு திருவா வடுதுறை யமருந் தேசிக னம்பல வாணன் [பாற்
புனைதப சரணத் தடியவர் குழுமிப் பொங்குபே ரன்புபூண் டேத்திப்
பொலிமலர்க் கமல முதன்மல ரிடவப் பூப்பொதிந் தவிர்பெருங் காட்சி
விளைமலர்க் கணிவேள் பழம்பகை குறித்து விட்டபல் வாளியு மடிமேல்
வீழ்ந்துறப் பற்றித் தஞ்செய லின்மை விளக்குபு கிடத்தலொத் தனவே.

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

வேளிற் பொலிவார் செறிதுறைசை விமலா குருவம் பலவாணர்
தோளிற் கழுநீர் திருவாயிற் சூழுங் காவி யுடையாய்முன்
ரூளிற் புனைந்தாய் கருங்குவளை தணந்தா யெனதுட் டாமரையான்
பீளிற் படாம லங்கணிந்தாற் பிழையுண் டாமோ பேசாயே. (சஎ)

கலிவிருத்தம்.

ஆயமர் கருணைமிக் கமைந்த கோமுத்தி
வாயம ரம்பல வாண தேவமுன்
சாயம ரனாமதி தலைக்கொண் டாயின்றென்
காயமர் முழுப தி காற்கொண் டாலென்னே. (சஅ)

டி வேறு.

நேயன் ஞானத் துறைசை நிபலன்செவ்
வாய னம்பல வாண குருபரன்
ஆயன் யானல னென்னவுக் தொட்டிழுத்
தாயன் பாளரி லாண்ட தருண்மையே. (சகூ)

கலித்துறைத்துறை.

மையி ளாம்பொழிற் றுறைசையி னம்பல வாணன்
பொய்ய ளாமெனை யுந்தமித் தாண்டனன் புகலி
னைய ளாங்கொடி யேயன்பகா பாதக ணண்ணைச்
செய்ய ளாமது காயின்முகுண் டதுபோலுஞ் தெளிவே. (கூo)

நேரிசைஆசிரியப்பா.

தெளிவளர் கருணைச் சின்மய குரவ
னளிவளர் துறைசை யம்பல வாணன்
வெண்பதித் கவிசை மீமிசை நிழற்ற
வுண்பதித் திமிரு துலப்பில வோங்கப்
நு பல்லிய முழுதும் பரவையின் முழங்கச்

சொல்லிய செந்தமிழ்ச் சுருதிமிக் கார்ப்பத்
தண்ணிய வடியார் சயசய வென்னப்
புண்ணிய முனிவர் புகழ்ந்தனர் வாழ்த்தத்
திகழ்மணி மறுகிற் சிவிகை யூர்ந்து
புகழ்தரு திருவுலாப் போந்தன ஞகக்
குலவுநீ ராசனங் கொண்டெதி ரணைய
நிலவுநல் லாரொடு நேரிழை யாயுஞ்
சென்றன ளியா னுஞ் சென்றெதிர் தாழ்ந்து
நின்றுகை குவித்து நேருற நோக்கி
யாவன் பால னிவன்புக லென்றென்
மேவன் பாகுகை மேவுறப் புரிந்து
முன்னிவன் பெருமறை மொழிக்கப் பாலன்
மன்னிவன் பராரையின் வளர்கப் பாலன்
மூர்த்தி முதலா மொழிமுப் பாலன்
சீர்த்திகொ ணீற்றொடு திகழ்கட் பால
னறுவகைச் சமயத் தறுவகைப் பாலன்
மறுவகை சுருதி மணக்கத பால
னுறு முய வலைக்கப் பாலன்
மாறு தியற்றி வயக்குகா பாலன்
வளர்தரு தெய்வ மனுச்சா பாலன்
றளர்வரு கௌரி தனக்கமும் பாலன்
தழைதரு மிந்நாட் சைவபரி பாலன்
பிழைதரு தன்மையில் பெருந்தவ பாலன்
பிறவா னிறவான் பிறப்பிறப் பொழிப்பான்
மறவா னிணையான் வரவிலன் போக்கிலன்
பேதாய் நீயோ பேசுறு முணர்வாய்
கோதா யாதமெய்க் கூற்றிது கண்டா
யடங்குதி யென்ன வெண்ணி
தொடங்குதி தோழியிச் சொற்பொருள் சொலற்கே.(நிக)

தாழிசை.

சொல்லரும்பகழி தூவுவான்விழி
சுரந்தவங்கியுண வாயவேள்
சுடுசினத்துழுவை போன்றுபாயுமணி
துத்திநாகவுண வாயகால்
கொல்லும்வெந்தழல் வீசுமிட்டியடி
கொண்டுதேய்த்தவொரு திங்கடான்
குரையெறிந்துசெவி சுடுமடங்குகொடி
தாயநஞ்சமு னெழுங்கட
லல்லுநண்பகலு மம்பலாற்றுவ
ரங்கணுக்குதவி யாயுவ

ரளவிடற்கருகி னுண்மைமுற்றுமு
ளதிந்துமீபா லுமக ளென்செய்வாள்
வல்லுமஞ்சுமூலி யணியுமாறருள்செய்
மாலிவான் றுறைசை யம்பல
வாணதேசிக தயாகராவிமல
வான்பெருங்கருணை வள்ளலே. (நிஉ)

சீ த் து.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வள்ளலருட் குருராயன் றுறைசையினம்
பலவாணன் மலர்ப்பொற்பாதங்
கள்ளலரிட் டருச்சிக்குஞ் சித்தரியாஞ்
செந்தா துகஞ்சங் காட்ட
வுள்ளலமப் பாவிரும்பு நாவாய்கொண்
டூழமின்னே யுறச்செய்வோற்
றெள்ளலர்கோர்க் தழுதுதவிற் செம்புதனி
மறுநாட்பொன் னெனச்செய்வாமே. (நிங)

இதுவுமது.

மேதகைய நவகோடி சித்தர்கள்வீற் றிருக்குங்கர் விளங்கா நின்ற
மாதகையம் பலவாண பாசிலா மணிமலர்த்தாள் வணங்கி மேய்த்திக்
கோதகையுஞ் சித்தருக்குங் குறையுளதோ புளித்தகூழ் கொடுவா வப்பா
தீதகைய வடுவழற்றீண் டுறுபொழுதே வேங்கையெனச் செய்வோம் பாரே.

இதுவுமது.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பார்பரவு மாவடுதண் டுறைக்கண் மேய
பரமகுரு வம்பலவா ணப்பேர் வள்ளல்
சீர்பரவு திருபடத்தி லியார்க்கு நல்குஞ்
திருவமுது கறியமுது நெய்பால் போல
வேர்பரவு மாறுபடை யின்றே னுன்னு
லியன்றனசெய் முடியாதே லிடுகூ ழேனும்
வேர்பரவுன் வறுமைதரித் திரமே யென்ன
மேவுசெம்பைச் சுவணமா விளக்கு வோமே. (நிஙி)

இதுவுமது.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விள்ளரும் புகழ்சா லாவடு துறையுண்
மேவிய வம்பல வாண
னித்தகன் நிருமு னைருதினஞ் சென்று
மெய்யுறப் பணிந்தன மீனியான்

நள்ளருங் கருணை கூர்ந்துமேவண் டுவதென்
சார்ற்றுக மென்றுநீ நளித்தான்
நளர்விலாப் புடைவீங் கிடவுணல் வேண்டுங்
கையபுரி யென்றலீ தேற்றோ
மெள்ளருஞ் சுவைய வடிகின்முன் னளித்தா
னிலேதவிர்த் தியாவையு முண்டோ
மிவன்செய்பே ருதவிக் கிளிச்செய லியாதென்
றெண்ணினேஞ் சாமியாய் விளங்க
வுள்ளரு மணியான் றிருமட முழுது
முஞற்றினே னமதுகித் தருளை
யுணர்பவ ரியாரே யாவரியிற் சென்று
ணரலா மோதுவார் பலரே. (நிகூ)

கோச்சகக்கலிப்பா.

ஓதுவார் சூழ்துறைசை யீயாங்கம் பலவாணு
காதுவார் வாளிபல காமன் றெடுத்தடலாற்
போதுவார் கூந்தல் புழுங்கு மழும்விழுகின்
ரூதுவார் செங்கழுநீர் தாராமை தண்ணளியே. (நிஎ)

நேரிசைவெண்பா.

தண்ணந் துறைசைத் தமிழம் பலவாணன்
வெண்ணந் துறைகையான் வீண்டுவல—னெண்ணரிய
வன்னக் கொடியா னலரோ னலன்சிவனே
யென்னக் கொடியான மே. (நிஅ)

கட்டளைக்கலித்துறை.

யானென தென்னுஞ் செருக்கொழி யானின் னெதிர்ப்படினவ்
வானென தென்னுமொண் கோமுத்தி யம்பல வாணபொதி
யூனென தென்னும் படியா னெழாதொழித் துன்னடிப்பூந்
தேனென தென்னும்படி பேரருளென்று செய்குவையே. (நிகூ)

ஸைக்கிளை : மருட்பா.

வையபடிசூடும் வாட்க ணிமைகூடு
மைய மினியென் னணைங்கல்லல்—வெய்ய
கலர்புக ழூத காமரு துறைசை
பவர்புக ழம்பல வானன்
பலர்புகழ் காலீ பயில்குலக் கொடியே. (கூ0)

மடக்கு.

பன்னிருசீர்க்கழிநெடிலடியசிரியவிருத்தம்.

குலவு கழிநீர் பருங்கரும்பே குழைக்கு மதன மருங்கரும்பே
குளிர்செவ் வழியே பொழிவண்டே கொடிய வவனன் பொழிவண்டே
நிலவு மணல்வெண் ணந்தினமே நிகழின் புறவெண் ணந்தினமே
நெஞ்ச முவந்து வருமலவா நிலவே யுயிர்க்க வருமலவா

புலவு படுநீர்ச் சிறைக்குருகே பொல்லேன் படுநீர்ச் சிறைக்குருகே
போகு மியலார் நாவாயே புழுக்கு மியலார் நாவாயே
சுலவு சீரம் பலவாணன் துறைசைச் சீரம் பலவாணன்
துணைத்தோ டாங்கு கழுநீரே தோயி னதுமிக் கழுநீரே. (சுக)

கரி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீருறையும் வயற்றிருவா வடுதுறையம் பலவாண நிமலன் கண்டங்
காருறையும் படிகலவான் கழல்புகழ்ந்து பாடிவரு களிய சேம்யாம்
பாருறையு மானிடர்காண் மாரியின்றி யுலகிலென்ன பயனுண்டாகு
நாருறையு மாதவமில் லாமிலெவர் பரகதியை நண்ணு வாரே. (சுஉ)

இதுவுமது.

நண்ணரிய புகழ்த்துறைசை நாயகனம் பலவாண
நமச்சி வாய
னெண்ணரிய புகழ்பாடு களியர்யாம் வேம்புவப்பா
ரிக்கு நீப்பார்
மண்ணரிய வாம்பன்முழு மதியுவக்குஞ் சாலிதவ
வகிட்ட மேனும்புங்
கண்ணரிய மேதைகொளா ரெடுத்தபிறப் பாற்பயனென்
கைக்கொள் வாரே. (சுங)

இதுவுமது.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாரிபுடை சூழுலகின் முகாத்து நாளும்
வயங்குபெரும் பாதவங்க ளனைத்துந் தாழச்
சீரியவான் பணைதெங்கே யுயர்ச்சி வாய்ந்து
திகழுநுங் கள்ளருள்கா ரணத்தா லன்றே
பூரியர்சா ராததிருத் துறைசை மேவும்
புண்ணியனம் பலவா ணபுனித ஞான
வாரியன்சே வடியடைந்தா ரன்றி மற்றே
ரருஞ்சா திப் பற்றிலரென் றறைதல் வம்மேப. (சுச)

வஞ்சித்துறை.

வம்பலர் துறைசை
யம்பல வாண
னம்பல சடரூ
மும்பலர் பொருமே. (சுரு)

வஞ்சிவிருத்தம்.

பொருளி லரைப்புகழ்ந்திரர்
மருளி லம்பல வாணனே
யருளி னுண்டுமக் கானந்தப்
பெருளில் சோமுத்தி மேவுமே. (சுசு)

குறளடிவஞ்சிப்பா.

மேவும்பவம் யாவுந்தப
மலமூன்றற கலமூன்றுற
நாவருமறை யோவருமுறை
தெருண்மலிநர வருள்புரிமதி, நாளுந்
துன்னிய மிகுபுகழ்த் துறைசை
மன்னிய வம்பல வாணதே சிகனே. (சுஎ)

கு றம்.

எழுசீர்க்கழிநெடிலடி

ஔ ரட்டை ஆசி ரிய விருத்தம்.

சிகைபடு செந்தீ வளர்த்தவி நாளுந் தீதவருக் கருத்துதவி தியர்வாய்த்
திருமறை முழக்குஞ் சேணுல கமக்குந் தென்றிரு வாவடு துறையி
பகைபடு தகையி லம்பல வாணர் பண்ணவ னடியடைந் தார்க்குப் [ற்
பழங்கலி யருளப் புதுக்கலி மறைத்த படியெனப் பசுநற வூற்று
முகைபடு குழலாய் நீயுமவ் வாறே முன்னிய புதுக்கலி மறைத்து [று
முதுபழங் கலியே யெனக்கவித் தீனின் முகக்குறி கைக்குறி நன்
தகைபடு மீனியான் றடம்புயக் கழுநீர் தாப்பெறு வாயிது பொய்க்கிற்
சாற்றியான் குறப்பெ ணுவலோ கரத்திற் றருகுறக் கூடையு மெடேனே.

கலிவிருத்தம்.

எடுப்பான்கழை படுப்பானளி தொடுப்பானல ரிகல்வே
ளடுப்பானிம கான்கோமுத்தி யருளாப்பல வாணு
விடுப்பா னுளங் குறியேயெனாளி மிகுசெங்கழு நீரே
கொடுப்பானை யின்றேறைகள் குன்றுவகை கன்றே. (சுகூ)

உ ரு ச ல்.

ஈற்றடிமிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை.

நல்லார் துறைசை நகுமம் பலவாணன்
பல்லார் வணங்கப் பரிந்தருளுஞ் சீர்பாடி
வல்லார் முலைகுலுங்க வண்கை வலியார்ப்ப
வல்லார் குழன்மடவீ ராடுகபோன் னூச
லணிமே கலையிடையீ ராடுகபோன் னூசல். (எ0)

வெளிவிருத்தம்.

ஊருஞ் சகடென யாமுழல் வதுதப வருளாமோ
பாரும் பிறவு மதுத்தெழு பண்புற வருளாமோ
தேருந் திறமிது வென்று தெளிந்திட வருளாமோ
வாரும் துறைசையு ளம்பல வாணமெய் யருளாமோ. (எக)

ம ற் றம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருள்விர வுருவ னம்பல வாண னுவடு தண்டிறை யரசே
பொருள்விர வொருவா னரசுமற் றரசு பூவர செவரத்தெளி னூத

வெருள்வீர வாத மறமுனு மரசின் மெய்த்திரு முகமுறு மதன்கண்
மருள்வீரவாத குழைபலவுண் டேமறிக்குள காமெனின் வையே.(எஉ)

இதுவுமது.

எழுசீர்க்கழிநெடிலடி

இரட்டை ஆசிரியவிருத்தம்.

வையகம் புகழு மாவடு துறைக்கண் மன்னிய வம்பல வாணன்
மலரடிக் கோதை மற்றவ னடியார் மார்பொடு தோளுறத் தழுவுஞ்
செய்யமற் றவன்முன் புனைந்தருள் கோதைசெய்ஞலார்ப்பிள்ளைதோடழுவுஞ்
சேரல னாட்டுச் சிறந்தவீர் கோதை செறியுமே காலியுந் தழுவும்
வெய்யவெங் கோதை வீரர்கை யனைத்தும் வெளிவரு கோதைகஞ் சாதர்
மென்மகள் கோதை யாவையு நகுமா வீரதிபர் மார்பையுந் தழுவுங்
குய்யமொன் றின்றி யுரைத்தன மறவர் கோதைசீ ரற்றன்று தூத
குலவுநங்குலத்துக் கோதைவேட்டவர்கள் கோதையே யடைவதுமெய்யே.

இதுவுமது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மெய்யனு வடுதுறையம் பலவாணன் விடுவதுபோல் விடுக்கினென்னும்
வையமா ளரசர்திரு முகமெனிற்பெண் கொடுக்குங்கொன் மறவர் சாதி
வெய்யவா ளவரெங்கள் பெண்ணைப்பட் டெடுத்தால் வீண்பூப் பில்லாத்
தையலார் முலைதழுவத் தடிந்துதரற் றிடுவதிது சரதங் காணே. (எச)

விறலிவிடுதூது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தான மால்களிற் றண்ணனின் பான்மிகு தண்ணளி யினனென்றே
யீன மார்தரப் புகழுவை விறலிநீ யிரிஞ்தொரீஇ யின்னேபோய்
மான வாவடி தண்டுறை யம்பல வாணனைப் புகழ்வாயேற்
போன நாண்படு மாயிலவ னருள்பெறு வுவைதே ராவாயே. (எரு)

பாண்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாய்ந்தவிசை நீலகண்டப் பெரும்பாணர் குடும்பன்று வருவாய் பாணா
வேய்ந்ததலை வன்பரத்தை யபாவினனின் பாண்பனென்பா யீயார்வல்
வேய்ந்தபுக பூவடுதண் டுறைவளரம் பலவாண விமலன் பாற்போய்த்
தோய்ந்தவிசை பாடுகழல் சூடுபெரு வீடுபெறு துணிபிதே தோரே. ()

எழுசீர்க்கழிநெடிலடி

ஆரட்டை ஆசிரியவிருத்தம்.

துணிபிறை வெண்மை யெலும்பணி வெண்மை
சூடுகங் காளமும் வெண்மை
திசோணமும் வெண்மை கபாலமும் வெண்மை
தவலைசால் தங்கையும் வெண்மை
பணிதரு கொக்கின் றூவலும் வெண்மை
பயில்குழை யருக்கமும் வெண்மை

பரவுறு கயிலே வரகனைக் குவசம்
பரிக்குமக் கிவைகளும் வெண்மை
மணியொளி நீறு வாளிதுஞ் சாவம்
வயங்குதேர்ப் பாகிலா ளில்லம்
மதம்பொழி யயிரா வணமிவை வெண்மை
மற்றியன் மேனியும் வெண்மை
யணிகிளர் மூங்கி லினைக்கெனி னீர்க்கா
ளவிர்புகழ் நீற்றெழு தூறைசை
யம்பல வாண வாரிய வடிவே
னறிவுவெண் மையுங்கொளல் வழக்கே. (எ)

நேரிசைவெண்பா.

வழியென்ன தம்பல வாணகோ முத்தி
யுழியென்ற ளுஞ்சார்ந் தூறைவாய் - மொழியுங்
குறைமதிய மன்றுவந்து கொண்டா யடியேன்
குறைமதிய மின்றுவந்து கொள். (எஅ)

கடவுள்வாக்கலித்துறை.

கொள்ளுந் தமரிலை தாயிலை தந்தையுங் கூடவில்லை
விள்ளும் புதல்வர் மனையா திபுமிலை மேலுலகை
யெள்ளுந் துறைசையு ளம்பல வாணனே யெய்தினர்க்குத்
துள்ளுஞ் சிறுமகள் சார்வானுட் கொண்ட துணிபெவனே. (எக)

அழகீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எவர்பரவு பெருவெனியை வாள்கொண்டு வெட்டிவிடு வியற்ற வல்லா
ரவர்நினது கருணையன்றி மலமாயை கன்மா றுத் தடைவார் முத்தி [கற்
பவர்படுசெஞ் சடைமுனிவர் பணிக்மீதத்தப் பெருந்துறைசைப் பதிவாழ்வாய்
மவர்வரைகைத் தாமரையம் பலவாண குரவவரு டரவல் லோயே. ()

வேலச்சியார்.

அழகீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வலைகொடுமுன் மீன்படுத்தீதான் றுறைசையினம் பலவாணன் வயங்கா னந்த
வலைகடலா னருள்வலையா லெங்கண்மன மீன்படிக்கு மதான்று நாளு
முலையைவரா லச்சுறவே திருக்கையடித் தின்பயிரை யூட்டு மிங்ஙட்
கொலையமைபு முங்கண்மீன் பரவா திங் ககலும்வலைக் குலக்கொம் பீரே.

இடைச்சியார்.

அழகீர்க்கழிநெடிலடி
ஆசிரியவிருத்தம்.

குலவுபல புவனத்து மிருவகை யுழும்பசுக்
குலம்விரா வுறவிரித்துக்
கோதில்பரி பாலனஞ் செய்தழும் பிள்ளைகள்
குடிக்கவின் பாலுமுகவி
நிலவுமெழு விடையொடும் பொருதமுழு விடையுடைய
நின்மலப் பேரண்டனே

நிகழுமா வடிதுறையின் மேயவம் பலவாண
நெடியபேர்த் தோன்றலாகிக்
கலவுவழி யாறுணர்ப்பு மற்றுமொரு வகையிற்ச
கலபசுக் கனியுமோம்பிக்
கருதுஞா னப்பால் பெருக்கியமர் வெண்ணெய்மெய்
கண்டானிந் நாளிலுணர்வீ
ருலவுபுகழ் சாலுமிவ் வுரிணும் மோர்தயி
ருவந்துகொள் வாரும்பாரே
யொத்தபாற் கலியமோ ரிரண்டுப்வேண் டாரகலு
மொள்ளிழை யிடைச்சி யீரே. (அஉ)

இன்னிசைவெண்பா.

இடையான் கடையாஞ யென்று முழல்வா
னடையா னெருநற் கடிந்ததனீ யுய்க்கு
முடையான் றுறைசை யொருவனியன் ஞான
நடையாள னம்பலவா ணன். (அங)

குறள்வெண்பா.

நமக்காயு மம்பலவா ணன்றுறைசை யுற்றார்
தமக்காயுந் தாள்சூட்டித் தான். (அச)

பஃறொடைவெண்பா.

தானந் தவந்தழைக்குந் தண்டுறைசை யம்பதிவா
ழானந்த போத னருளம் பலவாணன்
றேனந்த வண்டு தெவிட்டிக் குமட்டெடுத்து
மோனந் கலிறந்த முத்த மொடுகூட்டி
யீனந் தபுத்தான்மற் றென்முதன்மை யுந்தபுத்தா
ஞனந்தத் தாமே நகுமுதன்மை யாயினு
ஞானந்த ராதினியோன் றும். (அடு)

பிச்சியார்.

அறுசீர்க்கழிநெடிலடிஆசிரியவிருத்தம்.

ஒன்றியமெய்ப் பொருளன்பர்க் குபதேசஞ் செய்யவந்த வொருவன் போல
வென்றியவெம் படைகாந்த கள்ளவிழி யோடுசிவ வேடந் தாங்கி
நன்றியலம் பலவாணன் புகழ்பாடி னெவன்சுவண நகுவா னுடும்
பின்றியவண் டுறைசைநகர் மணிமறுகில் வந்துலவு பிச்சி யீரே. (அசு)

கோற்றியார்.

இதுவுமது.

ஈரஞ்சார் வனமணியா லிகைமுதலா கியபலவு மெடுத்துப் பூண்டு
கூரஞ்சார் படைநெடுமாற் கடிமையென வெளிவந்துங் கொற்றி யீரே
யாரஞ்சார் கழுநீர்த்தேதாட் டுறைசையுளம் பலவாண னருள வாவி
வாரஞ்சார் தரப்பாடு வீரொருசாக் கியர்போன்றீர் மகிழ்ந்தாம் யாமே.

வெறிவிலக்கல்.

நேரிசைவெண்பா.

மேலாய வான்றுறைசை மேவும் பலவாணன்
பாலாய வாசை பகர்வார்யார் - சாலாய்கே
டாளா வியக்கவெழு தாளத்தான் மையறிஞ
ரேளா வியற்கே விடும். (அஅ)

கட்டளைக்கலித்துறை.

விடலருங் கோமுத்தி யம்பல வாணமெய் யாசிரிய
கெடலரு கின்றடந் தோளலர் வேட்டவென் கேழ்கிளர்மான்
படலரும் வீர மதவேடன் கையலர் பற்பலரா
யடலரு மூருறை வார்வை யலாமிக் கடைந்தனளே. (அசு)

நேரிசைவெண்பா.

அடையார் புரஞ்சுட்டா யன்றடைய மாசை
யுடையார் புரஞ்சுடு வானுற்றாய் - கடையாசை
செய்வார் துறைசைத் திருவம் பலவாண
வெய்வாசை நீத்தின்பந் தென். (கூ0)

கட்டளைக்கலித்துறை.

எனக்கானந் தத்தை யருள்செயுங் காலமெக் காலமிகு
கனக்கானந் தத்தை யலாய்க்கேட்கப் பாடறு காலுளர்சந்
தனக்கானந் தத்தை யலாறு மாவடு தண்டுறையாய்
முனக்கானந் தத்தைய பம்பல வாண முதலவனே. (கூக)

காப்பயக்கலித்துறை.

முத்த ஞபினு மிணையன் கோமுத்தி முதல்வ
னுத்த ஞயினு மாசிலா னம்பல வாணன்
பித்த ஞயினு முழுல்பவன் றீவினை பெற்றுக்க
சுத்த ஞயினுங் கடை பணை யாண்டதுந் தகமேவ. (கூஉ)

நேரிசைவெண்பா.

தகரம் படுங்குழனெஞ் சன்தளர வேள்வித்
தகரம் படுங்கழு நீர்த்தான் - மகர
மடையாத் தவத்துறைசை யப்பலவா ணுகை
யடையாத் தவத்துமெய் யாம். (கூகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆமலியுப் வயற்பொதுவி னிளாறருளி நடிக்குமீளப் பாறுமாறு
தீமலியுப் பொழிற்றுறைசை பிருந்தருளி யொருகூடிப்புச் செய்யா நிற்கு
காமலியு மித்தகுகா ரணங்குறி நீத்த துறைசைவா ணீணெஞ் ஞான்று
மேமலியும் பெரும்புலமை யிவர்தாமம் பலவாண னென்பார் மெய்யே.

தே வு.

மெய்யே பெருமை யுடையார்பால் வீசவிப் புகுகம் பெருக்கருணை
பொய்யே புரிந்து மிகச்சிறுமை பூண்டாய் பாலும் புகுங்கொலெனிற்

செய்யே மலியும் புகழ்த்துறைசைச் செல்வா திருவம் பலவா ணை
வையே கடலன் றியுமுறவி யளியும் புகுங்காண் பிரளயமே. (கூடு)

மேகம் பொலியுங் குழன்மடவாள் விடாது தன்மேற் பழம்பகைபூண்
டேகம் பொலியு நின்கூட்ட மிச்சித் தனளென் றுடன்றமும்வே
ணுகம் பொலியும் பொழிற்றுறைசை நம்பா ருகுமம் பலவாணு
மோகம் பொலியுஞ் செங்குவளை முருக்குங் கருங்கு வளைக்கெதிரே.()

கட்டளைக்கலித்துறை.

எதிருற்ற யானுநின் பொற்ரு மையடி யெய்தப்பெற்று
மதிருற்ற சிந்தையி னேடுழல் வேன்கொலவ் வாறுழன்றுற்
கதிருற்ற கோமுத்தி யம்பல வாணமுற் காலத்திலன்
புதிருற்ற நெஞ்சத்தொ டூதுற்ற கூற்றத்தை யொப்பவனே. (கூஎ)

இன்னிசைச்சித்தியல்வெண்பா.

ஒப்பிலான் கோமுத்தி யுள்ளா னெனுளிர்சடையோ
டப்பிலா னெங்க ளருளம் பலவாணன்
றப்பிலான் மாக்களுக்கோர் தாய். (கூஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாயனையாய் முனைநினைச் சார்ந்தாரைச் சார்ந்தார்க்குந் தந்தாய்முத்தி
பேயனையாய் வருதியென்று நினைச்சார்ந்த வெனக்கருளாப் பெற்றியென்னே
நாயனையா யகலென்றுற் கதியேயதா வடுதுறையாய் நமக்கான் சாடுக்
தீயனையாய் திகழ்திருவம் பலவாண மெய்ஞ்ஞானச்செல்வக் கோவே.

நேரிசைவெண்பா.

வேதனைசெய் மும்மலமும் வேரோ டறுத்தருளா
யேதனையென் றிறன்றியொன்று வின்பமுறக் - கோதில்
குலவாணு மெய்ஞ்ஞானக் கோமுத்தி வாழும்
பலவாணு நீகடைக்கண்பார். (கoo)

அம்பலவாணதேசிகர்கலம்பகமுழுற்றும்.

சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியர்மாணாக்கராகிய

திரிசிரபுரம். சி. தியாகராசசெட்டியாரவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நலமன்னு கைலாய பரம்பரையி னருட்டுறைசை நமச்சி வாயன்
குலமன்னு சூரியனம் பலவாண தேசிகன்மேற் குணத்தான் மிக்க
நிலமன்னு பெரும்புலவர் விரும்புகலம் பகம்புனைந்தா னிகழுங் கீர்த்தி
வலமன்னு சிராமலைவாழ் மீஞாட்சி சுந்தரமா வலவ னேறே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர் உலா.

ஆண்டபிள்ளையார் துதி.

சீருலா வான்றேர் செலிக்க ணிடைமரு
தூருலா வேற வொளிதருபம்பை - யேருலவப்
பூண்டமா தங்கமதப் பூங்கொன்றை யாரளித்த
வாண்டமா தங்க மது.

நூல்.

கலிவெண்பா.

க பூமேவு நான்முகத்துப் புங்கவனுஞ் செங்கமல
மாமேவு மார்பமணி மாயவனுங் - கோமேவு

உ மிந்திரனுங் வாணுரு மேணுரு மின்பமுற
வைந்துதொழி லாற்று மருட்கொண்மூ - வைந்துதொழில்

ங சந்ததமுஞ் செய்துந் தனக்கோர் தொழிலில்லா
னந்த மலையாய னன்கின்ற - சுந்தரப்பொற்

ச கன்னி யொருபாற் கலந்தும் விகாரமிலான்
றுன்னியென்ற றுந்தோய்ந்துந் தோய்விலான் - முன்னியமண்

ஞ ணுதியுரு வெட்டுமத்து வாவுருவா ராறுமிருண்
மோதிய வைந்தொழிற்கு மூலமாய்ச் - சோதி

ஃ யுமுருவான் பானுமுற்று மோருருவு மில்லான்
மறுவின்பறை யாதி வகுத்தோன் - பெறுகெறியே

எ யாமுயிர்க்கே யின்ப மருக்கி நெறிதப்பிப்
போமுயிர்க்கே துன்பம் புணர்த்துவோ - ணுமை

அ னிருள்கே வலத்தி னிணர்த்தருவிற் றீயாய்த்
தெருள்சே ரிடையிற்கற் றீயா - யருள்சேருஞ்

கூ சுத்தத்திற் காரிரும்பிற் றீரய்தியே யாய்நிற்பா
னெத்தத் துவங்கட்கு மெட்டாதான் - முத்தன்றன்

கஂ வாமத்தைப் பூமேவு மாதர்கடோட் டுப்புணைய
நாமத்தைச் செய்விடமுன் ஞளயின்றே - னேமத்தண்

ககசொல்லமுதைப் பாகுவந் துதேயவைத்தேன் கைப்பகழி
வில்லமர்பூ காரிதணே மேவவைத்தேதா - னல்லற்

கஉசிறுவிதியா கத்திற் றினகரற்கு முன்னங்
குறுகியிருள் கூடவைத்த கோமான் - றெறுபசியால்

கஙவந்தழுத சோபின் வருத்தந் தெரிந்தழுது
தந்தமடைப் பள்ளி தணேக்கொடித்தேதான் - கந்த

கசமலர்மலரென் றுன்னு மதன்மெய் குளத்து
ளலர்கட் கமலத் தழித்தேதான் - பலாவெருவத்

கடுதோற்றுந் தொழினஞ் சுதந்திரமன் றென்றெண்ணக்
கூற்றுயிர் ருண்ட குரைகழலான் - சாற்றும்

கஎபிரணவத்துண் மேமேயார் பிரபன்மா லென்பார்
மூரணவிக்குங் கொன்றையந்தார் முன்னே - னரணவசை

களமண்வைத்த குக்கி வளைவைத்த செங்கைமால்
கண்வைத்துங் காணக் கழலிலை - னெண்வைத்துக்

கஅகண்கை யிடந்துகொலை கண்ணுபு கொள்ளாமல்
வண்கையிடங் கொண்டவசி வாய்ப்படையா - னெண்கவிஞர்

ககூதன்னிரதம் பாதலத்துத் தான்புக் கழுந்தாமன்
மன்னிரத நீர்வேணி வைத்தபிரான் - றுன்னுகணே

உ0வாளியெளி தீர்தரப்பின் வாளிலங்கை மன்னணேமுன்
ருளின் விரணுதியாற் ருனடர்த்தேதா - ளுளும்

உகபுணரு மடியார் புரிபிழையு மேணேர்
குணமு மிகந்தகுணக் கோமான் - மணமலிபூங்

உஉகாவின்பரி லேத்தவரு கண்ணைமா லென்றுகிணைத்
தேதாவினடஞ் செய்கயிலே யோங்கவிடை - மேவிநில

உஙமாவித் தகத்து வயங்கா கமமுழுதுந்
தேவிக் குபதேசஞ் செய்தருள் - மாவிற்கண்

உசணன்னமயின் மண்ணுலகை யாள்பெரியு மாகாட்டி
யின்னலற நீவீற் றினிதிருக்கு - நன்னயவி

உருசேட தலமுந் தெரித்தருள மேவண்டுமெனச்
சூடகச் செங்கைத் துணைகூப்ப - வாடமைத்தேதா

உஞணங்காய்கன் றென்று நுனையேற்றின் மீமிசைபற்
றங்கா தலியோ டமர்ந்தருளிப் - பங்காளுங்

உளகோதாய்காண் கென்று குவலயமுற் றுந்தொரித்து
பேதா வியர்புகழு மேண்மைபூண - பேபாதாருங்

உஅகாவிரியுங் கோட்டிவனக் காவிரித்தென் பாற்பொலியும்
வாவி யிடைமருதூர் வாய்மேவ - மேவியகேர்

தலவிசேடம்.

உகூ மின்னேய மாதவனும் வேதனுங் காணுத
தன்னேய நாடிவந்த தன்மைபோற் - பன்னுபுகழ்

ஙஎ0 வாகீசர் போல வருந்தித் தமிழ்காட்டி
சேகீ செனவந் திறுத்ததுபோல் - வாகார்

ஙஎக திருப்புவன முற்றுஞ் செழுமறைகள் யாவும்
விருப்புமிக நின்றேத்தும் வெள்ளிப் - பொருப்புப்

ஙஎஉ பெருவளவர் நாட்டின் பெருப்புண்ணியத்தா
லொருருருக மாகியவ ணுற்ற - தருமையத

ஙஎங னன்னிழற்கண் வானி னனையேற் றிணிகு ழலிற்
தன்னிட நீங்காத் தலினையைப்பார்த் - தின்னகையுய்

ஙச மேவுபு கன்பூ மிகவுருக்கு விண்ணுலகைப்
பூவுல காக்குப் பொழில்பாராய் - தாவிமிசைப்

ஙஞ பொங்கவரி சிப்பொற் பொடிவீழ்ந் துபுமண்ணீப
பங்கமில்பொன் னுக்குப்பிட பம்பாரா - யெங்குநின்மெய்க்

ஙட காமமொனி பாய்தலிற்கார் கால மெனக்கருதி
மாமையினன் காடு மயில்பாராய் - பூமருஞ்

ஙண சேயொளியாற் பைங்கழைகள் சேப்புற வேனிலென்று
கூயமருந் தீதமாங் குயில்பாராய் - மேயவிரு

ஙத நம்மீனி யொன்றியென நன்றிகாருபாற் சேர்ந்தொருபாற்
பைம்மேனி யாமாப் பழங்குரா - யப்புலிக்

ஙந கான்முனிதன் மைந்தன்முதற் காணு முழுமுனிவர்
மான்முதலீர்க் காற்றிடுத்த வப்பாராய் ; - பான்மொழியே

சஎ0 யென்றுகாட் டத்தனிகா ணெவ்வுலகு மீன்ருளுக்
கொன்றுமகிழ் வார்க ணுயற் றுளிப்ப - வன்றுமுற்

சஎக காணுக் திசைமீயாடிக் காருணி யாமிர்தமென்
நூணுப் பெயரிலகப் பூண்டதன்மேற் - கோணிலவு

சஎஉ சூடியதன் கண்களி சொரிநீ ரிருகூரு
மீயாடி வடமேற் குகக்கெதிருங் - கூடுதடத்

சஎங துட்மீபாய் விழமு னுலர்ந்த சலசங்கா
னட்பாய் வித்திக்கு நுறுந்தடத்துப் - பெட்பா

சஎச முருகுத்தி ராகியெழுந் தொண்மலர்த்தாள் போற்றிப்
பெருந்தகவு லோகமுற்ற பின்னர்த் - திருத்தவண்வாழ்

சஎடு தண்முனிவர் முன்பு தமிழ்மணைக்குஞ் செங்கனிவாய்
வண்முனிவன் வந்துரை மாமுனிவீர் - கண்ணிணுருமூன்

சஎண றுற்றபுகழ்ச் செய்யகரும் புங்கையு மும் பைந்தோகை
பற்றி முயலுமென்றப் பாற்போக - வெற்றி

சள முனிவரசவ் வாறெம் முதல்வியை நோக்கிப்
புனித தவம்புரியும் போது - ணனிமகிழ்ந்து

சஅ தன்னே ரிலாத தலேவியை முன்புகுத்த
வன்னேர் குழலு மவணடைந்து - பொன்னேர்

சக வளவர்பெரு மாணடு மாதவத்த தென்ண
வளவிலா மாதவமங் காற்ற - வுளமகிழ்வுற்

ரூ0 றெம்மா லயன்முன்போ லின்றுஞ் செருக்கடைந்தா
ரம்மாவென் றியாரு மதிசயிப்ப - விம்மாகன்

ரூக மேதினி நின்று வெளிமுகடு மூடுருவச்
சோதியுருக் கொண்டெழுந்து தோன்றினேன் - றீதிலரு

ரூஉ ளானேயென் றேத்து மவர்தெளியு மாறுதன்னைத்
தானே யருச்சித்த தம்பிரான் - வானுட

ரூங ராதியர் காமிகமுன் னுமா கமத்தின்வழி
யோதியருச் சிக்க வுவந்தருள்வோன் - போதியணீர்

ரூச காகம் படியக் கனகவுரு நல்கிப்பி
னேக வுருத்திரமெய் யெய்தவைத்தோன் - கோகநக

ரூரு மாண்டமல ராதிகொடி மன்னு கமத்தின்வழி
யாண்டமத வேழ மருச்சித்தோன் - பூண்டதவத்

ரூசு தோதை கெழுசீ ருசோமசற்கு வெற்பீன்ற
கோதையொடு காட்சி கொடுத்தபிரான் - மேதை

ரூள யொருவீர சோழ னெளிரா லயமும்
வெருவா நகரமுஞ்செய் வித்துத் - திருவார்தைத

ரூஅ திங்கட் டிருநாளுஞ் செய்வித்துப் போற்றிசெய
வங்கட் கருணை யருளியகோ - னங்கண்மிரு

ரூங கண்டு மகன்பணியக் கண்டொரு பாற்பசுமை
கொண்டுமிளிர் காட்சி கொடுத்தகோன் - றண்டாப்

சூ0 புரவுக் குறுமுனியைப் போதுமுமென் றன்னுன்
வரவுக் கெதிர்பார்க்கும் வள்ளல் - பரவுற்ற

சூக பூசைவிதீ முற்றுவந்து புண்ணியச்சு கீர்த்திதனக்
காசில்விதீ யெச்ச மளித்தபரன் - காசிபன்முன்

சூஉ கண்ணனிள மைக்கோலங் காணத் தவம்புரிய
வண்ணலது காட்டுவித்த வைப்முகந்தோன் - வண்ணக்

சூங குமரன் முனிவரொடுங் கூடியரன் றிங்கி
லமர நதியை யமைத்துத் - தமரமிகப்

சூச பூசிக்கப் பெற்றோன் புகழிட்ட சோமன்சு
தேசிக் கினிய கிளர்மதலே - வீசி

சுரு யணியமகன் கங்கைபுகுந் தாடுறுமோ தந்த
நிணியுருதி யோரா நெறிக்கொண் - டிணையலென

சுசு வென்னீப் புரப்பான்க ணீர்ம்புனல்வா விக்குள்வரச்
கொன்னீக் குழமகனுங் கூடவந்து - முன்னீயொரு

சுள வாவிபடிந் தையாற்று வாவியிடைச் சொல்லரசர்
மேவியெழுந் தென்ன வெளிவந்து - கூவிவரு

சுஅ மத்தினெடி கூடி யடிபோற்றி யேத்தெடுப்பச்
சித்த மகிழ்ந்தருளிச் செய்தபிரா - னுத்தமச்சீர்

சுகூ வாய்த்த தசரதற்கும் வண்பூவைப் பூவைநிறஞ்
சாய்த்தவுடற் கண்ணனுக்குந் தானுவந்து - பூத்த

எ0 மதலைபல நல்கி வழிபட்டா ரென்று
மதலைபல நல்கிய வள்ளல் - சுதமில்

எக புகழிரா மன்கணியாற் பூந்தடமொன் றுக்கித்
திகழ வழிபாடி செய்ய - மகிழ்கிறந்தோன்

எஉ மச்சகந்தி யைப்புணர வந்த வருவருப்பை
மெச்சும் பராசரற்கு வீட்டினை - னச்சமிலா

எங தாசா னிலாட்புனர்ந்த வாசுங் கலிக்குறைவுந்
தேசார் மதிவணங்குத் தீர்த்தருளு - மீச

எசு னிணைத்தொருநீர்த் தத்தி னிமிமகன்க ண்டப்பு
ணிணைத்தவுடன் காயவைத்த நாதன் - வினைத்திறனை

எரு னாவரு நீர்தோய்ந் தடிபணிய மண்ணளித்த
தெய்வப் பெருமான் சிவபெருமான் - குய்யம்வைத்து

எசு வேந்தன் வலம்செகுத்த வெம்பழிக்குஞ் பாகனைக்கொன்
றேந்துபழிக் கும்பழிச்ச வீறுசெய்தோன் - போந்துதழல்

எள காண்ட வனத்தைக் கலந்தவுயி ரோடுண்ண
வீண்டரின்முற் றும்பரவ வீடழித்தோன் - மாண்ட

எஅ குறுமுனி கண்களிக்கக் கூற்றுவி மேவி
மருவி லகோரவுரு வாய்ந்தோ - னுறுசீர்

எசு திருதிடந் தோயு நியதியைப் பேய்முற்
கருதியடை யாவண்ணங் காப்போன் - சுருதி

அ0 நடையார் வருண னுறுசீர் படியக்
கடையார்சோத் தீப்படியக் கண்டோ - னடையுங்

அக திருகலன்கா னீர்மூழ்கிக் கேடிலா முத்திப்
பெருமுழுசீர் மூழ்கவைத்த பெம்மான் - வருமொருதன்

அஉ ரோழன் றடம்படியுந் தூயோரை மற்றவனுங்
காழ வுயர்த்துந் தனிமுதல்வன் - வாழ்வடைவா

அக நேகாமார்க் கண்டமுனி யீசான நீர்மூழ்கச்
சாகா வரங்கொடுத்த தண்ணளியோன் - வாகான

அச கண்ணன்கூ வத்துக் கருகிமழைக் கோள்மூழ்கக்
கண்ணன் களித்தருளுங் காபாலி - கண்ணுவணம்

அடு பண்ணிய தீர்த்தமுதற் பத்துந்தாய் வார்பிறப்பை
மண்ணி யருளு மகாலிங்கம் - புண்ணியமே

அக மேவவளர் கச்சபனு மெய்ம்முனிவன் முன்வாம
தேவவருக் கொண்டிடதிர்ந்த தேவர்பிரா - னேவறமுன்

அள கோதமதீர்த் தந்தாய் குணத்தா லகலிகைக்கு
வாதனைபடா டாணவரு மாற்றுவித்தோன் - பேதலர்கல்

அஅ யாணதீர்த் தங்கார்க்கோ டன்படிய முன்பரிச்சித்
தேதணறத்தீண் டிக்கொள்பழிக் கீறுசெய்தோ-னீணிலஞ்சே

அக சந்த நறுந்துறைபுக் காடுகள னுக்குச்சி
வந்த கலியைக்கறுத்து மண்கொடுத்தோ - னந்துமதில்

கூ0 வெள்ளோ ழுகிவாரு வேதியனீக் கொன்றபழிக்
கள்ளக் கபாலகலக் கண்கிவந்தோன் - றள்ளரிய

கூக தீர்த்திப் பதிரதனத் தீர்த்தம் படியகலங்
கூர்த்தவான் கங்கை குவலயத்தி - லார்த்துவரச்

கூஉ செய்தோ ரறுப தினையிரரு முக்தியுல
கெய்தா விருக்க வினிதளித்தோன் - வையகத்துப்

கூங பொல்லா னெருவன்வந்தப் பூசத் துறைபடிய
வல்லார்டெய்க் கூற்றவனுக் களுசவைத்தோன்-சொல்லுமங்நீர்

கூச வல்லா னெனச்சேடன் வந்தாட பண்சுமக்கும்
வல்லா னெனச்சொல் வலியளித்தோ - னல்லார்

கூடு திகழுத் துறைகந்த தீர்த்தமெனக் கந்தர்
புகழுற்று டக்கருணை பூத்தோ - னிசுழ்வற்ற

கூசு வத்துறையில் வேங்க னயிரா வதமுனிவன்
வைத்தசா பங்கழுவ வைத்தவருண் - முத்த

கூள னெருமீகாட் டியானை யுவந்தாடித் தன்பே
ரிருமீகாட் டதற்கிடவுள் வேய்ந்தோ - னெருவீர

கூஅ சேனன் படியச் செறிபிர மக்கொலைதீர்த்
தீனமிலா வான்கைலே யேற்றினோனு - மானமிகு

கூக சித்திர தீர்த்தி செறிந்துபடிந் தர்ச்சிக்கப்
புத்திரணே நல்குப் புகழாளன் - சுத்த

க00 மறையோன் கனகதடம் வந்து படியக்
குறையார் குருடொழித்த கோமா - னிறையோனுய்

கoக விண்ணுலகை யாளமரர் வேந்தன் முடிதகர்த்து
மண்ணுலகை யாளும் வயவேந்தன் - றண்ணளிசேர்

வரகுணபாண்டியதேவர் வழிபாடு.

கoஉ மன்னன் மதுரை வயங்கு வரகுணத்
தென்னன் பெருங்கான ஞ் சென்றிருநாண் - முன்னுகடு

கoங மாவேட்டஞ் செய்துவப வாம்பரிமேன் மீள்பொழுதோர்
தீவேட்ட வேதியனச் செல்வழியின் - மேவி

கoச மயங்கிக் கிடந்துகன வட்டத் தடியா
னுயங்கிக் கழிய வுணரா - னயங்கெழுசீர்

கoஞ பெற்றதன்னூர் மேவட் பிரமக் கொலிதொடர
வுற்றதெவை யாலு பொழியாம - னற்றவர்சூ

கoசு மூலவா யண்ணலடிபாற்ற வக்கடவு
ளேல விடைபருதூர்க் கீகென்னச் - சாலமகிழ்

கoஎ ஆத்தனீயான் வந்து புதுபோதை யப்பழியைத்
தீர்த்தருளிச் செய்திடவுத் தென்னவனு - மாத்தலமா

கoஅ மிக்தலத்தை நீங்கே னெனவங் குறைந்திருகா
லத்த கொடுமுடி யாவாணம் - விக்தகமாய்ச்

கoக செய்துரு ழென்று திருவாய் மலர்ந்தபடி
செய்துசூழ்ந் துங்கரவு தேதொருவன் - செய்யநுதல்

ககo வெண்ணீறு கண்டு விரித்தகடுங் கட்டவிழ்த்து
நண்ணர் நிலாதபொரு வன்களிக்து - மெண்ணிநரி

கஉக யுள்ளன வெல்லா முடையானீக் கூவியவென்
றெள்ளரிய வாடை யிசைதளித்தும் - விள்ளாத்

கஉஉ தவனீ யரமுழக்கந் தான்செய்த தென்று
திவண்மணிபொன் வாரிச் சிதறி - யுவகையுற்று

கஉங மென்னுண் டவன்வா ரிசைந்தியாழி கேட்டனையான்
றன்னுண்ட வெச்சி நினதுகாந்து - கொள்ளா

கஉச விழிகுலத்தீதான் செவ்வியவ்வு செல்லுகிடக் கக்கண்
டிழிகவி சோடுகரத் தேந்திக் - கழிவுற்

கஉஞ றடியேன் றலையுமிவ்வா முகியிவ்வு செல்லுக்
குடியாமோ வென்றிரக்கங் கொண்டும் - படர்தளிமுற்

கஉசு புன்குல நாய்மலந்தன் பொற்பூங்கை யாலெடுத்து
நன்குறவேம் பிற்குவிதா னஞ்சமைத்து - மன்புமுதிர்

கஉஎ பொன்னு நிகராப் புணர்முலைத் தேவிதனி
னன்னு மியற்பகைக்கு மாருக - முன்னு

ககஅ முயர்மருத வாணு வுவந்தடி யேனுய்ந்
தயர்வறநீ கொளகென் றளித்தும் - பெயர்வரிதா

ககக வின்னும் பலபணிசெய் தின்புமகக் கோமாற்கு
மன்னுபுகழ் முத்தி வழங்கினோ - னன்னீலமைதக்

கஉ0 தொல்லீ யுவனுச் சுவன்வயிற்று மாறுப்புண்
வல்லீல வலஞ்சூழ மாற்றினோன் - வெல்லுமவன்

கஉக மைந்தன் புறங்கொடுத்த மாற்றுணக் கொன்றபழி
மூந்தவலஞ் சூழ்முன் முடுக்கினோ - னந்துவசு

கஉஉ மான்வந்து சூழ்மோது மற்றவன்ற னுடவுணத்
தான்வந்து சூழுத் தலியளித்தோ - னீனந்தி

கஉங ரஞ்சத் துவச னடைந்துசூழ் முன்பவற்சூழ்
வஞ்சப் பிரமகத்தி மாய்த்தபிரான் - விஞ்சுபுகழ்ப்

கஉச பூசத் துறைபடிந்த புண்ணியர்கால் கைப்புனரோய்க்
தாசற் றிரண்டியிர்வா னண்ணைவைத்தோன் - மாசற்ற

கஉரு நாரத மாமுனிவ னண்ணிவிழாச் சேவிக்க
வாரம் படிகருணை வைத்தபிரான் - வார்மீ

கஉசு ணுணங்க ளுயிர்பெற் றுருந்திரர்க ளாகி
யிணங்குலகத் தெய்தவரு ளீந்த - ளுணங்கன்மீன்

கஉள கொண்டபொ தியிட்டிகைகள் கொண்ட வொருவனுக்குத்
தண்டலில்பொன் னுகச் சமைத்தபிரா - னண்டர்தொழப்

கஉஅ பொன்னுருவத் துட்டான் பொலியுமுரு வொன்றியைத்துத்
தன்னுருவி லாவருவந் தான்றெரித்தோன் - பன்னுபொரு

கஉக ளோர்வளவற் கீந்தணையா ணெண்பொருள்வீ சிப்பணிக
ளார்தரச் செய்ய வருள்வைத்தோ - மீனுரு

ககஉ0 மணங்கனுக்கு மின்னு யவதரிக்கச் செய்தோர்
சுணங்கனுக்கு முத்தித்த ளீயா - னிணங்குபொடி

ககக மெய்ப்பூ சவர்கேட்ப மேவுதிரி யம்பகன்முன்
றைப்பூச பாடத் தகுமென்றோ - னெஞ்மேது

ககஉ மில்லா வலஞ்சுழியே யேசம்பன் வைப்பாக
மல்லீல ரகமுருகன் வைப்பாக - நல்லார்சேர்

ககங தண்மாட வாப்பாடி தண்டீசன் வைப்பாக
வண்மாந் துறையிரவி வைப்பாக - வெண்பாரு

ககச நன்காமர் திலீல நடராசன் வைப்பாக
மன்காழி யேவடுகன் வைப்பாக - முன்காணுங்

ககரு தென்னு வடதுறையூர் சேவமர்வைப் பாவாரூர்
மன்னுசோ மாக்கந்தர் வைப்பாக - வுன்னிற்

கஙஃ றடைதவிரா லங்குடியா சாரியன்வைப் பாக
விடைமருதில் வீற்றிருக்கு மீச - னடைதருசீ

கஙள ரேற்ற வுருத்திரர்க ளேகா தசரும்வந்து
போற்றவருள் செய்த புதழ்ப்பெருமான் - மாற்ற

கஙஅ மிணங்குமணி பொன்னுதி யிட்டமர சென்றும்
வணங்கு மருதவன வாண - ணணங்கயர்புற்

கஙக ரோலுடையான் காதில்வளைத் தோடுடையா னீடமர்கல்
லாலுடையான் யாவையையு மாளுடையா - னூரூடையார்

கசஂ நாடுவோன் பற்றுத நாயே னிதயத்துங்
கூடுவோன் பொன்செய் குளிர்சான்றந் - தாடுவோ

கசக னேராழிக் தேசோ னுரித்த திசையென்னுஞ்
சீராழி யங்கையாகட் சேருவா - னேராகச்

கசஉ சென்மதியுண் முன்மதியிற் றோய்மதியில் பக்கத்து
நன்மதிகொ டன்னத னத்தோகைகொ - டின்னுதிப்

கசங புட்கொடியைக்கொண்டு பொறிக்கொடிமார்பிற்கொண்மசைக்
கட்கொடி யேற்றிக் களிசிறப்ப - விட்குலவு

கசஃ குன்றுபுரை தோளாருங் கோற்றொடியா ரும்புவனத்
தென்று பலரு முடனெருங்க - வன்றுமுதற்

கசஎ காலியினு மாலியினுங் காமர்பல தூரியமும்
வேலியினு மார்ப்ப வியன்மறுகின் - மாலைபெற

கசஅ வெற்பு நிகர வினங்குபல வூர்தியினும்
பொற்பு மலிபவனி போந்தருளி - யற்புறுதி

கசள ரின்பதா மென்ன விவருந் தொழச்சேரு
மென்பதா காலென்னு மெண்டிருகாண் - மின்பயில்பூண்

கசஅ வாய்ந்த பெருநல மாமுலை யோடியற்று
மேய்ந்த தூயினீத் தினிதெழா - வாய்ந்தசெழும்

கசக பைம்பொற் றகட்டிற் பலமணியுங் கல்யாத்த
வம்பொற் றிருமண் டபபணிகி - நம்புற்ற

கடுஂ வீறுதரு மாகமஞ்சென் மிக்க விதிப்படி யே
கூறு மபிடேகங் கொண்டருளி - நாறுகுழற்

கடுக பெய்வளைத்தோ ளெங்கள் பெருநல மாமுலைதன்
மைவனீயு நீல மலர்நோக்கான் - மெய்வளைத்த

கடுஉ மேரழகு நோக்குதலாற் மேதை யவணயனக்
காரழகு மேனி கலக்குதென - வீரமலி

கடுங காத்திர குப்பக் கருமலியிற் கொள்மேர்வை
போர்த்தி யிருந்த பொலிவென்னைச் - சீர்த்திமிகு

கடுச பன்முகத்து முள்ள பலவண் ணமுமறையத்
தென்முகத்து வண்ணமெங்ருஞ்சேர்ந்தெனத்-துன்னுபிறர்

கடுடு தப்பார் தருக்கொழிதல் சான்றிதென மால்கொடுத்த
குப்பாய மெய்ப்புனைந்து கொண்டதென - வொப்பேது

கடுக மில்லாத் திருமோனி யேந்தழுகைச் சாந்தமுலைப்
பல்லாருங் கண்டு பசப்பெய்த்திப் - புல்லாளப்

கடுள பெட்டாவி மாழ்காமற் பெய்வளைக்கை யம்மைகரும்
பட்டான் மறைத்த படியென்னக் - கட்டார்கொ

கடுஅ மேளாதிமுடி யாள்சமழ்ப்ப வேவாங்கற் புதல்விமற்றோர்
பாதியுரு வுங்கவர்ந்த பான்மையெனத் - தீதின்மணம்

கடுக பொங்குநீ லோற்பலப் பூமலர்ந் தாளன்றி
யெங்குகெருக் குற்றே றியவென்னத் - தங்கு

ககஂ மணைமாரும் பஞ்ச வடியெரிபாய்ந் தென்னத்
தணைவாத் திருச்சாந்து சாத்தி - நிணைவிவாய்

ககக வேங்கை கொடித்தகலி வீக்கு மிடத்தொளிரும்
வேங்கை கொடித்தகலி வீக்கியே - யேங்குபய

ககஉ ஞுய்ந்தவொரு பெண்ணுயிற் றோ ராணு மனமகிழச்
சாய்ந்து நிமிர்ந்த தனியிடத்து - வாய்ந்தபுனற்

ககங பெய்வளோ மாதைப் பெருகலா முள்ளுன்
மைவிழிகா ணுமன் மறைத்தெனக் - கைவல்லா

ககச சாற்று மணிமகுட மப்பவள வேங்கண்மிசைத்
தோற்றுகதி யென்று சொலக்கனித்துப் - போற்றுபுக

ககடு பூற்றன்மிகு கண்ணப்ப னிற்சொலுமுகா
னேற்றுபகிழ் பூத்த வியலிடத்துச் - சாற்றுபுனன்

ககக பங்கை யுளைக்குபொழி வக்கு புதாதுமையாள்
சேங்கை புதவஞ் சென்றெனப - பங்கமிலா

ககள மாணிசெப் தோதிப் வயிர்ந்து செயுபாற்பொற்
றாமகை குண்டலபுக் தெரட்டணியா - வேமவளை

ககஅ யொன்று படவிறுகி யோங்கண்மகண் மார்பில்வளர்
குன்றுபட மொல்கிக் குலையிடத்து - கன்றுருரு

ககக மேரகுசுடர்ப் பன்மணியும் பொங்கியெழுக் கால்யாத்த
வாகு வலயம் வயக்கியே - பாகனின்செய்

களஂ கஞ்சக்கண் மாயனயன் கற்பகக்கோ ஞதிபர்கூம்
றஞ்சச் சிறைவைத்த வவ்விட த்தே - விஞ்சுபுகழ்

களக மின்னுமுல கங்களெலாப் விற்றுலு மீடாகா
மன்னுமணிக் கட்டு வடமணிந்து - பன்னுமுமை

களஉ வட்ட முலைக்குமணி வாரா மிடத்தண்ட
மட்டினிலா விற்றரள மாலையிட்டு - முட்டாரிய

களங தாவின் மணிவீர சங்கிலிம தாணிபல
மேவிய வாயிடைமேன் மேற்புனைந்து - தாவா

களச மடங்கீண்ட தொண்டருத்த மாங்கந்தாங் கக்கல்
லீடங்கீண் டெழுந்த விடத்தீத - மடங்காக்

களரு கருவி தனக்குக் கருதுபிற வேண்டா
விருமை மணிக்கடக மிட்டுக் - கருது

களகு மலரோன் முடிதுணித்த வைவாட் குறையா
யிலகுமிடத் தாழிபல விட்டு - நலமருவு

களள பொன்னுக்குப் பின்னிருந்து பொங்குவெள்ளி தங்கிடத்து
மன்னுதர பந்தம் வயக்கியே - துன்னியொரு

களஅ பன்றி தொடரமற்றீரூர் பன்றி தணைத்தொடர்ந்து
சென்ற விடத்துச் சிலப்பணிந்து - நன்றவற்றுட்

களக கொண்டகின மாதி குறையாதித தென்றிசைக்கோன்
கண்ட விடத்துக் கழல்கட்டிக் - தண்டாத

கஅ0 மாதங்க வுத்தரிய மன்னு மிடத்தொளிசெய்
மாதங்க வுத்தரிய மன்னுவித்துத் - தாதுவிரை

கஅக தாவாத கொன்றையந்தார் சர்ப்பப் பிராந்தியிட
மேமவாதாண் மேவ வுவந்தணிந்து - பூவார்கைக்

கஅஉ கொண்டகருப் புக்கிலையான் கோலத் திருமேனி
யுண்ட கதிங்கூற் றுறையிடத்தீத - தண்டலில்பா

கஅங லேறு கடலிலாமா லேய்நீற்றுப் தூளன்மே
னுறுதிரி புண்டரநா னத்திலகம் - வீறுகொள

கஅச விட்டிமதிப் பாதி யெடுத்துமுடி மேற்கவிய
கட்டினிது வைத்த நயமென்ன - வெட்டுணையு

கஅஞ பாசுசர பாத வயிரமுழுக் கச்சொறித்த
தேசு மிகுவா சிகைசேர்த்துப் - பேசபுக

கஅக மிட்டகைக் கோரிலவ லின்றுவரு மென்றுமலர்
மட்டுறுதா ரானான் மன்னுவகை - யுட்டுளைய

கஅல கின்வலப்பா கத்திகருத்தி நீங்கா திருப்பதென்னென்
றென்மலர்வா படைத்தா னிசைத்தூட - னன்மைதிக

கஅஎ மும்மதிலை யிவ்வரவு மவ்வரவை யிம்மதியுஞ்
செம்மை யுறவெகொண்டி சேர்படைப்ப - மும்மைப்

கஅஙு புவனத்தந் தானீரூய் பொலிவுவைத்த லேய்ப்பப்
பவளக்காற் கண்ணுடி பார்த்துத் - தவள்பருப்புப்

ககூ0 பொங்கல்பான் மூரல் புளிமோ தனங்குளஞ்சேர்
துங்கமடை நெய்மிதக்குஞ் சொன்றியீ - தங்கயினி

ககூக பாகு கருணை பகரும் வறையறுவை
யாகு மிலட்டுகமெல் லாவியப்பம் - போகுசுவை

ககூஉ மீநாலே யடைநன் னுவண்ணே முதற்பலவுஞ்
சோலே யுதவு சுவைக்கனியுங் - காலே

ககூங யிளநீர் குளநீ ரியன்மோ ரளாய
வளநீர் கனிபிழிந்த மாநீ - ரளவா

ககூச வெவையுஞ் சுவைதேர்ந் தியலவாய் பூசிக்
குவைகொள்விளைப் பாகடையுங் கொண்டு - சுவையரிய

ககூரு மேதகுதூ பந்தீப மிக்க விவைமுதற்செய்
யோதுபசா ரங்க ளுவந்தருளிக் - கோதறுசீர்

ககூசு வாய்ந்தவொரு தானும் வயங்கு தனதருளிற்
றோய்ந்தவடி யாருஞ் சொலவந்த - வாய்ந்த

ககூள வெழுதா மறையு மெழுது மறையும்
வழுவாது கேட்டு மகிழ்ந்து - தொழுவார்

ககூஅ நயங்குல வின்ப நறும்பலம்பெற் றுய்ய
வயங்கு மொருகோட்டு மாவுஞ் - சயங்கொள்சத

ககூக கோடி யரசின் குலந்தழைய வெம்பகையைத்
தேடியவோர் வேல்கொள் செழுங்குருந்தும் - பாடியலா

உ00 வோட்டை மனத்தக்க னேம்பரணிச் சேரதிமதங்
கேட்டை யுறச்சிவந்த கேடிலியு - நீட்டுமொரு

உ0க கைத்தலைநால் வேதங் கமழ்வாய்த் தலையான்று
வைத்தலைநெய்க் தோரேற்ற வானவனு - நித்தமுந்தன்

உ0உ ஞாய்மணிசெந் தாமரையே யாக வுறைவானைத்
தாய்மணி யென்றழைக்கத் தக்கோனுந் தூயவையை

உ0ங நீரு நெருப்பு நிரப்பு தமிழ்ப்பெருமை
யோரும் படியருள்கொ ளொண்மழவுந் - தீராத்துன்

உ0ச பாய கடலமணை சாழ வரையொடலை
மேய கடன்மிதந்த வித்தகனு - பாயவன்கண்

உ0ரு காணுக் கமலநடுக் கங்குலினு ஞர்ந்திருளின்
பாணுகப் பூத்துலவை தேனுங் - கோணுது

உ0கூ மூகைவாய் பேச முழுப்பேச்சு வாய்மூகை
யாக வியற்றிய வண்டகையும் - பாகமிலாத்

உ0எ தாதையிரு தாடடிந்து தாயையொரு பாகங்கொ
டாதையிரு தாளடைந்த சான்றவனு - மோதைகெழு

௨0அ கைச்சிலம்பின் றேனுடைத்தன் காற்சிலம்பி னேசைசெவி
வைச்சிலம்பி னுண்டுய்ந்த வானவனும் - பச்சுமைகை

௨0கூ யாய்நீர் கரந்த வரியமுடி மேல்வழிய
வாய்நீர் பொழியன்பு மாமுகிலும் - பாய்மை

௨கo தகவரிந்தூட் டாது தலையிழந்தா னுண
மகவரிந் தூட்டியசீ மானு - நகமறைக

௨கக ளீன்றதன்வா யென்று மிசைத்தறியா வம்மையெனு
மான்றசொல்லி சைக்க வமைந்தாளுஞ் - சான்றதிரு

௨கஉ மங்கலப்பொன் கொண்டுமணி வாய்மொழிசொற் கொள்ளாது
குங்கிலியங் கொண்டுவந்த கொள்கையனும் - வெங்கொடி
[யோன்

௨கங கோச மறைத்தவாள் கொண்டுதகா தாற்றவந்த
னேச மறைத்தறியா நீதியனும் - வாசமுறத்

௨கச தோய்ந்தபுக ழாரூரன் றெண்டத் தொகையுணிலைத்
தாய்ந்தபுகழ் மற்றை யடியாரும் - வாய்ந்த

௨கஞ வலர்துழாய் நாறு மகன்றலியைக் கொன்றை
மலர்துழாய் நாறவைத்த மானு - நிலவு

௨கஙூ முலகுண் டுமிழ்ந்த வொருவனேப்பா வுண்பேபா
துலகறிய வுண்டுமிழ்ந் தோனு - மிலகுநடங்

௨கள கண்டே பகிதனிக்குங் காமர் விரதமொன்று
கொண்டே விளங்கு குணத்தவரும் - தண்டேறல்

௨கஅ பெய்தவர் பெய்யலர் பேசல வேயாகச்
செய்தவ ரென்னுமற்றைச் செய்தவரும் - கையிற்

௨கஃ குடவலீ கொண்டுங் குடவலீக்காய்ப் பாடி
வடவலீ கட்டுண்ட மானு - மிடவலீயப்

௨உ0 பூமேலுஞ் ஞாண்றும் பொலிந்தும்புத் தேளாய்ச்செங்
நாமேல்வெண் மாதுவைத்த நான்முகனு - மாமே

௨உக வொருசுவர்க்கங் கைக்கொண் டிவந்தபி ராணி
யிருசுவர்க்கம் வைகு மிறையும் - பொருவரிய

௨உஉ வெற்பகரா ணப்பொலிந்து வீங்குமீதாண் மேற்புணைந்த
கற்பக மாலைக் கடவுளரும் - பொற்பகலாத்

௨உங தேந்தா மரைமலர்த்துஞ் செங்கதிரும் பூவினுக்கு
வேந்தா மதுகுவிக்கும் வெண்கதிருங் - காந்தாப்

௨உச பொலிபடைகொண் டாசை புரப்பீபாருஞ் சீர்த்தி
யொலிபடைத்த பூதகணத் தோரு - மலியுமிசை

௨உஞ பத்தர்பதி யாழ்கொண்டு பாடுந் தொழில்வருஞ்
சித்த ருரகர்முதற் செம்மையரு - முத்தமமீ

உஉசு தெண்போ தெனவொருவ னெள்ளெச்சி லுண்டவிமற்
றுண்போர் பலரு ளுயர்ந்தோ னும் - பண்போ

உஉள ரணிக்கோவை தட்டி யகமகிழ்தற் கோர்மும்
மணிக்கோவை சூட்டியகோ மானும் - பிணிக்கோதி

உஉஅ லாதிசைவ ராதி யணியா லயத்தொண்டிற்
கேதிலரா காதியற்று மெல்லோரு - நீதிநெறித்

உஉக தக்கபெருஞ் சீர்ச்சுத்த சைவசித்தாந் தத்திருவின்
மிக்க திருக்கூட்ட மேன்மையரு - மொக்கவரப்

உஉ0 பண்பார்கை லாய பரம்பரை மெய்க்கண்டா
ணண்பார்சந் தான நனிதழைக்க - விண்பார்

உஉக புகழு வருங்குரவர் போரேறு ஞானந்
திகழுவரு மானந்தச் செல்வ - னிகழ்வி

உஉஉ றுறவுபூண் டோர்பலர்க்குஞ் சூளா மணிமிக்
குறவுபூண் டெவ்வுயிரு முண்மை - பெறவுவக்கு

உஉங ஞான விநோதனுயர் நாவலர்தம் போரேறு
சான முடையார் தனித்துணைவன் - மானத்

உஉச திருவா வடுதுறைவாழ் செல்வன் கருணை
மருவா வருநமச்சி வாயன் - பொருவா

உஉடு வரமணியென் றெல்லோரும் வாழ்த்தப் பொலிசுப்
பிரமணிய தேசிகனெம் பெம்மான் - பரவுமுண்மை

உஉசு தாங்குபெருஞ் சித்தாந்த சைவக் குழாங்களென
வோங்குதிருக் கூட்டத் துடன்மேவ - வீங்குசெம்பொற்

உஉள றேருரும் பரியுஞ் சிவிகையும் யானையுமற்
றூரும் பிறவுமுவந் தூர்தருபல் - லோருள்ளு

உஉஅ முன்னூர்வோர் பக்கத்து மொய்த்தூர்வோ சோர்தனக்குப்
பின்னூர்வோ ரம்முறைமை பெற்றூரப் - பொன்னூரு

உஉக மின்பணியும் வேத்திர மென்மலர்க்கை கொண்டசைத்துத்
தன்பணியி னங்கி தலிகிற்பக் - கொன்பரவு

உச0 வாரி யுடுத்தபெரு மண்ணெருதாட் குள்ளடக்கு
மூரி விடைக்கொடி முன்போத - வேரிவரு

உசக மாலவட்டஞ் சாமரைசாந் தாற்றி யொலியன்முதன்
ஞாலவட்டஞ் செல்பவவு நண்ணிமொய்ப்பக் - கோல

உசஉ முழுவெண் மதியு முடிமேற்கொண் டென்ன
வெழுவெண் குடைமே லிலகப் - பழுதில்

உசஙு பதலை முழவம் படகந் திமிலை
முதல முகிலின் முழங்க - நுதலினெளிர்

உசச கண்ணுடையான் வந்தான் கருது மொருபாகம்
பெண்ணுடையான் வந்தான் பிரான்வந்தா - னெண்ணினருக்

உசடு காய்தந்த வன்பருவி யாட்கொள் பவன்வந்தான்
மூய்தந்தை யில்லா தவன்வந்தான் - பாய்தந்த

உசசு நல்லா ரணிமேக நாயகன்வந் தான்புலமை
வல்லா ரணிமருத வாணன்வந்தான் - புல்லார்

உசள நயந்தபுரம் மேவ நகைத்தபிரான் வந்தான்
வயந்தழைவெங் கூற்றுதைத்தான் வந்தா - னயர்ந்தயன்மால்

உசஅ சாவாம னஞ்சுண்ட தம்பிரான் வந்தானெம்
மூவா முழுமுதன் மூர்த்திவந்தான் - மூவாத

உசகூ பொன்னம் பலத்தாடும் புண்ணியன்வந் தானென்று
சின்னம் பலவுமெதிர் சேவிப்ப - வன்னமணி

உடுO யாத்த வொளிமண் டபத்தின்று தேவியொடு
மேத்திமறை வாழ்த்த வினிதெழுந்து - தாத்திரிந்

உடுக றம்பொன்முடி யண்ட மளாவவெழு கோபுரந்
தம்பொன்மணி வாய்தல் பலகடந்து - செம்பொன்மலர்

உடுஉ தூற்றியெல் லோருந் தொழுதடைக் காவணத்தி
னேற்ற வழியே யெழுந்தருளித் - தோற்றத்

உடுங தலங்குதிரு வீதி யணுகியம்பொன் வெற்பி
னிலங்கு திருத்தேர்மே லேறி - நலங்கொளரி

தழாங்கள்.

உடுச யாதனத்து மேவமுடி யாரும் புனற்றுறைகண்
டாதரத்து மேவவந்த வன்னமெனச் - சீதநிழல்

உடுடு வாழ்மருத வாழ்க்கை மதித்துறவு கொள்ளவந்த
கேழ்கிளர்செந் தாப்பசுங் கிள்ளையெனத் - தாழ்சடைமேன்

உடுசு மின்னு முகிலின் விளக்க முணர்ந்துவந்த
மன்னு கலாப மயிலென்னப் - பொன்னிறங்கைத்

உடுள தாய்க்கு முனமளித்த தண்ணருள் கண்டுவந்த
கூய்க்குலவு தேமாம் குயிலென்னச் - சேய்க்குமுன

உடுஅ மேவுமொரு பெண்கொண்ட மெய்யுறவு கண்டுவந்த
வாவு மிளமட மாதென்னத் - தாவாத

உடுகூ வொண்டரு வெண்பூதணி யுள்கிப் படரவாக்
கொண்டருகு வந்த கொடியென்ன - மண்டு

உசுO சடையையின மென்று தவக்கருத்திற் கொண்டா
யிடையடைய வந்தமின லென்ன - வுடையதணைக்

உசுக கோணில் பிரணவ குஞ்சர மென்பதுளம்
பேணி யடைந்த பிடியென்ன - வாணிலவு

உசுஉ விண்ணுலக மேயபல மின்னுரும் வாரிதிசூழ்
மண்ணுலக மேய மடவாரு - நண்ணுபெரும்

உசுங பாதலத்து மேய பலமா தருமாட
மீதலத்துஞ் செய்குன்ற மேனிலத்தும் - பூதலத்துஞ்

உசுச சேரதிமணிச் சாளரத்துஞ் சூழ்பசும்பொன் மன்றிடத்தும்
வீதியிடத் துஞ்சதுக்க மேவிடத்து - மோதிமநேர்

உசுடு மாடமலி சோபான வைப்போ டரமியத்து
மாடகஞ்செய் வேதி யதனிடத்தும் - பாடமையு

உசுசு மின்னென்று சொல்சடையீர் வின்மா ரீணையெரித்த
தென்னென்று கேட்க வெழுந்துநிற்ப - தென்னக்

உசுள குருமுடிக்கா ரோடுறவு கொள்ளவிழைந் தென்னப்
பெருமுடிக்கா ரோதி பிறங்கத் - திருமுடியில்

உசுஅ வாழும் பிறைவடிவும் வண்ணமுமொத் தேதமென்று
வீழும் பொடிதுதன்மேன் மேல்விளங்கப் - போழுங்

உசுசு கருவிழிச்சேல் கங்கை கலப்பமுயன் றென்னப்
பொருவிலிரு பாலும் புரள - வொருவின்முடி

உளO யவ்வாய் மதிநட் பமைந்தவரக் காம்பலெனச்
செவ்வாய் மலர்ந்துசுவைத் தேனூற - வெவ்வா

உளக வலக்கணுற வுற்று வயங்குகம லம்போ
னலக்க முகம்பொலிவு நண்ண - நிலக்கண்

உளஉ டணைவேய்கொண் டாங்குறவு தாங்கொளவுற் றென்னப்
புணைவேய் வளைத்தோள் பொலிய - வணையும்

உளங வாயைக் குழைத்த வரைகுழைக்கு மாபோல்
விளையக் குவிமுலைகள் விம்மப் - புளையறுதன்

உளச கண்ணெதி ராகக் கணைமதவே ளன்றென்னு
மெண்ணெதி ராக விடைதுவள - வண்ணவனைத்

உளடு தன்பணியை வெல்லத் தருக்கியெதி ரும்றெனச்செம்
பொன்பணி யல்குல் புடைவீங்க - நன்புவியோ

உளசு ரெண்ணியமேர் யாத்த வெழிலரம்பை முற்றும்வெலக்
கண்ணியபடைக் தாங்குக் கவான்பொலியப் - புண்ணியத்தன்

உளள பாடியமேர் மேவப் பழகுதல்போற் றன்பழைய
நீடியமேர் மேவுபத நேர்கிறப்பக் - கூடி

உளஅ யெழுகடலு நாண வெழுந்தபெரு வெள்ள
முழுகு நெடியசடை மோலி - யெழுகழகும்

உளசு வையமிகழ் தக்கன் மகக்கூற் றவதரித்த
செய்யவிழி நெற்றித் திருவழகு - முய்யப்

உஅ0 பகலிரவு செய்யம் பகத்தழகும் வேத
மகலரிய செவ்வா யழகும் - பகரடியார்

உஅக மெய்த்தசுவைச் சொல்லழதே வேட்ட செவியழகு
மொய்த்த கருணை முகத்தழகு - மொத்துலகங்

உஅஉ காத்தமணி கண்டக் கறுப்பழகு மேருவலி
தேய்த்த தடந்தோட் கிவப்பழகும் - வாய்த்தகிவ

உஅங ஞானங் குடிகொ ணகுபூண் முலையுழக்குந்
தானமெனு மார்பத் தனியழகு - மானகுநீ

உஅச சோடை யெனுந் தன்முகத்தி ணெண்கணெனும் பூவமைக்குங்
கூடையெனுஞ் செந்தாட் குலவழகும் - வாடையுத

உஅடு வெண்ணுற்ற வில்லோ வெனும்வா சிகையழகு
நண்ணுற்ற புன்மூ னல்லழகுங் - கண்ணுற்றூர்

உஅசு மாலானூர் கண்ணிமைப்பு மாறினு சோவியமே
போலானூர் நெஞ்சம் புழுங்குவார் - சேலான

உஅள கண்முத்தஞ் சூடிக் கதிர்த்தமுலை மேற்பழைய
வெண்முத்தம் போக்கி வெதும்புவா - சொண்மைச்

உஅஅ சுரிகுழ முழ்ந்திடையைச் சூழ வடுத்த
விரிகலே போக்கி மெலிவார் - பிரிவரிய

உஅக நன்னு ணெடுகதிரு நாணுமணி கோத்தபல
மென்னு ணுபோக்கியுளம் விம்முவார் - பொன்னுன

உகஅ0 கன்று கழன்றகறல் காணு ரிளந்தென்றற்
கன்றுகழ லாதடைதல் கண்டயர்வார் - நன்றுகன்று

உகஅக பொன்செய்த செஞ்சடையார் போற்றியா நோக்கியதற்
கென்செய்தா ராலென் றிரங்குவார் - மின்செயொரு

உகஅஉ பங்காட்டி செய்தவமே பாடுற் றதுவீணே
யங்காட்டி நாம்பயில்வ தம்மவென்பார் - செங்காட்டுப்

உகஅங பிள்ளீப் பழிகொண்டார் பெண்பழிக்கு நாணுவரோ
கொள்ளீப் பழிகொள் கொடியரென்பார் - வள்ளீப்

உகஅச பயம்பணியார் கூடற் பழியஞ்சி யாரென்
றியம்பு வதுமுகம னென்பார் - நயம்படரப்

உகஅடு பொங்கரவப் பூணுவஞ்சீர் புன்க ணுதவுமக்குச்
சங்காரென் னும்போ தகாதென்பார் - துங்கமிகு

உகஅசு வேய்வன மேவல் விருப்பீரெம் பொற்றொடித்தோள்
வேய்வன மேவல் விரும்பீரோ - காயாவின்

உகஅள வாயமுது கொண்டு மகிழ்வீரெஞ் செம்பவள
வாயமுது கொண்டு மகிழீரோ - மேயமலர்க்

உகூஅ கொங்கைச் சிலம்பு குழைத்தீரெம் மார்பிடங்கொள்
கொங்கைச் சிலம்பு குழையீரோ - பங்கமிலிப்

உகூக பொற்றேர் விரும்பிப் புணர்ந்தீரெம் மல்குலினும்
பொற்றேர் விரும்பிப் புணரீரோ - கற்றலஞ்சேர்

உ00 வாழை யடவி மருவினீ ரெங்குமுங்காம்
வாழை யடவி மருவீரோ - தாழ்விழியாச்

உ0க சீத மதியைமுகஞ் சேர்த்தீரெம் பொன்வதனச்
சீத மதியைமுகஞ் சேரீரோ - ரதவரு

உ0உ டாமிவன்ற வோரன்பர் தம்பாற்சென் றுன்மலீனையைத்
தாமென்ற தூர்த்தருநீர் காமலிவை - மாமென்றிப்

உ0ங பூதஞ் செயும்படையீர் பொன்னணியாள் பாலிரத
வாதஞ்செய் தன்புற்றூர் மற்றிறைவீரோ - சீதமலர்

உ0ச மட்டார் புனன்மதுரை வாழ்வணிக மின்னுர்கை
தொட்டாரும் வேறுமொரு சுந்தரரோ - கட்டார்கொ

உ0ஞ லோதியைமைப் பாராரீ ரோரரசன் முன்கொடுத்த
மாதீனையெவ் வேதுவினுள் வைத்திருப்பீர் - மோது

உ0சு புரத்தை யெரித்தலுமெய் பேபார்புரித லால்வேள்
புரத்தை யெரித்தலுநீர் பொய்பே - சிரத்தையின்மாற்

உ0எ காழி கொடித்தலுமை யாதரித்த நாங்கள்கைப்பல்
லாழி யிழப்ப தழகாமோ - வாழ்தேவூர்க்

உ0அ கன்றுக் கிரங்குங் கருணையீர் தீருமெங்கைக்
கன்றுக் கிரங்காவன் கண்மையெவ - னன்றூர்

உ0க நகரி லமண்சுருக்கி நங்கூறை தீர்த்திற்
நகரி லமண்பெருக்க னன்றே - புகரில்

உகஅ கருங்குயிலும் பாலடக்கக் கற்றீர் வருத்துங்
கருங்குயிலெம் பாலடக்கக் கல்லீர் - நெருங்குழலே

உகக யுள்ளிடத்தும் வைத்தீ தொருத்தி கவர்ந்துகொண்டு
தள்ளிடத்து மெம்மைவைத்த ருஞ்சகியீர் - வெள்ள

உகஉ மடக்குந் திறலீரெம் மம்பகம்பெய் வெள்ள
மடக்குந் திறல்சற்று மாளீர் - கடிப்பின்

உகங மதிமயங்கா வண்ணமுடி வைத்தீர் பசவெம்
மதிமயங்கா வண்ணம்வைக்க மாட்டீர் - புதியகரு

உகச மஞ்சமையு மெங்கண் மணிக்கூத்தற் கட்டவிழ்ப்பீர்
பஞ்சவடிக் காங்கொலெனப் பார்த்தீரோ - வஞ்சம்

உகஞ பயில்கொக் கிறகு படர்சடையைத் தீர்வெங்
குயில்பற் றிறகெவனீர் கொள்ளீர் - வெயிலின்

நகசு மணியுடைதும் பூணுணவு மாற்றும் விரத
நணியனகொ றென்ற னடிக்கும் - பிணிதவிர்மெய்

நகள யந்திவா னென்றே ய்மைத்தோ மமைப்பதற்கு
முந்திக் குவிந்த முகமலர - நந்திப்

நகஅ பரவு சடைமுகிலைப் பார்த்தவுடன் சொல்லாய்
விரவு குயிலொடுங்கி விட்ட - வரவிற்

நகக திகம்பரரா தும்மைத் தெரிந்தடைந்த யாமுந்
திகம்பரரே யாகிச் சிறந்தோஞ் - சகம்பரவு

நஉ0 மத்திக் கருளி யறங்கொண்டீ ரெங்கண்முலை
யத்திக் கருளி யறங்கொள்ளீர் - பத்தியருக்

நஉக கேற்று வருவீ ரிடர்க்கடலுண் மூழ்குமெமக்
கேற்று வாமை யியம்புவீர் - போற்றியனும்

நஉஉ மேனிதழு லென்றுரைப்பார் மெய்யே யருகடைந்தே
மேனிதழு லாய விதத்தென்பார் - மேனி

நஉந ஞணங்கன்மீன் றுள்ள வுவர்தீர்நீர் கண்மீ
ணுணங்கன்மீ னுக வுவப்பீ - ரிணங்கு

நஉச மிடைமருதா னந்தத்தே னென்பா ருளா
வடைவினிம்ப நெய்யென் றுறைவோ - முடையவரே

நஉரு கோதை தரிணுவப்புக் கூடி மறுக்கின்மிசு
வாதையுறு மென்னுமட வாருலொரு - பேதை

பேதை.

நஉசு விடராய வாடவராம் வெவ்வரவம் பற்றத்
தொடரா மதிப்பிஞ்சு தோலா - நடமுடையார்

நஉள கோறுங் கிறுக்கமருந் தெய்வமரு ணிற்பறக்
கோறுஞ் செயலி லிலக்கிள்ளே - மாறுபடு

நஉஅ சூர்மாவென் றுள்ளங் குணிந்த தோ காமறியோ
மூர்மா விவர்ச்சி யுருதகுபி - ரூர்மார்

நஉக படனுடைய மார னவாவினினி தோதறக்
கிடமருவு ரூதள்ளக மெனறல - படமலிலக்கி

நஙO யென்மார்பி னில்லா விரண்டு புடைப்பன்னுய்
கின்மார்பி னுற்றமைசொ னீபென்பாள் - பொன்மார்பத்

நஙக தோறுகைத்தா ரன்ப ரிதயம்போல் வஞ்சமுதன்
மாறு லினையா மனத்தினு - மேறு

நஙஉ நடந்தனேன் யானீ நடந்தீலொற் பாவாய்
கிடந்தகுறை யென்னென்று கேட்பா - ஞடைந்திடுமுன்

நஙநக வல்லியே பாலிம் மரப்பாவைக் கூட்டமுலை
யில்லியே யார்கொடுப்பா ரென்றழுவாள் - வல்லா

உகூச செழுதுமொரு பூசையைக்கண் டின்றே கிளிக்குப்
பழுதுவரு மென்றோட்டப் பார்ப்பா - டொழுகுலத்தின்

உகூரு முற்று தமிழ்விரகர் முன்னமணீர் வாதம்போ
லுற்றுமுடிக் கப்படா வோதியாள் - பற்று

உகூசு குடியிற் பொலிமாதர் கொண்டநாண் போலக்
கடியப் படாக்குதம்பைக் காதாள் - படியி

உகூள லடுக்கும்விடங் கொள்ளா வசாக்குருளைப் பல்லே
கடுக்கு மெனப்புகலுங் கண்ணுண் - மடுக்குமயி

உகூஅ சொன்று கழிதாமற் றொன்றுபுகு மூலருடம்
பென்று கையு மெயிற்றடியா - டின்று

உகூக விணைபெற்ற மேருவல்லா வெற்பினங்கள் போனண்
டணையுற் றறியாத் தகையாள் - வணையுங்

உகூ0 குழலும்யா ழுங்கைப்புக் கொண்டோமென் றெண்ணி
யுழலுமா றோர்சொ லுரைப்பா - ளழகு

உகூக பருவ மிரண்டிட் பருவமே யொப்பப்
பெருக வளர்ந்த பிணைக்க - டெருவி

உகூஉ னெருங்கப் புகுந்து நிறைகல்வி யான்றோர்
சுருங்கச் சொலன்முதலாத் தோற்றி - யொருங்கு

உகூங பொருள்புணர்த்திப் பாடப் பொலிசெய்யுண் முன்னர்
தெருளுணர்ச்சி சாலாச் சிறியர் - மருள்வகையிற்

உகூச பாடுகின்ற செய்யுளெனப் பற்பலவுஞ் சிற்பமெலாங்
கூடுகின்ற மாடக் குலமுன்னர் - நீடுபெரு

உகூரு வீடுகிறு வீடென்று மேன்மே லுறவியற்றிக்
கூடு மவர்புனையுங் கோலமென - நாடுவிசற்

உகூசு கோலம் புனைந்து குலாவி யவருவக்குஞ்
சீல மெனவுவக்குஞ் செவ்வியிடைச் - சாலு

உகூள மருவு முருவு மனலும் புனலு
மிருவுங் கொடையு மிரப்பு - மொருவா

உகூஅ விரவும் பகலு மினலு மதியும்
புரவு மழிப்பும் பொருந்திப் - பரவுதிறப்

உகூக பாணுருவும் பெண்ணுருவு மாலா லமுமமுதுங்
காணு மவுங் கலைமதியுங் - பேணுநிறல்

உகூ0 யோகமும் போகமு முள்ளா நுரைபலவு
மேகமு மாய விடைமருதர் - மோகப்

உகூக பெருந்தேர் நடத்திவரப் பெட்டணைமா சோடவ்
வருந்தேர் தொழுதற் கடைந்து - திருந்துமணி

ஙடுஉ மார்வணங்கும் போது வணங்கிணுண் மான்முதலோர்
நேர்வணங்குங தெய்வவுரு நேர்கண்டாள் - காருரும்

ஙடுங வணங்கோதி யன்னே வதனமலர் நேர்பார்த்
திணங்கோ திவர்யாவ ரென்று - ளணங்கே

ஙடுச யிடைமருது வாழீச செல்லா வுலகு
முடையர் நமையா ளுடைய - ரிடையறநன்

ஙடுஞ ஊரும் விடைகருட ஊர விடைகொடுத்தார்
சாருந் தமை யுணர்ந்து சாத்தணியீன் - றருங்

ஙடுஙு கொடிபுணரச் செம்பொற் கொடிகொடுத்தார் மூன்று
கடிமதிலும் வேவக் கறுத்த - வடியுடைப்பே

ஙடுஞ ரம்புசுமந் தெய்ய வகத்தியனுர் தம்மைக்கொண்
டம்பு கொடுத்த வழகரென - நம்புமிவ

ஙடுஅ ரித்தெருவிற் றேரேறி யேன்வந்தார் சொற்றியென
முத்தமொளிர்ந் தென்ன முகிழ்நகைசெய் - தத்தரிவர்

ஙடுஙு நம்மையெலா மாட்கொண்டு நாமவேட் டவையளிக்க
வம்மையொடும் வந்தா றறியென்னச் - செம்மையயி

ஙசுO பைபடியா ணுன்றே யையர்முடி யம்புலியென்
கைபபடியு மாறு கரையென்னச் - செப்புமஃ

ஙசுக தநத விடம்பெயர்ந்தா லந்தோ வுருக்காணை
லெந்த விடத்து மிலைகண்டாய் - முந்த

ஙசுஉ முனிதக்கன் சாப முராரிமுத லோருந்
தனிதக்க தென்னத் தருமோ - வனிதா

ஙசுஙு யெனவதணைக் கூவமன மில்லையெனிற் கைம்மான்
றணையெனக்கு வாங்கித் தருதி - யணையேயென்

ஙசுச றோத விஃதென்னென் றண்ணைகைத்தம் மான்முழக்கஞ்
சாத மெவர்செவிக டாமேற்கும் - போத

ஙசுஞ வொருமுழக்கஞ் செய்யி னுதிருமே யண்ட
முருமுழக்கம் யாவுமிகற் கொப்போ - திருவே

ஙசுங யடங்குகென மற்றதுவு மபபடியே லாட
ரெடங்குமமப் பாவைக்குச் சூட்டத் - தடங்கொளிவர்

ஙசுஎ தோண்மே லணிந்த தொடையா வதுவாங்கென்
றண்மேற் கலிதொட் டலைத்திடனும் - வாணெடுங்க

ஙசுஅ ணன்னே முனிவாள்போ லாங்கு முனிந்தொருநீ
பின்னையச்ச தத்தாதரு பெண்ணல்லை - முன்னைத்

ஙசுங தவம்பெரிது வேண்டும்வாய் தன்னே யடக்கென்
றவஞ்சிறிது மில்லாதா ளாற்ற - நிவந்த

கூஎ0 திருத்தேரை யப்பாற் செலுத்துதரங் கண்டு
திருத்தே ரணையொடுமிழ் சென்னுள் - பொருத்துகிலே

கூஎக கோரட்டாது வண்டுநாண் கூட்டாது வாளியொன்னும்
பூட்டாது வேடீடர்பபின் பீபாயினுன் - மீட்டுங்

பெதும்பை.

கூஎஉ ததுமபு மணிக்குழைமீதா டாம்வருடி யாடத்
ததும்புகொடி டீபானுமொரு தையற் - பெதும்பை

கூஎக யலரும் பருவ மடித்தென்று மைந்தர்
பலருமெதிர் பார்க்கவொளிர் பைமபீபா - திலகுமெழின்

கூஎச மாட மிசைத்தவழு மாமுகிலின் மீறுற்றங்கண்
டாடமனங் கொளஞு மழுகுமயி - னீடுகடல்

கூஎடு கூடிக் கடைநாள் குடநின்றுங் மீதவர்கலந்
தேடிப புகுதாத தெள்ளமுத - நீடுசெண்பை

கூஎசு நாட்டிறைவ னுசெண் ணகத்தமண சைச்செயல்பீபாற்
கூட்டிமுடித்த குழலினுள் - வேட்டுவஞ்ச

கூஎஎ முந்து களவு முனிவுங் குடிபுகுந்த
வந்துவந்து பார்க்கும் வரிவிழியா - ணந்து

கூஎஅ கறியமைத்தார் தள்ளுங் கருவேப் பிலைபோ
லெறிகுதம்பைக் காதி னியலா - ளரிகயத்தின்

கூஎக கொம்பு விவளிப்படன்முற் கூர்முனை தோற்றுதல்போல்
வம்பு முலைதோற்று மார்பினு - மைம்புபல

கூஅ0 பூமாலை சூடுதற்கும பூணுரப் பூணுதற்கு
மாமாலை தாக வமைநதுள்ளாள - காமரசப்

கூஅக பேறுங் குலமாதர் பேணுமபூ ணென்னுநாண்
வீறுஞ் சிறிதரும்பு மெய்பினு - டேறுகிலே

கூஅஉ வேளா கமத்தின் விதம்புகல்வார் வார்த்தைசற்றுங்
கேளா தவள்போலக் கேட்டமர்வா - டாளாம்

கூஅக பெரும்பகையெண் ணுதுவரை பேர்த்தான்போற் கொங்கை
யிரும்பகையெண் ணுத விடையா - ளரும்புபெருங்

கூஅச காதலுடைத் தோழியர்கள் கைகலந்து சூழ்தரமிக
காதலுடை வாவி யணைந்தாடிச் - சீதப்

கூஅடு பலமலருங் கொய்து பனிமாலை கட்டி
நிலமலரு மாதவிநன் னீழல் - குலவுபளிங்

கூஅசு காசப் படுத்தெழின்மிக் காக்கியதா னத்தமர்ந்து
சேசப் படைக்குந் திறல்படைத்தா - னேர்தான்

கூஅஎ படையா தமைந்த பரிகலங்ல் கூரு
முடையா தெதிர்ந்தமத வேங்கல் - புடையாருங்

கொம்புபட்ட போர்வை கொடுத்த தனியூரு
மம்புவிட்ட தின்மை யதுதெரிந்துஞ் - சம்பு

விடாதுவா ழூரும்விழ் வீரா ளரசு
படாதுவா ழூருமருட் பற்றுக் - கெடாது

பதியே பசுவாய்ப் பயங்கொடுத்த வூரும்
விதியேமே ணெக்குற்றம் வெய்ய - கொதிதழுக்

கன்றிப் புனற்கென் றிசையிப்பச் செய்யூரு
மன்றிமதன் மீக்குவிழுந் தாமூரு - நன்றிதரு

தண்டீசர்ப் போற்றியடி தாழ்ந்தபின்னும் வெவிரூருவர்க்
கண்டாய்விற் போற்றவருள் காவூரு - மண்டிப்

பிறந்தார் பிறவாத பேரூரு நாளூ
மிறந்தா ரிறவாத வூருஞ் - சிறந்தநலத்

தாட்டை விரும்பி யடுபுலியு மாடரவு
மோட்டை படாம லுறையூரு - மேட்டைதவிர்

கன்னியொரு பாற்கலந்து காலில்கட கம்புனைந்து
மன்னியிட பத்து வரைத்தனுக்கொண் - டுன்னியொரு

தம்பத் துதித்தசிங்கத் தான்றருமுட் சாத்தணிவார்
கும்பத் துதித்த குலவூரு - நம்புபொறை

யாதியடை யானு மரிக்கரிய செங்கமலப்
போதியைய மார்பேற்கப் பூட்டிருஞ் - சோதிமணி

வாய்திறந்து பாடி மனியம் மணிகொண்டு
தாதியசோ டாடுஞ் சமயத்தி - லோதி

மழையணைய வோரணங்கு வந்து பணிந்து
கழையணைய செஞ்சொற் கனியே - விழையு

மொருபாற் பசப்பா யொருபாற் சிவப்பா
யிருபா லுமொன்றி னியையும் - பெருமான்

கொடுங்கோளூர் மேய குழகன் கொடுமை
விடுங்கோ ளியுமமர் மேலோ - னெடுங்கா

விடைச்சுரத்து வாழ்வா னிடைமருத மேயா
னடைத்துதிருத் தேரணித்தே ணண்ணிற் - றடக்கியெழு

சேவிக்க வம்மெனச்சூழ் சேடியர்க ளோடெழுந்தா
ளாவிக் கினியான்மு னண்மினு - மேவியொடு

வீற்றிருக்குங் கோலம் விழிகுளிரக் கண்டுவீ
யேற்றிருக்கு மங்கை யிணைகுவித்தா - லூற்றிருக்கு

முள்ளங் குழைய வொருத்தியிவர் பாலமர்ந்தாண்
மெள்ள வவளார் விளம்பென்றுள் - கள்ளமிலா

சoசு மாதேத யீனத்தும் வருந்தாது பெற்றவணு
மாதேய மற்றவளே யாதாரங் - கோதேதயா

சoஎ வண்ணியவ ளேயுலகுக் காக்க மெனக்கோடி
பின்ணியது நாம்பெற்ற பேறுகா - ணென்ன

சoஅ வெண்ணியு மருகே யிருக்கவைப்பீ ரென்னப்
புணியு மலர்க்குழலார் பூவாய் - நிணியுந்

சoகூ தரமோவத் தாயர் தமக்கேயல் லாதப்
புரமேவ யார்க்குப் பொருந்து - முரமேவ

சகo நீயருகு மேவுவையே னீடுலகி னுகமெலாம்
மேபாயவர்பூ ணுகிப் பொலியுமே - துயமன

சகக மானக்கஞ் சாறர் மகள்கோதை யன்றிமற்றோர்
தேனக்க கோதைகளுஞ் சென்றேறி - மேனக்க

சகஉ பஞ்சவடி யாமே பசிவொருத்தர் கல்லன்றி
விஞ்சவெவர் கற்களுமெய் மேவுமே - துஞ்சு

சகங மிருவ செலும்பன்றி யெல்லா செலும்பும்
பொருவரிய மேனி புகுமே - மருவுகிலே

சகச வேடனெச்சி லல்லாது வெங்கா னுழலுமற்றை
வேடசெச்சி லும்முணவாய் மேவுமே - நாடுமறை

சகஞ நாறும் பரிகலம்போன் ஞாலத்தார் மண்டையெலா
நாறும் பரிகலமா கண்ணுமே - தேறுமொரு

சகசு மான்மோ கினியாய் மணந்தபோன் மற்றையரு
மான்மோ கினியாய் மணப்பரே - நான்மறைசொல்

சகள வல்லா னவணியன்றி மாலா தியபசுக்க
ளெல்லாம் பிசம மெனப்படுமே - வல்லார்

சகஅ திருவருட்பா வேறுலகிற் சேர்பசுக்கள் பாவுந்
திருவருட்பா வென்னச் செலுமே - பொருவா

சகக வசமணிமா டத்தா வடுதுறைவா ழுஞ்சுப்
பிசமணிய தேசிகன்போற் பேண - வசனமையா

சஉo வெல்லாரு மெய்க்குசவ ரென்று வருவாரே
நல்லாயென் சொனனுய் நகையன்றே - சொல்லாதே

சஉக யோலியிட்ட வள்ளே யொருத்திபோன் மாதவத்தான்
மாலியிட்டா யோநீ மறவென்ன - மாலே

சஉஉ யிடுவேனிப் பேதென் றெழுலு மூருகர்
தொடுமாலே யன்றே சுமக்க - வடுமாறில்

சஉங வேழஞ் சிதைத்ததுகொன் மேதகுமூக் கோர்மயிற்குத்
தாழவரி வித்துச் சமைந்ததுகொல் - வாழி

சுஉச திருமான் முகத்திற் றிருக்கா யதுகொல்
பொருமானின் கைத்தொடையிற் பூண்பூ - வெருவாத
சஉஙி கண்ணப்பர் பாதங் கமழ்செருப்புத் தோயுமென
வெண்ணப் படுவ திதற்குண்டோ - கண்ணன்முழங்
சஉசூ தாளில் விசயன்முன்னுட் சாத்தியபூ வோவிந்த
நாளினின்கை மாலை நறியபூ - வாளா
சஉள விருத்தியென்று ளெண்ணியது மிப்படியோ வென்று
விருத்தியுறச் சென்றமன மீட்டாள் - பொருத்தி
சஉஅ மடக்கினுன் வின்னுண் மதவேள் சினத்தை
யடக்கினுன் றேர்ப்பி னடைந்தான் - விடற்கரிய
சஉக செங்கைநடத் தாரப்பாற் றேர்செலுத்தல் கண்டந்த
நங்கைமனை நேரக்கி நடந்தாளோர் - மங்கை

ம ங் ை க.

சஙO திரையிற் பிறவாத தெள்ளமுத மோங்கல்
வரையிற் பிறவா வயிரங் - தரையிற்
சஙக பிறந்த மதியமைந்தர் பேராசை கொள்ளச்
சிறந்த பசுங்காம தேனு - வுறந்த
சஙஉ புரிகுழல் கட்டவிழ்க்கும் போதா டவர்த
மரிய மனமுங்கட் டவிழ்ப்பா - டெரியமுடி
சஙங செய்துமலர் சேர்த்துச் செருகும்போ தேதபனித்தல்
செய்யுயிருஞ் சேர்த்துச் செருகுவாள் - வெய்யவிட
சஙச முண்டா னுமிழ்ந்தான்கொல் லோவென்று மால்பிரமன்
கண்டா னடுங்குமிரு கண்ணினு - டண்டாமை
சஙஞ கொண்டமைந்தர் நெஞ்சங் குடிபுகுந்தா டப்பொன்னும்
கண்டதிரு வூசலினுவ் காதினு - ளண்டம்
சஙசு வனைத்தாள் கதிர்படிய மாக்களங்க மாற்றி
முனைத்தா லணைய முகத்தா - டிவைத்தபெருங்
சஙள காமரச மெல்லாங் கமழ வடைத்தகிறு
• தாமச்செப் பென்னுந் தனத்தினு - ணுமமறத்
சஙஅ தன்னை யறிந்துபசந் தானேயென் பான்பொருவத்
தன்னை யறிந்து தருக்குவாள் - கொன்னை
சஙக பெருத்து முலைகணமைப் பின்பு வருத்தத்
திருத்துமெனத் தேர்ந்த விடையாண் - மருத்துப்
சசO பொதியமலை நின்றுவரப் போயேற்பாள் பின்ன
ருதியமைதீப் போல்வ தணைரான் - மதிய
சசக மெழுந்துவரக் கண்டுவப்பா லீதே வடவைக்
கொழுந்துபொரு மென்றூட் குறியாள் - செழுந்தரளக்

சசஉ கோவை புணர்த்து குவட்டருவி யொத்ததென்று
பூவை பொருத்திசொலப் புத்திசெய்வா - டாவிக்

சசங கைகட வாத கடல்போல வண்ணை
யுரைகட வாமே யுறைவாள் - வரையின்

சசச பகையிற்றி ராணி பணைமுலைதாய் காலந்
தகையினுளங் கொள்ளுந் தகையா - ணைகைசெய்

சசடு மணைமுகப்பி லெண்ணின் மடவாரோ டெய்தி
நிணையு நிலைமுற்ற நின்று - புனையு

சசசு முலைப்பகை யாகி முளைத்த துணர்ந்து
தலைப்பகை கொண்டுசெங்கை தாக்கு - நிலைப்பென்னப்

சசள பந்தடித்து முத்தம் பலமுகத்து நின்றுதிரச்
சந்தத் தனத்துமுத்தந் தாம்பிறழு - நந்த

சசஅ வினையாடு மோதில் விருப்புதாய் வந்து
வினையாடு செங்கைமட மாதை - யினைய

சசக ரியங்கு தலைமாற்று மெண்ணிமா மேலாய்
வயங்கு துறவுமடி யாதா - யயங்கொள்

சடுO கருப்புவில்லி காணிற் கனகமய மான
பொருப்புவில்லி யோடு பொரவோ - விருப்பார்

சடுக திருமங்கை கண்டறிஞர் செந்நா வகத்த
மருமங்கை யாதன் மதித்தோ - வருமந்த

சடுஉ பொன்மேன மணியே புறமேவ பசுமயிலே
மின்னேயிவ் வாடல் விடுகென்ன - வந்நேர

சடுங மண்டம் புவன மனைத்தும் விளராமற்
கண்டங் கறுத்த கருணையான் - பண்டு

சடுச வெருவருமா லாதிவிண்ணோர் மெய்வலியெ லாஞ்சிற்
றிருதுரும்பு கொண்டளந்த வுப்பன் - பெருவரையைப்

சடுடு பண்டு குழைத்த படிகருதா தம்மைசெங்கை
கொண்டு தழுவக் குழைந்தபிரான் - மண்டுபுலா

சடுங வேங்கொடுக்க மாட்டாதென் றெங்கட் குரைத்தொருவர்
தாங்கொடுக்கும் போதெல்லாந் தானுண்டா - னீங்கிடுமின்

சடுள பொன்மேனி மாதர் புணர்திறத்தை யென்றுரைத்துத்
தன்மேனி யோர்பாலோர் தையல்வைத்தான் - பன்மாடக்

சடுஅ கூடல் வழுதியடி கொண்டு பலவுயிர்க்குஞ்
சாட லமையாத் தழும்பளித்தா - னூடு

சடுங மொருவன் றலையை யுகிராற் றடிந்து
பொருவில்கழு வாயெவர்க்கும் பூட்டுந் - திருவ

சகூ0 னறிந்தடிமை செய்வார்பொன் னுடையுடுக்கச்
செறிந்தசிறு தோலுடுக்குஞ் செல்வ - னறந்தழைய

சகூக வெல்லா மூடையா னிறத்தல் பிறத்தலிவை
யில்லானென் றெல்லாரு மேத்தித்திப்பான் - வல்ல

சகூஉ விடைமருத வாண னிமைக்குங் திருத்தே
ரடையவணித் தேதகண் டீணந்தாள் - புடைவிரவு

சகூங தையலா ரோடு தடங்கைகுவித் தாண்மா லு
மையலார் மேமனி வனப்புணர்ந்தா - னேயோ

சகூச மூளையாத காம முளைத்ததுசெங் கைவில்
வளையா மலர்செரிந்தான் மார - னினையா

சகூடு ஞடுக்கை நெகிழ வுறுவளைகை சோர
விடுக்கை யடைந்து மெலிந்தாள் - கடுக்கை

சகூஞ புனைவான் கடைக்கண் பொருத்தினன் போல
நினைமூர றேற்றி நெடுந்தேர் - தனையப்பா

சகூள லுந்தினன் வேளுமுடன் றொன்றுபத்து நூறுமேற்
சிந்தினு னுகிச் செருச்செய்தான் - முந்தித்

சகூஅ தலையமைந்த தோழியர்கைத் தாங்கத் தளரு
தலையடைந்தாண் மாளிகையுட் சார்ந்தா - னிலைநின்று

சகூக காதள வோடுங் கருங்கண்ணு செல்லாருஞ்
சீதள மெல்லாஞ் செயப்புகுந்தார் - போத

சளி0 வவைக்குப் பொறளா யயர்தல்கண்டு காமச்
சுவைக்குத் தகுதோழி சொல்வா ளெவைக்குந்

சளக தகச்செய்தா னீங்குந் தகாமைசெய்தாற் பெண்கா
ணகச்செய்வ தாகு நலமோ - மிகப்படித்த

சளஉ மாந்தளிரை நீக்கி மகாலிங்க மேயமரு
தாந்தளிரைச் சேர்த்தா லறமுண்டே - காந்த

சளங வணிதரளம் போக்கி யமரர்பெரு மான்கண்
மணிபுனையிற் சாந்தம் வருமே - பிணிசெய்

சளச பனிநீரைப் போக்கிப் பரமர்சடை மேய
பனிநீரைப் பெய்தல் பயனே - கனிசுந்

சளஞ தனம்போக்கி யையர் தவளப் பொடியின்
மனம்போக்கு மின்மறுக்க மாட்டாள் - சினந்த

சளசு பலமொழியா லென்ன பயன்மருத ரென்னு
நலமொழியே யென்று நவில்வீர் - குலவுசெய்ய

சளள வாம்பன் மலரை யகற்றி யமையமரு
தாம்பன் மலரை யணிந்திடீர் - மேம்படிவை

சஎஅ யல்லாற் பிறிதுசெய லத்தணியுந் தக்கன்மக
மொல்லாதே யாயதிற மொக்குமே - யெல்லா

சஎகூ மறிவீரென் றோத வறைந்தமொழி யெல்லாஞ்
செறிமேகாய் மருந்தாய்த் திருந்த - வெறியார்

சஅ0 தடந்தார்க் குழலியுயிர் தாங்கி யமர்ந்தாள்
விடந்தா னெனப்பொலியும் வேற்கண் - மடந்தைவலி

ம ட ங் ை த.

சஅக மூற்றிச் சிலைவேண் முதுசமரா டற்குயர்த்த
வெற்றிக் கொடியின் விளங்குவாள் - பற்றுமல

சஅஉ ரைங்கோ லுடையா னரசு நடாத்திக்கொள்
செங்கோ லணியபெருஞ் செவ்வியா - டிங்கட்

சஅங ருடையான் மகுடமெனுங் கொங்கையளன் ஞனே
யுடையா னெனப்புகறற் கொத்தா - ளிடையா

சஅச வணிய னினிதமரு மத்தாணி யென்னுங்
கணிகிகரி லல்குற் றடத்தாள் - புணியுங்

சஅடு கிழக்குமுத லெத்திசையிற் கிட்டினுஞ்சோர் வித்தாள்
வழக்கறக்கும் பார்வை வலியாண் - முழக்கறிவி

சஅசு னேய்ப்பெய் தூறுமுனிவ செல்லார் தவங்களையும்
வாய்ப்பெய் திடுங்கவவு வாணகையாள் - பார்ப்பினிய

சஅள வோதியாஞ் சைவலத்தா லொண்முகமாக் தாமரையாற்
கோதியலா மைக்கட் குவளையா - லாதரச்செவ்

சஅஅ வாயாங் கழுநீரால் வண்காதாம் வள்ளையா
னேயார் கபோலமெனு நீர்நிலையா - லேயு

சஅசு மதரமாஞ் செங்கிடையா லங்கழுத்தாஞ் சங்கால்
பொதியுமுலை யாம்புற் புதத்தா - லிதமாய

சகூ0 வுந்தி யெனுஞ்சுழியா லொத்தமடிப் பாமலையாற்
சந்தி பெறுமுழந் தாண்ணுண்டா - லுந்துகணைக்

சகூக காலாம் வராலாற் சுருதப் பொலிந்நபுறங்
காலா மொளிர்பொற் கமடத்தா - லேலாவெங்

சகூஉ காமவிடாய் பூண்டு கலங்கா டவர்மூழ்கி
யேமமுறும் வாவி யெனப்பொலிவா - டாம

சகூங மணிநிலா முற்றத் தளவிலார் சூழ
மணிநிலா வெண்ணகையாள் வைகிக் - கணிதமறத்

சகூச தூன்றுபன்மே லண்டத் தொகையுங் கடந்தப்பாற்
சென்று பொலியுங் திருமுடியு - மொன்றுதிற

சகூடு லென்று மதியுமிவை யென்னப் பகலிர
வென்றும் விளக்கு மிருவிழியு - நன்றமைய

சகூசு மும்மை யுலகு முகப்பவே தாகமங்கள்
செம்மை யுறவிரித்த செவ்வாயு - மம்ம

சகூள வடுக்கு மிரவு மவிரும் பகலு
முடுக்குமவ்வளி வீசுமென் மூக்குரு - தடுப்பரிதா

சகூஅ யெந்தப் புவனத் தெவர்கூறி னுமஃ
தந்தப் பொழுதேயோ ரஞ்செவியு - முந்தவரு

சகூக காவருங்கூற்றடங்கு காரா கிருகமென்று
தேவர் பரவுந் திருக்கழுத்து - மேவு

கூ00 பெருந்திசைப்போக் கன்றிப் பிறிதில்லை யென்னப்
பொருந்தி வயங்கும் புயமுந் - திருந்திய

கூ0க விண்ணுலகுங் கீழுலகு மேல்கீழு மாகவைத்து
மண்ணுலக மேயாய் வயங்கையு - நண்ணு

கூ0உ மெழுபா தலமு மிகந்துமால் கண்டு
தொழுமா றிலாத்தாட் டுணையு - முழுதாள்வோன்

கூ0ங மன்னு மிடைமருத வாண னருட்பெருமை
யுன்னுந் திறத்தா லொருத்தியைப்பார்த் - தென்னை

கூ0ச யிடைமருதென் றோது மிதன்பெருமை யாரே
யடைய வகுப்பா ரணங்கே - யுடையவரே

கூ0கூ பேணு மருதின் பெருமை யெவருரைப்பார்
காணுந் தரமில் கயிலைகாண் - பூணுமன்ப

கூ0ஃ செல்லாரு நாவரச ரென்ன வடநாட்டிற்
செல்லா திருக்கத் திருந்தியதா - னல்லா

கூ0எ யிதுகண்ட நாமற் றெதுகாண்டல் வேண்டு
மதுகண் டவரா யமைந்தேஞ் - சதுர

கூ0அ ருருத்திரர்க ளோர்பன் னெருகோடி யாரும்
பொருத்த முறவந்து போற்றுந் - திருத்தகுசீ

கூ0கூ ரிந்தத் தலமேய தித்தல மான்மியமற்
றெந்தத் தலத்திற் கியைந்துளது - நந்த

கூகo விழிதலீ யொன்றீனக்கை யேந்தியொரு வேந்த
னழிதுயர் பூண்டதெங்கென் முயா - யிழிதருநாய்க்

கூகக கட்டங் திருமுற் கலப்பதோ வென்றிறைகை
யிட்ட முடனெடுத்த தெத்தலத்தில் - வட்டமதில்

கூகஉ சூழுமது ராபுரியிற் முட்ட பழிதீக்கி
வாழும் படிபுரிந்த மாத்தலம்யா - தேழுலகும்

கூகங போற்றுமொரு தன்னுருவைப் பொன்னுருவி னிற்புகுத்தி
யேற்றும் பெருமையுற்ற தெத்தலங்காண் - கூற்றமஞ்சு

௫க மிந்தத் தலத்துதிக்க வெத்தவஞ்செய் தோமென்று
சந்தக் குயின்மொழியா டானுரைத்து - நந்தக்

௫கரு களிக்கும் பொழுது கசிந்தார்க்கே யின்ப
மளிக்கும் பிரான்றே ரணுக - வெளிக்கணந்த

௫கூ மாதரொடும் வந்து வணங்கினுள் காண்பார்க்கு
மோத மளிக்கு முகங்கண்டாள் - காதற்

௫க எ திருத்தோளுங் கண்டா டிருபார்புங் கண்டாள்
பெருத்தாண் மயக்கம் பெருவே - ளுருத்தான்

௫கஅ பலகணிதொட் டெய்தானப் பைங்கொடிதான் சோர்ந்து
சிலதியர்மேல் வீழ்ந்து திகைத்தா - ளலமருவா

௫ககூ ளென்னீ யுடையா னிவள்செய்கை கோக்காணுய்
நன்னயத்தே ரப்பா னடத்தினுன் - பின்னீத்

௫உ0 தொடர்ந்து செலுமதனன் றேரைமேற் பல்லே
வடர்ந்து செலப்பெய் தகன்றூன் - கிடந்தவளாய்ச்

௫உக சோருங் கருங்குயிலைத் தோழியர்கள் கைத்தாங்கிச்
சாரு மணியிற் றகப்புகுத்தி - நேரு

௫உஉ மலரணையின் மேற்கிடத்தி யான்ற பனிநீ
ருலர்தர மேன்மேலு மூற்றிக் - குலவுநறுஞ்

௫உக சாந்தமுங் கோட்டித் தகுசிவிறிக் காற்றெழுப்பக்
காந்துவது கண்டு கலங்கினுண் - மாந்தளிர்மு

௫உச ஞயவுப சார மணைத்துஞ் செயலொழிமி
னேயமுள தேலென்பா னீவீரென்று - தூய

௫உரு மணிவாய் திறந்தாண் மருதமே யும்மைப்
பணிவாருக் கீதோ பயன்கா - ணணியல்

௫உசு சடைமே லதுகொடித்தாற் றத்துதிரைக் கங்கை
விடைமேலீர் தும்மை வெறுப்பா - ளடையு

௫உள மிடத்தீதோ ளதுகொடித்தா லெவ்வுலகு மீன்ற
மடப்பாவை கோபதுமை வாட்டு - மடித்த

௫உஅ வலத்தீதோ ளணியன் மருவ வளித்தாற்
சொலத்தா னெருவருணீடோ சொல்லீ - ருலத்துயர்தோள்

௫உக வெய்ய சிலையாரூன் மென்றுமிழ்வ தாயிருந்தாற்
செய்ய மணிவாய் திறந்தருள்வீ - ரையமே

௫உ0 யார்த்தார் கழைவண் டமைத்தொரு பூத்தொடுக்கப்
பார்த்தா லலவோகண் பார்த்தருள்வீர் - சீர்த்தகதிர்

௫உக பன்மோதி னீருயிரைப் பாற்றிவெ லென்றுதலை
கன்மோதி னலன்றே கைதருவீர் - நன்மையெனுங்

நிஈஉ கோளெறிந்த தந்தை கொடிவிணையை நோக்கியவன்
மூளெறிந்த போதன்றே தாரருள்வீ - ராளும்

நிஈஊ பிரியமுடை யிசென்று பேரருள்செய் வீரென்
றிரியுமுயிர் தாங்கி யிருந்தா - ளரிவை

அ ரி வை.

நிஈச யிளையான் குடிமாற செய்ப்பொழிப்பான் சென்று
முளைவாரும் போதுகிர் மோகம் - விளைகுழலா

நிஈஎ நேடவர்க்கூ றுக்கினரைத் தேர்வலெனுங் கண்ணப்பர்
கோவச் சிலைநேர் கொளுநுதலாள் - காவற்செய்

நிஈஏ நெல்லுண்டாள் பாலுண்சேய் நீக்கலற மென்றேற்றூர்
கொல்லுண்ட வாள்போற் கொடுங்கண்ணுள் - சொல்லரசர்

நிஈள பேரால்ப் பூதிப் பெயரா ரமைத்ததடத்
தேரா ரும்வள்ளே பெனுஞ்செவியாள் - சீரார்

நிஈஅ கணநாதர் நந்தவனக் கட்சண் பகம்போன்
மணநாறு நாசி வடிவாள் - புணருமருள்

நிஈக வாயிலார் தொன்மயிலே வரித் துறைப்பவளச்
சேயிலார்ந் தேதாங்குகுணச் செவ்வாயா - ணேயமுற

நிசO முன்னங்கண் ணப்பர் முறித்தமைத்த கோற்றேனி
வின்னஞ் சுவைகூரு மின்மொழியா - ளன்னம்

நிசக பயில்கட ஞகையதி பத்தர் துறையிற்
பயில்வெண் டாளமெனும் பல்லா - ளியலருளப்

நிசஉ பூதியார் முன்னம் புரிந்த தடக்கமலச்
சீதா தியா மென்னச் சுடர்முகத்தா ; ளாதியருட்

நிசஈ சம்பந்த மேவவொரு தண்டீச னுர்நிறைத்த
கும்பந்தா மென்றேறத்து கொங்கையாள் - வம்பவிழ்தா

நிசச ராஞயர் முன்ன மரிகெதித்துக் கொண்டவே
யேயாமென் றேறு மிணைத்தோளா - ளாஞத

நிசஎ மூல ருறையநிழல் முற்றக் கொடுத்துவப்பி
ஞலசின் பத்திசம்போ லல்குலாண் - மேலா

நிசஏ யிலகியசம் பந்தசோ டேற்ற வமணர்
குலமெனத் தேயுமருங் குல்லா - ணலவரசாஞ்

நிசள சிட்ட ரமுதுசெயத் திங்களூர் நாவரசு
தொட்ட கதலித் துடையினு - ளிட்ட

நிசஅ மடித்த வதிபத்த ரங்கை யெடுத்து
விடுத்தவரால் போற்கணிக்கால் வீரூண் - மடுத்தவருட்

நிசக கண்ணப்பர் கையிற் கலந்ததவ நாய்நாவின்
வண்ணப் பொலிவின் வருபதத்தாள் - வண்ணஞ்

நிறு0 சிறக்கு மொருசித் திரமண்ட பத்தி
னிறக்குங் குழலார் நெருங்கப் - பறக்கு

நிறுக மளியினங்கள் பல்ல வளகத் தலம்பக்
களிமயிலிற் சென்று கலந்து - தெளிய

நிறுஉ விருக்கும் பொழுதோ செழில்விறலி வந்து
பருக்குமுலை யால்வணங்க பண்பின் - முருக்கிற்

நிறுங சிவந்ததா டாழ்ந்து திருமுன்னர் நிற்ப
நிவந்த கருணையொடு நேர்பார்த் - துவந்து

நிறுச வருபாண் மகளே வடித்தகொலை வீணை
யொருவாது கொண்டருட்பே றுற்றூர் - திருவாய்

நிறுநி மலர்ந்ததிருப் பாட்டணைத்தும் வாய்ப்பப்பா டென்ன
வலர்ந்த முகத்தி னவளு - நலந்தழையும்

நிறுசு பத்தர்யாழ்ப் பேர்வையப்பாற் பாற்றி யெதிரிருந்து
வைத்த நரப்பு வளந்தெரிந்து - புத்தமுத

நிறுள வெள்ளம் படர்ந்தென்ன வேணுபுர நின்றெங்க
ளுள்ளம் படர்ந்த வொருதமிழும் - பள்ளப்

நிறுஅ பரவை சுமந்தமணர் பாழியிற்கல் வீழ்த்தா
தரவை யடைந்த தமிழு - முரவங்

நிறுக குரித்தவா ரூர்த்தெருவிற் கூற்றுதைத்த கஞ்சஞ்
சரித்திடச் செய்த தமிழும் - பரித்தவுயிர்

நிசு0 தன்னடியே வேண்டத் தருபரமற் கோர்வழுதி
தன்னடி வாங்கித் தருதமிழு - மன்னுபொது

நிசுக வாடி யருளி னமர்தலங்கட் கொவ்வொன்றுப்
பாடி யருளியவெண் பாத்தமிழு - நீடியதோர்

நிசுஉ பேயேயென் றோதப் பிறங்கியு நம்பெருமான்
றூயேயென் றோதத் தருதமிழு - மாயோர்பா

நிசுங னீங்க லரிய நெடுந்தகைநீங் காதமரு
மோங்கன் மிசையே றுலாத்தமிழுந் - தேங்கரும்பி

நிசுச னுற்றோ தரிதா முறுசுவையோ பற்றறுப்பார்
பற்றோவென் றோதுமிசைப் பாத்தமிழு - முற்றுமருள்

நிசுநி பூண்டுவாழ்த் தோதும் புராணன் விருப்புறப்பல்
லாண்டுவாழ்த் தோது மருந்தமிழும் - வேண்டு

நிசுசு பிறவுமெடுத் தோதப் பெருமருத வாணற்
குறவு நனிசிறந் தோங்கத் - துறவு

நிசுள சிதைக்கும் விழியாள் சிறந்தமருங் காற்கூற்
றுதைக்குந் திருத்தா ளுடையான் - பதைப்புற்

௫௮ அ றதிரோதை யிற்பல் லீனத்துங்கொட் டுண்ணக்
கதிரோன் முகத்தறையுங் கையா - னெதிராகின்

௫௯ றெள்ளுந் திறம்படைத்த தென்னென் றருதலையைக்
கிள்ளுந் திறம்படைத்த கேழுகிரான் - புள்ளுமொரு

௫0 மீனவிழி சூன்ற விரலான் றிரிபுரங்கள்
போன வெனப்புரியும் புன்னகையான் - வானம்

௫௧ வழுத்து மிடைமருத வாணன்றேர் தேதமாப்
பழுத்து விளங்குமவட் பம்ப - வெழுத்து

௫௨ முலையா ளெழுந்துதிரு முன்ன ரடைந்தாண்
மலையா ளெனுந்தாயை வாமத் - தலையாள்

௫௩ பெருமான் றிருவுருவம் பெட்புற்றுக் கண்டா
டிருமா னெருத்திகொலோ செய்தா - ளருமைப்

௫௪ பெருந்தவ மென்றுள் பெருமூச் சுயிர்த்தாள்
வருந்தமத வேள்விடுக்கும் வாளி - பொருந்தாளாய்

௫௫ கேரே தொழுது நிலைவை வருத்துகவென்
றூரே சுமப்பா ரறைதிரே - பாரறிய

௫௬ வன்றுதைப்த் தாசென் றறைவா ரதைப்புதுக்க
வின்றுதைப்த் தால்வருவ தெப்பதிபோ - குன்று

௫௭ குழையக் குழைத்தகிறங் கொள்ளமுலைக் குன்றுங்
குழையக் குழைக்கினன்றே கூடுங் - கழைமதவே

௫௮ ளங்க மெரித்தீ ரவன்கீலா ணம்பாய
வங்க மெரிப்பதனுக் காற்றீரோ - பொங்குவளி

௫௯ யம்பு புணர வமைத்தீர்தென் காற்றைமத
னம்பு புணர வமைந்திலீ - ரம்பு

௬0 புணரினது வேறுகிப் போழுமோ மேனி
யுணரி னலீதெவருக் கொப்பாங் - குணமிலா

௬௧ வந்தக் குரண்டத் திறகமைத்தற் காயசடை
யிந்தக் குயிலிறகை யேலாதோ - மூந்தத்

௬௨ தனிதீ ரடக்குஞ் சடாமுடியில் வெய்ய
பனிதீ ரடக்கப் படாதோ - முனிவிடமா

௬௩ மன்ன விருளே யடக்குந் திருக்கண்ட
மின்ன விருளடக்க வெண்ணுதோ - சொன்னமைக்கு

௬௪ வாய்திறவீர் பூம்புகார் வாழ்வணிக ரில்லத்து
வாய்திறவீ ரென்னின் வருந்தீமேன - மாயவனூர்

௬௫ கண்ணேச் சுமந்த கழற்காலீர் செண்ணிமேற்
பெண்ணேச் சுமந்தென்ன பேதைமைகாண் - மண்ணேமுழு

நிஅசு தூண்ணும்விடை யீரென் றுரையாடி நிற்கும்போ
தெண்ணு முடையா ரிளநகைசெய் - தண்ணுகன

நிஅள கத்தீதரை யப்பாற் கடாவினு டப்போது
முத்தேர் நகைமாது மூர்ச்சித்தாள் - சித்தம்

நிஅஅ பருவந் தழிதருங்காற் பாங்கியர்க டாங்கித்
திருவந்த மாளிகையிற் சேர்த்த - மருவந்த

நிஅக பாயற் கிடத்திப் பசுஞ்சாந் தளாய்ப்பனிநீ
ரேயப் பொருத்தியிருந் தெல்லோரு - நேயத்

நிகூ0 திடைமருத வாண னிடைமருத வாண
னிடைமருத வாண னெனலு - மடையு

நிகூக மரிவை யுயிர்தாங்கி யாற்றியொரு வாறு
பரிவை விடுத்தமர்ந்தாள் பைப்பூட் - டெரிவைமறை

தே ரி வை.

நிகூஉ வாசியான் கண்டம் வதிவகைநூற் றேமணிநெய்
பூசிமுடித் தன்ன புரிகுழலாண் - மாசிலொளிப்

நிகூங் பாதி மதியம் படர்சடைநீத் திங்கமரு
நீதி யெவனென்னு நெற்றியா - ளாதிநாள்

நிகூச விண்ட கமருள் விடேலென் றெழிலீதாற்றக்
கொண்ட வடிவகிர்போற் கூர்ங்கண்ணு - ளண்டமுழு

நிகூடு தீன்றவொரு பாற்கை யெடுத்தமல கைத்துளொன்றுய்த்
தேன்ற விளங்குஞ் சுடர்முகத்தா - ளான்ற

நிகூசு நெடிய கடற்புகுந்து நீள்வலீவீ சிக்கொள்
கடிய சுறுத்தலேபோற் காதாண் - முடிவிற்

நிகூள குருவடிவங் கொள்ளக் குறித்தடியர் சாத்து
மருமலரே போலுஞ்செவ் வாயா - ளொருவரிய

நிகூஅ தன்போல் வெறுதுமதன் றன்னிணைன் றேறிவறுத்த
கொன்பூ வணைய கொடிமூக்கா - ளன்பர்வரு

நிகூக நாண்மூன் குருகாஞர் நன்கமைத்த நீர்நிலையே
காணென் றுரைக்குங் கபோலந்தாள் - யாணரிசை

கூ00 மூட்டு மிருவர் முயன்றமர்தா னத்தழகு
காட்டுங் குழைபோற் கழுத்தினு - ணீட்டுமொரு

கூ0க முத்தென் றுரைக்க முயன்றுதணீ யின்றதா
யொத்த தெனவுரைக்கு மொண்டோளா - ளத்தவுடம்

கூ0உ பேத்தமிளிர் பச்சை யினிதளித்த தானத்துப்
பூத்தசெய்ய காந்தள் பொருஉங்கையாள் - கோத்தபெரு

கூ0ங வெள்ளத்துத் தற்றோற்ற மேன்மிதந்த கும்பமென்றே
யுள்ளத் தகும்போ ஞளிர்முலையாள் - வள்ளற்

௯0ச நரத்தின் மரீஇய தனக்குநிழ னல்கான்
மரத்தினிலை போலும் வயிற்றுள் - புரத்தின்

௯0ரு மடங்கூர் முனிவர் மடிக்கவிட்ட பாம்பின்
படம்போ லகன்றநிதம் பத்தா - டடங்காமர்

௯0க வாழ்வளங்கூர் நீலி வனத்தி னிழல்கொடுத்துச்
சூழ்கதலி யென்று சொலுந்துடையா - ளாழ்கடல்சூழ்

௯0எ வையம் புகழ்காஞ்சி வைப்பினிழற் றுஞ்சுதச்
செய்யதளிர் போற்சிவந்த சீறடியாள் - பையரவ

௯0அ வல்குண் மடவா ரளவிலர் தற்சூழ்ந்து
புல்கும் வகையெழுந்து பொம்மன்முலை - மெல்கு

௯0ஃ மிடைக்கிடுக்கண் செய்ய விலங்குமணிப் பந்தர்
படைத்தநிழ லூடு படர்ந்து - புடைத்த

௯க0 விளமாம் பொதும்ப ரிடைக்கனகத் தாற்செய்
வளமாருங் குன்ற மருவி - யுளமார்

௯கக விருப்பி னமர்ந்துவளை மின்னுருட் கொங்கைப்
பருப்பதத்தேசார் தேதாழிமுகம் பார்த்துத் - திருப்பதத்தான்

௯கஉ முன்ன மருக்கன் முடிகிணைரித் தார்பச்சை
யன்னங் கலப்புற் றமரிடத்தார் - சென்ன

௯கங வரைகுழைத்தா ராடல் வரம்பில்லே யேனு
முரைசிறக்குஞ் சில்ல வுரைப்பா - மரைமலர்க்கண்

௯கச விண்டு பணிந்திரப்ப வேதாவைக் காதலனுக்
கொண்டு மகிழ்தல் குறித்தளித்தார் - வண்டு

௯கரு படிமலரோன் முழ்ந்திரப்பப் பைந்துழா யண்ண
னெடுமகவாய்த் தோன்றுவர நேர்ந்தார் - வடிவின்

௯கஎ மலரொன் றெடுத்திட்ட மாரவேண் மேனி
யலர்செந் தழலுக் களித்தார் - பலக

௯கள லெடுத்துமா டோறுமெறிந் திட்டுவந்தார்க் கின்ப
மடித்த பெருவாழ் வளித்தார் - கடுத்த

௯கஅ சிறுவிதி யென்பவன்முன் செப்புண் ணியத்தைத்
தெறுதொழின்மா பாதகமாச் செய்தா - ருறுதிபெறக்

௯கக கண்ணியதண் டீசர்புரி கைத்தமா பாதகமா
புண்ணியமே யாகப் பொருத்தினர் - திண்ணியமா

௯உ0 வென்றிக் கனக விலங்கல்குழைத் தாரொருபெ
ணொன்றித் தழுவ வுரங்குழைந்தார் - நன்று

௯உக மொருபா லொருவடிவ முற்றரென் னேமற்
றொருபா லொருவடிவ முற்றார் - வெருவாத

ச௹உ வெய்ய பகையாம் விடவரவு மம்புலியுஞ்
செய்ய சடாடவியிற் சேரவைத்தார் - வையம்

ச௹ங பழிச்சுபெரு வாழ்வு பழிச்சற் களிப்பா
ரிழிச்சுதலே யோடேற் றிரப்பார் - வழுத்துசித

ச௹ச நல்லாடை யும்புனைத னுட்டுவார் மற்றுஞ்செங்
கல்லாடை யும்புனைதல் காட்டுவார் - பொல்லாத

ச௹ஞ மாலூரு மூன்றூர் மடிய வளங்கெடுத்தார்
ராலூர் பெருகுவள நன்களித்தார் - மேலா

ச௹ட ருருத்தி செயப்பொலிய மையா றிகவா
ரிருத்திய வாறு றிகப்பார் - விருத்தி

ச௹ண மணம்வீசு கைதை மலைம மலையார்
மணமி லெருக்கு மலைவார் - குணமாய

ச௹அ பொன்னு மணியும் புனையார் நரம்பெலும்போ
டின்னும் பலவு மெடுத்தணிவார் - முன்னமா

ச௹ச றேடப் பதங்காட்டார் தேடிப்போ யாருன்
பாடற் றலைமேற் பதித்திடுவார் - நாடுமிவ

ச௹0 ராட லெவரா லறியப் படுமென்று
நாட லுடையா ணைவின்றிங்கா - னீடு

ச௹க மலைவந்தா லென்ன மருதர் திருத் தேரத்
தலைவந் ததுகண்டா டாவா - நிலைவந்த

ச௹உ வ்ண்ணமடைந் தாரின் மகிழ்ந்தாள் விளைந்தெழுந்தா
ளண்ணன்மணித் தேர்மு னணுகினு - ளெண்ணம்

ச௹ங பதிக்குந் திருமுகமும் பாரத்திண் டோளுங்
கதிக்கு மகன்மார்புங் கண்டாள் - விதிக்க

ச௹ச முடியா வனப்பு முழுதுந் தெரிந்து
கொடியா யிடைகை குளித்தா - ணெடியானு

ச௹ஞ நான்முகனு மின்னு நனுகருமெய்ப் பேரழகைத்
தான்முகந் துண்ணத் தலைப்பட்டாண் - மான்முகந்தா

ச௹ட ளந்தப் பொழுதே யடல்வேள் கழைச்சிலைநாண்
கந்தப் பகழிபல காற்றியது - முந்தித்

ச௹ண தடுமாற்றங் கொண்டா டவாமயக்கம் பூண்டா
ணெடுமாற்றம் பேச நினைந்தாள் - கொடுமை

ச௹அ மடித்தசெய லின்மருத வாணரே தும்மை
யடுத்தவெமக் கென்னே வளித்தீ - ரடுத்தநுமைக்

ச௹ச கும்பிட்ட கைம்மலர்கள் கோலவரி வண்டிழுத்த
னம்பிட்ட மாமோ நவிலுவீர் - நம்பிநுமைக்

கூச0 கண்ட விழியழகு காட்டுங் கரியழியக் [மிக்
கொண்டன் மழைபொழிதல் கொள்கைகொலோ-தண்டலின்

செந்தாகந்தவுயர்சிவலோகமதெய்துவமே. (கூஅ)

துவரவலஞ்சுழியேரகமாப்பாடிசூதத்துறை
யிவரவலஞ்சுழிகோமுத்திகாழியிலங்குதில்லை
கவரவலஞ்சுழியாரூருடனிரும்பூளைகண்டீர்
குவரவலஞ்சுழிகொள்ளிடைமாமருதன்கொளமே. (கூகூ)

கொள்ளவரையும்படருறுத்தாதின்பங்கூட்டியதா
னள்ளவரையும்பர்மேற்செய்மகாலிங்கதாருல
கெள்ளவரையும்பழிபாவஞ்சற்றிலிடைமருதர்
தெள்ளவரையுமொண்குஞ்சிதமாயதிருவடியே. (கஂ)

திருவிடைமருதூர்த்திரிபந்தாதிமுற்றிற்று.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருப்பைஞ்ஞீலித் திரிபந்தாதி.

காப்பு.

விநாயகர்துதி.

ஒருமான்கரத்துத்தரித்தபிரானயனேடுநிறங்
கருமான்முதற்சுரர்யாருங்கொண்டாடுங்கதலிவனப்
பெருமானந்தாதியுரைக்கமுக்கட்டுப்பெருகிமதம்
வருமானற்றோட்டகிப்பூட்டிருதாட்டென்வயினுளதே.

நூல்.

திருத்தாமரையிலனஞ்சேர்பைஞ்ஞீலிசிறக்கவளர்
கருத்தாமரையமர்கையாமுகில்கடிக்குங்குழலின்
மருத்தாமரையமிடவேற்றவாவிவாட்டுதலி
னுருத்தாமரைபடுவேணியின்முளவுரைத்தருளே. (க)

அருந்தவரும்பர்சூழாம்புடைசூழவரம்பைவனத்
திருந்தவரும்பலுரித்தார்புரத்திடைநாணுமடும்
பெருந்தவரும்பணிவெற்பாக்கொண்டார்பிறங்கும்புயத்திற்
பொருந்தவரும்பணிபூண்டாரின்றென்னீப்புரப்பவரே. (உ)

புரங்காவலரைமுன்செற்றுய்வெண்மேனிபொருந்தும்விடைத்
துரங்காவலர்கொன்றைத்தாராய்பைஞ்ஞீலியெந்தோன்றன்மன
மிரங்காவலநினக்கின்முதலினின்றெடுத்தவுட
றிரங்காவலமருமுன்னெனீயாண்டருள்செய்குவையே. (ங)

செய்யுந்தரம்பைக்கவா னுமைக்கண் ணுஞ்செந்தாமரைப்பூங்
கையுந்தரளநகையுமெய்யாகக்கழறும்விறலும்
பொய்யுந்தரங்கொடனமுளாளாப்புரிந்துலீவ
னுய்யுந்தரமுமுளதோபைஞ்ஞீலியென் னுத்தமனே. (ச)

உத்தமனேயென்றும்பைஞ்ஞீலியாயென்றுமொண்கனல்சே
ரத்தமனேயென்றும்வாழ்த்தறியேணியின்முண்டருள்வாய்
நித்தமனேயப்பனேயென்றலறுவர்நெஞ்சுறுவாய்
முத்தமனேகம்பொலிமுலீபாகவென்முன்னவனே. (ஞ)

முன்னந்தவம்புரிந்தேதனலனின்பதமுன்னுவதற்
கன்னந்தவம்பொலிநெஞ்சேணியோவினியாழ்விணீக
டின்னந்தவம்புக்கிடனுய்விடாதெண்ணித்தொண்டுகொள்வாய்
வன்னந்தவம்பிற்பயிலுங்கதலிவனத்தவனே. (சு)

வனக்காரிகையர்கமிணற்றுற்குநீலிவனத்தவற்கு
மினக்காரிகைப்பில்பணியணிந்தாற்குவிளம்பிழைகொ
டனக்காரிகைவனீசோர்ந்தெல்லாமுபசாரஞ்சொல்ல
நினக்காரிகைக்குஞ்சுகப்பரிமானெருங்குமுன்னே. (எ)

நெருங்குந்தனத்தியாருபாகனுரநிறைபழன
மருங்குந்தனத்திரள்சூழுங்கதலிவனத்துறைவோன்
பெருங்குந்தனத்திமுகனத்தன்மேற்சொலப்பெற்றனன்யான்
சுருங்குந்தனத்தினைப்புகழ்ந்தேதகவிசொல்லற்பே. (அ)

சொல்லற்கரியபனுவுமொண்ணுப்புகழ்த்தொன்மையனே
மல்லறகரியதள்போர்த்தாய்கதலிவனத்தையனே
வெல்லற்கரியதென்றுலுநின்றுவிரும்புமென
தல்லற்கரியவருள்செயின்யானினக்கானவனே. (கூ)

ஆனக்கரவம்பரிகலன்கச்சையென்றுதரித்தீதாய்
வானக்கரவஞ்செலவீவதம்வாழ்த்தும்பைஞ்ஞீலிமன்னு
தானக்கரவல்வில்லங்குரியாய்வினையைத்தவிரா
யானக்கரவகன்றெஞ்ஞான்றுணவந்தடைகுவதே. (கo)

அடைந்தேனின்றுள்கதியென்றினீமேனினக்கரளன்போ
லுடைந்தேனின்றுலதுநன்றேறவினைப்பட்டுழலுமென்முன்
மிடைந்தேனின்றுவென்றதென்றருணீலிவனமெய்யதென்
சூடைந்தேனின்றுதனைக்காணமேனென்றுடிடுங்கொன்றையனே. (கக)

கொன்றைக்கனியனகூந்தன்மின்னுர்கள்குலமடங்க
வென்றைக்கனியமெனத்தள்ளியேயநினக்கின்புறுவே
னன்றைக்கனியநன்மாச்சேர்பைஞ்ஞீலியையாவென்மனக்
குன்றைக்கனியவைத்துன்னடியாரொடுங்கூட்டுவையே. (கஉ)

கூட்டப்படைகொள்புரத்தைவென்றுய்நறுங்கொன்றையனே
வேட்டப்படையுஞ்சடையாய்பைஞ்ஞீலிவிமலமின்னுர்
நாட்டப்படைதெறவெம்பிநின்றுள்கணண்ணுமெலீண
வீட்டப்படைத்தவியாரிபொருளிலென்வெஃகினனே. (கங)

இனகரமைந்தர்மடவாரென்றெண்ணியிடைந்தவிவீர்
கனகரமேண்மழுவுள்ளார்கதலிவனத்தமரு
மனகமாரணச்செற்றுரெனைத்தடுத்தாண்டவையர்
சினகரமேவித்தொழுவீர்விடுமுங்கள்சென்மங்களே. (கச)

மங்காதசெல்வம்பெருகுங்கதலிவனத்தணைவான்
றங்காதவன்பற்புடைத்தவெம்மாணிச்சலந்தரனென்
வெங்காதகணைத்தடிந்தாணையாதவிரும்பிலர்துன்
பங்காதவந்தகற்காளாய்நரகிற்படிபவரே. (கடு)

படந்தாங்குவெம்பணிப்பூணைப்பைஞ்ஞீயப்பாவரிமண்
ணிடந்தாங்குமேநடவெட்டாதநின்பாதத்திறைஞ்சியன்பாய்க்
கிடந்தாங்குநாட்டமற்றின்றிக்கதறிக்கிடந்துளிணைக்
கடந்தாங்குநீரெனனக்கண்ணீர்பெய்மேற்கென்கதியுளதே. (ககூ)

கதிக்குந்தங்கைக்கொடிலகாண்டிமாற்றலர்கண்பிதுங்க
மிதிக்குந்தடக்கரிமேல்வருமீவேந்தர்பொய்வாழ்வைமெய்யா
மதிக்குந்தரத்தவரென்னுவர்நீலிவனத்தையனே
கொதிக்குந்தழற்கட்பிரானேயெணப்பணிகொண்டவனே. (கஎ)

கொண்டற்புரையுங்கருங்குழல்வெண்ணகைக்கோதையரைக்
கண்டற்புறுமனமேகனிரங்குகண்காட்டியன்பு
விண்டற்புடைக்குநிறத்தான்வரினென்விளம்புவையின்
றண்டற்புதணையெம்பைஞ்ஞீலிமேவியவத்தணீயே. (கஅ)

அத்தணீவாம்பரியேற்றணீலிவனத்தமர்ந்த
நித்தணீவாவென்றென்குற்றேவலுங்கொணிருமலணீக்
கத்தணீவாய்மனமெய்யாற்றொழாழ்முற்கருமங்களுஞ்
லெத்தணீவாசித்திருக்கினுநீங்குவதேதவர்க்கே. (ககூ)

ஏதென்பணிகொண்டருள்வதின்றேறவிரங்காமனமீமா
வோதென்பணியதுனக்கியான்மந்தரகினியுற்றசடை
மீதென்பணிந்தவெம்பைஞ்ஞீலியையல்வெற்பரையன்
மாதென்பணியையமொழியாருபாகமறைமுதலே. (உ0)

முதலிவனத்துச்சடையாவெனமுன்னலின்றியைம்பா
லதலிவனத்துக்களந்தனங்கஞ்சவரும்பெனவே
றுதலிவனத்துமடவார்பின்சென்றுறுதீநாயகலக்
கதலிவனத்துப்பெருமான்றிருவடிகண்டனனே. (உக)

கண்டலப்போதைமுடிக்கணியாதமுக்கட்பரற்கு
வண்டலப்போதைமலியுங்கதலிவனத்தவற்கு
விண்டலப்போதைநகையுடைத்தாற்குவிரும்பிலீரீ
தொண்டலப்போதையலார்பாலுயிர்த்துணைசூழ்ந்துநெஞ்சே. (உஉ)

நெஞ்சத்திருக்குமடவார்மயக்கமுநீங்குகல்செய்
தஞ்சத்திருக்குமரன்றனைபவெள்ளனப்படைகள்
கஞ்சத்திருக்குமெம்பைஞ்ஞீலிநாதணீக்கண்டுதொழா
வஞ்சத்திருக்கும்விடுமோபிறப்புமரணமுமே. (உங)

மரணங்கடந் துய்யலாகுங்கண் டீர்முன்வருங்கரியை
முரணங்கடங்கவுரித்தார்பைஞ்ஞீலிமுதல்வரொன்னு
ரரணங்கடங்கலிலாதெரித்தாரெனையாண்டவர்பொற்
சரணங்கடந்திடத்தொண்டாகிவாழுந்தரத்தருக்கே. (உச)

தரங்கந்தரும்பிறவிக்கடன்மூழ்கித்தளர்ந்துமனக்
குரங்கந்தமாதரைப்பற்றநிற்பேன்முன்கொடியகடாத்
தரங்கந்தழுகட்சமனேறிமேவுகத்திற்றிறன்றுவனீ
யிரங்கந்தகாளினிற்பைஞ்ஞீலிமேவியிருப்பவனே. (உடு)

இருந்தனமீதெனவீட்டிமின்னுர்களியம்புமொழி
மருந்தனமென்னைடையென்றுழல்வீர்நமன்வந்துவிட்டான்
முருந்தனவெண்ணகைபங்கனீலிவனமுதலைப்
பொருந்தனன்னெஞ்சமுமோவுறுதல்பொல்லாத்தரமே. (உசு)

தரத்தருக்கன்றனகர்சூழ்தரவச்சந்தந்தபத்துச்
சிரத்தருக்கன்வலிதேய்த்தார்க்கரம்டைசெறியுஞ்சிவ
புரத்தருக்கன்மலிகண்டர்க்குதவிதாண்டர்புகழவருள்
வரத்தருக்கன்புடையேற்கேதிருவிண்ணவாட்டுதலே. (உஎ)

வாடாதிசைமலர்க்கண்மடவார்வலைப்பட்டுமன்று
நீடாதிசைவருநிச்செல்கிலாதுனைதடிக
டேடாதிசைபகராதிருந்தாலுமென்றீமைகெடத்
தாடாதிசைதொழும்பைஞ்ஞீலிமேவியசங்கரனே. (உஅ)

சங்கரனேசம்புவேயிறையேயெபொற்றவமலி
பங்கரனேயெனப்பாடாவெனக்கருள்பாதமணிப்
பொங்கரனேசத்தணிந்தவனேமுக்கட்புண்ணியனே
செங்கரனேதிருப்பைஞ்ஞீலிமேவுஞ்சினகரனே. (உக)

சினனுதணியில்வழியேசெலுஞ்சிறியேன்சிறிது
மனனுதணிச்சுத்தஞ்செய்யேன்பொல்லாமடவார்மயலா
மினனுதணிவிலுனுமோங்குமிருங்கதலி
வனனுதணித்தொழுவேற்கில்லையோசிவமாகதே. (ஈ0)

மானுடம்வாசவன்வானுடமற்றயனுமினி
யானுடம்வண்ணமில்லையெனன்றுலருளெம்பெருமான்
றேனுடம்பொங்கர்மலியும்பைஞ்ஞீலிச்சிவனுமையாள்
கோனுடமஞ்ஞுபூர்ந்தானுக்கத்தன்கொடுத்தனனே. (ஈக)

கொடுக்குந்தருநன்னிழலிருந்தேயிகல்கொண்டடல்வே
லெடுக்குந்தருக்கர்குமும்பாட்டிவாழ்த்தலுமெண்ணுகிலேன்
முடுக்குந்தருமன்சினந்தெதிராமுனையக்கரங்கா
னடுக்குந்தருணத்தில்வந்தாள்பைஞ்ஞீலியென்னயகனே. (ஈஉ)

அகத்தாசையற்றிலனின்னடியார்க்கன்பனுகிலனிச்
சகத்தாசையெங்குந்திரிந்தாழன்றேசலித்தேதனது
முகத்தாசைநீக்கியெணையாளவேண்டினனுன்னையைத்து
முகத்தாசையிலச்சிலையாய்பைஞ்ஞீலியின்முக்கண்ணனே. (௩௩)

கண்ணுதலிக்குப்பணிசேர்பைஞ்ஞீலிக்கடவுண்மலைப்
பெண்ணுதலிக்குறிக்கும்பாகமீந்தபெருமகிணை
யெண்ணுதலிக்குமற்றங்கேனைனலன்றியீயங்கிடுமென்
ணெண்ணுதலிக்குமனமிரங்காததென்னுத்தமனே. (௩உ)

உத்தமனத்தனமலைபங்காளனெளிர்சடையா
னித்தமனத்தன்முகிலூர்புராதரனேமியொடு
சுத்தமனத்தன்பணியும்பைஞ்ஞீலியெஞ்சுந்தரனிம்
மத்தமனத்தன்மடனென்றெண்ணுதென்னுள்வந்தனனே. (௩ஊ)

வந்தாணிநிற்பொரும்போதுரித்ததன்மாவதனை
நந்தாணியென்றமைமீதுடுத்தாணைநஞ்சுண்டவணைப்
பந்தாணிகொங்கையியனுமைபாகனைப்பங்கயணித்
தந்தாணியம்பணிபபைஞ்ஞீலியாணிச்சரண்புகுமே. (௩எ)

சரமாரணிச்செற்றவணிப்பைஞ்ஞீலிச்சபம்புவைமுப்
புரமாரணிவின்றியுண்ணக்கண்டாணிப்பொருவில்பல
சிரமாரணித்தொழுதேத்தாதுஞ்சென்மங்கடீர்வதற்கா
தரமாரணியர்கருப்பாழ்படாதங்கடிப்பவரோ. (௩ஏ)

அடுவாரணவுரிமேற்போர்த்தபிராணியணிகளதநிற்
கடுவாரணலியம்பைஞ்ஞீலியாணிக்கனதனத்திற்
றெடுவாரணங்கொருபாகணியேத்தித்தொழார்சிலெல்லாம்
படுவாரணங்கிலெனமறைநான்கும்பகர்தருமே. (௩அ)

தருமந்தகவின்றியேமடமாதர்தருமயல்பட்
டருமந்தகலவியிழப்பீர்பைஞ்ஞீலியணிப்பணியீர்
தெருமந்தகன்றுதிரிந்தால்வெம்போத்தைச்செலுத்தியெதிர்
வருமந்தகன்விடமாட்டானெங்கோடிமறையினுமே. (௩ஙை)

மறைவாயவர்புகழ்ந்தேதுதுங்கதலிவனத்தினமர்ந்
துறைவாயன்குழுமிருந்தித்திருங்காலத்துதித்தவிடக்
கறைவாய்மணிமிடற்றெம்மையுணிணைக்காண்டலின்றித்
தறைவாயடியனவருந்துவணினித்தாங்கிக்கொள்ளே. (ச0)

தாங்கரும்பாரமெனபான்பெறும்வினைதன்னெடென்று
போங்கரும்பாரமையக்கமெல்லாமுக்கட்புண்ணியனே
கோங்கரும்பாரமுலைபங்கனேகுற்றமற்றவனே
தீங்கரும்பாரஞ்செறியும்பைஞ்ஞீலிச்சிவபரனே. (சக)

சிவசம்புசங்காகின்மலதீஞ்செங்கழைகட்குமீ
துவசம்புமஞ்சளூமோங்கும்பைஞ்ஞீலியுறைபவபொற்
கவசம்புயங்கத்தநின்மேற்கவிபகரத்தலேவி
திவசம்புன்மைச்சிறியேனுக்குண்டாயதுன்செவ்வருளே. (சஉ)

அரும்பன்னமென்முலைமேற்சாந்திடாவெனதாசைமுற்றும்
விரும்பன்னமேதிருப்பைஞ்ஞீலிமேவும்விமலற்கெதிர்
பொரும்பன்னகப்புலித்தோலணிந்தாற்குப்புகைந்தூழலா
வரும்பன்னகப்பணியாற்கோதியிங்குவசச்சொல்வையே. (சஙு)

வரந்தந்துதொண்டீணியாளுங்கதலிவனத்தரணி
நரந்தந்துதைகொன்றைத்தாரினைவாழ்த்தியெஞ்ஞான்றுமிரு
கரந்தந்துயர்கெடச்சென்னிவையார்கள்கணக்கில்பல்லா
யிரந்தந்துகற்றிருந்தாலும்விடாவிணீயீட்டங்களே. (சஙச)

ஈட்டமரப்பணீயேட்டைவிடாதெடுத்தேயெழுதும்
பாட்டமரப்பணியார்மீதன்பாகப்பகர்ந்தென்பெற்றீர்
வாட்டமரப்பணிவிக்குநஞ்சுண்டவணிக்கதலிக்
காட்டமரப்பணிப்பாடாதுழலுங்கவிஞர்களே. (சஙடு)

கவிக்குமகுடம்புனைந்துசெங்கோலொன்றுகையிற்கொண்டு
புவிக்குமனுகவிருக்கினும்வானம்புரக்கினுமெ
னவிக்குமகிழுஞ்சுரர்சூழரம்பைவனத்தணிக்கை
குவிக்குமனத்தன்புகொண்டிலராயிற்குறித்திடினே. (சஙசு)

குறித்தேதனினியபைஞ்ஞீலியென்பார்முன்னுங்குற்றமற
முறித்தேதனினித்திலப்பல்லார்மயலென்பார்முன்னுநிற்பாய்
வெறித்தேதனினின்னருளாலடியேன்வினைவேரொடுங்கப்
பறித்தேதனினியந்தகற்கொருநாளுரும்பயமிலையே. (சஙஎ)

இலையம்புயனெடுமாற்குமெட்டாதபைஞ்ஞீலியெம்மான்
றலையம்புயங்கமணிந்தேதனிப்பாடித்தமைமினிப
மலையம்புயர்கழையான்செயும்மீபாரினிவழிந்து
மலையம்புயவெனமூடைப்பாடிவருந்துவிரே. (சஙஅ)

வருந்தத்தைகாள்கைவினைசோர்ந்தகீயர்மனம்வெறுக்க
விருந்தத்தையின்றறியீரோபைஞ்ஞீலியிறையவற்குப்
பொருந்தத்தையற்கொருபாகந்தந்தாற்கின்றுபோயெனது
பெருந்தத்தையோதிவருவீர்மதியம்பிறக்குமுன்னே. (சஙூ)

முன்னும்படியறிவில்லாதவென்முழுமூடநெஞ்சை
மின்னும்படிகமெனவாக்கிவெவ்வினைவேரறுத்தான்
மன்னும்படியெங்குங்கொண்டாடவாணிமலர்மகளுந்
தன்னும்படிக்குளப்பைஞ்ஞீலிமேவியசுந்தரனே. (ஙo)

சுந்தரத்தார்நின்பதத்தணிந்தாடித்துதித்துவிடக்
கந்தரத்தாவெனப்போற்றறியேற்குன்கழறருவாய்
குந்தரத்தாவெங்கொடுங்காலற்செற்றகுரைகழலா
யந்தரத்தார்தொழும்பைஞ்ஞீலிமேவியமரத்தனே. (குக)

அத்தத்திலங்குசபாசமுள்ளாற்கத்தணிவினையேன்
சித்தத்திலங்கும்பரனேப்பைஞ்ஞீலியிற்சென்றுதொழார்
கத்தத்திலங்குழைப்பரர்போல்யமன்கசக்கத்திரிபட்
டுத்தத்திலங்குமழிந்திங்குற்றான்றியுலைபவரே. (குஉ)

உலகஞ்சவெம்மைகொண்டோங்குஞ்சமனியுதைத்தவனே
பலகஞ்சமீதுபொற்றூவிசெங்கால்பசுஞ்சூட்டினனே
யிலகஞ்சமேவும்பைஞ்ஞீலியசற்றுமிரக்கமிலேன்
கலகஞ்சங்கேர்தியுங்காணுன்முள்கொளக்கண்டனனே. (குங)

கண்டனஞ்சத்திவரைகடுப்பாள்பங்கனேகொதிப்புக்
கொண்டனஞ்சத்திறல்குன்றவுண்டாய்குளத்தாமரையில்
வண்டனஞ்சத்திக்கும்பைஞ்ஞீலிகாதமனமயங்கு
தொண்டனஞ்சத்தினம்வாட்டிடுமோவினைத்தொல்லைகளே. (குச)

தொல்லையிலாயவினையாற்சுழன்றடைந்தேதன்மனத்தை
யொல்லையிலாக்குடிகொள்வாய்பைஞ்ஞீலியெனுத்தமனே
வெல்லையிலாதரன்றந்தாய்பொற்கோபுரமேவுதிருத்
தில்லையிலாடியதாளாயத்தீவினைநீர்வதற்கே.. (குரு)

தீராக்கவலையுடையேனையன்பரிற்சேர்த்தருளிச்
சீராக்கவலைப்புனல்வாவியிலுகள்சேலைக்கண்டு
சாராக்கவலைச்சிரல்கொள்பைஞ்ஞீலித்தலைவகைக்குப்
பேராக்கவலையொப்பாமெனனகந்தையைப்பேர்த்தருளே. (குசு)

பேரரம்பைக்குலமோங்கும்பைஞ்ஞீலியர்பெய்மதுவார்த்
தாரரம்பைச்சடைவைத்தவர்முப்புரந்தம்மைவென்ற
வீரரம்பைப்பணிபூண்டவர்மேவவிரும்பியவென்
னேரரம்பைக்கணையானையின்முளவந்துற்றிலரே. (குஎ)

உறவாண்டர்வினைவேரறுப்பதற்கும்பரு—
னற்றவர்சூழ்திருப்பைஞ்ஞீலிமேவியநாயகர்பொற்
கற்றவர்கொண்டருள்புண்ணியர்தாளெனக்கன்னெஞ்சமே
பற்றவன்றிமற்றுரேகொடுப்பர்பரகதியே. (குஅ)

பரமனியன்புசெறிநெஞ்சியற்பகையார்க்குமுத்தி
தரமனியற்சென்றவனியெம்மானத்தழங்குகனற்
கரமனியோங்குங்கதலிவனத்துமுக்கண்ணனல்
வரமனிவர்க்குஞ்சொடுப்பானிவனாழ்த்திவரங்கெரணெஞ்சே. (குக)

வருந்தாரெனமகிழ்ந்தேதனிற்றைஞான்றுவரையுஞ்சும்மா
விருந்தாரணுப்புதலின்றிவண்டூரின்றுபோய்ச்சொலுங்கோள்
பெருந்தாரணிபுகழ்ந்தேத்தும்பைஞ்ஞீலிப்பெம்மானுக்குத்தேன்
றிருந்தார்முடியுடையாருக்குத்தேவர்தந்தேவருக்கே. (கூ0)

தேவிக்குருவம்பகிர்ந்தார்பைஞ்ஞீலிச்சிவபுரார்க்குப்
பாவிக்குருகுமனமிலராயபரமருக்குத்
தூவிக்குருமணிநந்தினஞ்சிந்துந்துறைமலியும்
வாவிக்குருகினங்காள்சொல்லுவீரென்றன்மையலையே. (கூக)

மையற்கடாக்களிறல்லாநடத்திவருமதனப்
பையற்கடாதிதன்செய்தீனைஞ்ஞான்றும்பகைத்துவெங்கோன்
மொய்யற்கடாவினஞகப்பைஞ்ஞீலிமுழுமுதலென்
னீயற்கடாணியுரித்தாற்குறுமையலாயினனே. (கூஉ)

ஆயணையம்பனுமையொருபாகனரம்பைவனத்
தூயணையம்பன்மினூரிடத்தேதற்றவன்றாத்திரையான்
சேயணையம்பகத்தாலெரித்தாணைச்சிலகவித்தந்
தாயணையம்பதவென்றீரிடவென்றளர்விலையே. (கூங)

இலலாதவாதண்ணீராகவையனிருமபுகழைக
கல்லாதவாவுற்றுழல்வீர்கதலிவனத்தமர்ந்தாள்
பல்லாதவாவற்றணியோவென்றியாரும்பகரச்செப்தேதா
னல்லாதவானவனுண்டோதுந்தீமையறப்பதற்கே. (கூச)

அறுகாரணிசடையாற்குயரோங்கலரையனன்பாய்ப்
பெறுகாரணியொருபாகற்குத்தேவர்பிராற்கிலங்கு
மறுகாரணிதிருப்பைஞ்ஞீலியாற்கென்வருத்தஞ்சொல்லி
யுறுகாரணியல்கொணர்ந்தாலென்னுங்கொலிவ்வொண்மதியே. (கூசு)

மதித்தலையாழிகடைவேலைவந்தருஞ்சுண்டவனே
விதித்தலையார்கரத்தேதானைபைஞ்ஞீலியெம்வித்தகனே
துதித்தலையான்செய்திலனேனுமின்னன்தொடர்ந்தணைபா
லுதித்தலையாமலெனையாளநீயென்றுடம்படலே. (கூரு)

படப்பணிபூண்டபுயத்தபைஞ்ஞீலிப்பரம்பரனூர்
கடப்பணிவேளத்தசெங்கையின்வண்டுகழலுமுத்து
வடப்பணிசிந்திமிலர்ப்பாயனீத்துமருவிவெண்ணி
நடப்பணிற்பாடிகைப்பாஞ்யிர்ப்பாளெங்கணன்னுதலே. (கூள)

நன்னத்தனேடும்பொற்பாதத்தனேநல்லரம்பைவன
மன்னத்தனேரில்பைஞ்ஞீலியனேமருவாரைவெல்வேன்
மின்னத்தனேகமருப்பன்விரும்பும்விருப்பத்தனே
யென்னத்தனேநினையல்லான்மற்றியாரையுமெண்ணலனே. (கூஅ)

எண்ணுதவனன்பொடிநின்பதத்தையென்னுலுமெனை
யுண்ணுதவன்னஞ்சமுண்டதுமேபாலவுவந்தருள்வாய்
விண்ணுதவன்கதிர்தோதாற்றுவாம்பையியன்வனமுக்
கண்ணுதவனன்குடையார்மனத்துறைகாரணனே. (சுசு)

காராழியொக்குநிறத்தான்செய்பூசனைகண்டினிதா
வாராழிமுன்னமளித்தாய்பைஞ்ஞீலியமர்ந்தவனே
பாராழித்தேருடையாய்மடவார்மயல்பட்டுழலும்
பேராழியவிணையேனுன்னருளென்றுபெற்றுய்தலே. (எ0)

பெற்றனடாவும்பெருமான்பைஞ்ஞீலிப்பெம்மானிலங்கும்
பொற்றனடாவுழைக்கண்ணிபங்கானன்புபூண்மனத்திற்
குற்றனடாமற்குணநடுமூன்றுகட்கோவைத்தொழக்
கற்றனடாவந்தகாவந்துபாரொருகையினியே. (எக)

கையத்தியங்கலறத்தோலுரித்தவன்காலற்செற்றோன்
மொய்யத்தியங்குஞ்சடையான்பைஞ்ஞீலிமுழுமுதல்வன்
வையத்தியங்கொள்பொற்றோணியன்றிவருத்தம்வினை
செய்யத்தியங்கினும்பாடேனினிமற்றொர்தேவனையே. (எஉ)

தேவாகருங்குழல்பாகாபைஞ்ஞீலிச்சிவபுரனே
மாவாகருங்குலவேதருந்தேதிமறைமுதலே
பூவாகருங்குன்றுபன்னிரண்டாற்குப்பொருந்தத்தனே
நீவாகருங்குண்டைமேலம்மையோடென்முனையமுற்றே. (எரு)

உற்பத்தியாவதுஞ்சாவதுமன்றியுன்றுண்மலர்க்கு
நற்பத்திகொண்டுய்ந்தறியேன்பைஞ்ஞீலியென்னயனே
கற்பத்திணைசக்காத்தானின்றேத்தக்கடும்புரமூ
றிற்பத்திவேவச்செற்றுயுயுமாறருள்செய்தருளே. (எசு)

செய்க்குவளைக்குநிகர்நேத்திரம்புனல்சிந்துவதுங்
கைக்குவளைக்குலஞ்சேராததுஞ்சுகங்காள்சொலுநன்
மைக்குவளைக்குங்கடல்சீறிடுமுன்மதியெழுமு
னைக்குவளைக்குழைபாகற்காரம்பையடவியற்கே. (எஙி)

அடவிக்கதலிப்பசுங்குருத்தோடியகல்விசும்பைத்
தடவிக்கதறக்கதிரோன்குரகதத்தைத்தகர்த்துக்
கடவிக்கதனஞ்செய்பைஞ்ஞீலிமேவுங்கடவுண்மதன்
படவிக்கதமுறச்செற்றுயருணின்பொற்பாதத்தையே. (எசு)

பாதம்பணியும்வகையறியேற்குன்பதம்பணியும்
போதம்பணியுமைபாகபைஞ்ஞீலியபொற்சடையின்
மீதம்பணியும்விமலமன்றேறிவிமலியுடன்
வாதம்பணியும்பரேத்தநின்றுமிமறைமுதலே. (எஎ)

மறைவழியேகின்றிருப்புகழோதிமனங்கனிந்து
முறைவழிபாடுபுரியமுன்னுதிருப்பேற்குமனக்
குறைவழியத்தயைசெய்தாண்டருள்வைபொற்குன்றுவில்லாய்
நறைவழியுங்கதலிச்சோலைமேவியநாயகனே. (எஅ)

அகலப்படவரவாய்த்தேரைபோலுமம்மாதர்விழி
யிகலப்படவரக்கைக்கிடனுய்க்கொடியேய்கடன்மே
வுகலப்படவரவந்தீர்ந்தபோலுமுள்ளேற்குளத்தா
சுகலப்படவரம்பைக்காடமேவுதத்துதியே. (எகூ)

உதிக்கின்றவம்புலிவெம்புலியாகியுறவவ்வுபு
பதிக்கின்றவம்புரிந்தேன்சந்தம்பூசப்பருமுலைமேற்
கொதிக்கின்றவம்பலச்செய்வேனுபெண்காளென்குறையுரையீர்
மதிக்கின்றவம்பலத்தாடும்பைஞ்ஞீலிவரனுக்கின்றே. (அ0)

வரம்பலமாவொன்றுநாமேயற்குதவுமருமலர்ச்செ
யிரம்பலமாமொய்யணிச்செற்றவாகல்லிருங்கதலி
மரம்பலமாப்பலசேரும்பைஞ்ஞீலிமறைமுதலே
சிரம்பலமாலையணிந்தாய்நின்னூட்கன்புசெய்வதற்கே. (அக)

செல்லிக்கடித்தகுழலார்பிறையைச்செயித்துவரி
வில்லிக்கடித்ததுதலார்மயக்கைவிரும்பிவீணைத்
தொல்லிக்கடித்தவுடம்பெடுத்தேதீங்கின்றொண்டரிற்சே
சொல்லிக்கடித்தருக்கோட்டீபைஞ்ஞீலியுறைபவனே. (அஉ)

பவனுசனப்பனெம்பைஞ்ஞீலிநாதன்பருப்பதவிற்
சிவனுசனங்கயிலாயவெற்பான்செஞ்சடைப்பெருமா
னிவனுசன்மக்கடனீத்தேதுவனென்றியம்பவமைந்
தவனுசன்வஞ்சனென்றென்னியெண்ணுதினிதாண்டனனே. (அங)

ஆண்டலைப்பத்திரக்கேதனத்தாற்கத்தனேயணிகொள்
பூண்டலைப்பத்திரியேற்றுய்பைஞ்ஞீலியனேநின்பொற்றாள்
காண்டலைப்பத்தியிலுலறியாக்கள்வனேற்குவீண
யீண்டலைப்பத்தியங்கித்திரிவேற்கென்றிரங்குவையே. (அச)

இரக்கஞ்சற்றுங்கிடையாமனத்தேற்கஞ்சலென்றுநின்செங்
கரக்கஞ்சங்காட்டிநின்றொண்டர்குழாத்திற்கலக்கவைப்பாய்
தரக்கஞ்சமுன்னமுரித்தாய்பைஞ்ஞீலித்தலைவமிக்க
விரக்கஞ்சர்ப்பந்தரித்தாய்மழுவேந்தும்விடையவனே. (அரி)

அவனிவனென்றலையாமனெஞ்சேயென்னையாளுடைய
சிவனிவனேறுடைப்பைஞ்ஞீலிநாதன்றிசைமுகத்தோன்
புவனிவனிதைபுணர்வோன்கிளைத்தபுராணமைக்கோர்
தவனிவரும்பவந்தீர்ப்பான்பொற்றாளிணைசாருவையே. (அசு)

சாருக்கணியமொழியாயிர திதவனடத்தும்
போருக்கணியர்பகைக்கினிச்செய்வதென்பூங்கதலித்
தாருக்கணியடர்பைஞ்ஞீலிமேவுந்தலைவனெம்மான்
மேருக்கணியக்குழைத்தானிங்கெய்தின்மிகவுநன்றே. (அள)

நன்றத்தம்வேண்டினனீகெனமூடரைநண்ணியம்பொற்
குன்றத்தடம்புயனேயெனப்பாடிக்குறைந்தலைந்து
வன்றத்தளாவித்திரியாமனீலிவனத்தவிபொன்
மன்றத்தயானைக்கேகவிபாடமனந்தந்தனே. (அஅ)

தந்தக்கரியதள்போர்த்தான்பைஞ்ஞீலித்தலைவனுள்ளு
வந்தக்கரியணிந்தான்காலமாகிமலரடியை
மூந்தக்கரியவன்றோடநின்றுமனென்முழுவினோய்
சிந்தக்கரியப்புரிந்தாண்டருடருந்தேதிகனே. (அக)

கனத்துப்புடைகொடனமதர்நோக்கங்கறுத்தகுழல்
வனத்துப்புடையிதழம்மைபங்காகஞ்சவாவிகளி
னனத்துப்புடைமலங்குந்துபைஞ்ஞீலிநம்பாநிற்றொழு
மனத்துப்புடையவரேனுவாதலாலெற்குவந்தருளே. (கூ0)

வந்தித்தலையுடையார்க்கன்பணீலிவனத்துறைவோன்
பந்தித்தலையன்வரைக்கீழலறும்படிநெரித்தோன்
சிந்தித்தலைகடல்போலேகண்ணீர்மிகச்சிந்துமென்முன்
னிந்தித்தலைவருமுன்வருமாறியம்பெய்திமஞ்சே. (கூக)

மஞ்சனகண்டணீப்பைஞ்ஞீலிவாழுமறைமுதலே
வஞ்சனமன்புரளக்கழறாக்குமெம்மானீயொண்கண்
ணஞ்சனமாதர்மயல்வீழ்ந்தறிவற்றழிந்துழல்வீர்
வெஞ்சனனங்களைந்தீடேறியுய்யவிரும்புமினே. (கூஉ)

விருப்பன்னமீதில்லிபாலினுமில்லெவெண்முத்தணிகொ
ளருப்பன்னமென்முலைகாந்துவதாலவனிருபபமெங்ங
னிருப்பன்னமுண்டகஞ்சேருமபைஞ்ஞீலியினெம்மிறைவர்
திருப்பன்னகந்தரித்தார்புயத்தேதறுகெரியலினே. (கூங)

அலம்புகுவால்வினையெஞ்ஞான்றும்வாட்டவயர்ந்திருகண்
ணிலம்புகுமாறலறித்திரிவேனென்றுண்டருள்வாய்
விலம்புகுலாநுதற்கண்ணிபங்காமிகுமென்கதலிக்
குலம்புகுகோயிலிருப்பாயடியன்குலதெய்வமே. (கூச)

குலமல்லியாவுந்தொழுநின்றபொன்மலிக்கோனருளு
நலமல்லபாகபைஞ்ஞீலியனேநதிபோலுமத
சலமல்லியுங்கவுட்டோலுரித்தாயென்னீச்சார்ந்துவினை
வலமல்லியாமலினிதாவென்றேறுதையைவைப்பதுவே. (கூடு)

பதுமத்தனங்குடிகொள்ளும்பைஞ்ஞீலிப்பரசித்தில்
வீதுமத்தனங்கையொருபாகவெள்ளீவிடையநீனே
மூதுமத்தனங்கம்வருந்தலுங்தேடனுமுன்னலைச்செய்
வதுமத்தனங்கொண்மடவார்க்கென்றுலெங்ஙன்வாழ்த்துவனே. (கூசு)

வனத்தணியன்றுழும்பைஞ்ஞீலிமேவுமறைமூதலீ
யெனத்தணியன்றுபுரமெரித்தாணியிலங்கிலேவற்
சினத்தணியன்குகனுகப்பெற்றுணச்செம்மான்மழுவாண்
மினத்தணியன்றிப்புகழேன்புறஞ்சிலவீணையே. (கூள)

வீணுகவம்பரைக்கொண்டாடிப்பாடும்வெறும்புலவீர்
நாணுகவம்பலதேகாடலல்லாற்சற்றுங்ன்மையுண்டோ
பூணுகவம்பலர்கொன்றையவோங்குகதலிப்பொங்கர்
வாணுகவம்பற்றுமுன்வாவென்றுதும்வருந்தலின்றே. (கூஅ)

வருத்தத்தையாற்றுதல்செய்யேனினியத்தையாற்றிவருங்
கருத்தத்தையுந்தவிர்த்தாள்வாய்கடற்கட்டிகிரினிறப்
பொருத்தத்தைமேவுஞ்சடையாய்பைஞ்ஞீலியெம்புண்ணியனே
மருத்தத்தையார்கொன்றைத்தாராய்புரத்தொருமாதினனே. (கூகூ)

மாதப்புனற்குமனஞ்சேசொட்டாததைமாற்றுதல்செய்
தீதப்புனற்பரிற்கூட்டாதெனியுய்யவைத்தபூந்
தாதப்புனற்கொன்றைத்தாரானென்னம்மைதழுவிடத்தான்
சீதப்புனற்பணிப்பைஞ்ஞீலிநாதன்றிருவடியே. (கூ00)

திருப்பைஞ்ஞீலித்திரிபந்தாதிமுற்றிற்று.

---

*சிறப்புப்பாயிரம்.

மறைநூறுகளையறவோர்ந்துளாருமகிழ்ந்துபவக்
கறைநூறுமாறுணர்ந்துய்ந்திடுமாறுகயிலையொப்ப
வுறைநூறுமாடங்கொள்பைஞ்ஞீலிநாதற்குவந்துகலித்
துறைநூறுசிறற்றனன்மீனுட்கிசுந்தரத்தூயவனே.


---

* இதனை இயற்றியவர்பெயர் தெரியவில்லை.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பாலைவனப்பதிற்றுப்பத்தந்தாதி.



காப்பு.

கோடைவிநாயகர் துதி.

மாவார் நிறத்துத் துழாய்மாலு மணத்தா மரையா ளியுந்துதிக்கும்
பாவார் பாலை வனப்பதிற்றுப் பத்தந் தாதி யுரைசெய்யப் [க்குங்
பூவார் கடிக்கை புனைந்துமுத லெழுத்தின் பொருள்யா மெனத்தெரி
காவார் கோடைக் களிற்றுமுகக் கடவுட் பெருமான் பதம்பணிவாம்.

நூல்.

பூவும் பழுத்த செழுங்கனியும் புனலும் விரையு மற்றுமுள
யாவுங் கொடுநின் னடிப்பூசை யியற்று தழலு மிழுதையே
னுவுந் துதிக்கப் பணித்தபணி நன்று பாலை வனத்தமர்வோய்
சேவுந் தனிமா மறைமாவுஞ் செலுத்தா நிற்குந் திறலோயே. (க)

திறலார் சூலப் படையுடையாய் செந்தா மரைக்கண் விடையுடையா
யறலார் கூந்தற் கருநெடுங்க ணருட்பார்ப் பதியீயார் பங்குடையா
யுறலார் பாலை வனமுடையா யுன்னைத் துதியா வெனைக்குறித்து
மறலார் கூற்றங் கடாமேலால் வருமுன் விடைமேல் வருவாயே. (உ)

வருவாய் குறித்துப் பற்பலகா வதம்பே யுழலு மென்பாதம்
பொருவாய் தரினு மில்லாநீ பொலியா லயஞ்சூழ் தாமுடமாம் [த்த
வெருவா யெனவந் தருளுவதென் றுரையாய் விண்ணோர் தொழுதே
வருவா யுருவா யருவுருவா யமர்ந்தாய் பாலை வனத்தரசே. (ங)

அரசே கருணைப் பெருங்கடலே யறிவே யறிவி னுள்ளொளியே
புரசே மலர்ந்து பொலிவனம்போற் பொலியு மேனிப் பெருந்தகையே
பரசே மலியும் பாலைவனப் பரமா பாத பங்கயத்து
விரசே யெனப்பே ரருள்புரியா விதந்தா னிதுவென் றுரையாயே. (ச)

உரையே னினது பெருங்கீர்த்தி யுரைப்பார் கூட்டத் துற்றுமனங்
கரையே னினது பாலைவனங் கண்டுவழிபா டியற்றுதற்கு
விரையேன் சிறிது பொழுதேனும் வெய்ய மனம்வெவ் விடையமுறல்
வரையேன்பயனென் பெறவுதித்தேன்வண்டார் கடிக்கைமலீவோயே.

மலியா நிற்கும் விண்ணியொருபால் வருத்தா நிற்கு மலமாயை
யுலியா நிற்கு முடற்சுமையேற்ற ருறுன்ரு நிற்கு மனமில்லே
னலியா நிற்கும் புனல்வளங்கூர்ந் தமையா நிற்கும் பணியுடித்துத்
தலியா நிற்கும் பாலிவனத் தனியா நிற்கும் பெருமானே. (சு)

மானே பொருவு மதர்விழிக்கோ மளப்பார்ப் பதியார் மணவாளா
தேனே யமுதே செங்கரும்பே தெவிட்டாக் கனியே தேவர்கடங்
கோனே பாலி வனத்தரசே குணங்கூ ருண்ணப் பரவாமல்
யானே கழித னன்ரூமோ யாரும் பரவி யின்புறவே. (எ)

இன்பார் பொதுவுஞ் சிறப்புமென விசைத்த விருநூல் வழியிருநான்
கன்பார் மனத்த ஞகாம லடியேன் பிறவிக் கடல்வீழ்ந்து
துன்பார் தரநிற் கயலேனு துதிக்குர் பாலி வனத்திறைவா
நன்பார் முதலிலட் டிருவுடையாய் நல்லா யெனக்கு நவிலாயே. (அ)

ஆயே யணைய பெருங்கருணை யரசே நின்னைப் புகழாம
லேயே மலடு கறந்துகறந் தினைத்தே ணினைத்தே னென்செய்கேன்
பாயே யரவாக் கொள்பவற்கும் பங்கே ருதற்கு மளப்பரியாய்
வேயே யனதோ ளுமைபங்கா விண்ணேயற் கழித்த லறனன்றே. (கூ)

அன்றே மலத்து மறைப்புண்டு கிடந்தேற்கு கருளாற் ருனுவாதி
நன்றே யருளி யுபகரித்தாய் நானே வந்த நலனறிவே
னென்றே புரையு மணிமாட மிலங்கும் பாலி வனச்செம்பொற்
குன்றே குன்ரூப் பெருங்கருணைக் கோவே யாவா கொடியேனே. ()

வேறு.

கொடியவ னெனினுங் குணமில னெனினுங் கோதறு நின்றிரு வடிக்கே
யடியவ னிவனென் றெடுத்துரை செய்வா ரகலிடத் தவர்பொது கோக்கா
னெடியவன் றுதிக்கும் பாலியூர்ப் பரமா நீங்கரு மும்மலத் தீதாடு
கடியவன் பிறப்புங் கலங்குநீ சிறப்பிற்கையுமா கடைக்கணித் தருளே.

அருளெனப் படுவ தெவற்றினுஞ் சிறந்த தறிபவுந் தகுதிய ரன்றி
யிருளெனப் படுவ திரிதராக் கொடிய வினமுதையா பெறுந்தகு தியன்சொன்
மருளெனப் படுவ தடைதராப் பாலி வனத்தார் பாகிலா மணியே
பொருளெனப் படுவ கிரியைஞான முமாய்ப் பொலியுகின் பூங்கழற் றுணையே.

துணையெனப் படுவ வுயிர்க்கள வரிய தொல்லெவெவ் வினைவரை தூளாக்கு
கணையெனப் படுவ நீந்தரும் பிறவிக் கருங்கடல் கடப்பதற் கமைந்த
புணையெனப் படுவ கட்டுவீ டென்று புகன்றிடப் படுவவே றில்லை
யிணையெனப் படுவ பாலியூர்ப் பெருமா னிருபதத் தாமரை மலரே. ()

மலர்தலே யுலகிற் பொற்கொழுக் கொண்டு வரகினுக் குழுவது செய்வேன்
பலர்புகழ் தருகற் ருவொரீஇக் கருங்கற் பசுவினைக் கறந்திடத் துணிவே
னலர்மதுப் பொழியும் பாலிமா வனத்தி லற்புக மெய்ப்பரஞ் சுடரே
கலர்கருத்தமையாதின்னரு ளென்ரே கடையனேன் கைக்கொணு ஞரையே.

உரைபல செறித்துக் களிபல புனைந்து முன்னடிக் கன்பிலே யென்னின்
விரைபடு தகையின் மலரெனப் படுமே மேதகு மருளமை யாத [ங்க
புரையில்செய் தவமு மொப்பெனப் படுமே புண்ணியப் பாலியூர் விள
வரைமக ளொடுநன் கமருவா யதனுல் வயங்குமன் படியனேற் கருளே.

அருந்தவர் புகழும் பாலியா ணியைத் தடைதரா ரடங்கலர் நடுங்கப்
பெருந்தவர் கிலேயாக் கொண்டகம் பெருமான்பேணிவாழ் பெருந்தளி புகுதா
ரிருந்தவர் பூமேற் கிடந்தவர் கடன்மே லெப்தரு மெய்யெழி னேக்கார்
வருந்தவர் கலக்க வவரொடுங் கலந்தமறுகுவார் பிறப்பென்னபிறப்பே.

பிறந்தவர் தமக்குப் பெருந்திரு வாளூர் பேசரும் பத்திமை யியற்றச்
சிறந்தவர் தமக்குச் சிறந்தகா ளத்தி திகழ்தரி தனஞ்செப்து பவஞ்ச
மறந்தவர் தமக்குச் சிதம்பர நிணக்கு மாண்பினர் தமக்கண்ணு மலேயே
யிறந்தவர் தமக்குக் காசியே யெம்மா னிருந்தருள் பாலிமா வனமே.

வனம்பயின் மார்பிற் கவுத்துவம் புனைவார் மாமலர்த்தவிசின்மே லிருப்பா
ரினம்பயி லமரர் குழாந்தலே வணங்க விருந்தரு நீழலில் வாழ்வா
ரனம்பயில் கழனி புடைபுடுத் தீதாங்க வளப்பிலா வளமைமைக் தறவேவார்
மனம்பயில் பாலி வனச்சிவ பரணே வழிபடு தொண்டுபூண் டவரே. ()

பூணுத லமைந்த பத்திய ருடலம் பொருளுயிர் மூன்றையு நல்கிப்
பேணுத லமைந்த வுறுதியர் சலியாப் பெருநிலே யாளருக் கல்லான்
மா ணுத லமைந்த வயிறுறுங் கயல்பாய் வளமலி பாலியூ ரமர்ந்த
கோ ணுத லமைந்த பிறைமுடிக் கணிந்த குருமணி வெளிப்படா தன்றே.

அன்றுமுப் புரமு நீறெழ நகைத்தா னுலடி யமர்ந்தொரு நால்வர்
கன்றுமெய்ப்பொருளே தெளிதரவளித்தா னடுங்கவெங்கூற்றினேயுதைத்தான்
றுன்றுமெய் யன்பிற் பணிபவர் முடித்தாள் சூட்டினுன் பாலிமாவனமு
மன்றுமெம்முளமும் வதிபவன் றன்மைவகுக்கிலேனுர்தன்மையதன்மே றை.

மே லு.

அன்றிளுர் புரங்கண் மூன்று மழலெழச் செற்ற செம்பொன்
மன்றிளுர் வளங்கூர் பாலி வனத்தினுர் வயங்கு வெள்ளிக்
குன்றினு மொருவெள் ளேற்றுக் கொடியினு ரடிகள் போற்றி
யொன்றினு ரன்றி மற்றே ருடலெடுத் ததற்பே றென்னே. (உக)

எண்ணரும் வணங்கி யேய்ந்த வெழிற்பெரும் பாலி யூர்வாழ்
பண்ணரும் புகழார் தெய்வப் பார்ப்பதி மணுளர் பாத
முண்ணரு மனத்த செல்லா முன்னரு மகிய நீரார்
பின்னரு மகிய ராகிற் பிழைப்பதெக் காலத் தேயோ. (உஉ)

ஓதரு முலக மெல்லா முறுமுறை யுதவ வல்ல
நாதரு மவற்றை யெல்லா நலமுறப் புரக்க வல்ல
நீதரு மவற்றை யெல்லா நிலையறத் துடைக்க வல்ல
போதரும் பாலி யூர்வாழ் புண்ணியப் புராண னுரே. (உங)

ஆணி சடையான் பாலி வனத்தம ரண்ண லன்று
காணி கொடிய நஞ்சங் கண்டத்துக் கொண்டி லாமேற்
றூணி படைப்பா ரெங்கே தகவது புரப்பா ரெங்கே
போரணி வயிர வாட்கைப் புலவரெங் கேசெல் வாரே. (உச)

வாரியே கருணைக் கென்றும் வான்றருக் குலமே வள்ளற்
பாரியே யென்று லோபர் பாற்கவி புனைவீர் வெற்பு
நாரியே யிடப்பால் வைத்த பாலியூர் நம்மான் சீர்த்தி
மூரியே யன்பிற் பாடின் முற்றுரு தொன்றுண் டாமே மா. (உரு)

மோகமாஞ் சலதி மூழ்கி முழுவினைச் சுருவாய்ப் பட்டுப்
பாகமாம் பத்தி யின்றிப் பாவியாய் வருந்த லாமோ
வேகமே யொருபான் மேவு மின்பமே பல்லு யிர்க்கும்
போகமே பொருளே பாலி நிழலமர் புனித வாழ்வே. (உசு)

வாழ்வினைக் கருதி மோக வலையகப் பட்டு முட்டாத்
தாழ்வினை யியற்றி யோவாப் பழிதலை சுமக்க லுற்ற
ஊழ்வினை யொழிந்து நின்பே ரருளெனு மெரப்பில் வாரி
யாழ்வினை யுறுத லென்று பாலியூ ரமர்ந்த தேவே. (உள)

தேவரு மகத்து வேந்துந் திருமல ரவனு மாலும்
யாவரும் காண வொண்ணை வெந்தையே யெனினு மன்பிற்
பூவரும் பிலையே தேனை புரிந்திட்டுப் போற்றி னப்போழ்
மீதவரும் வெளிப்பட் டும்மா பாலியூ ரிருக்குங் கோவே. (உஅ)

கோவண மறையாக் கொண்ட குழகனைக் கொழும்ப லாசப்
பூவண மேனி யாண்டப் பூவண நகரி ஞானத்
தீவண மாக மூன்னூர் செற்றசே வகனை நாளுங்
காவணப் பாலி யானைக் காண்பவர் கடவு ளாரே. (உசூ)

கடல்வினிம் புடுத்த ஞாலங் காவல்செய் சிறப்பும் வேண்டார்
மடல்கெழு கற்ப தாரு வானுல கிருப்பும் வேண்டார்
விடலரு மயன்மால் பீபாக வெள்ளத்துந் துணைய வேண்டா
ரடல்கெழு பாலி யண்ண லடியவர்க் கடிமை யாரே. (ஈ0)

மே வு.

ஆரேறு முடிப்பாலி யடிப்பிரான் கழல்பரசுஞ்
சீரேறு பெருஞ்சிறப்பிற் செம்மையர்கள் யாரெனினுங்
காரேறு மகவா னுங் கடிக்கமலத் தனுந்துவத்
தாரேறு புயத்தா னுந் தொழுத்தக்க தன்மையரே. (ஈக)

மையாரு மிடற்றிறைவர் வண்பாலி வனத்துறைவார்
பொய்யாருஞ் சிறுமருங்குற் புண்ணியப்பார்ப் பதிபாகர்
மெய்யாரு மடிக்கன்பு மேமவாதார் யாரெனினுங்
கையாரும் பலனுகக் கொள்வாகருங் கமிநமே. (ஈஉ)

நரகத்தே புகவிரும்பி நானிலமங் கையராசை
விரகத்தே மாழாந்து வீழுமனமே யிதுகேட்டி
யுரகத்தே சவிர்முடியா ரூழியிறு தியுமுடியார்
கரகத்தே மலர்க்கையார் பாலைவனங் கருதுவையே. (ஙஙூ)

கருந்தாது நிகராமென் கடைப்பட்ட மனங்குழையா
தருந்தாது கலஞ்சிறிது மந்தோவித் திறத்துளது
திருந்தாது போமென்னிற் செய்வதெவன் பாலைவனத்
திருந்தாது மலர்க்கொன்றைச் சடாமோலி யிறையோனே. (ஙூச)

இறையானும் பிறர்க்குரிமை யில்லாதெல் லாம்படைக்கு
மறையானும் புரவுபுரி மாண்பானு முழுதழிக்குந்
துறையானு மயக்கமிகத் துறுப்பானு மறுப்பானும்
பொறையானு நிறையானும் பொலிபாலை வனத்தானே. (ஙூடு)

வனத்தாணை யூர்தருமை வனத்தாணை யாடரங்காம்
வனத்தாணை யன்பருட்ப வனத்தாணை முடிக்கணிந்த
வனத்தாணை யூழியும்மெள வனத்தாணைப் பணிசெயும்பு
வனத்தாணை கெடும்பாலை வனத்தானைத் தொழனலமே. (ஙூசு)

நலமென்னு நயமென்னு நாப்பயின்ற கலியென்னுங்
குலமென்னுங் குடியென்னுங் கோத்திரசூத் திரமென்னு
மலமென்னு மருளென்னு மன்பென்னு மமைந்தபெருமை
புலமென்னும் பாலைவனப் புண்ணியனே வணங்கார்க்கே. (ஙூள)

வணங்காது நின்னடியை மறவாது பயில்பவரோ
டிணங்காது பாலைவனத் தெய்காது நின்விரதத்
துணங்காது சற்றுமன முருகாது நிரிகின்ற
குணங்காது மூடருமென் பெறுவரோ குணக்குன்றே. (ஙூஅ)

குன்றுத வனமுலையார் கூறுடையா யூழியினும்
பொன்றுத பெருஞ்சிறப்பிற் பொலிபாலை வனத்தரசே
யொன்றுத மனங்கொடுனை யொன்றியதொத் தேத்திடினுங்
கன்றுத பேரருளிற் கலக்குமா றெண்ணுகவே. (ஙூக)

எண்ணுதலிற் குறையில்லை யெண்ணியவா முன்றுனும்
பண்ணுதரு னிலையிந்தப் பாவிசெய லிதுவாலு
லொண்ணுதலோர் பான்மருவ வொண்பாலை வனத்தமருங்
கண்ணுதலே நின்னருளிற் கலப்பதுமெவ் வாறுளையே. (சஂ)

வே லு.

உளைசெ யுந்திற மொன்றுள தன்னதை யுளைத்திடக் கேணெஞ்சே
வளைசெ யுஞ்சிலை யாளணைப் பாலையூர் வள்ளலை வழுத்தாதே
விளைசெ யுங்குழன் மின்னனார் மயற்குழி வீழ்ந்துதாழ்ந் தழலவா யேற்
புளைசெ யும்பவத் துயரதிற் கழியுமோ புணருத லிலையின்பே. (சக)

இன்ப மேமியனப் பவஞ்சவாழ்க் கையிற்சுழன் றெய்த்திளைத் திடுநெஞ்சே
துன்ப மேமயலாற் கண்டது வேமிறவன் சொற்றியா லதுதீர்ந்து
நன்ப தாம்புய மாலவற் கரியவ னம்மனோர்க் கெளியன்கா
ணன்ப வாவுபூம் பாலீயூ ரண்ணலை யவாய்த்தொழு தமர்வாமே.(சஉ)

வாயி னுற்பல வுரைப்பரப் படிகிலை வாய்த்துமன் னுதலில்லை
யாயி னுற்பல னென்னோன் னெனுசமேம யஃதொரீ இ யன்புற்று
வேயி னுற்பெற லரும்பசுங் தோட்கயன் மிளிரரி மதர்ச்செங்கட்
டாயி னுற்பொலி பாகனைப் பாலீயூர் சார்ந்துபோற் றுதனன்றே. ()

நன்று சற்றுநீ ரெண்ணினீர் மண்முத னவில்பெருங் குடும்பத்தே
சென்று மற்றதி லழுந்துவீ ரென்செய்வீர் திருகுவெஞ் சினங்கொண்டு
கொன்று செற்றிடக் கூற்றுவன் குறுகிடிற் குவலயத் துள்ளீர்கா
ளென்று சென்றுநம் பாலீயூ ரிறைவனை யேத்துபு தொழுவீரே. (சக)

வீரம் வேண்டினு மணிமக வேண்டினும் விளைநில முதலாய
சாரம் வேண்டினு முலகெலாம் படைத்திடு தலைமைவேண் டினுங்காவற்
பாரம் வேண்டினும் பற்றறுத் துயர்கதி படர்தரு மதற்காய
வீரம் வேண்டினும் பாலீயூ ரிறைவனை யேத்துபு தொழினுமே. (சஎ)

தொழுதெ ழுந்துகை தலைமிசைக் குவித்திலை சொற்பதங் கடந்தாயென்
றழுது நெஞ்சநெக் குருகிலை யடியரை யஞ்சலித் தடைகில்லை
பழுது தீர்வதெப் படிமன மேபெரும் பாலீமா வனமேய
முழுது மாகிய தம்பிரான் றிருவருண் முயங்குத லெவ்வாறே. (சஎ)

எவ்வ மேபடி மலமுதன் மூன்றுமற் றின்பவீ டுறுபாக்குப்
பவ்வ நீர்விட முண்டகண் டணைப்பெரும் பாலீமா வனத்தானைச்
செவ்வ னேபணிக் திறைஞ்சிலை யென்செய்தாய் தீயவெங்கொடுநெஞ்சே
கவ்வ நோயுடற் பாஞ்சுமக் தலைதலிற் கதிவழி பெறலாமே. (சள)

மேவ லார்புரத் தழலெழ நகைத்தவன் வீடையுடைப் பெருமான்பொன்
காவ லாற்கொரு தீதாமுமை யுற்றவன் காமத கனஞ்செய்தீதான்
பாவ லார்புகழ் பாலீமா வனத்தவன் பணிபவர் தமக்கென்று
மேவ லார்மக வானயன் மாலென வியைத்திடு மிதுமெய்மே்ய. (சஅ)

மெய்யை மெய்யெனக் காணல ருண்மையா மெய்யையே யுறக்காண்பார்
பொய்யை யாதரிப் பார்முக நோக்குரூர் பொலிவுமே தகப்பூண்பார்
பையை மேவராப் பாயலான் முதலிய பலர்திருக் குறிக்கொள்ளார்
செய்யை மேவுநம் பாலீவ னேசனைச் சிந்திக்கு மடியாரே. (சகூ)

அடிய ராதலே நன்றுநன் றுள்ளமே யரவஞ்சு மிடியேற்றுக்
கொடிய ராதலிற் றுமரா மலராணைக் கோளரா தலிற்செங்க
ணெடிய ராதலி னிவ்வுரை கடைப்பிடி நிலவிய வெண்ணீற்றுப்
பொடிய ராவலிற் சூழ்பெரும் பாலீயூர்ப் புண்ணிய னடியார்க்கே. ()

வேறு.

அடியர் காணமன் றடிடு மழகர்வெண் ணீற்றுப்
பொடியர் வாளராக் குலந்தப புட்கொடி பொறுக்குங்
கொடியர் பாலீமா வனத்தவர் திருவருள் குறியாக்
கடிய செவ்வலி கொடுகடப் பார்பவக் கடலே. (௫௪)

கடல கத்திதழுந் தெங்கணும் பரந்தவெங் கடுவின்
மிடல டக்கிய கண்டனைத் தொண்டரை வெருட்டு
மடல் படைத்தவெங் கூற்றினைப் பாற்றிய வவரை
யுடல் படைத்தபே றுறத்துதி பாலீயூ ருற்றீரே. (௫௫)

உற்ற செஞ்சடை யொருபுற மொருபுறங் கருமை
செற்ற பூங்குழ லொருபுறங் கழன்மணிச் சிலம்பு
பொற்ற வோர்புறம் புலியத ளொருபுறம் பட்டு
மற்ற வோர்புறம் பாலீயூர் மருவுமெம் மாற்கே. (௫௬)

மாலு நான்முகத் தொருவனும் விலங்குரு வாய்த்துங்
கோலும் வார்சிறைப் புள்ளுரு வாகியுங் குணங்கள்
சாலுந் தாண்முடி கண்டில ராயினுந் தனித்தோர்க்
காலும் பாலீயா னெத்திறத் தினுமெளி யவனே. (௫௭)

எளிய னன்பருக் கெங்கணு மாய்நிறைந் தியலு
மொளியன் மாமறை முடியம சொப்பிலா னந்தக்
களியன் பாலீயூர்க் கருத்தன்மா நடம்பயில் பரமா
வெளிய னென்பவ ரிம்மையே யடைவது வீடே. (௫௮)

வீடு வேண்டினு மெய்துவர் விண்ணகம் புரக்கும்
பீடு வேண்டினு மெய்துவர் தனதனிற் பிறங்கு
மாடு வேண்டினு மெய்துவ ரயனரி வாழ்க்கைப்
பாடு வேண்டினு மெய்துவர் பாலீயாற் பணிந்தே. (௫௯)

பணியுந் திங்களுஞ் பயின்றரா செஞ்சடைப் பரமா
வணியும் பாலீயூ ரண்ணலே யன்றெரு தரும்பாற்
றுணிய வானவர் வலிதவி யளக்கர மின்னைத்
துணிய வோர்ந்திலர் யாங்களோ வுணர்பவர் சொல்லே. (௬௦)

சொல்லத் தக்கது நின்புக ழுடைமையிற் றுணிந்து
புல்லத் தக்கது நின்கழல் புண்ணிய மிகையால்
வெல்லத் தக்கது மலர்திருப் பாலீயூர் விமலா
கொல்லத் தக்கது கூற்றினை நலங்குறிப் பவரே. (௬௧)

குறிகு ணங்கடக் தவனிரா மயன்சூணக் குன்ற
னறிவன் ஞாதுரு ஞானதீ ஞ யங்களற் றறுக்க
மறிவி னன்னிலை யாளருக் கெளிமைய பாலீனுன்
பொறிவி ளங்கிய பாலீயூர் மருவுமற் புகனே. (௬௨)

அற்ப வாழ்வினை மதியன்மி னலரகத் தமர்வான்
கற்ப மெண்ணில கண்டமர் பாலியூர்க் கடவுள்
சொற்ப தங்கடந் தவன்றுணை யடிமலர் பற்றி
நிற்ப வுண்டுகா ணிகரினின் மலப்பெரு வாழ்வே. (கூ0)

வே று.

வாழ வேண்டிய வையகத் தீர்வினை
போழ வேண்டினும் புந்திகொள் ளீரின்பத்
தாழ வேண்டினு மையன்பொற் பாலியூர்
சூழ வேண்டித் துணிந்து நடமினே. (கூக)

நடலை வாழ்வினை நம்புத லோவுமின்
சுடலை சேர்ந்து சுமந்த வுடற்பொறை
யடலை யாமுனம் பாலை யடித்துவேல்
விடலை தாதையைப் போற்றி விழைமினே. (கூஉ)

விழையு மால்வரை மெல்லிய லாளொடுங்
தழையு மால்விடை மேல்வரு தம்பிரான்
குழையும் பூவுங்கொள் பாலியைக் கூடிலோ
ருழையு மொண்மழு வுந்தரு முண்மையே. (கூங)

உண்மை யோதி யுளங்குளிர் வித்தியால்
வெண்மை மேய வினையுடை யேனுக்குப்
பெண்மை மேவிய பாகப் பெருந்தகாய்
வண்மை மேவிய பாலி வனத்தனே. (கூச)

வனத்தை மேவி வளர்முத லுண்டுடற்
கனத்தை வாட்டுத லாற்பயன் காண்பதெ
னனத்தை யார்வயற் பாலியு ணண்ணல்பான்
மனத்தை வைத்துண் டுடற்பிணி மாட்சியே. (கூடு)

மாட்சி மேவிய பாலி வனம்பர
ணுட்சி யென்ப தறிந்தன மாங்குமீ இக்
காட்சி யெய்திக் கலந்து களிப்புறப
பூட்சி வீழுமுன் போதுவம் வாநெஞ்சே. (கூசு)

நெஞ்ச மேயிது கேணி னினைப்பெலாம்
வஞ்ச மேயது மாற்றி வயமுறு
மஞ்ச மேபொலி பாலி யரன்கழ
நஞ்ச மேகொள் சமானநிற் கில்லையே. (கூள)

இல்லை யுண்டென் றிசைக்கு மமணர்முற்
றிருல்லை வல்வினை யாளர்தஞ் சொல்லொரீ இ
யல்லை நேர்களத் தண்ணறன் பாலியூர்
நல்லை மேவினெஞ் சேநலம் வாய்க்குமே. (கூஅ)

வாயுங் கையு மனமும் படைத்தணி
தாயுந் தந்தையு மாய சதாசிவ
னேயும் பாலி யிடந்துதி செய்பணி
தேயு மாறெண் ணுயிரே துலங்கவே. (கூக)

வேத நான்கும் விரித்துரை செய்யவும்
போதம் வேறு பதிகர் புலமதஞ்
சாத மென்றடை யோர்த்தமை பாலியூர்
நாத னுரடித் தெரிண்டு நயப்பமே. (எ0)

வேறு.

நயமலி பாலியூர் நங்கள் கோன்மறை
வயமலி பரிமிசை வருபி ரானடிக்
குயமலி பத்திசெ யுண்மை யாளரே
சயமலி முத்தியிற் சார்ந்து வாழ்வரே. (எக)

வளைவரு பார்ப்பதி மணாளன் பாலியூர்
விளைவரு கொன்றையான் விழையும் பாதமே
திளைவரு பவக்கடற் செறிந்து வீழ்ந்தவர்
களைவரு தகைமைசக் கலிமென் பாரரோ. (எஉ)

அரவணி சடையணி யாழி யேந்துபு
புரவணி விடையணிப் புகுந்து பாலியூ
ருரவணி மதியினன் குவப்பப் போற்றுவா
ரிரவணி கருமல மெமக்கு மாற்றுவார். (எங)

வாரணி வனமுலை மங்கை பங்கணி
நீரணி பாலியூர் நிமல னீக்கடற்
காரணி கண்டனீக் கைதொ ழாதவ
சோரணி யுடல்பொறை யிக்கப் பூமிக்கே. (எச)

மிக்கவர் பாலியூர் விமலர் மார்பணி
யக்கவர் புகழ்விரும் பாத மூடர்துன்
பக்கவர் குழிவிழாப் பதைப்ப ரின்பத்துப்
புக்கவ ருய்வதெப் போது தேரிலே. (எடு)

தேர்வரு கதிர்மதி செய்ய தீயெனப்
போதரு கண்ணினர் பிறங்கும் பாலியூ
சோர்தரு மாபணிக் திறைஞ்சி னென்செய்வான்
கார்தரு கடாமிசைக் கடுகுங் காலனே. (எசு)

காலனைக் காய்ந்தசெங் கால னைத்திரி
சூலனைப் பாலமா வனத்துத் தோன்றலைச்
சீலனை யன்றறந் தெரிப்ப வைகிய
வாலனை யறிதரா ரறிவென் னுவதே. (எஎ)

ஆவது மழிவது மவன தாணையென்
றேவருங் கொள்ளநீ யிகலி யென்செய்தாய்
மாவது மலர்செறி பாலி வள்ளரு
ளோவரு மன்புபூண் டுறத்தொ ழாய்நெஞ்சே. (எஅ)

சேவுறத் திகழ்பவன் றிகழும் பாலியூர்
மேவுறத் திருவரும் விஞ்சை மேவிடும்
பாவுறச் செறிமல பந்த நீங்கிடுந்
தேவுறற் கருங்கதிச் செல்வ மெய்துமே. (எகூ)

எய்த்தனம் பாலியூ றிறைவற் கன்புளம்
வைத்தன மும்மல வாழ்க்கை யார்தமைப்
புய்த்தனம் வேமிரு புந்தி செய்கிலோ
முய்த்தன மனமவ ணெளிசெய் தாள்கட்கே. (அ0)

C வது.

காள தாமரை தையும் பாலியூர்க்
காள கண்டனுர் கரும லந்தவிர்க்
காள வல்லர்நா மங்கு மேவியே
நீள வின்பமார் தருவ நெஞ்சமே. (அக)

மேலை நாள்வினை முழுதும் வீகரு
மாலை வார்குழன் மடந்தை பாகனைச்
சேலை சூழ்குயிற் றுழனி யோங்கிடும்
பாலி யூரிடைப் படர்ந்து போற்றினே. (அஉ)

போற்றி வானவர் துதிக்கும் புண்ணிய
னுற்றி யைந்தொழி லருணை டாத்துவோன்
பாற்றி வெவ்வினை பாலி வாழ்பவ
னீற்றி நம்வினை நிரப்பு மின்பமே. (அங)

இன்பம் வேண்டுமே லீது செய்ம்மினே
துன்ப மேவிமா ழாந்து சோர்தரீ
ரென்ப ருகபூ ணிறைவன் பாலியூ
ரன்ப சோடினி தடைந்து வாழுமே. (அச)

வாழி பாலியூர் வைகு மெம்பிரான்
சூழி யானைக்தோல் போர்த்த சுந்தரன்
வீழி வாயுமை பங்கன் மென்கழற்
சூழி னல்லதை யின்பஞ் சாருமே. (அஞ)

சாரு வாகமே யாதி சார்ந்துளீர்
தேரு மாறிலா தலைதல் செவ்வியே
யோரும் பாலியூ ரொருவன் மூளினை
கூரு மன்பராய்க் குறிக்கொண் மெய்ம்மினே. (அசு)

மின்னே நேர்தரத் தோன்றி வீங்திடு
மென்னே யிவ்வுட லெண்ணி லீர்கொலோ
பொன்னே நேர்சடைப் புனிதன் பாலியூ
ரன்னே பாகனே யடைத னன்மையே. (அள)

ஏல வார்குழ லிறைவி பாகனைக்
கால காலனைக் காள கண்டனைப்
பால வாள்விழிப் பாலி யூரனை
யேல வேத்துவார்க் கில்லை துன்பமே. (அஅ)

துன்ன லார்புரஞ் சுட்ட வெம்பிரான்
பன்ன லாருளம் பதித்த ராதவ
னன்ன மார்வயற் பாலி யண்ணலைச்
சொன்ன பேரெலாங் தூய முத்தரே. (அசு)

முத்த ராகுவர் மூட ராயவுன்
மத்த மோடளாம் வாஞ்சை நீத்தெழீஇப்
பத்தர் தம்பிரான் பாலி யூர்புகுஞ்
சித்த ராவரேற் றேவர் போற்றவே. (கo)

வே று.

போற்றுநெடு மாலயனுக் காரியாணப் பெரியாணப் புவன மெல்லாஞ்
சாற்றுபவன் முதலாய வரியபெய ருடையானைத் தரணி வேத
மாற்றுநெடுந் தேர்பரியாக் கொண்டானைப் பாலிவனத் தமர்ந்து பல்பூ
வேற்றுமலர்க் கருள்சுரக்குமவனெயெண்ணுதித்தனைகா ளிரித்தோம் வீணை.

வீணுக நாள்பலவுங் கழித்தனம்பொற் பாலியூர் விரும்பிச் சார்ந்து
நீணுகம் பூண்டாணைக் கண்டிறைஞ்சி யவனடியார் நேயத் தாழ்ந்து
கோணுக மொழிதரத்தீர்ந் தேதன் றுபணி விடைபுரிந்துகுலவப் போற்று
தாணுகப் பிறந்ததனுக் கிவ்வுலகி லெட்டயனை யடைந்தாம் யாமே. ()

அடையாணை யுரிபோர்த்த பெருமாணை யொருமாணை யங்கை யேந்துஞ்
சடையாணை வெஞ்சூலப் படையாணை யுலகமெனத் தக்க யாவு [த்த
முடையாணை நெடும்பாலி வனத்தாணை யெழுவிடையு மொருங்கு சாய்
விடையாணைப் பூசிக்கப் பெற்றவரே நற்றவர்மேன் மேலுந் தானே. ()

மேலாய பொன்னுலகிற் சுதன்மையடைந் தைந்தருவின் விழையு நீழற்
பாலாய வரியணைமே லிருந்திய முதலனைத்தும் பணியின் மேவ
மாலாய வரமகளிர் போகதுகாந் திருப்பதினும் வளமை மேய
தாலாப பாலிவனத் தழகனடி தொழுதைய மருந்தும் பேறே. (கூச)

அருந்தவம்பன் னூறும்வன மாதியமேதத் திருந்துநனி யடைந்தா ரேனு
பெருந்தவமா மறைபலகற் ரு ரெனினு மகம்புரிந்த பெரிய ரேனு [ம்
மிருந்தவர்சூழ் பாலிவனத் தெம்மானுக் கன்பினரா யெழில்வீபூதி
பொருந்தவிர் கண்மணிபூ ணுதவரே லவரெமக்கோர் பொருளா காரே.()

பொருளாகக் கொலைகளவு முதலியபா தகம்புரியும் புலைய ரேனும்
வெருளாகத் தொழுமுதலாப பலநோயு மீடழிக்கும் வீண ரேனு
மிருளாகத் திலர்பாவு பாலிவனப் பெருமானுக் கென்றுங் தீராத்
தெருளாகப் புரியன்ப ரெனினவரே நமையாளுந் தேவன்றேற. (கூசு)

அன்றுமதி லொருமூன்று மழலாட நகைத்தநினக் கரிதோ நாயேற்
றுன்றுகொடு மலமூன்றுந் துகளாக நகைததிடுதல் சொல்லாய் வஞ்சக்
கன்றுகொடு களியுருத்தோன் காணுத பாலிவனக கடவு ளேறே
மன்றமறை முடியுநிறை வளரொளியே பெருங்கருணை வாழ்க்கைக்கோவே.

கோவேநின் புகழ்பாடேன் பாடுவார் கூட்டத்துங் குறுகே னெங்க
டேவேயென் றுனைத்துதித்துன் றிருவடிசேர்ந் தவரடியுஞ் சேவித் தேத்தே
னேவேபோன் றெளிராவிழியார் மயலலையின் மூழ்கிடுவ தென்று மென்றூற்
பூவேசெய் பாலிவனப புண்ணியா வுய்யுநெறி புகனு வாயே. (கூஅ)

வாயினுற் பலபுகல்வோம் புகன்றவழி யேகடக்கை மறந்தோ மிவ்வா
ருயினு ளினிச்செயலென் னஞ்சேலென் றிரங்கியினி தருள வேண்டும்
வேயினுற் புரிபசுந்தோ ளுமைபாகா விடைபபாகா விண்ணந தோய்ந்து
காயினுற் பொலிபாலி வனத்திறைவா கடவுளர்தங் கடவு ளானே. ()

ஆனேறு கொடியுயர்த்தாய் திருப்பாலி வனத்தரசே யடியார் வாழ
மீனேறு கடலுலகி னெடுங்கருணை மழைபொழியு மேக மானாய்
மானேறு கரதலத்தா யெனக்கடங்காப பெருவாழ்வும் வானஞ் சூழுங்
காலேறு பெருங்கதியு நெடியமால் காணுநின் கமலப் பூவே. (கஅ0)

பாலிவனபபதிற்றுபபத்தந்தாதிமுற்றிற்று.

---

*சிறப்புப்பாயிரம்.

அருள்பழுத்த சிவபெருமான் பரமோக மன்பர்தமக களிப்போ னஞ்சின்
கருள்பழுத்த மிடற்றுன்பா லிப்பதிற்றுப் பத்தந்தா தியிணைக் கல்லா
விருள்பழுத்த மனத்தினரை யெவ்வறிவு முடையரென வியற்றுந் தூய்மைத்
தெருள்பழுத்த மீனுட்சி சுந்தரநா வலனினிது செப்பி னானே.

---

* இதனை இயற்றியவர்பெயர்தெரியவில்லை.

கணபதி துணை.

மதுரைத்

திருஞானசம்பந்தசுவாமிகள்

பதிற்றுப்பத்தந்தாதி.

—→**←—

விநாயகர் துதி.

ஓத வினிய தமிழ்க்கூட லோங்கு ஞான சம்பந்தர்
பாத யுகமே லொருபதிற்றுப் பத்தந் தாதித் தொடைசாத்தப்
போத மலர்ந்த ரினிதுதவும் பொல்லா விணையிற் புக்குமுலு
மாத ரகஞ்சா ரானைவொருகோரட் டாம்ப லடித்தா மரைமலரே.

நூல்.

சீர்பூத்த திருமுகமுஞ் சேதலிமூலப் பால்பூத்த செய்ய வாயு
மேர்பூத்த வருள்பொழியு மிருவிழியும் பொற்றுளை மேந்து கையும்
பேர்பூத்த தமிழ்க்கூடற் றிருஞான சம்பந்தப் பெருமான் செம்பொற்
றூர்பூத்த சிறுதண்டைத் தாளுமுளத் துள்ளிவிணை தள்ளி வாழ்வாம்.

வாழிநெடு வழுதிபுறக் கூனிமிர்த்த நினக்கரிதோ மாருச் சன்ம
வாழியுழல் வேனகக்கு னிமிர்ப்பதுதென் கூடலம ரமல வாழ்வே
வீழியித முமையளித்த வள்ளநிறை பரஞான வெள்ள முண்டாய்
காழிவளர் மாமணியே கவுணியர்தங்கற்பகமே கலைவ லோயே. (உ)

கலைபுகழா யிரமுகத்தெய் வதமந்தா கினியுடைய கடவுண் மற்றை
யலைபுனலாட் டவுமகிழு மதுபோற்றென் கூடலகத் தன்பர் வாழ்வே
விலையில்கவு ணியமணியே வேதாதி முழுதுடைய விமல நீயோ
தலையடையாச் சிறியேன்செய் புன்றுதிக்கு மகிழ்கூர்த றக்க தாமே.

தக்கபடி யன்றியிரும் படியிடத்து வரையுருட்டிச் சலதி மோது
மிக்கபுனற் பேர்யாற்றில் பல்லோருங் கரையேறி விளங்கச் செய்தாய்
தொக்கசுவைத்தமிழ்க்கூடற்கவுணியக்கன் றேயொருவேண்டுரைதர்ந்துகாளும்
புக்கபவப் பேர்யாறுங் கரையேறச் செயினினக்குப் புகழன்றுமோ. ()

புகழ்பாவு தமிழ்மதுரைப் புகலிகா வலசலசப் பூந்தார் மார்ப
நிகழ்கருணைக் குவமறை நிறைசெல்வ பரஞான நேய வாய
வகழ்விணைய ருளத்தமரு மமசிறு சிலம்பொலிக்கு மம்பொற் றூள
திகழ்விணையி லமணரென வடியன்மல நினக்கெதிராய்ச் சிதைவ தென்றோ.

என்றுநிகர் மணிமாடக் கூடலிட மோவிணையி லெண்டோ ளம்மா
னன்றுதிரு வரத்துறையி லளித்தமணிச் செவிகைகொலோ வருநோன் புற்று
நன்றுமிகு சிவபாத விருதயர்தந் திருத்தோளோ நாயே னுள்ள
மொன்றுதலி னீயுறைய மழவிளங்கன் றேமணியே யுவட்டாத் தேனே.

தேனுார்க்கு மலர்த்தடத்து மோட்டெருமை பாயவெரீ இச் சினத்த வாளை
கானுர்க்குங் கற்பகத்தின் கழுத்தொடிய மீப்பாயுங் கணிசூழ்கூடல்
வானுர்க்கும் பெரும்புகழாய் வண்புகலிப் பெருந்தகையே மறையோர் பேறே
யானுர்க்குங் குடியல்லே னினக்கடியே னுய்யுகெறி யருள்க வின்றே. ()

அருண்மிகுபொற் றில்லேமூ வாயிரருங் கணநாத ராக வாங்கே
தெருண்மிகுகன் னிலகண்டப் பாணருக்குக்காட்டியநீ தமாஞ்சோலே
பொருண்மிகுவிண் ணுலகளக்கும் புகழ்க்கூடற் சம்பந்தா புலவரேறே
வெருண்மிகுநா யேன்காணவொருநிலைக்காட் டாதிருக்கும்வி தமற்றென்னே.

என்னையிவன் றனையடிமை கொள்கென்பா னடியார்தா மில்லையோவென்
றன்னையஞ் யாய்கூடற் சம்பந்தா நீநின்னே லலகி லாச்செம்
பொன்னையுடை யாருளதன் வாலவவெறுத் தாருமெவர் புத்த ராதீனர்
முன்னையடி யாராகக் கொண்டவனு மீயன்றி மொழியின் யாரே. (கூ)

மொழியுமறையாயிரமு மெண்ணிறந்த மறையோர்க்குமொழிந்தாசங்கை
யொழிதரவைந் தெழுத்துமே யந்தியின்மந் திரமென்று முணர்த்திநின்ரு
பொழிறவப்பூஞ்சோலைப்புகழ்க்கூடற்சம்பந்தர புகலைடைந்தேன்[னே.
வழிதருமத் தீணைவேண்டா வைந்தெழுத்தே யுணர்த்துகெனின் வருத்த மென்

வே று.

வருந்துபொய்ப் பலஞ்ச வாழ்க்கையை மதித்துன் மலரடி யிணைமதி யாதே
யிருந்தஞர்ப் பிறந்தை யுற்றுமுழல் வேன்கொ லின்னமு மிடையறு வன்பி
னருந்தவர்க் கரசே யாலவா யமுதே யருட்கவு ணியர்குலக் கன்றே
திருந்துபல்லோர்க்குஞ் சிவகதிப் பரிசு சேர்தர நல்குதே சிகனே. ()

தேசினுற் பொலிகின் றிருமணத் தடைந்த செழுந்தவத் தவரொடும் வீரைந்து
கூசிலா தடியே னடைந்திலே னடையிற் குலவுவா னவர்க்கெலா மரிய
வாசிலாப் பதப்பேறெளினி முன்னியாவதென் ஞவவெண்செப்பீகன்
மாசிலா மணியே மதுரைவாழ் தருவே வளர்கவு ணியர்குல விளக்கே.

குலவுநின் கருணை பெரியர்பா லன்றிக் குணமிலாச் சிறியனேன் பாலு
நிலவுறப் புகுதல் வழக்கருண் மதுரை நிறைதிரு ஞானசம் பந்தா
மலர்தலை யுலகில் வருபெரு வெள்ளம் வாரிவாய்ப் புகுவதே யன்றிப்
புலர்தரு முறவி யணையி னுமோடிப் புகுதனீ யறிந்திலாய் கொல்லோ.()

கொல்லையானுகைக்குங் குழகனரிடப்பால் குடிகொளுங்கோதைமெல்லருப்பு
மூல்லேநேர் நகையாண் மூலைபொழி தீம்பான் முற்றுமுண் டாங்குமிழ்தாங்கு
வல்லமா மறைநற் றமிழ்பொழி மதுரை வள்ளலே புகலிமா மணியே
யில்லையன் பென்பா லாயினும் புரத்தி லிலகுநின் னருட்கியல் பன்றே.

இயறெரி புலவர் புகழுமோத் தூரி லேற்றுவன் பணியெலா மிலகி
மயலறு கதியிற் புகவருள் புரிந்தாய் மற்றவை செய்தவன் பென்னே
புயறவழ் குடிமி மாளிகை மதுரா புரியுறை முத்தமிழ் விரகா
வுயலுற வெண்ணெய் மங்ஙன நிணைந்தாண் நின்னடி யிருத்துத லழகே.()

அழகிய மயிலே யத்தியைப் பூவை யரசுசெய் கணியுத வாமை
பழகிய பெண்ணே பலவுமின் குரும்பை பலகொளப் பாடினே பற்பல்
கழகமுற் றேறுங்கு மாலவா யமுமேத கவுணியர் பெருங்குல விளக்கே
மழவிளங்களிறேயென்மனந்திருத்தின் மற்றுமப்புகழொடொன்றுமே.

ஒன்றுவெங் காமம் வெகுளியுண் மயக்க மோங்குமும்மதமெனக்கொண்டு
கன்றுமென் மனமாங் களிறகல் பவஞ்சக் காடெலா முழிதரு மதனே
வென்றியா னடக்க வலியிலா மையினுன் மேதகு கூடலென் றுணைக்குங்
குன்றில்வாழ் தெய்வக் குருபர சமய கோளரி சரணடைந் தனனே.()

அடையல ரஞ்சுஞ் சூற்படைச் சொக்க ரங்கயற் கண்ணியோ டமர்ந்த
நடைகொழு கூட னன்மறைக் கொழுந்தேகண்ணினர்க்கெய்ப்பினில்வைப்பே
யிடையரு வன்பி னெண்ணினார் குழுமி யேத்துநின் சுந்தா னந்திற
கடையனேன் புரியன் பறுதுதி நாணங் கழித்தெதி ரடையவும் பெறுமே.

பெறலருஞ் செல்வ நின்னடி யேத்தும் பெருமையே யென்பது தெரிந்துந்
திறல்கொண்முற் றவமில் லாமையால் வருந்தித்திகைத்திடுகெஞ்சமென்செய்
னறவருள் விளக்கே யாலவா யமுமேத யற்புதக் கற்பகக் கனியே [கே
புறவவண் களிறே போற்றுவார் பொன்னே பொங்குபேரருட்பெருங்கடலே.

கடல்விளிம் புடுத்த கண்ணகன் புவியிற் கழிதருபொய்யெனுமெய்யை
யடன்மிக யானென் றவாய்விணைச்மிழிப்புண்டவத்தைகடொறும்புகுமடியே
னுடலபி மான முதலிய வெறுத்துன்னெண்கிலம் படியடை குவனே
மடல்விரி கமல வாவிசூழ் மதுரை மாநகர்க் கவுணியக் கன்றே. (உ0)

வேறு.

கன்றி யொருவே னிவண்வருந்தக் கடவ ளெனவங் கயற்கண்ணி
யொன்றி மகிழு மொருமுதல்வ னுறைதென் கூடற் சம்பந்தா
துன்றி வருத்து குளிர்க்கஞ்சித் தொண்டர் குழுமி முறையிடுமு
னன்றி யுதவு நீலகண்ட நவின்று தீர்த்த நலமீலாயே. (உக)

நல்லாய் கூடற் சம்பந்தா நல்லார் போல நமைத்தொழுநீ
கல்லா யென்று கைவிட்டாற் கடையே னுய்யு நெறியுளதோ
செல்லா மழைபெய் யாதொழியிற் றிரைசூழ் புவிக்குய் வகையுண்டோ
வல்லா யுறவென் னூழுதய மாகா விடிற்கண் ணறிவிதவன். (உஉ)

அறிவ தறியும் வகையுணர்த்தி யால வாயி னகத்தொருநீ
செறிய வுறைத லாற் புகலித் தேவா வடியர் சிறந்துய்ந்தார்
வெறிய ஞயி னேனெருவேன் வெய்யோ னுதயத் தெவர்விழியுங்
குறிகொ ளொளியே யடையவிருள் கூகை விழிக ளடைவனபோல்.(உக)

அடைய வினிமை யருளுநின்பொன் னடிக ளடைந்தே னதற்கேற்ப
விடைய ருத வன்பிலே னெனினுங் கூடற் சம்பந்தா
தடையி லடியா னினக்கென்றே சாற்ற நிற்ப தெனையுலகர்
மிடைசில் லுறுப்பி லார்தமையு மக்க ளென்றே விளம்புதல்போல். (உச)

விள்ளுங் கருணைப் பெருந்தகையே விண்டாழ்பொழில்சூழ்வியன்மதுரை
யுள்ளு மடியே னுள்ளுமுறை யொருவா பெருமுத் தமிழ்விரகா
தள்ளு மமணர் குலகாலா தண்டைத் தாளா தணிமுதலே
துள்ளுங் கயல்சேர் வயற்புகலித் தோன்ற லென்முன் றோன்றுமே. (உடி)

தோன்றுப் விழிமுன் மனமாசுக் துடையா யென்னே வருந்திமன
மான்று யெனும் வாய்மலராய் மன்னன் றென்னன் மதுரைவளர்
சான்றுப் பெருமா னிடப்பாகத் தையன் முலைப்பா லுண்டுடனே
கான்றுப் போலின் றமிழ் பொழிந்த கருணைநிதியே யிதுதகவோ.(உசு)

தகவே யென்னுன் சரண்புகுந்தேன் றள்ளி விடாமே வல்லாயோ
நகவே திரிவா னடியார்போ னடிக்குங் கன்வ னிவனம்பாற்
புகவே தகானென் றுளத்தெண்ணல் புகழ்த்தென் கூடற் புகலியாய்
மிகவே யலைசெய் வாரியுள் விளைந்தங் கணாே ரும்புகுமால். (உஎ)

புகுமே பிறந்தை யென்பா லும்போமே பொறியின் வாய்மனமு
நகுமே சகமு மெனைநோக்கி நண்ணு மேயுண் மயக்கமுநீ
தகுமே யென்று தடித்தாளிற் சம்பந் தாதோ மொருமூன் றுஞ்
செகுமே லவர்க டொழுங்கூடற் றேவா குரவர் சிகாமணியே. (உஅ)

மணியே யணையாய் திருப்புகலி மறையோர் பேறே மதுரைநகர்க்
கணியே தேசர் பலரையுநீ யடிமை கொண்டா யதற்காகத்
தணியே முனிவென் றுனைவெறுக்கத் தக்கார் சிலரு மிருந்தாரோ
துணியே யெனையு மடிமைகொளத் துணிந்தால் வெறுப்பரெவரையா.()

ஐய வபஞ னெடுமாலா லளந்து காணப் பரம் பொருளைத்
துய்ய வொருகை விரலாலே சுட்டிக் காட்டுஞ் சம்பந்தா
வைய மதிக்குந் தென்கூடன் மணியே வயங்கு பொற்றூளக்
கைய வுண்ணெ யெனக்கறியக் காட்டி லதுவே போதுமால். (ஈo)

வேறு.

போதுசெறி பிரமபுரப் பொய்கையதன் கரையிடத்துத்
தாதுசெறி மலர்ச்சீசாலித் தண்கூடற் சம்பந்தர்
யாதுசெய்தீ கண்ஞான வமுதுண்ட நாளமண
சோதுகொடுங் கடியவிட முண்டார்போன் றுலகந்தனோ. (ஈக)

உலையாத புகழ்க்கூட லுவமையின்முத் தமிழ்விரகர்
கலையாரு மதியணைய காமர்மணிச் சிவிகைமிசை
யிலையார்தண் பொழிலுலக மேத்தவே றியஞான்று
கொலையாரு மனத்தமணர் கூர்ங்கழுவே றினரொத்தார். (ஈஉ)

ஒத்தபுக ழாலவா யுறையுமறைக் கவுணியனூர்
சித்தமகிழ் திருமுனைழு திருச்சின்னப் பெருக்கோசை
வித்தகமி லமணருக்கு வெங்கூற்றி னெசைகொலோ
சுத்திரவம் மறலிகடாக் குலோசை யோவறியேம். (கூக)

அறிவுருவ னுலவா யண்டகமுத் தமிழாளி
செறிதிழல்செய் மணிமுத்தின் சிவிகைகுடை செழும்பந்தர்
பறிதலைய சூற்றுவாய்ப் பதகர்முதற் பரசமய
வறியருக்கு வேணில்வெயில் வயங்குதலொத் திருக்குமால். (கூச)

இருக்குமுத லோதாம லெளிதுணர்ந்த கவுணியர்கோன்
குருக்கிளர்சண் பையினின்றுங் கூடலடைந் திருந்தவுடன்
றருக்கமிகப் பேசுமயிர் தலைபறித்திட் டுழலமணக்
குருக்கள்புவி நின்றுகழுக் கூடலடைந் திருந்தனரோ. (கூடு)

இருந்தவர்க ளேத்தெடுக்கு மெம்மிறைமுத் தமிழாளி
யருந்தமிழ்நா வலருறையு மாலவா யமரண்ணல்
பொருந்துதிரு மறைக்காட்டிற் புகல்சதுர மறைப்பாடல்
வருந்துமனப் பரசமயர் வாயடைத்த பாட்டன்றோ. (கூசு)

பாட்டுவெரிச் சுரும்புளரும் பைம்பொழிலிற் பசுமயிலிற்
கோட்டுமுலீ யார்பயிறென் கூடன்மறைக் குலக்குருவோ
வாட்டுவினை கடிமயிலே மட்டிட்ட வெனப்புகல்பா
வூட்டுபுகழ்ப் பெருஞ்சைவர்க் குயிர்கொடுத்த பாவன்றோ. (கூஎ)

அன்றுகனி வொடுபோக மார்த்தபூண் முலையாண்மற்
றென்றுகவு ணியர்மதுரைக் கிறைவரரு ளியபதிக
நன்றுசெறி நெறியொருவா கல்லறிவி னோர்முகங்கட்
கொன்றுபொலி வுறுத்தியதே லுவமையதீ குளதாமோ. (கூஅ)

உளரனிவண் பொழின்மதுரை யொப்பிலா மணிபுகலிப்
பளகில்கவு ணியக்கன்று பாலரு வாய்க்குருவோ
வளமலிபா சுரமொன்றே வான்சைவ மீண்டற
வளவிலமண் கழுவேற வாற்றெதிரோ நியதமம்மா. (கூகூ)

மாமேவு திருவால வாய்ஞான சம்பந்தர்
பூமேவு திருக்காத்தாற் புரிந்தளித்த திருநீறு
கோமேவு வழுதியுடல் குளிர்தரச்செய் தாங்கிருந்த
தீமேவு தொழிலமணர் சிந்தையில்வெப் புறுத்தியதே. (ச0)

வேறு.

தேவர் தானவர் சித்தர்வித் தியாதரர் திசைபுரப் பவர்மற்றும்
யாவ ருள்ளவ ரவரெலாம் வந்துவந் தடியினீண் டொழுமேவு
மூவர் தம்பிரா னுலவா யினிதமர் முத்தமிழ் விரகாயான்
பாவ சோடுற வற்றுழ லாதுநின் பதத்துற வுறவுன்னே. (சக)

உன்னு வார்பிறப் பொழித்திடு மொருவனீ யுத்தமர் பெருமானைப்
பன்னு வார்க்கினிப் பரனெமெய்ஞ் ஞானனின் பாலரு வாயானீ
மன்னு வார்பொழின் மதுரையா சிரியனீ வழிபடா தவரொல்லாக்
தன்னு வார்பிறப் பொழிவரோ வொழிதரார் தொழுதவத்தவரேனும்.(1)

தவரெனப்படு வார்களு மும்மலத் தடையறு சிவஞானத்
தவரெனப்படு வார்களு மிருவளி யடைத்தொரு வழிநிற்பா
ரிவரெனப்படு வார்களுஞ் சிவகதிக் கெதுவழி யென்றேயாய்
பவரெனப்படு வார்களு மதுரைச்சம் பந்தன்மெய் யடியாரே. (2)

அடியர் செல்வமே யாலவாய் முத்தமி ழாளிகேண் மதிபோல்லாக்
கொடிய காயினேன் விண்ணப்ப மொன்றுவான் குளிர்மதி நதிசூடு
முடிய நீயநிற் கெனையனெற் கனையநீ முடிவின்மற் றவற்கோர்நீ
நெடிய சீர்புனை யெனையன்மற் றனையனீ நினக்கியா னல்லேனே.(3)

அல்லே னேர்சுளத் தண்ணறன் றிருவடிக் கருகரா யனைவோருந்
தொல்லை மாவினைத் தொடரொழிந் தானந்தந் தெய்த்திட வருள்கூர்ந்து
வில்லை வீசுபஞ் சாக்கர மோதிய வித்தக வியன்கூட
னல்லை நீயடி யேற்குமவ் வாறரு ணல்கிடி னுய்வேனே. (4)

உய்ய லாம்வகை யொன்றுகண் டேனலீ துண்மையே யினிதோர்மின்
வைய வாழ்வினை மயங்கியே யுழிதரு மாந்தர்காண் மடைநன்னீர்ச்
செய்ய வாலவாய்த் திருநக ரிடத்தமர் தேசிகன் சம்பந்தன்
நுய்ய நாண்மலர்ச் சிறுசிலம் பொலியடித் தொழும்புபூண் டுறைனே.(5)

உறவும் வேளினாண் பகலழ லிடைப்புகுந் துணங்குத லுணர்நீத்தே
யுறவும் வாடுதன் மூச்சவித் திருத்தல்கா லாதிதுய்த் தனுமோவ
லிறவு நேருமென் றிடக்குகை வனம்புகல் யாவுநீத் திடும்வம்மின்
புறவ நாயகன் கூடல்வாழ் புண்ணியன் பொன்னடி யடைவீரே. (6)

அடையு நற்பசு விருக்கயான் கற்பசு வடைந்தனென் கறந்தெய்த்தே
னடைகொ ளாலவா யிடையமர் தருபர ஞானபோ னகக்கன்றே
குடையும் யானமும் பந்தரு முத்தமாக் கொண்டமுக் தேதிபொன்னே
மிடையு மும்மல மகன்றருள் பெறும்வகை மெய்யருள் புரிவாயே.(7)

வாய்ந்த செம்பொனுற் செய்கொழுக் கொண்டியான் வரகினுக் குழலுற்றே
னேய்ந்த தீஞ்சுவைக் கனியொரீ இக் காய்கவர்ந்தென்றுமுண்பவன்போன்றே
னுய்ந்த நாவலர் புகழ்மது ராபுரி யண்ணலே யடல்கொண்டு
காய்ந்த காமத்தர் கருதிடுங் கவுணியர் காவலா வருள்வாயே. (8)

அருந்து தற்கமை பாலிவிட் டருந்தினே னமைதராப் புனிற்காடி
பொருந்து கங்கையா டப்புகுந் தள்ளலீப் பூசிடு வான்போன்றேன்
றிருந்து மாலவாய்த் தெள்ளமு தேவர சிரபுரத் தவரேறே
மருந்து நேருன தருண்மொழி பெற்றியான் மலமறுத் துயலென்றே.

வேறு.

என்றவ றணைத்து மெண்ணு தின்னருள் புரியவேண்டு
நின்றநீர் நெடிய மாற னிலவுகண் னெறிக்க ணேவக்
தொன்றமுன் றடித்தாட் கொண்டா யுவமைதீர் புகலி வாழ்வே
வென்றசீ ருடையாய் கூடல் விளக்கமே மெய்ம்மை யானே. (நிக)

யானென தெனுங்கோண் ஞான வழல்கொடு நிமிர்க்க வல்லான்
ஞானசம் பந்த னன்றி நாடின்மற் றகிலத் தியாவ
ரீனமி லறவோர் சூழு மிருந்தமிழ்க் கூடல் சார்ந்து
மானமா ரணைய வள்ளன் மலரடி வணங்கு வீரே. (நிஉ)

வணங்குவா ருள்கு வார்வாய் வாழ்த்துவார் வழுத்து வாசோ
டிணங்குவார் நின்பொற் பாத மெய்துவா ரெண்ணி யன்பர்
குணங்குலாந் துவாத சாந்தக் கூடன்மே வியசம் பந்தா
வினங்குரூப் பவஞ்ச வாழ்க்கை யீயட்டையே னென்செய் கேனே.()

செய்ம்மலி துவாத சாந்தத் திருநக ரொருசம் பந்தா
நெய்ம்மலி வடிவேற் செங்கோ னின்றநீர் வழுதி முன்னு
மெய்ம்மலி செல்வ ரின்பம் விழைந்தனர் புகுநின் முளிர்
பொய்ம்மலி மேயழை வாழ்க்கைப் புன்மையேன் புகலொ ணுதோ.(நிச)

ஒண்ணுத லுமையாள் கொங்கை யூறிய பரமெய்ஞ் ஞானங்
கண்ணுத லருளா லுண்ட கவுணியர் காளாய் மேலோ
ரெண்ணுதல் செய்யுங் கூட லுடையநீ யென்னு டுடல்
பண்ணுத றகாதுன் றீராப் பவருட் பெருமை நோக்கின். (நிடி)

நோக்குயர் கூடல் வாழ்வே நோன்மைசா லருட்சம் பந்தா
தேக்குசீர் வீரட் டானச் சிவபிரா னுடல் கண்டா
யாக்கிய புகழின் மேலா மையநின் சித்த மென்றன்
பாக்கிய மலர் சூட்கட் பார்வைக்கே பார்வை வைத்தீதன். (நிசு)

வையகத் தன்பு பூண்டார் குற்றமு மற்றஃ தில்லார்
செய்யநற் குணமு முள்ளஞ் செறித்திடாக் கருணை வாழ்வே
பொய்யகன் மதுரை மூதூர்ப் புகலியாய் நின்னு னன்றி
வெய்யவேழ் பிறவி யென்னும் வீசைக்கோர் மதலை யின்றே. (நிஎ)

இன்றடம் பொழில்சூழ் கூட லெழிற்கவு ணியர்தங் கன்றே
யொன்றவைந் தெழுத்தி னுள்ளே யோதுமுப் பொருளுந் தேற
நன்றடி யவர்க்கு ணர்த்தி நலமுறுத் திடுதல் போலெற்
கென்றருள் புரிவை யென்றே யிருந்தன னெதிர்பார்த் தம்மா. (நிஅ)

அம்மைபா லுண்ட ஞான வருட்பெருங் குருவீ கூட
லெம்மையா ளுடைய தெய்வ மிலகரு ணைக்கஞ் செய்ய
நம்மையாய் புரிந்த பாச நசித்திடு நம்பு நெஞ்சே
வெம்மையார் கதிரோன் மேருன்ற வீடிடா விருளு முண்டோ. (நிகூ)

உண்டுடுத் தழல்வேன் றெய்வ முண்டெனு மூறு,தி நெஞ்சுட்
கொண்டுசற் றறியேன் காமக் கொள்கல ஞகி நிற்பேன்
றெண்டுபட் டுன்ரு ளேத்தத் துணிவுமீ ஞ கணித மில்லா
வண்டுறற் றியபூஞ் சோலை மதுரைமா ஞான வாழ்வே. (கூ0)

வே று.

வாழு மாறுளத் தெண்ணினன் மற்றது மருவத்
தாழு மாறுணத் தாழ்ந்தில ஞகிலென் றவமே
சூழு மாதவிச் சோலையின் மலர்தொறுந் தும்பி
வீழு மாலவாய் மேவிய சிரபுர வீசரே. (கூக)

வேந்த ராகிலென் மூப்பகை யறுத்தற விளங்குஞ்
சாந்த ராகிலென் றக்கவ ராகிலென் றவஞ்செய
மாந்த ராகிலென் மதுரையிற் கவுணியன் மலர்த்தா
ளேந்த வாய்ந்தகெஞ் சுடையரே சிறந்தவ ரென்னும். (கூஉ)

ரன்று நேர்மணி மாளிகைக் கூடல்வா ழிறையை
யன்று ஞானபோ னகமினி தூண்டவா ரமுதைக்
கன்று சூழ்விணை கணிந்தடி யார்க்கருள் கனியை
நன்று கண்டுதோத் திரஞ்செயார் காவென்ன நாவே. (கூங)

நாவ லோர்புகழ் ஞானசம் பந்தணை நல்லோ
ராவ லோடணை யாலவா யிருந்தரு ளமுதைத்
தேவ லோகமே யெனச்சொ லுஞ் சிரபுரச் செல்வர்
காவ லோணேர் கண்டிடார் கண்ணென்ன கண்ணே. (கூச)

கண்ண கன்புவி தொழுதெழ வாலவாய் கலந்தே
யெண்ண வம்புரி யமணைக் கழுவில்வைத் தியார்க்கும்
வண்ண நீறளித் திருந்தருண் ஞானமா மணியின்
றிண்ண வண்புகழ் கேட்டிடார் செவியென்ன செவியே. (கூடு)

செவிய வாவுமின் றமிழ்பொழி செய்யவாய்த் தேணைப்
புவியு ளோர்புகழ் மதுரைமா நகருறை பொன்னைச்
சவிவி ராங்கவு ணியர்குல மணியைவெண் டரளக்
கவிகை யாளியை யருச்சியார் கையென்ன கையே. (கூசு)

வல வார்குழ லுமையருண் ஞானமுண் டெழுநது
சால வெங்கணும் பொழிதமிழ்க் கொண்டலைத் தாவாச்
சீல மாதவ ராலவாய் மேவிய தேவைத்
தால மேலுற வணங்கிடார் தலையென்ன தலையே. (கூள)

தலைமை வைதிக மெய்தவுந் தெய்வமாச் சைவ
நிலைமை யெய்தவு ஞானவா ரமுதுண்ட நிதியை
யிலைரு லாம்பொழில் சூழ்மது ராபுரி யிறையைக்
கலைவு லாளணைச் சூழ்தரார் காலென்ன காலே. (கூஅ)

காலி னுர்பொழிற் கனியுதிர் தரவெழுங் கடுப்பிற்
சேலி னுர்வயற் றிருமது ராபுரித் தேவைச்
சாலி னுர்மறைக் கவுணியன் றணீத்தொழச் சாரா
மாலி னுருடைப் பிறப்பையெப் பிறப்பென வகுக்கேன். (ஈகூ)

வகைசெய் மூலமா லிலக்கிய மாகவு மறையிற்
றகைசெய் பல்பொருண் முற்றவுந் தமிழ்ப்பொழி தருவை
முகைசெய் வான்பொழி லாலவாய் மேவிய முதல்லத்
தொகைசெ யுந்துதி சொற்றனன் சிறந்ததென் றுணிவே. (எ0)

வே று.

துணியு மாருன்று சொல்லுவன் யார்க்கும்வான்
பணியுங் கூடற்சம் பந்த னடிதொழிற்
றணியும் வெவ்வினை சார்த லறும்பவ
மணியு மொன்றியொன் றுக்கதி யாருமே. (எக)

யாரு மேத்து மியன்மது ராபுரிச்
சீருந் தேசுந் திருந்துசம் பந்தர்தா
மூரும் யானமுன் றுங்கின சொண்பதந்
தேரு நீரிலென் சிந்தையுந் தாங்குமே. (எஉ)

தாங்கு மேபரருட் சம்பந்தன் கூடலா
லீனுங்கு மாமுறை யோதி யெழுதினு
சேங்கு வேனுக் கெழுவகைச் சன்மமுந்
தேங்கு மாறெழு தாவகை தீர்ப்பரே. (எஊ)

தீரன் ஞான சிகாமணி பூந்தரா
யூரன் கூட லொருத்தன் றிருமுன
ராக வொண்டிருச் சின்ன மதூதுவீர்
வீர மல்கென் வினையையு மூதுவார். (எச)

வாரு மன்பினர் வாழ்த்தும் புகலியார்
தேருங் கூடற் றிகழ்தரு பிள்ளையார்க்
கோரு மன்பின் விருந்தமு தூட்டினு
ராரு மெற்கரு ளாமமு தூட்டுவார். (எடு)

ஊட்டி யன்புயிர்க் கோரெழு சன்மமும்
வீட்டி யாளும் விரகர்சம் பந்தர்க்கு
நாட்டின் மிக்கநல் லாலவா யீதென்று
காட்டி ஞெசற் கருங்கதி காட்டுவார். (எசு)

வார மிக்க மதுரையிற் சம்பந்தர்
சேர வாற்றியெண் ணுயிரக் திக்கழு
வார வஞ்ச வமணருக் கூன்றினுர்
பார வாங்கதிப் பாடெணீ யூன்றுவார். (எஎ)

ஊன்ற வுள்ளத்தி னுள்ள பொருளெலா
மீன்ற மாதொடு மின்றமிழ்க் கூடல்வா
ழான்ற சம்பந்தர்க் காக வொதுக்கினர்
மான்ற வெண்ணே மலகின் ரெதுக்குவார். (எஅ)

குவல யம்புகழ் கோமது ராபுரித்
தவல ரும்புகழ்ச் சம்பந்தப் பிள்ளேயா
ருவமை சீரடித் தெர்ண்டருக் கொல்லேயே
கவலி ரெருண்டுசெய் வார்கன வானரே. (எகூ)

வான வாழ்வு மதிப்பரி தாஞ்சிவ
மோன வாழ்வெனு மூத்தியு நல்குமிக்
கான கூடன்மெய் யாறு முகத்திரு
ஞான சம்பந்தர் சண்மலர்ப் பாதமே. (அ0)

வேறு.

பாதக மும்மல பந்தத் தாலுறு
கோதக வெவ்வழிதர நூலு ணர்ச்சிசான்
மேதக வினார்குழு மேவு மாலவாய்ப்
பேரதன கவுணியன் புகழ்வி ரும்புவாம். (அக)

விரும்பிடப் படுவது மெய்ம்மை யாவதுங்
கரும்பினு மினிப்பதுங் கவலே நீர்ப்பதுஞ்
சுரும்புளர் நறுமலர்ச் சோலே யாலவா
யிரும்புகழ்ப் பிள்ளேயா ரிணேயில் சீர்த்தியே. (அஉ)

சீர்மலி யாலவாய் திகழும் வானகம்
பேர்மலி கவுணியப் பிள்ளே யார்பதி
யார்மலி யவர்புக மும்ம திக்கதிர்
கார்மலி யடியவர் சகோர நாளுமே. (அங)

நாளபல கண்டமதன மதுரை நறறட
நீள்பல விதழ்மலர் நிலவு சம்பந்த
ராள்பல சீர்த்தியவ் வலரி லாறுதேன்
மூள்பல வளிக்குலங் ததைந்த வன்பரே. (அச)

அன்பமை யாலவா யவிரு மோர்சிலம்
பின்பமை சம்பந்த ரினிய நீர்முகின்
மன்பெருங் கருணேயம் மங்குல் பெய்யுநீர்
துன்பமி லடியவர் சூழு மாமயில். (அஞ)

மயலகல் கூடல்வாள் வழங்கு வானக
முயல்புரி கவுணிய சோங்கு கற்பகஞ்
செயன் மிகு பொருட்கொடை திருவ ருட்கொடை
யயல்விரா வடியவ ரளவில் வானவர். (அசு)

வானமும் புகழ்திரு மதுரை பாற்கடல்
ஞானசம் பந்தனுர் நயக்கு நல்லமு
தூணமில் சைவர்க ளுவந்த வானவர்
தீனவெவ் வமணரே திதிதன் மைந்தர்கள். (அஎ)

மைந்துசே ருதயமால் வரைதென் னுலவாய்
நந்துசீர் மழகதிர் ஞான சம்பந்தர்
முந்துபு முகமலர் முளரி சைவரே
கிந்திரு ளறிவிலா வமணர் தேதரே. (அஅ)

தேருமின் கவுணியர் செய்ய சீரினி
தேருமி னவர்கனிந் துரைத்த மாமறை
சாருமி னுலவாய் சார்ந்து தாழ்வற
வாருமி னருங்கதி யகிலத் தியாருமே. (அகூ)

மேவுதென் னுலவாய் விரும்பு புண்ணியன்
மூவுல கும்புகழ் முதல்வன் சம்பந்தன்
பூவுயர் பொன்னடி போற்று வார்மல
நோவுதீர்ந் துய்வது நுவல வேண்டுமோ. (கூO)

வே று.

வேண்டாமை வேண்டேடன் விழைந்தே திரிந்தேதன்
பூண்டார் நினைக்கன்பு பொய்ப்பாச மற்றுரு
ராண்டா தரிப்பா யருட்கூடன் மேய
தூண்டா விளக்கே தொழுஞ்சண்பை யானே. (கூக)

யானே துசெய்கேனென் மனமெங்கு மோடுங்
கோனே தடுத்தாட் கொளிற்பொய்ய னுய்வேன்
றேனே கரும்பே திருக்கூடல் வாழும்
மானே பெருஞ்சண்பை வள்ளற்பி ரானே. (கூஉ)

பிரான்வேறும் வேண்டேடன் பிதற்றித் திரிந்தே
னிராதார னுகாம னீயாண்டு கொள்வாய்
குராவாச மென்சோலை கொள்கூடன் மேவும்
பராஞான சம்பந்த பண்பாளர் பேறே. (கூங)

பேறே துதிப்பார் பெருஞ்சண்பை யாள
ரேறே தமிழ்க்கூட லின்பப் பிரானே
மாறே படும்புன் மனத்தேதன் மதித்துன்
னுறே யடைந்துய்வ தறிகின்றி லேனே. (கூச)

ஏமங் குறித்தே யிருந்தே னதற்குன்
னுமங் குறித்தோத நாவைத் திருப்பேன்
பூமங்கை மேவும் புகழ்க்கூடல் வைப்பே
காமங்கை யாருட்பு காச்சண்பை வாழ்வே. (கூடு)

வாழ்வான திருண்மாய மென்றெண்ண மாட்டேன்
ரூழ்வான தேதெய்ண்டி தமிமாறு கின்றேறன்
சூழ்வான சோத்தித் தொழுங்கூடல் வாழ்வே
யாழ்வாரி சூழ்காழி யாள்வார்க டேவே. (கூசு)

தேவே கரும்பே தெவிட்டாத தேனே
கோவே திருக்கூடல் குடிகொண்ட பொன்னே
மாவேரி யொண்டா மரைத்தொங்கன் மார்பா
நீவேறு செய்தென்னீ நீக்காம லாளே. (கூள)

ஆளா னவர்க்கே யருட்டே சுறுத்துந்
தோளாத முத்தே தொழுங்கூடல் வைப்பே
நீளாத சத்தியாரு நின்றேறத்து காழிக்
காளா யெணிக்கா கருப்புகல் கடிந்தே. (கூஅ)

கடிமா மலர்ச்சோலை ககனந் துழாவும்
படிமே லெழுந்தண் பழங்கூடல் வைப்பே
கொடிமாட மிருவெங் குருக்கொண்ட லேநின்
னடிமா மலர்க்கென்னீ யான்செய்த பிழையே. (கூசு)

பிழையாது செயினும் பிறக்கா தகற்று
மழையா ரருட்பெருமை வாழ்கவளர் கூடற்
றழையாறு முகஞான சம்பந்த சூரவன்
விழையாறு நனிவாழ்க மிகவாழ்க ஈரே. (க00)

மதுரைத்திருஞானசம்பந்தசுவாமிகள்

பதிற்றுப்பத்தந்தாதிமுற்றிற்று.

மதுரைத்

திருஞானசம்பந்தசுவாமிகள்

ஆனந்தக்களிப்பு.

ஆனந்த மானந்தந் தோழி - திரு
வாளர்சம் பந்த ருருள்வினை யாடல்
ஆனந்த மானந்தந் தோழி.

க. பார்புகழ் காழி நகரிற் - சிவ
பாத விருதயர் செய்த தவத்தாற்
சீர்புகழ் மிக்க மகவா - ஐயர்
திருவரு ளாலவ தாரஞ்செய் தாரால். (ஆனந்த)

உ. கூடும் பருவமோர் மூன்றி - லம்மை
கொங்கை சுரந்த கொழுஞ்சுவைத் தீம்பா
லுடுபொன் வள்ளத்தி னூட்ட - உண்டு
ஞானசம் பந்த னெனப்பொலிந் தாரால். (ஆனந்த)

ங. சொல்லு மயனரி யாலு - மென்றுஞ்
சுட்டி யறியப் படாத பொருளை
யொல்லுஞ்சொற் தாமரை யன்ன - செங்கை
யேர்விர லாற்சுட்டிக் காட்டினர் சூரால். (ஆனந்த)

ச. வைதிக சைவந் தழையப் - பெரு
மண்ணுல காதி மகிழ்சிறந் தோங்க
வுய்திற மாந்தமிழ் வேதந் - தோ
டுடைய செவியனென் சூரம்பித் தாரால். (ஆனந்த)

ஞ. விண்ணும் புவியுங்கொண் டாடுந் - தமிழ்
வேத மொழியும் பொழுதொற் றிடுமா
றெண்ணுந் திருக்கோலக் காவி - லுங்
தெழுத்தும் பொறித்தபொற் சூளம்பெற் சூரால். (ஆனந்த)

ட. எண்ணென் றியாணை செய்கே - ணைய
சேழிசை யோங்க வினிமை தழும்பப்
பண்ணும் புகழ்த்திரு வாக்காற் - கொடும்
பாலை குளிர்நெய்த லாகிய தென்னின். (ஆனந்த)

எ. மூவுல கும்புகழ் தில்லை - வளர்
மூவா யிரார்கண நாதராய்த் தோன்றப்
பாவு மிசையுரு வாய - புகழ்ப்
பாணருக் காங்கதி வித்துகின் றூரால். (ஆனந்த)

அ. மும்மை யுலகும் புகழச் - செழு
முத்தின் சிவிகை குடைதிருச் சின்னஞ்
செம்மை யரத்துறை மேய - தேவ
தேவ னருளச் சிறப்பிற்பெற் றூரால். (ஆனந்த)

கூ. தாரை திருச்சின்ன மெல்லாம் - பர
சமய கோளரி வந்தன னிந்தப்
பாரையுய் விப்பவன் வந்தான் - ஞானப்
பாலரூ வாயன்வந் தானென வூதும். (ஆனந்த)

கO. மூந்திய மாமறை யின்க - ணீய
முற்று மொழிய மொழிந்து மறையோர்க்
கந்தியின் மந்திர மோரிற் - றிரு
வைந்தெழுத் தேயென் றருளிச்செய் தாரால். (ஆனந்த)

கக. அண்டர் புகழ்ந்துகொண் டாடும் - பாச்சி
லாச்சிரா மத்தெம் மடிகண்மு னன்பு
கொண்ட மழவன் மகளைப் - பற்று
கொடிய முயலக நோயொழித் தாரால். (ஆனந்த)

கஉ. கொங்கி னடியரைச் சார்ந்த - வெங்
குளிர்ப்பிணி யாதி குலைந்தொழி வெய்த
வெங்கும் புகழ்திரு நீல - கண்ட
மீற்றி னுறுதமிழ் வாய்மலர்ந் தாரால். (ஆனந்த)

கங. தாளில்பட் டுச்சரத் தையர் - நன்று
தந்த மணிமுத்துப் பந்தர் விருப்பி
மேவு திருச்சத்தி முத்தத் - திடை
மெய்ம்மையிற் பெற்றனர் வெங்குரு வேந்தர். (ஆனந்த)

கச. தந்தை கருத்து முடிப்பான் - வளஞ்
சார்பொழி லாவடு தண்டுறை யார்பா
லந்தமின் மூத்தமி ழாள - ருல
வாக்கிழி யாயிரம் பொன்னிற்பெற் றூரால் (ஆனந்த)

கஙி. நீலகண் டப்பெரும் பாணர் - திரு
நெஞ்ச முவந்து நெடுங்களி கூரக்
கோலத் தருமை புரத்தி - லிசை
கோலிய யாழ்மூரி வாய்மலர்ந் தாரால். (ஆனந்த)

ககூ. மாங்குயில் கூவும் வளஞ்சேர் - திரு
மருகலிற் பிள்ளையார் வாக்கெழு முன்னே
தூங்கி யெழுந்தவன் போல - விடத்
தோய்வா லிறந்தவன் ரூனெழுந் தானல். (ஆனந்த)

களு. வீழி மிழலைப் பிரானு - ரெங்கள்
வித்தகர் சண்பை விரகர்முன் ரோன்றிக்
காழியிற் ரோணியின் மேவும் - வண்ணங்
காட்டுகின் ரோமென்று காட்டப்பெற் ரூரால் (ஆனந்த)

கஅ. காமரு வீழி மிழலை - யமர்
கண்ணுத லாரடி யார்க்கமு தாக
மாமரு வோர்செம்பொற் காசு - தினம்
வைக்கப்பெற் ரூர்சண்பை வந்த விரகர். (ஆனந்த)

ககூ. மன்னிய மாமறைக் காட்டிற் - சண்பை
வந்த கவுணியர் வாய்திற வாமுன்
றுன்னிக் கதவ மடைத்த - திறஞ்
சொல்லி னெவரே வியப்படை யாதார். (ஆனந்த)

உ0. மாளியா ரன்பு மமைச்சிற் - புகழ்
வாய்ந்த குலச்சிறை யாரன்பு மேர்ந்தே
யாளி யிலாமறைக் காட்டி - னின்று
மாலவாய் மேவ வெழுந்தன ரையர். (ஆனந்த)

உக. செழுமணி யானத் திவர்ந்து - திருச்
சின்ன முழங்கத் திசைதொறு மொய்த்து
வழுவி லடியவர் போற்ற - ஆல
வாய்வந்து காட்சி கொடுத்தனர் யார்க்கும். (ஆனந்த)

உஉ. கூடலின் மேய பிரானர் - கழல்
கும்பிட் டடியவர் கூட்டங் குலாவ
வாட லமைச்ச ரமைத்த - திரு
வார்மட மேவி யமர்ந்திருந் தாரால். (ஆனந்த)

உங. தீய வமணக் கொடிய - ரையர்
திருமடத் திற்செய்த தீமை யருளான்
மேய வழுதி யுடம்பு - பற்றி
வெஞ்சுர மாகத் திருவாய் மலர்ந்தார். (ஆனந்த)

உச செம்மையில் கூனெடு வெப்பு - நின்ற
சீர்நெடு மாறற்கு நீங்கப் பொலிவு
வெம்மை யமணர்க்கு நீங்க - வீயர்
மேதகு ரீது திருக்கைதொட் டாரால். (ஆனந்த)

உநி. அருகர் முகமு மணியா - ரழ
லாங்கிட்ட வேடு மொருங்கு கருகப்
பெருகிய சைவர் முகமு - மையர்
பேரழ லேடும் பசந்தன காணுய். (ஆனந்த)

உசு. அண்ணுங் கொடிய வமண - ரோரெண்
ணுயிர ருங்கொடுங் கூர்ங்கழு வேற
வெண்ணு முயிர்களீ டேற - வையை
யாற்றிட்ட வேடெதி சேறிய தம்மா. (ஆனந்த)

உஎ. உள்ள நிகரப் புறமு - மிக்
கேகாங்கிருண் மூடிக் கொடிவிணை பூண்ட
கள்ள வமணர்கள் யாருங் - கண்
கலங்கிக் கழுமரத் தேறினர் மாதோ. (ஆனந்த)

உஅ. நந்திய சீர்மலி மங்கை - கொங்கை
ஞானமுண் டார்திரு வாய்மலர் சொல்லே
யுந்தி விடுகெடுங் கோலாச் - சுழ
லோடங் கரையரு குற்றது நோக்காய். (ஆனந்த)

உசு. வித்தகர் தந்திரு முன்ன - ரூது
மெய்த்திருச் சின்னமெண் ணுது தடுத்த
புத்தன் றலையுருண் டோடச் - சினம்
பொங்கி யுருமொன்று வீழ்ந்தது கண்டாய். (ஆனந்த)

ஙo. வெங்குரு வேந்தர் திருமுன் - வாத
மேன்மேலுஞ் செய்து மெலிவுற்றுத் தோற்றே
அங்குறு புத்தரெல் லோரும் - சைவ
ராகின ரையடிமலர் போற்றி. (ஆனந்த)

ஙக. நாமில கத்தெவர் பெற்றூர் - திரு
நாவுக் கரசுஞ் சிவிகையைத் தாங்கிக்
கூடுமன் போடு மகிழ்ந்து - தவங்
கூடிற் றெனவருங் கோதற்ற போது. (ஆனந்த)

ஙஉ. மன்னன் றிருவீரட் டானங் - காழி
மாமறைக் கன்று மகிழ்ச்சியிற் செல்லப்
பன்னும் புகழ்த்தம்பி ராளுர் - நடம்
பண்ணிய மேன்மைத் திருவரு ளோரின். (ஆனந்த)

ஙங. உய்ய வெமையெடுத் தாள்வார் - திரு
வீவாத்தூரில் யார்க்கு மதிசய மேவ
வையர் திருவருள் வாக்காற் - பல
வாண்பணி பெண்பணி யாயின மாதோ. (ஆனந்த)

க.சு. கச்சியின் மேற்றளி மேய - கருங்
கண்ணனங் கண்ணுத லெண்ணுரு மேவ
வுச்சியின் மாதவர் சூடி - மைய
ருண்மைத் திருவாக் கியற்றிய தேதாராய். (ஆனந்த)

கரு. பெற்றனர் யாவர் பெறுவ - ரறம்
பேணு திருவாலங் காட்டுறை யையர்
பற்றுங் கனவினிற் றோன்றி - நம்மைப்
பாட வயர்த்தணை யாமெவன் றருள. (ஆனந்த)

கசு. மேவு சமயம் பலவுஞ் - சைவ
மேமிபா ருளென்று விரும்பிக்கொண் டாடத்
தூவு மெலும்புபெண் ணாக - அருள்
சொல்லி னதிசய மல்லதெ னுண்டாம். (ஆனந்த)

கஎ நாட்டும் புகழின் மலிந்த - திரு
ஞானசிந் தாமணி நல்லெழி லென்றுங்
காட்டும் பெருமண நல்லூர் - மணங்
காணவந் தார்சிவம் பூணச்செய் தாரால். (ஆனந்த)

கஅ. ஆரண மாகமம் வாழ்க - புக
ழாறு முகத்திரு ஞானசம் பந்த
காரண மேதசிகர் வாழ்க - நெடுங்
கால மவரடி யார்களும் வாழ்க.

ஆனந்த மானந்தத் தேதாழி - திரு
வாளர் சம்பந்த ரருள்வினை யாடல்
ஆனந்த மானந்தத் தேதாழி. *

திருஞானசம்பந்தசுவாமிகள் ஆனந்தக்களிப்புமுற்றும்.

*சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியர் மாணக்கராகிய

தெய்வநாயகம்பிள்ளையவர்களியற்றியது.

நேரிசையாசிரியப்பா.

மாமலி பொருநீ வளஞ்சுரந் தளிக்கும்
பாமலி பெரும்புகழ்ப் பாண்டி நன் னாட்டின்
மிளிர்மணி சுடர்ந்திய வொளிர்மணி மாடத்
தும்ப ருலாவும் வம்பலர்க் குரலார்
முகமதிக் குருகி நகநிலா மலரியிற்
புரிசெய் குன்றஞ் சொரிபுனல் பெருகி
வீசுவளி துறுத்த மாசறக் கழுவும்
பீடமர் வளஞ்சால் கூடன்மா நகரிற்
பிறவிப் பகைக்குள முறவுடைந் தடைந்தே
யொழியா வன்பின் வழிபடு படியார்
மலவிருள் குமைக்கு நலமலி நதிரெனப்
போற்றிப் புவனஞ் சாற்றவீற் றிருக்கு
மீன மிலாத்திரு ஞானசம் பந்த
வருளா சிரியன் றிருவடிக் கன்பாய்ப்
பூவிரி பொழிற்குலக் காவிரி புரக்கு
மளவிலா வளம்புனை வளவனன் னாட்டிற்
பத்தியிற் றவறு வுத்தம வணிகக்
குலமக டனக்கு நலமலிந் தோங்குந்
தாயா யளித்த தம்பிரா னெனலு
மாயா வருளிற் கோயில்கொள் டமரத்
துரிசிரா திலங்குந் திரிசிராப் பள்ளியிற்
கடன்மருங் குடுத்த தடநெடுங் புடவியி
லுற்றநூல் யாவுங் கற்றவனென்றுந்
தோலா நாவின் மேமலோர் வருத்துந்
தந்தருள் பலபிர பந்த மென்பன
வெல்லாஞ் சொல்ல வல்லோ னென்று
முமிழ்சுவை யாரியத் துற்றபல் புராணமுந்
தமிழின் மொழிபெயர்க்கத் தக்கோ னென்றுந்

* இஃது பழையபதிப்பைச்சார்ந்தது.

தகனயடைக் தவரை நிகனதரு தகணப்போல்
௬0 வல்லவ ராக்க நல்லதல் னியற்கையா
மெலியா வன்பிற சலியா னென்று
மற்றவர் பிறரைச் சொற்றன போலா
திற்ற குணங்கண் முற்ற வுணர்ந்து
செப்பமுள் ளீளார்பலர்க் கொப்பயா னுள்ளன
௬௫ நினைந்துரை செய்வது புனைந்துரை யன்றெனக்
காட்சியின் விளக்கி மாட்சியி னமர்வோன்
கற்றவர் குழுமி யுற்றபே ரவையிற்
கனக்குநுண் ணறிவிவ ரெனக்குமோ சொலுக்கிடந்
தருத மீனுட்சி சுந்தரப் பெரியோன்
௭0 வினைந்து புனைநத மாநலுள் செறித்து
வைத்த பதிற்றுப் பத்தந் தாதியு
மூன மொழித்தரு ளானநதக் களிப்பு
துதித்திடு மச்சிற் பதிந்துத் தருகெனத்
தகவுளீளா ரென்றுந தக்கப் பெற்றுத்
௭௫ துகளிலா தோங்குந் தொண்டை மண்டலத்திற்
கயல்செறி புனல்சீசர் பயல்செறி பண்ணையிற்
குடமருள் செருத்தற் படமருப் பெருமைக
ளொருங்கு குழீஇயிய மருங்கினு முலாவல்
விண்மூ டிருங்கருங் கொண்மூ வினங்கண்
௮0 மேவுசீர்த் தம்மிறை க வலிற் பொலிவுறு
மிந்நில மென்றகந் தாஞனிச் சூழ்ந்து
தயங்குவள நீரூக்கி யிரங்குதல் கடிக்கும்
வயங்குபூ விருந்த வல்லிநன் னாட
னுடகத் தியன்ற மாடா தோறும்
௮௫ வண்டமர் புரிகுழ லெண்டொடி மடவார்
மாந்தளிர் கவற்றி யேந்தெழில் வாய்ந்த
காற்சிலம் பணியு மரைமே கலையு
முன்னும் பின்னு முடையி னெளித்தன்
மாறுப் பம்மன் மாருக ராளி
௯0 மதியெழச் சிறக்கும் வானக மென்னத்
துதியுறக் கொளுமுயர் குளுவ வேளாளர்
குலஞ்சிறப் படையக் கலஞ்சிறப் பப்புணி
வாகார் தருபுக ழேழகாப் பரவே
ளீட்டு தவப்பயன் காட்டவக் துதித்தோன்
௯௫ பிறங்குசீர் விசாகப் பெருமா ளீயனென்
றறங்குல வுலக மறைபுல வன்பாற்
றீங்தமி ழுணர்ந்தறி வேய்ந்த குணசீல
னெனட்டித்திசையினு முட்டும் புகழா
னடைபிற ழான்பெருங் கொடையொடு பிறந்தோன்

எ0 கவிநயந் தெரிகலிற் குவிதரா வுணர்வினன்
மற்றைநற் குணமெலாம் பெற்றதா யாஞ்ஞன்
கங்கைபொற் கடிக்கை வெங்கண்வா ளரவந்
திங்கள்சேர் வேணி யங்கண னருச்சீன
மங்கலின் மலர்கொடு பங்க மறப்புரி
எரு துங்கனும் விசய ரங்கபூ பாலன்
கவின்றவுண் மகிழ்வொடு நவின்றன ஞக
மின்னுமிர் நூல்கள்செய் வீஞ்முத லாஞ்ஞ
னென்ஞ சிரிய ஞகவிர் நூல்கட
குரிமையா ஞேன்றற் குமுமா சிரிய
அ0 ஞகவி ஞெற்றுமை யதிர்துகின் றெஞ்ஞயிவ
னேவலு நன்றியா னேவப் படுதலு
நன்றுநன் றென்றுளந் துன்றுபே ருவகை
கதித்தெழ வன்பிற் பதித்து முடித்தன
னிலக்கண விலக்கிய நலக்க வுணர்ந்தோ
அரு னென்னுடை நட்பஞ விலங்கு
நன்னயத் தியாக ராசநா வலனே.

சிறப்புப்பாயிரம்முற்றிற்று.

கணபதித்துணை.

திருச்சிற்றம்பலம்.

* கலைசைச்சிதம்பரேசுவரர்மாலை.

விநாயகர் துதி.

ஆசிரியவிருத்தம்.

பூமேவு மதலொழுகி யுவட்டெடுத்துப் புலவகலப் புணரி பாயு
மாமேவு பொழிற்கலைசை யெழிற்சிதம்ப ரேச்சுரற்கோர் மாலை சாத்த
நாமேவு புகழ்ப்பனிநீ ராலிதொறு நனிவிளங்கி நாளும் வாழுந்
தேமேவு செங்கமுநீ ராம்பலடித் தாமரைநார் சிறப்பக் கொள்வாம்.

நூல்.

பூமலி யிதழி புனைசடை முடியிற் புக்கடங் கியபுனல் பொருவ,
மாமலி தளிர்நின் னடியிலென் பாங்த மனம்புகுந் தடங்குமா றருள்
வாய், பாமலி புகழ்ப்பைஞ் தோகைமேன் முருகப் பண்ணவ னமர்
தல்போற் பரிதி, காமலி யிணைந்த கமுகின்மேற் பொலியுங் கலைசை
வாழ் சிதம்பரேச் சுரனே. (க)

ஆய்மதி புனைந்த சடையினஞ் சவ மமர்தல்போ னின்னடி யவ
னை, யேய்தர வலாபுத் தகத்திதாரு புறத்தி லென்னையு மெழு துவித்
திடிவாய், வேய்குழன் மடவார் படாமெறிந் தெழுந்த வெம்முலை
விழைதரத் தெங்கங், காய்பல பாளை யெறிந்தெழும் பொழில்சூழ்
கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (உ)

பாற்பசுக் கறவார் கற்பசுக் கறக்கப் பலகைபெற் றுரென நின்சீ,
ரேற்பயான் பேசேன் வம்புபே சிடுதற் கெண்ணில்வாய் படைத் துளே
னென்னே, சூற்பய னடைந்த மாதர்தம் வதனத் துணைவிழி யென
விணைக் கயனீர்ச், காற்பணைக் கமல மலரகத் துறையுங் கலைசைவாழ்
சிதம்பரேச் சுரனே. (ங)

வரியமர் முலையார் புரிநட நோக்கி மகிழும தொழிந்துமா லய
ற்கு, மரியநின் னடமன் பூற்றெழ நோக்கி யானந்த மடையுநா னென்
றோ, பொரியரை மாச்சூர் மாவின மென்று புரந்த ஞங்குயிற் கின
மாங், கரியபைங் குயில்கள் கிணைபுகுந் தழக்குங் கலைசைவாழ் சித
ம்பரேச் சுரனே. (ச)

* கலைசையென்பது தொண்டைநாட்டிலுள்ளதான தொட்டிக்கலையென் னுமூர்.

பொருவரு நினது திருவரு ளென்னும் புகழ்மிகு மூலுக் கன்றே, மருவிய வினையேன் மும்மல மெனுமும் மதிலெடு ராவதெக் காளோ, செருவிழி மடவார் புலவியி னெறிந்த செழுமணி பலவொளிர் வீதி, கருவலி வலன்மெய் வீழ்களம் பொருவுங் கலைசைவாழ் சிதம்ப ரேச் சுரனே. (ரு)

செய்யநின் னடியார் செய்யுண்மு னியேன் செய்யுளைத் தன்மைய தென்னி, னீயநின் னரிய கூத்தின்முன் பேய்க்கூத் தவ்வள வேயினி தருள்வாய், வெய்யபாற் கடற்க ணெழுதிருப் புளைய மேதி யின் பாலளாம் வாவிக், கையலர் மடவார் மூழ்கிமே லெழுஞ்சீர்க் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (சு)

பெண்ணுரு வொடுமற் றுணுரு வமுமாய்ப் பிறங்குநின் றிரு வுருக் குறியேன், புண்ணுரு வாம்பெண் ணுருவமே குறித்துப் புலம்புவேற் கென்றருள் புரிவாய், மண்ணுரு வசுர வுருவெனத் தெரிக்கு மாண்புபோன் மாதர்பொன் முகத்துக், கண்ணுரு நீலம் பல மலர் மருதக் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (எ)

விரிந்தபாற் கடலின் மாலொடு மீனு மேவுநின் னருட்பெருங் கடலிற், புரிந்தநின் னடியா ரோடுநா யேனும் புக்குமே விடிற்குறை வருமோ, சொரிந்தபான் மேதி யுழக்கலின் மாடத் துவசம்வேள் கொடியென மடிவிற், கரிந்தநீள் கயலக் கொடி மிசைப் பாயுங் கலைசை வாழ் சிதம்பரேச் சுரனே. (அ)

இரும்புனற் பயின்றும் பசுநிறம் வாய்ந்து மீரமில் கிடையென மறைநூல், விரும்பிடம் பயின்றும் பூதிசா தனமே மேவியு மன்பில ஞனேன், சுரும்பினஞ் செறிந்த மலர்க்கொடி தாய்ப்பைக் தோகையைப் பிணித்திட வளைந்த, கரும்பின மதமேவள் கைக்கரும் பேய்க்குங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (கூ)

மலைமகள் செங்கை மலர்கொலோ மால்கண் மலர்கொலோ நின் றிரு வடிக்குப், புலையரும் விரும்பப் புன்புலால் யாக்கைப் பொறை யினேன் சொன்மல ரைய, தலைமைசால் புலமைச் சங்கரா வலவர் தமக்குநூல் பயிற்றினே னென்னைக், கலைவரம் புணர்ந்தோர் கழகமே மல்குங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (கo)

நண்பக லதற்கு மேனிழல்பொருவு நாடொறும் வளர்வினை காலை [யாய் யெண்படு மதற்கு மேனிழல் பொருவு வெங்கதிர்க் குறுகுமோ வுலா வண்பழ னங்க டொறுமட மாதர் மலரடி மேற்சிலம் பொலிபோற் கண்படு கமல மிசையன மொலிக்குங் கலைசைவாழ்சிதம்பரேச்சுரனே.

உழிதரு வளியோ டுழிதரு சருகி னெழிவற வுழிதரு புலனே[லோ டுழிதரு மனமற் றுழிதரா வண்ணம்யா னுன்னருள் பெறுவதெக் நா கழிதரு பழனத் துழிமலர் கமலக் கழிசுவைத் தேன்கரு முகிலிற் கழிதரு கடலிற் பாய்ந்துவ ரகற்றுங் கலைசைவாழ் சிதம்பரேச்சுரனே

வெளிபசுங் தோலிற் சுருளுமேல் விண்மேல் வீசுபா டாணநின்றிடுமே
லளிபடு பத்தி யன்றியு முத்தி யடையலா மையவென் செய்கே [விக்
ஞெளிமிஞர் முகமுங் கமலமும் பகுத்தாங் குணர்தரா ஜுழல்பெரு வா
களியளி பிரம ரப்பெயர் விளக்குங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே.

சொற்படி முவர்நீர் நனிபரு கிடினுங் தொலியுமோ தாகமங்
கதுபோற், பற்பல நூல்க ணனிபடிக் கிடினும் பாறுமோ பவத்
தொடர் பைய, வற்பொடி முறுவார் குறிப்பறிங் துதவு மக்குண மிகுத்
தலின் விண்வாழ், கற்பகஞ் சமழ்ப்பப் பொலிபவர் மேவுங் கலிசை
வாழ் சிதம்பரேச் சுரனே. (கச)

தூறைமலி யன்பர் துதியொடு நாயேன் றுதியுநின் றிருச்செவியேற்கு
மறைகடல் புனித நதிப்பெரும் புனலோ டங்கண நீருமேற் றிலையோ
நிறைசுதைத் தவள மாளிகை முகட்டு நெடுநிலா மதிகுவுடலக்[னை.
கறைதபத் தவழ்ந்து திரிதரும் வளமைக் கலிசைவாழ் சிதம்பரேச் சுர

குற்றவன் றருக்கள் பலவெனு மழலோர் சூறும்பெறிக் கெதி
ருமோ வதுபோ, லுற்றவென் விணையத் தீனையுநின் னுமை மொன்றி
னுக் கெதிர்படுங் கொல்லோ, கற்றவத் தமைந்த வளகைபே முதலா
நகரெலாஞ் சிறுநக ரென்று, கற்றவர் புகழப் பெருநக ராய கலிசை
வாழ் சிதம்பரேச் சுரனே. (கசு)

ஓருவருக் கொன்று கொடுப்பவோர் கையு முளனலேன் வாங்கு
தற் கெனினோ, பருவலி வாணன் கையினு மிரட்டி படைத்துளே
னென்றுய்வேன் கொல்லோ, பொருவில வென்று நோக்குதல் செய்
யும் புலவர்கண் ணேறுறு வண்ணங், கருமுகி லுறைமேற் பொதிந்
தமா ளிகைசேர் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (கஎ)

வசையெலா மிவர்ந்து நதியெலாம் படிந்தும் வனமெலா மமர்ந்
தும்வா ரிதிசூழ், தசையெலா முழன்று மாவதெ னின்னீச் சரண்புகா
மானிடர்க் கம்ம, திசையெலா மலிக்குஞ் செயலறிந் துறுகற் செறித்
தெனச் செழுமணி பலவுங், கசையெலாஞ் செறியப் பொலிதரும்
வாவிக் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (கஅ)

மணிவியைப் பொடித்து மகவிணை யறுத்து மறங்கொடு தந்தை
யை வதைத்து, நிணிதரு தமரைச் செருத்தும்பெற் றனரா னின்னருள்
யான்பெற்ற தென்னே, புணிதரு புவிக்குப் பொன்னிற மன்று புகல்
கரும் பொன்னிற மென்னக், கணிகுரல் வேழங் கடம்பொழி வாரிக்
கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (கஙு)

உலகெலா மழலிற் பொடிசெய்தா யிடைநின் றிருவனு யாடிமே
வுனக்கெ, னலகில்வெங் கொடியேன் றீமனத் தகத்து மாடிமே வுதல்
வழக் கன்றே, விலகுபு திசைக டொறும்பாங் தாங்க ணியைந்தமா

மதத்தனீ யடைப்பக், கலகவாள் விழியார் சுண்ணமாட் டுவக்குங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (உ0)

வலியக னினது மனமதன் மாட்டு மருவுறே னென்றுநீ யிசைக்கிற் பொலிபருப் பதமந் தரமுத லிடத்துப் புணர்ந்தது க்கரததாய் முடியு மலிசுவைக் கரும்புங் கந்தியு மாவும் வருக்கையும் வளரிலாங் கலியுங் கலிபுக வரிதென் றகலுறச் சூழுங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. ()

அழலகத் திட்டமெழுகென வறைதே ரமைந்தவென் மனங்கு ழைத் துன்னீப், பழமறை யெல்லாம் வல்லவ னென்னும் பழஞ்சொ லீப் புதுக்குவ தென்றே, முழுவொலி மதமா முழங்கொலி வயமா முரணொலி தேரொலி வீரர், கழலொலி யெழுந்து கடலொலி மாற் றுங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (உஉ)

மனிதரி லுயர்ந்தோர் வானவ ரெனுஞ்சொன் மற்றைய ரிழிபுக ண்டன்று, புனிதமில் புழுத்த நாயினுங் கடையேன் புன்மைகண் டெ ழுந்ததே யன்றே, வினிதுவந் தடைந்தோர் மயக்கமா நுகர மெய்துரு வகையருள் செய்து, கனிதிரு வருணன் னகரமே யாய கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (உங)

வெள்ளம்வா ரிதிமட் டோவெறும் பனியும் விரவுறு நின்னருள் பெருமை, யுள்ளவர் மட்டோ சிறியனே னிடத்து முறத்தகு நீயுமீ துணர்வாய், புள்ளவாக் தடத்துப் பலவகை மீனும் புழுகுசாக் தாதிக ணுறக், கள்ளவாள் விழியார் மெய்கழீஇக் குடையுங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (உச)

சிறியவர்க் கியல்பு குற்றமே புரிதல் செயிரறு பெரியவர்க் கியல்பு மறியவக் குற்ற மாய்த்தினீ தாள்கை மற்றிது நீயறி யாயோ செறிவய லிளஞ்சூ னெற்பயிர் மேய்ந்து திருமலர் குதட்டியங் கரும்பு கறிசெய்து மேதி மாகிழ லுறங்குங் கலைசைவாழ் சிதம்பரேச்சுரனே.

பலகலை யுணர்ச்சி தோன்றினு முறுமோ பக்குவ மிலார்க்கு மெய்ஞ் ஞான, மலர்கதிர் கோடி தோன்றினுங் கூகைக் கந்தகா ரங் கெடுங் கொல்லோ, மலர்தலைக் கதலி மிசைமுகி றவழ்தன் மற்றது மாம்பையே யென்று, கலவிவிண் ணுள்ளோன் றழுவுத லேய்க்குங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (உசு)

மாதர்த மல்கு லெனுமம்பண வாவென் மதியெனு மதியினீ விழுங்க, மோதருர் மிகுவெம் பவமெனுங் கடற்சுண் முழுகுவே னுய்வது முளதோ, வாதர மிகுபொன் னுலகமந் தரத்தே யமர்ந்த தென் றமரருட் கொண்ட, காதர மொழிய மாடமேற் றுங்குங் கலை சைவாழ் சிதம்பரேச் சுரனே. (உஎ)

பாவியேன் மனமா கியபெரு வெள்ளம் பத்தியா கியபெரு நதி யை, மேவியே யொளிர்நின் பாதமா கியநல் வீரையுட் புகுவதெந்

நாளோ, பூவியல் கழனி யாமைவன் முதுகிற் பொருந்துகைக் குயங் கள்கூர் படைப்பக், காவியங் கருங்கட் கடைசியர் தீட்டுங் கலிசை வாழ் சிதம்பரேச் சுரனே. (உஅ)

அருளிலாத் தவமோ விதுவில்வா னகமோ வாதரஞ் சற்றுமி லறமோ, தெருளிலா வுளர்வோ விரையிலா மலரோ கிறியனேன் பத்தியில் பாடல், பொருள்பெறு சுதைதீற் றுயர்ந்தமா ளிகைமேற் புதுப்பிறை தவழ்தன்மீப் பொங்குங், கருளில்பாற் கடலூர் வலம்புரி கடுக்குங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (உக)

இடையரு வன்பர் பாட்டொலி முன்ன ரேழையேன் பாட்டொலி தேமா, வுடையபைங் குயிலி னிளசைமுன் கொடிசெப் பியாசையே யுணர்ந்தனன் யானு, மடையெழில் வான மீமிசைப் பொலியு மந்து கிற் கொடியெலாம் வானக், கடையுடுக் கணங்கள் சிதர்தரப் புடைக் குங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (ஈ0)

குயமகன் றிகிரி போற்சுழல் கொடியேன் கொடுமனங் கைபுனைந்திடும யமகன் றிகிரி போற்சுழ லாது வயங்கநீ யருளுவ தென்றே [ணு நயமகன் றிடமின் ஞரொடா டவர்பூ நகுதட மடப்பிடி யொடுவன் கயமகன் றுறைநீ ராடல்போ லாடுங் கலிசைவாழ் சிதம்பரேச்சுரனே.

கொடியவெங் கூற்ற நடாவுது கடாவின் கொடுமணி யோசை கேட் டிடுமுன், னெடியநீ யுகைக்கும் விடைமணி யோசை நீச னேன் கேட்குமா றுளதோ, வடியயிற் கண்ணு ரட்டில்வா யிட்ட வளங்கெழு குப்புகை பார்த்து, கடிகெழு நிசைகண் முழுமையுங் கமழுங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (ஈஉ)

வட்டநாண் மலர்மேற் கடவுளென் றலைமேல் வருந்துறக் கட வையென் றெழுதி, யிட்டநீ யெழுத்து நீரெழுத் தாதற் கெத்தவஞ் செய்தனே னடியேன், பட்டமே லுறுமோ திமமுயிர்ப் பெடையைப் பார்ப்பொடுஞ் சிறகரா லணைத்துக், கட்டவாக் கமல மலர்மிசை யுறங்குங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (ஈஊ)

ஆயவென் பிறவிக் கணக்கெழு தியவே டாலவா யழலில்வெங் குருமுத், தீயரிட் டருளே டாகுரு தமணத் தீயரிட் டொழிந்தவே டாமோ, மாயமீன் சிறிது சிறிதென நீண்டு வலிபடைத் துடல்பருத் தளவில், காயமீ னஞ்சத் தோயமீன் பயிலுங் கலிசைவாழ் சிதம்ப ரேச் சுரனே. (ஈசு)

என்னகத் திருண்மாய்த் தமைந்தகா மாதி யெனும்பல மீனெளி மழுகுங், முன்னரு மொளியைப் பரப்பிடு வதற்குன் முக்கணு ளொரு கணி யமையும், பொன்னணி முலையார் புலவியி னெறிந்த பொங் கொளி மணிப்பணி செறிந்து, கன்னவி றிணிதோ ளினியர்தோர் தடையுங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (ஈடு)

அருந்துதல் பொருந்த னிளிர்த்திசெய் விரத மையகின் பொருட்
டியா னியற்றேன், வருந்துறு பிணியா திகளுறி னியற்ற வல்லவ
ஞயினே னன்றே, விருந்துற நோக்கி மகிழ்நர் மேற்கொண்ட வெகு
ளியாற் செய்தசெந் தடங்கண், கருந்தடங் கண்செய் தடன்மகிழ்
பவர்சூழ் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (நக)

தின்றுதின் றெழிவே னென்றுவெங் கூற்றஞ் சினந்தெதிர் வீசு
பா சத்தோ, டொன்றுவெம் பிறவி வீசுபா சமுமற் றூற்றையே னுய்
யுநா ளுளதோ, துன்றுபைங் குழுத மலர்த்தடந் தோய்ந்து தூதை
மணம் வாருபு தென்றற், கன்றுவந் தூவு மாமியமாடக் கலிசை
வாழ் சிதம்பரேச் சுரனே. (நஎ)

குவலயநடுங்கக் கருங்கடா வுகைக்குங்கூற்றுவன் காங்கொடு புடைக்குந்
தவலரும்வயிரத் தண்டினாங்கஞ்சித்தண்டெனவென்றெனக்கருள்வாய்
அவலமார் தருநீ ரிரவல ரலாஞ்ணைரிர வலரிலை யென்னக் [சுரனே.
கவலரும் வளமைப்பெருங்கொடையினர்சேர்கலிசைவாழ் சிதம்பரேச்

மாண்டநின் னடியார் குழாத்தொடு மடியேன் வயங்குநின் பே
ரவை புகுங்கா, லாண்டகை நந்தி கணமிவன் புகுத லடாதெனத்
தடாவகை யருள்வாய் பூண்டகு மணியு மாடமும் வீதிப் புறங்க
ளுங் கடியன வாயுங்காண்டகு சிறப்பு மிகப்படைத் தோங்குங் கலி
சைவாழ் சிதம்பரேச் சுரனே. (நக)

பொறிவழிச் செல்ல மனமதன் வழியே போகுமென் னறிவு
வன் கடர்ப்போ, நெறிவழிச் செல்லக் கொழுவதன் வழிச்செ னெடி
யதுன் னூகியே நிகரும், வெறிகமழ் கைதை நெய்தலுங் கொன்றை
விரைகமழ் தாயுமேற் படர்ந்து, கறிகமழ் வரையுஞ் சூழ்பெரு மரு
தக் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (சo)

பற்றவா வறுத்த நின்னடி யவர்தம் பழக்கமே விரும்பினப்
பழக்கத், துற்றவா தரமே நின்னடி யடைதற் குறுதுணை யாமஃ
தருள்வாய், துற்றவா டவர்தந் தடக்கையும் யாணத் துதிக்கையுந்
தாழ்வுற்றுக் கிடந்துங், கற்றநா வலர்கள் புகழ்தரப் பொலியுங் கலி
சைவாழ் சிதம்பரேச் சுரனே. (சக)

மனத்தினு னினையேன் வாக்கினுற் றுதியேன் மலர்கையாற்
றாவிதிற் பணியே, னுனத்தகா வென்மா னிடப்பிறப் பினுமற் றேழ்
ரிழி பிறப்புநன் றுமால், வனத்துழாய் மாயோன் வளர்சியி னுயர்
ந்து வயங்குபே ரண்டமூ டுருவிக், கனத்தமா மணிப்பொற் கோபு
ரம் பொலியுங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (சஉ)

அடியனேன் மனத்துக் கழலொடு சிலம்பு மதளொடு பட்டும்
வெள் ளியதுண், பொடியொடு சாந்துஞ் சடையொடோ டியுமாய்ப்
பொலிதரப் பெறுவதெந் நாளோ, கொடியிடை மடவார் கொவ்வைவா

யிதழுங் குறியகட் கொழுஞ்செழுங் கரும்புங், கடிபடத் தெவிட்டா
விரதமூற் றெடுக்குங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (சஉக)

ஆதர மில்லா வெண்ணீயு முறுபே ரருளினு லாண்டுகொள் ளுவையேயற்
பேதம துறுகின் னடியவர் புதிதாப பித்தனென் றணியுரைப்பா ரோ
மாதர்த மிருவார்க் கொங்கையு மவர்தம் வால்வளைச் செங்கையு நாளுங்
காதலங் கிள்ளை யுற்றுறப் பொலியுங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே.

பாரிடைப் பிறந்த புலியுட னினிலக்கப் பற்றரண் செய்பவ ரறிவு
நீரிடைப் பிறந்த புற்புத நிலைக்க நெடியபூண் கட்டுவி ரறிவே
சீரிடைப் பிறந்த மாடமே னீலச் செழுஞ்சுவ ரருகுறு மடவார் [னே.
காரிடைப்பிறந்த மின்னெனத் தோன்றுங் கலிசைவாழ் சிதம்பரேச்சுர

அந்தகன் கணம்வெம் பாவிவந் தணையா வளறது பாசெனு மூனகின்
பந்தமில் கணங்க ளுயர்சிவ லோகம் பாரிது வெனப்பெறு வீரெனு
சந்தகான் மறைசொல் வழியழன் மூன்றுந் தவாதுசெ யிருபிறப்பாளர்
கந்தகாண்மலர்மேற்கடவுளிற்பொலியுங்கலிசைவாழ்சிதம்பரேச்சுரனே.

பொருவிலன் புடைய நின்னடி யவருட் புன்மையேன் நளிர்
மலர் கனிகாய், மருவுபன் மரத்து ணின்றிடும் வற்றன் மாம்பொர
நிற்பினு வருள்வா, யுருவளர் நில மணிப்பெரு மாடத் துட்பொலி
மாதர்தம் வதனங், கருநெடு முகிலுட் பொலிமதி புரையுங் கலிசை
வாழ் சிதம்பரேச் சுரனே. (சஎ)

கோதிலா வமுதே குணப்பெருங் குன்றே குறைவில்பே ரருட்
பெருங் கடலே, சோதியே யென்று நாடொறு நினையே துதித்திட
வரமெனக் கருள்வா, யாதிகா ளமர ரதிபதி நகர மதற்குமா முகமண்
ணுண்ட, காதிசெய் படைத்த நகரெனப், பொலியுங் கலிசைவாழ்
சிதம்பரேச் சுரனே. (சஅ)

பல்லெலாந் தெரித்துத் தராதரந் தெரியாப் பாவியர் மேற்கவி
பாடிச், சொல்லெலாஞ் சொல்லித் துயருவார் நின்னைத் துதித்தலின்
வருபய னறியா, ரல்லெலா நிலைகெட் டோடுபு மற்றோர் ரண்டத்துப்
புகவொளிர் செங்கேழ்க், கல்லெலாம் புகுந்த மாளிகை மல்குங்
கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (சகூ)

ஒல்லுரு வெனநின் னுருவிலா வுருவு ளொன்றுகான் பற்றுறுத் தீங்காற்
பல்லுருப்பற்றி யுழலுகின் றேனுற் பவைசூழ் புவியிடத் தையம்[கொள்
வில்லுரு நுதலவே ளுருவிழி மடவார் விளங்குமோ தியும்பல வுருக்
கல்லுரு மாடங் களுமண மறுத கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. ()

பசுந்தெழு காமஞ் சுரந்தெழு வெருளி படர்ந்தெழு மயக்கமும்
மூன்று, நிசுந்தர முடையே லிவற்றுளொன் றறினு நியமமே தரு
மென்ப துணரே, னசுந்தடி நெடுவே லாடவர் கண்ணு மரிதுதோற்

றுதலென மருங்குல், கரந்தவர் கண்ணுங் கருமைநீங் காத கலைசை வாழ் சிதம்பரேச் சுரனே. (ருக)

பூதமோ நைந்தும் பொறிகளோ நைந்தும் புலன்களோ நைந்தும வெம் பாச, பேதமோ நைந்துங் கலப்பற வுள்வார் பெரியரக் கரங் களோ நைந்து, மாதவ னணிய பெயர்ப்பொரு ளடைவான் மலர்க் காஞ் சென்னிமேற் கூப்பிக், காதலீ டெல்லப் புறமுறச் சூழுங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (ருஉ)

ஒருகணப் பொழுது நின்னடித் தொழும்பி னூற்றையேன் மருவுத லரிது, மருவினு மதணி யுகமென நிணைப்பேன் மற்றிதிற் குற்றமொன் றுண்டோ, பரிதியு மதியும் பாம்புமைங் கோளும் பற் றுபு புரியஞர் தன்பாற், கரிசில்வாழ்க் கையருக் குழுவகை யிரிக்குங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (ருங)

பவுநின் கோயில் சூழ்தரப் பங்கும் பகரும்வே றிருகருமத்தி னுரவுறப் படரக் காலுமா யமைந்த வுணர்வினேன் பங்கிரு காலும் விரிவுறப் பூத்த தருவெலாங் கருமை மிகுமலி மொய்த்தலில் வான்வாழ் கானிலர் பழுத்த நாவலோ வென்னுங்கலைசைவாழ் சிதம்பரேச்சுரனே.

நாய்நரி கழுகு பருந்துமுற் பலவு நகைகொடு விருந்துண வெரு வை, தோய்தடி யாதி நிரம்பிய நாளாட் சுமைபல நாட்சுமந் தெய்த்தேத, ஞய்பொறி யடக்கி வந்தேத யுணவ தாக்கிவா ளராக்குகை தொறுந் தோங், காய்தவர் போல்வாழ் குறிஞ்சிசூழ் மருதக் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (ருஙி)

வெள்ளிய பிறைநீர் நுண்பொடி தூரோணம் விடைவரை யாணை முற் பலவுங், தள்ளிய லிலாநீ வெள்ளறி வுடையேன் றண்ணையுங் கொள்வது வழக்காற், புள்ளிய லோவ மாடமேன் மடவார் புலவியிற் சூழனின்றுங் கழித்த, கள்ளியன் மாலைக் கரம்பைய ரூடுங் கலைசை வாழ் சிதம்பரேச் சுரனே. (ருசு)

நலமலி தரநின் னுலங்க டுதியார் நடுநடுங் கிடவரு நமணைக் குலமலி நமனென் றெண்ணினர்போ லுங்குவலயத் திடைச்சிலவறியா ருலமலி மைந்தர் திரள்புய மார்ப முத்தமாங் கங்களிற் புலந்த கலமலி முலையார் பதச்சுவ டருத கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே.()

தருநிழல் வாழ்க்கை மலர்மிசை வாழ்க்கை தயங்கொளி வைகுந்த வாழ்க்கை, யருவருப் புடையே னின்னடி வாழ்க்கை யவாவினேற் கென்றருள் புரிவாய், பொருவரு தம்பா வீரந்தவர் தம்பாற் புயிபிடத் தியாரும்வந் திரப்பக், கருவிமா முகில்போற் பொழிபவர் சேருங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (ருஅ)

மாயவெங் காலன் வாதணி தவிர்ப்பான் மற்றவ னுருயிர் குடித்த, சேயபங் கயத்தாள் பற்றுபு நின்றேன் சிறியனே னிரங்கிடல் வேண்டு,

மீயுயர் பசும்பொன் மாடமேற் பயிலு மின்னனார் பேரெழில் கண்டா,
காயவாழ்க் கையர்தம் முட்கலாம் விளக்குங் கலிசைவாழ் சிதம்ப
ரேச் சுரனே. (குசு)

மாரவேள் பகழி மலர்க்கிலக் காயுள் வருந்தும்வா னவர்களத்
துயரந், தீரநம் படியார்க் கருள்வதோ நுதற்கட் டெய்வரா யகநிணை
யல்லாற், பாரமால் வையும் வையுமோ துதல்போற் படர்மறுகிடை
மினர் மைந்தர், காரவாண் முலையும் புயங்களு மோதுங் கலிசைவாழ்
சிதம்பரேச் சுரனே. (சுo)

பெற்றது சிறிது பலவிட யத்துப் பெறுதது பெரிதெனக் கொள்
ளுங், குற்றமிக் குடையே ஞயினுங் கடையேன் குலவுநின் னருளுற
லென்றோ, துற்றவல் லிருளும் விளர்ப்புற மதியின் றோற்றமு மிகை
யென முற்றக், கற்றவர்மேனி நீற்றொளி விளங்குங் கலிசைவாழ் சிதம்
பரேச் சுரனே. (சுக)

விளைகெழு மென்பூ நின்முடிக் கணியேன் மின்னனார் சூழன்
முடிக் கணிந்து, வளையற மதவேள் வழங்குபூப் பெற்று வாரிசூழ்
பூவிடை யுழல்வேன், புளையறு பதும ராகமா ளிகையின் பொங்கொளி
யருமையா லிரவுங், களையகல் பொய்கைக் கமலம்வாய் மலருங் கலி
சைவாழ் சிதம்பரேச் சுரனே. (சுஉ)

என்னுநற் றுணையா நினையிசுழ்ந் தயலா ரிணக்கஞ்செ யிழி
ந்தவென் னினுந்தற், கொன்றுண வளிப்பார் தமைத்தொடர்ந் தயலா
ருறவிகழ் ஞமலியே விசேடந், துன்றுபைங் காவின் மதுவிருந் தருந்
தித் தொகுபொறி வண்டினம் வயிற்றுக், கன்று வெம்பசிதீர்ந் தணி
யிசை பாடுங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (சுங)

அருந்துய ரென்னுட் காரொளி யாய தம்மவோ வெள்ளொளி
யாகத், திருந்துபச் சொளியோர் பாலுடைத் தாய சேயொளி யூன்
றுவ தெனறோ, முருந்துறழ் நகையார் மாடமே னின்று மொய்த்தவா
னவர்விழி யிருளக், கருந்துணர்க் கூந்தன் முடிந்திட விரிக்குங் கலி
சைவாழ் சிதம்பரேச் சுரனே. (சுச)

நெடியபே ரடியார் குழாம்புகத் தகாத நீர்மையேன் றணியிரங்குபுசிற்
றடியவர் குழாத்துக் கடையொரு புறத்திலாவது புகுத்திட வேண்டுங்
துடியிடை மடவார் கந்துக மாடல் சோலையி னெக்கிய மந்தி
கடியவிர் தேமாங் கனிபறித் தாடுங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே.

மேயநம் மடியார் குழாத்திடைப் புகுத்தே மெய்யிலா நினையெ
னின் மாசு, தேயநா யேனை யாதுதான் செய்யத் திருவுளங் கொண்
டணையைய, பாயுநான் மறையு முழங்கொலி மன்றற் பணையொலி பரி
கரியொலியா, காயவாழ்க் கையர்கை செவிகவித் திடச்செய் கலிசை
வாழ் சிதம்பரேச் சுரனே. (சுசு)

பவமற வொழித்தி மறுப்பையே லருளும் பவந்தொறு மிடை
யறு தடியேன், சிவமொழிப் பொருளுட் கொளப்புரி யிவற்றென்
செய்திடத் துணிந்தனை யைய, தவமது வருந்திக் காமரம் பாடித்
தழைபொறிச் சிறைவரி வண்டு, கவனவொள் விடைமேநர் மைந்தர்
தார் மருவுங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (சுஎ)

யாரினும் பெரியை நீநினைக் கதிகர் யாருமி லென்னையா ஞுவை
யேற், சீரினும் பெருகுங் கருணையோ னெனலாற் சினங்கொடு வில
க்குவார் யாரே, போரினு முயர்ந்த பொழிலினு மாடப் பொங்கொளி
முகட்டினுங் கமஞ்சூற், காரினு முறங்கப் பொலிபெரு வளமைக் கலி
சைவாழ் சிதம்பரேச் சுரனே. (சுஅ)

மன்னிய பவநோய்க் குன்னருண் மருந்து வயித்திய னீயெனத்
தெரிந்தும், துன்னிய வன்மோ யறவுணை யடாமற் சுழலுவேன் விர
கினே னன்றே, மின்னியன் மருங்கு லுழத்தியர் வெருவ விரிமலர்த்
தடநின்றும் வாளை, கன்னியங் கமுகின் கழுத்திறப் பாயுங் கலிசை
வாழ் சிதம்பரேச் சுரனே. (சுஆ)

மண்டல மதனின் மானிடப் பிறப்பை மருவினு ரடைபய
னினது, தொண்டர்தந் தொண்ட ராகினின் கோயில் சூழ்ந்துணைப்
போற்றுத லன்றே, விண்டல மியங்கும் பரிதிபல் வடிவாய் மேவிவீற்
றிருந்ததே யென்னைக், கண்டகண் வழுக்கப் பொலிமணி மாடக் கலி
சைவாழ் சிதம்பரேச் சுரனே. (எ0)

நீயமர் காஞ்சித்தலமுறேன் மகளிர் நிலவுகாஞ் சித்தல முறு
வேன், மேயசீர்க் கூடல் விழைதரே னணையார் விருப்புறு கூடலே
விழைவேன், பாயநீர்ப் பண்ணை யகத்தெழு செந்நெற் பைம்பயிர் கரு
மதப் பகட்டின், காயமுண் மறைய வளர்ந்தெழு மருதக் கலிசைவாழ்
சிதம்பரேச் சுரனே. (எக)

என்றுமை யாற்றை மேவுமென் மனநின் னிணையிலை யாற்றைமே
வாது, சென்றுயர் தில்லை தரிசித்த தில்லை திருவரு ளெங்ஙனங்
கிடைக்குங், துன்றுநெற் பணையிற் பச்சிளங் கதிரைச் சுரருல கத்தினு
னீன்ற, கன்றுறப் பறித்து மென்றுவா யசைக்குங் கலிசைவாழ் சிதம்
பரேச் சுரனே. (எஉ)

மறைவனங் கொடிய பாவியேன் விழிக்கு மறைவன மாயின
தாரூ, ரறையருள் பெறுவான் புகுதயா னுரு ராறெனி னஞ்சுவன்
மூழ்க, நிறைபெரும் பழனக் கன்னலுங் கமுகு நெட்டிலைக் கதலியு
மகவான், கறையறு மணிமண் டபத்தினுக் கெழில்செய் கலிசைவாழ்
சிதம்பரேச் சுரனே. (எங)

வளமலி மாட நின்றிருக் கடவூர் வாய்மையி னடைந்தவர்க்
கென்று, முளமலி யுவகை யெழவருள் கடவு ருண்மையீ தென்ப

துட் குறியேன், நளமலி விடப்சோலையுந் தருமச் சாலையுந் தய
ங்குபல் குன்றிற், களமலி போரும் வளமுகில் சேருங் கலிசைவாழ்
சிதம்பரேச் சுரனே. (எச)

மதித்தமா தங்க வனமனங் குறியேன் மாதங்க வனங்குறிப்
பேன்மீன், குதித்தநீர்க் கோலக் காவுறேன் வீணே கோலக்காத்
தோறுமுற் றுழல்வேன், பதித்தபைஞ் சாலிப் பயிரக மலர்ந்த பவள
முண் டகமர கதமே, கதித்தபா றையிற்செங் காந்தளே நிகருங் கலி
சைவாழ் சிதம்பரேச் சுரனே. (எடு)

விரும்பிர ளாறு புகுதரே மயக்க விரும்பின ளாறுபோய்ப்
புகுவே, மரும்பிய மலர்நீர் வாஞ்சிய மொருநா ளாயினும் வாஞ்சிய
மழகே, சுரும்பின மெழுந்து விழுந்துவாய் மடித்துத் தொக்கமுண்
டகமது வருந்திக், கரும்பினு மினிய காமரம் பாடுங் கலிசைவாழ்
சிதம்பரேச் சுரனே. (எசு)

உடற்பரங் குன்ற நின்பரங் குன்ற முற்றெரு காற்றெழேன்
கருவூர், விடற்கரு மாசை கொண்டெழேன் கருவூர் விடற்கரு மாசை
மிக் குடையேன், மடற்செழுஞ் செய்ய மலைமலர் பசிய வயலக மலர்
கதிர் பலவோர், கடற்பரப் பிடையே யுதித்தென மலருங் கலிசை
வாழ் சிதம்பரேச் சுரனே. (எஎ)

வேய்வன மடையேன் மங்கையர் தொடித்தோள் வேய்வன
மடைகுவ னுன்றே, ராய்வலஞ் சுழியெண் ணேனவ ருந்தி யாய்வலஞ்
சுழிகுறித் தழல்வேன், மாயிரும் புவியிற் பெரும்பிர தாபம் வதி
வதிந் நகரென விருளைக், காய்மணி மாடச் சேயொளி மல்குங் கலி
சைவாழ் சிதம்பரேச் சுரனே. (எஅ)

மங்கையர் தங்கள் குழற்கருங் காடு மதித்தலிற் கழைப்பசுங்
காடு, பொங்குசெங் காடு புகழ்செய்வெண் காடு புந்தியின் மதித்
திடா தழல்வேன், கொங்கவிழ் மலர்மேற் றிருவிற்குந் திருவங்
கொடித்திடத் தக்கதென் றென்றுங், கங்கையிற் றூய சான்றவர் புக
ழுங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (எசு)

கொழுமணி கொழிக்கு மருவியங் கயிலைக் குன்றநன் புகழ்க்
கொடுங் குன்ற, மெழுகழுக் குன்றங் குறித்திடேன் மடவா ரிணை
முலைக் குன்றமே குறிப்பே, னெழுகொளி மணிப்பூ ணெண்ணுதன்
மடவா ரொன்றவா லரிப்பெருங் குன்றங், கழுவுநீர் பாய்ந்து கன்
னலே வளர்க்குங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (அ0)

நாரிய சொடுசேர் பஞ்சணைப் பள்ளி நயந்துநின் னகத்தியான் பள்ளி
சீரிய காட்டுப் பள்ளியறப் பள்ளி சிராப்பள்ளி நயக்கிலே னுனேன்
வாரிச மலரின் வழிநற வோடி மடையுடைத் திடையெதிர்ப் பட்ட
காரியல் கதலிப் பூங்குலே சாய்க்குங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே.

அமரரென் பெயரு மயனெனும் பெயரு மச்சுத னெனுமொரு பெயரும், விமலநின் னருள்சற் றுறுதலி னன்றே விண்ணவர் வே தன்மால் பெற்றார், பரமமிக் குழக்கு மலர்க்குழன் மடவார் பற்பலர் குளித்தநன் மஞ்சள், கமழ்புனல் பணிநெற் பயிரெலாம் விளைக்குங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (அஉ)

வானக மகவான் சத்திய வுலக மலரவன் வைகுந்த மாயோ ஞனவ னுவப்பின் வாழ்வதுன் னம்பொ னடியருச் சணிப்பய னன்றே நானமும் புழுகு நெருக்கில்வீழ்ந் தளறு நன்மது கிடைமினர் கூந்தற் கானநின் றுகுபூங் குப்பைமா ருத கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே.

அடைந்தவர்க் கருளு மண்ணனீ யேயென் றருமறை முறை யிட றெரிந்து, முடைந்தநெஞ் சோடு நினையடை யாத வுணர்விலே னெங்ஙன முய்வேன், குடைந்துவண் டிமிர்பூஞ் சோலையின் மகஞ் செய் கோதிலார் வாய்மனுக் கேட்டுக், கடைந்ததெள் ளமுதிற் கிளி யெலா நவிலுங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (அச)

நெற்படு பழனம் பற்பல வேண்டி நின்றன னீயினி திருக்கு மற்படு பழனம் வாஞ்சியேன் கொடிய வஞ்சக னல்லனெ கடையேன் பொற்பவா ரணமா கமநியா யம்பல் புராணநன் மிருதிமுற் பலவுங் கற்பவர்க்கிடமீதெனப்பலோர்புகலுங்கலிசைவாழ்சிதம்பரேச்சுரனே.

அந்தகன் வன்கைத் தடியடி முடியேற் றளற்றியா னழுந்துரு வண்ண, நந்திதன் மென்கைப் பிரம்படி யேற்றுன் னல்லடி யழுந்துமா றருள்வாய், சந்தமுத் தரும்பி மாகதங் காய்த்துத் தயங்குசெம் பவ ளமே பழுக்குங், கந்திகண் மலிந்த காமரு சோலைக் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (அசு)

ஒன்றினைச் செய்கை செய்தரா தொழிகை யொழிந்துவே றொன் றினைச் செய்கை, யென்றிவை யுடையோ னீயெனின் யானீ டேறுமா செயனினக் கரிதே, துன்றுபல் சுவைய மடைவிருந் தோடுந் துய்த் துத்தேக் கெறிபவ ரன்றிக், கன்றுவெம் பசியின் வருந்துந ரில்லாக் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (அஎ)

பிணிநனி நன்றஞ் துறினினை நினைக்கும் பெற்றியே நினுத்தலி னதுதான், றணிதரு காலை யுறநினை மறக்கத் தக்கதே செயுமதா றறியா, ரணிகெழு திசையி னரவெலா மிடியி னமைதரு முழக்கென வெருவக், கணிதமின் முழவந் துயிறரா தொலிக்குங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (அஅ)

பூணுமுகி லுவர்நீ ரெடுத்துவ சொழித்தல் புகலுமந் நீர்விருப் புணர்ந்தோ, வெனினுமவ் வாறே யெடுத்துமும் மலமு மிரிப்பதற் கென்விருப் பெண்ணே்ல், புனைகுழன் மடவார் குழற்கிடு புகையும் பூசுரர் மகத்தெழு புகையுங், கனைகட லுதிக்குங் கதிரையு மறைக்குங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (அக)

துடிதுடித் தடியேன் மனமையோ சோற்றுத் துறையிலே
செல்லுமஃ தொழிந்து, நெடியகின் சோற்றுத் துறையிலே செலாது
நிறையரு ளெங்ஙனம் பெறுவேன், பொடியணி மேனிப் புண்ணியர்
பூசை புரிந்துதோத் திரஞ்செய வெழுந்த, கடிதலின் முழக்கங் கடன்
முழக் கவிக்குங் கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (கூ0)

கொடியனேன் புரிந்த தீவினை யனைத்துங் குலவுநின் னுலயத்
துள்ள, கடிதலில் பொருளைக் கவருபு நுகருங் கயவரோ டொன்றுவ
தென்றே, பிடியடி தடியென் றெடிவற வடையும் பெருஞ்சினக்
கூற்றுவ னென்னுங், கடிதலி லெல்லைப் புறத்தும்வந் தடையாக் கலி
சைவாழ் சிதம்பரேச் சுரனே. (கூக)

வஞ்சக முலோபம் பொறுமைமுற் பலவு மருவுநின் மனத்தியா
னுறைதற், கெஞ்சலி லிடமின் றெனினைனக் கொருசா ரில்லையோ
விரங்குவை யைய, வெஞ்சினக் கூற்றின் கருங்கடாக் காணின் வெகு
ண்டல நுகத்திடைப் பிணித்துக், கஞ்சநற் பழன முழுபவர் மேய
கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (கூஉ)

ஈனசம் பந்த மெண்ணிவிட் டகல விலங்கருட் சம்பந்தர் புகழு,
ஞானசம் பந்தர் பாதசம் பந்த நான்பெற வென்றருள் புரிவாய்,
வானசம்பந்த மகளிர்கண் ணிமைத்தன் மருவினைப் பாகுவ ரென்
னக், கான சம்பந்த மொழிநலார் பயிலுங் கலிசைவாழ் சிதம்ப
ரேச் சுரனே. (கூங)

நிலைகுலை யமணக் கொடியர்க ளிட்ட நெடும்பொருப் பேபுணை
யாக, வலைகடன் மிதந்தார் திருவடித் துணையி லழுந்திலை னெங்ஙன
மும்வேன், விலைவரம் பில்லா மணிகிடந் திமைக்கும் வீதியு ளொன்
றுகை வீலைக்குக், கலைபுக முமரா பதியினை வாங்குங் கலிசைவாழ்
சிதம்பரேச் சுரனே. (கூச)

இலங்குமா ரூர னென்னுநின் ரோழ னீணையடி யேத்தினிம்
மையினே, யலங்குநின் மற்ரோர் தோழனுப் மறுமை யளிக்துமேற்
கதியையு முறுவே, னலங்குல வுமையூம பொழின்முசக் கலிகணு
ளொடு நாணிறை மதியுங், கலங்குற முகிலின் மீமிசைப் பாயுங் கலி
சைவாழ் சிதம்பரேச் சுரனே. (கூடி)

சிலையுநைந் துருக நினைநினைந் துருகித் தேம்பொலி வாசகஞ்
சொற்ற, நிலைபெறு வளமை வாதவூர்ப் பெருமா னிறையருள் கருதி
நைந் துருகேன், மலையின் றெழுந்த வாசக்கா லுலவும் வளத்
துடர் கந்தியம் பொழிலோர், கலிமுனி யுணவாங் கடலெழுந் தனைய
கலிசைவாழ் சிதம்பரேச் சுரனே. (கூசு)

வகையினை யெடுத்த மதியிலா வரக்கன் மதித்தொரு சிங்கரஞ்
சேர்த்துப, புனையறு மிசைபா டிடமகிழ்ந் தருணின் பொலிவுறு

கருணையே வாழ்க, வினைகொணல் வகைய மலர்களு நிறைந்த வியங் கெழு நந்தன வனத்துக், கனையில்வண் டொலித்தல் கடலொலி மாய்க்குங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (கூள)

சிறுவிதி மகத்தி லவனெடு சார்ந்த தேவர்த மூயிர்தபச் சினந்து, மறுவலு மவர்க்கு மகிழ்ந்துயி ரருணின் வான்பெருங் கருணை வாழ்ந் திடுக, வுறுபெருந் தவத்தாற் பிறதலத் தடையு முறுபலனினை த்தமாத் திரையே, கறுவிக லின்றி யடைமகத் துவச்சீர்க் கலைசை வாழ் சிதம்பரேச் சுரனே. (கூஅ)

வாயக மமர்ந்தும் வைகரங் கொண்டும் வையுத லொரு மகட் புணர்ந்தும், புரையிலோர் தலத்து வையுரு வெடுத்தும் பொலிவைநின் மனம்வரை யன்றே, விளைமலி யகன்மா ளிகைதொறு மேற்றும் விளக்கொளி மிகையென விளங்கிக், கனையகன் மணிப் பூண் மடந்தையர் பயிலுங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (கூக)

செக்கரஞ் சடையும் வெண்பிறைக் கொழுந்துந் திகழுமுக் கண்ணுநாற் றோளு, மைக்கரு மிடறு மொருபுறப் பசப்பு மலரடித் துணையுநான் மறவேன், மிக்கநற் றவத்து முனிவரும் பனிவான் மேயபல் லோர்களு மடையக், கைக்கரு முவகை யளித்துவீற் றிருக்குங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. (கo)

கலைசைச்சிதம்பரேசுவரர்மாலை முற்றிற்று.

சிவமயம்.

திருவானைக்கா

அகிலாண்டநாயகிமாலை.

செல்வவிநாயகர்.

திருவளர் கமலபோல மதப்பெருக் குண்டு தெவிட்டுகார் வண்டின மெழுந்து, மருவளர் செய்ய சாந்திலுண் மறைந்த மத்தக மீது தங் கிடுதல், கருவளர் மணிகள் பதித்தபொற் குடத்திற் கவினவீற் றிருந்தருள் கொழிக்கு, முருவளர் செல்வ விநாயகன் பொற்ரு ளுபய பங் கயமுடிக் கணிவாம்.

நூல்.

பூமலி செய்ய பொலிமணித் தோடு புதுவெயி லெறித்துமுண் மலர்ந்த, தேமலி யாம்பற் செய்யவாய் முளைத்த சிறுநகை யிளதிலா வெறித்து, மாமலி குழனின் றவர்முக மலர்கண் வளர்த்த முன்புவந் தருள்வாய், காமலி வானும் புகழ்திரு வானைக் காவகி லாண்டநா யகியே. (க)

வடதிசை யவனுஞ் சமழ்ப்புறக் கனகம் வாய்ந்துதென் றிசை நகத் தமருங், குடமுனி யவனுஞ் சமழ்ப்புறக் கல்வி கூர்ந்துமிக் குயர்ந்தவர் பலருந், தடமலர் புனைநின் முகத்திரு கடைக்கட் சார் பொருங் குற்றவ ரன்ரே, கடவுளர் மனம்புக் கமர்திரு வானைக் காவகி லாண்டநா யகியே. (உ)

விழிவிருந் தளவு நின்றிரு மணத்தில் விமலனர் கமலர் மேற் கொண், டொழிவரு கருங்கன் மிசையுறு நின்ரு ளுற்றவென் கர மலர் மேற்கொண், டிழிவற வடியேன் மனக்கலி னிடத்து மியைந் துறு மென்றுணைத் துதித்தேன், கழிநசை முனிவர் புகழ்திரு வானைக் காவகி லாண்டநா யகியே. (ங)

அடியனேன் கொடிய னென்றுமுன் வருதற் கஞ்சினே யென்னினவெங் கூற்ற, மடியமுன் னுதைத்தான் றுணையடைந் தேனும் வருதிமற் றதுநினக் கரிதோ, நெடியவன் பிரம னிந்திரன் முத்தோர் நித்தமுந் தாழ்ந்துசூழ்ந் தேத்திக், கடியவெவ் வினைதீர்ந் துயர்திரு வானைக் காவகி லாண்டநா யகியே. (ச)

பாவிநீ நின்முன் வருவது தகாதென் பரிசினுக் கென்பையேன்
முன்ன, மாவிசும் மதுரை யகத்துமா பாவி யாயினு ஞெருவன்முன்
முக்கட், கோவினே டடைந்த குணத்தினீ யல்லையோ குலவது மறந்
தனே கொல்லோ, காவியங் கழனி சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா
யகியே. (நி)

பண்டுநீ பெருமா னருள்வழி புகலிப் பாலனுக் களித்தனே
ஞான, மண்டுமற் றதனன் முழுப்புகழ் நினக்கே யாயதோ விசங்குபு
நீயே, தொண்டுகொண் டடியேற் களித்தனே யாயிற் றாயகிற் கேமு
ழுப் புகழாங், கண்டுநேர் மொழியார் பயிறிரு வாணைக் காவகி லாண்
டநா யகியே. (சு)

அளவறு பிழைகள் பொறுத்தரு ணின்னே யணியுருப் பாதியில்
வைத்தான், றளர்பிழை மூன்றே பொறுப்பவ டன்னைச் சடைமுடி
வைத்தன னதனறற், பிளவியன் மதியஞ் சூடிய பெருமான் பித்த
னென் றிருபெயர் பெற்றான், களமர்மொய் கழனி சூழ்திரு வாணைக்
காவகி லாண்டநா யகியே. (எ)

பெரும்புக முமைந்த நின்பதி யென்னும் பிரணவ குஞ்சர நின்
கை, யரும்புவிற் கரும்பு விரும்புபு கவருமடல்புரிக் தென்றுளங்
குறித்தோ, வரும்புகர் முகங்கொ ளங்குச பாசம் வயங்குற வேந்
தினே நாளுங், கரும்புய னிறத்தோன் சூழ்திரு வாணைக் காவகி
லாண்டநா யகியே. (அ)

யானென தென்னுஞ் செருக்கிழந் தவர்மற் றிழப்புழுர் நின்
னையீ தண்மை, தானென மறைகண் முழங்கவு முணராச் சழக்கனே
னீயிழந் தழல்வேன், மீனென வயங்குங் கண்ணினுய் கொடி
யேன் விணைக்குமோ ரிறுதியுண் டாங்கொல், காவென வரம்பை சூழ்
திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கூ)

விழியிடந் தப்பி மகவிரிந் தூட்டி விருப்புறு தந்தைதா டிந்து,
பழியகன் மனையை யுதவிமற் றின்னும் பலசெயற் கரியசெய் தார்க்
கே, மொழியுநின் கொழுந னருள்செய்வா னென்னுன் முடிதரா
தென்றுனை யடைந்தேன், கழியுணர் வுடையார் புகழ்திரு வாணைக்
காவகி லாண்டநா யகியே. (கo)

வழிபடு மடிய ராயினுர் தமக்கே வழங்குதுங் கருணைவே றுய,
புழிபடு மவர்க்கு வழங்குறு மென்னிற் பயோதர மருதமு னன்றிப்,
பொழிசுவை நறுநீர் புல்லுவர் நிலத்தும் பொழியுமே புண்ணியப்
பொருளே, கழிதலி றென்னங் காத்திரு வாணைக் காவகி லாண்டநா
யகியே. (கக)

கொடியவ னிவற்கு மருள்புரி யென்றுன் கொழுநனுக் கெனைக்
குறித் துணர்த்த, முடிவிலின் னருளா லெண்ணினே யேலம் முதல்வ

னின் னூடலை யுணர்த்த, வடிபணி பொழுகி னுணர்த்திடல் வேண்டு
மஃதுடன் பலிக்குநீ யறிதி, கடிதலில் கழகஞ் சூழ்திரு வாணைக்
காவகி லாண்டநா யகியே. (கஉ)

தாவருஞ் சிருக்கு மணிவடஞ் சங்கு சக்கரஞ் சூற்படை யிலை
வே, லோவருஞ் சிறப்பின் வேறுவே றேந்து முண்மையா லொண்
மல ரோன்முன், மூவரு மியற்று மூவகைத் தொழிற்கு மூலநீ யென்
பது தெரிந்தேன், காவரு மலர்நல் கிடுந்திரு வாணைக் காவகி லாண்ட
நா யகியே. (கங)

தாயினைக் கொன்றுந் தந்தையைக் கொன்றுந் தவலரு மனைவி
யைக் கொன்றுஞ், சேயினைக் கொன்றுங் கடும்பினைக் கொன்றுஞ்
சேர்ந்தவர்க் கருள்வனின் கொழுநன், வீயினைப் பொருவும் பத
மடைந் தார்க்கே விருப்பினீ யருள்வதார்ந் தடைந்தேன், காயினைச்
சுமந்த பொழிற்றிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கச)

சூற்றியை யடைந்த பசும்புலை யுழுநர் கொடியவன் ஞஞ்சிலென்
செயுமப், பெற்றியி னின்னை யடைந்தநா யேனைப் பிறையெயிற் றந்த
கன் காத்துப், பற்றிய தண்டப் படைசெய லெள்ளே பரிய கரு
ணைவா ரிதியே, கற்றிணி மதில்கள் சூழ்திரு வாணைக் காவகி லாண்
டநா யகியே. (கரு)

முடிமிசை யொருமந் தாகினி வாழ்முதல்வன்வைத் திடுதலிற் சிறந்த
கொடியவ ளென்றி யார்நினைப் பவர்க்கு கோதர மெருக்கெலும் பாதி
படிதரு மிடத்திற் சற்றிட முடம்பிற் பாதியோ விடமருட் டாயே
கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. ()

பெருவள னமைந்த நீருரு வாய பெருந்தகை நீருரு வாய [த்தா
வொருகுல மகளே மலர்மிசைத் தேவு மூணர்கராக் காட்டிடை மறை
னருகுதுண் ணிடைநிற் கஞ்சியே யன்றே லணியுருப் பாதிமற் றிலையோ
கருமுகி றவழு மதிற்றிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கள)

அலையடி யடைந்த வகத்தடி நிலையா தலையடி யேற்கிரங் குபுபுன்
றலையடி சூட்டிப் பிடியடி யென்பான் றடியடி விலக்கியா ளிமைய [தாய்
மலையடி யுதித்து வளர்ந்துவெண் ணுவன் மரத்தடி வாழ்பவற் புணர்ந்
கலையடி யுணர்ந்தார் புகழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. ()

இருவினைச் சிமிழ்ப்புண் டுழல்கொடி யவன்மற் றிவற்கரு ளென்
றிரங் குபுகின், னெருமுத லவனுக் குணர்த்துதி வருத்த முன்ன
லுன் பரிசினுக் கடாது, வருபசங் குழுவிக் குபுபிணி தீர்க்கு மருந்
தீன யன்றியார் துகாவார், கருமுகி லுறங்கு மதிற்றிரு வாணைக்
காவகி லாண்டநா யகியே. (கக)

எடுப்பது பிச்சை யேந்துவ தோடாங் கியக்குவ தொற்றையே றைக்க
ணுடுப்பது புன்றோன் மற்றிவர் மனைய யுற்றநீ யுயிர்வயிற் றழலா

யடுப்பது தவிர வூட்டுத லாதி யறமெலாம் வளர்ப்பையீ தழகே
கடுப்பது தவிர்ந்த மதிற்றிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (உ0)

மூற்றவம் புரிந்து முழுமலந் தமித்த மோனமெய்ஞ் ஞானிய ரன்றி
மற்றவர் கவரப் படுங்கொனின் கருணை வானகத் தெழுமதிக் கதிரை
நூற்றவம் புரிந்த சகோரமோ கொடிய நவில்கருங் காகமோ கவரும்
கற்றவர் புகழ்ந்து சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (உக)

தொண்டவாய் மனமா திகளொருங் குய்க்குந் தூயவ ரன்றிமற் றேரு, மண்டரா தியரு மணுகரு நின்ரு ளைடைவதோ வளவது மேன்மை, கொண்டவான் கங்கை யடைவதோ திமமோ குரண்டமோ குணப்பெருங் குன்றே, கண்டவர் பவங்கா ணுத்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (உஉ)

இடையரு வன்பின் மெய்கொடு துதிப்பா ரின்றுதி முன்னர் மெய்ந்நிழல்போற், புடையரு வினையேன் பொய்கொடு துதிக்கும் புன்னுதி யெங்ஙன மென்னி, னடையருத் தேதமாங் குயிற்குர லெதிரோ ரரிட்டமுங் கதறுதல் பொருவுங், கடையரு மருகஞ் சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (உங)

மறைபல துதிக்கு நின்பெரும் புகழை வழுத்திய வான்றவர் நாவு
மறையுமோ மற்றைப் புல்லிய தெய்வத் தலைபுக முறையுமே லினிமை
நிறைதரு கருப்பஞ் சாறவா வியநா நிம்பநெ யவாவுதல் போலுங்
கறையய வளமை மலிதிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (உச)

மணிதொறு மிரப்புத் தொழில்கொடு புகுவார் மறலித ஞலயம் புகுவார்
நிணதர முடியாக் கருக்குழி பலவு நிரம்புற வோடுபு புகுவா [வாய்
ரிணையவர் புகாகின் றிருப்பெருங் கோயி லேழையேன் புகவருள் புரி
கணைகடல் வாவி சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (உரு)

எண்ணருங் கொடிய பாதகம் பலவு மியற்றுமா பாவியா னெனினு, நண்ணரு நினது திருவரு டோயி னண்ணுத லரிதுகொல் புனிதம், பண்ணருங் கொலைசெய் வாளும்பொன் ஞமே பரிசன வேதிதீண் டுதலாற், கண்ணருங் கழனி சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (உசு)

முழுவதுங் குணமே நாடின்முற் ருது முகுந்தனு தியரிடத்தினுநீ
பழுதற வுணர்த்தா விடினுணர் வாசோ பரமனைப் பண்டவர் புரிதோ
மெழுதரி தவரு மின்னசே லம்ம வென்செயல் யாதெனப் புகல்கேன்
கழுவிய மணியிற் சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (உள)

உலகிடை யழுத பிள்ளைபால் குடிக்கு முண்மையென் றுரைப்பதற் கே
விலகுசீ காழி மழவழ வளித்தா யின்முலைப் பாலழா விடினு [ற்ப
மலகற விரங்கி யளிப்பவ ரிலையோ வத்தகு மழவியா னருள்வாய்
கலகமில் கழகஞ் சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (உஅ)

அழுமழ வொன்றற் களித்தனன் றீம்பா லம்பலத் தாடிய பெருமான்
பழுதற நீயு மளித்தணை நீம்பால் பசித்தழு மினமழ வொன்றற் [ம்பாய்
கெழுதரு மிவற்று னினக்குறு புகழ்மீபா லெம்பிரார்ற் குண்டுகொ லிய
கழுமணிச் சிகரி பொலிதிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (உக)

இடையறு வன்பு பெருக்கிநீ பூசை யியற்றிட வினிதுள முவந்து
சடையறு முடியோ ணிறைதரப் பெற்ற தண்ணிழ ஞவலர் தருவோ
புடையறு தமர ருறைதரப் பெற்ற பொலந்தரு வோசிறந் ததுகட்
கடையறுக் கருணை யாய்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. ()

சிறுபிறைக் கொழுந்து வீற்றிருத் தலினுற் றேவதே வன்றிரு
முடிமேன், மறுவிலச் சுவடு பொலிதரு மைய மருவுரு கஃதுமற்றெ
வர்க்கு, முறுமறைக் கரிய நின்னடி யகத்து மொளிருமச் சுவடுகா
ரணமென், கறுவொழித் தருளப்பாய் புகழ்திரு வாணைக் காவகி லாண்
டநா யகியே. (ஈக)

எதிர்மலர் தொடுத்த மாரவே ளுடல மெரிக்குணு வாக்கிய பெ
ருமா, னதிர்வரு மெய்யிற் பாதிநீ கவர்ந்தா யமைதர முழுவதுங் கவ
ர்ந்தா, னுதிர்தலி னினது திறமையா ருணர்வா ரோங்கவன் வியாப்
பியப் படலாற், கதிர்படு மிதுவே யருடிரு வாணைக் காவகி லாண்ட
நா யகியே. (ஈஉ)

தவவலி யுடையோர் பலரையு மயக்கிச் சடைமுடி யோ(
மயங்கி, யிவருமம் மயக்காற் புணர்ந்தொரு மகவு மீன்றமான் மோ
கினி தனித்துப், பவர்படர் வனம்புக் குறைதன்மற் றவன்மெய்ப்
பாதிநீ கவர்ந்ததோர்ந் தன்றே, கவலரும் வளமை மலிதிரு வாணைக்
காவகி லாண்டநா யகியே. (ஈஊ)

நீயெனப் பெருமான் விரும்பியோர் தினைத்து நிகழ்தரப் பொலி
வதும் புவிக்குத், தாயெனப் படுநீ யவனெனப் பொலியுந் தன்மையும்
வேறலே மென்று, சேயெனப் படுபல் லுயிர்க்கெலா முண்மை தெரிப்
பது போலுமீ தருளே, காயெனப் பவமுற் றகழ்திரு வாணைக் காவகி
லாண்டநா யகியே. (ஈச)

பரவுநங் கருணை வான்றவ முடையார் பாலலாற் புன்மையோர் பாலும்
விரவுமோ வெண்ணி னெழுபெரு வெள்ளம் விரிதரு வாரிதி மட்டோ
வுரவுதீ ருறவி யீளையினும் புகுமே யுவமையில் கோமளக் கொழுந்தே
கரவுதீர் முனிவர் சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (ஈடு)

சடையெனும் வனத்து வாழ்தருங் கங்கை தனித்துறை வாள்
கொலின் றெண்ணி, விடைமிசைப் பெருமா னவளுயிர் வாழ்வான்
மிலைந்தனன் கொன்றையாங் கன்னப், படையன நடையா யணைய
வன் றணைநீ பித்தனென் றெண்ணுதல் பிழையே, கடையுறு வளமை
க் காவகி லாண்டநா யகியே. (ஈஎ)

பரவுறு முலகத் துயிரெலா மீன்று பருவர லவையுறு தோங்க
வுரவுறு கருணை யால்வளர்த் திடுநீ யொருமலை மகளென வுதித்து
விரவுறு புறவு கிளிமயில் பூவை விரும்புபு வளர்த்தவா றென்னே
கரவுறு மவர்கா ணுத்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கூஎ)

பரிதிவந் துதய மெழமுமுக் குடையும் பங்கய மலர்மிசை யுறைவா
ரரிமறு மார்பு மயன்றிரு நாவு மமர்பவ சென்பர்நின் முகமாம் [ல்கேன்
விரிமலர்க் கமலத் துறைவரென் றுணரார் மேதினி மடமையென் சொ
கரிசறு வளமை மலிதிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கூஅ)

விரும்புநின் செங்கை தாங்கலா லிரண்டாம் வேற்றுமை விரித்
துரை செய்யா, தரும்புதா மரைதாங் குவாரென லான்மூன் றுவதும்
படிசொலும் விரிக்கும், பெரும்புவி மலர்பூ மாதெனும் பெயர்கள்
பெறும்வீனைத் தொகைகுணத் தொகைப்பேர், கரும்புபைங் கமுகிற்
பொலிதிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கூக)

நக்திய வறியா மையினினைத் துதிப்பே னுயினே னுயினு மத
னுன், முந்திய விணமுற் றெழிதரா தறைபு முறைமையென் மறவியி
னேனு, முந்திய வழலைத் தொடிற்சுடா துலுங்கொ லொழிவருங்
கருணைவா ரிதியே, கந்திதென் பொருவப் பொலிதிரு வாணைக் காவகி
லாண்டநா யகியே. (கo)

அங்கையேங் தறுபைங் கிள்ளையின் மொழியோ வறுமுகக்
குழவிவாய் மொழியோ, சங்கையே குழையாக் கொண்டவ னூட
றணித்திடப் புகலுமின் மொழியோ, மங்கைநின் செவிக்கு நாயி
னேன் புன்சொன் மற்றுநீ யிரங்கலெவ் வாறோ, கங்கைதாழ் பொன்
னி சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கக)

ஒப்பினின் புகழே கேட்கவென் செவிகண் ணிணங்குகின் னுரு
வமே காணத், தப்பினின் றணியே பாடிட வாய்கை தவாதுகின்
னடிப்பணி யாற்ற, விப்படி யுறுமேற் செங்கதி ருதய மெத்திசை
யெழினுமற் றென்னே, கப்பிணார்த் தருக்கள் சூழ்திரு வாணைக் கா
வகி லாண்டநா யகியே. (கஉ)

ஒதுறு முறைமை யொன்றின்முன் மூன்று ளொருசிறி யேற்கு
நின் பதிக்கும், போதுறு சூழனீ நடுப்பொலி தலினுற் புரிந்துநின்
பதியொடு மெணீப்பின், றீதுறு மிரண்டி னீக்கியொன் றுக்குந் திற
னினைக் கன்றியார்க் குளது, காதுறு கண்ணுர் சூழ்திரு வாணைக்
காவகி லாண்டநா யகியே. (கங)

கோவண மறைபாக் கொண்டனன் பெருமான் கொண்டணை
நீயுமே கலியாத், தூவண வவன்மா தேவன்மா தேவி துதிக்குநீ
யெனிற்றிரு நெடுமா, லேவண வவற்கு நீவியாப் பியமென் றிசைப்ப
தெங் ஙனமருட் டாயே, காவண மறுகு மலிதிரு வாணைக் காவகி
லாண்டநா யகியே. (சஎ)

பொறியிரி தொடரு மருமலர்த் தாளோன் பொலியனந் தொடர் சடா முடியோ, னறியுநின் கொழுநன் பொறியிரி தொடரு மலர்க் குழ லினைநடை யன்னஞ், செறிதரத் தொடர்மென் பதத்தினை யெனி னீ தேவொடு மாறளாய் கொல்லோ, கறிபயி லளிசூழ் பொழிற்றிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (சடு)

திருந்துறு தந்தை யாகிய வரையைத் திரிபுர மெரித்தநாட் குழைத்த, பெருந்திற லுணர்ந்தம் மலையுள மகிழப் பெருந்தகை நிற மூலைக் கோட்டாற், பொருந்துறக் குழைத்தாய் போலுநின் றிறமை புகலுதற் கடங்குமோ தாயே, கருந்துழாய் மார்பன் புகழ்திரு வா ணைக் காவகி லாண்டநா யகியே. (சஎ)

மறைமுதல் பொருவ வேந்தினை நீயு மலர்புரைதருகையில் வன்னி யுறைதரு மணையா னிறமுநின் னிறமு மொத்தன வாயினு மவன [ன் தறைதரு மெழுநா வதுநின தொருநா வதுசெவி யவாமொழி யதுதா கறையற வெதுநீ புகறிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (சஅ)

குடகட லொடுங்கு மிரவிதண் மதியங் குணகட லுதிக்குமென் றுணைக்கும், படவர வேந்து முககநின் னெருகைப் பங்கயத் தொடு ங்குநின் கொழுநன், றடமலர் வதனத் துதிக்குமென் றுணராத் தன் மையென் மெண்மைசான் மயிலே, கடவுளர் பலருஞ் சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (சஅ)

பெருவழக் கெடுத்துப் பேரவை யேறிப் பேசுவ குறையறப் பேசி, யொருதிரு நாவ லூரணி யாண்டா னெனுங்குவெண் ணுவலூ ரண்ண, லருளொடு நீயு மத்தகு செயலொன் றுற்றினன் றென்றியா னினைந்தேன், கருளற வொளியின் மலிதிரு வாணைக் காவகி லாண் டநா யகியே. (சஙு)

முதுபுக ழுடைநின் பதியிரு பாத முழுமலர்க் கருச்சணை யாற் றின், மதுமல ரொன்று குறையினு மதற்கு மாறுகண் ணிடந்திடல் வேண்டு, மதுசெய மாயோ னல்லன்யா னின்பொன் னடியருச் சனை செய்வான் புகுந்தேன், கதுமென வருள்செய் தருடிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (ஙூ0)

தருமமென் றுணைக்கு மரியமர் நின்கைத் தாமரை மலரின தலர்ச்சி பெருமதி மலர்ச்சி மாற்றுமென் றுணையார் பெருமதி யலர்ச்சியே செ மருமலி கமலமலரினதலர்ச்சிமாற்றுமென் றுணைப்பரீதென்னே[ழித்த கருணையங் கடலே யருட்டிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. ()

நீவிரே ஞ தத்தா னின்பதி முகக்க னிகழ்கைசேர்த் தெடுத்திடுங் கால மோவிய மணையாய் கணமுமின் றுனக்கஞ் தும்பரா தியபல வுயிர்க்கு மேவிய கோடி யுகம்பல வாமவ் விகோதநீ யாற்றுத றகாது காவியங் கண்ணுர் பயிறிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (ஙூஉ)

தென்னவன் புரிந்த பெருந்தவப் பேற்றுற் செழுந்தழ லகத்
தொரு மகவே, யென்னரீ யுதித்த வாஞ்சையுட் குறித்தே யிறை
நுதற் கண்புதை யாது, மன்னமற் றிருகண் புதைத்தனீ நின்னை
மதிக்குல மென்பதோர்ந் திலையோ, கன்னவி ரேளார் பயிறிரு வா
ணைக் காவகி லாண்டநா யகியே. (நுசு)

அரும்புமேர் நின்கைக் கணிபல வணிந்துள் ளவாவொடு தாங்
குமா தர்களே, விரும்புபு சுமக்கு மெல்லிதழ்க் கமல மெய்த்தவ
மூடையன வெனவே, யிரும்புளி புகன்ற லஞ்சயமா தர்கட மிருந்த
வப் பெருமையென் புகல்கேன், கரும்புநேர் மொழியார் பயிறிரு
வாணைக் காவகி லாண்டநா யகியே. (நுச)

சிலம்பகத் துதித்த நின்னடி தற்சூழ் சிலம்பகத் துதித்தமா
தாவல், வலம்பகப் பொலியு மூலையினு யங்கை மலரகத் துதித்தமா
தென்ன, வுலம்பகப் பொருதேதா ளரன்முடிக் கொளாமை யுணர்ந்
தன்றே வூடலிற் றுக்குங், கலம்பக முலாமுற் புனைதிரு வாணைக் கா
வகி லாண்டநா யகியே. (நுஎ)

பெரியவர்க் கிடுக்கண் புரிவதை யுணர்ந்து பெரும்புகழ்த் தந்
தைதன் மரபென், றரியவர் சிந்தை யாலயம் புகுவா யயர்ந்துமெண்
ணுமல்வண் குறிஞ்சிக், குரியவன் கரத்துப் புகூஉக்குரு குப்பே
சொருவதை கொன்றனீ யழகே, கரியவன் பிரமன் சூழ்திரு வாணைக்
காவகி லாண்டநா யகியே. (நுக)

நீணியுணர் மகடாய் மரபென வொருமா னெடுங்கையேந் தினன்
பெம்மா னம்மான், றணியுணர் மகன்றாய் மரபெனக் கிள்ளை தன்னை
நின் கையிலேந் தினையால், வீணியுண ரார்சொன் னீயுநின் பதியும்
விரும்புறு மாடலென் னுளைக்கேன், கணியுண ரளிசூழ் பொழிற்றிரு
வாணைக் காவகி லாண்டநா யகியே. (நுஎ)

பொலிதரப் பசந்து நீர்மழை யெங்கும் பொழியுமே புயலது
போல, மலிதரப் பசந்து நீயும்வண் கருணை மழைபொழி குவைகொடு
வினையான், மெலிதர லுற்ற வெனையொழித் திடுவான் வினையெவன்
விமலமெய்ச் சுடரே, கலிதரு துயர்சா ராத்திரு வாணைக் காவகி
லாண்டநா யகியே. (நுஅ)

நறைபிலா மலரோ நயமிலா மொழியோ நயனமில் லாதவாண்
முகமோ, பொறையிலாத் தவமோ, மகவிலா மனையோ, புனலிலா
வோடையோ நீதி, முறையிலா வரசோ மதியிலா விரவோ மூட
னேன் பத்தியில் பாடல், கறையிலா வளமை மலிதிரு வாணைக் காவகி
லாண்டநா யகியே. (நுக)

குணமிலேன் மொழிபா நயமில தெனினுங் குறித்ததை யேற்
றருள் செய்ய, விணர்மலி குழானிற் கேதகுஞ் சிலம்பி யியற்றுதூற்

பந்தரு முவந்து, புணரருள் புரிந்தா னின்பதி யந்தப் புராணநீ யோ
ர்ந்தணே யன்றே, கணமலி முனிவர் சூழதிரு வாணைக் காவகி லாண்
டநா யகியே. (சுo)

வரிவிழிக் குடைந்த மானையு துதற்கு மானுருப் பிறையையு மல்
குற், கிரிதரும் படவெவ் வரவையு மருங்குற் கிணைகாத் துடியையுஞ்
சுமந்தான், முரிசறு வனப்பார் நின்னுறப் பினுக்குத் தோற்றறும்
விசேடமென் றுணர்ந்தே, கரியகண் டத்தோ னருட்டிரு வாணைக்
காவகி லாண்டநா யகியே. (சுக)

பொறையரு ளடக்க மன்புப சாரம் பொலியுமா சாரநல் வாய்
மை, யறைதரு மின்ன குறையுளே னெனினு மடிமையே நினக்கியா
னுறுப்புக், குறையுடை யாரு மக்களென் றெடுத்துக் கூவுவ ருலகர்நீ
யுணர்வாய், கறையற விளங்கு மருட்டிரு வாணைக் காவகி லாண்டநா
யகியே. (சுஉ)

உரைசெய்வெண் ணுவ னிழலுறை பெருமா னெனுங்கருண் முறை
செலுத்த் தியதோன், வினாசெய்பூங் கொன்றை யவனென நீயும் விருப்
பொடு செலுத்தல் வேண்டும், புனாசெயென் பாலே மற்றது செ
லுத்தற் பொருப்பின்மே லிடுசுடர் போலாங், கனாசெயா வளங்கண்
மலிதிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (சுங)

புண்ணிய வெள்ளீ நாவலோ ஞரம் பூண்டவ னெனும்பெயர்
பூணுந்தான், றண்ணிய குணத்து நீயுமென் பாட றழுவுபு பூணுவை
யாகி, னண்ணிய பாடல் பூண்டவ ளெனுமோ ரரும்பெயர் நினக்கு
மூண் டாமே, கண்ணிய வரங்க டருதிரு வாணைக் காவகி லாண்டநா
யகியே. (சுச)

தழைசெய்வெண் ணுவ னதுநிழ லுறைவான் றனிமுத லவ
னெரு பாகத், தழைசெயொள் விழியா யுறைகுவை நீமற் றுன்னடி
நிழலிலெஞ் ஞான்றும், விழைசெயா னுறையப் புரிந்திடி னதனுன்
மிக்கபுண் ணியநினக் குண்டே, கழைசெய்பூங் கழனி பொலிதிரு
வாணைக் காவகி லாண்டநா யகியே. (சுடு)

பிரம்படி பட்டுங் கல்லடி யேற்றும் பிறைபொரு வில்லடி கொண்டு
நிரம்புற வருள்வா னெனுங்குவெண் ணுவ னிழலுறை பவனடி யார்பா
லுரம்பயி லவன்போ னீயவ்வா றேற்றின் புதவுக ளல்லண்மெல் லியனீ
காரம்பனு கழனி மலிதிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (சுஎ)

பற்பல றறியப் பித்தனென் றெள்ளிப் பனவபோ வென்றுளார்
தமையும், பொற்பலர் பெருமான் விடாமென வாண்டு புரந்தன னங்
ஙன மின்றி, வெற்பலர் மருங்தே துதித்துவா வென்னும் விணையி
னேன் றணைவிட விதியென், கற்பலர் நந்த வனத்திரு வாணைக் காவகி
லாண்டநா யகியே. (சுஏ)

தேவியோ டினிது வந்தருள் புரிந்தான் சிவனடி யார்க்கென்ப தன்றி, யாவிகேர் கொழுந லேனுவந் தாண்டா ளம்மையென் பாரிலே யன்னே, மேவியச் சீர்த்தி நினக்குரு விதமென் விளம்பிட வேண்டு நா யேற்குக், காவியார் தடஞ்சூழ் தருதிரு வாணைக் காவகி லாண் டநா யகியே. (சுஅ)

அடியவர் குறிப்போர்ந் தாண்பணி காய்க்க வாற்றெதிர் செல்ல வே டென்பின், பொடிமட வரலா கக்காரம் விழுங்கும் பொருடாச் செய்தனன் பரமன், கொடியனேன் குறிப்போர்ந் துன்னடிக் கன்பு கொளப்புரி வதுமுனக் கரிதோ, கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (சுக)

அயனரி குலிச னமரருண் ணடுங்க வடர்ந்தழுங் கொடுவிடம் வாங்கி, நயனமூன் றுடையா னுண்டனன் முன்ன நங்கைநின் பவ ளவா யமிர்தப், பயனுணர்ந் தன்றே வலனெனி னணைய பரமனெவ் வாறுணத் துணிவான், கயன்மலர்த் தடங்கள் சூழ்திரு வாணைக் கா வகி லாண்டநா யகியே. (எ0)

ஒளிமிகு சம்பு லிங்கநா யகர்போ லுடையையா னுதல்விழி நீயு மளிமிகு மணையார் மாரணை யெரித்தார் யானைநீ யெரித்தணை யம்மா வினிமிகு நாயேன் வினையினை யெரித்தா லிரும்புகழெவரினு நினக்காங் களிமிகு மமரர் சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (எக)

நெடுவலி கொடுமா மேருவிற் பிடித்தாய் நீயஞ் துணர்குவன் யானு மடுதிறற் சூலி பிடித்தன னெனன்பா ரவனியுட் சிலர்கருத் தென்னே விடுகிடை நீயு மவனும்வே றல்லீ ரென்பதை யுணர்ந்தனர் கொல்லோ கடுவிழி மடவார் பயிறிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (எஉ)

அம்பலத் தாட வெடுத்தநா டுணையென் றறைவனீர் கான்மலி யரையன், வம்பலர் முன்றிற் றிருமணத் தம்மி வைத்தநா டுணையென்ப னீர்காற், செம்பொரு டினியா னென்றெணி யிகழே றேர்ந்தொரு வழிநின்றே னன்னுப், கம்பலர்த் தடஞ்சூழ் தருதிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (எங)

எதிரறு பொதுவிற் குறட்பிணர் வெரிந்மே லியைத்திட றகா தென வுணர்ந்து, முதிருணர் வுடைய பரன்மறைச் சிலம்பார் மொய் வலத் தாணிறீ இ யிடத்தா, ளதிர்வற வெடுத்தான் வழுதியவ் வரு மை யறிதரான் .பிழைத்தனன் பொறுத்தாய், கதிரருட் கழகே யது திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (எச)

பரவுவெண் ணுவ னீழலோ னிடத்தாள் பற்றிய வென்முனங் குறுக வுரவுசெய் தண்ட தரளுள நடுங்கு முதைத்ததத் தாளென வுன்னி விரவுமப் பதகின் பதமன்றே வதணென்பதமென்பதென் விளம்பாய் கரவுறுப் புலவர் புகழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (எடு)

ஒருகருங் கேழ லுருவெடுத் திணையி லுன்பதி யடிமலர் காண்
பான், பெருநில மகழ்ந்த மாயவ னினது பிறங்குபே ராலயஞ் சூழ்ந்த,
பொருவினீ றிட்டான் மதிலடி கண்டாற் போதுமே புண்ணியக்
கொழுந்தே, கருள்கடிந் தொளிரின் மலிதிரு வாணைக் காவகி லாண்
டநா யகியே. (எசு)

உயன்மறந் தடருந் திரிபுரஞ் சிதைப்பா னெருவரை யெளிதி
னிற் குழைத்த, பயன்மதி முடித்த பாடல்சார் பெருமான் பாழியந்
தடகெடுந் தோள்கள், வியன்முலைக் கோட்டாற் குழைத்தரு ணினை
க்கு மெல்லிய லெணும்பெயர் தகுமோ, கயன்மலர்த் தடங்கண் மலி
திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (எள)

மையவாண் மகனெள் ளெச்கிலுண் டாற்கு மகிழ்ந்தருள் செய்
துநின் கொழுநன், மெய்யவாஞ் சீர்த்தி படைத்தன னெனைக்கு விரு
ம்பிநீ யருளுவை யாயி, னீயபெண் மகளெள் ளெச்கிலுண் டானுக்
கருளினு ளெனும்புகழ் நினக்காங், கையர்வந் தணுகற் கருந்திரு
வாணைக் காவகி லாண்டநா யகியே. (எஅ)

புனல்பயி றவனீ முழங்கதின் கொழுநன் புகழ்ப்பெய ருரைத்
ததா வுணர்ந்து, மினல்பயில் கனகம் வீசினு ளெருவன் மெம்மையே
நின்பெய ருரைக்கு, முனல்பயில் குழாம்பு கேன்றெழேன் புகழே
னுவந்திடே னெங்ஙன முய்வேன், கனல்பயின் மணிமா மதிற்திரு
வாணைக் காவகி லாண்டநா யகியே. (எக)

மாவியல் பெருமான் மான்பிறை சுமந்தேதன் வாமபா கத்தினி தமரு
ரீவினீ யாடற் கென்பனம் பற்க நிகழஞ் திடைமரு தூரின்
மேவிபோ ராசில் விழுங்கிய தாதி வெறுப்புன மறைப்பதற் கென்று
காவியங் கண்ணு யுணர்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. ()

அண்டகோ டிகளென் றுரைத்திடுஞ் சிற்றி லமைத்தமைத் தர
டிடு வாய்நீ, துண்டவாண் மதியஞ் சூடிய சடிலச் சுந்தர னழித்த
ழித் தாடும், பிண்டனூ லென்றும் பேதைநீ யணையான் பித்தனென்
றுரைப்பது மெய்யே, கண்டவா மொழியார் பயிறிரு வாணைக் காவகி
லாண்டநா யகியே. (அக)

மகளென நினைந்து தாயென விளித்த மலையிறை மணையறி யாமை
புகாறு பிரமன் முதற்பல வுயிர்க்கும் பொருந்துதா யாமுனைக் கணைச
னகருகு முருகக் கடவுடா யென்று நவிலறி யாமையை யெய்க்குங்
ககனமே லோங்கு மதிற்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. ()

இலங்கற முப்பத் திரண்டென வகுத்தாங் கிகலற வவையெலாம்
வளர்த்து, மலங்குயிர் பலவும் புரக்குநீ கொடியேன் மாட்டருள் புரி
யினஞ் தவற்றுட், டுலங்குமொன் றெடுசே ராதுகொ றனிப்பிற்

சொற்றிமுப் பத்துமூன் றென்றே, கலங்கலில் வளமை மலிதிரு வா
ணைக் காவகி லாண்டநா யகியே. (அஞ)

இனைத்தடைந் தேனை யாடியென் னுணையா னிரந்திரந் தேத்தநீ யிரங்கி
வனைத்தபே ரருளா லாளுவ தனினு மன்றநீ யேயருள் புரிந்தான்
முனைத்தசிர் பரவ விடமில கேட்டோ முகின்மழை வழங்கிடுந் தாயே
கனைத்தடஞ் சிகரி சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (அச)

பிழைபல வுடையே ஞயினு மவற்றைப் பேதைநீ யென்பதற்
கிணங்கக், குழைமனத் தகற்றி யாளவே வேண்டுங் கூர்ந்தினி தாண்
டிடா யெனனின, மழைமலாக கூருதற் கங்கையைப் புகழ்வேன வை
வரே நொந்தவர் தாயே, கழைமலி கழனி சூழ்திரு வாணைக் காவகி
லாண்டநா யகியே. (அடு)

சடைமிசை மாதை நோக்கியா ரெனினீ சங்கர னீரென்பான்
முகமு, னிடைதெரி தரலென் னென்னினீனைக் குறுநின் னெழின்முக
முதனிழ லென்ப, னுடையநா யகிநீ மறுத்திடிற் பிறரா ணுணரென்பா
னுணரவல் லவர்யார், கடையுற லொழிந்த வளத்திரு வாணைக் காவகி
லாண்டநா யகியே. (அசு)

எனக்கருள் செயினின் கொழுநனைப் புகழ்வே னிமயநின் றந்
தையைப் புகழ்வேன், மனக்கினி தாநின் மைந்தரைப் புகழ்வேன்
மலரினின் றேழியர்ப் புகழ்வே, னினக்கினி யவரா மடியரைப் புகழ்
வே னின்னையும் புகழுவேன் றூயே, கனக்கடி மதில்சூழ் தருதிரு
வாணைக் காவகி லாண்டநா யகியே. (அள)

பூவண நகரிற் பொன்னனை யாளிற் புகுந்தனன் முன்புகா
மாரி, தூவண வன்பி னீந்திணை யெனுநூல் சொற்றதை விளக்கின
னென்னின், மாவணத் தனிர்நேர் மேனியா யுலக மாதுகொ னீவிடை
யிதற்கென், காவண நிறைவீ தித்திரு வாணைக் காவகி லாண்டநா
யகியே. (அஅ)

பேயொடு நடிக்கும் பித்தனே யென்றே பெருங்கதியிலியிவ னென்றே
தாயொடு தந்தை யில்லவ னென்றே தம்பிரா னெருதிரு மேனி
நீயொரு பாதி நின்முனோர் பாதி நிலவுறக் கொண்டது நன்றே
காயொரு வாத்தென் பொலிதிரு வாணைக் காவகி லாண்டநா யகியே.

மோகினி யுருக்கொண் டொருதரம் புணர்நின் முன்னவன் றன
க்குமோர் பாதி, யேகலி லெழினின் றனக்குமோர் பாதி யெம்பிரான்
மேனியி லென்ரு, லாகிய நீயே யவனெனத் தெரிந்தே னல்லெயென்
றூற்பொறுப் பாயோ, காகனஞ் சுமக்கும் வளத்திரு வாணைக் காவகி
லாண்டநா யகியே. (கூ0)

பல்லுல கீன்ற நின்றிரு வுதரப் பாலுள தென்னுநின் னிடை
நே, சொல்லுமா றிலதா யினுமொரு பக்க மொத்தலிற் சிருட்டியை

யாற்றும், வெல்லுநா யகன்கைத் துடியெனி னின்றன் மெல்வயிற் றிற்கது புகழோ, கல்லுமா மலத்தர் சூழ்திரு வாணைக் காவகி லாண் டநா யகியே. (கூக)

வண்படு கருப்புச் சிலைகொடு நெடிய வலிபடு மேருவிற் கொ ண்ட, தண்படு மதியஞ் சூடியைப் பொருது சயம்படு நகைபுரிந் துவ ப்பா, யொண்படு வலர்க்குப் பசும்புல்வன் படையென் றுரைப்பதை விளக்கினை தாயே, கண்படு மனச்செய் சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கூஉ)

தேவிநின் னிடைதோ ளொத்திடு குணத்தாற் சிதம்பர தலத் தும்வேய் வனத்து, மேவிய நகைமுத் தணிமுலை யொக்கும் விதத்தி ஞற் றிருமுல்லை வாயில், பாவிய கயிலை யிடத்தும்வீற் றிருப்பன் பான் றலை மதியனே யன்றே, காவியன் சுகன முறுந்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கூங)

சுவைபடு கனிசெய் பனசநெட் டரம்பை சூதமா மலகம்வெண் ணுவ, லிவைமுதற் பலவான் றருநிழ றுறைவா னினியநின் மொழிச் சுவை யவாவி, நவைபடு கொடிய வச்சிர வனமு நயந்தனன் பித்தஞ தலினுற், கவைபடு சூலி யெழிற்றிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கூச)

இறையவன் வாமத் துறையுநீ தொழில்செ யிமையவர் தருப்ப ணங் காட்ட, மறைவின்மற் றதனீ நோக்கியவ் விறைவன் வலப்புறத் தொருமடக் கொடிநன், குறைவதென் னெனமற் றவனுநு பிணங் கே லுற்றுநோக் கிடிற்பிழை யில்லான், கறைமலி களத்தன் வளத் திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கூடு)

கொடியது பிறத்த லதனினு மம்ம கொடியதே யிறத்தலிவ் விர ண்டுந், தடிதர நினைந்தேன் றந்தைதா யில்லான் றறுகண்வெங் கூற்று தைத் தாற்சுன், னடியனென் றுணர்த்தி யருள்விலக் குவையே லகி லமீ தொருகதி யுண்டோ, கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கூசு)

தடியுண லென்றும் வனசரர் பெருமான் றருதடி மிசைந்தன ஞெழிக மிடியிடை யவர்மா லென்றுநிற் களித்தான் மேனியிற் பாதியா தலினுற் படிவிதி விலக்கி லான்பர னெண்ணீப் பற்றியா டற்கவை சூறியான் கடிதரா துணர்த்து நீதிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கூள)

வரக்கருங் கொண்மூ மழைபொழி யாதேன் மண்பயி ருயும் வகை யுண்டோ, திரக்கடுங் கவலை சிதைதரப் பல்காற் செய்யும்விண் ணப்பநீ யுணர்ந்து, மிரக்கமில் லவள்போ லிருத்தியேற் கருணை யெங் கினி யிருப்பது தாயே, கரக்கரும் வளங்கண் மலிதிரு வாணைக் காவகி லாண்டநா யகியே. (கூஅ)

மாயவ னுயோர் பாதியில் லவளாய் மற்றொர்பா தியுங்கவர்ந் தணையா னுயகன் மேனி யெனினவன் வடிவ நாடொறு மறைந்ததா யிருக்கச் சேயமண் சத்தி மயமெனு தந்தோ சிவமய மென்பதென் னுரையாய் காயமீ தெழுந்த மதிற்றிரு வானைக் காவகி லாண்டநா யகியே. (கூக)

பனிபடு நின்ருட் பங்கயம் பொங்கு பனிவரை யகநக நிகழுந், தனிபடு பொழுது பரன்முடி மதியந் தண்ணெனைத் தாக்குநீர் வாவி, நனிபடு முட்டாட் பங்கயம் பெறுமோ நவின்றன விணையிலென் றுணர்ந்தேன், கனிபடு பொழில்விண் கமழ்திரு வானைக் காவகி லாண்டநா யகியே. (க00)

திருவானைக்கா அகிலாண்டநாயகிமாலை முற்றிற்று.

உ

*சிறப்புப்பாயிரம்.

தஞ்சைச் - சதாவதானம்

ம-ரா-ரா-ஸ்ரீ

சுப்பிரமணியஐயரவர்களியற்றியது.

ஞான கேத்திரத் தமரகி லாண்டநா யகித
னீன மில்பதத் தியற்றமிழ் மாலையொன் றியற்றி
மான மார்ந்தமீ ளுட்சிசுந் தாகன்ரு வலவ
னூன மோவுறப் புனைந்தன னுலகுவப் புறவே. (க)

அன்ன மாலையைச் சோமசுந் தரப்பெய ரமைந்த
நன்னர் மேவிய சுருணைச் சியற்றிரல் கென்று
பன்ன நன்றென்று தியாகரா சப்பெயர் படைத்த
மன்னு நாவலன் பதிப்பித்து வழங்கினன் மகிழ்ந்தே. (உ)

சிறப்புப்பாயிரம்முற்றிற்று.


---

* இது பழையபதிப்பைச்சார்ந்தது.

சிவமயம்.

திருவாவடுதுறையாதீனத்து

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்மாலை.



காப்பு.

பொன்மலர் தடித்துந் தனிதமு முறுகார்ப் புயலிவர் தந்தையே பொருவ, வென்மல செயிறு முழக்கமும் வாய்ந்த வெறுழ்க்கரு மூடிக முகைத்துப், பன்மலர் முடிமுன் னடிவனை மலர்ந்து பயிலு மோ ரத்தியைத் துதிப்பாந், தென்மலர் துறைசைச் சுப்பிர மணிய தேசிகன் மாலீசீர் பெறமே.

நூல்.

பூமலி நினதா ளுள்ளுரு துதித்துப் போற்றிடும் வாஞ்சையே மதனுக் காமலி மூன்று மொருவழிப் படுவா ரைருள் புரியுட லாதி தாமலி தரக்கே ளாதளித் தாய்க்குத் தகுவதோ வருளெனக் கேட்ட மாமலி யறவர் சூழ்பெருந் துறைசைச் சுப்பிரமணியதே சிகனே. (க)

எண்ணுத லுதித்த லியற்றவல் லாகீ யெற்றைக்கு நம்மடித் தொழும்பெ, பண்ணுக வென்றுய் மெய்ப்பணி யென்று பற்றின னிது கொளற் பொருட்டோ, நண்ணுகூற் றுதைத்துங் கல்லெறி யேற்று நயந்துமுன் பழகிய தைய, சுண்ணவொண் மாடஞ் சூழ்பெருந் துறை சைச் சுப்பிர மணிய தேசிகனே. (உ)

எம்மையாள் பொருட்டுக் கயிலையு மழுமா னிலகிய திருக்கை சார் வடிவுஞ், செம்மைசால் பெயரு நீத்துவே றடைந்தாய் திகழ் தரு மூன்னுள மூன்று, தம்மைநோக் குறினின் றுள்ளமூன் றனுக் குந் தாழ்ந்தன வென்றுளந் தெளிந்தேன், சும்மைதீர்த் தடங்கள் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (ங)

கேவலஞ் சிவாத் துவிதம்விசிட் டத்துக் கெழுமுமத் துவித மோடம் பாது, நாவலந் தருசுத் தங்கொளென் றருள நாடுகே வலத்தி னின் றெடுத்து, மாவலம் படருஞ் சகலத்து விடுத்தாய் வருவியாய் சுத்தமீ தென்னே, தூவல கலிஞர் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (ச)

இன்றுநீ யடியார் தமக்கரு டிறத்தா லெழும்புகழ்ப் படலமிக் கெழுந்தே, யன்றுநீ புனைந்த வம்பரங் கிழித்த தனுகுறித் துரைத்தரி னின்று, நன்றுநீ பித்தன் ருனெனல் விளக்கு நாடிறின் மற்றது மருளே, துன்றுவா னவர்கள் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (டு)

மதிகதி ரிரண்டு முகவிழி யவற்றுண் மதியமுள் ளுவப்பவோர் மலரைப், பதிதர முடியிற் கொண்டணி மற்றைப் பரிதியு முவப்பவோர் மலரை, நிதிநிக ரடியிற் கொளல்கட னளித்தே னீகொளென் னித யதா மரையைத், துதிபெறு முனிவர் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (சூ)

நிறைதகை யழிந்தும் வெண்மையே வாய்ந்து நெடியகட் குறுந் தொடி யவர்பான், முறைதிறம் புற்றுங் களங்கமிக் கமைந்து முனி தகக் கோடியு மடைந்த, பிறைமதி முடியிற் கொண்டநீ யதுபோற் பிறங்குமென் மதியடிக் கொளினென், றுறைதொறு மெனினம் பயில் பொழிற் றுறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (எ)

மருவிவே தண்டத் திருந்தநீ யடியேன் வன்மனத் திருந்திட லரிதோ, பொருவிலவ் வரைமே னிகிசர னெருவன் போயற வுன்றிய நின்ரு, லொருவிவன் மலம்போ யொழியமற் றதன்க ணுன்றிட லரி யதோ சொல்லாய், துருவிமான் முதலோர் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (அ)

வளைதரு புறத்துக் கருகிருட் படலம் வயங்குநின் பார்வையா லன்றி, வினைதரு மற்றென் ருல்வில குவதோ விராவகத் திருட்பட லமுநின், னினைதரு கருணைப் பார்வையா லன்றி யகல்வதி லனமிணு ரோடு, துனைதரு பெருநீர்த் துறைகள்சூழ் துறைசைச் சுப்பிர மணி யதே சிகனே. (கூ)

கோலநின் செந்தா மரையடி விட்டார் கூற்றுவ னடிவிடா தவ ரே, சீலநி னங்கைச் செய்யதா மரைதஞ் சென்னிமேல் வைத்திடப் பெறுதார், சாலவு மொருதா மரைத்தவி சமர்வான் றன்கை வைத் திடுதல்பெற் றவரே, சூலநின் ருெளிரு மாளிகைத் துறைசைச் சுப் பிர மணியதே சிகனே. (கo)

அத்தநின் றடந்தோட் செங்கழு நீரை யவாவிய வரிமதர் மழைக் கட், புத்தமு தணியா ளவமு மசோகும் பொன்னிறம் பொலிதகரிர் மாவு, நித்தில முயிர்க்குஞ் சலசமும் பெற்ரு ணிலமும் பெறுகுவள் போலுந், துத்தமொய்த் திசைக்கு மளிப்பொழிற் றுறைசைச் சுப் பிர மணியதே சிகனே. (கக)

மன்னிய நினது நாமவைந் தெழுத்தை வயங்குநின் பாலுறப் பெற்று, மின்னிய மனத்துச் சுமந்திடா செல்லாம் விரிஞ்சனுர் நல்கு

பல் லெழுத்தை, முன்னிய துயரத் தொடுகருந் தலையின் முழுக்கவுஞ் சுமப்பவ ரன்றே, துன்னிய சுழனி சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (கஉ)

பித்தவென் றிகழோரம் பெண்கொடி மணவாய்ப் பேயுறங் கிருட் பொழு தின்னே, யத்தசெல் லென்னேந் துதிபுரிந் திதய மாயவம் போருகத் திருத்தி, நித்தமு முவப்போ மடிகளுக் கெதன்க ணிகழ் விருப் பருள்செயல் வேண்டுஞ், சுத்தநற் றவத்தார் சூழ்பெருந் துறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (கஙு)

மதிக்குமா ரூரின் மறுகுவன் பூவின் மலிகரு கிருளிடை மலர் ந்து, திதிக்குநின் பாதச் செய்யதா மரைக டெண்டிரை யுடுத்தவா ரூரிற், கதிக்குமெம் மனமா மறுகுவன் பூவிற் கலினுற மலர்தரு மென்றே, துதிக்குமோர் கடமை பூண்டனந் துறைசைச் சுப்பிர மணி யதே சிகனே. (கச)

தவருடை யலைவே ளெய்வது குறியார் தழையுடுங்கின் செங்கழு நீர்வேட், டிவருடை யிழந்தா ளென்பது குறியா செம்மீன் மார்க ணேற் றிராவை, யவருடை யறுத்தா ரின்னமும் பசலை யழகிய மேனி யிற் றீரா, டுவருடை யிதழா ளருள்புரி துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (கடு)

ஐயநின் பொதுநா மத்தலாற் சிறப்பி னமைந்தநா மத்தினு மெமக்கு, மெய்யநன் குறலாற் பொதுமையி னன்றி மேவிய சிறப் பினு மடிமை, யுய்யநன் குறலா மெனத்துணிந் திருந்தேgreat முதுநிறை வேறுமா ருருள்வாய், துய்யநற் புலவர் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (கசு)

கொலைகுறித் தெடுத்தல் செய்திடா மழுவிற் கொண்டதன் றுன் றிருமேனி, யலைபுரிந் தெம்மை யடர்த்திடும் பந்த மடங்கலு மடர்த் திடற் கன்றே, தலைமைமற் றதுகொண் டதுசெயா திருக்குந் தன் மைசான் றவர்க்கழ காமோ, தொலைவில்பல் வளமுஞ் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (கஎ)

கருவிகை யிகப்பிற் போதமாம் போதங் கையிகப் பிற்றிரு வரு ளா, மருவிய வருள்கை யிகப்பினின் பாமிம் மாண்புநின் னேக்கினு லன்றி, யொருவிய மற்றை யொன்றனு லாமோ வுலைப்பவ ருனை யெலா மாயுந், துருவிய புகழோ யருட்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (கஅ)

இருங்கடற் புவியி லிடமறப் பரந்த தெழுந்துமே லிடத்தினும் பரந்த, தொருங்குநின் புகழ்மற் றின்னுமஃ தவாவி யுறமுய றன்மை தேர்ந் தன்றே, யருங்கலே வாத வூரர்முன் னிணைப்பே ராசைவா ரியி னெனப் புகன்றார், சுருங்கைநீர் முழக்க மறுவயற் றுறைசைச் சுப் பிர மணியதே சிகனே. (கக)

மதிநதி மழுமான் முதலிய மறைத்து மாரவேண் மேற்பகை மறையாய், பொதியுமத் திறத்தா லுண்ணியா னகண்ட பூரண சிவ னெனத் தெளிர்தே, னதிர்கட லுலகிற் றெளிதரார் தாமு மறிதரப் புகலுவேன் கண்டாய், துதியொடு புலவர் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (உ0)

ஐயான் வெளிப்பட் டிடினடங் குவைநீ யடங்கில்யா னீவெ ளிப் படுவை, வெய்யயா னடங்கும் வகைபுரிந் தொருநீ வெளிப்படா திருப்பதென் னுபாயாய், வையமே லுயர்தம் முதன்மையை மற ந்து வாழ்நரு முளர்கொலோ மதித்துத், துய்யமா தவர்கள் சூழ்பெ ருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (உக)

என்றுநாம் விரும்புஞ் செங்கமு நீசா யிவள்விரும் பினளெனச் சினந்து, கன்றுமா மதியங் கனன்றெழு முழக்கங் கான்றெழு முயிர் த்தவா ரிதியுங், கொன்றுதீர் குவனென் றுடையவேள் சிலையிற் கோ ரெடு மடந்தையென் செய்வா, டின்றுநீள் கருணை செய்தரு டுறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (உஉ)

யான்முத லென்றே யெழுவனெப் பொழுது மெய்தறி யாமைநீ யொருநான், முன்முத லென்றே யெழுதலஃ தன்றே சத்திய மென்ப ராய்ந் தமைந்தா, முன்முத லியவென் னெழிலினுக் கெதிர்பார்த் துறுதலென் னுதைத்திடல் வேண்டுஞ், சுன்முதல் பணைத்த கழனி சூழ் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (உங)

அடியவ னியென் றுவண நீயே யமைத்தவை புகூஉவழக் காடி, நெடியவா னூர் தம்மையாண் டாய்க்கு நிகழுமோ ராவணமெழுதிக், கொடியயாங் கொடுப்போ மறுத்திடோ மடிமை கொண்டுநின் றுட ரத் தடையென், றுடியமை யிடையார் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (உச)

பாலேநர் மொழியாள் வேண்டுவார் வேண்டும் படியருள் படி யனீ யென்று, மாலேயே வேண்ட மாலேயே யளித்தாய் மாலேய நினக்குநீ தைய, நூலேயோ செவரு மயக்கறுத் தாளு நோன்மைய னெனபது பொய்யோ, சோலைமேமன் முகில்வந் துலாவருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (உடு)

அன்றுவண் கூட னகரின்மா பாவி யாயினு ளொருவனீ யாண் டாய், நன்றுமற் றதனுற் பெருட்புக ழடைந்தாய் நாயினேன் றன் னீயு மாண்டா, லின்றுமற் றதனுற் பெரும்புகழ் படுமே யிலாபமெண் ணுர்களு முளரோ, துன்றுமெய்த் தவத்தார் நிறைபெருந் துறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (உசு)

உயரிய வொழுக்க மெனும்பெருங் கையு ளுண்மையென் றுணை த்திடு மவலிற், பெயர்வில்சே தனமென் றுணைத்திடுஞ் சேற்றிற் பெரு

குறு மன்பெனும் புனலின், மயர்வறத் தோன்று நின்னடிக் கமலம் வருத்தவை யிலாதவென் னுள்ளத், துபரறை யகத்துற் தோன்று மோ துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (உஎ)

நாடுநின் னடிக டியானியா ருவந்து நயத்தக வெடுத்தெடுத் துரையார், நீடுமண் டோயப் பணிதரா ருலகி னிகழ்தலிற் புள்ளிலங் காதி, கூடுமஃ றிணையாய் நிகழ்வதே கன்று குறித்துரை நிற்கையின் மையிறை, சூடுமெய்த் தவத்தர் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணி யதே சிகனே. (உஅ)

வரைகெழு நினது புயத்தைபா னவாவ மற்றையப் புயம்வட வரையைப், புரைதப முன்னங் குழைத்தரா மந்தப் பெருபகை நிணி ந்ததற் கெதிராம், விரைகெழு வரையி னுதித்தமெல் வளியும் வெப்ப மிக் குறவெண் வருத்துஞ், சுரைதக ளிபண் பயில்பொழிற் றுறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (உக)

கலிபல பயின்று தெளிந்தவர் வருந்திக் கற்றதற் குறுபய னுக, மலிவரு நிணிய பாடுதல் சிறப்பு மற்றுள பசுக்கண்மேற் பாட, லலி வரு தீம்பா லட்டெடுத் திழிநாய்க் காங்கலங் கவிழ்ப்பது போலாந், தொலிவில்பல் வளஞ்சா லற்புதக் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (ஈ0)

முற்றிய கருணை நின்னையா னவாவ முன்னமோர் மாங்குயி றண்ணப், பற்றிய பகையிற் றடிந்தணி யாமப் பகைகிணைக் தண்ணமார்க் கொல்லாச், செற்றிய சிறையக் குயிலின மளியென் செவிவெதுப் பேறமீக் கூவுஞ், சொற்றியென் றருள்வாய் நன்றுசா றுறைசைச் சுப் பிர மணியதே சிகனே. (ஈக)

கருமல விருட்டுள் யானென தென்னக் கிதித்தெழு மொருமதி தோன்ற, வொருவில்பல் கொடுமைப் பனிவிரா யுடற்ற வற்றதோ ரென்னிடத் தினுமுன், திருவடிக் கமல மெங்ஙன மலருந் தேசிகோத் தமப்பெரு மானே, சுருதியா யிரமு முழக்கருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (ஈஉ)

தெரிந்துணை விழைந்தேன் மதன்மணக் கோலஞ் செய்யவந் தானிது முறையோ, புரிந்தபொன் மலரா லாயிய பாயல் பொங்கழ றருமொரு மலர்க்கு, விரிந்தவெந் தழன்முன் றந்தண யாம்பின் விசை ந்தவை மாறுசெய் வனபார், சொரிந்தவெண் டளர நிலாவருந் துறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (ஈங)

மதியிணை வருத்து நின்னடிக் கமல மாண்பையம் மதியினுல் வரு ந்தும், பொதியசெங் கமல மெண்ணியுள் ளுடைந்து பொலிவிர குள சில பொலிவான், விதியிணைச் சுமந்து முறுமையின் விளர்ப்ப வெள் ளிய தாமரை யென்பார், துதியயில் கவிஞர் கழகமார் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (ஈச)

மறையவன் படைத்தன் மாயவன் புரத்தல் வாய்த்திடா வொரு திரு வுருவ, மறைபெரும் புகழ்நீ கொண்டகா ரணத்தா லன்னநான் முகவிதி படைத்த, னறைகெழு தூளவத் தாரினுன் புரத்த னவில்பல வுருவம்யா மொழிந்தேந், துறைகெழு பொன்னி வளப்பெருந் துறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (நடு)

மேவிய கிரியை ஞானமென் றேத்த விளங்குகின் றிருவடிக் கமலம், பாவிய சுவைப்பே ரானந்தத் தேதறல் பருகுபு தேக்குமிக் கெறிவான், வாவிய வடியேன் மனக்கருஞ் சுரும்பர் வந்துவீழ் நாளு முண் டாமோ, தூவியந் தோகை பயில்பொழிற் றுறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (நகூ)

எனக்குணீக் கொடுத்து நினக்கெணீக் கோட லியல்பிலீ தன்றி யொப் பில்லா, நினக்கெணீக் கொடுத்தென் றனக்குணீக் கோட னீதி யன் றேமுத னீயே, மனக்குவப் புறுத்தும் பலசுதந் திரனீ மற்றலீ தில்லவ னடியேன், சொனக்குல மதில்சோ புரம்பொலி துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (நஎ)

மருளக லடியார் சூட்டிய கழுநீர் மாலைநின் சேவடிப் பொலிக, விருள்படு பொழுதி லெழுமொரு கொழுந னெழின்மிக மணத்தலா லங்குப், பொருள்பெறு தாணு மடித்துற மணத்துப் பொலிந்துவாழ்ந் திருப்பது புரையுஞ், சுருள்விரி கதலிப் பொங்கர்சூழ் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (நஅ)

கறையடி வராகங் குரண்டமீன் மதியங் கரையிவை முதற்பல வற்றை, நிறைவலி தபரீ செய்தணீ யவற்றி னிச்சில மீனத்துமப் பகையான், முறைமையி னுன்றே ளவாவிய வெண்ணீ முழுகுவெப் புறுத்திவாட் டுவபார், துறைதொறுஞ் சங்கம் பயில்பெருந் துறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (நகூ)

அகத்திரு ளடியார்க் கொழிப்பவ னீயென் றறைந்திட லுண்மை யே யழகு, நகத்திகழ் நினது சேதாளணி கழுநீர் நயந்தநா னிப்புறத் திருளும், புகத்தியங் கிடுவே னெழித்திடாத் திறமென் புகலுதி புண்ணியப் பொருளே, சுகத்தியன் முனிவர் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (சஅ)

மேயநீ புறத்து வெளிப்படு திறத்தால் வெவ்வினைக் குழியியாம் யாமும், பாயநின் னடிக்கீ ழடங்கினம் புறத்தே பண்பினவ் வாறுமற் றகத்தே, நாயநீ வெளிப்பட் டிடினினா தாட்சீழ் நாங்கணன் கடங்கி வாழ்ந் திடுவோர், தூயமா தவருண் மணியெனுந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (சக)

அடுத்தடி யடைந்தார் தம்பசு போத மடங்குறு வகையுப தே சித், தெடுத்தநான் முகற்குங் கூற்றுவன் றனக்கு மிடையறுத் தொழி

ல்வளர்த் திடுவார், மடித்தவா ரியரோ நோக்கினு லனைத்தும் வாங்கி யாங் கசைவற விருத்தித், தொடுத்தபே ரின்ப மருத்திடுந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (சஉ)

கற்றவர் நின்னே யவாவின செல்லாங் கழன்றவ ரென்பது மெய்யே
யுற்றமற் றிவளு முன்னல மவாவி யுடைகல முணவொடு துறந்து
செற்றநாண் மடமை முதலிய துறந்து செவிலிதா யிருளிய ராதிச்
சுற்றமுந் துறந்தா ணன்றிது துறைசைச் சுப்பிர மணியதே சிகனே.()

ஒளிகெழு மாற்ரு லுயர்கன கமும்பொன் னுற்றகா ரிரும்பும் பொன் னதுபோற், களிகெழு பசுபோ தந்தவடைந்தார் களைப்புரந் தினிதருள் புரியு, மளிகெழு நீயுங் குருவது சிறிது மாற்றறி யார் களுங் குருவே, துளிகெழுமதுவத் துணர்ப்பொழிற் றுறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (சச)

உற்றவர் பிறவிக் கடல்கடப் பதனுக் கொள்ளிய மரக்கல மாகிப், பற்றமை திரோத மருளெனப் பட்டுப் பசந்தகின் றிருவடி யாய, பொற் றசெம் மணிக்கு நாயினேன் மனமம் பொற்றக டாகுநா ளுளதோ, சொற்றபல் வளத்தாற் பொலிபுகழ்த் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (சடு)

கலவுமொன் றெனுமா மலமிரண் டென்னக் கனைதரு கருமமூன் றென் நிலவுறு மாயை யாயவிம் மூன்று நிகழ்ச்சியற் றெழிதரு பாக்குக்[னை குலவுநின் றிருவாய் வயினவரு கூற்றங் கூற்றமாய்க் கூடுநா ளென்றே சுலவுநீ ருலகம் புகழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே.

அடியவர் மலத்தை யழித்திடு திறத்தி னும்பிர தாபமு மவர்க் குப், படியில்பே ரின்ப மளித்திடு திறத்திற் படுபெருங் கீர்த்தியு மெ மூந்து, வடிவமாய்ச் சேர்ந்து விளர்த்துறும் பரிதி மதியென வந்ததத் தியாசந், தொடியணி மடவார் பயில்பெருந் துறைசைச் சுப்பிர மணி யதே சிகனே. (சள)

திருவடி யாய கமலத்தி லொடுக்கஞ் சிவணுதன் முன்னமக் கமல, மருவடி யெழுத்தில் லவற்றெடுங் குதலே மானுமென் றணி யரு ளின்றேற், பொருவடி யந்த மிலாதினே யென்றும் புகழ்ந்துபா டிடுவர மளித்தி, துருவடி யவர்சூழ் தருபெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (சஅ)

கறைதபு காட்சிச் சிவப்பிர காசர் கருணையா லினிதுற வகுத்த, வறையகத் திருக்கை விதித்தன ரெனினு மடியமே மனத்தறை யிரு க்கை, நிறைபெரும் புகழோய் விலக்கினர் கொல்லோ நீயிஃ தொழிப் பது தகுமோ, துறைதொறு மடவா ராட்டயர் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (சக)

கோலமார் பிடக மெற்றைக்கு மருந்து கொண்டுறச் சுமப்பது மூன்று, ஞாலமார் பிணிய ரவையறற் கன்றே நலமிகு போதகீ சுமத் தல், சீலமார் பவர்மும் மலமறற் கன்றே கிறியனேன் விலக்குளேன் கொல்லோ, சூலமார் மணிமா ளிசைப்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (ரு0)

இவள்விழி மழைநீர் குவளைநே ரென்ப நிதுநிச மெவ்விதத் தென்னிற், றிவளுரு நின்னை விழைந்திடை யருகு செறியநீர் பொழி தலி னுனுங், தவழ்மதி யுதிக்கு மிரவுகண் படாத தன்மையி னுனு மென் றருள்வாய், துவள்கொடி முகில்கிண் டெழுமதிற் றுறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (ருக)

நிலவுமுன் மாலை விரும்பின ளதற்கு நீயொரு சேய்ளுனூர் மறை யோ, ருலவுசீர்ப் புதல்வி யல்லையென் றனன்முன் னுண்மையே யின் றுபல் லோருங், கலவுறக் கொடுப்ப துண்டென மொழிந்தாள் கருதி வண் முதுக்குறை வென்னே, சுலவுபூஞ் சோலை முகிலளாந் துறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (ருஉ)

பற்பலர் சூழப் பவனிநீ வந்தாய் பார்த்திரு கைம்மலர் குவித் தாள், பொற்பவிர் மடந்தை யதற்கணி வனைகள் பொருக்கெனக் கவர் ந்தணை முன்னு, ளற்புற விடுதல் செப்தனை யிந்நா ளதைதரக் கவருவை யெனினுன், சொற்புகழ் நன்று யிருந்தது துறைசைச் சுப்பிர மணி யதே சிகனே. (ருங)

வணங்கினர் வறுமை நோயொடு மலநோய் மாறிட வம்பொன் வட் டகையி, லிணங்கிய சுவண நீறுநன் களிப்பா யெடுத்திடக் குறைபடா மையினும், குணங்கெழு பதும நிதியென வதணைக் குறித் தனங் குவர்க ளேறே, சுணங்கிள முலையார் பயில்பெருந் துறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (ருச)

கூடிநின் றிருமுற் பணிந்துவீழ் போதே கூடிய கருமலம் வீழு நாடியங் கெழுபோ தருள்வீரா யெழுநீ நல்குரீற் றுறுடல் விளர்ப்ப நீடிய விளர்த்த வுடம்புமற் றிருன்று நிலத்திது சிலசெண்ணு தென்னே சூடிய புகழாற் பொலிபெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே.

மலம்வியா பகமோ வியாப்பியங் கொல்லோ மருவிய வெனக் கென விரண்டு, மலவது வியாத்தி நீக்கநீங் கிடுமென் றருளுநின் வாய் மொழி யவ்வா, றிலகுவா னீக்க மியற்றிடா தென்னே யிசைத்த சொன் முடிப்பவர் வேறே, சுலவுநீர் மனத்தர் தொகுபெருந் துறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (ருசு)

கருதுறு கரும காண்டமு ஞான காண்டமு மிருபத மாக
மருவுப நிடத மேற்பரப் பாக வண்குமி ழோரெழுத் தாகப்[கருள்வாய்
பொருவறப் பொலிமுற் பாதுகை யெனவிப் போதது போற்றவெற்
சுருதியா னுமொல் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதேசிகனே.

தேடிய மாலார்க் கரியைமுன் ஞஞ்ஞ் சிறந்தவிக் காளுமத் தகையை
வாடிய மடவார் வளியுடை கவர்ந்தாய் மாதர்பா லினுமத் தகையை
கூடிய வளைமுன் னிட்டநீ யின்று குவிகரம் பிடித்திடா வகையென்
சூடிய மாலை யெனுமரு மறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (இஅ)

கருவிழிச் செவ்வா யெண்மகள் வருத்தங் காண்பது நினக்கழ
காமோ, பொருவில்சங் கரனே நீயென வான்றோர் புகன்றிடு மாற்ற
மும் பொய்யோ, மருவுசெங் குவளை மகன்கரும் குவளை மறிதரச்
செயுமெதி ரன்றோ, சுருதியா யிரமு முழக்கருத் துறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (இக)

மன்னுநின் காவிக் கொடிமிசை யெழுந்து வானகத் தாடித லமீர்[மம்
மின்னுதுண் மருங்கு லரம்பையர் போகம் வெறுத்தெண்ண யுடையவ ஞ
பன்னுற வம்மி னெனவினித் திடமப் பண்புதேர் தரினரு ளாமே
துன்னுபல் கழனி வளமலி துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. ()

ஆன்றநின் கருணை யென்னென வுரைக்கே ணியநின் பணிக்
கமை நாற்கால், சான்றபல் பசுவு நின்பொ துநாமந் தம்மூடற் பொறித்
திடப் படுவ, வேன்றவிவ் விருகாற் பசுவெனு மெங்கட் கியைந்தில
வவைசெய்புண் ணியமென், மேன்றவிவ் விடத்துங் கழகமார் துறை
சைச் சுப்பிர மணியதே சிகனே. (உக)

கற்பக மாலை புனைபவர் நறிய கமலமா லிகைபுனை பவர்பா
செற்படுந் துளவ மாலிகை புனைவா ரிவரெலா நின்றிரு வடிச்சூட்
டற்புத மாலை புனையுமெங் கனேக ராவசோ வடர்மல மொழிந்து
சொற்புனை நின்னைக் கலத்தலாற் றுறைசைச் சுப்பிர மணியதே சிகனே.

மந்தண மாக வோதிம மேயென் மயலெலாந் திருச்செவிக் கேற்றிச்
சந்தமென் கழுநீர் வாங்கிவா வென்று டனிழ்மு முன்புண ராது [பச்
நொந்தயான் செவிப்பா லடைந்திடு மாறு நோற்றிலே னென்றது மறுப்
சுந்தர மடவா ளயர்ந்தன மறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (உஉ)

மான்மிகு மென்னை வந்துநீ புணர்தல் வழக்கொலா தென்றி
யேல் விளைத்த, தேதன்மிகு கழுநீ ரருள்செயல் வேண்டுந் திருந்துறு
ததுவுமென் றிடின்முன், பான்மிகு திருப்பூ வணத்தொரு மான்கைப்
படர்நகக் குறிகொண்ட துரைப்பேன், சூன்மிகு சங்கம் புலம்புநீர்த்
துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (உச)

ஓள்ளிய நினது குடைமதி மதவே ளுடற்றுவா னடைந்தஞான் றவன்
வள்ளிய கணிகை யென்னலாங் காம மாற்றுவ திலேயே யென்னி [பா
னள்ளிய வுயிர்கட் கினத்தியல் பாதே நாளுமா மறிவெனல்பொய்யோ
துள்ளிய கயன்மீப் பாய்வயற் றுறைசைச் சுப்பிர மணியதே சிகனே.

வெள்ளிபால் வளையோ முல்லைவா யொருநெல் வேலிவே யோ
தொடித் தோள்வே, யொள்ளிய பிறையோ நுதற்பிறை கண்ணு யுறு

மதி யோமுக மதிய, நள்ளிய நீலி வனக்கத லியோவென் னகுது டைக் கதலியென் செய்வேன், துள்ளிய வரான்மீ தெழுபுனற் றுறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (சுசு)

உள்ளுமெய் யடியார் சூட்டுமென் பூவுள் ளுன்னடிக் கேற்றிய நீலம் விள்ளுதல் மலரே வுடையவன் வயமாய் வெங்கொலே புரிந்ததன் மீமை தள்ளுதல் குறித்து விரும்பிநின் னடியாஞ் சார்புபெற் றமர்வதுமானுங் துள்ளிய கயல்விண் கிழிக்குநீர்த் துறைசைச் சுப்பிரமணியதேசிகனே.

காதன்மெய் யடியார் நின்னெதிர் நின்று கலின்றதீ பங்கொடு வணீத் மேதகு பரிதி மண்டில மானும் விளங்கத னடுவணீ பொலித [தன் லோதரு மணீய மண்டில நடுமுன் னுறைதரு தன்மையே காட்டுஞ் சூதமும் றருக்க டுறுபொழிற் றுறைசைச் சுப்பிர மணியதே சிகனே.

விட்டது யாரை முன்னர்வா சணீதான் வெண்பொ னியன்ற பா துகையே, நட்டதுன் மலர்த்தா ளதுகுறித் திடுங்கா னகுகதிர் வெள்ளியங் கிரிமேற், பட்டது பயின்ற பழக்கம தன்றே பசுவருக் கைச்சுளே கடுவன், றெரட்டது மந்திக் கீபொழிற் றுறைசைச் சுப் பிர மணியதே சிகனே. (சுசு)

நின்னிரு மருங்கி லடியர்போற் றிடுங்கா னெடியவெண் சாம ரை பனித்தன், மன்னிரு வகைய ஞானமு மெழுந்து வயங்கலு மணீ யவை யுயிர்த்த, மின்னிரு வகைய புகழுமாங் கெழுந்து மேவுறக் துள்ளலும் பொருவுங், துன்னிரு பயனே டின்பரு றுறைசைச் சுப் பிர மணியதே சிகனே. (எ0)

பிறையுரு வென்னத் தலேவணீ தண்டம் பிறங்கிநின் றிருமுனம் பொலித, லறைதரு கிரியா குருக்களென் றுரைக்கு மாணிகட் கங் குச மென்கோ, வுறைதரு வெள்ளி பொன்னெனு மீன்க ளுரந்தபு தூண்டிலென் றுரைக்கோ, துறைபல கெழுமு பொன்னிசூழ் துறை சைச் சுப்பிர மணியதே சிகனே. (எக)

அந்தரா ணின்னீப் புகழ்ந்துபா டினருக் களித்தரு ளியானமா திகனே யிந்தரா ணீயே கொண்டணே யவற்று லிவர்களுக் கென்பய னென்று சந்தமார் திருத்தாண் மலர்நிழன் மட்டேதரல்குறித்தணேயதுபோ துஞ் சுந்தரக் கனக மதில்வணீ துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. ()

வெள்ளியங் கயிலே யமர்ந்தநாள் வெய்ய விடமெடுத் தயின்றணே யிங்கு, வள்ளிய வருளி னமருநா ளதுபோல் வலிவிளக் குவதெவன் செய்தா, யுள்ளிய வடியே னறிவெடுத் தயின்று லொத்தென் றியா வரும் புகழ்வார், துள்ளிய கயல்சா லிலஞ்சிசூழ் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (எசு)

பொறையெனுங் குலேயு ளன்பெனு நிறைந்த புனல்படு மெய்யடி யவர்த நிறைமன மெனுநற் றடத்துற மலரு நின்னடித் தாமரை மலரிற் .

சிறைபடு மடியே னறிவெனும் வண்டு சேர்ந்துவாழ்ந் தமருநா ளுள
தோ, துறையுணர் புலவர் புகழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே
சிகனே. (எச)

வஞ்சனேன் மலநின் ரூட்கெதிர் நமனே வாய்ந்தகைக் கெதிர்
விதி தலேயோ, மஞ்சவாங் களத்திற் கெதிர்கொடு விடமோ மறைந்த
கட் கெதிர்சில மதனே, வெஞ்சுரு கெடிய சடைக்கெதிர் புனலோ
வினியவாய் நகைக்கெதிர் புரமோ, தூஞ்சன்மே வுதற்கு ஈவில்பெருந்
துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (எடு)

மதித்திடு முனையான் கண்டநாண் முதலா மாரமேவள் கணிக்கி
லக் காகிப், பதித்திடு மயற்சேற் றுழ்தனன் முமோ பரிந்தருள் செய்
திலா யென்னின், விதித்திடு கனலில் வந்தெனைப் புணர்தல் வெளிப்
பட யாவர்க்கு முரைப்பேன், றுதித்திடு வளஞ்சான் மாளிகைத்
துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (எசு)

அறைதரு கருணே யாழிநீ யெனவாங் காறுகால் செல்லுமே
யென்று, சிறையளி தூது சேறியென் றியம்பச் செறிந்தவெண் காற்
புள்ளா கினன்மு, னிறையய னவன்பாற் குறைந்தகா லுடையே
னேகிலே னெனத்தளர் தருவா, றிறைபல கெழுமு காவிரித் துறை
சைச் சுப்பிர மணியதே சிகனே. (எஎ)

மதித்திடு வளஞ்சான் மதுரையி லெல்லாம் வல்லசித் தெனப்
பொலிந் தணுமு, னுதித்திடு மடியேன் மனங்குழை வித்தா லுரை
செயு மதுபுதுக் கியதாங், கதித்திடு மந்தா ளுஞற்றிய தென்னிற்
காலவேற் றுமையுனக் குண்டோ, துதித்திடு முனிவர் நிறைபெருந்
துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (எஅ)

முத்தவெண் ணகையார் முயக்கமே பொருளா முன்னுவார்
குழாத்தொடுங் கலந்து, சித்தமா ழாந்தா யென்றெணப் பேசிச் சிரிப்
பையேன் முன்னமாரூரி, னத்தகோர் குழலாண் மீனவியிற் றாது நடந்
ததை யுரைத்துணச் சிரிப்பேன், சுத்தமா தவத்தர் நிறைபெருந்
துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (எக)

தளையுற மெழுகி யொருபொழு துண்ட தவத்தினுல் யான்பெறு
மகட்கு, விளைநறு மாலே தருதியின் றென்னின் மேவரு தீக்கையா
வதுசெய், புளைதபு முடலா தியவொரு மூன்றும் பொலியுமுன் வயத்
தவா மன்றே, சுளையடிக் கமல மலர்புனற் றுறைசைச் சுப்பிர மணி
யதே சிகனே. (அ0)

இழித்தவு னருந்த லோப்புகென் றெங்கட் கியம்பிமுன் னு
ளொரு கிராதர், கழித்தவு னுகர்ந்தாய் விதிவிலக் கொழிந்தாய் கடை
யனேற் கின்னருள் புரிந்தாற், சுழித்தநீ ருலகி லென்செய்தா யென்
ரோர் தோடநிற் குரைப்பவ ருளரோ, தொழித்தளி முரலு மலர்ப்
பொழிற் றுறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (அக)

கலைபல வைபக் கிரிபறி யாமை கழிதர வுணர்ந்துளா ரெனினு, மலிவினின் செவ்வாய் மொழிபன்றி முந்தி வாய்ப்பரோ பலபொறி யிருந்து, மலைகடற் புடவி யிடைப்படு பொருள்கண் ணன்றிநோக் கிடுகரு முளரோ, துலைநிகர் நடுவோர் நிறைபெருந் துறைசைச் சுப்பிர மணியபேத சிகனே. (அஉ)

ஆற்றிடு தொழிலுங் கொண்டிடு முகமு மைந்துமுன் னெருமுக கந் தரித்துக், காற்றிடு மலைமைக் திப்பொழு தென்னிற் கவினுமிம் முகப்புகழ் பெரிகா, லூற்றிடு கருணை யுவட்டெழ வடியா ருள்ளத் துள் ளுறைகுரு மணியே, தோற்றிடு மதியக் தவழ்மதிற் றுறைசைச் சுப்பிர மணியபேத சிகனே. (அங)

ஆன்றநின் பவனி கண்டகாண் முதலா வரியநின் சிரூளலர் வேட் டுக், கான்றவு ருள்ளார் வாயலர் மகவேள் கையலர் நிரம்புற வேற்று, மான்றநெஞ் சினளாய்க் கண்ணலர் பொழிவாள் வயங்குகின் னுளத் தலர் கருணை, தேன்றவென் றடைவாள் சொற்றிவான் றுறைசைச் சுப்பிர மணியபேத சிகனே. (அச)

வடவரை கோட்டி வாசுகி பூட்டி வனத்துழாய்க் கோலொன்று கூட்டித், தடமதில் வீட்டிப் பெருனிறல் காட்டிக் கயங்குநீ யொரு மலர் தொடுக்க, வுடன்முனிக் தண்பன் மலர்தொடுத் தவ்வே ளுடற் றுபோ செங்கனம் பொறுப்பேன், சுடர்விடு கொடிமா னிகைப்பெருந் துறைசைச் சுப்பிர மணியபேத சிகனே. (அடு)

வல்லிநின் னடியென் றலைமிசை யேற்றின் மலரவன் கைவரைந் திடவவ், வெல்லிதீர் கலினுன் மலர்க்கைமற்றண்ணா னிருந்தலை யொன் றுவென் றதுமு, மெனல்லைமென் மலர்த்தா ளன்னவ னெண்கை யொ ருங்குவென் றஃதென் புகழென், றெழுலகும் றவத்தார் நிறைபெருந் துறைசைச் சுப்பிர மணியபேத சிகனே. (அசு)

புன்மையெந் தலைமே னினதுகைக் கமலம் பொலிதரக் குவிந் துமே விடுமோர், நன்மைசார் கலின்மற் றயன்கர கமல நாடொறு மலர்ந்துநீங் கிடுமத், தன்மைபேத ராத மடவரப் பிரமன் றன்னெழில் வளர்ப்பவ ரன்றே, தொன்மைமா தவத்தார் நிறைபெருந் துறைசைச் சுப்பிர மணியபேத சிகனே. (அள)

பராசையா லமர்ந்தான் முன்னமிப் பொழுது பராவ சமருவாள் விழையிற், றராதல முவவா தென்னவுங் கேளா டலிவன்மற் றவ னலா தில்லையென், றராவக லல்கு லன்னமென் னடையா ளையருவாண் முதுக்குறைக் தனள்காண், சுராதிபர் விரும்பிச் சூழ்பெருந் துறை சைச் சுப்பிர மணியபேத சிகனே. (அஅ)

வெய்யவா பாச மார்க்கமத் தீணியும் வீட்டிநின் றிருவடி யடைந்தே ணியவெங் காலன் வீசுபா சத்தோ டைவகைப் பாசமுங் கழல

வுய்யவாழ் நினது மூகத்துநம் பாச மொளிர்தரப் புரிந்தணை யுய்ந்தேன்
துய்யமாதவர்கள் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர மணியதே சிகனே.

புல்லிய வோரூ ரேனும்நில் லென்று புகன்றுமற் றதற்குமா ருக,
நல்லியல் வெண்ணெய் நகுபுகழ்த் துறையூர் நலமலி கடந்தை கொற்
றவனூர், வில்லிய றிருவா வடுதுறை புரப்பாய் வெறுத்தமூன் றார்ம
கிழ்தரவோ, சொல்லிய வவற்றென் முகிய துறைசைச் சுப்பிர மணி
யதே சிகனே. (கூ0)

உன்னிடைக் களங்க முறுதலி னுருமென் றுரைத்தியேன் முன்
னீயம் மதியர், தன்னிடை யமர்ந்தாய் களங்கமங் கிலையோ சார்
றெனி னியாதுசார் றியிவ, ரெனின்னிடை யதுநே ரென்றமர் வாயே
லெய்தரும் புகழ்நினக் குண்டாந், துன்னிடை. மடவார் சூழ்பெருந்
துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (கூக)

கரிகுழைத் தெழுநிப் புனைதரப் பெற்ற கண்கணின் றிருவுருக்
கண்டு, வரிவளைக் குலத்தைக் கையினின் றெழிக்க மலர்க்கர நன்று
கொ லென்னப், புரியுமக் கயற்கண் முத்துகப் பொருது பொம்மல்
வெம் முலைமுத்தங் கருகுஞ், சுரிகுழற் கருள்வ தென்றுவான் றுறை
சைச் சுப்பிர மணியதே சிகனே. (கூஉ)

பாயவெப் பகலா நின்னுடை யுளத்திற் பதிதர வமர்தரே மென்
னின், மேயமுற் பரிதிமண்டலத் தமர்ந்த வித்தகன் யாரெனக்
கேட்ப, ஞயவிவ் வினவிற் கெவ்விடை கொடுப்பா யத்தகு தோல்வி
நிற் காமோ, தோயமென் கழனி வளப்பெருந் துறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (கூங)

வேண்டமுன் கண்டத் தடக்கிய விடத்தை வெளிவிடித் தென
விரு ணிமிரு, மாண்டசெஞ் சடைநீர் கொதிப்பொடு வெளியே வந்
தெனப் பானிலா விரியும், பூண்டவெம் பணியி னுபிர்ப்பென விளங்
கால் போதரு மெங்ஙனம் பொறுப்பா, ரீண்டநின் றவிரா விளக்கஞ
றுறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (கூச)

ஆன்றநீ மிசைந்த பரிகலச் சேட மன்புமிக் கேற்றமா தவருக்,
கேன்றவெம் பசிதீராய் மருந்துகொ லுடலி லெய்திய நோய்தெறு
மருந்தோ, சான்றமும் மலநோய் தவிர்த்திடு மருந்தோ தவாவதன்
பெருமையா துரைக்கேன், ரீறுன்றமெய்ஞ் ஞானம் பயில்பெருந்
துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (கூடு)

கையினுந் தவிர்த்தாய் துதலினுந் தவிர்த்தாய் கடுந்தழ லணை
யது குளிர்த்து, கையினு கைக நிணையெதிர்ப் பட்ட நங்கைமார் காலி
யங் குறுவான், செய்யினு நன்று காலியங் குறுவான் செய்தன ரன்
னதை நன்றே, துய்யினுங் கூர்த்த மதியர்சூழ் துறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (கூசு)

மிடைசடை மறைத்து நீயெழுந் தருளி மேவினை யாயினு நினக்
குப், புடையுற மலர்க்கை கொடுப்பவ ரினையன் பொற்சடை யுடை
யன்முன் னென்று, தடையற வெவரு மறிதரு பாக்குத் தாஞ்சுமந்
தணர்த்திடத் தெளிந்தேன், றொடைமதுப் பிலிற்றுங் கானவனத்
துறைசைச் சுப்பிர மணியதே சிகனே. (கூஎ)

வழிவழி யடியர்க் கணுத்துணைப் போதம் வயங்குமேற் பொரு
மையு மினையார், கழியவின் படையு மவாவுமற் றினையார் கருமல மே
லடு மூனிவு, மொழிநம பிரம வெனுமினு மொழியு முடையையா
னீயுமீ தறனே, சுழியலே யெறியும் பொன்னிசூழ் துறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (கூஅ)

கறறவ ருவகருங கலஷ்யல யானுங கடலகத் தங்கணப் புனல்
சார்ந், தூற்றீதற் றிருத்த மாவது கடுப்ப வுன்பெரும் புகழ்வித வுத
லாற், குற்றமின் றுகிச் செப்புளா மென்றே குணமில்புன் சொற்
கொடு துதிகள், சொற்றன னுவந்து கோடிவான் றுறைசைச் சுப்
பிர மணியதே சிகனே. (கூகூ)

மன்னிய கருணைப் பெருஞ்சயி லாதி மாபுபல் லூழியும் வாழ்க
வின்னிய முகிலின் முழங்கவெக் காலு மிலங்குகின் சந்நிதி வாழ்க
பன்னிய நினது நாமவைந் தெழுத்தும் பல்லிடந் தொறும்புகூ வாழ்க
துன்னிய நின்சீர் வாழ்கவான் றுறைசைச் சுப்பிர மணியதே சிகனே.

சுப்பிரமணியதேசிகர்மாலை முற்றிற்று.

உ

*சிறப்புப்பாயிரம்.

திருவாவடுதுறையாதீனத்து

ஆறுமுகசுவாமிகளியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

யாமாலை நீங்கவரு நிறைசையிற்சுப் பிரமணிய வெங்கோ மான்மேற்
பூமாலை வாறுநன் மணிமாலை பொள்ளலுறும் பொன்னுற் செய்த
மாமாலை தேய்வுறுமுத் தாமாலை வெள்ளெயென மதித்து நாளாற்
பாமாலை தொடுத்தணிந்தான் மீனாட்சி சுந்தரனும் பாவ லோனே.

---

* இது பழையபதிப்பைச்சார்ந்தது.

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

சிவமயம்.

தருமை

ஸ்ரீ சச்சிதானந்ததேசிகர்மாலை.

சிவஞான விநாயகர்.

கட்டளைக் கலித் துறை.

மன்னும் புகழ்ச்சிவ ஞான விமோதய மால்களிற்றின்
பன்னும் புகழ்த்துணைப் பாதாம் புயங்கண்மெய்ப் பத்தியுற்ற
மின்னும் புகழ்த்தவ ரன்றிரன் னூல்விரும் பாளர்விழை
முன்னும் புகழ்ச்சச்சி தானந்த மாலைக்கு முன்னிற்குமே.

நூல்.

பூமேவு நின்கழல் சார்ந்தாரை யன்பிற் பொருந்தியவர்
தாமேவு மின்பமுற் றுரன்று மின்றுமத் தன்மையரே
மாமேவு மிவ்விரண் டுள்ளேக மேனுமன் னேனகதியென்
றேமேவு காத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (க)

ஒன்று மூளேமற் றிரண்டு மூளேமொரு மூன்றுமூளே
மென்று மூளேமொன்றை யென்றடை வேமென் றிரப்பவருக்
கன்று மூளேமென் றருள்வாயிப் பேருண்மை யாட்டைபல
சென்று மூளேந்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (உ)

மதிக்கும் பெருங்கள்வ னீயேயென் பார்மழு மான்முதலாப்
பதிக்கும் பலவுங் கரந்தாயிங் குற்றுமொர் பாற்பசுக்கட்
குதிக்கு முணர்வுங் கவர்வா யுணரினுள் ளேயொளிப்பாய்
திதிக்குந் தருமைப் பதிச்சச்சி தானந்த தேசிகனே. (ங)

ஒன்று வெனினன்றென் பாயிரண் டாவெனி னேழுமையா
யென்று வருநீல யென்றிரப் பார்க்கிரு காலுடனே
நன்று வயங்கொரு கையையுங் காட்டுவை நன்னுனியல்
சென்றுய் புகழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (ச)

மருந்து பிடகர் சுமப்பதெல் லாம்பிறர் மாட்டடைந்த
வருந்து பிணிமுற் றொழிப்பதற் கேபிற வாருயிர்கள்
பொருந்து வினையொழிப் பான்றனுத் தாங்குபோற் றனமெய்
திருந்து புகழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (ஞ)

நின்னைப் பணிபவர் நல்லாக் கறப்பவர் நீர்மையிலான்
றன்னைப் பணிபவர் கல்லாக் கறப்பவர் தற்றெரிப்பான்
பொன்னைப் பணிகொள் சடாமுடி போடிங்குப் போந்தமர்வாய்
தென்னைப் பொழிற்றரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சு)

யாணுள போதுரீ நீயுமென் றுய்சித்து நீயுமென் றுய்
வாணுள விச்சை முதன்முச் சொருபன்மன் னீயுமென்றுய்
மீணுள வார்கட ணுனீ புனலென்று விண்டதெவன்
றேணுள காத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (எ)

தித்துவ முற்று மசத்தென்பை யென்னைச் சதசத்தென்பை
யொத்துநிற் சத்தென்பை யிவ்வா றுணைக்கு முன்னப்பெரியர்
மெத்து மொருமொழி யாளனென் றோதலென் விள்ளுகண்டாய்
சித்துரு வத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (அ)

காண்பானுங் காட்சியுங் காணப் படுபொரு ளுங்கழித்தல்
வீண்பான் மதிகழி யாமையும் வீணென்று விண்டதெவன்
மாண்பா னிறைந்த சிவஞானச் செல்வ மலிதலினும்
சேண்பான் மிளிர்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கூ)

மெய்யோ துவையென்பர் மேதக்க யாருமம் மேதகுசொற்
பொய்யோ புகலடைந் தாரிடந் தத்துவப் பொய்யுஞ் சொல்வா
யையோ வெமர்சொற் றிடினுணுப் பாயழ கேநினக்குச்
செய்யோ வருந்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கo)

பாடிவந் தார்க்கென் பரிசளிப் பாயுட் படுமறையிற்
கூடிவந் தார்வ முறப்பேசி மூன்றையுங் கொள்ளைகொள்வாய்
நாடிவந் தாருண் மகிழ்வள்ள லேபன் னகரினரு ந்
தேடிவந் தார்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கக)

நிறைமதி யாயென்று நிற்பேசி யின்ப நிணைந்தடைந்தேன்
மிறைமதி யாயிங்கு வம்மோவென் ஞவிடின் மேல்வெகுண்டு
குறைமதி யாயென்று கூறிலென் ஞவை குணத்தர்நல்கு
திறைமதி யாய்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கஉ)

மாலார் தமக்கரி யாயென்ப ரன்றின்றும் வாய்மைமணக்
கோலார் பகையுளே யன்றென்ப ரின்றுங் குலாயதது
மேலா ருணக்கண்டுங் காணரி யாயென்று விள்ளுவன்யான்
சேலார் வயற்றரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கங)

மூவா மதிமறைத் தாய்ஞாந சம்பந்த மூர்த்தியெனத்
தாவா நலப்பெயர் பூண்டா யஃது தகாதென்பன்யா
னுவா விராகுத் தலையென்ப தெண்ணி யடங்கினன்மெய்த்
தேவா புகழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கச)

ஒன்றனே யாற்ற லொழிதன்மற் றொன்றனே யாற்றலுளாய்
மூன்றனே நேரி லுனக்கின் றிலைகொன் மொழிவறிய
வென்றனைப் பாக மிலாயென்ப தென்னே யெழிலிவந்து
தென்றனே யார்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கரு)

அங்ஙாள் வினையைந் தெனக்கூ றுதலு மமைந்தினைக்
கிங்ஙாள் வினையொன் றெனக்கூ றுதலு மெதிர்மறையை
மின்னு ளறிஞர் வினையெனல் போலுமெய் யார்ந்துகற்பஞ்
சின்னு ளெனுந்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கசு)

அத்து விதம்விசிட் டங்கே வலந்து விதஞ்சிவமிவ்
வொத்து நிகழ்தலி னீர்சுத்த மேகொள்ளென் றோதினையாற்
சத்து மிளிரவு வத்தையு மாக்கிற் றவாதடைவேன்
சித்து மலிதரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கள)

நின்பார்வை யாலிரு ணீங்கிடு மாலிந் நெடுநிலத்திற்
கென்பார் கதிர்மதி யாலிரு ணீங்குத லென்னியப்பு
வன்பா ரகவிரு ளென்றே யுளத்து மதித்தனன்காண்
டென்பா ணித்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கஅ)

இயலார் பெயருஞ் சிறப்பார் பெயரு மியல்வழுவா
வியலார் வழக்கிடை மாறுங்கொ லோதிரு மேனியைப்போ
லுயலார்நின் ஞமமு மாறிய தாலென் னுளத்துணர்ந்தேன்
செயலார் மதிற்றரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கக)

வேலையி லாயத ஞலை வோகம்பு மெய்யடியார்
மாலை யுறுமை லவர்வேலை யாவையும் வாங்கிக்கொள்வாய்
சோலை விராமது மாந்தி மயங்கித் துணைந்துவரால்
சேலை விராந்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (உ0)

நீயுநின் பேருமொன் றேயென்று தேர்ந்தன நிற்பழிச்சி
லாயு நினைக்கொனின் பேசைக்கொல் யாமடை வோமறைதி
யேயு நினக்குநின் பேருக்கும் வேற்றுமை யில்லையறஞ்
சேயும் புரிதரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (உக)

மருவுநின் ஞமங்க ளுக்கள வேயிலை மற்றவற்றுட்
பொருவி லிரண்டவற் றொன்றைந் தெழுத்தின் பொருளுணர்த்தி
யிருவிமற் றொன்றைந் தெழுத்தின் பொருளு மியையவைத்தாய்
திருவு மலிதரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (உஉ)

பூதத்தை வாயுவைப் புந்தியை யைந்து பொறியைமற்றைப்
பேதத்தை யாவியென் றேயுழ லாது பிறங்குவிந்து
நாதத்தை யோவுநின் ஞண்மை தெரித்தது நன்றுமலர்ச்
சீதத்தை யார்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (உங)

தந்தை யிலார்பெறுந் தாயு மிலார்தமர் யாருமிலார்
நந்தை யிலார்மணி யாதி யிலார்வெளி நண்ணினரே
யந்தை யிலாநின் னடியடைந் தாரழகேயமரர்
சிந்தை யிலார்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (உச)

நிலையா வுடம்பு விளக்கங்கொண் டன்றி நிருவிகற்ப
மலையாச் சவிகற்ப மிக்காட்சி யெய்துத லாகுங்கொலோ
மலையா வதுதந்த நின்னருள் வாழ்கவம் மாதடம
திலையார் முகிற்றரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (உரு)

அகர வுயிருந் தனிநிலை யாவது மக்காரமே
நிகர வரிய விணையு மசைநிலை யும்பதமே
மகர மரிய வொருநீயும் யானும் வயங்குசித்தே
சிகர மதிற்றரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (உசு)

வளிதாழ் விசும்பைப்பைந் தோலிற் சுருட்டிட வல்லவனு
மளிதாழ்நின் பேரரு டூர்ந்தின்ப மார்தற் கமைபவனு
மொளிதாழ் புவனத்தி லொப்பரன் மூவுண ராதவர்க்குந்
தெளிதாழ் புகழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (உள)

எல்லா மறைத்துஞ் சடையொன்று மேபுனைந் திங்கமர்ந்தாய்
வல்லா வெமரு முணர்வ்கொ லோவல் லவருணர்வார்
வில்லார்நற் பூலிபு லாகத்தின் மற்றும் விளங்குமென்று
செல்லார் மதிற்றரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (உஅ)

உற்ற வியாபகம் வெம்பாச மென்னி ஞெழிதலிலே
மற்ற வியாப்பிய மென்னினைஞ்ஞான்று மயங்குகிலாய்
சொற்ற வியாத்தியென் றுய்நீக்கு முமையென் சொற்றிபொறி
செற்றவர் சூழ்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (உசு)

நன்றுய்வெம் பாச மியற்கையென் றுலது நாசமுறு
தொன்று யிருக்குஞ் செயற்கை யனுதி யுதவுமுண
சென்று யழியுங்கொ லோவெனக் காரண மெஞ்சவென்றுய்
தென்றுய் வளர்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (ஙo)

கலலான் மருவி யமர்ந்திங்கு மேமக் களுன்றமரு
மெல்லா னறிஞர் சிகாமணி யாயினை யென்பனிந்தச்
சொல்லான் முனிவு கொளேலுண்மை கூறினன் சூழ்ந்துகருஞ்
செல்லான் மதிற்றரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (ஙக)

புறத்து முதன்மை நமக்காக மேவிப் பொலிவகத்து
நிறத்து முதன்மை நமக்காக வேயிது நீநினையென்
றறத்து முதல்வசொற் றுய்சொற்ற வாபின்ன தாகிலையென்
றிறத்து மலிதரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (ஙஉ)

பின்னே யுருவி னிறைமதி யோனெனப் பெற்றபெயர்
முன்னே யுருவிற் குறைமதி யோனென மூண்டபெயர்
தன்னே மறைத்திடுங் கொல்லோ மறைக்கினுஞ் சாற்றுவல்யான்
றென்னே வளத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சுசு)

சத்தாதி யைந்து வசனாதி யைந்து சதாசதிபக்
தொத்தார் தருமிந் திரியம்பத் தந்தக் கரணமொர்நான்
கத்தா புருட னெடுசாக் கிரதுத லார்வையென்றுப்
பித்தா தருமைப் பதிச்சச்சி தானந்த தேசிகனே. (சுச)

சொல்லும் புருவ நடுச்சாக் கிரத்துறச் சொற்றவற்று
ளொல்லுந் தசவிந் திரியங் கழியமற் றுள்ளனவே
புல்லுங் கனவிற் களத்திலென் றுயது போற்றிக் கொண்டேன்
செல்லும் புகழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சுஞ)

பேசார் சுழுத்தி யிதயத் தமர்ந்து பிராணசித்த
நாசார் புருட னெடுநிற்பை நீயென்று காட்டினீயே
தோசா சொழிக வுணர்ந்தென்மற் றேறுவ வோதுபெருஞ்
சீசார் புகழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சுசு)

பொற்ற துரியம் புகுவாய் பிராணன் புருடனெடு
சொற்றநன் ஞபி யதீதத்தின் மூலத்திற் றேக்கமர்வை
யுற்ற புருடனெ டென்றுய் தெனிதர வள்ளங்கொண்டேன்
செற்ற வளத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சுள)

நாலாறு தத்துவ மாயையென் றுய்நவி லேழனீயுங்
கோலாறு சாலும் புருடனென் றுய்குறி யைந்தனீயு
மேலாறு சூடிய வீசனென் றுயுள் விரித்துணர்ந்தேன்
சேலாறு பாய்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சுஅ)

கேவல மாணவ நீக்குமென் றுய்கிள ருஞ்சகல
மாவல மாயையை நீக்குமென் றுய்நல மன்னுசுத்த
நாவல வாவினை நீக்குமென் றுயுண்மை நானுணர்ந்தேன்
சேவல வாதரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சுக)

ஒன்று சிதசித் தசித்துப் பலவொளிர் சித்துச்சில
வென்று புகன்றனீ யோர்முப்பத் தாறையு மெண்ணினன்யான்
கன்று பிறசெங் ஙனமுணர் வார்தென்னீ கற்பகத்தைச்
சென்று பொருந்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சஅ)

நீயே யருட்குறி யாய்க்குரு வாய்மெய் நிகழ்ச்சியரா
யாயேக மாமல மாயை கருமம றப்புரிவாய்
தாயே யனையநின் றண்ணளி யென்சொல்வ றண்கடப்பஞ்
சேயே புகழ்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சக)

கரத்துச் சுடர்கொண் டிருடீனை நேடல் கடுக்குநீனை
யுரத்துப் பதித்தறி யாமையை நேடுத லுத்தமனே
வரத்துப் பொலிமெய்க் குரவர் சிகாமணி யேவளங்கூர்
திரத்துப் பொலிதரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சஉ)

மலீயா நகமொரு மூன்றழித் தாயன்று வாழ்தரவின்
றுலீயா நகமொரு மூன்றையுங் காப்பைநின் னுண்மையெவர்
நிலீயாம் வகையுணர் வார்புணர் வார்கையி னீத்தசெம்பொற்
சிலீயாய் தமிழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சஙு)

ஒரு நிலானென் றுரைப்பார் நினீயவ் வுரைமறையா
வாரூர் முதலிலொரு மூன்றூ ரகத்தர சாட்சிகொண்டாய்
நீரூர்நின் செய்கை நிரம்பாத னுயிற்றூ நீடுபெருஞ்
சீரூர் தமிழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சச)

நின்னூ ரகர நிகருமை நீரென நேருரைக்கு
முன்னூ ரகரமை யீறுற்று நின்னெரு மூன்றுமந்த
மன்னூர் நடுவ கரவு கரத்தை மதிப்பவர்யார்
தென்னூர் தமிழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சடு)

ஒளிவார் விழியும் படையின் றலீயு முதவுகின்ற
களிவார் பதமுத்தி யுஞ்சத்தி யுங்கமழ் புண்டரமு
மளிவார்நின் சொல்லு ளமைந்தவும் போல வணிநகமோ
தெளிவார் மகிழ்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சகூ)

அருளா ருலக மொருமூன்று மாடம் நறிகுறியாப்
பொருளார் நகரொரு மூன்றுஞ வாய்பெரும் புண்ணியனே
வெருளார் பிறவிப் பிணிமருந் தேமத வேள்பகையே
தெருளா ருறுத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சஎ)

மருவு நகர மொருமூன்று சேர்ந்து வயங்குதல்போற்
பொருவில் பெயரு மொருமூன்று சேர்ந்து பொலிவையகத்
திருவு மவர்க்கினி யாய்தனி யாய்தழைந் தெவ்வகைய
திருவு மலிதரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சஅ)

கூடு நகர மொருமூன்று ளாய்க்குக் கொடுத்திடுவன்
மூடு நகரமொன் றென்னது காணது முற்றுங்கொண்மோ
சூடு நகரஞ் சிறப்புப் பொருளென்று சொல்லிவிடே
றேடு நகர்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (சகூ)

மோதும் வலிகொடு முன்படுத் தாயோர் முழுமகர
மோது மருள்வலி கொண்டுகொ ளின்றெ னெருமகரம்
போது மலியும்பொற் றுதருத் தேவெளி போநினையைச்
சேதுசெய் காத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (ஙூ)

கையு மவத்தை யொருமூன்று காரணங் காரியமோ
விையும் பதினேந் துடையா னுநீயென்று விண்டணியால்
வையுந் தியபுனற் காவிரிப் பாலெழு வாரீமுகிற்
றிையும் வளத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (நுக)

அரிக்கு மயற்கு மடைவரி தாகிய வானந்தந்தோம்
பரிக்கு மெனக்குங் கிடைக்குங்கொ லோவெனப் பையவுணீ
யிரிக்குந் திறமுளீ யேற்பெறு வாயென் றியம்பினீயென்
றெரிக்குந் தழிழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (நுஉ)

அகார மூலகம் பலவற் றையுமினி தாக்குமென்ரு
யுகாரமுண் டாய வுலக மணைத்து மொடுக்குமென்ரும்
மகார மவைக்குள் ளொளியாய்ப் பிரேரித்து மன்னுமென்ரும்
சிகார வுருத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (நுங)

பேசு மகார முகார மகாரம் பிரணவமீ
தேசுத தீர்மறை வித்தா மசபை யிதனிடத்தே
கூசுத லோவி யியங்குமென் ரியுளங் கொண்டனன்யான்
றேசு மலிதரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (நுச)

நாட வரிய விகாரமுன் மூன்று நவிலிலிங்க
பீட முயிரைந் தருந்து மதனிடம் பேசினீன்னுங்
கூட வருமண்ட பிண்டமு மாமென்று கூறினீயே
தேட மிளிர்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (நுடு)

பொறியொன்று பூதமொன் றந்தக்கரணம் புகலொருநான்
கறியுங் கலாதியொ டேழ்சுத்த மைந்து மறைந்தவிவை
நெறியொன்றி னேர்புல னீதுகர் வாயென்று நீயுரைத்தாய்
செறியும் புகழ்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (நுசு)

மூலமூன் மூவிரண் டற்குமொர் நான்கொரு மூவிரண்டு
நாலமை யாறுமற் றுறிரண் டோர்பதி ஞறிரண்டு
சால விதழு மெழுத்துமென் ரியெவர் தள்ளுவர்செஞ்
சேலமை நீர்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (நுஎ)

ஆறு முணர்குள மேலால் விகசித்த வாயிரந்தோ
டேறு மமல கமலத்தி லெண்ணீக்கண் டின்புறுதி
வேறு முணர்த்தவும் வேண்டுங்கொ லோவென்று விண்டணியான்
றேறும் வகைதரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (நுஅ)

பணையே நயனந் திரோதை கருமணி பற்றுமிச்சை
யுணையேயு ஞானங் கிரியை யதற்குள் ளொளிதெளியப்
புணையே யிலாதெவை யுங்காண்பை நீதெளி புந்தியர்யார்
றிணையேய் தடத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (நுகூ)

நாதத்தில் விந்துவின் மவ்வி லுகரத்தி னுமெவ்வி
லோதச் சிறந்த சிகாரமும் மேறன்றுமென் றேறுதிணையிப்
போதத்தை யுற்றவ ரேதத்தை நீங்கிப் பொலிவரென்றுய்
சீதப் புனற்றரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கூ0)

கிரியை நிவிர்த்தி யிருமனு நூற்றெட்டுக் கேடில்புர
மரிய வெழுத்தொன்று நாலேழ் பதமய னுற்புவியி
னுரியநன் ஞசி யுபத்த மதாற்பய னூட்டிடுவாய்
தெரிய வருந்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கூக)

ஞானம் பிதிட்டை யிருமனுத் தத்துவ நாலைந்துமூன்
றுனவெண் மூவெழுத் துப்பத மேழ்மூன் றமைந்தபர
மானவெண் ணேழரி நீர்தாலம் பாயு வருத்திடுவாய்
தீனரு றுத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கூஉ)

இச்சைசல் வித்தை யுருத்திரன் மாமனு வென்பதிணை
வைச்ச பதமிரு பஃதேழு தத்துவம் வன்னமுமேழ்
மெச்சு புவனமூ வொன்ப தழல்கண்கை மிக்கருள்வாய்
செச்சை மலர்த்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கூங)

ஆதியஞ் சாந்தி மனுவிரண் டுச னறைபதிணெஞன்
றேறுதி யபதம்வன் னந்தத் துவமும்மூன் றேறன்பதிணை
யேதில் புரந்துவக் குப்பதங் காலினி னூட்டிடுவாய்
தீதிய லாத்தரு மைச்சச்சி தானந்த தேசிகனே. (கூச)

பரையே யதிதமு மந்திர மொன்று பதந்தத்துவ
தருகுணவி நாயகமான் மடமயிலே தனின்முனமே சமைத்தி ருந்தா
லுருகுமனக் கோட்புலியார் பெருங்கிளைஞ ருளக்துணிவுற் றுமாப திக்காம்
பெருகுசெங்கெற் கிட்டவிரா யாக்கலிக்குப் பிழைப்பர்களோபிழைத்திடாரே.

நம்புமருண் மீனுட்சி சுந்தரவா ரியன்புகழ நலமே வாய்ந்த
பம்புவள விநாயகவே டிருமயிலே யிற்செய்மடம் பண்டே யுண்டேல்
வெம்பலிலா தரனடியார் பலருமுவக் தமுதுகொள விழைவார் கச்சு
ரெம்பெருமா னூரார்க் கிரக்கிட்டா னெனும்பழியு மெய்தி டாதே. (அ)

இன்னுமொரு காலங்கம் பெண்ணைக்கத் திருமயிலைக் கெம்பி ராட்டி
மன்னுமூலப் பாலுண்ட பிள்ளையுறின் விநாயகவேண் மடத்திற் சார்ந்தே
தன்னுபுகழ் மீனுட்சி சுந்தரதே சிகன்புகழ்ந்த தறியுங் கேட்டுப்
புன்னுமடி யாரொடமு துங்கொள்ளு மன்புடைய பண்பான் மன்னே. (கூ)

உளாளிவண் பொழிற்கூடற் பிரான்குறட்கன் றெழுத்தபசி யொருவ னல்குங்
கிளாரன்னக் குழியெனச்செய் விநாயகமான் மயிலேமடக் கீர்த்தி யெல்லாம்
வளாருள்சேர் மீனுட்சி சுந்தாதே சிகன்றமிழால் வனேந்த மேன்மை
தளார்விலவ னடியருக்கு மடியருக்கு மடியன்யான் சாற்றற் பாற்றே. (க0)

புதுவை, செயகாநாயகர்குமாரர், ம-ள-ள-ஸ்ரீ
சவராயலுநாயகரவர்கள் இயற்றியது.

விருத்தங்கள்.

சீர்திகழ் வேதா விநாயக வள்ளல் செகமெலாங் களிக்கநன் கியற்று
மேர்திகழ் மடம்போ லியைக்கநீ கண்ணி னியையுமோ வலதியைந் திடினு
ஸார்திக ழெம்மீ னுட்சிசுந் தாமா னற்றமி ழணியஃ தடைய
ஜர்திக முன்னங் கலேமக ளொழித்தொண் டவமுயற் றினுமுறுங் கொல்லோ.

வே று.

புவிமகளுக் கோர்திலகன் விநாயகமால் விருந்தர்விலாப் புடைக்க வூட்ட
அவிர்தரச்செய் சத்திரத்தை மீனுட்சி சுந்தரவெண் ணுசான் சொற்ற
கவிமுகிலீ யாரகமாஞ் சுரத்துமற முளோத்திகை கனிய வன்னர்
செவியதர்சென் றிமிதனுக் கிணைசுரஞ் செல்லாமுகிலைச் செப்ப லாமோ. ()

திருக்கிளரு மருச்சுனமா றவப்பயனைக் காட்டவந்த சேயாம் நல்ல
வருக்கிளரும் விநாயகவேண் மயிலேதனி லினிதிழைத்த வொளிர்ம டத்தின்
பெருக்கதனைப் புகழ்ந்தாைத்த மீனுட்சி சுந்தரரம் பெருமான் பாவைத்
தருக்குடனே கருதியன்றே சுரர்புலவ ரெனும்பெயரைத் தரித்திட் டாரால்.

அத்திரம்போன் றெளிர்க்கணுமை நகிற்சுவட்டை யணிந்தரம்ப னடிப ராவு
மித்திரங்கூர் வியாசகர் விநாயகமால் புரிந்தவெழில் விளங்கு மன்ன
சத்திரத்தி னெடும்புகழை மீனுட்சி சுந்தரஞ் சான்றோன் பாவாற்
சித்திரமா வியம்புதிறங் கண்டுரு முளிமலேவாய்த் திகைத்தான் மன்னே. ()

பொன்னுடும் புகழ்தருவி நாயகவேண் மயிலையிற்றன் பொலியச் செய்த
தென்னுடு சத்திரச்சீர் மீனுட்சி சுந்தரதே சிகன்றீம் பாவாற்
பன்னுடும் புகழநுவ லருமையறிந் தேபயிலும் பண்பாற் றொண்டை
நன்னுடு சான்றோரை யுடையதெனும் பழமொழிக்கு நலிவு றுதே. (ங)

எண்கணற்கு மோர்கணற்கு மெட்டாத மூக்கணன்வா ழிதைய னிந்த
மண்கணுற்றோர் தொழுதேத்திதம் மீனுட்சி சுந்தரமான் மயிலை தன்னில்
வீண்களிக்க விநாயகமால் கண்டசத்ரச் சீர்த்தமிழால் விளம்பல் கேட்கத்
தண்கடல்வாழரிமருகன் மூறச்செவிகொண் டிடினதனற் றகையார்சொல்வார்.

பார்புகழும் விநாயகவே டிருமயிலைச் சத்திரமாம் பாத்தி ரத்தி
லோர்குடிகொண் டோங்கிவளர் மீனுட்சி சுந்தரப்பே ரெங்க ளாசா [ணேர்
னுர்கனிகொண் டமைத்துவைத்த நற்பாவாஞ் செவியுணவை நயந்தே வின்
சீர்தருதெய் வதவுணவை யவியவியென் றேவெறுத்துச் செப்பு வாரால். (எ)

வேறு.

துதிமிகு வீயாச நகரருச் சுனவே டொல்புவிக் கருள்செய வளித்த
தூயநற் சேயாம் விநாயக வள்ள றிருன்றுறச் செம்மடங் தருவெண்
டதிகெய்முற் பலவும் வீராயவோ தனமுந் தடமலி சிராமலே தனில்வாழ்
தருதிபெற் றெருளிர்செந் தமிழ்முனி யென்னத் தக்கமீ ளுட்சிசுங் தரமான்
விதிமுறை யாவம் மடத்தினேப் புகழ்ந்து விருப்பினி லுரைத்தநீந் தமிழும்
வேதனேப் பயந்த மாதவன் பெற்றரு ல் வீதரனில் லுற்றவோ தனமு
மதிநுதற் செவ்வாய் வெண்ணகைக் கருங்கண் மலர்மக ளமுதமூற் றெடுத்து
வழிதரு மொழியுங் கனவிலு மினிதா மதிப்பனே மதித்திடான் மன்னே.()

நேரிசையாசிரியப்பா.

சீர்மலிந் திலங்குஞ் செழுமணி மாடத்
தேர்மலி கருங்குழ லிளமூலே மடவா
ரலங்கொளி விரிக்கு மரமியத் திருந்து
வண்டிமிர் பூந்தொடை வார்குழ லலிழ
வொண்டளிர்க் கரத்துறு வண்டினங் கலிப்ப
நுண்ணுசுப் பொசிய வெண்ணிழ் திலமென
முழுமதி முகத்தி லெழுவியர் வாட
வின்னிசை பாடித் துன்னுற வாடுறு
முத்த மழுத்திய கொத்தொளிக் கழங்கின்
றண்ணிலாப் பரந்து விண்ணகத் தெழுந்து
சுரநதி யகத்துறு மிரவல ரலர்த்தி
விளங்குறு மெழிலிற்சேர் வியாசமா நகரோன்
றெய்வதக் கங்கைச் செழுங்குல திலகன்
றன்னிடத் தென்றுந் துன்னுற வறிஞர்
குறிப்பறிந் திருநிதி வெறுப்ப வளித்துக்
கேட்டபின் வழங்குபொன் னுட்டுறு தருக்கள்
புறங்கொடுத் திரியப் பிறங்குறு காத்தா
னருச்சன மகீப ஞற்றிய பெருந்தவப்
பாற்கட லதனிற் பணிமதி யென்னத்
தோற்றிய புனிதன் றகளில் குணகரன்
ரூனஞ் சுரந்து தழையருள் வாய்ந்து
தூக்கு பாவலர் துதிக்கை பெற்று
வேண்டுறு வார்தம் விக்கினந் தொலைத்துப்
பூண்டகு மங்கதம் பொலிபுயத் தணிந்து
செம்மையார் மணிநிறஞ் சிறக்கப் பூண்டு
மேவலி னுமாபதி விருப்பினி லளித்த
விநாயக மூர்த்தியை விழைதர நலஞ்சேர்
விநாயகப் பேரா மிளிரப் புனைந்தோன்
றேமலர் நெட்டிதழ்த் தாமரை முனியும்

அசும்புதே னூற்றும் பசுந்தழாய் முகிலும்
பன்னருஞ் சுரரு மின்னமுங் காணு
மால்விடைப் பகவன் பாலமர் மலைமக
ணேமுலைக் குடங்கள் சுரந்த தீம்பான்
மணக்குஞ் செவ்வாய் மாமறைக் குழவி
யென்புபெண் ணாக்க வினிதெழுந் தருள
வருந்தவம் புரிந்த திருந்தெழின் மயிலெயி
னறங்குது கலிப்பப் பிறங்குற வியற்றிய
வன்னசத் திரத்தின் றுன்னுசீர் யாவும்
ஒண்டளிர் பொதுளிய தண்டலை முகட்டுப்
பூந்துகண் மூழ்கிப் புதுநிறம் வாய்ந்து
தவழ்ந்தினி திருக்குந் தழைமுழு மதிமேன்
முதிர்கனி யென்று மூசுக்கலை பாயு
மின்னன வளம்பல தன்னுறக் கொண்டு
தேசுற வொளிருஞ் சிரகிரி வாண
னற்குண மேன்மை நல்லொழுக் குடைமை
பொற்புறு வாய்மை பொலிவுறு தூய்மை
புண்ணியஞ் சீலம் பொறைநிறை தேற்ற
முண்ணிறை யறிவினை யொருங்கு திரண்டு
வந்தென வொளிரு மாதவப் புனித
னிலக்கண விலக்கிய மினிதுற வெவர்க்குங்
கலக்க மறப்புகல் கரிசில் குணனன்
றன்னிடைக் கற்பவர் மன்னவைக் களத்து
ளென்னையு மொருவனுத் தன்னுவித் தருளி
மெய்யருள் சுமந்த மீளுட்சி சுந்தர

நல்லா சிரிய னனியுள மகிழ்ந்து
கன்னலும் பாருங் கனிசுவை யமுதும்
முக்கனி யிரதமும் முதிர்சுவைத் தேனுங்
கைத்திட மதுரங் கனிர்தூற் றெடுத்துப்
பாய்தரு நன்னலம் பாவுசெந் தமிழா
லிலகுற செய்யு ளீரைம் பதாக
வொருங்குரா வலர்க ளுவப்புற்
றிருங்களிப் பெய்த வினிதியம் பினனே. (கூ)

குப்பமுத்தாபிள்ளையியற்றியது.

துறவற முனிவர் யாவரும் விருந்து சூழ்ந்தணை மயிலமா நகரி
லறைபுக ழோங்கு விநாயகச் செம்ம லமைத்தநன் மடத்தழ கருமை
முறையுறக் குருமீ ளுட்சிசுந் தரமான் மொழியுநற் றமிழமிழ் தினுக்குக்
குறைவறக்கேட்குஞ் செவிகளுக் கினிமை கொடாதவிண் ணமுதினையாமோ.

வே று.

வியனுறுவி யாசநகர் விளங்கவுதித் தொளிருமவிநா யகவேள் விண்ணோர்
நயமுறுநன் மொழிகவின்று பெருவிருந்து தனக்கருத்த நன்கு தேர்ந்து
புயல்வளஞ்சேர் மயிலைதனில் விருந்தளிக்கச் செய்மடத்தின் பொங்கு சீர்த்திப்
பயனனைத்து மீளுட்சி சுந்தரதே சிகனன்றிப் பகர்வோர் யாரே. (உ)

வே று.

மாநிலத் தெவரும் பகியெனும் பிணியால் வருந்துவ தறவரு மருந்து
தானிது வெனவுண் சார்த்த மயிலை தனில்விநா யகமுகில் சமைத்த [ண்
ஞானமின் மடத்தின் பெருமைமற் றேரா லுரைத்திடத் தருவதோ வெனையா
ஞானநன் மணிமீ ளுட்சிசுந் தரப்பேர் நாவல ஞலினுக் கலதே (ஊ)

எண்டிசை பரவுஞ் சீர்விநா யகவே ளியற்றுசத் திரத்தினைப் புகழ்ந்து
தண்டமிழ்க் குருமீ ளுட்சிசுந் தரமான் சாற்றுமின் றமிழ்நரு வருந்தி
யண்டர்மேற் புகழ்ந்து கூறுபே ரொலியை யவனியி லுறைபவர் யாருங்
கொண்டல்செய் முழக்க மென்றுணை ராது கூறுவர் வஞ்சனை யின்றே. (சு)

கற்பக மனேக கொடைவிநா யகவேள் கண்ணகன் மயிலையிற் கதித்துப்
பொற்பகம் பொலியப் புரிதரு மடத்தின் புகலருஞ் சீர்த்திகண் முழுதும்
விற்பன னெழின்மீ ளுட்சிசுந் தரமெய்த் தேசிகன் விளங்குதீர் தமிழா [தே
னற்பக லவன்போல் விளக்கினன் புலவோர் நயந்துகொண் டாடவுண் மகிழ்ந்

இந்திர நகர மெனவளம் பொலிய லிலகுறு மயிலையம் பதியிற்
சிந்தையுண் மகிழ்ந்து விநாயகக் குரிசில் செய்மட வளமெலாந் திரட்டி
மூந்துதீர் தமிழின் மொழிந்தனன் புலமை முதிருமீ ளுட்சிசுந் தரப்பே
ரொந்தையன் ஞன்சீ ரிருந்கடற் புவியில் யாவர்க்கு மியம்புத லரிதே. (சு)

திருமகள் குலவு மயிலைமா நகரிற் றெய்வத்தச் சனுமகிழ் சிறப்ப
மருமலர் மணக்கும் புயவிநா யகவேண் மறுவிலா தமைத்தசத் திரத்தைக்
குருமலி யருண்மீ ளுட்சிசுந் தரப்பேர்க் குரவனின் னமுதமூற் றெழப்பாய்
தருபசுந் தமிழாற் சாற்றிய திறத்தைச் சாற்றிட வல்லனல் லேனே. (எ)

வே று.

செல்வமலி திருமயிலைப் பதியில்விநா யகச்செம்மல் செழிக்கு மன்பு
மல்கியமைத் திடுமடத்தின் வளம்பலவு முளமகிழ்ந்து மன்னு மின்ப
நல்குதமிழ்த் தேசிகனெம் மீளுட்சி சுந்தரப்பேர் நாத ஞவாற்
பல்குவுணாத் தருளுருமை சேடவிசே டனும்பணிக்கற் பாற்றன் ரூமே. (அ)

வே று.

பயில்பவ ரெவரும் பண்ணவ ருலகம் பயின்றிட நினைத்திடா திருக்க
மயிலையம் பதியில் விநாயகத் தூயோன் வகுத்திடு முணத்தரு மடத்தின்
செயல்பசுந் தமிழிற் செப்புமீ ளுட்சி சுந்தர தேசிகன் சீர்த்தி
நயமுற வெவர்க்கு மூலகெலாம் பாவி நன்குற நிலவுவ தியல்பே. (கூ)

திருவீழிமிழலை, கம்பராமாயணப்பிரசங்கம்,
சாமிநாதக்கவிராயரியற்றியது.

நேரிசையாசிரியப்பா.

பொன்னுர் கமலப் பூவார் வாவியில்
வரிச்சிறை யளிமுரல் கருப்புயல் விலோத
முருந்துறழ் மூரன் முகிணகைச் செவ்வாய்க்
கருந்தட நெடுங்கட் கவினுறும் வேய்த்தோட்
பருமுலைச் சிற்றிடைப் பணவர வல்குற்
றெரிவையர் புனலிற் றிளைத்தினி தாடக்
கண்ணிணைக் கஞ்சிய கயலினம் வெரீஇ
விண்மிசை வெடிபோய் விளங்கு பழுக்காய்த்
தாற்றிளங் கமுகின் றலையிறச் சாடித்
தலைவிரி யிலாங்கலித் தருவின் முப்புடைக்
குலையினு யுதிர்த்துக் குலவுவிண் மணியி
னிடஞ்சால் கொடிஞ்சி யெழிலுறுந் திகிரித்
தடக்தேர் பூண்ட தறுகட் கலின
மரகத நிறத்துக் குரகத மருட்டித்
தரளத் திரளைத் தண்டிரை கொழிகரும்
விண்ணதி கலக்கி மேலெழீஇ யும்பர்த்
தருவிடைப் புக்குத் தண்ணிருல் கிழிப்பப்
படுதைத் துளியொடு பாரி ருங்குஞ்
செழுநீர்ப் பண்ணைத் திருநா டுடைத்த
வசையில் வியாச மாநக ரதனிற்
றேறனு மணியுந் திப்பிய நிதியுந்
தருவுந் திரண்டோர் தனுவெடுத் தென்ன
வரிச்சுரும் பாற்று மாலையந் தோளா
னருச்சுன வேள்செ யருந்தவப் பேற்று
ஞலெட் டறமு நற்குண மனைத்துந்
தகையுங் கல்வியுந் தவறின் மானமு
மடக்கமு மேன்மையு மருளு மீகையும்
வாய்மையுந் தூய்மையு மறுவில் சீலமும்
புலமையுங் கடவுட் பூசையு நேசமும்
வண்மையு மினிய மாட்சியும் யாவும்
புண்ணிய வடிவமாய்ப் பொலிவுற வந்தோன்
மணியணிச் சுடிகை வாண்முள் ளெயிற்றுப்
பகுவாய்ப் பஃறலைப் பாப்பர சுச்சிப்
பொறையாம் புடவியிற் புகலருஞ் சீர்த்திக்
தருவி னிழலுறீ இத் தானம் புரந்து

மானிதி மரீ இ வச்சிர மேந்திப்
பொதற்புறு மிவையாற் புராந்தரற் பொருவுங்
கற்பொரு தோளான் கருணை வாரிதி
வெண்மதி வதன விகாயகக் குரிசில்
சு0 வெயில்செலா வெயில்சூழ் மயிலேயம் பதியிற்
பல்லுயிர் களிக்கப் பண்புற வியற்றிய
சத்திர தருமந் தன்னைப் புகழ்ந்து
கற்றமிழ்ப் பாவா னலனுறப் புனைந்தான்
மெல்காப் பியமும் பல்காப் பியமுமா
சுடு மிலக்கண விலக்கிய மெனும்பெருங் கடலிற்
றிளைத்தினி தாடுஞ் செந்தமிழ்க் குஞ்சர
மடிமையேன் போல்வார் மனத்திரு ளகல
வருளொளி விடுத்துநல் லறிவை விளக்க
வந்த ஞான வசோதயப் பருதி
டுo தென்பான் மலயத் திருமுனி யிருந்தாங்
கன்பார் வடபாற் கருண்முனி யாளுன்
சைவசித்தாந்தத் தளிப்பெருஞ் சாகரம்
பொய்ம்மை யில்லாப் புலவர் சிகாமணி
கல்லாக் கலராங் கரிகளை வெல்ல
டுடு வல்ல வீர வாளரிக் குருளை
கங்கைச் சடையெங் கண்ணுதற் பெருமான்
வடாது கைலையாம் வரையினை யொரீஇத்
தெளுது கைலையாஞ் சிகரிரி யதனிற்
றமிழ்க்கர சியற்றத் தான்வந் ததுபோற்
சுo ருளுட்சி யாகிய தலைவன்
மீளுட்சி சுந்தர விமலநா வலனே. (க)

விருத்தம்.

திருமருவு கஞ்சப் பொருட்டிற் பொலன்சிறைச் செஞ்சூட் டனங்குதிப்பச்
சேலினம் வெரீஇக்கவரி நாகின் குடம்புரை செருத்தலின் மூட்டவொழு
தீம்பா லுவட்டெழீஇக் கரையிறச் சாடிச் செழுந்தடம் பணிகிரப்பிச் [குந்
செங்கெலே வளர்க்குமயி லேப்பதியி லின்பஞ் சிறந்தனே வருங்களிக்கு
மருமல ரலங்கலணி மார்பன் விகாயக வசோதயன் சத்திரத்தின்
மன்னறப் புகழும்ற் றதனைத் திருச்சிரா மலையில்வா ழெந்தை யருள்சேர்
மாட்சிமை விளங்குமீ ளுட்சிசுந் தரமுலில் வடித்தினி தெடுத்துளாத்த [ந்து
வண்டமிழ்ப் பனுவலின் சொன்னயப் பொருணய வனப்புஞ் செலிக்க ணேர்
பருமணி யிமைக்கும் பரூஉச்சுடிகை நெட்டிடற் பஃறலைப் பாந்தட்பொறைப்
பாரிற் றிகழ்ந்தபல் லுயிர்கண்மிடி யாங்கொடும் படருருவண்ணந்தரப்
பண்ணவர் தமக்கர சியற்றுமும் மதவெண் பகட்டிறை தளுதலகுபொன்
பாலித் திடும்பஞ்ச தருமணி யருஞ்சுரபி பதமகிதி மூதலிருந்து

மருமைமிகு நல்லறம் புரிகிலே நற்புக ழுருந்தமிழ் வியப்புணர்வதற்
காயிரங் கண்பெற்ற வஃ்துபோற் செவிகளோ ராயிரம் பெற்றிலமெனு
வளுருற்று ணாணிவெளி வரலஞ்சி வானகத் தம்பர்க் கரந்தனனெனி
னலகில்மற் றிவர்கடஞ் சீர்த்தி ப்ரதாபத்தி னளவினே யுரைப்பதெவனே.()

தே வு.

சீர்கொண்ட வியாசகர் தன்னில்வா ழுதிகருண தீரனெய் யாரசுகுணன்
றிரு மா னிகர்த்திடு மருச்சுனக் குரிறென் செய்தவத் தாலுதித்த
கார்கொண்ட கரதல விநாயக மகீபனற் கவினுறும் மயிலேகரிற்
கண்பெற வியற்றறச் சத்திரப் பெருமையைக் கவியினுற் புனைதல் செய்தா
னீர்கொண்ட வேணிக் கறைக்கந் தரத்தெந்தை நிலவுஞ் சிராமலையிடை
நிலைமைசேர் செந்தமிழ்ப் புலமையை நடாத்திடெறி நீதிசெய வந்தகோமா
னோர்கொண்ட கண்டா மணைத்திரு வடிக்கடிமை யென்னவெனை யாண்ட பெ
னிருநிலம் பரவுமீ ளுட்சிசுந் தானென்னு மினியநா வலவுரோதை. [ம்மா

தே வு.

மருத்திகழ் கமல முகத்தினு ருலவு மாடநீ டிரி சிரா மலையின்
வழுத்தரும் புகழ்மீ ளுட்சிசுந் தரமால் வஞ்சனே னெஞ்சகச் சிலையிற்
குருத்தினி தலருந் தாமரைத் தாளன் குகைட லமுதினுஞ் சீர்ப்பக்
குவலயத் தவர்தஞ் செவிக்கமு தென்னக் கூறுநற் றமிழினுற் புனைந்தான்
றிருத்தகு வியாசச் செழுங்க ரதனிற் றிகழ்தரு மருச்சுனக் குரிசில
செய்தவ மினைத்துந் திரண்டென வுதித்த தேசுறும் விநாயகப்பன்
றருத்திகழ் மயிலைப் பதியிலெவ் வயிருந் தழைத்துலகி களித்திட வியற்று
சத்திர பதிகள் வியந்திடுந் தரும சத்திரப் பெருமையைப் புகழ்ந்தே. (ஈ)

மாநிலத் துறுகல் லுயிர்கடம் மூளத்தின் மடமையாம் வறுமையி லுழலா [வி
வண்ணமெண் ணருநற் றமிழ்ப்பெருங் கடலின் மண்ணுநா வெனும்வைகாறு
மேனிலை தரும்பே றறிவெனும் வடத்தை வீக்கிமென் சொற்பொருண் முன்னு
விண்ணவர் தம்மான் மதித்தெதித் திஞ்சி விளங்குசீர் வியாசமா நகர்வாழ்
வானிகர் செங்கை விநாயகேந் திரனோர் மயிலையி லியற்றுசத் திரத்தின்
வண்புக ழழுதைக் கவியெனுங் குடத்தின் மாண்புற மூகந்தினி தளித்தான்
றூநிலாத் தவழுஞ் சிகரிரி யதனிற் றுளவணி யலங்கலாற் பொருவுஞ்
சொல்லரும் புகழ்மீ ளுட்சிசுந் தரப்போர்த் தூயநா வலர்சிகா மணியே. (சு)

தாரணி தனிற்பல் லுயிர்களோ ரின்பந் தனையடைந் திடற்கரி தென்ப
தவத்தவர் பரவு மயிலையம் பதியிற் றனிவிநா யகமுகி லியற்று
மேருநுந் தரும சத்திரந் தன்னு லெழிலுடந் கின்பமு மதனே
டிருவ் புனை கறைக்கந் தரப்பணிப் பணிவா னிருநதி வெண்பிறை யமுகோ
டாரணி சடிலத் தெந்தைவீற் றிருக்கு மருட்சிரா மலையில்வா ழெம்மா
னருந்தமிழ்த் திறைமீ ளுட்சிசுந் தரமா லவன்புகழ் தனைவிரித் தனைத்த
கார்பொருங் கவியா னற்செவிக் கின்பங் கதித்திடக் களிப்பர்க ளென்னிற்
கருதுமற்றிவர்தம்பெருமைவெண்டிரைசூழ்கடலிடத்துரைக்குமாறெவனே.

வேறு.

தெருளார் தமிழ்க்குச் சிரமளித்த செல்வக் குமுண னங்கர்ப்பிரான்
சிமையத் தடஞ்சூ ழிமையவரைச் சிறுவிக் கொருபா லினிதளித்தோ
னருளா ரரிக்குப் புலியளித்த வடன்மா வலியிங் கிவர்கொடையி
லணைக்கா லொருகா லணமுக்கா லாகு மென்பர் மூழுக்கொடையிற்
றருவார் கரத்து விநாயகவே டானென் றுரைக்குங் குணசீலன்
றண்ணார் மயிலை நகரிலறந் தழைக்க வியற்று சத்திரத்தின்
றிருவார் சிறப்பு நற்றமிழாற் றேவர் வியப்பச் செய்தனனூ
றெரிமீ ளுட்சி சுந்தரதே சிகரா வலர்கள் சிகாமணியே. (சு)

வேறு.

மருக்கு லாவிய மலர்த்தடந் திகழ்திரு மயிலையம் பதிதன்னிற்
றிருக்கு லாவிய விநாயக முகிலுயிர் செழித்திட வினிதாற்று
மிருக்கு லாவுறச் சத்திரத் தின்னிய லிசைத்தனன் றமிழான்முத்
தருக்கு லாவமு தொப்பமீ ளுட்சிசுந் தரனெனும் பெரியோனே. (எ)

வேறு.

அருமறை புகழு மயிலையம் பதியி லருள்விநா யகப்பெயர் வள்ள
றருமசத் திரத்தின் புகழெனும் பைங்கூழ் தாணியிற் றழைத்தினி தோங்கத்
தரிசின்மீ ளுட்சி சுந்தரப் புயனற் றாத்தமி ழாங்கடற் பருகி
யிருமைசே ருலக மின்புறக் கவியென் றியம்புமா ரிபெய் ததுவே. (அ)

வேறு.

திங்க ளுலவு மணிமாடந் திகழு மறுகிற் பரிதிதடந்
தேரைப் பொருவ வீளைஞர்கடஞ் சிறுதே ருருட்டுந் திருமயிலைத்
துங்கத் தலத்தில் விநாயகவே டெடீர் தரும சத்திரத்தின்
றூய பொலிவு மவற்புகழ்ந்து துயர்மாற் றிடுஞ்சீர்ச் சிரகிரியிற்
றங்கும் புகழ்நற் செந்தமிழ்க்குத் தலைமைப் புலமை நடத்துபெருந்
தகைமீ ளுட்சி சுந்தரமா றமிழு நோக்கக் கேட்கவன்றே
புங்க முறுகட் செவியாகப் புரிந்தா னையனென் றுளக்களிப்பாற்
பொறையென் றறியா துலகேந்திப் பொலிந்தா னுரகப் புரவலனே. (சு)

வேறு.

இருமையிலெத் துவசனனே செழில்விநா யகமுனிவ னின்ப மேய
திருமையிலே நகரினிற்பல் லுயிர்க்களிக்க வியற்றறச்சத் திரச்சீர்க் கொப்பப்
பெருமையிலே யுலகிலெனப் பெருந்தமிழாற் புனைந்தனனெம் பெம்மான் செங்
பொருமையிலே யுவந்தவனோர் மீளுட்சி சுந்தரப்பேர்ப் புலவன் றானே. [கைப்

தாராகல்லூர்,

வீராசாமிநாயகரியற்றியவை.

விருத்தம்.

திருவளர் வியாச நகரருச் சுனமா றிகழ்தவத் தாதித்தமா தனவா
னுருவளர் விநாய கேந்திர னென்பை யொண்டொடி யாக்கிய வொப்பின்
மருவளர் மயிலைப் பதியினுற் குலத்தோர் மாண்பினுக் கேற்றவா றினிய
குருவள ரன்ன சத்திர னன்றுக் குலவிட வியற்றினன் மாதோ. (எ)

அவ்வியன் முதலா வறஞ்செயும் வளனவ் வறப்பய னியாவுந்தெண் டிணிநீர்
கௌவிய வுலகோ றறிதர வினிய கவியொரு நூற்றினு லிசைத்தான்
செவ்விய மதுர மொழுகுதீந் தமிழின் றிரிசிராப் பள்ளிவாழ் புனித
னவ்விய மடியார்க் கறுத்தருள் புரிமீ ஞட்சிசுந் தாகுரு பானே. (உ)

அப்பாவுப்பிள்ளையியற்றியது.

விருத்தம்.

வானளாஞ் சோலைசெறி வியாசகுக ருருச்சுனவேண் மைந்த னுன
பானலார் தொடைவிநா யகபூபன் றிருமயிலைப் பதியி னன்ரு
மோனமா தவர்பிரம சாரிவா னப்பிரத்தன் முதன்மற் றுள்ளோர்
மானமா தரம்பொலித னன்றெனச்சத் திரமினிதா வருத்தான் மன்னோ. (க)

கனம்பொலிதென் றிரிசிராப் பளிவளர்மா தவனருநூல் கற்றோர் நாப்பட்
டனம்பொலித லெனவளரு மீஞட்சி சுந்தரமான் றரணி மீதிற்
கனம்பொலியச் சத்திரத்தின் பெருமையையீ ரைம்பஃதாங் கவிசெய் தானன்
மனம்பொலிவு ளவர்க்கும்வஞ்ச மனம்பொலிவு ளவர்க்குமற மருவ மாதோ. ()

அழகிரிசாமிநாயகரியற்றியது.

விருத்தம்.

பங்கய வாலி செறிதரும் வியாசப் பதிவிநா யகமூலில் பளகின்
மங்கலம் பொலிதென் மயிலையி லினிய மாண்புறச் செய்தசத் திரத்தி
னங்கமூ மதன்க ணமையுநல் லறனு மவனியோ ருணர்தரச் சொற்றான்
றுங்கநற் குணமீ ஞட்சிசுந் தரனென் றோமறுத் தருளீசெய்தே கினனே.

கோவிந்தசாமிபிள்ளையியற்றியது.

விருத்தம்.

பகலவ னிரதப் பரிசுழன் மாடப் பந்திசேர் வியாசமா நகரி
லிகலற விளங்கும் விநாயக பூப னெழிற்றிரு மயிலையம் பதியிற்
சகலரும் புகழ்ந்துண் டெக்களிப் படையத் தருகையி லார்சமழ்ப் படையப்
புகலறு மன்ன சத்திர னன்கு பொற்புற வியற்றினன் மாதோ. (க)

கட்டளைக்கலித்துறை.

பூதர வில்லி மகிழ்மயி லாபுரி யிற்புலவர்க்
காதரஞ் சேரப் புரிதரு மச்சத் திரச்சிறப்பை
மாதரஞ் சேருல கெல்லா மறிய வருத்தனனால்
சீதர னேரொங்கண் மீஞட்சி சுந்தர தேசிகனே. (உ)

மூருகப்பிள்ளைஇயற்றியது.

விருத்தம்.

குளநாடு முளரிதிகழ் மயிலேதனில் விநாயகமால் குலவு சோழ
வளநாடு சோறுடைத்தென் றிடுமொழிவெங் கிடசசெய்த மடமென் னெஞ்சக்
களநாடு கழற்குரவன் மீனாட்சி சுந்தரமான் கவிதைத் தேனே
ளெனாடின் னமுதருத்த லாற்றெண்டை நாடேசோ துடைய தாமால். (க)

புண்ணியமெல் லாமொருங்கு திரண்டனைய விநாயகவேள் புரிந்தி யாரு
மெண்ணுமயி லேப்பதியி லியற்றுசத்தி ரச்சிறப்பை யெளியேன் றீமை
மண்ணியசீர் மீனாட்சி சுந்தரமே தகென்றமிழால் வனைந்தபாவை [னே.
யுண்ணமுதென் கோகனியென் கோபாகென் கோயாதென் றுரைப்பேன்மன்

இராமசாமிப்பிள்ளையியற்றியது.

விருத்தம்.

தெண்டிரைசூழ் புவிமகட்குத் திலகமெனுந் திருமயிலே சிறக்க வோங்கு
மெண்டிசையும் புகழும்விநா யகபூபன் றனதுளத்தி லிசைந்த வன்பாற்
கண்டவுறச் சத்திரத்தின் மேன்மையெலாம் பலபாவாற் கருணை கூர்ந்து
மண்டலத்தின் மீனாட்சி சுந்தரவா ரியன்றமிழால் வகுத்தான் மாதோ (க)

சுந்தரஞ்சேர் மாதர்மட லெழுதுபுய சயிலனருச் சுனவே ளீன்ற
கந்தமலர்த் தொடையணிவி நாயகபூ பதிமயிலைக் கண்வ குத்த
வந்தவுறச் சாலையதின் றகைமையெலாம் புலவர்களிப் படைந்து வாழ்த்தச்
செந்தமிழான் மீனாட்சி சுந்தரமே தகெனினிது செப்பி னனனல். (உ)

மங்கலஞ்சேர் திருமயிலே நகரதனி லருச்சுனபூ மாரன் செய்த
துங்கமிகு தவப்பயனு யுதித்தவிநா யகமகிபன் சூழிப் பாரிற்
றங்கியவெங் கலியகலக் கண்டவுறச் சாலையெழிற் றகைமை யாவும்
புங்கமிகு மீனாட்சி சுந்தரமே தகென்றமிழாற் புனைந்தான் மன்னோ. (ஊ)

பாலகுருஉபாத்தியாயரியற்றியது.

விருத்தம்.

செங்கமலே வளர்மயிலேப் பதியில்விநா யகமுகில்கா சினியி னனும்
புங்கமுறு முயிர்தழைக்கப் புரிந்தவுறச் சத்திரத்தின் புகழை யார்க்கு
மங்கையிலா மலகமென வருங்கவியாற் புகழ்ந்தனனல் லறிஞ ரேத்துந்
தங்கியசீர் மீனாட்சி சுந்தரமே தகெனனும்பேர்த் தமிழ்ச்சிங் கேறே.

நரசிம்மஉபாத்தியாயர்இயற்றியது.

கடவுளைக்கலித்துறை.

வான்புகழ் சீர்த்தி விநாயக வேண்மயி லேப்பதியிற்
ருன்புரி சத்திரச் சோ மரதனந தன்னையின்சொ
லான்மலி யின்றமிழ்ப் பொன்னிற் பதித்தணி யாவமைத்தான்
றேன்பொழி தார்ப்புயன் மீனுட்சி சுந்தர தேசிகனே.

மருதையாப்பிள்ளைஇயற்றியது.

விருத்தம்.

திக்கனைத்தும் புகழ்வியாச நகர்வாழ்வி நாயகவே டிருக்கு லாவுஞ்
செய்க்கமல மலர்மயிலேப் பதியிலியற் றியவறச்சத் திரச்சீர் சொன்ன
தக்கபுகழ் மீனுட்சி சுந்தரதே சிகன்றமிழைத் தானத் தீதாங்கு
மிக்கவமு தென்னினது கடைப்பட்ட தென்றுரைப்பார் மேண்மை யோரே.

வயித்தியலிங்கபத்தர்இயற்றியது.

விருத்தம்.

செழுமலர்ப் பொழில்சூழ் வியாசமா நகர்க்கோர் திருவென வளர்விநா யகவேள்
பழுதினல் லறங்கள் பரவுவான் மயிலேப் பதியிலொண் சத்திரம் பகலோ
னெழுபரி யினமு மீகையில் வஞ்ச வீனர்வன் னெஞ்சமுஞ் சூழலத்
தழுவுமீ கையர்த மனமுமா தவர்நெஞ் சதுமகிழ் வுறவியற் றினனே. (க)

சீர்மலி யுலகுக் கொருமுக மாகுந் திரிசிர புரவிறை திறம்பா
நார்மலி யன்ப ருளவிரு ளகற்று ஞானவா தித்தனற் ருவளைத்
தார்மலி நம்மீ னுட்சிசுந் தரமான் முழ்விலச் சத்திர வியல்பை
யோர்மலி தமிழா லின்கவி யொருநூ றிசைத்தன னன்பினின் மாதோ. (உ)

வேறு

மாமேவு குமுதத் தளிக்குல முலாவல்செழு மயிலனையர் கட்குடைந்து
மாசிதீ விழனிகர் தடஞ்செறி வியாசநகர் வளாருச் சுனமாதவன்
பூமேவு செய்தவத் துறும்விநா யகவேள் பொருந்துதிரு மயிலேதன்னிற்
புலவர்முத லாந்தவர்க ளுட்களிப் பெய்திப் புகழ்ந்திட வறங்குலவுமோர்
கோமேவு சத்திரங் கண்டவர் கணேத்திறை கொளும்படி யியற்றினனதன்
கோதில்புக ழைத்தமிழி லொருநூறு செய்யுளாற் கூறின னலஞ்சிறந்த
தூமேவு தன்னடிய ரொடுநாயி னேனையுந் துரிசறச் சேர்த்தருள்செயுஞ்
சுருணசே புரமேவு விமலவெம் மீனுட்சி சுந்தரப் பேர்க்குறவனே (ங)

சீர்கொண்ட புவியின்முக மெனும்வியா சப்பதி சிறக்குந மருச்சுனமுகில்
செய்தவத் தால்வந்த மணிவிநா யகமால் செழிக்குமயி லேப்பதியினிற்
கார்கொண்ட முடியமைத் தன்னசத் திரனன்கு காணச சமைத்ததன்கண்
கற்றவரு நற்றவரு மற்றவருமுள்ளங் களித்துண வறஞ்செய்வளனே

யேர்கொண்ட நதிகுலச் சலதிவந் தமரர்மிக் கேத்துசிர கிரியுதித்தன்
பெஞ்சலின°லடியவ ருளத்தனு னத்திமிர மிரியச் சவட்டி யருள்செய்
தார்கொண்ட சிவஞான பானுமீ ஞட்சிசுந் தாருரு பரன்தரணியோர்
தம்மூளத் துவகையுற வினியகவி நூறெனத் தமிழினுற் சொற்றனனரோ.

ஆறைமாநகர்,

ஐயாசாமிமுதலியாரியற்றியது.

விருத்தம்.

புவனமூன் றேத்தும் வியாசர்பா டியில்வாழ் புண்ணிய னருச்சுன வேள்செய்
புனிதமா தவத்தில் வந்தவன் கவிஞர் போற்றுறுங் கங்கையங் குலத்தோன்
சிவபிரான் கமல வடியிணை நாளுஞ் சிந்திக்கு மடியரைப் பணிந்து
திருவுருள் பெற்றுன் கொடையினிற் குமுணன் றிகழ்புகழ் விநாயக பூபன்
நவமலர்ச் சோலை புடைவளர் மயிலை நகரினி லெவர்க்கு முய்ய
நன்கமை தரும சத்திரத் தினுக்கோர் நற்றமிழ் மாலைசொற் றனஞல்
பவமிலார் தந்திக்குந் தமிழ்க்கட லுண்டு பாவல ரெனும்பயிர் தழைக்கப்
பனூன்மழை பொழிமீ ஞட்சிசுந் தாப்பேர் படைத்திடுகுணமா முகிலே.

பெங்களூர்ச்சதுர்வேதசித்தாந்தசபையைச்சார்ந்த
தருமத்தமிழ் வித்தியாசாலை முதலுபாத்தியாயராகவிருந்த
காஞ்சீபுரம்,
இராமானுசபிள்ளையியற்றியது.

விருத்தம்.

கடலெனத் தோன்று மலர்பொலி யகழுங் காமரு நேமிநே ரெயிலுங்
கவின்றபா தலமும் வானமு நண்ணுங் கனம்பெறு வியாசர்பா டியினுன்
கங்கையங் குலத்திற் பயோததி நாப்பட் கமலதி யெனவவ தரித்தோன்
கலையுண ரறிஞர் புகழருச் சுனமால் காதல னெவர்க்குமெஞ் ஞான்றுங்
திடமுற வளித்தோர் பருவத்தே யளிக்குஞ் செழுமுகி லினத்தைவெல் கண்
செல்விழி மடவார் கிழிவனைந் துவக்கச் சிறப்புற சுந்தர வுருவன் [டோன்
றிகழ்தரு குவளே மாலையார் மார்பன் றிருவளர் வேங்கட மூடையான்
செப்பரு மேழிப் பதாகையான் றவளச் சிந்தூரம் பரிகுடை யுடையான்.()

மடமிலார் வதியுந் தொண்டைநா டுடையான் மாசறு சவளதோ ரணத்தான்
வயங்குறும் பாலி நதியினு னென்றும் வார்முர சொலிக்கும்வா யிலினுன்
மாசுனை வழங்கா நாவினுன் றேசு மலிவிநா யகப்பெயர்க் கோமான்
மன்னுறு தரும நித்திய மென்னு மனத்திடை நன்கினி தாய்ந்தே
யடலுறு மயிலைப் பதியினி லற்பி னமைத்தசித் திரச்சத்தி ரத்திற்
கருஞ்சிர புரஞ்செய் மாதவத் துதித்த வண்ணல்செஞ் தமிழ்க்குயர் கந்த
னவிர்பதி பசுபா சப்பொருண் முடிபை யடியடைந் தவர்க்கரு யே
னறஞ்செய்மீ ஞட்சி சுந்தரப் பெயர்கொ ளறிஞனுர் மாலைசாற் றினனே.

மெய்யூர்,

பொன்னம்பலநாயகரியற்றியது.

விருத்தம்.

மணிவளர் புவிக்கட் டொண்டைநன் னுட்டில் வயங்கிய வியாசர்பாடியினுன்
மலிபுக ழுருச்சு னப்பெயர் மால்செய் மாதவத் துதித்தவன் குவளே
யணிவளர் புயத்தன் விநாயக வள்ள லற்பொடு மயிலேயி லமைத்த
வருமைசேர் தன்ம சத்திரத் தினுக்கோ ரலர்தமிழ் மாலைசொற் றனனுல்
கணிவளர் கூந்தற் பரையொடு பரமன் களித்துவாழ் திருசெ புரியான்
கங்கையங் குலத்தான் செந்தமிழ் வாரிக் கலைகண்ட நாவலர் பெருமான்
றிணிவளர் சைவச் செழுமதம் விளங்கத் திருவவ தாரஞ்செய் பெரியோன்
செய்யமீ னுட்சி சுந்தர நாமந் திகழ்தரப் பெற்றசெவ் வேளே.

காஞ்சிபுரம், பாரதப்பிரசங்கம்,

சாமையரென்கிற

இரகுநாதையரியற்றியது.

விருத்தம்.

பொன்னனைய மலர்க்கடுக்கைச் சடிலவா னவன்போற்
புலவர்களின் முதலாஞன் புனிதனைப்போற் றுதலிற்
றண்ணிகர்தா னுயவன்மீ னுட்சிசுந் தரமால்
தழைவியாசர் பாடியில்வாழ் தருவிநா யகவேண்
மின்னிடையார் வாழ்மாட மயிலேதனிற் கண்ட
விளங்குசத் திரத்தினுக்கு விளம்பியமா லேயின்சீ
ரென்னனையா ரெடுத்துரைக்க வனந்தநா வளியா
திருந்ததனும் தளியிழந்தா னிவ்வுலகில் விதியே.

புன்னைப்பாக்கம்,

சுப்பராயமுதலியாரியற்றியது.

விருத்தம்.

நித்திலஸ் குலேயி லெறிதிரை யிலஞ்சி நேமிநேர் வியாசர்பா டியில்வாழ்
சித்தச னனைய விநாயகச் செம்மல் செழுமயி லேயிலினி தமைத்த
சத்திரத் தினுக்கோர் மாலையை யிசைத்தான் சைவநற் சமையதா மணாக்கு
மித்திர னெனுமீ னுட்சிசுந் தாவேள் விளங்கியற் பாவல ரேறே.

தண்டலம்,
சிதம்பரமுதலியாரியற்றியது.

விருத்தம்.

அரியதொழின் முயன்றுபொரு ணனியீட்டி மீயா
தவமிழக்கு மந்தகர்கட் கறநெறியைத் தெரிப்பான்
பரவுதிரு மயிலையினிற் சத்திரமொன் றமைத்துப்
பகரரிய பெருஞ்சீர்த்தி படைத்தவனும் வியாசர்
புரியில்வா ழருச்சுனவேள் புதல்வன்விரா யகப்பேர்ப்
பூபதியைப் புகழ்ந்திடுகோ புகலதற்கோர் மாலை
பரிவினிற்சொன் மீளுட்சி சுந்தரரா வலனைப்
பழிச்சுகோ பாவலீர் பகர்ந்தருளு வீரே.

சித்திரசித்திரப்புகழ்ச்சிமாலைச்சிறப்புப்பாயிரங்கள்
முற்றுப்பெற்றன.

சிவமயம்.

திருக்கற்குடிமாமலை மாலை.*

நிருத்தவிநாயகர்.

விருத்தம்.

திருவளர் செம்பொன் மாளிகை யுடுத்துத் திகழ்தருங் கற்குடி
மலைவாழ், மருவள ரிதழி மாலியெம் பிராற்கு மாலையென் றெருபிர
பந்தங், கருவள ரளக்கர் நீந்துவா னியற்றக் கருணைமா மகம்பொழி
முகச்சீ, ருருவளர் நிருத்தக் கணேசர்பொற் பாத முளத்துவைத்
தன்னது முவந்தே.

அஞ்சனக்கண்மை.

பங்கய மலர்த்து மிரவியிற் கரமும் படரிராக் கதிரினிற் கலியு
மங்கியிற் சூடி மறலிற்றண் மையுஞ்செய் யலரின்வா சமுமென வரவுங்
கங்கையு மிலிந்த சடைப்பிரான் குணமாய்க் கருதுல களித்தருள் புனி
மங்கையர்க் கரசி யானவஞ் சனக்கண் மடவர் நிருவடி போற்றி. [தை

சைவசமயாசாரியர்.

பூசுரர் விளங்கும் புகலிகா வலஞர் புண்ணியப் பாதமு முலகம்
பேசுசீர் நாவுக் கரசர்பொற் ருளும் பெருகுமா நதிவழி தருமா
மாசுதீர் பதிகம் பாடுநா வலர்தா மரைமல ரடியும்வண் கதிர்போற்
றேசுசெய் வாத வூரர்பொற் கழலுஞ் சிறியனேன் சிந்தைவிட் டகலா.

நமச்சிவாயதேசிகர்.

அகழுமா கடல்சூ ழுலகின்மன் பதைக ளடர்புறச் சமயர்பொய் யுரைவி
டிகழுமா றில்லாப் பதிபசு பாச மிஃதிஃ தெனதத்தெளிந் துய்யப் [ட்
புகழுமான் மழுவு நுதற்கணுங் கரந்து பொங்கருள் வடிவெடுத் துவந்
திகழுமா வடுதண் டுறைநமச் சிவாய தேசிகன் நிருவடி போற்றி. [த

நூல்.

மலர்தலை யுலகிற் புன்னெறிச் சமயர் வாய்ப்பிதற் றுரைமனங்
கொளாது, பலர்கொள்பூ நியுங்கண் மணியுமைந் தெழுத்தும் பற்
றியா யுய்யுமா நருள்வாய், வலனுடைத் திகிரிப் படையினன் வண
ங்க வரமுகி லெனவுள மகிழ்ந்துக், கலபமா மயில்கள் களிசிறந் தாடுங்
கற்குடி மாமலைப் பரனே. (க)

---

* மாலைவரிசையில் முதலில்இருத்தற்குரிய இந்நூல், முன்புஅகப்படா
மையால் இவ்வேபதிப்பிக்கலாயிற்று.

பண்வழுக் குற்ற வீர்ஞ்சொலார் மையற் பரப்பிணை நயந்துபா
ராட்டிப், புண்வழுக் குற்ற மெய்யிணைச் சுமந்தேன் பொய்யிணைப்
போக்குநா ளுளதோ, வெண்வழுக் குறுவா னவர்கள்பொன் மோலி
யிணைந்திணைந் தூரிஞ்ஞீழ் துகளாற், கண்வழுக் குறுவிண் மேருவே
போலுங் கற்குடி மாமலைப் பரனே. (உ)

இட்டமா விளையாக் கலிபிழைத் தாரென் றிருங்கிளை தந்தை
தாய் மனையாள், பட்டபால் வாய்ச்சே யொறுத்தகோட் புலியார் பத்
திபெற் றுய்புநா ளுளதோ, வட்டமாய் நடுப்பொன் மானந்தாங் குத
லால் வரத்தகா தவருங்கண் டனுதிக், கட்டறுத் துய்ய வருட்குறி
யாருங் கற்குடி மாமலைப் பரனே. (ஊ)

நளிமனம் வாக்குக் காயமூன் றுனு நளிமுயன் றவர்கொணின்
னருளே, யொளிர்பசும் பொன்செய் கொழுக்கொடு வரகுக் குழுத
யான் கொள்வது முளதோ, குளிறுமா மேகந தவழ்ந்துறை பிலிற்
றுங் குளிர்க்குடைந் தாலென வுடலிற், களிவரக் காந்தட் டழல்வள
ர்த் தணிக்குங் கற்குடி மாமலைப் பரனே. (எ)

மங்கைமூக் கரிந்த தொன்றுமோ போனு மாமலர் தொட்டது காமென்
றங்கையுந் துணித்த வன்பரோ வடியா ரஃதிலா வெமக்களோ வடியார்
பங்கமி றவத்தா னினதுசா ரூபம் பயனுறப் பெற்றென வானக்
கங்கையு மதியு முடிதரித் தோங்குங் கற்குடி மாமலைப் பரனே. (ஙு)

புண்ணிய வடிவாம் வேடர்தம் பிரானுர் பொன்னடித் தாமரைச்
செருப்பு, மண்ணிடைத் தோய வேட்டஞ்செய் நாளவ் வழிப்புலாய்க்
கிடப்பினு முய்வே, னெண்ணுவ தினியா திமையவ ருலக மிறுதிநா
ளழிவது நோக்கிக், கண்ணகன் குடுமி மதியினு னகைக்குங் கற்குடி
மாமலைப் பரனே. (சு)

மறைநெறி வழாத புகலிகா வலனுர் வளங்கொளாத் தூரிலாண்
பணைகாய், நிறைதர வருள்கால் யானுமோர் பண்பாய் நிற்பினு முய்வ
னென் செய்வே, னிறைவதின் றனக்குப் போர்வையு முடையு மீந்த
வென் றுதரித் தாற்போற், கறையடி புலிகள் பாயிலவீற் றிருக்குங் கற்
குடி மாமலைப் பரனே. (எ)

மண்பொழி தானக் களிற்றெடு பாகர் மடிந்தது போதுமோ
வெனையும், புண்பொழி வாளாற் கோறுமென் றவர்வாழ் புங்குடி
யிருப்பினு முய்வே, னெண்பொழி லேத்தச் சிவானந்த வெள்ள மூற்
றெழுத் தவஞ்செயு மடியார், கண்பொழி நீரோ டருவிநீர் பாயுங் கற்
குடி மாமலைப் பரனே. (அ)

யாதனின் யாத னினீங்கியா னுந்த லதனின தனினில னெனமுன்
னேதிய பெரியோர் வார்த்தையும் பேணு தழல்கொடி யேற்கருள்
மேதகு புழுகு நானமு மகிலும் விளைதரு மாமுழுற்றுக் [குவையோ
காதகாற் றிசையுங் கமழ்தரு தெய்வக் கற்குடி மாமலைப் பரனே. (கூ)

சாவிபோ மற்றைச் சமயங்கள் புக்குத் தவறுறில் சைவசித்தாந்த [ய்
மோவுறே லெனமுன் வாய்மலர்ந் தவர்த முரைவழி நிற்குமா றருள்வா
பாவிய பாகற் கோட்டினிற் பற்றிப் படர்கறிக் கொடியிணை வணக்கிக்
காவளர் சார லருவிகல் லெனப்பாய் கற்குடி மாமலைப் பரனே. (கo)

மெல்விணை ஞானம் வல்விணை ஞான மிளிரிரவை பத்திவை ராக
கல்விணை யென்ப ரவற்றிலோர் விணையு கண்ணிலேன் றீவிணை யன்றிச்
செல்வழி யருள்வா யகத்திரு டணிகின் றிருவரு ளோட்டல்போற் புற
கல்லரு மிருணீ யாமணி யோட்டுங் கற்குடி மாமலைப் பரனே. [த்துக்

மெய்யெலா முரோமஞ் சிலிர்ப்பவென் புருக விழிகணீர் சொரி
யவன் புருவா, யையகின் புகழே பேசிடார் நாவா யளக்கரின் மித
க்குரா வாயே, தெய்வமங் கையர்கள் சுணிகுடைந் தேறித் திருமகப்
பெறுவரம் வேண்டிக், கைகளேக் துதல்போற் காந்தள்கண் மலருங்
கற்குடி மாமலைப் பரனே. (கூ)

செயிரறு கினது திருவருள் காட்டுந் திறத்தினுற் காண்பதை யன்றிப்
பயிறரு கல்வி கேளளியா னின்னோ பளகறக் காணவும் படுமோ [தல்
வயிரமா மலைச்செம் மணிக்குவால் பச்சை மணிக்குவா லொடுபிறங் கிடு
கயிலைநீ யுமையோ டிருப்பது தெரிக்குங் கற்குடி மாமலைப் பரனே. ()

ஏந்தறற் செறுவிற் செங்கெலுட் பதடி யென்னவிப் புவியிடைப் பிறந்த
மாந்தருட் பதடி யானயான் மூல மலத்தொட ரறுத்துய்வ தென்றோ
பாந்தளின் மிசைக்கண் படுக்குமா யவன்போற் பரப்பிய தழலெனப்
காந்தளி னருகு யாணிகண் படுக்குங் கற்குடி மாமலைப் பரனே. [பூத்த

கல்லினுல் வல்லப் பலகையால் வாளாற் கமரினுற் சாணையா
லன்பர், புல்லுமும் மலமும் போக்கிநின் னடிக்கண் புகுந்தனர் யான்
புகு மாறென், வெல்லும்வான் சைவம் விட்டுப்புன் சமயம் விரும்பு
வார் போற்பல கந்தங், கல்லுவார் மணிக ளகழ்ந்தெதிர் தெடுக்குங்
கற்குடி மாமலைப் பரனே. (கடு)

வேணவா வெகுளி முதற்களே கட்டு வேரற மனச்செயி லன்
பாம், பேணறல் பாய்த்திப் பத்தியாம் பைங்கூழ் பிறங்கயான் வளர்த்
துய்வ தென்றோ, மாணுறு வட்டப் பளிக்கறை மதிபோல் வயங்கலா
லுடுக்கண மதனைக், காணவந் தாற்போல் வேன்முதற் றிமைக்குங்
கற்குடி மாமலைப் பரனே. (கசு)

சூதினுற் பொருள்செய் தூன்னடி யார்க்கே துறுத்தமெய் யன்
பரோ மூர்க்கர், வாதினுற் பொருள்செய் தூண்டுதற் துவக்கு மறத்
தொழி லெமர்களோ மூர்க்கர், சீதளக் கதிரோ னெனவுல கேத்தத்
தினமும்வெண் மதிமலர் தைந்த, காதலீள் சுணியின் மூழ்கினின்
றேறுங் கற்குடி மாமலைப் பரனே. (கள)

துன்றிய பூத விருளொரு பொருளுந் தோன்றக்காட் டாதுபோ
விரண்டு, ளொன்றினை யேனுங் காட்டிடா வனுதி யுறுமல மொழித்
துய்வ தென்றோ, நன்றுநின் னுருவங் கண்டுகண் புனல்பெய் நற்ற
வர்க் கருகுநி லாக்கல், கன்றலின் மதியைக கண்டுதண் புனல்பெய்
கற்குடி மாமலைப் பரனே. (கஅ)

தரணியான் மாக்க ளுடற்குரி மைகளிற் றலைக்குமே லிலாதது
போல, வுரவுசெய் நின்ற னருட்குமே லிலையென் றுண்மையோ ரறி
வர்யான் வலனே, பொருள்செய்நம் மகளார் கதுப்பினுக் கிணையாப்
புகறகா தெனக்கறுத் துவநக, கருளினைத் துரந்தெக் காலமும் பகல்
செய் கற்குடி மாமலைப் பரனே. (ககூ)

சேசர்நின் கயிலைக் கெழுநதகாட் பரிக்குந் திருப்பரி யுருக்கொ
ண்டே னெனினு, மோருமென் னிலையு முய்யுமெற் குறுமோ வுதிக்கு
மாற் பரிக்குமஃ துறுமோ, பாவில் வாயிப் படையினுற் சுமந்த பகை
ய்ற வடுத்துற வறல்போற், காரணை திரவி வெப்பற வுறைபெய் கற்
குடி மாமலைப் பரனே. (உ0)

அன்றுநன் புகலூர் மணிமுதற் றோற்றி யாசினைச் சோதனை
செய்த, தென்றமிமம் போல்வா ருரும்பொருட் டன்றோ விதனையு
மெண்ணிலன் சிறியே, னெனறுமும் முனிவர் தமிழ்வளர் வாயென
றொருமுனித் தமிழ்வளாத தென்றற், கன்றுபன் மலர்வா சனையொடும்
வுலவுங் கற்குடி மாமலைப் பரனே. (உக)

பிறைவடங் கிடந்த பொம்மல்வெம் முலையார் பெருங்களி மயக்
கிடை வீழ்ந்து, நிறைபொறி யிலாணை யாண்டதென் னென்று நினை
வெறுப் பாரில்லை யருள்வா, யிறைபிர னைவகுந் சரமுமை பிடியே ரெச்
சமும் யானையா னைக்கோ, கறையடி வதியு மிடமெனக் கரிசூழ் கற்
குடி மாமலைப் பரனே. (உஉ)

வறியவ ரகட்டுப் பசித்தழ லலிய வல்சியிற் திடுதலோ மாயாக்,
குறியுடைச் செல்வர்க் கீதலோ வறமக் கொள்கைதேர்ந் தெண்டப்புரந்
தருள்வாய், சிறியபுன்கர்நன் றிலரென நின்னைத் தேடுவார் போற்
பல்வா னரங்கள், கறிகறித் துமிழ்ந்து குளிர்சுனை நேடுங் கற்குடி
மாமலைப் பரனே. (உங)

பொற்புறு சபையின் மாதரார் நடனம் புரிந்தியான் காண்பதை
யொழித்துச், சிற்ப சபையி னின்றிரு நடனந தெரிசிக்கப் பெறுவ
தெந் நாளோ, மற்பொரு முசுக்கள் காந்தளைப் பாறதண் மணிப்பட
மெனப்பயந் துந்திக், கற்பக தருவின் கழுத்தொடி தரப்பாய் கற்குடி
மாமலைப் பரனே. (உச)

தட்பமே மிகுந்த சாகரம் புனிதத் தடநதிப் புனலலா லெவரும்,
பெட்புறு திழிக்கு மங்கணப் புனலும் பெருகிடின் வெறுப்பது முளர

தோ, கொட்புறு மனத்தேன் பிதற்றுரை யுங்கொள் குகைதொறு
முறைதவர்க் குறுவெங், கட்பணி யுமிழ்ந்த மணிவிளக் கெடுக்குங்
கற்குடி மாமலைப் பரனே. (உடு)

மைக்கணுர் முதலா மாயகா ரியங்கண் மயலென வெறுத்தென துள்ள
மெய்க்கணின் னடியார் பாதமே பற்றி விடாவிருப் புடனுற வருள்வாய்
மொய்க்குமீ னுவரிபுகுந்தறன் மடித்து முழங்கிவந் தணைதரு முகிலைக்
கைக்களி றேறிப் பிடியென வணைக்குங் கற்குடி மாமலைப் பரனே. ()

வேடமே பொருளா வயிரளித் தவரை மெய்ப்பொரு ளென்பருய்
திறத்தோர், மாடமின் மக்கண் மெய்ப்பொரு ளென்று மயங்குமீவற்
குய்திற மெவனே, பேடைமா மயின்மீ நோக்கியே யகவப் பெருமை
கண் மகிழ்நனூர் தியெனக், காடுடைத் தருக்கோ னூர்தியை யுய்க்
குங் கற்குடி மாமலைப் பரனே. (உஎ)

பணிமதி நுதலெம் பிராட்டி மேற் கடைக்கண் பாய்த்திரீ யாடுமர்
னந்தத், தனிநடங் காண வருள்வையீ யன் மற்றோர் தவமுமோர் பே
றும்வேண் டுவனே, நனியரம் பையர்தங் குழைகள்கொண் டெறிய
நறவிளக் கோட்டுவா னரமக், கனிகள்கைப் பறித்து மீச்செல வெ
றியுங் கற்குடி மாமலைப் பரனே. (உஅ)

வளரிமுதன் மூன்றும் பயிறர விடக்கால் வருத்தவிப் புழுக்குடி லந்தோ
விளிவுறக் குலியு முன்னராண் டிடினுண் டெனக்கினி யெப்பிறப் புறு
துளிமுகிற்கூந்தற் சசிபுலவியினுற் ரூரந்தமுத் தாரமா நடஞ்செய்[மோ
களிமயிற் கழுத்திற் பரிசிலின் வீழுங் கற்குடி மாமலைப் பரனே (உக)

மனனெகப் புளக முடலெலாம் புதைப்ப மழைபொழி தருங்கணி
னடியா, ரினநகத் திரிவே னுணஞ்சற் றில்லே னென்செய்கே னருள்
செயு டலினும், சினமதக் களிறு தொடர்ந்திட வோடுஞ் சிறுபிடி
குறமட மாதர், கனதனத் திடியுண் டஞ்சிமீண் டணைக்குங் கற்குடி
மாமலைப் பரனே. (ஈ0)

தடித்தெழு மன்பே யுருவமாம் வேடர் தம்பிரா னெனவன்றி
முன்னீ, பொடித்தமுப் புரத்தும் வலியதோ வெய்ய பொய்யினேன்
றீவினை யுளையாய்,கொடிச்சிய சேண லிடித்திடி முலக்கைக் கொம்புபட்
டிடைந்திழி பாகற், கடிச்செழு நறவவ் வுறற்குழி நிறைக்குங் கற்குடி
மாமலைப் பரனே. (ஈக)

தேயுநுண் மருங்கு லிறுத்தெழு முலையார் சீறடிச் சிலம்பொலி நேடி
யாயுமொன் செவிலின் குஞ்சித பாதத் தணிசிலம் பொலியறிந் திடுமோ
பாயுமம் புலியின் குழவியும் வானப் பாப்பிடை யுதித்திரு வினைத்துங்
காயுமம் புலியின் குழவியுந் தவழுங் கற்குடி மாமலைப் பரனே. (ஈஉ)

பந்தமார் கினைகள றத்துணித் துரிமைப் பண்புட ஹீனையிற்களித்த
வெந்தையா சவரோ பிறர்மீண் டயக்கும் யாங்களோ நின்னடிக் கன்பர்

முந்துமா தவத்து முனிவரே போல முடிச்சிகை வளர்த்துவன் கிராதர்
கந்தமே புண்டு கலேயத ளுடுக்குங் கற்குடி மாமலைப் பரனே. (நசு)

நண்ணிமுன் னுலங் காட்டிற்குத் தலேயா னடந்திடு மம்மையோ நினது
புண்ணியத் தலத்திற் காலினு னடந்தும் புகாப்பெரும் படிறனே பே
விண்ணியை யமர ரவியுண விரும்பி விரித்திரு கைகளு மேந்தக் [யார்
கண்ணிய யாக முறுவர்செய் சாரற் கற்குடி மாமலைப் பரனே. (நச)

மதித்துணே யுள்ளச் சினகரத் திருத்தி வாழ்ந்தவர் வாயிலா ரல்
லர், துதித்துணேப் புகழாக் கொடியவெம் மினேரே துயரும்வா யிலா
ரிஃ தண்மை,யுதித்தசெங் கதிர்மீச் செல்பொழு தேத்த வுறுந்திசைப்
பாலரோ டுற்ற, கதித்தகூற் றிணேமுத் திட்டிட வுயர்ந்த கற்குடி மாம
லைப் பரனே. (நடு)

ஏத்தியன் புறுநின் னடியரை நின்னே யிகழ்ந்துரை யாடியுமத்தி [டேல்
நாத்தியென் றுரைத்து நான்பர மென்று நந்துவார் மாட்டெணேக் கூட்
பூத்திரள் சிந்திச் சூழ்பவர் பாவம் போதல்போற் கயக்கருந் தானங்
காத்திர ளுடுத்த சாரனின் றேடுங் கற்குடி மாமலைப் பரனே. (நசு)

பொருந்திய சாந்தம் பொற்பணிமுனிந்து புண்ணிய நீறுகண் டிகையே
தருந்திரு வெனவுட் கொள்ளுநர் மென்றே சாரலிற் குடாவடி தவழ்த
லருந்தவ ரியற்றும் பெருமகஞ் சிதைப்பா னடுத்தவர் சாபத்திற் கஞ்சிக்
கருந்தயித் தியங்க ளிரிவது கடுக்குங் கற்குடி மாமலைப் பரனே. (நஎ)

அருந்தலே விரும்பி யணேத்தலைக் காண வவாவலே யுயிர்த்தலைக் கேட்க
வருந்தலே யெல்லா நின்னடிக் காக்கி வருந்தலே மையுமெனக் குளதோ
முருந்தலே சாரற் றேக்கடிப் படுத்த மொய்ம்மயி ரெண்கின்மேற் கிராதர்
கருந்தலே வைத்து முடங்கத ளுறங்குங் கற்குடி மாமலைப் பரனே. ()

மன் னுசெங் கதிரோ னன்றியு மவன்கல் வாய்த்தழ மேறன்று
மோ வதுபோற், பன் னுநின் னருளே யன்றியெவ் வுயிரும் பளகறு
முத்தியிற் புகுமோ, மின்னிடை யெயிற்றி மாதர்தண் சுணேத்தம்
வினங்குருக் கண்டறற் குடிகொள், கன்னிய ரெனக்கை கூப்பிநின்
றழைக்குங் கற்குடி மாமலைப் பரனே. (நகூ)

சந்திரற் றரித்த நின்றிரு முடியிற் றழலா வையுமுடன் வைத்
தாய், வந்தது புகழே யன்பரோ டெணேயே வைப்பினும் வருவது புக
ழே, யிந்திரன் மயங்க நீன்மணிச் சுடர்மே லெழீஇயொரு முனிவ
னே போல்வெண், கந்தடி களிற்றைக் கருங்களி றுக்குங் கற்குடி மா
மலைப் பரனே. (சo)

தெளியுநின் கருணே மாகதக் கொழுந்தே சிவணுமென் பசியபு
னேடிக், குளிர்பய னுதவுங் கோவினே யருத்தேன் கோதினே யருத்
துவேற் குளதோ, வொளிசெய்பொன் னுலகிற் கொடுமுடி யுரிஞ

வுதிரும்பொற் றுகளிடை மூழ்கிக், களிறுமா தங்கப் பெயர்ப்பொ
ருள் விளக்குங் கற்குடி மாமலைப் பரனே. (சக)

தேகமே நானென் றுனியிரு சார்புக் திடமுறக் கொண்டவத்
தைகளூ, ளேகியே யுழன்று திரியுநா ளொழிந்தன் னிலையடி வண
ங்குநா ளுளதோ, போகுயர் குடுமிக் கருகிருந் தெயினர் பொன்னுல
கத்தவ ரிசைக்குங், காகுளி தூத்தந் தாரங்கேட் டுவக்குங் கற்குடி
மாமலைப் பரனே. (சஉ)

பணியும்வெள் ளெலும்பு நரம்பும்பூண் டதற்குள் பாலெவர் விரு
வினர் தகாதென், றணிதர விடையார்க் கருளரீ யெனையு மாளினத்
தன்மையாய் விடுமால், பிணிமுகச் சாயற் கொடிச்சியர் வதுவைப் பெ
ருநல நுகரமங் கலநாள், கணியெனக் கணிக ளோடவிழ்த் துசைக்குங்
கற்குடி மாமலைப் பரனே. (சங)

மல்லலம் புவியிற் கூற்றினைக் கடத்தல் வயங்குநின் றிருவடித்
தூணிமே, புல்லிய நெறியார்க் கன்றிமற் றல்லாப் புல்லிய நெறி
யினர்க் காமோ, வல்லியங் குழலா ருறுவெறி யாட்டி லணிகெழு
முருகியந் துவைக்கக், கல்லெனு மொலியே செல்லொலி மழுக்குங்
கற்குடி மாமலைப் பரனே. (சச)

பஃறலைப் பாய லான்முதற் றேவர் பகுத்தொதுக் கிடநந்தி யோ
ச்சுஞ், சுஃறெழிலிச் சூரல் கண்டுகை யேந்தித் துதிக்குநின் றிருமு
னென் றுறுவேன், சிஃறெழில் களுஞ்செய் யாதுசெய் நின்னீதத் தெ
ளிதவர் புரிமகப் புகைபாற், கஃறெனுங் கானிற் குயிலெடு தவழுங்
கற்குடி மாமலைப் பரனே. (சரி)

மையினுங் கழிந்த கருங்குழன் மடவார் மயக்கினை நயந்துமட்
சுமையா, மெய்யினுட் புகுந்து பொய்யினுட் சுழலும் வீணனுக்
கெங்ஙன மருள்வாய், வையினுட் பழகு மெடுங்கணைக் கிராதர் வயங்
கெழு தொண்டகந் துவைப்பக், கையினுட் குணிலென் றெளிர்பிறை
யெடுக்குங் கற்குடி மாமலைப் பரனே. (சசு)

கொடும்பசித் தழலு ணணிமுழு கியும்பொற் குடமெடுத் தாட்
டினரென்ப, ரடும்பலு ணுண்டுங் கைதொழ வருந்து மடியனுக் கெங்
ஙன மருள்வாய், விடுஞ்சுடர்க் கற்ப மாமலர் பறித்து மேலவர் கண்
வழி விரும்பிக், கடும்புட னிறங்க வேரல்க ளோங்குங் கற்குடி மா
மலைப் பரனே. (சள)

மறையவர் திருவை வைதிகர் தூணியை வருபர சமயகோ ளரி
யைக், குறைவிலா வமுதைக் காழியுண் ஞானக் கொழுந்தினைத்
துதிக்குமா றருள்வாய், நறைகம ழலங்கற் கதுப்பரம் பையர்க ணன்
குமை திலகந்தீட் டிதற்குக், கறைதபு சுணைக ளாடியிற் பொலியுங்
கற்குடி மாமலைப் பரனே. (சஅ)

மைக்கருங் கடலிற் கன்மிசை மிதந்து மாறினின் னருட்கட லழு
ந்து, மெய்க்கமணைம் பெருமா னுவினுக் கசை விளம்பிலே னெங்
ஙன முய்வே, னீக்கரு நெடுங்க ணுய்ச்சிய ருறிக்க ணீரெயெத்த வ
னென நிலவைக், கைக்கருங் களிறு கவளமென் றெடுக்குங் கற்குடி
மாமலைப் பரனே. (சசு)

நின்னுடைத் தோழப் பெருந்தகைப் பிராணி நிகரறு முது
கிரிச் செம்பொன், மன்னுமாற் நிட்டுக் குளத்தினி லெடுத்த வள்
ளலைப் பரசுமா றருள்வாய், துன்னுசெங் நிணையின் குரல்கவர் குரு
கின் னுருகுதியைக் கவண்கயிற் நெயினைக், கன்னியர் மணிவைத்
தெறிந்தெறிந் தோட்டுங் கற்குடி மாமலைப் பரனே. (ருo)

துதிகளைக் துனக்குன் னடியருக் கன்பு துறுத்தலே முத்தியென் றெ
மதிசெயு நானே பரமெனு மாயா வாதிய மாயின னழுகே [ண்ணேன்
திதியவன் பிரம னின்னமூர் தேடத் திகழுகின் னுருவென வோங்கிக்
கதிரொளி மழுக்குங் கோபுரம் பலசூழ் கற்குடி மாமலைப் பரனே. ()

ஆணவ மகன்ற வறிவன்றி யுருவி லேயரீ பல்லுருக் கொண்டு [றறியேன்
பேணுபன் னுமம் புனைந்துபல் லிடத்தும் பிறங்குக ளுயிர்கட்கென்
மாணைநின் னடியு முடியுங்காண் கினுமம் மாலய னிவற்றடி முடியுங்
காணரி தெனச்செய் பொன்மதில் பலசூழ் கற்குடி மாமலைப் பரனே. ()

தினகரன் பூக விருள்விடக் கிரணஞ் செலுதகல்போற் கிறியன்
மும் மலமா, மினவிருள் விடநீ யருன்செலுக் திடினுண் டின்றெனினின்
விடலென்று மின்னுர், தனபதி நகரி லதிகமீ தென்னத் தவழ்சுடர்
மணிபல பதித்த, கனகமா ளிகைகள் பலவுடித் தோங்குங் கற்குடி
மாமலைப் பரனே. (ருக)

நவையறு மரசி னுமமப் பூதி நாயனர் காஞ்செயு மறங்க [னுற்
ளவையினன் கெழுதி யுய்ந்தனர் யாணின் றளவுஞ்சொல் லியுமறி யே
சுவைதரும் பல்பூக் கறித்துவாய் குதட்டித் துணர்த்தடைஞ் சூதமா
கவையடி மேதி துயில்வய லுடுத்த கற்குடி மாமலைப் பரனே. [நீழற்

தாலிகொண் டுறுநெற் கொளச்செலும் பொழுது தக்ககுங் கிலி
யங்கொள் புனிதர்க், கேனுமன் பனந்தங் கோடிகூற் நெருகூ நெய்
தினு மையமின் றுய்வேன், மாலிருங் கடத்த களிற்றின மறைய வர
ர்கதிர்க் குலீச்செழுஞ் சாலிக், கால்கள்பாய் பழனம் பலவுடித் தோ
ங்குங் கற்குடி மாமலைப் பரனே. (ருரு)

தூரமாஞ் செல்வச் செருக்காபி னடர்து தொடர்ந்துளக் திகைப்
பதை யொழிந்து, சீரிய நின்மெய் யன்பரைத் தொடர்ந்து திகைப்ப
றச் செல்லுநா ளுளதோ, வாரிசத் தடத்தை யுழக்கிய பகட்டு வாளை
பாய்ந் துழகருக் கலங்கக், காரினைக் கலக்குங் கனியுடித் தோங்குங்
கற்குடி மாமலைப் பரனே. (ருசு)

கூற்றினை யுதைத்துங் காமனை விழித்துங் கொன்றநின் றனக்
கன்பு செய்யபார், மாற்றருங் கூற்றின் றண்டமுங் காம வருத்தமு
மெங்ஙன மொழிவார், காற்றினிளங் சுழுகின் கழுத்திறப் பாடிக் தகட்
டகட் டிளநெடு வானைக், காற்றடம் பணைக ணனியுடுத் தோங்குங்
கற்குடி மாமலைப் பரனே. (நிஉள)

மின்னுசெந் தழலாய் நின்றுமென் பாதி மிலைந்துமல் லறநுதல்
விழித்து, முன்னுருஞ் சயின்றுங் கெரிக்குநிற் கயன்மா லொப்பெனக்
கரைகரும் வாழ்க, பன்னுகூன் குலைய குறுங்கழுத் தரம்பைப் பழங்
கனிக் தொழுகிய செழுந்தேன், கன்னலின் படப்பை கணைக்குந்தண்
பணைசூழ் கற்குடி மாமலைப் பரனே. (நிஅ)

இயல்புடை யோகத் திருந்தரா ளெவரு மெவையுமின் புணர்ப்
பற விருந்த, செயலுணர்ந் தமைபைப் புணர்ந்தரு ளீயே தெளிபர
மென்பது தெளிக்தே, னயலுறு முளரி மணந்தமக் கிலாத தறிந்து
நெற் கதிர்தலை வணக்குங், கயலுடைப் பழனக் கணியுடுத் தோங்குங்
கற்குடி மாமலைப் பரனே. (நிக)

பராப ரினது மேனியிற் பட்ட பாண்டியன் கைப்பிரம் படி
தான், சராசர மீண்டும் படுதலா ளீயே தற்பர னெனவுளங் துணி
ந்தே, னிராவெனத் திரியுங் கவையடிக் கயவா யெருமைகள் கன்றுள்
ளிப் பொழிபால், காமலை மடிக்க னிறைதரும் பணைசூழ் கற்குடி
மாமலைப் பரனே. (சுo)

பங்கயா சனனுங் திருநெடு மாலும் பாகசா தனனும்வா னவரு [தேன்
மெங்குரா டியுங்கா ணரியதின் பாத மெளியதன் பருக்கென வுணர்ந்
தொங்குலாந் தடத்திற் சலஞ்சல முகுத்த கொழுங்கதிர் முத்தம்வில்
கங்குலே மழுக்கும் பணைமருங் குடுத்த கற்குடி மாமலைப் பரனே.[வீசிக்

ஐயவென் னுள்ள வெள்ளமிற் திரிய வடற்குலை யுடைத்தது விசாவிற்
செய்யநின் பாத பங்கயக் கடலிற் சேர்தரப் படருகா ளென்றே
நெய்யணி கூந்த லுமுத்தியர் நெடுங்க னிழலற விடைக்கண்டு மள்ளர்
கையினுற் கயலென் றரித்திடுங் கணிசூழ் கற்குடி மாமலைப் பரனே.()

கட்டிவீ டருள்வோ ளீயெனத் தெளிர்த்து கரிசுறு புன்றெய்வப்
பற்று, விட்டுநீ யடைந்தேதற் கெப்பற்று மறுத்துன் மெய்ப்பற்றைப்
பற்றுமா றருள்வாய், வட்டவாய்க் கமல மதுமடை யுடைக்க மள்ளர்
கள் கரும்படு மினிய, கட்டியா லடைக்குங் கணிமருங் குடுத்த கற்
குடி மாமலைப் பரனே. (சுஉ)

விரிதனு கரண புவனபோ கங்கள் விணவழிக் கொடுத்தவை துய்த்த
பரிவுயி ரறப்பி னெடுக்கிமீட் டாக்கும் பரிவினுங் கதிர்த ளெளிதே
தெரிமருப் பெருமை கரும்பினைக் குதட்ட கேரிழி சாறவ னிரப்புங்
கரிசறு மகணி மருங்குடுத் தோங்குங் கற்குடி மாமலைப் பரனே. (சுச)

செறிபிறப் பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பெனுஞ் செம்பொருள் காண்ப, தறிவெனத் தெரிக்குங் குறட்பொரு ளதிர்த்து மறிகிலன் போற்பிற காண்பேன், வெறிமலர்ப் பணைநெற் பச்சிளங் கதிர்கள் விண்ணைத் தேனுரா நீட்டிக், கறிசெய வளரும் படிகர்சூழ் பழனக் கற்குடி மாமலைப் பரனே. (சுரு)

வெம்பிய காமம் வெகுளியுண் மயக்கம் வேரறப் பறித்துநின் பதமே நம்பியென் புருக வன்புசெய் நாளு நாயினேற் குள்ளதோ வருள்வாய் பம்புபன் மலர்க்கண் மருதவே ளுறையப் பன்மணிகுயிற்றியபைம்பொற் கம்பலம் விரித்தாற் போலடர்ப் பணைசூழ் கற்குடி மாமலைப் பரனே. ()

வையமும் வானு முய்யவுண் புருகாய் வாதவூர் வந்தவ தரித்த வையனன் புரையை நயந்துபுன் மாட்டு மவ்வள வாவதெற் கருள்வாய் செய்யதா மரையின் பன்மலர்ச் சாளித கிகழ்தர விழித்துவச் சிரத்த கையினுன் கிடத்தல் போன்மணும்பணைசூழ்கற்குடி மாமலைப்பரனே.

ஒழுக்கமன் பருளா சாரற் சீல முறவுப சாரம்வக் கித்த [யே
லிழுக்கிலா வாய்மை வஞ்சுற வடக்க மிவைகளி லொன்றுமியா னறி
னழுக்கிலா வழுத்த மிக்கள் போற் சிதற வணிமதி மேற்பெரு வாளே
கழுக்கடை யினபுரிப் படிகர்சூழ் தெய்வக் கற்குடி மாமலைப் பரனே.

நின்னுரை வழியே நிற்பவர் நில்லார் நீளற மறஞ்சுவர்க் காதி,
மின்னுவே கத்தா னரகத்தாற் றெரிந்து வீட்டியப்போ னீயெனத் தெளிந்தேன், மன்னிய தென்னம் பழம்பல வீழ வருக்கையின் பழங்கிழிந் திழிதேன், கன்னலங் கழனி பாய்தரும் பணைசூழ் கற்குடி மாமலைப் பரனே. (சுசு)

மானிடப் பிறவி வந்தது மனத்தால் வாக்கினுற் காயத்தாற் பணிசெய், தானிடத் தைந்து மாடுநின் னடிக்கீ ழமர்வென் றறிந்திலன் சிறியேன், கூனுடைக் குலைய குலுங்கமுத் தரம்பைக் கொழுங்கனி யிழிந்தேன் கருப்பங், கானிடைப் பாயும் படிகர்சூழ் தெய்வக் கற்குடி மாமலைப் பரனே. (எ0)

பொருள்செய்சன் மார்க்க நெடுஞ்சக மார்க்கம் புத்திர மார்க்க மின் பாக்கு, மிருமைசெய் தாத மார்க்கமிம் மார்க்கத் தியானெஞரு மார்க்கமு மறியேன், பருமா கதமுத் தந்துகிர் கண்டம் பாளைசெம் பழத்தினுற் காட்டிக், கருமுகி லணவுங் கமுகடர் கணிசூழ் கற்குடி மாமலைப் பரனே. (எக)

கொச்சையர்க் குயர்மா னியுமர சினுக்குக் குலவுமைப் பூதியு மூலக, நச்சுசுங் தரருக் குதியரும் போல நான்சிறந் துய்வதெந் நாளோ, வச்சணங் கயில்வேற் கண்ணுழத் தியர்நெல் லரிதருங் கொடும் புற விரும்பைக், கச்சப வெரிநிற் றீட்டிடங் கணிசூழ் கற்குடி மாமலைப் பரனே. (எஉ)

படர்புகழ்க் காழிப் பிள்ளையார்க் கிவணைப் பாரெனச் சற்றுநீ
மொழிந்தாற், பிடகன்மாத் தலியி லுருமுவீழ்த் தவரென் பெருவிணை
க்கும்மது வீழ்ப்பா, ரடிமடைப் பள்ளி யுலக்கழு நீர்செய் யாவிகால்
குளம்பல நிரம்பக், கடலுடைத் தென்னப் பாயுமென் பால்சூழ் கற்
குடி மாமலைப் பரனே. (எக)

நயந்தரு நாவுக் கரசருக் கிவன்பா னுட்டம்வை யெண்ணினப்
பூதி, பயந்தசேய்க் குற்ற விடர்தெதலைத் தவரென் பாசவல் விடத்
தையுந் தொலைப்பார், வயந்தரு மள்ள ருடைப்பிணை யூரு வரைகுவி
நவமணி வாரிக், கயந்தலை யெனநின் றுடைத்திடுங் கணிசூழ் கற்குடி
மாமலைப் பரனே. (எச)

பழிதபு குணவன் முண்டருக் கிவன்பாற் பார்வைசெ யென்
பையேற் காவாய்க், குழியினின் றென்னையு மீட்பார், வழிமந்துப் பொழிபூங் கொடிகடாய்
வளைப்ப வனைந்துபைங் கழைகணின் றிடுதல், கழிலில்கைக் கொடு
வேள் பொரல்பொருங் கணிசூழ் கற்குடி மாமலைப் பரனே. (எடு)

அருவமா யுருவ மாயரு வுருவா யண்ணகூயிரக குயிருமா யறி
வாய்ப், பொருள்படு மறைக்குந் தெரிவரி யாயாகூபுராணநிற் றெரித
லெற் கெளிதோ,சுருள்விரி யரம்பைக் குருத்துமீ யுசைசந்து சுரர்மினுர்
கலவியெய்ப் பாற்றுங், கருள்படு பொதும்பர்ப் படுகர்சூழ் தெய்வக்
கற்குடி மாமலைப் பரனே. (எசு)

செவியினுற் கேட்டு மறிகிலே னின்னைத் தெரிந்தவர் போற்பல
பிதற்றிக், குவிதரக் கலியும் புனைவனுன் னிடினென் குணமெனக்
கேகதை தருமா, லலிருநெற் பணையின் ஞெண்டுகள் கிளைத்த வளவில்
பல் வளையெலா நிரம்பக், கவிழிணர்ச் சூதத் தாதுகுங் கணிசூழ் கற்
குடி மாமலைப் பரனே. (எஎ)

அருமறை தெரிதண் டீசர்பா லெண்ணே யடைக்கலம் புகுத்துவை
யானுல், வெருவுறத் தந்தை தாடிணித் தவரென் வெம்பவத் தானையுந்
துணிப்பார், மருவிய வுணவு கொடுவரச் சென்ற மடவனச் சேவலே
நோக்கிக், கருவுயிர்த் துறைபே டலமருங்கணிசூழ் கற்குடி மாமலைப்
பரனே. (எஅ)

நானவார் கூந்தற் பரவையார் மணிக்கு நள்ளிரு ணைப்பணீ தூது,
போனகா ளாரூர் மறுகிலோ செறும்பாய்ப் பொருந்தினும் வருந்திடா
தும்பேன், கூன்முது கிப்பி யுயிர்த்தவெண் முத்தங் குவிதரக் கயலே
யே யென்று, கான்மலர் தூவிச் சுரர்தொழுங் கணிசூழ் கற்குடி
மாமலைப் பரனே. (எக)

கெடுத்திடு மூலோகா யதன்முத லான கீழ்ப்படுஞ் சமயர்பொய்
யுரையை, யடுத்திடும் படியெப் பிறப்பெனக் குறினு மருளனின் னடிக்
கன்பே யருள்வாய், மடுத்தவெண் குருகோர் முடக்கிழ நாரை வாய்க்

கொளு முணவினைத் தட்டக், கடுத்திடா தறவோர் போலுறை கணி சூழ் கற்குடி மாமலைப் பரனே. (அ0)

தரிசனங் கொடுத்தா ளுயர்ந்தவ னீயான் முழுந்தவ னியல்பி னெப்பொருளுந், தெரிபவ னீயா னீதெரி விக்கத் தெரிபவ னின் னடிக்கடியே, னரிசிதர்ந் தயில்கொள் முள்வழக் கறுக்கு மங்கணர் முகமதி கண்டு, கரிசறக் குமுத மலருமென் பால்சூழ் கற்குடி மா மலைப் பரனே. (அக)

பொருவினின் பூசை யென்னும்புண் ணியத்தாற் பொலிசிவ ஞா னம்பெற்றடங்கி, மருவுற மேல்கிழ் தருமறம் பாவ மாற்றிநின் னடி க்கணென் றுறுவேன், குருமலர்ச் செந்தேன் புலியடிப் பைங்காய்க் கோழரை யரம்பையச் சாய்த்துக், கருநிறக் கவரி நீந்தப்பாய் கணி சூழ் கற்குடி மாமலைப் பரனே. (அஉ)

யானது செய்தேன் பிறரிது செய்தார் யானென தென்னுமிக் கோணை, ஞானவா ழலால் வெதுப்புபு நிமிர்த்து நான்செவ்வே நிற்கவென் றருள்வாய், மீனுண வளித்து வீரிசிறை நாரை மென்மடப் பெடையொடு தினைக்குங், கானகன் மென்பூந் தடத்தமென் பால்சூழ் கற்குடி மாமலைப் பரனே. (அங)

மூதறி வுடையோர் புகழ்சிறுத் தொண்டர் முளரித்தா ளடைந் திலே னடைந்தான், மேதகு சேயை யறுத்தவர் வெறுத்தென் வினை யிலை யறுக்கவஞ் சுவரோ, மாதர்மென் றடத்தில் வெள்ளிதழ்க் கமல மலரினை மடவனச் சேவல், காதலி னணைக்கப் பெடையுயர் பணை சூழ் கற்குடி மாமலைப் பரனே. (அச)

பெருகிய வெள்ளந் திரைக்கட லன்றிப் பிபீலிவா ழனையினும் புகல்போ, லுருகிய வன்ப ரன்றியென் பாலு முன்னருள் புகுவது வழக்கால், பருதியா யிரமோர் கடலிடைத் தோன்றும் பான்மை போ லொவ்வொரு மடிவிற், கருதுசெங் கமலம் பலமலர் பணை சூழ் கற்குடி மாமலைப் பரனே. (அடு)

உயிரெலா நின்ன தடிமையெப் பொருளு முன்னுடை மைப் பொரு ளென்னச், செயிரற வுணர்ந்த நின்னடி யவர்தாள் சிறியனே னடைந்துய்வ தென்றோ, குயிலெனைப் பேசுங் கடைசியர் வதனக் குழ நகை மதிநில வெண்ணக், கயிரவங் கருதி மலர்பணை யுடுத்த கற்குடி மாமலைப் பரனே. (அசு)

பாவியேன் சிந்தை நின்னடிக் காக்கிப் பணிவிடைக் கிருகையு மாக்கி, நாவினைத் திருவைந் தெழுத்தினுக் காக்கி நவையற வுய்யுநா ளுளதோ, வாவியிற் பொலிவெண் டாமரை மலர்போன் மதியுறப் பெருக்கெடுத் தொழுகுங், காவிரிப் புனல்பாய் நெடும்பணை யுடுத்த கற்குடி மாமலைப் பரனே. (அள)

மிடைத்தம ருடற்றும் பலகுண மறுத்து மிகுசிவா னந்தமூற் றெடுப்பக், கிடைத்துணைக் காண வாணவ வெழினி கீழையான் பெறுவ தெக் காளோ, வுடைப்பிணை மள்ள ரடைக்குமுன் வராலவ் வுடைப் படை படவுடை மடையின், கடைத்தலை வெடிபோய் விழும்பணை யுடுத்த கற்குடி மாமலைப் பரனே. (அஅ)

ஐந்துபே ரறிவும் பார்வையாய் முடிய வடுத்திடு கரணமீ ரிரண் டுஞ், சிந்தையாய் முடிய நின்றிரு நடனந் தெரிசிக்கு நாளுமெற் குளதோ, விந்திர தருவோ ரனிக்குந்தே னளியா யியல்பிணை நோக்கி வெண் மலாற், கந்தவார் பொழில்க ணைகைக்கு மென் பால்சூழ் கற் குடி மாமலைப் பரனே. (அக)

பூப்பயி னைந்த வனம்பல வியற்றேன் பொருந்தல கிடேனினு லயத்தி, லாப்பிகொண் டைதா மெழுகிடே னெங்ங னடியனே னுய்யு மா றருள்வாய், வீப்பயி லளிகண் மூக்குழ வழிதேன் விரிகடற் படு முவ ரகற்றுங், காப்பயின் மென்பான் மருங்குடுத் தோங்குங் கற்குடி மாமலைப் பரனே. (கூ0)

அவாவெனப் படுவ வெவ்வகை யுயிர்க்கு மணியவெவ் விடத்து மெஞ் ஞான்றும், தவாவரு பிறப்பின் வித்தென வுணேரன் றண்ணரு ளெங்ஙனம் பெறுவே, னுவாமதி தவழுஞ் சோலையி லினாஞ சொளிர் கத லியைமதை மாதர், கவானென வணைக்கு நெடும்பணை யுடுத்த கற்குடி மாமலைப் பரனே. (கூக)

மலைக்கொடி படருங் கற்பக தருவே வயங்கருண் மழைபொழி முகிலே, புலைக்கொடி யணையா ளென்றுமெய் யாவிப் பொய்யினே னடையுநா ளென்றோ, நிலைக்கொடி யாட வுலகங்கொண் டாட நிறை மலர்ச் செங்கொடி யாடக், கலைக்கொடி யாடு மாளிகை பலசூழ் கற் குடி மாமலைப் பரனே. (கூஉ)

அற்குடி கொண்ட விராகறுங் கூந்த லணிமுலை யெம்பிராட் டியையான், சொற்குடி கொண்ட யாப்பினு லன்பாற் றுதித்திடப் பெறுவன்னு ளென்றோ, விற்குடி கொளும்பொன் னுலகமேத் தெடுப்ப வியலினுளி குடிகொள்பன் மணியென், கற்குடி கொளச்செய் நற் குடி மலைதாழ் கற்குடி மாமலைப் பரனே. (கூங)

பல்லெலாந் தெரித்துச் சொல்லெலாந் துறுத்துப் பாட்டெலாம் பாடினீர் யாமு, மில்லெலா மாய்ந்தோங் கொடுப்பதற் கிலையென் னிவ;கள்பாற் புலவரென் பெறுவார், சொல்லெலாந் திருவைக் தெழுத் திவண் வாழ்வோர் தொழிலெலாம் பணிவிடை யென்றுங், கல்லெ லாஞ் சிவலிங் கம்மெனச் சுரர்தாழ் கற்குடி மாமலைப் பரனே. (கூச)

பொற்பக மலர்ந்த மாதரார் மையற் புணரியி லழுந்திடா தன க்கே, யற்பக மலர்ந்து சிவானந்தப் புணரி யழுந்திடு மாறெனக்

கருள்வா, யெற்பக மலர்ந்த குவட்டுறும் யானை யீர்ங்கவு ளளிகளைக் கையாற், கற்பக மலர்ந்த குழையொடித் தோச்சுங் கற்குடி மாம லைப் பரனே. (கூடு)

புவிமுழு தளந்தோ னேடியுங் காணுப் பொன்னடித் தாமரை காண்பான், குவிமனத் தோடு மகம்படித் தொண்டு கொண்டியா னுல் வதெந் நாளோ, வவிர்தரு பிறையைக் கண்டவில் வேட ரவாவொடு கொடிச்சியர் தமது, கவினுத லென்னப் பொட்டணிந் துவக்குங் கற்குடி மாமலைப் பரனே. (கூசு)

மன்றினின் னடனங் கண்டகண் கொண்டு மற்றினிக் காண்பதி யாதென், றுருன்றிய சிக்தை யுறுதிகொள் ளுவனே லுய்குவே னென க்கது போதுங், குன்றவ ரேனற் குரல்களை யறைக்கட் கொண்டுபோ யிக் குவித்தடும் யானைக், கன்றினுன் மிதிப்பித் துதிர்த்தினை யள குங் கற்குடி மாமலைப் பரனே. (கூள)

நனியிடை யுமை லுன்னடி நினைக்க நாயினேற் கருளுவை யாயி, னினிவரு கதிரெங் கெழினுமெண் ணேன்யா னிருப்பனீ தருளிட வேண்டுந், துனியறு கவிற்றின் கோடுபட் டுடைந்து சுட்டபொன் போற்பல வருக்கைக், கனிபழங் கிண்டு சுளைபல வுதிருங் கற்குடி மாமலைப் பரனே. (கூஅ)

நீதிசேர் சைவத் தடைந்தவ ரடையா நின்றவ ரடைபவர் தமக் கியான், பாதகக் குழிசித் தொடர்பற வடிமைப் படும்பரி சென்றுநீ யருள்வாய், கோதில்கற் பகத்தி னறுங்குள கருத்திக் கொழுமத யானையங் கூந்தற், காதலம் பிடியைப் புலவிதீர்த் தணைக்குங்கற்குடி மாமலைப்பரனே. (கூக)

சைவமே பொருண்மற் றவையல வென்று சார்திரு நீறுங்கண் டிகையுங், தெய்வவைந் தெழுத்தும் பற்றறப் பற்றத் திருவரு ளென் றெனக் கருள்வாய், பைவளர் மணியைத் தழலென நீண்டு பாவடிப் பருமகல் வேழங், கைவளர் கடநீர் மழைபெனப் பொழியுங் கற்குடி மாமலைப் பரனே. (க00)

வெண்பா.

நிலமாலை கொண்ட நெடுஞ்சடையி லென்பின்
குலமாலை யுஞ்சேர்த்துக் கொண்டாய் - பலமேலோர்
சொன்மாலை கொள்செவியிற் றூக்கற் குடியாயென்
புன்மாலையுங்கொளது போல்.

கற்குடிமாமலைமாலை முற்றிற்று.

சிவமயம்.

திருவாவடுதுறை ஆதீனத்து
ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
நெஞ்சுவிடு தூது.



காப்பு.

வரமணிமா டத்தா வடுதுறைவா ழுஞ்சுப்
பிரமணிய தேசிகன்பாற் பெட்புற் - றுரமணியி
ஞய்ந்துதஞ்ச மாயொருகோட் டண்ண லருட்கிலக்கு
வாய்ந்துநெஞ்சே தூதுசென்று வா.

நூல்.

க. பூமேவு செங்கமலப் பொற்றவிசின் மேயவனு
மாமேவு மார்பினெடு மாயவனு - மோமே

உ. வரும்பொருட்பே றெய்து மருண்ஞான சித்தி
தருங்கருமு பூமியெனச் சாற்ற - லொருங்குணர்ந்து

ங. நால்வேத மோது நகுநீற்ரு லுன்துபதத்
தால்வேறு மம்மையென் ரூயாமே - மேல்கீழு

ச. மன்னமு மேனமு மாய்ப்பறந் தும்புகுந்து
மின்னமுங் காணு வியல்பினுன் - முன்னமே

ஞ. பாசங் கலந்த பசுக்களி லோர்வகைக்கா
நேசங் கலந்த நிகழ்ச்சியால் - வாச

கூ. மலையு மிதழிமதி யஞ்சடில முன்னு
விலையும் பலவும் விலக்கி - வலையும்

எ. பிறைதவழு மாடமலி பேரா வடுதண்
டுறைதவழும் புண்ணியத்தாற் ரூற்று - மிறைவ

அ. ணுருமா னெமக்கொளிக்க வேவார்கை யமரு
மொருமா ணெளித்த வொருவன் - பெருமான்

கூ. மதிமறைத்த மாசெமக்கு மாற்றி யருள
மாசடையா வள்ள -

க0. மிருள்கண்ட யாமவ் விருள்காணு வண்ண
மிருள்கண்டங் காட்டா திருப்போன் - பொருள்கண்ட

கக. மானிடனே யென்ன மருவி யிருந்தாலு
மானிடனே யென்ன வயங்குவா - னீனவுல

கஉ. காயதனாங் கந்த மறுப்பவரொன் றல்லாமுட்
டேயதரென் பார்பரஞ மென்பாருஞ் - சேய்மையிற்கண்

கங. டாலுமிரு கைதலேமே லாக்கிமன நெக்குருகிச்
சாலும்வணக் கஞ்செய் தவாச்சிறப்பான் - வேலரசர்

கச. தன்னடிநீ ழல்வைகத் தாவாத் திருவரசின்
மன்னடிநீ ழல்வைகு மாதேவன் - முன்னடியார்

கடு. நந்தான மென்கயிலே நந்திமுதன் மெய்கண்டான்
சந்தான மோங்கத் தழைத்தருள்வோன் - முந்தான*

ககூ - கூ. ... ...

உ0. எண்ணி யுழலு மிருளகற்ற வெங்கள்பா
ணண்ணிய யமரு ககுபரிதி - கண்ணிய

உக. வாலங் கலந்தசுவை யாரமுத மானலு
மாலங் கலவாத வாரமுதஞ் - சாலு

உஉ. மறப்புக் குணத்தை மருவியுழ லெங்கள்
பிறப்புத் தபப்பிறந்த பெம்மான் - சிறப்புறலாற்

உங. பொன்னே யினிதளித்துப் போகவென்ன தெங்களுக்குத்
தன்னே யினிதளிக்குந் தம்பிரான் - முன்மறைத்த

உச. தொன்றேயென் றேறுதி யொழித்தெம்மை வேறுபடித்
தொன்றே யருள்புரியு மொன்றனு - னன்றதோர்

உடு. கற்றூர் புரிபிழையுங் கைகுவித்துக் கூப்பிடித
லற்றூர் குணமு மறமறப்பான் - பற்றுச்

உசு. சுரவடிவி லெங்கண்மனந் தோயாமை யெண்ணி
நரவடிவங் கொண்டுவந்த நம்மான் - விரவுபுழு

உள. மென்பயிர் போல விடையத் தரிப்புண்டு
துன்புறுவேங் கட்கோர் துணையானு - னன்பமையு

உஅ. நாதாந்த முத்தியருண் ஞானவிளை தன்றெளிவாம்
வேதாந்தன் பேரெருன்றும் வேண்டாதான் - போத

---

* இதற்குப் பின்னுள்ள ச-கண்ணிகளடங்கியபகுதி ஏட்டிற் சிதைந்து போய்விட்டமையாலும் வேறு பிரதி அகப்படாமையாலும் அவை இங்கே பதிப்பிக்கப்படவில்லை.

உகூ. நரனென் றிருந்தாலு ஞானமிலா தாரு
மரனென் றறிய வவிர்வா - னுரனுடைய

ஙூ0. வல்லரக்க னேற்று மலையாத தாய்ப்புரத்தி
னெல்லரக்க வாங்க லியலாதாய்ச் - சொல்லரக்கு

ஙூக. மிக்க புகழாழி மேவிச் சுழலாதாய்ப்
பக்க மரியப் படாததாய்த் - தொக்ககய

ஙூஉ. லாழி கரவாதா யான்ற தமிழ்முனிகைப்
பாழியறிந் தஞ்சப் படாததாய் - வாழி

ஙூங. பொறையருவி யெஞ்ஞான்றும் போற்றிவறந் தாலு
நிறையும்வள நல்கு நிலைத்தாய் - மறைபுகல

ஙூச. வாய்ந்ததரு வைந்தோ டழகியசிந் தாமணியும்
வாய்ந்த பெருங்கருணை மாமலையான் - ரேய்ந்தகா

ஙூரு. ராணவந் தீர்ந்த வறிவாங் குறிஞ்சியெனு
நீணவ மாயநில நின்றெழுந்து - காணவெழு

ஙூசூ. காமமெனும் பாலை கடந்தேதறி மாயையெனு
நாமநெடு முல்லை நகப்புகுந்தே - யேமமென

ஙூள. வுற்ற பசுக்கவர்ந்தாங் கோங்காய ராயவைவர்
முற்ற வுளுற்றுதொழின் மோதியே - செற்ற

ஙூஅ. வுளமா மருதநிலத் தூற்று விடயக்
குளமாய வெல்லாங் குலைத்துத் - தளமாருங்

ஙூகூ. கண்ணுய நெய்தல் கலக்குமலக் கட்டுற்று
ரண்ணுமே யெவ்விடனு மாய்ப்பெருகி - யெண்ணு

ச0. நிலமா விசும்பு நிறைந்தென்றும் வற்று
நலமாமா னந்த நதியான் - புலமாரு

சக. முப்பகுதி யாயவுயிர் முத்தி பெறவாழு
மூப்பகுதி மாயை முழுநாடன் - செப்பரிய

சஉ. மெய்யாய வன்பர் விடயக் கரவருறல்
செய்யா மனமாந் திருநகரான் - கொய்யா

சஙூ. மலைமல ராளி மனச்சாலை நின்றும்
விளையகால் வாயில் வெளிப்பட் - டுளைசிறந்து

சச. மண்ணக மெல்லா மருவிப் பரந்தோடி
விண்ணக மெல்லாம் விரைத்தாவி - யெண்ணை

சரு. வொருநாட்டிற் காடா யுறைகுவதல் லாம
லொருநாட்டில் வெற்பா யுறைந்தும் - பெருநாட்டி

சசு. லேனியபோல் வெங்புறத்தி லேந்துவதல் லாதுதலே
மேனே யுறுது மிகத்தரித்துஞ் - சோணைக்

சள. கடலுலக மீர்த்துக் கடுகி நடக்கு
முடலின் மறைப்பரிமா வுள்ளா - னடல்சேரு

சஅ. மூலமல வேசென்னு மொய்கூர் தறிமுறித்துச்
சால மலமாந் தனேயறுத்து - ஞாலமுத

சகூ. லாறுறு தத்துவ மாய படைதுரந்து
மாறுத கன்ம மரஞ்சாய்த்துக் - கூறு

நிO. மனமாம் பரிமாவை மாய்த்துமத வேள்கைச்
சினமாங் கரும்பொடியச் சீறி - யினமாங்

நிக. குடருங் கொழுவுங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு - மிடையிடையே

நிஉ. வைத்த தடியும் வழும்பும் வெளித்தோற்ற
மொய்த்த கருந்தோலின் மூட்டொழியக் - கைத்து

நிங. மடமா தனைமித்து வைத்த சமயக்
கடமார் படுகுழிசா ராம - லிடமார்

நிச. குறையாத வானந்தக் கொள்ளேநீ ராடி
மறையா கமமா மணிக - ணிறைய

நிடி. விருபாலுந் தூங்கி யிரட்ட வெழுந்து
வருபான்மை ஞானமத மாவா - னெருநான்கு

நிசு. சொல்லாய பூவைச் சுவையாய தேனெழுகப்
புல்லா வழுவாய புல்லியெலா - மில்லாமற்

நிஎ. கற்று நிரம்பாக் கவியாங் கவிகளெலா
முற்று வருத்தா வுரவடையா - முற்றுமுண

நிஅ. ரான்றே ரெனச்சொ லளிக்கணங்கண் மொய்த்தனேயச்
சான்றோர்சொ லன்பாந் தருநாரால் - வான்றேயுஞ்

நிகூ. செந்நா வெனுங்கரத்தாற் சீர்தொடுத்து வாட்டமொன்று
மன்னு வகையமைபா மாலையான் - பன்னயமார்

கூO. சித்தாந்த சைவமொன்றே தேற்றமற் றுள்ளவெலாம்
பித்தாந்த மென்றெடுத்துப் பேசுதல்போ - லொத்தபல

கூக. வண்டாடு மாலையொடு மண்ணின்று வான்கிழித்துக்
கொண்டாடு காவிக் கொடியாளன் - றெண்டர்

கூஉ. கடியாத பேரொலியாய்க் கற்றோரா ற் சொல்லி
முடியாத நாத மூசான் - குடியாகுந்

கூஉ. தானமல ராளிமுன்னோர் தங்கணீக்கொண் டைந்துதொழி
லானவைநன் காற்றுவிக்கு மாணையான் - ஞான

கூச. வரமணிய வாவினரே வாஞ்சித் திடுஞ்சுப்
பிரமணிய தேசிகனெம் பெம்மா - னுரமா

கூடு. சொருநமச்சி வாய னுயர்நமச்சி வாயன்
குருநமச்சி வாயனெங் கோமா - னருள்சான்

கூசு. மகர மதியின் வயங்குமுக ஞளி
னிகரிலபி டேகமுக னீடும் - புகரிலா

கூள. வாரா தனங்கொண் டருளிமறு நாட்பகலி
லோரா ரடியவரெண் ணில்லாரோ - டோருமமு

கூஅ. தூண்டுளார் யோகசித்தி யுற்றுளார் ஞானசித்தி
கண்டுளா ராவரெனக் கைகுவித்து - மண்டிவரு

கூகூ. மான்றவடி யாரோ டறுசுவை யாரமுது
தோன்ற வினிதுகை தொட்டருளிச் - சான்றவரு

எ0. ணூலை யினிது நுனித்தமதி யார்க்குப்பின்
வேலை முழுதும் விரித்தருளி - மாலைவர

எக. மாமுனிவர் தூய்மை மருவுநறு நீராட்டி
யேமுறுமெய் யொற்றுடை யிட்டதற்பின் - காமன்வலி

எஉ. வென்றதிறங் காட்டி விளங்குறுகற் றேயாடை
யொன்ற வரையி லுடுத்தருளி - நன்றமையு

எங. மாதனத்து மேவி யருகமரும் வட்டகையின்
மாதனத்தி ஞளும் வயங்குவதாய் - மோதும்

எச. பசுமலரீ ருக்கியுயர் பண்பே யருளப்
பசுமலரீ ருக்கியமை பண்பாய் - வசுவி

எடு. னடித்தலையெல் லாம்புனித மாக்குதிரு வெண்ணீ
றெடுத்தலைவ யவங்குலவ வேற்றி - விடுத்தசுட

எசு. சொன்பான் மணியு மொளிர்தருசிக் தாமணியும்
வன்பார் கவுத்துவ மாமணியு - மன்பி

எள. லொருதிரண மாக்கு முருத்திராக் கங்கள்
பொருவில் சிரமுதலாப் பூண்டு - கருது

எஅ. மிருவ ரழுக்கறுப்ப வேற்றசடா மோலி
யிருவரிரு கைகொடுப்ப தேற்றே - யொருவரினி

எகூ. தெங்கண் மணிமோலி யென்னவொளிர் பாதுகைமற்
றங்கணெதிர் வைப்ப வவற்றிவர்ந்து - துங்க

அ0. முரசு முழவு முருடு திமிலை
பரசு தடாரி படகம் - விரசு

அக. பலவு மெழுந்து பரப்பி முழங்க
நிலவு பிறவு நிகழக் - குலவு

அஉ. திருவா வடுதுறைவாழ் செல்வன்வந்தா னெம்மு
ளொருவா வொருவன்வந்தா னுற்றூர் - மருவு

அங. பிறப்புமுழு தொழிக்குப் பேராளன் வந்தான்
சிறப்பருள் செம்மல்வந்தான் றிண்பா - ருறப்புகுந்த

அச. துங்க மலிஞான சூரியன்வந் தானுயிரின்
பங்க மறுக்கும் பரன்வந்தா - னெங்கள்

அடி. குருசாமி வந்தான் குணக்குன்று வந்தா
னருண்ஞாய மூர்த்திவந்தா னன்பர் - பெருவாழ்வாந்

அசு. தப்பிரான் வந்தான் றழைசுப் பிரமணிய
நம்பிரான் வந்தா னலைமாரு - மெப்பிரான்

அள. வந்தான்வந் தாமென்று மாண்பார் திருச்சின்ன
நந்தா வொலியெழுப்பி நன்குவர - முந்தா

அஅ. தரம்பெருக வாலவட்டக் தாலவட்டம் பற்றி
வரம்பெருக வோர்பான் மலிய - நிரம்பு

அகூ. முழுமதிய மேலமர்வான் முந்திமுயன் றென்ன
வெழுகவிகை செய்யுநிழ லேய்ப்பத் - தழுவு

கூ0. பெரும்புகழ்வெவ் வேறுரப்ப் பெயர்ந்து பெயர்ந்து
விரும்பலுறத் துள்ளும் விதம்போ - லரும்பு

கூக. பவளக்காற் சாமரைகள் பற்பலவு மொய்த்துத்
திவளத் தலைபனிப்புச் செய்ய - விவளவெனக்

கூஉ. கோணுத தண்டமொடு கோணலுறு தண்டமு
நாணுளு நீங்கா நலங்காட்டப் - பேணு

கூங. வலர்மகர தோரணங்க ளாயு மொலியல்
பலவு நெருங்கிப் பரம்பக் குலவுதிற

கூச. லோதுவார் பல்லோ ரொருங்குதே வாரங்க
ளோதுவா ராய்த்தாள மொத்தலொடு - போதவிளி

கூடி. வந்து மணிச்சிவிகை வாயோர் களங்கமிலா
விந்துநிறைந் தென்ன வெழுந்தருளி - முந்து

கூசு. மணிதுறந்தார் செஞ்சடிலம் வைத்தாரஃ தின்றி
நிணியு மழித்தலுற்ற நீரார் - புணியுமனைக்

கூஎ. கீழ்எழு மீகாவணத்தார் மீகடில்கர பாத்திரதகர
ராளொடுவாழ் வாமில் லறத்தமர்ந்தார் - நாளுஞு

கூஅ. சரியை கிரியை தவமியாக ஞானம்
விரியவனுட் டிக்கும் விருப்பார் - தெரிய

கூக. வுலகம் பழியா துழுவிடம் பூண்டா
ருலகம் பழிக்க வுவப்பா - ரிலகு

க00. திரிபுண் டரத்தார் திகழ்கண் மணியார்
விரிதரவுத் தூளனமே மேயார் - பரியு

க0க. மரனடியார் தொண்டி னமைந்தா ரளவாச்
சுரர்புகழ்தே காயிற்பணியே சூழ்வார் - சிரவு

க0உ. மடியாருக் கன்னமுத லாதரித்து நல்கு
நெடியார் தியான நிறைந்தார் - கடியார்

க0ங. பலர்தொதப்பார் தீபம் வபக்குவார் மற்றும்
பலர்புகழுஞ் சாத்திரங்கள் பார்ப்பார் - நிலவுபொரு

க0ச. ளாய்வார் வினவுவா ரங்கைகொட்டி நட்டமிட்டுத்
தோய்வாரா னந்தத் தொடுகடலில் - வாய்வார்

க0ரு. துதியா ரயன்முதலாச் சொல்லும் பிறரை
மதியா ரருளே மதிப்பார் - கதியா

க0கூ. ரிவர்மு னணிவோரு மேத்திக்கை கூப்பிக்
கவரடையா நெஞ்சங் கனைந்து - சிவசிவவென்

க0எ ரூர்ப்பாரோர் சில்லோ ராகரவெண் ரூனந்தம்
மேபார்ப்பாரோர் சில்லோர் புடைநெருங்க - வேர்ச்சிவிகை

க0அ. செம்மையுறு காட்சிச் சிவிகை கொடுத்தடைந்தார்
தம்மை யியக்குவார் தாங்கிவர - வெம்மைக்

க0கூ. கதிர்பன் னிருகோடி காணிவெளிப் பட்ட
முதிர்விற் பெருந்தீப மொய்ப்ப - வதிர்சிலப்பிற்

ககo. பொன்னங்கொம் பன்னூர் புகுந்துநீ ராசனஞ்செய்
தன்னம் பெயர்ந்தாங் சயலொதுங்க - முன்னம்

ககக. விரைமலர்கள் சிந்தி விசைச்சாந்தம் வாரிப்
புரையறப்பெய் வாரும் பொலிய - வுரைசிறந்த

ககஉ. மெய்கண்டான் சந்ததிக்கு மேன்மேல் விளக்கமுறப்
பெய்கண்டா னுய பெருமானே - வையம்

ககங. புகழு வருங்குரவர் பேரேறே ஞானக்
திகழு வவதரித்த தேவே - யிகழ்வில்

ககச. வரமணியே யெங்கள்பெரு வாழ்வே யருட்சுப்
பிரமணிய தேசிகனே பெட்பி - னுரமணிய

ககஞ. முன்னமே செய்தோ முயங்கு தவத்தையினி
யென்ன குறையுடையோ மென்பாருஞ் - சொன்னகதிர்

ககசு. முன்னமிரு ணின்ரு லு முற்று முணர்ந்தோய்நின்
முன்னமிரு ணில்லா து முற்றுமென்பார் - நன்னயமார்

ககள. சித்தாந்த சைவமன்றிச் சேரமற் றுள்ளவெல்லாம்
பித்தாந்த மேலும் பிறப்பென்பா - ரித்தரணி

ககஅ. பெற்றபே றுண்டோ பெருவானி னீபயில
லுற்றநா ளாதி யுரையென்பார் - கற்ற

ககசு. குருமணிநீ யாரையுமாட் கொண்டு புரக்க
வருமணியோ வென்று வகுப்பார் - பெருகொளிசால்

கஉ0. விண்மணியே ஞான விளக்கே யடியேங்கள்
கண்மணியே யென்று கதைதருவா - செண்ணுமுழு

கஉக. மாயப் பெருஞ்சாரு வாகன்மூத லோருமரு
ளேயப் பொலிவா ரினியென்பார் - சேயும்

கஉஉ. பகுதி யளவே பகராக் திரவோர்
தகுதிவெண்ணீ றென்றணியச் சார்ந்தார் - மிகுதி

கஉங. யுனியா மெடுத்திங் குரைப்பதெவ னெல்லா
மினிமாறில் சைவமே யென்பார் - ணனிபுரியும்

கஉச. வேலையொழிந் தான்பிரமன் வெய்ய நரகிலிடும்
வேலையொழிந் தானியமன் மேன்மேலுஞ் - சாலவருள்

கஉஞ. வீசி யணைத்துயிர்க்கு மெய்ச்சுப் பிரமணிய
தேசிகன் செய்புந் திறத்தென்பார் - மாசி

கஉசு. றிருலா வடுதுறையே திக்கணைத்தும் போற்றப்
பொருவாத தென்று புகல்வா - ரருள்சான்மா

கஉள. சில்லா மணியேயமற் றிச்சுப் பிரமணியீ
தல்லா துரைப்பதுள தாங்கொலென்பார் - வல்லபிரா

கஉஅ. னெற்றிக்க ணீத்தமரு னேய மெவனென்பார்
பற்றிக் கரும்புகொடு பையவந்து - முற்றி

கஉசு. யொருவே ளுடற்ருமை யோர்ந்தென்பா ரம்மை
யிருவாள் விழியுமிரு கையாற் - பெருகப்

கஙo. புதையாமை தேர்ந்தென்பார் பொங்குதலை மாலை
யதையே னெழித்ததென்பா ராவா - கதைமாலும்

கஙக. பங்கயனு முன்போற் பரனும் பரனுமென்
சங்கையடை யாமையாற் றானென்பார் - பொங்கு

கஙஉ. மதியொழித்த தென்னென்பார் மாசிலா ருக்கே
கதியருளற் கென்று கனைவார் - பொதியு

கஙங. மிதழி மணங் தோளிலுறு தென்னென்பார் செவ்வா
யதகமழ்த லாலென் றறைவார் - முதுமாஞன்

கஙச. றோட்டி விட்டதென்னென்பா ரோட்டிவிடா னேனுயிர்கள்
வீட்டி லுறலெவ் விதமென்பா - ரீட்டமுறு

கஙரு. மாசடையா னென்னும் வழக்கிலையென் பாரென்று
மாசடையா னென்னல் வழக்கென்பார் - பேசுமொரு

கஙசு. தோகையிடப் பாலனெனச் சொல்லாமென் பாரைசூழ்
தோகையிடப் பாலனெனச் சொல்லுமென்பார் - வாகை

கஙள. பரசுகைக்கொள் ளாத படியெவனென் பார்நம்
பரசுகைக்கொள் ளும்பரனே யென்பார் - விரசு

கஙஅ. மருள்விடங்கண் டங்கழித்த வாறென்னே வென்பா
ரருளமுதங் காணென் றறைவார் - தெருளு

கஙக. மடிநிலந் தோய்சுவதென் னுமென்பார் தோயா
விடினியமன் றண்டநம் மெய்யின் - முடியப்

கசக. படுமே யஃதுணர்ந்து பாரீரோ வென்பா
ரிடுமாறு சென்னிவைம்மி னென்பார் - வடுவரிய

கசஉ. னென்பதெவ னென்பார்மெய் யேகம ருள்ளிருந்
தன்பி னமுதுசெய்த தாலென்பா - ரின்பமிகு

கசங. மிந்தவிதம் யாரு மியம்பித் துதித்துவரப்
பந்த மகற்றும் பவனிவந்தா - னந்தப்

கசரு. பொழுதொருநன் னெஞ்சமே போதுவா ரோடு
தொழுதுவரு மாறு துணிந்தே - யெழுதுமெழில்

கசச. வீதியிடைப் போந்தேன் விசயன் குனிசிலையான்
மோதி யிடிவதுள முன்னுனு - யோதிப்

கசஞ. பனிமலர்கள் சாத்தியிரு பங்கயக்கை கூப்பி
முனிவுதவிர்ந் தேத்து முடியுங் - கனியு

கசசு. நெருப்பைக் கரந்திருந்து நீறுகர வாது
விருப்பைச்செய் கின்ற விதத்தா - லொருப்படு

கசள. காரணத்தைக் காட்டாது காரியத்தைக் காட்டுமெனத்
தாரணியோ சோதத் தகுநுதலும் - வார்புனற்பூ

கசஅ. வொன்றை மலர்த்துபுமற் றொன்றைக் குவித்தல்செயா
தென்று மலர்த்து மிருவிழியு - நன்றுமையாள்

கசகூ. கூந்தன் மணத்தினெடு கொள்ளா தடியரன்பாஞ்
சாந்த மணங்கொ டணிமூக்கும் - போந்தோ

கடுO. ரியற்பகையார் பான்மணியை யீதியெமக் கென்ற
தயர்த்தநிரு வாயு மமையப் பெயர்த்துமிழும்

கடுக. வேடரெச்சி னுடைங்க மெல்லுங் றைந்தீர்த்தும்
வாடலற்றுத் தேன்று மணிகையுங் - கூடுபர

கடுஉ. மூன்று மனிய முகிழ்க்குங் றையர்த்துத்
தேன்னுஞ் சிரிப்புந் துணிபையை - வான்ற

கடுகூ. வொருத்தி பதித்த விகிர்க்குறிகாட் டாது
திருத்தியக தீபமுமான் றிரிப் - பொருத்தும்

கடுச. பரவொலி யேயது பற்று வடி யேய்ம்
பரவொலியேற் குஞ்செவியும் பண்டே - விரவுறுமை

கடுடு. வண்ணை வடிவொழித்த வாட்டக் தனிர்த்தருளார்
வண்ணைவடி வேடமரு மாமுகமும் - பண்ணையும்

கடுகூ. பூணின்ப லொத்தெனைப் போற்றற்கிடங்கொடா
தேணினை மைந்த வெழிற்கமுத் தநாணின்றி

கடுள. யோமாலி யென்ன வெழுப்பனியா தெக்கள்வாய்ப்
பாமாலி சூடும் பணைத்தோளுங் - காமருமால்

கடுஅ. கண்காணி ணுணக் கலங்கொள்விர வுண்மைகிலை
யெண்காணக் கொண்ட வெழிற்கமு - மண்சா

கடுகூ. ணெருகுறியு மில்லென் றிருகுறி யுற்று
வருகிறங்காட் டாதவகன் மார்பு - மொருவர்

கசO. மழவையரிர் தூட்டவெமும் வன்பகி தோற்ற
வழகின் வயிறு மமையப் - பழகதளுங்

கசக. திக்கும் பிணங்கத் திகழுங்கற் றோயாடை
நக்கு விளங்கு நலத்தையும் - பக்குமலம்

கசஉ. விண்டொழியக் கூற்றுவன்போல் வெவ்வா ளரக்கன்போற்
றண்டுதல்செய் தீதாவாத் தளிரடியுங் - கண்டுநனி

கசகூ. யாசைப்பட் டேனெஞ்சே யர்தோவக் காரணத்தா
லாசைப்பட் டேனெனா ஞயினேன் - றோசுறமு

கசச. னன்னங்கா ணுணக்கண் டாரா மயக்கம்பூண்
டன்னங்கா ணுதவளே யாயினேன் - முன்னமொரு

கஈநி. தேகாலங்கா ணீணைக் குறுகியிரு கைதொழுது
ஏகாலஙகா ணுமை குறுகினன - சால

கஈஈ. வளையாழி மாற்கீக வள்ளலைக் கண்டு
வளையாழி தோற்றுமணி வக்தென் - விளையுமொரு

கஈள. காய்வெறுக்கப் பட்ட தகையாணைக் கண்டடைக்து
காய்வெறுக்கப் பட்ட தகையா னை - குயுக்

கஈஅ. தனியாணைக் கண்டு தளியாயி னேனென்
றுனிநி நெஞ்சே சொலக்கேண் - முனியாமன்

கஈக. முன்னு மவணை முயங்குமவகை நீபுரிவாய்
மன்னுமணைப் பேரன்றதணை வாய்க்குமோ - பன்னுபல

கஎ0. தேவதாக மங்கள் விரித்த விதிபோனக்து
மேடதாகு நீயிலையவ தில்லையெனின் - மீதாருரும்

கஎக. மேயாக மிருநான்கு முன்னை வயப்படுத்தற்
காக முயலுவன வல்லேவா - பேராகமுறு

கஎஉ. தன்னைக்குஞ் செய்புங் தவத்திற்குங் கற்றுணரு
நன்னைக்குங் கொள்ளுமொரு நட்பிற்குஞ் - வன்மைக்கு

கஎஈ. மீகைக்கு மேமார்த னியல்புணர்ந்து முத்திபுணை
மோகைக்கு நீயே யுறுதுணைகா - ணுகையறு

கஎச. மில்லறத்தா னைத்துறவி லேறத்துவிப்பாய் மெய்த்துறவா
கல்லறத்தா னைக்கீழ் நணுகுவிப்பாய் - சொல்லு

கஎநி. மறத்தைமற மாக வமைப்பாய் கோடிய
மறத்தையற மாக்குகற்குஞ் வல்லாய் - சிறப்பி

கஎஈ. னெறிக்குகமேல முத்தி யுணைப்பொறிவா யோட
விடுக்குதமேல பந்தனிணை மேலு - நடுக்குதலற்

கஎள. றுன்னு னுயர்ந்தவனை யுன்னு னிழிந்தவனை
யென்னு னனவிடுதற் கேயுமோ - பன்னுளுரு

கஎஅ. மெம்மேமணி யேயனு மெடுத்தற்தி வானநிகர்
செம்மேபணி யானிவச் செய்குவா - யம்மாநற்

கஎக. றில்லேவா முந்தணர்மா தேவ ரினுங்கலவ
வொல்லே யுயர்ந்ததுவு முண்மைநிறறி - வல்லபெருங்

கஅ0. கேகளாளர் நீலகண்டர் கோதை யொருத்திபுகல்
சூளா விளமை துறந்ததுவும் - வாளா

கஅக. ரியற்பகையார் தம்மணையை யீயேனென் னுது
மயற்பகையை நீத்துயர்ந்த வாறு - மயர்ப்பி

கஅஉ. லீலையான் குடிமாற செய்தி யிருளின்
முலோவாரி யன்னமிட்ட மொய்ம்புங் - கிலேயோ

கஅங. டமர்மெய்ப் பொருளா ரடாதந்தோ தத்தா
நமரென் றிடைவிலக்கு நண்புஞ் - சமர்செய்வினறன்

கஅச. மிண்ட ரடியாரை மேவாது போகியவன்
நிருண்டர்புறம் பென்னச் சொலுந்துணிபு - மண்டர்பிரா

கஅடு. னேரேயோர் தட்டிலமர் நீதியார் பல்பொருளோ
டாராய வேறி யமர்ந்தவும் - பாரா

கஅசு. வெறிபத்தர் சீறி யிபமாதி மாய்த்து
மறிவற் றுயர்ந்தபெரு மாண்புங் - குறிபெற்ற

கஅள. வேணுதி நாத நிரும்பகைவ னெற்றியினீ
ரூணுமை கண்டுருகி யஞ்சியதும் - வாணர்

கஅஅ. கலிமலிந்த கண்ணப்பர் கண்ணிடந் தப்பு
நிலிமலிந்து பெற்ற நிலியு - முலிவில்

கஅசு. கலியர்மீன மங்கலப்பொன் கைக்கொடுநெற் கொள்ளார்
மலிவி றுணிபுற்ற மாண்பு - நிலைவளங்கூர்

ககஂ. கஞ்சாறர் மாவிரதர் கையின் மகள்கூந்த
லெஞ்சா தரிந்தெடுத் தீந்ததுவும் - வஞ்சவரி

ககக. வாள்கொண்டு தாயனுர் வண்கழுத்து வேறுக்குங்
கோள்கொண்டு நின்ற குணச்செயலுங் - தாள்கொண்ட

ககஉ. வானுயர் கொன்றை யணிந்துருகி யஞ்செழுத்துந்
தானுய வோசைசெவி சார்த்தியது - மானுத

ககஙு. சீர்த்திபெறு மூன்றே சிறப்பத் தழீஇக்கொண்டு
மூர்த்தியுல காண்ட முறைமையு - மார்த்தி

ககச. முருகர்திரு மாலையான் முன்னே னருளுக்
கருகரா யுற்ற வறனும் - பெருகிப்

ககடு. பரவுருத்தி ரப்போர்ப் பசுபதியார் நீரில்
விரவுதவஞ் செய்த விதமு - முரவிற்

ககசு. றிருநாளைப் போவார் திருத்தில்லை மன்றுள்
வருநாட்போய்ச் சேவித்த வாறு - மருவு

ககள. திருக்குறிப்புத் தொண்டர் சிராவணத்திற் சென்னி
விருப்பறமோ தும்ற விதமுங் - கருப்பறிக்குர்

ககஅ. தண்டீசர் தந்தையிரு தாடுணிய வீசமழுக்
கொண்டீசர் சார்பிற் குறுகியது - மண்டர்புகழ்

ககூக. நாவரசு நீற்றறையு ணண்ணியிருந் தாலமுண்டு
மேவுகட னீர்த்திய வித்தகமும் - பாவு

உ00. குலச்சிறையார் யாரையுங்கை கூப்பிப் பணியு
நலச்சிறைசார் புற்றசிவ நண்பும் - வலத்த

உ0க. மிழலைக் குறும்பர் ளியப்புறமெண் சித்தி
யழகிற் பயின்ற வடைஎங் - குழகமைந்த

உ0உ. மாதுருவ நீத்து வருகாலைக் காலம்மை
பேதுருவங் கொண்ட பெருங்கோளுந் - தீதறி

உ0ங. ரப்பூதி யன்ப ராசரடிக் கன்புசெய்து
செப்பூதி யங்கவர்ந்த சீர்மையுந் - தப்பாத

உ0ச. நீலநக்கர் தம்மனையை நீத்திட் டரனருள்பெற்
றேலவழைத் தின்புற் றிருந்ததுவுஞ் - சாலுமி

உ0ரு. நந்தி யடிக ணைகுளத்து நீர்மொண்டு
முந்தி விளக்கெரித்த மொய்வலியுஞ் - சந்த

உ0கூ. வருண்ஞான சம்பந்த ரங்கமா தாகத்
தெருண்ஞான வாய்மலர்ந்த சீரும் - பொருளில்கலிக்

உ0எ. காமர் வயிற்றிற் கருவி கொடுகுத்தி
யேமவருள் பெற்ற விருந்திறனும் - பாமருவு

உ0அ. மூல ருடம்பொழிய மூவா யிவருடங்
கோலவர சின்கீழ்க் குலாவியதுஞ் - சாலவுயர்

உ0கூ. தண்டி யடிக டவாக்குளத்தி னீர்முழுகி
யண்டி விழிபெற் றமர்திறனுந் - தொண்டினியன்

உக0. மூர்க்கனர் சூது முபன்றுடி மெய்யடியார்
யார்க்கு முவகை யருண்ணாண்பும் - பார்க்குளுபர்

உகக. சோமாசி மாறர்வன் றொண்டர்க்கே யாளாகித்
தாமாறி லின்பந் ததைந்ததுவும் - பேமாமிருள்

உகஉ. றில்லாத சாக்கியனு ரெண்ணியெண்ணி நாடோறுங்
கல்லா லெறிந்து களித்ததுவும் - வல்ல

உகங. சிறப்புலிபா ரன்புடையார்ச் சேர்ந்துபணிக்தித்தி
மறப்பிலமு தூட்டும் வகையு - மறப்பான்மை

உகச. விள்ளாச் சிறுத்தொண்டர் வேண்டு மகவரிந்து
தள்ளாக் கறிசமைத்த தன்மையு - மெள்ளா

உகரு. வருளிற் கழறிற் றறிவார்மா வூர்ந்து
தெருளிற் கயிலைசென்ற சீரு - மருளில்

உகசு. கணநாத ரன்பிற் கரிசில்பணி யாற்றிக்
கணநாத ராய்ப்பொலிந்த கற்பும் - புணர்பெருமைக்

உகஎ. கூற்றுவனுர் மோலியெனக் கொய்மலர்த்தாள்கூற்றினுக்கோர்
கூற்றுவனுர் சூட்டக் குலவியதுந் - தேற்றுபுகழ்ச்

உகஅ. சோழர் சடிலமுடி தோன்றக்கண் டாரழலி
னுழங் குளிர வழுந்தியதும் - வாழுநர

உகக. சிங்க முணையாயர் சேவகிகழ்ந் தாற்கிட்டித்
தங்க ளளித்த தவாப்புகழுந் - துங்கவதி

உஉ0. பத்தர் வறுமை பரந்தகா லத்துமொரு
மித்தங் கொருமீன் விடுத்ததுவு - மொத்தகலிக்

உஉக. கம்ப ரடிமை கலந்தடிய ரோடுவர
நம்புமணி கைதடிந்த நன்மையும் - வம்பில்

உஉஉ. கலியர் விளக்கெரிக்குங் காட்சிகுறையா
தொலிமிடற்று வாள்பூட் டிவரும் - வலியதிறற்

உஉங. சத்தியா சீர்கழல் சார்ந்தார் தமையிகழும்
புத்தியார் நாவரிதல் போற்றியது - மெத்தசையுங்

உஉச. கண்டீடத்து மையடிகள் காடவர்கோன் வெண்பாவைக்
கொண்டீடத்து மேன்மை குலவியதும் - பண்டுகணம்

உஉஙி. புல்லர் விளக்கிட்டுப் போற்றுதற்கு முட்டுவர
நல்ல முடிகொளுத்து நன்மையுஞ் - சொல்லவரு

உஉசு. காரியா செங்குங் கவிபாடி யண்ணலருள்
வாரியா ரப்பெற்ற வன்மையு - மூரி

உஉஎ. நெடுமாறர் நீறணிந்து நெல்வேலி வென்று
தடுமா றிலா திருந்த சார்பும் - விடுமாறில்

உஉஅ. வாயிலார் தூய மனக்கோயிற் பூசித்துத்
தாயிலார் பாதநிழல் சார்ந்ததுவு - மேயும்

உஉக. முணையடுவார் மாற்ருர் முணையடுசெம் பொன்னுல்
வினையடுவா ராய விதமும் - வணங்கழற்

உங0. சிங்கர் மணிவி திருமலர்கை தொட்டதென்று
பங்க மறத்தடிந்த பான்மையுந் - துங்க

உஙக. விடங்கழியார் சோரசென வெய்தினுர் தம்மைத்
திடங்கழியா தோர்ந்துவிட்ட சீரு - மடங்காச்

உஙஉ. செருத்துணையா சோர்மன்னர் தேவியார் மூக்கின்
பொருத்துணையா தீர்ந்த புகழுந் - திருத்து

உஙங. புகழ்த்துணையா ரென்பார் புனித னருள
நிகழ்த்துமொவ்வோர் காசுபெற்ற நீரு - மிகழ்ச்சிதவிர்

உஙச. கோட்புலியார் பாலுண் குழவுங்கூ டாதென்னு
வாட்புலியார்க் கீந்த வளத்திறனும் - வேட்குமொரு

உஙஞ. பூசலார் மிக்க பொருடேடி யாலயஞ்செய்
தீசலா ராதிருந்த வின்றிறனு - மாசகலு

உஙண. நீற்றின் பெருமை நிணமங்கை யர்க்கரசி
போற்றி யமைந்த புகழ்ப்பே றுஞ் - சாற்றரிய

உஙள. நேசனு ரன்பர்பா னேசனர் கோவணர்தர்
நீசனர் பேரருண்மிக் கெய்தியதும் - பாசமகல்

உஙஅ. செங்கட்சோ ழப்பெருமான் செம்பொற் றளிபலசெய்
தங்கட்டூ ராவன் பமைந்ததுவுந் - துங்கத்

உஙக. திருநீல கண்டர் செழும்பலகை யேற
வொருநீல கண்ட ருவப்புமெ - பொருளில்

உசஐ. சடையரிசை ஞானியார் காவாப் பெரும்பே
றுடைய வமைந்த வருளும் - விடையுடையா

உசக. ராணிமேற் ருங்கி யருணுவ ஓரிவெள்ளைக்
கோணி மதமாமேற் கொண்டதுவும் - வீணி

உசஉ. யுருநெஞ்சே மற்றணித்து முன்னிலே யன்றே
மருநின்சீர் யாவர் வகுப்பார் - வெருதவருட்

உசஙு. டாயே யணையாய் தவறுமீமா நங்கரும
நீயேதூ தாக நிகழுங்கான் - மாயமன்றே

உசச. முன்ன முயன்று முடிகா ணரிதாய
வன்ன முகமுன் னணையுமீமா - முன்னமொரு

உசஞ. பச்சை மயிலையொரு பாலடக்கி பாங்கரின்சீர்
பச்சைமயில் சென்றுற் பயன்பெறுமீமா - வச்சை

உசண. மதணைச் சுமத்தலினுல் வாகையிலாக் கிள்ளை
யிதணைச் செயற்குவலி யாதே - சுதமகல

உசள. வன்றுசடைக் காட்டி லடங்கிக் கிடக்குமுகி
லின்று புரிவ தெதுகண்டாய் - துன்றுபொருட்

உசஅ. பாவை யடியர் பகரவேற் குஞ்சினிகள்
பூவை குழறுமொழி போறறுமோ - பாவையெனுங்

உசக. தேதாழி யுரிமை துணிந்தனுப்பி னுற்றிருமுன்
வாழி யடைய வலியளோ - பாழிமதன்

உநிo. சின்னமா யெங்குந் திரிந்துகூ வுங்குபிலம்
முன்னவன்பாற் சேறன் முடியாதே - மன்னு

உநிக. மரவா பரணனென்பா ரம்மொழிகேட் டங்கு
விரவாதே தென்றல் விடுத்தா - லுரவாரு

உநிஉ. முன்னீப்போல் வேறுதுணை யுண்டோ குரவர்பிரான்
றன்னீப்போல் வேறொருவர் தாமுளரோ - வன்னே

உநிங. யணைய குரவர்பிரா னுன்ற மரபு
நிணைய வருத்துமைப்ப னீகேள் - புணையவரு

உநிச. காமர் கயிலையிற்சீ கண்ட வருத்திரன்பா
லேமவருள் பெற்றநந்தி யெம்பெருமான் - றேமில்

உநிரு. வழியே வருசனற்கு மாற முனிவர்
பழியேது மில்லாத பண்பிற - கொழியருள்சால்

உநிசு. சத்திய ஞான தரிசனிகள் யாவோருந்
துத்தியஞ் செய்பரஞ் சோதியார் - நித்தியமார்

உநிவ. மெய்கண்ட தேவர் விளங்குமரு ணந்தியார்
பொய்கண்ட யாரும் புணருஞ்சீர் - மொய்கடந்

உநிஅ. தைவாழ் மறைஞான சம்பந்தர் தாளின்மதி
கைவா ழுமாபதியார் காட்சிமிகு - செய்ய

உநிகூ. வருணமச்சி வாய ரமைசித்த ராய
கருளில் சிவப்பிர காசர் - தெருள்செய்

உகo. குருநமச்சி வாயர் குலவுமறை ஞானர்
திருவம் பலவாண தேவர் - மருவு

உகக. மூருத்திர கோடியா ரொப்பில்வே லப்பர்
திருத்தி யினிதருளச் செய்து - பொருதது

உகஉ. மிருகுமர சாமிகண்மா சில்லா மணியா
ருருமை யிராமலிங்க ரன்பார் - பெருமையிரு

உகங. வேலப்ப ரென்று மிளிர்திருச்சிற் றம்பலவர்
பாலக்க ணில்லம் பலவாணர் - சால

உகச. வருள்சுப் பிரமணிய ரம்பல வாணர்
தெருள்சுப் பிரமணிய தேவர் - பொருள்சான்

உகரு. மரபு நிலையிதுவால் வார்த்தைநீ பேசப்
பரவு சமயம் பகர்வேன் - விரவுநெஞ்சே

உ கூசு. பூதநான் கின்பம் புரிகுழலார் போகமெனுங்
கோதவுல காயதரைக் கூடாதே - யேதமிகு

உசுஎ. கந்தமைந்துங் கெட்டாற் கனமுத்தி யென்றுழலும்
பந்தப் பவுத்தர்முகம் பாராதே - முந்தத்

உசுஅ. தலைபறித்துப் பாயுடித்துத் தாந்தவமே பேசிக்
கொலைசெ யமணைக்கூ டாதே - யலைபுரியுங்

உசுக. கள்ளைக் குடித்துக் களித்துழலும் வாமமதக்
கொள்ளைச் செருக்கருகை கொள்ளாதே - தள்ளாக்

உஎ0. கருமமன்றி வேறு கருத்தனிலை யென்று
தெருமருவார் கூட்டஞ்சே ராதே - பொருவினெஞ்சே

உஎக. நின்னையணு வென்று நியாயம் புகன்றுழல்வான்
றன்னை யொருஞான் றுஞ் சாராதே - சொன்ன

உஎஉ. பகவனுக் குண்டு பரிணமெ மென்றுக்
தகவிலக்தி ராவினர்ச்சா ராதே - யிகவரிய

உஎங. முத்திநிலை யான்மா முதல்வனெனு டொக்குமெனும்
புத்தி படைத்தவர்பாற் போகாதே - மெத்துமொளிப்

உஎச. பாலவிழி யாற்குப் பரிணமஞ் சொற்றுழலு
மாலமைந்தர் கூட்ட மருவாதே - ஞாலமிசைத்

உஎடு. தாம்பிரம மாகாமை தஞ்செயலி னுணுரைசார்
நாம்பிரம மென்பாரை நாடாதே - யோம்பு

உஎசு. திருவா வடுதுறையைச் சேர்ந்து வளங்க
ளொருவாத் திருவீதி யுற்றுப் - பொருவாத

உஎஎ. தென்முகப்பின் வாயில்வழிச் சென்றுகொலு மண்டபத்தின்
பொன்முகப்பி னுள்ளே புகலுற்று - நன்முகத்திற்

உஎஅ. சாத்திரங்க ளோதித் தனியமர்வார் சிந்திப்பா
சேத்திரங்கும் வண்ண மெடுத்திசைப்பார் - பாத்துச்

உஎகூ. சடைகாய வைத்துத் தனியமர்வா ரன்னோர்
புடையாரை யும்வணங்கிப் போற்றி - விடையா

உஅ0. நலமா ரதிகாச நாடுதிருச் சிற்றம்
பலமா முனியைப் பணிந்து - பலமியாவுஞ்

உஅக. சேர்தரவுள் ளாற்போய்த் திருமாளி கைத்தேவர்
வார்கழல் போற்றி வணங்கியே - யோருங்

உஅஉ. குரவர்பிரான் மூல குருநமச்சி வாயன்
பரவுகழல் போற்றிப் பணிந்து - விரவு

உஅங. மிரண்டா மொடுக்க மெனப்புகல்பொற் கோயி
லரண்டா னெனவமரு வாணைத் - திரண்ட

உஅச. கலைஞான வாழ்வைக் கருதுவார் பேற்றைத்
தொலையாப் புலவர்குழாஞ் சூழ - வுலையா

உஅநி. வினுவிடை பேசி வியப்புற் றமரு
மனுதியுரு வாய வமுதை - யினுதகுண

உஅசு. மெல்லாரு நீங்க வினிதுபோ தித்தமரு
நல்லாதரவு நயப்பாணச் - சொல்லு

உஅள. மொருநமச்சி வாயனென வோதப் பொலிந்து
வருநமச்சி வாயனடி வாழ்த்திப் - பொருவாக்

உஅஅ. குருசாமி கோயில்வலங் கொண்டுபடி யேறிக்
குருசாமி பூசைமுனங் கூடி - யுருகாமெய்

உஅக. யன்பின் வணங்கி யடியா ரமுதுகொள
வன்பி னமர்கோயில் வந்தித்தே - யின்ப

உகூ0. விதமார் முதலிலாடுக்க மென்றிசைபொற் கோயிற்
புதவோர்பான் மெல்லப் புகுந்து - கதமோவி

உகூக. யாங்குநிற்பார் தம்மை யடுத்துச் சமயம்வினுப்ப
பாங்குபெற வுள்ளாற் பயப்புகுந்து - தேங்குதிரு

உகூஉ. முன்னஞ்சே வித்து முனிவர்முத லோர்போற்ற
நன்னர்நீ நள்ளியள்ளி நல்கியம - ரன்ன

உகூங. பொழுதுரையா தேதபல் புலவர்கவி பாடும்
பொழுது முரையாதே போற்றி - யெழுதுமடல்

உகூச. வாசித்து நிற்பாரை மானிக்கு மப்பொழுது
நேசிக்குந் தன்மை நிறைந்தாராய்ப் - பூசிக்குந்

உகூடு. தொண்ட ருவக்கச் சுருதிப் பொருள்புகறல்
கொண்ட சமயத்துங் கூறுதே - மண்டவரு

உகூரு. மன்னர் முதலோர் வணங்க வவர்க்குவப்பு
நன்னரியற் றும்பொழுது நாடாதே - சொன்ன

உகூள. மறையோர் பலரிரக்கும் வார்த்தைசெவி யேற்றுக்
குறைதவிர்க்கும் போதினுங்கூ றுதே - மறைசொல்

உகூஅ. சிதம்பரமுன் னுய திருக்கோயிற் கெல்லாம்
பதம்பரவு நித்தியமுற் பண்பி - னிதம்பரவ

உகூக நன்றுவிசா ரித்து நயவாக் குறைதவிர்த்துத்
துன்று பொழுதுமிதைச் சொல்லாதே - சென்று

ஈ00. பணிசிறு காக்கற்கும் பாடம் வினுவுத்
துணியுங்கா லத்துஞ்சொல் லாதே - வணிதருமா

கூ0க. னைந்தக் களிப்பா னகச்சிலர்வந் தீதத்தெடுக்கு
மந்தப் பொழுது மறையாதே - சந்த

கூ0உ. வுவளகத்து மேவு மொருசமய மோரக்கித்
திவளநெஞ்சே நீகூடச் சென்று - தவளப்

கூ0ங. பொடியணியு மேனியெங்கள் பூரணன்பொற் றுளிற்
படிமிசை வீழ்ந்து பணிந்து - நெடியகுணைக்

கூ0ச. குன்றேறமெய்ஞ் ஞானக் கொழுந்தே யருட்கடலே
நன்றே யுயிர்க்கருளு நாயகனே - யன்றே

கூ0ரு. யடித்தமல பந்த மகற்றவுருக் கொண்டு
மடித்த பெருங்கருணை வாழ்வே - படித்தமைந்த

கூ0கூ. மைம்மாறு சிந்தை வயங்கு மடியார்பாற்
கைம்மாறு வேண்டாத கற்பகமே - பொய்ம்மாறெம்

கூ0எ. மேபேறயா னைந்தப் பெருக்கேகுரு னக்கருப்பஞ்
சாறேறமெய் யன்பர் தவப்பயனே - நாறுமருட்

கூ0அ சிந்தா மணியே செழுங்காம தேனுவே
சந்தாபந் தீர்க்குந் தனிச்சுடரே - நந்தா

கூ0கூ. வரமணியே கோழுத்தி வாழ்வே யருட்சுப்
பிரமணிய தேசிகப்பெம் மானே - பரவு

கூகஉ. குருநமச்சி வாயவென்று கொண்டாடி யேத்திப்
பெருகரு ணூண் டாகுனி பேசி - யொருவரிய

கூகக. பாலே யுணர்த்திப் பசியறுஞ் செங்கழுநீர்
மாலே கொடுவிளைந்து வா.

ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் நெஞ்சுவிடுதூது முற்றிற்று.

தனிப்பாடல்கள்.

நேரிசை வெண்பா.

கண்ணுன் மதனைக் கடிந்ததற்கேற் பப்புரப்பாற்
பெண்ணு ளுருச்சுப் பிரமணிய - வண்ணல்
திருவா வடுதுறையாய் சிற்றடியே னிகின்ப
மருவா வடுமாற வை. (க)

விருத்தம்.

மாமேவு புகழ்த்திருவா வடுதுறைச்சுப் பிரமணிய வள்ள லாய
தூமேவு குரவன்பேர் சொற்றவுட னென்பிறப்புத் தொலைந்த தம்மா
பாமேவு பிதகண்டும் பிறப்பொழிப்பா னிவனென்று பலருஞ் சொல்வார்
தேமேவு நலந்தெரியென் வாயினேயே புகழாத செய்கை யென்னே. (உ)

உரவுபொலி மறைமுடியாஞ் சிவக்கொழுந்தைப் பராநந்தத் துவாவை நாளுங்
கரவுதவி ரன்பருளத் தகலாம லமுதூற்றுங் கருணை வாழ்வைப்
புரவுமலி மெய்ஞ்ஞான வாரிதியைத் துறவரசைப் பொருவி லாத
பாவுபுகழ்த் துறைசையிற்சுப் பிரமணிய குருமணியைப் பாவி வாழ்வாம்.(ங)

செல்லார்க்கும் பெருமுழக்க மண்முழக்க மெனமேற்போய்த் திகழ்மா டத்தாற்
சொல்லார்க்குங் கழனிகளாற் றிருலோபாத வளங்காட்டுந் துறைசை மேவிக்
கல்லார்க்கு மல்லார்க்கும் வல்லார்க்கும் வல்லரர்க்குங் கணக்கி லாமற்
றெல்லார்க்கு மெய்ப்பில்வைப்பாஞ் சுப்பிரம ணியகுரவ னிருதாள் போற்றி.()

தேடுகயி லாயபரம் பரைத்துறைசை மேயசுமச் சிவாயன் றன்னைக்
கூடுதன்முன் னுள்ளபதி ஞல்வருமுற் றேன்றலெனக் கொண்டா ரவ்வா
றாடுதவிர் தாக்கொண்டும் பிற்றேன்ற லெனவுங்கொண் டவக்குங் கோமான்
நீடுபெரும் புகழமைசுப் பிரமணிய குருமணியை நினைந்து வாழ்வாம். (ரு)

ஒப்புயர்வில் லவன்சிவன்மூன் றும்முடைமை யாலிரண்டு மொன்று மேற்றூர்
தப்பறத்தாழ்ந் தவரெனறோர்ந் தனந்திருவா வடுதுறைநற் றலத்துள் வார்தம்
வைப்பனைய சுப்பிரம ணியகுரவன் றன்பெயரை வகித்து ளாரை
யெப்படியும் விலக்கலின்மற் றிவன்மூன் றும்மிலனென்றே யியம்பு வோமே.()

திருமணியை நிறத்தமைத்த நீன்மணிமெய்ம் மால்பிரமன் றேடிக் காணு
வருமணியென் னேயும்பொருளா வாண்டசித்தா மணியன்ப ரகத்தே மேய
வொருமணியம் பலவாண சிதாமணிகண் மணியடிமை யுவந்தார் கண்ணுட்
கருமணிவண் டுறைசையிற்சுப் பிரமணிய குருமணியைக் கருத்துள் வைப்பாம்.

வஞ்சித்துறை.

ஒப்பருந் துறைசைச், சுப்பிர மணிய
அற்புத குரவன், நற்பதந் தினையே. (அ)

குளத் தூர்க் கோவை.

கைக்கிளை.

காட்சி.

பொன்பூத்த கஞ்சமு மேந்தெழி னீலமும் பூந்தளவுந்
தென்பூத்த கோங்கமும் பாங்கமர் காந்தளுஞ் சேரக்கொண்டு
மன்பூத்த செந்தமி ழாய்வேத நாயக மால்குளக்கைக்
கொன்பூத்த மால்வரை வாய்விரை வாயொர் கொடிநின்றதே. (க)

ஐயம்.

விண்ணுல கோவிதி ரண்ணுல கோதிரு மேவுறுமால்
கண்ணுல கோவர வொண்ணுல கோதண் கடலுடித்த
மண்ணுல கோபொறைப் பூண்வேத நாயக வள்ளல்வெற்பி
லண்ணுல கோதிவர் பொன்னடி தோய்தவ மாற்றியதே. (உ)

தூணிவு.

பூவென்ற மேனியிம் மங்கையென் னுமகள் பூமகளோ
காவென்ற செங்கைத் தலவேத நாயகக் காளைதன்பாற்
ருவென் றடையலர் போல்வா டுவகுழற் ருதுகம்மை
வாவென் றழைப்பன போன்றிமை யாநிற்கும் வாட்கண்களே. (ங)

குறிப்பறிதல்.

கயலார்தம் பேட்டுக் கிறவுட்டி யன்னங் களிக்குஞ் செந்நெல்
வயலார் குளந்தை வருவேத நாயக வள்ளல்வெற்பி
லியலா ரிவர்கண் மருளாரு ணோக்க மிரண்டுநல்கு
மயலார் விடமு மமிழ்துநல் காழியி னுய்மனமே. (ச)

இயற்கைப்புணர்ச்சி.

இரந்தபினிற்றற்கெண்ணல்.

விழியே யெவர்க்கு மனவேத நாயக வேள்குளந்தைப்
பொழியேர் வரையிடத் தஞ்சேனெஞ் சேயுட் பொருதுயரங்
கழியே யிரப்புமோ சேருடைத் தம்ம கரப்பினவர்
பழியே யெனறெரிந் தாயிரப் பாமிவர் பாங்கருற்றே. (ஞ)

இரங்துபின்னிலேநிற்றல்.

கணிசெய்திண் டேரணிடு மால்வேத நாயகக் காமன்வெற்பிற்
பணிசெய் திறத்தமைந் தேன்கொடுங் காமப் பகிதணிய
மணிசெய் குழற்றிரு வன்னீர்துங் கொவ்வைச்செவ் வாயமிழ்த
மணிசெய்தும் மல்சூற் றடமூழ்கி யுண்ண வளித்திடுமே. (கூ)

மூன்னிலையாக்கல்.

தேகாற்றிய கல்விக் கடல்வேத நாயக துங்கன்வெற்பிற்
சீபோற்றிய வாயத் தொடுசூழ் மூழ்கியும் பூக்கள்கொய்துஞ்
சாற்றிய வுச லுகைத்துகன் றூட றணைந்தடி யே
னூற்றிய மாதவ மோதனி நின்ற தறைகுதிரே. (எ)

வண்டோச்சிமருங்கணைதல்.

காரணி கற்பகங் கற்றோர்சிந் தாமணி கல்விக்கடா
ஞரணி சிந்தைப் புகழ்வேத நாயக நண்பன்வெற்பில்
வாரணி வண்டினங் காணடு நீங்கவிம் மாதாம்பாற்
சூரணி யாண்டு மதுவுண் டிருத்த றகாதுமக்கே. (அ)

மெய்தொட்டுப்பயிறல்.

பொன்போற் பொலியுங் குணவேத நாயக பூபன்வெற்பி
லென்போற் பெறலரும் பேறுபெற் றூர்க ளெவரிவர்கா
மன்போன் மறையிடைப் பட்டாடை நீவி மகிழ்ந்துகண்ணன்
பின்போ லீவர்பதங் கையால் வருடவும் பெற்றனனே. (கூ)

பொய்பாராட்டல்.

கல்லாது கல்லவர்க் கீயாது வீணிற் கழித்திடுநா
ளில்லாது வாழும் புகழ்வேத நாயக வேந்தல்வெற்பி
லொல்லாது சேடன் படமுங்க ளல்கு லுடனெதிர்த்து
வெல்லாத தாலல வோமண் சுமந்து மெலிகின்றதே. (கo)

இடம்பெற்றுத்தழால்.

மின்னிசை பேரார்த்திய மெய்வேத நாயக வேள்வரைவாய்ப்
பொன்னிசை பாறையு மாதவிப் பந்தருஞ் பூவுதிர்ந்து
மன்னிசை பாயலு முண்டணங் கேயுள் வருத்தமற
வின்னிசை யோர்மண நாமினி தாற்றற் கிடமிதுவே. (கக)

வழிபாடுமறுத்தல்.

எண்ணம் பொலிய விரப்பாரில் யாரு மிரக்கநல்குந்
திண்ணம் பொலியும் புகழ்வேத நாயகச் சேய்வரைப்பாற்
றண்ணம் பொலியு மலர்க்கொடி யேயென் றணுவளியும்
வண்ணம் பொலியு மொருகாண் பொலியும் வகைபருளே. (கஉ)

இடையூறுகிளத்தல்.

நங்காம னென்று மடவார் கருத நகுமெழிற்சிங்
கங்காமன் னுங்குளத் தூர்வேத நாயகக் காவெற்பில்

வெங்காம வேட்டத் திருமத வேழம் வெளிவரச்செய்
தங்காம ரம்ப மறைப்பது வோவெற்றி யாவதுவே. (கசு)

நீடுநினைந்திரங்கல்.

எய்யாச் சமழக்க ரெனுமத வேழத்திற் கேறுனைய
கையான் குளத்தை வருவேத நாயகக் காமன்வெற்பி
னீயா வருகிப் பதைபதைத் தாவி நடுங்கிடுவேன்
மெய்யா மிவர்திரு வாயூற லுண்டின்ப மேவலென்றே. (கச)

மறுத்தெதிர்கோடல்.

மேன்மே லெழுந்து கொழுந்துகொண் மேடாங்கழல் வீயவைக்கோ
ரூன்மேல் விழுந்து தடிப்பது மானுங் தவாதபுகழ்
வான்மேல் வயங்க வளர்வேத நாயக வள்ளல் வெற்பர்
மான்மே லெழாவகை நங்நாண் டடுக்கும் வலிகொள்வதே. (கரு)

வறிதுநகைதோற்றல்.

ஆற்ரு மெனவந் தடித்தாரை வேன்தரு மாய்ந்தடுக்கப்
பீபாற்ரு வுயர்த்தும் புகழ்வேத நாயக பூபன்வெற்பின்
மாற்ரூத வன்ப ருறுகாம வாரிக்கோர் வங்கமெனத்
தோற்ரு விடையவர் செவ்வாயில் வெண்ணகை தோற்றியதே. (கஙு)

முறுவற்குறிப்புணர்தல்.

தந்தா வளமபல வாளவேத நாயகத தணணிபணற
னந்தா வளவரை வாயிவர் வாண்முக நன்மதியின்
முந்தா நகைவெண் ணிலவாய தென்றன் முகமெனுமோ
ரந்தா மரையை மலர்த்திய தாலிஃ ததிசயமே. (கள)

மூயங்குதலுறுத்தல்.

புரைதவிர் மங்கள மால்வேத நாயக பூபன்வரைத்
தரையிவர் கொங்கைக் குடம்பற்றி யல்குற் றடங்குடைந்து
விரைகமழ் திப்பியச் செவ்வா யமிர்தும் விருப்பியுண்டா
நரைதிரை மூப்பு மொழிந்தா நமனு நமக்கஞ்சு மே. (கஅ)

புணர்ச்சியின்மகிழ்தல்.

தூயோ நினைக்க மருவேத நாயகத் தூயன்வரை
வாயோ ருமல ரிச்சோலை யோர்தட மற்றதனு
ணீயோர் கொடிங னகலல்குல் பூவதி னீடுசுவை
யாபோர் மதுவஃ துண்ணும்வண் டாயினன் யானணங்கே. (கக)

புகழ்தல்.

எள்ளரி விடலில் புகழ்வேத நாயக வேந்தல்வெற்பிற்
றுள்ளரி யெழுமறி கோக்கீர் நுங் கொங்கைக்குத் தோற்றதணீ
யுள்ளரி யுறுதுயர் பூண்டு விளர்த்த தொருகயிலே
வெள்ளரி வரையென் றறியார்சொல் வாசென் விளம்புதுமே. (உ0)

வற்புறவணிதல்.

இம்மா நிலஞ்சொல் புகழ்வேத நாயக வேந்தல்வெற்பில்
விம்மா வெழுமுலை யிம்மா தருக்கு மிளிர்கலங்க
ளம்மா குழனமுதற் பொற்றுண்மட் டுக்தொட் டலங்கரிக்க
வெம்மா தவஞ்செய்த வோவறி யேனென் னிருகைகளே. (உக)

வன் புறை.

அணிந்துழிநாணிய துணர்ந்துதெளிவித்தல்.

பொன்னே முகிற்கும் புகழ்வேத நாயக பூபனுக்கு
மென்னே யுருவன்றி யீதலிற் பேத மெனக்குமற்றை
நின்னேய மாருயிர்த் தோழிக்கு நீடுருப் பேதமன்றிக்
கொன்னே யணிதொழிற் பேதமுண் டென்கை குறித்தருளே. (உஉ)

பெருநயப்புரைத்தல்.

மெலியீரென் றியார்க்கு மருள்வேத நாயக வேள்குளந்தை
யொலியீர்ம் புனற்றடத் துண்டே யெனைத்தினாண் டுவப்பக்கொண்டு
பொலியீரரும்பு மரக்காம்ப ணுறுமொர் பூவுமென் னுள்
வலியீர்மற் றீரம்ல ருங்கொண்டொர் வல்லி வயங்கல்வண்டே. (உங)

தெய்வத்திறம்பேசல்.

எறியுங் கலிதன் றலைசாய்த் திடத்தமி ழின்னருமை
யறியும் புருட மணிவேத நாயக வண்ணல்வெற்பிற்
செறியும் படிநம் மிருபே ரையுமின்று சேர்த்ததெய்வ
முறியும் படியிடை யேசெய்பு மோசற்று முன்னலீயே. (உச)

பிரியேனென்றல்.

கோணுடன் மேழிக் கொடியாளன் மாலைக் குவளையினன்
வாணுடை னேரும் புகழ்வேத நாயக வள்ளல்வெற்பிற்
றேனுடு பூங்குழ லாய்வான் பிரியினுஞ் செங்கதிர்யா
னூனு யிர்நிகர் நிற்பிரி யேனென்று முண்மையிதே. (உரு)

பிரிந்துவருகென்றல்.

பெருவேத நாயக மால்பா லடித்தொன் று பெற்றவர்பாற்
றருவேசிர் தாமணி யேயென் றடைபவர் தம்விரைவும்
பொருவேயன் றென்னவிர் நின்றகன் றியானிப் பொழிலகத்தே
வருவேன்வந் தும்மடி கூடுவ னீடுவன் மையிலனே. (உசு)

இடமணித்தென்றல்.

பொன்னே புகழாயி ராணிகொ லோவெனும் பொற்பணங்கே
யென்னே திருவுளத் தெண்ணலும் மூர்க்குமெம் மூர்க்குமென்று
மின்னே லுலவு புயல்வேத நாயக வேள்பொருட்கு
மன்னே வறியர்க்கு மெத்தனை தூரமற் றத்தனையே. (உஎ)

தெளிவு.

திகழ்வேலை பொங்கி யெழுவோங்கன் முற்றுஞ் சினந்துவன்கா
லகழ்வே றொடுபறித் தெங்கணும் வீசிடி மன்றுமென்று
மிகழ்வேயில் லாதகம் வார்த்தைபொய் யார்வஞ்ச மேதுஞ்செய்யார்
புகழ்வேத நாயக மால்குளத் தூர்வைப் புண்ணியரே. (உஅ)

பிரிவுழிமகிழ்ச்சி.

செல்லுங்கிழத்திசெலவுகண்டுளத்தொடுசொல்லல்.

வண்டேய் குவளைத் தொடைவேத நாயக வள்ளல் வெற்பிற்
றண்டே மலர்க்குழல் சோர்தரக் கொங்கைத் தனிப்பொறையால்
விண்டே மருங்குறள் ளாடநுண் ணெஞ்சகம் மேலமையாக்
கொண்டே யியங்குதல் பார்நெஞ்ச மேநங் குலதெய்வமே. (உக)

பாகனுடுசொல்லல்.

கனம்போல நல்குகை யான்வேத நாயகக் காளைவெற்பின்
மனம்போல நோக்கமென் பாலுற யானிறு மாப்பெழுந்த
தனம்போ லடையவென் கையால் வருடிய தாள்கள்பெயர்த்
தனம்போ னடப்பது பார்வல வாவென தாருயிரே. (ஙஐ)

பிரிவுழிக்கலங்கல்.

ஆயவெள்ளம்வழிபடக்கண்டிதுமாயமோவென்றல்.

தூணே பொருதிர மேடாள்வேத நாயக துங்கன்வெற்பி
ஞேணே புனைப்பதிம் மாண்புடை யார்க்கு நமக்குநனி
சேணே யிவர்முலே சேர்ந்தன மோவன்றிச் சோர்ந்ததுபோல்
வீணே கனவொன்று கண்டன மோவென் விளைந்ததுவே. (ஙக)

வாயில்பெற்றுய்தல்.

பாமாலே சூடும் புகழ்வேத நாயகப் பண்பன் வெற்பி
ணுமாலே மாய்க்கு மருந்துணர்ந் தாம்விரை நாவிகமழ்
பூமாலே யோதி யிவர்விழி மான்சென்று புக்குலவு
மாமாலே யாவொரு மின்னுர் வதன மதியகத்தே. (ஙஉ)

பண்புபாராட்டல்.

நனியா வருஞ்சொல் புகழ்வேத நாயக நம்பிவெற்பி
லினியா முவமை தெரிதலிற் குற்ற மிலதரிதுட்
கனியா விணையுறப் பிற்கிணை மாறிக் கழறிமற்றைத்
தனியா முறுப்பிற் கதுவே யிணையெனச் சாற்றுதுமே. (ஙங)

பயந்தோர்ப்பழிச்சல்.

அண்டாரை வாட்டி யடுத்தாரை நாட்டிநன் காதரிக்கும்
வண்டாரை வேய்புய மால்வேத நாயக மன்னன்வெற்பி
லெண்டாரை மாறினு மாறுத் திருவுற் றெனீயடிமை
கொண்டாரை யீன்றவர் வாழிய சோவிக் குவலயத்தே. (கச)

கண்படைபெறுதகங்குஞ்சல்.

பொருட்கடல் கல்விக் கடல்பொறு மைக்கடல் பொற்புக்கட
றெருட்கட லாய புகழ்வேத நாயகச் செல்வன்வெற்பி
லருட்கட லாயெனீ யாண்டாரை நீங்கி யஞர்க்கடலோ
டிருட்கடன் மூழ்கின னின்பக் கடலையென் றெய்துவனே. (கடு)

இடந்தலைப்பாடு.

தந்தெய்வந்தருமெனச்சேறல்.

திருவேத நாயக மால்குளத் தூரன்ன சின்மொழியைப்
பொருவேயின் மாட்சியின் முன்றந்த தெய்வமிப் போதுந்தருந்
தருவே யெனவிருப் பிற்கொடுப் பார்க்கோர் தடையுமுண்டோ
மருவேயு மன்ன பொழிலிடைச் சேறும் வருதிகெஞ்சே. (கசு)

முந்துறக்காண்டல்.

எண்ணே யிலாத புகழ்வேத நாயக வேந்தல்வெற்பின்
மண்ணே புரிந்தது மாதவ மென்ன மலரடிவைத்
துண்ணேய மோங்க வுவமை யிலாத வுறுப்பொடுமோர்
பெண்ணே யெனநின்ற தான்முன்பு யாஞ்செய் பெருந்தவமே. (கஎ)

முயங்கல்.

கைப்பட்ட வின்சொற் புயல்வேத நாயகக் காவலன்வெற்பீ
கைப்பட்ட வாணுத லாரிவர் பேரருள் கண்டடுத்தே
கைப்பட்ட வாவு கருஞ்சுலஞ் சாரக் கனதனமுங்
கைப்பட்ட தாலினிச் சிந்தா மணியுங் கைபடுமே. (கஅ)

புகழ்தல்.

செல்லார் பொழிற்றென் குளத்தூ ரதிபன் றிருந்தியநூல்
வல்லா ருனைக்கும் புகழ்வேத நாயகன் மால்வரைவாய்
நல்லா ருறுப்புட் சிலவமு துண்டென்பர் நா னுருவ
மெல்லா மிவர்க்கமு தென்பேன் மழுவுங்கை யேந்துவனே. (கக)

ஆயத்தாய்த்தல்.

நினக்கே பரமெமைக் காப்பதென் பார்க்கு நிலைமைநல்கி
மனக்கேத மாற்றுந் திறல்வேத நாயகன் மால்வையாய
னனக்கே யடிமை பலசொல்வ தால்வரு மூதியமென்
புனக்கேழ் மயிலீண் டாய்கின தாயம் புகுந்தருளே. (கo)

பாங்கற்கூட்டம்.

தலைவன்பாங்கனைச்சார்தல்.

கொடிப்பார் பலர்க்குங் குருவாயி னேனுக்கொக்கின் கொம்பரன்றி
வடுப்பா சொழிய வளர்வேத நாயக வள்ளலைச்சார்ந்
தடுப்பா ரலாரின் வருந்தேலம் மாதை யடுப்பநம்மைத்
தடுப்பா ரெவர்மன னேயுயிர்ப் பாங்கனைச் சார்தரினே. (சக)

பாங்கன்தலைவனை உற்றதுவினுதல்.

விற்போர் புரிந்தனை யோதெவ்வ ரோடு விடாதெதிர்த்துச்
சொற்போர் புரிந்தனை யோதர்க்க ரோடுவிண் டொட்டுதிற்க
நெற்போர் புரிகுளத் தூர்வேத நாயக நீயன்வெற்பின்
மற்போர் புரிதின் புயம்வாடற் கேதுவென் மன்னவனே. (சஉ)

தலைவன் உற்றதுரைத்தல்.

மடவார்க ணன்றி வலியா ரிடத்துண்டு வண்டமிழ்க்குக்
கடவா ரணந்தரு மால்வேத நாயகக் காவலெவற்பி
லிடவா ருமெனன் கலைமாமதியையோ டிமையவல்குல்
விடவா ரவம் விழுங்கிய தானண்பின் மிக்கவனே. (சங)

கற்றறிபாங்கன்கழறல்.

சொற்றது நாட்டிற் துரைவேத நாயக துங்கன்வெற்பி
லுற்றது சொற்றதென் காதூ டழல்புக் குலாவலொத்த
திற்றது வென்னிடைக் கிவ்வாறு வாடுவை யேற்கலைகள்
கற்றதுங் கேட்டது நன்றுநன் றிலெங்கள் காவலனே. (சச)

கிழவோன் கழற்றெதிர்மறுத்தல்.

கோணமை நின்ற குணவேத நாயகக் கொண்டல்வெற்பி
ஞணமை யும்பி னுனக்குள தோமதி நன்முகமு
மாணமை யோவிளங் கொங்கையுஞ் செங்கையு மற்றவையுங்
காணமை யானண்ப னேனகைக் தாயிக் கடுமொழியே. (சடு)

கிழவோற்பழித்தல்.

புதையாம னல்கு பொருள்வேத நாயக பூபன்வெற்பிற்
பதையாம னின்றெரு பேதை மருட்டவுட் பட்டறிவிற்
றதையாம லிவ்வண்ணம் வாடுவை யேலைய தன்வயிற்றுட்
சிதையாமல் வைக்கும் பிரமாண்ட முற்றுமொர் சித்திறும்பே. (சஎ)

கிழவோன் வேட்கைதாங்கற்கருமைசாற்றல்.

போதுசெய் மாலைப் புயன்வேத நாயக பூபன்வெற்பிற்
றீதுசெய் கூற்றம் வரினுமஞ் சேனெரு சேயரிக்கண்
மாதுசெய் நோய்க்கினி யாதுசெய் வேனுய் மருந்தின்றன்னு
ளோதுசெய் யாம்பலு மொவ்வாச்செவ் வாயமு தொன்றன்றியே. ()

பாங்கன் தன்மனத்தழுங்கல்.

கரும்பே மொழியஞ் சுரும்பே விழிபொழிற் காமருகோகங்
கரும்பே மூலையென்று பல்காற் சொலுமிவ ஞன்றமதி
யிரும்பேயவ் வேங்திழை காந்தங்கொ லோவிதற் கென்செய்தும்யாம்
வரும்பே றறிஞர் புகழ்வேத நாயக மால்வரைக்கே. (சஅ)

தலைவனுடழுங்கல்.

விடன்மேன் மனமில் புகழ்வேத நாயக வேள்வரைப்பான்
மடன்மே லொளிர்குழ லாள்பொருட் டென்சொன்மன் ஞகின்செளிக்
கடன்மே லெழுவடி வேலாயிற் முலினி யாதுசெய்கேன்
கடன்மேல் வரினதற் கியாரான் முடியுங் காசெயவே. (சகூ)

எவ்விடத்து எவ்வியற்றென்றல்.

மண்காக்குஞ் செல்வப் புயல்வேத நாயக மால்குளத்தூர்
விண்காக்கு மால்வரை யோதிரை யோவுரை மேவுமிடங்
கண்காக்கும் பேரியல் யாதண்ண லேவெற்றி காக்குமொரு
பெண்காக்குந் தோணிஞ யிவ்வா று வாட்டிய பெய்வளைக்கே. (நிo)

அவன் அஃது இவ்விடத்து இவ்வியற்றென்றல்.

என்னுயிர் மேவிட மால்வேத நாயக வேந்தல்வெற்பே
மன்னுயிர் போற்றவன் முண்மலர் கண்ணை வஞ்சப்பகைத்துத்
தன்னுயிர் போன்மெலி யும்மிடை மற்றவற் சூழ்ந்துநட்ட
கொன்னுயிர் போலிறு மாக்குருண் பாவிளங் கொங்கைகளே. (நிக)

பாங்கன் இறைவனைத்தேற்றல்.

வழியென்று போறங் கொள்வேத நாயக மால்வளைவாய்
விழியென்று வேல்கொண்ட மின்னிஞ யான்கண்டு மீளுமட்டுங்
கழியென் றுயிரிங் கிருவைய கான்மகரு காணுமட்டு
மிழியென்று மோவு துணிபுற் றிருந்த விராமஞுத்தே. (நிஉ)

பாங்கன் குறிவழிச்சேறல்.

கனியாடு பூம்பொழில் சூழ்குளத் தூரண்ணல் கல்விக்கண்ணே
நனியாடு துண்மதி மால்வேத நாயக நம்பிவெற்பிற்
பினியாடு மோதன் பெருகாயத் தோடு பிரிந்துநின்று
தனியாடு மோவறி யேனிறை கூறிய தார்க்குழலே. (நிங)

இறைவியைக்காண்டல்.

தீதே யிலாத புகழ்வேத நாயகச் செம்மல்வெற்பிற்
சூதே முலீலசிலீ யேநுதல் செய்ய துவர்க்கமலப்
போதே முகமரும் பேரகை செங்கைப் புயலுரைத்த
மாதே யிவளிது வேயிட மாலீய மற்றில்லீயே. (நிச)

இகழ்ந்ததற்கிரங்கல்.

செறியாமை யிற்குளத் தூர்வேத நாயகச் செம்மல்வெற்பின்
மறியாமை நோக்கி யியலிது வேற்புய வாட்டமொரீஇக்

குறியாமை கொண்டு வருந்தா திருக்கவுங் கூடுங்கொல்லோ
வறியாமை யாலிகழ்ந் தேன்புகழ்ந் தேனல னண்ணலீயே. (நிரு)

தலைவனேவியத்தல்.

பொறையாற் புவிவென்ற மால்வேத நாயக பூபன்வெற்பி
னிறையாற் குறைவி னறையார் குழலி நெடுங்கணெஞ்ஞ்
கறையாற் பொலியயி லேறுண்டு நெஞ்சங் கலங்கலின்றித்
திறையாற் பொலியுகும் மண்ணல்வந் தான்மிகத் திண்ணியனே. (நிசு)

தலைவியையியத்தல்.

மேகத்தை யேநிகர் கைவேத நாயக வேள்வரைக்கைக்
நாகத்தை யேபொரு மாமுலை தாங்கிவர் நன்மனுநூ
லேகத்தை யேகொண்டிடம் மண்முழு தாண்டரு ளெம்பெருமான்
சோகத்தை யேதுணிப் பார்பிணிப் பாரலர் தோற்றத்தினே. (நிஎ)

தலைவன்றனக்குத்தலைவிகிலைகூறல்.

கடியொன்று மிற்குளத் தூர்வேத நாயகக் காணிவெற்பிற்
படியொன்று மாமுகி லொன்றீண நாடிப் பரிந்துமல
டியொன்று மாற்றி நிலத்தூன்றி யெங்கு மவிரமின்னுக்
கொடியொன்று நின்றது கண்டுவந் தேன்புகழ்க் கொற்றவனே. ()

தலைவன்சேறல்.

வளர்வேத நாயகன் மால்வரைப் பாற்பொறி வண்டுகிண்டி
யுளர்வே யலங்கற் குழல்சுவ ரேறிய வொளிர்குழைகள்
கிளர்வேய்ப் பொருவு திரடோள் வருடக் கிளர்ந்தென்மனத்
தளர்வே யொழிய வெதிர்நிற்கு மோவென் றனியுயிரே. (நிசுக)

தலைவியைக்காண்டல்.

உருவுடைத் தன்றுயி ரென்பது பொய்ம்மைபல் லோருமவார்
திருவுடைத் தண்ணளி மால்வேத நாயகச் செம்மல்வெற்பிற்
பொருவுடைத் தொண்கணுஞ் செவ்வாயு மேர்தெழிற் பூண்முலையு
மருவுடைத் தண்குழ லும்மற்றும் வாய்ந்ததென் மன்னுயிரே. (சுO)

கலவியின்மகிழ்தல்.

பொன்மலை யுஞ்செம் மணிமா மலையும் புணர்ந்ததென்கோ
வென்மலை வின்றென் சுவைப்பாலுந் தேனு மிணைந்ததென்கோ
நென்மலை வாய்குளத் தூர்வேத நாயக நேயன்வெற்பிற்
கன்மலை தோண்முலை யாணுமிம் மாதுங் கலந்ததுவே. (சுக)

புகழ்தல்.

புரவலர் கண்மணி மால்வேத நாயக பூபன்வெற்பிற்
பரவல ராம்பனுஞ் செவ்வா யழகுட் படர்ந்துகவர்
தரவலர் நீங்குமென் றேர்ந்திரந் தேயமர் தன்மைகண்டே
யிரவல ரென்று புகல்வார் புலவ ரெடுத்தின்னுமே. (சுஉ)

பாங்கியொடுவருகெனப்பகர்தல்.

மைப்பே ரகனெடுங் கண்மட வாய்கவி வாணர்செம்பொன்
வைப்பே யணைய தமிழ்வேத நாயகன் மால்வரைவாய்க்
கைப்பே யிலாதநின் மெய்ந்நிழ லென்னவிக் காவகத்தென்
னெய்ப்பே யொழிய வினிப்பாங்கி யோடு மெழுந்தருளே. (கூஉ)

பாங்கிற்கூட்டல்.

தளிர்புரை செங்கைத் தலைவேத நாயகத் தண்ணியன்றன்
குளிர்மலி சோலை யெனும்பொற் றகட்டி குளையரெனு
மொளிர்மணி சூழப் பொலிவன வான்மற் றுவைநடுநீ
மிளிர்தரு நாயக மாமணி யாயின்று மேவுகவே. (சுச)

பாங்கிமதியுடன்பாடு.

தோற்றத்தாலாராய்தல்.

போதுசெய் மாலைப் புயன்வேத நாயக பூபன்வெற்பிற்
காதுசெய் வேல்விழி யெம்பெரு மாட்டி கலின்செயெழின்
மீதுசெய் போதுகொய் தோகணே வாய்விருப் பிற்குடைந்தோ
யாதுசெய் தோவறி யேன்றிரு மேனி யலசியதே. (கூடு)

ஒழுக்கத்தாலையந்தீர்தல்.

கணைப்போ வரும்வண் டிளர்குழ லாய்விண் கலந்தபிறை
நினைப்போ வருநற் குணமே நிரம்பி நிலாவுதலி
னனைப்போது மாலைப் புயன்வேத நாயக நம்பிபுகழ்
தனைப்போல் விளங்கலி னின்னுந் தெழுப்படிந் தன்மையதே. (சூசு)

சுனைகயப்புனைத்தல்.

எண்ணுங் குணம்பெரி யோன்வேத நாயக வேந்தல்வெற்பிற்
கண்ணுங் கதிர்முலை யாய்செங் கமலக் கருங்குவளை
யண்ணுஞ் செழுஞ்செங் குவளைசெவ் வாம்பல்வெள் ளாம்பலெனப்
பண்ணுந் திறலுடை வான்சுனை யாது பகர்ந்தருளே. (சுஎ)

சுனைவியந்துரைத்தல்.

வண்டார் தணிபுயன் மால்வேத நாயக மன்னன்வெற்பிற்
கண்டார் மொழியாய் முலைக்குநற் சாந்துங் கருங்குழற்கு
வண்டாரு மெய்க்குப் பசலைபு மின்று வழங்குவதேற்
கொண்டார் வளச்சுனை வாயடி. யேனுங் குடைகுவனே. (சுஅ)

தகையணங்குறுத்தல்.

வேளாண் மரபுக் கணிவேத நாயக வேள்வரைப்பாற்
றூளா னனிச்சம்மெல் வான்மக ளேயிவண் சற்றிருவேய்த்
தோளான் மருள்வயிற் றெங்கோ மகளிச் சுனையகம்புக்
காளான் மகிழுவின் னேவரு வாளொத்தி ராடுவிரே. (சுகூ)

நடுக்காட்டம்.

நாட்டுக்கு நல்லன் பதினா யிரம்பொ னவிலுமொரு
பாட்டுக்கு நல்கும் புகழ்வேத நாயகப் பண்பன்வெற்பின்
மாட்டுக் கலங்கினன் கண்டிடல் கீள வலியொருசெங்
கோட்டுக் களிற்றெதிர் வேலெறிந் தாரூரு கொற்றவீனை. (எ0)

பெட்டவாயில்பெற்றிரவுவலியுறுத்தல்.

மறச்சார்பு நீத்த புகழ்வேத நாயக வள்ளல்வரைப்
புறச்சார்பு பற்றிப் பொருளடை வாரிற் புகலரும்பே
ரறச்சார்பு பற்றிக் கதியடை வாரினிவ் வாயிலைதகன்
றிறச்சார்பு பற்றி யடைவாமின் னீறயக் திருவீணேய. (எக)

ஊர்வினுதல்.

யாமீனு புதியன் மதியன்ன வாணுக லின்சொனல்லீர்
வாமீனு வெனவயங் கும்மூ ரெதுமது வார்கழைவிற்
கோமீனு புனிபுரப் பாமீனு வெனவளர் கொண்டல்வண்டர்
மேமீனு வறவமர் தார்வேத நாயக வேல்வரைக்கே. (எஉ)

பெயர்வினுதல்.

தருமஞ் திரமெனக் கொள்வேத நாயகத் தண்ணியவ்கார்
பொருமஞ் திரம்பல சூழ்குளத் தூரன்ன பொற்றெடியீர்
தெருமஞ் திரந்து முனையீர்தும் மூரினிச் செப்பரிய
பெருமஞ் திரமெனி னும்முனைப் பீர்தும் பெயரினீயே. (எங)

கெடுநிவினுதல்.

என்னீரு வெனவெளிர் மால்வேத நாயக வேந்தல்வெற்பிற்
கன்னீரு வருங்கைகரல் லீர்தும் புனத்துக் கடுகியென்கை
வன்னீரூய் கணைபட்ட புண்பட்ட வெனணைபட்ட வாணுகற்கைக்
குன்னீரு வெனவந்த தோவிரு கோட்டொரு குஞ்சரமே. (எச)

ஒழிந்ததுவினுதல்.

பொழியா மழையன் றெனும்வேத நாயக பூபன்வெற்பிற்
கழியாது நும்புன முற்றேனுக் கொன்று கடைக்கணித்து
மொழியா விதமென் மொழிந்தாற் பழிவந்து மூளுங்கொலோ
வொழியா திடங்கொண் டெழுமுப்பு பூண்முலை யுற்றவரே. (எரு)

யாரேயிவர்மனத்தெண்ணம்யாதெனத்தேர்தல்.

சீரே புணையுந் திறல்வேத நாயகச் செம்மல்வெற்பிற்
பாரே றியதுண் மதியர் புதியர் பதியர்கீலே
போரே விலர்மத யானையெய் தோமென்னும் பொய்யுரைப்பா
ராரே யிவர்மனத் தெண்ணமற் றியாதென் றறிகிலமே. (எசு)

எண்ணங்தெளிதல்.

தேராசை யும்புவி யும்பெரு வாணுஞ் செறிக்துப்புகழ்ப்
பேராசை யேகொண் டவன்வேத நாயகப் பேகன்வெற்பி

ஓராசை மற்றுமற் றேராசை யாயுற லாலிவருட்
கூராசை நமமட வாராசை யாய்க்குடி கொண்டதுவே. (எஎ)

இருவருமுள்வழிஒருமையிற்போதல்.

தாவா வலியின்முன் யாஞ்செய் தவமுந் தவப்பயனுங்
கோவா வொருங்கிருந் தாலெனப் பாங்கியுங் கோமகளுந
மேவா விருந்தனர் போய்ச்சொல்லு வாம்வெல்லு வாமயனேனய்
மாவாழ் குளந்தை வருவேத நாயக மால்வரைக்கே. (எஅ)

மான்விஞ்தல்.

திருமான் மகிழ்குளத் தூர்வேத நாயகச் செம்மல்வெற்பி
லிருமான் மதியிற் பொலிவா ணயனத் தெழின்முகத்தீர்
வருமானந் தன்னுயிர்க் கேகொண்டு தைத்தவென் வாளியுங்கொண்
டொருமானிங் கேவந்த துண்டோவுண் டாயி னுமைமின்களே.(எகூ)

மனம்விஞ்தல்.

கனத்திடை மின்ன லெனவிளங் காவிற் கலந்துநிற்பீர்
சினத்திடை யென்றுஞ் செலாவென் மனஞ்செயிர் தீர்புலவர்
மனத்திடை வாழும் புயல்வேத நாயக மால்வரைதும்
புனத்திடை யேவந்த தோநொந்த தாகிப் புகலுமினே. (அ0)

பாங்கி எதிர்மொழி கொடுத்தல்.

படுமாந்தும் வண்டுகள் காம்பேறி காமரம் பாடிடமேம்
படுமாம் பொழிற்குளத் தூர்வேத நாயகப் பண்பனுக்குட்
படுமாந்தர் வெங்கலி காணுமை போற்சக பாலவண்டு
படுமாம் பலியிக் குறிஞ்சியி லேயென்றும் பார்த்திலமே. (அக)

இறைவனே நகுதல்.

இழைகொண் டொளிர்நிற மால்வேத நாயக வேந்தல்வெற்பிற்
கழைகொண்டு செய்சீலை கைக்கொண்டு சித்தசர் காமருழை
குழைகொண்டு தேறன்று மலர்கொண்டெய் வாரிந்தக் கொற்றவருந்
தழைகொண்டு காம ருழையெய்வர் வில்லின்றிச் சான்றவரே. (அஉ)

பாங்கிமதியினின் அவரவர் மனக்கருத்துணர்தல்.

பழியே யிலாத புகழ்வேத நாயகப் பண்பன்வெற்பிற்
கழியே ரிவர்புனங் காத்தலபொய் யென்று கையுமிவர்
விழியே யவர்வந்த வேட்டைபொய் யென்று விளம்புமவர்
மொழியே யிருவர்க்கு முள்ளீடொன் றேயென்று முன்னுதுமே. ()

பாங்கியிற் கூட்டம்.

தலைவன் உட்கோள்சாற்றல்.

விண்மணி நேரும் விளக்கமிக் கோன்றமிழ் மெய்ப்புலவர்
கண்மணி யாய புகழ்வேத நாயகக் காவலனை
யுண்மணி யேர்பல் படத்தர வேந்து மொளிமணியோ
தண்மணி யாயகிந் தாமணி யோநசை சாற்றுமினே. (அச)

பாங்கி குலமுறைகினத்தல்.

தனைவா யெழுகத் பகம்வேத நாயகத் தண்ணியன்றன்
வனைவாய் மடங்கல் சிறுதேரை யூணும வாவுங்கொல்லோ
புனைவாய் களிற்றண்ண லேயுயர் வான்குலப் புண்ணியர்புல்
லுனைவாய் குறவர் குலக்கொம்பை வேட்ட லுரிமையன்றே. (அடு)

தலைவன் தலைவிதன்னையுயர்த்தல்.

நம்பே ரிருநிதி மால்வேத நாயக நம்பிவனைக்
கொம்பே யிவர்தினைக் கொம்பேயல் லாற்றனைக் கொம்பென்பது
வம்பேயவ் வாறிருந் தாலும் பரிதி மதியிருஞ்சேற்
றம்பேர் மலரா யவாவுத லான்வரு மாசென்னீயே. (அசு)

பாங்கி அறியாள்போன்று வினுதல்.

விந்தனக் காமெனுந் தேர்வள்வேத நாயக வேல்வரைவாய்ச்
சந்தனக் காவில்விண் மீன்போற் பரந்து தவாவண்டலா
டந்தனக் காரிகை மார்பல ராய வவருளுன்ம
னந்தனக் காக்கவர்ந் தாளிவ ளென்று நவினுதியே. (அஎ)

இறையோன் இறைவி தன்மையியம்பல்.

மஞ்சே குழுஅழு னஞ்சே விழிமொழி வானமூதத
பஞ்சே பதமத வஞ்சே விமின்முலை பார்க்கணியாய்
விஞ்சேர் மலிகுளத் தூர்வேத நாயக வேல்வரையென்
னெஞ்சே யிடையணங் கேயென்னே வாட்டிய தேரிழைக்கே. (அஅ)

பாங்கி தலைவியருமைசாற்றல்.

வாமான் றமிழ்க்குக வும்வேத நாயக மால்வரையெங்
கோமான் புதல்வி யெளியள்கொல் லோநலங் கூர்மிதிலைப்
பூமான் றிருமக ளாகிய சீதையைப் பூதலம்வா
ழேமான் விழிமட வாரு ளொருத்தியென் பாரெவரே. (அசு)

தலைவன் இன்றியமையாமையியம்பல்.

குருவிருந் தாலுண்டு வான்கதி யிம்மை கொளாதவர்க்குத்
தருவிருந் தாலுண்டு பல்போக முந்தை வானவர்க்கு
மருவிருந் தாரணி தேர்வள்வேத நாயக மால்வரைநெங்
திருவிருந் தாலுண் டெளியேற்கெஞ் ஞான்றும்பல் செல்வமுமே. ()

பாங்கி நின்குலமு நீயேசென்றுரையென் றல்.

நன்று வதிமனத் தான்வேத நாயக நம்பிவெற்பிற்
கன்று வதிகை யுயிர்நீமெய் யேற்கனி நின்குறைநீ
வென்று வதிவடி வேலண்ண லேயுடன் மேலுயிர்வந்
தொன்று வதியல் பெனுஞ்சூத் திரமு முணர்ந்துளீயே. (கக)

பாங்கியைத் தலைவன்பழித்தல்.

பொன்னு லைமைமணிப் பூண்வேத நாயக பூபன்வெற்பி
னின்னுன் முடியுமிக் காரிய மென்று நினைந்துளத்துன்

பின்னு ழுமுன்று கிரிந்தன னீயின்ன பெட்பின்மொழி
சொன்னு வினியுணைச் சொல்வதென் னேயென் சுடுவிஞ்னேயே. (கூஉ)

பாங்கி பேதைமையூட்டல்.

திக்கே றியபுகழ் மால்வேத நாயகச் செம்மல்வெற்பி
லிக்கே றியமொழி யோவியப் பூசைகண் டேய்ந்தகட்சி
புக்கே றியகிளி பொத்துவள் பேதைமை பூண்டவஞ்ஞண்
மிக்கே றியதின் றுயரறி வாள்கொல்செவ் வேலவனே. (கூங)

தலைவன் தலைவி மூதறிவுடைமைமொழிதல்.

பொன்னேப் பொருமட வாயெனே நோக்குகட் பூவழியே
யென்னேக் கவர்ந்துதன் பால்வைத்துத் தேம்பிடு மென்மனத்தே
தன்னேப் பொருந்தவைத் தாள்வேதை யெட்பது தக்கதுவோ
மின்னேப் பொருமணிப் பூண்வேத நாயக வேள்வரைக்கே. (கூச)

பாங்கி மூன்றுபுணர்ச்சி முறையுறக்கூறல்.

ஒன்றுற்றி முன்றெளிந் தார்பின்னு மாற்றற் கொருதுணேதேர்ந்
தின்றுற்ற வேண்டு மெமக்கிதென் ஞரெளி யேனுமக்கு
நன்றுற்றுங் காரிய மென்வேத நாயக நம்பிசெம்பொன்
மென்றுற் றிளங்கமு கங்குளத் தூர்வளை வித்தகரே. (கூரி)

தன்னிலைதலைவன்சாற்றல்.

வள்ளாத பேரெழி லேந்திழை யேநின் னிலங்கிறைனி
வில்லாத பேரருண் மேவாத போதென்றும் வெய்யவழி
நள்ளாத துண்மதி மால்வேத நாயக நம்பிநட்புக்
கொள்ளாத பாவியி னென்னுனி தேம்பிக் குலைந்திடுமே. (கூசு)

பாங்கியுலகியலுரைத்தல்.

நல்லா ருளைக்கும் புகழ்வேத நாயக நம்பிவெற்பின்
மல்லார் புயத்தண்ண லேயிடை பூறு மடங்கவெங்கள்
வில்லார் நுதலியை வேட்டணே யேபற்றமர் வேட்டுவப்பப்
பல்லா றறிய வகைந்தெய்து வாய்மணப் பக்தரிலே. (கூஎ)

தலைவன்மறுத்தல்.

நந்தாத நீர்நசை யால்வாடு வாற்கொரு நண்பனன்னீர்
செந்தா மரைத்தடந் தொட்டுண்டு தீரெனுஞ் சீர்மையொக்குங்
கொந்தார் குழலியை வேட்டளுர் தீரெனக் கூறியது
மந்தார தாரு நிகர்வேத நாயக மால்வரைக்கே. (கூஅ)

பாங்கியுஞ்சியச்சுறுத்தல்.

வில்லார் மணிப்பணி மால்வேத நாயக வேள்வரைவா
யல்லார் நிறத்தெமர் பொல்லா ருருளுமற் றச்சமுமுள்
ளில்லார் கொடுஞ்சில் வல்லாரிங் கெய்துவ ரெய்தினுனே
மல்லார் புயத்தைய வெய்வார்செய் வாருண் மதிப்பரிதே. (கூகூ)

சிலவன்கையுறைபுகழ்தல்.

நந்தா மணிப்பணி மால்வேத நாயக நம்பிவெற்பென்
னந்தா மணிமக வான்காம தேனுவை யாத்தரிய
சிந்தா மணியுந் தரிஞங் கொடேனிச் செழுமணிநும்
பந்தா மணிமுலை தாங்கினமே தியான்செய்த பாக்கியமே. (க00)

பாங்கி கையுறைமறுத்தல்.

மந்தார தாரு நிகர்வேத நாயக மால்வரையெஞ்
செந்தார்ப் பசுங்கிளி மாமுலை மேஞுஞ் செழுமணித்தார்
கந்தார் களிற்றெமர் காணிற்கண் சேந்து கடுத்திடின்று
தந்தா ரெவரெனின் யாங்களென் ஞேதொலத் தக்கதுவே. (க0க)

ஆற்றுநெஞ்சினோடவன்புலத்தல்.

பாடத் தவஞ்செய் தவர்கடை வாயிலிப் பற்பலரு
நாடத் தவஞ்செய் தவன்வேத நாயக நம்பிவெற்பிற்
கூடத் தவஞ்செய் திலமட வாரைக் குழையுநம்போல்
வாடத் தவஞ்செய்த தாலென்செய் வாமிந்த வல்வினைக்கே. (க0உ)

பாங்கிதலைவனை ஆற்றுவித்தகற்றல்.

சோலையி லேகுயில் கூங்குளத் தூரன் றுதிசெய்தமிழ்
வேலையி லேதுலை வோன்வேத நாயக வேள்வரைவாய்க்
கோலையி லேர்விழி யாட்குரைப் பேனின் குறைவருதி
காலையி லேதின்கை மாலையு மேற்பல களிற்றண்ணலே. (க0ங)

இரந்துகுறைபெறுதுவருந்தியகிழவோன் மடலேபொருளெனமதித்தல்.

வாய்க்கு மருந்து னிசையென நாடிவந் தார்கலிதேர்
தேய்க்கு மருந்து புகழ்வேத நாயகச் சேய்ப்னிதோய்
சாய்க்கு மருந்து திவாகர னேயுட் டவாமயனேஞப்
மாய்க்கு மருந்துநெஞ் சேமட லேயன்றி மற்றிலேயே. (க0ச)

பாங்கிக்கு உலகின்மேல்வைத்துரைத்தல்.

சேலேறு செய்க்குளத் தூர்வேத நாயகச் செம்மல்வெற்பி
னூலே றியல்பிற் கிழியேறு கையி னுவலருந்தீம்
பாலேறு மென்மொழி யார்விழி யேறுபட் டேறுநெடு
மாலேறி னுர்மடன் மேமேலு வார்மதி வா ணுதலே. (க0டு)

அதனைத் தன்மேல்வைத்துச்சாற்றல்.

பூவேறி வண்டுபண் சாதாரி பாடும் பொழிற்குளந்தைக்
கோவேறி யம்புறு சீர்வேத நாயகக் கோன்வரைப்பாற்
றூவேறி கைவிழிக் காவென் பெருக்கணி சூடிமடன்
மாவேறி நாளைநின் னூர்வீ தி வாய்வரு வாமயிலே (க0சு)

பாங்கிதலைமகள் அவயவத்தருமைசாற்றல்.

அடையு மவர்க்குநன் மால்வேத நாயக வண்ணல்வெற்பிற்
முடையுஞ் சுரும்புஞ் செறியுமைம் பான்முதற் மூன்றுறுப்பு

மிடையு மவையவ மாகா தெழுதியென் மின்னணையா
ரிடையு நடையு மெழுதுவை யேன்மட லேறுவையே. (க0எ)

தலைமகன்தன்னைத்தானேபுகழ்தல்.

பொருந்த வுலகர் வழக்கோர்ந்து மெய்யிது பொய்யிதன்று
திருந்த வெழுதுந் திறல்வேத நாயகச் செம்மலொப்பக்
கருந்தடங் கண்குழன் மாமுலை யல்குல்செங் கைம்முதன்மெய்
யிருந்தவ மாத ரிடையொன்றும் பொய்யென் றெழுதுவனே. (க0அ)

பாங்கியருளியல் இளத்தல்.

சேலம்பு வென்றகண் ணுர்நட மாடல்செய் சீர்க்குளத்தூர்
மாலம் புயக்கு வணீவேத நாயக வள்ளல்வெற்பி
லேலம் புணைகுழ லாள்பொருட் டாகவிறைவரெநெடுங்
காலம் புரப்பவர் காலஞ் சிதைத்தத காதென்றுமே. (க0கூ)

பாங்கி கொண்டு நிலைகூறல்.

நம்பணை யாய வருள்வேத நாயக நம்பிவெற்பி
லம்பணை யாத கரும்பணை யாரம் பகற்றவிண்டோ
யும்பணை யார்சிதை வுட்குறித் தாயவ் வொருவிணையெங்
கொம்பணை யார்நின் குறைமறுத் தாற்பின் குறித்தருளே. (ககo)

தலைவியிளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல்.

வணீயாள் குடங்கையன் மால்வேத நாயக வள்ளல்வெற்பிற்
றுணீயாள் குழன்மொழி கண்கள் வின்று துகிலுருவக்
கிணீயாள் குறிப்பி னணீயாள்கல் லார்மொழி கேட்டனினிவ்
வணீயா ணலமண்ண லேவிழைந் தாயெனி னென்பயனே. (கஉக)

தலைவன் தலைவி வருத்திய வண்ணமுணர்த்தல்.

கோங்கிற் பொலிகுளத் தூர்வேத நாயகக் கோன்வரைப்பா
னீங்கிற் றெறூஉங்குறு குங்காற்றண் ணென்னு நெருப்பிணைத்தன்
பாங்கிற் பதியலைத் தென்ஞவி வாட்டிய பான்மொழியைத்
தாங்கிற் றெனுமிடை யாயினீ யாளென றக்கதுவே. (கஉஉ)

பாங்கி செவ்வியருமை செப்பல்.

செறியவித் தாரணி சூழ்வேத நாயகச் செம்மல்வெற்பிற்
குறியவித் தார்வடம் போலோர் சிறிய குரம்பையுட்புக்
கறியவித் தார வணீயாட லோவி யடங்கியைந்து
பொறியவித் தாரி னிருப்பாட்கென் சென்று புகல்வதுவே. (கஉங)

தலைவன் செவ்வியெளிமை செப்பல்.

சந்தான தாரு வெணும்வேத நாயகத் தண்ணியன்ற
னந்தாநன் மால்வரை வாய்வினை வாயன் னகுகுழலாய்
பந்தா னியன்முலே யெவ்வா றிருப்பினும். பார்தலைவன்
வந்தா னெனினென்ற வந்தா னெனவெதிர் வந்திடுமே. (கஉச)

என்னேமறைப்பினெளிதெனநகுதல்.

உடையார் பிறரில் லுடைமை யுறவந் துறுங்கொ லுண்ணூ
லிடையார் நினக்குரி யாரா யினுமென் னுதவியின்றி
யடையார் புயத்தொடை யாயடை வாய்கொ லடுகளிறு
விடையா ரரியெனு மால்வேத நாயக வேள்வரைக்கே. (ககஙி)

அந்தகைபொறாதவன் புலம்பல்.

மெய்யோ டிதித்த புகழ்வேத நாயக வேள்வரைவா
யையோ விவர்திரு வாய்க்கென்செய் தேன்விவ வழற்கொழுந்தே
பொய்யோ வெனச்சில வார்த்தைமு னல்கிப் பொலியவிடு
நெய்யோ வெனநகை நல்கிய தாற்பி னீணப்பரிதே. (ககசு)

பாங்கி தலைவனைத்தேற்றல்.

விற்ரு ணிபுய மால்வேத நாயக வேளிளாடிக
லுற்ரு ரெனவுட் கலங்க லலங்க லொளிர்புயத்தாய்
பற்ரூர் மகளி ரலர்தோ ழியரருள் பற்றினவர்
மற்ரூரென் போலென்சொ லிங்ஙாண் மருளம் மடமயிலே. (ககஎ)

பாங்கி கையுறையேற்றல்.

ஏழிற் பொலிகளிற் ரூன்வேத நாயக வேள்தல்வெற்பிற்
சூழிற் புரக்குமித் தோன்றல்கை சான்றமென் ரூயதழை
காழிற் பொலியல்கு லாட்கணி யாகவென் கையுற்றம்மா
வூழிற் பெருவலி யாவுள வென்ப துணர்த்நியே. (ககஅ)

தலைவன் ஆற்றல்.

ஒருயிர் நோயைமற் ரேருயி ரேற்பதி லொண்டழையேற்
ரூருயிர் நோயையிப் பேருயி ரேற்ற கருஞுணர்ந்திச்
சீருயி ரோம்பவென் செய்வதென் செய்யபுமண் செல்லுக்குப்பல்
வாருயி ரோம்பு புகழ்வேத நாயகன் மால்வரைக்கே. (ககஙு)

இறைவன்தனக்குக் குறைநேர்பாங்கி இறைவிக்கவன்குறையுணர்த்தல்.

பரியர் கரியர்கள் சூழ்வேத நாயகப் பாரிவரைக்
குரியர் பிரிய ரொருவர் வருவர்நம் மேரர்புனத்தே
யரியர் தெரியவும் வாய்கிற வார்தளி ரங்கையரப்
பெரிய ருவப்புற யாஞ்செயத் தக்கதென் பெண்ணைமுதே. (கஉ0)

இறைவி அறியாள்போன்று குறியாள்கூறல்.

கனியிற் பொலிபொழில் சூழ்குளத் தூரன் கரிசறுத்த
வனியிற் பொலியும் புகழ்வேத நாயக வள்ளனட்பு
நுனியிற் கரும்பு தினல்போ லினிக்கு நுவலரிய
பனியிற் பொலிபிறை போல்வள ராநிற்கும் பான்மொழியே. (கஉக)

பாங்கி யிறையோற்கண்டமை பகர்தல்.

மையுறை வாட்கண் மடந்தைநல் லாய்கடல் வாரியெனுஞ்
செய்யுறை நீர்க்குளத் தூர்வேத நாயகச் செம்மல்வெற்பிற்

எஉ

பொய்யுறை யாமொழி யார்கழி யார்நம் புனத்தினின்றுங்
கையுறை யார்நிற் கருதின ராய்நிற்பக் கண்டனனே. (கஉஉ)

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

தென்னீக் கருகிய சீர்வேத நாயகச் செம்மல்வரை
தன்னீக் கருதிப் புகுவன்றி மான்குஞ் சரங்கருதிப்
பொன்னீக் கருகி மணியைக் கருதிப் புனம்புகுவா
ரென்னீக் கருதிவந் தாரென்ப தென்செவிக் கேற்பதன்றே. (கஉங)

பாங்கி என்னைமறைப்பதென்னெனைத்தழால்.

பொன்னீ மறைப்ப தொரீயிடைந் தார்கலி போகுகல்கு
மின்னீ மறைப்பரு மால்வேத நாயக வேள்வரைவா
யன்னீ மறைப்பதுண் டோதன் மகவுக் கடிப்பணிசெ
யென்னீ மறைப்பதென் னேபெரு மாட்டி யிதுவியப்பே. (கஉச)

பாங்கி கையுறைபுகழ்தல்.

அலைத்தலை மானீனை யாய்நிதிக் கோனுயி ராயமனீ
முலைத்தலை காணரி திம்முத்த மென்று மொழிபலவான்
கலைத்தலை யார்விருப் பாற்கொடுத் தாரென் கயிற்சுகுணை
மலைத்தலை யேறினின் றேன்வேத நாயக மால்வனைக்கே. (கஉசு)

தோழி மிழவோன் துயர்நிலைகிளத்தல்.

செய்யோ வருங்குளத் தூர்வேத நாயகச் சேய்வரையென்
மெய்யோ வினைத்தது காலோ நடந்து மெலிந்தனவங்
கையோ சலித்தன மாந்தளிர் கொய்தென்பர் காணுருவ
மையோ பிறிதொன் றும்வாய்திற வார்நின் றலசுவரே. (கஉரு)

மறுத்தற்கருமைமாட்டல்.

மழையேர்ந் தாக்குளத் தூர்வேத நாயக மால்வரைப்பைந்
தழையேர்ந் தகையொடு காணுந் தொறும்பெருந் தக்கவர்முன்
பிழையேர்ந் தபொய்பல பேசினன் யானினிப் பேசறியேன்
குழையேர்ந் தமொண்செவி யாய்மறை வேயுட் குறித்தனனே.(கஉஎ)

தலைவன்குறிப்புவேறுகெறிப்படக்கூறல்.

சீலத்தை நோக்கிய மால்வேத நாயகச் சேய்நகரோர்
தாலத்தை நோக்கி யுதியர்வெங் கோபமுந் தாங்கவந்த
காலத்தை யென்செய்வ தென்றுயிர்த் தாரக் கருத்திறுங்
கோலத்தை யோசிறி யேனறி யேன்குறி யேயுணர்ந்துமே. (கஉஅ)

தோழி தலைவியைமுனிதல்.

விள்ளத் தகாத புகழ்வேத நாயக வேள்வரைவா
யெள்ளத் தகாத விளமயி லேசிறி யேணகட்பாக்
கொள்ளத் தகாதறி யாமையி னுஞ்சொன்ன கூற்றினையு
முள்ளத் தகாது ளுளத்தறற் றருக் குவந்துளையே. (கஉகூ)

தலைவி பாங்கியைமுனிதல்.

காய்பு முனியு மெனுவேத நாயகக் காவெவற்பி
னீயு மூனியும் படியடைந் தாரொரு நேயர்நமர்
வாயு முனியு மினிவெளிப் பட்டு வரினயற்பல்
பேயு முனியுமென் முலென்னை யோநின்னைப் பேசுவதே. (கஙo)

தலைவி கையுறையேற்றல்.

பொன்னெடு நேரு மதிவேத நாயக பூபன்வெற்பி
னின்னெடு வாடுந் தழையது நோக்கியென் னேயமன
மென்னெடு வாடுநின் சொன்மறுப் பேன்கொல்கை யேற்றதழை
மின்னெடு நேரிடை யாய்தடை யாதென்கை மேவுதற்சே. (கஙக)

இறைவிகையுறையேற்றமைபாங்கியிறைவற்குணர்த்தல்.

நன்னிலை யேநிற்கு மால்வேத நாயக நம்பிவெற்பிற்
பொன்னிலை வேல தழையென்று கூறிய போதுவகை
யென்னிலை யேற்றனண் மோந்தன ளொற்றி யியப்பியபேர்
முன்னிலை யேவல் விணையா வுணர்ந்தனண் முற்றிழையே. (கஙஉ)

பாங்கிதலைமகற்குக்குறியிடங்கூறல்.

பாங்கா மரகதப் பாறை முகின்மண் படிதலுற்று
நீங்கா துறைந்தென நாப்ப ணுறச்சுற்று நின்மெளிர்பூ
வாங்கா மருசந்த னச்சேரில் யாம்பக லாடுமிடம்
வீங்கா வெழுபுகழ் மால்வேத நாயக வேள்வரைக்கே. (கஙங)

பாங்கிகுறியிடத்திறைவியைக்கொண்டுசேறல்.

சீர்மலி சாந்த குணவேத நாயகச் செம்மல்வரைச்
சார்மலி மாமயி லாடுத னேக்கித் தளிர்கள்தொய்து
கார்மலி குன்றெதிர் கூய்வீழ் புனலெதிர் கைமறித்தியா
மேர்மலி காவினன் காடற் கிறைவி யெழுந்தருளே. (கஙச)

பாங்கிதலைமகளைக்குறியிடத்துய்த்துரைத்தல்.

குலவு நலமலி சீர்வேத நாயகக் கோன்வரைப்பா
லுலவு நலமலர் கொய்திங் குறுவ லுறுமளவு
மிலவு கலவுசெவ் வாயமு தேதியினி நிவ்விடத்தே
நிலவு கலவ மயிலாட னேக்குபு நின்றருளே. (கஙஞ)

இறையோன்குறியிடத்தெதிர்ப்படுதல்.

அந்தோ நடந்து வருந்தின வோபத மல்குமிடை
பந்தோ வெணுமுலைப் பாரம் பொருது பதைத்துதவோ
நந்தோ வெணுங்களத் தீர்வேத நாயக நம்பிவரை
வந்தோ வியமென நின்றதென் மேல்வைத்த மன்னருளே. (கஙட)

புணர்ச்சியின்மகிழ்தல்.

கண்ணத் தவஞ்செய் ததுமன மற்றிவர் காமருரு
நண்ணத் தவஞ்செய் ததுதோண் முலையை நலிகலியை

மண்ணைத் தவஞ்செய் தவன்வேத நாயக மால்வனைவர்
யுண்ணைத் தவஞ்செய் ததுவா யமுதெனக் கொப்பெவரே. (கஙஎ)

புகழ்தல்.

இசவே விளங்குங் களங்க மறுதிக லேற்றரவம்
வசவே மறையு நிறையுங் குறையுமற் ரோர்தினமெய்க்
கசவே யுறுமம் மதியோ விவர்முகக் காமர்மதி
திசவேத நாயக மால்வனைப் பாலொக்குஞ் செப்பரிதே. (கஙஅ)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

பொருவேயில் பன்மலர் பூத்திருந் தாலும் புனற்றடமொண்
டிருவேவெசெந் தாமரை நாப்ப ணூருவிடிற் சீருறுமோ
வொருவேத நாயக மால்வனைச் சார வுறவனப்பை
யிருவே யுறழ்திர டோளாய நாப்ப ணெழுந்தருளே. (கஙஙூ)

பாங்கி தலைவியைச்சார்ந்து கையுறைகாட்டல்.

முகப்பகை யாய கமலமும் வண்டு முழங்குமங்கைக்
ககப்பகை யாயசெங் காந்தளுங் கொய்தரும் பாயமுல்லை
பகப்பகை யாய நகையாய் கொணர்ந்தனன் பார்கலிக்கு
மிகப்பகை யாய கொடைவேத நாயக வேள்வனைக்கே. (கசஂ)

தலைவியைப் பாங்கிற்கூட்டல்.

இருளிற் கமல மலர்ந்தது வள்ளோயி லேறியது
சுருளிற் கழிந்த கருநீல மாயத்திற் றுன்னுவம்வா
வருளிற் பெரியன் பொருளிற் பெரிய னமைந்தபன்னூற்
றெருளிற் பெரிய னெனும்வேத நாயகச் சேய்வனைக்கே. (கசக)

நீங்கித்தலைவற் கோம்படைசாற்றல்.

நிறவேல்கைக் கொண்ட நெடுந்தகை யேயெமர் நீதியுமிவ்
வுறவே லெனும்பக்க முற்றேர்ந் திடையீ டுறப்புரிந்தேன்
றிறவேல் விழிபழி சாரா வகையது சிக்தைசெய்மின்
மறவே லெண்ணென்று நூல்வேத நாயக மால்வனைக்கே. (கசஉ)

உலகியன் மேம்படவிருந்து விலக்கல்.

பாலிற் சமைந்த திணைமூ ரலுமெமர் பற்றுகொடுங்
கோலிற் சமைந்த முயலு னுங் தேனுங்கைக் கொண்டருந்தி
வேலிற் சமைந்தகை யாயின்று வைகி விடியுமுன்சென்
மாலிற் சமைந்த கொடைவேத நாயக மால்வனைக்கே. (கசஙூ)

விருந்திறைலிரும்பல்.

காதா யினுமினி யாயென்பர் பாலருள் காட்டுபெருங்
கோதா யினும்வளர் சீர்வேத நாயகக் கோன்வனைப்பாற்
சூதா யினும்வளர் பூண்முலை யீருங்கை தொட்டபொருள்
யாதா யினுமெனக் கின்னமு தாமுணற் கென்கசப்பே. (கசச)

ஒருசார்பகற்குறி.

கிழவோன்பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுதுகண்டிரங்கல்.

வேயாமல் வைப்பதில் சீர்வேத நாயக வேள்வரைவா
யீயாம லீட்டுந ரீயா வளற்றி னிடைவிழல்போற்
பாயாமல் வல்லிருள் சிப்பவன் மேல்கடற் பால்விழுந்தான்
மாயாம லன்னார் பழிபோ லெழுந்தது மாலையுமே. (கசடு)

பாங்கி புலம்பல்.

நம்மாலை யேநிகர் மால்வேத நாயக நம்பிவெற்பி
லெம்மாலை யோசெய் வதியா திறைவ ரிணைத்தடந்தோ
ளம்மாலை யேவிழைந் தாமாலை யேற்ற வணங்கணங்க
விம்மாலை யேவினர் யாரவர் வாழிய வெற்றைக்குமே. (கசசு)

தலைவனீட்டத் தலைவிவருந்தல்.

பொன்னே வெணுமதி மால்வேத நாயக பூபன்வெற்பி
லன்னே வருள்விழி காலியென் ரூர்தனி யாவியென்ரூர்
மின்னே வெனுமிடை தேம்புமென் ரூர்கடி வேம்புமென்ரு
சென்னே வாதெளித் தாரளித் தாரம் பிறையவரே. (கசள)

தலைவியைப் பாங்கிகழறல்.

கூடினர் பின்பிரி வார்பிரிந் தாரும்பின் கூடுவர்வா
னேடினர் தோன்று வதும்பின் மறைவது முள்ளுணர்ப்பப்
பாடினர் கற்ப தருவேத நாயக பார்த்திபரே
டிடினர் போற்கலங் கேலைய லோரி னெழிவதன்றே. (கசஅ)

தலைவி முன்னிலைப்புறமொழிமொழிதல்.

தகையுற் றிடுகுறிப் பான்மொழி யாமுனந் தாமுரை
மிகையுற் றிடுநரல் லார்க்கொரு வார்த்தை விடுப்பதினுந்
திகையுற் றிடுமெய்ப் புகழ்வேத நாயகச் செல்வவெணெடு
பகையுற் றிடுமது வேநன்று நன்று படர்பவர்க்கே. (கசகூ)

தலைவி பாங்கியொடுபகர்தல்.

ஏட்டிற் பதிப்பருஞ் சீர்வேத நாயக வேங்கல்வெற்பில்
வேட்டிப் படித்துய சென்றுசெய் தோனிரு மெய்புமொன்ரு
நாட்டிப் படைத்திலன் யானென்செய் கேன்சொன் னவின்மொழியோ
கூட்டிப் பிரித்துப் பிரித்துப்பின் கூட்டவொண் கோற்றொடியே. ()

தலைவியைப் பாங்கியச்சுறுத்தல்.

நெஞ்சிறை கொண்ட விறைவெளித் தோற்ற நிறீஇப்புனத்து
ளஞ்சிறை வண்ணி யிறைகொளச் செய்த தறிந்தனரே
னஞ்சிறை வேனம நிற்சிறை வைப்பர்நள் ளார்கலிய
வெஞ்சிறை செய்த திறல்வேத நாயக வேள்வரைக்கே. (கடுக)

நீங்கற்கருமை தலைவிநினைந்திரங்கல்.

காவியொன் றுக மதன்வேத நாயகக் காவெவெற்பி
னுவியொன் றுகப் புணருழ லாய்நல நண்ணவெங்கட்
காவியொன் றுக வமைந்தது போன்மெய்யு மன்றுசெய்த
பாவியொன் றுகப் படைத்தில னேயென்ன பாவமிதே. (கருஉ)

தலைவிக்கவன்வரல் பாங்கிசாற்றல்.

பேரொலி நீர்வயல் சூழ்குளத் தூரன் பெருந்தமிழ்ப்பாச்
சிரொலி யேற்குஞ் செவிவேத நாயகச் செம்மல்வெற்பிற்
காரொலி யேற்று மகிழ்மயில் போலநங் காவலர்தந்
தேரொலி யேற்று மகிழ்வாய் குழைநின் றிருச்செவிக்கே. (கருங)

பாங்கி தலைவற்குச் சிறைப்புறமாகச்செறிப்பறிவுறுத்தல்.

பணியார் பணிய நகுவேத நாயகப் பண்பன்வெற்பிற்
கணியார் மதுமலர் வாய்திறந் தார்முற் கடிந்தபகை
தணியார் தினையற நாட்குறித் தார்தடிந் தாரினியாந்
தினியார் மனத்தின் மயில்காள்செல் வேமெஞ் சிறுமனைக்கே. (கருச)

முன்னிலைப்புறமொழி மொழிந்தறிவுறுத்தல்.

சிறப்பினுஞ் செல்வத் தினும்பொலி வோன்செம்பொ னேற்றவரே
யுறப்பினு நல்கு மொருவேத நாயக வும்பல்வெற்பிற்
பறப்பினும் பாடினுங் கூடினு நீடின பார்த்திபர்தா
மறப்பினு நீவிர் மறவீர்வண் டூரெங்கண் மாதினையே. (கருடு)

முன்னின் றுணர்த்தல்.

தாவேங்கை யென்றிரப் பார்காம தேனு தழுவுமிழ்கண்
மாவேங்கை யன்ன வலிவேத நாயக மால்வரைமேற்
பூவேங்கை காட்டத் தடிந்தார் தினையிப் புனத்தையினிக்
காவேங்கை விட்டனங் காப்பே மணியகங் காவலனே. (கருஈ)

முனனின்னுணர்த்து ஓமபடைசாறறல.

தினையென் றுளங்கொண் டிருந்தேமெம் முள்ளஞ் சிதைத்திடுதி
வினையென் றுளங்கொண் டிலேமைய னேயினி மேவிடமூர்
மனையென் றுளங்கொண் டவண்வா புரத்தி மயிலேயுல
கனையென் றுளங்கொண்ட மால்வேத நாயக வண்ணலொத்தே. (கருஎ)

கிழவோன் தஞ்சம்பெறுதுநெஞ்சொடுகிளத்தல்.

தண்ணிய வாறடி கொப்புள்கொள் வெப்புந் தருவதுபோற்
கண்ணிய வின்பந் தருபுனந் துன்பமுங் காட்டியது
புண்ணிய வான்குளத் தூர்வேத நாயக பூபன்வெற்பி
னண்ணிய வாமன மேயென்செய் வாமுண் ணலிதுயர்க்கே. (கருஅ)

பகற்குறி இடையீடு.

இறைவனைப்பாங்கிகுறிவரல்விலக்கல்.

புறவரி வானிக ருங்குர னேக்கப் புனம்புகுந்து
குறவரி யாளி பொருமா லுலாவுவர் கோற்றுடிப்பொன்
னிறவரி மானப் பொலிவேத நாயக னேயன்வெற்பின்
மறவரி வேல்விழி பாற்பல காலும் வருமன்னே. (கஞிகூ)

இறைவியைப்பாங்கிகுறிவரல்விலக்கல்.

கடங்கொண் டெழுகளிற் றுன்வேத நாயகக் காளைவெற்பி
லிடங்கொண் டெழுபுலி யுங்குலை யுஞ்சிற் றிடையுமெய்யிற்
றிடங்கொண் டெழுபசப் புங்கண்டென் னெஞ்சிந்தை செய்தனளாய்
மடங்கொண் டெழுமயி லேயினி வாவலிவ் வண்பொழிற்கே. (கசுo)

இறைமகளாடிடநோக்கியழுங்கல்.

கனமே பொருவுசெங் கைவேத நாயகக் காளைவரைப்
புனமே வுதலை நினையா மனையிற் புகுதுவமித்
தினமேயெந் தன்றிகொன் றூர்க்குமுய் வுண்டியவு செப்பினிலை
மனமேசெய்ந் தன்றிகொன் றூர்க்கெல் பதனை மறந்தனமே. (கசுக)

பாங்கியாடிடம்விடுத்துக்கொண்டகறல்.

குரல்கவ ராது கடிந்தெண் ணுதிக் குளிர்புனத்தே
யுரல்கவர் காற்களிற் றூர்வரிற் பேரஞ நற்றறன்மீன்
சிரல்கவர் செய்க்குளத் தூர்வேத நாயகச் செம்மல்வெற்ப
தரல்கவ ரோதியர் சென்றுரென் றோதுமின் றக்கைகளே. (கசுஉ)

பின்னுள்நெடுந்தகை குறிவயினீடுசென்றிரங்கல்.

வேனினங் காமரு வேள்வேத நாயக வீரன்வெற்பென்
னூனினங் காமுயிர் நிற்குங்கொல் லோகண் ணுறுதெழியி
னேனினங் காதன் மயிலெண் ணரிவ் விடத்தெதிரார்
மானினங் காளளி காள்களி காளென் மருவியதே. (கசுரு)

வறுங்களங்காடிமறுகல்.

ஒருமான்பின் சென்று வருமான வன்கண்ட வோரிடம்போற்
றிருமா னிருந்த விடமாயிற் முலின் னுஞ் செப்வ துண்டோ
பொருமான வீரப் புயன்வேத நாயக பூபன்வெற் பில்
வருமான் மயிலினங் காண்முன்பு போலின்ப வாழ்வினையே. (கசுச)

குறுங்தொடிவாழுமூர்நோக்கிமதிமயங்கல்.

கொண்டலை வென்ற கொடைவேத நாயகக் கோன்வரையிற்
தண்டலை நின்றுழல் கின்றனம் யாமதுத் தாரையுண்டு
வண்டலை யொண்குழல் வாழுஞ்சிற் றூரது மற்றதனைக்
கண்டலை கின்றன கண்களென் செய்யக் கடவனவே. (கசுடு)

இரவுக்குறி.

இறையோன் இருட்குறிவேண்டல்.

மின்னு முழங்குவ மேகங்கல் லாமை மிகுமனத்திற்
றுன்னு மலிந்தது தூங்கிரு ளோங்குமுட் பேர்தமிழ்த்
தென்னு வெனவளர் மால்வேத நாயகச் செம்மல்வெற்பிற்
பொன்னு வெனுமட வீர்விருந் தாய்தும்மிற் போதுவனே. (கசுசு)

நெறியினதருமைகூறல்.

வேலோ டிலாவு மெமருமுள் ளஞ்சுவர் வேழமிரு
நாலோடு கீளச் சமையே றுலாவு நடவையுற
றூலோடு நாளும் பயில்வேத நாயக நுண்மதிச்சீர்
மாலோடு நட்படை யார்க்கே தகுநீ மருவிரீதே. (கசுள)

இறையோன்நெறியினதெளிமைகூறல்.

போதே யிடங்கொணின் பொன்னனே யாண்முகிலப் போர்க்களிறு
மாதே யிடைச்சிங்க மல்குற் பணியொடு மாறுகொள்ளேன்
காதே தெனினுமுள் ளஞ்சுவ லோகலங் கேன்சுகுண
மீதேதறி நின்ற புகழ்வேத நாயக வேள்வனைக்கே. (கசுஅ)

பாங்கியவனுட்டணியியல்விஞதல்.

நின்னுட் டியன்மட வார்வினை யாடுநன் னீழலெவன்
பொன்னுட் டிழையெவன் பூசும் விரையெவன் போற்றுடையெ
னிங்நாட்டின் மேவவைத் தருளீவத நாயக வேந்தல்வெற்பின்
மின்னுட் டிசையண்ண லேயெண்ண லேதும் விளம்புகவே. (கசுக)

கிழவோன் அவணுட்டணியியல்விஞதல்.

எண்ணுட் டணியிய லாயுங் குறிப்பு னினிதுணர்ந்தேதன்
பொன்னுட் டியன்மட மாதேத புனல்கொடு பொங்குபொன்னி
நன்னுட் டியல்குளத் தூர்வேத நாயக நம்பிவைமா
நின்னுட் டணியிய லெல்லா மெனக்கு நிகழ்த்துகவே. (கஎ0)

அவற்குத்தன்னுட்டணியியல்பாங்கிசாற்றல்.

நாடுவர் கற்ப தருவேத நாயக நம்பிவெற்பிற்
சூடுவர் முத்த முடிப்பர்பொன் வேங்கைத் துணர்குறிஞ்சி
பாடுவர் பூசுவர் செஞ்சாந்து நீத்து படர்சுணைப்
காடுவர் பிண்டி நிழற்பயில் வாரைப் பரிவையரே. (கஎக)

இறைவிக்குஇறையோன்குறையறிவுறுத்தல்.

எட்டிணை யொக்கும் பழிபு மிலான்றெவ் விரிதருப்வாள்
வெட்டிணை யொக்கு நகைவேத நாயக வேள்வனைவாய்
வட்டிணை யொக்கு முலையாய்பன் மாவுறும் வட்டையிற்கண்
கட்டிணை யொக்கு மிருள்வரல் வேண்டினர் காதலரே. (கஎஉ)

நேரிதிறைவிநெஞ்சொடுகிளத்தல்.

கண்ணணே யார்புகழ் வாரெனச் சீர்த்தவன் காவின்மலர்க்
கண்ணணே யார்குளத் தூர்வேத நாயகக் காளைவரைக்
கண்ணணே யார்கரி தேர்ந்தரி மேவுங் கடவழிநங்
கண்ணணே யார்வரு வார்மன மேபென் கருதுவதே. (களக)

நேரிழைபாங்கியொடுகேர்ந்தாரைத்தல்.

கருவா ரணங்கவிக் கீவோன்வெள் வாரணங் கையுடையோன்
மருவார ணங்கட வாவேத நாயக வள்ளல்வெற்பி
லொருவா ரணங்கர வஞ்சூ ருலாவழி யுற்றிருவர்
வருவா ரணங்கணே யாய்நினை யாயென் மறுப்பதுவே. (களச)

கேர்ந்தமைபாங்கிகெடுந்தகைக்குரைத்தல்.

குவிடை யார்குழல் பொன்னடி வீழ்ந்துன் குறையுரைத்திவ்
விரவிடை யானிரந் தேன்கரந் தேனல னெட்டுணையுங்
கிரவிடை யாவன் சிலைகனி யாக்கவுங் தேர்ந்தணன்சீர்
வரவிடை யாளி யெனும்வேத நாயக மால்வரைக்கே. (களஞ)

குறியிடைநிநீ இத்தாய்துயிலறிதல்.

வண்டியை பூந்தொடை மால்வேத நாயக மன்னன்வெற்பிற்
கண்டியை மென்மொழி மாதே கரடக் கடவபித்
தண்டியை கோட்டுக் களிறுன் னுனக்குத் தளிருதவும்
பிண்டியை வந்தலைக் கின்றது நின்றது பேதுறவே. (களசு)

இறைவிக்கிறைவன்வரவறிவுறுத்தல்.

வடியொன்று வேனெடுங் கண்மட வாய்திட வாய்மைகொள்பல்
குடியொன்று வான்குளத் தூர்வேத நாயகக் கோன்வரைப்பாற்
கடியொன்று வான்புன முன்னுள் வருவெங் களிறுவந்து
பிடியொன்று நாடிநிற் கின்றதின் றோர்நம் பெருமைபொழிற்கே.(களஎ)

அவட்கொண்டுசேறல்.

பூக்கொண்ட வேங்கையின் வாய்த்துப்பி வந்து பொருந்தியது
காக்கொண்ட பூங்குழ லாயிறம் பூதது காண்பதற்குத்
தேக்கொண்ட தாமரைத் தாள்பெயர் மெல்லச்செல் வாநிறத்து
மாக்கொண்ட கொண்ட லெனும்வேத நாயக மால்வரைக்கே.(களஅ)

குறியுய்த்தகறல்.

மண்ணிற் பொலியும் வணஞ்செந் தமிழை வளர்த்தறிஞ
ரெண்ணிற் பொலியும் புகழ்வேத நாயக வேந்தல்வெற்புன்
கண்ணிற் பொலியு நறுநீலங் கொய்துகைக் கொண்டுநடு
விண்ணிற் பொலியுமின் னேயுறு வேனிங்கு மேவுகவே. (களக)

வண்டுறைதாரோன்வந்தெதிர்ப்படுதல்.

இரியா விருளின் மலர்மாளி கைச்செவ் விதழ்ப்புதவு
புரியா முழுமுணிப் பூணெளி யேகதிர் போலவெழுந்

தரியா தனர்கண் மணிவேத நாயக வண்ணல்வெற்பில்
விரியா வுலாய்த்திறந் தோதிரு மாதிங்கு மேவியதே. (கஅ0)

பெருமகள் ஆற்றினதருமைநினைந்திரங்கல்.

கல்லார் மனத்திற் கருகிருள் வாய்மூட் கடிவழிக்கை
வில்லார் விழிக்கு மரிமாவ மர்க்கும் விலங்கிமதி
வல்லார் புகழ்குளத் தூர்வேத நாயக மன்னவனுக்
கொல்லாரி னீங்கடைந் தாய்பாவி யேன்பொருட் டுத்தமனே. (கஅக)

புரவலன்றேற்றல்.

ஒருகோட்டு வாரண மாளரி கூற்றிற்குட் கேனலேய
பொருகோட்டு வாரியு நீந்துவன் வெங்கரி பொங்கரிநேர்
வருகோட்டு வின்னுமர் கான்யாற்றுக் கஞ்சுவ லோமயங்கே
றிருகோட்டு நன்மொழி வாய்வேத நாயகச் சேய்வரைக்கே. (கஅஉ)

புணர்தல்.

தறியா மதியுமத் தாமந் தரமுந் தனிக்கயிறு
முறியா வரவு மொருதாழி யாமுமுப் பாற்கடலைச்
செறியா திருக்கவு முண்டே மமுதித் திறமெவர்க்காம்
வெறியார் மலர்த்தொடைத் தோள்வேத நாயக வேள்வரைக்கே. ()

புகழ்தல்.

ஏற்றல வோதைக் குளத்தூரன் வெங்கலி யென்னுந்துய்க்குக்
காற்றல வோவெனு மால்வேத நாயகக் காளைவெற்பிற்
கூற்றல வோவெனுங் கண்மட வீருங் குளிர்நகைக்குத்
தோற்றல வோமுத்த நாளுக்கு நாண்மெய் சுருங்குவதே (கஅச)

இறைமகளிறைவனைக்குறிவரல்விலக்கல்.

பரிகரி பாவுக் கருன்வேத நாயகப் பண்பன்வெற்பிற்
புரிகரி நீதிக் கெனுமிறை வாரற்க போற்றியிது
தெரிகரி யாதமுள் ளாறுநள் ளாறு செனுமெமரு
மரிகரி யென்ப ரரகர வென்பால் வாயடைந்தே. (கஅசு)

அவன் இறைவியையில்வயின்விடுத்தல்.

வாரகந் தோய்முலை யாய்வேத நாயக வள்ளல்வெற்பிற்
சூரகந் தோய்பொழி லிவ்விரு ணீகிற்ற றாய்மையன்று
நாரகந் தோய்பு மீனேதடி நண்ணினு நண்ணுமெல்லப்
பாரகந் தோயநின் பாதார விந்தப் படர்மீனக்கே. (கஅஎ)

இறைவியையெய்திப்பாங்கியையுறைகாட்டல்.

விசாமலி கூந்தலங் கானக் குளவுகண் வீசுகெய்த
னுசாமலி மானமின் னேகூடி யொற்றி யுறக்கொணர்ந்தேதன்
றிசாமலி காளை யணைத்துப் பெடைக்கிதஞ் செப்பவெண்டா
மசாமலி வான்குளத் தூர்வேத நாயக மால்வரைக்கே. (கஅஏ)

இற்கொண்டேகல்.

வம்பரை நட்புக் கொளாதேவத நாயக மால்வரைப்பூங்
கொம்பரை நீயணைத் தாலுஞ் சினந்துட் கொதிக்குமன்னீ
யிம்பரை மேவியிக் கங்குலின் வாய்நிற்ப தேற்குங்கொலோ
வம்பரை யாள்விழி யாய்மெல்லச் செல்கநின் னுய்மனைக்கே. (கஅஅ)

பிற்சென்றிறைவனைவரவுவிலக்கல்.

சீராழி யங்கைப் புயல்வேத நாயகச் செம்மல்வெற்பிற்
காராழி மேலெழுந் தென்னச் செறிகருங் கங்குலின்வாய்ப்
பேராழி யம்புய மாளிகை வாழுமோர் பெண்பொருட்டின்
றேராழி யேழ்பரி யொண்டேரி லாய்வர லோவுகவே. (கஅகூ)

பெருமகன்மயங்கல்.

மயிர்நீத்து வாழுமென் னுமா னெனப்பெரு மானமிக்கோன்
செயிர்நீத்து வாழும் புகழ்வேத நாயகச் செல்வன்வெற்பிற்
பயிர்நீத்து வாழும் பசுங்கதி சொற்றுமைப் பட்டுறுமின்
னுயிர்நீதது வாழு முடலென்பை யேனுய்வ னெண்டொடியே. ()

தோழிதலைமகள்துயர்கிளத்துவிடுத்தல்.

இரக்காம்பல் காட்டி யெனகா வலரிறு மாப்பநல்குந்
தரக்காம்ப னோர்வலி மால்வேத நாயக தாருவெற்பில்
வரக்காம்ப னோர்திர டோள்குழுன் மாதுன்கை வண்டுநின்வா
யரக்காம்பல் சேர்த்திடி னின்பரி ணம மறிந்துய்வளே. (ககூக)

திரும்கட்புணர்ந்தவன்சேறல்.

காலேகண் ணுகக் கருகிரு ளாயினுங் காவல்கொண்ட
மாலே நிகர்குளத் தூர்வேத நாயக மன்னன்வெற்பிற்
சேலேய் விழிமுலே தாக்கவென் றேருநற்ற செஞ்சக்தொளி
போலே யகற்ற வெளிதாவென் னூருக்குப் போதுவனே. (ககூஉ)

இரவுக்குறியிடையீடு.

இறைவிக்கிருளே இறைவரவுணர்த்தல்.

நகைத்தா ணிருமுன் மாதேபைக் தோகை நகுமயில்கண்
முகைத்தா தருகணிச் சூழலின் வாயெல்லி முற்றும்பற்றித்
தகைத்தா ணிபுகழ் மாலவேத நாயக தாருவொடு
பகைத்தார் பொருவத் துயிலா தமுங்கிப் பதைத்தலென்னே. (ககூங)

தான்குறிமருண்டமைதலேவியவட்குணர்த்தல்.

ஆயிரே யெனுஞ்சொ லனமெ யிதாருக் கறைகுவலென்
னுயிரேய் பவர்குறி யென்றுமற் றேர்குறி யுற்றுமத்தார்
தயிரே யெனவுள் ளுடைந்திடைக் தேன்கங்கு றங்களவுஞ்
செயிரே யிலாத புகழ்வேத நாயகச் சேய்வனைக்கே. (ககூச)

பாங்கிதலைவன் தீங்கெடுத்தியம்பல்.

வடிக்கடி வேல்விழி யாய்வேத நாயக வள்ளல்வெற்பிற்
றொடிக்கடி மாலையர் தோள்வாடி யெல்லி துணைந்தினைந்தாங்
கடிக்கடி நீசென்று மாழாந் தணுகவுள் ளன்பிலர்போன்
முடிக்கடி மாலாக மன்பர்செய் தார்பொய் முழுக்குறியே. (ககூடு)

புலந்தவன்போதல்.

கனமேமய் குழலி பொருட்டுக் குருட்டுக் கருங்கங்குல்வாய்
வனமேவு வட்டை யிழுத்துப் பழுத்தசொல் வாணர்கொளத்
தினமே சிவிகை யருள்வேத நாயகச் சேய்வரையென்
மனமே யெணக்கெடுத் தாய்கொடுத் தாய்துயர் வாழியவே. (ககூசு)

புலர்ந்தபின்வறங்களம் தலைவிகண்டிரங்கல்.

மன்னுக மேவி வளர்வேத நாயக வள்ளறுறைப்
புன்னுக மேமியத் தவம்புரிந் தாய்துயர் போர்த்துநிற்கு
மென்னு கமுமிவ ணுற்றோர் பயனின்றி யெய்திறைவன்
றன்னுக முந்துன் னுதார்நீ யணிந்து தழைப்பதற்கே. (ககூஎ)

தலைவிதன்தோழிக்குரைத்தல்.

பொன்னுர மார்பப் புயல்வேத நாயக பூபன்வெற்பின்
மின்னுர மார்ப னெருகணிக் கீழ்நின்ற மென்கொடிக்குத்
தன்னுரம் வாங்குபு சூட்டினன் யானென்று தங்கிருள்வா
யென்னு ரமுதணை யாய்தெரிந் தார்க்கி திகழ்ச்சியன்றே. (ககூஅ)

தலைமகளவலம்பாங்கிதணித்தல்.

காமனை வென்ற கவின்வேத நாயகக் காவெற்பி
ணுமனை யாமத்து நண்ணினர் செய்த நருகுறியோ
பாமனை மேகலே யாய்மெய்ம்மை யேயுட் பரிவொழிக
தாமனை வேங்கையின் மேலே றியதிறந் தாணுணரே. (ககூகூ)

இறைவன்மேற்பாங்குறிபிழைப்பேற்றல்.

பாட்டார் சுருமப்பு முரறைடை யீர்புகழ் பற்றியகோ
ஞட்டார் குடிக்கு முதல்வேத நாயக நம்பிவெற்பின்
மாட்டாசெம் மூர்க்கு வான்மறந் தீரின்பம் வாய்மடுப்ப
வேட்டார்தம் மூர்க்கு வருவேமவ ஞர்ப்பெயர் விள்ளுமினே. (உ00)

இறைவிமேலிறைவன்குறிபிழைப்பேற்றல்.

நத்தேர் மலிசெங்கை மால்வேத நாயக நம்பிவெற்ப
கத்தேதின் மங்கையை யாய்ந்ததற் கோதுங் கரியதுவே
முத்தேத யெனுகை யாய்பிறர் குற்ற மொழிநன்றி
யொத்தேதங் குற்ற முளாப்பா ரெவரிவ் வுலகத்திலே. (உ0க)

அவள்குறிமருண்டமையவளவற்கியம்பல்.

மேலாய தென்குளத் தூர்வேத நாயக வேள்விலங்கற்
பாலாய நின்குறி யோராது வேறு படுங்குறியன்

பால்ய நின்குறி யென்றடைந் தேயல் லழுங்கவெங்கள்
சேலாய கண்ணிதன் பாலுற்ற தாலொரு தீவினையே. (உ0உ)

அவன்மொழிக்கொடுமைசென் றவளவட்கியம்பல்.

ஏடா ரலங்கற் புயவேத நாயக வேந்தல்வெற்பி
லோடா வீருளில் வெருளில் வழுவை யுழுவையரி
கூடா வெதிர்கொளக் கண்டுமொர் மான்குறு காமையினுல்
வீடா வஞருற்றுச் சென்றேறனென் றான்பர் மெல்லியலே. (உ0ஊ)

என்பிழைப்பன்றென்றிறைவிகோதல்.

கன்தோ டிகல்களிற் றன்வேத நாயகக் காளவெற்பில்
வன்தோ வவர்செய் குறிகுறி யாது மயிறுயிலா
திந்தோ வெனுறுத லாய்பிணங் கோதையை யேற்றழுங்கி
யந்தோ விறைவருக் கியான்செய்த தீங்குக் களவிலையே. (உ0ச)

தாய்துஞ்சாமை.

நிலங்கொண்ட தாணெடு மால்வேத நாயக னேயன்வெற்பி
னலங்கொண்ட வாண்முகத் தாய்கொச்சிப் பூவுதிர் கள்ளிருஞ
மிலங்கொண் டதாய்கண் டுயிலா கருநெய்த லென்றுவமை
புலங்கொண் டவர்சொல் வதுதகு மாலப் பொருவிழிக்கே. (உ0ரு)

நாய்துஞ்சாமை.

வாய்துயின் றூலு மருவம் பருக்கு வருத்துகொடு
கோய்துயின் றூலு நிலைமை யுறுதெங்கு நோக்கியலே
பேய்துயின் றூலும் புகழ்வேத நாயகப் பேகன்வெற்பென்
றாய்துயின் றூலுமென் னுய்துயி லாது தவக்குரைத்தே. (உ0கூ)

ஊர்துஞ்சாமை.

ஆடுவர் தென்குளத் தூர்வேத நாயக வண்ணல்புகழ்
பாடுவர் மன்ற லணிகாணத் தீபம் பலவமைத்துக்
கூடுவ ரிங்ஙக ணுள்ளாரிவ் வாறு குலவியின்ப
நீடுவ ரென்னினைவ் வாறன்பர் தாமிங்கு நேர்வதுவே. (உ0எ)

காவலர்கடுகுதல்.

மிடியொலி மாற்றிய மால்வேத நாயக வேள்குளத்தூர்க்
கடியொலி யோங்கு மதுவும்பற் றுதென்று காவலர்கைத்
துடியொலி யோங்கக் கடிப்புறத் தாக்குமித் துன்றெலியா
லிடியொலி யேற்கு மாவாயி னேன்செய்வ தென்னணங்கே. (உ0அ)

நிலவுவெளிப்படுதல்.

சினக்கதிர் வேலுடை யாளெளி யேற்கருள் செய்யமதன்
றனக்கதிர் வாற்றவென் மான்றேர் கடவித் தனிவருநாண்
மனக்கதிர் வில்வலி மால்வேத நாயக வள்ளல்புக
ழெனக்கதிர் வீசி நெடுவான் முகட்டி லெழுநிலவே. (உ0கூ)

சலமே சலஞ்சல மேயொழி யாதது சஞ்சலமே
வலமே வருவல மேயன்பர் தேரீ மருவலமே. (உஉச)

தன்னுட்கையாறெய்திடுகிளவி.

குலவு குவீளையந் தார்வேத நாயகக் கோன்கடலே
நிலவு மணியும் வெறுப்பாய் பசந்த நிறம்படைப்பா
யுலவு வனீபொருந் தாதெறி வாயல் யுறங்கிலியுட்
கலவு கருத்தென் றணந்தாய்கொ னீயுங் கணவரையே. (உஉரு)

நெறிவிலக்குவித்தல்.

தாயனீ யான்செந் தமிழ்வேத நாயக தாருவெற்பிற்
றீயனீ யார்பயில் வெங்கா னெறியிற் செறியிருட்டோள்
வேயனீ யாயுயிர் கொண்டேகி னுய்வெற் றுடனிமித்தஞ்
சாயனீ யாய்வரல் போல்லா தொழியென் றலவனுக்கே. (உஉசு)

குறிவிலக்குவித்தல்.

இனீத்தே மெலியு மிடையாயின் றேயித தணீறுபுனம்
வனீத்தே தழல்கவன் றேகொடியென் றுளனீ மற்றிருவி
கினீத்தே குரல்கொணீ டனவேத நாயக கேசரிவெற்
பினீத்தே மலர்க்குழ லாய்வார லீங்கென் றியம்பிறைக்கே. (உஉஎ)

வெறிவிலக்குவித்தல்.

முறியாடல் கொண்ட பொழிற்குளத் தூரர் முதலவனன்
னெறியாடல் கொண்ட புகழ்வேத நாயக னேயன்வெற்பின்
மறியாடல் கொண்டகண் ணெயினீச் சூர்மரு விற்றென்றணீ
வெறியாடல் கொண்டன ணீபிறி தோதி விலக்குகவே. (உஉஅ)

பிறவிலக்குவித்தல்.

நன்றே கருதி நகுவேத நாயக நம்பிசெம்பொற்
குன்றே கொடுவந் தெனக்கொணார்ந் தேபொன் குவித்தனரா
மின்றே ரிலரென் முலீவிலக் காமிவ் வியல்பின்மொழி
சென்றே செவியகந் தீத்ததென் செய்வ திருந்திழையே. (உஉசூ)

குரவுவாவாவைவெதிர்கொள்ளுவித்தல்.

வேயாதி புல்வழி யல்வர னீங்க விரிபுனற்கேர்
சாயாதி செய்குளத் தூர்வேத நாயக தாருவெற்பின்
மாயா தியலன்பர் பொன்கொண் டெனீவளர யப்புகினர்
தாயா தியரெதிர் காயா திசைகறுந் தார்க்குழலே. (உஉ0)

வை வு கடா தல்.

வினவியசெவிலிக்குமறைத்தமைவிளம்பல்.

கைத்தாய்நங் கண்மணி கண்மணி சோரக் கனதனமும்
பைத்தா யடைய வடைந்தகதென் கூறெனப் பார்க்கொருவாய்
மைத்தா யணீய வருள்வேத நாயக மால்வரைநிற்
தைத்தாய் வருமென்று மாற்றினன் வேறென்று சாற்றியின்றே. ()

அலரறிவுறுத்தல்.

பலராய் புகழ்பெற்ற மால்வேத நாயக பானுவெற்பின்
மலராய் தொடைத்தடந் தோளண்ண லீசெய்த மன்னருடா
னலராய் தளிர்க்கை யரும்புமென் மாமுலை நங்கள்கொடிக்
கலராய் முடிந்தது காயா தெவர்புகழ் வார்கனிக்தே. (உகஉ)

தாயறிவுறுத்தல்.

தெவ்வாய் வருநரி லாவேத நாயகச் செம்மல்வெற்பிற்
குவ்வாய் பிளப்பப் பலாக்கனி தொட்டுக் கொருகராய்
வெவ்வாய் வடிநெடு வேல்விழி மாதுபொன் மேனியொடு
செவ்வாய் விளர்ப்பிற் களவோர்ந்து தாய்கண் சிவந்தனளே. (உகஊ)

வெறியச்சுறுத்தல்.

மேலா னறிவின் மிளிர்வேத நாயக வேள்வரைவாய்ச்
சூலான் மலிமுகி லொத்தகை யாய்திதய்வந் தொட்டதென்றுய்
மாலான் மயங்கு மடமாணுண் ணெய்ம்மதி யாதுவன்னி
காலா னியங்கத் தகரியங் காமை கருதினளே. (உகச)

பிறர்வினாவுணர்த்தல்.

சொல்லார் பெரும்புகழ் மால்வேத நாயகத் தூயன்வெற்பின்
மல்லார் புயத்த மடமாது கொங்கை வழங்குதொழி
லில்லார் திருவி னிடைபோய்க் கழிய வெழுதல்கண்டு
பல்லார் விரும்பினர் யார்விரும் பார்தனம் பாரிடத்தே. (உகடு)

வரைவெதிர்வுணர்த்தல்.

கழைமல ரங்கை கொளாவேத நாயக காமன்வெற்பிற்
றழைகதிர் வேலண்ண லேமட மான்மணத் தைக்குறித்திவ்
வுழைபுறு வாயெனின் யாருவ வாரின் புறவெமருண்
மழைமுகில் கண்டுவ வாதபைங் கூழெவன் மண்ணகத்தே. (உகக)

வனாயுகாளுணர்த்தல்.

ஒருபா சடையிடை வெண்டா மரையென வூருற்றதேர்
தருபான் மதிநிதி போற்வு வுதிர்க்குந் தழைகளிகள்
வருபா வலருண் மகிழ்வேத நாயக வள்ளல்வரை
நிருபா மணம்புரி காலமின் னேவந்து தேர்ந்தனுவே. (உகஎ)

அறிவறிவுறுத்தல்.

செறிவென் பதுகொள் புகழ்வேத நாயகச் சேய்வளைப்பெண்
ணறிவென் பதுபெரும் பேதமைத் தென்ப ரதுமறுத்தாண்
முறிவென் பதுபுகு தாவே லவிவெம் முலைபெமர்க்கு
மறிவென் பதுகுறி யாநெறி யோதுநன் மாண்படைந்தே. (உகஅ)

குறிபெயர்த்திடுதல்.

இரவல ரேத்து மதிவேத நாயக வேந்தல்வெற்பிற்
பரவலர் கல்லிய திப்பொழில் வேருன்று பார்வடிவேற்

கரவல வேடர்கண் காணுமை லேகளித் தாடவருட்
புரவல பொங்கெழி லெங்கண்மின் னுளொடு போதுகவே. (உங)

பகல்வருவானெயிரவுவருகென்றல்.

புரவுக் கிரவு ரவமாதி நீக்கும் பொலிவினுக்கா
தரவுக் கிரவு குறிவேத நாயக தாருவெற்பில்
வரவுக் கிரவு சிதவே லவபகல் வாரற்கநீ
கரவுக் கிரவு சிறந்தகென் பாரிக் கடற்புவிக்கே. (உச0)

இரவுவருவானேப்பகல்வருகென்றல்.

மூகத்தா மாகைை யகத்தா மையின்ப முற்றியபொற்
பகத்தா மையம் பகத்தா மைபகத் தாமைமற்
றகத்தா மையிரு ளிற்பொலி யாபக லங்கடையேன்
மகத்தா மையர் புகழ்வேத நாயக மால்வரைக்கே. (உசக)

பகலிணுமிரவினும்பயின் றுவருகென்றல்.

வண்கொடி வாய்நின் றிரவிற் பொலியு மலர்கள்பல
வெண்கொடி வாவிற் பொலிமல ரும்பல வென்னின்வெற்றி
யொண்கொடி யாரணி யாயிரு போது முறவருதி
திண்கொடி யாரைச் செறும்வேத நாயகச் சேயவ்வரைக்கே. (உசஉ)

பகலிணுமிரவினுமகலிவணென்றல்.

பகலிற் குவலய மாயு மலர்படு மேயிரவி
லிகலிற் கருதரி யாம்பல் சிவக்கு மிலங்கறிவு
மிகலிற் பொலிகுளத் தூர்வேத நாயக வேல்வரைப்பா
லகலிற் சொலுமிரு போது மணுகு மவர்மணமே. (உசங)

உரவோனுமூருங்குலனுமரபும்புகழும்வாய்மையுங்கூறல்.

ஆர்க்குங் கொடைப்புகழ் மால்வேத நாயக வண்ணல்வெற்பிற்
போர்க்குந் திறற்பெருந் தோளாய்கின் னுட்டிற்கும் பொங்குதிரு
ஆர்க்குங் குலத்திற்கு மொவ்வாக் குடிக்கு மொழிவரிய
சீர்க்குநல் வாய்மைக்கு மேலா து நீகிந்தை செய்களவே. (உசச)

ஆறபார்த்திற்றவச்சங்கூறல்.

கடாவடி நெண்மலீ யாங்குளத் தூரன் கருதலர்வர்
தடாவடி வீழப் பொலிவேத நாயக வண்ணல்வெற்பில்
விடாவடி வேல படமாது சோருர்வன் பீகழுற்றுங்
குடாவடி சூழ்ந்தகழ் காரிரு ணீவருங் கோளஞ்கியே. (உசரு)

ஆற்றுத்தன்மையாற்றக்கூறல்.

பூச்செறி வாணிற பால்வேத நாயக பூபன்வரைக்
காச்செறி வாள்பின்னு மிற்செறி வாளுட் கனன்றுசில
பேச்செறி வாள்கை வனீயெறி வாள்கனல் பெற்றெருடு
மூச்செறி வாள்விழு வாளெழு வாளெங்கண் மொய்குழலே. (உசசு)

காவன்மிகவுரைத்தல்.

படித்தலத் தேர்மலி யிற்குளத் தூரன் பகைவர்முடி
யடித்தலத் தேவைத் தருள்வேத நாயக வண்ணல்வெற்பின்
முடித்தலத் தேந்து தொடையாய் மகளே முனிந்தீயென்
மடித்தலத் தேதுயி லென்றணைப் பாடியில் வாஞ்சையற்றே. (உசஎ)

காமமிகவுரைத்தல்.

விண்ணு டியமெய்ப் புகழ்வேத நாயக வேள்வரைவாய்ப்
புண்ணு டியவடி வேலண்ண லேவெளி போர்த்தவல
ருண்ணுடி மோனி யுறவாடி யுள்ள முருகுகட்குன்
கண்ணுடி யன்ன கடிமார்ப மன்றிக் கதியிலேயே. (உசஅ)


கனவுநலிபுரைத்தல்.

நந்தீண யாநல் லருள்வேத நாயக நம்பிவெற்பி
னிந்தீண யாஞ்சொல்வ தென்னேற் றிரவிடை நீகனவில்
வந்தீண யாங்கண் டுவந்தீண யாமனம் வைத்துமுத்தந்
தந்தீண யாம்பின்பு சென்றீண யாமென்று சாற்றுமின்னே. (உசகூ)

கவினழிபுரைத்தல்.

மிகையே பொருவு மிலாவேத நாயக் வேள்வரைவாய்
முகையே பொருவு முலைமாது மேமனி முருந்துவென்ற
நகையே பொருவும் விளர்ப்புற லானலி தண்மருங்குற்
றகையே பொருவு மிளைப்புற லாலென்கொல் சாற்றுவீத. (உஞ0)

ஒருவழித்தணத்தல்.



தன்பதிக்ககற்கிதலிவன்சாற்றல்.

பெருவாளே தென்னம் பழம்வீழுத் தாவும் பெருநகருக்
கிருவாளே வென்றகண் ணுயின்று சென்றிக லென்னிருட்
கொருவாளே யொத்த திறல்வேத நாயக வப்பல்வரைத்
திருவாளே வந்து வரைவேனங் குற்றிது செப்புகவே. (உஞக)

பாங்கிவிலக்கல்.

சொல்லத் துணிந்தீண யூர்க்கே குவலென்று சொற்றதன்றிச்
செல்லத் துணிந்தீண வன்கண்மை பூண்டு தெறுபகையை
வெல்லத் துணிந்த விறல்வேத நாயக வேள்வரைவாய்க்
கொல்லத் துணிந்தீண யெங்களை யோதின் குறிப்புநன்றே. (உஞஉ)

தலைவனீங்கல்வெண்டல்.

சற்றேரர் குறையுண் டகன்பொருட் டேகித் தவாதவினை
வுற்றேரர் கணத்திலிங் கெய்துவல் யான்கலி யுள்ளவெல்லாங்
கற்றேரர் புகழுங் கனவேத நாயகக் காணிவெற்பின்
மற்றேரர் கருத்துளங் கொள்ளேன் மறேலொண் மடமயிலே. (உஞங)

பாங்கிவிடுத்தல்.

கொடுப்பது வேயற மேற்றருக் கொன்று குறையுறைத்து
விடுப்பது வேமற மென்வேத நாயக வேள்வரையாய்
கடுப்பது வேயெனு மான்றேர் கடவிவெங் காற்றின்விரைந்
தடுப்பது வேமெய் யெனினேக லாநின் ணணிநகர்க்கே. (உருச)

பாங்கிதலைவிக்கவன்செலவுணர்த்தல்.

கோங்கரும் பன்ன குவிமுலை யாய்தங் குலப்பதிக்கின்
றுங்கரும் பன்ன மொழியினை யானக லேனகன்றுற்
றுங்கரும் பன்னருந் துன்புறு மேயென்றுஞ் சாற்றிநம்முள்
வாங்கரும் பன்னார்சென் றார்வேத நாயக மால்வரைக்கே. (உருடு)

தலைவிநெஞ்சொடுபுலத்தல்.

கையால் வெரிந்தை வருவாரென் கைகடங் கண்ணிலொற்றி
வையா லயிற்படை யாருவப் பார்முலை மார்பணைப்பார்
மெய்யால் விளங்கு புகழ்வேத நாயக வேள்வரைவாய்ப்
பொய்யா னிறைந்தவர் போற்பிரிந் தாரென் புகலுவதே. (உருசு)

சென்றே னீடலிற்காமமிக்ககழிபடர்கிளவி.

பொன்பொழி யார்வப் புயல்வெத் நாயக பூபன்மூந்நீ
ரின்பொழி யாத கரும்புன்னை காளிருங் கேதகைகா
டுன்பொழி யாய்துறை யாரின்ன ராலெனச் சொல்லுகிலீ
ரன்பொழி யாமையன் றேரிவளி யார்க்கணி யாவதுவே. (உருஎ)

தலைவியைப்பாங்கியாற்றுவித்தல்.

நாடுவ மான மிலாவேத நாயக நம்பிவெற்பி
னீடுவ மானனை யாயன்பர் தம்மூர் நெறிவரும்யாற்
றூடுவ மானன மாரு மலரு மலர்பறித்துச்
சூடுவ மான மிகப்பா டுவமவர் தொல்புகழே. (உருஅ)

தலைவிக்கிறையோன்வந்தமையுணர்த்தல்.

தேருங் கலிமெய்ப் புகழ்வேத நாயகச் செல்வமெனனுர்
சாருங் கவலை யடையன் மீனையுஞ் சலஞ்சலநீ
ரூருங் கவின்மலி தண்டுறைச் சேர்ப்பருற் றூருரைதி
யீருங் கணமதன் போருங்கண் ணீரு மினியிலையே. (உருசு)

பாங்கிதலைவனுடனொந்துவினுதல்.

கொங்கிருந் தாரணி தோள்வேத நாயகக் கோன்வரைசூழ்
பொங்கிருந் தாரணி யாண்மன்ன வாவுயிர் போற்றுபுயா
மிங்கிருந் தாமெம்மி னீங்கிய காண்முற்று மெவ்வணிநீ
யெங்கிருந் தாய்நின் மனமெங் கிருந்த தியப்புதியே. (உசுo)

தலைவன்பாங்கியொடுநொந்துவினுதல்.

யாமேன கியபி னைடைந்ததெல் லாமுன் னணங்குருமித்
தாமேன யெனுமெ ணுடம்பே சொலும்பலர் சாற்றலரிக்

காணே யொருமதன் றூற்றலர் போற்றிநன் காற்றிமின்னே
மாணேயெவ் வாறிருந் தாய்வேத நாயக மால்வரைக்கே. (உசுக)

தலைவியையாற்றுவித்திருந்தவருமைகூறல்.

கார்காட் டியகொடைக் கைவேத நாயகக் காரேவெற்பிற்
சீர்காட் டியகின தூர்காட் டியுநின் திருந்தகலத்
தார்காட் டியுங்குறிச் சார்காட் டியுமொண் டடமுருவிப்
போர்காட் டியவடி வேல்விழி மாதுயிர் போற்றினனே. (உசுஉ)

வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதல்.

—— ⊰✻✻✻⊱ ——

என்பொருட்பிரிவுணர்த்தேற்றிழைக்கென்றல்.

வேரூய தெவ்வரை வெல்வேத நாயக வேள்குளத்தூர்ச்
சேரூய கண்ணி முலீலீலீ யாவத் திகழ்முலீக்கு
மாரூய யாணை வெரிந்மேற் சுமந்து வரக்கொணர்வல்
பாரூய கான்சென் றருநிதி போய்ச்சொல் பணிமொழிக்கே. (உசுங)

நின்பொருட்பிரிவுநீயவட்கென்றல்.

நன்மே றவிலு நயவேத நாயக நப்பிசெம்பொற்
குன்மே புரைதிர மேடாளாய் நினது குலவுவர
வொன்மே யலாற்பிறி தேதாமே னுரைக்கின்மற் றீருலியமா
மின்மே மொழியிடை நீயேசென் றீருதி யெழுந்தருளே. (உசுச)

நீடேனென்றவனீங்கல்.

தவியாமன் மன்பதை யாள்வேத நாயக தாருவைப்
புவியாணை மீது நெடுவேங்கை யேற்றிப் பொருசிங்கம்போ
லவியா மணிவிளக் கன்னர் முகத்தி னலர்த்தமலர்
குவியாமுன் யான்வரு வேன்மறுக் கேலொளிர் கோற்றொடியே. ()

பாங்கித்தலைவிக்கவன்செலவுணர்த்தல்.

நன்றேயென் கோவன்றித் தீதேயென் கோவென் னவினுவல்யான்
வென்றே புகழ்கொண்ட மால்வேத நாயக வேள்பகைவர்
சென்றே யழல்கொடுங் கானடந் தாரன்பர் தேமொழியுன்
குன்றேய் முலீலீலீ தங்துட னேமணங் கூடுதற்கே. (உசுக)

தலைவியிரங்கல்.

பிரியேன் மடமயி லஞ்சாய னின்னைப் பிரியினுயிர்
தரியே னெனமுனஞ் சொற்றநல் லோர்குழை தாவியசே
யரியேன் மலர்வழி சொல்லா தகன்றதென் ஞற்றும்வகை
தெரியேன் மயங்க வொருவேத நாயகச் சேய்வரைக்கே. (உசுள)

பாங்கிகொடுஞ்சொற்சொல்லல்.

வெப்பா யுலகை வளையுங் கலியழல் வீப்பதற்கோ
சப்பாய் முனைத்த வருள்வேத நாயக வண்ணல்வெற்பி

லொப்பா யினுமரி யாயுண ராம வுளங்கவறி
செப்பாய் பிறரை வரைவதற் கோவன்பர் சென்றதுவே. (உசுஅ)

தலைவிகொடுஞ்சொற்சொல்லல்.

சுரும்போதை சாமெருடைத் தோள்வேத நாயகத் தோன்றலொன்னு
ரரும்போகை நீத்ததடை வெங்கானி லன்ப ரடைந்ததும்வேள்
பெரும்போரி னுலெற் கடைந்தது மோர்ந்துமிப் பேச்சுரைத்தா
யிரும்போகல் லோவறி யேன்குறி யேனின் னியன்மனமே. (உசுக)

வருகுவர்மீண்டெனப்பாங்கிவலித்தல்.

போரே வெதிரு மிமையார் கண்டிக்கெதிர் பொத்திச்செல்லு
வாரே பெடையைக் கபோதஞ் சிறைநிழல் வைத்தளிக்குஞ்
சீரே யருமையை நோக்குவர் நோக்கிற் நிருமப்புவரால்
வேரேய் குழலணங் கேலவேத நாயக வேள்வரைக்கே. (உஎ0)

பருவங்கண்டுபெருமகள்புலம்பல்.

புகழ்வேத நாயக வள்ளல்பண் டாரம் புகாவறிஞர்
திகழ்வேய்பொன் வாரி வருவது மானத் தினைக்கடனீ
ரிகழ்வேயின் மாமுகில் வாரி வருமிதற் கென்செய்வல்யா
னகழவே தண்ணுடை யேனுக வன்ப ரடைந்திலரே. (உஎக)

இருளேவம்பென்றல்.

உண்மை யுணர்ப்ப வுணர்வேத நாயக வுத்தமன்றன்
வண்மை நிகர்ப்பப் பயில்வா னெழுந்து மழைபரவைத்
தண்மை நிரப்பு புனல்வா ருபுவருஞ் சங்கணிகைக்
கண்மை மலர்க்குழல் கார்கால மென்று கருதல்வம்பே. (உஎஉ)

தலைமகண்மறுத்தல்.

காலந் தழீஇயபைங் காரன்று தேரென்று கட்டுரைத்தாய்
ஞாலந் தழீஇய புகழ்வேத நாயக நம்பிவெற்பிற்
கோலந் தழீஇய பசுமயி லாடும்பொன் கொன்றைநல்கு
மேலந்தழீஇய குழலாய்செங் காந்தள்கை யேற்குரின் றீறு. (உஎங)

அவர்தூதாகிவந்தடைந்தபொழுதெனச்சாற்றல்.

பின்னே தலைவர்தந் தேர்வரு கின்றது பேசிடநம்
முன்னே மலைவரு கார்வந்த தான்முழு நீலமுண்கண்
மின்னே குளந்தைப் பகிர்வேத நாயக வேள்வரைவா
யென்னே யினித்துய ரோவுதி மேவுதி யின்பத்தையே. (உஎச)

தலைமகளாற்றல்.

யாணுற்ற வின்ப மவர்க்கு மிலாததன் றென்னிலென்பாற்
ரூணுற்ற துன்பமு மற்றுத லாலென் றளர்வொழிய
வூணுற்ற வாருயி ரன்னுர்முன் பாதிங் குறவிடுத்தார்
மீணுற்ற செய்குளத் தூர்வேத நாயக வேள்வரைக்கே. (உஎஞ)

அவனவட்புலம்பல்.

காசோ வெனுங்குழல் சோர்த்த வார்தரு கண்களின்மை
நீசோ பெருகவவ் வெள்ளத் தழுந்தி நிலைதளராங்
கேசோதை சால்குளத் தூர்வேத நாயக வேந்தல்வெற்பி
லாசோ வினைந்துநெஞ் சேயெடுப் பார்நம் மணங்கினையே. (உளசு)

பாகனுடுசொல்லல்.

உலவா முகில்சிலை வாங்கியம் பூடுரு வப்பொழியக்
கலவாத துன்பங் கலந்துநம் மான்கலங் குந்தமிழ்க்குக்
குலவார ணந்தரு மால்வேத நாயகக் கோன்வளைப்பால்
வலவா ளனனைத் தூண்டுக தேரினி வல்விரைந்தே. (உளள)

மேகத்தொடுசொல்லல்.

சீராணி யாகின் வரவெனக் கன்பிற் சிறந்தமயி
லோராணி யாமுலீ கண்முத்தஞ் சூட வுபங்கனன்றே
தேராணி சூழு மணிவேத நாயகக் சேய்வளையென்
வாராணி கூறி மகிழ்வியென் றேர்முன்சென் மாமுகிலே. (உளஅ)

பாங்கிவலம்புரிகேட்டவன்வரவறிவுறுத்தல்.

பொங்கோதை வாரிப் புவிபுரப் போன்றெவ்வர் போற்றமெற்றி
யங்கோதை சூடு புயன்வேத நாயக வண்ணல்வெற்பில்
வெங்கோதை வேலவர் மேவினை சென்று விளங்கவர்கைச்
சங்கோதை யேநமக் கிங்கோதை யோர்நிவண் டார்க்குழலே. ()

வலம்புரிகிழத்திவாழ்த்தல்.

ஊற்றுங் கரடக் கடகளிற் றூர்வர வோதியெனக்
காற்றுந் துணியிற் றுயர்தீர்த்த சங்கடைத் தூர்கலியை
மாற்றுங் கமலக்கை மால்வேத நாயக பண்ணவன்றன்
போற்றும் புகழிற் பொலிகவெஞ் ஞான்றும் புனியிடத்தே. (உஅ0)

தலைவன்வந்தழிப்பாங்கிநினைத்தமைவினைதல்.

கொளத்தாம் வரிணுண் மகிழ்வேத நாயகக் கோன்வளைப்பொன்
வளத்தா தரம்வைத் தயனுட் டிடைத்தனி வைகுழித்தேக்
களத்தா கலிழ்குழு லெந்திரு மாது சராதிபகின்
னுளத்தா மரைமல ருற்றதுண் டோவுண்மை யோதுகவே. (உஅக)

தலைவனினைத்தமைசெப்பல்.

ஞாலங்கொள் சீர்த்திப் புயல்வேத நாயக நம்பிவெற்பில்
வேலங்கொள் கண்ணி மறந்தறி யேனுன் விளங்கிழைதன்
னேலங்கொள் கூந்தலுஞ் செவ்வாயும் வெண்ணகை யேர்முகமும்
கோலங்கொள் செங்கையு மென்னோமுன் னுட்கொண்ட கொங்கையுமே.

பாங்கிதலைவியையாற்றுவித்திருந்தமைகூறல்.

வண்டார வாரு மதுமல ரோதியை வண்கவிஞர்
பண்டார மான கொடைவேத நாயகப் பண்பன்வெற்பிற்
றண்டார வாந்தடந் தோளண்ணி லேதனி யாற்றுவித்தேன்
கண்டார வாவுறு நின்பெரு வாய்மை கடைப்பிடித்தே. (உஅங)

வ ரை வு ம லி வு.

காதலன்மூலவிலேவிடுத்தமைபாங்கிகாதலிக்குணர்த்தல்.

சிலைக்குள நாணுமென் னுதுத லாயறஞ் சேர்தருநன்
னிலைக்குள நாணு மெனுவேத நாயக நேயன்வெற்பின்
முலைக்குள நாணும் பசும்பொன் வரையம் முலைக்குரிய
விலைக்குள நாணும் படிகுவித் தார்செம்பொன் வேங்தரின்றே. ()

தலேவிகற்றுயுள்ளமகிழ்ச்சியுள்ளல்.

கோனுடி வாழ வருவேத நாயகக் கோன்வரைவாய்
மீனுடி பாற்கடன் மாயோன் வரவு விரும்பியது
போனுடி மன்னை வரவெதி ரேற்றுப் புரிந்துவக்குந்
தேனுடி மாலியொ டிந்நாடு மேவுநஞ் செல்வரையே. (உஅநி)

பாங்கிதமர்வரைவெதிர்ந்தமைதலேவிக்குணர்த்தல்.

மழையொளிர் மின்னிற் கரும்புன்னை மேற்படர் வண்பவளந்
தழையொளிர் தண்டுறைச் சேர்ப்ப ளளித்த தனமுழுது
மிழையொளிர் பூண்முலே யாய்நம ரேற்றுவப் பெய்தினர்வண்
குழையொளி ரஞ்செவி மால்வேத நாயகக் கோன்வரைக்கே. (உஅசு)

தலேமகளுவகையாற்றுளத்தொடுகிளத்தல்.

நெஞ்சே யருந்துயர் நீங்குவந் தாரன்பர் நீடுமவர்
விஞ்சேர் புகழ்பிர தாபங் களிற்றின்முன் வேள்கவிகை
நஞ்சேய் களிறு சிலேநிற்கு மோவின்ப நாம்படிவா
மஞ்சே யெனப்பொன் பொழிவேத நாயக மால்வரைக்கே. (உஅஎ)

தலேவனேப்பாங்கிவாழ்த்தல்.

என்னு ருயிரவ் வுயிர்க்குயி ரோடு மிடர்க்கடல்வாய்
மின்னுர் மணியணி மால்வேத நாயக வேந்தனட்புத்
துன்னுர் பொருவ விழுந்தழி யாதிங்குத் தோன்றியருள்
பொன்னுர் கழலவர் வாழிய சோவிப் புவியிடத்தே. (உஅஅ)

தலேவிமணம்பொருட்டாகவணங்கைப்பராங்கேகாட்டல்.

நன்றேய் மனமெய் மொழிவேத நாயக நம்பிசெம்பொற
குன்றேய் முலேநின் மணம்பொருட் டாகக் குலமலர்தூய்
வென்றே பொலியு மணங்கை யிணங்க விழைந்துபராய்
நின்றே வரம்பல வேண்டுதல் காண்டி நெடுந்தகையே. (உஅகூ)

பராங்கேகண்டதலேமகன்மகிழ்தல்.

நாமே மணம்பொருட் டாற்றிடத் தக்கதை நன்னுதலார்
தாமேநன் காற்றி வரப்பேண் டுவரெனிற் சாற்றுமிது
பூமேனம் புண்ணிய மோமுந்தை யோர்செய்த புண்ணியமோ
மாமேரு வெண்ணப் பொலிவேத நாயக மால்வரைக்கே. (உ.கூ0)

அறத்தொடுநிற்றல்.



கையறுதோழிகண்ணீர்துடைத்தல்.

கிளியைப் பருந்துறத் தொட்டது வோபந்து கெட்டதுவோ
வொளியைச் செயுமலே வண்டலம் பாவைகொண் டோடினவோ
களியைக் கடந்தண்ணீ சேர்ந்தன ளோகலுழ் காரணமென்
வெளியைப் பொருமிடை யாய்வேத நாயக வேள்வகைக்கே. (உகூக)

தலைமகள் கலுழ்தற்காரணங்கூறல்.

கனவே புகுந்து கலந்தகன் றூருருக் காணவவாய்
நனவே கருமை நறுநீல முத்த நனியுகுத்துத்
தனவேர் மலிமுத்த மாநீல மாக்குவ தாருவைந்து
மனவேத நாயக மால்குளத் தூரன்ன வாயிழையே. (உகூஉ)

தலைவன்தெய்வங்காட்டித்தெளிப்பத்தெளிந்தமைகூறல்.

சேலுண வுள்ளி யமர்குரு கோகரி செப்புநரூத்
தாலுண வண்டர்க் கருள்கைதை யோமுன்பொய் சாற்றியதென்
காலுணர் வோர்தெய்வங் காட்டி யுரைத்தது கைதவமே
மாலுண வோரும் புகழ்வேத நாயக மால்வகைக்கே. (உகூங)

இறைவி தலைவனிகந்தமையியம்பல்.

ஆய்மொழி மாறு படாவேத நாயக வண்ணல்வெற்பிற்
றூய்மொழி வாளயற் பேய்மொழி யேதெய்வஞ் சான்றெனவுள்
ளேய்மொழி கூறி யிகந்தார் தலைவ ரெனிற்புருடர்
வாய்மொழி நம்புவ தெவ்வாறு கூறு மதிதுதீலே. (உகூச)

பாங்கி இயற்பழித்தல்.

தவரே புகழும் புகழ்வேத நாயக தாருவெற்பிற்
றுவரே யிதழ்மட வாய்தெய்வங் காட்டிமுன் சூளுரைத்த
வவரே விரத்தி யடைந்தவர் போலகன் றாரவரொப்
பவரே தெரியி னெவரே யுளாரிரத்தப் பாகத்தே. (உகூரு)

தலைமகள்இயற்படமொழிதல்.

திருவார் குளந்தைப் பதிவேத நாயகச் சேய்வளைவா
யொருவார் மறப்பர்கொ லோவெனீ யன்றி யுளத்துமற்றென்
றிருவா ரிருவார் முலைப்பி சொழிதர வெப்படியும்
வருவார்வந் தின்பந் தருவார் பொருவார் வரிவிழியே. (உகூசு)

தெய்வம்பொறைகொளச்செல்குவமென்றல்.

சாட்டை விழுங்கும் புகழ்வேத நாயகக் காளமுங்கீர்ப்
பேட்டை யணைத்திற காலனந் துஞ்சும் பெருந்துறைவ
சேட்டை யொழிப்பசெம் பால்வந் தின்னேபொய்ய சென்றுளியோர்
கேட்டை யணங்கிழை யேலென்று வாழ்த்துவங் கேழ்மயிலே. ()

இல்வயிற்செறித்தமையியம்பல்.

சேரல ரஞ்சுந் திறல்வேத நாயகச் சேய்வளைவாய்
வாரலர் மாமுலை யாய்தன் வயிற்றின்முன் வைத்ததுபோ
ஞாலர் மாலை யொரீஇயெனை யோர்சிறை நாடிவைத்தா
ஞாலர் தூற்றுவ தோர்ந்தன்னை யென்னை யுரைற்றுவதே. (உகூஅ)

செவிலி கனவியிருளவன்வாக்கண்டமைகூறல்.

கார்கொண்ட செங்கைக் கவின்வேத நாயகக் காலைவெற்பில்
வார்கொண்ட பூண்முலை யாயொழி யாது மருவுவென்போ
னீர்கொண்ட கண்ணின ஸல்லள்கண் டாயன்னை நேற்றிரவிற்
சூர்கொண்ட தோளர் வரக்கண்டு சிற்றந் தழைத்தனளே. (உகூகூ)

எறிவலைவேற்றுமைக்கேதுவினுதல்.

ஆடல்விட் டாடன் ணணியாயங் கூடி யலர்பறித்துச்
சூடல்விட் டாளிசை பாடல்விட் டாளருந் துப்பெவையுந்
தேடல்விட் டாளின் புகழ்வேத நாயகச் சேய்வளையெற்
கூடல்விட் டாளென்னை யுற்றன ளோகங் குலக்கொழுந்தே. (உ00)

பாங்கிவெறிவிலக்கல்.

சேலாய கண்ணிக் குயிரீ வதுபொய் திருந்துபல
நூலாய நோற்ற மதிவேத நாயக நோன்மையன்கற்
பாலாய வாட்டியிர் வாங்குவ தேமெய் பகர்வழியின்
மேலாய வெம்புலிப் போத்தென வீங்குற்ற வேலவரே. (உ0க)

வெறிவிலக்கியவழிச்செவிலிபாங்கியைவினுதல்.

வேய்தந்த தோளியுட் டோய்தந்த நோயற மெய்த்தமிழ்க்குப்
பாய்தந்த யானை தருவேத நாயக பானுவரை
யாய்தந்த வன்பினிங் கேய்தந்த வேலவலத் தண்ணலிநின்
வாய்தந்த கூறுத லெம்மதி யம்மதி வாணுதலே. (உ0உ)

பூத்தருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

நன்னெடு மால்குளத் தூர்வேத நாயக நம்பிவெற்பி
னின்னெடு வேல்விழி நேர்வது நோக்கென்றொர் லீலைகொய்து
கன்னெடுந் தோளொரு வள்ளறந் தான்முன்கை யேற்றனடன்
பொன்னெடும் பாவைக்கென் றேவண்ட லாயத்திப் பூங்கொடியே. ()

புனறருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

தன்னிடை யாயவை தூண்ட வுறுப்பின் றகைகவர்வான்
மின்னிடை யாயைக் கடலலை யால்விளைந் தீர்த்திடுகா
லென்னிடை யாயுற்ற தென்றமு தாள்விளைந் தெய்தினனேர்
மன்னிடை யாயளித் தான்வேத நாயக மாலையொத்தே. (உ0ச)

களிறுதருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

மூலைப்பகை தீரக் கருதிய தோவொரு மொய்க்களிறு
சிலைப்பகை வாணுத னேரெதிர் நாட்டெறு பாவியர்க்குத்

தலைப்பகை யாய தகைவேத நாயக தாருவொத்தோர்
மலைப்பகை யாயதிண் டோளா ரளித்தனர் வாஞ்சைவைத்தே.(கூ0டு)

தலைமகள்வேற்றுமைகண்டு நற்றாய்செவிலியைவினாதல்.

மூலைமீது போர்த்தது பொன்கரு நீலம்வெண் முத்துருப்ப
வீலைமீ தொளிர்குழற் குற்றதென் னேனெதி சேற்றவர்தங்
தலைமீது வைக்குங் கழல்வேத நாயக தாருவெற்பிற்
சிலைமீ தெதிர்நுத லாய்மறை யாதுண்மை செப்புகவே. (கூ0கூ)

செவிலிநற்றாய்க்குமுன்னிலைமொழியாலறத்தொடுநிற்றல்.

உளவுற்ற தோகை பயில்வேத நாயக வும்பல்வெற்பிற்
றளவுற்ற தோவெனும் வெண்ணகை யாண்மனஞ் சார்ந்தனரீ
தளவுற்ற தோமுலை தோன்றிய தோவிலை யோவலர்க்கண்
களவுற்ற தோவிலை யோவென்னு நாள்வந்தோர் காதலரே. (கூ0எ)

நற்றாய்தமர்க்குஅறத்தொடுநிற்றல்.

மழையே யணியகை மால்வேத நாயக வள்ளல்வளை
யுழையே யுறைவிர் முதுக்குறைந் தாணம் மொருமகளவ்
விழையேய் முலைதன் கருத்துக் கிசைந்த விறையவணைப்
பிழையே யறத்தெரி வீர்புரி வீர்மணம் பெட்புறவே. (கூ0அ)

உடன்போக்கு.

பாங்கிதலைவற்குஉடன்போக்குணர்த்தல்.

சீர்முழு தும்படைத் தோன்வேத நாயகச் செம்மல்வெற்பிற்
கார்முழு துங்தொழு மைம்பான் முலைவிலை காணுமென்று
பார்முழு துங்கொடுத் தாலுங் கொடாரெமர் பார்த்திபநின்
னேர்முழு துங்கொ ணைகர்க்கழைத் தேதகு வின்றுவந்தே. (கூ0கூ)

தலைவன் உடன்போக்குமறுத்தல்.

பஞ்சிற் படினும் பதைக்குமென் பாதம் படாரிது
நெஞ்சிற்கும் வெம்பர லாறணித் தன்றென் னெடுநகரு
மஞ்சிற் பொலியுங் கொடைவேத நாயக மால்வளைவாய்
நஞ்சிற் பொலிவிழி யாளொடெவ் வாறு நடப்பதுவே. (கூ0க)

பாங்கிதலைவனையுடன்படுத்தல்.

வரமே வியவுற் பவன்வேத நாயக வள்ளல்வெற்பா
சுரமே மருதங் கழுகே யெகினஞ் சுடுசெந்தழற்
றிரமேமெசெந் தாமரை வெங்கள்ளி யேசெறி காஞ்சிசெந்நா
யுரமே திகளல வோநின்னெ டேகினெம் மொண்டொடிக்கே. (கூ0கக)

தலைவன்போக்குடன்படுதல்.

அன்னே மலரடி யோமென் மையவெவ் வருஞ்சுரமோ
கன்னே வுறுதழற் றெண்டமிழ் வாணர்க்குக் காசினியோ
பொன்னே கொடுக்கும் புயல்வேத நாயக பூபன்வெற்பி
லென்னேமின் னேடு நடப்பதற் கெண்ணிய தென்மனமே. (கூ0கூ)

பாங்கிதலைவிக்குடன்போக்குணர்த்தல்.

ஈந்தின் கனியுண்டு பாடலஞ் சூடி யியையுமகிற்
சாந்தின் புறமூலை மேற்பூச வாஞ்சித்த தையல்கொலோ
வேந்தின்ப தும்மயி லென்றன்பர் கூறின ரெண்ணமென்னே
வேந்தின் புவிக்கொரு மால்வேத நாயக வேள்வனைக்கே. (நுகநு)

தலைவிராணழிபிரங்கல்.

புறப்பே தையரினற் றுயா தியரன்பு போக்கியென்று
மறப்பே றுறுதுறை நாண்போய்க் கழிவகை வாஞ்சித்தலாற்
சிறப்பே கவிஞர்க்குச் செய்வேத நாயகச் சேய்வனையெப்
பிறப்பே யடையினு மாகா தெழுமையும் பெண்பிறப்பே. (நுகசு)

கற்பின்மேம்பாடுபாங்கிகழறல்.

குலத்தினு நண்பினுங் கூர்வேத நாயகக் கோன்வனையெங்
நிலத்தினு மேவு குலமா தருக்குயிர் நேயம்வைக்கு
நலத்தினு மிக்கது நாணமொன் றேயந்த நாணுங்கற்பு
வலத்தினு மிக்கதன் றுன்மதி வாணுதன் மாமயிலே. (நுகரு)

தலைவியொருப்பட்டெழுதல்.

குறிப்பான் மொழிநர் வெளிப்படை யாலினிக் கூறுகநன்
னெறிப்பான் மகிழ்நெடு மால்வேத நாயக நேயன்வனை
வெறிப்பா னமனைய நீங்குக வேங்குக வீங்குகண்
மறிப்பான் மொழியன்பர் மேல்வைத்த காதன் மனத்தெனக்கே. ()

பாங்கிசுரத்தியல்புணைத்தழித் தலைமகள்சொல்லல்.

பொறையிற் றிறலிற் குலனிற் குடியிற் புகழிற்செல்வ
நிறையிற் நெருளிற் பொலிவேத நாயக நேயன்வெற்பி
லறையிற் புறத்தள வேசுடும் பாலே யகஞ்சுடுமிற்
சிறையிற் கொடியது வோமது வோவெனுஞ் சின்மொழியே. (நுகஎ)

பாங்கிகையடைகொடுத்தல்.

வாங்கா வருள்வைக்கு மால்வேத நாயக மன்னன்வெற்பி
லேங்கா மெலியு மிடையிடை நீவைத்த வின்னருளுக்
தூங்கா விறலண்ண லேபிறி தாகிற் சுவையுணவு
நீங்கா மெலியு மலியுங் கருவி நெடுமுகிலே. (நுகஅ)

பாங்கிவைகிருள்விடுத்தல்.

பூங்கா வெனுங்குழன் மாதே யிறையொடு போதுகநின்
பாங்கா மடிதொடர்ந் தேவேத நாயக பானுவெற்பில்
வாங்கா வினைவில் வருவே னயலவர் வாயடக்கி
யேங்கா மெலியு நமருக்கு மேற்பவின் னேயிசைத்தே. (நுகஙூ)

தலைமகளைத்தலைமகன்சுரத்துய்த்தல்.

மற்றடி யேன்சொன் முகமனென் னேவிள வல்லிநின்பொற்
சிற்றடி மெல்லப் பெயர்த்திடல் வேண்டுஞ் சினப்பகைவ

சூற்றடி போற்றப் பொலிவேத நாயக வும்பல்வரைப்
பற்றடி நீழ லிளமரக் காவின் பரிசுகண்டே. (நூ ஒ)

கலிமகன்பொழில்கண்டுவியத்தல்.

ஏவென்ற வொண்க ணிளமயி லேயிவ் விளம்பொழிறன்
காவென் றடைநர் தருவேத நாயகக் காஞையளி
யோவென் றவாவக் குளிர்நிழல் செய்யு முவந்துநம்மை
வாவென் றழைப்பது போற்கூ விடுந்துணர் மாங்குயிலே. (நூ உ க)

தலிமகன்தலிமகள்அசைவறிந்திருத்தல்.

காமரு கல்வித் கடல்வேத நாயகக் காஞையொன்னர்
தாமரு வுஞ்சுர மாலிது நண்பகல் சார்ந்ததுநின்
பூமரு வும்பத நொந்தன வாண்முகம் போர்த்ததுவேர்
தூமரு வோதிசற் றேயிருப் பாமிந்தச் சோலையிலே. (நூ உ உ)

உவந்தலர்சூட்டியுண்மகிழ்ந்துகோத்தல்.

மெல்லிய பாதம் வருடி முகத்து வியர்துடைத்துச்
சொல்லிய மாது கதுப்பினிற் பாடலஞ் சூட்டுதற்கு
வல்லிய நேருமம் வலிவேத நாயக மால்வரையென்
புல்லிய கைசெய் தலமென்னை யோமுன் புகலரிதே. (நூ உ ங)

கண்டோரயிர்த்தல்.

குலத்தவ ரோகை கொளும்வேத நாயகக் கோன்வரையாழ்
வலத்தவ ரோவடல் விண்ணவ ரோகடன் மண்ணவரோ
புலத்தவ ரோர்வர் நமக்கரி தேசுரம் புக்கதுஞ்சஞ்
சலத்தவ ரோவலர் மற்றது மோர்வருந் தன்மையதே. (நூ உ ச)

கண்டோர்காதலின்விலக்கல்.

மாதுமெய் வாடின ளுரணித் தன்று வறுவழியாம்
போதுசெய் வோன்கட லாழ்ந்தமை யாலினிப் போக்கரிது
நீதுசெய் வோனைத் தெறுவேத நாயகச் சேய்வரைவாழ்
காதுசெய் வேலவெம் மிற்றங்கி யேகுக காலையிலே. (நூ உ ஞ)

கண்டோர்தம்பதியணிமைசாற்றல்.

மீன்றேரு விழியொடு வித்தக நீயும் விலகருமிக்
கான்றேரு விலங்கல் கடந்தாற் களிப்புறக் கண்ணுலாந்
தேன்றேரு குவளைப் புயவேத நாயகச் செல்வனகர்
வான்றேரு மதிலகழ் சூழ்குளத் தூரென்னு மாநகரே. (நூ உ கூ)

தலிவன்றன்பதியடைந்தமைதலிவிக்குணர்த்தல்.

கடத்தே கடந்து வருந்தின மென்று கருதன்மின்னே
வடத்தே யுறங்கரு மால்வேத நாயக மன்னனமர்
தடத்தே மலர்பொலி யுங்குளத் தூரிது சார்ந்தனமிவ்
விடத்தே யுறுவளங் காணுக பூணுக வின்பத்தையே. (நூ உ எ)

கற்பொடுபுணர்ந்தகௌவை.

செவிலிபாங்கியைவினைதல்.

தளர்ந்ததெ னுயக் தனித்ததெ னீதழைக் தூரிற்கவ்வை
கிளர்ந்ததெ னங்குலக் கொம்பருக் குற்றதென் கிண்டிவண்ட
ருளர்ந்ததென் பூங்குழ லாய்வேத நாயக வும்பல்வெற்பில்
வளர்ந்ததெ னம்மின் மதிதீர் விசும்பீணை மானுதற்கே. (நூஉஅ)

பாங்கிசெவிலிக்குணர்த்தல்.

வன்மன வாணமர் மாற்றூர் முகநகை மாற்றுநரா
நன்மன வாட வர் தம்மண நேர்கிலர் நாடியறக்
தன்மன வாழ்வுறச் செய்வேத நாயக தாருமிவற்பி
லுன்மன வாட்டமுன் ஞள்சுரத் தாணின் னெருமகளே. (நூஉசூ)

செவிலிதேற்றவேர்க்கெதிரழிந்துமொழிதல்.

நாட்டி வளர்த்த புகழ்வேத நாயக நம்பிமிவற்பி
னீட்டி வளர்த்ததென் னேதுய சோவென்பிர் நெய்யொடுநீ
ராட்டி வளர்த்தன்பி னுன்மடி யேற்றி யமுதுகுழைத்
தூட்டி வளர்த்ததற் கோபிரிந் தாளென் னெருமகளே. (நூஙூ)

செவிலிதன்னறிவின்மைதன்னைநொந்துரைத்தல்.

பொன்னுண் மருமப் புயல்வேத நாயக பூபன்வரை
மின்னு ணெருநல்வந் தென்மடி மேவி விழைந்துளத்தென்
றுன்னுள் சுயமகள் யானேயென் றுளமீ துண்மையென்றே
னன்னுள் குறிப்பறி யேன்சிறி யேனின் றயர்பொருட்டே. (நூஙக)

செவிலிதெய்வம்வாழ்த்தல்.

ளயிலோடு வாழ்ருளத் தூர்வேத நாயக வேந்தல்வெற்பி
லயிலோடு மேவுகை யாய்முரு கேயென் னவர்மணவாய்க்
குயிலோடு நேர்மொழி மேவுறக் கூட்டினின் கோயிலெதிர்
மயிலோடு வாரணச் சேவலும் விட்டன்பின் வாழ்த்துவனே. (நூஙஉ)

செவிலிநற்றாய்க்குஅறத்தொடுநிற்றல்.

முலேதோன் றினவல பல்லுமற் றேயென் முதுக்குறைந்து
கலேதோன் றினமதி மால்வேத நாயகக் காவலன்பொன்
மலேதோன் றினவொரு காளேபின் னேமகள் போயினணன்
னிலேதோன் றினவட மீனும் புகழு நிலேயடைந்தே. (நூஙஙூ)

நற்றாய்பாங்கிதன்னெடுபுலம்பல்.

பெருகேர் மலிகுளத் தூர்வேத நாயகப் பேகன்வரை
முருகே யணியற்கு மாலுற்ற தன்மைமுன் னேயுரையா
தருகே யிருந்துமென் பிள்ளேயைப் பாவி யழலெழுந்து
திருகே மலிசுரஞ் செல்லவிட் டாயென்ன செய்தணேயே. (நூஙச)

அதிகேட்டபாங்கியழுங்கல்கண்டுகற்றாய்புலம்பல்.

தானே தணியொப் பவன்வேத நாயக தாருவெற்பில்
யானே துரைப்ப லழுங்கே லறனின் றடுநிலம்வீழ்
மீனேய் பவண்முக வாட்டமன்று லென் விழிவெதுப்பன்
மானேநின் பொன்முக வாட்டமன் றேறுவெண்ணை வாட்டுவதே. (ருகரு)

கற்றாய்பாங்கியர்தம்மொடுபுலம்பல்.

வரிக்குங் குமழுலை யீரிளம் பார்ப்பை வருடவெயில்
பரிக்குங் கழுகு பதைத்தாங் கணைக்கும் பற்கடுங்கான்
பிரிக்குந் தகையொ ரயலான்பின் சென்றனள் பேதைதாய
ரிரிக்குந் தகைய ரெவர்வேத நாயக வேங்தலொத்தே. (ருகசு)

நற்றாய்அயலார்தம்மொடுபுலம்பல்.

அன்பே வளர்க்கு நயவேத நாயக வண்ணல்வெற்பில்
வன்பே தவிர்ந்த மனப்பேதை யீரென் வருந்தலென்பீ
ரின்பே யுளங்கொண் டருநோன்பு நாஞ மியற்றியருத்
துன்பே யுதரஞ் சுமந்துபெற் றேனினிச் சொல்வதென்னே. (ருகஎ)

நற்றாய்தலைமகள்பயிலிடந்தம்மொடுபுலம்பல்.

அணியே யணிய வருள்வேத நாயக வண்ணல்வரைச்
சுணியே கருந்திணை யேய்புன மேமலர்ச் சூழ்பொழிலே
புணியேர்செய் மஞ்சனச்சாலை செவிலி பொலியடியென்
மணியேயொத் தீரென் னுளைத்தாள்செல் போதம் மணியுமக்கே. ()

நிமித்தம்போற்றல்.

தென்னே புயலளக் குங்குளத் தூரன் செழும்புவியே
பொன்னே தமிழ்க்குத் தருவேத நாயக பூபன்வெற்பி
லுன்னேய மார்விழி போற்கொடி யேமெய்யு ளொன்றுடையா
ரின்னே வரக்கைநொ தாலிடு வேன்பலி யெற்றைக்குமே. (ருகஉ)

சுரத்தணிவித்தல்.

முகமா தி யான்முண் டகம்வாடச் செய்தது முன்னற்கவம்
பகமா தி யானின் னெழிவோர்ந் துவப்பதைப் பாற்றியதே
தகமா திவாகர வோர்ந்தழற் கான்றண் ணெனப்புரியென்
மகமா தினுவொழிப் பான்வேத நாயக மால்வரைக்கே. (ருசo)

தன்மகண்மென்மைத்தன்மைக்கிரங்கல்.

பரல்செறி கான தி லோங்குமென் கோங்குமப் பஞ்சுமஞ்சும்
விரல்செறி மெல்லடி யெங்ஙன மாற்றுமவ் வெம்பரல்பே
ரூரல்செறி காற்களிற் ருன்வேத நாயக வும்பல்வெற்பிற்
சூரல்செறி மென்மொழி யாளென்ன ளாயுயிர் கொண்டுறுமே. (ருசக)

இளமைத்தன்மைக்குளமெலிக்திரங்கல்.

பல்லோ முளைத்தில வாயோ வினுமுலைப் பாண்மணக்குஞ்
சொல்லோ குதலை நடையோ குறிது துணர்த்தருவோ

செல்லோ வெனுங்கைத் திறல்வேத நாயகச் சேய்வரையுட்
கல்லோ வெனநடந் தாய்மக ளேகொடுங் கானெறியே. (நசஉ)

அச்சத்தன்மைக்கச்சமுற்றிரங்கல்.

நணீவாய் பொழிற்குளத் தூர்வேத நாயக நம்பிவரை
மணீவா யடிபுலிப் பார்வைக்கு மஞ்சு மகள்பரல்வெங்
கூணீவாய் கடத்து முழங்கா வெதிர்புலி நோக்குபுவே
தணீவாய்நின் றஞ்சுமென் றேபாவி யேனச்சந் தாங்கினனே. (நசஙு)

கண்டோரிரக்கம்.

மெய்யோ மெய்யாய தெனும்வேத நாயக வேள்வரைவாய்ப்
பொய்யோ வெனுமிடை நீத்தா ளவணீமுன் போற்றியதைக்
கையோ பிசையவொண் கண்ணீ ரலுழக் கவன்றுகவன்
றையோ வெனதுறு மோபெற்ற பாவி யகங்குழைந்தே. (நசச)

செவிலிஆற்றுத்தாயைத்தேற்றல்.

மாணுர் நகைக்குநின் பேணுத் தாயருக்கு மண்ணிடுவேன்
சேணுர் விரும்பு புகழ்வேத நாயகச் சேயைபெயாப்பான்
பூணு ரடியொன்றற் குட்பட்ட காய்ந்துநின் பொன்னீத்தந்தே
யேணு ரயிற்கணன் ஞப்வருந் தேலி தெளிதெனக்கே. (நசஙு)

ஆற்றிடைமுக்கோற்பகவனைவீஞ்தல்.

ஒருதேவ னீரடி மூப்போது மோர்ந்தர ஞலொளைந்தும்
பொருதேயிவ் வாறுசெல் வீரேழ் வணீயெபட்டும் போற்றுமொன்பான்
கருதேர் மணிக்குளத் தூர்வேத நாயகக் காணீவரை
வருதேத மொழியின்பத் தேரார்கா வலன்பின் மருவினளே. (நசஙூ)

மிக்கோசேதுக்காட்டல்.

இரையும் புனற்குளத் தூர்வேத நாயக வேந்தல்வெற்பிற்
றிரையுந் தழற்கடத் தென்னே நடந்துமெய் தீந்தணீயிவ்
வுரையுஞ் சொலத்தகு மோவுண ராய்கொ லுலகியன்முன்
வரையுந் திரையுந் தொடர்ந்தநுண் டோசிவன் மாயணீயே. (நசஎ)

செவிலி எயிற்றியொடுபுலம்பல்.

ஆயுங் கலைதுண் மதிவேத நாயக வண்ணல்வரை
யேயுங் கொடும்புலிப் பற்ருலி பூண்ட வெயின்மகளே
தாயுந் தளரத் தளரா மனத்தயற் சார்புகொண்டோர்
தேயுங் கொடியிடை சென்றன ளோவித் தெறுநெறியே. (நசஅ)

செவிலிகுரவொடுபுலம்பல்.

அன்பாவை யம்புரப் போன்வேத நாயக வண்ணல்வெற்பிற்
றன்பாவை நீத்தயற் சார்பே தழீ இயிங்குச் சார்ந்தவட்கு
நின்பாவை நல்கீணீ யோசெல்ல லென்று நிகழ்த்திணீயோ
வென்பாவைக் கென்னசெய் தாயளி யோடொளி ரீர்ங்குரவே.(நசகூ)

சுவடுகண்டிரங்கல்.

எதிர்வந்த வெய்ய தரக்கடி யாங்கவை மீங்கிவையோ
வதிர்வந்த நெஞ்ச மிலாதடு காளை யடிபுதியிற்
கதிர்வந்த தென்னப் பொலிவேத நாயகக் காளைவரை
வெதிர்வந்த தோளடி யூங்குவை யேலென் விளம்புவதே. (கூடு0)

செவிலிகலந்துடன்வருவோர்க்கண்டுகேட்டல்.

மாரு மகிழ்ச்சியுற் றேறுமைக் கண்டு மதனிரதி
வேரு லிவளையல் லாதென வேவரு வீர்பகைஞ
சேரு மெனவளர் மால்வேத நாயக வேந்தல்வரைத்
தேரு வொருத்தி யொருவனிவ் வாறுரைச் சென்றனளே. (கூடுக)

அவர்புலம்பறேற்றல்.

அன்னுயிம் மான்கண்ட மானுமற் றியான்கண்ட வண்ணலுஞ்சொன்
முன்னுய் தருகுறிப் பானுணர்ந் தேபொன் முகந்தளிக்கு
மன்னுய் வளரும் புகழ்வேத நாயக மால்குளத்தூர்
நன்னு யகமெனச் செல்வாரிற் நேர நலிவின்றியே. (கூடுஉ)

செவிலிபுதல்வியைக்காணுதகவுலகூர்தல்.

பொன்மகள் வாழ்குளத் தூர்வேத நாயக பூபன்வெற்பி
லென்மகள் வந்தன ளோவெனுங் தாய்க்கினி யென்னுரைப்பேன்
கன்மகள் கேள்வ னுதற்றியுந் தீக்குமிக் கானடந்த
வன்மகள் யான்மகட் காணுமை யானின்று வாடுவனே. (கூடுங)

மீட்சி.

தலைவிசேணகன்றமை செவிலிதாய்க்குணர்த்தல்.

ஏய்ப்புகு மாறு பொலிவேத நாயக வேந்தல்புகழ்
போய்ப்புகு மாகில மெல்லாக் குருவிப்புக் கேனயலார்
மாய்ப்புகு மாகதை மாறக்கண் டேனலன் மாதைவலி
தாய்ப்புகு வேலவன் கொண்டுசென் றுன்மகிழ் தன்மணிக்கே.(கூடுச)

தலைவன்தம்மூர்சார்ந்தமைசாற்றல்.

மதுவிதழ் நீர்க்குளத் தூர்வேத நாயக வள்ளல்வரை
யதுவித வேணிற் தழல்கொடு நீவெளி யாய்ந்தபுன
மிதுவித மாகமுன் யான்வந்து நிற்கண்ட வீரம்பொழிரு
ஹுதுவிதம் கோவையொப் பாயடைந் தாமை துரகத்தே. (கூடுடு)

தலைவிமுன்செல்வோர்தம்மொடு தாம்வரல்பாங்கியர்க்குணர்த்திவிடுத்தல்.

குடிப்பகை யாய மருங்குனல் லீர்கவி சொல்புலவர்
மிடிப்பகை யாய விறல்வேத நாயக வேள்வரைவாய்க்
கடிப்பகை யாய கரிசுமில் லாவெனுங் கான்கடந்திப்
படிப்பகை யாயவள் வந்தா ளெனச்சொலும் பாங்கியர்க்கே. (கூடுசு)

ஏசு

முன்புசென்றேர்பாங்கியர்க்குணர்த்தல்.

வண்டோகை கொள்ளு மதுமலர்க் கூந்தலும் வாகையந்தார்
திண்டோள் புணையுமொர் செம்மலு மாலுந் திருவுமொத்துத்
தண்டோ டலர்தொடை யான்வேத நாயக தாருவெற்பிற்
கண்டோமின் னேவரக் காரிகை யீருங்கள் காதல்கொண்டே.(கூருள)

பாங்கியர்கேட்டுநற்றாய்க்குணர்த்தல்.

தாயே யுவகைகொ ணீயினி தாற்று தவமும்பழு
தாயே குறுங்கொன் மணவாள னேடுநம் மன்னமொன்னர்
வாயே யடங்கிட வந்தா ளெனச்சிலர் வந்துசொற்றூர்
கூயேவ றெவ்வரைக் கொள்வேத நாயகக் கோன்வரைக்கே. (கூருஅ)

நற்றாய்கேட்டு அவளுளங்கொள்வேலனவினுதல்.

தெளியாமை யாலென்று கேட்கலுற் றேனுரை திண்புவியை
யளியாமை போற்பரிப் போன்வேத நாயக வண்ணல்வெற்பிற்
களியாமை யுண்க ணெடுசுரம் போய்வரு காளைமின்னே
யொளியாமை யேயென்னி லோதன்னி லோவுய்க்கு மொள்ளியனே.

தன்மனைவரைதல்.

நற்றாய்மணனயர்வேட்கையிற்செவிலியைவினுதல்.

செந்தா மரையி லனப்பேட்டை வீநடுச் சேவல்செய்பு
கந்தா மணக்குளத் தூர்வேத நாயக நம்பிவெற்பிற்
பந்தார் முலையைந மில்வாய் மணஞ்செய்து பார்க்கவள்ளற்
றந்தாட் குணர்த்திடு வாம்வடு வாம்விழித் தார்க்குழலே. (கூசூ0)

செவிலிக்கு இருளேவனைந்தமையுணர்த்தல்.

விருந்துகட் கூட்ட விரும்புநற் றூய்க்கென் விளம்புதும்யாம்
பொருந்துகட் கூந்தலன் ஞய்வேத நாயக பூபன்வெற்பில்
வருந்துகட் கூறிறம் மிற்கிளை நாப்பண் வனைந்தனர்செம்
பருந்துகட் கூண்செயம் பாரென்று தூதர் பகர்ந்தனரே. (கூசுக)

வனைந்தமை செவிலி நற்றாய்க்குணர்த்தல்.

நங்கண் ணிரம்பத் தவம்புரி யாமையி னுடுமன்னுய்
வெங்கண் ணிரம்பு தொடைவேத நாயக வேள்குளத்தூ
ரங்கண்ணி மாதை முசசங் கினேயொடு மார்ப்பவவர்
தங்கண்ணி சூட்டி வனைந்தன ராஞ்சிலர் சாற்றினரே. (கூசுஉ)

தலைவன்பாங்கிக்கு யான்வரைந்தமைதுமார்க்குஇயம்புசென்றென்றல்.

வெற்பே புனையிளங் கொங்கைநின் மங்கையை மெல்லியலாய்
பொற்பே மலியும் புகழ்வேத நாயக பூபன்வனைக்
கற்பே ருமதில் சூழ்குளத் தூரெங் கடிமணியா
மற்பே பொலிமணஞ் செய்தா துமார்க்கி தறைதியின்றே. (கூசுங)

பாங்கிதானதுமுன்னேசாற்றியதுரைத்தல்.

மன்னும் புகழிற் பொலிவேத நாயக மால்குளத்தூ
ரென்னும் பதிநின் மணிவாய் மணிநீ யியற்றியது
பன்னுஞ் சிலவர்தம் வாயு மூரசுமென் பாவைகளப்
பொன்னும் புகல வுணர்ந்துமுன் னேபுகன் றேனணிக்கே. (௬௯)

உடன்போக்கிடையீடு.

மீங்குங்கிழத்திபாங்கியர்தமக்குத்தன்செலவுணர்த்திவிடுத்தல்.

தேனுறு பாய்தொடைத் தோள்வேத நாயகச் சேய்விலங்கற்
கானுறு மேவிய காரிகை யீருங் களுக்கறமுண்
டானுறு பூங்குழற் பாங்கியர் பாற்சென்றும் மாயிழையோ
ரூனுறு வேலவன் பின்படர்ந் தாளென் றுரைத்திடுமே. (௬௯)

தலைமகடன்செலவு ஈன்முட்குணர்த்திவிடுத்தல்.

அளியொன்று தார்ப்புய மால்வேத நாயக வண்ணல்வெற்பிற்
றெளியொன்று மாதவத் தீர்தொழு தேனருள் செய்திடவாற்
றுளியொன்று சேரியுற் றேற்பயந் தாளுயங் காமலொரு
களியொன்று காளைபின் யான்விழைந் தேதகல் கழறுமினே. (௬௯)

நற்றாய்க்குஅந்தணர்மொழிதல்.

திருமக னின்னி னுறமட வாய்நலஞ் சேருகநின்
னெருமக ளஞ்சு மகளா கிலள்சுரத் தூடுவென்றிப்
பெருமக டங்கு புயத்தொரு காளைபின் னேகினண்மான்
மருமகண் மன்னுசெவ் வாய்வேத நாயக மால்வுரைக்கே. (௬௯)

நற்றாய் அறத்தொடுநிற்றலிற்றமர்பின்சேறலைத்
தலைவிகண்டுதெளிவற்குரைத்தல்.

சீரே யவாவு திறலண்ண லேபசுஞ் செந்தமிழே
தாரே புனைபுய மால்வேத நாயக தாருவெற்பி
லாரே தடுப்பவர் யானென்செய் கேனவில்லு மம்புங்கொண்டு
காரே யெனவளீர் தார்கொடுங் கானடுங் கானவரே. (௬௯)

தலைமகளைத்தலைமகன்வீடுத்தகறல்.

தன்னே ரிலாத தமிழ்வேத நாயக தாருவெற்பிற்
பொன்னேயஞ் சேல்கை நெரியே லயலவர் போரெனினின்
முன்னே யடுகணை யொன்றுல்வெல் வேனென் மொழிவதவர்
பின்னே டடந்தருள் யானே குவனென் பெருநகர்க்கே. (௬௯)

தமருடன்செல்பவள்அவன்புறநோக்கிக்கவன்றாற்றல்.

கூற்றேற்ற போதும் புறங்காண்ப வன்படை கொண்டுசினந்
தாற்றேற்ற வர்க்குப் புறங்கொடுத் தானம ராதலின்மண்
சாற்றேற்ற மிக்க புகழ்வேத நாயக தாருவரை
யேற்றேற்ற நம்பெரு மான்பரி வாவது ளெண்ணரிதே. (௬௯0)

வ ை த ல்.

சென்ரேன்மீண்டுவந்துஅந்தணரையும் சான்ரோரையுமுன்னிட்டு
வணக்குகொண்டுழிக்கண்டோர்மகிழ்ந்துகூறல்.

மண்பெற்ற சங்க நிதிவேத நாயக மன்னன்வெற்பிற்
றண்பெற்ற வாழித் தரைவாயிவ் வாறெவர் தாம்புரிந்தா
ரெண்பெற்ற விவ்வணஞ் செய்தாரென் பாருமிங் கில்லையிரு
கண்பெற்ற பேறடைந் தாம்வள்ளல் மாமணங் கண்ணுற்றின்மே. ()

இ ல் வ ா ழ் க் ை க.

தலைவன்தலைவிமுன்பாங்கியைப்புகழ்தல்.

பரவுற்ற சீர்க்குளத் தூர்வேத நாயக பானுவெற்பி
லரவுற்ற வல்குலிவ் வாயிழை யாரின்பம் யானடைய
வரவுற்ற மாமுலை நீயன்பிற் செய்த வுதவிக்கென்மே
லிரவுற்ற யான்செய்வ தென்செய்யு மேபுனி விண்முகிற்கே. (கூடஉ)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

அடித்தொழில் செய்யு மெனக்கோ முகம னறைவ,தண்ணன்
மிடித்தொழி றீர்குளத் தூர்வேத நாயக வேள்வைவாய்க்
கடித்தொழி லாற்றிய சீரிய நீயுமிக் காரிகையுங்
குடித்தொழி லாற்றி நெடுநாளும் வாழ்க குவலயத்தே. (கூடஎ)

பாங்கிதலைவியைவளையுநாளளவும் வருந்தாதிருந்தமையுளையாயென்றல்.

பூமான் வளர்குளத் தூர்வேத நாயக பூபன்வரைக்
கோமான் றணிப்பிரி யாதுறை வாயின்று குன்றுதலி
றீமான் கடுங்கடம் பொன்றரு வான்முனஞ் சென்றருள்போ
தேமான் விழியணங் கேயெங்கு ஞற்றி யிருந்தனீயே. (கூடஅ)

பெருமகளுரைத்தல்.

அணிமாலை பொக்கு மருள்வேத நாயக வண்ணல்வெற்பென்
பிணிமாலை யென்னும் பெருகிருண் மூடப்பெய் தேன்மழையைத்
தணிமாலை யோதிநல் லாயன்பர் தாமுன்பு தந்தருள்செம்
மணிமாலை போசெங் கதிர்மாலை யாயதை மாற்றியதே. (கூடஏ)

பாங்கி தலைவனைவளையுநாளளவும்நிலைபெறவாற்றியநிலைமைவினவுதல்.

சீர்மண முற்றுறு முன்னர்நுங் கோளெங் கிருந்திழைபொன்
வார்மண முற்ற முலைநீக்கிதவ் வாறு மருவினபைந்
தார்மண முற்ற புயவேத நாயக தாருவெற்பிற்
போர்மண முற்றவொள் வேல்வல னேந்தும் புரவலரே. (கூடசு)

மன்றன்மனைவருசெவிலிக்கு இகுளையின்புறவுணர்த்தல்.

பிரியா ருமையு மவள்கோ னுமேயென்றல் பேதைமையே
யரியார் மலர்க்கணன் ஞயென்சொல் கேனன்ன மன்னமின்னும்

வரியார் கழல்வள்ள லும்வேத நாயக மால்வரையுட்
டரியார் கணமுமின் பெய்துவ ரீதுன் றவப்பலனே. (கூஎஎ)

இல்வாழ்க்கைகன்றென்றுபாங்கிசெவிலிக்குரைத்தல்.

வளமுற வாழ்குளத் தூர்வேத நாயக வள்ளல்வெற்பி
னளமுற வட்டும் விருந்தோ டிறைகயக் கப்படைத்துந்
தளமுற வாச மளியுற்றுங் கொண்கன்முன் றன்விழித்து
முளமுற விங்ஙன் மணவாழ்க்கை கீடின ஞன்மகளே. (கூஎஅ)

மணமகனைச் சென்றுவந்தசெவிலி பொற்றொடிகற்பியனற்றாய்க்குணர்த்தல்.

திருந்துதி வாகர னேர்வேத நாயகச் சேய்வளைய
மருந்துதி தீரிள வேய்த்தோளன் ஞய்நின் மனத்துவகை
பொருந்துதி நின்மகள் கற்பேர்ந் துதீதிப் புலத்தொருமீ
னருந்துதி செய்வத னுலதற் கடிபெய ராயினதே. (கூஎகூ)

நன்மணவாழ்க்கைத்தன்மையுணர்த்தல்.

அமரா வதியு ளளகா புரியுமொன் றுகிமண்மேல்
அமரா வதிவது நேருமன் ஞய்கலி யாற்புரியும்
அமரா வதியக் குறுவேத நாயக வண்ணறன்னை
யமரா வதிகளுஞ் செறிவளர் கம்மண் யம்மணியே. (கூஅ0)

செவிலிநற்றாய்க்கிருவர்காதலையுமறிவித்தல்.

கற்றேரு ரிடத்து மகிழ்வேத நாயகக் காளிவெற்பி
னுற்றேரு ரிடத்துறை வோரெனத் தானு முணர்ந்ததுவோ
பற்றேரு ரிடத்துப் படரினு மாதுறை பாடன்றியே
மற்றேரு ரிடத்துநில் லாதிறை யூரு மதகயமே. (கூஅக)

பரத்தையிற்பிரிவு.

காதலன்பிரிவுழிக்கண்டோர்புலவிக்கேதுவிதாமவ்வினைவிக்கென்றல்.

பாடல் விளைக்கும் புகழ்வேத நாயக பானுவெற்பி
னீடல் விளைக்குங் குழற்பொது மாதர் நிரம்புசதி
யாடல் விளைக்கும் வயலூரற் றேகாகை யதுகதுவு
மூடல் விளைக்குமொர் காரண மாமதி யொண்ணுதற்கே. (கூஅஉ)

தனித்தழியிறைவிதனித்தழுதிரங்கல்.

தேரட்டொடு மோதும் விழிமாதர் சூட்டு தொடையறமிழ்ப்
பாட்டொடு சூடும் புயவேத நாயக பானுவெற்பிற்
பேட்டொடு சேவன் மகிழ்வய லூரன் பிரிந்தனனற்
காட்டொடு மேலம் புலிவேடன் பாலெணைக் காட்டியின்றே. (கூஅகூ)

ஈங்கிதுவென்னெனப்பாங்கிவிளுதல்.

புரியா வெவரு மகிழ்வேத நாயக பூபன்வெற்பிற்
பரியா வினிய வமுதயில் போதும் பகித்துயரோ

விரியா நிறைதண் புனல்வய லூரன் விழியிமைபோற்
பிரியா திருக்கவு மென்னே வருந்துதல் பெண்ணரசே. (கூஅச)

இறைமகன்புறத்தொழுக்கிறைமகளுணர்த்தல்.

தெளிநீர் கொளாதடன் மேதி கலங்க நினைத்தருந்து
மொளிநீர் நகுவய லூரனிந் நாளென்னை யொண்சுணை
வளிநீர்மை பூண்ட புயல்வேத நாயக வண்ணனுள்ளா
வெளிநீர் நிற்கரு திப்பொ துமாதரின் பெய்துவனே. (கூஅரு)

தலைவியைப்பாங்கிகழறல்.

வெற்பாகு திண்ணிய தோள்வேத நாயக வேள்வரைவாய்ப்
பொற்பாகு மக்கள் பொலிய மணியறம் பூண்டுவிரும்
தற்பாகு சிந்தையி னெம்ப லலாலன்ப ராசுசைத்தல்
கற்பாகு மோகுல மாதர்க்கு மேதகு காரிகையே. (கூஅசு)

தலைவிசெவ்வணியணிந்துசேடியைவிடுத்துழிஅவ்வணி
யுழையர்கண்டு அழுங்கிக்கூறல்.

நனைந்தன பேரருண் மால்வேத நாயக நம்பிவெற்பி
லினைந்தறி யார்பொருட் டில்லா னிகழ்ப்பவ நின்முனிவள்
வனைந்தசெஞ் சாந்து மலருங் கலனும் வயங்குபட்டும்
புனைந்தடி வைப்பதென் னுமிது வோநம் பொலிவென்பதே. (கூஅள)

பரத்தையர்கண்டுபெழித்தல்.

நல்லார் பலரும் புகழ்வேத நாயக நம்பிவெற்பில்
வில்லார் துதலி புறுப்பொன்று சேந்த விதந்தவனும்
பல்லாரு மோரும் படிகுறித் தோவிப் படர்மறுகி
லெல்லா வுறுப்புஞ் சிவந்தடைக் தாளிவ் விளங்கொடியே. (கூஅஅ)

பரத்தையருலகியனெஞ்கிவிடுத்தல்.

அடுத்தே மென்பாருக் கருள்வேத நாயக வண்ணல்வெற்பில்
வடுத்தே மலர்விழி பூத்தன னாணுண் மகிழ்கினைசூ
ளுடுத்தே யொளிர்பவ பன்னிரு நாளு முனக்குவிடை
கொடுத்தே மவனுறு நயனு ளுதயங் குறுகெமிற்கே. (கூஅகூ)

தலைவன்வரவுகண்டுவந்துவாயில்கண்மொழிதல்.

சேப்புற்ற நாமரைக் கைவேத நாயகச் செம்மல்வெற்பிற்
கோப்புற்ற பொன்வீலே மாதரி னீங்கிக் கொடியிடையாள்
பூப்புற்ற தோர்ந்தூடன் மீண்டமை யாற்றண் புனலுலகங்
காப்புற்ற வூர ருலகிய லோர்ந்த கருத்தினரே. (கூகூ0)

தலைமகன்வரவுபாங்கிதலைவிக்குணர்த்தல்.

மழையுட் கருது கொடைவேத நாயக வள்ளல்வெற்பி
லுழையுட் கருது விழியாய் தலைவருற் றாரவர்தம்
பிழையுட் கருதுவ தன்று லெதிர்சென்று பேணிப்பணிந்
தழையுட் கருது கினங்தீ ரடித்தொழி லாற்றுகவே. (கூகூக)

தலைவனைத்தலைவிதிர்கொண்டுபணிதல்.

காமரு வுங்கைத் தலைவேத நாயகக் காணிவெற்பி
லேமரு வுங்கட் பொதுமா தருமுள் ளிலைபந்தனோ
மாமரு வும்பத மிங்குற வும்மனம் வந்ததுவோ
பாமரு வும்புக ழீரிது சாலுமென் பாக்கியமே. (நகூஉ)

புணர்ச்சியின்மகிழ்தல்.

சூலாய மேக நிகர்வேத நாயகத் தேதான்றல்வெற்பிற்
சேலாய கண்ணி சிறப்பிற் றருமின்பஞ் சிற்றின்பமோ
மாலாய வின்ப மிதனினு மண்மிசை மற்றுமொன்று
மேலாய தென்பவர்க் கொள்ளறி வேயன்று வெள்ளறிவே. (நகூங)

வெள்ளணியணிந்துவிடுத்துழித்தலைமகன்வாயில்வேண்டல்.

புள்ளணி தொங்கற் புயவேத நாயக பூபன்வெற்புன்
வெள்ளணி கண்டடைந் தேனுடைந் தேனென் மிகுபிழைகெஞ்
சுள்ளணி யாக்கிப் புலந்தணங் காம லுவப்பதனுங்
கள்ளணி கூந்தற் குரைவரை நேருங் கதிர்முலீயே. (நகூசு)

தலைவிநெய்யாடியதிருவோசாற்றல்.

வலம்புரி முத்த முயிர்த்தாங் கிறைவி மகவுயிர்த்து
நலம்புரி வாசநெய் யாடின ளாலின்று நாவலர்தங்
குலம்புரி நேரில் கொடைவேத நாயகக் கோன்வைமட்
புலம்புரி தேளண்ண லேயெண்ண லேதை புகல்வதற்கே. (நகூடு)

தலைவன்தன்மனத்துவகைகூர்தல்.

பூணும் படிமையர் சொல்வேத நாயக பூபன்வெற்பின்
மாணும் படிநன் மகவேந்து கையும் வரைபருவி
நாணும் படியெழு கொங்கையும் பாலு நரம்பின்பைப்புங்
காணும் படியெத் தவஞ்செய்த வோவிரு கண்களுமே. (நகூசு)

தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றல்.

நன்மே லவர்புகழ் மால்வேத நாயக நம்பிவெற்பில்
வன்மே லடர்முலீ யாயன்பர் நம்மனீ வாயில்வந்தார்
நின்மேல் வெறுப்புற் றகல்பவ ராயினு நீபயந்த
பொன்மேல் வெறுப்புற் றகல்வர்கொ றண்ணியர் புண்ணியரே. (நகூஎ)

தலைவியுணர்ந்ததலைவனெடுபுலத்தல்.

நல்லோர் புகழ்நண்ப மால்வேத நாயக நம்பிவெற்பிற்
சொல்லோர் மழவுண் டுமிழ்முலீப் பான்மணஞ் சூழ்ந்ததுமெய்
யில்லோரின் வாடுத லென்கலீ தீண்டுத லென்கையிடு
பல்லோ ரிடத்தும் பயின்றதன்றே யுடல் பாவியற்கே. (நகூஅ)

தலைவிபாணனைமறுத்தல்.

நன்பால் வளர்க்கும் புகழ்வேத நாயக நம்பிவெற்பி
னின்பான்மெய் யன்புடை யாரூர சென்றிங்கு நீசொல்வதென்

மின்பா னனுமுல்லை விற்பா ரிடங்கள்ளி வீவிற்கின்முப்
வன்பான் மனப்புலைப் பாணுசெ லிம்மணி வாயில்விட்டேட. (நகூசு)

வாயின்மறுக்கப்பட்டபாணன்கூறல்.

மற்கொண் டெறிதிண் புயத்தா னிமித்தஞ்செவ் வாயிற்கடுஞ்
சொற்கொண் டெறிந்த தடியேற்குப் போதுந் துறுகலியைப்
பொற்கொண் டெறியும் புயல்வேத நாயக பூபன்வசைக்
கற்கொண் டெறியற்க வெம்பெரு மாட்டி கறுத்துநின்றே. (சoo)

விறலிவாயின்மறுத்தல்.

செய்யேந்து வான்குளத் தூர்வேத நாயகச் செம்மல்வெற்பின்
மெய்யேந்து மூசர்மெய் யன்பின மேசொல்ல வேண்டுங்கொலோ
பையேந்து மண்மிசைப் பாடி யெலாஞ்சென்று பாடியிரு
கையேந்தும் பாண்மக ளேதுக ளேயினின் கட்டுரைக்கே. (சoக)

பாங்கிவாயின்மறுத்தல்.

மீன்றவழ் நீர்க்குளத் தூர்வேத நாயக வேள்வரைவாய்த்
தேன்றவ ழோதி யருமருந் தன்ன சிறுகுழவி
தான்றவ ழின்பம் வெறுத்தார் பரத்தையர் தங்கண்முலைக்
கான்றவழ் மார்புடை யூரர்க்குங் கேயென்ன காரியமே. (சoஉ)

விருந்தொடுவந்துழிப்பொறுத்தல்கண்டிறையோன்மகிழ்தல்.

பெரும்போது நீர்க்குளத் தூர்வேத நாயகப் பேகன்வெற்பிற்
கரும்போது மென்மொழி யார்விழி வாய்விலைக் காரிகையா
ரரும்போது கொங்கை யவாய்ப்பல நாளமர்ந் தாலுமீள
வரும்போ தொருவிருந் தோடுவந் தாற்செம்மை மாறிடுமே. (சoங)

பள்ளியிடத்தழுங்கல்.

பழியா வளனிற் பொலிவேத நாயக பாணுவெற்பி
லொழியாத தண்ணளி யாமோ மயங்கொரு வேற்றுமிர்த
மொழியாது மின்றி முகங்கனிப்புத் தேயொரு முச்சுடர்க்குங்
கழியா விருளே விரித்துக் கழியிருள் காட்டியதே. (சoச)

சீறலென்றவள்சீறடிதொழுதல்.

மான்மேற் பொலியும் வளவேத நாயக வள்ளல்வெற்பில்
வேன்மேற் பொலிகண் விளங்கிழை யேயிவ் வெகுளியெவன்
யான்மேற் பிழைபுரி யேன்பிரி யேனின் னனிச்சம்வென்ற
கான்மேற் பணிவல் பொறுத்தரு ளேவண்டுங் கடனுனக்கே. (சoஞ)

இஃதெங்கையர்காணினன்றென்றல்.

பூணினன் சிறுளிற் புயல்வேத நாயக பூபனகர்
காணினன் சிறுல்வியு முற்றேன்குற் றேவ னயப்பவர்தா
மேணினன் சிறுமிலற் கென்னுற்ற தென்பரிஃ தெங்கையர்கண்
காணினன் சிறுபிழை மூளுமென் றேயுட் கலங்குவனே. (சoசு)

அங்கவர்யாரையுமறியேனென்றல்.

விறலிய ரேழுள்வலி மால்வேத நாயக வேணகர்வாய்ப்
பறலியல் வாவற் றகுதி யுளேனலன் பாயிருளோ
டறலிய லோதி யணங்கே கறுப்ப தழகுதன் று
திறலியல் சீயஞ் சிறுமீதரை யூனிரை தேர்வதுண்டே. (ச0எ)

காமக்கிழத்தியைக்கண்டமைபகர்தல்.

பார்வாய் மலிந்த புகழ்மீவத நாயக பானுநக
சேர்வாய் மறுகின் வியோயாடு சேயையொ சேந்திழைகண்
டார்வாய்முத் தங்கொடுத் தாளது சோக்கச்சிற் றுய்நினக்கிவ்
வூர்வா யிவள்பல சின் னுமென் றுளய லோரணங்கே. (ச0அ)

தலைவியைப்பாங்கிதணித்தல்.

போதார வண்டுறை பூங்குழ லாய்புனி யேழினுக்கு
மாதார மான புயல்மீவத நாயக வண்ணனகர்
மாதார மில்லவ சோபொது மாதர வாவினர்நின்
பாதார விநதம் பணிந்தார் வெகுளுதல் பண்பல்லமீவ. (ச0கூ)

தலைமகள்புலவிதணியாளாகத்தலைமகணூடல்.

இன்னிய மார்குளத் தூர்வேத நாயக வேந்தனகர்
மின்னிய சேபரு ளான்முன்னை நாளின்ப மேவுறத்தீத்
துன்னிய பாலைநம் மெய்ந்நிழல் போற்பின் நெடார்ந்தவண்டு
மன்னிய வார்குழன் மானன் நிதோர்பெரு வஞ்சனையே. (சக0)

பாங்கிஅன்பிலைகொடியையெனத்தலைவனையிகழ்தல்.

அரும்பாய் மலர்த்தொடைத் தேதாள்வேத நாயக வண்ணனகர்ப்
பெரும்பாய னீத்துறவ் காதேத வருந்தவும் பேணுமன
மிரும்பா யகல்வி ரிழிபொது மாதர்த மின்பமொன்றே
கரும்பா யிவளின்பம் வேம்பா யிடிற்பின் கனவெதென்னே. (சகக)

ஆயிழைமைந்தனுமாற்றுமையும்வாயிலாகவரவெதிர்கோடல்.

இளவேறு போலு மகவைத்தன் சேரளி விறுகப்புல்லி
வளவேத நாயக மால்குளத் தூரன்வந் தான்மனைவாய்ப்
பிளவே யுருவுதழுந் தாற்றுமை யும்பெருத் தோங்கியதா
லுளவே பயன்களு மேன்மேலும் யாஞ்சினக் தூடலினே. (சகஉ)

மணந்தவன்போயபின்வந்தபாங்கியோடிணங்கியமைத்தனை
யினிதிற்புகழ்தல்.

திதலைமகாள் பூண்முலை யாய்பொது மாதர்தஞ் சேரிசெல்லு
முதலைகொ னீர்வய லூரனிங் கெய்த முகங்கொடுத்து
விதலைகொள் வேன்றுயர்ப் போராழி நீந்தச்செய் மென்மகற்கு
மதலையென் போர்தகு மால்வேத நாயக மானகர்க்கே. (சகங)

தலைவிதலைவனைப்புகழ்தல்.

சேசார் தொழுங்கமுன் மால்வேத நாயகச் செம்மலணி
யேசார் வயல்கழு மூசார் பரத்தைய ரின்புறினு

மோரா ரலரான் பொழிந்தா ரலர்வரை யோடுபொரு
வாரார் வனமுலை யாய்பழங் கேண்மை மறப்பிலரே. (சகச)

பாங்கிதலைவியைப்புகழ்தல்.

பொற்பே யுருக்கொண்ட மால்வேத நாயக பூபனகர்
வெற்பே யுருக்கொண்ட தோளான் பிழைக்கு வெகுளலின்றி
யற்பே யுருக்கொண்ட சிந்தையி னிறைபொறுத் தாளுதலாற்
கற்பே யுருக்கொண்ட பெற்றியள் போலுமிக் காரிகையே. (சகஞ)

ஓ த ற் பி ரி வு.

கல்வியிற்பிரிவதலைவன்பாங்கிக்குணர்த்தல்.

வெற்பதன் மீருவெனப் பொன்னுறிற் சீர்த்தி விளங்குநெறி
நிற்பதன் மீருபரு வம்முறி னுண்மை நிரம்பிய நூ
லற்பதன் மீருவெனு மெய்வேத நாயக வண்ணலைப்போற்
கற்பதன் மீருநிறப் பாநறப் பாயுங் கருங்குழலே. (சகசு)

பாங்கிமறுத்தல்.

நயக்குநின் கல்வி யருள்வேத நாயக நம்பிமுன்போய்
வயக்கும் வகையண்ண லேபிரி வாயெனில் வாள்விழிநீர்
பயக்கும் படிபடி மேல்வீழ்ந் தடித்த பலகாயுமிக்
குயக்கு மிறைவியை யாராற்று வாரிலை தொத்ததன்றே. (சகஎ)

தலைவனுடன்படுத்தல்.

நற்றவ சேபுகழ் மால்வேத நாயக நம்பிமுன்போய்க்
கற்றவ சேயென மேன்மே லறிவுறக் கற்றவெலாஞ்
சொற்றவ சேநிறந் தார்சிர கம்பிதந் தோன்றவன்பாற்
பெற்றவ சேயவ ரிற்சிறந் தாருணர் பெண்ணமுதே. (சகஅ)

பாங்கிதலைவிக்குணர்த்தல்.

வற்றன வாணுதன் மங்கைகல் லாய்மண வாளரின்று
பெற்றன போதுமென் றெண்ணர் புவியிற் பிறங்குதரு
வுற்றன வான்கொடை மால்வேத நாயக வும்பன்முன்போய்க்
கற்றன கூறிப் பெறநடந் தார்கடுங் கான்வழியே. (சகக)

தலைமகள்கார்ப்பருவங்கண்டுபுலம்பல்.

எல்லா முணர்ந்த புகழ்வேத நாயக வேந்தல்வளைச்
செல்லா மினிதுண் டொருசாபங் கோட்டிச் சினங்கொளம்பு
வல்லாம் பொழியவென் றேயெழு மாலினி வண்கலிகள்
கல்லா முணர்ந்தது போதுமென் றன்பர் கருதிலரே. (சஉ0)

தலைமகளைப்பாங்கியாற்றுவித்தல்.

நார்வந்த சிந்தைப் புகழ்வேத நாயக நம்பிவெற்பி
னீர்வந்த கண்ணெறி நீயணங் கேனகு நீரணங்கே
பேர்வந்த கல்வி யெலாமுணர் பாக்குப் பிரிந்தவர்தந்
தேர்வந்த தென்றுமுன் கார்வந்த தாலுண்மை செப்புதற்கே. (சஉக)

காவற்பிரிவு.

தோழிதலைவன்காவற்பிரிவுணர்த்தல்.

தெளியாய் கலங்க லலங்கலங் கூந்தலஞ் சிற்றிடையாய்
வெளியாய் விளங்கு புகழ்வேத நாயக வேள்வாவாய்க்
களியா யுயிரிளம் மேவுறு பூவுறு காவல்கொள்வா
னளியா யகன்றனர் வன்பரி னீங்கிய வன்பரின்றே. (சஉஉ)

தலைமகள்கூதிர்ப்பருவங்கண்டுவருந்தல்.

தாவளர் ஞாயி றெனும்வேத நாயக தாருநெடு
வாவளர் வாடை யிதுவந்த தாலின்னும் வந்திலரோ
சூவளர் மாதரை யோம்புதல் செய்வ தொழிந்துபல
ரிவளர் மாதரை யோம்புதல் செய்திடச் சென்றவரே. (சஉங)

தோழியாற்றுவித்தல்.

செப்போது மென்முலை யாய்விரல் கன்றிச் சிவப்பவொரு
மூப்போதுங் கூட லிழைத்தணங் கேல்வெம் முழுமடங்க
லொப்போது வீரப் புயவேத நாயக வும்பனக
ரிப்போது வந்தனர் வான்சரற் காலமொன் றெய்த்தன்பரே. (சஉச)

தூதிற்பிரிவு.

தூதிற்குப்பிரிவுதலைமகளுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தல்.

நாறுகொள் செய்க்குளத் தூர்வேத நாயக நம்பிவரைப்
பேறுகொள் சீய மிரண்டெதிர்ந் தென்னப் பெரிதெதிர்ந்து
மாறுகொள் வேந்தர்தம் போர்தணிப் பானந்த மன்னரின்று
சீறுகொள் வேற்க ணலாய்தூது மேற்கொடு சென்றனரே. (சஉரு)

தலைவி முன்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

மிகைதோன் றியபுகழ் மால்வேத நாயக வேள்வாவாய்ப்
புகைதோன் றியவெனத் தோன்றிய தான்முன் பொருந்துபனி
பகைதோன் றியவிடந் தூதுசென் றரிது பார்த்தடையா
ரகைதோன் றியமனத் தேனென்செய் கேனுள் ளணங்குவனே. ()

தோழியாற்றுவித்தல்.

துவர்வா யணங்கு வருந்தே லிருவர் தொடர்ந்திழைக்கு
மூவர்வாய் நிலத்தடு போர்மாற்றி மன்னருற் றூர்தளவப்
பவர்வாய் பொழிற்குளத் தூர்வேத நாயக பானுநக
ரிவர்வாய் மொழிதவ றுரென முன்பனி யெய்துமுன்னே. (சஉஎ)

தூ ணை வ யிற் பி ரி வு.

தூணைவயிற்பிரிந்தமைதோழிதலைமகட்குணர்த்தல்.

போர்கொண்ட மன்ன ரிருவரன் ஞருட் பொருந்துமொரு
நார்கொண்ட மன்னர் தூணையாகச் சென்றனர் நண்பர்தமிழ்த்
தார்கொண்ட திண்புய மால்வேத நாயக தாருகர்
வார்கொண்ட மெனமுலே யாய்விரைந் தீண்டு வருதுமென்றே. (சஉஅ)

தலைமகள் பின்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

சென்ற சொருவர்க் குதவிசெய் வான்மன்னர் செய்யநெறி
நின்றூர் பயில்குளத் தூர்வேத நாயக நேயனரு
ளொன்றூர் மகளி ரெனயான் கலங்கவிங் குற்ற துவால்
குன்றூர் மணிபுணைந் தென்னப்பின் றேரன்று கொடும்பனியே. (சஉக)

தோழியாற்றுவித்தல்.

கற்றூர் புகழும் புகழ்வேத நாயகக் காளியிக
லுற்றூர் மகளி ரெனக்கலங் கேலிக லோடவொரு
வீற்று ராசுக் குதவியிங் கெய்தினர் வேந்தர்பொழிற்
சுற்றூர் கொடும்பின் பனிசெய்ய லாவதென் றுமொழியே. (சஙo)

பொ ரு ள் வ யிற் பி ரி வு.

தலைவன்பொருட்பிரிவுபாங்கிக்குணர்த்தல்.

பொன்னு லெவையு நிரம்பு மெனுமுனப் பொன்னிறமெய்
தன்னு வருந்துநட் கப்பிரி வெங்ஙனஞ் சொல்லுவல்யான்
றென்னு வெனுந்தமிழ் மால்வேத நாயகச் செம்மனக
ரென்னு மெனுமிடை யாய்புக னீவிரைந் தெய்துவனே. (சஙக)

பொருட்பிரிவுபாங்கிதலைவிக்குணர்த்தல்.

ஆசை யுறுத புகழ்வேத நாயக வண்ணல்வரை
ஆசை யுறுருக் கிருமையு மின்றென் றதுகுவிப்பான்
ஆசை யுறுமன்ன ரின்றுசென் றுரயில் வேலனுக்கி
ஆசை யுறுமறிந் தொண்குமிழ் பாய்கண் ணணங்கரசே. (சஙஉ)

தலைவியிளவேனிற்பருவங்கண்டுபுலம்பல்.

அருளே கருதிய மால்வேத நாயக வண்ணல்வளைப்
பொருளே கருதி யகன்றன ரன்பரிப் போதுதவா
நிருளே கருதிய கல்லார் மனத்தி னெழுந்தனதுண்
சுருளே கருது துணர்மாந் தருத்தொ ழுஞ் சூழ்குயிலே. (சுங.கூ)

தலைவியைத்தோழியாற்றுவித்தல்.

சேலே யணையகண் ணுய்மந்த மாருதத் தேர்செலுத்திப்
பாலே கருங்குயிற் சின்னங்க ளார்ப்பப் பவனிவரு
மாலே யுதவு மதன்வீ றுணர்ந்துவந் தார்கலங்கேல்
வேலே யொளிர்கரத் தார்வேத நாயக வேள்வளைக்கே. (சுங.சு)

தலைமகன்தலைமகளதருவெளிப்பாடுகண்டுசொல்லியது.

பொன்னென்று மார்பப் புயல்வேத நாயக பூபன்வளை
மின்னென்று தோன்றுமிப் பாசறை வாயந்த மின்னினுக்குப்
பின்னென்று மேகப் பிறையு மதியும் பிணையுமம்ம
முன்னென்று மீதிறும் பூதே விதந்து மொழிதரினே. (சுங.சூ)

பாசறைமுற்றிமீண்டேவயின்வந்ததலைவன்பாகற்குச்சொல்லியது.

கூறிய சீர்த்திக் குணவேத நாயகக் கோனகர்வாய்த்
தேறிய பாக னளனேயென் கோநிணைச் சேரலர்போர்
பாறிய பாசறை நின்றெழுந் தாங்குப் படிநெடுந்தே
ரேறிய யானிங் கிழிந்தே னிருந்தில னென்வியப்பே. (சுங.சூ)

பாங்கிதலைவன்வந்துழிமகிழ்ந்துரைத்தல்.

வினையோ வருந்தொடைத் தேரள்வேத நாயக வேணகர்ப்பொன்
வனையோ சிறிதென வானெங்க வம்பொன் வளங்குவித்தா
யுனையோ வருங்கதிர் வேலண்ணல் லேநல மோவருநின்
றினையோ வருமிப் புவியினில் வாழ்க்கை சிறப்புறுமே. (சுங.சுஎ)

தலைமகளோடிருந்ததலைமகன்கார்ப்பருவங்கண்டுமகிழ்ந்துசொல்லியது.

சிலையாக வாய்ந்த நுதலிவள் சந்தனச் சேறணிந்த
முலையாக விம்ம முயங்கினம் யாம்பொன் முழுமணிபொன்
மலையாக வாழ்குளத் தூர்வேத நாயக வள்ளல்செங்கைத்
தலையாக மேவுதல் போற்பொழி வாழிய தண்முகிலே. (சுங.சுஅ)

குளத்தூர்க்கோவை முற்றிற்று.

விருத்தம்.

நூலியற்றி யீதலொன்றே யுன்னதெனக் கோடலேபன்
னூலு மோர்நம்
மாலியற்றிக் கொடுத்திடுமைந் திணைக்கோவை யேற்றனையா
லளவி லாத
சேலியற்று புனற்குளத்தூர் வேதநா யகமகிபா
சிறப்பச் செய்யுட்
பாலியற்ற லேற்றலிவை யிரண்டினுநீ யெப்போதும்
பயிலு வாயே

[நீதிநூற்சிறப்புப்பாயிரம்.]

புதுவைவித்வான்,

ம-ஈ-ஈ-ஸ்ரீ, செ. சவராயலுநாயகரவர்கள்

ம ா லை.

க ா ப்பு.

கட்டளைக்கலித்துறை.

மன்னும் புதுவை வளர்சவ ராயலு மன்னவன்மேல்
தன்னும் விருப்பிற் றமிழ்மாலை யொன்று தொடுத்திடற்குப்
பன்னுஞ் சிறப்பும் பொருளு மணியும் பரிந்ததவும்
உன்னும் பலர்க்கு மிடையூறு தீர்த்தரு ளோர்முதலே.

நூல்.

பூவுந் தளிரும் பரப்பின ரல்லர் புலமையர்செக்
காவு மூளமுங் குடியிருப் பாய்நன்று நன்றயலே
மேவு மிடமிலை கொல்லோ முகிழ்முய் வியன்பலவும்
மாவும் பொலிபுது வைச்சவ ராயலு மன்னவனே. (க)

மொழிவார் முகினைக் கொப்பென்றவ் வாறு மொழிவதினோர்
பழியா முருமு விழுத்தனிற் குண்டுகொல் பாயமற்றுரன்
றுழியேற்ப தண்டுகொ லாதலி னுமுரை யாமதுப்பூ
வழிசேலை சூழ்புது வைச்சவ ராயலு மன்னவனே. (உ)

எல்லாரும் வாழ்த்துவர் நின்னையென் றியாரு மெடுத்துரைப்பார்
அல்லாருங் கூந்தற் பரமா தையரை யாமையினாங்
கல்லார்பொல் லானென வைவா ருனையிது காறறிவேன்
வல்லார் பொலிபுது வைச்சவ ராயலு மன்னவனே. (ஊ)

உனைகா வலர்பல கேள்வியின் யாவு மொருங்கறிந்து
தனைநேர் டவனெனைச் சாற்றுவ ரேனுமுன் சார்ந்துபெற்றோர்
பினைமேவு வரளிப் பாயறி யாமைபெற் றுயலெலியோ
மனைவான் றவழ்புது வைச்சவ ராயலு மன்னவனே. (எ)

நானு யகனென்பை சாதியிற் கல்வியி னற்பொருளில்
ஆனுக் குணத்தி னஃதண்மை யப்படி யாயினிவன்
ஏனு யகனெனக் காகானென் பாணங்கை யென்னுனைத்தி
மானு வளப்புது வைச்சவ ராயலு மன்னவனே. (ஏ)

மேலா விருப்பினும் வெண்மதி யோனை விரவியவான்
தோலா வுருவங் குலைந்தது மண்டொரு தூலுணர்ச்சி
காலாத செம்மதி யோனெனு நின்னைக் கலத்தலினுன்
மாலா வளப்புது வைச்சவ ராயலு மன்னவனே. (ஐ)

குணமார் நினையிந்த மண்பெற்று மேன்மை குலவியதாற்
கணமா ரெனக்கொப் பிலையெனும் வானுங் கதிரவனே
வணமார் தரப்பெற்று வைகலி னஃதுமிவ் வண்ணஞ்சொல்லு
மணமார் பொழிற்புது வைச்சவ ராயலுமன்னவனே. (எ)

அருளுற நீசெய் பிரசங்கம் போல வரவிறைவன்
தெருளுற நாளுஞ் செயநினைத் தாங்குந் திருநிலத்தைப்
பொருளுறத் தன்றலே மேற்றுங்கு வானவன் புந்தியனே
மருளமை யாப்புது வைச்சவராயலு மன்னவனே. (அ)

கற்பக மேவலிற் சங்குங் கமலமுங் கையுறலிற்
பொற்பக மேவக் கனமேற் கொளலிற் புனிதனென்பாஞ்
சொற்படி மாயிரக் கண்வேண் டுவதிலை தூர்த்தன்கொலோ
மற்படு செய்ப்புது வைச்சவ ராயலுமன்னவனே. (கூ)

பாரித்த பல்பசு வுட்காம தேனுவும் பன்மலருள்
வேரித் தடச்செங் கமலமும் வெற்பிணுண் மேருவும்போற்
பூரித்த வள்ளலு ணீயென யாரும் புகல்வர்கண்டாய்
வாரித் துறைப்புது வைச்சவ ராயலு மன்னவனே. (கo)

உடுப்பல வற்றுண் மதிபோன் மதாணி யுறுமணியுள்
அடுப்ப நடுப்பொலி மாமணி போற்கல்வி யாளர்குழு
நடுப்பொலி வுற்றனே நீபிறர் தேர்வாகொ ஞனறிவேன்
மடுப்பல சேர்புது வைச்சவ ராயலு மன்னவனே. (கக)

கலைமதி முன்னர் மலராதம் போருகக் கானமென்பர்
அலைவரு நின்முக மாமதி காண்டலு மார்வலர்தந்
தொலைவரு மங்கைக் கமல மலருந் தூணிபுணராள்
மலைவரு நீர்ப்புது வைச்சவ ராயலு மன்னவனே. (கஉ)

எளியரை வாட்டும் வலியரைத் தெய்வ மிறுக்குமெனல்
தெளிதர லுற்றனம் பல்லோரை வாட்டுங் திறன்மிடியின்
களியற வாட்டுவை நீதெய்வ மேயெனல் கற்பனையோ
வளியுள ரும்புது வைச்சவ ராயலு மன்னவனே. (கங)

காட்சிக் கெளியை கடுஞ்சொ லிலாமையை காதலித்தார்
ஆட்சிக் குரிய திருவுத்தை நீசெய் யருந்தவமென்
பூட்சிப் பரஞ்சுமந் தார்பிறர் பாரம் புலிக்குறவே
மாட்சிப் பொழிற்புது வைச்சவ ராயலு மன்னவனே. (கச)

குயிலோசை கேட்ட செவிகருங் காகங் கொடியதெனப்
பயிலோசை கேட்பதன் ரேபிர சங்கநின் பாற்கவர்ந்தார்
அயிலு ருவ லெனப்பிறர் கூற வவாவுவது
மயிலர் பொழிற்புது வைச்சவ ராயலு மன்னவனே. (கடி)

கண்டோர் நினைமிடி காணர்நின் னட்பிற் கலத்தவின்றி
வீண்டோர் பெருந்துயர் விள்ளார் நினைநம்பு மேன்மையுளங்
கொண்டோர் பிறிதொன்றுங் கொள்ளா ரெனிலெவன் கூறன்மலர்
வண்டோ லிடும்புது வைச்சவ ராயலு மன்னவனே. (கசு)

அளவா வுவர்க்கடல் போற்பெருஞ் செல்வ ரநேகருளர்
கொளவா மொருகிணற் றூற்றன் னநீயிரு கொள்கையருள்
உளவாம் விருப்ப மெவர்பாலுண் டாமெங்கட் கோதுதிநீ
வளவார் பொழிற்புது வைச்சவ ராயலு மன்னவனே. (கள)

கொடைவாய் குணம்பொலி நின்னெடு லோப குணம்படைத்த
நடைவாய் குணத்தருந் தோற்றமொத் தார்பய னன்குதவும்
அடைவாய் தருவொடு வற்றலுந் தோற்றமுற் றுவதென்னெ
மடைவாய் பணைப்புது வைச்சவ ராயலு மன்னவனே. (கச)

துதிக்குநின் ரோளலர் வேட்டதற் காகத் துடியிடையாள்
கொதிக்கு மதன்கை யலர்பிறர் வாயலர் கூடக்கண்டு
கதிக்கு மிருகண் ணலரொழி யாது கலங்கனன்ரே
மதிக்கும் புகழ்ப்புது வைச்சவ ராயலு மன்னவனே. (கக)

உலம்படு நின்புயங் கந்தென் றுரைப்ப ரொளியிழையாள்
கலம்படு கொங்கைக் களிறுறச் சேர்ப்பது காரியமே
நலம்படு மற்றவை கொண்டகண் டேதியை நாட்டுவதோ
வலம்படு சீர்ப்புது வைச்சவ ராயலு மன்னவனே. (உ0)

மதியா தவனென நீயிருந் தாலிக்த மங்கையைவான்
மதியா தவனெனக் காய்வான் மதனுஞ்சும்மா வுறச்சம்
மதியா தவனெவன் செய்வா னிதிலென்ன நுங்கொடைதா
மதியா தவன்புது வைச்சவ ராயலுமன்னவனே. (உக)

தணிவரி தாங்கவி செய்தலி னுற்பிர சங்கத்தினுல்
அணிகிள ரும்மிசை பாடலி னுனல்கு மாகத்தினுல்
எணிமுடி யாப்பெரும் பேராசை யாற்புக ழெய்துவனீ
மணிமதில் சூழ்புது வைச்சவ ராயலு மன்னவனே. (உஉ)

கொள்ளேத் தமிழ்ப்புல வோரியல் வாய்ப்பக் குறித்தியற்றும்
பிள்ளைக் கவிமுற் பலவுநின் பாட்டின்முன் பேசலென்னே
வெள்ளைக் குணமில் கதிரோன்முன் னுற்ற விளக்கமெனின்
நடப்புது வைச்சவ ராயலு மன்னவனே. (உங)

ஏதிரங் காமைக் கெவனன வெய்துத லின்றியிராப்
போதிரங் காக்கன வெய்துத லேபெரும் புண்ணியமோ
வாதிரங் காவெளிக் கூறுவ லோவெனு மாயிழையாள்
மாதிரந் தேர்புது வைச்சவ ராயலு மன்னவனே. (உச)

பேசப் பிறர்கும் புகழாள ரியாவரும் பிற்கொடையே
எசப் படுமிக ழென்பார் கறுக்கொத் திணரில்வண்டு
மூசப் படுமுற் கொடைக்கிழுக் கென்னெனு மொய்குழலாள்
வாசப் பொழிற்புது வைச்சவ ராயலு மன்னவனே. (உடு)

மாலேவக் தால்வஞ்சி யென்படு வாண்மதி யாமையென்ன
மாலேயன் பாருயிர் நீங்கலென் ஞமென்ற மன்னியபா
மாலேகன் காற்றி யதுமறக் தாய்நின் வயப்புயஞ்சார்
மாலேதக் தாள்புது வைச்சவ ராயலு மன்னவனே. (உசு)

அலைகட னின்கரு ணைக்குடை வுற்ற தடர்கருப்புச்
சிலைமத னின்வனப் பிற்குடை வுற்ற திறத்தினுன்னே
வுலைவற மோகித் திடுமெனைக் காய்த வுளங்குறிப்பாய்
மலைநிக ரிற்புது வைச்சவ ராயலு மன்னவனே. (உஎ)

இசையிற் சிறந்த நினைமோகித் தானின் னிசைக்குடைந்து
பசையற் றழல்சுட்ட வெய்சி றுவதென்ன பாவநெடுந்
திசையிற் பொலியும் புகழாய் புலவர்சிந் தாமணியே
வசையிற் றவிர்புது வைச்சவ ராயலு மன்னவனே. (உஅ)

செய்ய தமிழி லகத்திய மாதவற் செற்றனையாம்
ஐய வதனுக் கவன்வாழ் வனைத்தென்ற லாதரித்த
தைய லெனைவெதுப் பஞ்செய்வ தோவிது தக்கதுவோ
வையம் புகழ்புது வைச்சவ ராயலு மன்னவனே. (உக)

குழைமணக் குங்கற் பகமோ குலவுசிந் தாமணியோ
மழைமணக் கும்புய லோவிரண் டாக வளர்நிதியோ
இழைமணக் கும்மருப் புத்தேனு வோநின்கை யென்னுைக்கேன்
வழைமணக் கும்புது வைச்சவ ராயலு மன்னவனே. (கூ0)

தூறள் வெண்பா.

அன்பே யுருவா யமைந்தசவ ராயலுமால்
இன்பே தழீஇவாழ்க வே.

இந்நூலாசிரியர் மாணக்கருளொருவராகிய காரைக்கால்,

அ. சவேரிநாதபிள்ளை இயற்றிய

பாடல்.

பூமாலே யென்றுநற் பொன்மாலே யென்றும் பொருவின்முத்தத்
தூமாலே யென்று மணிமாலே யென்றுஞ் சொலவுறுமத்
தோமாலே கள்பொரு மோசவ ராயலுத் தூயலிந்தப்
பாமாலே மாலேயுண் ணீக்கிநன் மாலேப் பயத்தலினே.

V. B, SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

சிவமயம்.

ஸ்ரீ குமாகுருபாஸ்வாமிகள் சரித்திரம்.



கற்பகவிநாயகர்.

பூமேவு முகமணியாய்ப் புகழ்க்கோடு குடஞ்சுட்டா
யாமேவு கடமுகிலா யணிமேவு கரந்தருவாய்ப்
பாமேவு பதஞ்தியாய்ப் பழவடியர் மிடிதுரந்து
காமேவு பெருங்கருணைக் கற்பகக்கன் றிணைதொழுவாம். (க)

காசிவிசுவேசர்.

உண்ணெடு பெருங்கருணை யொருத்தியிடஞ் சூழ்தலினு
லெண்ணெடு மற்றொருத்தி யேறியமே லிடந்தின்று
மண்ணெடு மாறிழித்து வலஞ்சூழச் செய்தமருமை
விண்ணெடு புகழ்க்காசி விசுவேசர் பதம்போறறி. (உ)

ஸ்வர்ணகர்ஷண பைரவர்.

அன்னநெடுங் கொடியுயர்த்த வண்ணமுமொண் செங்கமலப்
பொன்னமரு மறுமார்பப் புத்தேளு நோக்குதொறு
மின்னமுமுண் ணடுங்கிடக்கொண் டிமிகபா லச்சூலச்
சொன்னவயி ரவப்பெருமான் றுணைப்பாதந் தெழுதெழுவாம். (ங)

முருகக்கடவுள்.

வாையெறியும் வெள்ளியகூர் வாய்வேல்கைக் கொடிபுலவர்
புாையெறியுங் கவிழிணர்மாப் போழ்ந்துபெருவிண் ணுலகில்
விாையெறிதார்க் கடவுளைக் குடி யேற்றி வெண்டாளக்
திாையெறியுஞ் செந்திலமர் செவ்வேள்பொற் பதம்பணிவாம். (ச)

நூல்.

பாண்டிநாடுவளம்.

பொன்பூத்த கைலாயப் புண்ணியநா யகனளவாத்
தென்பூத்த மலயவளம் விழைந்துதிரு முடிசூடிக்
கொன்பூத்த புரவலனுக் தேவியொடுங் குடிகொண்ட
மன்பூத்த மதுரையுடை வளத்ததுபாண் டியநாடு. (க)

செந்தமிழுஞ் சந்தனமுந் திசையெலாம் பரிமளிக்க
மந்தவளி யுமிழ்மலய வரைக்குமிமி நின்றிழிந்து
கொந்தவிழு மலர்வீசிக் குளிர்செழுமுத் தெடுத்திறைத்து
முந்தவெழு புனற்பொருகை முழுவளத்த தந்நாடு. (உ)

அன்றுதடா தகைப்பெயர்பூண் டரசளித்த மாதேவி
கன்றுதலில் பலவிருக்க நமையேயகைக் கொண்டுயர்த்தா
ளொன்றுறநம் மியற்பெயரே யுறுத்தனள்கட் கெனமகிழ்ந்து
தின்றுகய முள்ளுவபோற் முள்ளுவநீர்க் கழனிதொறும். (கூ)

வேலிபுரிந் திறையவனே விரும்பிநமைக் காக்குமெனிற்
சாலியெனு நமக்குளதோ குறையென்று தழைவனபோல்
வாலியநென் முளைவித்தி மள்ளர்நீர் பாய்ச்சுதலுங்
கோலியசெய் யிடங்கடொறுங் குலவியெழு வனபைங்கூழ். (சு)

வாங்குதிரை கொடுஞ்சிலையா வண்கமலக் கொடிகாணு
வோங்குவரால் கடிக்கணையா வொளிர்தருவா னுலகிலக்கா
வீங்குபுனற் றடஞ்செறுத்தும் வேம்பணிதிண் டோளான்போ
லாங்கொருதா னும்பகையை யடைந்துபொரு செயனேரும். (ரு)

வீங்குவன மாதர்நகில் விளங்குவன மேனியொளி
யேங்குவன துடிமருங்கு லிரங்குவன காற்சிலம்பு
தூங்குவன குழல்வண்டு சுழலுவன கருநெடுங்க
ணீங்குவன மிடியாதி நெருங்குவன திருவாதி. (சு)

கண்மருவு வனவெவர்க்குங் கதிர்க்குமுதம் போலகமு
மெண்மருவு பொருளாதி யேராறு மெம்மலரும்
பண்மருவு வண்டினமும் பாகூறு கழைக்கரும்பு
மொண்மருவு கஞ்சநா தமுமோங்கு தென்னையுமே. (எ)

வானளவு கருஞ்சோலை மண்ணளந்த மாறிகிரி
தேனளவு கூடுபடி செவ்வானம் போர்த்தகலை
கூனளவு பிறையொருபாற் கொண்டசுரி முகச்சங்கந்
தானளவு கதிர்காப்பட் டயங்கல்கவுத் துவமனியே. (அ)

சாலெலாம் வெண்டரளந் தனீயெலாஞ் செஞ்சாலி
காலெலாங் கருங்குவளை காவெலாங் கனிச்சாறு
பாலெலாங் கழைக்கரும்பு பாங்கெலா மிகத்திருந்தி
நூலெலா நனிவிதந்து நுவல்வளத்த தந்நாடு. (கூ)

தெய்வநா யகன்சீர்த்தி திருந்தியவே டெதிரீர்த்துச்
சைவமே பொருளென்று தாபித்த திருநுதான்
மெய்விரா வுயிர்பொருவ விராவுதலாற் றிருவமிகும்
பொய்விரா வுதலில்லாப் புகழ்மிகுத்த தந்நாடு. (க0)

மண்ணுலகத் தொருமேவுந்தன் றிருமகளே மணம்புரிந்து
கண்ணுதலார் கூடலுற வண்ணபரிவங் கான்முளைசீர்
விண்ணுலகத் தொருமேவுந்தன் றிருமகளே வேட்டருளி
நண்ணுமொரு குன்றமுடைத் தந்நாட்டு நலம்பெரிதே. (கக)

ஸ்ரீ வைதீஸ்வரன்கோயில்.

ஆய்ந்தபுகழ்ப் பேரார்வையுடை யத்திருநாட் டினுக்கழகு
தோய்ந்ததிரு முகமென்வத் தூலங்குருக ளொன்றுதுதா
னேய்ந்தபெருஞ் சைவர்குழாந் திருக்கயிலே யென்றிசைப்ப
வாய்ந்தவயி ணவர்கடிரு வைகுண்ட மெனுநகரம். (கூ)

முழவுபொலி வனவரங்க மூவுலகுங் கொண்டாடும்
விழவுபொலி வனமறுகு விண்ணியலும் வெண்பிறைக்கோட்
டுழவுபொலி வனமணிசெ யுபரிகையங் குதலிமொழி
மழவுபொலி வனதிருவ ல்குமா டங்களெலாம். (கூ)

பெருகுவிறன் மைந்தரொடு பிணங்குமரி மதர்மழைக்கட்
கருகுமுகிற் குழன்மடவார் கழற்றிவீ சியகுழைக
ளருகுமணி மறுகிடைவீழ்ந் தளவாத பெருஞ்செல்வ
முருகுநிகர் மைந்தர்விடு முழுமணித்தேர்க் காறடையும். (கச)

கருங்குவளை மருட்டுவிழி காதளவா டியமாடவர
சொருங்குபயின் மாளிகைமே லோங்குமா மியத்தலத்து
நெருங்குமலர்க் குப்பைகளை தொழின்மடவார் நெட்டுயிர்ப்ப
விருங்குளிர்வான் றருவுக்கு மெண்ணில்பல மலர்க்குப்பை. (கரு)

ஓங்குதிரு மாளிகைமே லொண்ணிலா முற்றத்து
வீங்குபரி யங்கமிசை மேவுமா டவர்மயங்கிப்
பாங்குபொலி மாதர்முக மென்றுபகங் கத்தூரி
யாங்குமதிக் கிடுவாதைக் களங்கமெனு மறியாமண். (கூ)

ஓவாது நீராட்டி னெளிளியமென் றுகினஞ்சு
தாவாத வல்குன்முலைத் தடந்தோன்ற மடமாதர்
மேவாத நாணமிக மைந்தர்விழி புதைப்பவ
ராவாவிந் தின்பேற்கண் பெற்றிலமென் றயருவார். (கஎ)

பொன்செய்த மேனிலத்துப் பொற்றெரடியா ரூடன்மிகத்
தென்செய்த சிலம்பொலிக்குஞ் சிறுபொழுது கூடன்மிகக்
கொன்செய்மே கலியொலிக்கும் பெரும்பொழுது குறித்துணர்ந்து
மன்செய்வா னவரழுக்கா றுறுதலான் மகவிழந்தார். (கஅ)

மாதரார் திருமுகமு முழந்தாளும் வயங்கலவன்
காதல்கூ ரவர்நகிலுங் கைத்தலமு முறுங்கிவ்வீ
மேதகவாய் வருபாட்டுங் காதுமிளிர் தருங்வள்வீ
தோதகன்மற் றவர்குழலுங் கூறியகண் டமுமண்டே. (கக)

மரகதமா டத்துமிசை வயங்குபுசெவ் வான்படிதல்
புரவுயர்ப்ச் சுருமாயோன் பொற்கலீபோர்த் ததுநிகர்க்கு
முரவுபிர மாடமிசை யோண்கருமே கம்படிதல்
காவில்பளிக் குருப்பெருமான் கரித்தேர்ல்போர்த் ததுநிகரும். (உ0)

மறையவர்தங் குடியொருபால் வயங்குமர சாண்மையுடை
யிறையவர்தங் குடியொருபா லியைதருமவா ணிகத்தமைந்த
நிறையவர்தங் குடியொருபா னிலவும்வே ளாண்மைபுரி
துறையவர்தங் குடியொருபாற் றுவன்றிடுமந் நகரத்து. (உக)

பாண்டிவேளாளர்சிறப்பு.

இத்தகைய நகர்வாழு மெண்ணில்வே ளாண்குடியு
ளுத்தமமிக் கவர்பாண்டி வேளாள ரென்றுரைக்கு
மத்தகையர் நனிவாழ்வா ரளவுபடாப் பெரும்புகழார்
வித்தகநல் லொழுக்கமுருக் கொண்டன்ன மேன்மையினர். (உஉ)

வளம்பெருகு முழவுதொழில் வாழ்க்கையால் யாவருக்கு
முளம்பெருகு மகிழ்செய்வா ருண்மையே தலைநிற்பார்
களம்பெருகு காமாதி கடிந்துசிவ பரனடிக்குத்
தளம்பெருகு மலர்தூவித் தாழ்ந்தெழுநன் னியமத்தார். (உங)

மகப்பேறுகருதி இருமுதுகுரவர் நோன்புழுத்தல்.

அன்னவரு ளொருவர்மனை யறம்வழாப் பெருநிலையி
லென்னருமொவ் வார்கற்பி னிரியாத மனைவியொடு
பொன்னனைய மகற்பெறுவான் போற்றுதிருச் செந்தூர்வாழ்
முன்னவனை யுளங்குறித்து முனிவிலா நோன்புழுந்தார். (உச)

ஆறுமுகப் பெருமானு ரணிவிழாச் சேவித்துங்
கூறுபெருங் கோயில்வலங் கொடுபணிந்து மாரன்முத
லேறுவிசே டம்பொலிகா ளெய்துபுரச் சேவித்து
மாறுதவி ரடியார்க்கு மாறாது மடையிட்டும். (உரு)

புத்திரப்பேறு.

இன்னுமள வாவிரத மிவ்வாறு புரிதருநாண்
மன்னுமவர் பெருங்கற்பின் மனைவியார் வயினின்றும்
பன்னுமலி வாயமர்ந்த பண்ணவனுர் திருவருளா
லுன்னுமறங் குதுகலிப்ப வொருவரவ தரித்தனரே. (உசு)

பாலனு ரவதரித்த பண்பினிரு முதுகுரவர்
வேலனு ரருள்போற்றி வீடாத மகிழ்ச்சியெழச்
சாலநா ணும்புரிந்த தவப்பயனும் றேமென்று
கோலநான் மறையவராற் சாதகா திகள்குயிற்றி. (உஎ)

மிடியனெரு செய்போற்றும் விதமெனவீ டுறல்குறித்த
படிமையன ஞாசிரியன் றண்பபோற்றும் பண்பெனவங்
கொடிவில்வரி சைகளியற்றிப் போற்றிவளர்த் தனசோம்ப
மடிவில்பிறை போல்வளர்ந்தார் மாதவத்து மைந்தனுர். (உஅ)

புத்திரர்பேசாமைதேரிந்து அவர்கள்வருந்தல்.

ஓராண்டு பெருமகிழ்ச்சி யுற்றவிரு முதுகுரவ
ரீராண்டு முதலாகப் பேசுவரென் றெதிர்பார்த்தும்

பாராண்டு வருமூவோயார் பேசாத பண்புணர்ந்து
நாராண்டு மகிழ்மனத்துத் தன்பமே நனிசுமப்பார். (௨௯)

பூங்கையா லெடுத்தணைத்துப் புல்லினருச் சியுமோந்து
நாங்கையா லீணைபாற்றி நன்றிதுபெற் றனமென்று
தீங்கையா யாதுகூ றேர்ந்தார்கள் யாவரையு
மூங்கையாக் கிடுவாரை மூங்கையா னெனத்தெளிந்தார். (௩0)

முன்செய்த தீவினையோ மூற்றியது வேறுளதோ
பொன்செய்த கிண்கிணித்தாட் புண்ணியச்செந் தூர்ப்பெருமா
னென்செய்த வாறினிநா மென்செய்து மெனமயங்கிக்
கொன்செய்த கொடுங்கவலைக் குழிசியா யினர்மொழிவார். (௩௮)

வே று.

செந்தில்வாழ் குமரப் புத்தேள் சேவடிக் கமலம் போற்றி
நந்துபல் விரதம்பூண்டு நாள்பல கழிந்த பின்றை
யந்தவா னவன்செ யும்பே ரருளினுன் மூங்கை யேயாய்
வந்துதோன் றியதிச் சேயேன் மற்றினி யுரைப்ப தென்னே. (௩௭)

சுற்றமு மிழிப்ப நட்டார் தொகுதியு நகைப்ப மண்மேன்
மற்றவர் யாரு மெள்ள வாயிலா மூசை மைத்தற்
பெற்றதிற் பெருமை நன்று பெரும்பழி யின்மை யாலென்
றற்றமுள் ளொருவு மாறீ தமைதரத் துணிந்தார் மன்னோ. (௩௩)

திருச்செந்தூர் செல்லத்துணிதல்.

வந்தவெங் கவலை தீர வாரிசூழ் திருச்செந் தூரிற்
கொந்தவிழ் கடப்பந் தாரான் கோயிலின் மூசை யாய
மைந்தனைக் கொடுபோய் விட்டால் வருவது காண்டு மென்று
சிந்தையிற் றுணிந்தெ முந்தார் சேயையுங் கூட்டிக் கொண்டே.(௩௮)

நன்னிமித்தப்பேறு.

உற்றதோ னைந்தா மாண்டி லொய்யெனச் செல்லா நிற்கு
மற்றவர் மனையி னின்று மறுகில்வந் தனரப் போது
பெற்றமொன் றிளங்கன் றீறு பெருமடி சுரந்த பாலோ
டுற்றது நேரே கண்டா ருலப்பிலா மகிழ்ச்சி பூத்தார். (௩௫)

மறையவ ரிருவ ரப்பால் வந்தன ரதுவுங் கண்டார்
குறையிலை போபோ வென்றே சேதிலன் கூறக் கேட்டார்
நறைகமழ் கின்ற தேமாங் கனிசிலர் கல்லக் கொண்டார்
நிறைதரு மகிழ்ச்சி பொங்க நடந்தனர் நிகரி லாதார். (௩௬)

வான்றவழ் மலய நின்றும் வருபெரும் பொருகை நீத்தந்
தான்றவழ் நடவை சற்றுந் தண்மலர்த் தருக்கண் மொய்த்தே
யான்றவழ் நடவை சற்று மாழிசா னடவை சற்றுந்
தேன்றவழ் புகழா ராகச் சென்றுசெந் தூரைச் சேர்ந்தார். (௩௭)

திருச்செந்தூர்க்கூட்சி.

ஒருவரை மார்பம் போழ்ந்த தணர்ந்துபே ரச்சம் பூண்டு
பெருவரை யனைத்தும் போர்ந்து பிறங்குறு வெள்வே லியன்
றிருவருள் பெறுவா னெண்ணிச் செறிந்தன நிற்றல் போலும்
பொருவில்பன் மாட மோங்கிப் பொலிதிரு வீதி கண்டார். (நஉ)

வள்ளலைச் சூழ்ந்த ராது வானத்துக் கிடுக்கண் செய்த
கள்ளமும் மதியும் வெந்து கருகிய துள்ளத் தோர்ந்து
வள்ளலைச் சூழ்ந்து நாளும் வானத்தைத் தாங்கா நிற்குங்
கள்ளமில் லாத செம்பொற் கடி மதிற் பொலிவு கண்டார். (நஊ)

அடுத்தடி வணங்கு வோரை வாழ்விக்கு மருளா யுன்னிக்
கடுத்துமுன் போல வின்னு மகைப்படை செலுத்தே லென்று
விடுத்திட பெரிய முத்தும் வித்துரு மமுதி றைத்து
மடுத்தவெண் டிரைக்கை யாழி வள்ளலை வணங்கல் கண்டார். (ச0)

திரிபுர மெரியுண் மூழ்கச் சினந்துசெற் றிடுவா னம்மான்
வரிசிலை மேரு வாக மலர்க்கரங் கொண்ட ஞான்று
பரிவுறு மண்டந் தாங்கப் படைத்தவே றிருத்தி யென்னப்
புரிதரு வான்றூப் செம்பொற் கோபுரம் பொலிதல் கண்டார். (சக)

ஒருட லமர்ந்த தங்க ஞண்மையை விளக்கி யாங்கு
மேருவுஞ் சமழ்ப்ப வோங்கும் விரிமணிக் கோபு ரத்துப்
பேருரு மயிலு முட்காற் சேவலும் பிறங்கா நின்ற
காருருக் கலங்க வோங்குங் கொடிமிசைக் கலத்தல் கண்டார். (சஉ)

முற்றிய வருள்சா லாறு முகப்பிரான் றரிச னத்தாற்
பற்றிய வகமே போலப் புறத்தினுங் குளிர்ச்சி பம்பச்
சுற்றிய வாச நூற்றுக் காவதக் தூணெந் தீசு
மொற்றிய சாந்து பூசி யுறுபெருங் குழாங்கள் கண்டார். (சங)

இலவிபூதி.

இலையமில் குமர வேண்முன் வணங்குவார்க் கென்றுந் துன்ப
மிலையடி பகைசற் றேறனு மிலைபடி பிணிநி ரப்பு
மிலையளற் றுழன்று வீழ்த்த லிலைபல பவத்துச் சார்பு
மிலையென விலவி பூதி யெடுத்தெடுத் தூதல் கண்டார். (சச)

இன்னபல் வளனு நோக்கி யெம்பிரான் றிருமுன் சென்று
பொன்னடி வணங்கிப் போற்றிப் புண்ணிய முதல்வா விங்கப்
பன்னரு மதலை தானின் னடைக்கலம் பார்த்துக் கொள்ளென்
றுன்னருந் தம்மூ ருற்ற ருறுதவம் புரிந்தீண் டேனே. (சடு)

ஈன்றவ ரொழிந்த பின்றை யிசைத்திடா மதலை யாருக்
கான்றநல் லறிவு செந்தூ ரண்ணலா ரருளிற் றோன்றச்
சான்றவர் மதிக்குந் தெய்வச் சண்முக விலாசம் வைகித்
தோன்றலா ருருவ முள்ளே தோன்றக்கண் டிருந்தா ரன்றே. (சசு)

செந்திலாண்டவன்திருவருள்புரிதல்.

இவ்வணஞ் சிலகாள் வைக வெரிமருள் சூட்டுச் சேவல்
கைவண்ணக் கொடியாக் கொண்ட காங்கேயன் கருணை பூத்துச்
செவ்வண்ணக் குமர ஞவோர் திருவுருக் கொண்டு தோன்றி
யவ்வண்ணப் பொருள்யா மேயென் றறிதர வாய்ம லர்ந்து. (சள)

மருவிய நீயா ரென்ன வாய்திறந் தடியே னென்னப்
பொருவிலக் கரமுப் பாணும் பொலிதரு மைம்பத் தொன்றுந்
தருமிரு மொழிகட் குள்ள வியலெலா முணரச் சாற்றிப்
பெருகிலக் கியமுங் கூறிப் பிறழ்தராப் புலமை செய்து. (சஅ)

கடன்மடை திறந்தா லென்னக் கவிபுகல் வாக்கு நல்கி
யடல்கெழு பிரசங் கத்தி னமைபெருஞ் சிறப்பு நல்கி
மடனிகு சமய மாதி வயங்குதீக் கைகளுஞ் செய்து
படர்மறை யனைத்துந் தேறுப் பதமலர் சென்னி சூட்டி. (சக)

தவலருந் தவத்தா லெய்துஞ் சைவசித் தாந்த வுண்மை
நுவலுமுப் பொருளுந் தெள்ளி நூற்குரு பரனே யாதி
கவலில்செங் கற்றே யாடை கவின்சுடை வேடந் தாங்கி
யவமில்பக் குவர்க்கெம் முண்மை யறிவியென் றுபதே சித்து. (ருo)

திருந்துவெண் ணீறு நல்கித் திருவுருக் காந்தா னீயன்
வருந்துத லின்றி யெல்லாம் வாய்த்தமா தவத்தின் மிக்கார்
பொருந்துசெங் கற்றே யாடை பூண்டுசெஞ் சடைக டாங்கி
யருந்திற லாறு கட்டி வேடமு மமையப் பூண்டு. (ருக)

வேறு.

குமாதருபரரென்று பெயர்பெறுதல்.

கோலமலி திருச்செந்தூர்க் குமரவேள் கருணையினும் குமர ஞகிச்
சீலமலி குருபரனீ யாதியென வாய்மலர்ந்த திறத்தை யோர்ந்து
ஞாலமலி தவர்குமர குருபரனென் றுரைக்குமொரு நாமந் தாங்கி
மூலமலி முதற்குரவ னருணினைந்தா னன்றவெள்ள மூழ்கி ஞரே.(ருஉ)

இவர், நூல்செய்யக்கருதுதல்.

ஒருகுமர குருபரமா முனிதமையாட் கொண்டருளி னுபதே சித்த
குருபரனைத் துதிசெய்வான் கருதியது கோடுமெனக் குறிக்க லுற்று
ரருமையபன் மொழிகளுஞந் தென்கலியும் வடகலியு மகாதி யாய
பொருவிலிரண்டனுக்குமுதலாகியன் பிறைமுடித்த புகழ்ப்புத் தேளால்.

அனையனிடைக் கேட்டுணர்ந்து விரித்தவிரு வருமுனிவர்க் கர
சா வள்ளார், நினையுமிவை யொத்தனவே யாயினுமிவ் விரண்டனுளு
நிகரி லாத, வெனபுகழ்த்தென் மொழிமறையிற் சிறப்பெழுத்தைத்
தெனவைத்தே வயங்கக் கொண்ட, தினையவிசே டமுமன்றி யடி
முடிமா லயனின்னு மெய்தா முன்னோன். (ருச)

பித்தனென விகழ்ந்ததுமெண் ணுதுபா கெவெனவும்பெண்பாற் றூது
சித்தமகிழ்ந் ததுவேட்டுச் செலவுமினுஞ் செயற்கரிய செயவுந் தானே
யொத்தமுதற் புலவனென வுறவுமெழு திடுவாஞ வுறவு மோங்கு
வித்தகவண் கயிலையகம் வருவித்துக் கேட்டிடவு மேய தம்மா. (நிநி)

கந்தர்கலிவெண்பா.

ஆதலிற்றென்கலேயேநாங்கோடுமெனத் துணிந்துபெருகன்புபோர்ப்ப
மேதகப்பூ மேவுமுத லெடுத்தணிமுற் சிறந்தகலி வெண்பா வொன்று
போதகனு கியபெருமாற் கோதியள வருங்கேள்விப் புலவர் சூழக்
காதலினு யிடையமர்ந்தா ரறங்கடலே யெடுக்கவந்த காட்சி யாரே. ()

வேறு.

இனையரிவ் வாறு மேவ வீன்றவ ரீது கேட்டுத்
துனைதர மகிழ்ந்து செந்தூர் புகுந்தமர் தோற்ற நோக்கித்
தனையரென் றெண்ண நீர்ந்து தங்குல தெய்வ மென்றே
நினைதரு மூளத்த ராகித் தொழுதனர் நீங்கி ஞரே. (நுள)

கைலைக்கலம்பகம்.

பின்னர்வண் புலவ ரேறுய்ப் பிறங்குவார் செந்தூ ரண்ணல்
பொன்னடி வணங்கிப் போற்றிப் புறவிடை கொண்டெ ழுந்தே
யன்னமென் னடையார் சூழ வவிர்திருக் கயிலே சார்ந்து
கன்னவில் சிலையி னுர்க்குக் கலம்பக மொன்று பாடி. (நிஅ)

திருநெல்வேலிழதலியஸ்தலதரிசனம்.

ஆங்குநின் றெழுந்து வேயீன் றருளிய முத்த மென்ன
வோங்குபுண் ணியனுர் மேய நெல்வேலி யுவந்து போற்றி
வாங்குவெஞ் சிலையி ராமன் வழிபடப் பழியொ ழித்துத்
தாங்குநன் னகரி ராமேச் சரம்புகுஉத் தாழ்ந்து போற்றி. (நிகூ)

மின்னிய மோலி வானுர் மேமெவழி லரம்பை மாதர்
முன்னிய மொய்ம்பின் வேடர் மொய்கொடிச் சியரே யாகித்
துன்னிய சார றேறுந் துதைந்துவாழ் குற்ற லத்து
மன்னிய குறும்ப லாவாழ் வள்ளலார் பாதம் போற்றி. (கூ0)

ஒருதுணை மாலே பாகத் துவந்தவர் சுழியல் போற்றிக்
கருவுறு தருள வல்லார் கானப்பேர் நகரம் போற்றிப்
பருவர லெமக்கு நீப்பார் பற்றுமா டாணை போற்றிச்
செருமலி சூலத் தையர் திருப்புன வாயில் போற்றி. (கூக)

பேணிய தருள வல்லார் பெருந்துறை புகுந்து போற்றிக்
கோணிய பிறைமு டித்தார் குளிர்கொடுங் குன்றம் போற்றி
யேணியங் கரத்து நாத ரிருந்தமிழ்ப் புத்தூர் போற்றிப்
பூணிய லெலும்பாக் கொண்டார் பூவண நகரம் போற்றி. (கூஉ)

செய்யவேண் மகிழ்ந்து மேய திருப்பாங் குன்றம் போற்றி
யெய்யயா வருக்கு நல்கு மேடக ரகரம் போற்றி
யையதீ வினைய றுப்பா ராப்பணூ ரடைந்து போற்றிப்
பொய்யவர்க் கொளிக்கு மற்றைத் தலங்களும் புகுந்து போற்றி.(கூந)

சகத்தியன் முழுது நீத்துத் தத்துவ முணர்ந்த யோக
ரகத்தியல் குமரப் புத்தே ளகத்தியற் குணர்த்தி யாங்குச்
சுகத்திய லுண்மை முற்றுந் துணிதர வருளப் பெற்றூர்
நகத்தியல் சிலையார் மேய கூடலை நண்ண வந்தார். (கூச)

அறங்கிளர் கல்வி யானு மணிகிள ரொழுக்கி ஞானு
நிறங்கிள ருண்மை யானு நிகரிலாப் பெருமை யாளர்
திறங்கிளர் விருப்பாற் சென்ற சென்றபல் லிடத்து முள்ள
மறங்கிளர் செருக்கின் மூழ்கும் புலவரை வாதில் வெல்வார். (கூரு)

சிலாையைந் திலக்க ணைத்தாற் சிலாைமிக் கிலக்கி யத்தாற்
சிலாைவண் பிரசங் கத்தாற் சிலாைஞன் கியற்றும் பாவாற்
சிலாைநே ருரைக்குஞ் சொல்லாற் சிலாைமெய்ஞ் ஞான நூலாற்
சிலாைமற் றுள்ள நூலாற் சிறப்புற வெல்லு வாரே. (கூக)

அருண்மலி யினையர் கூட லாலவாய்ப் புறத்தி லெய்தப்
பொருண்மலி யவ்வூர் மேய புண்ணிய னெதிர்கொண் டெய்தித்
தெருண்மலி தரப்ப னிந்து சேர்ந்தன ரவ ளாவிக்
கருண்மலி சோலை யாதி காட்டுபு மகிழ்ச்சி செய்வார். (கஎ)

மதுரானகரக்காட்சி.

நிறங்கொடு பொலியு மேனி நின்மலக் குமர வேளைப்
புறங்கொடு சுமத்தல் செய்வ பொலிந்தகங் கொடுசு மக்கு
மறங்கொடு மேய நும்மைக் கண்டன மகிழ்ச்சி மேய
திறங்கொடு குலவா நிற்குஞ் செழுமயி னடனங் காண்க. (கஅ)

இரும்பொழி லடிக ளாக விணர்க்குழை முகம தாக
வரும்பவிழ் மலர்வா யாக வருங்களி செய்பு ளாகத்
தருங்கனி துளியா நிற்குந் தண்ணறு வினைய செய்பு
ளொருங்குறத் துளியா நிற்குஞ் சுவைபொரூ முதுவுங் காண்க. ()

கமையணி பவர்மா ணுக்கர் நாடிநங் நீழல் வாழ்வார்
கமையடி வணங்க வந்தார் சான்றதக் கேகா யென்று
ளமைதரக் குறித்து மேன்மேன் மகிழ்ந்தல ருருப்ப தென்னச்
சுமைதரு தார்ப்பூச் சிந்துங் கடம்பமர் சூழல் காண்க. (எ0)

முடிகளோ ராறுந் தாங்கு முருகவே ளருளப் பெற்ற
வடிகணுங் கவியு ளொவ்வொன் றவாய்ப்பிறி தவாவார் போல
வொடிவில்பல் கனிக ளுள்ளு மொவ்வொன்றே யாவாவி வேறு
கடிதரப் பல பழுத்த பொழிலுதுங் கண்ணிற் காண்க. (எக)

சேவலங் கொடிக்கைச் செவ்வே டிருந்தணுக் கிரகம் பெற்ற
பாவல ராய வுங்கள் பாட்டில்யாம் வீழு மாபோற்
காவலங் குறுப லாக்கள் கனிந்தபல் கனியை நச்சி
மேவரும் பலவீ மொய்த்து வீழ்தரு வளமுங் காண்க. (எஉ.)

சித்தநல் லொழுக்க மோவாத் தேசிகப் பொலிவு வாய்ந்த
வுத்தம வடிகே ளுங்கள் செய்யுளுட் பொருளே போலப்
பைத்தபூம் பொழிலு ளீரப் பலாப்பழுத் தடிமண் கீள
மொய்ததபல் கனிசெ றிந்த முழுவளஞ் சிறிது காண்க. (எங)

செய்யகற் றூய்ந்த வாடை திருவரை யுடுத்துப் போந்த
வையமே யுமைக்கண் டோடும் புன்கவி யாளர் மானக்
கொயம்மலர்ச் சோலை மேலாற் குளிரெனும் பவன மேவ
மெய்ந்நடு நடுக்குற் றூடு மிக்கவா னவங்கள் காண்க. (எச)

எண்ணிலா வோடி கால்க ளியைதரப் பெற்று மென்றுங்
தண்ணிலா வழிவாழ் வேந்தர் நாட்டிலீனத் தணவா தாகிக்
கண்ணிலா நெய்தல் வேலிக் கடலகம் புகுதா தாகி
மண்ணிலா விந்த வையை மாநதி வளமுங் காண்க. (எடு)

அடிகணும் மடிசார்ந் தோரை யளற்றகம் புகுத லாது
முடிவிலின் பெய்த வுய்க்கு முறைமைபோற் றன்பாற் சார்ந்த
மடிவரு வெள்ள முற்றும் வாரிதி யுவர்பு காது
படியிலின் பெய்த வுயக்கும் பழநதி யிதுவே யன்றே. (எசு)

என்றுபல் வளமுங் காட்டி மகிழ்விக்கு மியல்பி னோரை
டொன்றுபன் மாடக் கூட லுட்புகுந் தோங்கு செம்பொற்
குன்றுநின் றணைய தாய கோபுர மருக்கு தாழ்ந்து
துன்றுபன் மணியி மைக்குஞ் சுடர்ப்பெரு வீதி சூழ்ந்து. (எஎ)

கொடியமெங் நிரயத் தாழ்தல் குறித்துவெங் கூற்ற மேய
கடிநகர் புகுவா ரென்றும் புகுதராக் கனகக் கோயி
லடியவ ரெதிர்கொண் டேத்த வன்பிடை யழுது பொங்க
நெடியகை குவித்துப் புக்கார் நிகரின்மா தவத்தின் மிக்கார். (எஅ)

விழைவர நல்குஞ் சித்தி வேழத்தை வணங்கி மேருக்
குழைசிலீ யொருகைக் கொண்ட குழகர்பொற் பாதம் போற்றித்
தழைதர வுலக மெல்லாந் தண்ணளி மிகையா லீன்ற
பழைமதர்க் கயற்க ணம்மை முன்சென்று வணங்கி நின்றூர். (எக)

வணங்கிநிற் பாருக் கெல்லா வுலகமும் வாய்ப்ப வீன்றுங்
குணங்கெழு குமரி யேயா யெற்றைக்குங் குலவு மன்னீ
யிணங்குறு மகவாங் தெய்வக் கோலமங் கினிது காட்ட
வுணங்கிய விணையார் கண்டி முடிதரா வுவகை யுற்று. (அ0)

அங்கயற்கண்ணம்மைபிள்ளைத்தமிழ்.

அருமைபா ராட்டுஞ் சான்றோ ரம்மைசந் நிதிமுன் னுகத்
திருமட மொன்று காட்டச் சென்றதி லமர்ந்து தெய்வ
மருமலர்க் கூந்த லம்மை மகத்திருக் கோல முன்னிக்
கருதுதீ தறினிக்கும் பிள்ளைக் கவிப்பிர பந்தஞ் செய்தார். (அக)

அாங்கேற்றல்.

முந்துமே ருளா லம்மை மொய்த்தபல் வளமு மேவி
நந்துமந் நகரா ள்வேந்தர் நாயகர் கனவிற் சென்று
சந்துசூழ் வனைவாழ் நஞ்சேய் தன்னருள் பெற்று ரீங்கு
வந்துபா டியது கேட்கும் வாஞ்சையே மென்றுகூற. (அஉ)

நலமலி பத்தி வாய்ந்த நாயகர் துயிலெ ழுந்து
குலமலி யமைச்ச ராதி யறிஞரைக் குறித்து நோக்கி
நிலமலி நம்மூ ருள்ள விசேடமென் னிகழ்த்து மென்ன
புலமலி யவரு மோர்ந்தா ருள்ளது புகலுவா ரால். (அங)

நாதனே திருவை குண்ட நகரினி லவத ரித்தா
ராதர மிலாத மூகை யாயவ னையாண் டெல்லை
மேதகு திருச்செந் தூரில் வேலவ ருளுப் பெற்றே
போதல்செய் பன்னூல் வல்லா ராயின ரொருவ ரின்னும். (அச)

செய்யகற் சிறுத்த வாடை திருவரை யுடுத்து மின்போன்
மொய்யொளிச் சடைக டாங்கி முன்னிய வேடம் பூண்டு
தெய்வவெண் ணீறு கண்டி திகழ்தரத் தலங்க டோறு
மையறச் சென்று சென்று வணங்கியித் தலத்து வந்தார். (அரு)

வந்தவர் கயற்க ணம்மை மலரடி வணங்கிப் போற்றிச்
சந்தமிக் கமைந்த பிள்ளைத் தமிழ்ப்பிர பந்தம் பாடிச்
சுந்தர வல்லி முன்பு தொழுதரங் கேற்றல் செய்வா
னுந்துதம் முள்ளத் தெண்ணி யிருந்தன ருணர்தியென்றார். (அசு)

மனநெக வறிஞர் கூறும் வார்த்தையுங் கயற்க ணம்மை
கனவில்வந் தாரைத்த வாறுங் கடைப்பிடித் தரசு தேர்ந்தே
யனகமார் கனவை யாரு மறிதர வெடுத்துக் கூறித்
தணியரு மகிழ்ச்சி பொங்கத் தலைமிசைக் கரங்கள் கூப்பி. (அள)

யாவருந் தொடர்ந்து செல்ல வெவ்விடத் திருந்தா ரந்த
மேவரும் தவத்த ரென்று வினவியவ் விடத்தைச் சார்ந்து
தேவரும் பெறுதற் கொல்லாத் திருவருள் பெற்றீர் தும்மைப்
பாவரும் தவத்தாற் பெற்றே மெனப்பல வுரைத்துப் போற்றி. (அஅ)

யாதுநீர் செய்தீ ரெங்க ளம்மைமே லியம்பு மென்னத்
தாதுசெய் பூணீர் பிள்ளைத் தமிழ்ப்பிர பந்த மென்ன

வோதுது மன்பா லம்மை யுரைத்தனள் கணவி லென்ன
வேதுது மன்பே யம்மை யெழுந்தரு ளுதற்கென் றோதி. (அகூ)

வெள்ளிய நீறு நல்கி மேதகு மாகி கூற
வள்ளிய குணத்தான் மிக்க நாயகர் மகிழ்ந்தேற் றேயங்
குள்ளிய நன்னு டேர்ந்தார் சுதினமு முடனே மேவத்
தள்ளிய விணையி ளுரைத் தாழ்ந்தன ரழைத்துக் கொண்டு. (கூ0)

சொல்லிய பலவாற் ரு ளுஞ் சுடரலங் காரஞ் செய்தே
யல்லிய மலர்ப்பைங் கூந்த லங்கயற் கண்ணி யம்மை
நல்லியற் றிருமுன் வைகி நற்றமிழ் தனிப்பூ சித்துப்
பல்லிய முழக்கி யாரம் பஞ்செய வேண்டு மென்றார். (கூக)

ஆர்கொண்ட சடையார் மைந்த ரருளுப தேசம் பெற்றார்
கார்கொண்ட முதலா வோதிப் பிரசங்கங் கவினச் செய்து
பார்கொண்ட பருவ மொன்று பகருமத் தினத்துத் நிர
நார்கொண்ட மகிழ்ச்சி பூத்தார் நாயக ராதி யோரும். (கூஉ)

செற்றமில் புலவர் சிங்கந் தினமொரு பருவ மாக
வற்றமி லறிஞர் மெச்ச வணிந்தரங் கேற்றும் போது
பற்றிய புகழ்வா ராணைப் பருவத்தின் மழுவா யம்மை
வெற்றிநா யகர்ம டிக்கண் மேவிவீற் றிருந்தா ளன்றே. (கூங)

நாயக ரிறும்பூ தூற்றார் நான்மறை யவர்பு கழ்ந்தார்
தூயமற் றுள்ளோர் யாருந் தோதன்றுதெய் வீக மென்றார்
மேயவிச் சிறப்பி னோடு மெய்த்தவத் தலைவ ராணை
ராயவிப் பிரபந் தத்தை யணிபெற மூற்று வித்தார். (கூச)

முன்னிய பெரியோர்க் குற்ற மகத்துவ முழுதுந் தோர்ந்து
மன்னிய வரசர் செம்பொ னரியணை யேற்றி வைத்துப்
பொன்னியன் மணிக ளாலே பொருந்தபி டேகஞ் செய்து
மின்னியல் வீர கண்டை மிளிரெழிற் முளிற் சேர்த்து. (கூடு)

மழைமதக் களிறு பாய்மா மாமணிச் சிவிகை நல்கி
வீழைகுடை கொடிமுன் னுன விருதுகள் பலவு மீந்து
தழைதிரு மடமொன் றம்மை சன்னிதி யுறச்ச மைத்துக்
குழைதரு மன்பு பொங்கிக் குலவமற் றிதுவுஞ் செய்வார். (கூகூ)

நீதிநெறிவிளக்கம். வேறு.

இருபதினு யிரங்கலிப்பொ னியைந்தவரு வாயுடைய
வரியகா யகபுரமென் றறையுநக ரொன்றுதவி
மருவியநீ தியைச்சுருக்கி வகுத்தருள வேண்டுமெனப்
பொருவிலா நீதிநெறி விளக்கமுறப் புகன்றருளி. (கூஎ)

மதுரைக்கலம்பகம்.

அம்மையென மகிழ்ச்சிசெயு மையனையு மெனப்பணிந்து
செம்மையுடைப் பலரிரப்பச் சிறந்தகலம் பகம்பாடி

வெம்மைதவிர் நாயகர்பால் விடைபெற்றுப் புறம்போந்து
தம்மைநிகர் பவரில்லார் வடதிசையே சாருவரால். (கூஅ)

திரிசிராப்பள்ளியையடைதல்.

எண்ணரிய தருச்செறியு மிருங்காஞங் கருங்குன்றுங்
கண்ணரிய கான்யாறுங் கடந்துபரி சனஞ்சூழ
விண்ணவரு முனிவரரும் விழைந்தேத்தத் தாயான
பண்ணவர்வாழ் திருசிராப் பள்ளிநக ருறுகடைந்தார். (கூகூ)

ஓதாம லுணர்ந்தவர்தம் வருகைகேட் டுளமகிழ்ந்து
போதாரும் புனற்றடஞ்சூ ழுறந்தகப்பு ரவலனுர்
மீதாரும் பெருஞ்சிறப்பால் விரும்பியெதிர் கொடுவந்து
பாதார விந்தமலர் பணிந்தழைத்துக் கொடுசென்றார். (க00)

விண்ணளவு நெடுஞ்சிகர மேவுசிரா மலைப்பெருமான்
கண்ணளவு திருவடிகள் கண்டுதொழச் செய்வித்து
மண்ணளவு பெரும்புகழ்சான் மாதவர்க்குப் பலவரிசை
தண்ணளவும் படிசமைத்துத் தனவா தருவுவார். (க0க)

வேறு.

வள்ளைக் குழைமா மறுமார்ப மாலே யுனைய நாயகருங்
கொள்ளைத் தமிழார் பிரசங்கங் குலவக் கேட்டு மனமகிழ்ந்து
பிள்ளைப் பெருமா னையங்கார் வந்து பிரிய முறக்கலப்ப
வெள்ளைத் திறமி லிருவரையு மோக்கி யிது விளம்புவார். (க0உ)

பேசு முலக முவந்துகொளப் பெருக வியற்றி நவமாகக்
காசு பரப்ப வேண்டுமதில் வைக்குங் குறிதீர் கீசைமினென
மாசு தவிருங் கருடனென மூந்தி வருக்தா சையங்கார்
வீசு புகழ்சால் விடையென்றார் வேற்கைப் பிரானுர் மாணைக்கார்.(க0ங)

செம்புள் பறந்து செல்லுமென வட்ட மிட்டுச் செல்லுமது
நம்பு விடைதான் முட்டமுட்டச் செல்லு நலத்த தென்றுரைப்ப
வம்பு மொழிந்தா மெனச்சாம்பி வதனஞ் சாயத்தா சையங்கார்
பம்பு மொழியின் பொருளுரைர்த்து மகிழ்ந்தா ரணைய பார்த்திவரே.()

சந்தப் பொருப்பி னமர்குமா சாமி யருள்பெற் றவருரைத்த
வந்தப் படியே வெள்விடைக்கா சகிலம் வியப்பப் போகட்டு
நந்தப் பெருகு மனமகிழ்ச்சி யடைந்தே பொருநா யகரிருந்தா
ரிந்தப் புவனத் தறந்தழைப்ப வுதித்தார் பின்னு நிதுசெய்வார்.(க0டு)

வாட் போக்கிழதலியஸ்தலதரிசனம்.

பாக மொருபெண் குடியிருக்கும் பரமா னந்தர் வீற்றிருக்குங்
காக மெரியக் கனல்வீசும் பொருப்புங் கடம்பந் துறைப்பதியு
மாக முகிழ்முய் தருமீங்கோய் மலையுங் திருப்ப ராய்த்துறையு
மாக மணிமால் பணிபாச்சி லாச்சி ராமப் பெரும்பதியும். (க0ரு)

இமையார் வணங்கு பைஞ்ஞீலி யென்னுந் தலமும் தவத்துறையு
மமையா வளங்கண் மிகப்பெருகு மாணிக் காவும் பாற்றுறையு
நமையா ளொருமூக் கீசரமு நன்மே பொலியுங் கற்குடியுங்
கமையா வெறும்பி யூர்மலையுங் கவலை கடீயு நெடுங்களமும். (கூ0எ)

பற்று முருக்குந் திருக்காட்டுப் பள்ளி நகரு மற்றுளவுஞ்
சற்றும் விலகாப் பரிசனமுஞ் சூழச் சார்ந்து சாரந்துபணிந்
தெற்று திரைநீர்க் காவிரிசூ ழியலார் திரிசி ராமலைக்க
ணுற்று மகிழ நாயகர்க்குங் காட்சி கொடுத்தங் குறைகின்றார்.(கூ0அ)

சமயவாதம்.

ஆய பொழுது கருடணைக்கொண் டவையிற் றோற்ற வையங்கார்
மேய பலவை ணைவர்கடமை யேவ வவருள் வினைந்தொருவர்
பாய புகழ்சால் குமரகுரு பாரமா முனிவர் முனம்போந்து
மேய சமய வாதமது செய்வோம் விருப்ப முறினென்றார். (கூ0கூ)

என்ற பொழுது முறுவலித்தே யெங்கு நிகழும் பெரும்புகழா
ரொன்ற வதனுக் குடம்பட்டா ருணர்விற் சிறந்த நாயகரு
மன்ற வறிஞர் பலரும்வர வழைத்தார் பாஞ்ச ராத்திரர்முற்
றுன்ற நெடுமால் புகழெழித்துச் சொல்வா ரதுசற் றெடுத்துரைப்பாம்.

வேறு.

அவர்திரு நெடுமா லாதி யென்றன ரறிவின் மிக்க
விவரஸ் துண்மை யந்த மென்பது முண்டே யென்று
ரவர்நமுங் துளவத் தாரோ னரூபமே யென்று ராய்ந்த
விவர்பெருங் கபாலத் தேற்ற தெவருடற் செங்நீ ரென்றார். (கூகக)

அவர்மறு மார்பன் ஞானச் சோதியென் றறைந்தார் சான்ற
விவரவன் மாயை தீதாயா திருப்பனே லுண்மை யென்று
ரவரரி மாயை போக்கும் வல்லனென் றறைந்தா ரப்போ
திவரொரு மான்பொய்ம் மானென் றெண்ணுறு தென்னை யென்றார்.()

அவர்திகி ரியன்சு வேச்சை யாலுருக் கொள்வ னென்று
ரிவர்மகத் தெச்ச ஞப்பப்புக் கிழந்தனன் றலையை யென்று
ரவர்கரு மேனிச் செம்ம லாரண முதாத்தோ னென்று
ரிவர்சிவ மாதி நான்கு வாக்கையு மெழுப்பு மென்றார். (கூகங)

அவர்திரு மணுளன் யாவு மளித்தருண் முதல்வ னென்று
ரிவர்புதல் வகைக்கா வாம லிருந்ததா யியையு மென்று
ரவர்பிறப் பொழிக்க வல்லோ ஞழியான் முனே யென்று
ரிவர்பரிப் பிறவி தீர்ந்த தில்லையே யின்னு மென்றார். (கூகச)

அவர்பிர ணவத்தின் மேய பொருளரி யாவ னென்று
ரிவர்நமுங் கடுக்கை சூடி மிறையவர் யாவ ரென்று
ரவர்மதக் களிறு கூவ வடைந்தவ னரியே யென்று
ரிவரிறை யவன்செல் வானே வேவல னிருக்க வென்றார். (கூகடு)

அவர்புரு டோத்த மன்கா ணருளுடை முகுந்த னென்ரு
ரிவரொரு சாத்தன் ருயென் றியாவரு மறிவ தென்ரு
ரவரிரா வணனைக் கொன்றே யமரரைக் காத்தா னென்ரு
ரிவரிரா வணனென் பேராய்ந் தெண்ணுக வீர மென்ரூர். (ககசு)

அவர்முதற் குணத்த னென்று மாழியம் படைபோ னென்ரு
ரிவரவற் கதுசெ யற்கை யியற்கைதா மதமே யென்ரு
ரவர்சுர ரமர ராக வாழிமுன் கடைந்தா னென்ரு
ரிவர்கரு விடமுண் ணுனேல் யாவரு மிறப்ப ரென்ரூர். (ககள)

அவரரி யோமென் ருஇ யறைகுவ தூணர்வீ ரென்ரு
ரிவரஃ தம்மை யப்ப ரியற்றிரு நாம மென்ரு
ரவருல கணைத்து மாக்க வயணுமுன் னீன்ரு னென்ரு
ரிவருல களிக்க மாலி யீன்றனன் பிரம னென்ரூர். (சுகஅ)

அவரிமை யவர்ச காய னரவணைச் செல்வ னென்ரு
ரிவர்துவட் டாவின் மைந்தன் செயதெதச் சகாய மென்ரு
ரவர்திறல் வாணன் போரி லிரிந்தவன் யாவ னென்ரு
ரிவர்தவம் புரியத் தானே தருவ மெண்ணி யென்ரூர். (ககசூ)

அவரவ னசையி னன்றி யணுவுமற் றசையா தென்ரு
ரிவர்பரன் யோகின் வேணே யேயிய தெற்றுக் கென்ரு
ரவரிரு கண்ணு மெங்க ளரிக்கிரு சுடரே யென்ரு
ரிவருமை பரன்கண் பொத்த விருண்டதெ னுலக மென்ரூர். (கஉ0)

அவரடித் தவரை வஞ்சி யாதவன் றிருமா லென்ரு
ரிவரிது மெய்யே லோர்பெண் ணெய்திய தெவ்வா றென்ரு
ரவருல கோது நாரா யணனிஃ தறிவீ ரென்ரு
ரிவர்துனித் துணரு நாரா யணியென்பாள் யாவ ளென்ரூர். (கஉக)

அவரரி முழங்தாட் பூதும் மண்ணல்சூ டினனே யென்ரு
ரிவரரி தானந் தானி யெம்முடை யிறைவ னின்னு
மவரவர் விழைந்த தேத்தே யருளுவான் மூலகன் றப்போ
டிவரெழு முதல வற்றி னிழிந்தசீ முழங்தா னென்ரூர். (கஉஉ)

அவர்வியா பகனு வுள்ளா னற்புத நெடுமா லென்ரு
ரிவர்சிலை யடியோ மத்தே தா வெங்கணும் பட்ட தென்ரு
ரவர்வரங் கொண்டேற் ருனே யட்டனன் றிருமா லென்ரு
ரிவரவன் றன்னே யட்ட தெவ்வர வலியா லென்ரூர். (கஉங)

அவருல குண்ட சூலி யகப்படா செவசே யென்ரு
ரிவரகப் படான்கா ணண்டங் கடந்தவ னென்று மென்ரு
ரவர்மறை யவர்க்குத் தேவா மாவிந்தக் கண்ண னென்ரு
ரிவரவ ரியம்புங் காயத் திரிப்பொருள் யாவ னென்ரூர். (கஉச)

அவர வணியான் சார்பே யுயர்ச்சியென் றறைந்தா ராய்ந்த
விவர்பணி கருடன் றன்னீ வினவிய தெண்ணு மென்ரு
ரவருயிர் மயக்கம் போக்கி யருள்பவ னரியே யென்ரு
ரிவர்மயக் கொழிக்குங் குல்லீ யாதலா லிதுமெய் யென்ரூர். (கஉரு)

இன்னண மவர்சொல் வார்த்தை யாவையு மறுத்துப் பின்னு
மன்னரா யகரை மற்றை யறிஞரை யினிது நோக்கி
முன்னவ ஞய வெங்கண் முதலவன் பெருமை சற்றே
நன்னர்யாம் புகல்வோங் கேண்மி னென்றனர் நவில லுற்ரூர். (கஉங)

வே ரு.

ஓங்கு காயத் திரிமனுவுக் குரிய பொருளா தலினுனுந்
தாங்கு தாச ரதிவணங்கித் தாபித் தேத்து தலினுனும் [பப்
வீங்கு கயிலைப் பொருப்படைந்து மேன்மேற் கண்ணன் விழைந்திரப்
பாங்கு பெறுநற் குணத்தமைந்த மகப்பே றுதவும் பரிசானும். (கஉஎ)

வயங்கு மொருநேத் திரமாய மலரோ டோரா யிரங்கமல
நயங்கொண் மலர்கொண் டெம்மானீ யரிநன் கருச்சித் தலினுனு
மியங்கு மசுரர் தலைசாய்ப்ப வெஃக மதுதந் திடலானு
முயங்க வெழுந்த வாலால முவப்பி னருந்து திறத்தானும். (கஉஅ)

கரும்பு குழைக்குங காமனுடல கருக விழித்த திறத்தானும
விரும்பு மதலீ நடுங்கவரு வெங்கூற் றுதைத்த விறலானு
மிரும்பு முதலா மும்மதிலு மெரியின் மூழ்கச் செயலானு
மரும்பு கொடிய மனத்தக்கன் வேள்வி யழித்த வதனுனும். (கஉசு)

வலிய பாசு பதப்படைகாண் டுபற் குதவு வளத்தானு
மெலிய வொருமா னிடமடங்கல் வீரங் கெடுத்த வதனுனும்
பொலிய மகடீஉ வரியாகப் புணர்ந்து சாத்தற் பெறலானு
மொலிய புனல்வைப் பிடத்தான்ரே ரநேகர் போற்ற வுறலானும். ()

அன்னர் தமக்கு வேண்டுவன வெல்லா மளித்த வருளானு
நன்ன சொருபான் பிறப்பினுமால் பூதித் தேத்து நலத்தானு
முன்ன நிருவ ரடியினுமு முடியுந் தேட வெழலானுஞ்
சொன்ன முதலீ ருதியுயிர்க் குணீத் தொளிருந் துணிபானும். ()

காசி வளைப்பிற் பொய்ம்மொழிந்தேதான் கைதம் பித்த வதனுனு
மாசின் மதில்செற் றிடுஞரான்று மாலே றுய்த்தாங் குதலானும்
வாச மலரோ னளவிறலீ மாலீ யணியும் பொலிவானும்
பாச மறஞர னமும்வீடும் வேட்டோர்க் குதவும் படியானும். (கங்உ)

தன்று கருணைப் பசுபதியே சொற்ற பலவா னவருள்ளு [யற்
மென்று மூயர்ந்தோ னெனத்தெளிவீ ரின்ரே நேற்ரே வொருவனி
றன்று குழைமண் ணிடுநீவி ரன்தோ சைவ நிற்தைகொள
லென்று புழுதி மண்வாயி லிட்டுக் கொளற்கோ வுரையீ ரே. (கங்ங)

சன்ன முடிவு படவுரைத்தா ரெங்கள் சைவ சிகாமணியார்
மன்னு வவையி லிருந்தோர்கள் யாரு மெழுந்து வணங்கினர்
பொன்னுன் மணியா லபிடேகம் புரிந்தார் மகிழ்ந்து நாயகரும்
பின்னு மொருமா மடமியற்றிக் கொடுத்தார் மலிபோற் பிறங்கவே. ()

அன்ன பணியிற் பொலியரசர் தம்பால் விடைபெற் றங்ககன்று
சின்ன முழங்கக் குடைநிழற்றச் செம்பொற் சிவிகை மேற்கொண்டு
பன்ன வரிய பரிசனமும் பாங்கு சூழ வழிக்கொண்டார்
கன்னல் கமுகிற் பொலிதருகீழ்க் காட்டை நோக்கி நடக்கின்றார். ()

அன்பிலாலந்துறைமுதலியவற்றைத்தரிசித்தல்.

அண்ண லிடங்கொண் டமரன்பி லாலந் துறையை வழிபட்டுக்
கண்ண வினிய கதிகாட்டுங் காணூர்க் கரும்பைக் கைதொழுது
வண்ண மதில்சூழ் மழபாடி வாணர் புகழு நெய்த்தான
மெண்ண மருவப் பணிந்தேத்தி யெதிர்தோன் றையா றெய்துவார்.()

வே று.

சதிர்கொளா யாற்றமர் தக்க யாவரு
மெதிர்கொள வவரொடு மெய்தி நீண்முடிக்
கதிர்தவ ழாலயங் கருதி யுட்புகூஉ
வதிர்மறை முதலித னடிகள் போற்றினர். (கஉஎ)

பகரா சீனவெளிப் படுத்த வாவியு
நிகரு கயிலையு நீள்வி மானமும்
புகரற வறம்வளர்த் தவள்பொற் கோயிலு
நகர்வள முழுமையு நன்று நோக்கினர். (கஉஅ)

பொய்யிலி யாரமர் பூந்து ருத்தியூர்
வையகம் புகழ்தர வயங்கு கண்டியூ
ரையர்சோற் றுத்துறை பழன மாதியா
மெய்யமை தலமெலாம் விரும்பிப் போற்றினர். (கஉகூ)

ஆயிடை நின்றெழுந் தறிவின் மேலவர்
மாயிரும் புவிக்கெலாம் வரங்க ணல்குபு
தாயன தங்குரு சாமி வைகுதன்
மேயதோர் திருமலி விருப்பிற் போற்றினர். (கசஎ)

திருவலஞ் சுழியொடு திகழ்பட் டீச்சரம்
பொருவருஞ் சத்திமுத் தம்பொன் மேற்றளி
யருள்செறி தருபழை யாறு மற்றவுந்
தெருளுறப் பணிந்துபோய்க் குடந்தை சேர்ந்தனர். (கசக)

முற்றிய வருட்குட மூக்கு வள்ளலார்
பற்றிய பற்பல தளியுஞ் சென்றுசென்
றிறைஞ்சிய வன்பினு லுவந்து போற்றினர்
சுற்றிய நகரமுஞ் சூழ்ந்து தாழ்ந்தரோ. (கசஉ)

பொருதுறை புகுமயிற் புலவர் மாணவர்
விருதுறை பரிசன மேவிச் சூழ்வர
வெருதுறை தம்பிரா னினிது மேவிய
மருதுறை மாநகர் வந்து போற்றினர். (கசஉ)

வீழ்தர மறமெலாம் விரும்பி நல்லறம்
வாழ்தர வவதரித் தோங்கு மாண்பினர்
தாழ்தர லிலாதறந் தழையப் பிப்பிலஞ்
சூழ்திரு வாவடு துறைவந் தெய்தினர். (கசச)

அருண்மலி மாகிலா மணியை யம்மையைத்
தெருண்மலி மூலரை யரசைச் சேவியா
மருண்மலி மனத்தருட் புகாத மாண்புசால்
பொருண்மலி திருமடம் புகுதன் மேயினர். (கசடு)

பற்பல செதிர்கொளப் பாங்கி னேகுபு
மற்பொலி யருட்டிரு மாளி கைப்பிரான்
சிற்பர வுருவமச் சிவாய தேசிகன்
பொற்பமர் திருவடி புகழ்ந்து போற்றினர். (கசசு)

வெள்ளிய நீறுகண் மணியு மேதக
வொள்ளிய காவிதோ யுடையும் வேடமுந்
தெள்ளிய சடையுமுண் டிதமுஞ் செவ்விசால்
வள்ளிய குழாங்களே மகிழ்ந்து நோக்கினர். (கசள)

தாதமார்க் கத்தருந் தழுவு மைந்தென்
றோதமார்க் கத்தரு மூலப்பி லாச்சக
நீதமார்க் கத்தரு நெடுஞ்சன் மார்க்கமாம்
போதமார்க் கத்தரும் பொலியக் கண்டனர். (கசஅ)

சாற்றுமித் தானமோர் தானந் தானெனுப்
போற்றுசிர்க் குருநமச் சிவாய புண்ணிய
னூற்றுபே ரருணிணைந் தகம கிழ்ந்தனர்
தோற்றுபே ரறந்தலை யெடுப்பத் தோன்றினர். (கசகூ)

தாமலி குமாசு வாமி சற்குரு
வாவா வெனத்திரு வாய்ம லர்ந்திடக்
காமலர் குவித்தனர் வணங்கிக் காமர்சா
லாவரு கிடனுற வுவந்து வைகினர். (கஙO)

போதத்திற் சித்தியிற் பொருந்த மற்றுள
பேதகு நூல்களிற் பலவி னுவியே
யாதரங் கூர்தெளி வுண்மை யாய்ந்தன
சோதநங் குலனே யெனவுள் ளோர்ந்தனர். (கஙக)

மருவுற வளவளாய் மகிழ்ந்து பின்னெழீ இப்
பொருவரு வடமடம் பூசை யாற்றிவந்
தருள்செறி பந்தியி லமுது கொண்டனர்
வெருவிலவ் விடனெரீ இ விடைபெற் றேகினார். (கடுஉ)

பிரிவரும் பரிசனம் பெட்பிற் சூழ்தரப்
பரிவரும் விருதுகள் பலவு மொய்த்திடத்
திரிவரு வளஞ்செய்மா யூரஞ் சேர்ந்தனர்
புரிவரு சடையரைப் போற்றித் தாழ்ந்தனர். (கடுங)

அங்குநின் றெழுந்துபோய்த் தருமை யண்ணுபு
சங்குநின் றவிர்குழைத் தரும லிங்கர்தம்
பொங்குமென் மலரடி போற்றிப் புக்கனர்
தங்குமெய்ஞ் ஞானசம் பந்தர் தந்தனி. (கடுச)

ஆவயி னெதிர்கொளு மளவி லாரொடு
மேவரு ஞானசம் பந்தர் மேன்மைமுற்
றோவற வுணர்ந்தவ ருணர்ந்து போற்றினர்
தேவரும் பெறற்கருஞ் சித்தி பெற்றவர். (கடுரு)

நுவலுமித் தானமு நோக்க லாமெனக்
கவலரு மனத்திடைக் கருது மேல்வையி
லவமகல் பலசெழுந் தருள வேண்டுமா
லுவமையி லீரென வுவந்து சென்றனர். (கடுசு)

திருமடத் துட்புகுந் தருளித் தேசிக
ரருகுசென் றிருந்தன ரான்ற கேள்வியின்
மருவிய பற்பலர் வந்து சூழ்ந்தனர்
பொருவற வளவளாய் மகிழ்ச்சி பூத்தனர். (கடுஎ)

நடைகெழு கல்வியு நயக்கு ஞானமுந்
தடையற வெழுபிர சங்க வாய்மையு
மடையுடைந் தெனக்கவி வடிக்கும் வாக்குமிக்
குடைமையி னேனுக்கியாங் குளர்வி யந்தனர். (கடுஅ)

மாசறு பெரும்புகழ் மாசி லாமணித்
தேசிகர் பெருவளச் செந்தி லாதிபர்
பீசிய பேரருள் சுமந்த மேலவர்
(ந்தசுசான் முகங்குமித் திதணிச் செப்புவார். (கடுக)

குற்றமில் கல்வியுங் கோதின் ஞானமு
மற்றமில் குமரவே ளருளிற் பெற்றவர்
மற்றவன் றந்தையார் மலர டிக்தொழும்
புற்றவர் தமைவணங் கார்கொ லோவெண்மூர். (கசுO)

வெள்ளிய நீறணி மேனி யாரெலாம்
வள்ளிய தொழற்குரி மாண்ப ராயினுங்
தெள்ளிய தாயவாச் சிரம பேதத்தா
னள்ளிய வீதியையு நயப்ப ரேயென்றார். (கசுக)

மனத்திடை மாசிலா திருத்தன் மாண்பற
முனைப்படு பிறவெலா மோசை நீரமே
யெனப்புக ழுதலெவ னென்ன மாசறன்
மினப்படு காட்சியன் றென்று விண்டனர். (கசுஉ)

காட்சியே கருதுதல் கந்த வேளருண்
மாட்சிநும் போலுநர் மரபன் றுலென
வாட்சிசா லுண்மையை யறித ராவணப்
பூட்சிதா னருளொடு புனர்த ராதென்றார். (கசுஙி)

பிறரறி தலினெவன் வருதல் பேசுமென்
றறமலி கருமைவா ழுவரு ரைத்திட
நெறியின ரிணையரென் றுணர்ந்து நீணிலங்
குறிவழி பாடுசெய் துய்யக் கொள்கென்றார். (கசுச)

ஆடல்வரம் புரவியோ ரசச ராயினர்
வேடமே பொருளெனக் கொண்டு விண்ணரு
நாடரும் பெரும்பத நண்ணி ஞரது
கோடமே பொருளெனப் பின்னுங் கூறினர். (கசுரு)

ஐந்துபே றறிவெனுஞ் செய்பு ளத்தமென்
முந்துநீ ரியம்புகென் றவர்மொ ழிந்திட
நந்துமச் செய்புளின் பொருண விற்றுகே
னுந்துநீர் செம்மையேற் றுறிகென் றுரசோ.* (கசுசு)

வே று.

எங்க ளாரியன் மேற்றுதி யாங்களெப் போது
முங்கள் பேசரு ளாற்செயல் வேண்டுமற் றுதற்குத்
திங்கள் சூடியீயான் றிருமக ஞரருட் செல்வ
நங்கள் வாழ்வெனப் பெற்றுளீர் நயந்தருள் புரிவீர். (கஎச)

என்று வேண்டலு மும்மணிக் கோவையொன் றியப்பி
யொன்று மாதுதித் திருமினென் றவர்கரத் துதவிச்
சென்று நீள்வட மடம்புகூஉப் பூசணை செய்து
வென்றி மேவுவார் சிலபகல் விழைந்தவ ணமர்ந்தார். (கஎரு)

---

* இதன் பின்னிருந்த எ - பாடல்கள், வரலாற்று முறைமையைச் செவ்வனே தெரியாதவர்கள்சொல்லக்கேட்டுச் செய்யப்பட்டமையின், இவைகொள்ளத்தக்கனவல்லவென்று பிள்ளையவர்கள், நாங்கள் பாடங்கேட்ட காலத்திற் சொல்லியிருந்தமையின் அவற்றை இங்கே பதிப்பிக்கவில்லே. இத்தப்பாகத்திற்குரியபாடல்களேப் பின்பு அவர்கள்இயற்றவில்லே.

கோல மார்தரு மாகிலா மணிப்பெருங் குரவர்
சால வன்புசெய் தன்மையாற் பந்தியிற் றுழுஞ்
சீல மார்தரு திருவமு துண்டுடன் றீனேத்தார்
ஞால மேத்துசெந் தூர்ப்பிரா னயந்தமா ணுக்கர். (கஎசு)

மன்னு மாதரங் கூர்தர விங்ஙன மருவித்
துன்னு மப்புரப் பாங்குறு தலஞ்சில தொழுது
பன்னு மேன்மையா ரூர்ப்பிரான் பங்குனித் திருநாள்
கொன்னு மார்வத்திற் பணிதரல் குறித்தெழுந் தனரே. (கஎஎ)

வாழவூர்முதலியவற்றைத்தரிசித்தல்.

மலியி னின்றிழி யருவியின் மும்மதம் வடிக்குங்
கொலியி னின்றுநீங் காப்பெருங் கொடுங்களி றுரித்தார்
நிலையி னின்றவர் செறிவமு ஞரைநேர்ந் தருணூற்
றலையி னின்றதாட் டாமரை மலர்பணிந் தெழுந்தார். (கஎஅ)

கரிய கண்டர்வாழ் தருதிரு வம்பர்மா காள
மரிய மாதவர் தொழுதெழு வீழிநன் றமையும்
பெரிய வாஞ்சிய முதலிய பெருந்தல மெல்லா
முரிய காதலிற் போற்றியா ரூர்மருங் குற்றார். (கஎகூ)

கோல மார்தலத் தார்பலர் வந்தெதிர் கொள்ளச்
சீல மாதவப் பெரியவர் சிறப்பொடு சென்று
ஞால மேத்தணி முடிநெடு கியநல வீதிப்
பால லோசனன் றிருவருள் பெருக்கெழப் பணிந்தே. (கஅ0)

ஓங்கு கோபுர வாயிலுட் புகுந்துமிக் குபசரீர்
வீங்கு கின்றதே வாசிய யப்பெயர் மேவத்
தாங்கு காவணம் பணிந்துபூங் கோயிலுட் சார்ந்தார்
தேங்கு காதலிற் புற்றிடங் கொண்டவர் திருமுன். (கஅக)

கையி லன்புமீப் பொங்கிடக் கைதலை முகிழ்ப்ப
விளைய மார்பணி நீற்றினீ ழிழிகணீர் கரைப்பப்
புளைபி லாதகண் பெற்றபே றிதுவெனப் போற்றி
யுளைசெ யாதபே ரானந்தக் தினேத்துவப் புற்றார். (கஅஉ)

மாயன் மார்பமும் வானக நாடுமுண் மதியா
தாய பேரெயில் சூழுமத் தலியகத் தமர்ந்து
மேய நந்தியா கேசனை விருப்பொடு கண்டு
பாய கிண்கிணித் தாள்பணிந் தெழுந்தனர் பரிந்தே. (கஅங)

பரவு சீரச லேச்சுர முதலிய பலவும்
விரவு மன்பினுற் சென்றனர் மேதகப் பணிந்து
புரவு சாலொரு திருமடம் புக்கினி தமர்ந்தா
ரரவு நீர்ச்சடை யண்ணலார் புகழ்விரித் தறைவார். (கஅச)

திருவாதூர்நான்மணிமாலை.

அன்பு மீக்கொடு நான்மணி மாலையொன் றறைந்தாங்
கின்பு மீக்கொடு பலர்வியப் புறவரங் கேற்றி
வன்பு மீக்கொடு கலிமல மாய்த்தவர் மகிழ்ந்தார்
துன்பு மீக்கொடு சிலசம வாதர்க டொக்கார். (கஅநி)

சமவாதமும், மறுப்பும்.

படிமை யாளர்நீர் பலவகை நூல்களும் பயின்றீர்
மடிமை யின்றியெப் பொருள்களு முரைத்திட வல்லீர்
கடிமை யார்கொளுஞ் சமமெனல் கடிந்துநீ ராண்டா
னடிமை யென்றுரை செய்வதெவ் வாறுமெய் றறைவோம். (கஅசு)

அகா தி நித்திய மகண்டபூ ரணசிவ ஞானிரு
மகா தி நித்திய முத்தியிற் சமமென் வறைந்தா
ரகா தி நித்தியன் சருவவல் லவனுபி ராய
வகா தி நித்தியன் சுதந்தர கீனனென் றறுத்தார். (கஅள)

பச்சை மாமயில் பாகனுழ் பகருமான் மாவு
மிச்சை ஞானநற் கிரியையெனத் தியம்பிமூன் றல்
விச்சை யாளர்கள் சமமென விரித்துரை செய்வார்
கொச்சை யீரலீ ரிதற்கிதற் கொடுத்திடு மென்றார். (கஅஅ)

ஏய மிச்சைமூன் மூகமையு முயிர்ப்பொருட் டிறைவன்
சேரும் யாபொரு ளேயமூன் றையுமுயிர் தேயும்
பாயு நூல்முறை யின்றியா ரியரெனப் பயில்வுற்
றாயு நூலுணர்ச் சியரென வழக்கெடுத் தறைவீர். (கஅகூ)

என்று கந்தவே டிருவருள் பெற்றவ ரியம்பக்
குன்று வார்சிலை கோட்டிபு ராணரா கூட்டி
யன்று மாற்கணீ பூட்டிமூப் புரத்தெரி யமைத்த
மன்று ளாடிமாத் திரங்கொலோ சித்தென வருத்தார். (கசூ0)

உண்மை யென்பது சற்றுமோர் கிலிர்தணீ யுணர்வார்க்
கண்மை யாகிய தம்பிரான் போலவ ஞன்மா
வண்மை யாயுணர்த் திடவுணர் சித்தென மதியா
வெண்மை யீர்தமக் குரைத்தலிற் பயனிலை யென்றார். (கசுக)

திருந்து ஞானசம் பந்தர்வெள் ளெலும்புபெண் செய்தார்
பொருந்து மாமுய லகனெழித் தளித்தனர் பொன்போற்
றிருந்து மோர்கொடிக் கோர்பவத் தன்றலீ சிதைத்தார்
வருந்து மாறென வோதினர் மற்றவர் மீட்டும். (கசுஉ)

இரும்பு தீயடித் தழற்றிடி மழற்றுவ திரும்போ
வரும்பு செந்தழ லோசிறி தாய்ந்துபார்த் துரைப்பீர்
விரும்பு மீசனுஞ் சீவனுஞ் சமமென விரித்துப்
பொரும்பு ராணரே யென்றனர் புகழ்ப்பெரும் புலவர். (கசுசு)

என்று கூறலு மெத்தணே நாள்களிங் கிவரோ
டொன்று வாதநாஞ் செய்யினு மறுப்பரென் றுன்னிக்
கன்று நெஞ்சாய் மறுத்துரை யாமலே கழிந்தார்
நன்று நன்றிவர் வாதமென் றிவர்நனி நகைத்தார். (ககூச)

தலயாத்திரை.

ஆய காலியி லத்தல நின்றெழுந் தாஞர்
மேய தூய்மையின் மிகப்பொலிந் தோங்குகீழ் வேளூர்
பாய மாமறைக் காடுறூல் பரவுநன் ஞகை
நீய தாயது நீர்த்தருள் செறிக்குநள் ளாறு. (ககூஞ)

திங்கள் சூடிதன் றிருப்பணிப் பெருமையைத் தெரிப்பா
னெங்க ணுவினுக் காசுழ வாரங்கை யேந்தி
யங்க ணூர்பணி புரிபுக லூரரு மகவாற்
றங்கள் வெம்பசி தணித்தவர் தயங்குசெங் காடு. (ககூஅ)

பாங்கு சால்கட வூருள் பதிந்தவெண் காடு
தேங்கு மற்றுள தலமெலாஞ் சென்றுசென் றிறைஞ்சி
வாங்கு நீர்த்திரை வாவியில் வாளைமீன் பாய
வோங்கு சீர்கொள்புள் ளிருக்குவே ளூளைவக் குற்றூர். (ககூள)

விருப்பி னுலெதிர் கொள்ளுவார் தம்மொடு மேவிப்
பொருப்பி னுற்சிலை செய்துமூட் புரமடி புராண
ரருப்பி னுற்புரி முலையுமை யாளொடு மமர்ந்த
சுருப்பி னுற்பொலி மலர்செறி சுடர்த்தளி புகுந்தார். (ககூஅ)

வந்து ளாருடற் பிணியொடு பவப்பிணி மாய்க்கு
மிந்து வாழ்முடி வயித்திய நாதணே யிடிகித்
தந்து நேரிடைத் தையலைக் கண்டனர் தாழ்ந்தார்
முந்து கண்கணீர் பொழிதர வானந்த முதிர. (ககூகூ)

தமாது தீரரு மன்புபின் றள்ளவர் நின்று
நமாது கண்மணி போல்பவர் நீங்கிநன் குள்ள
மமாகு ழைந்திட வானந்த முகிழ்த்தெழ முத்துக்
குமார புங்கவன் றிருமுனர்க் குறுகினர் மாதோ. (உ00)

துதிக்க முந்திடு நாச்சுடர்த் திருவுநக் கோல
மதிக்க முந்திடும் விழியருள் வடிவீண வாங்கிப்
பதிக்க முந்திடு மனநிறை யின்பத்திற் படிந்து
கதிக்க முந்திடுங் கருமலத் தடைதவி ரறிவீய. (உ0க)

ஆடி வார்மனங் குழைதர வகமு வெண்று
பாடி வார்விழி பொழிதரு மருவியிற் படிவார்
நீடு வார்பெருங் களியொளி திகழநெட் டுயிர்த்து
மூடு வார்புள கத்தினுன் மேனியை முன்னினர். (உ0உ)

இந்த வாறுபே ரானந்த முகிழ்த்தெழ வேத்திச்
சந்த மாரொரு திருமடம் புகுந்தனர் தணவா
வந்த நாயக ரருள்குறித் தறங்குமப் பொழுதக்
கந்த னூரிளங் குழவியாய்த் தோன்றினுர் கனவில். (உ0கூ)

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்.

இங்கு நம்மைஈ பாடுறு தேகலே யென்று
தங்கு பேரரு ளாணதற் பூதியுஞ் சாத்திப்
பொங்கு பேரெழிற் புண்ணியர் மறைந்தனர் விழித்தா
செங்கு மாவிரிந் தெழுந்துடைங் கொழுந்துகொ ளிசையார். (உ0ச)

குமிழ்ம றிந்தகட் டையறன் மகனருள் குறித்தாங்
கிமிழ்பெ ருங்களி யோடுபொன் பூத்தவென றெடுத்தே
யமிழ்து முற்சுவை புறந்தரச் சுவையமை பிள்ளைத்
தமிழ்மு டித்தனர் பாடிபு புலவர்தந் தலைவர். (உ0டு)

இன்ன செந்தமிழ் யாருமேத் திடவரங் கேற்றி
யன்ன மாநகர் தனிற்சில நாள்வதிந் தகன்று
பொன்ன வாங்கணிக் காழிகா யகனடி. போற்றிச்
சொன்ன மாமதிற் றில்லையை யடைந்தனர் தொழுதே. (உ0கூ)

எதிர்கொள் வாரொடும் பெருந்திரு வீதியை யிறைஞ்சிச்
சதிர்கொள் செம்மணிக் கோபுர வாய்தன்முன் றுழ்ந்து
பிதிர்த ராத்திரு மாளிகை வலங்கொடு பெயர்ந்து
முதிரு மன்பினுற் றிருநட ராசர்முன் சென்றார். (உ0எ)

நீடு மானந்த நிறைந்தெழ நெஞ்சநெக் குருகக்
கூடு மஞ்சலி யிருகரஞ் சென்னிமேற் குவியத்
தேடு மாலயற் கரியராய்ச் சிதம்பர மன்று
ளாடு வார்நடங் கண்டன ரவசராய்த் திளைத்தார். (உ0அ)

ஐயர் வாழ்திரு மூலட்டா னமும்புன லவல்வாய்ச்
செய்ய தாமரை மலர்திரு வேட்கள நகருங்
கைய சோவுநெல் வாயிலுங் கண்டவர்க் கருளே
பெய்ய வாழ்கழிப் பாலியும் பெட்டடைந் திறைஞ்சி. (உ0கூ)

தில்லை மாநட ராசர்த நடனமுஞ் சேவித்
தெல்லை யில்லதோர் களிப்பினு லாவயி னிருப்பார்
வல்லை மாமடம் வளம்பல மலிதரச் சமைத்துத்
தொல்லை மாவினை தீர்ந்தவர் சூழ்சிறப் போடும். (உக0)

சிதம்பரமும்மணிக்கோவை.

ஈண்ட வாவயி னிங்ஙன மமர்தரு மேல்வை
கூண்ட செம்பொருள் செறியொரு மும்மணிக் கோவை
யாண்ட குஞ்சிதச் செய்யதா மரையடிக் கணிந்து
நீண்ட பேரின்ப முழுகினர் நிகழுமப் போது. (உகக)

சிதம்பரசெயப்பட்கோவை.

பூதி சாதனக் கிழமையர் சிலர்வந்து போற்றி
நீதி நூன்முதற் பலவுரைத் தீர்நிகழ் யாப்பிற்
காதி நாளுதா ரணமெலாம் பரமத மவாவு
மோதி யாமுயு மாறருள் செய்விரென் னுரைப்ப. (உகஉ)

காவை நேர்தர மகிழ்ந்துளங் கனிந்துபல் செய்புட்
கோவை யாப்பியற் காட்டினி துரைத்தனர் கொடுத்தார்
மாவை வெண்டிரை வாரியை விலங்கலே மாய்த்த
தூவை வேலுடைத் தோன்றலார் சேவடித் தொழும்பர். (உகங)

சமயவாதம்.

அரிய செய்யுணுண் பொருளெலா மடைந்தவர்க் கருளிப்
பெரிய ராயிரக் காற்பெரு மண்டபம் பிறங்க
வுரிய சான்றவ ரோடுறை பொழுதிலங் கொருசார்
விரிய வந்தகம் பிரமவா தியர்புடை மிடைந்தார். (உகச)

அன்று கந்தனூர் புரிதரு பேரரு ளடைந்தோ
மென்று வந்தொரு சைவசித் தாந்தியா ரிங்கு
நன்று மேவின ரென்பரா லவரெவர் நாங்க
ளொன்று பேசிட வந்தன மெனவித்தந் துரைத்தார். (உகரு)

சோதி நாமென மருளுறச் சொற்றலே மாயா
வாதி யாருரை கேட்டனுங் குறுகுகை படர்ந்து
நீதி யாரவ ரிக்குழாத் தேயுளார் நீங்க
ளோதி யானிறுத் துவிரென மற்றவ ருரைப்பார். (உகக)

ஏக மேயென மறையெலா முழங்கவு மென்னு
மோக நீராய் மூன்றென லென்றவர் மொழிந்தார்
பாக வாய்மையாற் பரவுமெய்ஞ் ஞானநற் பயனுன்
மாக நாட்டினு நும்மையொப் பாரெவர் மதிக்கின். (உகள)

ஏக மென்னுமா மறையுரைத் திடுமென விசைத்தீ
சேக மென்றெவர்க் குரைத்ததம் மறையசத் தேலா
தேக மென்றது பதியையே யிதுகிறி தெண்ணு
தேக மென்றதா லென்பிர்தும் மறிவுநன் றென்றார். (உகஅ)

ஏக மென்றதே துணிபெனி னியம்பிய மறைதா
னேக மென்பதை மறந்து மூன் றிசைத்திடுங் கொல்லோ
வேக மெல்லறதை யன்றிமூன் றென்னெனி னிசைப்போ
மேக வாதர்காண் ஞாதிரு வாதிமூன் றென்றார். (உகக)

என்ற காலையி லவித்தைவல் லவரிஃ துரைப்பா
ரொன்று கூறுகே மென்னையத் துவிதமென் றுரைத்த
னன்று மற்றித னுண்மையை நவிலுக வென்று
ரன்று மற்றதற் கிறைகொடுப் பாரறி வாளர். (உஉ0)

உரைசெய் நூல்களத் தூவிதமென் றுரைத்திடு முண்மை
கரைசெய் வாமத வேறன்மை யாதல்கட் டுரைக்கும்
வரைசெய் மற்றித ஞுளள மன் னுயிர் யாவுந்
திரைசெய் வைப்பிற்ரு ஞநிற்கும் பதியென்று தெளிமின். (உஉக)

என்ற காலியிற் றத்துவ மசியென லென்னே
யொன்ற வோதுமி னென்றன ருண்மைநோக் காது
மன்ற யாம்பர மென்றளற் றழுந்திடு மதியோர்
நன்ற வாயினீர் நவிலுதுங் கேண்மென நவில்வார். (உஉஉ)

ஆய தத்துவ மசியெனு மறைப்பொரு ளமல
னேய மாரிய மானனென் றிருபொரு ணிகழ்த்தி
யேய வேறிலா மையைவிரித் திசைத்ததே யன்றித்
தூய மாமறை தனியென்ற தின்றெனச் சொற்றார். (உஉங)

ஏக வாதம்யாஞ் செய்யவந் தனமென விசைப்பீர்
மோக மாயெவ ரிடஞ்செய முன்னினீர் பிழையே
யாக விவ்வுரை பிதற்றலென் னடங்குதி ரென்று
பாக மேவினுர்க் கருளுமுத் தமர்பினும் பகர்ந்தார். (உஉச)

இந்த வார்த்தைகேட் டீனையர்தோற் றிருந்தன ரெங்கள்
சந்த ஞலச சாமிமா ரருள்பெறு தக்கோ
சந்த மாதலத் தடிகள்பால் விடைகொடங் கெழுந்து
பந்த மோவுமற் றுள்ளபஃ றலமெலாம் பணிவார். (உஉஞ)

தலயாத்திரை.

பொருவி லாவள மலிதிருப் பாதிரிப் புலியூர்
திருவி லார்குறித் தடைதரா தித்திருத்தின் நகரங்
கருவி லாருடன் மாணிதாழ் குழிகருக் குழியி
லிருவி லாதிரு வதிகைமுற் பலவுஞ்சென் றிறைஞ்சி. (உஉசு)

வேறு.

வினைகெழுசந் தனக்குறடு மேதகுகா ரகிற்றுணியும்
வனைகெழுமு பலபொருளும் வான்றிவரு பெரும்பெண்ணைத்
திரைகெழுதண் புனல்வளங்கூர் திருவெண்ணெய் நல்லூரிற்
புனைகெழுமு பெரும்புகழார் பரிசனத்தி னெடும்புகுந்தார். (உஉள)

நாவலூர் நம்பிதணைத் தடுத்தாண்ட நம்பெருமான்
மேவுமா லயமபுகுது மீமதினிமார் புறபணிந்து
பாவுபே ரன்புமிகப் பரிந்துவிழிப் புனல்வாரத்
தாவிலா னந்தமெழப் போற்றிசைத்துப் புறஞ்சார்ந்தார். (உஉஅ)

வானேங்கு கயிலாய மலீயோங்கு நந்திபிரான்
றூனேங்கு பேரருளாற் றந்தவருட் டகைதூலத்
தீனேங்கு செந்தமிழாற் றிருந்தமொழி பெயர்த்தருணங்
கோனேங்கு தளிபுகுந்து கும்பிட்டா ருள்ளுருகி. (உஉக)

தீராத பெருங்காதல் சிந்தையெழப் பணிந்தெழுந்து
நேராதார் புரம்பொடித்த நித்தனாவண் டிருத்தறையூ
சோராவங் கணீங்தேத்தி யுள்ளுருகி யருணங்தி
தாரார்பொற் பூங்கழலுங் தாழ்ந்துபணிந் தின்புற்றார். (உசுo)

அரியபுக ழாளர்சக லாகமபண் டிதரடிகள்
பிரியமன மஞ்சினராய்ப் பேதுறற்றுப் புறவிடைகொண்
டுரியசிவ பெருமான்வா மீழாங்குமதி லாமாத்தூர்
பிரியமிகு கோவலூர் பேணுபுசென் றிறைஞ்சினார். (உசுக)

பூமேவு நான்முகத்துப் புத்தேளு மறுவிஞ்சு
மாமேவு வனமார்ப மாயவனு மூரணடங்கத்
தாமேவு விண்கிழித்துத் தழலுருவ மாய்ங்தூர்
தேமேவு திருவடிகள் சென்றுபுகுந் திறைஞ்சினார். (உசுஉ)

ஆயபெருந் தலங்தின்று மஞ்சிவிகை மேற்கொண்டு
பாயபரி சனஞ்சூழப் பழமலீபோய்ப் புகுந்துமிகத்
தூயமணி முத்தாற்றுத் தீதாய்ந்துபெரு மகிழ்ந்தினப்பத்
தாயணிய பெருமானூர் சரண்பணிந்து புறம்போந்தார். (உசுங)

தூங்காணீ மாடமுதற் சுற்றுமுள தலமெல்லா
நீங்காத காதலொடு நேர்சென்று தொழுதெழுந்து
பூங்காவின் மயிலாலும் புனற்பாவி நாட்டுமறந்
தேங்காத மறைச்சிலம்பாந் திருக்கழுக்குன் றினையடைந்தார். (உசுச)

திருவாத வூரருக்குச் செய்யபெருந் தூறைக்கோ
மொருவாது காண்பித்த வும்பர்பிரான் ருள்பணிந்து
பொருவாத வளம்பரவு மிடைச்சுரமும் புகுந்தேத்தி
மருவாதார் புரம்பொடித்தார் கச்சூரும் வணங்கினார். (உசுஞ)

தேவர்கள்வந் தமுதாட்டுந் திருவான்மி யூர்பணிந்து
யாவருங்கை குவித்தேத்த வெய்திமயி லேயும்பணிந்து
பாவருவண் புகழ்படைத்த வொற்றியூர் பாசூர்பைங்
காவருவண் டிருமுல்லை வாயிலும்போய்க் கைதொழுதார். (உசுசு)

அம்மைதிரு நடங்காணு மாலங்கா டகீனந்திறைஞ்சிச்
செம்மைதிகழ் திருச்சென்னூர்த் தேசிகனு ரினிதமரும்
வெம்மையக றிருத்தணிகை வெற்படைந்து பணிந்தேத்தித்
தம்மைநிகர் வரியாசில நாளங்குத் தரித்திருந்தார். (உசுள)

மேதகுவேங் கடகிரிவேர் தருமிளங்கு திருநகரிக்
காதன்மிகு மன்னவரு மெதிர்கொண்டு கனவரிசை
யாதரவிற் செயப்பெற்றே யன்னவரோ டளவளாய்ப்
போதவரு வார்பிறவும் போய்ப்பணிவான் குறிக்கொண்டார். (உசுஅ)

முத்திமுதல் வகணத்தணிகை முன்னவகண யொளிர்ஞான
சத்திதரன் றகணயங்கு விடைகொண்டு சார்ந்தோர்க்குப்
புத்திமுத லெப்பயனும் பொருத்துமொரு திருக்காஞ்சி
யத்தியுரிப் பெருமாண யடிவணங்க நிணைந்தெழுந்தார். (உசுக)

பல்லாரு மெதிர்கொள்ளப் பரவுகாஞ் சியையடைந்து
சொல்லாரு மறைமாவி ணெருமூலச் சுடரொளியை
வல்லாரு மூலச்சுவடும் வகணச்சுவடுங் கொண்டுமகிழ்
வில்லாரு மெய்ப்பொருளை வீங்குகா தலிற்பணிந்து. (உசo)

எவ்வுலகு மீன்றளை யின்காமக் கோட்டத்துச்
செவ்விதிதரிந் தடிபணிந்து தேதிகண கியபெருமான்
முவ்வுலகுந் தொழுதேத்த முன்னிவள ரிடமாய
வவ்வியமில் குமரகோட் டம்பணிந்தா ரருட்பெரியர். (உசக)

கற்றபல சொருங்கணர்ந்து கைகுவித்துத் தொழுதேத்தி
யுற்றபெரு மகிழ்ச்சியிண லவவளா யுடன்மருவப்
பொற்றபுகழ்க் காஞ்சியிடைப் புண்ணியமா தலம்பலவு
மற்றமறப் பணிந்திருந்தா ராறுமுகக் கன்புடையார். (உசஉ)

அன்னதலத் திடைகின்று மெழுந்தருளி யருங்கானு
முன்னரிய பெருவகையு முழுங்கிவரு பன்னதியு
மின்னவைகள் கடந்தேகி யெண்ணில்பரி சனஞ்சூழப்
பொன்னசலச் சிலையாளர் காளத்தி போய்ப்புகுந்தார். (உசங)

அன்னமலி புனற்செந்தூ ராறுமுகப் பெருமாண
ரின்னருள்பெற் றவரிங்கே யெய்தினு ரெனமகிழ்ந்து
பன்னரிய காளத்திப் பார்த்திபண தெதிர்கொள்ள
நன்னர்மகிழ்ச் சியிற்சிறந்து நல்லாரங் கினிதடைந்து. (உசச)

பிறங்கிவரு பொன்முகலிப் பெருந்தீர்த்தம் படிந்தாடி
யறங்குலவு மால்வகையி னடிமருவிப் பணிந்தெழுந்து
நிறங்கிளருஞ் சோபான வழியேறி நேயமிக
மறங்கிளர்வெஞ் சூற்படையார் மண்ணுதிரு வடிபோற்றி. (உசஞ)

அன்புதிரண் டோருருவா யமைந்தருகி னிற்பாரை
யென்புருகப் பணிந்தேத்தி யெல்லையிலா னந்தமுற
வன்புதவிர் மனங்கனைய மாருது விழிபொழியத்
துன்புதவிர்ந் தும்ந்தேனென் றினிதுதுதித் தனர்மீண்டார். (உசசு)

அந்தகரப் புரவலஞ ரளவிலா வரிசையொடு
சந்தமட மொன்றியற்றித் தரஞ்சிலகா ளங்கமர்ந்து
பந்தமிறம் பெருமானர் பாற்சென்று விடைபெற்றுக்
கந்தரிரு வருள்பெற்றூர் காசிநகர் குறித்தெழுவார். (உசஎ)

வேறு.

உமாமலி சிவிகை மேற்கொண் டுலப்பிலா விருது மொய்ப்ப
வமாமலி மதமால் யாணை வாம்பரிக் குழாங்கள் சூழக்
கமாமலி சின்ன மார்ப்பக் கல்லென வியங்க ளேங்கத்.
தமாமலி வளமை சான்ற தண்டக நாடு நீத்து. (உசஅ)

செறிதரு காணுங் குன்றுஞ் சிலைத்தெழு நதியும் யாரு
மறிதரு நகரு மாக வமைதரு தெனுங்கந் தள்ளி
வெறிதரு நெய்தல் பூத்துத் திசையெலாம் வீசும் வாசக்
குறிதரு கைதை வேலிக் கருநடங் குலவ நீத்து. (உசக)

மழைமுகி றவழா நிற்குஞ் சோலையு மருத வைப்புங்
கழைகெழு வரையு மாக மாளவங் கடந்து சென்று
குழைபொடி சுரமுங் காடுங் கொண்டல்கண் படிக்குங் குன்றும்
விழைதரு நகரு மாக விராடமுங் கடந்து சென்று. (உரO)

சூடம்படி செருத்தன் மேனி குறுகுபு கீணத்துப் பாய
விடம்படி தடத்து நின்று மெழுந்திள வாளை தாவத்
தடம்படி வானந் தோயுந் தாழைமுப் புடைக்காய் கிந்த
வடம்படி முலையா ரஞ்சு மத்திய தேச நீத்து. (உருக)

வெங்கை மால் வரையின் கோடிடும் விரைத்தகந் தனத்தின் றுண்டுங்
கொங்கையார் மலரு முத்துங் குருமணி களுந்த ரங்க
வங்கையால் வாரி வாரி யருகிரு கரைப்பால் வீசுங்
கங்கைசூழ் கிடந்த தெய்வக் காகிமா நகரம் புக்கார். (உருஉ)

காசிநகராக்காட்சி.

அவிர்புனற் கங்கை பொங்கி யலையெறி கின்ற தோற்றந்
தவிர்தலின் றடைந்து காசித் தலத்திடை யிறப்போர்க் கெல்லாந்
தவர்சிலை யாகக் கொண்ட தம்பிரா னருளாற் சென்னி
யிவர்தர வேண்டு மென்ப தெண்ணுபு போலு மாதோ. (உருங)

மண்ணைகழ்ந் திரைத்துச் செல்லும் வராகி திரைக்கை யாலே
யெண்ணருங் புலிமால் யாணை யெடுத்தகன் கரைமேல் வீசல்
கண்ணக னுங்கு வைகிக் கழிபவ ருடுக்கப் போர்க்க
வுண்ணயந் தீட்டி வைக்குஞ் சூழ்ச்சியே யொக்கு மாலோ. (உருச)

சுராநதி யென்னுங் கங்கைத் துறையெறி நுரையி னீட்ட
மாணரு ளாலங் கெய்தி யாருயிர் கழிப்போர்க் கெல்லாம்
வானமை தோளிற் சாத்த வெண்டலை மாலை கோத்தே
யுரனுற விடங்க டோறு மமைத்ததை யொக்கு மாலோ. (உருஞ)

வரையினின் றிழிந்து செல்லும் வராகித் திரையின் வீக்கம்
புரையறு தவத்தா லாங்குப் போந்துயிர் கழிப்போர்க் கெல்லாம்
விரையக மேருவிற் சூட்ட வெய்யகட் செவியின் கூட்டங்
கரையறச் சேர்த்து வைக்கப் புரள்வது கடுக்கு மம்மா. (உருசு)

கோலங்கொள் கங்கை யாற்றின் குளைபுனற் கயலே வெளவுஞ்
சீலங்கொள் குரண்ட மெல்லாந் திரண்டிடன் பொலியுந் தோற்ற
ஞாலங்கொ ளாங்கு மேவிக் கழிபவர் முடிமே ணண்ணுங்
காலங்கொள் வதுகு றித்துக் கவின்றன போலு மாதோ. (உருஎ)

பொருவருங் கங்கை யாற்றுப் புகழ்ப்பெருந் துறைக டோறு
மொருவரு மீனங் கூர்ம மொய்த்தன வுறந்த தோற்ற
மருவியங் கிறந்தோர்க்கெல்லாம் வளங்கொள்கை விரல்சே ராழி
திருவியன் மார்பத் தாருஞ் செறித்திடச் சேர்த்தன் மானும். (உருஅ)

புண்ணியக் கங்கை யாற்றின் பொருவறு கரையின் பாங்க
ரண்ணிய மறையோர் யாரு மாரமல் வளர்க்குந் தோற்ற
நண்ணியங் கிறந்தோர் பெற்றி நடுக்கர நடுவித் தேத்துக்
கண்ணிய செந்தீ யேற்ற வளர்ப்பது கடுக்கு மாலோ. (உருகூ)

இருகரை யுடைத்துப் பொங்கி யிரைத்தெழு கங்கை யாறு
தருவியல் கானக் கொன்றை சாடுபு கொணருந் தோற்ற
மொருவற வாங்கு மேமவி யுடல்கழிப் பவர்தந் தோளின்
மருவணி சூட்டச் சேர்த்து வைத்திடு காட்சி மானும். (உகo)

வளைகடந் தனைய காட்சி வயக்கஞ்சால் கங்கை யாற்றின்
றிகைபல முகங்க டோறும் வீளையெடுத் தெறியுஞ் செய்கை
யுரையிறற் தங்கண் மாண்டோ ரொள்ளிய செவியிற் றாக்கும்
புரையறு குழைக ளாக வெண்ணில வீசல் போலும். (உகக)

முன்னிய நாகர் வைப்பு முழுதளா யெழுநீர்க் கங்கை
மன்னிய வங்கு மேமவி மாண்டவர் களத்து நஞ்சந்
துன்னிய புகுத்தற் கெண்ணி யுறையிடந் தூருவிச் சென்று
மன்னிய விளைவு நோக்கி வருமொரு பரிசு போலும். (உகஉ)

சொல்லரும் பெருமை சான்ற தூத்திரைக் கங்கை யாற்றி
னெல்லையில் வளங்கண் முற்று மிருவிழி விடுத்து நோக்கி
யல்லல்வெம் பிறவிப் பாச மலீத்திடு நன்னீ ராடி
யெல்லையி லின்ப வெள்ள மெய்தின ரப்பாற் செல்வார். (உகங)

விண்ணவ ரொருங்கு சூழும் விச்சுவ நாதர் மேய
வண்ணலஞ் சிகரக் கோயி லணைந்திரு கண்ணீர் வாரக்
கண்ணரு மன்பு பொங்கக் கைகுவித் திறைஞ்சி வீழ்ந்தார்
பண்ணமு தனைய தீஞ்சொற் பைந்தமிழ் வடிக்க வல்லார். (உகச)

துண்டிவிநாயகர்பதிகம், காசிக்கலம்பகம்.

வெருவரு மருள்சா றுண்டி விநாயகப் பெருமான் மீது
பொருவரு விருத்தம் பத்துப் புகழ்ச்சியிற் பாடிப் போற்றி
யிருவரு மூணா விச்சு வேசர்மே லியம்பு வோர்கள்
கருவரு நீர காகக் கலம்பகம் புனைந்து பாடி. (உகஙி)

மூயிர்க ளெய்த வானந்த வல்லி யோடு
மானந்த மகார்க ளோடு மானந்த வனத்து மேப
வானந்த வடிவார் தம்மை யானந்தச் செய்புள் பாடி
யானந்தம் பயப்பப் போற்றி யானந்த மெய்து நாளில். (உகூ)

இத்தகு தலத்தே நாளு மறம்பல வியற்ற வேண்டி
மத்தகை யறங்க ளாற்றற் கமைதரு மிடமும் வேண்டும்
பைத்தவிர் நகரார் வேந்தைப் பார்க்கவும் வேண்டி மென்னுச்
சித்தம்வைத் திருந்தார் செந்தூர்ச் செல்வர்தந் திருமா ணைக்கர். ()

சொல்லுமிர் நகரார் வேந்தர் தூருக்கரா யிருத்த லாலே
யொல்லுமற் றவர்தம் பாடை யொருங்குகாற் தெரிய வேண்டும்
புல்லுமற் றதற்கெஞ் ஞான்றும் பொருந்துபல் வாக்கு நல்க
வல்லும்வெண் கமலச் செல்வி மாண்பினைத் தந்திப்பா மென்று. ()

சகலகலாவல்லிமாலை.

புந்தியுண் முடிய வெண்ணிப் பொலியுரா மகனே நோக்கி
முந்திய பிரம னுவி னமர்ந்தமுற் றிழைம டக்தாய்
நந்திய வெள்ளை மேனி நின்மல நங்கா யென்று
சிந்திய விணையார் மாலை சிறப்புற வொன்று பாட. (உகூ)

கலிமகள் கருணை பூத்துக் காட்சிதந் தருளி யங்கு
நிலைபெறு துருக்கர் பாடை நிகழ்பனு மறைமுன் னிய
தலைமைகொள் பலவுஞ் சால வல்லராய்த் தழைய பாறு
மலைவறு மருள்செய் தாளுண் மகிழ்ச்சியிற் றிளைத்தா ரன்றே.(உஎ0)

அந்நகர் புரக்கும் வேந்தர்க் கமைந்தவா ரியர்பாற் சென்று
பன்னரு மணியார் வேத மாதிய பலவி னுவி
முன்னரு மவருக் குள்ள சங்கைகண் முழுதுந் தீர்த்தா
ரென்னரு மிறும்பூ தெய்த வணியரு மெய்தி னாரே. (உஎக)

மற்றவர் வள்ள லாரை மகிழ்ந்துட னனைத்துக் கொண்டு
கொற்றவர் முன்பு சென்று குலவிவர் பெருமை தேற்ற
வுற்றவர் தாமுங் கல்வி யுண்மையா திகளோர்ந் தேபம்
றற்றவ ரென்று பட்டாங் கறிந்தனர் சிறப்புச் செய்தார். (உஎஉ)

நயம்படு சிருங்கா ரத்தி னகுபிர சங்கங் கேட்டு
வயம்படு வீர ரெல்லா மயங்குபு சோர்ந்து வீழ்வார்
வியம்படு வெம்போ ராற்று மிகுபிர சங்கங் கேட்டுப்
பயம்படு முதியோ ருங்கண் சிவந்துமே லெழுந்து பார்ப்பார்.(உஎகூ)

காசியில் மடமமைத்தல்.

இன்னண நிகழு நாளி லெண்ணருந் தூருக்கர்க் கெல்லா
மன்னவர் திருச்செந் தூர்வாழ் வள்ளலா ருள்பெற் றூர்பாற்

பன்னரு மகிழ்ச்சி கூர்ந்து பரவுமக் காசி வைப்பின்
மின்னகு மடமொன் றுற்றிக் கொடுத்தனர் விழைந்து மாதோ. ()

எண்ணற வுலகத் துள்ளோர் யாவரும் புக்க போதுங்
கண்ணக லறையொன் றேற்று வெளியிடங் காட்டு மாறு
பண்ணிய மடத்து மேலிப் பரந்தநீர்க் கங்கை யாடி
வண்ணவான் பூசை யாற்றி மகிழ்ந்தினி திருப்பா ராளுர். (உஎடு)

அரசரா ற் பொருத்தப் பட்ட வளவது நிதியங் கொண்டு
பரவுதம் மடத்து வந்தார் பசித்தழ லவியு மாறு
விரவுறு சுவைநான் குண்டி விழைதர வூட்டி யூட்டிப்
புரவுற மற்று முள்ள வறமெலாம் போற்றி வாழ்நாள். (உஎசு)

கேதாரேசர்கோயிற்றிருப்பணி.

சடைமுடிப் பெருமா னர்கே தாரநா யகனு ரன்னர்
மிடைதரு கனவில் வந்து வெய்யவெங் காடு சூழ்ந்து
புடைநெருங் கிடம றைந்தேம் புரிந்துநீ வெளிசெய் யென்றே
யடைவுற வருளிச் செய்தா ரறிந்தன ரறிவின் மேலார். (உஎஎ)

ஆயிடைப் பலரோ டெய்தி யடர்பெருங் காடு போக்கித்
தாயினு மினிய னை தம்பிரான் றன்னீக் கண்டு
மீயுயர் மகிழ்ச்சி பொங்க விருப்பொடு பணிந்தெ ழுந்து
பாயுயர் செம்பொற் கோயில் பகருஞ் சிறப்பிற் செய்வார். (உஎஅ)

மன்னிய கோயி லாக்கி மறையவர் மூதலோர் சூழ
வின்னிய முகிலி னேங்க வெண்ணிய காலந் தோறும்
பன்னிய பூசை யோங்கப் பண்புறச் செய்வித் தேத்தி
நன்னிய மத்து நீங்கார் நாடியங் கமரா நின்றூர். (உஎக)

துருக்கக்கருக்கண்மார்களின் அழுக்காறு.

இன்னரிவ் வாறு மேவ வேற்றமிக் கவ்வு ராரு
மன்னர்தம் பிரிய மேன்மேல் வளர்ந்தெழு வண்ணங் காணூஉ
வன்னர்தங் குருவா யுள்ளார் மடமையா லவல ளாவு
முன்னர்நட் பொழிந்து தீரா மூண்டெழு மழுக்கா றுற்றூர். (உஅ0)

உறுமழுக் காறென் றோது மொருபெரும் பாவி யர்தோ
செறுதலி றிருவஞ் செற்றுத் தீயுழி யுய்க்கு மென்று
மறுவறு சான்றோர் சொற்ற வார்த்தையு மூணரா ராகிக்
கறுவிறம் மாசர் தம்பாற் சென்றிது சுழற வுற்றூர். (உஅக)

மறந்தரு பகைவ ரெல்லா மலரடி வணங்கிப் போற்ற
வறந்தரு செங்கோ லோச்சு மண்ணலே தென்பா னின்று
முறந்தவிர் நகரம் புக்கிங் குன்னருள் பெற்றூர் நூலிற்
சிறந்தவ ரெனினுங் கொண்ட தெய்வமாத் திரம்பொய் யென்றூர். ()

குருக்களா ருரைத்த வார்த்தை கொற்றவர் செவியிற் கேளா
வுருக்கிள ரடிகே ணீங்க ளுரைத்தது தகுமோ வென்னத்
திருக்கியா முரைத்தே மல்லேனு சிறந்ததும் மவையிற் கூவிப்
பொருக்கெனச் சோதித் தப்பாற் புகலுவி ரெம்மை யென்றார். ()

என்றலு மியல்பே யங்க ணெய்தின ராக வெங்கண்
மன்றலங் கடப்பந் தண்டார் வள்ளலார் திருமா ணுக்கர்
நன்றென வரசர் தாமு நகைமுக மலர்ந்து முன்போற்
கன்றலி லிருக்கை நல்கிச் செயத்தகு கடனுஞ் செய்து. (உஅச)

எங்கடங் குருக்க ளாவா ரியம்புதல் கேண்மி னென்ன
வங்கவர் நீங்கள் கூறும் வார்த்தையை யறைமி னென்ன
வுங்கடந் தெய்வம் பொய்யே புண்மையே லகங்கை தம்முள்
வெங்கண லிரும்பை யேந்திக் காட்டுமின் விளங்க வென்றார்.(உ அநி)

அவ்விய மனத்த ராகிக் குருக்களா றறைந்த வார்த்தை
செவ்விய மனத்தார் கேட்டுச் செய்பவாய் முறுவல் பூத்து
நவ்வியங் கரத்து முக்க ணையனு ருண்மை யிரிந்த
வெவ்விய மனத்தார் தேற விளக்குது மெனவுட் கொண்டு. (உஅசு)

சபதஞ்செய்து மழ ஏந்தல்.

வெருவுற விருப்புக் கட்டி வெந்தழற் புகுத்திக் காய்ச்சி
வருவியிங் கென்ன மன்னர் வயங்குகொல் லுலையி லிட்டுப்
பொருவுவ துருத்தி பூதி யிருந்தைபோ கட்டிக் காய்ந்த
வுருவமற் றதனீ யங்கு வருவித்தா ருலக மஞ்ச. (உஅள)

எதிர்வரக் கண்ட வேந்த ரிருவிழி வெதுப்ப முற்றார்
முதிர்சினக் குருக்க ளென்பார் முகம்பொதி யுமாம முற்று
மதிர்தரத் தீக்கு மென்மே யஞ்சின ரகன்றி ருந்தார்
சதிரறி யாமை தீர்த்தார் சாற்றுவா ரெழுந்து நின்மே. (உஅஅ)

புரையக லுயர்வு சால்வே தாகம புராணங் கூறு
முரைபிர மாண மென்னி னுவமையில் சைவ மொன்மே
கரைதரு சமய மென்னிற் கருதுமச் சமயங் கூறு
நரைவிடை யுயர்த்த தேவே நாடரும் பிரம மென்னின். (உஅக)

நன்றிகொள் விபூதி யக்க நகுமணி யெழுத்தே நாந்தும்
துன்றிய வன்பிற் கோடல் சாதன மென்னிற் ரூலா
வென்,றிசெய் சரியை யாதி நான்குமே விளங்கா றென்னி
னுன்றியொண் ரூம லின்பத் துறுவதே முத்தி யென்னின். (உகூ0)

எண்ணிலா வுயிரீ டேற வெடுத்தருள் வேட மெங்க
ளண்ணலங் கைலே யாளி யடியவர் வேட மென்னிற்

கண்ணரு மணியார் பாதம் வழிபடு கடமை பூண்டோர்
மண்ணரும் பிறவிப் பௌவம் வறப்பது மெய்ம்மை யென்னின். ()

பதியெனுஞ் சிவனுக் கென்றும் பங்கய னெடுமால் வேந்தன்
மதிகதிர் வாழ்நர் யாரும் வழிவழி யடிமை யென்னிற்
பொதிதரு கற்பீ ரூடை புனைந்தயான் புனைந்து கூறும்
விதிவழு வாது நிற்கு மேதக வுடையே னென்னின். (உகூஉ)

யானுயர் திருச்செந் தூர்வா ழிறைவன்மா ணாக்க னென்னிற்
ரூனுயர் தரும நாளுந் தழைத்திட லுண்மை யென்னி
ஞானுயர் கொடிப்பி ராஞ ராலயப் பொருளே நாளு
மீனுயர் கடல்வி டுத்த விடமெனக் குறித்தே னென்னின். (உகூங)

இதுசுடா திருக்க வென்றே யாவரு மறியக் கூறிச்
சதுமுக னெடுமா றேறருத் தனிப்பர சிவனே மெய்யென்
றதுகர மலரி லேந்தி யவையுளார் யாருங் காணக்
குதுகுதுப் பெய்தி னின்ரூர் குவலய முய்ப வந்தார். (உகூச)

ஆதனத் திருந்த வேந்த ரிழிந்தக நடுங நுங்கிக்
காதலிற் போற்றி யென்ன காரியஞ் செய்தே தா மென்ரூர்
போதமிக் குடையோ ராகிப் புரிந்தவை யிருந்தார் யாரு
மேதகு சிவனே தெய்வம் வேறில்லை யென்று தேர்ந்தார். (உகூடு)

நீடிய பொருமை யாலே நிறைபெருங் கலகஞ் செய்து
கூடிய குருக்கள் சென்னி குனிந்துமார் பழுந்தா நிற்கு
நாடிய முகமோ மத்தை நகங்களிற் கீறிக் கொண்டு
வாடிய மனத்த ராகி மாண்பொழிந் திருந்தா ரன்றே. (உகூசு)

எரிதழல் விழுங்கப் பட்ட விரும்பைக்கீ ழிடுக வென்று
புரிமதி யரசர் வேண்டப் பூமியி லதைப்போ கட்டு
விரிதர வணையார் நல்கும் விருதுமுற் பலவும் பெற்றுப்
பரிதியின் விளக்க மிக்கார் பரவுதம் மடத்திற் புக்கார். (உகூள)

முன்னியிற் செல்வ நாற்றி முனிவற வரசர் நல்க
வென்னியிக் குருக்கள் செய்த சகாயமென் றுவகை யெய்தி
நன்னயத் தறங்கண் மேன்மே னுனிலம் பரவ வாற்றி
யன்னியிற் பொலியு மெங்க ளையர்தா மிருந்தா ரன்றே. (உகூஅ)

முகாங்கிமடம்.

மாதவத் துயர்ந்தா ராய வாகீச முனியை நோக்கிக்
காதல்செய் வீபூதிக் கேற்ற கண்மணி வீளையும் பூமி
மேதகக் கொளினன் றென்ன வவர்முக ரங்கி மேவி
ரீயாதுமப் பூமி கைக்கொண் டுயர்மட மொன்று செய்தார். (உகூகூ)

பரம்பரையோர்.

அற்புதம் பயப்ப விவ்வா றமர்பவர் தமக்குப் பின்பு
சொற்பயி லறம்பா லிக்குந் தூயவர் யாவ ரென்று
கற்பனை கழன்ற தம்பாற் பணிபுரி காட்சி யாருட்
பொற்பமை சொக்க நாத முனிவரைப் புகழ்ந்து கொண்டே. (௬00)

அன்னவர் தமக்குத் தீக்கை யாதிய வமையச் செய்தே
யுன்னரும் குமரப் புதல்வ ஞண்மையுஞ் தெளியத் தேற்றிப்
பன்னரும் தம்போற் செய்து பாலிப்பா யறங்க ளென்று
நன்னலம் பயக்குஞ் சொக்க நாதரைக் கயற்க ணுதல். (௬0க)

மேதகு திருச்செந் தூர்வாழ் வேலுடைக் கடவு ளாரை
யாதரம் பயப்ப நல்கி யமைதரப் பூசி யென்று
காதல்செ யிடபத் திங்கள் கருதிய கண்ண பக்கந்
தீதறப் பொலிந்து தோன்றுந் திரிதியைத் திதியின் மாதோ. (௬0உ)

அன்மிருரு திருச்செந் தூரி லணிகெழு குமர ஞகி
நன்றுவந் தருளிச் செய்த நாதரைத் தியானஞ் செய்தே
தொன்றுறு கலப்பிற் செம்பொற் றுணியடிக் கமல நீழ
லொன்றியொன் றுது மேவி யுலப்பிலா னந்த முற்றார். (௬0ங)

பின்னர்வண் சொக்க நாதர் பிறங்கறம் பெருகச் செய்து
பன்னெடு நாள்கள் வைகிப் பகருரு ணைச லப்பேர்
மன்னிய வடிக டம்பால் வயங்குதம் முரிமை நல்கி
நன்னர்செ யிடப மாத நயந்தரு கண்ண பக்கம். (௬0ச)

துவாதசித் திதியிற் செந்தூர்ச் சுப்பிர மணியர் பாதத்
தவாவறுத் தடைந்த தங்க ளாரியன் பாதத் துற்றூர்
தவாவரு ணைச லப்பே ரடிகளுந் தருமம் யாவு
முவாவுற நடத்திப் பன்னு ளொழுக்கத்து வைகிப் பின்னர். (௬0ரு)

அம்பல வாண தேவர்க் கமைந்ததம் முரிமை நல்கி
நம்புறு மகர மாத நயந்தசுக் கிலபக் கத்திற்
பம்பிய திதிபன் னுன்கிற் றங்குரு பாதஞ் சேர்ந்தா
ரிம்பரம் பலவா னைப்பே ரிறைவரும் பன்னுள் வைகி. (௬0சு)

அறத்திணை விருத்தி செய்தே யருட்சடை யப்ப தேவர்க்
குறத்தம துரிமை நல்கி யொளிகெழு கும்ப மாத
நிறத்தசுக் கிலபக் கத்தி னிகழ்திர யோத சிக்கண்
விறற்பெருங் குரவன் பாத மேவின ருவப்பு மேவ. (௬0எ)

சடையப்ப தேவ ஞருந் தாமிசைப் பன்னுள் வைகி
யடையப்பே றறங்க ளெல்லா மமைதர விருத்தி செய்து

நடையுற்ற நலஞ்சா றில்லே நாயக மூர்த்தி யார்பான்
மிடையுற்ற வுரிமை நல்கி விளக்கஞ்சான் மேட மாதம். (கூ0அ)

பூரணைத் திதியி லாசான் பொன்னடிக் கமலஞ் சார்ந்தார்
காரணை மனத்துத் தில்லே நாயக வடிக ளாரும்
பாரணை யறங்க ளோங்கப் பண்ணுபு காசி வைப்பிற்
சீரணை யொருவர் தம்மைக் காரியஞ் செய்ய வைத்து. (கூ0கூ)

திருப்பனந்தாடகாசிமடம்.

திரைமலி பொன்னி நாட்டுத் திருப்பனந் தாளின் மேவி
யுரைமலி மடமொன் றுண்டு பண்ணியல் வுரின் மேய
வரைமலி சிலேகை யேந்தும் வன்சடை யப்பர் கோயிற்
புரைமணி பணிகள் பல்ல பொற்புற வியற்றிப் பின்னர். (கூக0)

நரைமை மடத்து மேய தம்முடை படியார்க் கெல்லா
நந்திய மகிழ்வி னூட்ட நன்னிலம் பலவுந் தேடி
முந்திய வாசா ரமை முனிவருக் குரிமை நல்கி
யுந்திய மீன மாத முற்றிடு கண்ண பக்கம். (கூகக)

நற்றிர யோத சிக்க ணலமலி யாசான் பாதத்
தற்றினி தமர்ந்தார் பின்ன ரொருமுதற் குரவ னுபயம்
பெற்றவர் பன்னுள் வைகிப் பெருகிய வறங்கண் முற்றுங்
கொற்றவர் மகிழ்ச்சி மேன்மேற் கொளக்குறை யறந டாத்தி. (கூகஉ)

சிதம்பர நாத தேவர் கொளத்திரு வுரிமை நல்கிக்
கதம்படு விருச்சி கப்பேர் கலந்திடு திங்க டன்னி
லிதம்படு கண்ண பக்கத் தேற்றசத் தமியி லாசான்
பதம்படு நீழ லுற்றுப் பவுபே ரின்ப முற்றார். (கூகங)

அச்சிதம் பரநா தப்பே ரடிகளார் பன்னுள் வைகி
நச்சிய காசி யாதி யறமெலா நயக்க வோம்பி
மெச்சிய சடையப் பர்க்கு விரும்புதம் முரிமை நல்கி
யுச்சமார் கும்ப மாதத் துற்றசுக் கிலபக் கத்தில். (கூகச)

மருவிய தசமி தன்னிற் குரவர்த மலர்த்தா ளுற்றார்
தருவினுஞ் சிறந்த வண்கைச் சடையப்ப வடிக ளாரும்
பொருவில்பல் லறமும் பன்னுள் பொற்பொடு பொலிய வோம்பி
யருமையா முரிமை தன்னைக் கணபதி யடிகட் கீந்து. (கூகடு)

மகரமா மதியிற் கண்ண பக்கத்து நவமி வாய்த்த
நிகரறு திதியி லாசா னின்மல பாத முற்று
ரகமலர்ந் தறங்க ளோம்பிக் கணபதி யடிக ளாரு
மிகலறப் பன்னுள் வைகி யிசைபல வீட்டிப் பின்னர். (கூகசு)

முழுதுண ரிராம லிங்க மூர்த்திகட் குரிமை நல்கிப்
பழுதக லிடப மாதம் பரவிய கண்ண பக்கந்
தொழுதகு சிறப்பு வாய்ந்த துவாதசித் திதியிற் றிங்க
ளெழுதரும் புகழ்ப்பே ராசா னிணையடிக் கமல முற்றார். (நகஎ)

முன்னிய விராம லிங்க மூர்த்திக டாமும் பன்ணண்
மன்னிய வறங்க ளோம்பி வளமலி யுரிமை யாரும்
பன்னிய சொக்க லிங்க வடிகட்குப் பவ நல்கித்
துன்னிய மேட மாதஞ் சுக்கில பக்கந் தன்னில். (நகஅ)

வருசதுர்த் தசியி லாசான் மரைமலர்ப் பாதஞ் சேர்ந்தார்
பெருகருட் சொக்க லிங்கப் பெயர்பெறு மூர்த்தி யாரு
மொருவறப் பன்னுள் வைகி யுற்றபல் லறமு மோம்பிக்
கருதரு முரிமை தன்னைக் கணபதி யடிகட் கீந்து. (நகக)

துகளறு கடக மாதஞ் சுக்கில பக்கந் தன்னி
லிகழ்வினீ லாத சிக்க ணெழிற்குரு பாதஞ் சேர்ந்தார்
புகழ்மிகு கணப திப்பேர் பூண்டப்பே ரடிக ளாரு
மகமகிழ்ந் பன்னுள் வைகி யறங்கள்பற் பலவு மோம்பி. (நஉ0)

முழுப்புக ழிராம லிங்க மூர்த்தியார்க் குரிமை நல்கி
விழுப்பமார் துலாமா தத்தின் மேபசுக் கிலப்க் கத்தி
லிழுக்கிலீ லாத சிக்க ணேற்றமார் ஞான மோன
வொழுக்கமார் குரவன் பாத முற்றினி திருந்தா ரன்றே. (நஉக)

பூரிய ரென்றுஞ் சாராப் புகழ்மிகு செந்தூர் மேய
கூரிய வடிவேற் செங்கைக் குமரவே ளருளப் பெற்ற
வாரிய ராதி யாகக் கணபதி யடிக ளீரைச்
சீரிய வொருபான் மூவர் திறமிவை தெரிக்கி மன்றே. (நஉஉ)

இந்நூலை யூக்குவித்தவர் சிறப்பு.

இவர்பெரும் புகழை யாமே வெடுத்துரை செய்ய வல்லேன்
குவலயத் தறிஞர் யாருங் கூறினு முடியா தாகுந்
தவலறச் சொல்லி முற்றுத் திறத்தினுந் தாழ்வொன் றில்லை
யவமகல் சேட னூலு மறைந்திட முற்று தென்னின். (நஉஎ)

சதுமறை முடிவுந் தேருந் தத்துவ முணர்ந்து ளீர்கா
ளிதுவரை யுரைத்த தோர்ந்தீ ரினிமகிழ் வாய்மை மேன்மை
பொதுவக மொழுக்க மாதி யாவுமீ யிரு ருவாய்ப் பேர்ந்த
முதுமதி யிராம லிங்க மூர்த்தியார் சீர்த்தி சொல்வாம். (நஉச)

ஆசரு ளுமையாள் பாக னுலையப் பொருள்க டம்மு
ளோசணு வேனும் வெளவு மறக்கடை யோரைக் காணிற்

கார்கெழு நஞ்ச மென்றுங் கறுத்திதழு கூற்ற மென்றும்
போர்கெழு வடவை யென்றும் பொருக்கென வஞ்சு கீரார். (கூஉறு)

காணுதற் கெளியா ராயுங் கடுமொழி யடையா ராயும்,
பேணுதற் குரிய வான வொழுக்கத்துட் பிறழா ராயும்
வாணுதற் கொடியோர் பாகர் பணிவயக் கிடுவா ராயும்
பூணுதற் கமைந்த தென்றும் பொறையெனப் பொலியு கீரார். (கூஉசு)

திருவளர் திருவாப் பாடிச் சிவபிரா னமருங் கோயி
லுருவளர் தரப்பு துக்கி யுறுவிழா வாதி யோம்பிக்
குருவளர் மணிப்பூ ணுடை குடைகொடி யாதி யாவுக்
தருவளர் கொடையு நாணக் கொடித்துளக் தழைக்கு கீரார். (கூஉள)

தம்முதற் குரவற் கன்று தவாவருட் குரவ னுய
மும்முதற் கடவு ளார்க்கு முதலவன் றிருச்செங் றூரில்
விம்முறப் பூசை யாதி விருப்பொடு நடக்கு மாறு
செம்முதற் பொருணி ரப்பிக் கட்டளை செய்து வைத்தார். (கூஉஅ)

தில்லைமா நகரந் தெய்வச் சேய்ஞலூர் திருப்ப னந்தா
டொல்லைமா வினைக ணீக்கிச் சுடர்திரி லோக்கி நாளும்
வில்லைவீ சுயர்பொன் மாட மிளிர்திரு வால வாய்மு
னெல்லையி றலங்க டோறுங் கட்டளை யியங்கச் செய்தார். (கூஉசூ)

சீலமார் பெருமான் மேய சிலசில தலங்க டம்மின்
ஞாலமார் கிலமின் றென்னப் பணிபல நகந டாத்திக்
காலமார் பூசை யாதிக் கட்டளை நியம மேவக்
கோலமார்ந் திலங்கு செம்பொற் கும்பாபி டேகஞ் செய்தார். (கூஉ0)

தருப்பல செறியுங் கோயிற் ருடகை யீச்சு ரஞ்சார்
திருப்பணந் தாளின் முன்னந் திருமடம் புதிய தாகப்
பொருப்புகள் பிளந்தெ தித்துக் கொடிவந்து பொருள்கள் வீசித்
திருப்புகழ் மேண்மே லோங்கச் செய்தனர் வலிய தாமே. (கூஉக)

அவனீயிற் றங்கி ராம மாகிய பலவற் றுள்ளு
மூவமையில் கருங்கல் செங்க லெனப்படி முவைகள் கொண்டே
தவலறும் பூசை யாற்றத் தகுமிட மட்டி ஞளு
மிவர்புனற் கூவ லோடி மடம்பல வியற்றி ஞரே. (கூஉஎ)

வடமொழி பயின்று ளார்க்குந் தென்மொழி வளங்கற் றூர்க்கு
மிடனிய வில்லம் பற்பல் பொலிவொடு மியற்றி நல்கிப்
படர்சுவைப் பாலூ ணுடை முதற்பல வளமு நல்கி
மடனறக் காணுந் தோறும் வரிசையி னுவப்புச் செய்வார். (கூஉகூ)

இன்றுப நயனஞ் செய்ய வேண்டுமென் றியம்பு வார்க்கு
மின்றுகல் யாணஞ் செய்ய வேண்டுமென் றியம்பு வார்க்கு
மின்றுசோ பனமி யற்ற வேண்டுமென் றியம்பு வார்க்கு
மின்றுசி மக்தஞ் செய்ய வேண்டுமென் றியம்பு வார்க்கும். (நுநுச)

இன்றுபுத் திரன்பி றந்தா னென்றுவந் தியம்பு வார்க்கு
மின்றுநாஞ் சிராத்தஞ் செய்ய வேண்டுமென் றியம்பு வார்க்கு
மின்றுசெல் கின்றோந் தீர்த்த யாத்திரைக் கெனச்சொல் வார்க்கு
மின்றுநம் மிடத்தென் னர்பொன் னெண்ணில வுதவு நீரார். ()

தென்மொழி வல்ல ராய சீரியர்க் குறுபொன் வீசிப்
பன்மொழி களினு மூள்ள பரம்பரன் சரித மெல்லா
நன்மொழிச் செய்யு ளாகச் செய்துநல் குகவென் றோதி
மென்மொழி முகமன்கூ றியாக்குவர் மேன்மே லம்மா. (நுநுசு)

ஆகம புராண மெல்லாம் பழையன வாகக் காணிற்
போகுயர் பணியிற் கொண்ட செழுமடம் புத்த கத்தி
லோகையி னெழுது வோரைக் கொண்டுற வெழுது வித்துச்
சேகறு கருமை யூட்டிப் பாசமுஞ் செறித்துச் சேர்ப்பார். (நுநுள

காசியே முதலி ராமேச் சுரங்களை யிறுதி யாக
மாசிலாத் தரும நாளும் வளர்த்திடு மதனுக் கேற்பப்
பேசிய பொதுப்பே டாகப் பூணும் பெருஞ்சிறப் புப்பே றாணும்
வீசுநீ ருலகந் தேற விளக்குவார் விளக்க மிக்கார். (நுநுஅ)

பொருந்திய திருப்ப னந்தாட் பொலிதிரு மடத்தி னுள்ளாக்
திருந்திய வாதி யாசான் றிருவுருப் பதிட்டை செய்து
பரிந்தபி டேகந் தூய நிவேதனம் பகரு மற்றை
விரிந்தபல் லுபசா ரங்க ணடத்திடு மேன்மை மிக்கார். (நுநுசு)

விடலரும் வேதி கட்டி மிக்கெருப் பெய்து நாளுங்
கெடலருங் கொடிவி ருக்க மாதிய கெழும வாக்கி
யுடலருங் கனியுங் கட்டே யொண்புனல் வழியப் பாய்த்திப்
படலரு நந்த னங்கள் பலபணி விடைக்காச் செய்தார். (நுசஂ)

சலிப்பற விடத்தை யோம்பிக் தமக்குப்பின் றுங்கா நிற்கு
மொலிப்புகழ்க் கருவி யாய துண்மையி னுணர்ந்து தேடி
வலித்ததென் மொழியி னோடு வடமொழி யுறக்கற் பித்துக்
கலித்தநல் லொழுக்கம் யாவுங் கற்பித்துச் சிறப்புச் செய்வார்.(நுசக)

அடிமணல் பரப்பி மண்ணு லமைகல மதன்மேல் வைத்துக்
கடிபடு கறும்பூ விட்டுக் கமழ்செயச் சுத்த நீரும்
படியினீர் மோரு மற்றும் பரப்பிய தண்ணீர்ப் பந்தர்
குடிகொள மார்க்கந் தோறுங் கோடைவைத் துவக்கு நீரார். (நுசஉ)

கருங்கடல் குடிக்குங் கொண்மூக் கற்பகங் காம தேனு
விருங்குணப் பதுமஞ் சங்க மெனப்பொலி நிதியி ரண்டு
சுருங்குத லில்லா மேன்மை தொகுந்தா மணியிவ் வெல்லா [யார்.
மொருங்குசேர்ந் தருக்கொண் டென்னப் பொலிகொடை யுடைச்செங் கை

அகலிடத் தனைத்துஞ் சங்கை யறவறி பவர்தா மேனு
மிகலருந் தமது செல்வ மிவ்வள வெனத்தே ராமை
புகலரு முன்பெற் றோர்பின் புகினுமங் கறிதி ராமை
பகலரு மிவ்வி ரண்டு நீங்குறப் பண்பு மிக்கார். (ந.சச)

தே வு.

பூமேவு திருச்செந்தூ ராறுமுகப் பெருமானூர் பொற்றுள் வாழ்க
தேமேவு மவரருள்சார் குமரகுரு பரமுனிவர் சீர்த்தி வாழ்க
மாமேவு மவர்மரபிற் பதின்மூவர் புகழுமப்பால் வந்தோ ராகித்
தாமேவு மிராமலிங்க வடிகளுமபின் வருமேவாருந் தழைத்து வாழ்க.

குமாரகுருபரஸ்வாமிகள் சரித்திரம் முற்றிற்று.

சிறப்புப்பாயிரங்கள்.*

க. விநாயகர் துதி.

துரிசிரா தடியர்களே யெடுத்தாண்டு பவமாற்றிச் சுகமே நல்குந்
திரிசிரா மலையாற்குப பதிற்றுப்பத் தந்தாதி சிறப்பச் செய்தான்
பரிசிலாப் புகழ்ந்தோருக் கமுதூட்டிச் செழுங்கந்தம் பரந்து வீசுங்
கரிசிலா வியலொடிலக் கியமுணர்ந்த நாகமுத்துக் கவிஞன் றானே.

பராபவஞ மார்கழிமீ. (திரிசிராமலைப்பதிற்றுப்பத்தந்தாதி.)

உ. நேரிசைஆசிரியப்பா.

பூமலி குளிர்தெண் புனற்பெருந் தடத்துக்
கவையடிச் செங்கட் களல்பிணர் மருப்புக்
கடமருள் செருத்தற் கவரி தலைபரிந்து
புழற்கா லாம்பற் பூநனி மிசைவான்
ஞ ரேரெருடு தாட்பைஞ் சூட்டன மிரிய
மடச்செழு நாரை வயிரெனப் பிளிறக்
கயலின மடவார் கண்ணிற் பிறழச்
சலஞ்சலப் புஞ்சந் தலைபுக் கொளிப்ப
மூட்டாட் டாமரை மொய்த்தடை கிடக்கு
க0 மகஞ்ஞைறைத் தும்பி யகன்குலைப் பரப்பிற்
றேங்கமழ் பொங்கர்ச் செறிந்திறை கொள்ள
மாங்கனிக் கொள்ளே வரம்பில வுதிரக்
குயுங்கழுத் தரம்பைக் கூன்குலை முறிய
மூட்புறப் பாகன் முதிர்கனி கிழியச்
கஞ செறிபசுங் கந்திச் செம்பழஞ் சிதறப்
பொலியிலாங் கலிமூப் புடைக்காய் வீழ
வெழுபுமீத் தகட்டகட் டிளவரால் பாயக்
கருங்கடற் பாயுங் கந்தர நிகர்ப்பக்
கதழ்விற் பாய்ந்து கலச்குபுழி தந்து
உ0 கதிரிளம் பசும்புற் கறிக்கக் கல்லா
மழவிளங் கன்றைப் படர்ந்துவார்ந் தொழுகப்

---

* பிள்ளையவர்களியற்றிய சிறப்புப்பாயிரங்களுள், கிடைத்தவைமட்டும் காலமுறைப்படி இங்கே பதிப்பிக்கப் பெற்றன.

பொழிபால் பெருகிப் புணர்திரைத் தீம்பா
லாழிகொ லோவென் றமரரு மயிர்ப்ப
மடையுடைத் தோடும் வளையாப் பெருவள
உடு நல்லூ ரென்னும் வல்லூ ரதிபன்
பார்கரு ணீப்பப் பயில்குல மென்னுஞ்
சீர்கரு ணீகர் செழுங்குல சிகாமணி
மின்னப் பேந்திய வேணியற் கன்புறு
மன்னப் பேந்திரன் வரத்தினி லுதித்தோ
கூ0 னிமையவர் தருவு மிமையாச் சுரபியுங்
கமஞ்சூன் முகிலுங் கதிர்கான் மணியு
மருங்கி யிரண்டு மழுக்கா றடையப்
பெருங்கொடை யெவர்க்குந் தருங்கர வள்ள
லொழுக்கமுஞ் சீலமும் விழுப்பெருந் தவமு
கூடு மானு வன்பு மானமும் பொறையு
நாடொறு நாடொறு நலம்பெற வளர்ப்போ
னீனிறஞ் சேரா நெடுமால் போல்வா
னுண்ணறி வுடையோர் நூற்பொருள் விரும்புந்
தண்ணளி யிராம சாமிக் குரிஞி
சு0 றன்னுடை யரும்பெறற் றமைய ஞகிய
தழைபுகழ் வீராச் சாமி மகிப
னுளுற்றிய தவத்தா லுதயஞ் செய்த
தேவ ராசச் செவ்வே ளென்பா
னற்குணம் பொறுமை ஞான மொழுக்கங்
சுடு குறையா தமைந்த நிறைவு பூண்டு
தொல்காப் பியமுதற் றோன்றிலக் கணமு
முன்னுமைங் காப்பிய முதலிலக் கியமும்
பற்பல சமய நூற்புறு நூலு
மற்றுள கலைகளுங் கற்றினி துணர்ந்து
இ0 ம்குவட நூலுளும் வேண்டிய தெரிந்து
சோதிட நூலுந் துரிசற வோர்ந்து
பிறங்குறு மறிவிற் பெரியோ ஞகி
வண்புகழ்க் குசேல மாதவன் சரிதையைத்
தமிழிற் பாடத் தானஃ திசைத்து
டுடு தன்னவைக் களத்து மன்னற வழைத்துத்
தொக்கள வில்லார் சூழ விருப்ப
விரித்துரைக் கென்ற விருப்பிற் கேட்டுக்
கவிதொறுங் கிடக்குங் கற்பனை வியப்புஞ்
சொல்லுடை மாண்புந் தொகுபொருண் மாண்பு
சூ0 மற்றுள சிறப்பும் வகைப்பட வாராய்ந்
தற்புத மற்புத மென்றக மகிழ்ந்து
விரிகடல் சூழ்புவி விளங்கப்
பரிவுட னச்சிற் பதிப்பித் தனனே.

சாதாரணஇ சித்திரைமீ. (குசேலோபாக்கியானம்.)

ங. விருத்தம்.

சீர்பூத்த சிரமாலே தாங்குபர சிவன்முடிபோற் சிறப்ப நாளும்
பேர்பூத்த வுடிமாலே தாங்குமுடித் திருத்தணிகைப் பெருமான் மீதி
லோர்பூத்த சொற்பொருணன் னயஞ்சிறப்ப வொருமாலே யியம்பி ஞன்சூற்
கார்பூத்த பொழில்வல்லூர்த் தேவரா சக்குரிசில் கவிஞ ரேறே.

பரிதாபிஞ ஆடிமீ. (திருத்தணிகாசலமாலை.)

ச. நேரிசையாசிரியப்பா.

மலர்தலே யுலகின் மாணெழின் மாதர்க்
குற்றிடு புலவி யுணர்த்திடு மைந்தர்
மாலையிற் ருழ்தலுங் காலையி னிமிர்தலுங்
கொண்டது பொருவ விண்டுகள் யாவும்
நு பனிபடு மிரவிற் பாருறத் தாழ்ந்தும்
வெயில்படு பகலில் விண்ணுற நிமிர்ந்து
மேவுதல் கண்ட வோவரு மிறவுளர்
செருமுகத் தெதிரும் பொருவரு ங்கைக்
குறவளே தணுவு மோங்கிருங் கழையு
கo மாவான் பயிலுமிலீ தழகிதென் றுவக்கு
நந்தியம் பொருப்பி னந்தினின் றிழிந்த
பாலியம் புனல்பாய் பண்ணே வாய்ந்தும்
புசழ்சரு மறைமுதற் பூமென் ருடையு
மறைகுடி யிருந்த வாய்வன் ருடையுஞ்
கடு செவ்வான் முளேத்த சிறுமதிக் கொழுந்து
மொருகான் மிசைமுக் கிளேவிடு தன்போற்
காம்பொடு பொலியுங் கூவிளந் தளிருந்
தன்னமு தடைத்த துன்னுபல் லரவு
மாடகப் பெயர்க்க ணவனினுங் கொடிதாய்ட
உo புவிபிலம் புகுதப் போர்த்தவான் புனலும்
வெண்ணிற வளேகொள் கருநிறக் கடலி
னுந்தியந் தாமரை நந்திய வன்ன
மின்னமு முணரா மின்னகு சடையிற்
செறிதர வைத்த வறிவுரு வமலன்
உடு முழுதுல கீன்ற வெழுதரும் வடிவக்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கன்னியோ
டறைபுகழ்க் காஞ்சிமு னளவரு மிடங்கொண்
டுறைதரப் பொலிய முறுதவம் வாய்ந்துஞ்
சொல்லருஞ் சீர்சேர் தொண்டைநன் ஞட்டிற்
கூo பறைதபச் செய்த பழம்பகை கருதி

யிந்திர னுலகிற் கிடரியற் றிடுவான்
வரைபல கூடி வளர்ந்துநின் றென்ன
வானள வுயர்ந்த மாளிகை மீமிசைச்
சுடர்பொற் கைபிடி சுவர்சூ ழெடுத்துப்
பளிங்கு படுத்த வளங்கெழு வெளியை
நெடுவரை மிசையமர் நீர்நிலை யென்று
மவ்விட மேய கொவ்வையங் கனிவாய்த்
திடியிடை மாதர் துறுகொடி யென்று
மவர்திரு மூகமுத லவிரவ யவங்க
ணண்மணங் கமழும் பன்மல ரென்று
மூம்பர்க ளுள்ளத் தின்னுபு கொய்தென
வுயிர்நிகர் மடவார்க் குதவிமகி ழுறுப்பா
லுவையின் மேவி யன்மையின் வெள்கி
மேவுதல் கண்ட வோவரு மடவா
ரென்னுளத் தெண்ணினி ரெவ்விடத் தூற்றனி
ரெற்றெழி லியற்றினி ரினிதுதுய்த் தனிர்கொல்
புரிதக வில்லீர் போமெனச் சினப்ப
வடிக்கடி மலர்மிசை யடிக்கடி வீழ்ந்து
நயனுரை கிளப்பவந் நகுபுண் மடவார்
நிலம்பொலி யெழுப்பச் செஞ்செவி புதைத்த
பளிக்குநிலை நின்ற பாவையர் களிக்கும்
வளமலி சீர்சால் வல்லூ ரதிபன்
சீர்கரு ணீகர் செழுங்குல திகாமணி
தண்ணளி வீராச் சாமிமால் புதல்வன்
சைவசித் தாந்த மெய்ந்நெறித் தலைவன்
புண்ணிய நாளும் போற்றி வளர்ப்போன்
குறிப்பறிந் தியாவுங் கொடுத்திடு மிவற்கு
வாய்விண் டறைந்தபின் வழங்கிடுந் தருவோ
பொருவென யாரும் புகழ்ந்திடப் பொலிவோ
னற்குண நற்றவ மொற்கமின் றமைந்தோன்
றேவ ராசச் செம்ம லென்பான்
றெல்காப் பியமுந் தொல்காப் பியங்களும்
பதிபசு பாசப் பகுப்புணர் நூலும்
பற்பல வாய பரமத நூலு
மேதினி விரும்புஞ் சோதிட நூலு
மற்றுள கலையு மயக்கற வுணர்ந்து
மிருவட மொழியுளும் வேண்டுவ தெரிந்து
பெயரா வறிவிற் பெரியோ னுகிப்
பயின்றதற் கேற்ற பயன்கடைப் பிடித்து
வாத ராயண மாதவ முனிவன்

மேதகு சூத மாதவற் கோதிய
புராணமூ வாறுட் புராதனன் புராணம்
பத்துளுஞ் சிறந்த வுத்தமக் காந்தத்
தாறுசங் கிதையுளு மரும்பொரு ணிறைந்த
எரி வோதரும் புகழ்சால் சூதசங் கிதையை
வண்மொழி பெயர்த்துத் தண்மொழி யமைந்த
செந்தமிழ்ப் புலவர் செவிக்கமு தாகவு
மெய்ஞ்ஞா னியர்கள் வியந்துகொண் டாடவு
மிதமலி தமிழா லியற்றின னுக
அ(வன்னமெய்த் தவத்தோன் பின்னர்வந் துதித்து
நலஞ்சா லறிவுங் குலஞ்சால் சிறப்பு
மானு விழுப்பமு மானு வொழுக்கமு
மொருவருங் கொடையும் பொருவருந் திருவு
மேன்மே லமைந்த மெய்ப்புகழ்ச் செல்வர்
அரி வரத ராச மாதவ முகிலுங்
கோவிந்த ராசக் குணப்பெரு நிதியு
மிருவரு முண்ணு னருமையிற் செய்த
சுவைபல தருமச் சூதசங் கிதையி
லுற்றபல் சிறப்பு முற்ற வுணர்ந்து
கூ0 பொருதிரைக் கடல்சூழ் புவியிற்
பாவிட வச்சிற் பதிப்பித் தனரே.

ராகஸஞ்ஞ கார்த்திகைமாதம் க-ஊ (சூதசங்கிதை.)

ங. விருத்தம்.

மாமேவு கற்பகப் பூந்தளிரு நறு மலரும் வாட்டமற் றிருளிர வான்மேன்
மாலென வுயர்ந்துதழை சோலைபுடை சூழும்வள வாணியம் பதிதழைப்பப்
பூமேவு மொருபாற் பசுங்கொடி தழைப்பவளர் பொற்றரு வினிற்றழைத்த
பூரணி யிடப்பரம காரணர் வீரிஞ்சேசர் பொன்னங் கழற்கணியெனப்
பாமேவு மொருசதக மினிதுபா கெவெனப் பரவுதம் பாலேற்றவர்
பாலெவரு மேற்பவருண் மால்வேங்க டப்பருங்கி பரிவுற் றுவந்துகேட்பத்
தூமேவு சொற்பொரு ணயம்பெறச் செய்தனன் றுதிவீர ராகவப்பேர்த்
தூயனருண் மைந்தனய மிகுசோட சவதானி சுப்பரா யப்புலவனே.

நளஞ்ஞ ஆவணிமீ. (விரிஞ்சேசர்சதகம்.)

கூ. நேரிசைவெண்பா.

தேனருவி பாயுஞ் சிராமலையி லென்றுமமர்
ஞானமுதற் கன்பி னயம்பயப்ப—மேன்மைபெறுஞ்
சுப்பரா யப்புலவன் சொல்லியவெண் பாமாலை
யெப்பொழு தும் வாழ்கவினி தே.

நளஞ்ஞ (திரிசிராமலை-வெண்பா.)

எ. விருத்தம்.

பன்னுபுகழ்த் திருமயிலைக் கபாலிதிரு வுளமகிழப் பாவ லோர்கள்
தன்னுபெருங் களிசிறப்பப் பதிற்றுப்பத் தந்தாதி சொற்ற ஞான
மின்னுபுகழ் நளிபடைத்த வண்ணத்தை மகிபாலன் விரும்பு மைந்தன்
மன்னுசிவ நேசசிந்தா மணியென்னு மொருசாமி வள்ளன் மாதோ.

களஞ்ஐப்பகிமீ. (திருமயிலைப்பதிற்றுப்பத்தந்தாதி.)

அ. நேரிசையாசிரியப்பா.

மலர்தலே யுலகி னலர்பல வுயிரு
மறமுத லொருநாற் றிறமுமெளி தடையத்
தெய்வமுண் டென்று தெளிதரன் முன்வைத்
தஃதுணர்ந் தார்க்கே யத்தே வியல்பும்
வாழ்த்து முணர்ந்தியற்ற மனமுறு மாதலி
னதுபின் னுறவமைத் தரசர்த நீதி
தெய்வ நீதியே சிவணு மாதலிற்
பின்ன தநிறுவிப் பெரும்பூ பால
ரியல்பொடு பிரியா தியலுந் தன்மையிற்
குடிகள தியல்பு சுறித்தத்தன் பின்னமைத்
தியல்புறத் தழீஇய விருங்குடிக் கல்லது
ஞானு சாரிய னண்ணு ஞதலி
னனையவன் பெருமை யனையதன் பின்னமைத்
தியலா சிரிய னியலுணர்ந் தார்க்கே
பொய்யர சிரியன் புன்மை தோன்று
மாதலி னவனிய லதன்பின் னுறநிறீ இ
யாரிய னியல்போர்ந் தடுப்பார்க் கன்றித்
தந்தைதாய் வணக்கந் தகாமையி னஃததன்
பின்னுற நிறுவியிப் பெற்றியின் வணங்கு
மைந்தருக் கனையார் மகிழ்ந்தாற் றுதலிவை
யென்றுரூல் கற்பித் திடுதல் வளர்த்தன்
மற்றதன் பின்வைத் தற்றழி யுதவல்
கல்வியே யாதலிற் காமரு மாதரு
முணருமா றதன்பின் னுறவஃ தறுத்திக்
கற்றோர்க் கன்றி மற்றோர்க் கியலா
தென்பது தோன்ற விருஞ்சகோ தரரியல்
பன்புற வதன்பி னமைசா நாட்டி
யுடன்பிறந் தாரொழுக் குறுமில் லறத்திற்
கின்றி யமையா தென்பது தோன்றக்
கிழவன் கிழத்தி யியலதன் பின்வைத்

தியலுறு ஞிழத்தி யியலுணர்ந் தார்க்கே
யவண்மறு தலேயா மணங்கினடை யுணர
வருமத னுலது மற்றதன் பின்வைத்
திவ்வா றுழுகு மியல்புடை யுயர்ந்தோர்
கூடு தாழ்ந்தோர்த் தாங்கலுந் தாழ்ந்தோ ருயர்ந்தோர்க்
கடங்கி யொழுகலு மறனென வதன்பி
னுன்றன் பின்ன ரொன்றுற நிறவி
யடங்கி யொழுகுநர்க் ககலும் பொய்ம்மை
பொய்நின் றகலப் போமே களவுங்
கூ0 களவு நீங்கக் கைவிடுங் கொலேயுங்
கொலேயது தொலேயக் குலேதரு மதவு
மதுக்குடி யகல மாறுஞ் சூதுஞ்
சூது நீங்கப் பரிதானந் தொலேயும்
பரிதான மகலப் படும்புறங் கூறலும்
கூடு புறங்கூற வொழியப் போம்பெரி யோனைத்
தூற்றலு மஃகதத் தொலேயு மூலோபமு
மூலோப நீங்க வொழியுஞ் சோம்பலுஞ்
சோம்ப லீங்கத் தொலேசருஞ் சினமுஞ்
சினமது தீரச் சிதையும் பொருமையு
ஙூ0 மென்பது தோன்ற லிவையெலா மதன்பி
னுன்றன் பின்ன ரொன்றுற வமைத்துப்
பொருமை யொழிந்த புண்ணியர்க் கல்லது
கல்லிச் செருக்குங் காரிகைச் செருக்குஞ்
செல்வச் செருக்குஞ் சேரா வென்பதற்
ஙூடு கதன்பினுவ் வொன்று வடைவுற நிலுவிச்
செருக்கொழிந் தவரே தீயரைச் சேரா
ரென்பது தோன்ற வதன்பி னிணைத்துத்
தீச்சார்பி லார்க்கே செறிபிழை பொறுத்த
லினியசொற் கூற லியலும் பிறர்க்குத்
கூ0 தீங்குசெய் யாமை செறியுமென் றதன்பின்
முறையொரோ வொன்று முயங்குற வைத்து
நினேயுமிங் நெறியோர் நெடுத்துயி றுறப்ப
ருரைக்கும தறப்பே ருண்டியு மொழியும்
புகலஃ தறத்தற் புகழ்தலு மொழியு
கூடு மிஃதரு தெனிற்புக ழிகழ்மதி யாமை
யுண்டா மென்றற் கொன்றன் பின்ன
ரொன்றுற வதன்பி னுறுமுறை காட்டிப்
புகழிகழ் மதிக்கும் புண்ணியர் தமக்கே
பரோப காரம் பலிக்குமென் றுணர

எ0 வதன்பி னிறுவி யத்தகை யோரே
பொருளவா வொழிவரப் புண்ணியர் தமக்கே
மெய்ங்நிலை யாமையும் வெளிப்படு மவர்க்கே
துன்பப் பகுதியுந் தோன்றிடு மவர்க்கே
யறஞ்செயுந் திறமுண் டாமவர் தாமே

எடு கணிகைய ரியல்பு கழிப்பரென் றுணர
விவைமுறை யதன்பி னியைதர நாட்டிக்
கனைதரு மினையர் கழுகுக் தோட்ட
மென்றூற் போல வியல்விலங் கினத்துக்
கிடர்செயா ரெனல்பின் னியைதர வமைத்து

அ0 நீதிநூ லென்றோர் நிலவுபெய ரிட்டுத்
திருமா றந்த தெள்ளமு தொப்ப
யாவரு முவப்ப வினிதி னியற்றித்
தந்தன னெருதூ றவலருங் கேண்மைமற்
றன்னவன் யாரெனி னறைகுதுங் கேண்மோ

அடு புலிக்கொடி கயற்கொடி பொருவிற் கொடியுடை
வேந்தர்த நாட்டுறை வேளாண் மாக்கள்
சோழிய ரென்றும் பாண்டிய ரென்றுங்
கொங்கரென் றும்பெயர் பெற்றன ரவருள்
வளரொறும் பீசர் மலைக்கு மேற்குக்

கூ0 கடும்புனல் பாய்மதிற் கணைக்குக் கிழக்கு
நலந்தரு காவிரி நதிக்குத் தெற்கு
வளம்பொலி நம்பிரான் மலைக்கு வடக்கு
நவிலுமிவ் வெல்லை நான்கனுட் பட்ட
விடங்குடி கொண்ட வியல்வே ளாளர்

கூடு மூன்ன மூதைத்த முத்தமிழ் வேந்தரு
மெங்கண்மூ வருக்கு மியன்முடி சூட்டுதற்
குங்களை யமைத்தன முவந்துகொள் வீரெனக்
கொண்டுமகிழ்ந் தனையார் கோத்தன் மையரே
யாயின ரதனு லவர்வாழ் நாடு

க00 கோனு டென்றோர் குலவுபெயர் பெற்ற
தானைக்கருங் குன்ற மொருபதி னெட்டு
நத்த மெழுநூற் றறுபத் தாறு
முன்னும் படிநன் குளகுளக் காடு
முன்னுமா யிரத்தி முந்நூற்று மூப்பதுந்

கஅடு தேவா லயங்கள் சிறக்குநூற் றெட்டு
மிரும்பிர மாலய மிருபத் தெட்டுங்
குறையறக் கொண்டவக் கோனுடு பின்ன
ரறைதரு புனல்வெள் ளாற்றின் றென்பா

லுரைதென் கோனு டொலியூர்க் கூற்றம்
கக0 திரைகளை யெறியுமத் திருநதி வடபா
லொளிர்வட கோனு டுறையூர்க் கூற்ற
மெனப்பெயர் பெற்றுநன் றியங்குங் காலம்
வண்மையவ் வேளாண் மாக்கண்மிகப் பெருகி
வடகோ ளுட்டில் வண்குளத் தூரிற்
ககடு பொரிதிருத் தலின்மிகப் பெரியகோ ளுடென்
ருருபெயர் பெற்றவவ் வொண்குளத் தூரிற்
கொங்கு ராயர் கோத்திர மதனில்
வந்தவ தரித்த செந்தமிழ்க் குரிசி
ஏய்ந்தவிளம் பூரணர்சே ஞவையர் நச்சினர்க் கினியர் மேலும், வாய்ந்தபரி மேலழகர் மயங்குகிவ ஞானமா தவத்தோன் சீர்த்தி, தோய்ந்தபுகழ்க் கச்சியப்ப முனிவர்பிரான் சொலிற்சொலாலுஞ் சொல்லா சொன்றும், பாய்ந்தகில வளைப்போர்மற் றகத்தியனு மகத் துவமாப் பாலிப் பானே. (ங)

மிகப்பெரிய ஞகியசீர்ச் சிவஞான முனிவரன்சீர் விளம்ப லாகு [ரு மிகப்பின்மட முடையேனு மெவ்வாற்ரு னென்னின்முன மிருவர்தே நகப்படிவ மாய்வளர்ந்த சோ திபையா தானஞ்செய் கன்மைபூண்டோ ருகப்பரிய மூன்றிழைநான் கிழைத்தீப மல்லாம லுஞற்ற லுண்டோ.

இரண்டாவது

பாண்டிநாடு.

திருமுனிவர் பல்லோருஞ் செந்தமிழிற் றுணைச்சூழ வொருமுனிவ னுலகுசம முறவுறைதற் கிடமாகித் தருமுனிவன் கைக்களிறுந் தாபதர்தப் பழக்கத்தாற் கருமுனிவா னெழுபொதியக் கவினதுபாண் டியநாடு. (க)

தணியுண்ட முனியுறையத் தக்கவிடங் கொடுத்ததணை நணியுண்ட விருக்கங்காள் கொரம்மினென நரலிவிடப் புணையுண்ட வலையெழுந்து பொருகையெனும் வடம்பூட்டி வினையுண்ட விருபானின் றிர்ப்பவென மிடைவனவால். (உ)

அறிவிலர்தாஞ் செய்வினையே யவர்க்கிடையூ றுயதுமீபோற் செறிமடுவின் மோட்டெருமை செறிந்துழக்கிக் கன்றுள்ளி முறிவொழியப் பொழிதீப்பான் மூரிநெடுந் திரையெறிந்து வெறியதென வதைதெடுத்து மிசையெறியு மிடனெங்கும். (ங)

பொருகைவரு புனன்முழுகிப் புறமதகுப் புனலொடும்போய்த் திருகவிய நெடுந்தூரஞ் சென்றெருதடத் தெழுபறவை யொருதடத்துப் புனன்முழுகி யொள்ளியநா வுக்காசர் விருதுமலி யையாற்றுத் தடத்தெழுந்த மேன்மைபொரூஉம். (ச)

போரகத்துஞ் சேரகத்தும் புணரியெனப் பொய்கைநிறை
நீரகத்தும் படிமேக நிறைபொழிலி னிடைப்புகுந்து
சீரகத்தப் பொழின்மேலாற் றெரியுமா துவக்குண்டல்
பாரகத்திற் றிரன்முகிலார் பரிசுதெரி தரக்காட்டும். (நு)

மடையெலாஞ் சங்கினங்கள் வரம்பெலா மவையுயிர்முத்
தடையெலாம் வெடியெழுமீ ஞெறலா மதகினெலி
புடையெலாஞ் செஞ்சாலி போரெலாம் பொலிமேகங்
கடையெலாம் பொலிமருதக் காமர்வளங் கணிப்பவரார். (கூ)

சாலியினுங் கந்தியினுந் தலிவிரிந்த வரம்பையினுங்
கோலியசெங் கரும்பினுமாய்க் குலவியெழு முத்தரித்து
வாலியதண் பொருநைகொடு கொற்கையக மருவுதலா
லாலியவத் துறைமுத்த மரிப்பதெனக் குலவியதால். (எ)

கொண்டறரு முதயத்துங் கோகடைதரு கொல்லியினும்
விண்டுயிரெ லாநடுங்க வாடைதரு மேருவினும்
வண்டுறுசந் தமுந்தமிழு முடன்வரத்தென் றலியவங்கு
மொண்டனிமா மலிகிறந்த துயர்ந்ததுமந் நாடொன்றே. (அ)

சேல்பாயும் புனற்குளத்துச் சென்றேறித் திரையெறிந்து
கால்பாயும் வயலகத்துக் கரும்புடைக்க வெழுந்தநறும்
பால்பாயுங் கனிச்சாறு பற்பலவு மப்படியே
நூல்பாயும் பொருநையொன்றே நுவலுந்காட் டிணியோப்பல். (கூ)

நலிபாண்டித் திறமுயர்வா நாமெனவு ழியுங்கருதா
தொலிபாண்டின் முதற்பலவா மூர்தியன்றித் தையியங்கார்
கலிபாண்டிப் பியமெனவே கையவரி முரலுமலர்
பொலிபாண்டிற் கமலவயற் புகழ்ப்பாண்டி வள்நாடர். (கo)

நீறுவிழி மணிபுனைவார் நீசரே யாயிடினும்
பேறுதமக் கருளவரும் பிரானென்றே யுபசரிப்பார்
கூறுமெழுத் தைந்தொடருட் குறிப்பூசை புரிகுவரேன்
மாறுதவி ரவராற்றும் வழுத்தினையார் வழுத்துவார். (கக)

இன்னவளம் பலதழுவி யேழுலகும் புகழவுள
பொன்னவிரு மணிகெழுமார் பப்பருடோத் தமனுமொவ்வாத்
தென்னவர்த நாட்டுளதால் விக்கிரம சிங்கையெனு
நன்னகரம் பாவநா சப்பதிநா மமும்புகல்வார். (கஉ)

விக்கிரமசிங்கபுரம்.

மறைஉவரே முதலொருநால் வகைக்குடியும் பிறவாக
வறைகுடியுந் தத்தமொழுக் ககலாது மிகைநெருங்கிக்
குறைகிறிது மில்லாது குலம்பொலிய நலம்பொலியும்
பறைபுகழான் மிக்கோங்கும் பாவநா சப்பதியே. (கஙு)

சீரா லும் விருந்தினர்க டிருந்தினரா வுபசரிக்கு
மேரா லு முழவுதொழி லோரா லும் போரா லுஞ்
சேரா லு மளப்பரிய சிறப்பா லும் பிறப்பா லும்
பாரா லும் பொலிவேளாண் குடிகள்பல பயில்வீ தி. (கச)

அணங்குவன மகளிரிடை யலறுவன நூபுரங்கள்
பிணங்குவன குழல்வண்டு பிரிகுவன விலம்பாடே
யுணங்குவன வஞ்சகமே யுருங்குவன கண்ணயிலே
யிணங்குவன வறமுழுது மிரிகுவன மறமுழுதும். (கரு)

பாடகமெல் லடிப்படல்செம் பஞ்சிகொல்கா னீயர்சிரமு
மாடமிசை யாடுதல்பொன் மாண்கொடியோ காண்கொடியு
நீடமீன தொறும்வளர்வ நெடுந்திருவோ நிரம்பன்புந்
தேடவரும் பொருளாதல் சிவார்ச்சணிகொ றெருளருளும். (கசு)

புதிதடைநர் பிரிவுநமைப் பொருந்துமென வருந்துவரான்
மதியினுப சரிப்பவர்மேல் வாமைக்கே வருந்துவரா
லதிநலமங் கையரூட லடாமைக்கே வருந்துவரால்
பொதியவளிப் போரிசப்போர் புகாமைக்கே வருந்துவரால். (கஎ)

தாழாது மேன்மையுறு மைந்தருடைத் தடங்கரமே
யாழாது மேன்மையுறு வம்மதில்சூழ் கிடங்குகளே
போழாது மேன்மையுறு பொருகரிவெண் கோடுகளே
வீழாது மேன்மையுறு சந்நிதிமெய் யன்பர்மெய்யே. (கஅ)

மாதருட னீர்த்துறையின் மற்றவர்க்குத் தூணியாயே
யோதவினி தாடுவன வொண்செங்கா லோதிமமே
போதமையக் குற்றமைக்கும் பொழிற்றுணைம கூடுவன
மேதகைய சாயல்வளங் கண்டவிரி சிறைமயிலே. (கக)

கந்தியிடைப் பொன்னூசல் கழுத்தழகு கவர்பிழைக்கா
முந்தியிறு குறப்பூட்டி மொய்குழலா ராடுதொறு
முந்தியுட னுடுவன வொண்குழைமுத் தாரங்கொல்
புந்திநனி தடுமாறப் புகுமைந்தர் தம்மனமும். (உ0)

கிள்ளையுறல் கைத்தலமோ கிளர்மகளிர் முலைத்தடமும்
வள்ளையுறல் பொய்கைகொலோ மடவியர்செங் கிடைவாயும்
வெள்ளையுறல் கலிஞர்தம்வா யோமதுமே வினர்வாயு
மெள்ளையுற ஞசிகொலோ வெழிலரம்பை மார்நலமும். (உக)

கயிலாய பரம்பரையிற் காமர்பெற வவதரித்த
சயிலாதி மரபுடையோன் சந்தானந் தழைப்பிக்க
வெயிலாரு மணிமாட மிளிர்துறைசை யகம்புகுந்தார்
பயில்வாய்மை யதுதெரிந்து பரவாதா ருளரேயோ. (உஉ)

சந்தமலி நாவலர்தந் தலைவணங்க வடகலைக்குஞ்
செந்தமிழ்க்கும் விக்கிரம சிங்கமென வொருவருறப்
பந்தமற வவனையுள்வார் பாவநர சம்படலால்
வந்தனவிப் பெயரந்த நகர்க்கெனவும் வழக்குண்டால். (உந)

பாண்டிவேளாளர்சிறப்பு.

அந்தநக ரத்துலகா ளாயபெருங் கருணையொடுஞ்
சந்தமுற வினிதமருந் தம்பிரா னடிக்கன்மேப
நந்தலுற வளர்பாண்டி வேளாளர் நற்குலமே
யெந்தவுல கமும்புகழ வினிதுநெருங் கியதம்மா. (உச)

முன்னோர்வரம்பெற்றமை.

அன்னகுலத் திடையொருவ ரருந்தவத்தா லகத்தியனார்
முன்னமைய வேழுதலை முறைப்புலமை தமக்களித்தோ
மென்னவுமற் றவற்றீமே யேற்றருளி யாமெனவும்
பன்னவொரு வரம்பெற்றார் பாரடங்காப் புகழ்பெற்றார். (உடு)

ஆனந்தக்கூத்தர்.

அவ்வாறு பெற்றவரு ளமையாரு தலைமுறையார்
செவ்வாய்மை யானந்தக் கூத்தரெனுந் திருநாம
மெவ்வாயுஞ் சொலப்பெற்ரு ரில்லொழுக்கின் றலைநின்ரார்
துவ்வாமை யுரூக்குணங்கள் சோராது திரண்டன்னார். (உசு)

மயிலம்மையார்.

அன்னவர்த மணைக்குரியா ரருந்ததியிற் சிறந்துள்ளா
ரென்னவரும் விருந்தோம்ப லின்னினோயான் குடிமாறர்
தன்னமிலாக் காதலியார் தமையெயாப்பா ரெனப்புகழ்வார்
பின்னமிலா மணைக்குரிமை பேணுதலிற் றமையெயாப்பார். (உஎ)

ஏயமயி லம்மையா ரெனுநாமம் பெற்றுள்ளா
ராயவரோ டெனளா யானந்தக் கூத்தரென
மேயவர்தா மகிழ்சிறந்து மேதகவின் வாழுநரட்
டேயமகப் பெறுவாஞ்சை மேன்மேலுஞ் சுரந்துளதால். (உஅ)

இவ்விருவரும் மகப்பேறுகருதிநோற்றல்.

திருத்தமுழு கியங்கருணைத் திருவுருவா முலகாளீ
யருத்தமறை முக்களா லிங்கையன் பொடுபணிந்தும்
வருத்தமுறு விரதமெலா மாண்புடனுற் றியுரீற்றுப
பொருத்தமுடை யடியாரைப் புகழ்ந்தும்டி யுபசரித்தும். (உகூ)

மற்றுளநற் கருமமெலா மறவாது நனிமுடித்து
மிற்றுளதீ விணையாள ரிவ்வாறே யொழுகுவார்
கற்றுளமற் றிவர்க்குமடங் கழியாமை யெவன்கொல்சிவப்
பற்றுளதங் குமுனிமுன் பகர்ந்தமொழி பழுதாமோ. (கo)

மயிலம்மையார்கருவுற்றமை.

இந்தவா றிவரொழுக வெம்பிரான் றிருவருளாற்
கந்தமார் குழன்மயிலார் கருக்கொண்டா ரன்றுமுதல்
வந்தமா றையோர்க்கு மற்றையடி யார்க்குமவாச்
கிந்தவா தரித்தளித்தார் சிவா னுபவ மகப்பெறுவார். (கூச)

பொங்குமுலை முகங்கறுப்பும் புளிம்பழத்தி னெழுவிருப்புந்
தங்குமொரு பொய்த்துயிலுஞ் சார்ந்துவயா நிரம்பியெழ
வெங்குகிகழ் மழமலவா யிடுமணைய ணுடாமே
யங்குதவிர்க் திடப்புகைமண் ணைதுகிறிது தூகர்ந்தமர்ந்தார். (கூஉ)

மகப்பேறு.

ஒருபதுதிங் களுநிரம்ப வொள்ளியநல் லோரையெழப்
பெருகுசம யத்துளுநற் பெருஞ்சைவங் குதுகலிப்பத்
திருகுதவி ரதனுள்ளுஞ் சித்தாந்த சைவமெழுஉப்
பொருவருநல் லின்படையப் போதகனு லுவப்பூற. (கூங)

செப்பரிய தமிழ்வழங்கு தேயமெலாங் களிசிறப்ப
வெப்பரிய மறையோரு மெல்லோருங் கொண்டாட
வெப்பரிய சோணாட்டு மெய்த்துறைசை நகருவப்ப
வொப்பரிய தவப்பெரியோ பொருவரவ தரித்தனரால். (கூச)

மகப்பேற்றுக்கொண்டாட்டம்.

சூதவிணச் சடங்கணைத்துக் தோற்றியகாண் முதற்றிருடங்கி
யாதரவை யளிப்புகைப்பார் நிம்பமலங் சுரித்திடுவார்
மேதகைய நெய்ளிழா வீதியெடுப் பவராகப்
போதமகப் பயந்தார்நன் புனன்முழுகி வித்தளித்தார். (கூரு)

பிள்ளைத்திருநாமம்.

மிக்களா வியசூத விணகழியப் பின்னளி
லக்களா வியவையா ருருள்கருது தந்தையார்
திக்களா வும்பெருமைச் சேயார்க்குத் திருநாம
முக்களா லிங்கமென மொழிந்தனர்பல் கிளையுவப்ப. (கூஅ)

காப்புப்பருவம்.

தண்ணியநீ றெடுத்தணிந்தி சானவர் முதலாக
வெண்ணியவான் பதினெருவ ரிணையடிகள் கைதொழுது
மண்ணியமா மணிபுனைய வருபகவை வழுவாது
கண்ணியமீப ருளிலெனுதி காப்பதுதுங் கடனென்றார். (கூவ)

சேங்கீரைப்பருவம்.

இருகையுமுன் பதித்திதாருதா லெடித்திதாருதா ளூறமடித்துத்
தருகைமலி சித்தாந்த சைவமலாம் பிறிதொன்றும்

வருகையுறல் சம்மதியோ மெனமறுக்கு மாட்சிமையிற்
றிருகையுறூர் தலையசைத்துச் செங்கீரை யாடினூர். (கூஅ)

தாலப்பருவம்.

அத்தமணித் தூணிறுவி யாய்துகிர்விட் டங்கிடத்தி
முத்தவட மதிற்பொருத்தி முழுமணித்தொட் டிலேயிணைத்துச்
சித்தமுற வதிற்கிடத்திச் செங்கைதொட்டுத் தாதியர்க
டத்தமனங் களிகிறப்பத் தாலோதா லெனவுவந்தார். (கூக)

சப்பாணிப்பருவம்.

ஆயபன்மூ லத்திதாடுமொவ் வாதமுர ணுரையெழுதித்
தீயசம வாதஞ்செய் சிவப்பிரகா சப்பெயரீர்
காயகமா யினிரென்று நகைத்திடக்கை தட்டுதல்போற்
ரூயணியார் கைகுளித்துச் சப்பாணி கொட்டினூர். (சO)

முத்தப்பருவம்.

சித்தநிலே திரியாது சித்தாந்த சைவமாரீ இ
நக்தமல வலியகல நல்வினேயுங் கீவினேயு
மொத்தநிலே யுடையோரா யுற்றவருக் காரியனுன்
முத்தமுவங் தளித்திடுவார் முத்தமுவங் தளித்திடுவார். (சக)

வாராணைப்பருவம்.

வருகசதிர் மணிவிளக்கே வருகுலதூ டணிமே
வருகவிரு ளறுசுடரே வருகவிளங் கருமருந்தே
வருகமுழு மலப்பகையே வருகசரு ணைக்கடலே
வருகவரு கெனவழைப்ப வந்துவப்புச் செய்குவரே. (சஉ)

அம்புலிப்பருவம்.

மதியவனு தவினுஞ்சா யல்லோனு தலின்மானுய்
வியமையுங் கலைக்குறைவு மேவாது பொலிதருவாய்
துதிபெறுவா ராரையினுற் சுடுகனற்சா பமும்பெறுவா
யதிவினைவி னப்புலியே யாடவா வெனவுவப்பார். (சஎ)

சிற்றிற்பருவம்.

பொருவினுதற் சுட்டியொடு பெலிமார்பம் படையங்கத்
திருவிலிடி சகங்கையும்பொற் சிலம்புஞ்சீ றடியிரட்ட
வருதருமு புரத்தர் முனி மாயனேத்துஞ் சிதைப்புதேபோற்
றெருவின்மட வியரியற்று சிற்றிற்சிதைத்த தருளினூர். (சச)

சிறுபறைப்பருவம்.

எடுத்தெதுஞ்சொற் கிடுவயிரக் குப்பாய மெண்டிசையு
மடுத்துதிறை வதுபொருவ மண்முழுதுங் போய்நிறைய
வடுத்தகுணில் கரப்பற்றி யழகியவெண் ணீறிலங்கத்
தொடுத்தகிறு பறைமுழக்கி யருளினர்சொற் கலைமுழக்கார். (சஞ)

சிறுதேர்ப்பருவம்.

இந்திரிய மெனும்பெருந்தே ரெண்ணிய வாறுருட்டுவதற்
கந்திமதி சடைக்கணிந்த வண்ணலார் சீறடியார்
முந்தியுறப் பழகுதல்போன் மொய்யழகு நலம்படைப்பப்
புந்திமகிழ்ந் தினிதிவர்ந்து பொற்சிறுதே ருருட்டினார். (சசு)

வித்தியாரம்பம்.

இந்தவித முறுபருவ மெலாநிரம்பத் தாய்தந்தை
சந்தமிகு மனங்களிப்பத் தண்டுறைசைப் பதிவாழு
மந்தமிலாக் குருநமச்சி வாயனரும் பொருள்வளரு
மைந்தமையு மையாண்டின் மேலாய பருவம்வர. (சள)

காவணமெங் கணுமிட்டுக் கழைகதலி கமுகியாத்துப்
பூவணமா லியுஞ்சிறந்த பொன்னரிமா லியுந்தூக்கி
மாவணவே தியர்முழங்க மங்கலவாழ்த் தினிதியம்ப
நாவணநல் லவரோதும் பள்ளிநயந் தமர்வித்தார். (சஅ)

கல்விவளர்ச்சி.

பள்ளியிடை நயந்தமர்ந்த பாலனு ரன்றுமுதல்
வெள்ளியநூ றெரிவிப்பா ரொருமுறைவிண் டிடுவதன்மு
னெள்ளியநூன் முழுதுணரு முணர்வுடைய ராய்த்திகழ்வா
ரெள்ளியமும் மலத்துயரு மிரித்துயரு மேற்றத்தார். (சசு)

இருமுதுகுரவர்மகிழ்ச்சி.

சந்தமலி பாவகா சப்பதிசெய் பெருந்தவத்தா
லந்தமில்சீர் மயிலம்மை யானந்தக் கூத்தர்மண
நந்தமகிழ் தலைசிறப்ப நாளெலாங் கொண்டாட
வந்தவரோர் பாணுண்டு மருவவளர்ந் தினிதமர்ந்தார். (ரு0)

கலையமைதிங் களின்வளர்ச்சி காட்டியே நாட்டுநா
டொலைவில்குண மறிவினெடு தொக்கமையுங் தோன்றலா
ரலைபுனற்கா விரிகாட்டி னுவடுதண் டுறையடைந்து
தலையமைபா டியஞ்செய்த தன்மையினிச் சாற்றுவாம். (ருக)

முன்னுரை

திருக்கைலாயச்சிறப்பு.

வளங்கள் வேண்டுவ வந்திரந் தவர்க்கெலாம் வழங்கி
விளங்க மாயவ ரிந்திரர் முதலியர் மிடைந்து
துளங்க மேவிய கறுப்பலாற் றோற்றிடும் வேறு
களங்க மொன்றிலா துயர்ந்தது வெள்ளிவெண் கயிலை. (க)

மேய வாதனைக் கயிலையின் வெளுப்புமேன் மேய
நாய னுயதன் படிகமெய் வெளுப்புமோர் நம்மான்
மாய மாஞ்சிறு கறுப்பொரு களத்துறன் மாயத்
தூய நீறுமூ விரேலா வங்குலக் தொகுப்பான். (உ)

சடைநி றஞ்சிவப் பெனல்விளர்ப் புறத்தலை மாலை
யடைநி லாமதி கொக்கிற கவிர்தரு துரோண
மிடைதி ரைப்புனல் வெள்ளெலும் பருக்கமேல் விளங்க
வுடைய தோணணிர் தனன்கயி லையின்வள முவக்தே. (ஊ)

கரிய மாயவன் வெள்விடை யுருக்கொண்ட கருத்துக்
தெரிய வான்றுதி செயல்கொளு நான்முகன் செங்கா
வரிய வெண்கலை மகளுற வைத்தது மாயிற்
பிரிய மார்கயி லக்கிரி பேபணுதற் கன்றே. (எ)

சைவ ராயவர்க் கஞாதி தீய யெம்பிரான் றகைசா
றெய்வ வெள்ளிய நீறுகொண் டணிவது செய்தான்
பொய்வ குத்தவே றிலாஞ்சனம் புணைபவர் மாட்டு
மெய்வ கைப்பிரி யஞ்செயா தென்பது விழைந்தே. (ஙி)

நிறங்கு லாஞ்சடை யெம்பிரார் நெழுதுமே னின்றே
யிறங்கு வெள்ளராக் குலங்களே முடியினின் றிறங்கும்
பிறங்கு வெள்ளரு வித்திரள் கணைப்பகல் பெட்டே
யறங்கு லாவுவா னவரினு முயலவு மாகா. (ஙு)

தருகை நீண்டகந் தம்பிரான் சரண்டரி சிப்பா
ஹருகை மேம்கொடி படரும்வா ளராக்குல மொருங்கு
திருகை மேவுறு வருவிதங் குலமெனத் தெரியா
வருகை தேர்ந்தந்தே சேவையா யிற்றென மருளும். (எ)

செங்கை வச்சிரப் படையினுன் பதமிசைத் திகழு
மங்கை யெட்டுடை நான்முகன் பதமா விந்த
மங்கை மார்பினன் பதமிவை நவநவ மருவும்
வெங்கை யரணியார் கயிலைமே வியபடி மேவும். (அ)

அருவி பல்லிடம் பாய்தரு முழக்கரு மமர்
மருவி யார்ப்புறு துந்துபி முழக்கமும் வளையுங்
கருவி மாமுகின் முழக்கமு மலர்ப்பதங் கருத்தி
லிருவி யண்பரெய் யாமுழக் கத்தின் மிமிலைழாவால். (ஙூ)

அடியிற் றங்கிய சுணைதலத் தொடும்பகுத் தறியார்
தொடியிற் றங்குகை வானகா டியநுளைத் தூணியக்
கடியிற் றங்கிய குவளைகள் செறிவன கண்ணிற்
கொடியிற் றங்கிய பகைதபுத் தறவுகொண் டாடும். (க0)

அணங்க ளுர்பலர் குடைதொறுஞ் சுனையகத் தமைந்த
மணங்கொள் கொங்கையிற் குங்கும மண்ணிய நீத்த
மிணங்கு மீதென ரிராவணற் கடிந்தபோ தெழுந்த
குணங்கொள் செய்யதீர் வறந்தில தினுமெனக் குறிப்பார். (கக)

கந்த ரந்தொறு முனிவரர் பற்பலர் கற்பச்
சந்த வெள்ளிய நீற்றினு லுடலெலாந் தயக்கி
வந்த வாதனத் துறைகுவர் கண்டவா னுடர்
நந்த வெள்ளிய முடங்குளே மடங்கலா நயப்பார். (கஉ)

நிலவு பாற்கான் சேவைக்கு வருந்தொறு நீண்டு
குலவு வெள்ளிவெண் கற்றைபோ யவருடல் கூட
வுலவு பாற்கர னந்நிறம் போயதென் றுணுகுவான்
வலவு வாமதி களங்கநீங் கியதென மகிழ்வான். (கங)

மேக வண்ணனுங் கணைதொறும் வெள்ளிவெண் கயிலை
நாக நின்றெழு சுடர்ப்பிழம் பெனுங்குணு ணுதலாற்
போக மாமக ளுவப்புறக் கருதிநம் போக்கி
யாக முற்றுமுன் னிறஞ்செய்த வெனினதென வவாவும். (கச)

அயனி ராசதன் மாயனூர் மதனவ ரளவி
னுயருஞ் சத்துவ வுரூத்திர னெனுவனே வலியன்
மயருஞ் செய்யதர் மைவடுக் தொல்லிலை மட்டே
பெயர்வில் வெண்ணிவெண் கயிலையோ தாங்கிடப் பெறுவ. (கரு)

ஆயிரக்கால்மண்டபம்.

இன்ன மேலவரைக் கயிலையி லெற்றைக்கு முளது
சொன்ன மற்றைநான் கினுமிது சுணுகுவ தரிது
பன்ன கேசனும் பகருவ லெனுப்பெரும் பண்ப
தன்ன மண்டப மொன்றதன் காலளா யிரமே. (கசு)

ஆய்ந்த காலெலாஞ் செம்பொனுற் பன்மணி யவையால்
வாய்ந்த மேற்பரப் பொண்மையை வகுக்கநாம் வலமோ
வேய்ந்த தோற்றந்தா னிளங்கதிர்க் கோடிக ளிராறும்
பாய்ந்த வவ்வரை மிசையுதித் தனவெனும் படிய. (கஎ)

திருவோலக்கமண்டபம்.

அன்ன மண்டப நாப்பணர் மண்டப மதனீ
யென்ன ருஞ்சொல்வார் வித்திஞட் படுமீ யென்னச்
சொன்ன தூலத்துட் சூக்குமஞ் சொலத்துணி வாரு
மன்ன மற்றத னுண்டொழில் வகுத்திட மாட்டார். (கஅ)

சிங்காதனம்.

யாம்பஞ் சானனப் பெயருறும் பரத்தலீ தன்றி
யாம்ப லாகம மறைமுதற் மேற்றிடா வதனு

லேம்ப லோடணை சுமப்பமென் றரியியைக் தென்னப்
பூம்பன் மாமணி யணையொன்றம் மண்டபம் பொலிய. (ககூ)

சிவபெருமான்வீற்றிருத்தற்சிறப்பு.

அணைய திப்பிய முடங்குலா மடங்கலா தனத்து
வணையு மெம்பெரு மான்சிவ ஞானமா முனிவ
னணையு மெய்யரு ளிதயத்தி லிருப்பென நெருங்க
ணிணையு மாதித்த மண்டல நடுவிருப் பென்ன. (உ 0)

குடை, சாமரைகள்.

குறைந்த மாமதி யன்றிவே றிலையெனல் கொளாது
நிறைந்த மாமதி முடிமிசை வெண்குடை நிமுற்ற
வுறைந்த வான்புன லிரண்டுந்தம் மினத்தொடு கலத்தற்
கறைந்த மேற்செல வெனக்கவ ரிகள்புடை யசைய. (உக)

விடைக்கோடிகள்முதலியன.

விடையி ரண்டுள வெனலெதிர் கொடிகளான் விளங்க
வடைவ ளிக்கிடை யூறிலா மையினணிக் கவவாய்
மிடைந யங்கொள்சாக் காற்றிகள் விளங்கமேன் மேலும்
புடைய நேகமா கியவிரு தாவளி பொலிய. (உஉ)

குடமுழா, சங்கம் முதலியன.

ஆய வாணனும் பானுகம் பப்பெய ரவனும்
பாய வண்குட முழவமும் பணிலமும் பற்றி
மேய வார்ப்பொடு மற்றைய வார்ப்பெலாம் விரவி
யேய மாகட லொலிமுகி லொலிதப ளிரிப்ப. (உங)

அரமுழக்கம்.

வான வாழ்வின ரிந்திரர் மலரணை வதிவா
ரூன நேமியார் வித்தியா தரர்சித்த ருரகர்
மான வாசைகா வலர்முனி வரர்முதல் வளைக்கத
யான மாதரோ டெழுப்பர வொலிதிசை யளாவ. (உச)

நந்தி நாயகன் வேத்திரத் தொடுமெதிர் நடந்து
முந்தி யாருந்தன் பணிதலை நிறபமு வலருஞ்
சிந்தி யாதுயிர்த் தவளிடப் பாகத்துச் சிவணை
வந்தி வான்மதி சூடிய வழகன்வீற் றிருந்தான். (உடு)

தரிசிக்கவந்தவர்கள் தரிசித்துச்செல்லல்.

கண்கொ ளாத்திரு வோலக்கப் பெருப்பயன் கண்ணுற்
றெண்கொ ளாக்களி மகிழ்ச்சியிற் நிளைத்தன நிறைஞ்சி
விண்கொ ளாக்கதிர் மேலிவிண் ணவர்முத லியாரும்
பண்கொ ளாச்சொன்மா தர்களொடுந் தம்மிடம் படர்ந்தார். (உசு)

திருநந்திதேவருடையவேண்டுகோள்.

கூடி நின்றவர் குழாத்தெதி மகன்றது மன்றத்
தாடி யாவயிற் றனித்தினி தமர்வது முளத்து
நாடி நல்லம யம்மிது வேயென நயந்து
பாடி யன்பொடு பணிந்தன னந்தியெம் பகவன். (உஎ)

இடைய ருமலே பணிந்தெழு நந்தியெம் பிராணே
யுடைய நாயக னுண்ணெகிழ் கருணையா னெனக்கி
யடைய நீயுளங் குறித்ததெ னறைகுதி யென்னக்
கடைய னேன்செயும் விண்ணப்ப மிதுவெனக் கனைவான். (உஅ)

ஐய நின்னருள் வலியினுற் கைலைகாப் பமைந்த
செய்ய பேரதி காரத்திற பிறவற்றிற் சிறந்தே
னுய்ய வேண்டிநின் னுகமப் பொருண்முழு துணர்வான்
வெய்ய னேன்விழைந் தேனெனப் பணிந்தனன் மீட்டும். (உசு)

ஆகமங்களை உபதேசித்தல்.

பணிந்த நந்தியெம் பகவனீ யெழுகெனப் பணித்தே
துணிந்த நான்மறைப் பொருளெனுந் தோன்றலெம் பெருமா
னணிந்த தன்புடை யிருத்தியங் கையின்வெரிந் தடவித்
தணிந்த சிந்தையி னுகமந் தெருட்டுதல் சமைந்தான். (உ0)

வேறு.

காமிகமே யோகசமே சிந்தியமே காரணமே யகிதந் தித்தம்
பூமிபுகழ் சகச்சிரஞ்சுக் குமமஞ்சு மான்சுப்பிர பேதம் பொற்பி
ஞமினிய விசயநிச்சு வாசஞ்சுவா யப்புவமே யனலம் வீர
நாமவிர வுரவமகு டம்விமலஞ் சந்திரஞ நம்விம் பம்மே. (உக)

மேயபுரோக் கிதஞ்சருவோத் தம்பார மேசுரமே மிளிர்சந் தானந்
தூயவில ளிதங்கிரணஞ் சித்தமே யுபர்வுறுவா துளமே யென்ன [ம்
வாயவிரு பத்தெட்டா மாகமத்தின் றொகையிவைக ளடைவே தோற்ற
பாயதிறங் களுமுறையே பகருவா மதுகுறிக்கொள் பண்பிற் கேணீ.

மறையணீத்து நம்முடைய நான்முகத்து நின்றும்வெளி வருமா
செய்து, பொறையமைக்கும் பொதுவாக்கிச் சிறப்பாக வாகமத்தைப்
புகல னுற்றூரு, குறையறுக்கு மவைமூலங் கோணறுக்கு மிவையுரை
யாக் கோடி யின்னு, மிறைதபுக்கு மவைபசுவா மாகமந்தீம் பாலாகு
மெய்ம்மை யோரின். (உங)

தேடுகா மிகமுதல சிதப்வரையோ னைந்துஞ்சத் திரோசா தத்தே
மாடுபொலி தித்தமுற்சுப் பிரபேதப் வரையைந்தும் வாம தேவங்
கூடுப்விச யமமுதலா வீரப்வரை யைந்துமகோ ரத்துண் டாய
நீடுமிர வுரவமுதல் விப்பம்வரை தற்புருட நேர்ந்த தைந்தும். (உச)

அறையுமிரு பதுங்கப் புரோக்கித முன் வாதுளமீ ரூய வெட்டு, நிறையுமொளி வளரீசா னத்துநின்று தோன்றினவா னிலவ காளுங், குறையிலொவ்வோ ராகமமுஞ் சரியையுமுத வொருநான்குங் கூரு நிற்கு, மிறையியினி துணர்திமென வொவ்வொன்ரு வாய்மலர்ந்தான் மேதக் கோனே. (கரு)

முந்துகா மிகமுதலா வோரிருபத் தெட்டனுளு மொழிமு ணுக்க, நந்துமிர வுரவத்திற் சிவஞான போதநிற்க நயந்தவெல்லாஞ், சந்துமுலி யொருபாக னுபாகமத்தோதா துணர்த்துதனுந் தவாது கேட்டவ், விந்துமுடி யவன்பாத மெழுந்துபணிந் தொருவினு வியப்ப னும்ரூன். (கூசு)

திருநந்திதேவர் ஐயுற்றவினுவல்.

ஆயசுவா யம்புமுத லியவேழ்ப தார்த்தமெனு மமைதி பூண்ட தூயபவுட் கரமதங்க முதலியவா றெனுமைம்தே சொலுமப ராக்கியை யேயபமுதற் சருவஞா னேந்தரமுன் ஞன்கென்றே யியம்பா நிற்கு மேயவிர வுரவமிரு கேந்திரமுன் மூன்மென்றே விளம்பா நிற்கும். ()

ஆதலினு லடிபேற்கு மலிவுபடி மிதுதெளிய வறைவா யென்று காதலொடு கைகூப்ப முகமலர்ந்து நகைமுகிழ்த்துக் கருணை மூர்த்தி மேதகைய மூவகைப்பா தங்களிற்பல் பேதத்தால் வேரு மேனுங்[றே. கோதமைய ஞானபா தத்தியல்பெவ் வாகமத்துங் குறிக்கொ ளொன்

மன்னியப தார்த்தமேழ் முதலாக மூன்றளவும் வகுக்கு மேனு மின்னியமற் றவைமலிவு படாவெனினு மிரவுரவம் விளம்பா நின்ற துன்னியவான் சிவஞான போதமுணர்த் துதுமலிவு துன்னு தாகும் பன்னியவ பரம்பரமாஞ் சிவஞான மென்றதனைப் பகர்த னுற்ரூன். ()

அவரூக்குச் சிவஞானபோதத்தை உபதேசித்தல்.

அருமையினு மருமையென நாமும்பா ராட்டிடுவ தளவி லாத, பெருமையுடை நூற்கெல்லா முடியாவ தெத்துணைத்தாய்ப் பிறங்கு மென்னி, னிருமைதரு பன்னிரண்டு சூத்திரமா முடிவுபெற்ற திதுகே ளென்றே, யொருமைமன நடிப்பதியப் பெருங்கருணை தழைத்தோங்க வுரைப்ப தானுன். (சo)

எழுவாய்ச்சூத் திரப்பதிக்குப் பிரமாணம் பாசத்திற் கிரண்டு மூன்று, பழுதாகாப் பசுவிற்கா நான்கைந்தா றியல்பசுபா சம்ப திக் காம், வழுவாத விலக்கணமே ழெட்டொன்பான் சாதனமே மற்றை மூன்று, மெழுதாத சாத்தியங்கூ றுதலாகு மின்னுமொன்றுண் டியம் பங் கேளாய். (சக)

முந்தியதாஞ் சூத்திரத்திற் சகந்தோற்ற நிலையிலுதி மூன்ற தென்று, நந்தியமற் றம்தரனு லேயுடைய தென்றுமே னுடி மாறு, வந்தி

யஹ மிருவருமுத் தொழிற்படுவ ரென்றும்வரை யறுக்கப் பட்ட, வுக் தியமூன் றதிகரண மூள்ளதுகா ணிந்தியங்க ளொருங்கு மாய்த் தோய். (சஉ)

நேயவிரண் டாவதர ணுயிர்களிலே யிரண்டறுமா நிற்ப னென்றும் பாயகன்ம பலணியுயிர் களுக்கரனே கொடுத்தூட்டும் பண்ப னென்று மேயவுயி ரணுத்துமச்சு மாறிலே பிறக்குரென்று மேமலோ ணுய தூயவரன் சருவவியா பகனென்று நான்காகித் தோன்று நிற்கும். ()

மூன்றிலியென் னறிவுடனே சொல்லுகையா னறிவுயிர்தான் முழங்க வுண்டி, மான்றவென துடலிலன்ற பொருட்பிறிதின் கிழ மையா வழங்க லாலே, யான்றவுட லினுக்குவே ருயுயிருண் டொரு வனே யைந்து மோர்வி, னேன்றவிவ்வொன் றறிகின்ற வைந்தனுக் கும் வேருயோ ருயிருண் டென்ப. (சச)

கனவுடலே விட்டுநன வுடலிலே வருகையினும் கனவு டற்கு மனநிகலே வ ருயுயிருண் டொருவாகித் தினையினும்பி ராண வாயு கனமருவு தொழில்செயவுஞ் சரீரத்திற் குப்புசிப்புந் தொழிலுங் காண வுனவின்மை யாற்பிராண னுக்குவே ருயுயிரொன் றுண்டு மாதோ. ()

மறவியுற்று மறவியுற்று நிணைக்கின்ற படியாலே மறவி தீர்ந்த வுறவியா னுக்குவே ருயுயிருண் டெல்லாத்தத் துவங்க ளுக்குஞ் சிறவுபெற வெவ்வேறு பெயரிருக்கும் விதத்தாலே தெரிய வந்த வுறவருதத் துவங்களுக்கு வேருக வுயிருண்டா லாக வேமேழ. (சசு)

காலிலந்தக் காணங்கட் குயிருடனே கூட்டுறவு ணண்ணி னன்றிச் சாலவொரு தொழிலிலா மையினந்தக் காணங்க டமக்கு வேரு யேலவுயி ருண்டுமல மறைப்பினு லுயிர்க்குறிவொன் றிலதே நாளுங் கோலவுயிர் மூன்றவத்தைப் படிமாக மூன்றென்றே கூற லாமே. ()

ஐந்தினுயி ராலேதத் துவங்களெலாந் தொழில்செய்யு மான்ற ஞலே மைந்துயிரெ லாமறியு மிரண்டேயா ணினுயிர்கண் மதியி ஞலே முந்தியறி வனவஃதுந் மழியுமொழி தருமப்பிர மேய மாக நந்தியறி யப்படுவா னரனிதற்கு மிரண்டாக நவில லாமே. (சஅ)

ஏழிலரன் பாசத்தை யனுபவியா னனுபவியா தியையப் பாசம் வாழரணே யவ்விரண்டு மனுபவிக்கு முயிர்மூன்றே மருவு மெட்டி னுழுயிர்க்கு நல்லறிவு தவத்தடையு மான்குருவா யுறுவ னேந்து மாழுமுயிர் பற்றுதலிற் றணையறியாத் தன்யறியு மவையற் றுலே. ()

ஒன்பானி லான்ஞானத் தாலரக்கை காணுமுயி ருயிர்பா சத்தில், வன்பாய்பற் றறினான்றே ருறும் முவன்வாத ஞமலம்பீ பாதித்தைத் தெண்ணி, லின்பார்மூன் ருருபதினீ யாணுடனென் ருகிற்றி

யியையா மாறு, நின்பாலாந் தொழிலீனத்து மரன்பணியென் றேற
கோடி நிகழ்த்தி ரண்டே. (நுo)

பதினென்றின் ஞாணியுறும் விடையமர னனுபவிப்ப னரணைப் பற்றி
முதிரன்பி னிருந்தாலவ் வரனிடத்தே கலப்பனிறு மொழியி ரண்டே
யெதிரில்கடை மும்மலமுங் கனகசிவ ஞானியொடு மியைக ஞானி[கே.
கதிரிலிங்கஞ் சிவனென்றே வழிபடுக படாமையைபுட் கழிக்க ரான்

பன்னிரண்டு சூத்திரத்தின் றனிச்சிறப்பு மோசோ வொன்றின்
பாகு பாடு, மின்னியகா மெடுத்துரைத்தா மின்னுங்கேள் கிலாதமுனி
வேண்ட வந்தோதாய், மன்னியசை வத்தமனு திகளினறி வரியனவா
னிறைவான் மாண்ட, துன்னியவ லியவரா திசத்திதித்தி யத்தவைந்
தாச் சொல்வர் மெய்யே. (நுஉ)

பதியுமதற் கடிமையாம் பசுவுமத னுணவமும் பாற்ற வத்தைக் [தாம்
கதியவன்மா யையுங்கருமை மும்மெனலா மவையிரண்டுங் கடைம லத்
பொதியவறி வித்தல்பதி யறிந்துநிற்றல் பசுசிவத்தைப் புணரா தஃது
விதியின்மண் ணுப்த் திடுவதா னவங்கருவி மாயைபுணு மேயகன்மம்.

உணர்வுரச்செயிர்வலியா லுறவிழந்திட் டானவத்தை யுறுப சுக்கட்
கணவுதாயெனவருளாற் பருவமுணர்ந் துடல்காணம் புவனமாக்கிப்
புணர்மாயை யாணவந்தீர்ந் தொளிறிவே யுருவாய புனிதன் மாயை
தணவில்வினைப் பாலுயிர்கட் கிருவுடலு மிறுமுட லுந்தகமுற் செய்து.

அருவுருவத் திறத்துடலா யுயிராப்பமற் றுலகமா யமையும் வே
ருய், மருவுகொள மற்றவற்றி னுடனுமாய் வல்வினைகட் கேற்கு மாறு,
கருவியெலாந் தொழிற்படுத்தித் தகுதிபெற வுணவனைத்துக் காட்டா
னின்று, வெருவறநற் பதம்புகுத்து வான்புகர்மா மலங்கழிக்கும் விடலி
லாதே. (நுடு)

இரும்புகலந் தெரியமுற்று மெரித்தொழிலே யழற்றிடுவ திரும்
புக் கில்லை, யருமப்படைப்பா திபவிதிபா தியரிடைச்செய் யினு
மொடுக்க னான தேதகா, ணெருங்குவலி யாதிபந்த மனுபந்த மல
மிரண்டு முயிரே மேவு, நெருங்கியமற் றவையடையா னரதிமுத்தன்
கலந்தருணின் மலப்பி ராதீன. (நுசு)

மேயயா வையும்புரிந் தும் விகாரமொன்று மின்மையினுல் விடுப
டாத, தூயசுதந் தரத்தினு லொருவழியாங் குணங்கலக்குந் தூய்மை
தன்னுற், பாயவிந மாருயிர்க்கேற் றுங்திறத்தா விவைமூதலாம் பண்
பான் மிக்காங், கேயவொளி முதல்வனெனப்ப தினியிதுவ லாற்பதியு
மில்லை மாதோ. (நுஎ)

மருவுமுயிர் சிற்றறிவிற் பலவித்தத்த விருண்மலத்த மலியீண்
டுற்ற, வொருவில்சக லத்த வசிப்பன வருப்வி யாபகத்த வொருங்கு

சூழு, மிருண்மலங்தீர் தாமுத்தி யடைவவெண்ணில் லனவெனினு மிருண்ம லத்த, பொருததமேனு மிங்க நுமத் தனவவற்றே மும்மாயைப புணர்ப்ப மூன்றே. (நிஅ)

சத்துநிகர் தமக்கறிவில் லாதனவ சத்தெனச்சா ராத வல்ல, வொத்தறிந்துங் கனவின்மயங் குவசத்த சத்துணர்விற் சதசத் தோமே, பொத்தியவா ணவமயக்க முதலேமுதல் செயாதுவிண்ணம் புவிகீ ழின்ப, மெத்தியதுன் பருந்தீநாய் முதலிப்பின் வருந்துமற் றை மேவின் மேவும். (நிசூ)

தீணியொவ்வாச் சத்தசத்து நுதசத்தோ ராதொன்றுந் தான் வேண்டாது, வீணபலவாங் கரணம்வெவ்வே றுடல்புவன மியாவு மூயிர் மேலற் கேகா, ணீணயபெருங் கலாதியிச்சை யாதிகள்வர் தடையுமா றன்றே நெல்லின், வீணயமுமீ யென்னவா ணவமுயிரிற் கலக்கு மிச்சை யாதி மாற்றி. (சூ0)

பதியகத்தி னிச்சையா திகளையுந்தோற் றுதணவும் பார்வை சாரு, மதியிருளின் விரவுதன்னி யழிப்பமுற்று சத்தியுந்தன் வழி யே யாக்கி, விதியமையு மூன்றிடத்து மிருதிறமா மவத்தையென விளம்பீபா சைந்துந், திதியமையத் தள்ளாம லுயிருறப்பல் சத்தியாச் சென்று பற்றும். (சூக)

மேயவுறு திக்கருமஞ் செயவொட்டா திறுதியதே மிகவு மாக்கு, மாயவுயிர் நல்லறிவைச நிதைப்பிக்கும் வளர்ப்பிக்கு மடவு னர்ச்சி, தூபமெண்சொற் றெழிலணுவுந் தோற்றுது மறுதலையே தோன்றத் தோற்று, மாயவல்லா ணவந்தணிக்க வுயிரடிக்கு மாயைசுத்த மசுத்த மாதோ. (சூஉ)

சுத்தமலி தத்துவமைந் தீரிருவாக் கைம்பத்தோ ரெழுத்துத் தோற்று, வித்தவெண்பத் தொருபதமேழ் கோடிமனு வாகமங்கள் விளங்கு நாலே, மொத்தவிரு நூற்றெழுபா கமமறைநால் புராணங்க ளொருமூ வாறு, தத்தமனக் கினிமைசெய்சாத் திரமாறு கலீத்தொ கையுந் தகவிவட் டெட்டே. (சூசு)

ஆயசிவஞ் சத்திநா தவிந்துசதா சிவமீச மரனி வர்க்கு மேயகலிவிஞ் ஞானகலர் பிரளயா கலர்தீது விடுத்தா ராய தூயசரி பைகிரியை யோகத்திற் செறிந்தவர்க்குந் தொகுத னுக்கள் பாயகர ணம்புவன போகமைந்து கலியுயிர்த்தல் பண்ணுஞ் சுத்தம்.()

காலமொடு நியதிகலீ வித்தையரா கம்புருடங் காநா லாறு சாலமைதத் துவந்தன்பாற் றரும்பகுதி யோரேழுஞ் சாற்று நின்ற மாலயன்வ லரிமுனுஞ் சகலருக்குத் தணுமுதலா வகுக்கு நான்கு மேலவினி யுதவிடுவ தசுத்தமா மாயைமற்று மிசைத்தல் கேட்டி. ()

மாயாகா ரியமயக்க லில்லீயேல் வினை நுகர்ச்சி வரவு மில்லை
யேயாவவ் வினைக்கழிவு மாங்கெய்தா முனஞ்சூழ்ந்த விருண்மலத்தின்
சாயாத முயக்கறலி னுயிர்மாயா காரியத்திற் சரித்த லின்றிக் [வால்.
கூயாத விருவினையீட் டாதிவையின் றவையுமெய்தல் குறிக்கொ ளா

இருவினையென் பனமனமுன் மூன்றுலு மிக மகித மியற்ற
லாமப், பெருவினையின் பயனறமே மறனேயிக் கருமத்தின் பயனுப்
பேணி, மருவியிடு மின்பதுன்ப மவைமாய்வி னவ்வினைகள் வந்து
தோற்று, மொருதனுவுண் டாக்கமற்று மொருதனுவி னுணப்படுங்
கெட் டுங்கே டின்றுய். (சுஎ)

மனமுதலா மூன்றுமசை வறநிற்ப நல்வினையின் வரவும் பல்ல
மனமுதலா மூன்றுமசை வறநிற்பத் தீவினையின் வரவும் பல்ல
மனமுதலா மொருமூன்றும் புடைபெயர நல்வினையின் வரவும் பல்ல
மனமுதலா மொருமூன்றும் புடைபெயரத் தீவினையின் வரவும் பல்ல.

தூயவா யமைந்தவினை யாவருக்குந் தூயவா யமைந்த பல்ல
தீயவா யமைந்தவினை யாவருக்குந் தீயவா யமைந்த பல்ல
தூயவா யொருவர்தமக் கொருவருக்குத் தீயவாய்த் தொலைவ பல்ல
தீயவா யொருவர்தமக் கொருவருக்குத் தூயவாய்ச் செறிவ பல்ல. ()

நல்வினைமா றுபுதீய வாய்த்தீய நல்லனவாய் ணனு முண்டு,
வல்வினைமெல் லியவினையாய் மெல்வினைவல் லியவினையாய் வரவு
முண்டு, நல்வினையாற் றும்பொழுதே யதன்பயன்போற் றீயவினை
நணுக லுண்டு, புல்வினையாற் றும்பொழுதே யதன்பயன்போ னல்
வினையின் புணர்வு முண்டு. (எ0)

புரிமுறையிற் பிறழ்ந்தாயிற்றெய் வம்பூத மென்றிவற்றிற் புகலு
மொன்றுன், மருவுமுழி விழைந்தவிழைந் திலவிழைந்த வன்றிமற்று
வருவ வென்னத், திரிவிதமாம் பயனிழிந்த வினைதீர்வு செயினுநுகர்ச்
தன்றித் தீரா, வரியமுழு வதுமினி லேயானுமிபை யும்பண்ணு
மையும்ப லிக்கும். (எக)

இன்பமே பயந்துவரும் புண்ணியமெல் லாமிழிந்த பாவ மெல்
லாந், துன்பமே பயந்துவரு மில்லிரண்டுந் தொகிற்பயனே நுய்த்
தாற் றீருங், கொன்செய்வினை யொழிந்தவிரு வினையறமே மறமே
கொள் பயனே ரகரும், வன்செயற்கப் பயன்போல வழங்குறு மிதழிந்
தொதுங்கும் வகையு முண்டோ. (எஉ)

இயம்புநரற் கதியினெழு வகைக்கீதாற்றத் தெண்பத்து நான்கி
லக்கப், பயம்புபடு பலபவத்தில் வினையினுற் பலமுறைவீழ் பசுவை
வாங்க, நயம்படுதின் மலனன்மீற யுலகுவிதிப் புழித்தலரீர் நல்ல மூர்
த்தி, வியம்படுமூன் றுருவாகி விரிபுவன மெலாங்கதித்தான் விளங்கு
மாறே. (எக)

அறிவுரு வகையறங்கண் முழுக்கவடித் தறிதரச்செய் ததன்பின்
னுகச், செறியுமகச் சரியைமுத னுன்கும்விளங் கிடுமாமென் மெல
ச்செ லுத்தி, நெறிகொளுண்மைச் சரியைமுதன் மூன்றுநிரப் புபு
தனது வலிகோர் தேய்த்து, பரிமலபா கப்பயிற்றிச் சத்திபதித் திரு
விணையின் சமமும் பண்ணி. (எச)

பாசமொடு பசுவுங்கீழ்ப் படமேலாம் பசுபதிதீர் பயிலுங் கூர்ப்
புத், தேசுபெறத் திரண்டென்ன வருட்குருவாத் திருவுருவொன்
றெடுத்து வந்து, காசின்மனுப் பதமெழுத்துப் புவனங்க டத்துவங்
கள் கலைக ளின்னு, மேசிலிவை யோராறு மிறபுமா தூய்மையினி
தியற்றிப் பின்னர். (எடு)

கூட்டமே பொதுவேதகன் னியல்பேபயென் றுமையுணர்வு குறி
க்கு மூன்று, னுட்டமிகு முப்பொருளு மொன்பதினு டிடப்படுமிங்
நயந்த வெல்லாங், காட்டுகாட் டுந்தா னுங் காணறிவுங் கதிர்விழியிற்
கலப்பே யாகு, மீட்டவரும் பயனுமுறத் தெரித்ததனி னழுத்துமிவ
ற்றையுங்கே ளாமே. (எசு)

மண்முதலாச் சிவமீறு மலிதருதத் தூவமீணத்தும் வயங்க வா
ற்று, மெண்முதலாக் தொழிலீணத்துந் தனித்தனிகா ணுதலவற்றிற்
கியைபு ரூபந், தெண்முதன்மற் றவைசடமாக் காண்டறி சனமிடை
யித் திறங்க ளீங்கு, மொண்முதலுண் மையைக்காண்டல் சுத்தியாம்
பாசத்தி னுற்ற மூன்றும். (எஎ)

பாசமிவ்வா றகலுதலு முறவுபசை நாடாது பகருந் தானே
நேசமுத லெனநிற்ற லுருவிதுகா றன்னியத்து நிரம்ப மூழ்கு
மாசகினைக் குயிரருளென் றகற்றவரு ளாமுதலென் றவாவல் காட்சி
வீசவது கொடுசெயனோர்ந் தொழிதலுற லருளாமே விடுதல் சுத்தி.()

ஆயவரு ளான்முதலே யெனநினைத்த லருளினு லன்ன தாற்று,
மேயதொழில் புரிகுவலென் றெண்ணுசெய லறல்விரும்பு மருளி
னூடு, தோயவவட் பேதமொடுக் கிடலெனமுன் கிளந்தவற்றிற் றோ
ன்று மூன்றும், பாயகிவ னுருக்காட்சி யோகமாம் போகமுமேற்
பகர்வாங் கேண்மோ. (எக)

ஒன்றுபடு பதனுலோர் பொருளாகா திரண்டின்வே றும்மா காது [ர
தொன்றுதிலை நிலையேயாய்க் கலந்துதுன்ன றுன்னுமை யிரண்டுஞ் சே
வன்றுமலத் தழுந்தியாங் கறிவாகி யறிவினுளாய்ந் தறிவு மேவப்
பொன்றியும்பொன் றுதவசத் தின்பவாய் பமிப்பதுவே போக மாமால்.

இந்நிலைமே லொருநிலையு மில்லையிஃ தொழிதரா தெந்த ஞான்று [துங்
மன்னுயிர்மற் றெண்பதுங்கண் ணுற்றுமாற் றிடுமீங்கு வகுத்த பத்
தின்னுமுண்மைஞானமே சுத்தவைத்த வத்தையுளே தொகவடங்கும்
பின்னர்நிலை நான்கினெனப் தடங்குமொரு நிலைபோக மேய டங்கும்.

இரிவரிய வுடலின்னிணை வரும்வருங்காற் சாக்கிரா தீத மற்றைத் [திற்
துரியமென விரண்டினிற்பி னேருவாஞ் சுழுத்தியொடு சொப்ப னத்
பிரியமிகு சாக்கிரத்தி னுறினுமம்வள ருஞ்சகலம் பேச லென்னே
யரியபெரு நிலையூன்ற வவையெலா மழியுமயக் காற்ற லின்றே. ()

மருண்மலநீங் குறுமாயை விஞ்சியிரண்டு மருளாயே மன்னும்
வையத், திருண்மலம்போக் கிடவவற்றை யெம்பிரா னேன்றுகொ
ண்டே யினிது நல்குஞ், சுருதியினன் மொழியாற்சு வானுபூ திகத்
தையுறத் தோற்றி ஞணை, யிருபகுப்பா வயினுமிற வேத்துபுசன் பார்
க்கரின்ப மெய்து வாரே. (அங)

என்றுபெருங் கருணையுரு வெம்பிரான் பெத்தமுத்தி யிரண்டிற்
றன்மை, யொன்றுபிறி தின்மைபொரு டொறுங்காட்டி யுளைத்தருளு
முணர்வு கேட்டு, கன்றுசுத்தித் துத்தெளிந்து நிட்டையுற்ற கந்திமா
தவத்தோ னுக்குத், துன்றுபெரு மகிழ்ச்சிகொ ளவண்டருளுக்
தனிமுதலைத் துதிப்ப தானன். (அச)

திருநந்திதேவர்துதி. வேறு.

கதிக்கு மிபல்பு வேறுடைமை கற்றோர் கருது பலவாகப்
பதிக்கு முலக மெலாம்பாற்றி மீட்டு மாயோன் பதும னெடுக்
துதிக்குஞ் படிதோற் றிப்போற்றிச் சூழு மலவாற் றலைக் காற்றுக்
திதிக்குஞ் செயலை கலைகின்ற சிறந்த வுருவ முதல்போற்றி. (அடி)

ஒண்மைக் குணமி லொருகாயே னுற்ற மடனன் றில்லாத
திண்மைக் குணமா மலத்தன்றே றிவண வாழா நின்றகுணை
வெண்மைத் தலைவ னுறவாங்கே யியலும் பருவக் தணையப்த்து
வண்மைக் கலையா திகடந்த வள்ளற் றன்மை யதுபோற்றி. (அசு)

இருளு மலமொன் றிறபற்று மிரண்டு விஞ்சியு முடையேற்கு
மருளின் மலியு மாயையுங்கன் மமுக்தி போதா னத்தினையும்
பொருளின் மலிமா மாயையையு மலங்கள் காகப் புணர்த்திபே
யருளின் மலித நீபாவற் புதருற் றெழின்மை யதுபோற்றி. (அஎ)

நெருப்பி னழற்றி வாட்படையா னிமிரு முடலம் பிளந்திட்டே
யருப்பு நெய்த்தோர் கண்சோர வமையக் குடைந்து நரகிட்டுங் [தும்
கருப்பம் பொலிமண் ணைகத்துப்துங் காமர் துறக்கத் திடையேய்த்
விருப்பு வெறுப்பு மில்லாது விஞ்சியு மலிகா ரம்போற்றி. (அஅ)

பூதங் கொல்லோ வவ்வுரு பொறைசா நுடலோ பொறிகளோ
மீதா துங் கரண மதுதானோ மொழியு மாயை யதுகொல்லோ
யாதோ வறிவே முணர்வுகண்டீ ரிவ்வு யிர்க்கு நாம னீதானும்
போதம் மீவதென் றருள்புரிந்த பொங்கு மொளிப்போ தகம்போற்றி.

உறுகே வலச கலசுத்த முயிர்கட் கெல்லாங் கெழுமு மென்றுங்
தெறுமா யையிலா ரிரண்டாய திறத்த சென்று மாவயினம்
மறுமா யையையின் றடாவிரண்டு கரும மென்று முறவகுத்துங்
குறுமா லேனு முளத்தரும்பக் கொள்ளா வாய்மை யதுபோற்றி. ()

வருசாக் கிரவ வததைக்கு வாயத்த சகலத் தெணியன்மீனு
வொருவா தாக்குந் தொறுநீங்கி யுற்ற விருட்கே வலத்தின்கண்
மருவா வீக்கு பிழைகொண்டு விடாதுட் சலியா மறுவலுங்காத்
தருமா தவஞ்செய் வலிச்சூழ்ச்சி கைக்கொண் டருளு மதுபோற்றி.

விணியின் றிறமூண் டிடுமாறு மெலியேன் மெலிவைத் தகவாற்றி
யணைய துகள்போ யனுங்கும்வித மறிவுண் டாக்கி யெலாமாற்றிக்
கணவண் டொலிக்க மதுப்பொழியுங் கமல மலர்சேர் திருப்பாத
நிணவி னுறக்கொள் வாழ்வளித்த நிமல வாழ்வன் பதம்போற்றி. ()

நிகழ்கே வலமுஞ் சகலமுமுத் திச்ச கலமுங் நிகழவுய்த்துத்
திகழ்கே வலச கலநீக்கச் சிறப்பு மருவுஞ் சுத்தத்திற்
றிகழ்கே வலமே யானணைச் செறிகே வலநீக் குபுமேலாங்
திகழ்கே வலஞ்செய் திடராடுஞ் செறிகே வலநற் பொருள்போற்றி.

காரா ணைவத்தன் மேறபட்டாய் கலக்க மாயை யதுபூண்டா
யோரா விணக்கேகாட் பட்டாய்போக் குடனே வரவும் பட்டாயென்
ரூரா வறிந்தாய் நீயேயென் றமைய விழித்து மான்முதலோர்
தேரா வருவந் தோற்றியெணக் காட்டியருளுந் திறம்போற்றி. (சுச)

ஒன்று படுகே வலத்தையைந் துறழைந் தாஞ்ச கலத்தொன்று
முன்ற விருஞ்ச கலத்தைந்து முதிரு மொளிசார் சுத்தத்தி
லென்று வண்ண பேதமெலா மருளி னிசைத்து முறைகாட்டி
நன்று தெரித்திட் டினிதாண்ட நலமார் பெருமைத் திறம்போற்றி. ()

யாமே யென்ன வெனதென்ன நின்ற விருணீப் போக்கியெலாந்
தானே யென்ன வெணவல்லே தன்ரு ளிருத்திக் கதிர்முன்ன
மீனே யென்ன விளக்கென்ன விரவு மாயை மாய்த்தங்ங
ணானே நுகரு நுகர்ச்சியெலா மேற்ற வரிமைத் திறம்போற்றி.(சுசு)

இற்றை வரையு மென்வழியே யிருந்த தணீப்போற் றன்வழியே
யெற்றை வரையுந் தங்குகிலே தோன்றத் தணீய மெணீயுந்தந்
தொற்றை யுருத தனதெனதற் றெருருமுப் பாழ்மேன் முழுப்பாழா
மற்றைக் கடறி வலீயாக வருபே ரின்ப சுகம்போற்றி. (சுஎ)

மதிவீற் றிருக்குஞ் சடைமுடியு மாணு மழுவுஞ் சதுர்ப்புயமுந்
நுதிவீற் றிருக்குந் திருமுகமுங் தோன்றப் படிந்த புலித்தோலும்
விதிவீற் றிருந்த செவ்வாயும் வெய்ய தாகு நுதற்கண ணுங்
கதிவீற் றிருந்த திருவடியு முடைய கைலைப் பிரான்போற்றி. (சுஅ)

சிவபெருமானுடையகட்டளை.

என்று துதித்த நந்திமுக மெம்மான் கருணை யுறநோக்கி
நன்று நின்னை யபரசிவ னெவ்வு ஞாலங் கொண்டாட
வொன்று சிறப்பி னும்பிறர்போ லுனைத்தா னுலக் கியையும்வகை
யன்று தவிரப் பாராட்டி யமைய வருகென் றருள்புரிந்தான். (கூகூ)

பன்னுண் முயன்று நெடுமாலே பங்கே ருகனே பிறரறியாத்
தன்னுள் பெரியோன் பெருங்கருணை யொருங்கு பெற்ற சைலாதி
முன்னுள் வாய்த்த தன்பணியே முயன்று தலைநின் றிங்காளே
நன்ன னென்று மகிழ்சிறந்தா னடைந்த தினிமே னவிலுவாம். (க00)

சனற்குமாரமுனிவர். வேறு.

மட்டலர் கமலப் புத்தேண் மைந்தனுஞ் சனக்கு மாரன்
கட்டலர் படைத்த லாதி கனவினு மேன்று கொள்ளான்
விட்டலர் மணிமார் பண்ணல் வாழ்க்கையின் வெறுப்பு வைத்தான்
பட்டலர் திசையான் றெய்வப் பாதமே சாரும் பண்பான். (க0க)

திருநந்திதேவரை அடைதல்.

மறைமுதற் கலைக ளெல்லா மயக்கறத் தெளிந்த தீரா
னிறைகெழு கருணை வாய்ந்த நெடுந்தவ முருக்கொண் டன்னான்
குறையரு முண்மை ஞானங் குறிக்கொடு தேர்தல் வேட்டா
னிறைமுதற் கயிலை காக்கு நந்திபா லெய்தி னானே. (க0உ)

எய்திய சனக்கு மார னந்தியெம் பெருமான் பாத
மெய்திக முன்பிற் பல்கால் விரைதரத் தாழ்ந்து தாழ்ந்தே
யையெதன வெழுந்து நின்று னருவியங் கண்ணீர் சோர
மைதிகழ் மனமில் லாமை நோக்கினு னந்தி வள்ளல். (க0ங)

திருநந்திதேவர்வினு.

நோக்கிய நந்திப் புத்தே ணுவலுளின் னுமம் யாது
தேக்கிய வலியி னிந்தச் சிலம்படை கருமம் யாது
பாக்கிய மாகக் கொள்ளும் பயனெது வேட்ட தென்று
னூக்கிய வலியான் மீட்டும் பணிந்தெழுந் துரைக்க லுற்றான். (க0ச)

சனர்குமாரர் விடை.

என்பெயர் சனக்கு மார னிச்சிலம் படைந்தே னுதன்
றன்பெய ரடைநின் செம்பொற் றுட்பணி செயற்பொ ருட்டே
நன்பெய ருண்மை ஞான நாயினேன் வேட்ட தென்றே
மின்னெயார்ந் தென்ன மீட்டும் வீழ்ந்தெழுந் துரைத்தா னன்றே. ()

திருநந்திதேவர் அவனை அங்கீகரித்தல்.

நந்தியெம் பெருமா னென்பா லெல்லியற் சனக்கு மாரன்
புந்தியுந் தெளிவு மாந்தற் போதத்தி னெழிவுந் தேர்ந்தே

யுந்திய விவனுக் குண்மை யோதலா மென்றுட் கொண்டு
மூந்திய விபூதி நல்கி முழுப்பணி நயத்தி யென்ரூன். (கஎசு)

சிவகணத்தோர்மகிழ்ச்சி.

சொற்றசொற் றலேமேற் கொண்டு குமரன்ரூ மகிழ்ச்சி யுற்ரூ
னற்றவக் கணங்க ணந்திக் கிவன்வந்து ணணுங்கு காட்சி
கற்றையஞ் சடையார்க் கிந்த நந்தியே கலந்த தொராக்கு
மற்றும்வே றில்லே யென்ரு வாய்மலர்ந் தருவகை பூத்தார். (கஎஎ)

திருவடிப் பணிவி டாது செய்பப்பன் ஞள்கள் செல்ல
மருவடிக் கடிய ஞன குமரன்வாழ் தருமந் நாளிற்
றருவடிக் கைலே காக்குந் தம்பிரான் கருணே கூர்ந்தே
யுருவடிக் குண்மை ஞான மோதுமா ளுளங்கொண்டான். (கஎஅ)

சனற்குமாரர் உபதேசம்பெறுதல்.

பொருள்பெறுங் குமரற் கூவிப் பொலிவின்மாட் டிருத்தல் செய்தே
யருள்சிவ ஞான போத மண்ணல்பாற் கேட்ட வாறே
தெருள்பெறத் தொகைமுன் மூன்ரூற் செப்பிரு னெனந்த ஞான்று
மருள்படி மைய மாதி முக்குற்ற மடித்த நீரான். (கஎக)

மன்னிய குரவன் வார்த்தை முழுமையு மாண்பிற் கேட்டு
மின்னிய கொடிநிர் தித்துத் தெளிந்துமே னிட்டை கூடித்
தன்னிய விருந்தான் வம்பே சென்ரும்பிப் பஞ்ச மாய்த்துப்
பன்னிய சிவஞா னத்தீத படர்ந்தபெருஞ் செல்வ ஞகி. (ககஎ)

இன்னணஞ் சனக்குமார ரெனுமியல்சிவ ஞான போத
நன்னருட் டெளிர்து முத்தி நயந்துவிற் றிருக்குங் காலேச்
செந்நெறி யெழுக்கஞ் சார்சத் தியஞான தரிச னிப்போர்
மன்னிய முனிவன் வந்து வண்கயி லாயம் புக்கான். (ககக)

அவனைச் சத்தியஞானிதரிசனிகள் அடைதல்.

புக்கமா முனிவன் ஞான போதமார் சனக்கு மார
னக்கபொற் பாதம் போற்றி நாயினே னுய்ந்தே னென்ரூன்
றக்கநீ யாவன் வந்த காரிய மெவன்சாற் றென்னத்
திக்கெலாம் புகழ்தன் பேரும் வந்த துந் தெரியச் சொற்ரூன். (ககஉ)

அடியார்மகிழ்ச்சி.

பரவுளிண் ணப்ப மேற்றுப் பங்கய முகம லர்ந்து
விரவுநீ றெறித்து நல்கிப் பணிசெய்து மேக வென்ரு
னரவுநீர்ச் சடையா னன்ப ரகத்திய முனிவ னுக்குக்
கரவுதீர் திரணூ மாகக் கினியெனக் கலந்தா னென்ரூர். (ககங)

சத்தியஞானிதரிசனிகள் உபதேசம்பெறுதல்.

சீரிய தன்பேர் நாட்டத் திருவடிப் பணியிற் றப்பா
னேரிய முனிவன் மேவ வுமையகிழ்ந் குபரன் பூத்துத்

தேரிய தான்முன் னேர்ந்த சிவஞான போதஞ் சொற்றான்
வீரிய நந்திப் புத்தே டனக்குமுன் விளம்பு மாதே. (ககச)

குரவீன வழிபா டாற்றிக் கொளுத்திய வீணத்துக் தேர்ந்து
திரவீன கையிலை ஞான சிகாமணி யாகி வாழ்ந்தான்
புரவீன யொருபான் மேய புராதன னருளே யென்னப்
பரவீன தருமா றுற்றான் பரஞ்சோ தி முனிவ னென்பான். (ககடு)

அவனைப்பரஞ்சோதிமுனிவரடைதல்.

திகழ்பரஞ் சோதி தான்சத் தியஞான தரிச னிப்பேர்ப்
புகழ்முனி யிருக்கை நாடிப் பொற்பதம் பணிந்து வீழ்ந்தா
னகழ்முல வீணையா னீயா ரதிக்கதென் னெனவி ரவ
விகழ்பவ மாய்க்க வந்தே தனென்றெலா முரைத்தா னன்றே. (ககஙு)

உரைத்தசொன் முழுது மேமற்றே புறுகுண முழுது நாடி
விரைத்தமற் றிவன்பே பா லியாரே மேவுவா ரென்று வந்து
நரைத்தவெள் விடையான் செய்பு நல்லரு ளென்று புல்லி
வரைத்தவெண் ணீறு நல்கி வதிகநம் பணியி லென்றான். (ககஎ)

திருக்கிளர் முனிவ னுரைசத் தியஞான தரிச னிக்குக்
கருக்கிளர் தரஞ்சா ராத பரஞ்சோ தி கிடைத்த காட்சி
யுருக்கிளர் துறைசை யெங்கள் சிவஞான யோகிக் குண்மைப்
பொருட்கிளர் கச்சியப்ப முனிவன் புனைந்த தொக்கும். (ககஅ)

பணிபல காளுங் கொண்டு பரஞ்சோ தித் திரக்கஞ் செய்து
துணிசிவ ஞான போதந் தொன்மையி னுபமே தித்துத்
தணிவுறத் தெளிந்த பின்பு தூலுங்கைத் தாங்க நல்கி
யணிசெய்தா னெம்மை யாளு மற்புதக் குரவ ரேதே. (ககசு)

உண்மையார் கைலேகின் னு மொருபரஞ் சோதி நாதன்
வண்மைசான் ஞான நிந்தா மணியென மண்ணி ழிந்து
தண்மையார் காசி யாதித் தலந்தரி சிக்குங் காலே
கண்மைசால் வெண்ணெய் நல்லூர் கடந்தது மினிச்சொல் வாமால். ()

நான்காவது

நடுநாடு.

சொல்லொழுக்க நடவாது சேரவறங் கூர்காலும்
புல்லொழுக்கந் தலையெடுத்தவ் விடத்துமாய்ப் பொலிதரவு
மில்லொழுக்கந் துறவொழுக்க மிரண்டாய வியல்வாய்ந்த
நல்லொழுக்க மெனப்புகழு நடுநாடு நடுநாடு. (க)

பொன்னிலால் கமரெலாம் போகியதெம் பதியென்ன
வெந்நிலமுங் குதுகலித்தே யியல்பூசை விழாவெடுப்ப

வங்கிலமொய்த் தவராய வாற்றுக்கா லாட்டியர்க
ணன்னிலஞ்சொன் முடி குலைத்து நடுநாடு நடுநாடு. (உ)

புக்கவுயிர் சிதையாது போற்றிவரு மண்மகட்குத்
தக்கவளம் பலபொலிதண் டகநாடல் குற்றடமாத்
தொக்கபெரு வளங்காட்டு சோணாடு முலைத்தடமா
நக்கமணி மேகலைசூழ் நடுநாடு நடுநாடு. (ங)

குறமலிதிண் குன்றுகளைத் குஞ்சரத்தைக் கீழ்மேலா
வறமலிய வருட்டிவயி றதுகிழியு மதுதீநாக்கிப்
புறவகழி யிராப்பகலும் பொறேனென்றே யோலமிடப்
பிறரறியு நீத்தத்திற் பெண்ணேபாய் வளம்பெருகும். (ச)

பெண்ணேநதி யிருபாலும் பெருக்குமிக வெழுங்கொழுங்காற்
பண்ணேவயற் றலைநிரப்பப் பசுஞ்சாலி கதலிகமு
கெண்ணே பறத் தடித்தோங்கி யிந்திரனு ரவைநிரப்ப
வுண்ணையமார் மண்ணெலிவிண் ணூடறைக் கூடல்செயும். (ஞ)

பெண்ணேயெழுந் திரைக்கொழுந்து புகழ்க்கொழுந்தின் பிறக்கமெ
விண்ணேயளா யமாதர் வெம்முலைக்குங் குமங்கழுவிப் [ன
பண்ணேகளின் பிரதாபம் படர்ந்திதெனப் படருதலு
மெண்ணேயிலாச் செந்நெலொடு கன்னல்களு மினிதோங்கும். (ஈ)

சாலெல்லாம் வெடிவாளே தடியெல்லாஞ் செங்குவளே
காலெல்லாங் கருமேதி காம்பெல்லாம் பரம்பினங்கள்
சூலெல்லாஞ் சங்கினங்க டுறையெல்லா முத்துகுத்தல்
பாலெல்லாம் பசுந்திரையல் படர்வெல்லாங் கமுகேறி. (எ)

தென்றலிழ வழலரும்புஞ் செவ்வியமாந் துணர்ச்சோலை
யொன்றல்கொள முழுமதியை யொழியாது தடவருதல்
குன்றலின்மண் மகளங்கைத் தலநீட்டிக் குளிர்விசும்பா
மன்றலிலா மகண்முகத்தை வருதிறமற் றதுகாட்டும். (அ)

கனைதபுமா டங்களெலாங் ககனமளாய் நிற்றலினுல்
விசையகிலின் கொழும்புகையோ மேகமோ சுலாவுவன
வுசைசெறிந்த பொழிலினத்து மொள்ளியகார் தங்குதலாற்
புனைதவிரு மதுமழையோ புனன்மழையோ பொழிகுவன. (கூ)

மருவுலகங் களிதுங்க வண்சமயா சாரியர
மிருவர்களுஞ் சந்தானத் திருவர்களு மவதரிக்கப்
பெருகுதவஞ் செய்ததெனிற் பிறங்குவள நடுநாட்டி
னருகுதவிர் சிறப்புரைக்க வடியேனு லகுவதோ. (கo)

ஆ செய்யுள் - உ0உ.

சிவமயம்.

பழசைப் பதிற்றுப்பத்தந்தாதி.*



விருத்தம்.

என்னு யகணே யிடைமயவருக் கிறையா மவணே மறைநான்கு
முன்னு நிற்கும் வடிவாணே மூவா தாணே மூத்தாணைப்
பொன்னுர் மேனிப் புயலும்விசாப் பூந்தா மரைவே தனுநாடிப்
பன்னு டிரிந்துங் காணுணைப் பழசை நகரிற் கண்டேனே. (க)

கண்டேன் பழசைப் பெருமாணைக் கைகான் முடங்கு மறிவிலி
வாய்ப், பண்டே னெடுங்கோட் டிருந்தொழுகும் பான்மை யெனக்
கண் டிளங்க ளிப்புக், கொண்டேன் சிரமே லிருகரமுங் குவித்தேன்
குளித்தேன் முகமலர்ந்தேன், விண்டேன் பண்டை வினைக்கடலை
வேண்டேன் பிறிதோர் தேவனையே. (உ)

சிவமயம்.

பூவாளூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி.

சமயாசாரியர் துதி.

விருத்தம்.

நிறைவளருந் தவஞானப் புகலிவருஞ் சிவஞான நிமலக் கன்
றைத், துறைவளருங் கருங்கடற்கல் லொடுமிதந்த தமிழ்க்கடலைத்
தூய சைவ, முறைவளரும் புக்கொளியூர் முதலிலவாய்ப் பிள்ளைதரு
முதலைக் கெய்வ, மறைவளரும் பரிமிசையெம் மிறைவரச்செ யிறை
யையன்பின் வணங்கு வாமால்.

நூல்.

திருவார்பொற் பூவாளூர்ப் பங்குனிமா நதிக்கையின் றெனது
வைப்பிற், றருவார்கூ விளவனத்துக் குங்குமசுந் தரியொருபாற் றய
ங்க வைகுங், குருவாருஞ் சடைமோலித் திருமூல நாதர்பதங் குறி
த்து வாழ்த்திற், கருவார்வெம் பவக்கடனீந் திடலாகு மிவ்வுரைமெய்
காண்பாய் நெஞ்சே. (க)

நெஞ்சமே பொறிவழிச்சென் றலையாதோர் கணப்பொழு தும் நின்று
கேட்டி, வஞ்சமே யழுக்காறே வரும்பொய்யே முதலனைத்து மற

---

* பூர்த்தியான நூல்களிற்கிடைத்தபகுதிகள்.

த்தி மேதி, கஞ்சமேய்ந் தடர்சூத நிழலுறங்கும் பூவாளூர்க் கடவுள் பாதந், தஞ்சமே யெனச்சென்று பற்றுதிபற் றறுத்தியிது தக்க தாமே. (உ)

ஆமாறு மனங்கசிந்து நீறணிந்து கண்மணிபூண் டஞ்சு மெண் ணிக், காமாரி தீஞைச்சிறந்த கௌமாரி நாயகனைக் காம ரூர்வாழ், தீத மாரி பொழிகொன்றைச் சடைமோலிப் பெருமானைச் சென்றுதாழார், மாமாயக் கடலுழல்வர் போமாறென் னெனவென்னுண் மதிக்கு மாலோ. (ஊ)

ஆலம்விட மமுதாக்குங் காமர்பதித் திருமூல வமல னர்க்குச், சாலுமணிக் குழையொருபாற் றோடொருபான் முத்தொருபாற் சர் ப்ப மோர்பா, லேலுநற்குங் குமமொருபா னீறொருபாற் பட்டொருபா லியைதீ தாலோர்பா, லோலிடுபொற் சிலம்பொருபாற் கழலொருபாற் பண்ணு மொளிரு மன்றே. (எ)

அன்றினர் புரமெரித்த வம்மானை செம்மேனி யமலத் தேவை, மன்னுளா டொருமணியே மாவாளூம் பூவாளூர் வயங்குஞ் சோதி, வன்றிமா மலத்தழுக்கு மாறேபோன் மடவார்த மயற்சேற் றுழ்ந் தேதற், கொன்றுமா விண்ணமதற்காய் நின் னுதற்கட் கிலக்காக வுறுக ளென்றே. (ஏ)

என்றுநெடு மாலயனுக் கரியபிரா னென்றுமன்பி லிருணெஞ் சத்தார்க், கென்றும்வெளிப் படானென்று மனவாக்கிற் கெட்டாதா னென்று மோலிட், டென்றுமறை விரித்துரைப்பக் கேட்டிருந்தும் பேதைமையோ யாதோ வென்னெஞ், சென்றுமொரு பூவாளூர்ப் பெருமானைப் பேசவிருப் பெய்து மன்றே. (ஐ)

அன்றுவட வானிழற்கீ ழமர்ந்தறமேவார்க் கறமுதனூன் கருளு மண்ணல், கொன்றைநெடுஞ் சடைபோலித் தேவாநற் பூவாளூர்க் கோவா முத்தே, கன்றுகொடு விளவெறிந்தோன் காணருஞ்சிலம் சிலம்பணிபூங் கமலத் தாளென், புன்றலையி னுறப்பதித்துப் புரிர் தடிமை கொள்ளுவதிப் போது தானே. (ஒ)

போதாருந் தடஞ்சோலை மயிலாலக் குயில்கூவும் பூவா ளூர் வாழ், காதார்வண் குழையுடையாய் கட்டங்கா காபாலீ கால காலா மோதாகீயா நின் னுண்மை பொன்செய்கொழுக் கொவ்வருக்கு முழு நின் றோனின், பாதார விந்தமலர் பற்றிவிடா விருவினையும் பாற்று மாறே. (ஓ)

பாரூடும் வெஞ்சூலப் படையாணை யெவ்வுலகும் படைத்திட் டாணை யேரூடுங் கொடியாணைப் பெருமானைச் சிறுமானை யேந்தி ஞானச் சேரூடுந் தண்கழனிப் பூவாளூ ருடையானைச் சிறப்பிற் பாடார் மாரூடும் பசுக்கடமைப் பாடுவார் பல்லோர்தம் மயக்கி ஞாலே. (ஔ)

மயலாருஞ் திரைச்கடலுட் பட்டலியு மாறேபோல் வாரார் கொங்
கைக், கயலாருங் கண்ணியர்மாற் கடலிடைப்பட் டிடாதுகடைக் கணி
த்தல் வேண்டும், வயலாருஞ் செங்கமலத் தேனினுடி மடையுடைக்கும்
வண்பூ வாளைர்ப், பயலாரு மாதடையாய் வண்சங்கக் காதுடையாய்
பாவி யேற்கே. (கo)

வேறு.

பாவிய கருமம் மின்றியே பசுவும் பதியும்பா சமுமென வுரைக்கு
நாவினுன் மதமே கொண்டுமூலாம னுயினேற் கென்றருள் புரிவாய்
காவியங் கண்ணி கூறுடைக் கணியே காமர்பூம் பதியுறை முதலே
தீவிழிப் பகுவாய்க் கூற்றுயிர் குடித்த சேவடிச் சிவபரஞ் சுடரே. ()

சிவபரஞ் சுடரே யுள்ளகந் தெவிட்டாத் தெள்ளமு தேசுவைக் கனியே
யவனவ ளதுவென் றுரைத்திடும் புவன மாகியு மதற்குவே ருனுய்
கவவடி வுடையாய் காமர்பூம் பதியாய் காயினுங் கடைப்படு வேற்குத்
தவலரு மூல மலச்சிருக் கொழிந்து சத்தினி பாதமென் றுறுமே ()

உறுவர்க டிதிக்குங் கூவின வனத்தா யுணர்வுடை யோர்க்கெளி
தானுப், சிறுபுமுப் பொதிந்த புன்புலா லுடைய தேகமே நானெனக்
கருதி, வருபிரு வகைச்சார் புடங்குறக் கொண்டு வருமவத் தைக
டொறுஞ் சென்று, பெறுவதொன் றின்றி யலியுகா யேனின் பிறங்
கருள் பெறுவதெக் காளே. (கஉ)

நாளெலா மோடிக் கற்பசுக் கறந்து கல்லவர் நகைக்குமா திரிந்
தேன், மீளவு முழல்வேன் வல்வினை ஞான மெல்வினை ஞானமு மில்
லேன், பாவிவாய்க் கமுகின் பசுங்கமுத் தொடியப் பருவரால் குதி
கொளுங் கழனி, வாளுலாம் பொழில்சூழ் காமர்பூம் பதிவாழ் மாணி
க்க மேமினெக் கருளே. (கச)

அருளெனப் படுவ தெவைக்குமேமெலென்ன வறிகிலே னருளலா
வெவையும், பொருளென மதித்தேன் புலையருங் விரும்பாப் புன்பு
லாற் சுவைவெறுப்பில்லேன், கருள்படு மனத்துக் கடையனேற்
குனது கருணைவந் துதவுவ தென்றோ, மருளற முனிவர்க் கருளிய
காமர் வளர்பதி விளங்குமொண் பொருளே. (கடு)

பொருந்துசன் மார்க்க நெடுஞ்சக மார்க்கம் புத்திர மார்க்கமு
மில்லேன், நிருந்திய தாத மார்க்கமு மில்லேன் ஞீவினை மார்க்கமே
யுடையேன், கருந்தலைப் பூவை மூவர்பாட் டெடுப்பக் காமரு கிள்ளை
கேட் டுவக்குஞ், பெருந்தடம் பொழில்சூழ் காமர்பூம் பதிவாழ் பிஞ்
ஞகா பேரருள் புரிவே. (கசு)

* * * * * *

வேறு.

உலகக் குழலியோர் பாகம் பேறறி யெனக்கு வெளிப்படும்
பாதம் போற்றி, மாலைப் பிறைமுடி வேணி பேற்றி மாண்மழு

வைத்த கங்கள் போற்றி, காலைக் கதிர்த்திரு மேனி போற்றி காம
னீக் காய்ந்ததண் போற்றி யென்றே, யோலிட் டருமறை தேடும்பூ
வா ளூரை யான்சொல்லி யுய்வ தென்றே.

இன்றமிழ் ஞானசம் பந்தர் பாலு மெய்திய நாவுக் கரசர் பாலுந்,
தென்றமிழ் நாவலூர்ச் செல்வர் பாலுஞ் சிற்றன்பு சிந்தையிற் செய்து
மில்லேன், குன்றம்வில் லாக்கொண்ட புண்ணியனே கோதறு காமர்
பதிக்கண் வாழ்வே, மன்னுணின் முடிய வல்ல சோதி மாறிலன் புள்
ளத் துறுதல் செய்யே.

* * * * * *

வே று.

உணர்வினுக் குணர்வாம் பூவா ளூரமர் தம்பி ரானுர்
மணமலி முடியினீரு மரகதப் புல்லுங் கொள்வான்
குணமலி கரத்து கவ்வி குறித்தெட்டி யெட்டி வீழும்
பணவரப் பள்ளி யான்சேய் பட்டபா டறிந்தி லாதே.

* * * * * *

என்னென வுரைக்கே னீயா வேழையேன் புன்சொ னிற்கு
நன்னய முறையோ நல்லோர் நாடுவா சகமோ வன்பு
துன்னிய வேடர் கோமான் சொற்றிடு முகம மேனமற்
றுன்னிடின் வில்வக் கானத் துறைதிரு மூலத் தேவே.

தேவர்கள் சிகைபூ ணூல்போற் செய்யமார் பிலங்குந் தோற்றக்
காவில்செஞ் சடைக்கா டுற்ற தறுகண்வா ளரவு கக்கப்
பாவுகார் விடமோர் பாங்கர்ப் பாய்ந்தொளி வீசல் போலு
மோவில்பல் லறஞ்சூழ் பூவா ளூரமர் கடவு ளார்க்கே.

* * * * * *

வே று.

காலைக் கதிராய்ச் சில்லுயிர்க்குக் கலிவெண் மதியாய்ச் சில்லுயிர்க்கு
மாலை யிருளாய்ச் சில்லுயிர்க்கு வைகும் பொருணீ யென்றறியேன்
சோலைக் குயில்கூ வொலியெடுக்குந் தொலியா வளமைப் பூவாளூர்
வேலைக் கருநஞ் சுறைகண்டா விமலா னந்த மெய்ப்பொருளே.

* * * * * *

காட்டிற் பயிலும் பசுங்கிளியைக் கருதி வளர்த்தோர் பூசையிடம்
கூட்டிக் கொடுப்பார் களுமுண்டோ கோவே யாவா கேவலத்தி
னீட்டித் தெழுந்த வெண்ணச்சகள நிலையிற் படித்து வளர்த்தெமன்பாற்
காட்டிக்கொ டுன்னடைக்கலம்யான் காமர்பதிவாழ்கண் ணுதலே.

* * * * * *

மயங்கிப் பிறவிக் கடல்வீழ்ந்து வலிய வினையாற் றிரையலைப்ப
வுயங்கிக் காமச் சுழலகப்பட் டுய்யும் வகைசற் றறியாதே
தியங்கிக் கிடக்கு நாயேற்குன் செம்பொற் பாதப் புணைதாராய்
வயங்கப் புனைசை யுடுத்தோங்கி வளர்கல் யாண புரத்தரசே.

V.B.SUBRAMANIYASARMA
TAMIL-PANDIT.